JL
Q6wM24,N03NA
N15.13.1-12
219322



# The Good Pastor

# நல்ல ஆயன்

OFFICE OF ... MADRAS. REGISTERED 15 JAN 1915

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 13. } ஜனவரி 1915. { இலக்கம். 1.

## THE NEW YEAR DAY.
## வருஷப் பிறப்பு நாள்.

இன்று புதுவருஷ மாகிய 1915-ம் ஆண்டு பிறந்துவிட்டது. பழய வருஷமாகிய 1914-ம் ஆண்டுங் கடந்து விட்டது. ஆகவே, நம்முடைய ஆயுளிலும் ஒரு வருஷம் குறைநதுவிட்டது. ஆம், நமக்கு இத்தனை வயது ஆய்விட்ட தென்று மாத்திரம் நாம் அறிவோமேயன்றி இன்னும் இத்தனை வருஷத்துக்கு உயிரோடு இருப்போ மென்று நாமறிவோமோ? இல்லையல்லவா? அது காரியம் சர்வேசுரன் ஒருவருக்கு மாததிரம் தெரியும். எந்த வருஷத்தில், எநத மாதத்தில், எந்தத் தேதியில், இன்னும் எந்த விநாடியில் நாம் உயிர்விடுவோம் என்பதை அவர் ஒருவரே அறிவார். நம்முடைய மரண வேளையைத திட்டமாய் நாம் அறிந்தவர்க ளல்ல வென்றாலும், வருஷமும், மாதமும், நாளுங் கடந்து போகப்போக நமக்குக் கல்லறையும் கிட்டி வருகிற தென்பதை நாம் அறியாதவர்க ளல்ல. சென்ற வருஷப் பிறப்பை நம்மோடு கொண்டாடினவர்கள் எல்லோரும் இன்று இவ்வருஷப் பிறப்பைக் கொண்டாட உயிரோ டிருக்கிறார்களா? அந்தோ! எத்தனையோபெயர் தங்கள் ஆயுளை முடித்துக்கொண்டு மறுமைக்குச் சென்றுவிட்டார்கள். இப்படி மரண மடைந்தவர்களுக்குள் எத்தனையோபேர் தங்கள் ஆத்தும காரியத்தை ஒழுங்குபடுத்திக்கொள்ள காலமும் நேரமும் கிடையாமலே திடீரென மரண மானார்கள். வருஷத் துவக்கத்திலேயே இவ்வருஷந்தான் தங்களுடைய கடைசி வருஷமென்று அவர்கள் அறிந்திருப்பார்களேயானால் அதற்காக எவ்வளவோ சுறுசுறுப்பாயும் ஜாக்கிரதையாயும் ஆயத்தம் செய்து மரண மடைந்திருப்பார்கள். ஆனதுபற்றி நாமும் இவர்களைப்போல் மோசம்போகாவண்ணம் விழிப்பும் எச்சரிக்கையு முள்ளோரா யிருப்பது புத்தி. இன்று நாம் துவக்கும் புதுவருஷத்தை முடிப்போமென்று நமக்கு என்ன நம்பிக்கையுண்டு? "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழிக்கொப்ப நம்முடைய மரணவேளையில் எப்படி சீவித்திருக்க ஆசிப்போமோ, அப்படி வருஷத் துவக்கத்திலிருந்து தானே சீவிப்பது அத்தியாவசியம்.

நம்முடைய மரணநேரத்தில் எப்படி சீவித்திருக்க ஆசிப்போம்? பரிசுத்தமாய்ச் சீவித்திருக்கவல்லவா? அப்படிச் சீவிக்கிறோமோ, இல்லையோவென்று அறிய, சென்ற வருஷத்தில் நம்முடைய நடபடிக்கைகளைப் பரிசோதித்துப் பார்ப்பது யுக்தி. சர்வேசுரன் மட்டிலும், புறத்தியார் மட்டிலும், நம்மட்டிலும் எப்படி நடந்துகொண்டோம்? பத்துக் கற்பனைகளையும் திருச்சபை கட்டளைகளையும், நம்முடைய அந்தஸ்தின் கடமைகளையும் எப்படி அனுசரித்தோம்? இன்றையத்தினமே நாம் தேவசந்நிதிக்கு இவைகளைப்பற்றிக் கணக்குக் கொடுக்கப் போவோமானால் நமக்குக் கிடைக்கும் தீர்ப்பு என்ன? நம்முடைய மனச்சாட்சிக்குத் துரோகஞ் செய்யாமல் நம்மையே நுணுநுணுக்கமாய் இவ்விஷயங்களில் பரிசோதனை செய்து பார்ப்போமானால், ஐயோ! நமக்குள் எத்தனையோ பேர் அஞ்சி நடுங்கி அங்கலாய்ப்பார்கள் என்பது நிச்சயம். சென்ற வருஷத்தில் இவர்கள் தங்கள் ஆத்தும க்ஷேமலாபங்களை அசட்டைசெய்து, இப்பிரபஞ்ச நன்மைகள் மட்டில் கவலைகொண்டு சீவித்து வந்தபடியால் சாவான பாவங்களைக் கட்டிக்கொண்டிருப்பதாக அறிவார்கள். ஆனபடியால் தங்கள் ஆத்துமம் அதன் உயிரையும், சிறப்பையும் அதற்குள்ள சகலத்தையும் இழந்து, அந்தங்கெட்டு, அவமானப்பட்டு, அவலக்ஷண கோலம்பூண்டு அதைத் தாங்களே பார்க்கச் சகியாவண்ணம், அவ்வளவு அருவருப்புக்குரிய ஒரு சவமாய்க் கிடப்பதையும், இப்பேர்ப்பட்ட நிலைமைக்கு அதைத் தாங்கள் கையளிக்கக் காரணமாயிருந்த இன்பம், சுகம், கீர்த்தி பெருமை, ஆஸ்திபாஸ்தி, ஆதாயம் முதலியவைகளெல்லாம் தங்களுக்கு இப்போது வீண் பசப்பானவைகளாகவும், மாயமும் வெறுமையும் ஆனவைகளாகவும், ஒரு கண்கட்டி வித்தைக்கு ஒப்பானவைகளாகவும் இருக்கக் கண்டு, மனோ வேதனைக்கும் சஞ்சலத்துக்கு முள்ளாவார்கள். தங்களுடைய மதியீனத்தையும் அவிவேகத்தையுங் கண்டுவெட்கி நாணுவார்கள். தங்களுடைய ஆத்துமத்துக் குண்டாயிருக்கும் நித்திய கேட்டை [illegible] இச் சண்டாள துரோகங்களைக் கட்டிக்கொண்டோம் என்று [illegible] பிரமிப்புந் திகிலுங் கொள்வார்கள். நமக்குள் இன்னுஞ் சிலர் சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளும் நிர்ப்பாக்கியத்துக்கு உள்ளாகாவிட்டாலும் எண்ணிறந்த அற்பப்பாவங்களைக் கட்டிக்கொண்டிருப்பதாகவும், அதினிமித்தம் தங்கள் ஆத்துமம் காசவியாதி பிடித்தவனைப்போல் பலவீனப்பட்டு மெலிவுற்று, வாடி வதங்கி, சீர்குலைந்து மரணத்தறுவாயிலிருப்பதாகவும் கண்டு கலங்குவார்கள். தாங்கள் கட்டிக்கொண்டவைகள் அற்பப்பாவங்கள்தானாயினும் அவைகளால் தங்கள் ஆத்துமத்துக்கு எவ்வளவோ நஷ்டம் உண்டாயிருக்கிறதென்றும், சாவான பாவத்தில்விழும் ஆபத்திலே தாங்கள் இருப்பதையும் அறிந்து ஐயோ! இந்த அவகேட்டுக்கு ஏன் உள்ளானோமென்று விசனப்படுவார்கள். இன்னுஞ் சிலர் தேவ உதவியைக்கொண்டு தங்களாலானமட்டும் வருந்திப் பாடுபட்டு அற்பப்பாவங்களையும் சாவான பாவங்களையும் விலகிச் சீவிக்க ஜாக்கிரதையெடுத்துக்கொண்டார்களாயினும் இன்னும் தங்கள் ஆத்துமத்தில் பல பாவக்கறைகளிருக்கக்கண்டு தங்கள் ஆத்தும க்ஷேமத்துக்காக போதுமானபடி பிரயாசையெடுத்துக்கொள்ளவில்லையே என்று சஞ்சலப்படுவார்கள்.

ஆகவே, நாமெல்லோரும் இன்று கவனிக்கத் தக்க முதல் அலுவலென்ன?- சென்ற வருஷத்தில் நாம் கட்டிக்கொண்டிருக்கும் பாவங்களுக்காகப் பச்சாத்தாபப்பட்டு அவைகளுக்காகப் பரிகாரஞ் செய்வதே நம்முடைய முதல் அலுவலாகும். இவ்விஷயத்தை நாம் மேலெழுந்தவாரியாய்ச் செய்து முடிப்பதுபோதாது. நம்முடைய குற்றங் குறைகளுக்கும் பாவாக்கிரமங்களுக்கும் ஏதுவாயிருந்த காரணாதிகளைக் கண்டுணர்ந்து அவைகளை அறவேயொழிக்க முயலவேண்டியதாமே.

சென்ற வருஷத்திய சீவியத்தைப்பற்றி நம்மைப்பரிசோதித்துப் பார்க்குமளவில் நம்முடைய பாவாக்கிரமங்கள் மாத்திரமல்ல, ஆனால் சர்வேசுரன் நம்மேல் சரமாரியாய்ச் சொரிந்த எண்ணிறந்த அருட்பிரசாதங்களும், உபகார சகாயங்களும் உதவி ஒத்தாசைகளும் நம்முடைய ஞாபகத்துக்கு வராமற்போகா. சகல நன்மைச் சொரூபியான அவர் தமக்கு யாதோர் கடமையுமின்றியே தம்முடைய இரக்கப் பெருக்கத்தினால் செய்தருளிய இந்த நன்மைகளை நாம் எப்படிப் பெற்றுக்கொண்டோம்? சில தருணங்களில் அவைகளிற் சிலவற்றை ஆசை ஆவலோடும், பயபக்தி விநயத்தோடும் பெற்றுக்கொண்டோமென்பது வாஸ்தவமே. ஆயினும், அவைகளைப் பெரும்பாலும் அலட்சியமாயும், வேண்டா வெறுப்பாயும், இஷ்டமின்றிப் பேருக்குமாத்திரமே பெற்றுக்கொண்டிருப்போம். ஆகையால் விலை மதிக்கப்படா அந்த நன்மைகளால் யாதோர் பிரயோசனமும் அடையாமல் அவைகளை வியர்த்தமாக்கிக் கொண்டோமல்லவா? இப்படி நம்மால் புறக்கணிக்கப் பட்டவைகள் அனந்தம்போலும். ஆம், நமக்குள் எத்தனையோ பெயர் யாதோர் சங்கடமின்றிச் சகவாசமாய் அடிக்கடியும் இன்னும் அனுதினமும் திவ்வியபூசை கண்டிருக்கலாம். அப்படியே திவ்விய நன்மையும் வாங்கியிருக்கலாம். எத்தனையோ புத்தி பிரசங்கங்களையும் ஞான போதகங்களையும் கேட்டிருக்கலாம். வேண்டுமானால் ஞான ஒடுக்கங் கூடச் செய்திருக்கலாம். தாங்கள் பேர் கொடுத்திருக்கும் சபைகளின் ஒழுங்குகளைச் சுமுத்திரையாய் அனுசரித்து அனேக பேறுபலன்களை அடைந்திருக்கலாம். இன்னும் பலவாறாய்ச் சர்வேசுரன் நம்முடைய ஆத்தும க்ஷேமத்துக்காக ஏற்படுத்தியிருக்கும் சாதனங்களையும் வழிப்பாடுகளையும் உதவி கொண்டிருக்கலாம். இவைகளையெல்லாம் நாம் அலட்சியஞ் செய்திருப்போமானால் நிகழும் வருஷத்திலாகிலும் நாம் இப்பேருபகாரங்களைச் சரிவரப் பெற்று ஞானசம்பத்துடையவர்களாகப் பிரதிக்கினை செய்துகொள்வோமாக.

சென்ற வருஷத்தில் நம்மால் கட்டிக்கொள்ளப்பட்ட பாவங்களும், புறக்கணிக்கப்பட்ட நன்மைகளும் நமக்கு வற்புறுத்திக் காட்டுவதென்ன? நம்முடைய சீவியத்தை, அது எவ்வளவுதான் கஷ்டமாயிருந்தாலும், வருந்திப் பாடுபட்டுத் திருத்தக்கொள்ளும்படி யல்லவா? அப்படிச் செய்யாது போவோமானால் சென்ற வருடத்தில் நாம் அடைந்த ஞானநஷ்டத்தை விட நிகழும் வருஷத்தில் அதிக நஷ்டமடைய நேரிடுமென்பது திண்ணம். ஆகையால், உடனே— இன்றைக்கே நம்முடைய நடவடிக்கைகளை ஒழுங்குப்படுத்த ஆரம்பிப்போமாக.

இது விஷயத்தில் தாமதிப்பது எவ்வளவுஞ் சரியல்ல. ஆகட்டும் மெள்ள பார்த்துக்கொள்ளுவோமென்பது மகா மோசத்துக் கேதுகரமான தப்பறை. அதனால் நம்மையே பெரும் ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்ளுவோம். சர்வேசுரனுடைய எச்சரிப்பையும் அலட்சியஞ்செய்து அவரை அவமானத்துக்குள்ளாக்குவோம். அதேனென்றால் "ஆண்டவருடைய நாளுக்காக நீங்கள் காத்துக்கொண்டிருந்து அதை நாடி எவ்வளவோ பரிசுத்தத்தனத்தோடும் பய பத்தியோடும் நடந்துவரக்கடவீர்கள்." (2-இராயப்பர் III 11-12) என்னும் தேவவாக்கியத்துக்குக் காதுகொடாமற் போகிறோம். நம்முடைய அந்திய காலத்துக்காக ஆயத்தஞ் செய்யத் தாமதிப்பதானது நமக்குள் குடிகொண்டிருக்கும் பெரியதோர் குற்றம். நாம் பாவிகளாய்ச் சாகச் சர்வேசுரன் ஆசிக்கிறதில்லையென்பது மெய்யே. ஆயினும் நாமென்னேரமும் மரணத்துக்குத் தயாராயிருக்கும்படி எச்சரிக்க "நினையாத நேரத்திலே திருடனைப்போல் சாவு வரு"மென்று நமது கர்த்தர் திருவுளம்பற்றி யிருக்கிறார். அப்படி யிருக்க மனிதர்கள் இது விஷயத்தில் எவ்வளவோ அசட்டையா யிருக்கிறார்கள்! அர்ச். இராயப்பரும் இதைப்பற்றி வற்புறுத்திச் சொல்லுவதாவது : "ஒருவனுங் கெட்டுப் போகாமல் எல்லோரும் மனந்திரும்பும்படிக்கு ஆண்டவர் விரும்பி உங்களைப்பற்றிப் பொறுமையோடு காத்துக்கொண்டிருக்கிறார். ஆண்டவருடைய நாள் திருடனைப்போல் வரும். (2-இராயப்பர் III-9-10) என்பதே.

மேலும் இக்காரியத்தில் நாம் செய்யும் மற்றொரு பெரிய தப்பிதமென்னவெனில், நம்முடைய சீவியத்தைச் சீர்ப்படுத்திக் கொள்ள தேவவுதவியைத் தேடாமல் நம்முடைய சொந்த பலத்தினாலேயே அதைத் திருத்திக்கொள்ளப் பிரயாசிப்பதேயாம். நமது வாழ் நாட்களில் எத்தனையோ வருஷங்கள் கடந்துபோயின. அத்தனை வருஷங்களும் நாம் புண்ணியத்தில் தேர்ச்சியடையும் முயற்சிசெய்தோம் என்றாலும் நாமடைந்த தேர்ச்சியெவ்வளவு? ஒருக்கால்



219322

கேட்டுக்குப் போகும் பாதையில் தான் தேர்ந்துவருகிறோம் போலும். இதெல்லாம் தேவானுக்கிரகத்தைக்கொண்டு செய்யாமல் நம்முடைய சொந்த பலத்தை நம்புவதினால் உண்டாகும் பலன். ஆகவே, நாம் புண்யத்தில் நாளுக்குநாள் பிரவர்த்திக்க உதவியாயிருக்கும் வரங்களைச் சர்வேசுரனிடத்தில் இரந்து கேட்போமாக. விசேஷமாக நம்முடைய ஆத்தும இரட்சண்யத்தின் மட்டில் நமக்கு மெய்யான ஆசை உண்டாகவும் அந்த ஆசையில்நிலைத்திருந்து அதற்காக வருந்தி உழைக்க திடனையுந் தந்தருள வேண்டிக்கொள்வோமாக. இப்புது வருஷத்தில் இவ்வரங்களை இரக்கம் நிறைந்த நல்ல ஆயனான சர்வேசுரன் நம்முடைய சந்தாதாரர்கள் மேலும், நம் முடைய பத்திரிகையின் அபிவிர்த்தியைக் கோரி சிறிதேனும் திரவிய உபகாரஞ் செய்தவர்கள்மேலும், சந்தாதாரர்களைச் சேர்த்துத்தந்த சகாய புருஷர்கள் மேலும், அப்போதைக் கப்போது விஷய தானஞ் செய்தவர்கள்மேலும், இன்னும் நமக்குப் பலவிதமாய் உதவி செய்தவர்கள்மேலும் இவர்களுடைய குடும்பங்கள் மேலும் ஏராளமாய்ப் பொழியும்படி இன்று பூசைசெய்து ஒப்புக்கொடுப்போம். மேலும் இவர்களெல்லோரும் மேற்சொன்னபடி பரிசுத்தமாய்ச் சீவித்துத் தங்களுக்கு இவ்வருஷத்தைப் பாக்கியகரமான வருஷமாய் ஆக்கிக்கொள்ளவும், இன்னும் இப்பேர்ப்பட்ட பாக்கியகரமான பல்லாண்டுகளைக் காணவுங் கோருகிறோம்.

---

## WHENCE WE CAME?
## நாம் வந்த விதம்.

ஒரு காலத்தில் ராபின்சன் குருசோ என்பவன் கப்பற் பிரயாணம் செய்யும்போது திடீரென கப்பல் கடும்புயலில் அகப்பட் டுடைந்து போகவே, ராபின்ஸன் மட்டுந் தனிமையாக ஒரு துண்டு பலகையைப் பற்றிக் கடலைக் கடந்து நிர்மானுஷியமான ஒரு தீவில் வந்துசேர்ந்து அங்கேயே எழெட்டு வருஷங்களிருந்துவிட்டதாக, ஆங்கில பாஷையில் ஒரு கதை இருக்கிறது. இதைத் தமிழிலும் மொழி பெயர்த்திருக்கின்றனர்; ஆதலால் இக்கதையை அநேகர் வாசித்திருக்கலாம். அத்தீவில் தனிமையாகத் தன் காலத்தைக் கழித்துக்கொண்டு வருகையில், ஒருநாள் கடலோரத்தில் உலாவும்போது திடீரென ஓரிடத்தில் மனிதர் அடிச்சுவடுகள் மணலிற்பதிந்திருப்பதைக்கண்டு மிகவுங் கலக்கமுந் திகிலுங் கொண்டனனும். இதுவரையில் அவன் அத்தீவில் மனிதர் எவருமிலரென்றே எண்ணியிருந்தான்; ஏனெனில் அத்தீவை பன்முறை அவன் சுற்றிவந்தபோது மனிதரிருந்தால் பார்த்திருப்பானல்லவா? அவன் மனிதரையும் பார்த்ததில்லை, மனிதரடையாளத்தையும் கண்டதில்லை. ஆதலால் அவன்மேற்கூறிய காலடிச் சுவட்டைக்கண்டு கலங்கியது ஓர் ஆச்சரியமல்ல. இதிற் சந்தேகமில்லை. இவைக் காலடிச்சுவடுகளே! நன்றாக ஈரமணலிற் பதிந்திருந்தன; பாதத்தின் பல பாகங்களும் தெளிவாகத் தெரிந்தன. அவை அவ்விடத்தில் வந்த விதமெப்படி? ஒருக்கால் தானே இதற்கு முன் அப்பக்கம் போகும்போது அச்சுவடுகள் பதிந்திருக்கலாகாதா? இல்லை; ஏனெனில் அவன் அப்பக்கம் அதுவரையில் போனதே கிடையாது. மேலும் அச்சுவடுகள் இரண்டொருதினங்களுக்கு முன்னால் உண்டானவையாகத் தெரிகிறது. தன் காலடியை வைத்துப்பார்த்தால் அச்சுவடுகளில் பொருந்தவேயில்லை. அவை சிறுத்துக்குறுகி ரூபம் வேறாக இருந்தன.

இவ்வடையாளத்தைக் கண்டதும் அவன் ஏன் கலங்கி முகம் வெளுக்கவேண்டும்? ஏனெனில் தன்னையன்றி அத்தீவில் வேறொருவன் ஒருக்கால் பகைவனாயுமிருக்கலாம். வந்திருப்பதுடன் இன்னம் அங்கேயே இருப்பதாக யூகிப்பதற்கு வேண்டிய ஆதாரம் இதைவிட வேறென்னவேண்டும்? இக்காலத்திலுள்ள சில நாஸ்திகரைப்போல் அவன் தனக்குள்ளேயே தர்க்கித்துக்கொண்டு தன்னைத் தேற்றிக்கொள்ளவில்லை என்பதை இங்கே கவனித்தல்வேண்டும். சில போலி சாஸ்திரிகள் சொல்வதுபோல் இக்காலடையாளம் “அகஸ்மாத்தாய்” அல்லது “தற்செயலாய்” இங்கு வந்திருக்கலாம். அல்லது “இயற்கை வல்லமையால் அறியாமலே அவ்வடையாளம்” நேர்ந்திருக்கலாம், அல்லது “தற்செயலாய் அணுக்கள் ஒன்று கூடுவதின் பயனாயிருக்கலாம்?” என்று இவ்வாறு பொரு



ளில்லாப் பொய்மொழிகளைப் பிதற்றி, அவன் தன் மனதைத் திருப்தி செய்துகொள்ளவில்லை. இல்லை! அது அம்மணலிற்பதிந்த ஒரு சாதாரணக் காற்சுவடாயினும், யாரோ ஒருமனிதன் அப்பக்கம் மெய்யாகவே போயிருக்கிறான் என்னும் இச்சேதியை வெகு தெளிவாகவும் நிச்சயமாகவும் இவ்வடையாளம் ராபின்ஸனுக்குத் தெரிவித்தது. வார்த்தைகள்கூட இவ்வளவு தெளிவாய் இவ்விஷயத்தை வெளியிட்டிருக்காதென்றே சொல்லலாம்.

இவ்வடிச்சுவடுகளுக்குப் பதிலாய் நமதரசரின் உருவமும் பேரும் அமைந்த ஒரு வெள்ளி நாணயத்தைக் கண்டதாக வைத்துக்கொள்வோம். மேற்கூறிய காலடையாளம் உண்டானது மனிதனால் என்று நிச்சயமானால், இந்த ரூபாயைச்செய்தது மனிதனென்றே அதினும் பதின்மடங்கு நிச்சயமாய் நினைக்க இடமில்லையா? ஒருவர் துணையுமின்றி இயற்கையின் குருட்டு வல்லமையால் அல்லது தற்செயலென்னும் சக்கரத்தால் அந்த ரூபாய் உண்டாயிருக்கவேண்டுமென்று என்ன நியாயங்களை எடுத்துச் சொன்னபோதிலும், நம்பக்கூடுமோ? ஒருக்காலுமில்லை! இத்தகைய அபிப்பிராயம் மதிகெட்டதென்றே சொல்லவேண்டும.

இவற்றிற்குப் பதிலாய், ராபின்ஸன் அத்தீவில் ஒரு புகைவண்டி ரயில் கம்பிகள்மேல் நிற்பதைக் கண்டதாக வைத்துக்கொள்வோம். அங்கே அவ்வண்டி சகல வேலைப்பாடுகளும் அமைக்கப்பெற்றுப் போகத் தயாராயிருக்கிறது. இவ்வண்டி மனிதயுக்தியால் செய்யப்படாமல், தானாகவே தற்செயலாய் அங்கு வந்திருக்கவேண்டுமென அவன் ஒருக்கணமேனும் நினைத்திருக்கக்கூடுமா? இயற்கைவல்லமையால் அது உண்டாயிருக்கவேண்டும் என்று மனப்பூர்வமாய் நம்பக்கூடிய அவ்வளவு மதியீனமான மனநிலைமையில் அவன் இருக்கவுங்கூடுமா? அவ்வண்டியைச் செய்ய காரணமாயிருந்த மூலபுருஷனாகிய சிற்பி எங்கே? அதன் பல பாகங்களை ஒழுங்காகச் செய்து ஒன்றோடொன்று பொருந்தும்படி யமைத்த வேலைக்காரர் எங்கே? இவைகளை எல்லாம் யோசித்தால், புத்தியில்லா மூடர்களும், எல்லாந் தெரிந்தவர்போல் வாயில் வந்ததைப் பிதற்றித் திரியும் பேதையருமே இவ்வாறு நினைப்பார்கள். தெளிவானதும் தவறக்கூடாததுமான அத்தாட்சியுடன் கூடிய குறிப்புகள் அமைந்த ஒரு வஸ்து தற்செயலாய் உண்டாயிருத்தல் அசாத்தியம் என்று ஒவ்வொருவரும் தெளிவாய்க் கண்டறியவேண்டும். இத்தகைய வஸ்துவை உணர்ச்சியும் பகுத்தறிவுமுடைய ஒருவன் செய்திருக்கவேண்டுமென்பது ஞாயத்துக்கடுத்ததல்லவா? குருசோ எவ்வளவுக்கெவ்வளவு ஆழ்ந்து யோசித்துப்பார்க்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு புகைவண்டியும் ரூபாயும், தாம் எடுத்துக்கொண்டகாரியம் இன்னதென்று முன்னமே சிந்தித்துச் செய்யப் புகுந்தவர்களால் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்னும் உண்மையே அவன் புத்தியிற் படுகிறது.

காற்று எப்போதும் வீசிக்கொண்டேயிருக்கிறது; நுண்மையான மண்குவியல்களின் ரூபத்தை அது சதா மாற்றிக்கொண்டே இருக்கிறது. ஆனால் இக்காற்று நித்தியகாலத்துக்கும் அடித்தபோதிலும், அரசர் ரூபமமைந்த ஒரு வெள்ளி ரூபாயைப்போன்ற ஒரு வஸ்துவை உண்டுபண்ண அதனால் ஆகாதென்பது திண்ணம். கடல் எப்போதும் அசைந்தாடுவதால் அலைகள் களைப்படைந்து சற்றும் அயர்வதில்லை; ஆனால் அவை எவ்வளவுதான் கொந்தளித்து மலைபோல் எழுந்து குதித்தபோதிலும், புகைவண்டிக்கு வேண்டிய இரும்பு முதலிய வஸ்துக்களை அலைகளுக்குக்கொடுத்து லட்சநூற்றாண்டுகள் காத்திருந்தபோதிலும், அவ்வலைகள் ஒரு புகைவண்டியை உண்டுபண்ணுவதைப் பார்க்கமுடியாது. ஏன் முடியாது? அலைகளுக்குப் பலமில்லையா? அவை மனிதனைவிட எத்தனையோ மடங்கு பலமுடையவை. அவை தம் பலத்தால் மனித யுக்தியால்செய்த பெரிய மரக்கலங்களையும் இருப்புக்கப்பல்களையும் சாதாரணக் கிளிஞ்சில்களைப்போல் அலைக்கழித்து நாசமாக்குகின்றன. ஆம் அவை பலமும் வல்லமையுங் கொண்டவைதாம்; ஆனால் அவைகளுக்குப் புத்தியும் யுக்தியும் கிடையாது. அறிவும் ஞானமும் விளங்கும் ஒவ்வொரு வஸ்துவும் அறிவும் ஞானமுமுடைய ஒருவரால் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்பது கரதலாமலகமல்லவா?

இதுவரையில் நாம் ராபின்ஸன் என்பவன் காலடிச்சுவடு, ரூபாய், புகைவண்டி இவற்றைக்கண்டு மயங்கித் தனக்குள் யோசனை செய்ததைப் பார்த்தோம். தன் னறிவைக்கொண்டு அவன் மேற்கூறியவைகளுக்குக் காரணமானவர்கள் புத்தியும் யுக்தியும் வாய்ந்த மனிதரென

நிச்சயித்தான். காற்றும், அலைகளும், பறவைகளும் மிருகங்களும் அவற்றை அணுவளவும் உண்டுபண்ணியிருக்க முடியாதெனத் தெள்ளிதில் உணர்ந்தான்.

இனி அவன் யோசனையின் போக்கென்னவென்றாராய்வோம். இவ்வாராய்ச்சியே மேற்கூறிய விஷயங்களிலும் முக்கியமானது. குருஸோ சற்றே நிதானித்து யோசிக்கிறான் பிறகு அவன் தனக்குள் பின்வருமாறு சிந்திக்கிறான்: "மனிதன் இவற்றை உண்டுபண்ணினான் என்பதுண்மையே; ஆனால் மனிதனைப் படைத்தது யார்? கேவலம் ஒரு வெள்ளி நாணயத்தைச் செய்ய அறிவும் ஞானமும் பொருந்திய உயிருள்ள காரணம் ஒன்று வேண்டுமானால், அக்காரணத்தை அதாவது மனிதனை உண்டுபண்ணுவதற்கு மெய்யாகவே உயிரும் ஞானமும் பொருந்திய ஒரு காரணகர்த்தா இருக்கவேண்டிய தவசியமல்லவா? ஆச்சரியமான ஒரு அழகிய படத்தை எழுதிய சாஸ்திரி, அப்படத்தைப் பார்க்கிலும் அதிக ஆச்சரியமுடைய அபூர்வ வஸ்துவல்லவா? அப்படியே வேலைப்பாடமைந்த புகைவண்டியை அமைத்த சிற்பசாஸ்திரி, அவ்வண்டியைவிட அபூர்வமான வஸ்துவாயிருப்பதுமன்றி, தானிருப்பதற்குக் காரணமாயுள்ளவரின் மேலான ஞானத்தை விளக்க ஓர் ஆச்சரியமான அத்தாட்சியாய் இருக்கிறான்.

(தொடரும்)

S. SELVARAJU.

---

# CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்

### 11ம்-பாடம்.

### தேவதூஷணம்.

(முன் தொடர்ச்சி.)

---

11. நாஸ்தீகனுடைய தீர்க்க தரிசனம்.—சர்வேசுரன் இல்லையென்று சாதிக்கும் துர்ச்சனருக்கு வால்தேர் என்பவன் தலைவனாயிருந்தான். இவன் சர்வேசுரனுக்கு விரோதமாய்க் கக்கின தேவதூஷணங்களுக்கும் எழுதின அவலக்ஷணமான புஸ்தகங்களுக்கும் கணக்கில்லை. 1758௵ பிப்ரவரி௴ 25௳ இவன் கக்கின தேவதூஷணம் "இன்னும் 20-வருஷத்துக்குள் தெய்வமானது ஒரு விளையாட்டுக் கருவியாய்விடும்" என்று பிதற்றினான். 1778 வருஷம் பிப்ரவரி௴ 25௳ இந்தத் தேவதூஷணனுக்குச் சடுதியில் பயங்கரமான வியாதி கண்டு இரத்தம் கக்கினான். இது தேவதண்டனையென்று அந்தப் பாதகன் அறிந்துகொண்டு தான் விரோதித்த குருக்களில் ஒருவரை வரவழைத்து அவர் சமுகத்தில் தான் முன் தேவனுக்கும் வேதத்துக்கும் விரோதமாய்ப் பேசினதும் எழுதினதுமானவைகளுக்கு மெய்யான பச்சாதாபப்பட்டு அவைகளையெல்லாம் தான் மறுத்து விட்டதாகச் சொன்னான். வியாதி அதிகரித்தபடியால் கடைசித் தேவத்திரவிய அநுமானங்களைப்பெற ஆசித்தும் அவனுடைய துர்ச்சிநேகிதர் குருவானவரை அவனிடம் போகவிடவில்லை. இந்தத் தேவ தூஷணனுக்குப் பயங்கரத்துக்குரிய இழுப்பு கண்டு சொல்லி முடியாத வேதனை ஆராட்டத்துக்குள்ளாகி சீறிவிழுந்து நாலா பக்கமும் உருண்டு புரண்டு தன் சதையைத் தன் கையாலே பிறிக் கிழித்துத் தன் மலத்தைத் தானே தின்று அவலமாய் மாண்டான். (Gaume.)

12. இது மெய்யாகவே தேவ தண்டனை.—அநேகம் வேலையாட்கள் கூட்டமாய்க்கூடிப் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில், சேணியன் ஒருவன் துற்பாஷையாடி உதாசனங்களைச் சொல்லி சர்வேசுரனையும் அவர் வேதத்தையும் இகழ்ந்து தூஷணிக்கத் துவக்கினான். அப்பொழுது கூட்டத்திலுள்ள ஒருவன் சர்வேசுரனைத் தூஷணிக்க வேண்டாமென்று சொல்லச் சொல்ல, அந்தத் துரோகிக்கு அதிகமூர்க்கமுண்டாகி பயங்கரமான தேவ தூஷணங்களைச் சொல்லி, "உன் சர்வேசுரனை இன்று இராத்திரியே சாப்பிட்டு விடுகிறேன்" என்றக்ஷணமே, அவன் உட்கார்ந்திருந்த பலகையிலிருந்து கீழே விழுந்தான். அங்கிருந்தவர்கள் அவனைத் தூக்கி உட்காரவைத்தபோது உயிரற்ற பிரேதமாயிருப்பதாக அறிந்து, இது மெய்யாகவே தேவ தண்டனை என்று நிச்சயித்தார்கள். Noel.

13. 1841-௵ பிப்ரவரி-௴ 14௳ ஞாயிற்றுக்கிழமைக் காலையில்.—கிறிஸ்தவர்கள் அனைவோரும் பூசைகாணும் சம



யத்தில் சில போக்கிரிகள் பூசைக்குப் போகாமல் சாராயக் கடைக்குப்போய்க் குடித்து, உல்லாசமாய்ப் பேசி சிரித்துக்கொண்டிருந்தார்கள். நடுப்பூசை நேரத்தில் மணிச்சத்தத்தைக் கேட்ட அவர்களுக்குள் மகா துஷ்டனான ஒரு பாதகன் குருவானவர் செய்யுந் திருச் சடங்கைப் பழித்துத் தன் அவலக்ஷண வாயைத் திறந்து தேவநற்கருணையின் வசீகர வார்த்தைகளை உச்சரித்து ஒற்றை முழங்காலிலிருந்து, திரும்ப எழுந்திருக்காமல் இருப்பதைக் கண்டவர்கள் இன்னும் என்ன செய்வானோ என்று தமாஷாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவன் வெகு நேரம் ஒற்றை முழங்காலில் இருப்பதைக் கண்டவர்கள் அவன் அருகாமையிற் போய்ப் பார்த்த சமயத்தில், அவன் எழுந்திருக்கக் கூடாமல் அவஸ்தைப்படுவதை அறிந்து இவனைத் தூக்கித் தரையில் படுக்கவைத்தார்கள். சற்று நேரத்துக்குப்பின் வைத்தியர் வந்து முழங்காலைப் பரிசோதனை செய்து, முழங்கால் சிப்பி பொடிப்பொடியாக நொறுங்கினதென்று சொல்லி, இப்பேர்ப்பட்ட சம்பவத்தைத் தான் ஒருபோதும் பார்த்ததில்லை என்றான். இதைப்பார்த்தவர்களும் கேட்டவர்களும் பயந்து தேவதூஷணத்துக்கு இது சம்பாவனை யென்றார்கள். Noel.

---

### 13-ம் பாடம்.

உதாசனம் முதலிய கெட்டவார்த்தைகளைச் சொல்லித் திட்டாதபடிக்கும், கோபத்தால் சாபனை வார்த்தைகளைச் சொல்லி சபியா திருக்கும்படிக்கும் 2-ம் கற்பனை படிப்பிக்கின்றது.

1. தகப்பனே! என்னை இன்னொரு அடி அடியுங்கள்.—பெல்ஜிய தேசத்தில் 10-பிராயமுள்ள சிறுவன் பள்ளிக்கூடத்தில் படித்து சன்மார்க்கனாய் நடந்து வந்தான். அவன் தகப்பனோ நல்ல கிறிஸ்துவனல்ல. முன்கோபியும் உதாசனம் முதலிய அசுசியான வார்த்தைகளைப் பேசும் வழக்கமுள்ளவன். ஒருநாள் பையன் ஏதோ காரணத்தைப்பற்றிப் பள்ளிக்கூடத்தினின்று தாமதமாய் வீட்டுக்கு வந்ததை அறிந்த அவன் தகப்பன் உக்கிர கோபத்துடன் பையனைக் கொடுமையாய் அடித்துத் தனகெட்ட வழக்கப்படி அசுசியான வார்த்தைகளால் பையனைத் திட்டினான். உடனே அந்தச்சிறுவன் தன் தகப்பனுக்கு முன் முழங்காற்படியிட்டு கண்ணீருடன் "என் பிரிய தகப்பனே, வேண்டுமானால் என்னை இன்னொரு அடி அடியுங்கள். ஆனால் கெட்ட வார்த்தையால் திட்ட வேண்டாம்" என்றான். இதைக் கேட்ட தகப்பனுடைய இருதயம் மெழுகுபோல உருகி, கண்கலங்கி, அறைக்குட் சென்று கண்களை துடைத்துக்கொண்டு அது முதல் தன் துற்வழக்கத்தை முற்றும் விட்டுவிட்டான். Chisholm.

2 பத்திரிகை விற்கும் சிறுவன்.-பல வருஷத்துக்குமுன் இருதேசத்தாருக்குள் சண்டை உண்டான காலத்தில் சகலரும் சமாசாரப் பத்திரிகையை ஆவலுடன் வாங்கி வாசித்து வந்தார்கள். ஒருநாள் ஒரு சிறுவன் பத்திரிகை மூட்டையைச் சுமந்துகொண்டு பத்திரிகை! பத்திரிகை! பெருஞ் சண்டை! என்று வீதி வீதியாய்க் கூவிக்கொண்டுபோகுஞ் சமயத்தில் ஒரு துரை பத்திரிகையை வாங்கினபின் அந்தச் சிறுவன் புத்திசாலியா யிருப்பதை அறிந்துகொண்டு "உன் தகப்பன் எங்கே?" என்று ஒரு உதாசனவார்த்தையைச் சொன்னான்: பையன் "என் தகப்பனார் இறந்துபோனார் ஐயா" என்கவே வேறே ஒரு அசுத்தவார்த்தையைச் சொல்லி "உனக்குப் படிக்க இஷ்டந்தானா?" என்று கேட்டான் "படிப்பதற்கு ஆசைதான் ஆனால் ஐவேசு இல்லை ஐயா" என்று பையன் சொன்னான் "என்னிடம் நீ வந்தால் உன்னைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவேன, என்ன சொல்லுகிறாய்?" என்று ஒரு பொல்லாத வார்த்தையைச் சொன்னான். அப்போது சிறுவன் "ஐயா இப்படி அடிக்கடி பொல்லாத வார்த்தையைச் சொல்லும் உம்மிடம் இருக்க எனக்கு மனமில்லை" என்று சொல்லி, பத்திரிகை! பத்திரிகை யென்று கூவிக்கொண்டு அப்பால் சென்றுவிட்டான். (Ave Maria.)

3. ஸ்வாமி என்பேரில் தயவாயிரும்.- ஒரு சிறுபையன் இளம்பிராயத்தில் நற்குணசாலியாய் நடந்துவந்தான். இவன் பெரியவனானபின் பட்டாளத்தில் பேர் கொடுத்தான். இவன் சிப்பாய்களோடு

சேர்ந்து அவர்களுடைய துற்பழக்கங்களை அனுசரித்து, விசேஷமாக அசுசியான வார்த்தைகளைக் கூச்சமின்றி உச்சரிப்பான். இவன் ஒருநாள் உதாசனத்தின் தோஷத்தைப் பிரசங்க மூலமாய் அறிந்து துக்கித்துப்பாவசங்கீர்த்தனஞ் செய்து, அத்துற்பழக்கத்தை விட்டுவிடுவதற்கான உபாயத்தைத் தெரியப்படுத்தும்படி குருவானவரை மன்றாடினான். அப்போது ஸ்வாமியார் இவ்வாறு சொல்வார்: இனி இப்பேர்ப்பட்ட ஒடியமான வார்த்தைகளைச் சொல்லாதபடிக்கு ஜாக்கிரதையா யிரு. அப்படித் தப்பித் தவறி யாதொரு கெட்ட வார்த்தை உன் வாயில் வந்தால் உடனே மனதில் துக்கப்பட்டு சற்று தலை குனிந்து "ஸ்வாமி என்பேரில் தயவாயிரும" என்று சொல்லக் கற்பித்தார். இவனும் இவ்வாறு செய்து வந்தான். இவன் சண்டைக்குப் போய்ச் சண்டை மும்முரமாய் நடக்குங் காலத்தில் அவனுடைய வரிசையிலிருந்த சிப்பாய்களில் அநேகர் மடிந்துவிழுந்தார்கள். அந்நேரத்தில் அவன் இடையில் தொங்கின கத்தி தவறிக் கீழே விழுந்தது. உடனே இவனுக்குக் கோபமுண்டாகி ஒரு கெட்ட வார்த்தையைச் சொன்ன க்ஷணமே அதற்காக மனஸ்தாபப்பட்டு தலைகுனிந்து "ஸ்வாமி என்பேரில் தயவாயிரும்" என்று சொல்லும்போது சத்துராதிகள் சுட்ட குண்டு இவன் தலைக்கு மேற் சென்றது. இவன் தலைகுனிந்திராவிட்டால் செத்திருப்பான். (Ill Cat.)

4. துற்பாஷையாடின சிறுவன்.—அடிக்கடி கெட்ட வார்த்தையைப் பேசி வரும் தன் மகனை ஒருவன் கண்டியாமல் செல்வமாய் வளர்த்து வந்தான். அவன் சிறுவனா யிருக்கும்போதே ஒருவித வியாதியால் பீடிக்கப்பட்டான். மேலும் இந்தப் பாவத்தினிமித்தம் சில காலத்துக்குள் அவன் மேல் பசாசு ஆவேசங்கொண்டு குரூரமாய் உபாதிக்கப்பட்டு தன் தகப்பன் கையிலேயே அகாலமான மரணமானான் என்று அர்ச். கிறேகோரியார் எழுதி வைத்திருக்கிறார்.

பிள்ளைகளே! வாய்திறந்து பேசும்போதெல்லாம் கெட்ட வார்த்தைகளைக் கூச்சமின்றி உச்சரிக்க வழக்கப்பட்டிருக்கிறார்கள் இந்துக்கள். ஆனால் ஸ்திரி பூமான்களான கிறிஸ்துவர்களில் அநேகர் சற்றேனும் அச்சம் பயமின்றி உச்சரிக்கக் கூடாத அவலக்ஷண வார்த்தைகளைச் சொல்லுவது எப்பேர்ப்பட்ட வெட்கக்கேடு! சண்டையிட்டுத் திட்டும்போது இப்பேர்ப்பட்ட துஷ்ட கிறிஸ்துவர்கள் வாயில் வரும் நரகலான பாஷை நரக பாஷையென்று உறுதியாய்ச் சொல்லலாம்! இது கிறிஸ்துவர்களுக்கு யோக்கியமல்ல. நீங்கள், பிள்ளைகளே! இந்தத் துர்வழக்கம் உங்களுக்கிருந்தால் அதை முற்றும் விட்டுவிடுங்கள். இல்லாவிட்டால் ஸ்வாமி உங்களைக் கடினமாய்த் தண்டிப்பார். மேலும் உங்களுக்குச் சிறியவர்களா யிருக்கப்பட்டவர்கள் இப்பேர்ப்பட்ட அவலக்ஷண வார்த்தையைச் சொன்னால் அவர்களுக்குப் புத்திசொல்ல மறவாதேயுங்கள்.

---

## GNANAMANI III. PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 15-ம் அதிகாரம்.

### விசித்திரமான புடவையின்றி கோவிலுக்குப் போக வெட்கப்படுவாள்.

---

மறுநாள் காலை பத்துமணிக்கு ருக்மணி மடத்துக்கு வந்திருப்பதைப்பற்றி கேள்விப்பட்ட மடத்து முதலாளியம்மாள் வெளியே வந்து பார்த்து, "என்ன, ருக்மணி, பத்து மணிக்குச் சரியாய் வந்து விட்டாயே! நல்லது, வா," என்று அழைத்துக்கொண்டுபோய் உட்காரவைத்து, "நேற்று நான் சொன்னதெல்லாம் மனதில் வைத்துக்கொண்டிருக்கிறாயோ?" என்றார்கள்.

ருக்.—ஆமா, தாயாரே, ஞாபகத்தில் வைத்திருப்பது மாத்திரமல்ல, நீங்கள் சொன்னதைச் சுருக்கி ஒரு காகிதத்தில் குறித்துக் கொண்டேன், இதோ பாருங்கள்.

தா.—(அதைக் கையில் வாங்கி, சிரித்துக் கொண்டு வாசித்துப் பார்த்து) ஒகோ! என் வார்த்தை வீணாய்ப் போகவில்லை, நீ யிதை வருஷத்தில் இரண்டொரு விசை வாசித்து வந்தால்



அதனால் உனக்கு வெகு பிரயோசனம் உண்டாகும். உனக்கு இவ்வளவு நல்ல மனது இருக்கிறதைப்பற்றி யின்னுஞ் சில சங்கதிகளை உனக்குச் சொல்லுகிறேன்.

சோம்பல் தனத்துக்கு இடங்கொடுக்கக் கூடாது. அநேக பெண் பிள்ளைகள் மத்தியான சாப்பாடு முடிந்தபின் தங்கள் வீட்டிலாகிலும் அண்டை வீட்டிலென்கிலும் மீட்டிங்கு கூடுவது வழக்கம்.

ருக்.—என்ன மீட்டிங்கு தாயாரே?

தா.—(சிரித்துக்கொண்டு) இரண்டு மூன்றுபேர் சேர்ந்துகொண்டு பக்கத்து வீட்டுக்காரர்மேலும் ஊரார் பேரிலும் அபதூறு பேசி, அவர்களுடைய பேச்சிலும் நடத்தையிலும் குற்றம் பிடிக்கிற மீட்டிங்கே!

ருக்.—ஆமா, தாயாரே! வாஸ்தவத்தில் அது நடக்கிறது.

தா.—ஒருத்தர்மேல் அபதூறு பேசுவது பாவமென்று அந்த ஸ்திரீகள் நினைக்கிறதே இல்லை. ஒரு சிறு நெருப்பு பொறியால் பெரும் பட்டணமுழுதும் நாசமாவது சர்வ சாதாரணம். மனிதருக்குள்ள உறுப்புகளில் நாவானது சிறு உறுப்பாயினும் அது கனத்த நஷ்டத்தை யுண்டாக்குமென்று வேதத்தில் எழுதப்பட்டிருப்பது போல, வேலை வெட்டியின்றி கூட்டங்கூட்டமாய் உட்கார்ந்துகொண்டு, அபதூறான சங்கதிகளைப் பேசிவரும் பெண்களால் விளையுந் தின்மை சொற்ப மல்ல.

இப்பேர்ப்பட்ட கூட்டங்களில் வரும் ஆவலாதியான நடத்தைகள் என்ன வென்றால், பார்க்காததைப் பார்த்ததாகச் சாதிப்பார்கள். சந்தேகமாகச் சொல்லப்பட்டவைகளை மெய்யாகவே நடந்ததென்று நிச்சயிப்பார்கள். ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவும் பகை மனஸ்தாபமும் உண்டாகும்படி காரணமாயிருப்பார்கள் அந்த ஸ்திரீகள். எல்லோர்பேரிலுங் குற்றங் குறைகண்டுபிடித்து, அவள் இப்பேர்ப்பட்டவள் இவள் இப்பேர்ப்பட்டவள், அவள் உன்னை அப்படித் திட்டினாள், உன் வீட்டுக்காரரை யிப்படி நிந்தித்தாள் என்று தூற்றுவார்கள். இப்பேர்ப்பட்ட பெண்பிள்ளைகள் யார் பேரிலாகிலும் ஆவலாதியாய்ப் பேசாவிட்டால் அவர்களுக்கு மனத்திருப்தி உண்டாகாது. தங்களுடைய இப்பேர்ப்பட்ட துஷ்ட வேலையால் குடும்பங்களுக்குள் சண்டை சச்சரவு மனஸ்தாப வைராக்கியமும் உண்டாயிருப்பதைப் பார்ப்பது இவர்களுக்கு ஆனந்தம்! ஆம், பரமானந்தம்!

இப்பேர்ப்பட்ட தீராவிரோதங்கள் உண்டாயிருக்கும்போது குற்றமற்ற குடும்பத்தார், குழப்பமுண்டாவதற்குக் காரணமான ஸ்திரீயை நோக்கி நீ யிப்படிப் பேசினாயாம், அது நிசந்தானா வென்றால், தனக்கு ஒன்றுந் தெரியாதென்று சத்தியப் பிரமாணங்களுடன் சாதிப்பாள். ஆவலாதியான சொற்களால் எவ்வளவு தின்மை யுண்டாகிறதென்று பார்த்தாயா ருக்மணி?

நீ யிப்பேர்ப்பட்ட துஷ்டப் பெண்பிள்ளைகளோடு சேரவேண்டாம். அவர்களுடன் சகவாசம் செய்யவும் வேண்டாம். நீங்கள் வெளியூருக்குப் போனபின் தேவதாஸ் நாயகர் கனவான்களோடும் தனவான்களோடும் புழங்கிப் பேசுவாராகையால், தேனை ஈ மொய்ப்பதுபோலப் பெருமாட்டிகளான அநேக ஸ்திரீகளும் வாலிபப் பெண்களும் உன்னிடம் வருவார்கள். பல காரியங்களைப்பற்றிப் பேசுவார்கள். அவர்களுடைய குணாகுணங்கள் உனக்குத் தெரியாதாகையால், உன் இருதய அந்தரங்கத்திலுள்ளவைகளை அவர்களுக்கு அறிவியாதே.

அப்பேர்ப்பட்ட அன்னியர் புறத்தியாருடைய குற்றங் குறைகளைப்பற்றிப் பேசும்போதும் அவதூறான பாஷைபாடும்போதும் அவைகளுக்கு உன் காதைச் சாய்க்காதே. அப்பேர்ப்பட்ட சம்பாஷணை உனக்குப் பிரியமல்லவென்று உன முகச் சாடையால் காட்டினால் அவர்கள் அது முதற்கொண்டு ஜாக்கிரதையா யிருப்பார்கள். துவக்கத்தில் அப்பேர்ப்பட்ட கொள்ளிவாய்ச் சர்ப்பத்துக்குரிய நாவை உடைய ஸ்திரீகளுடன் சகவாசஞ்செய்து, அவர்கள் கக்கும் விஷம் நிறைந்த சம்பாஷணையை உன் இருதயத்தில் செலுத்துவாயாகில் உன் ஸ்திதி நிர்பாக்கியத்துக்குரியதா யிருக்கும், ஜாக்கிரதை!

உனக்கு இனி அநேக வேலையாட்கள் இருக்கப் போகிறதைப்பற்றி, நீ வெளியே போய்ப் போசனவர்க்கத்துக்குரிய அவசரமான சாமான்களை வாங்கவும், குளம் தூரவுக்குப்போய் ஜலம் கொண்டுவரவும் அவசரமிராது. அப்போது நாள் முழுதும் உனக்குச் சாவகாசமிருக்கும். ஆனால் அதை வீணில் செலவழியாதே. கடையிலிருந்து கொண்டுவரப்பட்ட காய் கனி

முதலியவற்றை நீ நேராகப்பார்த்து என்னென்ன சமைக்கவேண்டுமென்றும், எவ்விதமாய்ச் சமைக்க வேண்டுமென்றும் வேலைக்காரருக்குத் திட்டஞ் செய்யவேண்டியது. வேலைக்காரரை நம்பி, சமையல் வேலையையெல்லாம் அவர்கள் கையில் ஒப்படைப்பது புத்தியல்ல.

எனக்குத் தெரிந்த ஒரு விஷயத்தை உனக்குச் சொல்லுகிறேன். ஒரு ஊரிலிருந்த குடியானவர்களுக்குள் ஒருவன் கொஞ்சம் பணக்காரனாய்த், தான் இருக்கும் நாட்டுப் புறத்திலுள்ள பெண்ணைக் கலியாணஞ்செய்வது தனக்குக் கண்ணியக் குறைவென்று எண்ணி, பட்டணஸ்தலத்தில் பெண் பேசி கலியாணத்தை முடித்தான். கலியாணத்திற்குப்பின், அந்தப் பெண் தன் கணவனுக்கும் மாமிக்கும், மாமனுக்கும் பயந்து நடந்தவளல்ல. வெளியே போய் வேலை வெட்டிப்பார்ப்பது தனக்குத் தெரியாதென்பாள். வீட்டுவேலை செய்வது தன் அந்தஸ்துக்குத் தகுந்ததல்லவென்பாள். ஆனதைப்பற்றி சமையல் செய்கிறதுமில்லை, சமைத்துவைத்த போசனத்தைத் தன் கணவனுக்குப் பறிமாறினவளுமல்ல. நாள்முழுதும் கட்டிலிற் படுத்துத் தூங்குவாள். சாப்பாடு முஸ்திப்பான சமயம் பார்த்து கட்டிலினின் றுகுதித்து, திருப்தியாய்ப் போசனம் செய்தபின், எதாப்பிரகாரம் கட்டிலின்மேல் ஏறிக்கொள்வாள். இதைப்பற்றி அவளுடைய கணவனும் மாமன் மாமியும் அனுபவித்துவரும் கஸ்தி வியாகுலம் கொஞ்சமல்ல.

ஆகையால் ஒருவளுடைய புருஷன் லக்ஷாதிபதியா யிருந்தாலும், மனைவியானவள் சமையலறையில் போய், அங்கே செய்யப்படும் சமையல்களை கண்காணிப்பதுடன், தன்னால் கூடிய வேலையும் செய்வது பெண்ணாய் பிறந்தவளுக்கு அழகு. "ஸ்திரீயானவள் சமையல் வீட்டையும் தொட்டிலையுங் கண்காணிப்பது அவளுடைய கடமை" என்று ஒரு சிறந்த அரசன் சொல்லியிருக்கிறார். அதாவது, இல்லற வாழ்க்கைக்கு அழைக்கப்பட்ட ஸ்திரீயானவள் எவ்வந்தஸ்திலிருந்த போதிலும் தன் வீட்டையும் வீட்டிலுள்ள பொருளையும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி சமையல் வீட்டையும் கண்காணித்துத் தன்னால் கூடிய வேலைசெய்யவேண்டியது. இரண்டாவது, தன் பிள்ளைகளைப் புறத்தியார் கையில் வளர்க்கக் கொடாமல் தானே அவர்களைப் போஷித்துப் பராமரித்துக் காப்பாற்றவேண்டுமென்பதே அதன் கருத்து.

இன்னொரு காரியத்தை நீ கவனிக்கவேண்டியது. அதென்னவெனில், வியர்த்த செலவு செய்வதே. வீட்டுக் காரியங்களையும், வீட்டுக்கு வேண்டிய செலவுகளைப்பற்றியும் கவனிக்கப் புருஷனால் கூடாது. ஸ்திரியானவளே இதையெல்லாம் ஜாக்கிரதையுடன் பார்த்துவரவேண்டியது. நான் முன் இருந்த ஊரில் ஒரு வீட்டுக்காரர் இருந்தார்.

ருக்.—உங்கள் ஊர் எந்த ஊர் தாயாரே?

தா.—மதராஸ் என்று வழங்கப்படும் சென்னப்பட்டணம்.

ருக்.—பிறகு?

தா.—புருஷனானவன் சர்க்காரில் 300-ரூபாய்ச் சம்பளமுள்ள உத்தியோகத்திலிருந்தார். சர்க்கார் சம்பளத்துடன், தன் பங்குக்குவந்த நிலங்களில் உற்பத்தியாகும் தானிய தவசத்தாலும் பெரும் பணத்தொகை வருஷத்திற்கு ஒரு தடவை இரண்டு தடவை வந்துகொண்டே யிருக்கும். வீட்டு எசமான் மகா செலவுகாரர். முன்பின் யோசனை செய்யாமல் பெருத்த காரியங்களைத் துணிவுடன் நடத்த பேராசை குணமுள்ளவர். சிலசமயங்களில் டம்பாச்சாரி தனமாயும் நடப்பார். இதைப்பற்றி தனக்குச் சொந்தமான நிலங்களையும் வீடு மனைகளையும் விற்று, தான் முயற்சி செய்யும் வேலைக்காக உபயோகித்தார்.

புருஷனுடைய நடத்தை இப்பேர்ப்பட்டதாயிருக்க, பெண்சாதியின் நடத்தை யின்னும் கேவலமா யிருந்தது. அதெப்படியெனில், தன் புருஷன் சர்க்காரில் முன்னூறு ரூபாய்ச் சம்பளக்காரனா யிருப்பதைப்பற்றிச் சாதாரணமான பெண்டீர்களைப்போல தான் இருப்பது கெம்பீர குறைவென்றும், தன் மேலான அந்தஸ்துக்கு ஹீனமென்றும் புத்தி யீனமாய் எண்ணி, தன் புருஷனுக்குத் தெரிந்தும் தெரியாமலும் விலையுயர்ந்த வஸ்திராபரணங்களை வாங்கி யணிய ஆரம்பித்தாள். சாமான்யமான கடைகளில் தனக்கு வேண்டியவைகளை மலிவாக வாங்குவது தனக்குக் கனக்குறை வென்று வீணாய் எண்ணி பெரிய பெரிய ஷாப்புகளில் வாங்குவாள்.

யர்தொரு பெண்பிள்ளை நேர்த்தியான வஸ்திராபரணம் தரித்திருப்பதைக் கண்டால் மறுவாரத்திற்குள் அப்பேர்ப்பட்ட வஸ்திரங்களையும் நகைகளையுந் தருவித்துக்கொள்வாள். ஞாயிற்றுக்கிழமைகளில் கோவிலுக்குப்போகும்போது



டம்பாச்சாரித்தனமாய் உடுத்திக்கொண்டு, உடம்பு நிறைய நகை நட்டுகளை அணிந்துகொண்டு ஒய்யார மேட்டிமையுடன் அடிமேல் அடியெடுத்து வைத்து நடப்பாள். தன்னை யெல்லோரும் புகழ்ந்து கொண்டாடும்படி ஆசிப்பாள். தேவாலயத்தில் தேவாராதனை நடக்கும்போது குருவியைப்போல அங்குமிங்கும் திரும்பிப்பார்த்து, மற்ற ஸ்திரீகள் வஸ்திராபரணங்களைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருப்பாள். வீட்டுக்குத் திரும்பினபின், கோவிலுக்குப்போன மற்ற ஸ்திரீகளின் வஸ்திரா பரணங்களிலும் உடைநடையிலும் குறைபிடித்து நோட்டஞ் சொல்லுவாள்.

இந்த மகராசிபெரிய ஷாப்புகளில் தனக்கு வேண்டிய வஸ்திராபரணங்கள் வாங்கினதைப்பற்றி வருஷக்கடைசியில் ஷாப்புக்காரர் அவாளவாள் தங்களுக்குச் செலுத்தவேண்டிய பணத்தொகையை பில்செய்து, அந்தக் கணக்கு டாப்பை அனுப்பி வைப்பார்கள். நான் இப்பொழுது குறித்துப் பேசும் ஸ்திரிக்கு வருஷக்கடைசியில் நாலாயிரம், ஆறாயிரம், எண்ணாயிரம் ரூபாய்க்கு அனுப்பப்படும் பில்லுக்கு அவளுடைய புருஷன் பணத்தைக் கட்டுவான்.

இப்படிப் புருஷனும் பெண்சாதியும் ஊதாரித்தனமாய்ச் செலவு செய்து வருங்காலத்தில் மாதமாதம் தங்களுக்கு வரும் பணம் செலவுக்குப் பற்றாதபடியால், அப்போதைக்கப்போது கடன்வாங்க ஆரம்பித்தார்கள். காலம் மாறுமென்று இவர்கள் நினைத்திருந்தால் சற்று ஜாக்கிரதையா யிருந்திருப்பார்கள். அதைப்பற்றி நினையாதபடியால் பெருங் கஷ்டத்துக்கும் நஷ்டத்துக்கும் உள்ளானார்கள்.

ருக்.—காலம் மாறுமென்று அவர்கள் நினைக்கவில்லை யென்றீர்களே, எந்தக்காலம் தாயாரே?

தா.—எப்போதும் வெயில் எரிக்காது; எப்போதும் மழைபெய்யாது அதுபோல மனிதனுக்கும் சுகமோ சந்தோஷமோ கஷ்டமோ இவை யெப்போதும் நீளித்திருக்காது.

ருக்.—அதற்குச் சந்தேகமா? பணக்காரர் தரித்திரராகிறார்கள். தரித்திரர் பணக்காரராகிறதுண்டு. அந்த மகராசி ஆடை யாபரணங்களை வருஷாவருஷம் வாங்குவானேன்?

தா.—இரண்டு மூன்று மாதங் கட்டினபின் வேறொரு வஸ்திரத்தின்மீது ஆசைவரும்போது அதை மூலையில் போட்டுவிட்டு, புதுவஸ்திரத்தைத் தரித்துக்கொள்வாள். தன்னைப் புகழ்ந்து மெச்சும் ஸ்திரீகளுக்கு அந்த உடைகளை இனாமாகக் கொடுப்பாள். யாதொரு கவிராயர் தன்னைப் புகழ்ந்து பேசும்போதும் குடுகுடுப்பைக்காரரோ, பூமாட்டுக்காரரோ தன் வீட்டு வாசலில் நின்று தன்னை வாழ்த்தி தனக்கு இன்னும் ஆஸ்தி பாஸ்தி கீர்த்தி வெகுமானம் வருமென்று கூறும்போதும், அந்தப் பெருமாட்டி சந்தோஷ பூரிப்புடன் மகிழ்ந்து, ஒவ்வொருவனுக்கு 4, 5 ரூபாய் கொடுப்பாள். தன் கணவனுடைய சரிகை அங்க வஸ்திரத்தையும் கோட்டு முதலியவைகளையும் கொடுத்து விடுவாள்.

இப்படி யிருக்குங் காலத்தில் அவர்களுக்குத் துற்காலம் உண்டானது. அவளுடைய புருஷனுக்கு உண்டான கனத்த வியாதியினிமித்தம் தன் உத்தியோகத்தை ராஜீனாமா கொடுத்துவிட்டார். மறுமாசத்தில் பெரிய ஷாப்பிலிருந்து 8000 ரூபாய்க்கு வந்தது பில். நூறு ரூபாய் கொடுத்தால் நான் அந்த வியாதியைக் குணப்படுத்துகிறேன் என்று வைத்தியன் சொல்லும்போது, செல்வமாய்ப் பிழைத்து கௌரவ மேட்டிமையாய்ச் செலவு செய்துவந்த அந்த மகராசியின் வயறு நெருப்புப்பற்றி யெரிவது போலத் துக்க துயரத்துக்குள்ளாகித் தன் நகைநட்டையும் ஆடையாபரணங்களையும் அரைகுறையாய் விற்றுக் கடனை அடைத்தாள்.

துற்காலம் நேரிட்டபின் அவளுக்கு முன் உண்டாயிருந்த ஒய்யாரமும் மேட்டிமையுமான நடையும் நின்றுபோனது. மற்றவர்களுடைய உடை நடையைப்பற்றி குறை சொல்லும் வழக்கமும் காற்றாய்ப் பறந்தது. தான் முன் போட்டிருந்த நகைகளையும் பட்டுப் புடவைகளையும் விற்றுக் கடனைத் தீர்த்தபடியால், விலை உயர்ந்த நகைகளும் விசித்திரமான புடவையு மின்றிக் கோவிலுக்குப் போக வெட்கப்படுவாள். அதிகாலை பூசைக்குப்போய் வெளிவாசற்படியிலிருந்து பூசை கண்டு பூசை முடிவதற்குள்ளாக வீடுபோய்ச் சேருவாள்.

சில காலத்திற்குள் அவர்களுக்கு இருந்த தட்டு முட்டு சாமான், நகை நட்டு வஸ்திராபரணமுதலியவைகளை விற்றுத் தின்றபடியால் இரண்டாம் வருஷத்தில் சொல்லி முடியாத கஷ்ட சங்கடத்துக்குள்ளாகி ஒவ்வொரு வேளை பட்டினியாய் நித்திரைசெய்யும்படி நேரிட்டது.

இப்பேர்ப்பட்ட ஸ்திரீகளை நீ பின் செல்லாதே ருக்மணி. உதாரமாயிருப்பது நலமே, ஆனால் ஊதாரியாயிருப்பது கெடுதி. உனக்கு இனி வேண்டிய பணம் கையிலிருக்கும். ஆனால் அதைத் துற்பிரயோகஞ் செய்வது தவறாகும். உன் அந்தஸ்துக்குத் தகுந்தபடி உண்டு உடுத்துவதால் தப்பிதமில்லை ஆனால் கெர்வங்கொண்டு டம்பாச்சாரித்தனமாய் நடப்பது தப்பு. உலக சந்தோஷ பாக்கியமும் சுகபோகமும் விழலிலும் விழல் என்று கிறிஸ்துநாதர் அனுசாரத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல, அவசரமற்ற நகை நட்டுத் தேடுவதும், மிதமின்றி ஆடையாபரணங்களை ஆசித்துச் சம்பாதிப்பதும் பலதடவைகளில் பாவமாயிருக்கும். இந்த விஷயத்தில் நீ வெகு எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

மேலும் உங்களுக்குக் கலியாணமானபின், தூரமான ஊர்களுக்கும் பட்டணங்களுக்கும் போகவேண்டியதிருப்பதால், உன் மாமனாரும் மாமியாரும் உங்களோடு ஊர் ஊராய்த் திரிய மாட்டார்கள். நீயே வீட்டு எசமாட்டியும் துரைசாணியுமாய் இருக்கப் போவதைப்பற்றி வீண் செலவு செய்ய ஆசையுண்டாகும். கவரவமாய் யிருக்கவேண்டும், கன்னியமா யிருக்க வேண்டும் என்று வஞ்சகர் உன்னை ஏமாற்றப் பார்ப்பார்கள். அவர்களுடைய கபட வார்த்தைக்குக் காது கொடுக்கவேண்டாம்.

ருக்.—இவ்வளவு போதும் தாயாரே இன்றைக்கு. இன்னம் பழயது சாப்பிடவில்லை; இன்று சாயந்திரமாவது நாளை காலையிலாவது வருகிறேன்.

தா.—நல்லதம்மா, அப்படியே ஆகட்டும். சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லியாயிற்று. இன்னம் இரண்டொரு காரியத்தைப் பற்றி உனக்குச் சொல்லவேண்டி யிருக்கிறது. இன்று சாயந்திரம் எனக்குக் கொஞ்சம் வேலையுண்டு—இன்றைக்கு வந்ததுபோல நாளை பத்துமணிக்கு வந்தால் நன்று.

ருக்.—"அப்படியே ஆகட்டும் தாயாரே" என்று மங்கள வார்த்தையுடன் வீட்டிற்குப் புறப்பட்டாள் ருக்மணி.

---

# CORRECT THINGS FOR CATHOLICS.

# கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

## மரியாதை-வாலிபர்-துர்ப்பழக்கங்கள்.

1. விநய மென்பதும், மரியாதையென்பதும், நல்லொழுக்க மென்பதும் பிறர்மட்டில் இருக்கவேண்டிய நேசத்தையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றனவென்று அறிந்திருப்பது ஒழுங்கு.

2. மரியாதையும் நல்லொழுக்கமுமுள்ள வாலிபன் தன் தேசத்திற்கே பெருமையும் ஆபரணமுமா யாயிருக்கிறனென்றறிந்திருப்பது ஒழுங்கு.

3. நல்ல தாய் தகப்பன்மார் வயிற்றில் பிறந்து, நன்றாய் வளர்க்கப்பட்டுவந்த பிள்ளைகள் எப்போதும் நல்லொழுக்கமுள்ளவர்களா யிருப்பார்களென்றறிந்திருப்பது ஒழுங்கு.

4. நல்லொழுக்க முள்ள ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் இதன்பின் காணும் விதிகளை யநுசரிப்பது கடன்:—

(*a*) நீ நேர்மையாயும், சத்தியத்தையே பேசுபவனுயும், சுத்த நடக்கை யுள்ளவனுயுமிரு. அசுத்த வார்த்தைகளைப் பேசாதே. கெட்ட சகவாசஞ் செய்யாதே. தேகத்தைச் சுத்தமாய் வை. உன் உடுப்பு சாதாரணமானதாயிருந்தாலும் சுத்தமுள்ளதா யிருக்கட்டும்.

(*b*) வீட்டில் உன்னால் கூடியமட்டும் உன் தாய் தந்தையருக்கு உதவிசெய். அவர்களைப் பிரியப்படுத்த வருந்து. உன் சகோதரர் சகோதரிகள் மட்டில் பட்சமாயிரு. உன் திருப்தியையே தேடாதே. உனக்கென்ன கிடைத்தாலும், அவர்களோடு பங்கிட்டுச் சாப்பிடு. என்ன சந்தோஷம் வந்தாலும் அவர்களோடு அநுபவி. இதிலேயே உண்மையான பாக்கிய முண்டு.

(*c*) பள்ளிக்கூடத்தில் உன் உபாத்திமார் மட்டில் வணக்கமாயிரு. அவர்களுடைய அலுவல் கஷ்டமுள்ள அலுவலென்பதை யறிந்து கூடியமட்டும் அவர்களுக்கு உதவிசெய். பள்ளிக்கூடத்து ஒழுங்குமுறைமைகளை யநுசரி. பக்கத்துப் பிள்ளைகள் எழுதியிருப்பதைத் திருட்டுத்தனமாய் பார்த்து நீ எழுதிக்கொள்ளாதே, (காப்பி அடிக்காதே.) கத்தியால் பெஞ்சு மேஜைகளை யறுக்காதே. புஸ்தகங்களில் கண்டதை யெல்லாம் கிறுக்கிவைக்காதே. நீ செய்த தப்புக்கு பிறரைத் தண்டனையடையவிடாதே. இது கோழைகளும் ஈனர்களும் செய்யும் காரியம்.

(*d*) விளையாட்டில் பிறரை ஏமாற்றாதே; மோசம் செய்யாதே; சிறுபிள்ளைகளையும் பேதைகளையும் மிரட்டாதே. இது கோழைகள் செய்யும் காரியம். யாவரோடும் மன உல்லாசமாயிரு. எதற்கும் சண்டை போடாதே. "தொட்டால் சிணுங்கி" என்னும் பூண்டைப்போல் அற்ப சொற்பத்திற்கெல்லாம் கோபம் செய்யாதே. உன் பள்ளித் தோழர்களைப் பரிகாசம் செய்யாதே. அவர்களிடமிருக்கும் குறைகளைச் சுட்டிக் காட்டும்படிக்கான ஈனப்பெயரிட்டழைக்காதே. இது அவர்களுக்குப் பிரியமில்லையென்று உனக்குத் தெரிந்திருக்கட்டும்.

(*e*) வீதியில் உன் உ[illegible]த்திமார்களை அல்லாது அறிமுகமானவர்களைக்கண்டால் அவரவர்களுக்கு வந்தனம் செய். அவர்கள் உனக்கு பதில் வந்தனம் செய்வார்கள். ஜனங்களை யிடித்துக்கொண்டும் அவர்கள் மேல் விழுந்து கொண்டும் போகாதே. கதவுகள், சுவர்கள்மேல் சுண்ணும்பால் (Chalk) அல்லது கரியால் எதையும் எழுதாதே; கல்லெறியாதே; எந்தப் பொருளையும் உடைத்துப் பாழாக்காதே. அவசியமின்றி கடைகளின் வாசலண்டை யல்லது ஜன்னலண்டை நின்றுகொண்டு கடைக்காரர்களைத் தொந்தரவு செய்யாதே. கிழவர்களையும் அங்கப் பழுதுள்ளவர்களையும் கேலி செய்யாதே. விசேஷமாய் இப்படிப்பட்டவர்கள் மட்டிலும் அந்நியர்கள் மட்டிலும் எப்போதும் மரியாதையுள்ளவனு யிரு. பெரியவர்களைத் தெருவில் கண்டால், அவர்களைக் கைதட்டிக் கூப்பிடாதே.

(*f*) எங்கும், பெரியவர்களா யிருந்தாலும் சரி, சிறியவர்களா யிருந்தாலும் சரி, ஏழைகளா யிருந்தாலும் சரி, பணக்காரரா யிருந்தாலும்சரி, யார்மட்டிலும் மரியாதை தப்பி நடக்காதே. யாரிடம் நீ எதைக் கேட்டாலும் "தயவு செய்து" என்னும் வார்த்தையை யுபயோகிக்கவும். யார் உனக்கு அற்ப நன்மைசெய்தாலும் "வந்தனம்" என்னும் வார்த்தையை யுபயோகிக்கவும். பெரியவர்களிடம் பேசும்போது "ஆம்," "இல்லை" என்னுமல் "ஆமாங்க ஐயா" "இல்லைங்க அம்மா" என்று சொல்லவும் பழகு. இது நல்ல பிள்ளைகளின் இலட்சணம். "ஓர் வீட்டுக்குள், அல்லது அறைக்குள் பிரவேசிக்க வேண்டுமானுல், கதவு திறந்திருந்தாலும், முதலில் கதவைத் தட்டி பிறகு உள்ளே பிரவேசிப்பது மரியாதை. வெளியே வரும்போது மெதுவாய் உன் பிறகாலேயே கதவை மூடிக்கொண்டுவா. விருத்தாப்பியர்கள், பெரியவர்கள், மற்றும் அந்நியர்கள் வந்தால் கதவைத் திறந்து, அவர்களுக்கு வேண்டியதைக் கொண்டு போய்க் கொடு; உட்காரவைத்து அவர்களுக்கு வேண்டிய உபசரணை செய். ஒருவர் பேசும்போது குறுக்கே பேசாதே. எப்போதும் உன் அலுவலைக் கவனித்துக் கொண்டிரு. பிறர் காரியங்களில் தலையிட்டுக்கொள்ளாதே. குறித்த நேரப்படி எந்த வேலையையும் செய். சுத்தபத்தமாயிரு.

பிறர்மட்டில் நீ நடந்துகொள்ளவேண்டிய விபரம் யாவும் நமதாண்டவர் திருவுளம்பற்றிய ஒரே யொரு தங்கவாக்கியத்தில் அடங்கி யிருக்கிறது. அதேதெனில், பிறர் உன்மட்டில் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று விரும்புகிறாயோ அப்படியே நீயும் பிறர் மட்டிலும் நடந்துகொள் என்பதாம். பிறர்மட்டில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று உனக்கெப்போதாவது சந்தேகந் தோன்றினுல், "இந்தச் சந்தர்ப்பத்தில் என்னைப் பிறர் எப்படி நடத்த வேண்டுமென்று விரும்புவேன்" என்று உன்னைத் தானே கேட்டுக்கொள். அப்போது உன் மனசாட்சி யெது சரியென்று சொல்லுகிறதோ அதைச்செய்வாயாக.

5. வாலிபர்கள் எப்போதும் பெரியவர்கள் மட்டில் வணக்கங்கொண்டிருப்பது ஒழுங்கு.

6. வாலிபர்கள் பெரியவர்களோடும் சிநேகம் செய்வது ஒழுங்கு.

7. பெரியவர்கள் சொல்வதைக் கவனமாய்க் கேட்பது ஒழுங்கு.

8. பெரியவர்களோடுகூட போக நேரிடும்போது இடது பாரிசமாய்ப் போவது ஒழுங்கு.

9. பெரியவர்களைப் பார்க்கப் போகும்போது சுத்த உடை தரித்துப்போவது ஒழுங்கு.

10. நீ தேடிப்போன பெரியோர்கள் இன்னொருவரிடம் பேசிக்கொண்டிருக்கக் கண்டால், சம்பாஷணையின் விஷயம் உன் காதில் விழாதபடி தூரமாய்க் காத்திருப்பது ஒழுங்கு.

11. அதிவிநயம் தூர்த்த லட்சணம் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

12. வாலிபர்கள் தங்கள் சீவனத்திற்குதவும் வித்தைகளையோ தொழிலையோ கவனமாய்க் கற்றுக்கொள்வது ஒழுங்கு.

13. வாலிபர்கள் இளவயதிலேயே நல்லொழுக்கம் நற்படிப்பினைக் கடுத்த புஸ்தகங்கள், பத்திரிகைகளை வாசிக்கும் அப்பியாசம் ஏற்படுத்திக் கொள்ளுவது ஒழுங்கு.

14. வாலிபர்கள் யாதாமொரு நல்ல சங்கம், சபையில் சேர்ந்து அதன் சட்டப்படி நடப்பது ஒழுங்கு.

15. வாலிபர்கள் சோதனை நிறைந்த தங்கள் இரத்தப் புஷ்டியான பருவத்தில் கெட்ட சகவாசஞ் செய்யாமலும், சோதனைக் கிடங்கொடாமலும் விசேஷ கவனமாய் நடப்பது ஒழுங்கு.

16. வாலிபர்கள் எந்நேரத்திலும் ஒன்றில் மனப்பியாசத்திலோ அல்லது தேகாப்பியாசத்திலோ அலுவலாயிருப்பது ஒழுங்கு. (சோம்பேறி பசாசைச் சோதிக்கிறான்.)

17. வாலிபர்கள் தங்கள் சீவிய அந்தஸ்திற்காக கடவுளைப் பார்த்து மன்றாடுவது ஒழுங்கு.

18. வாலிபர்கள் கூடிய மட்டும் பிறருக்குச் சகாயம் செய்வது ஒழுங்கு.

19. வாலிபர்கள் எந்த ஸ்திரிகளையும் தங்கள் தாய்மாராகவும், சகோதரிகளாகவும் பாவித்து அவர்களுக்கு மரியாதை காட்டுவது ஒழுங்கு.

20. தன்னைப்பற்றியும் தன் குடும்பத்தைப்பற்றியும், தன் படிப்பு, திறமை, நடத்தை முதலியவைகளைப் பற்றியும் பேசவேண்டியிருந்தால் சுருக்கமாய்ப்பேசுவது ஒழுங்கு.

(இன்னும் வரும்.)

---

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும், தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக்கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்குத் தகுதியற்றனவென்று தள்ளிவிடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்.]

தூத்துக்குடி பரதகுல ஐக்கியசங்கம்.

இம்மகுடத்துடன் நவம்பர் மாதத்து "நல்லாயனில்" வெளியான நிருபங்கண்டு சந்தோஷித்தேன் "பரதவச் சனம்" தன்னைச் சூழ்ந்துள்ள பிறவகுப்பினரைபோல நாகீரீக பரப்புக் கொள்ளத் துவக்கியதென்பதே சுப சமாச்சாரம். ஆனால் இன்னனைய கருமங்களின் முடிவு கேவலம் குறுகிய கொள்கைகளாய் விடாமல் விசால நோக்கமாயிருந்தால் மட்டும் சாகியத்தவருக்குப் பிரயோஜன முண்டாகுமென்பதைப் பொறுப்பேற்ற கனவான்கள் கவனித்துக் கொள்வார்களாக.

ஆயினும், மேற்சொல்லிய கடிதத்தை எழுதின 'பரதன்" என்னும் பரோபகாரியைப் போன்றவர்கள், பரதகுலத்தைச் சீர்திருத்திப் பெருமைப்படுத்தும் எண்ணமுடையவர்கள், தங்கள் சொந்தப் பெயரோடு வெளிவருவார்களானால், அவர்கள் சொல்லும் சற்போதகங்களும் அவரவர்களுடைய ஒழுக்கத்துக் கேற்றபடி அதிக பலனை விளைக்கும் என்பதில் சந்தேகமில்லை. 'சொல்லிக் காட்டுவதிலும்" செய்து காட்டுவது உசிதமன்றோ?

கண்டி
23—11—14. } வேம்பார். எஸ்-எஸ். வாஸ்.



நேசநிறைந்த "நல்லாயன்" பத்திராதிபரவர்களே,

இன்றையத்தினம் தங்களால் அனுப்பப்பட்ட 1914-ஆம் வருஷத்திய கடைசி மாதத்தின் "நல்ல ஆயன்" பத்திரிகையை வரப்பெற்று நான் வாசித்தது மன்றி சிலருக்கும் வாசிக்கக் கொடுத்து, அதிலடங்கியிருக்கும் சில நற்போதகங்களை என்னால் கூடியமட்டும் விளக்கினேன்.

இக்கிராமத்தின்கண் பயின்ற மாணவர்கள் சுமார் 200 பேர்களிருக்கலாம். இத்தனை பேருக்கும் இந்த ஒரு பத்திரிகையையே ஒருவருக்குப் பின் ஒருவராய் வாசிக்க விடுவதால் திரும்பப் பத்திரிகை என்னிடம் வருவதே கஷ்டமாய் விடுவதை உத்தேசித்து, சில வாலிபர்களை இத்திவ்யபத்திரிகையைத் தாங்களே ஒவ்வொன்று வாங்கி வாசித்துப் பயன் அடையும்படி தூண்டிய போது, அவர்களில் சிலர் பகர்ந்த பதிலால் பலமுறை மனமுறிய இட முண்டாயிற்றெனினும், பின்னுந் தூண்டுவதைத் தளராமல் நடத்தவே என் முயற்சி சற்று கை கூடியும் இன்னுஞ் சிலருக்கு இதின்மட்டில் முடிவான பிரியமுண்டாகவில்லை. கடைசியாக இதோ! இன்று ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்தனுப்பி யிருக்கிறேன்.

இது நிற்க:— இம்மீ பத்திரிகையினுள் ஓர் துண்டு பிரதி அச்சிட்டு வைத்திருப்பதை வாசிக்க நிரம்பவும் ஆச்சர்ய முண்டாகிறது.

புத்தியைக் கவரக்கூடிய அநேக இனிய விஷயங்களை அடக்கியும் ஞானோபதேசங்களையும், அறிவை விளக்கும் கதா ரசக்யானங்களையும் சிறு சிறு பாடங்களாக ஒவ்வொரு பிரதிகளில் தொடர்ந்து வரைந்தும், முக்யமாய், குடும்பங்கள் கெட்டழிய ஹேதுவாகிய குடியையும், அதனால் வரும் ஏனையத் தீக்கருமங்களையும் நுணுநுணுக்கமாய்ப் போதித்தும், சிக்கனமாயும் சற்பாத்திரத்திலும் செலவழிக்கும்படியாக வேண்டிய உபாயத்தை யூட்டியும், கத்தோலிக்கருக்கே ஓர் சிறந்த ஆபரணமாக விளங்கிவரும் இந்தப் புனித நல்லாயனை இவ்வளவு சொற்ப சந்தாவில், இனமும் முன் பணமுமின்றி அனுப்பி வரும் பரோபகாரத்திற்கு, சென்ற வருஷத்திய சந்தாவைக் கூட பாக்கியில் வைத்திருப்பதுதான் சந்தாதாரர் செய்யவேண்டிய பிரதி உபகாரமோ? அல்லது இவ்வுன்னத பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தவேண்டி புரியும் நன்கொடையோ? அந்தோ! பரிதாபம்!

ஓ! என் சகோதரரான "நல்லாயன்" சந்தாதாரர்களே! நம்மில் ஒவ்வொருவரும் இச் சொற்ப சந்தாவை உத்தரிக்க சத்தியற்றவர்களோ? பரிச் சேதமில்லை. இதன் விஷயமாய் அற்பனாகிய யான் சொல்லப்புகுஞ் சொற்ப சங்கதியைக் கவனிக்கக் கோருகிறேன். சமீபத்தில் சில அலுவல் நிமித்தமாய் நான் ஓர் கிராமத்திற்குப் போய் தங்கியிருக்கையில் அங்கே ஒருவருக்கு இந்த "நல்லாயன்" பத்திரிகை வரக் கண்டேன். அவர், அந்தப் பத்திரிகையைப் பெற்றவுடனே, எவ்வளவு ஆவலாய் வாசிப்பரோ! வென்று பார்க்க விருப்பமுடையவனாயிருந்தேன். ஆனால் என் விருப்பு வெறுப்பாய் விட்டது. ஐயோ! அந்த மகானுபாவர் பத்திரிகையை வாங்கி அதைச் சுற்றியிருக்கும் ராப்பரை கிழித்தெறிந்து, "சண்டை சங்கதியென்ன, பற்பல சமாச்சாரங்களில் என்ன சொல்லியிருக்கும்" என்று முணு முணுத்துக் கொண்டே வெகுபரபரப்பாய் ஏடுகளைப் புரட்டிவிட்டு பின் அதைச் சுருட்டி வீட்டின் கூரையில் சொருகிவிட்டு, முன்னரே துவக்கியிருந்த சம்பாஷணையைத் தொடங்கினார்!

இதென்ன விந்தை! வீட்டின் கூரையை அலங்கரிக்கவோ! அல்லது சாமான்கள் சுருட்ட உபயோகிப்பதற்கோ! பல கஷ்டத்துடனும் முன்பணமு மின்றி கடனாக இந்த இரக்கமுள்ள ஆயனை ஒவ்வொருவருக்கும் அனுப்பி உதவுவது.

எழுத்து வாசனை யறிந்த கத்தோலிக்கர், லௌகிக ஞானத்துக்கான விஷயங்களோடு சிற்றின்பாலங்காரங்களையும் அமிர்தத்தோடே நஞ்சைப்புகட்டுமாறு கலந்தூட்டுந் துர்ப்பத்திரிகைகளை, வீணாய்ப் பணவிரயஞ்செய்து, வாங்கி வாசிப்பது மாத்திரமன்று, அதினால் ஆத்ம சுசிகரத்தை யிழந்து, ஞான அந்தகாரராய் பாவ துற்கந்த சாகரதில் விழுந்தொழிவதைத் தடுக்கவன்றோ, துன்மார்க்கத்தை விட்டு சன்மார்க்கத்தை நாடவும், இகபர சாதனங்களைத் தேடவும், உத்தம வழியைக் கண்டு சுத்த மனத்தராய் ஒழுகவும வேண்டிய ஏதுக்களையெல்லாம் ஒருங்கே திரட்டி புகட்டிடும் சஞ்சிகையாகிய இந்த நல்ல ஆயனை, ஒருமுறையென்கிலும் இதில் என்னதான் விஷயங்கள்

இருக்கின்றனவோ வென்று முதலாய் வாசிக்க முயலாமல், வணிகர்கள் தங்கள் சரக்குகளைப் பொதியவேண்டி வாங்கி சுருட்டிவைக்கும் சாதாரண காகிதங்கள்போல வைப்பது, என்ன கோலமென்கலாம்! மேலே சொன்ன வணிகரென்கிலும், அக்கடுதாசிகளைத் தமக்கு உதவியென்று காபந்தாய் சேர்க்கிறார்கள். இதில் இன்னஞ் சிலர் மேற்சொன்னவாறு தீவிரமாய் இரண்டொரு ஏடுகளைப் புரட்டிவிட்டு, தங்களுக்கு இது ஒரு பொருட்டல்லவென்றோ, அல்லது தமக்கு தெரிந்ததைவிட அதில் வேறு என்ன விசேஷமிருக்கப்போகிறதென்றோ, அறியாச் சிறுவர்கள் கையில் சிக்க விட்டுவிடுகின்றனர். தெரிந்தவர்கள் காரியமே இப்படி இருக்க அறியாத சிறுவர்கள் என் செய்வார்? அதனை ஒன்றைப் பலவாய்ப் பிரிப்பதுமன்றி, துண்டுதுண்டாய் கிழிக்கவும் பின்பு அதனை சுவை பார்ப்பது போல வாயில் வைத்தும் துப்பி காற்றில் எறிகின்றனர். இந்த அசட்டையே சந்தாவைச் செலுத்தத் தடைபடுத்துவது.

எத்தனையோ புண்யவாளர்! இந்த ஞானநிறைந்த பத்திரிகையை நன்குமதித்து, எப்போதும் முன்பணமே அனுப்பியும், இயன்றமட்டும் சமயோசிதமாய் நன்கொடைகள் அளித்தும் ஆதரிக்கின்றனரெனக் காண்கிறோம். இவ்வாறே மற்றெல்லோரும் செய்ய முயலுவார்களானால், சுய நன்மையை வெறுத்து பிறர் நன்மைக்காக ஏக கவலைகொண்டு அல்லும் பகலும் உழைத்து வரும் நம் கனம் பொருந்திய பத்திராதிபருக்கு சற்று ஆறுதலுண்டாகும்.

என் அற்பபுத்தியில் தோன்றுவது தென்னவெனில்:—சந்தாதாரரொவ்வொருவரும் இப்பத்திரிகையின் மட்டில் அபிமானம் வைப்பாரேயாகில் ஒருக்காலும் அதின் சந்தாவைச் செலுத்த தாமதியார்கள்; அபிமானம் வையார்களேயாகில் சந்தாவைச் செலுத்த பன்முறை தூண்டினாலும் கனவிலும் நினையார்கள் என்பதே.

பணமின்றி பத்திரிகையை மட்டும் வரப்பெற்றும், அதனை வாசியாமலுமிருப்பதைவிட, உடனே தாமதியாது பத்திராதிபருக்கு எழுதி, தமக்குப் பத்திரிகை தேவையில்லையென்று நிறுத்தி விடுவார்களேயானால் அதினால் நிகழும் நஷ்டத்தைப் பரிகரிக்கிறவர்களும், இப்பத்திரிகை விஷயமாய் நன்கொடை புரியும் உபகாரிகளுமாவார்களென்பது உறுதி.

ஆகையால், எனது பிரிய பத்திரிகை நேயர்களே! யாவரையும் விட எவ்விதத்திலும் ஆயிரமடங்கு தாழ்ந்தவனான என் வியாசத்தின் மட்டில் கவலை வையாது, என் பதட்டமான வார்த்தையை கவனியாது, என் கருத்தை நோக்கி மாத்திரம் மன்னித்து இனியாகிலும் சந்தாவை முன் பணமாகவே அனுப்பிவைத்தும், பாக்கியுள்ளவர்களைச் சந்திக்க நேரிடுமாகில் அவர்களைத் தூண்டி சந்தாவை அனுப்பச் செய்தும் இவ்வரிய பத்திரிகையைச் சன்மானிப்பீர்களாக!

S. Raphael,
Viriyur.

4—12—14.

---

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களின் நன் மாதிரிகை.

நாம் சஞ்சரிக்கிற இப் பூலோகமானது ஒரு சமுத்திரத்துக் கொப்பாயிருக்கிது. அதில் நாம் மறு உலகத்துக்குப் பிரயாணம்செய்கிற பிரயாணிகளாயிருக்கிறோம். சமுத்திரத்தில் பிரயாணம் செய்ய ஒரு கப்பல் அவசரம். யாதொரு சேதமின்றி கப்பல் பத்திரமாய் அக்கரை சேரவேணுமானால் அக் கப்பலானது எப்பேர்ப்பட்ட புயல் காற்றுக்கும் அசையாததுமாய், கற்பாறைகளில் மோதினாலும் தகர்ந்து போகக்கூடாததுமாயிருக்கவேண்டும். அக் கப்பலை நடத்துவதற்கு ஒரு மாலுமியும், அந்த மாலுமி கிரமமான அதிகாரம் உடையவனும், கப்பலை நடத்தும் விஷயத்தில் மெத்த அனுபோகஸ்தனும் சரியான வழியை விட்டு தவறிபோகக்கூடாதவனுமிருக்கவேண்டுமென்பது அவசியம். அப்பொழுதுதான் அதில் பிரயாணம் செய்கிறவர்கள் யாதொரு பயமுமின்றி முழு நம்பிக்கையோடு யாத்திரை செய்யக்கூடும். ஆனால் சில மரக்கலங்கள் சரியான விதமாய்க் கட்டப்படாததினால் காற்றடித்தவுடன் அல்லது ஒருகல் மோதினவுடன் சுக்கல்சுக்கலாய் உடைந்து போகிறது. அல்லது தக்க மாலுமி யில்லாததினால், அல்லது மாலுமிகள் சரியானவழி தெரியாதவர்களாயும், அதிகார மில்லாதவர்களாயுமிருப்பதினாலும், அல்லது பிரயாணிகள் ஒவ்வொருவரும் தாங்களே மாலுமிகளாயேற்பட்டுத் தங்கள் தங்களிஷ்டப்படிக் கப்பலை நடத்த வேணுமென்று ஒருவரோடொருவர் தர்க்கமிட்டு, வழிதுறை தெரியாமல் தங்கள் கப்பல்களைச் சமுத்திரத்தில் முழுக அடித்துத் தாங்களும் அடியோடே சேதமாவார்கள்.



இப்படியே, இந்து, மகமதிய முதலிய மதங்களும், வேத சாஸ்திரிகளாய் விளங்கினவர்கள் தங்களுடைய படிப்பின் கர்வத்தினாலும், கீழ்ப்படியாமையாலும், தங்களைத்தாங்களே மேலாக வெண்ணி, தங்களுடைய உயர்ந்த அந்தஸ்தை விட்டுத் தவறி, தங்களுக்குத் தாங்களே வழிகாட்டிகளாய் ஒன்றோடொன்று ஒவ்வாத கொள்கைகளைத் தங்களுக்குள்ளேயே ஏற்படுத்திக் கணக்கற்ற பிரிவினைகளாகப் பிரிந்து, புரோடெஸ்டாண்டென்னும் நாமதேயத்தைச் சூடிக்கொண்ட மதங்களும் மேற் சொல்லப்பட்டபடி சரியாய்க் கட்டப்படாத கப்பல்களுக்கும், கிரமமாய் அதிகாரம் பெறாத மாலுமியுள்ள மரக்கலங்களுக்கும், மாலுமியே யில்லாத படகுகளுக்கும் ஒப்பாயிருக்கின்றன.

ஆனால் நமது திவ்ய இரக்ஷகர்தானே ஸ்தாபித்த கத்தோலிக்குச் சபை என்னுங் கப்பலில் பிரயாணஞ் செய்யும் விசுவாசிகளாய் நாமிருப்பது நமக்கு மேலான சந்தோஷத்தையும், மனச் சமாதானத்தையும் கொடுக்கிறதென்று சொல்லத் தேவையில்லை. ஏனென்றால், நாம் செல்லும் கப்பலை நடத்த ஒரு மாலுமி நமக்கிருப்பதோடுங்கூட, அவர் சரியான அதிகாரம் பெற்றவராயுமிருக்கிறாரென்பது அற்பச் சந்தேகமுமில்லாத முழு நிச்சயமான விஷயம். அவ்வுத்தம மாலுமி யாரென்று சொல்லவும் வேண்டுமோ? ஒரு சிறு குழந்தையைக் கேட்டாலும் அவர் பரிசுத்த 15-ம். ஆசீர்வாதப்பர் என்று சொல்லும். இப்பேர்ப்பட்ட தலைமை அந்தஸ்தை வகித்துள்ள ஒருவர் இந்து, மகமதிய மார்க்கத்தாருக்குக் கிடையவே கிடையாது. புரோடெஸ்டாண்டு மார்க்கத்தாருள்ளோ வெனில், சில பிரிவினைக்காரருக்குத் தலைவர் என்பது என்னவென்று முதலாய்த் தெரியாது; சிலருக்குத் தலைவர்களிருந்தாலும், அவர்களுடைய போதனைக்கு அவர்கள் சரிவரக் கீழ்ப்படிந்து நடப்பது அபூர்வம், ஏனென்றால், அத்தலைவர்களுடைய போதகம் தவறா வரமுடையதென்னும் நிச்சயம் அற்றதால் அவர்களை நம்பிப் பின்செல்ல மனமில்லாமல் தங்களிஷ்டம்போல் நடக்கிறார்கள். அந்த மாலுமிகள் யாரை ஒத்தவர்களென்றால் நாடகத்தில் இராஜா வேஷம் தரித்துக்கொள்ளும் ஒருவனை ஒத்தவர்கள். நாடக மாடுகிறவர்களும், அதைப் பார்க்கிறவர்களும் "இராசாவருகிறார், இராசாவருகிறா" ரென்று சொல்லி அவனைப் பேருக்குமாத்திரம் இராசா எனபார்களேயன்றி அவனைச் சரியான அதிகாரம் பெற்ற இராசாவென்று சொல்லார்களென்பது உறுதி. இப்பேர்ப்பட்டவர்களால் நடத்தப்படும் மரக்கலத்தின் கதி அதோகதியென்பது வெளிப்படை.

இவ்வளவும் அறிந்திருக்கிற நாம், நம்முடைய ஆதித் தாய் தகப்பன் மக்களும், நமக்கு சகோதரர்களுமாகிய இந்து, மகமதிய மார்க்கத்தாராகிய புற மதஸ்தரையும், நம்மை விட்டுப் பிரிந்துபோய் ஊதாரிப் பிள்ளைகளுக்குச் சமானமாயிருக்கும் புரோடெஸ்டாண்டாரையும் நம்மோடுகூட மறு உலகமாகிற மோக்ஷகரை அடைய, நாம் செல்லும் படகில் கொண்டுவந்து சேர்க்கப் பார்ப்பது நமக்குள்ள கடமை யல்லவா? இந்தக் கடமையை பணங் காசு பொருட்களாலும், கல்வி, உத்தியோகம், அதிகாரம் முதலியவைகளாலும் நிறைவேற்றாமல், நம்முடைய நன்மாதிரிகையால் பூரணமாகவே நிறைவேற்றலாம் என்பது திண்ணம்.

இப்படி நாம் நமது நன்மாதிரிகையினால் அவர்களை மனந் திரும்பச்செய்யாமல் அவர்களுக்குந் துர்மாதிரிகை காண்பிப்பது எவ்வளவோ பரிதபிக்கத்தக்கது! சர்வ வல்லபமுள்ள சர்வேசுரன், குடும்பங்களில் பிள்ளைகள் உற்பத்தியாகி, சீவிக்கும்படி செய்பவரென்பதை அறியாதவர்போல, சில கிறிஸ்தவர்கள் தங்கள் குழந்தைகளைக் கோவில்களில் கொண்டுவந்து, சர்வேஸ்பரனுக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்து அக்குழந்தைகளைத் தெய்வபத்தியில் வளர்ப்பதற்குப் பதிலாக, பூசை யாராதனை சமயங்களில், அவர்களைத் தங்கள் மடிகளில் வைத்துக்கொண்டு, பலகாரம், கிலுகிலுப்பை முதலியவைகளை வாங்கிக்கொடுத்து அவர்களுக்கு விளையாட்டுக்காட்டுவதும், தேவநற்கருணை எழுந்தேறற மாகும்போது சுடுவதற்காக அவர்களுக்குப் பட்டாசுக் கட்டுகள் வாங்கிக் கொடுப்பதும் ஒழுங்கல்ல. பின்னும் சிலர் இந்துக்களைப் போல சில அர்ச்சியசிஷ்டவர்களைக் குறித்து, "வேதபோதகர் மொட்டை" 'அந்தோனியார் மொட்டை" யென்று சொல்லிக் குழந்தைகளில

முடியெடுக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட புறம்பான வீண் சடங்குகளைக் காட்டிலும் ஆத்தும சுத்தியும், செபத்தின் ஸ்தோத்திரப் பலியுமே ஆண்டவருக்குப் பிரியம். "இதோ! பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்; கருப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்." என்பதை மறந்துபோகிறார்கள். இப்படியே கலியாணங்களில் அரசாணிசுற்றுதல், அருந்ததி பார்த்தல், ஆலாத்தி யெடுத்தல் முதலியவைகளும், சாவுகளில் நீர்மாலை, தலை மொட்டை யிடுதல் முதலியவைகளுமான அஞ்ஞான அனுசார சடங்குகள் கிறிஸ்துவர்களால் இந்நாள் வரை அநுசரிக்கப்பட்டுவருவது மிகவும் விசனத்துக்குரிய காரியம். மேலும் தேர் திருநாட்களில் ஈரத்துணியோடு அங்கப் பிரதட்சணமாய்க் கோவிலைச் சுற்றி உருண்டு வருவது, சப்பிரச் சுற்றுப் பிரகாரத்தின் போது சில கிறிஸ்துவர்கள் நடந்துகொள்ளும் அலங்கோலையான காரியங்கள் முதலியவற்றை இங்கு விவரிக்கப் புகுந்தால் விரியும். உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருவிழாவை கல்லறைத் திருவிழாவென்று நாமகரணஞ் சூட்டி அந்த நாளில் கல்லறைகளில் நடக்கும் ஆபாசங்களுக்கு அளவில்லை. உத்தரிக்கிற ஆத்துமாக்களைக் குறித்து தானதருமம் செய்ய வேணுமானால் அவரவர் செப தபத்தோடு அதிக ஆடம்பரமில்லாமல் செய்யலாம். "நீயோ தர்மம் செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியா திருக்கக்கடவது; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்" என்னும் நம திரக்ஷகருடைய போதனையை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

மேலும் இந்துக்களுக்குள் ஜாதியபிமானம் அற்றுப்போகும் வரை கிறிஸ்துமார்க்க மின்னதென்றறிய முதலாய் அவர்களுக்கு மனமிராது. ஏனென்றால் இவர்களுக்குள் அநேக சாஸ்திரங்களைப் படித்த கல்விமான்கள் முதலாய்க் கிறிஸ்தவர்களென்றால் மிகவும் இழிகுலத்தாரென்ற எண்ண முடையவர்களா யிருக்கிறார்கள். கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொண்டால் தலை மொட்டையடித்துக்கொள்ள வேணுமென்றும், மாம்சம் சாப்பிடவேணு மென்றும் இன்னும் இம்மாதிரியான பல அனுவசிய காரியங்கள் செய்ய வேணுமென்றும், இந்துக்கள் எண்ணியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இவர்களுடைய தப்பான எண்ணத்தை மாற்ற நாம் முயலவேண்டும். கிறிஸ்து வேதமானது தேவ பயமும், இருதய சுத்தியும், பிறர் சிநேகமும், நன்னடக்கையும் படிப்பிக்கிறதேயன்றி யாதோர் உண்மைக் கருத்தின்றி வெளிப்பகட்டான வீண் சடங்குகளைச் செய்யப் போதிக்கிற வேதமல்ல வென்று அவர்கள் நன்றாய் உணருமாறு நாம் நடந்துகொள்ளல் வேண்டும். "மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால் அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்" என்னும் வேதவாக்கியத்தை நாம் எப்போதும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

கடைசியாக,மேற்சொன்ன குற்றங் குறைகளை நிவர்த்திக்க குருக்கள் முயற்சி எடுத்தார்களானால்,சிலர் தாங்கள் தலைமுறை தலைமுறையாக அநுசரித்துவரும் வழக்கங்களைத் தடுக்க வருகிறதாக முறைப்படுவாரகள். முன்னிருந்த குருக்கள், "உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று மோயிசன் உங்களுக்கு இடங்கொடுத்தார்" என்றெழுதி யிருக்கிறபடி இவர்களுடைய பிடிவாதமான முரட்டுக் குணங்களுக் கிடங்கொடுத்ததால் அவர்களுக்கு இவர்கள் கெட்டவர்களென்று முறையிட்டு இரண்டொரு கக்ஷிகளாய்ப்பிரிந்து தங்களிஷ்டம்போல் நடக்க பிரிவினைக் குருக்களைக் கொண்டுவர ஏற்பாடு செய்வார்கள். மறக் கிறிஸ்தவர்களையும் துன்பப்படுத்தவும், கெடுக்கவும் ஆரம்பிப்பார்கள். "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ! அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தில். அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்"என்று நமதிரக்ஷகரால் கண்டிக்கப்பட்டவர்களின் கூட்டத்தில் சேராமல், நம்மால் கூடினமட்டும், "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள்வெளிச்சம் அவர்கள் முன்பாய்ப் பிரகாசிக்கக் கடவது"என்றபடி நமது நன்மாதிரிகையால், பிறருடைய சீர்கேடான நடக்கைகளைத் திருத்தவும், அதன்பொருட்டுக் குருக்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்கு உதவிசெய்யவும், நமது நடக்கையைப் பார்த்து அஞ்ஞானிகள் நம்மை ஈனரென்று இகழாதபடிக்கும், "குருட்டுப் பத்தியுள்ள ரோமானித்தர், அஞ்ஞான சடங்குகளை அநுசரிக்கிறவர்கள்" என்று பதிதர் நம்மைப் பேசாதபடிக்கும், "குருக்களும் அவர்களைக் கண்டியாமல் அவர்கள் மனம்போல் விட்டுவிடுகிறார்க"ளென்கிற அவச்சொல் குருக்கள் மேல் சாராதபடிக்கும், அஞ்ஞானிகளுடைய சகுன சாஸ்திர சடங்காசாரங்களை ஒழித்து, திருச்சபையின் மெய்யான அங்கத்தினருக்குள்ள குணமுடையோராய் நடந்துகொள்வது நம்மேல் சுமந்தகடமை. ஏனெனில் "சர்வேசுரன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்.சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்."

T. S.

---

## MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாச்சாரம்.

---

**போதுக்கூட்டம்.**-தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் 17-வது வருஷாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம், 30-ம் தேதியாகிய சனிக்கிழமை மாலை 4-½ மணிக்குச் சென்னை, அர்ச். கபிரியேல் காலாசாலையில் கூடப்படும்.

**ஓர் இந்து இளவரசி ஐரோப்பியரை மணந்துகோண்டாள்.**-காலஞ்சென்ற மகாராஜா துலீப்ஸிங்கின் குமாரத்தியான பௌலினி இளவரசியாருக்கும் மிஸ்டர் ஷெர்விடோரி யென்னும் ஆங்கிலக் கனவானுக்கும் சில தினங்களுக்குமுன் லண்டனில் விவாகம் நடந்தது.

**68-காயம்பட்ட படைவீரன்.**—சமீபத்தில் யுத்தகளத்திலிருந்து பாரிஸ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்ட படைச் சேவர்களில் ஒருவனுடைய தேகமுழுதுமிருந்த காயங்களை எண்ணிப்பார்த்ததில் 68-காயங்கள் இருந்ததாக ஏற்பட்டதாம். அப்படி யிருந்தாலும் அவன் சிகிச்சையினால் தேறிப் பிழைப்பானென்று டாக்டர் அபிப்பிராயப்படுகிறாராம். என்ன பரிதாபமான காரியம்!

**சென்னை யதிமேற்றிராணியார்.**—சில அலுவலாய்ச் சீர்மைக்குச் சென்றிருந்த நமது அன்புள்ள அதிமேற்றிராணியாராகிய மிகவும் வந்திக்கத்தக்க அருளப்ப ஆலன் ஆண்டவர் அவர்கள், இங்கு திரும்பிவர பிரயாணமாகி விட்டார்களென்றும், ஏறக்குறைய இம்மாதக் கடைசியில் சென்னைவந்து சேர்வார்களென்றும் சொல்லப்படுகிறது.

**ராஜப்பிரதிநிதியின் மைந்தர் மரணம்.**-நமது கருணையுள்ள இராஜப் பிரதிநிதியாகிய ஹார்டிஞ்சு பிரபுவின் குமாரராகிய லெப்டினென்ட் ஹார்டிஞ்சு என்பவர்,யுத்தமுனையில் காயமடைந்தாரென்று முன்னர் கேள்விப்பட்டோம். அவர் இப்போது அக்காயத்தினு லிறந்துவிட்டா ரென்று கேள்வியுற்று வெகுவாய் விசனிக்கிறோம். அருமைப்புதல்வரை யிழந்த நமது ராஜப்பிரதிநிதிக்கு நாம் உள்ளப்பூர்வமாய் அநுதாபங் கூறுகின்றோம்.

**ஜலங் குடிக்காத மிருகங்கள்.**--ஜலமே குடிக்காமல் வெறும் பதார்த்தங்களைமாத்திரம் சாப்பிடும் மிருகங்களுள் ஆடும் ஒன்றாம். அமெரிக்காவில் தண்ணீர் இல்லாத ஓர் பெரிய பசும்புல் மைதானத்தில் பல வாரங்களாக அடைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு ஆட்டு மந்தை நன்றாய்ப் பருத்துக் கொழுத்து இருந்தனவாம். இதைப் போலவே ஆன்டிலோப் என்னும் கருப்புமானும் அரேபியா, வட ஆப்பிரிக்கா, பார்ஸீகம் முதலிய இடங்களிலுள்ள காஸல் என்னப்படும் ஓர்விதமானும் ஜலங்குடிப்பதில்லை யென்று சொல்லப்படுகிறது.

**தங்களையே தாங்கள் சுடுதல்.**-சென்ற நவம்பர்மீ நேசப்படையார் யுத்தகளத்திலிருந்து ஜெர்மன் கைதிகளைப்பிடித்து ரெயில் வண்டியிலேற்றித் தங்கள் ஊருக்குக் கொண்டுபோகும் வழியில், இதை யறியாத ஜெர்மன் படையின் பகுதியொன்று அந்த ரெயில் வண்டித் தொடரின்மேல் பீரங்கிக் குண்டுகளைப் பிரயோகம்பண்ண, அதிலிருந்த ஜெர்மன் படைச் சேவகர்கள் வெகுவாய் மாண்டனர். 1000 வீரரில் 284 பேர்தான் உயிர் தப்பினவர்கள். புறத்தியாருக்கு வெட்டின குழி தங்களுக்கே வாய்த்தது.

நீடாமங்கலம் - மன்னார்குடி ரெயில்வே.—இந்த ரெயில்வே ஸ்தாபன வேலை ஏறக்குறைய முடிவாகிவிட்டது. இது அடுத்த மாதமாகிய பெப்ரவரிமாசத்தில் திறக்கப்பட்டு, ஜனங்கள் பிரயாணத்துக்கு உதவுமென்று சொல்லப்படுகிறது.

கேய்ஸரின் வருமானம்—இப்போது நடக்கும் அகோர யுத்தத்திற்கு முக்கிய காரணஸ்தனான, ஜர்மன் சக்கரவர்த்தி கேய்ஸருக்குச் சொந்தமான பிரத்தியேக சொத்து 2 கோடி மதிப்புள்ளதாம். அதினின்றும் மாதாந்திரம் வட்டிமாத்திரம் சுமார் 83 ஆயிரத்துக்குமேல் வருகிறது. இந்தச் சொத்துக்களை பல வியாபாரக் கம்பனிகளில், விசேஷமாய் வயிரக்கல் சுரங்கக் கம்பனிகளில் போட்டிருக்கிறார். இதன் முக்கிய பாகம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வைக்கப்பட்டிருக்கின்றது. அங்கே இவர் ஓர் பெரிய நிலச்சுவான்தாரரா யிருக்கிறாராம்.

120 வயதுள்ள ஒரு மாது—இவள் 1794-ம் வருஷத்தில் ஜெர்மனியிலுள்ள டார்மாவொ என்னும் சிறு பட்டணத்திற் பிறந்தவள். நெப்போலியன் சக்ரவர்த்தியின் தலைமையின் கீழ்சென்ற பிரஞ்சு ஸோல்ஜர்கள் ருஷியாவிலிருந்து திரும்பி வந்தது இவளுக்குத் தெரியும். நெப்போலியன் அங்கு வந்தபொழுது இவள் தனது பெற்றோருடன் காட்டிற்கு ஓடிவிட்டாள். இவளுக்கு இப்பொழுது 120 வயதாகின்றது. மதர் ஸ்டாவன் என்னும் பெயருடைய இம்மாது இன்னும் சுறுசுறுப்பாய்க் கிருஷித்தொழில் புரிந்து வருகின்றனளென்று சொல்லப்படுகின்றது.

ரிப்பன் பிரபு.—இந்தியாவுக்குப் பல விதத்திலும் உண்மையான உதவி புரிந்த இராஜப் பிரதிநிதியாகிய காலஞ்சென்ற லார்ட் ரிப்பன் அவர்கள் உருவச் சிலையொன்று சென்னை, மலைச்சாலையிலுள்ள, விஜயநகரம் பவுண்டன் என்னும் "ரவுண்டாணா" மண்டபத்தில், சென்றமீ 29-ம் தேதியன்று மாட்சிமைதங்கிய சென்னைக் கவர்னர் அவர்களால் மிக ஆடம்பரமாய்த் திறந்து வைக்கப்பட்டது. இந்தச் சிலை அவருடைய ஞாபகத்துக்கு ஒரு சிறு சின்னமாயுதவினாலும், அவர் இந்தியாவுக்குச் செய்துள்ள பல மகத்தான நன்மைகள் எக்காலத்தும் மறக்கொணாத பலத்த ஞாபகச் சின்னங்களாய் ஒவ்வொரு இந்தியர் இருதயத்திலும் ஆழமாய்ப் பதிந்திருக்கின்றன.

பாவ சங்கீர்த்தன இரகசியம்.—புருஷன் பெண்சாதி இருவருக்குள் நடந்ததோர் வியாச்சியத்தில் பெண்சாதி பக்கத்தில் ஆஜரான ஓர் வக்கீல் தான் சொன்ன விஷயமானது. பிரதிவாதியாகிய புருஷனுக்குப் பாவசங்கீர்த்தனங்கொடுத்த ஆத்தும குருவானவர் மூலமாய்த் தனக்குத் தெரியவந்ததென்று சொன்னான். இதைக் கேட்ட ஜட்ஜ் தான் கத்தோலிக்கர் அல்லராயினும், உடனே மேற்சொன்ன வக்கீலைக் கடிந்துகொண்டு, இதுவரையில் ஓர் குருவானவர் தாம் பாவசங்கீர்த்தனத்தில் கேட்ட விஷயங்களைப்பற்றி எவ்விதக் குறிப்பாகு முதலாய் ஒருவருக்கும் ஒருபோதும் தெரிவித்தவரல்லர் என்பது தமக்கு நன்றாய்த் தெரிந்த விஷயமென்று சொல்லி வக்கீல் சொன்னதை ஒருபோதும் நம்பமாட்டோமென்று மறுத்துவிட்டார்.

ஐரோப்பாவில் படித்துவந்தவர்.—மிஸ்டர் என் கிருஷ்ணையா எனபவர் சேலத்திலிருந்து சீர்மைக்குப்போய் எடின்பரோ சர்வ கலாசாலையில் கற்றுத் தேர்ந்து, பி. எஸ்சி. (B. Sc) என்னும் வித்தியாபட்டம் பெற்று சில வாரங்களுக்கு முன் தமதூருக்குத் திரும்பிவந்தார். நகர் நிர்மாண சாஸ்திரத்திலும், சுகாதார சாஸ்திரத்திலும் பாண்டித்தியம் அடைந்திருக்கிறார். இவர் சௌராஷ்டிர வகுப்பைச் சேர்ந்தவர். இந்த சௌராஷ்டிரர் சேர்த்துவைத்திருக்கும் வித்தியா நிதியில் தற்காலம் இரண்டு லட்சம் ரூபாய் இருக்கிறதென்றும், இதிலிருந்து அந்த வகுப்பைச் சார்ந்த வித்தியார்த்திகள் இங்லாந்து ஜப்பான் முதலிய தேசங்களுக்குப்போய் பல சாஸ்திரங்கள், கைத்தொழில்கள் கற்றுவருவதற்கான திரவிய சகாயம் செய்யப்படுகிறதென்றும் சொல்லபடுகிறது. இவ்விஷயமாய் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? சௌராஷ்டிரரிடமிருந்தாவது பாடங்கற்றுக் கொள்ளலாகாதா?



பாப்பானவரின் உருவப் படங்கள்.-நமது பரிசுத்த பிதாவாகிய பதினைந்தாம் ஆசீர்வாதப்பரின் திருவுருவப் படங்கள், கொழும்பு க்ன்னாத் தெருவில் வேதத்துக் கடுத்த சாமான்களில் பிரபல வர்த்தகம் செய்யும், மிஸ்டர் எக்ஸ் பி. பாய்வவிடமிருந்து ஒன்றும், திருச்சிறைப்பள்ளி, மெஸர்ஸ் லூயிஸ் கம்பெனியாரிடமிருந்து ஒன்றுமாக வந்தனத்துடன் வரப்பெற்றோம். இவை யிரண்டும் நல்ல நேர்த்தியான படங்கள். முன்னதின் விலை நாலணா; பின்னதின் விலை ஆறணா. வேண்டுபவர்கள் ஷெயார்களுக்கு முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜெர்மனியில் பொன் பஞ்சம்.—ஜெர்மனி தேசத்தில் பொன் நாணயங்கள், பொன் நகைகள், சாமான்கள், பாத்திரங்கள் முதலியவைகள் அந்நாட்டைவிட்டு பிறதேசத்துக்குச் செல்லவொட்டாமல் பிரயத்தனம் செய்துவருகிறார்கள். வியாபாரிகள் தங்களிடத்துள்ள பொன் நாணயங்களைக் கொடுத்து நோட்டுகளை வாங்கிக்கொள்ளும்படி இராஜாங்கத்து அதிகாரிகளால் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். ஜெர்மனியிலுள்ள அந்நிய நாட்டு வியாபாரிகள் முதலானோருக்கு பொன்னும் பொன்னாலான எந்தப்பொருள்களும் விற்கப்படாதென்று ஜனங்களுக்குக் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஓர் பண்டித சிரோன்மணி.—சமீபத்தில் லண்டன்மா நகரத்து சர்வ கலாசாலையில் நடந்த எம். டி. (M. D.) என்னும் பரிட்சையில், பொம்பாயைச் சேர்ந்த ஓர் பிரபுவின் குமாரராகிய மிஸ்டர் ஜீவராஜ் மேதா என்பவர், சீர்மையிலுள்ள அங்கிலேயர், இந்தியர் முதலிய எல்லோரையும் மேற்கொண்டு முதன்மையாய் தேறினதினால் அவருக்கு ஓர் தங்கப் பதக்கம் பரிசளிக்கப் பட்டதென்று கேள்வியுற்று சந்தோஷப்படுகிறோம். இது நமது இந்தியர்களுக்கு எவ்வளவோ மகிமை!

யுத்தச்செலவு.—அமிர்த பஜார் பத்திரிகையில் யுத்தச் செலவுக்கு அளவு பொருள் நீளம் சொல்லப்பட்டிருக்கிறது. யுத்தம் ஒரு வருஷமாகுமானால் இங்கிலாந்துக்கு மட்டும் ஒரு நாளைக்குச் சுமார் பத்து லக்ஷம் பவுன், அதாவது ஒன்றரைக் கோடி ரூபாயாக ஒருவருஷத்துக்கு 550 கோடி ரூபாயாகும். இவ்வளவு ரூபாயும் ஒரு மனுஷன் காதால் கேட்க முடியுமேயன்றிக் கண்ணால் காணமுடியாது. இந்த ரூபாய்களைச் சதுரமாகப் பரப்பினால் 2 சதுர மைலுக்குப் பரப்பலாம். 100 மைல் நீளத்துக்கு 100 அடி அகலமான ஒரு ரோடு போடலாம். ஒன்றின்மேலொன்று அடுக்கினால் 7200 மைல் உயரத்துக்கு அடுக்கலாம். சங்கிலிபோல் ஒன்றன்பின்னொன்றாக வைத்தால் 1,15,000 மைல் நீளமாகும். அது நமது இந்தியாதேசம் போல் எட்டு இந்தியாதேசங்களைச் சுற்றிக் கட்ட உதவுமாம்.

தலைவெள்ளி நன்மை.—பிராஞ்சு தேசப் படைகளில், இப்போது பள்ளங்களில் ஒளிந்திருந்து போர்புரியும் பிராஞ்சுபடைவீரர்கள் தாங்கள் வழக்கமாய் வாங்கி வந்த தலைவெள்ளி நன்மைத் தவறிப்போகாதபடிக்குத் தங்களுக்குக்கொண்டுவந்து கொடுக்கவேணுமென்று தங்களோடு யுத்தகளத்தில் இருந்த குருவானவரைக் கேட்டுக்கொள்ள, அவரும் மனமுவந்து தேவநற்கருணை கொண்டு வந்து பள்ளத்தில் இருந்தவர்களெல்லோருக்கும் அவரவர்களிருந்த ஸ்தானத்திலேயே வரிசையாய்க் கொடுத்தார். அநேகருக்கு அதுவே கடைசிநன்மையா யிருந்திருக்கலாம். இது திருச்சபை யாரம்பகாலத்தில் அஞ்ஞானிகளுக்குப் பயந்து (Catacomb.) காத்தகோம்பென்ற சுரங்கங்களில் விசுவாசிகள் ஒன்று சேர்ந்து பூசைகண்டு திவ்விய சற்பிரசாதம் வாங்கி வந்ததுபோ லிருந்தது. இவ்வாறு சேசுவின் திரு இருதயப் பக்தியில் உறுதிகொண்டு, ஆபத்துக் காலத்திலும் அதைக் கைவிடாது அநுசரித்து வரும் இந்த பிரஞ்சுக்காரருக்கு ஜெயம் கிடைக்காமற் போகாது.

ஐரோப்பிய யுத்தம்.—இந்த யுத்தத்தை இன்னும் ஒரு வருஷமட்டும் தொடர்ந்து நடத்த ஜெர்மனி முஸ்திப்பாயிருக்கிறதென்றும், யுத்தகளத்துக்குப்போக இன்னும் நாற்பது லட்சம் போர்வீரர்கள் தயாராயிருப்பதாகவும் அத்தேசத்துப் பத்திரிகை யொன்று கூறுகிறது. ஆனால் நமது மகா பிரிட்டன் நாட்டிலும் அதைச்சேர்ந்த ஐக்கிய நாடுகளாகிய கானடா, ஆஸ்ட்ரே.

லியா, இந்தியா முதலிய நாடுகளிலும், அதைவிட பன்மடங்கானசேனைகள் தயார் செய்யப்பட்டு வருகிறதென்றும் இந்தச் சண்டை பத்து வருஷமட்டும் நடந்தாலும் அதை நிர்வகிக்கப்போதுமான யுத்த தளவாடங்கள் உணவுப்பொருள்கள் முதலியவைகள் ஏராளமாய் உண்டு என்பதையும் அப்பத்திரிகை யறியாது போலும்.

எஜிப்து தேசம்.—எஜிப்து தேசத்தை யாண்டிருந்த "கெடிவ்" என்னும் அரசன் அங்கிலேயருக்கு விரோதமாய் துருக்கியோடு சதியாலோசனை செய்தபடியால், அவனை பிரிட்டிஷ் அரசாட்சியார் எஜிப்து அரசினின்று நீக்கி விட்டு, அத்தேசத்து இராஜ குடும்பத்தில் அரசுக்கு யோக்கியதையாயிருந்த வேறொருவரை எஜிப்துக்கு சுல்ட்டானாக ஏற்படுத்தி விட்டார்கள். அவருக்கு சகல வைபவங்களோடும், இராஜ மரியாதையோடும் பட்டாபிஷேகம் நிறை வேறியது. இனி எஜிப்துக்கும் துருக்கிக்கும் அரசுரிமையில் யாதோர் சம்மந்தமில்லை. இப்போது அது இந்தியாவிலுள்ள நிஜாம் இராச்சியம், திருவாங்கூர், கொச்சி முதலிய இராச்சியங்களைப்போல், இங்கிலீஷ் ஆதரணையில் இருக்கும். இனி அதற்கு யாதோர் பயமுமில்லை. வேற்றரசர் அதன்மேல் செய்யக்கூடிய கொடூரங்களையெல்லாம் எதிர்த்து வெற்றிகொள்ளத் தக்க ஏற்பாடுகள் அங்கிலேயர் பொறுப்பில் வெகு திருப்திகரமாய் செய்யப்பட்டிருக்கின்றன.

அபூர்வ வஸ்துக்கள்.—அதிக உஷ்ணமான மாதங்களில் ஆப்ரிக்காவின் மத்திய ரேகையையடுத்துள்ள ஊற்றுகளும் ஆறுகளும் ஓடைகளும் வற்றிப்போவதால், தீமாரி பொழிவதுபோல் உஷ்ண மிகுதியாகி காடுகளில் சஞ்சரிக்கிற பற்பல ஜாதி துஷ்ட மிருகங்களும், பட்சிகளும், சர்ப்பங்களும் ஊர்வன பறப்பன முதலிய ஜந்துக்களும் நாலா பக்கங்களிலும் அலைந்து திரிந்து, வெகு தொலைதூரமான அபிசீனியாவைச் சேர்ந்த ஆபாச்சாவிலுள்ள பெரிய ஓடைகளுக்குப் போய் தண்ணீர் குடிக்கின்றன. அப்போர்க்கொத்த காலங்களில் ஒரு மிருகம் தன் இனத்தைச் சேராத வேறொரு மிருகத்தோடு சேருவதால் நூதனமான மிருகங்கள் உண்டாகின்றனவாம்.

அப்படியே ஒத்தைக் கொம்புள்ள குதிரையையொத்த ஒரு மிருகம் உண்டென்று சொல்லப்படுகிறது. இதைக் கண்ணால் கண்டவர்களில்லை. அப்படியானாலும் அதின் கொம்பைப்பற்றி விசேஷமாய்ச் சரித்திரங்களில் பேசப்படுகிறது. அதென்னவென்றால்: இதின் கொம்பினால் கத்திப் பிடிகள் செய்யப்படுமானால் நஞ்சு கலந்த சாப்பாட்டை மேசையின் பேரில் வைத்தமாத்திரத்தில் ஷை கத்திப்பிடியிலிருந்து வேர்வைபோல் நீர் ஜெனிக்குமாம். அந்தக்கொம்பினால் செய்யப்பட்ட பான பாத்திரத்தில் எப்போர்க்கொத்த விஷத்தை கலந்திருந்தாலும் சாப்பிடுகிறவர்களுக்கு எவ்வித கெடுதியும் செய்யாதாம். அதினிமித்தமே இந்து ராசாக்கள் அபாரமான விலைகொடுத்து அரேபிய வர்த்தகரிடத்திலிருந்து அவற்றை வாங்குவார்களாம்.

ஊர்வனவற்றிலும் ஆயிரம் ஆயிரமான நூதன ஜெந்துக்கள் இருக்கின்றனவாம். பறக்கிற தேள்கள் உண்டாம். அது கொட்டின மாத்திரத்தில் உடனே மரணம் நேருமாம். அங்கே கருத்த கட்டெறும்புகளுண்டாம். அவை ஒவ்வொன்றும் ஒரு பூனையளவு பெரியதாம். அங்கே காந்தமலைகளிலிருக்கிறதாகவும், அவற்றின் அருகில் நெருங்கிவரும் கப்பல்கள் அக்காந்த சத்தியினால் இழுக்கப்பட்டு அதை விட்டுப் பெயராமல்நின்றுபோவதாகவும், இதற்கு எதிரிடையான மற்றொரு காந்தம் அங்கே உண்டென்பதாகவும் அதினுடைய சக்தியால் இரும்பு, குண்டு முதலிய எவ்வித கருவிகளையும் தன்னை நெருங்கவிடாது செய்யுமென்றும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட அபூர்வ வஸ்துக்கள் இருப்பது எவ்வளவுக்கு உண்மையோ! அல்லது பொய்யோ!

யுத்தமும் இந்திய சுதந்தர மன்னர்களும்.—எந்நாட்டினுஞ் சிறந்த நன்னாடென்று பலராலும் புகழப்படா நின்ற இப்பிரிட்டிஷ் இந்திய நாட்டின்கண் வசிக்கும் அர்த்த (பாதி) சுதந்தர மன்னர்களின் உதவியைப்பற்றி இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்ட் சபையில் அதிக குதூகலத்துடன் பேசப்பட்டது. இஃதோர் ஆச்சர்யமான சன்மானம். ஏனெனில் இத்தன்மையான சன்மானத்தை ஜெர்மனியர்கள் எதிர்பார்க்கவில்லை. இங்கிலாந்தின்மேல் படையெடுப்பின் இந்தியாவானது கலகஞ் செய்ய வாரம்பிக்குமென்னு மோர் நவீன எண்ணமானது ஜெர்மன் நாட்டு இராணுவ தந்திரிகளுக்கு உண்டானது அதிசயிக்கத் தக்கதே. "கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே" என்றபடி விநாசகாலத்திற்கே இத்தகைய விபரீத எண்ணங்கள் ஜெர்மனியர்களுக்கு உதிக்கின்றன. சமயத்தில் காட்டிக்கொடுக்கும் மேலை நாட்டார்களைப்போல் நினைத்துவிட்டார்கள் போலும். இந்தியர்களோ இங்கிலாந்திற்கு சர்வ வழியிலும் உதவக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை ஜனரல் வான்பர்னார்டி அறியவில்லை. லார்ட் ரிப்பன்துரை ஈன்ற நன்மையையும் லார்ட் ஹார்டிஞ்ச் புகட்டிய ஒப்பிலாச் சன்மானத்தையும் இராஜ பக்திகொண்ட இந்தியர்கள் மறப்பரோ? சிறு பான்மை இராஜாங்க விஷயத்தில் அதிருப்தி யிருந்தபோதிலும் இந்தியர்களில் "தோட்டி முதல் தொண்டமான் வரையிலும்" முழுமனதுடன் இங்கிலாந்திற்கு உதவிபுரிய முன் வந்திருக்கிறார்களென்று மான்சேஸ்டா கார்டியன் எழுதுகிறது.

---

## விளம்பரம்.

---

### ஓர் தமிழ் உபாத்தியாயர் தேவை.

ஷோலாப்பூர் விசாரணையிலுள்ள தமிழ் எலிமெண்டரி பாடசாலைக்கு ஓர் தமிழ் உபாத்தியாயர் வேண்டும். அவர் அவ்விசாரணைக் கோவிலுக்கு உபதேசியாராகவும் உதவ வேண்டும். இவ்விரு தொழிலையும் சரிவரச் செய்யக்கூடிய ஓர் உத்தம கிறிஸ்துவர் தேவை. இவ் வுத்தியோகத்தை யடைய விரும்புவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு இங்கிலீஷில் மனு செய்துகொள்ள வேண்டும்

The Revd. Father C. Dias,
*Catholic chaplain,*
ஷோலாப்பூர்.



## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.
## DOMESTIC OCCURRENCES.

---

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய் முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு குட்பட்டால் 1—8—0 ரூபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ரூபாயாகும். அரை ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா. ப.-ர்.

---

### ஜனன அறிக்கை.

---

எனது இளைய சகோதரியும், நல்லாயனின் சந்தாதாரரும் மகா-ள-ள-ஸ்ரீ, கனம் ஜி. பிலவேந்திரம் உபதேசியார் அவர்களின் குமாருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ, ஜி. பி. ரபேல் பிள்ளை அவர்களின் பிரிய துணைவியுமாகிய சௌ. லூர்துமரி அம்மாள் 1914-ஞ நவம்பர்மீ 2ம் தேதி திங்கட்கிழமை பகல் 3½-மணிக்கு அர்ச். அந்தோனியாரின் கடாக்ஷத்தாலும் அர்ச். லூர்து நாயகின் ஆசீராலும் தன் இளவயதில், முதல் பேறாக ஓர் ஆண்மகமை யீன்றனள். அக்குழந்தைக்கு நவம்பர் மாதம் 11-ம் தேதி புதன் கிழமை மாலை 5½-மணிக்கு, மைசூர் அர்ச். சூசையப்பர் தேவாலயத்தில் சங். இராஜருஷி பேதுரு குருசுவாமிகளாலும் R.F. டெப்பாதூர் குருசுவாமி அவர்களாலும் G. B. R. உத்தரியநாதன் என நாமகரணம் சூட்டி ஞானதீட்சை கொடுக்கப்பட்டது. இதற்கு மைசூர் பிச்சன் பட்டாளத்து D. இராசேந்திரம் ஞானதந்தையாகவும் எனது மூத்த சகோதரி பரிபூரணமரி ஞானத் தாயாகவும் அங்கீகரிக்கப்பட்டார்கள். தாயும் சேயும் சுகம். இக்குழந்தையின் ஆத்துமசரீரத்துக்கு வேண்டிய ஆரோக்கியத்தைக் கட்டளையிட்டருளும்படி திரியேக தேவனின் திருவடிகளைப் பிரார்த்திக்கும்

மேற்படியாரின் மைத்துனர்,
G. ஜோசேப் பிள்ளை,
பஸ்ட் பட்டாளம்
4-ம் கம்பெனி-சித்திரகல் துருகம், குடகு.

## தருமகுண நண்பருக்கு ஓர் விண்ணப்பம்.



சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த, சூளையில் 30-வருடத்துக்கு முன் சுதேச பிள்ளைகளுக்குக் கல்விகற்பித்து அநாதபிள்ளைகளை ஆதரித்துச் சிறு குழந்தைகளை வளர்த்து சகல கிறிஸ்துவர்களுக்காக வேண்டிக்கொண்டு வர அர்ச். ஐந்துகாய பிரான்சிஸ்கு என்பவரின் மூன்றும்சபை சுதேச கன்னியர்மடம் ஒன்று ஸ்தாபகமானது.

அம்மடத்தின் ஆரம்பத்தில் 5 சகோதரிகள் மாத்திரம் சேர்ந்திருந்தார்கள். தற்போது ஆண்டவருடைய கிருபையால் 20-கன்னியரும் 3-நோவீசுமாரும் 1-பாஸ்டுலெண்டு 25-அநாதபிள்ளைகளும் 1-சிறுகுழந்தையும் மடத்திலிருக்கிறதினால் அதை விஸ்தரித்துக் கட்டவேண்டுமென அதிமேற்றிராணியார் உத்தரவளித்தார். தருமமெடுத்து No. II. கட்டிடத்தை கட்டினோமாயினும் பூச்சுவேலையும் கதவு ஜன்னல்கள் வேலையும் முடிவு பெறாது வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் No. I.-ல் காட்டியிருக்கும் அநாதபிள்ளைகள் சாலை நவம்பர் மாதம் 7-ந்திகதி நடு இரவில், இவ்விடம் பெய்த அகோர மழையால் சுவர்கள் நனைந்து பாதி வீடு இடிந்து விழுந்து சாமான்களெல்லாம் பொடிப் பொடியாய் நொறுங்கிப்போயின. எமது மடத்தின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பருடைய அற்புத சகாயத்தால் மேற்கூரை விழுமுன் திடீரெனப் பிள்ளைகள் எழுப்பிவிடப்பட்டு அகால மரணத்தினின்று காப்பாற்றப்பட்டார்கள். பிதாப்பிதாவான அர்ச். சூசையப்பருக்கு சதா நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

கன்னியர்மடத்தைக் கட்ட ரூபா 3760—15—5. செலவிடப்பட்டிருக்கிறது. அதைப் பூர்த்தி செய்யவும் பிள்ளைகள் வீட்டைக்கட்டவும் சுமார் ரூபா 1500 பிடிக்குமென மதிப்பு.

இருக்க இடமின்றி தவிக்கும் ஏழை அநாதபிள்ளைகள் மட்டில் மனமிரங்கி உதவிசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம். உங்கள் நன்றிக்கு கைம்மாறாக உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் ஆத்தும சரீர நலங்களுக்காக நாமும் சகோதரிகளும் அநாத பிள்ளைகளும் மறவாமல் நாடோறும் வேண்டிக்கொண்டு வருவோம்.

இப்படிக்கு,

தங்களுடைய அநுகூல மறுமொழிக்கு ஆவலுடன்
எதிர்ப்பார்த்து சிறு தருமமும நன்றியறிந்துடன் பெற்றுக்கொள்பவரான,

S. Jos. Balasami,
விசாரணை குருசுவாமி

3-FEB 1915 MADRAS.

The Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு.
அவ்வகைளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 13. } பிப்ரவரி 1915. { இலக்கம்.. 2

## ENCYCLICAL OF HIS HOLINESS BENEDICT XV.

## பரிசுத்த பிதா 15-ம் ஆசீர்வாதப்பரின் முதல் நிருபம்.

நமதாண்டவரான சேசுநாதசுவாமிக்குப் பதிலாய் திருச்சபைக்குப் பிரத்தியக்ஷத் தலைவரான அர்ச். இராயப்பர் ஸ்தானத்தில் வீற்றிருக்கும் பரிசுத்த பிதா, 15-ம் ஆசீர்வாதப்பர் ஷெ தலைமை ஸ்தானத்தை வகித்துக்கொண்ட பிறகு எழுதி விடுத்திருக்கும் முதல் நிருபம் அவருடைய ஞான ஆளுகைக் குட்பட்டிருக்கும் திருச்சபைக்கு மாத்திரமல்ல. ஆனால் உலக மடங்கலுமுள்ள சகல ஜாதி ஜனங்களுக்குமென்று அதை வாசிப்பவர் யாவரும் அறிந்துகொள்வார்கள். இந்நிருபம் எல்லோருக்குமே ஒரு விலையேறப்பெற்ற சாசனம் அல்லது பொக்கிஷமென்று சொல்லத் தேவையில்லை. நம்முடைய பரிசுத்த பிதா தம்முடைய உந்நத பதவியின் பொறுப்பைக் கையேற்றுக்கொண்ட மாத்திரத்தில், தற்காலம் உலகமிருக்கும் நிர்ப்பாக்கிய நிலைமையைக் கண்ணோக்கிப் பார்த்து மகா அனுதாபமும் மனோ வாதனையும் பட்டு இந்நிருபத்தை எழுதலானார். இதில் இவர் தற்போது ஐரோப்பாவில் நிகழ்ந்துவரும் கொடிய யுத்தத்தினால் நேர்ந்திருக்கும் அநேக கேடுபாடுகளைப் பற்றி பேசுவதுமல்லாமல் இந்த யுத்தத்துக்கு மூல காரணமாயிருக்கும் மற்றொரு பயங்கரமான யுத்தத்தைப் பற்றியும், தம்முடைய அரசாட்சிகாலத்தில் ஜனசமூகத்துக்கும் திருச்சபைக்கும் சமாதானமும், சந்தோஷமும், சகல சுகபாக்கியமும் உண்டாகும்படி தாம் எடுத்துக்கொள்ளப் போகிற யுத்தியுபாயங்களைப்பற்றியும் பேசியிருக்கிறார். இவருடைய இந்தப் பிரயாசையும் நல்ல கருத்துகளும் அனுகூலமாகும்படி வேண்டிக்கொள்ள நம்முடைய சந்தாதாரர்கள் அனைவரையும் நாம் அதி விநயமாய்க் கேட்டுக் கொள்வதோடுகூட ஒவ்வொருவரும் அந்நிருபத்தை வாசித்து அதில் அடங்கியுள்ள புத்திமதிகளினாலும் ஞான போதகங்களினாலும் பிரயோசனமடையுமாறு இதனடியில் அதையும் மொழி பெயர்த்துத் தருகிறோம்.—

சங்கைக்குரிய சகோதரர்களே! உங்களுக்கு அப்போஸ்தலிக்கு ஆசீர்வாதமும், சகல சுகபாக்கியமும் உண்டாவதாக:—

அப்போஸ்தலர்களுக்குத் தலைவரா யிருந்தவருடைய ஸ்தானத்துக்கு நாம் முற்றுமே அபாத்திரராயினும் அப்பதவிக்கு யாராலுங் கண்டுபிடிக்க முடியாத தேவ பராமரிப்பின் நியமிப்பினால் உயர்த்தப்படலானோம். இந்த உன்னத ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்ட வுடனே "என்னாடுகளை மேய்ப்பாயாக, என்னாட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" (அர்ச். அரு. XXI. 15-17) என்று அர்ச். இராயப்பருக்கு நம்முடைய ஆண்டவர் திருவுளம்பற்றின வார்த்தைகளை அவர் அதே குரலொலியோடு நமக்குந் திருவுளம்பற்றுவதாகப் பாவித்து, நம்முடைய பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்ட மந்தையை—அந்தப் பெரிய மந்தையை—மிக்க உருக்கம் நிறைந்த நேச வாஞ்சையோடு கண்ணோக்கிப் பார்த்தோம். மெய்யாகவே உலக முழுமையுமுள்ள சகல ஜாதி ஜனங்களும் இந்தப் பெரியமந்தைக்கு ஒருவகையில் சேர்ந்தவர்களாகவே யிருக்கிறார்கள். அதேதெனில், எல்லோருக்காகவும் சேசுநாதசுவாமி தம்முடைய இரத்தத்தைக் கிரையமாகக் கொடுத்தபடியால் எல்லோருமே பாவ அடிமைத்தனத்தி னின்று விடுதலை யாக்கப்பட்டிருக்கிறார்கள். யாரும் இந்த இரட்சிப்பினால் உண்டாகும் நன்மைகளுக்குப் புறத்திப்பட்டவர்கள் அல்லர். ஆனதினாலே தான் இந்தத் திவ்ய மேய்ப்பர் தமது திருச்சபையாகிய மந்தையில் ஏற்கெனவே சேர்ந்திருக்கிற மனுக்குலத்தின் ஒரு பங்கானவர் போக, அதில் இன்னும் வந்து சேராத மற்றவர்களையுஞ் சேரும்படி செய்ய பட்சமாய் வற்புறுத்தி அழைப்போமென்கிறார். "அல்லாமலும் இந்த ஆட்டுக்கிடைக் குட்படாத வேறே ஆடுகளும் எனக்குண்டு; அவைகளையும் நான் சேர்த்துக்கொண்டு வரக்கடவேன்; அவைகளும் என்குரல் சத்தத்தைக் கேட்கும்" (அர்ச். அரு. X. 16.) சங்கைக்குரிய சகோதரர்களே! நமது இருதயத்தில் முதன்முதல் உதித்ததும், சந்தேகமற சர்வேசுரனுடைய நன்மைத்தனத்தினாலேயே உண்டானதுமான ஓர் உணர்ச்சியை நாம் உங்களுக்கு ஒளிக்கமாட்டோம். அதாவது: எல்லா மனிதர்களும் ஈடேறவேணுமென்ற ஆசையும் ஆவலும் பொருந்திய உற்சாகமே அன்றி வேறல்ல. நாம் இந்தத் தலைமை ஸ்தானத்தின் பொறுப்பை யேற்றுக்கொண்டபோது சேசுக்கிறிஸ்துநாதர் சிலுவையில் அறையப்படப்போகுந் தருணத்தில் "பரிசுத்த பிதாவே! தேவரீர் எனக்குக் கொடுத்தவர்களைத் தேவரீருடைய திருநாமத்தினாலே காத்தருளும்" (அர்ச். அரு. XVII. 11.) என்றுச் சொல்லிக் காட்டின அதே விருப்பத்தையே நாமும் கொள்ளலானோம்.

இப்போது நாம் நம்முடைய இந்த அப்போஸ்தல உந்நத ஸ்தானத்திலிருந்து மனிதர்களுடைய நடவடிக்கையின் போக்கைச் சற்று ஊன்றிப் பார்த்து சிந்திக்கையிலும், தேசபரிபாலக சமுதாயத்தின் (Civil Society) பரிதாபமான நிலைவரத்தைக் காணும்போதும் நம்முடைய இருதயமானது வியாகுலத்தால் ஊடுருவப்படுகிறது. ஐரோப்பாவிலும், சரியாய்ச் சொல்லவேண்டுமானால் உலக முழுமையிலுமே நிகழ்ந்துவரும் மகா பயங்கரத்துக் குரியதும், மகா மனோவாதனைக் குரியதுமான காட்சி எல்லோருக்கும் பொதுவான தந்தையாயிருக்கிற நமக்கு மகா கொடிய மனத்துயரத்தை உண்டுபண்ணமற் போகுமோ? இப்பேர்ப்பட்ட சம்பவத்தை யாரும் இதுவரையிலும் சரித்திரத்தில் வாசித்திரார்போலும். கிறிஸ்துநாதர் தீர்க்கதரிசனமாய்த் தெரிவித்த அந்த நாட்கள் வாஸ்தவமாகவே வந்துவிட்டனபோலக் காணப்படுகிறது. "யுத்தங்களைப்பற்றியும் யுத்த சமாசாரங்களைப்பற்றியும்......கேள்விப்படுவீர்கள்; ஏனெனில் ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தார் மேலேயும், ஒரு இராச்சியம் மற்றொரு இராச்சியத்தின் மேலேயும் எழும்பும். (அர்ச். மத். XXIV. 6.7.) எங்கே பார்த்தாலும் யுத்தத்தின் பயங்கரமான தோற்றமே விசேஷமாய்க் காணப்படுகிறது. எல்லோருடைய கவனத்தையுங் கவரத்தக்கது வேறெதுவுமா யில்லை. பேரும் கீர்த்தியும் விருத்தியும் அடைந்த ஜாதியாரெல்லோரும் யுத்தக்களரியி லிருக்கிறார்கள். யுத்தத்துக்கென்று நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிற பயங்கரத்துக் குரிய சம்மாரக் கருவிகள் அவரவர்கள் வசத்தில் ஏராளமாயிருக்கும்போது ஒருவரையொருவர் தாக்கி நிஷ்டூரமாய்க் கொலை புரிவதில் ஆச்சரியமென்ன? இந்தச் சங்காரத்துக்கும் கொலைக்கும் ஒரு முடிவையுங் காணோம். பிரதிதினமும் புதிதாய்ச் சிந்தப்படும் குருதியால் பூமி யெல்லாம் தோய்ந்து, காயம்பட்டவர்களாலும், இறந்தவர்களாலும் நிறைந்துபோகிறது. ஒருவரை ஒருவர் எதிர்த்து ஆயுதபாணிகளாய்ப் போர்புரிகிற இவர்கள் ஒரே பிதிர் வழியை ஒட்டினவர்களென்றுவது, ஒரே சுபாவத்தைக் கொண்டவர்களென்றுவது, ஒரே மனுக்குலத்தைச் சேர்ந்தவர்களென்றுவது யார்சொல்வார்? இவர்கள் எல்லோரும் சகோதரர்களென்றும் பரலோகத்திலிருக்கிற ஒரே பிதாவின் மக்களென்றும் யார் அங்கீகரிப்பார்? எப்பக்கத்திலும் திரளான சேனைகள் மகா வீராவேசத்துடன் சண்டைகள் செய்ய அந்தந்த ஜாதியாரும், குடும்பங்களும், ஒவ்வொருவருமே துக்கசாகரத்தில் மூழ்கி யிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் கைம்பெண்கள், அநாத பிள்ளைகள் முதலியவர்களுடைய தொகை அபாரமாய் அதிகப்பட்டுக்கொண்டே போகிறது. சமாச்சார போக்குவரத்துக்கள் தடைபட்டிருப்பதால் வியாபாரங்கள் குறைந்துவிட்டன; வயல்கள் தரிசாய்க் கிடக்கின்றன; கைத்தொழில்கள் கைவிடப்பட்டன; ஐசுவரியர் தாரித்திரரானார்கள்; எளியவர்கள் இன்னும் நிர்வாகமற்றவர்களாகிறார்கள். எல்லோருமே துக்க சாகரத்தில் அமிழ்ந்தி யிருக்கிறார்கள்.



## இராசாக்களுக்கும் இராஜாங்கங்களுக்கும் ஓர் விண்ணப்பம்.

நாம் பாப்பு ஸ்தானத்தில் கால்வைத்த முதலடியில்தானே இப்பேர்ப்பட்ட பெரிய பொல்லாப்புக்களை யெல்லாம் கண்டு மனமுடைந்து, பிரசித்தி பெற்றவரும் அர்ச்சிய ஞாபகத்துக் குரியவரும் நமக்கு முன் பாப்பானவருமாயிருந்தவருடைய கடைசி வார்த்தைகளையே மறுபடியும் உங்களுக்கு எடுத்துக் கூறி, ஞாபகப்படுத்தி நமது அப்போஸ்தலிக்கு அலுவலைத் துவக்குவது நம்முடைய கடமை யென்று எண்ணுகிறோம். ஆகையால் செங்கோன்மை செலுத்துகிறவர்களும் ஆளுகை புரிகிறவர்களும் இதுவரை சிந்தப்பட்ட கண்ணீர்களையும் இரத்தத்தையும் பார்த்துப் பிரசைகளுக்கு விலை யேறப்பெற்ற சமாதானத்தின் ஆசீர்வாதத்தைக் கொடுத்தருள தீவிரிக்கும்படியாக மகா ஆவலுடன் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். திவ்விய இரட்சகர் பூலோகத்தில் அவதரித்தபோது "பூலோகத்தில் நல்ல மனதுடையோருக்குச் சமாதான முண்டாகக் கடவது" (அர்ச். லூக் IV. 14.) என்று பாடிய சம்மனசுக்களுடைய குரலொலி அவருடைய பிரதிநிதியாகிற நம்முடைய அப்போஸ்தல அலுவலின் துவக்கத்திலும் கேட்கும்படியாக தயைநிறைந்த சர்வேசுரன் கிருபை புரிவாராக! இராச்சியங்களின் விதிவசத்தைத் தமது ஆஞ்ஞையில் அடக்கிக்கொண் டிருப்பவர்கள் இதற்குச் செவி கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தேகமின்றி அபகரித்துக்கொள்ளப்பட்ட சுதந்தரங்களை நீதியோடு பெற்றுக்கொள்ளுகிறதற்கு எத்தனையோ வெவ்வேறு வழிகளும் வகைகளுமுண்டு. இப்போது யுத்தமுகத்தில் போராடுபவர்கள் நல்ல கருத்தோடும் நம்பிக்கையோடும் தங்கள் தங்கள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு அவ்விதமான ஏர்ப்பாடுகளைக் கைக்கொள்வார்களாக. அவர்கள் மட்டிலும் மற்றெல்லா ஜாதியார் மட்டிலும் நாம் கொண்டிருக்கும் சினேகத்தி னிமித்தம் நாம் இவைகளைச் சொல்லுகிறோமே யன்றி நம்சொந்த விஷயத்துக்கான வேறெந்த நோக்கத்தாலுமல்ல. சினேகத்துக் கடுத்ததும் தந்தைக்குரியதுமான நமது குரல் சத்தம் அவர்களுக்கு வீணாய்ப் போகாதிருக்கக் கவனிப்பார்களாக.

## ஜனசமூகத்துக்கு விரோதமான யுத்தம்.

நேசத்துக்குரிய உணர்ச்சிகளை உணர்வறச் செய்வதும், நம்முடைய மனதுக்கு அருவருப்பையும் வருத்தத்தையும் வருவிப்பதும் இந்த இரத்தக்களரி மாத்திரமன்று. இன்னொரு கொடிய யுத்தமும் உண்டு. அது இப்போதுள்ள ஜனசமூகத்தின் குடலையே வகிர்ந்துவிடுகிறது. இந்தப் போர் நல்ல விவேகியான எவனையும் பயப்படச் செய்கின்றது. ஏனெனில் இதுவே யிதுவரை நடந்தேறிய சகல கேடுபாடுகளுக்கும் காரணமா யிருந்ததுமன்றி, இனிமேலும் பல ஜாதியாருக்குள்ளும் பல தீங்குகளை விளைவிக்கவுங் காரணமாயிருக்கும். இப்போது நடக்கும் துன்பத்துக்குரிய போராட்டத்துக்கும் மூலகாரணம் இதுவே. ஜனசமூகங்களுக்குள் மெய்யான ஒருமைப் பந்தனத்தையும், சமாதானத்தையுமுண்டுபண்ணும்படியான கிறிஸ்துவ ஞான மடங்கிய சட்டதிட்டங்களும் அனுஷ்டிப்பும்

எந்த நிமிஷம் இராச்சியங்களுக்குள் அற்றுப் போயிற்ருே, அதே நிமிஷத்தில் அவைகளின் அஸ்திவாரமும் கலகலத்துப்போக ஆரம்பித்தது. அதுமுதல் மனிதரின் எண்ணங்களிலும் நடவடிக்கைகளிலும் எவ்வளவான மாறுதல்கள் உண்டாயின வெனில், சர்வேசுரன் மாத்திரம் உதவி புரியாவிட்டால், சமஸ்த மனுக்குலத்தினுடையவும் அழிவுகாலம் வெகுவாய்ச் சமீபித்து விட்டதென்றே சொல்லலாம். தற்காலத்தில் முளைத்திருக்கிற ஒழுங்கீனங்கள் எவை யெனில், மனிதருக்குள் ஒருவர் மற்ருெருவர் மட்டில் வைக்க வேண்டிய சிநேகத்தைக் கைவிடல், அதிகாரத்தைத் துவேஷித்தல், பற்பல வகுப்பினருக்குள் ஐக்கிய விஷயத்தில் உண்டாயிருக்கும் நீதிக் குறைவு (மனிதன் ஆசிக்கத்தக்க வேறே மேலான பாக்கியம் இல்லை யென்ருற்போல்) அவனவனும் தன் தன் உலக சுகநலத்துக்கு மாத்திரமே வருந்தி உழைத்தல் என்பனவாம். இவை நான்குமே ஜன சமூகத்திலிருக்க வேண்டிய சமாதானத்தை மிகுதியும் நிர்மூலம் பண்ணுகிற ஏதுக்களா யிருக்கின்றன வென்று நமக்குத் தோன்றுகிறது. அவரவருக்குள்ள பகையை ஒழித்துச் சமாதானத்தை நிலைநாட்டுவது நமது நோக்கமா யிருப்பதால், மேற் சொல்லிய ஒழுங்கீனங்களை எவ்விதத்திலும் அகற்றி, கிறிஸ்துவ ஒழுக்கங்களைத் திரும்ப ஸ்தாபிக்கும்படியாய் நம்மாலான பிரயாசைப்படுவது அவசியம்.

(இன்னும் வரும்.)

---

## WHENCE WE CAME?

## நாம் வந்த விதம்.

(முன் தொடர்ச்சி.)

ஒரு வார்த்தையில் இன்னஞ் சொல்ல வேண்டுமானுல், ஒன்றைச் செய்கிறவன், செய்த வஸ்துவிலும் மேலானவன். ஒரு கடியாரக்காரன் தான் செய்த கடியாரத்தைவிட மேலானவன்; ஒரு சித்திரக்காரன் தான் எழுதியப் படத்திலும் உயர்ந்தவன்; ஒரு கிரந்த கர்த்தா தான் வரைந்த நூலினும் சிறந்தவன். ஆதலால், இத்தகைய கேவலமான பொருள்களைச் செய்ய உயிரும் அறிவும் பெற்ற ஓர் வஸ்து இருக்கவேண்டிய தவசியமானுல், இப் பொருள்களைவிட எத்தனையோ மடங்கு மேலானவற்றை உண்டுபண்ண ஒரு மகத்தான உயிருள்ள ஞானி அதிக அவசியமல்லவா? கடியாரக்காரனின்றி கடியாரம் உண்டாகாதென எவரும் அறிவதுபோலே, அறிவுள்ள ஓர் உயிர் உள்ள ஞானியின்றி அந்தக் கடியாரக்காரன் எப்படி வந்திருக்கக்கூடும்? இப்படித் தன்னறிவோடு கணக்கற்ற அநேக அபூர்வ வஸ்துக்களைத் தன் யுக்தியால் செய்யவல்ல மனிதனை, ஞானமும், சாட்சாத் வல்லமையும், உண்மையுமான ஒருவர் படைத்தளித்தல்வேண்டும் என்றறிகிருேம். அதாவது மனிதர் இவ்வுலகில் வந்து உயிருடனிருப்பதற்குக் காரணம் கடவுளே யொழிய வேறில்லை. கடவுளே மனிதனைப் படைத்தார்; மனிதர் உலகில் இருப்பது கடவுள் ஒருவர் உண்டென்பதற்கோர் சிறந்த அத்தாட்சி.

இது நிற்க, இவ்விஷயத்தையே வேறு விதமாக யோசித் தாராய்வோம். மனிதரால் உண்டுபண்ணப்பட்ட நுட்பமும் வேலைத்திறமும் அழகும் வாய்ந்த ஓர் யந்திரத்தை எடுத்துக்கொண்டு, அதை இயற்கையில் நாம் காணும் சாதாரணமான ஒரு வஸ்துவோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இயற்கைப் பொருள் செயற்கைப் பொருளினும் அளவில்லா நூதனமும் மேம்பாடு முடையதெனத் தெள்ளிதில் தோன்றும். இதனுல் செயற்கைப் பொருளுக்குக் காரணகர்த்தா ஒருவன் வேண்டுமென்பது எப்படி அவசியமோ, அப்படியே இயற்கைப் பொருளுக்கும் அறிவுள்ள ஆதிகாரணர் ஒருவர் இருக்கவேண்டுமென்பது அதியாவசியமாமே. இதோ ஒரு கடியாரம்! இதிலுள்ள பல பாகங்களும் எவ்வளவு நுட்பமாகவும் வேலைப்பாடுடனும் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன! சக்கரங்கள், மூலவிசை, ஆணிகள் முதலியவை யனைத்தும் தக்க இடங்களில் அமைந்திருக்கின்றன. ஒன்றுக்கொன்று பொருத்தமாகவும் விநோதமாகவும் அமைக்கப்பட்டிருப்பதால், கடியாரம் அசைந்து நடக்கையில் மணி, நிமிஷம், விநாடி முதலியவற்றை எள்ளளவும் பிசகாமல் சரியாய்க் காட்டுகின்றது. ஒவ்வொரு மணிக்கும், அரை மணிக்கும், கால் மணிக்கும், அதற்கென் றமைத்துள்ள ஒரு யந்திர விசையால் மணியடிக்கிறது. இதனுல் நேரம் போவதை நாம் கண்ணுரக் காண்பதுடன் காதாலும் கேட்கிருேம். மனித அறிவின் சக்தி



யே சக்தி. அதன் யுக்தியே யுக்தி! மேற்கூறிய ஆச்சர்ய பொருளைத் தன்னறிவில்லா குருட்டு சக்தியால் செய்துவிடமுடியுமா? தற்செயலென்பதால் அக் கடியாரம் செய்யப் படாவிடில், ஒரு செடி, கொடி, பூ, காய், கனி அல்லது ஒரு பூச்சி இவற்றை அத் தற்செயலென்னும் குருட்டு சக்தி யுண்டுபண்ண முடியாது என்பது திண்ணம். ஏனெனில் மேற்கூறிய செடி, கொடி, முதலியவற்றில் ஒவ்வொன்றையும் எடுத்துச் சோதனைசெய்தால் செயற்கைப் பொருளைவிட எவ்வளவோ அதிசயமாக அவை அமைக்கப்பட்டிருக்கின்றன வென்றறியலாம்.

நாம் எங்குமே சாதாரணமாய்ப் பார்க்கும்படியான வண்ணாத்திப் பூச்சி என்றழைக்கும் அழகிய ஓர் ஜெந்துவை எடுத்துக்கொள்வோம். அது ஒரு கடியாரத்தைவிட அநேக மடங்கு அழகும் வேலைத் திறனும் வாய்ந்தது. கடியாரத்தைப்போல் அவ்வளவு பயனுடைய பொருளல்லாவிடினும், அப் பூச்சி மிக்க ஆச்சரியகரமான அதிசய ஜெந்தென்பதற்கும் ஐயமுண்டோ? அதைச் செய்வதற்கு அளவற்ற மகத்வ வல்லமையும் அறிவும் நிறைந்த ஒருவர் வேண்டியதவசியம். ஒரு கடியாரத்திற்கு புத்தியும் யுக்தியும் அவசியமானுல், மேற்கூறிய பூச்சியை உண்டு பண்ண அதைவிட மேலான அறிவும் வல்லமையும் இன்றியமையாததென சாதாரண அறிவுடையவரும் சுலபத்தில் தெரிந்துகொள்ளலாம். இவ்விரண்டு பொருள்களுக்கு முள்ள வித்தியாசத்தைக் கவனிப்போம். கடியாரம் அசைந்தாலும் உயிரில்லை. அதற்குக் காலாகாலத்தில் சாவி கொடுக்கவேண்டும். ஆனுல் இந்தப் பூச்சியோ அப்படியில்லை. அதை ஒருவரும் கவனிக்கவேண்டியதில்லை. கடியாரம் பல நுட்பமான பாகங்களால் வெகு சாமர்த்தியமாய்ச் செய்யப்பட்டுள்ளது; ஆனுல் இப் பூச்சியோ நமது கண்ணுக்கும் புத்திக்கு மடங்கா பல பாகங்களால் வெகு விநோதமாய்ச் செய்யப்பட்டுள்ளது. அதன் அழகிய சிறகுகளைச் சற்றே கவனித்துப்பார்; அவை எவ்வளவு வேடிக்கையாக வர்ணமிடப்பட்டு விளங்குகின்றன! பொன்னிறம் வாய்ந்து எவ்வளவு நேர்த்தியாக அவை சிங்காரிக்கப்பட்டுள்ளன! அது பறப்பதற்கென் றமைந்துள்ள தசை முதலியவற்றைச் சோதித்துப்பார். எவ்வளவு சுலபமாக அவை ஆகாயத்தில் பறக்கின்றன! அதன் சிறிய கால்களும், நுட்பமான தசை முதலியவைகளும், இன்னம் அதன் தேகத்தின் பல பாகங்களும் எவ்வளவு ஒழுங்காக ஒன்றிக்கப்பட்டிருக்கின்றன! ஏன்! அதன் கண்ணைக் கவனித்தால், எத்தகைய செயற்கைப்பொருளும் அப் பூச்சிக் கீடாகாதென விளங்கும். அப் பூச்சிக்கு முன்னுல் ஒரு கடியாரம் ஒன்றுமில்லாத பொருளென்றே சொல்லவேண்டும். ஒரு கடியாரத்தைச்செய்வதுடன், அதற்குத் தன்னைப்போன்ற பல கடியாரங்களை செய்யுஞ்சக்தியைக் கொடுக்கக்கூடிய அறிவுள்ள சாமர்த்தியவான் எவனுவதுண்டா? ஆனுல் அப் பூச்சியைச் செய்தவர், தன்னைப்போல் அநேக பூச்சிகளை உண்டுபண்ணும் வல்லமையை அதற்குக் கொடுத்திருக்கிருர். இவ் வல்லமை கடியாரக்காரன் எவனுக்குமில்லை என்பது எல்லோருமறிந்த விஷயம். இப்படியும் ஒரு கேள்வி கேட்கலாமா வென்று இதை வாசிப்பவர் நகைக்கக்கூடும். ஆயினும் ஒரு பூச்சி நூற்றுக் கணக்கான சிறு பூச்சிகளை உண்டுபண்ணும் சக்தியுடையது. இதையும் இது போலும் அநேக அதிசயங்களையும் தினமும் கண்ணுரக் கண்டிருந்தும், இவற்றிற் கெல்லாம் காரணகர்த்தாவாகிய ஒரு பரம்பொருள் உண்டென்பதை மறுக்கவுங் கூடுமா? இயற்கைப்பொருள் யாவற்றிற்கும் ஆதிகாரணமாகிய கடவுள் ஒருவர் உண்டென்பதை மறுப்பது மதியீனமன்ருே!

வெள்ளி நாணயம், புகைவண்டி, கடியாரம் முதலியவை இவ்வுலகில் உண்டாயிருப்பது, உயிரும் அறிவும் பொருந்திய ஒரு மூல புருஷனலன்றி வேறு காரணத்தினுல் முடியாதென்னும் நம்பிக்கையுடைய மாந்தரே, அதியற்புதமமைந்த கணக்கற்ற இயற்கைப் பொருள்கள் மாத்திரம் தற்செயலாய்க் குருட்டு வல்லமையால் உண்டாயிருக்க வேண்டுமென்று வாய் கூசாமல் சொல்லுகிருர்கள். இவ் வியற்கைப் பொருள்களுண்டானது வேறெந்த விதமானுலும் அவர்களுக் கவசியமில்லை; ஆனுல் பரலோக பூலோகங்களைப் படைத்துக் காப்பாற்றிவரும் அளவற்ற வல்லமை நிறைந்த சர்வேசுரனை மாத்திரம், அம் மதியீனர் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணரென அங்கீகரிக்க மாட்டார்கள். காரணகாரியங்களைத் தேர்ந்தறியும் கல்விமான்கள் நிறைந்த தற்காலத்திலும், தங்கள் அறிவையும் ஞானத்தையும் குப்பையிற்கொட்டி, கடவுள் இல்லை என்றும், இயற்கைப்பொருளனைத்தும் தற்செயலா யுண்டாயினவென்றும் தங்கள் மனம்போனவாறு பிதற்றித் திரியும் பேதைமாந்தர் இருப்பது வியக்கத்தக்கதே. "மூடனே தன்னிருதயத்

தில் கடவுள் இல்லை என்றான்" என்று ஒரு பக்திமான் எழுதியிருக்கிறார். இங்கே "தன் னிருதயத்தில்" என்பதைக் கவனித்தற்பாலது. தன் புத்தியி லல்ல, சிந்தையி லல்ல, ஆனால் "தன் னிருதயத்தில்" இல்லை. கடவுளுக்குக் கீழ்ப்படிந்து அவரை நேசிக்கப் பிரியமில்லாத் தன்மையே மனிதரை இவ்வாறுப் பிதற்றும்படி செய்கிறது. ஆசையி லிருந்துண்டாவது நினைவு. "நினைவுக்குத் தந்தை ஆசை" என்று ஒரு ஆங்கில கவி எழுதுகிறார். அம் மனிதர் இவ்வாறுபேசுவது அவர்க ளிருதயத்தி லிருந் துண்டாகும் ஆசையாலொழிய, தம் மறிவைச் செலுத்தி ஆராய்வதா லல்ல. இத் தகைய நாஸ்திகர், தம் மனச் சாட்சியின் அந்தரங்க பாகத்தில், கடவுள் ஒருவர் இருக்கிறார், இருக்கவேண்டுமெனவும், இவ் வுலகமும் அதிலடங்கிய யாவும் உண்டாவதற்குக் காரணம் கடவுளின்றி வேறொன்றுமில்லை என்பதே சரியென்னும் ஞாயமே புத்திக்கடுத்த தெனவும் நன்கறிவார்கள். மனிதன் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் தன்னைச் சுற்றி யிருக்கும் இயற்கைப் பொருள்கள்யாவும் கடவுள் இருப்பதையே மௌனமாய்ப் பேசுகின்றன என்னும் உண்மையை ஒளிக்க முடியாது. மணலிற் படிந்த காலடிச்சுவடுகள், மனிதன் ஒருவன் அங்கு வந்திருக்க வேண்டுமென்பதைத் தெரிவிக்கவில்லையா? கடவுளின் சிருஷ்டி வல்லமையின் அடையாளங்கள் நாம் பார்க்கும் ஒவ்வொரு இலையிலும் புஷ்பத்திலும் இருக்கின்றன. அவரை மறுத்தால் நாம் மதியீனரே. இத்தகைய மதியீனத்தி னின்றும் கடவுள் நம்மைக் காப்பாற்றுவாராக.

S. SELVARAJU.

(இன்னும் வரும்.)

---

## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### 12ம்-பாடம்.

### தேவதூஷணம்.

(முன் தொடர்ச்சி.)

---

5. நரக பாஷை.-ஒரு பட்டாளத்துச் சேவகர்களுக்குள் ஒருவன் துற்பாஷை யாடும்வழக்க முள்ளவனு யிருந்தான். இவன் கோபநேரத்திலும் சந்தோஷ நேரத்திலும் ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால், இவன் வாய்திறந்து பேசும்போதெல்லாம் அசுசியான வார்த்தையைச் சொல்லிவருவான். மற்றச் சேவகரும் இதைப்பற்றி அவன் மட்டில் அப்பிரீதிகொண்டிருந்தார்கள். ஒருநாள் ஒரு சிப்பாய் துற்பாஷைக் காரனைப்பார்த்து "மித்திரா! நீ இன்று தினமெல்லாம் ஒரு கெட்ட வார்த்தையுஞ் சொல்லாதிருந்தால் உனக்கு ஒரு ரூபாய் கொடுப்பேன்" என்றான். அப்படியே அவன் அன்றைக்கெல்லாம் ஒரு கெட்ட வார்த்தையுஞ் சொல்லாமல் ஜாக்கிரதையா யிருந்தபடியால் பந்தயத்தைக் கெலித்துக்கொண்டான். ஆனால் பந்தயப் பணத்தைக் கொடுப்பதற்கு முன் துற்பாஷைக்காரனைப் பார்த்துச் சிப்பாய் இவ்வாறு சொல்வான்: மித்திரா, ஒரு ரூபாய்க்காக நீ இன்று தினம் ஒரு ஒடியவார்த்தையையும் பேசாமலிருந்தாய்! ஆனால் இந்தத் துர்வழக்கத்தால் நரக தண்டனை உனக்குக் கிடைக்கு மென்று நீ அறிந்திருந்தும் சற்றேனும் பயப்படாமல் நரக பாஷையான அருவருப்புக்குரிய வார்த்தைகளைச் சொல்வது சரியல்ல என்றான். துற்பாஷைக்காரன் இந்தப் புத்தியைக் கேட்டபின் தன் துற் பழக்கத்தை மாற்றிக்கொண்டான். பிள்ளைகளே! உங்கள் வாயில் இப்பேர்ப்பட்ட நரக பாஷை வராதபடிக்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

(Catech. En. His.)

6. ஓர் தாயின் சாபனை.—அர்ச். அகஸ்தீன் சொல்லுஞ் சரித்திரமாவது: ஓர் ஊரில் கௌரவமான பெருங் குடும்ப மிருந்தது. தாய் தகப்பனை இவர்களுக்கு 7 ஆணும் 3 பெண்ணும் ஆக 10 பிள்ளைகளிருந்தார்கள். ஒருநாள் மூத்த குமாரன் தன் தாயை வண்டச் சொற்களால் திட்டி, அடிக்கவும் கை ஓங்கத் துணிந்த சமயத்தில் தாயானவள் மற்றப் பிள்ளைகளில் ஒருவனும் தனக்கு உதவியாக வாராதபடியால் துக்கித்து, மூத்தவனுடைய துர் நடத்தையால் கோபாவேஷங் கொண்டு தலைவிரிகோலமாய் ஒப்பாரியுடன் கோவிலுக்குச் சென்று தீர்த்தத் தொட்டியைப் பிடித்தவளாய்த் தான் பெற்ற பிள்ளைகள் எல்லோருக்கும் வியாதி யுண்டாகி, ஊரைவிட்டு அந்நிய தேசத்தில் நாடோடிகளாய் அலைந்து திரியும்படிச் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடினாள். அதி சீக்கிரத்தில் மூத்த குமாரனுக்கு ஒருவித திமிர்வியாதி உண்டாகி சொல்லி முடியாத வாதைப்பட்டுவந்தான். மறு வருஷத்துக்குள் மற்ற பிள்ளைகளுக்கும் அப்பேர்ப்பட்ட வியாதி காணப்பட்டு பொறுக்கப்படாத வேதனை அனுபவித்து வந்தார்கள். தன் சாபத்தால் தன் பிள்ளைகள் இவ்வாறு அவஸ்தைப்படுவதையும், ஊராரால்வரும் நிந்தனையையும் பொறுக்கக்கூடாதவளாய் நான்றுகொண்டு செத்தாள் அந்தப் பிள்ளைகளுடைய தாயானவள். பிள்ளைகளும் தங்கள் தாய்க்குச் சம்பவித்த நிற்பாக்கியத்தினிமித்தம் ஆறாச் சஞ்சலங்கொண்டு தங்கள் ஊரை விட்டுவிட்டு நாடோடிகளாய்த் திரிந்தார்கள். சில காலத்துக்குப் பின் மூத்தவன் காலியா தேசத்துக்குப்போய் அர்ச். லவுரேஞ்சியார் வேண்டுதலால் சொஸ்தப்பட்டான். ஆறாவது பையன் அர்ச். அகஸ்தீனுடைய ஆலோசனைப்படி அர்ச். இராயப்பருடைய திருக்கல்லறையைச் சந்தித்த மாத்திரத்தில் சௌக்கியம் அடைந்தான்.



நமது இந்து தேசத்தில் கோபம் உண்டாகும்பொழுது தாய் தந்தையோர் தங்கள் பிள்ளைகளைச் சபித்து "நீ ஒரு கழிச்சலில் போ. வாந்திபேதி உன்னை வாரிப் போகட்டும்" என்று இப்பேர்ப்பட்ட சாபனை வார்த்தைகளைச் சொல்வது சர்வ சாதாரணம். இப்பேர்ப்பட்ட வார்த்தைகளை உச்சரிப்பது பாவமாவதுடன், மேற்கூறிய சாபனையு நிறைவேறும். கிறிஸ்துவர்களே! இவ்விஷயத்தில் எச்சரிக்கையாயிருங்கள்.

(De Civitate Dei.)

7. பசாசு ஆவேசம் ஏறின பிள்ளைகள்.—பிரைரென்ஸ என்னும் நகரில் ஆஸ்திக்காரியான ஒரு கைம்பெண்சாதி யிருந்தாள். இவளுக்கு இரு குமாரர் இருந்தார்கள். இவள் அவர்களை எவ்வளவு அன்பாய் நேசித்தாள் என்றால், அவர்கள் ஆசித்ததெல்லாம் அவர்களுக்குக் கொடுத்து செல்வமாய் வளர்த்து வந்தாள். ஒருநாள் ஏதோ ஒரு காரணத்தைப்பற்றி அந்தப் பிள்ளைகள் கேட்டதை அவள் கொடாததைப் பற்றி அவ்விரு பிள்ளைகளும் கோபித்துத் தங்கள் தாயை அடிக்கும்படி கை ஓங்கினார்கள். அச்சமயத்தில் தாயானவள் மதி மயங்கி கோபவெறி கொண்டவளாய் உங்களைப் பசாசு பிடித்து ஆட்டக்கடவதென்று சபித்தாள். அக்ஷணமே அவ்விரு வாலரும் பசாசு ஆவேசங்கொண்டு துஷ்ட மிருகங்களைப்போல் சீறிவிழுந்து ஒருவன் ஒருவனைப்பிடித்து அடித்துக் காயப்படுத்திக் கொள்வதைக் கண்ட தாயானவள் துக்கப்பட்டு அவ்வூர் மேற்றிராணியாரான அர்ச். செனோபியுஸ் என்பவரிடம் போய் நடந்த சங்கதியை அறிவித்தாள். இதைப் பற்றிக் கேள்விப்பட்ட அர்ச்சியசிஷ்டவர் அவளைக் கண்டித்துப் பசாசை பிள்ளைகளிடத்தினின்று துறத்திவிட்டார். பிள்ளைகளைத் திட்டி வைது சபிக்க வழக்கமுள்ள தாய்மாரே! இனி எச்சரிக்கை.

(Delmas.)

### 13-ம் பாடம்

### சத்தியம்,

தான் சொல்லுகிறது உண்மை யென்கிறதற்குச் சர்வேசுரனைச் சாக்ஷியாக அழைப்பதே சத்தியமாகும். ஆகையால் அவசரமா யிருக்கும்போதும், அதிகாரிகளால் கற்பிக்கப்படும்போதும், பெருத்த விஷயத்திலும் சத்தியம் செய்யலாமே ஒழிய அற்ப சொற்ப விஷயங்களுக்காக அவசரமின்றி சத்தியஞ் செய்யலாகாது. போய்ச் சத்தியஞ் செய்வது மகாப் பாவமாகும்.

1. அவசரமின்றி சத்தியஞ் செய்யலாகாது.—பிரான்ஸ் தேசத்து அரசனை க்ளோதேர் என்பவர் அர்ச். எலாயி என்பவர் எதார்த்தவாதியும் மகாப் புண்யவாளருமா யிருப்பதாகக் கேள்விப்பட்டு, அவரைத் தன் அரண்மனையில் வைத்துக்கொள்ள கருத்து கொண்டு அவரைத் தன் சமுகத்துக்கு வரவழைத்துத் தன் கருத்தை அவருக்குத் தெரியப்படுத்தினார். அர்ச். எலாயி என்பவரும் அதற்குச் சம்மதித்தார். அப்போது அரசன், ஒரு அர்ச்சியசிஷ்டவருடைய பண்டத்தைக் காட்டி

"நீர் எனக்குப் பிரமாணிக்கமாயிருப்பதாக இதன்மேல் சத்தியஞ் செய்யும்" என்று கற்பித்தார். அர்ச்சியசிஷ்டவரோ அவசரமின்றி சத்தியஞ் செய்வது மகாப் பாவமென்று பயந்து அதற்குச் சம்மதியாமலிருப்பதைக் கண்ட அரசன் அவருடைய இஷ்டப்படி சத்தியஞ் செய்யாமலே தமது அரண்மனையில் இருக்கச் சம்மதித்தார்.

(Genevaux.)

2. அர்ச். நார்சிஸ் என்பவருடைய சாக்ஷிகள்.—அர்ச். நார்சிஸ் செருசலேம் பட்டணத்து மேற்றிராணியாரா யிருந்த காலத்தில் மூன்று துஷ்டர் அவரை அவமானப்படுத்திக் கெடுக்கும்படி அவர் கனவில் முதலாய் நினையாத பாதகத்தை அவர் செய்தாரென்று சாக்ஷி கூறினார்கள். தான் சொன்ன சாக்ஷியம் உண்மையானதென்றும் அது பொய்யா யிருந்தால் உயிருடன் நெருப்பில் வேக சம்மதிப்பேன் என்றும் முதல் சாக்ஷி சொன்னான். இரண்டாம் சாக்ஷி "நான் சொன்னது சத்தியம். இது நிசமா யிராவிட்டால் பயங்கரமான வியாதி எனக்கு வரட்டும்" என்றான். மூன்றும் சாக்ஷி: என் வார்த்தை பொய்யா யிருந்தால் என் இருகண்ணும் அவிந்துபோகட்டும் என்றான்.

இப்பேர்ப்பட்ட அபாண்டமான பாதகம் தமது பேரில் சுமத்தப்பட்டதால் அர்ச்சியசிஷ்டவர் மகா துக்கப்பட்டு நகரத்தை விட்டு வனாந்தரஞ் சென்று செபதபத்தால் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்தார். இது நடந்த சொற்ப காலத்துக்குள் முதலிற் சாக்ஷி சொன்னவனுடைய வீடு நெருப்புப் பிடித்து அவனும் அதில் படிந்தான். இரண்டாம் சாக்ஷிக்காரனுக்கு உடம்பெல்லாம் ஒருவித புண் உண்டாகி சரீரம் புழுத்து அழுகி ஓரே இரணமாகி அவஸ்தைப்பட்டு மரித்தான். இதெல்லாம் கண்ட மூன்றாவது சாக்ஷியானவன் இது தேவதண்டனை யென்று நிச்சயமாய் அறிந்துகொண்டு, அர்ச். மேற்றிராணியார் யாதொரு குற்றமற்றவரென்றும் தானும் தன் கூட்டாளிகளும் சொன்னது பொய்ச்சாக்ஷியென்றும் சகலருக்கும் அறிவித்துத் தன் பாவத்துக்காக எவ்வளவு துக்கப்பட்டு அழுதானென்றால், அவனுடைய இரெண்டு கண்ணும் அழுத அழுகையால் அவிந்துபோயிற்று.

(Godes Card.)

3. தொண்டையிற் சிக்குண்ட உரோட்டித் துண்டு.—1051ஆம் இங்கிலாண்டில் Edward, the Confessor எட்வர்ட் என்னும் பெயர்கொண்ட புண்யவாளனான ஒரு அரசர் இருந்தார். இவருடைய சகோதரர் ஒரு துஷ்டனால் கொலையுண்ணப்பட்டார். கொலை பாதகன் இன்னானென்று தெரியாவிட்டாலும் காட்வின் என்னும் பிரபுவே இக்கொலையை நடத்தினதாக தேசமெங்கும் ஓர் பிரஸ்தாபம் பிறந்தது.

ஒருநாள் எட்வர்ட் அரசர் பிரபுகளுக்கெல்லாம் ஒரு பெரும் விருந்திட்டார். காட்வின் பிரபுவும் விருந்துக்கு வந்திருந்தார். விருந்தாடுஞ் சமயத்தில் பரிசாரகன் அரசனுக்குப் பானபாத்திரத்தை நிரப்பிக் கொடுத்தபொழுது ஒரு கால் சறுக்கவே மற்றக் காலின் பலத்தால் உறுதியாய் நின்று பானத்தைச் சிந்தாமலே அரசனுக்குக் கொடுத்து "ஒருவனுக்குத் தன் சகோதரனுடைய துணை யிருக்குமட்டும் பயமின்றி இருப்பான்" என்னும் தேவ வாக்கியத்தைக் கூறினான் பரிசாரகன். இந்த வசனத்தை அரசன் கேட்கவே இறந்துபோன தன் சகோதரனுடைய ஞாபகங்கொண்டு விசனத்துடன் காட்வின் பிரபு பக்கமாய்த் திரும்பி, ஆ! என் சகோதரன் சாகாதிருந்தால் இப்போது எனக்கு எவ்வளவோ உதவியாயிருக்கும்!" என்று துக்கத்துடன் சொல்லக் கேட்ட காட்வின் பிரபு, அரசன் தன்மட்டில் சமுசயங்கொண்டு இவ்வாறு பேசினானென்று அறிந்துகொண்டு, "நான் உமது சகோதரனுடைய கொலையில் சேர்ந்திருந்தால் என் வாயிலிருக்கும் உரொட்டித்துண்டு என் கடைசியான போசனமா யிருக்கக்கடவது" என்றான். அக்ஷணமே வாயிலிருந்த உரொட்டித்துண்டு அவன் தொண்டையிலேயே அடைத்துக்கொண்டு மூச்சடைந்து செத்து விழுந்தான்.

(Noel.)

---



GNANAMANI III. PART.

# ஞானமணி 3-ம் பாகம்.

## 16-ம் அதிகாரம்.

### விஷம் அடங்கிய கெட்ட புஸ்தகத்தைக் கொடுத்து உன்னைக் கெடுக்கும் ஸ்திரிகளுக்கு இணங்காதே.

---

மறுநாள் பத்து மணிக்கு ருக்மணி மடத்திற்குப் போய் சற்றுநேரம் தாயாரம்மாளுக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். அதற்குள்ளாக மடத்துத் தாயாரும் தமது வேலையை முடித்துக்கொண்டு ருக்மணி இருந்த இடத்திற்குப் போகவே, ருக்மணி தாயாரம்மாளுக்கு மங்கள வார்த்தை சொல்லி "இந்தாங்க தாயாரே. இதைப் பாருங்கள்" என்று ஒரு காகிதத்தைத் தாயாரம்மாள் கையில் கொடுத்தாள்.

தா.—(அதை வாசித்த பின் சிரித்துக்கொண்டு) நான் சொன்னதெல்லாம் சரிவர எழுதியிருக்கிறாயே ருக்மணி!

ருக்.—ஆமா, தாயாரே, நீங்கள் சொன்னபடி யிதை அப்போதைக்கப்போது பார்த்துவந்தால் வெகு பிரயோசனம் உண்டாகுமென்று நினைக்கிறேன்.

தா.—உன் காகிதத்தைப் பார்க்கும்போது மடத்தில் கன்னியாஸ்திரிகளுக்குள் வழங்கும் ஒரு வழக்கம் என் ஞாபகத்திற்கு வருகிறது!

ருக்.—அதென்ன வழக்கம் தாயாரே?

தா.—நாங்கள் வருஷத்தில் இருமுறை ஒடுக்கஞ் செய்வது வழக்கம். அந்தக் காலத்தில் நாங்கள் சிற்சில பிரதிக்கினைகளைச் செய்வதுண்டு. சில துர்க்குணங்களைத் தள்ளவும், புண்ணியங்களைச் செய்யவும் மனதில் தீர்மானித்துக்கொண்டு அவைகளை ஒரு காகிதத்தில் குறித்து வைத்துக்கொள்வது வழக்கம். மாதத் துவக்கத்தில் முதல் ஞாயிற்றுக்கிழமை யன்று மனிதருடைய அந்தியத்தைப்பற்றித் தியானிக்கையில் முன் செய்துகொண்ட பிரதிக்கினைகள் அடங்கிய காகிதத்தை வாசித்துப் பார்த்து, அதில் கண்டிருப்பதுபோல் ஒழுகினேமோ இல்லையோ வென்று பரிசோதித்துப் பார்ப்பதுண்டு. அப்படித் தவறி நடந்திருந்தால், மறு மாதத்தில் அதன்படி நடக்க முயலுவது வழக்கம்.

ருக்.—இதுவும் அப்பேர்ப்பட்டதென்னலாம் தாயாரே.

தா.—ஆமா! ஆனால் மாதமாதம் இதை வாசிக்க உனக்குச் சமயம் இருக்குமோ என்னமோ! ஆனபோதிலும் வருஷத்தில் ஒருமுறை அல்லது இருமுறை இதை வாசிக்க மறக்கவேண்டாம். (என்று சொல்லி அந்தக் கடுதாசியை அவள் கையில் கொடுத்தாள்.)

இல்லற வாழ்க்கையில் நீ முக்கியமாய்க் கவனித்து நடந்துகொள்ள வேண்டியவைகளைப்பற்றி சுருக்கமாய்த் தெரிவித்திருக்கிறேன். ஆனால் வீண் காலக்ஷேபத்தைப் பற்றிச் சொன்னேனோ என்னமோ! காலக்ஷேபமாவது, காலத்தை வீணில் செலவழிப்பதென்று அருத்தம். முன் நான் உனக்குச் சொன்னதுபோல, உனக்கு வீட்டில் அதிக வேலையிராது. எல்லா வேலைக்கும் ஆட்கள் இருப்பார்கள். நீ பூசைக்குப்போய் வீட்டுக்கு வந்து, உன் புருஷனுக்குக் காலைப் போசனம் தயார்செய்து கொடுத்தபின் அவர் தன் வேலையின்நிமித்தம் வெளியே போய்விடுவார். அப்போது நீ மத்தியான போசனத்திற்கு வேண்டிய சாமான்களை வாங்கி வரும்படி வேலைக்காரருக்கு உத்தரவு கொடுத்து, கொண்டுவரப்பட்டவைகள் நல்லவைகள் தானோ வென்று பார்த்து, இன்னின்ன சமையல் செய்யவேண்டியதென்று உத்தரவு கொடுத்து, அப்போதைக்கப்போது சமையல் வீட்டுக்குப்போய் கண்காணித்து, நீயும் உன்னால் கூடிய வேலையைச் செய்யவேண்டியது.

மத்தியானத்தில் உன் கணவனுக்குப் போசனம் விசாரித்த பின், அவர் வீட்டில் வெகு நேரம் தங்கமாட்டார். சிலவிசை மத்தியான போசனத்திற்கும் வீட்டுக்கு வர அவருக்குச் சாத்தியப்படா தாகையால், அவர் இருக்கும் இடத்திற்கே போசனம் அனுப்பவேண்டியதாய் நேரிடும். ஆகையால் மத்தியானத்தில் வேலையற்ற நேரம் அதிகமாய் இருப்பதைப்பற்றி, அதையெப்படி செலவு செய்வதென்று உனக்குத் தோன்றாது. பல பெண்டுகள் அதை வீணில் செலவு செய்வார்கள். சிலர் வீண் பேச்சிலும் அவதூறான சம்பாஷணையிலும் கழிப்பார்கள்,

வேறு சிலர் தாயம், சொக்கட்டான் ஆடுவதிலும், சீட்டு (பச்சேஸ்) விளையாடுவதிலும் அக்காலத்தைப் போக்குவார்கள். இன்னும் வாசிக்கத் தெரிந்தவர்கள் கெட்ட புத்தகங்களை வாசிப்பதில் சலிப்புகொள்ளாமல் வாசிப்பார்கள். இந்த மூன்று விதமாய் உனக்குள்ள காலப்போக்கை செலவழிப்பதில் நீ வெகு எச்சரிக்கையா யிருக்கவேண்டும்.

முதலாவது: வீண் பேச்சு, அவதூறு இவைகளைப் பற்றி உனக்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

ருக்.—ஆம், தாயாரே, அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள்.

தா.—இரண்டாவது, தாயம், சொக்கட்டான், காகிதம் முதலியவைகள் ஆடுவதைப்பற்றி உனக்குச் சில வார்த்தைகள் சொல்லுவது அவசியம். சில பெண் பிள்ளைகள், விசேஷமாக, வாலிப ஸ்திரீகள் தங்கள் புருஷன்மார் மத்தியான சாப்பாடு சாப்பிட்டு விட்டு வேலைக்குப் போனபின், தங்கள் வீட்டிலாவது அண்டை வீட்டிலாவது உட்கார்ந்து தாயம், சொக்கட்டான் முதலிய ஆட்டங்கள் ஆடுவார்கள். இதில் நேரம் போவது இவர்களுக்குத் தெரியாது. குழந்தைகள் பாலுக்குக் கதறி அலறினபோதிலும் எழுந்திருக்கமாட்டார்கள். அழுகைச் சத்தத்தை பொறுக்க மாட்டாதவர்களாய், தொட்டிலில் கிடக்கும் குழந்தையைக் கோபவெறியுடன் உதாசன வார்த்தைகளைச் சொல்லி, அழாமலிருக்கும்படி அதை அதட்டுவார்கள். அப்படியும் அழுகை அமராவிட்டால், எழுந்து சற்றுநேரம் பர்ல் கொடுத்தபின் தொட்டிலில் போட்டு விட்டு விளையாட்டில் உட்காருவார்கள். விளையாட்டில் தோர்வை அடைந்தவளுக்கு ஆக்ரோஷம் பெருகி, இன்னொரு ஆட்டம் என்பாள். செலித்தவள் நல்லது, அப்படியே ஆகட்டும் என்று சொல்ல, உற்சாகத்துடன் ஆடுவார்கள். மணி நாலாயிற்று; 5, 6 ஆயிற்று. கடைசியாய் வலுகட்டாயத்துடன் எழுந்து, ஆத்திரம் ஆத்திரமாய்ச் சமையலுக்கு முஸ்திப்புச் செய்வார்கள். அவசர அவசரமாய்ச் சமையல்செய்வதைப் பற்றிக் குழம்பில் உப்பு, புளி சரியா யிருக்கிறதாவென்றுகூட பார்க்கமாட்டார்கள். வெந்தும் வேகாததுமாய்த் தயார்செய்த சாப்பாட்டைப் புசிக்க உட்கார்ந்த தங்களுடைய புருஷருக்குப் பரிமாறுவாள். பதார்த்தங்கள் சுவையாயில்லாததைப்பற்றிப் புருஷன் கோபிக்க, பெண்சாதியானவள் பதில் சொல்ல, 'இருவருக்கும் வாய்ச்சடுத்த முண்டாகிப் பிறகு அடி பிடி அழுகையாய் முடியும்.

ருக்.—சம்பா, சொக்கட்டான் விளையாடக்கூடாதோ தாயாரே?

தா.—தகுந்த சிநேகிதருடன் கொஞ்சநேரம் ஆடலாம். ஆனால் தன் கடமை வேலையைக் கவனியாமல் நாளெல்லாம் அதில் காலத்தைக் கழிப்பது சரியல்ல.

மூன்றாவது: வாசிக்கத்தெரிந்த பெண்கள் மத்தியான போசனம் அருந்தினபின், புஸ்தகங்களை கையில் வைத்துக்கொண்டு வாசிப்பதில் நாளைப் போக்குவார்கள். அவை யெப்பேர்ப்பட்ட புஸ்தகங்கள்? நாணமுள்ள ஸ்திரீ பூமான்கள் வாசிக்கத்தகாத புஸ்தகங்கள் அவர்கள் கையில் ஏதேஷ்டமா யிருக்கும். இக்காலத்தில் கால் அணு, அரையணுவுக்குங்கூட இப்பேர்ப்பட்ட கழிசடையான புஸ்தகங்கள் விற்கப்படுவதால், அவற்றை வாங்கிச் சலியாமல் வாசிப்பார்கள். ஞான புஸ்தகங்கள் மீது அவர்களுக்குப் பிரியமுண்டாகாமல் அப்பேர்ப்பட்ட புஸ்தகங்களின் பாஷையும், நடையும் நன்றாயில்லை யென்பார்கள். அதில் உப்பு சப்பு இல்லை யென்பார்கள். ருசியற்ற அந்தப் புஸ்தகங்கள் கன்னியாஸ்திரிகளுக்கே அன்றி தங்களுக்காக எழுதப்பட்டவையல்ல என்பார்கள். அவைகளை வாசிப்பதில் தங்களுக்குப் பிரியமில்லை யென்பார்கள். விபசாரத்தைப் பற்றியும் கொலைகளைவைப் பற்றியும் ஒழுங்கற்ற ஸ்நேகம், சிற்றின்பம் காமம் உண்டாகும்படி எழுதப்பட்ட கட்டுக்கதைகளை இளைப்புச் சலிப்பின்றி வாசிப்பார்கள். கதையில் சொல்லப்பட்ட கெட்ட ஸ்திரீகளின் நடவடிக்கையைப் பின்பற்றப் பார்ப்பார்கள். புஸ்தகத்தில் கண்டிருந்தபடி தங்கள் மாமியார் பேரிலும் புருஷாள் பேரிலுங் குறை பிடிப்பார்கள். அவர்களுக்குக் கீழ்ப்படியாமல் முரட்டுத்தனம் காட்டுவார்கள். "என் புருஷன் இப்படி நடக்கிறான்; நான் அப்படி நடப்பேன்" என்று தங்கள் இருவருக்குமிருக்கவேண்டிய பிரமாணிக்கத்தை யிழப்பார்கள். ஒரே வார்த்தையில், கெட்டபுஸ்தகங்களை வாசிப்பதால் இப்பேர்ப்பட்ட பெண்களின் குணம் மாறி வேறுபடும். இவ்வாறான கெட்ட கதைப் புஸ்தகங்களை வாசித்துத் தாங்கள் கெடுவதுடன், வாசிக்கத்தெரியாத மற்றப்



பெரியவர்களும் சிறியவர்களுமான பெண்களுக்கு அவைகளைத் தெரியப்படுத்தி அவர்களையும் கெடுப்பார்கள்.

ஆகையால் ருக்மணி, இந்த விஷயத்தில் நீ மகா எச்சரிக்கையா யிருக்கவேண்டும். நீ தனியே இருக்கும்படி நேரிடுவதாலும் பலகுணமும் நடத்தையுமுள்ள ஸ்திரீகளுடன் நீ வசிக்க இருப்பதைப்பற்றியும் விஷம் அடங்கிய கெட்ட புஸ்தகத்தைத் கொடுத்து உன்னைக் கெடுக்கும் ஸ்திரீகளுக்கு இணங்காதே.

நான் அறிந்தமட்டும், துஷ்டத்தனத்தைப் படிப்பிக்கும் கதையை வாசிக்கிற பெண்கள் தங்கள் கணவன்மாருக்கு அடங்காத படியால், அவர்கள் வீடு போர்க்களமாயிருக்கும். "நீ யார்? அவளார்?" என்று வெட்க நாணமின்றி வீதிச் சண்டைக்கு நிற்பார்கள் அந்த வெட்கங்கெட்ட பெண் பிள்ளைகள்! சிறுபந்துவக்கி அடக்க வொடுக்கமும் மேரை மரியாதையுமாய் நடந்த பெண்கள் விஷம் நிறைந்த பாத்திரமாகிய கெட்ட கதைகளை வாசித்து, அதை உட்கொண்ட பின், அவர்களுடைய தங்கமான குணமும் உத்தமமான நடத்தையும் கதையில் சொல்லப்பட்ட துஷ்ட பெண்டுகளின் துற்குணமாகவும் துர்மார்க்க நடத்தையாகவும் மாறிப்போம்.

கெட்ட புஸ்தகங்கள் வாசிப்பதற்கு முன், இந்த ஸ்திரீகள் ஞாயிறு வாரத்தில் பூசைக்குப் போக தவறமாட்டார்கள். வெற்று நாட்களிலும் பூசை தவறுவது அரிது. அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்து நன்மை வாங்குவார்கள். பக்திக்குரிய பல சபைகளில் பெயர்கொடுத்து அவ்வொழுங்கின்படி நடப்பார்கள். தன் புருஷன் மாமியார்முதலிய பெரியோருக்குச் சங்கைசெய்து அமைந்து நடப்பாரர்கள்.

கெட்ட புத்தகங்களையும் நாவல்களையும் வாசிக்கத் தொடங்கவே, மேற்கூறிய சற்குணமும் நன்னடத்தையுமாறி, ஞாயிற்றுக் கிழமைகளில் அரிதாய்ப் பூசைகண்டு வருவார்கள். செத்தால் கல்லறை கிடைக்காதென்கிற எண்ணத்துடன் வருஷத்தில் ஒருவிசை பாவ சங்கீர்த்தனம் செய்து நன்மை வாங்குவதும் இவர்களுக்குக் கசப்பாயிருக்கும். அப்பேர்ப்பட்டவர்கள் மாமியாரைத் திட்டி பங்கப் படுத்தவும், சமயம் நேரிடும்போது அவளுடைய மயிரை யெட்டிப்பிடிக்கவும் அஞ்சமாட்டார்கள். தங்கள் புருஷரைத் தங்கள் கணவனென்றும் எஜமானென்றும் மதியாமல் அவமரியாதையாய்ப் பேசுவார்கள். அவர்களுக்குரிய சங்கை வணக்கத்தைக் காட்டமாட்டார்கள். எப்போதும் போராயிருக்கும் அப்பேர்பட்டவர்களின் வீட்டில். தன் பிள்ளைகளின்மட்டிலுள்ள பக்ஷபாசமும் அற்றுப்போம். இந்தக் கேடெல்லாம் அவலக்ஷணத்துக்குரிய அந்தக் கெட்ட புஸ்தகங்களை வாசித்ததால் வந்ததென்பதற்குச் சந்தேகமில்லை.

தங்கள் சொந்த வீட்டின் வண்டாவளம் இப்படியிருக்க, அண்டை வீட்டுக்காரிகளுடன் இப்பேர்ப்பட்ட ஸ்திரீகள் சமாதானமா யிருப்பார்களோ? பரிச்சேதம் இருக்கமாட்டார்கள். அற்பசொற்ப காரியத்துக்கு அண்டைவீட்டு அசல் வீட்டுக்காரிகளோடு சடுத்தம், கடுங்கோபம் தலையை மிஞ்சிப்போம். கெட்ட புஸ்தக வாசகத்தால் வந்த இலாபமிதுதான். ஒரே வார்த்தையில் இப்பேர்ப்பட்ட ஸ்திரீகள் தேவனுடைய தயவை இழந்துபோவதுமன்றி, மனிதராலும் பகைக்கப்படுவார்கள். ஆகையால் ருக்மணி நீ ஒருபோதும் கெட்ட புஸ்தகங்களை வாசியாதே.

ருக்.—எந்தக் கதை புஸ்தகத்தையும் வாசிக்கக்கூடாதோ தாயாரே?

தா.—அநேக கதைப்புஸ்தகங்களும் நாவல்களும் அர்ச்சியசிஷ்டவர்களின் சரித்திரங்களும் கிறிஸ்துவர்களால் அச்சிடப்பட்டு மேற்றிராணியாருடைய அனுமதி பெற்றிருக்கின்றன. அவைகளை வாசிப்பதால் தோஷம் ஒன்றுமில்லை.

மேலும் நீ தையலில் கெட்டிக்காரியாச்சே! உனக்குக் காலப்போக்குக்காகப் பீடத்திற்குவேண்டிய வஸ்திரங்களைத் தைக்கலாம். வேலையில்லாத காலத்தில் சட்டை முதலியவைகளைத் தைத்துக் குருசுவாமியார் மூலமாய் ஏழைப் பிள்ளைகளுக்குத் தருமமாகக் கொடுக்கலாம். நேரத்தை வீணில் கழிக்காமல் அதை நல்ல பிரயோகம் பண்ண பிர்யாசைப்படு.

இன்று இவ்வளவு போதும் ருக்மணி; நான் சொன்னவைகளை மனதில் வைத்துக்கொண்டு ஒழுகுவாயாகில், உன் வீடே மோக்ஷமாய்விடும்! எப்போதும் எக்காலத்திலும் நீ சர்வேசுரனுக்கு உகந்தவளாய் நடந்து, அவருக்கு நல்ல ஊழியஞ் செய்வாயானல் சொந்த நாடாகிய மோக்ஷ ராச்சியம் போய்ச் சேரலாம்.

ருக்.—தாயாரே! எனக்கு நீங்கள் இத்தனை நாளாய்ச் சிரத்தையுடன் புத்தி கோசரங்களைப்

போதித்து வந்ததற்கு நான் உங்களுக்கு என்ன கைம்மாறு புரிவேன்?

*தா.*—என் கண்மணியாகிய ருக்மணி! என் தொழிலைச் செய்ததற்குக் கைம்மாறேன்? தெரியாதவர்களுக்குப் புத்தி புகட்டுவது துறவறத்தாராகிய எங்களுடைய வேலையாச்சுதே. ஆனால் ஒரு உபகாரத்தை மாத்திரம் உன்னிடத்தில் விரும்புகிறேன்.

*ருக்.*—அதென்ன தாயாரே?

*தா.*—நான் சொன்ன புத்தி மதிகளை நீ வெகு ஊக்கத்தோடும் ஆவலோடுங் கேட்டாயென்று அறிந்துகொண்டேன். நீ கேட்ட புத்தி பிரகாரம் நடந்தால் அதுவே எனக்குப் பிரதி பலனாகும்.

(இன்னும் வரும்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

### மரியாதை-வாலிபர்-துர்ப்பழக்கங்கள்.

1. நாலுபேருக்கு முன் மூக்கு சிந்துவதும், காறித் துப்புவதும், நகங்களைக் கத்தரிப்பதும் அல்லது பல்லால் கடிப்பதும், சொறிவதும், ஏப்பம், விக்கல், கொட்டாவி, அபானவாயு விடுவதும் ஒழுங்கல்ல.

2. அடிக்கடி கண்ணாடியில் முகத்தைப்பார்ப்பது ஒழுங்கல்ல.

3. ஒருத்தர் ஒன்றைப் பேசிக்கொண்டிருக்கும்போது மறைவிலிருந்து ஒற்றுக்கேட்பது ஒழுங்கல்ல.

4. பிறர் எழுதுவதைப் பின்னால் ஒளிந்துகொண்டு பார்ப்பது ஒழுங்கல்ல.

5. தெருக்களில் சப்தமாய்ப் பேசுவது ஒழுங்கல்ல.

6. நாசித் துவாரங்களில் விரலை விடுவது ஒழுங்கல்ல.

7. கைகுட்டை யில்லா திருப்பது ஒழுங்கல்ல.

8. அந்நியருடைய கடிதங்களையும் கார்டுகளையும் இரகசியமாய்ப் படிப்பது ஒழுங்கல்ல.

9 "ஏ, ஏ, யாரது கதவைத்திற" என்று வாசலண்டையிலிருந்து கூப்பிடுவதும், கதவைப் படார் படார் என்று தட்டுவதும் ஒழுங்கல்ல.

10. கண்ட விடமெல்லாம் ஜலோபாதைக் குட்கார்வது ஒழுங்கல்ல. (இது இந்திய நாட்டின் அநாகரிக வழக்கம்.)

11. சப்தமாய்த் தும்முவதும் இருமுவதும் கனைப்பதும் ஒழுங்கல்ல.

12. எப்போதும் மூக்கிலே கோபம் வைத்திருப்பது ஒழுங்கல்ல. (சிலர் முகத்தில் அன்பும் அருளும் கிடையாது; அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான் என்பது போல் அற்ப சொற்பத்திற்கெல்லாம் ஆக்ரோஷமான கோபம் காட்டி அட்டகாசம் செய்வார்கள். அப்படிக் கோபம் காட்டுவதில் தங்களுக் கேதோ கௌரவம் உண்டென்று நினைப்பாரு முண்டு. கோபம் கொஞ்ச நேரத்துப் பயித்தியம் என்று பெரியோர் சொல்வார்கள். அப்படியானால் பயித்தியக்காரனைப்போல் நடிப்பதிலும் ஒரு கௌரவமோ.)

13. ஒருத்தன் கையை யொருத்தன் பிசைந்துகொண்டு பேசுவது ஒழுங்கல்ல.

14. பெரியவர்கள் ஒன்றைக் கேட்டால் தக்க விடையளிக்காமல், புதுப் பெண்ணைப்போல் சங்கோசப் படுவது ஒழுங்கல்ல.

15. ஆண்பிள்ளைகள் சந்தனம், புனுகு, சவ்வாதை அபரிமிதமாய்ப் பூசிக்கொள்வது ஒழுங்கல்ல.

16. துஷ்ட சகவாசத்திலும் கெட்ட வாலிபர் சங்கத்திலும் சேர்வது ஒழுங்கல்ல.

17. அரும்பு முற்ற முற்ற கூட குறும்பிலும் முற்றுவது ஒழுங்கல்ல.

18. தனக்கு மிஞ்சினவன் யாருமில்லையென்று நினைத்துத் தலையெல்லாம் பேசுவது ஒழுங்கல்ல.

19. நாடகங்களுக்கும் வேடிக்கை விநோதங்களுக்கும் அதிகமாய்ப் போவது ஒழுங்கல்ல.



20. போவார் வருவோரை முறைத்துப் பார்த்துக்கொண்டு நிற்பது ஒழுங்கல்ல.

21. அசுத்த கதைகளை வாசிப்பதும் அசுத்த விஷயங்களைப்பற்றிப் பேசுவதும் ஒழுங்கல்ல.

22. பத்திரிகைகளிலும் துண்டுச்சீட்டுகளிலும் பிறரைத் தூஷிப்பது ஒழுங்கல்ல.

23. பழித்தால் தலையில் பாடு என்பதை மறந்து பிறரைப்பழித்துப் பேசுவது ஒழுங்கல்ல.

24. சங்கீதம் சித்திரம் அல்லது ஏதோ ஒரு வித்தை தனக்குத் தெரிந்திருந்தும் பிறர் கேட்டால் முன் வந்து தன் திறமையைக் காட்டாமல் நான் அறியேன் என்று சலஞ் சாதிப்பது ஒழுங்கல்ல.

25. அசுத்த அங்க சேஷ்டைகளைச் செய்வது ஒழுங்கல்ல. (பரலோக மட்டும் அபயமிடும் பாவங்களில் ஒன்றும், கடவுளால் விசேஷமாய்ச் சபிக்கப்பட்டதும், புத்தியற்ற மிருகங்களுள் முதலாய்க் காணக்கூடாததுமான இத் துர்ப்பழக்கத்தினால் ஆத்துமத்திற்கும் சரீரத்திற்கும் உண்டாகும் கேடுகளைச் சிறு பிள்ளைகள் சற்றேனும் அறியாமல், நல்லவர்களைப்போ லிருக்கும் துஷ்டர்களிடம் அதைக் கற்றுக்கொண்டு, கெட்டு நைந்துபோவது மெத்தவும் பிரலாபத்துக்குரிய காரியம். இதைப்பற்றி யிங்கு அதிகமாய்ப் பேசுவது அவிவேகம். பெற்றோர்கள், ஆண் பெண் பிள்ளைகளை விசாரிக்கும் பொறுப்புள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளுடைய பொது சகவாசம், தனிச் சிநேகம், வாசிக்கும் புஸ்தகம், படுக்கை முதலிய விஷயங்கள் மட்டில் கவனமாயிருந்து, தக்க பருவத்தில் சமயம் பார்த்துக் கண்டித்து, தங்கள் சோதனைகளை ஜெபத்தினாலும் முக்கியமாய்த் தேவத்திரவியாநுமானங்களின் உதவியாலும் ஜெயிக்கும்படி புத்தி சொல்லித் திருத்துவது அவசியம்.)

26. இரவென்றும் பகலென்றும் பாராமல் கழுத்துப் பட்டியில்லாத நாயைப் போல் கண்ட விடமெல்லாம் சுற்றுவது ஒழுங்கல்ல.

27. இரவில் குடும்பத்தோடு படுக்காமல் அந்நிய விடங்களுக்குப் போய் படுப்பது ஒழுங்கல்ல.

28. வெளியில் இரவு தங்குவது ஒழுங்கல்ல.

29. ஆண் பெண்கள் சரச சம்பாஷணைக் கிடங்கொடுப்பது ஒழுங்கல்ல.

30. ஒருவர்க்கொருவர் கடிதமெழுதுவதும், காசு பணம் வெகுமதி வாங்குவதும் ஒழுங்கல்ல.

31. குடிக்கக் கற்றுக்கொள்வது ஒழுங்கல்ல.

(இப்போது குடிப்பழக்கத்தில் மூழ்கியிருப்பவர்களைப் பார்த்து, நீங்கள் குடி துவக்கின தெப்படியென்று கேட்டால், வாலிபத்தில் சகவாச தோஷத்தினால் வெறும் விளையாட்டாய்த் துவக்கினதுதான் என்பார்கள். இப்படி விளையாட்டாய்த் துவக்கினது வினையாய்முடிந்தது. வாலிபர்கள் எச்சரிக்கையா யிருப்பது புத்தி,)

32. பெரியோர்களுக்கு ஒற்றைக்கையால் துலுக்கர்களைப்போல் சலாம் வரிசை வாங்குவது ஒழுங்கல்ல. (பெரியவர்களைக் கண்டால் இரு கரங்கூப்பி நமஸ்காரம் செய்வது நமது நாட்டு நல்ல வழக்கம். இப்படிச் செய்வது தங்களுக்குக் கவுரவ ஈனமென்று இங்கிலீஷ்கற்ற வாலிபர்கள் நினைத்துக்கொண்டு, சலாம் செய்வது-அதுவும் சில சமயம் இடது கையால் செய்வது—நன்றன்று. நல்ல வழக்கங்களை ஸ்திரப்படுத்தி துர்வழக்கங்களை யொழிப்பதே படிப்பின் பயன்.)

33. மனக் கர்வங்கொண்டு யாவரோடும் பேசாமலும் புழங்காமலும் தனக்கு நிகர் யாருமில்லை யென் றெண்ணுவதும் ஒழுங்கல்ல. (இப்படிப்பட்டவர்கள் அகங்காரப் பிண்டங்களாவார்கள்.)

34. எப்போதும் ஒரு தனியிடம் தேடி அங்கு குசுகுசென்று பேசுவது ஒழுங்கல்ல.

35. வாலிபப் பருவம் சீவியத்தின் ஆயத்த காலமென்பதை யெண்ணி கற்கவேண்டியதைக் கற்காமல் சோம்பேறியாயிருப்பது ஒழுங்கல்ல.

36. அடங்காமை, மூர்க்கத்தனம், பிடிவாதம் காட்டுவதும், பெரியவர்களை முறைத்துப் பார்ப்பதும், வாயில் முணவிக்கொள்வதும் ஒழுங்கல்ல. (வாலிபர்கள் கீழ்ப்படிதல் என்னும் தெப்பத்தால்தான் கரையேறக்கூடும்.)

37. தன் பெற்றோர் தயவால் தனக்குக்கொஞ்சம் படிப்பும் அந்தஸ்தும் கிடைத்திருக்க, அவர்கள்மட்டில் வெட்கங்கொள்வது ஒழுங்கல்ல.

38. அக்கியானிகளோடும் பதிதர்களோடும் சகவாசம் செய்து விசுவாசத்தையிழப்பது ஒழுங்கல்ல.

39. பெரியவர்கள் ஆசனத்தில் உட்காரச்சொல்லுமுன் தான் உட்கார்ந்துவிடுவது ஒழுங்கல்ல.

40. பெரியவர்கள் (Shake hand) ஆங்கிலேய வழக்கப்படி கைபிடித்துக் குலுக்க கை நீட்டுமுன் தான் கை நீட்டுவது ஒழுங்கல்ல.

41. கையொப்பமில்லாத அவதூறு கடிதங்கள் எழுதுவது ஒழுங்கல்ல.

42. சூதாடுவது ஒழுங்கல்ல.

43. பெரியோர்முன் சட்டை, சராய், ஜேபுகளில் அவசரமின்றிக் கைபோட்டு நிற்பது ஒழுங்கல்ல.

44. தங்கள் சாமர்த்தியத்தின் மட்டில் அதிக நம்பிக்கைகொள்வது ஒழுங்கல்ல.

45. அநுபவமுள்ள பெரியோர் செய்யும் காரியங்களைப்பற்றி இப்படி அப்படியென்று குறை கூறுவது ஒழுங்கல்ல.

46. உடுப்பில் ஆவலும் ஆங்காரமுங்காட்டி, படிப்பிலும் நன்னடத்தையிலும் பூச்சியமா யிருப்பது ஒழுங்கல்ல.

47. மீசைமேல் அதிகமாய்க் கையாடுவது ஒழுங்கல்ல.

48. பெரியவர்களெல்லாம் மூடர்களென்றெண்ணுவது ஒழுங்கல்ல.

49. பத்தியுடன் நடக்கிறவர்களைப் பரியாசம் செய்வது ஒழுங்கல்ல.

50. ஜெபம் செய்வதும் ஒரு சந்தியிருப்பதும் கிழட்டுப் பிணங்களுக்கும் வேலையற்ற தாசிரிகளுக்கும் அடுத்த அலுவலென் றெண்ணுவது ஒழுங்கல்ல.

51. தன் குடும்பப் பூர்வீகத்தைப் பிறர் இகழ்ந்து பேசும்படியான விதமாய் நடப்பது ஒழுங்கல்ல.

52. தன் சம்பாதனையை முழுதும் பெரியோரிடம் கொடுக்கப் பிணங்குவது ஒழுங்கல்ல.

53. கத்தோலிக்கு வேதத்தின் போதனைகளையும், ஆசார முறைமைகளையும், ஒழுங்கேற்பாடுகளையும் அவைகளுக்குண்டான காரணாதிகளையும் சரியா யறியாமல் அவைகளுக்கு விரோதமாய்க் கன்னாபின்னா என்றுளறுவது ஒழுங்கல்ல.

54 அசுசியான வார்த்தைகளைப் பேசுவது ஒழுங்கல்ல.—(இவைகள் இந்தியாவின் சாபமென்பார் பெரியோர். சிறு பிள்ளைகளும் வாலிபரும் பெரியோர்களும், இப்படிப்பட்ட வார்த்தைகளை யுபயோகிக்கிறவர்களைக் கண்டால், அவர்கள்தான் தாழ்ந்தவர்கள், ஈனர் என்று நினைத்து அவர்களுடைய சகல சகவாசத்தையும் விலக்கவேண்டும். அசுத்த வார்த்தைகளைப் பேசுகிறவர்களும், குடியரும், ஈவிரக்கமில்லாதவரும், மோசக்காரரும், துர்நடத்தையுள்ளவருமே தாழ்ந்தவர், கீழ்குலத்தார், என்று கிறிஸ்துவேதப் பயிற்சி கற்பிக்கின்றது. மற்றப்படி அக்கியானிகள் சொல்வதுபோல ஒருவன் ஏதோ அசந்தர்ப்பத்தினால் ஒரு குலத்தில் பிறந்ததினாலன்று.

55. தனக்குப் பருவமடைந்த பிள்ளைகளும் பேரன் பேத்திமாரு முண்டென்று நாணங்கொண்டு அல்லது வேறு காரணத்தைப்பற்றி கருப்பத்தைச் சிதைப்பது ஒழுங்கல்ல. (இது தேவனுக்கடாத துரோகம். இவ்வழியைக் கையாடும் குடும்பங்கள் ஊர், பேர் தெரியாமல் நாசமடையும். பிச்சையிட்டுக் கெட்டாருமில்லை பிள்ளை பெற்றுக்கெட்டாரு மில்லை யென்பது ஒரு அநுபவ முதுமொழி.)

56. கலியாணம் செய்த வருஷத்திலேயே கருதரித்தால் முதல் வருஷத்தில் மூன்று தலையாகாதென்று கருவைச் சிதைப்பது ஒழுங்கல்ல.

57. ஒருவர் அன்பைக் கவர அவருக்கு மருந்துபோடுவது ஒழுங்கல்ல. (இம் மூட வழக்கத்தினால் திரேகம் மெலிந்து, இல்லாத வியாதிகள் தோன்றி, பயித்தியங்கொண்டு சாவதுண்டு.)

58. சிறுபிள்ளைகளைப் பிச்சைவாங்க அனுப்புவது ஒழுங்கல்ல.

(சில சோம்பேறிகளான மானங்கெட்ட பெற்றோர் தாங்கள் போய் பிச்சை வாங்க நாணி, தங்கள் மக்களைப் பிச்சைக்கனுப்புவதுண்டு. கீழேவிழுந்தாலும் மீசையில் மண் படவில்லை யென்பதுபோல் அப்பிள்ளைகள் பிச்சையென்று கேட்காமல், பொய்யும் புளுகுமாய் ஆரோக்கிய மாதா பொருத்தனை, அந்தோனியார் வேண்டுதலென்று கேட்பார்கள். சிறுவயதிலேயே அப்படி இரந்து தின்னும் அப்பியாசமுள்ள பிள்ளைகள் மானத்தையும், சுயமரியாதையையும் இழந்து நல்ல பிரசைகளாக மாட்டார்கள்.)

(இன்னும் வரும்.)

---

## CORRESPONDENCE

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும், தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக்கோள்வதற்கே. வெளிப்படுத்துவதற்குத் தகுதியற்றனவென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்.]

### மிக்கேல் பாளையம்.

### அர்ச். அந்தோனியார் திருவிழாக் கோண்டாட்டம்.

கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த பவானிதாலூக்கா, அந்தியூரையடுத்து மிக்கேல் பாளையம் என்னும் ஒரு ஊர் இருக்கிறது. இவ்விடம் குடியேறி யிருப்பவர்கள் புதிதாய் ஞானஸ்நானம் பெற்ற குடும்பங்களே. கடந்த 3 வருடகாலமாக திருவிழாச்சிறப்பு கொண்டாடப்படவில்லை.—தற்காலம் புது கிறிஸ்துவர்களாகிய நாங்கள் அர்ச். அந்தோனியார் திருவிழாவை, வெகு மேளை விமரிசையுடனும், பக்தியுடனும் கொண்டாடினோம். இந்த ஜனவரி மாதம் 17ௗ ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு கனம். சங். பானற் சுவாமியாரவர்கள் பாடற்பூசை செய்ய, கனம் மரியானுஸ் சுவாமியாரவர்கள் கேட்பதற்கு ஆநந்தம் கொடுக்கும்படியான பிரசங்கமும் செய்தார். அன்று சாயரட்சை 5-மணிக்கு கனம் மரியானுஸ் சுவாமியாரவர்கள் கால்நடைக் கூட்டங்களை (Cattles) மந்திரித்தார். 6-மணிக்குக் கனம். பானற் சுவாமியாரவர்கள் தேவநற்கருணை ஆசீர்வாதமும் கொடுத்தார். பிறகு இரவு 8-மணிக்கு நகலூர் ஜனங்களும், மிக்கேல் பாளையத்தாரும் புடைசூழ, அலங்கிருதமான தோரணங்களுக் கிடையில் மாதாவுடையவும் அர்ச். அந்தோனியாருடையவும் தேர் சுற்றுப்பிரகாரமானது ஜெபத்துடனும், பாண வேடிக்கையுடனும், மேளவாத்திய கோஷ்டத்துடனும் ஊரைச் சுற்றிவந்து நிலை நிற்க, இவ்விதமாகத் திருவிழா முடிவு பெற்றது.

இவ் ஊரிலிருப்பவர்கள் பொதுப்பட எல்லாரும் செந்தலை வேளாளர்தான். (செந்தலை வேளாளர் என்பது தென்திசை வேளாளர் என்று தெரிந்துகொள்ளவும்.) சுமார் கடந்த 24 வருடங்களுக்கு முந்தி, காலஞ்சென்ற சங். பர்த்தோன் சுவாமியாரவர்களால், இந்த மிக்கேல்பாளையம் கட்டப்பட்டது. இதை யடுத்து $1\frac{1}{2}$-மைல் நீளமும், $\frac{3}{4}$-மைல் அகலமும் கொண்ட இச் சதுரமத்தியுள் அடங்கிய சுமார் 600-ஏக்கரா புஞ்சை பூமி இப்புதுக் கிறிஸ்துவர்களுக்கென்றே தர்க்காசு எடுக்கப்பட்டது. தற்காலம் (மரித்தவர்கள்போக) 25 குடும்பங்கள் மட்டும் நிலைத்திருக்கிறார்கள். இவ்வூரில் ஆரம்பத்தில் நான்கு குடும்பங்களே குடியேறினார்கள். எங்கள் ஜாதியாராகிய செந்தலை வேளாளக் கவுண்டர்கள் சேலஞ் ஜில்லாவிலும், கோயமுத்தூர் ஜில்லாவிலும் மதுரை பழனித் தாலூக்காவிலும் ஏராளமாய் நிறைந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மதத்தில் வைராக்கியமும், மிகுந்த திரவியமு முடையவர்களாகிய அஞ்ஞானிகளே. இவர்களுக்குள் நம்முடைய சத்திய வேதத்தை விரும்பிக் கேட்கும்படியான நல்ல



3 FEB 1915 MADRAS.

மனதுடையவர்களு மிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் இனபாசத்தால் மயங்குகின்றார்கள். இந்த வேளாளர் வேதத்திற்கு வந்து சேருவதோ கஷ்டம். வேதத்தை ஏற்றுக்கொண்டாலோ அதை யுறுதியாய்க் கடை பிடிப்பார்கள். இவர்கள் இன்னமும் கோயமுத்தூர், சின்னப்பள்ளம் முதலிய இடங்களிலும் நமது சத்தியவேதத்தைச் சேர்ந்தவர்களா யிருக்கிறார்கள். மற்றுமுள்ள எங்கள் அஞ்ஞான பந்துக்கள், பேய் வணக்கத்தை விட்டு எம்மைப்போல் மனந்திரும்பி சத்திய வேதத்தை யேற்றுக்கொண்டு அதைச் சுமுத்திரையாய் அநுசரித்து, மோட்சபேறு பெறும்படியான நல்ல மனச் சுதந்தரத்தை சர்வ ஜீவதயாபர சர்வேஸ்பரன் அவர்களுக்குக் கொடுத்தருளும்படியாக, இதை வாசிக்கிற ஒவ்வொருவரும் வேண்டிக்கொள்ள வேணுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

22—1—15 மிக்கேல் பாளையம். } ஷையாரில் ஒருவனாகிய N. தோமாஸ் கவுண்டர்.

---

## பொன்னுநகர்
## 3-வது வருடாந்தர சிறப்பு கொண்டாட்டம்.

சென்னை நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்த பொன்னுநகர் பிரஜானுகூல சங்கத்தார், மேற்படி நகரில் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிராநின்ற அர்ச். அந்தோனியார் ஜெபக்கூடத்தில், நிகழும் 1915-ஆம் ஜனவரிமீ 1ஆ யன்று, மாலை 4-மணிக்கு சங்கைக்குரிய J. Baker, S. S. J. சுவாமியார் அவர்கள் அக்கிராசனம் வகிக்க, சிறப்பு கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் ஷை சங்கத்தின் காரியதரிசி அவர்களால் வருடாந்தர அபிவிர்த்தி பத்திரம் வாசிக்கப்பட்டது. 2-வது ம-ா-ா-ஸ்ரீ, மரி. லா. சந்தியாகு என்பவரால் விருத்த சேதனத்தின் வியாக்கியானம் விளக்கப்பட்டது. 3-வது ம-ா-ா-ஸ்ரீ, களத்தூர் முனுசாமி பிள்ளை அவர்களால் கல்வியென்ற விஷயம் கல்வி சாதுரியத்தோடும், உபமான உபமேயத்துடனும் பிரசங்கிக்கப்பட்டது. 4-வது ம-ா-ா-ஸ்ரீ, சுவக்கீன் தேவராஜ் என்பவர்களால் "மனுஷாவதாரஞ் செய்தவர் யார்? ஏன் மனுஷ அவதாரஞ் செய்தார்?" என்ற விஷயங்கள் சங்கீத காலக்ஷேபமாய் படித்தும், நடித்தும், காட்டியது கண்டோர், கேட்டோர் யாவரும் கரக்கம்பம் சிரக்கம்பம்செய்ததே ஒவ்வொருவருக்கும் அளவிலா ஆனந்தத்தை உண்டாக்கிய தென்பதற்கு ஐயமில்லை. 5-வது சிறுமிகளால் கும்மி, கோலாட்டம் பஞ்ச கருவிகளோடு பார்ப்பவர் மனம் பாகாய் உருகும்படி பாடியும், ஆடியும் விளைவித்த பேரானந்தமானது அவண் உற்றிருந்த அனைவருக்கும் இன்பத்தை யூட்டி, சஞ்சலத்தை வாட்டி, பழைய வருஷத் துன்பத்தை ஓட்டி புது வருஷத்து இன்பத்தை நிலை நாட்டியது என்றால் அச்சிறார்களது களிபெரும் விளையாட்டின் பெருமையை உரைத்தற்பாலதோ!

சிறார்களுக்கு சிரமமெடுத்து பயிற்றுவித்த ம-ா-ா-ஸ்ரீ, சுவக்கீன் தேவராஜ் அவர்கள் பெரும் புகழ்ச்சிக்கு அருகரென்பதை அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டியதே!

கடைசியாய் தாலாட்டு என்னும் பாடல் ம-ா-ா-ஸ்ரீ, தக்ஷணாமூர்த்தி அவர்களால் அதி நயத்துடன் அரங்கேற்றஞ் செய்யப்பட்டு, அவரவர் அன்புக்குத் தக்கவாறு ஆர்வமொழிகளுடன் ஆரஞ் சூட்டப்பெற்று, கரகோஷ்டம் கடலொலிபோல் ஒலிக்கக் கொண்டாட்டம் முடிவுபெற்றது.

இப்படிக்கு,

கண்டுகளித்தோன்.

---

## "தேதி அட்டவணைக்காரர் கோளாறு."

மகாகனம் பொருந்திய நல்லாயன் பத்திராதிபரவர்கட்கு.

ஐயா,

நாளது ஜனவரிமாதம் 23-ம் தேதி பிரசுரமான "சத்தியவேத பாதுகாவல"னில் "தேதி அட்டவணைக்காரர் கோளாறு" என்ற மகுடம் புனைந்த குறிப்பு ஒன்றைப் பார்வையிட்டேன். நான் எனது வர்த்தகத்தை விளம்பரப்படுத்த காலண்டரை பிரசுரித்தேனாயினும், அதில் சொல்லியிருப்பது போல அஞ்ஞானிகளுடையவும் மகம்மதியருடையவும் திருநாட்களோடு நமது சத்திய வேதப்பண்டிகை தினங்களையும் குறித்திருப்பதானது, ஷை பத்திரிகையின் பத்திராதிபரவர்கள் எண்ணிக்கொண்டதுபோல், மெய்யான சர்வேசுரனையும் அர்ச்சியசிஷ்டவர்களையும், பொய்த்தெய்வங்களோடும் மகம்மது முதலிய நபிகளோடும் ஒரே படியில் அல்லது ஒரே அந்தஸ்தில் வைத்ததுபோலாகு மென்றாவது, அல்லது அவர்களை ஒரே வரிசையில் வைக்க வேண்டுமெனக் கருதியாவது செய்ததல்ல. அவரெண்ணத்துக்குமாறாக, என்னிடத்தில் வியாபாரஞ்செய்யும் இரண்டாயிரத்துக் கதிகமான அஞ்ஞானிகள் நான் பிரசுரித்த இந்த காலண்டரைப் பார்த்து, அதில் கண்டிருக்கும் சத்திய வேதப் பண்டிகைகளின்மேல் கவனஞ் செலுத்தி, கிறிஸ்தவருள்ளும் அனேகமான பண்டிகைகளிருக்கின்றனவே, நாமும் அவற்றைப் போய்ப் பார்ப்போம், அவற்றின் விசேஷங்களை அறியவேணும் என்ற எண்ணங்கள் அவர்களிருதயத்தில் பிறக்கச் செய்யவும், சர்வேசுரனுடைய கிருபையினால் ஒரு நாள் அவர்களும் சத்தியமறையில் வந்து சேரவும் இப்பண்டிகைகள் ஒரு தூண்டுகோலாய் உதவாதா வென்னும் நோக்கமும் ஆவலும் எனக்கு இவ்விதம் அச்சிட ஒரு காரணமா யிருந்தது. மகம்மதியர் காலண்டர்களில் இந்துக்களின் தேர் திருநாள் முதலிய உற்சவங்களையும், ஆள்வார் நச்சேத்திரங்களையும் குறித்திருப்பதானது அந்த மகம்மதியர் தங்களுடைய மதத்தையும் இந்துக்களுடைய மதத்தையும் சமரசப்படுத்த வென்றாவது, அல்லது இரண்டும் ஒன்றுதான் என்று அவர்கள் ஒப்புக்கொண்டார்களென்று காட்டவாவது உதவுமா? எந்தப் பஞ்சாங்கத்தில் எந்தக் கவர்ண்மென்ற் கஜற்றில் சகலருடையவும் விசேஷித்த நாட்கள் குறிக்கப்படவில்லை. ஏன் இந்துக்கள், மகம்மதியர் முதலானோர் படிக்கும் கத்தோலிக்குப் பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும் ஷை மகம்மது, இந்து பண்டிகைகளை விடுமுறை நாளாக அனுசரிக்கிறார்கள்? நம்முடைய சத்திய வேதப் பண்டிகைகளையும் அவர்களுடைய பண்டிகைகளையும் சமரசப்படுத்தவா? இல்லை யென்றால் நான் பிரசுரித்த பஞ்சாங்க அட்டவணையில் நம்முடைய பரிசுத்த வேதத்துக்கு விரோதமாயுள்ள கோளாறு என்ன? ஆயினும் ஓர் கத்தோலிக்குப் பத்திராதிபரால் இவ்விதக் குற்றஞ் சாட்டப்பட்டதின் நிமித்தம் ஓர்வேளை நான் இதனால் அபராதியானேனோ என்னவோ வென்று என்னைக் கலவரப்படுத்திக்கொண்டு, இதன் விஷயமாய் என்னுடைய விசாரணைக் குருவானவர், ஆத்துமகுரு முதலான சில குருக்களை வினவியதில், ஷை பிரசுரிப்பினால் யாதொரு அற்பக் குற்றமும் என்னை யணுகாதென்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். எனக்குள்ள மனக்கலக்கமும் ஒழிந்தது. ஆகவே, நான் பிரசுரித்த பஞ்சாங்கம் விரோதமானதல்ல வென்றும், நம்முடைய சத்தியமறையின் பூச்சியத்தைக் குறைக்க ஏதுவானதல்லவென்றும் அனைவரும் அறிந்து கொள்வதோடு கூட, மேற்கண்ட என்னுடைய நல்ல எண்ணம் நிறைவேறுமாறு எல்லோரும் வேண்டிக்கொள்ளவும் கேட்டுக்கொள்ளுகிறேன். சென்ற 1914-ம் வருஷத்திலும் இம்மாதிரியான தேதி அட்டவணையைப் பிரசுரித்திருக்கிறேனென்றும் அறியவும்.

இப்படிக்கு

27-1-15. T. M. MANICKAM PILLAY,
No. 2 & 59, Bunder Street, Madras.





MADRAS.

---

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாச்சாரம்.

ஒரு நூதனமான பிரசவம்.—அழகாபுரி நகரில் ஒரு ஸ்திரீக்கு ஓரே தடவையில் 3 ஆண் குழந்தைகள் பிறந்தனவாம். இது ஒரு அதிசயமல்ல. சில நாள்களுக்கு முன்பு ஓரே பிரசவத்தில் 5 குழந்தைகள் பிறந்ததாக கேள்வியுற்றிருக்கிறோம்.

ஜலத்துக்குள் ஒருமாதம்.—மிஸ்டர் எடிசன் என்பவர் ஒருமாத காலம் வரையில் ஜலத்துக்குள் இருக்கக்கூடிய சப்மரைன் செய்யக்கூடுமென்றும், நல்ல காற்றுக்கு மீன்கள் மூக்குவழியாக பிராணவாயுவைச் சேகரிப்பதுபோல சேகரித்துக்கொள்ள ஒரு யந்திரமும் கண்டுபிடித்திருக்கிறாராம்.

விருத்தாப்பியரான தகப்பனும் பிள்ளையும்:—வட திருவாங்கூர் வைக்கத்தையடுத்த பூந்தோட்டத்தில் 114 வயது சென்ற ஒருவன் இருக்கிறான். அவன் இத்தனை வயதாகியும் பரிபூரண சௌக்யத்துட னிருக்கிறானாம். அவனது மூத்த பிள்ளைக்கு 80 வயதாகின்றது.

இந்தியா இங்கிலாந்துக்குப் பட்டிருக்குங் கடன்.—இப்போது இந்தியா தேசம் இங்கிலாந்து தேசத்திற்கு கொடுக்கவேண்

டிய கடனின் தொகை 27 கோடியே 40 லக்ஷம் ரூபாய். அதற்காக வருஷந்தோறும் கொடுக்கவேண்டிய வட்டி ஒரு கோடியே 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஆகிறதென்று சொல்லப்படுகிறது.

**2,400 பவுன் பெறுமான பெட்டைக் கோழி.**—அமெரிக்கா தேசத்தைச் சேர்ந்த பிலடெல்பியா வென்னும் ஓர் நகரத்தில் சிறந்த கோழிக்காட்சி ஒன்று நடந்ததில், ஒரு கனவான் ஒரு பெட்டைக்கோழியை 2,400 பவுனுக்கு வாங்கினாராம். அந்தக் கோழி பஞ்ச வர்ணமும் மனோகரமான குரலோசையும் அழகான நடையு முள்ளதாம். அதின் முட்டை ஒன்று 5 பவுன் விலை.

**லண்டனுக்கும் இந்தியாவுக்கும் இருப்புப்பாதை.**—இப்போது லண்டனிலிருந்து இந்தியாவிற்கு வர ஒரு இருப்புப்பாதை போட உத்தேசித்திருக்கிறதாய்த் தெரியவருகிறது. இது காஸ்பியன் கடற்கரையிலுள்ள பேக்கலி லிருந்து ஆரம்பித்து பலுசிஸ்தானத்திலுள்ள துஸ்கிப் பட்டணத்துக்குவந்து முடிவு பெறும். அவ்விடமிருந்து இந்திய இருப்புப்பாதை இணைக்கப்படுமாம். இவ்விருப்புப்பாதை வழியாய் வருபவர் 8 நாளில், 40 பவுன் பிரயாணச் செலவில் வரலாமெனத் தெரியவருகிறது.

**பம்பாயில் ஒரு புதையல்.**—பம்பாயின் நகரச் சீர்திருத்தச் சங்கத்தாரால் சுவாதீனம் செய்து கொள்ளப்பட்ட ஒரு வீடு இடிக்கப்பட்டு, அவைகளை பூமி மட்டமாகச் செய்து கிளறிக்கொண் டிருந்தபோது, வெள்ளி நாணயங்கள் நிறைந்த ஒரு பாத்திரம் அங்கு வேலை செய்துகொண்டிருந்த கூலியாட்களுக்குத் தென்பட்டது. அப்பாத்திரத்தில் ஆறு ரக்ஷாபந்தனங்களும், சில பண்டைகாலத்து நாணயங்களும் சிற்சில ஆபரணங்களும், அத்துடன் கவசத்துண்டுகள் சிலவும் அடங்கியிருந்தன.

**நூறு வயசுள்ளவர்களின் தொகை.**—ஜெர்மெனியி லெடுத்திருக்கும் கணிதப் பிரகாரம், ஐரோப்பாக் கண்டத்தில், அடியிற் குறிப்பிட்டவாறு 6,760 பேர் நூறு வயதுடையவர்களாக விருக்கின்றனர். டென்மார்க் 2, பெல்ஜியம் 5, ஸ்வீடன் 10, நாற்வே 23, ஜர்மனி 76, ருஷியா 89, கிரேட் பிரிட்டன் 92, ஆஸ்டிரியோ ஹங்கேரியின் 410, செர்வியா 573, ரோமேனியா 1074, பல்கேரியா 3883. இந்த யுத்தகாலத்தில் இவர்கள் எல்லோரும் உயிரோடிருக்கிறார்களோ மறுலோகஞ் சென்றார்களோ!!

**ஒருவனுடைய விடா முயற்சி.**—பர்ஜஸ் என்பவன், இங்கிலாந்துக்கும் பிராஞ்சுக்கும் மத்தியிலுள்ள 30 மைல் விஸ்தீரணமுள்ள சமுத்திரத்தை நீந்தினான். எத்தனையோ நூற்றுக்கணக்கான நீச்சல்காரர்கள் சென்ற 36 வருஷங்களாக பிரயத்தனப்பட்டும் சாதிக்க முடியாத விஷயத்தை பர்ஜஸ் சாதித்தான். சென்ற 7 வருஷங்களாக பர்ஜஸ் என்பவன் 15 தடவை பிரயத்தனப்பட்டு முடியாமற்போயும், விடா முயற்சியினால் 16-வது தடவையாக கடைசியில் இந்த 30 மைல் தூரத்தையும் நீந்திக் கரையேறித் திரும்பினான்.

**பிரான்சு தேசத்தின் யுத்த சட்டம்.**—பிரன்சு தேசத்தில் ஆண்மக்கள் யாவரும் மூன்று வருஷ காலம் சேனையிற் சேர்ந்து, போர் தொழில் கற்றுக்கொள்ள வேண்டுமாம். விதவையா யிருப்பவளுக்கு ஒரே பிள்ளை யிருப்பானாயின், அவன் ஒருவருஷ காலம் சேனையிற் சேர்ந்து போர் தொழில் கற்றுக்கொள்ள வேண்டுமாம். இவ்வாறு ஆண்மக்கள் யாவரும் போர்த் தொழில் கற்றுக்கொள்ள வேண்டுமென்று சட்டமிருப்பதால் அங்கு சேனை குறைவில்லாதிருக்கின்றது. இவ்வாறுச் சட்டம் பிரிட்டிஷ் ராஜாங்கத்திலும் பொதுவாக இருக்குமாயின், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிற்குக் கோடி கணக்கான சேனை யேற்படும்.

**வேவுகாரரான ஜேர்மன் ஸ்திரீகள்.**—ஜெர்மன் ஸ்திரீகள் மூவர் சண்டையாரம்பித்தகாலமுதல் பிராஞ்சுச் சேனையில் பிரவேசித்து, சாமர்த்தியமாக உளவுத் தொழில் செய்துவந்தனர். அவர்கள் பிராஞ்சுப் பீரங்கிப் படைக்காரர்களைத் தங்கள் இனத்தவர்களுக்குக் காட்டிக் கொடுத்ததுடன் யுத்தகளத்தில் இறந்து விழுந்தவர்களிடமுள்ள பொருள்களையும் கவர்ந்து



வந்தனர். பிராஞ்சுத் துருப்புகளிருக்கும் இடங்களை இருட்டு லாந்தர்களால் குறிப்பிட்டுக் காட்டியும் வந்தனர். இவர்களைக் கடைசியாக அதிகாரிகள் கண்டுபிடித்துவிட்டனர். மேற்படி மூன்று ஸ்திரீகளும் பீரங்கி வாயில் வைக்கப்பட்டனரென்று தெரிகின்றது.

**சமாச்சாரப் பத்திரிகைகள்.**-ஜப்பான் தேசத்தில் நாகரிகம் அதிகரித்தது முதல், அநேக வர்த்தமான பத்திரிகைகளை பிரசுரிக்கிறார்கள். 1852-ம் வருஷம் முதல் பிரசுரிக்கப்பட்டு வருஷந்தோறும் அதிகரித்துவந்து, 4000 வர்த்தமானப் பத்திரிகைகள். இப்போது பிரசுரிக்கப்படுகின்றன. ஜப்பான் தேசத்தார் பத்திரிகைகளைப் படிப்பதில் அதிபிரீதி யுடையவர்களா யிருக்கிறார்கள். டோகியோ நகரில் மட்டும் 12 பேபர்கள் வெளியாவதில் மிக பிரக்கியாதி பெற்றது டிதிஸ்கிம்போ. மேற்படி பத்திரிகைக்கு நான்கு லக்ஷம் சந்தாதாரர்க ளிருக்கிறார்கள். நம் நாட்டில் பத்திரி காபிமானம் இதர மதத்தினருள் இருக்கிறதேயன்றி நம் கத்தோலிக்கருக்குள் காணேம். அத்திபூத்தாப்போல் எங்கேயோ இரண்டொரு கத்தோலிக்குப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டபோதிலும் எத்தனை பெயர் அவைகளை வாங்கி வாசிப்பவர்கள்.

**மைலாப்பூர் மேற்றிராசனக் கோவிலில் திருட்டு**—சமீபத்தில் ஷை ஆலயத்தின் ஜன்னல் ஒன்றை சில படுபாவிகள் உடைத்து, அதன் வழியாய் உட்சென்று தேவநற்கருணை பெட்டியையு முடைத்து சற்பிரசாத மடங்கிய இரண்டு பாத்திரங்களையும் சற்பிரசாதத்தோடு கொள்ளை படிக்கொண்டு போய்விட்டார்களென கேள்வியுற்று மிக்க விசனிக்கிறோம். மனுக்குலத்தின் மட்டிலுள்ள அளவறுக்கப்படாத அன்பின் நிமித்தமே தேவநற்கருணையில் எழுந்தருளி யிருக்கும் நந்திவ்ய இரட்சகருக்கு இத்துஷ்டரால் செய்யப்பட்ட நிந்தை அவமானம் சகல கிறிஸ்துவர்களுக்கும் மகா கஸ்தியை உண்டாக்குமென்பதற்கையமில்லை. ஆகவே, நாம் எல்லோரும் நம்முடைய கர்த்தருக்கு ஆறுதல் வருவிக்கும்படி யாதொரு புண்ணியக் கிருத்தியத்தைச் செய்து அவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

**சென்னை அதிமேற்றிராணியார்**—மிகவும் வந்திக்கத்தக்க எமது அதிமேற்றிராணியாராகிய அருளப்ப ஆலன் ஆண்டவரவர்கள் ஐரோப்பாவிலிருந்து சென்ற மாதம் 29உ வெள்ளிக்கிழமை சௌக்கியமாய்த் தமது இருப்பிடம் வந்து சேர்ந்தார். இவருக்கு சிறப்பாய் நல்வரவு கூறி வரவேற்க வேண்டுமென்று குருக்களாலும் கிறிஸ்துவர்களாலும் பல ஏற்பாடுகள் செய்யப்படுகிறதாகக் கேள்வியுற்ற அதிமேற்றிராணியாரவர்கள், யுத்தத்தைப் பற்றி கால நிலைமை விசனத்துக்குரியதா யிருப்பதினால் தமது வரவுக்காக வெளி ஆடம்பரமொன்றுஞ் செய்யத் தேவையில்லையென்று சொல்லி கொளும்பிலிருந்து தந்தி அனுப்பிவைத்தார். ஆகவே, ஆடம்பரமொன்றுஞ் செய்யப்படவில்லை. இவர் தமது சுதேசமான உலாந்தைவிட்டுச் சென்ற டிசம்பர் மாதம் 26 தேதி "ஒபீர்" என்னும் டச்சுக் கப்பலிலேறி ஜனவரி மாதம் 25 தேதி கொளும்பு வந்து சேர்ந்தார். இவருக்கு ஐரோப்பாவில் வந்துற்ற அபாயமான நோயினின்றும், நிகழும் யுத்தத்தின் ஆபத்துக்களில் நின்றும் காப்பாற்றித் தமது மேற்றிராசனத்திற்கு க்ஷேமமாய் வந்து சேரக் கிருபை செய்தருளிய திரியேக சர்வேசுரனுக்குச் சகல புகழ்ச்சியுந் தோத்திரமும் உண்டாகக்கடவது.

**ஐரோப்பிய மகா யுத்தமும், புதுவை அதிமேற்றிராசனமும்.**—சென்ற ஜெனவரி மீ 19உ செவ்வாயன்று ஷை மேற்றிராசனத்தைச் சேர்ந்த பின் சொல்லப்படும் குருமார்கள் யுத்தத்திற்காக பிராஞ்சு தேசத்துக்குப் புறப்பட்டுப்போ யிருக்கிறார்கள். சங்கைக்குரிய சேரெஸ், சங். கிலெமான், சங். கோலாஸ், சங். தனியேல், சங். கம்பூய்ஸான், சங். ஷூவான், சங். ஷாலேர், சங். தாராஸ், சங். த்ரிதோ, சங். மத்தியே, சங். குப்ஸாக், சங். மோங்ஷாலேன், இவர்களன்னியில் புதுவை சின்ன மடத்தில் உபாத்தியாயரா யிருந்த சங்கைக்குரிய சகோதரர் த்ரேனேவும், கும்பகோணம் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங்கைக்குரிய ஷெவாலியே சுவாமியாரும் போயிருக்கிறார்கள். பிராஞ்சு தேசத்துக்கு அவசர நிமித்தமாய் ஏற்கனவே போயிருந்த சங்கைக்குரிய ஹிகோ

னென்க் சுவாமியாரும், சங்கைக்குரிய ப்ளாறு சுவாமியாரும் இராணுவத்தில் சேர்ந்திருக்கிறார்கள். என்று "சர்வவியாபி" என்னும் பத்திரிகையால் தெரியவருகிறது. சங்கைக்குரிய இந்தக் குருசுவாமிமார்கள் அனைவரும் சிந்தாத்திரையாய் தங்கள் ஜென்ம நாட்டைச் சேர்ந்து, ஜெயசீலராய் நம்நாட்டுக்கு அதிசீக்கிரம் திரும்பி வருமாறு சர்வேசுரன் கிருபை செய்யும்படி வேண்டிக் கொள்ள நம்முடைய சந்தாதாரர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**பூகம்பம்.**—சமீபத்தில் இத்தாலியா தேசத்தில் பயங்கரமான பூகம்பம் ஒன்று உண்டாயிற்று. இதுவரையிலும் இப்பேர்ப்பட்ட பூமிநடுக்கம் உண்டானதே யில்லையென்று சொல்லுகிறார்கள். இது அங்கோணவில் துவக்கி ஏறக்குறைய 200 மைல் தூரமுள்ள நேபிள்ஸ்வரையிலும் சென்றதாம். நேர்ந்த நஷ்டம் அதிகம். 12,000 பேர் இறந்துபோனவர்கள். காயம் பட்டவர்கள் 20,000 பேர். அவெஸ்ஸானோ என்னும் பட்டணம் இருந்த விடமே தெரியாமல் முற்றுமே நாசமாயிற்று. அதைச் சுற்றிலுமிருந்த நாடுகளும் சேதப்பட்டன. ரோமாபுரியிலுள்ள அர்ச். அருளப்பர் ஆலயத்தின் முகப்பில் வைக்கப்பட்டிருந்த 20 அடி உயரமுள்ள அர்ச். சின்னப்பருடைய பிரமாண்டமான சுரூபம் அதிர்ச்சியால் கீழே படிகட்டின்மேல் விழுந்து நொருங்கிப்போயிற்று. பரிசுத்த பாப்பானவருடைய வற்றிக்கான் மாளிகைக்குற்ற சேதம் சொற்பமே. அர்ச். இராயப்பருடைய கோவிலின் கண்ணாடி ஜன்னல்கள் அநேகமாய் உடைந்து போயினவாயினும், கட்டிடங்களுக்குச் சேதமொன்றுமில்லை. இப் பூகம்பத்தினாலே காயம்பட்டு அர்ச். மார்த்தா என்னும் வைத்திய சாலைக்குக் கொண்டு வரப்பட்டவர்களைப் பரிசுத்தத் தந்தை 15-ஆசீர்வாதப்பர் போய்ப்பார்த்து ஆறுதல் சொல்லிவந்தார். 1870-ம் ஆண்டிலிருந்து இதுவரையிலும் பாப்பரசர்கள் வற்றிக்கான் மாளிகையைவிட்டு வெளிப்பட்டவர்களல்லர். அர்ச். இராயப்பர் ஆலயத்தின் அண்டையிலிருக்கும் ஷெ வைத்திய சாலைக்கு நம்முடைய பரிசுத்தத் தந்தை உள்ளே யிருக்கும்பாதை வழியாய்ச் சென்றாராகையால் எல்லையைக் கடந்து வெளியே போனவரல்ல.

**மூர்ச்சையாய்ப் போகிறவர்களுக்குச் சிகிச்சை.**—மூர்ச்சையாகி விழுபவர்களைக் காண்பவர்கள், அவர்கள் தரையில் விழாதபடிக்குப் பிடித்து நிற்பது வழக்கம். ஆனாலிது பிசகான காரியந்தான். ஓர் காலத்தில் ஒரு வயித்தியர் உலாவப்போகும் வழியில் ஓர் பெண்பிள்ளை மூர்ச்சையாய் விழுந்ததையும் அங்கிருந்தவர்கள் அவளைப் பிடித்து நிற்பதையுங்கண்டு அவ்வயித்தியர் அப் பெண்பிள்ளையின் கரத்தைப் பிடித்துப் பார்த்ததில் அவளுக்கு நாடி வீழ்ந்துவிட்டதினால் அவள் சிரசு பள்ளத்திலும், உடல் மேட்டிலு மிருக்கும்படியாக படுக்க வைத்தனர். பிரேதம்போற் காணப்பட்ட அந்த பெண்பிள்ளைக்கு கொஞ்சநேரத்திற்குள் சுவரணை திரும்ப வந்தது. அவர் அவ்விதமாய்ச் செய்யாமல் பத்து நிமிடமாகிலுந் தாமதம் செய்திருப்பாரே யானால், அப்பெண்பிள்ளை மரித்தே யிருப்பாளென்று மேற்கண்ட வயித்தியரே கூறினர். மூர்ச்சையாய் விழுவதற்குக் காரணம் மூளையில் இரத்தம் இல்லாமையால் தான். ஆகையாலந்தவிடத்தில் மறுபடியும் இரத்தம் பாயும்படி செய்தால், சுவரணை திரும்ப வருமென்று அறிதல் நன்று. இருதயத்தினின்று சரீரத்தினெத்திசைக்கு மிரத்தம் பாய்வதுண்டென்பது உண்மை யென்கிலும், சிரசின் பக்கமாய் இரத்தம் ஓடுவது பிரயாசைதான். எப்படியெனில், யாதொரு பொருளும் மேலிருந்து கீழே யிறங்குவதைவிட, கீழிருந்து மேலேறுவது பிரயாசை. அதுபோலவே இருதயத்தினின்று சிரசின்மட்டும் இரத்தமேறுவதற்கு வாய்க்கால்க ளிருந்தபோதிலும், அதிக பிரயாசையோடுதானேறும். ஆகையாற்றான் மூர்ச்சையாய் விழுந்தவர்களை நிற்கவென்கிலும் உட்காரவென்கிலும், செய்யலாகாது. ஆனால் தலை கொஞ்சம் தாழ்த்தியாகவும், உடல் கொஞ்சம் உயரமாகவு மிருக்கும்படி படுக்கச்செய்து வைத்தால் இரத்தஞ் சாய்ந்தபக்கமாக வோடி சிரசிற் பாய்ந்து கொஞ்ச நேரத்திற்குள் சுவரணை திரும்ப வரும்.

**விழியாதூக்கம் தூங்கின பெண்ணின் கதைக்கு ஒத்த சம்பவம்.**—சில வருஷங்களுக்கு முன்பாக ஒரு மணமகள் தன்தோழிமார்களுடன் கண்ணாமுச்சி விளையாட்டு விளையாடிக்கொண்டிருந்தனள். அவள் வசித்துவந்தவீடு ஒரு பெரிய கட்டிடம்! அதில் அநேக அறைகள் உண்டு. இக்குழந்தையானவள் தன் தோழிகள் ஒருவரும் தன்னைக் கண்டுபிடிக்காம லிருக்கவேண்டுமென்ற எண்ணத்துடன், ஒருவரும் அதுவரையில் அடிவைத்திராத ஒரு அறைக்குட் சென்று, அவ்வறையில் ஒரு பெரியபெட்டி திறந்து வைத்திருக்கக்கண்டு, அதற்குள் தன்னை ஒளித்துக்கொண்டு பெட்டியை மூடிக்கொண்டாள். ஐயோ, பாவம்! அப்பெட்டிக்கு ஒரு வில்லுப் பூட்டு போடப்பட்டிருந்ததால் பெட்டியின் கதவு உடனே பூட்டிக்கொண்டது. அதின் சூழ்ச்சியை அக்குழந்தை என்ன கண்டாள்! கடைசியாக அம்மணமகள் அப்பெட்டியிலேயே உயிர்துறக்க நேரிட்டது. வீட்டிலுள்ளோர் எல்லோரும் குழந்தையை நாலாபக்கத்திலும் தேடினார்கள்; கிடைக்கவில்லை. கடைசியாக சிலவருஷங்களுக்குப்பிற்பாடு அக்குழந்தையின் உறவினர் விநோதார்த்தமாய் அப்பெட்டியிருந்த அறைக்குச் சென்று அப்பெட்டியிலிருக்கும் வஸ்துவைப்பார்க்க ஆவல்கொண்டவர்களாய் அப்பெட்டியைத் திறந்துப்பார்க்க, மணக்கோலத்துடன் சில வருஷங்களுக்கு முன் காணாமற்போன குழந்தை விழியாத்தூக்கம் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். இதேமாதிரியாக பம்பாயில் சில தினங்களுக்கு முன்பாக பிரன்ஸஸ் தெருவில் ஒரு வீட்டில் ஏழு வயது, 6 வயது கொண்ட ப்ராம்ஜு, டான்ஜிஷா என்ற இவ்விரு பார்சீ குழந்தைகளும் திறந்து வைக்கப்பட்டிருந்த ஒரு பெட்டிக்குள் வேடிக்கைக்காகப் புகுந்து, இருவரும் சேர்ந்து கதவை மூடிக்கொண்டார்கள். அக்கதவானது மிகவும் பாரமாயிருந்ததால், இக்குழந்தைகளால் அதை திறந்துகொண்டு வெளியேவர சாத்தியப்படவில்லை. ப்ராம்ஜுயின் பாட்டிக்கு தன் காதில் ஏதோ ஒரு ஹீனக் குரல் கேட்டதாக தோன்றிற்று. அச்சத்தம் எவ்விடமிருந்து உண்டாயிற்று என்று பார்த்துவருகையில் இவ்விரு குழந்தைகள் மூடப்பட்டிருந்த பேழையைத் திறக்க, அங்கு இவ்விரு குழந்தைகளும் படுத்துக் கிடப்பதைக்கண்டாள். ப்ராம்ஜு மரித்துக் கிடந்தான். டான்ஜிஷா என்ற பையன் மெய் மறந்து கிடந்தான். ஆதலின், நேயர்களே! குழந்தைகள் வசிக்குமிடத்தில் பேழைகளை திறந்து வைக்காதீர்கள்.



**பிரயாணிகளுக்கு பிரயோசனமான பாத்திரங்கள்.**—மாம்ஸத் துண்டுகளில் இரண்டொன்றையாவது காய்கறிகளில் கொஞ்சமாவது இரண்டு மூன்று நிமிஷங்களில் காகிதங்களை எரியவிட்டு பக்வம் செய்வதற்கேற்றதான சமையல் பாத்ரமொன்றை ஒரு பிராஞ்சு கடைக்காரர் புதிதாய் தயாரித்திருக்கிறார். இந்தப் பாத்திரத்தில் இரண்டு பாகங்கள் உண்டு. ஒவ்வொன்றும் உலோகத்தால் செய்யப்பட்டதும் உள்ளே சற்று பள்ளமான தட்டுமாகும். ஒன்றோடொன்று காற்று உள்ளே போகாதபடி நன்றாய்ப் பொருந்தக்கூடியது. இரண்டிற்கும் பிடியுண்டு. இவைகளில் ஒன்றில் பக்குவம் செய்யவேண்டிய ஆகார வஸ்துக்களைப்போட்டு அதில் கொஞ்சம் நெய் அல்லது எண்ணெய் ஊற்றி, மற்ற தட்டால் மூடி அடுப்பின்மேல் வைக்கவேண்டும். பிறகு கடுதாசிகளை நீளமாகக் கிழித்து நீளவாக்கில் சுருட்டி மூன்று சுருள்கள் தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு சுருளைப் பற்றவைத்து, தட்டத்தின் அடியில் காட்டி தட்டத்தின் அடிப்பக்கம் முழுவதும் நெருப்புப்படும்படி வைத்துக்கொண்டிருக்கவேண்டும். முதல் சுருள் தீர்ந்தவுடன் இரண்டாவது சுருளையும், பிறகு மூன்றாவது சுருளையும் பற்றவைத்துக்கொண்டிருந்தால், மூன்றாவது சுருள் தீர்ந்து போவதற்குள், உள்ளிருக்கும் பொருள்கள் நன்றாய் வெந்து பக்குவமாயிருக்கும். ஆகார வஸ்துக்கள் இவ்வளவு சீக்கிரம் வெந்து பக்குவமாவதற்குக் காரணமென்னவென்றால், இரண்டு தட்டங்களும் ஒன்றோடொன்றாய் இறுகப் பிடித்துக்கொண்டு உள்ளிருக்கும் உஷ்ணத்தை வெளியில் விடாததேயாம். மாம்ஸம் அல்லது காய்கறிகளில் உள்ள ஈரம் ஆவியாகிறது. உஷ்ணமும் ஆவியும் சேர்ந்து அவைகளை சீக்கிரத்தில் வேகவைக்கின்றன. இந்தப் பாத்திரம் வெளியூர்களில் பிரயாணம் செய்பவர்களுக்கு மிகவும் பிரயோஜனமுள்ளதென்று சொல்லப்படுகிறது.

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.
## DOMESTIC OCCURRENCES.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய். முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக் குட்பட்டால் 1—8—0 ரூபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ரூபாயாகும். அரை ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா. ப.-ர்.

ஜனன அறிக்கை.

சென்னை சேப்பாக்கத்தில் வசித்து காலஞ்சென்ற கனம் மாசிலாமணிபிள்ளை அவர்கள் சிரேஷ்ட புதல்வியும், என் மைத்துனர் "நல்ல ஆயன்" சந்தாதாரரும், M. & S. M. Ry. இன்ஜின் டிரைவரும், தற்காலம் பௌரிங்பேட்டை நிவாசகருமாகிய கனம். S. A. இஸ்ரவேல்பிள்ளை அவர்கள் இல்லாளும் எனது சகோதரியுமாகிய ஸ்ரீமதி, உத்தரியமரியம்மாள் திரு இருதய ஆசீராலும், சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மன்றாட்டினாலும் 1915ம் ஜனவரிமீ 21 திகதி வியாழக்கிழமை காலை 2-மணிக்கு 5-வது பேறாக ஓர் ஆண்குழந்தையைப் பெற்றாள். தாயும் சேயும் சுகம். இவ்விருவர்களின் ஆத்தும சரீரத்துக்கு வேண்டிய ஆரோக்கியத்தைக் கட்டளையிட்டருளும்படி திரியேகதேவனின் திருவடிகளைப் பிரார்த்திக்கும்.

M. மாதவராயன் பிள்ளை,
Clerk.
Messrs. Lazarus & Co. Oorgaum.

திருச்செந்தூர் தாலுகா மெஞ்ஞானபுரம் சர்க்கிள் நங்க மொழியில் ம-m-m-ஸ்ரீ, A. ஈசாக்கு அவர்களின் கனிஷ்ட புதல்வியும் திருநெல்வேலிஜில்லா புதியம் புத்தூரில் வசிக்கும் V. தாசன் அவர்களின் பிரிய மனைவியுமாகிய ஞானவடிவு அம்மாள் சென்ற 1914-ம் நவம்பர்மீ 2உ திங்கள்கிழமை தனது முதலாவது ஆண் மகவை கர்த்தரின் பேருதவியால் யாதொரு அபாயமின்றி ஈன்றனள். தாயும் சேயும் சுகம்,

இங்ஙனம்
பிள்ளையின் தாய் மாமன்,
ஈ. சவரிமுத்துப் பிள்ளை.

### நன்மரண அறிக்கைகள்.

அட்டன்.

திருநெல்வேலி ஜில்லா, புன்னைக்காயலில் நிகழும் 1915-ம் ஜனவரிமீ 2-ம்உ சனிக்கிழமை இரவு சுமார் 9-மணிக்கு எனது அருமை தந்தை சிலுவைப் பெர்னாந்துலோபோ அவர்கள் தமது 57-வது பிராயத்தில் விஷபேதி கண்டு, எவ்வித ஔஷத சிகிச்சையாலும் பயன்படாமல், தமது அந்திய காலத்தில் தேவத்திரவிய அநுமானங்கள் யாவும் சரிவரப் பெற்று, தம்முடைய புத்திரர், புத்திரி, பாரியாள், சகோதரர், சகோதரி, பந்துவர்க்கத்தினர் யாவரும், பரிதவித்தழுது நிற்க, மகிமைப் பொருந்திய சேசுவின் திருநாமத்தை அடிக்கடி உச்சரித்து, இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலக பிராப்தியாயினார்.

அடுத்தநாள் காலை அதிஆதாரான அர்ச். மிக்கேல் சம்மனசானவர் தேவாலயத்தைச் சேர்ந்த மையவாடியில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

இதனைக் கண்ணுறும், சகோதர, சகோதரிகள் யாவரும், இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்:
தந்தையை யிழந்து பரிதபிக்கின்ற மைந்தன்.
கிறிஸ்தியான் பெர்னாந்து.

*Hotton.*
14th Jany. 1915.

### அர்ச். அந்தோனியார் சத்துரு சங்காரமாலை.

இஃது எம்மால் பழைய கையேட்டுப் பிரதிகளைக்கொண்டு சென்னை திருமயிலை மேற்றிராணி ஆண்டவர் அவர்கள் அளித்த உத்தாரப்படி சங். L. X. பெர்னாந்தீஸ் சுவாமிகளால் பரிசோதிக்கப் பெற்று, இலக்கண, இலக்கிய, சரித்திர வழுவில்லாமல் சுத்தப்பிரதி யாக்கி உயர்ந்த இளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட் டிருக்கிறது.

அர்ச். அந்தோனியார் சரித்திரசுருக்கமும், சத்துருசங்காரமாலையும், பதின்மூன்று தேவாரமன்றாட்டும், சீட்டும், ஜெபமாலையும், அர்ச். மிக்கயேல் சம்மனசானவருடைய சத்துருசங்கார

7-MAR 1916 MADRAS

The Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 13. } மார்ச் 1915. { இலக்கம். 3.

## PENANCE.
## தபசு.

இப்போது தபசு காலமாயிருக்கிறபடியால் கிறிஸ்துவர்களான நாம் எல்லோரும் தபசு செய்யக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். இதுவரையிலும் நாம் கட்டிக்கொண்ட பாவாக்கிரமங்களுக்காகத் தவமுயற்சிகளைக் கையாடி பரிகாரஞ் செய்யவும், பரிசுத்தத்தனத்தில் உயரவும் வேண்டியவர்களல்லவா? ஆயினும் அநேகர் இந்தப் பரிசுத்த காலத்தில் குறிக்கப்பட்டிருக்கிற நாட்களிலே சுத்தபோசனத்தையும் ஒரு சந்தியையும் அநுசரித்துவந்தால் தபசு செய்யவேண்டிய விஷயத்தில் தங்களுக்குள்ள கடமையை நிறைவேற்றிப் போட்டோமென்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். ஒருபொழுதாயிருப்பதும் சுத்தபோசனம் அநுசரிப்பதும் தவமுயற்சிகளேயாயினும், அத்தியாவசியமாய் இவர்கள் கவனிக்கத்தக்க ஒரு பிரதான விஷயமுமுண்டு. இதை இவர்கள் கவனியாது மேற்சொன்ன தவ முயற்சிகளை மாத்திரம் அநுஷ்டிப்பார்களேயானால் யாதோர் பலனையுங் கண்டடையார்களென்பது திண்ணம். அஃது யாதெனில்: தங்களிடத்திலுள்ள துர்க்குணங்களை—கெட்ட ஆசாபாசங்களை—கிரமமற்ற பற்றுதல்களைப் பாம்பை நசுக்குவதுபோல் நசுக்கிப் புண்ணியத்தில் பிரவர்த்திப்பதேயாம்—தேவநேசத்திலும் பிறநேசத்திலும் உயர்வதேயாம். இதுவே மெய்யான ஒறுத்தல்; இதுவே சரியான தபசு.

"மானானது நீர்ச் சுனையைத்தேடி ஓடுவதுபோல் என் ஆத்துமம், சர்வேசுரா! உம்மைத் தேடி ஓடுகிறது" என்று தாவீது இராசா பாடியதை அர்ச். அகுஸ்தீன் வியாக்கியானித்துச் சொல்லியிருப்பதாவது: காட்டிலுள்ள மான் தண்ணீர் குடிக்க ஓடைக்கு ஓடும்போது வழியில் பாம்பு குறுக்கிட்டால், அதை நசுக்கிக் கொன்றுபோட்டு, முன் அது கொண்டிருந்த தாகத்தைவிட அதிக தாகங்கொண்டு, முன்னிலும் வேகமாய் ஓடிப்போய்த் தண்ணீர் குடிக்குமாம். இப்படியே நாமும் புண்யஞ்செய்து பரிசுத்தத்தனத்தில் விருத்தியடைய ஆசிப்போமானால், அந்த ஆசைக்குத் தடங்கலாயும் இடைஞ்சலாயுமிருக்கும் நம்முடைய கெட்ட ஆசாபாசங்களை—நம்முடைய துர்க்குணங்களை நசுக்கவேண்டியதாமென்

பதே. ஆம், நம்மிடத்தில் துர்க்குணங்கள் குடிகொண் டிருக்குமட்டும் நமக்குப் புண்ணியத்தின்பேரில் மெய்யான பசியுந் தாகமு முண்டாகாது. வருந்தி பாடுபட்டு தேவசிநேக பிறசிநேக முயற்சிகளைச் செய்ய மனங்கொள்ளமாட்டோம். ஆனால், விஷப்பாம்புக்கு ஒப்பான நம்முடைய துர்க்குணங்களை எவ்வளவுக்கு அடக்குவோமோ, அல்லது ஒறுப்போமோ, அவ்வளவுக்கு நம்மிடத்தில் தேவ நேசமும் பிறநேசமும் அதிகரித்து மெய்யான புண்யவான்களாவோம். தங்கத்தைப் புடம் போடப் போட, அது எப்படிச் சுத்தத் தங்கமாகுமோ, அப்படியே நாம் நம்முடைய துர்க்குணங்களை நசுக்க நசுக்கப் பரிசுத்தவாளராவோம். ஆகவே இந்தப் பரிசுத்த தபசுகாலத்தில் நாம் செய்யும் தப முயற்சிகள் நமக்குப் பலனுள்ளவைகளாயிருக்க, நம்முடைய துர்க்குணங்களை யடக்கப் பிரயாசைப்படுவோமாக. நாம் சுகிக்கத் தேடுகிற ஆகாத இன்ப சுகங்களையும், பாராட்டுகிற பெருமை ஆங்கார முதலியவைகளையும், இப்பிரபஞ்ச பொருட்களின்மட்டில் வைக்கிற ஒழுங்கற்ற பற்றுதல்களையும் அறவே ஒறுத்து புண்யத்தில் ஓங்கிவளர முயலுவோமாக!

---



# பாப்பாண்டவரின் நிருபம்.

(முன் தொடர்ச்சி.)

---

## கிறிஸ்துவ சிநேகம்.

பசாசானது மனிதர்மேற் கொண்ட காய்மர்காரத்தினால் அவர்களுக்குள் ளிருந்த சமாதானத்தைச் சீரழியச் செய்துவிட்டது. அந்தச் சமாதானம் மறுபடியும் அவர்களிடத்தில் அதிகாரங்கொண்டு விளங்கும்படி செய்ய சேசுக்கிறிஸ்து நாதர் பரலோகத்தை விட்டுப் பூலோகத்துக்கு எழுந்தருளிவந்தார். இதற்காக அவர் சிநேகத்தையே ஆதாரமாகத் தெரிந்துகொண்டாரேயன்றி வேறெதையுந் தெரிந்துகொள்ளச் சித்தங்கொண்டவரல்லர். ஆனதுபற்றியே, "புதிதான கற்பனையை உங்களுக்குத் தருகிறேன். அதாவது: ஒருவரை யொருவர் அந்நியோந்நியமாய்ச் சிநேகிப்பீர்களாக" (அரு. XIII 34); "என் கற்பனை என்னவென்றால், நீங்கள் ஒருவரை யொருவர் சிநேகிக்கிறது தான்" (அரு. XV, 12); "அந்நியோந்நிய சிநேகங்கொண் டிருங்களென்று உங்களுக்குக் கற்பிக்கிறேன்," (அரு. XV. 17.) என்னும் இவ்வாக்கியங்களை அடிக்கடி திருவுளம்பற்றினார். இதனால் அவர் இவ்வுலகத்துக்கு வந்ததும், போதித்ததும், எல்லாமுமே மனிதர்கள் ஒருவர் ஒருவரை நேசிக்கும்படிச் செய்வதிலேயே கட்டுப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இதை எண்பிக்கும் பொருட்டு என்ன பலத்த நியாயங்களைத்தான் அவர் எடுத்துக்காட்டாமல் விட்டார்? அவர் நம்மெல்லோரையும் பரமண்டலங்களை யண்ணாந்து பார்க்கும்படி கற்பிக்கிறார். "ஏனெனில் பரமண்டலங்களிலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்." (மத். XIII, 9.) பரமண்டலங்களிலே யிருக்கிற எங்கள் பிதாவே" (மத். VI, 9.) என்று எல்லோரும் ஜாதிபேதம் பாஷை பேதமுதலியவற்றைப்பற்றி யாதொரு வித்தியாசமும் படுத்தாமல் ஒரே மாதிரியாய் ஜெபிக்க அவர் கற்பிக்கிறார். அன்றியும் பரமண்டலங்களிலிருக்கிற இந்தப் பிதாவானவர் சுபாவ நன்மைகளை யோக்கியர்மேலும் அயோக்கியர்மேலும் வித்தியாசம் பாராட்டாமல் கொடுத்தருளுகிறாரென்று நமக்கு வற்புறுத்திக்காட்ட "அவர் நல்லோருக்குந் தீயோருக்கும் மேலாகத் தமது சூரியனுதிக்கவும், நீதிமான்கள்பேரிலும் அநீதர் பேரிலும் மழை வருஷிக்கவும் செய்கிறார்" (மத். V, 45) என்கிறார். அல்லாமலும் "நீங்கள் எல்லோரும் சகோதரர்களா யிருக்கிறீர்கள்" (மத். XXIII, 8) என்று சொல்லி நாமெல்லோரும் சகோதரர்களென்பதாக அறிவிக்கிறார். மேலும் "தாம் அநேகம் சகோதரர்களுக்குள்ளே மூத்தவராயிருக்கிறார்" (ரோ. VIII, 29) என்பதினால் நாமெல்லோரும் அவருடைய சொந்த சகோதரர்களா யிருக்கிறோமென்றும் வெளியிடுகிறார். இன்னும் அவர் தம்முடைய உன்னத மகத்துவம் மகா நீசமானவனிடத்திலும் அவசியமாய் அங்கீகரிக்கப்பட தாம் ஆசிப்பதாகக் காட்ட "மிகவும் சிறிய என் சகோதரராகிய இவர்களி லொருவனுக்கு நீங்கள் செய்தபோதெல்



லாம் எனக்கே அதைச் செய்தீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். XXV, 40) என்கிறார். இந்த ஒரு விஷயத்தைப் பற்றிநாம் மனதில் நன்றாய்ச் சிந்திப்போமானால், நம்முடைய சுயதேச செல்வாக்கைப்பற்றி பெருமை பாராட்டி இதுவரையிலும் துவேஷித்து வந்தவர்களை முதலாய் நம்முடைய சொந்த சகோதரர்களாகப் பாவிக்க நாம் தூண்டப்படுவோமென்பதற்கு ஐயமில்லை. அவர் இவ்வுலக சீவியத்தை விட்டுப் பிரியப்போகுந் தருணத்தில் "பிதாவே, நீர் என்னை அனுப்பினீரென்று உலகம் விசுவசிக்கும்படியாக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல இவர்களும் நம்மில் ஒருமிப்பாயிருப்பார்களாக" (அரு. XVII, 21.) என்று தமது பிதாவைப் பார்த்துச் சொல்லி, தம்மை விசுவசிக்கிற அனைவரும் பிறசிநேக பந்தனத்தால் ஒன்றித்திருக்கவேணுமென்று மகா உருக்கத்தோடு வேண்டிக்கொண்டார். கடைசியாய் ஒரு சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவமும் தன்னைச் சேர்ந்த மற்ற அவயவங்களை எப்படி நேசிக்குமோ, அப்படியே நாம் எல்லோரும் ஏக சரீரமாய் ஒன்றித்துச் சீவிக்கவேண்டுமென்றே நமக்கெல்லோருக்காகவுஞ் சிலுவையில் தொங்கி தமது இரத்தத்தைச் சிந்தினார்.

ஆயினும் இக்காலத்தியமனிதர்கள் இதற்கு எவ்வளவோ விரோதமாய் நடக்கிறார்கள். தற்போது மனிதர்கள் சகோதர நேசத்தைப்பற்றிப் பெருமையாய் பேசிக்கொள்வதுபோல முன் ஒருபோதும் பேசினவர்களல்லபோலும். சுவிசேஷ வார்த்தைகளையும் சேசுநாதருடையவும் அவருடைய திருச்சபையினுடையவும் நடபடிக்கைகளையும் இவர்கள். ஞாபகப்படுத்திக்கொள்ளாவிட்டாலும், சகோதர வாஞ்சையைத் தற்காலத்திய நாகரிக சீர்திருத்தத்தின் மேலான பயனென்று, அவ்வளவாகச் சிலாகித்துச் சூதாய்ப் பேசுகிறார்கள். ஆனால் இக்காலத்திய நடபடிக்கைகளைப்பார்த்தால் உண்மையில் சகோதர நேசமானது முன் ஒருபோதும் இவ்வளவாக க்ஷீணித்துப்போகவில்லை. ஜாதி (தேச) வைராக்கியமானது மிகவும் பலமாயிருக்கிறது. ஒவ்வொரு தேசமும் தன் தன் எல்லைகளால் பிரிவுபட்டிருப்பதைவிட தனக்குள்ள குரோத வைராக்கியத்தினால் அதிகமாய்ப் பிரிவுபட்டிருக்கிறது. ஒரே தேசத்திலும், இன்னும் மதில்களால் சூழப்பட்டிருக்கும் ஒரே பட்டணத்திலுமுள்ள ஜனங்களின் பலவகுப்பினரும் ஒருவர் ஒருவரை பகைக்கிறார்கள். ஜனங்களுக்குள் சுயநேசமே முதன்மையாய் நின்று அரசாட்சி புரிந்துவருகிறது.

சங்கைக்குரிய சகோதரர்களே, கிறிஸ்துநாதர் போதித்த பிறசிநேகமானது ஜனங்களுக்குள் குடிகொண்டிருக்கப் பிரயாசைப்படுவது எவ்வளவு அவசியமென்று நீங்கள் அறியாதவர்களல்ல. நாம் பாப்பானவரா யிருக்குந்தனையும் உண்மையில் இதுவே எப்போதும் நம்முடைய விசேஷ நோக்கமா யிருக்கும். இதுவே உங்களுடைய அலுவலாயும் இருக்கவேணுமென்று உங்களுக்குச் சொல்லுகிறோம். "ஒருவர் ஒருவரைச் சிநேகியுங்கள்" (அரு. I. நிரு. III, 23.) என்ற அப்போஸ்தலராகிய அர்ச். அருளப்பருடைய போதனையின்படி, பிறசிநேகத்தை ஜனங்களிடத்தில் உண்டாகச்செய்வதில் நாம் பின்னிடையமாட்டோம். சங்கங்களும் சபைகளும் நமது காலத்தில் எங்கும் அநேகமாயிருப்பதுமல்லாமல் நிச்சயமாகவே அவைகள் மேம்பாடுள்ளவைகளாயும் புகழ்ச்சிக்குரியவைகளாயும் இருக்கின்றன. ஆனால் தேவசிநேகமும் பிறசிநேகமும் ஜனங்களுடைய இருதயத்தில் உண்டாகி வளர அவைகள் எப்படியாகிலும் உதவியாயிருந்தாலன்றி மற்றப்படி அவைகள் உண்மையில் பிரயோசனமுள்ளவைகளாயிரா. ஏனென்றால் "நேசியாதவன் மரணத்தில் நிலைத்திருக்கிறான்" (அரு. I. நிரு. III, 14.)

## அதிகாரத்தை அவமதித்தல்.

ஜனங்களுக்குள் உண்டாயிருக்கிற குழப்பத்துக்கு மற்றொரு காரணம் என்னவெனில்: வல்லமையுடையோருடைய அதிகாரம் இக்காலத்தில் மதிக்கப்படுகிறதில்லை என்பதுவே. சர்வலோக சிருஷ்டிகரும் தந்தையுமான சர்வேசுரனை விட்டு விலகி மனிதர் என்றைக்குத் தங்களுடைய சுயேச்சையினாலேயே எல்லாவற்றையும் நிறைவேற்ற முடியுமென்றார்களோ, அன்றைக்கே மேலான அந்தஸ்துள்ளவர்களுக்கும் தாழ்ந்த அந்தஸ்துள்ளவர்களுக்கும் இருக்கவேண்டிய சம்பந்தம் குறைவுபட்டு, ஏறக்குறைய முற்றுமே அற்றுப்போயிற்று. ஆங்காரத்தினின்று கிளம்பிய சுயேச்சையைப்பற்றின மிதமிஞ்சிய ஆசையானது நாலாபக்கத்திலும் கிளம்பி ஒவ்வொருவரையும் பிரித்துச் சுபாவமாய்க் குடும்பங்களி லிருக்கவேண்டிய அதிகார முதலாய் எடுபட்டுப்போகச் செய்துவிட்டது. பரிசுத்த

ஸ்தலத்தின் படிகளில் முதலாய் இவ்வடங்காமையைப் பார்ப்பது இன்னும் அதிக விசனத்துக்குரியதாயிருக்கின்றது. இதனிமித்தமே சட்டதிட்டங்களின் மட்டில் அருவருப்பும், சாதாரண ஜனங்களின் கீழ்ப்படியாமையும், அதிகாரிகளின்மேல் குற்றம்பிடிப்பதும், எண்ணிறந்த தந்திர உபாயங்களால் சிக்ஷைக்குத் தப்பித்துக்கொள்ளத் தேடுதலும், அரசாட்சியை அழிக்கவும், புறத்தியாருடைய உயிரையும் சொத்துக்களையும் சற்றும் பின்வாங்காமல் பறித்துக்கொள்வதுமான இவ்வித நிஷ்டூர செய்கைகளெல்லாம் நடக்கின்றன.

ஜனசமுகமானது இவ்வித குற்றங்களில் மூழ்கிக்கிடக்கையில், உண்மையைப் பாதுகாக்கவென்று இவ்வுன்னத பதவியில் சர்வேசுரனால் நியமிக்கப்பட்டிருக்கிற நாம், எவ்வித மனித அதிகாரத்தாலும் மாற்றமுடியாத சத்தியத்தை ஜனங்களுக்கு நினைப்பூட்டும்பொருட்டு அதைப் பற்றி வெளியரங்கமாய்ப் பேசாதிருப்பது சரியல்ல. "எந்த மனுஷனும் மேலான அதிகாரங்களுக்குக் கீழ்ப்படியக் கடவான். ஏனெனில், சர்வேசுரனால் உண்டாயிராத அதிகாரமில்லை. உண்டா யிருக்கிறவைகள் சர்வேசுரனால் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன". (ரோம. XIII.) ஆகையால் அரசர்களின் அதிகாரமா யிருந்தாலும் சரி, அல்லது அவர்களுக்கு அடங்கினவர்கள் செலுத்துகிற அதிகாரமானாலும்சரி, பூலோகத்தில் செலுத்தப்படுகிற எல்லா அதிகாரத்துக்கும் சர்வேசுரனே ஆதிகாரணராயிருக்கிறார். இதினின்று தேவ கற்பனைக்கு விரோதமானதைத் தவிர்த்து, தங்களுக்கிஷ்டமான படியல்ல, ஆனால் தங்கள் தங்கள் மனச்சாட்சியின்படி, அதிகாரத்தை வகிப்பவர்களின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவேண்டியது அவரவர்மேலுஞ் சுமந்த கடமை என்பதாக அர்ச். சின்னப்பர் ஸ்தாபிக்கிறார்: "ஆகையால் நீங்கள் அவசியமாய்க் கீழ்ப்படியவேண்டும். ஆயினும் கோபாக்கினையினிமித்த மாத்திரமல்ல, மனச்சாட்சியைப் பற்றியும் வேண்டும்." (உரோ. XIII, 5.) அர்ச். சின்னப்பருடைய இந்தப் போதனைக் கிணங்க, அப்போஸ்தலர்களுக்குத் தலைமையானவரும் போதிக்கிறதாவது: "ஆனபடியினாலே சர்வேசுரனைப்பற்றி எல்லா மனுஷசிஷ்டிப்புக்கும் மேல் அதிகாரமுள்ள இராசாவுக்கானாலும் தீமை செய்கிறவர்களுக்குத் தண்டனையையும் நல்லவர்களுக்குப் புகழினையும் கொடுக்கும்படிக்கு அவரால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்குங் கீழ்ப்படியுங்கள்." (அர்ச். இரா. II, 13-14). என்பதேயாம். இப்போது சொல்லப்பட்டதைக்கொண்டு அஞ்ஞானிகளுக்குப் போதித்த அந்த அப்போஸ்தலர் தாமே நீதியான மனித அதிகாரத்தை யெதிர்க்கிறவன் சர்வேசுரனை யெதிர்க்கிறான் என்றும், நித்திய ஆக்கினையைத் தனக்கு வருவித்துக் கொள்ளுகிறானென்றும் முடிவு செய்கிறார். "அப்படியிருக்க அதிகாரத்துக் கெதிர்த்து நிற்கிறவன் சர்வேசுரன் ஸ்தாபித்த ஒழுங்குக்கு எதிர்க்கிறான். அப்படி எதிர்க்கிறவர்களோவென்றால், தங்களுக்குத் தானே ஆக்கினைத் தீர்வையைச் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள்." (ரோம, XIII, 2.)

### வேதமும் இராசாங்கமும்.

தங்கள் அதிகாரத்துக்கு முக்கிய ஆதாரமாயிருக்கிற கிறிஸ்துநாதரின் சத்திய உபதேசத்தை இராசாங்கமும் துரைத்தனமும் நீக்கிவிடுவது விவேகமும் அனுகூலமுமான யோசனையோவென்பதை அரசரும் செங்கோன்மை செலுத்துபவரும் தங்கள் மனத்தில் வைத்து யோசித்துப் பார்க்கக்கடவார்களாக. சுவிசேஷத்தினுடையவும் திருச்சபையினுடையவும் போதனையை ஜனசமுகத்தினின்றும் விலக்கிப் பிரித்ததானது விவேகமான யோசனைதானோ என்பதை அவர்கள் தீர ஆலோசித்துப் பார்ப்பார்களாக. எங்கே வேதமானது புறக்கணித்துத் தள்ளப்பட்டதோ அங்கே மனிதாதிகாரமும் நிந்திக்கப்படுகிறதென்று விசனத்துக்குரிய அனுபவத்தால் தெரியவருகிறது. தம்முடைய கடமையை நிறைவேற்றத் தவறினபோது நம்முடைய ஆதித் தந்தைக்கு என்ன நேர்ந்ததோ, அதுவே மெய்யாக பிரசைகளுக்கும் நேருகின்றது. அந்த விஷயத்தில் அவருடைய மனமானது சர்வேசுரனுக்கு விரோதமாய்ப் போராடத் தொடங்கின க்ஷணமே, அவருக்குள்ளிருந்த ஆசாபாசங்கள் கட்டுக்கடங்காமல், அவருடைய மனதின் அதிகாரத்தை அலட்சியம் செய்யலானது. அப்படியே ஜனங்களின்பேரில் அரசாட்சி செலுத்துபவர்கள் தேவ அதிகாரத்தைச் சட்டை செய்யாதபோது, பிரசைகளும் அதற்குப் பதிலாக மனிதர் அதிகாரத்தைக் கேலிபண்ணுகிறார்கள். வாஸ்தவத்தில் எழும்பும் ஒரு கலகத்தை யடக்க உருட்டலு மிரட்டலும் பலவந்தமுமே ஏக



வழியாயிருக்கிறது. அதனால் என்ன பிரயோசனம்? கட்டாயத்தினால் அடக்கப்படுகிறது சரீரமேயன்றி மனசல்ல. (தொடரும்.)

---

## WHO ARE WE?
## நாம் யாவர்?

---

நான் யார்? என் சரித்திரம் யாது? நான் யாருக்குச் சொந்தம்? இத்தகைய கேள்விகளைச் சமயாசமயங்களில் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள வேண்டியது.

மனிதன் யார்? அவன் ஓர் ஜீவசெந்து என்பதிற் தடையென்ன? கானகத்தில் ஓடித்திரியும் மிருகங்கள், வசந்த காலத்தில் இனிமையாய்ப்பாடி மனிதரை மகிழ்விக்கும் பறவைகள் எப்படி ஜீவசெந்துக்களோ அப்படியே மனிதனும். அவைகளுக்கிருப்பதுபோல், மனிதனுக்கும் எலும்பு, தசை, நரம்பு, இரத்தம் முதலியன இருக்கின்றன. அவனுக்கும் மெய், வாய், கண், மூக்குச், செவி என்னும் ஐம்புல உணர்ச்சி உண்டு. இவ்வுலகில் உள்ள மிக்க அருவருப்பும் கேவலமுமான ஒரு மிருகத்தைப் போலவே, அவன் தன் நாசியின் வழியாய் ஆகாயத்தை உட்கொண்டு வெளியிடுகிறான். ஆகாரம், தண்ணீர், வெப்பம், குளிர்ச்சி, சுத்த காற்று, நித்திரை, இளைப்பாற்றி முதலியன அம்மிருகங்களுக்கெவ்வளவு அவசியமோ, அவ்வளவு மனிதனுக்கும் அவசியந்தான். மனித சாமர்த்தியத்தால் செய்யப்பட்ட அநேக அவுழ்தப் பிரயோகங்களாலும், வாஸனைத் தைல முதலியவற்றாலும் எவ்வளவுதான் ஒருவன் தன் தேகபலத்தையும் தேஜஸ், வயது முதலிய வற்றையும் வளங்குன்றாமல் இருக்கும்படிச் செய்ய முயன்றாலும், நாளடைவில் அம்மிருகங்களைப் போலவே அவனும் காலம் என்னும் கொடியோனதிகாரத்துக்குட்பட்டுத் தேக மெலிந்து நரை திரை மேலாடி இவ்வுலகத்தை விட்டு நீங்கத் தவறுகிறதில்லை. ஆம், குதிரை யல்லது கழுதையின் சரீரத்தைப் போல், மிக்க அழகும் யௌவனமும் வாய்ந்த ஓர் இளமங்கையின் சிறந்த அவயவங்களைத்தும் கடைசியில் வளர்ந்து, தளர்ந்து, ஒன்றுமில்லாமல் தாம் உதித்த இடமாகிய மண்ணில், புதைபட் டழிகின்றன. சுருங்கக் கூறுமிடத்து, இவ்விஷயத்தை நாம் எவ்வளவுக் கெவ்வளவு யோசித்துப் பார்க்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு மனிதன் மிருக ஜாதியைச் சேர்ந்தவனே என்னும் உண்மை மிகத்தெளிவாய் விளங்குகிறது. ஆனால் அவன் மிருகந்தானா? அல்லது அதனிலும் மேலானவனா? ஆ, இக் கேள்வியே நமக்கு முக்கியமானது. இதை நாம் சற்றே ஆராய்ந்து பார்ப்போம். சரியாய் யோசித்தால், மனிதன் ஓர் அதிசயமான ஜெந்துவெனத் தோன்றும். அவனைத் தனியே ஓர் அண்டகோளம் என்னலாம். இயற்கையில் நாங் காண்பதனைத்தும் அவனிடம் விளங்குகின்றன. அவனுக்கு உயிரும், ரூபமும், வளர்ச்சியும், இருப்பிடமும், பூமி, ஆகாயம், கடல் முதலியவற்றைப்போல் ஓர் பேரும் இருக்கின்றன. மரங் கொடி செடிகளைப்போல் வளருந் தன்மையும், பரவு மியல்பும் அவனிடங் காணலாம். ஜீவ ஜெந்துக்களுக்குள்ளதுபோலவே, உணர்ச்சி, நடை, பார்வை, கேள்வி முதலிய உயரிய குணங்கள் அவனிடம் விளங்குகின்றன. கடைசியாய்த் தேவதூதராகிய வானோரிடங்காணும் பகுத்தறிவு, ஞானம், சுயமனம், ஆன்ம உயிர் முதலியன அவனிடமிருக்கின்றன.

ஆ! கடைசியாய்க் கூறிய இக்குணங்களே மனிதனுடைய மேன்மையான பதவியையும், உண்மையான நிலைமையையும் தெரிவிக்கு மாற்றலுமுடையன. பாதியுடலும் பாதி ஆவியும் முடையவனாயிருத்தலினால், மனிதன் ரூபிகளும் அரூபிகளுமான இருவகை சிருஷ்டிகளின் மத்தியிலிருந்து அவைகளை ஒன்று சேர்ப்பவன் போல் தோன்றுகிறான். அவன்பாதங்கள் புழுதியிற்படிந்து. அவன்தேகம் மாய்கையால் கட்டுண்டிருந்த போதிலும், அவனுடைய மனமோ, சிந்தை தியானம் என்பவற்றால் உயருலகை நாடிச் சென்று, சம்மனசுக்களோடும், அர்ச்சியசிஷ்டவர்களோடும், இன்னஞ் சொல்ல வேண்டுமானால், அளவற்ற மகத்துவ நிறைந்த நித்தியக் கடவுளோடும் கலந்து பேசுகிறது.

தேகத்துள்ளிருந்தாலும் தேகத்தோடு கூடாததும், என்றும் சிரஞ்சீவியும் பரிசுத்தமானதுமான ரூபமில்லா ஓர் ஆன்மா மனிதனுக்குண்டு. சரீரம் மண்ணோடு மண்ணாய்ப் போகை

யில், ஆத்மா உயிருடனிருக்கும். அதனுடைய சத்தியும் தன்மையுமே அதன் நித்திய முடிவையும் கதியையும் தெளிவாகக் காட்டுகின்றன. அதன் நாட்டம் இவ்வுலக காரியங்களுக்கு மேற் பாய்ந்து, அதன் அவாவும் இச்சையும் காலவரையறைக் குட்படாம லிருக்கின்றன. நித்தியமாகிய எதிர்காலத்தையே நாடினதாய, அது நிகழ்காலத்தில் நேரும் அநித்திய காரியங்களில் திருப்தி கொள்வதில்லை.

மனித ஹிருதயத்தின் மத்தியை நன்றாக உற்றுப்பார். அதற்குள் நிறைந்து அதை வசப்படுத்த முயலும் ஆசாபாசங்கள் எத்தனை! பூர்த்தியடையா ஆசைகளால் அது அடித்துக்கொள்ளும் அடியைப் பார். அதன் காரணம் என்ன? அதற் கேன் அமைதியில்லை? அதற் கேன் இவ்வளவு கஷ்டமும், குழப்பமும், திருப்தியின்மையும்? ஆ, கூட்டிற்குள் அடைபட்ட சிங்கத்தைப் போல், அது கோபமும் மனக்கொதிப்பு முடையதாயிருக்கிறது. ஏனெனில் இவ்வுலகத்தால் கொடுக்கமுடியாத ஏதோ சில பெரிய காரியங்களுக்காக அது படைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இருதயத்திலும், இரண்டு விஷயங்களின் மேல் தணிக்கமுடியாத ஆவல் வேர் ஊன்றி நிலைத்திருக்கிறது. அவையாவன: சத்தியம், இன்பம்; இவை யிரண்டையும் அடைய ஆசைப்படுவன அறிவு, சித்தம் என்னும் இரண்டு ஆத்தும சக்திகளாம். இது என்னவென்று நினைக்கிறீர்கள்? இதுதான் உயரிய சத்தியமும், சகல இன்பத்துக்கும் ஊற்றுமாகிய கடவுளை யடைய வேண்டுமென்று ஆத்மாவிற்குள்ள பேராவல். எல்லா மனிதரிடமும் இந்த ஆவல் உண்டு; எல்லாரும் இதை அறிவர்; ஆனால் அநேகர் இன்னந் தெரிந்துகொள்ளாத தென்னவென்றால், இத்தகைய ஆவலை முழுவதும் பூர்த்திசெய்து, அத்தாபத்தைத் தணிக்க வல்லவர் கடவுள் ஒருவரே என்பதைத்தான். ஆதலால்தான் மனிதர் புத்தியில்லாமல் இந்த ஆவலைத் தணிக்கக் கருதி இவ்வுலகக் காரியங்களைத் தேடித்திரிகின்றனர்.

ஆஸ்தி பாஸ்தி, உடைமை, திரவியம், முதலியவற்றை நாடி, அவை குமிழிபோல் மறையும் வஸ்துக்கள் என்ப தறியாமல் அவைகளால் இன்பமடைய முயலுகின்றனர்; ஆனால் அவை சுத்த மாய்கை யெனவும், தம்மாவலைத் தணிக்கு மாற்றல் இல்லாதன வெனவும் அறிகின்றனர். புகழ், கீர்த்தி, உயர்பதவி, பெருமை, பட்டம் முதலியவற்றால் தங்களுக் கின்பங் கிடைக்குமென நினைக்கின்றனர்; ஆனால் இன்பத்துக்குப் பதிலாய் அவர்களுக்குக் கிடைப்பதெல்லாம் ஆசாபங்கம், பொய்க்காட்சி, மனக்கசப்பு, பொறாமை, விரோதம், அவநம்பிக்கை, மன எரிச்சல் முதலியவைகளே. வேறு சிலர் அடக்கமுடியாத இத்தாபத்தால் தூண்டப்பட்டு, சிற்றின்பத்தி லமுந்தித் திருப்தியடைய முயல்கின்றனர். தம் மைம்புல வாசையைத் தணிக்க மிருகங்களைப்போல் குடியிலும் வெறியிலும் காமக் குரோதத்திலும் தம் வாணாளைக் கழிக்கின்றனர். ஆனால் மன நிம்மதிக்குப் பதிலாய், மனக் குழப்பமும், இன்பத்திற்குப் பதிலாய், வேதனையும், வெறுப்பும், பயமும், பங்கமும் அவர்களைச்சார, சிலசமயங்களில் இவ்வுலக வாழ்க்கையில் இச்சையில்லாமல் தம்முயிரையே மாய்த்துக்கொள்கின்றனர்.

ஏன்? ஏன் இப்படி மனிதன் மனங்குழம்பி வாடுகிறான்? வயலில் மேயும் ஆடு மாடுகளைப் பார்; அவைகள் எவ்வளவு அமைதியாக இருக்கின்றன! அல்லது மகரந்தம் படிந்த மேனியையுடைய தேன் வண்டுகளைப்பார்; அவைகள் பூக்கள்தோறும் பறந்துபோய் தேனுண்டு அக்களிப்புடன் ரீங்காரம் பாடுகின்றன; ஏன் ஒவ்வொரு மிருகமும் பறவையும் பூச்சியும் அதனதன் நிலைமையில் திருப்தி யடைந்ததாய் விளங்குகிறது! ஆம், மனிதனைத் தவிர மற்றெல்லா உயிருள்ள ஜெந்துக்களும் மன நிம்மதியாய் வாழ்கின்றன. உலகிற் கரசனும், கண்ணுக்குத் தோன்றும் சிருஷ்டிகளுக்கெல்லாம் அதிகாரியுமாகிய மனிதன் மட்டும் ஏன் இவ்வாறிருக்கவேண்டும்? இவன் மட்டும் ஏன் இவ்வளவு கல்நெஞ்சனா யிருக்கவேண்டும்? இவன் மட்டும் ஏன் வருத்தக் குறியுடன் விளங்கவேண்டும்? மனிதர் மட்டும் ஏன் அழவேண்டும்? அவர்க ளிதயமட்டும் ஏன் கசிந்துருகவேண்டும்?

(தொடரும்.)

S. SELVA RAJU.

---

இனி வரும் காரியத்தைப்பற்றி முன் எச்சரிக்கைப்படாமல் இப்பிரபஞ்ச வாழ்வின்பேரில் மாத்திரம் விசாரங் கொண்டிருக்கிறது வியர்த்தம். நித்திய சந்தோஷங் குடிகொண்டிருக்கிற பரலோகத்தில் சேரத் தீவிரப்படாமல் வெகு சீக்கிரங் கடந்து போகும் இகலோகத்தை விரும்புகிறதும் வியர்த்தம்.



## CHRISTIAN DOCTRINE
## ஞானோபதேசம்.
### 13ம்-பாடம்.
### சத்தியம்.
(முன் தொடர்ச்சி.)

4. **வர்த்தகனும் மாடும்.**—சார்த்து என்னும் ஊரில் ஒருவர்த்தகன் இருந்தான். இவன் சந்தையில் ஆடுமாடு பிடித்து வர்த்தகஞ் செய்துவந்தான். ஒரு நாள் இவன் சந்தையில் பிடித்த மாட்டை வாங்க வந்தவர்கள்: "அதைச் சந்தையில் எவ்வளவுக்கு வாங்கினாய்?" என்று கேட்டபோது "ஒரு காசுங் குறையாமல் சரியாய் 90-ரூக்கு வாங்கினேன். 10-ரூ லாபம் வைத்துக்கொண்டு 100-ரூக்குக் கொடுத்துவிடுகிறேன்" என்றான். "மாடு, அவ்வளவு பெறாதே உள்ளதைச் சொல்" என்றார்கள். "நான் சொன்னது சத்தியமான வாக்கு. சரியாய் 90-ரூ; என் வார்த்தை பொய்யானால் இச்சணமே எனக்குச் சாவுவரட்டும்" என்றான். அவன் வாக்குப்படி அந்த க்ஷணமே செத்து விழுந்தான். அவ்விடத்தில் பெருங் கூட்டமாய்ச் சனங்கள் கூடி பரிதாபத்துடன் பேசிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் சந்தையில் அந்த மாட்டை முன் விற்றவனும் அங்கு போய், நடந்த சங்கதியைக் கேள்விப்பட்டு, "செத்தவன் 50-ரூக்குத்தான் என்னிடம் அதைவாங்கினான்" என்றான். இதைக் கேட்டவர்கள் மெய்யாகவே இது தேவ தண்டனையென்று நிச்சயித்தார்கள். (Noel.)

பிள்ளைகளே! நீங்கள் ஒருபோதும் இப்பேர்ப்பட்ட பாவத்தைக் கட்டிக்கொள்ளாதேயுங்கள். அநேகர் ஆடோ மாடோ, வேறு எந்தச் சரக்கோ வாங்கி விற்கும்போது பொய்யும், பொய்ச் சாக்ஷியுஞ் சொல்வது சர்வ சாதாரணம். இது மகாப்பாவம். இந்த மாடு, இந்த சரக்கு இவ்வளவு விலைக்குக் கொடுப்பேன் என்று சொல்வது உத்தமமாயிருக்குமே அன்றி, இதை இவ்வளவுக்கு வாங்கினேன்; அதை அவ்வளவுக்கு வாங்கினேன் என்று பொய் சொல்வது சரியல்ல.

5 **என்மேல் இடி விழட்டும்.**—ஜெர்மனி தேசத்தில் துர்மார்க்கனான ஒருவன் இருந்தான். இவன் ஒருநாள் திருடினதாக கோர்ட்டில் குற்றஞ் சாட்டப்பட்டபோது தான் திருடவில்லையென்று சாதித்ததுடன், வேண்டுமானால் சத்தியஞ்செய்யத் தயாராயிருக்கிறதாகவுஞ் சொன்னான். ஆனால் இவனுடைய துர் நடத்தையை ஏற்கெனவே அறிந்திருந்த நீதிபதி அதற்குச் சம்மதிக்கவில்லை; மேலும் இந்தக் கேசில் தகுந்த ருஜு இல்லாதபடியால் அவர் அவனை விடுதலை செய்வதற்குமுன் இனிமேல் எச்சரிக்கையாயிருக்கவேண்டு மென்று புத்திசொன்னார். குற்றவாளியோ "நான் இந்தக் குற்றத்தைச் செய்திருந்தால் என்மேல் இடி விழட்டும்" என்று சொல்லி வெளியே போனான். சில தினங்களுக்குப்பின் இவன் ஒரு நாள் தன் பிள்ளைகளுடன் வீட்டில் உட்கார்ந்திருக்கும்போது, இவன்மேல் இடி விழுந்து மரித்தான். அவனுடைய வீடுந் தீய்க்கு இரையானது. ஆனால் அவனுடைய பிள்ளைகளுக்காவது, அக்கம் பக்கத்து வீடுகளுக்காவது தீ விபத்தினால் யாதொரு அபாயமும் நேரிடவில்லை,

(Cat. en. ex.)

6. **இரண்டு புளியமரம்**—இரு குடியானவர்களுக்குத் தங்கள் வீட்டுப் பிழைக்கடையிலிருந்த இரண்டு புளியமரத்தைப்பற்றி வழக்கு உண்டாகி, பஞ்சாயத்தாருக்குத் தங்கள் விவாதத்தைத் தெரியப்படுத்தினார்கள். பஞ்சாயத்தார் பட்டாச் சிட்டா முதலிய தஸ்தா வேஜுகளைப் பரிசோதித்துப் பார்த்தபின் அந்த இரண்டு மரமும் சின்னப்பனைச் சேர்ந்ததென்று தீர்மானஞ் செய்தார்கள். இதைக்கேட்ட மற்றவன் சினங்கொண்டு இவனுடைய (சின்னப்பனுடைய) வீட்டுக்கு நெருப்பு வைக்காவிட்டால் நான் இராயப்பன் அல்லவென்று சத்தியஞ்செய்து வீட்டுக்குப் போனான்.

சில தினத்துக்குப்பின் இந்தப் பாதகன் இரா வேளையில் சின்னப்பன் வீட்டுக்கு நெருப்புவைத்துவிட்டு ஓடும்பொழுது கால்தவறி மூர்ச்சையாய்க் கீழே விழுந்தான். தெளிவு உண்டாகித்தன் வீட்டுக்குப் போனசமயத்தில், தன் வீடும் நெருப்புப் பிடித்து வெந்ததைக் கண்டு அழுது புலம்பினான். அவன் பெண்சாதி, பிள்ளைகள் இருக்க இடமின்றி பரதேசிகளானார்கள். இவன் சர்க்காரால் பிடிபட்டு சாகுமட்டும்

மண்ணுக்குப் போடப்பட்டான். ஆகையால் யாதொரு துர்ச்செய்கையைச் செய்வதாக ஆணையிட்டால் அதைச் செலுத்தக் கடமையில்லை. அப்படிச் செய்யும் எவனும் இரண்டு கனமான பாதகத்தைக் கட்டிக்கொள்ளுகிறான். (Noel.)

(14-ம் பாடம்.)

**8. பொருத்தனை அல்லது வார்த்தைப்பாடு.**

சர்வேசுரனுக்குப் பிரியமான ஒரு காரியத்தைச் செய்வதாக அவருக்கு வாக்குத்தத்தஞ் செய்வதே பொருத்தனை அல்லது வார்த்தைப்பாடாகும். பிள்ளைகள் பெற்றோருடையவும், மனைவி தன் கணவனுடையவும் துறவி தன் சிரேஷ்டருடையவும் உத்தரவின்றி யாதொரு பொருத்தனையைச் செய்யலாகாது.

1. செய்த பொருத்தனையை நிறைவேற்றல்.—ஒரு பத்தியுள்ள குடும்பத்தில் இரு சகோதரர் இருந்தார்கள். மூத்தவன் பட்டாளத்தில் பேர்கொடுத்து அநேகஞ் சண்டைகளில் செயங்கொண்டு சில வருஷத்துக்குப்பின் ரஜா பெற்றுக்கொண்டு தன் ஊருக்குப் போனான். அவன் வீடு போய்ச் சேர்ந்த காலத்தில் அவஸ்தையாய்க் கிடக்குந் தன் தம்பி பக்கத்தில் மகா துக்கத்துடன் அழுது பிரலாபிக்குந் தன் தாயைக் கண்டபோது துக்கசாகரத்தில் மூழ்கி அழத் தொடங்கினான். டாக்டர் பையன் பிழைக்க மாட்டானென்று சொல்லி வெளியே புறப்பட்டார். குருவானவரும் வியாதிஸ்தனுக்கு தேவத்திரவிய அனுமானங்களை நிறைவேற்றிக் கடைசி செபத்தைச் செபிக்கத் துவக்கினார். சற்று நேரத்துக்குள் வாலன் உயிர் விடுவானென்று சகலரும் எண்ணி அவனுக்காகச் செபித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது மூத்த குமாரன், தன் சகோதரன் பிழைத்தால் தான் சன்னியாசியாகி தேவ ஊழியத்தில் தன் காலமெல்லாஞ் செலவிடுவதாக சர்வேசுரனுக்கு வார்த்தைப் பாடு கொடுத்தான். சாகக்கிடக்கும் வியாதிஸ்தன் சடுதியில் மாற்றங்கொண்டு, சில தினத்துக்குள் பூரண சௌக்கியமடைந்தான். அப்போது சேவகனான மூத்தவன் தன் தாயாரைப்பார்த்து "அம்மா, தம்பி பிழைத்தால் நான் துறவியாய்ப் போவேனென்று பொருத்தனை செய்தேன். தம்பி பிழைத்துக்கொண்டான். இதோ இந்தப் பட்டயத்தை அவனுக்குக் கொடுத்து அவனைப் பட்டாளத்துக்குப் போகச் சொல்லுங்கள். நான் மடத்துக்குப் போகிறேன்" என்று விடைபெற்றுக்கொண்டு மடத்துக்குச் சென்று உத்தம சன்னியாசியாகி, இப்போது அவர் சிறு பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றி வருகிறார்.

(Hauterive.)

2. அரசனுடைய பொருத்தனை,—அங்கரி தேசத்து அரசனான மேலா என்பவர் துலுக்கருடைய படையால் தாக்கப்பட்டுத் தம் தேசம் அவர்களுடைய கையில் அகப்படுந்தறுவாயிலிருந்த பெரும் ஆபத்தான நேரத்தில் தம்மையுந் தம் தேசத்தையும் காப்பாற்றினால் தமக்குப் பிறக்கப்போகும் குழந்தையைத் தேவ ஊழியத்துக்கு ஒப்புக்கொடுப்பதாக சர்வேசுரனுக்குப் பொருத்தனை செய்து கொண்டார். துலுக்கர் அபஜெயப்பட்டு ஓடிப்போனார்கள். சில காலத்துக்குப்பின் பிறந்த பெண் குழந்தைக்கு மூன்று பிராயம் நடக்கும்போது அதைக் கன்னியர் மடத்தில் ஒப்புக்கொடுத்தார். மரிகிருதம்மாள் என்னும் இக்குழந்தை காலத்தில் பெரும் புண்ணியவதியாகி, அநேக புதுமைகளைச் செய்தபடியால் அவள் மரணத்துக்குப்பின் முத்திப்பேறு பட்டம் பெற பாக்கியம் பெற்றாள். (இவள் சரித்திரம்.)

3. பிரபுவும் திருடனும்,—பிளாண்டர் தேசத்துப் பிரபுவான அடலார்ட் என்பவர் அர்ச். யாகப்பருடைய கல்லறையைச் சந்திக்க திருயாத்திரையாய்ப் போனார். ஒரு நாள் பனிக்கட்டி உறைந்திருந்த உயர்ந்த மலைமேல் ஏறி மகா வருத்தத்துடன் பிரயாணஞ் செய்யும்போது திருடரால் தாக்கப்பட்டார். உடனே இவர் சர்வேசுரனைப்பார்த்துப் பிரார்த்தித்து இந்த ஆபத்துக்குத் தப்பினால் இவ்விடத்திலுள்ள திருடர் அனைவரையும் துரத்திவிட்டு திருயாத்திரைக்காரர் தங்கும்படிக்கான ஒரு சத்திரம் கட்டிவைப்பதாக பொருத்தனை செய்துகொண்டு, தன் சேவகருடன் திருடர்மேல் பாய்ந்து தாக்கினபோது அநேக திருடர் இறந்துபோக, மற்றவர்கள் அவ் விடத்தைவிட்டு ஓடிப்போனார்கள். இந்தப் புண்யப் பிரபு அப்போது செய்துகொண்ட பொருத்தனையைத் தன் சேவகருக்கு அறிவித்து, அர்ச். யாகப்பருடைய கல்லறையைச் சந்தித்துத் தமது தேசத்துக்குத்திரும்பினார். வழியில் கள்ளரால் தாக்கப்பட்ட இடம் போய்ச் சேர்ந்தபோது பெருத்ததோர் புயல் கிளம்பவே, அரசனும் குதிரைமேலிருந்து கீழே விழுந்தார். அந்நேரத்தில் இராசா சர்வேசுரனை உருக்கத்துடன் மன்றாடி இந்தப் புது ஆபத்துக்குத் தப்பித்துக் கொண்டால், தான் அவ்விடத்தில் தங்கி திருயாத்திரைக் காரருக்கு உதவி புரிவதாக வார்த்தைப் பாடு கொடுத்தார்.

அப்போது சர்வேசுரன் அவருக்குக் காணப்பட்டு, அருகாமையிலிருந்த கெபியில் 30 திருயாத்திரைக்காரர் திருடரால் கொல்லப்பட்டுக் கிடப்பதை அவருக்குக் காண்பித்து, இந்த மலைமேல் தம்முடையவும் தமது மாதாவுடையவும்பேரால் ஒரு தேவாலயங் கட்டும்படி கற்பித்தார். பிரபுவானவர் தன் தேசத்துக்குப் போகாமல் அங்கேயே இருந்து, தமக்கு வாசஸ்தலத்தைக் கட்டிக்கொண்டதுடன், காலத்தில் பிரமாண்டமான தேவாலத்தையும், திருயாத்திரைக் காரருக்குச் சத்திரஞ் சாவடி முதலியவைகளையுங் கட்டிவைத்தார்.

(Chisholm.)



## GNANAMANI III. PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 17-ம் அதிகாரம்.

**தேவதாஸ் நாயகர் மங்கிலியத்தைக் கையில் ஏந்தவே அவருடைய முகம் வெளுத்து நேத்திரங்கள் கலங்கின.**

தேவதாஸ் நாயகருடைய கலியாணத்திற்கு இன்னும் எட்டு நாள் இருக்கும்போதே விவாஹ உற்சவத்திற்காக வேண்டிய காரியங்களைச் சித்தஞ் செய்ய ஆரம்பித்தார்கள். அவருடைய ஊர் சிறு கிராம மாகையால் அதில் விசாலமான பங்களாக்களும் சபாமண்டபங்களு மில்லாத குறையினிமித்தம், பிரமாண்டமான பந்தல் கொட்டாய் எழுப்பவும் பெரிய கூடாரங்களை யடிக்கவும் நேரிட்டது. தேவதாஸ் நாயகருடைய ஸ்நேகிதர்களே இவ்வேலைகளை யெல்லா மெடுத்துக் கொண்டு, அதற்குவேண்டிய சாமான்களை வெவ்வேறு இடங்களிலிருந்து தருவித்து, விசித்திர விநோதகரமான பந்தல்களைப்போட்டு, பற்பல வர்ண காகிதங்களாலும் புஷ்பங்களாலும் சிங்காரித்தார்கள். கலியாணத்திற்கு இரண்டுநாளிருக்கும்போது, பொன் வெள்ளியாலும், பட்டுப் பட்டாவளிகளாலும் அலங்கரிக்கப்பட்ட உயரமான கோபுரங்களுக்கு ஒப்பான அம்பாரி அமைக்கப்பட்ட யானைகள் வந்து சேர்ந்தன.

முத்து மாணிக்கத்தால் அலங்கரிக்கப்பட்ட உயர்ந்த பட்டுடையை முதுகில் தரித்து பற்பல ஆபரணங்களால் சிங்காரிக்கப்பட்ட நாட்டியக் குதிரைகளும் அங்கு வந்து சேர்ந்தன. வாத்தியக்காரரையும், தம்பூர், மத்தளம், மிருதங்கம், வீணை முதலிய எண்ணிலடங்காத வாத்திய சாமான்களையும்; சஞ்சாகருவி, துளைக்கருவி, தோற்கருவி, நரம்புக்கருவி முதலிய இசைக்கருவிகளையும் சுமந்துவந்த ஒட்டகங்களும் ஊரில் சேர்ந்தன.

ஒற்றை, இரட்டைக் குதிரைகள் பூட்டப்பட்டவையும் பல வர்ணங்களால் சித்திரிக்கப்பட்டவைகளுமான கம்பீர இரதங்களும் அநேகமாகக் காணப்பட்டன. விசித்திர அலங்கிர்த சோபனையாய்ச் சிங்காரிக்கப்பட்ட பல்லக்குகளை போகிகள் சுமந்துகொண்டு வந்தார்கள்.

பரிமள வாசனையுள்ள புஷ்பங்களும், புஷ்பமாலைகளும், பூச் செண்டுகளும், விநோதமான இலை தழைகளும், கம கம வென்று நறுமணம் வீசும் வாசனை யிலைகளும், புற்களும் பெங்களூரிலிருந்தும் உதக மண்டலத்திலிருந்தும் கூடை கூடையாய் அனுப்பப்பட்டன.

அமிதமான மா, பலா, அனசு, வாழை தினுசு, கமலா, முந்திரி, பேரீச்சன், சீர்மை அத்தி முதலிய தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தரமான பழவர்க்கங்கள் வண்டிகள் நிறைய வந்திறங்கின.

கலியாண விருந்திற்கு வேண்டிய போஜன பதார்த்த சாமான்கள் வகை வகையாயும் தினுசு தினுசாயும் பற்பல ஊர்களிலிருந்து வண்டி

வண்டியாய்க் கொண்டுவரப்பட்டு அதற்காக நியமிக்கப்பட்ட இடத்தில் குப்பல் குப்பலாய்க் குவிக்கப்பட்டன.

பல இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்த மகாராஷ்டிர முதப்போக்கிகள் தங்களுக்கு ஆக்கியாபிக்கப்பட்ட உத்தரவு பிரகாரம் போஜன பதார்த்தங்களை முஸ்திப்பு செய்தார்கள். அந்தந்த வேலைக்குக் குறிக்கப்பட்டவர்களும் அதனுகளை கருத்தாய்ச் செய்தார்கள்.

ஊர் கோலம் செல்ல இருக்கும் தெருக்களெல்லாம் மகுட தோரணங்களாலும், ஆர்ச்சுகள் என்னப்பட்ட வளைவுகளாலும், பலவர்ணக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு, வீதிகள் ஒழுங்காக்கப்பட்டிருந்தன.

இப்போது சொல்லப்பட்ட குதிரை யானைகளும், புஷ்பம் கனிவர்க்கங்களும் இன்னும் விருந்திற்கு வேண்டிய போசன பதார்த்தங்களும் தேவதாஸ் நாயகருடைய ஸ்நேகிதரான சிற்றரசர், ஜமீன்தார் முதலிய கனதனவான்களால் அனுப்பப்பட்டதென்று அறிக.

தேவாலயமோ, பட்டுப்பட்டாவளிகளாலும், சுகந்த புஷ்பங்களாலும், பூ, இலை சேர்த்துக் கட்டப்பட்ட மாலைகளாலும், விநோதகரமாய் சிங்காரிக்கப்பட்டு, அன்று பெருந் திருவிழாப்போலக் காணப்பட்டது.

ஊரில் வந்து சேர்ந்திருக்கும் குதிரை, யானை, ஒட்டகம் முதலிய மிருகங்களையும், சித்தப்படுத்தி விசித்திரமாய் அலங்கரிக்கப்பட்டிருக்கும் பந்தல் கொட்டாயையும், கூடாரங்களையும், தேவாலயத்தின் அலங்காரத்திற்குரிய சோடினையையும், வீதியின் சிங்காரத்தையும், அவ்வூரார் மாத்திரமல்ல, ஒரு காத தூரத்திலிருந்தவர்களும் வந்து பார்த்து, அதிசய பிரமைகொண்டு திகைத்தார்கள்.

கலியாணத்திற்கு முந்தினநாள் இராத்திரி தேவதாஸ் நாயகர் தமது சேர்ந்தார், ஸ்நேகிதர், உறவினர் முதலியவர்களுடன் தம் ஊருக்கு வந்து சேர்ந்தார். இதற்கு முன் மூன்று நாள் அளவாய் ஏகாந்தத்தில் கடவுளைத் தியானித்து, தான் பெறவிருக்கும் ஞான விவாகமாகிற தேவத்திரவிய அனுமானத்தைத் தகுந்த விதமாய்ப் பெற்றுக்கொள்ள தேவ உதவியை மகா பக்தி விஸ்வாசத்துடன் மன்றாடிவந்தார்.

சூரியாஸ்தமனமாகவே, விசித்திர விநோதமாய் சிங்காரிக்கப்பட்டிருந்த பந்தல்களிலும் வீடுகளிலும் கூடாரங்களிலும் பற்பல வர்ணமுள்ள தீபங்கள் ஏற்றப்பட்டபோது, பட்டப்பகல்போல் காணப்பட்டது.

உடனே, வாத்தியக்காரர் தங்கள் தங்கள் வாத்தியக் கருவிகளை கையில் பிடித்து வாசிக்கத்தொடங்கினார்கள். கொம்பு தாரைக்காரரும், பிட்டில் வீணைக்காரரும், தம்பூர், டமார் முதலிய ஆயுதங்களை யெடுத்துத் தங்கள் முறைப்படி வாசிக்கும்போது சொல்லி முடியாத சந்தோஷ ஆனந்தம் அங்கு கூடியிருந்த ஜனக் கூட்டத்துக்கு உண்டானது. பாண்டு வாத்தியக்காரர் தங்கள் முறைப்படி வாசிக்க ஆரம்பித்தபோது அந்த ஊராரும் சுற்றுப் பக்கத்திலுள்ளவர்களும் அப்பேர்ப்பட்ட வாத்தியத்தை ஒருபோதும் கேட்டிராதபடியால், அந்த நூதன இராகத்தைக் கேட்கும்படி, ஒருவர் ஒருவரை பிடித்துத் தள்ளிக்கொண்டு முன்னுக்கு வந்தார்கள். இப்படியே கன்செட், தஞ்சாவூர் முதலிய வாத்தியங்களை வாசித்தபோதும், அந்நாட்டு ஜனங்கள் அடைந்த குதூகல உல்லாச சந்தோஷ அக்களிப்பு இவ்வள வவ்வளவென்று சொல்லுந்தரமல்ல. அன்று இராத்திரி நடுச்சாமம் வரைக்கும் வாத்தியக்காரர் மாற்றி மாற்றி வாத்தியம் வாசித்து, அவ்வூராரையும் விருந்தாடிகளையும் மேற்சொன்னபடி மகிழ்வித்தார்கள்.

தேவதாஸ் நாயகரோ வெனில், 'அன்று இராத்திரி சந்தடி சம்பாஷணையை விலக்கி, ஏகாந்த ஸ்தலத்தில் தனித்து நின்று செபத்திலும் தியானத்திலும் அதைக் கழித்து கலியாணத்திற்கு முன் செய்யவேண்டிய முஸ்திப்புகளைத் தீர்த்து, பாவசங்கீர்த்தனத்தை முடித்து, சின்ன தொபியாசைக் கண்டு பாவித்து ஜெபத்தியானத்தால் தேவ உதவியை மன்றாடிப் பிரார்த்தித்தார்

மறுநாள் சூரியோதயத்திற்கு முன்னடியே துயிலை விட்டெழுந்து தேவனை ஸ்தித்துப் போற்றி, வழக்கமாய்ச் செய்யும் ஜெபத் தியானங்களை முடித்து, கலியாணத்திற்குச் சித்தப்படுத்தப்பட்ட ஆடையாபரணங்களை யணிந்துகொண்டு, தனக்காக பந்து மித்திரர் கூடி காத்துக்கொண்டிருக்கும் ஸ்தலத்துக்குப் போய், அங்கு தன் பாட்டியாருக்கும் பெற்றோருக்கும் முன் முழங்காற்படியிட்டு, அவர்களுடைய ஆசீர்பெற்று, தேவாலயத்திற்குப் புறப்பட இருக்கும் சமயத்தில், அம்பாரிகளுடன் முஸ்



ஷ்திப்பாய் நிற்கும் யானை, குதிரை முதலிய வாகனங்களையும் பல்லக்கையும் அவ்விடத்திலே நிறுத்தச் சொல்லி, கலியாண முடியுமட்டும் யாதொரு வாத்தியஞ் செய்யாதபடிக்கு உத்தரவு கொடுத்து, குதிரை இரதத்தில் ஏறி தேவாலயத்திற்குச் சென்றார்.

ருக்மணியும் சரிகை பட்டுப் பீதாம்பரங்களையும், விலையுயர்ந்த வஜ்ஜிரகஜிதமான நகைகளையும் பூஷணங்களையும் பூண்டு, நறுமணம் கமழும் விவிதமான புஷ்பாலங்காரியாய்த் தோழிமாருடன் அழகிய குதிரை இரதம் ஏறி தேவாலயத்திற்குச் சென்றபின், தம்பதிகள் இருவரும் கோவில் வாசற்படி வந்தவுடனே, பிரமாண்டமான அந்தத் தேவாலயமும், அதற்கு முன் அமைக்கப்பட்டிருந்த பெரிய பந்தலும் ஜனத்திரட்களால் நிறையப்பெற்று, ஜெயகுசிகமான வாத்தியப் பாடல் கோவில் வாத்திய பெட்டியினின்று முழங்க, இருவரும் தங்களுக்கென்று சித்தப்படுத்தப் பட்டிருந்த ஸ்தானத்தில் பயபக்தியுடன் அமர்ந்தனர்.

குறிக்கப்பட்ட நேரத்தில் மூன்று குருப்பிரசாதிகள், கண்ணைப் பறிக்கும்படியான ஒளி வீசும் கற்கள் பதிக்கப்பட்ட பொன்னுடைகளை தரித்துக்கொண்டு பற்பல வர்ணமுள்ள வஸ்திரங்களைத் தரிக்கப்பெற்ற அநேக பரிசாரகராலும் அநேக குருப்பிரசாதிகளாலும் புடைசூழப்பட்டு, தம்பதிகளுக்கு முன் போய் நின்று, சிரேஸ்டகுரு, கலியாணப்பெண், மாப்பிள்ளை ஆகிய இருபாலாரையும் நோக்கி: "உங்களுக்கு மணந்துகொள்ள இஷ்டமோ?" என்று வினவும்போது, "இஷ்டந்தான்" என்று இருவரும் மொழிந்தார்கள். "வியாதியிலும், சுகத்திலும், சந்தோஷத்திலும், கஸ்தியிலும் ஒருவர் ஒருவரைவிடாமல் அன்னியோன்னியமாய் நேசித்து, சதையும் நகமும்போல ஒன்றித்து வாழுவோம்" என்னும் திருமறை வாக்கை தம்பதிகளின் வாயினின்று குருவானவர் பெற்றபின் விவாக பந்தனத்தால் இருவரும் பந்திக்கப்பட்டதாகச் சகலருக்கும் தெரியப்படுத்தி, திருமங்கிலியத்தை மந்திரித்து தேவதாஸ் கையில் கொடுத்தார்.

தேவதாஸ் நாயகர் மங்கிலியத்தைக் கையில் ஏந்தவே, விவாகபந்தனத்தால் தனக்கும் தனது பத்தினிக்கும் உண்டாகும் பல கடமைகள் அவருடைய மனதில் தோன்றினபடியால், தாமரை புஷ்பம்போல மலர்ந்து சிவந்து துலங்கிய அவருடைய முகம் சடுதியில் வெளுத்து அவருடைய நேத்திரங்கள் கலங்கினபோதிலும், தான் முழுமனதுடன் விஸ்வசித்து, போற்றி ஸ்துதிசெலுத்தி மன்றாடும் தயாபர சர்வேசுரன்பேரில் எல்லா பாரத்தையும் போட்டு, மனதில் அவரை நம்பிக்கையுடன் மன்றாடி பிரார்த்தித்த க்ஷணமே, அவருக்குண்டாயிருந்த பயபிராந்தங்களும், மனக்கலக்கமும் ஆதித்தனைக் கண்ட பனி மறைவதுபோல், மாயமாய்ப் பறந்துவிட்டன. உடனே தேவதாஸ் நாயகர் தைரியத்துடன் எழுந்து நின்று தேவகிருபையை மன்றாடி இரக்ஷணியத்தின் அடையாளமாகிய திருச்சிலுவையை வரைந்துகொண்டு (குருப்பிரசாதியின் ஸ்ரீகரங்களினின்று திருமங்கிலியத்தை ஆசாரத்துடன் பெற்று) ருக்மணியானவள் தன் பத்தினியென்று, அவள் கழுத்தில் அதைக் கட்டி, மும்முடிச்சுகளால் அதைப் பத்திரப்படுத்தி, பரலோகமும் பூலோகமும் அறிய, தனது பத்தினியை விட்டு ஒருபோதும் பிரிவதில்லையென்று அங்கு கூடியிருக்கும் சபையோரை சாக்ஷியாய்க் கூறி, திருமண வார்த்தைப்பாட்டைக்கொடுத்து முடித்தார்.

குருப்பிரசாதியானவர் தம்பதிகளுடைய திருமண வார்த்தைப்பாட்டை பெற்றுக்கொண்டு குறிக்கப்பட்ட தேவ வாக்கியங்களை உச்சரித்து அவர்களை ஆசீர்வதித்தபின் மற்றக் குருப்பிரசாதிகளாலும், பரிசாரகர்களாலும் சூழப்பட்டு மிகவும் பரிசுத்த பூசை பலியைத் திரியேக சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்க ஆரம்பித்தார்.

மதராசிலிருந்து அழைக்கப்பட்டிருந்த சங்கீதக்காரரும் பஜனைக்காரரும் இந்த மகா உற்சவத்துக்கு யுக்தமாய் முஸ்திப்பு செய்திருந்த பாடல்களை பல வாத்தியங்களுடன் பாடக் கேட்ட ஜனங்கள், தாங்கள் தேவலோகத்தி லிருப்பதுபோல் சந்தோஷானந்த பரவசங்கொண்டவர்களாய்ப், பீடத்தில் வீற்றிருக்கும் தேவாதி தேவனைப் போற்றிப் புகழ்ந்து ஆராதித்தார்கள்.

தம்பதிகள் இருவரும் இருமுறை பீடத்தடியில் சென்று முழந்தாட்படியிட, தேவ அதிகாரத்தை வகித்து, அவருக்குப் பிரதிநிதியாய் பீடத்தில் நிற்கும் குருவானவர் விசேஷ செபங்களைச் சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார். தம்பதிகள் இருவரும் அன்னியோன்னியமாயிருந்து ஒருவரை ஒருவர் நேசித்து சமாதானத்

துடன் வாழ்ந்து, பூர்வீககாலத்தில் தேவனுக்கு அமைந்து அவர் கட்டளைப்படி நடந்த முத்தரான ஸ்திரீ பூமான்களைப் பின்சென்று வாழ்ந்து, கடைசியாய் ஒருபோதும் முடியாத நித்தியானந்தத்தைப் பொழியும் பேரின்பம் நிறைந்த வீடாகிய மோக்ஷத்தில் சேரும் பாக்கியம் அவர்களுக்கு உண்டாக ஆசீர்வதித்தார்.

பூசை முடிந்து சகல சடங் காசாரங்களும் பூர்த்தியாகவே, குருப்பிரசாதிகள் பீடத்தை விட்டு விலகினர். தேவாராதனைக்காக வந்திருந்த சமஸ்த ஜனங்களும், கோவிலைவிட்டு வெளிப்பட்டு தம்பதிகளுக்காக காத்துக் கொண்டிருந்தார்கள்.

தேவதாஸ் நாயகர் தமது செபத் தியானங்களை முடித்து, தமது நேச பத்தினியுடன் தோழர் தோழிமார் புடைசூழ, கோவிலைவிட்டு வெளிப்பட்டார். அந்நேரத்தில் நாயகருடைய உற்றார் பெற்றார் சேர்ந்தார் சிநேகிதர் முதலியவர் தம்பதிகளிருவருக்கும் தங்கள் மகிழ்ச்சியைச் செலுத்தி, கலியாண வீட்டிற்கு பவனி செல்லத் தொடங்கவே, வாத்தியக்காரர் தங்கள் தங்கள் சங்கீத ஆயுதங்களுடன் ஒட்டகங்களின்மேல் ஏறி வாத்தியஞ் செய்துகொண்டு முன் சென்றார்கள். பிறகு, சிங்காரமாய் அலங்கரிக்கப்பட்டிருந்த குதிரைகள் நடன நடையாய்ச் செல்ல, அம்பாரி வைக்கப்பட்ட யானைகளும் ஒன்றுக்குப் பின் ஒன்றாய் டாங் டாங் என்று வெள்ளி மணிகளை அசைத்து ஆட்டிக்கொண்டு அடிமேல் அடியெடுத்து வைத்துச் செல்ல, தம்பதிகளின் பந்துமித்திரர் முதலியவர்கள் அநேக குதிரை இரதங்களில் ஏறி சவாரி செய்ய, கடைசியாய் பட்டுப்பட்டாவளிகளாலும் முத்து மாணிக்கங்களாலும், பரிமளம் வீசும் சுகந்த புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த பல்லக்கில், தேவதாஸ் நாயகரும் அவருடைய பத்தினி ருக்மணியம்மாளும் ஏறி உட்கார்ந்தார்கள். உடனே பாண்ட் வாத்தியக்காரர் மிகவும் ஆனந்த சந்தோஷக் களிப்பை பிறப்பிக்கும் இராகங்களுடன் வாத்தியத்தை வாசிக்கவே, பல்லக்கை சுமக்கும் போகிகள் உற்சாகத்துடன் மெல்லென நடந்தார்கள். அப்பொழுது சமுத்திரம்போல் கூடியிருந்த ஜனத் திரள் இந்த அரிதான காக்ஷியைக்கண்டு புளகாங்கிதராய், கோவில் வாசற்படி முதற்கொண்டு கலியாண பந்தல்வரைக்கும், பவனிசென்றார்கள். அப்போதைக்கப்போது, மல்லிகை, முல்லை, இருவாட்சி, சம்பங்கி முதலிய நானாவித பூ மலர்கள் பவனி செய்யும் சனங்கள்மேல் மாரிபோல் பொழியப்பட்டன.

இவ்வாறான ஆரவார சிறப்பு சம்பிரமத்துடன் ஊர்கோலம் சென்ற ஜனத்திரள் கலியாணப் பந்தலை சமீபிக்கவே, ஒட்டை, யானை, குதிரை முதலிய வாகனங்கள் ஒரு பக்கத்தில் நிற்க, குதிரை இரதங்கள் ஒவ்வொன்றாய் அங்குவந்து சேர்ந்து, அவற்றில் இருந்தவர்கள் இறங்கி தம்பதிகளுக்காக எதிர்ப்பார்த்திருந்தார்கள். போகிகள் பல்லக்கை பந்தலண்டை மெதுவாய் இறக்கவே, தேவதாஸ் நாயகர் தமது நேச பத்தினியோடு கைகோர்த்துக்கொண்ட மேரையாய் பல்லக்கினின்று இறங்கி, கலியாணத் தோழர் தோழிப் பெண்களால் சூழப்பட்டு, வீட்டில் பிரவேசித்தார்கள்.

விஸ்வாச நாயகர் உத்தம கிறிஸ்தவனாயிருந்தபடியால், திருச்சபையால் விலக்கப்பட்ட சொற்ப சடாங்காசாரமும் இந்தக் கலியாணத்தில் செய்ய சம்மதித்தவரல்ல. அநேக விஸ்வாசமற்ற கிறீஸ்துவர்களைப்போல, கலியாணத்திற்கு எது நல்ல நாளென்று பிராமணர்களுடைய ஆலோசனையைக் கேட்டவருமல்ல. நாமப் பொருத்தம், நக்ஷத்திரப் பொருத்தம், நாள் பொருத்தம், ஜாதகப் பொருத்த முதலியவைகளைக் கவனித்தவரு மல்ல. கட்டுக்கழுத்திகளே வரிசை கொண்டுவர வேண்டுமென்றும், தாலி கோர்க்கும் நூற்பிரி ஒற்றைப் படையாயிருக்கவேண்டு மென்றும், பந்தக்கால் நட வேண்டு மென்றும், அரசாணிப் பானைவைத்து அதன் பக்கத்தில் விளக்கேற்றி வைக்கவேண்டு மென்றும், நவதானிய முளைகளையுடைய பாத்திரங்களிருக்க வேண்டுமென்றும், இப்படிப்பட்ட அஞ்ஞானமும் அநாச்சாரமும் பிடித்த சாங்கியங்களைச் செய்யாததுடன், வழக்கம்போல அவைகளைச் செய்யத்தான் வேண்டு மென்றவர்களையும் செய்ய விட்டவரல்ல.

அன்றையத்தினம் விஸ்வாச நாயகர் குருக்களுக்கும் கன்னியருக்கும் அநாத பிள்ளைகளுக்கும் நேர்த்தியான விருந்திட்டு அவர்களை யெல்லாம் சம்பிரமமாய் விசாரித்தார். ஏழைகளுக்குத் திருப்தியாய் அன்னதானம் வஸ்திரதானமுஞ் செய்தார். ஆனதைப் பற்றி கலியாணத்திற்கு வந்தசகலரும் அதிருப்திகொள்ளாமல் சந்தோஷப்பட்டு, விஸ்வாசநாயகரை வாழ்த்திக் கொண்டாடினார்கள்.



அபிராமியம்மாளும் அபரூபமணியும் ருக்மணியை விட்டுப் பிரியாமலிருந்தார்கள். ஈசாக் உபதேசியாரும் பவுல் போதரும் விஸ்வாச நாயகருக்கு விடாத துணையாயிருந்து விருந்தாடிகளை பக்ஷத்துடன் உபசரிப்பதில் வேலையாயிருந்தார்கள். என்ன காரணத்தைப்பற்றியோ சலமோன் தலைமறைவாய் இருந்து விட்டான்.

அன்று காலை பால் பலகாரம் அருந்தி முடிவானபின் தம்பதிகள் இருவரும், நேர்த்தியாய் அலங்கரித்து சிங்காரிக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தவுடனே, கலியாணத்திற்கு அழைக்கப்பட்ட விருந்தாடிகளும் வேடிக்கைப் பார்க்க வந்தவர்களும் பந்தலில் உட்கார, கொஞ்சநேரத்திற்குள் அந்த பிரமாண்டமான பந்தல் நிறைந்து, வெகு ஜனம் வெளியே நின்றுகொண்டிருந்தார்கள். வாத்தியக்காரர் அடுத்தடுத்து தங்கள் தங்கள் முறைப்படி வாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தார்கள்.

தேவதாஸ் நாயகருடைய பந்துக்களும் சிநேகிதரும் விலை உயர்ந்த சரிகை பட்டுப் புடவைகளையும், சோமன் அங்கவஸ்திரங்களையும், மிக்க விலை யுயர்ந்த துப்பட்டா, தலைப்பாகை முதலிய பீதாம்பரங்களையும், மிக்க விலை உயர்ந்த வஜ்ஜிரம், ரவைகள் பதித்த மோதிரம், சரப்பளி, காசுமாலை, சந்திரஹாரம், அட்டிகை, காப்பு, கொலுசு, ஜிமிக்கி, புலாக்கு, கொப்பு, கொலுசு, மூக்குத்தி முதலிய நகை நினுசுகளையும் வெவ்வேறான சிறந்த சாமான்களையும் தம்பதிகளுக்கு வெகுமதி யளித்தார்கள். இதற்குப் பின் மத்தியான போசனம் வரைக்கும் பாட்டுக் கச்சேரி நடந்தேறினது!

அபரிமிதமான பேர் விருந்திற்கு வந்தபடியால் சூரியோதயம் முதற்கொண்டு இராத்திரி 10-மணி வரைக்கும் சமையல்காரர் சமயல் செய்துகொண்டே இருந்தார்கள். உணவுப் பொருட்களின் மிகுதியும், சுவையும், சுசிகரமும், வகைகளும் இவ்வளவ்வளவென்றும், இன்னின்னவையென்றும், இப்படி அப்படி யென்றும் சொல்லுந் தரமல்ல. இடைவிடாமல் விருந்தாடிகள் சாப்பிட்டுக்கொண்டே இருந்தார்கள்.

அன்றையத்தினம், தூரத்திலிருந்த சிநேகிதர்களிடமிருந்து தேவதாஸ் நாயகருக்கு வந்த தந்திகளும் கடிதங்களும் அனந்தம்.

ஒன்பது மணியாகவே, ஊர்கோலம் புறப்பட்டது. ஒட்டகங்களின்மேல் சில்லறை வாத்தியக்காரர் ஏறி வாத்தியஞ் செய்துகொண்டு சென்றார்கள். அவர்களுக்குப்பின் அலங்கரிக்கப்பட்ட குதிரைகள் நாட்டியஞ் செய்துகொண்டு நடந்துபோயின. உயர்ந்த உப்பரிகைக்கு ஒப்பான அம்பாரி வைக்கப்பட்ட யானைகளில் அநேகர் ஏறிப்போக கடைசியில் தம்பதிகள் இருவரும் பல்லக்கில் ஏறி ஊர்கோலம் போனார்கள். அந்நேரத்தில் கணக்கிலடங்காத வாத்தியங்கள் முழங்கின. வீதிகளில் தொங்கியிருந்த விசித்திரமான தீபங்களிலிருந்து பற்பல வர்ணமுள்ள வெளிச்சம் இரவைப் பகலாகச் செய்தது. அன்று இரவு விடப்பட்ட பலவிதமான பாணங்களும், கொளுத்தப்பட்ட மத்தாப்புகளும், அவுட் பாணங்களுக்கும் கணக்கில்லை. சுற் சுற் என்று மேலே பறக்கும் பாணங்கள் ஆகாசத்தில் வெடித்து, அதிலிருந்து புஷ்பம் போலவும், இலை, கனி போலவும், சிறு பக்ஷி, மிருகம் போலவும், மீன்கள், பாம்புகள் போலவும் காணப்பட்டன. வேறு பாணங்களிலிருந்து தேவதாஸ் நாயகருடையவும் அவருடைய மனைவி ருக்மணியினுடையவும் நாமதேயங்கள் நானாவிதமான பிரகாச வர்ணமாகக் காணப்பட்டன. தம்பதிகளுக்கு முன்வைக்கப்பட்ட புருஸ்வாணங்களிலிருந்து பற்பல வர்ணமான பொறிகள் வெளிப்பட்டு, அதிலிருந்து கிளம்பின சுகந்த வாசனை வீசும் மல்லிகை, முல்லை, ரோஜா புஷ்பங்கள் தம்பதிகளின்மேல் விழுந்தன.

பல்லக்குக்குமுன், கத்தி, தடிகளுடன் சிலம்பக்காரர் வெகு தமாஷாயும் சாமர்த்தியமாயும் விளையாடிக்கொண்டு போனார்கள். மல்யுத்தத்தில் கைதேர்ந்தவர்கள் கஸரத்து பிடித்துக்கொண்டு போனார்கள். தம்பதிகளின் பந்துக்களுடைய வீட்டுப்பக்கமாய் ஊர்கோலம் போகும்போது அந்தந்த வீட்டுக்கு எதிரே, அனேக சிறுவர்களும் சிறுமிகளும் நின்றுகொண்டு, இன்பமான பாட்டுக்களையும் கவிகளையும் பாடி, பூமலர்களைத் தம்பதிகளின்மேல் இறைத்து பன்னீர் தெளித்தார்கள். இவ்வாறு வெகு ஆராவார சிறப்புடன் மூன்று மணி நேரத்திற்குப்பின் ஊர்கோலம் கலியாண வீட்டிற்கு வந்து சேர்ந்தது.

ஒரே நாளில் கலியாணத்தை முடிக்கும்படி விஸ்வாசநாயகர் முன்னதாகச் செய்திருந்த

ஏற்பாடு தேவதாஸ் நாயகருடைய சிநேகிதரின் விடா வேண்டுகோளின்மேல் மாற்றப்பட்டு, மூன்று நாள் வரைக்கும் மிகவும் சிறப்பான வைபவத்துடன் கலியாண உற்சவம் நடந்தேறிற்று. கலியாணத்திற்கு வந்திருந்த விருந்தாடிகள் அனைவோரும் தங்கள் தங்கள் ஊர்களுக்கு திருப்தியாய் திரும்பினார்கள். ஏழைகளோ, விஸ்வாச நாயகரையும் அவருடைய குமாரனையும் வாழ்த்திப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.—அவர்களுடைய உதார குணத்தைக்கண்டு, வாத்தியக்காரரும், மற்ற சிப்பந்தி வேலைக்காரரும் கூலியுடன் வெகுமானங்களும் பெற்று தங்களூருக்குப் புறப்பட்டார்கள். இவ்வாறு தேவதாஸ் நாயகருடைய கலியாண மகோத்ஸவம் சிறப்பலங்காரமாயும் சகலருக்கும் திருப்தியாயும் முடிவுபெற்றது.

(இன்னும் வரும்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.
## க்த்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

### தெய்வத்தால் ஸ்தாபிக்கப்பட்ட கத்தோலிக்கு வேதத்தின் லட்சணங்கள்--புறமதஸ்தர்களுடன் நடமாட்டம்.

1. உரோமான் கத்தோலிக்கு சத்திய திருச்சபையானது சகல மனிதர்களின் இரட்சண்யத்திற்காக, தெய்வத்தால் ஸ்தாபிக்கப்பட்ட வேத மென்றறிந்திருப்பது ஒழுங்கு.

2. சர்வேசுரன் ஒருவராயும் சத்தியம் ஒன்றாயு மிருப்பதுபோல, மேற்சொன்ன வொன்றே சத்திய வேதமென்றறிந்திருப்பது ஒழுங்கு.

3. இராஜ குலத்திலுதித்த சேசுநாதரால் ஸ்தாபிக்கப்பட்ட வேதம் ராஜ வேதம் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

4. மெய்யான வேதத்திற்குரிய ஏழு லட்சணங்களையும் கத்தோலிக்கு வேதம் ஒன்றில் மாத்திரம் காணக்கூடும் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

(அவ் விலட்சணங்கள் எவை யெனில்: (1) தெளிவான போதகம், (2) ஒன்றற்கொன்று நேர் விரோதமில்லாத போதகம், (3) எப்படிப்பட்ட பாவிக்கும் தைரியத்தைக் கொடுத்து அவன் கடவுளை நாடித் தேடச்செய்யும் போதகம், (4) நிர்மலமான நல்லொழுக்கங்களைப் போதிக்கும் போதகம், (5) என்றும் சீர்கெடாத போதகம் (6) சரித்திர ஆதாரங்களால் நிலைநாட்டப்பட்ட போதகம், (7) சகல அந்தஸ்தினருக்கும் பொதுவான போதகம்.

5. ஒருகோடி எண்பது லட்சம் பேர் தங்கள் உயிரைக் கொடுத்து இந்தச் சத்திய வேதத்தின் உண்மையை ஒப்பித்திருக்கிறார்கள் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

6. நமதாண்டவருடைய ஸ்தானபதியாகிய பரிசுத்த பாப்பானவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் சபைதான் கத்தோலிக்குச் சபை யென்றறிந்திருப்பது ஒழுங்கு. (மற்றப்படி புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொண்டதுபோல் என்னென்னத்தை யநுசரித்தாலும் அதுவெல்லாம் வியர்த்தம்.)

7. திருச்சபைத் தலைவருக்கு விசுவாசம், சன்மார்க்க முதலிய விஷயங்களில், தேவ ஏற்பாட்டின்படி வழுவாவரம் உண்டென் றறிந்திருப்பது ஒழுங்கு. (மற்றப்படி தான் போதிக்கும் போதனையைத் தானே திட்டமா யறியாதவனை நம்பினால், மண் குதிரையை நம்பி ஆற்றிலே இறங்கினவன் கதியாமே.)

8. திருச்சபை விசுவசித்துப் போதிக்கும் போதனைகளைக் கிறிஸ்துவர்கள் தெய்வ வாக்காகப் பாவித்து கண்டிப்புடன் விசுவசிப்பது ஒழுங்கு. (இதுவே கிறிஸ்துவர்களுக்கும் புறமதஸ்தர்களுக்கும் உண்டான விசேஷ வித்தியாசம். புறமதஸ்தர்கள் இவரிப்படிச் சொல்லுகிறார், அவரப்படிச் சொல்லுகிறார், அது எப்படியிருக்கும் நான் இப்படி நினைக்கிறேனென்பார்கள். கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களோவெனில், விசுவசிக்க வேண்டிய சத்தியங்கள் இன்னின்னவை யென்று தெய்வமே பூலோகத்திற்கு வந்து வெளிப்படுத்தியிருக்கிறபடியால், தங்கள் கேவலமான புத்திக்கு அப்போதனைகள் எட்டினாலும் சரி, எட்டாவிட்டாலும் சரி, தெய்வ வாக்குக்கு மறுவாக்கு கிடையாதென்று அதியோக்கிய பத்தியாய் விசுவசிக்கிறார்கள்.)



9. விசுவசிக்கவேண்டியிராத மற்ற விஷயங்களில், தங்கள் தங்கள் அபிப்பிராயப்படி நடக்கக் கிறிஸ்துவர்களுக்குச் சுதந்திர முண்டென்றறிந்திருப்பது ஒழுங்கு.

10. கிறிஸ்துவனா யிருக்கும் பாக்கியம்—'ஆயிரங்கோடி அக்கியானிகளுக்கில்லாத பாக்கியம்—தனக்குக் கிடைத்தது தேவ தயவென் றறிந்திருப்பது ஒழுங்கு

11. கத்தோலிக்கு வேதத்தைப்பற்றி எப்போதும் பெருமை கொள்வது ஒழுங்கு.

12. நம தாண்டவராகிய சேசுக்கிறிஸ்து நாதரை மெய்யான தேவன் என்று அங்கீகரிப்ப தொன்றில்தான், அவருக்குரிய மகிமைப் பிரதாபம் யாவும் அடங்கியிருக்கிறதென் றறிந்திருப்பது ஒழுங்கு. (இக்காலத்தில் இந்துக்களும், வேதாந்திகளும், தியாசபிஸ்களும், சர்வ மதமும் ஒன்றேயென்று எண்பிக்க, அம்மதத்தின் ஸ்தாபகர்களைப் பற்றிப் புகழ்ந்து பேசி, சேசுக்கிறிஸ்துநாதரும் ஓர் சிறந்த புண்ணிய புருஷர் என்று சொல்லித் தாங்களும் அவரைச் சார்ந்தவர்களே யென்பார்கள். கிறிஸ்துவர்கள் இதைக்கேட்டு ஏமாறலாகாது. சேசுக்கிறிஸ்துநாதர் நிர்மலமான தெய்வம் என்று அவர்கள் அங்கீகரிக்குமட்டும் அவர்கள் அவரைச் சார்ந்தவர்களன்று.)

13. இந்துக்களுடைய போதனைகளும் ஏற்பாடுகளும் புத்திக் கிசைந்தவைகளல்லவென்று, அவர்கள் கல்விமான்களே வெளிப்படுத்தி யிருக்கிறார்களென் றறிந்திருப்பது ஒழுங்கு.

14. கத்தோலிக்குத் திருச்சபைதான் ஐரோப்பா சீமையை மனந்திருப்பி அதை நாகரீகத்திற்குக் கொண்டுவந்ததென் றறிந்திருப்பது ஒழுங்கு.

15. ஐரோப்பா சீமையானது கத்தோலிக்கு வேதாநுசாரந் தப்பினதால்தான் சீர் கெடலாச்சுதென் றறிந்திருப்பது ஒழுங்கு.

16. கத்தோலிக்குத் திருச்சபையைக் கைப்பற்றிக் கொள்ளுவதால் தான் இந்தியா க்ஷேமமடையக் கூடுமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

17. கத்தோலிக்குத் திருச்சபையின் போதனையானது இந்தியர்களின் மனநாட்டத்திற்கும் உள்ளுணர்ச்சிக்கும் இசைந்ததென் றறிந்திருப்பது ஒழுங்கு.

18. இந்திய நாடானது இரட்சகரை அங்கீகரியாததற்குக் காரணம் அதனிடத்துள்ள ஜாதி ஆங்காரமும் பொய்யான தேச பக்தியு மென்றறிந்திருப்பது ஒழுங்கு.

19. இந்தியா இவ்வளவாவது சீரடைந்திருப்பது கிறிஸ்துவ நன்மாதிரிகையும், கிறிஸ்துவ போதனைகளின் சாரத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும் ஆங்கிலேய படிப்பும் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

20. மிருகங்களுக்குண்டான சுதந்திரம் முதலாய் மறுக்கப்பட்டுத் தாழ்ந்த ஜாதியாரென்று இகழப்பட்டு வரும் ஆறு கோடி இந்தியர்கள் கிறிஸ்துவேதம் ஒன்றினால்தான் சீரடையக்கூடுமென் றறிந்திருப்பது ஒழுங்கு (அரசாங்க சுதந்திரங்களைப் பூரணமாயடையும்படியாகவும், ஜாதி அடிமைத்தனத்தை நிராகரித்துத் தள்ளும் புத்திமான்களென்று தங்களைக் காட்டிக் கொள்ளவும், இந்துக்கள் தற்போது தாழ்ந்த ஜாதியாரை உயர்த்த முயற்சி செய்வதாக நடிப்பார்கள். இதெல்லாம் முக்கால்வாசி பிரசங்கமேடையிலும் வருஷாந்திரரிபோர்ட்டிலும்தான். வாய்ப்பேச்சால் பந்தலாய்விடுமா? ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவுமா? ஆகையால், காரியத்தில் ஒன்றுமில்லை. கிறிஸ்துவ குருமார்கள்—ஆம், கிறிஸ்துவ குருமார்கள்தான் தாழ்ந்த ஜாதியாரை உயர்த்துகிறவர்கள். கீழ்க்குலத்தில் பிறந்து தன்னை நீசனென்றெண்ணி மனமடிவடைபவனுக்குக் கிறிஸ்துவ போதனையானது அவனது யதார்த்தமான நிலைமையைக் காட்டி நீ சர்வேசுரனுடைய பிள்ளை, அனைவருக்கும் ஒரே பொதுபிதா, ஒரே கட்டளை, ஒரே நீதி; நீயும் நல்லொழுக்கத்தைக் கையாடிவந்தால், உயர்ந்தோருக்குச் சமானமாவாயென்று உற்சாகத்தைப் பிறப்பிக்கின்றது.)

21. தாழ்ந்த ஜாதியாரென்று நிராகரிக்கப்பட்டு வந்தவர்களுள் பலர் கிறிஸ்துவேதத்தைக் கைக்கொண்டு சீரடைந்திருக்கிறார்களென்றறிந்திருப்பது ஒழுங்கு.

22. கிறிஸ்துவர்கள் முன்னுக்கு வரக்கூடிய வரையில் உதவி செய்வது ஒழுங்கு. (பிராமணர்கள் ஒருத்தருக் கொருத்தர் உதவியாயிருந்து தங்களுள் அநேகருக்கு உத்தியோகந்தேடி வைப்பார்கள். ஏழையநாத பிள்ளைகளுக்கு உணவூட்டி படிக்க வைப்பார்கள். இதர ஜாதியார் முன்னுக்கு வரச்சபைகளும்சங்கங்களுமுண்டு. பிராமணருக்கோ அப்படிப்பட்ட சங்கமே கிடையாது. ஒவ்வொரு பிராமணனும் ஒரு சங்கமாயும், சகாய புருஷனாயும், ஏழைகளின் அடைக்கலமாயுமிருக்கும்போது இன்னும் சபையேன்? சங்கமேன்? கிறிஸ்துவர்களுள் இப்படிப்பட்ட பரஸ்பரநேசம் கிடைக்குமா? தாமும் தன் பெண்சாதி பிள்ளைகளும் சுகமாய் வாழ்ந்தால் போதும். நமது உத்தியோக சாலையில் அவனை யிவனைச் சேர்த்தால், நமது சுயநலத்திற்கே பின்னமுண்டாகும்; என்னத்திற்கு அந்த தொந்தரவெல்லாம்; என்று குருசுவாமிமார்கள் சிபாரிசுக்கடிதம் கொடுத்தால்கூட சாக்குபோக்குச் சொல்லி ஒழித்துவிடுவார்கள். இது மாத்திரமோ! சில கிறிஸ்துவர்கள் உதார குண சீலர்களான பிராமணர்கள் முதலிய இந்துக்களுடைய ஆதரவால் ஒரு உத்தியோகத்தையடைந்து காலட்சேபம் செய்து வந்தால், அவர்களுடைய பூர்வீக மிப்படி, அந்தஸ் திப்படியென்று அப்பிராமணர்களுக்கும் இந்துக்களுக்கும் சொல்லி பழித்துப் பேசுகிறவர்கள் எத்தனையோ பேர்? "நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்கும்நேசத்தினால் நீங்கள் என் சீஷர்களென்பதாக உலகம் அறிந்துகொள்ளும்" என்று நமது திவ்விய ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளினார். அப்படியானால் இவர்கள் ஒருவரை யொருவர் வெறுக்கும் வெறுப்பையும், பகைக்கும் பகையையும் உலகம் பார்த்து இவர்களை யாருடைய சீஷர்களென்று அறிந்து கொள்ளும்?)

23. வேத காரியங்களை நன்குயறிந்து, புறமதஸ்தர்கள் நல்ல கருத்துடன் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க மாறுத்தரம் சொல்வது ஒழுங்கு.

24. தனக்குத் தெரியாத வேத காரியங்களைப் பற்றிப் பேசத் துவக்கி, தப்புந் தவறுமான விஷயங்களைச் சொல்வதைப் பார்க்கிலும், தனக்குத் தெரியாதென்று சொல்லி விடுவது ஒழுங்கு.

25. அடக்கம், சாந்தம்; நிதானத்தோடு வாக்குவாதம் செய்வது ஒழுங்கு.

26. வேத காரியங்களை உண்மையாய் அறிய விரும்புகிறவனுக்கு யாதொரு நல்ல புஸ்தகத்தை வாசிக்கக் கொடுப்பது ஒழுங்கு.

27. ஒருவன் வேத விரோதமாய்ச் சொல்பவைகளைக் கண்டிப்பதைவிட, தன் வேதக் கொள்கைகளை யெடுத்துக் காட்டச் சொல்லி அவைகளிலுள்ள தப்பறைகளைக் காட்டுவது ஒழுங்கு.

28. மூடன் முப்பதுகேள்வி கேட்கக்கூடும். ஆனால் புத்திமான் ஒன்றுக்குமாத்திரம் சமாதானம் சொல்லக்கூடுமென்றறிந்திருப்பது ஒழுங்கு.

29. தனக்கு விளக்கமா யிருக்கும் ஒரு சத்தியத்தைப் புறமதஸ்தர்கள் கண்டுபிடியாவிட்டால், அது தேவ வெளிச்சக் குறைவால் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

30. திருச்சபைக்கு விரோதமாகச் சொல்லும் தூஷணங்களை மறுத்து, உண்டான ஞாயத்தைக் காட்டுவது ஒழுங்கு. (புரொட்டெஸ்டாண்டார் நாஸ்தீகர்கள் முதலான கிரந்தாசிரியர்கள் தாங்கள் எழுதிய இங்கிலாந்துதேச சரித்திரங்களிலும், இலக்கிய புஸ்தகங்களிலும், நாவல்களிலும் கத்தோலிக்குப் போதனைகளுக்கும், குருமார்களுக்கும், முக்கியமாய்ச் சேசுசபை குருக்களுககும், கன்னியர் மடங்களுக்கும் விரோதமாய்ச் சேர்த்திருக்கும் பொய் புளுகுகளைப் புறமதஸ்தர்கள் பகுத்தறியத் தெரியாமல், அல்லது வேதபோதனைக்கும் அப்போதனைக்கு விரோதமாய் நெறி கெட்ட சிலர் நடந்த நடத்தைக்கும் சம்பந்தங் கிடையாதென்றறியாமல், கத்தோலிக்கு வேதத்தின் மட்டில் மாறுபாடான அபிப்பிராயங் கொள்வார்கள். சமயா சமயத்தில் அவர்கள் வாய்ப்பிறப்பாலேயே அதை அறிந்துகொள்ளலாம். விவேகமுள்ளவாகள் அவர்களுக்கு, உண்டான ஞாயத்தை யெடுத்துக் காட்டுவது நன்று.)

(இன்னும் வரும்.)



# CORRESPONDENCE.

# கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும், தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக்கோள்வதற்கே. வெளிப்படுத்துவதற்குத் தகுதியற்றனவென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்.]

## திருமலைபுரம் வரதாக்ஷிமலை.

## அர்ச். லூர்துமாதா கோவில் திருவிழாச் சிறப்பு.

திருநெல்வேலி ஜில்லா, சேர்ந்தமரத்துக்கடுத்த திருமலைபுரம் வரதாக்ஷிமலைமேல் கட்டப்பட்டிருக்கும் தேவாலயத்தில் 1915-ம்௵ ஜனவரிமீ 23௳ கொடியேற்றப்பட்டு, நவநாட்களில் காலை, மாலை ஜெபம் பிரார்த்தனை முதலிய நற்கிரிகைகள் நடத்தப்பட்டன. 31௳ இரவு திரிச்சிராப்பள்ளி சேசு சபை அதிசிரேஷ்டர் அவர்களான சங்கைக்குரிய(Very Rev. Fr. R. L. Besse, S. J.) சுவாமி அவர்களால் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டபின், பிரகாசமான பல வர்ண மத்தாப்பு வாண வேடிக்கை முதலிய தீவத்தி வெளிச்சத்தில், அர்ச். லூர்துமாதா சுரூபம் அழகிய ஓர் சப்பரத்தில் எழுந்தேற்றஞ் செய்து சுற்றுப்பிரகாரம் நடந்தது. அதன்பின் நேரப் போக்குக்காக "கற்பின் மகிமையைப்பற்றி" "Saint Genevieve" ஜெநேவிப்பம்மாள் சரித்திர டிராமா நடிக்கப்பட்டது. பிப்பரவரிமீ 1௳ காலை திவ்விய பூசைக்குப் பின் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டு, சப்பர சுற்றுப் பிரகாரத்துடன் திருநாள் மங்களகரமாய் முடிவுபெற்றது. இவ்வைபவத்திற்காக திருச்சி, திருமயம் முதலிய பல இடங்களிலிருந்து திருயாத்திரைக்காரர்கள் அநேகம்பேர் வந்திருந்தார்கள். மலையின் மேல் இரவுகாலத்தில் திருயாத்திரைக்காரர் தங்கியிருக்க கோவிலின் முன்பக்கத்தில் ஓர் மண்டபம் கட்டுவதற்காக இம்மாதம் வேலை ஆரம்பத்திருக்கிறபடியால், இதை வாசிக்கும் நண்பர்கள் தங்களா லியன்ற பொருளுதவி செய்தால் பெருமுபகாரமா யிருக்கும். சங்கைக்குரிய சேசுசபை அதி சிரேஷ்டர் அவர்களின் வருகைக்காக வென்று சேர்ந்தமரம் கன்னியர் மடத்தில் கல்வி பயிலும் சிறுமிகளால் "கோர்ட்டு வழக்கால் நேரிடும் குடி மோசம்" என்பதைப்பற்றி நடத்தப்பட்ட டிராமா எல்லோராலும் மெச்சத் தக்கதாயிருந்தது.

Mary's Hall
Sendamaram
17—2—15.
K. V. Francis Xavier.

## நெல்லூர் கபாடிபாளையம்.

## அர்ச். காணிக்கை மாதாவின் திருநாள் கொண்டாட்டம்.

ஐயா,

மிகவும் வந்திக்கத்தக்க நமது அதிமேற்றிராணியாராகிய அருளப்ப ஆலன் ஆண்டவர்களின் அருமைவாய்ந்த அன்பினால் இப்பாளையமானது நாளுக்குநாள் நல்லொழுக்கங்களிலும் நாகரீகத்திலும் சிறந்து விளங்குகின்றது. அதேதெனில் இந்நல்ல மேய்ப்பனானவர் இவ்வூரில் எற்படுத்திய அர்ச். சூசையப்பர் மடத்துக் கன்னியர்களின் ஜெப தவங்களாலும் சாங்கோபாங்க நடத்தையாலு விடாமுயற்சியாலுமே இவ்வூர் இவ்வள்வு மேம்பாடடைந்து வருக்கின்றது. இவர்கள் எவ்வித கஷ்டநஷ்டங்களுக்கும் கொஞ்சமும் பின்னிடையாமல் ஓயாது வருந்தி உழைத்துச் சன்மார்க்கத்தைப் படிப்பித்துச் சிதருண்டு திரிபவர்களை நல்லாயனின் மந்தையில் கொண்டுவந்து சேர்த்துவருகிறார்கள்.

இதுவுமன்றி ஷை கபாடி பாளையத்திலுள்ள கோவில் திருநாளான அர்ச். காணிக்கைமாதாவின் திருநாள் சென்ற பிப்ரவரி மாதம் 2-ம் தேதியன்று வெகு சிறப்பலங்கார வேடிக்கை விநோதங்களுடனும் பக்திப் பற்றுதலுடனும் நடந்தேறிற்று. அதெப்படியெனில்: மேற்சொல்லிய திருநாளன்று இரவு அர்ச். காணிக்கைமாதா சப்பரத்துடன் இன்னு மிரண்டு சப்பரங்களைத் தயாரித்துப் பார்ப்பவர் கண்ணைப் பறிக்கும்வண்ணம் அவற்றை யலங்கரித்து எழுந்தேற்றஞ் செய்து, சங். ஆலன் குருப்பிரசாதியவர்கள் சப்பிரத்தின்

முன் நடக்க, அவருக்கு முன் உத்தரீய சபையார் எரிகிற மெழுகுவர்த்திகளைத் தங்கள் கரத்தேந்தி இருவரிசையாய்ச் செல்ல, சிலுவைக் கொடி எல்லோருக்கும் முன் கொண்டுபோகப்பட்டது. சப்பரங்களுக்குப் பின்னால் ஆண் பிள்ளைகள் வேறாகவும் பெண்பிள்ளைகள் வேறாகவும் ஜெபித்துக்கொண்டு வெகு பக்தியுடன் பின் தொடர்ந்து போனார்கள். சப்பரம் எழுந்தேற்றமான சேரியின் வீதிகளெல்லாம் மகரத் தோரணங்களாலும் இடையிடையே வினோத வேலைப்பாடான பந்தல்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அவ்வீதிகளிலுள்ள வீடுகள்தோறும் போட்டிருந்த விளக்குகளும் செய்திருந்த சோடினைகளும் கொஞ்சமல்ல. ஷை குருசுவாமியாரவர்கள் இம்மகோற்சவம் பக்தி சிறப்புடன் நன்கு நடைபெறும் பொருட்டுச் சுற்றுப் பிரகாரத்தின் போது முன்னும் பின்னும் அடுத்தடுத்துச் சென்று ஒழுங்கீனர்களைக் கண்டித்துப் புத்தி சொல்லிவந்தார். ஓர் பந்தரின்கீழ் அர்ச். அந்தோனியார் பக்தபால்ய சபா சங்கத்தார் அர்ச். கன்னித்தாயாரின் மாசில்லாத உற்பவத்தைப் பற்றியும், அவளது நாமதேயத்தைப்பற்றியும் பிரசங்கித்தனர். வேறோர் பசும் பந்தலின்கீழ் சுரூப வணக்கத்தைப்பற்றியும் வேத புத்தகங்களை வாசிப்பதைப்பற்றியும் உபந்நியாசிக்கப்பட்டது. இவ்வித ஆரவார சிறப்புகளோடு சுற்றுபிரகாரம் நடந்தேறி முடிவுபெற்றது. மறுநாள் சங். ஆலன் சுவாமிகளால் திவ்விய பூசை செய்யப்பட்டு அனேகர் சற்பிரசாதம் உட்கொண்டதுமல்லாமல் பூசைக்குப் பின் சுமார் 20-பேர் கர்மேல் உத்தரீய சபையிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இம்மகோற்சவம் என்நாளும் நடந்தேற ஆண்டவர் கிருபை புரிவாராக.

இப்படிக்கு,
M. ஆரோக்கியசாமி,
நெல்லூர்.

[கண்ணுற்று மகிழ்ந்தோன், வேம்பார்;
அர்ச். செபஸ்தியா முனீந்தரரின் தாசன், வீரபாண்டியன் பட்டணம்;
கண்டு விசனித்தோன், மயிலை, ஆகிய இம் மூவருடைய கடிதங்களும் அடுத்த மாசத்திய ஆயனில் பிரசுரிக்கப்படும். ப—ர்.]

## அர்ச். வாரத்தின் பெரிய வியாழக்கிழமை.

ஏன் இன்றையத்தினம் தேவாலயங்களில் தேவநற்கருணை ஸ்தாபிக்கப்பெற்று, இரவும் பகலும் இடைவிடாமல் விஸ்வாசிகள் தேவ நற்கருணையைச் சந்திக்கிறார்கள்? ஏனெனில், நமது திவ்விய கர்த்தர் நமக்காக நிஷ்டூரப் பாடுகள் பட துவக்கினது அன்றுதான். மேலும் அன்றைய இராத்திரி முழுதும் ஒரு சிற்றறையில் அடைபட்டு சேவகராலும் ஊழியராலும் அவர் பட்ட நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாகச் சகல கிறிஸ்துவர்களும் அருடைய பாடுகளைத் தியானித்து தேவ நற்கருணை சந்திக்கிறார்கள்.

உருக்கத்தோடும் உத்தம மனஸ்தாபத்தோடும் தேவநற்கருணை சந்திப்பதற்கு ஏதுகரமான ஒரு புஸ்தகம் உண்டு. அது உங்களுக்குத் தெரியுமா? "நற்கருணை பேழைப் புறா" என்பது அதன் பெயர். இதில் 31 சந்திப்புகள் உண்டு. இந்த 31 சந்திப்புகளும் ஸ்வாமியுடைய பிரலாபத்துக்குரிய பாடுகளைத் தியானித்து, நமது பாவங்களுக்காக அழுது புலம்பி, அவரோடு சல்லாபித்து, நமக்கு அவசரமானவைகளை அவரிடத்தில் மன்றாட உதவும். இதன் விலை அணா 6. தபாற் கூலி அணா 1.

வேண்டியவர்கள் "நல்ல ஆயன்" ஆபீசு மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாச்சாரம்.

**பெல்ஜிய ஜனங்கள்.**—எழுபது லட்சம் பெல்ஜிய ஜனங்களில் பதினைந்து லட்சம் ஜனங்கள் இங்கிலாந்துக்கும் ஹாலண்டுக்கும் ஓடிப்போயிருக்கிறார்கள் என்று உத்தேசிக்கப்படுகிறது. பாக்கி ஜனங்கள் தங்கள் சொத்துக்கள் பாதி நாசமாய் விட்டபோதிலும் தங்கள் ஊர்களிலேயே இருக்கிறார்கள்.

**ராஜாங்க உடுப்பு.**—நமது மாட்சிமை தங்கிய ராணிமேரி, உடுப்புவிஷயமாய் வருஷம் ஒன்றுக்கு 2000 பவுனும், அலெக்ஸாண்டரா ராணி அவர்கள் அப்படியே 2000



பவுனுக்குக் குறையாமலும், உலாந்து தேசத்து மகாராணி, 4000 பவுனும், ஜெர்மன் சக்கரவர்த்தினி சற்றேறக்குறைய 2500 பவுனும், இத்தாலிய ராணி 3000 பவுன்களும் செலவழித்து வருகிறார்களாம். சாதாரண சந்தர்ப்பங்களில் ஆடம்பரமில்லாத உடைகளைத் தரித்துவரும் ருஷியா தேசத்து ராணி, ஐரோப்பாவில் உடுப்பு விஷயமாய்ச் செலவழிக்கிற மற்ற எல்லாரையும் விட, அதிகத் தொகையைச் செலவழித்து வருகிறதாகச் சொல்லப்படுகிறது.

**யுத்த சம்பந்த தேசங்களின் கடல் வியாபாரம்.**—தற்கால ஐரோப்பிய யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் தேசங்களில், 102 கோடியே 90 லட்சம் பவுன் பெறுமான சாமான்களை ஜெர்மனியும், 61 கோடியே 50 லட்சம் பவுன் பெறுமான சாமான்களை பிரான்ஸும், 32 கோடியே 60 லட்சம் பவுன் பெறுமான சாமான்களை பெல்ஜியமும், 27 கோடியே 50 லட்சம் பவுன் பெறுமான சாமான்களை ருஷியாவும், 75 கோடியே 60 லட்சம் பவுன் பெறுமான சாமான்களை ஆஸ்டிரியாவும் வெளி நாடுகளுக்குக் கடல் மூலமாய் வருஷந்தோறும் அனுப்பி வந்தனவாம்.

**காடியின் உபயோகங்கள்.**—புகையடைந்த மரவேலைகளைச் சுத்தஞ்செய்ய ப்ளானல் துணியைக் காடியில் நனைத்துத் தேய்க்கவேண்டும். ஒரு தடவை உபயோகித்த ப்ளானல் துணியை மறுபடியும் உபயோகிக்கவேண்டியிருந்தால், அதை ஜலத்தில் நனைத்து அலசியெடுக்கவேண்டும். மரசாமான்கள், கண்ணாடிகள், ஜன்னல்கள் ஆகிய இவைகளில் கையழுக்குப்பட்டாலும், அல்லது வேறு அழுக்குகள் படிந்திருந்தாலும் கொஞ்சம் காடியை ஊற்றித் துடைத்து எடுத்து விடலாம். ட்ரௌஸர்ஸ் (கால்சட்டைகளின்) அடிமடிப்புகள் பூட்சுகளில் போட்டிருக்கும் பாலிஷ் பட்டு நிறங்கெட்டுப் போவதுண்டு. இதையும் காடியால் சுத்தம் செய்துவிடலாம்.

**ஸப்மரைன்கள் என்பவை யாவை?**--நீரில் மூழ்கிச் செல்ல எஃகினால் செய்யப்பட்ட நூதன கப்பல்கள். இவை சுமார் 150 அடி நீளமிருக்கும். எதிரியை எதிர்க்கவேண்டியதென்றால், அவை தண்ணீருக்குள் மூழ்கிச்சென்று எதிரிக்கு அருகாமையிற் போனதும், டார்ப்பீடோ என்னும் குழல்களை அவர்களின் பேரில் செலுத்திச் சுடும். அவை தண்ணீரில் மூழ்கிச்செல்லும் பொழுது வெளியிலிருப்பன வெல்லாம் நன்குதெரியும்படி கண்ணாடிகளின் உதவியைக்கொண்டு சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. உள்ளே மூழ்கிச் செல்லும்பொழுது உள்ளிருக்கும் நபர்களுக்கு வேண்டிய காற்றும் அவைகளின் ஓர் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும். அவை சுமார் 4-மணி நேரம் வரையில் தண்ணீரில் மூழ்கியிருக்கலாம்.

**க்ரூஸர் கப்பல்கள்.**—குரூஸர் கப்பல்கள் பொதுவாய் எதிரிகளின் நடமாட்டங்களைக் கவனிப்பதற்கும் எதிரிகளின் வியாபாரக் கப்பல்களை அழிப்பதற்கும் ஏற்படுத்தப்பட்டிருப்பன. அவைகளில் அதிக வேகமாய் ஓடும் சண்டைக் குரூஸர் என்றும், சாதரணக் குருஸர் என்றும் இரு வகையுண்டு. சண்டைக் குரூஸர்கள் சண்டைக் கப்பலைப்போல் பலமாய்க் கட்டப்பட்டு பெரிய பீரங்கிகளைக் கொண்டிருப்பதுடன், சாதாரணக் குரூஸர்களைப்போல் வேகமாய் ஓடக்கூடியவையாகவுமிருக்கும். இவ்வாறு இருப்பதினால் ஒரு பெரிய சண்டைக் கப்பலுடன் எதிர்த்து சண்டை செய்தாலும் செய்யலாம். அல்லது அப்பெரிய கப்பலின் கைக்கு அகப்படாமல் ஓடிவிட்டாலும் ஓடி விடக்கூடும். இவைகள் சண்டைக் கப்பல்களைப்போல் 20 லட்சம் பவுன்களுக்கு மேல் விலையுள்ளவையாகும்.

**பாம்ஸ் வெடிகுண்டுகள்.**—முற்காலத்தில் குண்டுகள் என்றால் ஓர் இரும்புக்குண்டாகவே யிருக்கும்; தற்காலத்தில் அவ்வாறில்லை. குண்டென்பது கனமான இரும்புத் தகட்டினால் செய்யப்பட்டு, நுனி சிறுத்து, அடிபெருத்து வெடி மருந்துகளும் கண்ணாடித் துண்டுகளும் சிறு ஆணி முதலிய இரும்புத்துண்டுகளும் போடப்பெற்ற பெட்டிபோலிருக்கும். இந்தக் குண்டுகள் பீரங்கியிலிருந்து வெளிக்கிளம்பினால் அவை வெகு வேகமாய்ப் போய் கீழே விழுந்து வெடிக்கும். வெடித்ததும் 40 கெஜம் வரையில் பரவி அதிக சேதம் உண்டுபண்ணக் கூடியவை. இவை 300 டன் நிறைகொண்ட சாமான்களை இழுத்துக்கொண்டு ஓடும் ஓர் ரயில் வண்டித் தொடர் மணிக்கு 96 மைல் வீதம் ஓடி

னால் என்ன வேகமாயிருக்குமோ அவ்வளவு வேகமுள்ளவைகளா யிருக்கும். 12 அங்குல பீரங்கிகளைவிட 13, 15, அங்குல பீரங்கிகள் அதிகக் கெடுதியை விளைவிக்கக் கூடியவை. 13 அங்குல பீரங்கியின் குண்டு 1250 பவுண்டும், 15 அங்குல பீரங்கியின் குண்டு 1400 பவுண்டும் நிறையுள்ளதாக விருக்கும்.

**ட்ரெட் நாட்ஸ்.**—1906-ம் வருஷத்திற்குப்பிறகு கட்டப்பட்ட சண்டைக் கப்பல்களுக்கு ட்ரெட் நாட்ஸ் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இக்கப்பல்களின் பக்கங்கள் மிகவும் உறுதியான 11 அங்குல கனமுள்ள எஃகுத் தகட்டினால் மூடப்பட்டிருக்கும். இத்தகைய கப்பல்களில் சுமார் 12 அங்குல பீரங்கிகள் 5-சிறு பீரங்கிகள் 10, டார்பிடோ டியூப்கள் 5 இருக்கும். இவை சுமார் 20,000 டன்களுக்கு மேலுள்ளவை. நீளம் 500 அடி இருக்கும். கப்பலின் மேல்தட்டின் பேரில் கோபுரமாதிரி கட்டி அதில் அதிக நீளமுள்ள பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும். வேகம் சுமார் 21 நாட்டுகள் கொண்டதாகும். (1 நாட் என்பது ஒன்றே அரைக்கால் மைல்) இக்கப்பல்களில் 3000 டன் நிறையுள்ள கரியும், சுமார் 900 ஆட்களை ஏற்றிக்கொள்ள இடமு முண்டு. நீரை அமுக்குவதில் உண்டாகும் வேகத்தினால் பெரிய பீரங்கிகளெல்லாம் திருப்பப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன.

**டார்பிடோ படகுகள் என்றால் என்ன?**—இவைகள் மீனைப்போன்ற உருவமுள்ளவைகளாய் சுமார் 14-அடி நீளமும், 18-அங்குலக் குறுக்களவும் உள்ளவை. இவற்றின் தலைப்பக்கம் கூர்மையாயும், வால்பக்கம் காற்றாடிபோலுள்ள யந்திரம் கொண்டதாகவு மிருக்கும். இவைகளுக்குள் நிறைய வெடி மருந்தும் குண்டுகளும் ஆணி, கண்ணாடித்துண்டுகள் முதலியவைகளும் போட்டு அடைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு கப்பல், க்ரூஸர் முதலியவற்றிலும் டார்பீடோ டியூப் என்று சொல்லப்படும் குழாய்கள் இருக்கின்றன. எதிரிக் கப்பலைக் கண்டதும் இந்த டார்பீடோவை அக்குழாய்க்குள் போட்டு காற்றை ஓர் இடத்தில் அடைத்து நெருக்குவதால் உண்டாகும் சக்தியைக்கொண்டு தண்ணீருக்குள் தள்ளப்படும். தள்ளப்பட்டதும் இதின் பின்பக்கத்திலுள்ள காற்றாடி யந்திரம் சுற்றுவதினால் தண்ணீருக்குள் அதிக வேகமாய்ச் சென்று எதிரியின் கப்பலின் அடிப்பக்கத்தில் மோத, உள்ளிருக்கும் மருந்து நெருப்புப்பற்றி வெடிப்பதினால் கப்பல்களை உடைக்கும். இது சுமார் 2000 கெஜம் வரையில் போய் கெடுதியை விளைவிக்கக் கூடும்.

**கடலில் மிதக்கும் வெடிகுண்டுச் சுரங்கங்கள்.**—மிதந்துபோகும் சுரங்கங்கள், மிதந்து ஓரிடத்தில் இருக்கும் சுரங்கங்கள், மின்சாரசத்தியினால் வெடிக்கும் சுரங்கங்கள் என்று மூன்று வகை வெடிகுண்டுச் சுரங்கங்கள் உண்டு. சுரங்கங்கள் உருவத்தில் பொதுவாய் சமுத்திரங்களில் மிதப்புகள் போட்டிருப்பதைப் போல் இருக்கும். கிரோஸைன் எண்ணெய் வரும் டிரம்கள் போலும் சில இருக்கும். இவற்றுள் சுமார் 100 பவுண்டு நிறையுள்ள வெடிமருந்து குண்டுகளிருக்கும. முதலில் சொல்லிய சுரங்கங்கள் கப்பலில் மோதியவுடனே வெடித்து நாசத்தை உண்டாக்கும். இரண்டாவது சொல்லியவை தண்ணீருக்குள் சிறிது ஆழத்தில் மூழ்கிக் கிடக்கும். இவற்றின்பேரில் கப்பல் தட்டுப்பட்டதும் வெடித்து கெடுதியை உண்டு பண்ணும். சிலவற்றில் மின்சாரக் கம்பிகளிட்டு வெகு தூரத்திற் கப்பால் வைக்கப்பட்டிருக்கும். கப்பல் அருகாமையில் வந்ததை அந்தக் கம்பிகளிருக்கும் இடத்திலிருப்பவன் பார்த்ததும் கம்பிகளைச் சேர்த்தால், உடனே அந்தச் சுரங்கங்கள் வெடித்து நஷ்டத்தை விளைவிக்கும். முதலிற் சொல்லிய சுரங்கங்களை ஒரு துறைமுகத்தின் வெகு தூரத்திலும், அதன் பின்னர் இரண்டாவது சொல்லிய சுரங்கங்களையும், மூன்றாவது சொல்லியவற்றை துறைமுகத்திற் கருகாமையிலும் போட்டு வைப்பது வழக்கம்.

**ஜர்மனியில் வைக்கப்பட் டிருக்கும் யுத்தக் கைதிகள்.**—ஜர்மானிய தலைமை ஸ்தானமான பர்லின் பட்டணத்திலிருந்து உத்தியோக முறையாக செய்தி யொன்று வெளிவந்திருக்கின்றது. ஜர்மனியில் அடைபட்டிருக்கும் யுத்தக் கைதிகளில் 8138 ஆபீசர்களும் 5,77,875 ஸோல்ஜர்களு மிருக்கிறார்களாம். இவர்களுள் சிவில் கைதிகள் சேரவில்லை. ருஷியப்போலாந்தில் ஜர்மனியர் பிரவேசமானபோது பிடித்திருக்கக்கூடிய கைதிகளும் மேற்சொன்ன பட்டியிற் சேரவில்லை. அடைபட்ட கைதிகளின் தொகை அடியில்வருமாறு:—பிரேஞ்சு.—7 ஜெனரல்கள் உள்பட 3459 ஆபீசர்களும், 2,15,505 மனிதர்களும். ருஷியா.—18 ஜெனரல்கள் உள்பட 3575 ஆபீசர்களும், 3,06,294 மனிதர்களும், பெல்ஜியம்.—13 ஜெனரல்கள் உள்பட 612 ஆபீசர்களும், 36852 மனிதர்களும். பிரிடிஷ்-492 ஆபீசர்களும் 18824 மனிதர்களுமாம். இதன் மத்தியில் ருஷிய திரிமங்யார் விடுத்திருப்பதாகச் சொல்லப்படும் ஸ்டேட்மெண்டிலிருந்து 1140 ஜர்மன் ஆபீசர்களும் 1,34,700 ஜர்மன் சோல்ஜர்களும் ருஷியரால் பிடிபட்டிருப்பதாகத் தெரிகிறதானாலும், இந்த ஜாப்தாவில் ஸிவிலியன்களும்சேர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது.

**புத்தக வரவு.**—சைவரும் மச்ச மாமிசமும் என்ற பேரமைந்த ஒரு நூல் கனம். வண. சா. ஞானப்பிரகாச சுவாமிகளால் நூதனமாய் இயற்றி யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பட் டிருக்கிறது. இவரிதற்கு முன் அச்சிட்டு வெளிப்படுத்திய பலநூல்களைப் போலவே இதுவும் சத்திய வேதத்தாருக்கும் சைவர் வைஷணவர் ஆகிய இந்து வேதத்தாருக்கும் வெகு பிரயோசனப் படக்கூடியது. இந் நடுவாந்திர காலத்தில் தங்களைச் சைவரென்பதாகப் பெருமை பாராட்டித் திரிபவருடைய புத்திக்குறையை இநல் சாஸ்திரோக்தமாய்க் கண்டித்துப் பேசி யிருப்பதுமல்லாமல், மறு பிறப்பென்ற இந்துக்களுடைய கொள்கையையும் வெகு திறமையாய் மறுத்து, அவர்களுடைய அறியாமையை வெளியாக்கி யிருக்கின்றது. இப் புதுப் புத்தகம் இந்துக்களால் எப் பக்கத்திலும் சூழப்பட்டுள்ள நமது கத்தோலிக்கருக்கு மெய்யாகவே அவசியமான தென்பதிற் சந்தேகமில்லை. உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் வெகு தெளிவா யச்சிடப்பட்டிருக்கின்றது. வேண்டியவர்கள் யாழ்ப்பாணம் அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரச்சாலை மானேஜர் அவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.



**போரிற் கலந்திருக்கும் வல்லரசுகள் வசமான நில விஸ்தீரணம்.**—லிவர்லானில் பிரசுரமாகும் 'லிவர்லான் டைம்சு' என்னும பத்திரிகையின் லண்டன் நிரூபர், யுத்தம் ஆரம்பமான ஆறுமாஸ காலத்திற்குள் போரிற் கலந்திருக்கும் வல்லரசுக்கள் முறையே தத்தம் நில விஸ்தீரணத்தை எவ்வாறு வசப்படுத்திக் கொண்டிருக்கின்றனர் என்பதன் விவரத்தைத் தெரிவித்திருக்கிறார். அவர் கூறுகிறபடி ருஷியாவானது 30,000 சதுர மைல் விஸ்தீரணமான பூமியை ஆஸ்திரியாவிலிருந்து வசப்படுத்திக் கொண்டிருக்கிறது; பிரஷ்யா, அதாவது ஜர்மானிக்குச் சொந்தமான பிரஷ்யாதேசத்தில் 3000 சதுரமைல் வசப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஜர்மனியோ, பிரான்சு, பெல்ஜியம், லக்ஸம்பர்க் ஆகிய இம்மூன்று தேசங்களிலும் சேர்த்து 17,000 சதுரமைலுள்ள பூமியையும், போலாந்தில் 10,000 சதுரமைல் கொண்ட பூமியையும் வசப்படுத்திக் கொண்டிருக்கிறது. பிரான்சு தேசமோ ஆல்ஸேஸ் பிராந்தியத்தில் ஜர்மானியருருக்குச் சொந்தமான 200 சதுரமைல் விஸ்தீரணத்தைக் கைப்பற்றி அதனுள் பிரவேசித்திருக்கின்றது. ஜர்மெனியின் குடியேற்ற நாட்டு நஷ்ட விவரமோ நாளது வரையில் பன்னிரண்டரை லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணங் கொண்டதெனக் கணக்கிடப் பட்டிருக்கிறது.

**மூட்டையிலிருந்த ஒரு பிரேதம்.**—ஒரு மனிதன் தனனுடைய குமாரனாகிய ஒரு சிறு பையனுடன் நார்ச்சிந்தி என்னும் ஊருக்கு ரெயிலில் கொஞ்சம் ரொக்க ரூபாயும், பிராமிசரி நோட்டுகளும் எடுத்துக்கொண்டு 3-வது கிளாஸ் வண்டியில் போய்க்கொண்டிருந்தான். அவர்களுடன் அந்த வண்டியில் 2 காபூலிகளும் (துருக்கர்கள்) பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார்கள். நார்ச்சிந்தி ஸ்டேஷனுக்கு முந்திய ஸ்டேஷனில் தகப்பன் தாகத்துக்குத் தண்ணீர் குடிக்க இறங்கினவன் திரும்பவும் ரயிலில் ஏறத் தவறிவிட்டான். அவன் உடனே நார்சந்தி ஸ்டேஷன்மாஸ்டருக்கு தன் குமாரனும் சில சொத்துக்களும் ரயில் வண்டியில் வருவதாயும், தான் ரயிலேறத் தப்பிவிட்டதாயும் தந்தி கொடுத்தான். ரயில் வண்டி நார்ச்சிந்தி ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்ததும், ஸ்டேஷன் மாஸ்டர் விசாரித்ததில் பையன் அகப்படவில்லை. உடனே ஸ்டேஷன்மாஸ்டர் சமுசயப்பட்டு, பண விஷயமாய் மேற்சொன்ன 2 காபூ

விகளைச் சோதனை செய்ய வேண்டுமென்றெண்ணி, அவர்களை வண்டியைவிட்டு இறங்கச் சொன்னார். காபூலிகள் முரட்டுத்தனமாய் வண்டியைவிட்டு இறங்கமாட்டோமென்று தடுத்துக் கலகஞ்செய்ய எத்தனிக்கும் சமயத்தில் அவ்விடத்தில் ஒரு கும்பல் சேர்ந்தது. கும்பலிலிருந்தவர்களில் சிலர் காபூலிகளையும் அவர்களுடைய பெரிய துணிமூட்டைகளையும் வண்டியிலிருந்து வெளியே யிழுத்துப்போட்டார்கள். ஒரு மூட்டையை அவிழ்த்து பார்த்தவுடனே சிறுவனுடைய பிரேதம மூட்டையிலிருந்து அகப்பட்டு பையன் கழுத்துத் திருகப்பட் டிருந்ததாய் வெளியாயிற்று. உடனே ஷை கபூலிகள் ரெயில்வே போலீசாரிடம் ஒப்புவிக்கப்பட்டார்கள். என்ன அநியாயமிது!

**பிச்சை யெடுத்துப் பணஞ் சேர்த்தல்.**- பொதுவாக இந்தியாவில் அநேக ஏழைகள் பிச்சை யெடுக்கும் தொழிலை கைக்கொண்டே தமது வாழ்நாட்களை கழிப்பதை நாம் எளிதில் காணலாம். ஆனால் அவர்கள் எடுப்பது பிச்சையாயினும், அப்பிச்சை வரும்படியில் பாதிக்குமேல் மீத்து வைத்து கொஞ்சம் கொஞ்சமாக சேமித்து வைக்கிறார்களென்பது அடியிற்கண்ட உதாரண மூலமாய் நன்கு விளங்குகிறது. சில தினங்களுக்கு முன் பம்பாய் நகரத்தில் ஓர் பிச்சைக்காரன் வழக்கம்போல் தனது மகனையும், மகனது மனைவியையும் கூட்டிக்கொண்டு வீடு வீடாய்ச் சென்று பிச்சை யெடுத்துக்கொண்டிருந்தான். அப்போது அவன் மகன் தனக்கு மிக்க பசியாயிருக்கிறதென்றும், அதனால் வீட்டுக்குச் சென்று ஏதாவது ஆகாரம் புசித்துவிட்டு வருவதாகவும் கூறி, தன் தகப்பனிடமிருந்து வீட்டுத் திறவுகோலை வாங்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினான். வீடுவந்து சேர்ந்த அப்பையன் தனது தகப்பனாரின் பெட்டியைத் திறந்து உள்ளிருந்த ரூபா 225 மதிப்புள்ள சில நகைகளைக் களவாடிக்கொண்டு ஓட்டம் பிடித்தான். பிறகு அந்தப் பிச்சைக்காரன் வீட்டுக்குள் நுழைந்து பார்க்கையில் தான் கஷ்டப்பட்டுச் சேமித்திருந்த நகையையும் தனது மகனையும் காணாததுகண்டு உடனே போலீசாருக்கு அறிவித்தான். குற்றவாளி இன்னும் அகப்படவில்லை. இத்தகைய பேராசை பிடித்த லோபிகள் பிச்சைக்கார வேஷம்பூண்டு தெருத்தெருவாய் கெஞ்சித் திரிந்து பொய்யைப் புரட்டைச் சொல்லி தருமங் கேட்பது எவ்வளவோ வெட்கங் கெட்டத்தனம்! மேலும் இவர்கள் தங்கள் பிள்ளைகுட்டிகளையும் இந்த இழிவான தொழிலுக்குப் பழக்குவது இன்னுமதிக வெட்கத்துக் குரியது.

**சங். சுவேல் சுவாமியாரின் மரணம்.**- திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையின் மானேஜராகவும், சென்னை சர்வகலாசாலை சபையின் ஸின்டிகேட்டில் கடந்த 10 வருஷங்களாக மெம்பராகவும், யூனிவர்ஸிடி கமிஷனில் ஒருவராகவும் இருந்த ஷை குருவானவர் சென்ற மாசம் 13-தேதி சனிக்கிழமை யதிகாலையில் மரணமான மகா விசனத்துக்குரிய சங்கதியை நம்முடைய சந்தாதாரர்களுக்கு அறிவிக்கிறோம். இவருடைய சடலம் அவர் மரித்த விடமாகிய ஜெனரல் ஆஸ்பத்திரியிலேயே வளர்த்தப்பட்டிருந்து 16-ந் தேதி காலையில் சென்னை மேற்றிராசனக் கோவிலுக்குக் கொண்டுவரப்பட்டு ஸ்தாபிக்கப்பட, மிகவும் சங்கைக்குரிய ஆலன் அதிமேற்றிராணியாரால் பெரிய பாடல் பூசையும் ஒப்பீசும் நிறைவேற்றப்பெற்றது. பூசைக்குப் பிறகு குருக்களாலும், சிவில் மிலிட்டரி உத்தியோகஸ்தர்களாலும் புடை சூழப்பட்டு மிலிட்டரி பாண்டு வாத்தியத்தோடு சவப்பெட்டி எழும்பூர் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டு திருச்சினாப்பள்ளிக்கு அனுப்பப்பட்டது. திருச்சினாப்பள்ளி கோட்டை ஸ்டேஷனைச்சேரவே மகா ஆரவாரச் சிறப்புடன் அர்ச். சூசையப்பர் கலாசாலை கோவிலுக்கு சவப்பெட்டி எழுந்தேற்றமாய்க் கொண்டுபோகப்பட்டு, அவ்விடத்தில் மிகவும் வந்திக்கத்தக்க பார்த் ஆண்டவர் அவர்களால் அடக்கஞ் செய்யப்பட்டது. சங். சுவெல் சுவாமியார் 1836௵ பிறந்தவர். இவர் இராணுவத்தில் வகித்திருந்த மேஜர் உத்தியோகத்தினின்று 1877-ம் ஆண்டில் நீங்கி, தாம் கைப்பற்றியிருந்த பதிதவேதத்தைவிட்டு கத்தோலிக்கராகி சேசு சபையில் சேர்ந்து குருப்பட்டம் பெற்றார். இவரைத் தென்னிந்தியாவில் அறியாதவர்களில்லை. இவர்களுடைய ஆத்தும சரீர நன்மைகளுக்காகவே இவர் தமது மரண பரியந்தம் பாடுபட்டு உழைத்தார். இவருக்குச் சர்வேசுரன் நித்திய இளைப்பாற்றியைத் தருவாராக!



## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.
## DOMESTIC OCCURRENCES.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய். முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக் குட்பட்டால் 1—8—0 ரூபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ரூபாயாகும். அரை ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா. ப.-ர்.

### ஜனன அறிக்கை.

பரலோக பூலோக இராஜேஸ்வரியான பரிசுத்த கன்னிமரியம்மாளின் கிருபை நிறைந்த இரக்கத்தால் கடந்த 1914-௵ டிசம்பர்௴ 29௳ செவ்வாய்க்கிழமை காலை 4 ½-மணிக்கு எனது அருமை மனைவியாகிய மரியம்மாள் யாதொரு பிரசவ வேதனையின்றி ஓர் ஆண் குழந்தையை யீன்றனள். 1915-௵ ஜனவரி மாசம் 10௳ ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 10-மணிக்கு கண்டி, அர்ச். அந்தோனியாருடைய ஆலயத்தில் அருமை குமாரனுக்கு (இம்மானுவேல்) என்று நாமம் சூட்டப்பட்டு ராஜரிஷி கனம் அலெக்ஸாண்டர் சிரிவர்தன சுவாமியாரால் நமது திருச்சபை ஆசாரப்படி ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. மகா கனம். பே. வி. சவரி அவர்களும் தெய்வாயியும் ஞானத் தாயும், ஞானத்தகப்பன், தவிர 2-வருஷமாய் பாவநிவாரணை செய்யாமலிருந்த பே. வி. ச. அவர்களை உடனே பாவ நிவாரணை செய்யும்படி நமதருமை குமாரன் இம்மானுவேல் செய்து விட்டதைப்பற்றி திரியேக வல்லமையுள்ள கர்த்தருக்கு என்றும் முடிவில்லாத ஸ்துதி புரிவோனாகவும். அவர்களை நற்சுகத்துடன் ஆசீர் பதிப்பாராகவும். மகா-ஈ-ஈ-ஸ்ரீ, கனம் அ. மி. ஜெக்கோபு அவர்களுக்கும் கிறீஸ்திருளம்மாளுக்கும் என் அன்பான வந்தனம்.

இங்ஙனம்.
பி. வ. ஆபிரகாம்.
அர்ச். செபஸ்தியார் கோவில் தெரு,
திருநெல்வேலி.

### நன்மரண அறிக்கைகள்

எனதருமை மைத்துனனும், மெஸ் கண்டிராக்டர் ம-ஈ-ஈ-ஸ்ரீ, செ. மனுமேல் அவர்களின் நேசக் குமாரனும், புரோமில் (Prome) பாரிஸ்டர் Chatterjee அவர்களின் எட் கிளர்க் குமாஸ்தாகிய C. M. பிரான்சிஸ் பிள்ளை, தனது 26-ம் பிராயத்தில் பிளேக் என்னும் கொடிய வியாதியால் எவ்வித சிகிச்சைக்கும் குணப்படாமல் 1915-௵ ஜனவரி௴ 15௳ வெள்ளிக்கிழமை காலை 3-மணிக்கு தனது நேய தந்தை, தாயார், சகோதரன், சகோதரிகள், மற்றுஞ் சுற்றத்தார் யாவரையும் பரதபிக்கவிட்டு கர்த்தருக்குள் நித்திரை யடைந்தனன். மறுநாள் சனிக்கிழமை பகல் 1-மணிக்கு புரோம் ரோமன் கத்தோலிக்குக் கல்லறையில் சடலம் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் சகோதரர் சகோதரிகள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டிக் கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Rangoon: 24—1—15. M. இலாசர் பிள்ளை, 15, Macgregor Street.

### குடியர்களை குணமாக்கும் அற்புத "லிக்கோரின்."

"லிக்கோரினை" எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபின் தின்போருக்கும் இரகசியமாய்த் தெரியாமல் கொடுப்பதில் குடியையும் அபினையும் ஆயுளுள்ளளவும் விட்டுவிடுகிறார்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். நூற்றுக் கணக்கான நற்சாட்சிப் பத்திரம் பெற்றது. பத்தியமே கிடையாது. 25, 27, 30, வருஷ நெடுங்காலக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. தேகத்திற்கு யாதொரு கெடுதியும் செய்வதேயில்லை. 40 நாள் சாப்பிடக்கூடிய "லிக்கோரின்" புட்டிவிலை ரூபா 2-0-0. தபால் கூலி முதலியவை அணா 5, பிரத்தியேகம்.

ஜே. எப். டி. டேவிட்,
கோட்டை, லேசம்.
J. F. D. David, Fort, Salem.

## எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தருமம்.

நண்பர்களே,

சென்ற வருஷம் உதாரகுணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்தவர்களுக்கும், எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மமென்று அறிக்கையிட்டுச் செய்து கொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி, எமக்குதவியாக வந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்குப் பங்காளிகளான நேயர்களுக்கு அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1913-ஆம் எப்ரல் மாதமுதல் 1914-ஆம் மார்ச்சுமாதம் 31உ வரையில் நேயர்களிடமிருந்து வரவேற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடை ரூபாய் 600-0-0. சென்ற பன்னிரெண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்கள் கட்டவும், விசாரணைக்குரு வசிக்கும் பங்களாவை மராமத்து செய்யவும், கோவில் கட்டிட விர்த்திக்காக தண்டவாள தூலங்கள் வாங்கவும் செலவான தொகை ரூபாய் 2017-11-6. தற்காலம் எமக்குக் கடனாயிருப்பது ரூபாய் 460-0-0.

நண்பர்களே, தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி, சத்திரங்கள் ஏறத்தாழ முடிவாய்விட்டன. ஆகிலும், பழைய சத்திரத்தை மராமத்துச் செய்யவும், கோவில் வேலைகளை முடிவிற்குக் கொண்டுவரவும் குறைந்தது நாமிட்ட மதிப்பிற்குமேல் இரண்டுபங்கு அதிகமாகிறபடியால், அதைரியத்திற்கு இடமாயினும், புதுமையுள்ள அர்ச். செல்வநாயகி அம்மாளையே நம்பி விடாமுயர்சியுடனும் அதிக ஊக்கத்துடனும் வேலைசெய்து வருகிறோம். தர்ம சிந்தையுள்ள அவளது ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள் பேரில் பூரணமாய்ப் பொழிய கிருபை செய்யவேணுமென்பது எமது பிரதினை வேண்டுகோள். இப்படிக்கு,

எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாளின்
ஊழியனாகிய, விசாரணைக் குரு
ஜே. ஞானதிக்கம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷெ தருமத்துக்காகஎற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 773 | 2 | 0 |
| Mr. ஞானப்பிரகாசம், மட்டம்பட்டி | 5 | 0 | 0 |
| ,, சவரியப்பன், மைலம்பட்டி | 5 | 0 | 0 |
| Mr. இராயப்பன், காவேரிப்பட்டி | 5 | 0 | 0 |
| ,, ஞானப்பிரகாசம், சின்னகவுண்டனூர் | 5 | 0 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 793 | 2 | 0 |

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ. 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ. 3,458-4-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷெ கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன் வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கிகரிக்கப்படும். ஏனெனில் "சிறுதுளி பெருவெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந் தொகை யாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷெ கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்,
அர்ச். அந்தோனியார் கோவில்

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3458 | 4 | 6 |
| Mr. அனந்தநாத பிள்ளை | 2 | 0 | 0 |
| ,, தோமாஸ் பட்ளர், திருவண்ணாமலை | 1 | 0 | 0 |
| ஒருவருடைய நன்கொடை | 5 | 0 | 0 |
| ஆகமொத்தம், | 3,466 | 4 | 6 |

The Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகேளும் ... அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 13. } ஏப்ரல் 1915. { இலக்கம். 4.

OFFICE OF THE ... MADRAS. 12 APR 1915

## THE RESURRECTION.

## கர்த்தருடைய உத்தானம்.

நாம் துவக்கின பரிசுத்த தபசு காலம், இதோ! முடிவுக்கு வந்துவிட்டது. வருகிற ஞாயிற்றுக் கிழமை நம்முடைய கர்த்தர் உயிர்த்த திருநாள். இந்தத் திருநாளை நாம் சரியானபடி கொண்டாடவும், திருச்சபையோடு ஒன்றித்து அல்லேலுய்யா பாடி அக்களிக்கவும் நாம் பாத்திரவான்களாக நம்முடைய பாவாக் கிரமங்களை விட்டெழுந் திருக்க வேண்டிய தன்றோ? சென்ற மாதத்திய "நல்ல ஆயனில்" சொல்லி யிருந்தபடி, நம்முடைய பாவாக்கிரமங்களை, பாம்பை நசுக்குவதுபோல் நாம் புரிந்த தவத்தினால் நசுக்கி யிருப்போமானால், கர்த்தர் உயிர்த்த திருநாளைக் கொண்டாட மெய்யாகவே நாம் பாத்திரவான்களென சொல்லத் தேவையில்லை. ஆனால் நாம் இன்னும் பாவத்துக்கு அடிமைப்பட்டுக் கிடப்போமானால், ஐயோ! நாம் எவ்வளவோ நிர்ப்பாக்கியர்! இந்தப் பரிசுத்த தபசுகாலத்தை வீணிலே செலவழித்ததை இப்போதாவது நன்றாய் உணர்ந்து, கர்த்தர் உயிர்த்தத் திருநாளுக்கு முன் உள்ள இந்த இரண்டொரு தினங்களிலாவது நம்முடைய சீவியத்தை ஒருவாறு ஒழுங்கு படுத்திக்கொள்ள முயலுவோமாக.

நாம் புரிந்த தவத்தினால் மெய்யாகவே நம்முடைய பாவாக்கிரமங்களை விட்டு எழுந்தவர்களா யிருப்போமானால், மறுபடியும் பாவத்தில் விழாமல் எச்சரிக்கையாயிருக்கவேண்டியது அவசியம். உயிர்த்த நமது கர்த்தர் இலாசர் என்பவரைப்போல் மறுபடியும் மரணமடையாமல், மகா மகிமைப் பிரதாபத்தோடு சர்வேசுரனுடைய வலது பாரிசத்தில் இன்னும் வீற்றிருக்கிறார். இனிமேலும் அவரை மரணம் அணுகாதாகையால், எப்போதும் வீற்றிருப்பார். இப்படியே பாவமென்கிற கல்லறையை விட்டு எழுந்து இருக்கும் நம்முடைய ஆத்துமமும் மீளவும் அக்கல்லறைக்குள் அடக்கப்படும் நிர்ப்பாக்கியத்துக் குள்ளாகாமலிருக்க, நாம் ஜாக்கிரதையும் பிரயாசையுமெடுத்துக் கொள்ள வேண்டும். பாவத்தினால் மரித்து சவமாய்க்கிடந்த நம்முடைய ஆத்துமத்துக்கு உயிர் உண்டானதெப்

படி? நாம் புரிந்த ஜெபதபத்தினாலும், பிடித்த ஒருபொழுது உபவாசத்தினாலும், செய்த நல்ல பாவசங்கீர்த்தனத்தினாலும் கிடைத்த தேவ இஷ்டப் பிரசாதத்தினால் அல்லவா? தேவ இஷ்டப் பிரசாதமே நம்முடைய ஆத்துமத்துக்கு உயிர். ஆகவே, இந்த தேவ இஷ்டப் பிரசாதத்தை மறுபடியும் இழந்து நம்முடைய ஆத்துமத்தைச் சேதப்படுத்திக்கொள்ளாம லிருக்க பரிசுத்தமாய்ச் சீவித்து வருவோமாக. இவ்விஷயத்தில் விழிப்பும் எச்சரிக்கையுங் கொள்வதே புத்தி.

திருவுளம்பற்றின வாக்கின்படியே நம்முடைய கர்த்தர் உயிர்த்தார். நம்முடைய கர்த்தர் இவ்வுலகில் சஞ்சரித்த காலத்தில் தாம் படப்போகிற பாடுகளைப்பற்றியும், அடையப்போகிற மரணத்தைப் பற்றியும், அதன்பிறகு தாம் உயிர்ப்பதைப் பற்றியும் பல தருணங்களில் எல்லோருக்கும் பிரசித்தமாய்த் தெரியப்படுத்தினார். ஒரு நாள் அவர் தேவாலயத்துக்குச் சென்றபோது அவ்விடத்தில் ஆடு, மாடு, புறா முதலியவைகளை விற்பனைக்காக வைத்துக்கொண்டிருந்தவர்களைக் கண்டித்து, வெளியே விரட்டின சமயத்தில் அவர்கள் அவரைப் பார்த்து "நீரிவைகளைச் செய்வதற்கு எந்த அடையாளத்தைக் காட்டுகிறீர்" என்றார்கள். அதற்கவர் தாம் மரித்த மூன்றாம் நாள் உயிர்ப்போமென்று அவர்களுக்கு விளங்கும்படி சொல்ல, "இவ்வாலயத்தை யிடித்துப் போடுங்கள். நான் அதை மூன்றுதினங்களுக்குள் திரும்பவும் எழுப்புவேன்" என்று திருவுளம்பற்றினார். நமது கர்த்தர் தம்முடைய மரணத்துக்குப் பிறகு மூன்றா நாள் உயிர்ப்போ மென்று சொன்ன சொல்லை நிறைவேற்றாமற் விட்டவரல்ல. திருவுளம்பற்றின வாக்கின்படியே உயிர்த்தார். இப்படியே நாமும் நம்முடைய பாவாக்கிரமங்களை நல்ல பாவசங்கீர்த்தனத்தால் விட்டொழித்தபோது செய்த பிரதிக்கினைகளை பிரமாணிக்கமாய் நிறைவேற்றி வருவோமானால், மறுபடியும் பாவத்தைக் கட்டிக்கொண்டு நம்முடைய ஆத்துமத்தைச் சாகடிக்கமாட்டோமென்பது திண்ணம். நம்மிடத்திலுள்ள துர்க்குணங்கள் எவை யென்றும், நாம் பாவத்தில் அடிக்கடி விழ ஏதுசரமா யிருக்கும் பாவச் சமயங்கள் எவை யென்றும் நமக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. ஆகவே, அந்தந்த துர்க்குணங்களை யடக்கவும், அந்தந்தப் பாவச்சமயங்களை விலக்கவும் நாம் பிரயாசைப்படுவோமானால் நம்முடைய நல்ல பிரதிக்கினைகளை நிறைவேற்ற நம்முடையகர்த்தர் ஒத்தாசை செய்வார். பாவத்தை விட்டெழுந்த நம்முடைய ஆத்துமமும் மறுபடியும் பாவத்துக்கு இரையாகாது. ஆனதுபற்றி நம்முடைய பிரதிக்கினைகளை ஞாபகப்படுத்திக்கொண்டு அவைகளைப்பிரமாணிக்கமாய் அனுசரிப்போமாக.

நம்முடைய கர்த்தர் தம்முடைய ஆத்துமத்தோடும் சரீரத்தோடும் மெய்யாகவே உயிர்த்தாரென்று எண்பிக்கும்பொருட்டு தம்மை அடிக்கடி மற்றவர்களுக்குப் பிரத்தியக்ஷமாய்க் காட்டச் சித்தமானார். ஆனபடியால், தம்முடைய திருத்தாயாருக்கும், அர்ச். இராயப்பருக்கும், மற்ற அப்போஸ்தலர்களுக்கும், இன்னும் சில புண்ணிய ஸ்திரீகளுக்கும் அவர் காணப்பட்டார். அவர்களுடன் இருந்தார், சம்பாஷித்தார், சாப்பிட்டார். இப்படியே நாமும் நம்முடைய பாவப்பற்றுதலையும், ஆகாத வழக்கப்பழக்கங்களையும் முற்றும் விட்டுவிட்டோமென்று காட்ட நம்முடைய நல்லொழுக்கத்தினாலும் பரிசுத்த சீவியத்தினாலு மற்றவர்களுக்கு நன்மாதிரிகையாய்ச் சீவிக்கவேண்டியது. இதுவரையிலும் நம்முடைய ஆகாத நடத்தையினால் மற்றவர்களுக்கு இடறலாய்ச் சீவித்திருப்போம். மாசற்றவர்கள் பாவத்தில் விழக் காரணமா யிருந்திருப்போம். புறத்தியாருக்கு மானநஷ்டம் பொருள் நஷ்டம் வருவித்திருப்போம். இப்போது இவைகளுக்கெல்லாம் நாம் தக்கப் பரிகாரஞ் செய்தாலன்றி மற்றப்படி நம்முடைய பாவாக்கிரமங்களை விட்டெழுந்தவர்களென்று எண்பிக்க முடியாது. ஆனபடியால் நம்முடைய பழைய துர்க்குணங்களை யெல்லாம் உரிந்து போட்டு, நம்மிடத்தில் புதிதான ஞானமுண்டாகி, நீதியிலும் உண்மையான பரிசுத்தத்தனத்திலும் சர்வேசுரனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புது மனிதனைத் தரித்துக்கொண்டோமென்று காட்ட, உத்தரிக்கவேண்டியவைகளை உத்தரித்துப்போட்டு நல்லொழுக்கமுள்ளோராய்ச் சீவிப்போமாக.



ஆகையால், மரணத்தைச் செயித்து, உயிர்த்து, மறுபடியும் மரணமாகாமல் பரலோகத்தில் வீற்றிருக்கும் நம்முடைய கர்த்தருக்கு ஒப்ப, நாமும் நம்முடைய ஆத்துமத்துக்கு உயிராயிருக்கும் தேவ இஷ்டப்பிரசாதத்தை யிழந்துபோகாமலிருக்க, எப்போதும் எச்சரிக்கையா யிருப்போமாக. இதற்காக நாம் செய்துள்ள நல்ல பிரதிக்கினைகளில் உறுதியாயிருந்து, பாவச்சமயங்களை விட்டு விலகி, நம்முடைய நன்னடத்தையினாலும் பரிசுத்த சீவியத்தினாலும் மற்றவர்களுக்கு நன்மாதிரியாயிருப்போமாக.



## ENCYCLICAL OF HIS HOLINESS BENEDICT XV.

## பாப்பாண்டவரின் நிருபம்.

(முன்தொடர்ச்சி.)

### வேலை கோள்பவர்களும் வேலை செய்பவர்களும்.

ஒவ்வொரு சங்கத்தைச் சேர்ந்த இரண்டு வகுப்பினர்களுக்குமுள்ள சம்பந்தம், அதாவது சங்கத்து உறுப்பினர் தங்களுக்குள் அன்னியோன்னிய பிறசிநேக ஐக்கியமா யிருத்தலும், அதிகாரத்தை வகிக்கும் தலைக்கு உறுப்பினர் அமைந்து நடப்பதி லிருக்கவேண்டிய ஐக்கியமும், ஆகிய இவை இரண்டும் அற்றுப்போனதால் அல்லது குறைந்துபோனதால், சங்கைக்குரிய சகோதரர்களே, தற்காலத்திய ஜனசமூகமானது ஆயுதமணிந்த இருபெரிய சேனைகளாகப் பிரிந்து நின்று ஒருவரை யொருவர் எதிர்த்துக் குரூரத்தோடும் முழுபலத்தோடும் போர்புரிய நாம் பார்ப்பதில் என்ன அதிசயம் இருக்கிறது? அதிர்ஷ்டத்தினால் அல்லது தங்கள் சொந்த முயற்சியினால் திரண்ட சொத்தைச் சம்பாதித்தவர்களுக்கு விரோதமாய், ஏழை ஜனங்களும் வேலைக்காரரும் எதிர்த்து நின்று, அவர்களுக்குந் தங்களுக்கும் உள்ள சுபாவம் ஒன்றாயிருந்தபோதிலும், அவர்களுடைய அந்தஸ்துக்குத் தாங்கள் வரவில்லையே யென்று பகையினாலும் காய்மகாரத்தினாலுந் தூண்டப்பட்டவர்களாய் எதிர்த்து நிற்கிறார்கள். பொய்யைப் பரவச்செய்பவர்களின் வார்த்தைகளை மிக்கப் பணிவுடன் அங்கீகரித்து நடக்கிற பைத்தியக்காரரான இவர்களுக்கு, எல்லா மனிதரும் சுபாவவிஷயத்திலே ஒன்றானாலும், அதன் நிமித்தம் அவர்க ளெல்லோரும் சங்கத்தில் சமத்துவமான அந்தஸ்தில் இருக்கவேண்டுமென்று ஏற்படாதென்றும், ஆனால் அவனவனுக்குக் கிடைத்த அனுகூலத்துக்குத் தக்கபடி, தன் தன் யோக்கிதையினால் சம்பாதித்துக்கொண்ட அந்தஸ்தில் அவனவனும் வைக்கப்பட்டிருக்கிறானென்றும் இவர்களுக்கு எடுத்துக் காட்டி, இவர்களை மனந் திருப்பக்கூடியவர்களார்? ஆகையினால், ஐசுவரியவான்கள் மற்றவர்களுடைய சொத்துக்களைக் கவர்ந்து கொண்டதுபோல் எளியவர்கள் எண்ணிக்கொண்டு அவர்களுக்கு விரோதமாய்ப் போர்புரியும்போது, இந்த எளியவர்கள் நீதிக்கும் பிறசிநேகத்துக்கும் பங்கம் வருத்துகிறது மல்லாமல், இவர்கள் செய்கையும் யுக்திக்கு முதலாய்ப் பொருந்தாததா யிருக்கிறது. ஏனெனில் தமகளுக்கு மனமிருந்தால் தாங்களும் கிரமமான உழைப்பினால் தங்களுடைய தரித்திர நிலைமையை சரிப்படுத்திக்கொள்ளக்கூடும். இவ்விரு வகுப்பினருள்ளும் உண்டாயிருக்கிற இந்த மாச்சரியமானது பொது ஜனக்கூட்டத்துக்கு மாத்திரமல்ல, ஒவ்வொருத்தருக்குமே என்னென்ன கெடுதியை விளைவிக்குமென்று நாம் சொல்லவேண்டியது அனாவசியம். வேலைக்காரர் வேலைக்கு வராமல் கட்டுப்பாடு செய்துகொண்டு நின்றுபோகிறதை நாமனைவரும் பார்த்துத் துக்கிக்கிறோம்; அப்படித் திடீரென நின்றுபோவதால் பட்டணத்தில் வசிப்பவர்களுக்கும் பொதுப்பட எல்லோருடைய ஜீவனார்த்தத்திற்கும், மிக அவசியமாய் நடக்கவேண்டிய வேலைகளுக்கு முதலாய் சாதாரணமாய்த் தடையேற்படுகிறது. அல்லாமலும் கலகக்காரரும் குழப்பக்காரரும் கிளம்பி, அனேகமா யடிக்கடி ஆயுதப் பிரயோகம்செய்யவும், மனிதர் இரத்தத்தைச் சிந்தவும் ஏதுவாகிறது.

சோஷியலிஸ்ட்ஸ் (Socialists) அதாவது எல்லோரும் சமானமான அந்தஸ்துள்ளவர்களாய்ச் சீவிக்க வேண்டுமென்ற கொள்கையுள்ள

வர்களும் அவர்களைப் போலொத்தவர்களும் சொல்லுகிற அபத்தங்களை மறுக்கிறதற்கு உள்ள நியாயங்களை இத் தருணத்தில் திரும்பவும் எடுத்துப் பேச நமக்கு விருப்பமில்லை. நமக்கு முன்னிருந்த பதிமூன்றும் சிங்கராயர் தாம் பிரசித்தப்படுத்திய நிரூபங்களில் அவைகளைப் பற்றி வெகு கல்வித் திறமையாய்ப் பிரஸ்தாபித்திருக்கிறார். சங்கைக்குரிய சகோதரர்களே! நீங்களும் உங்களுக்கு வழக்கமாயுள்ள ஜாக்கிரதையோடு இந்த அதிகாரமுள்ள போதனைகள் மறக்கப்பட்டுப் போகா வண்ணம் கவனிக்கிறதுந் தவிர, கத்தோலிக்குக் கூட்டங்களிலும், சபைகளிலும், உபன்னியாசங்களிலும், கத்தோலிக்கு அச்சியந்திர சாலைகளிலும் அவசியத்துக்கு ஏற்றாற்போல் அவற்றைப்பற்றிப் புத்தி சாதுரியமாய் விளக்கிக்காட்டி, அவரவர் மனதிலும் அவைகளைப் பதியும்படிச் செய்ய எப்போதும் பிரயாசைப்படவும்வேண்டியது. ஆனால் விசேஷித்த விதமாய்ச் சுவிசேஷத்தில் சொல்லப்பட்டதும், மனுஷ இயற்கை, பொது ஜன நன்மை, சொந்த நன்மை இவற்றினின்று பிறக்கிற நியாயங்களின் முழு பலத்தோடு—இதைத் திரும்பவுஞ் சொல்ல பின்னிடைய மாட்டோம்-பிறசிநேகத்தைப்பற்றி கொடுபட்டிருக்கிற தேவ கட்டளையின் பலத்தைக் கொண்டு, சகோதரப் பற்றுதலோடு ஒருவர் ஒருவரை நேசிக்கும்படி எல்லா ஜனங்களையும் தூண்டி விடுவதில் உற்சாக முள்ளவர்களாய் இருப்போமாக. மெய்யாகவே மானுஷிய சகோதரத்வம் அவரவர் அந்தஸ்தின் வேறுபாடுகளை விலக்காது. அதுபோல் அவரவர் ஜாதி வகுப்பையும் கவனிக்காது. பற்பல அங்கங்கள் அமையப்பெற்ற ஒரு சரீரத்திலுள்ள எல்லா உறுப்புகளுக்கும் ஒரே தொழிலும் ஒரே அந்தஸ்தும் இருக்கக் கூடியது எம்மாத்திரம் அசாத்தியமோ, அம்மாத்திரம் இதுவும் அசாத்தியந்தான். ஆயினும் அது மேலான ஸ்தானங்களிலிருப்பவர்களை மிகவுந் தாழ்ந்த அந்தஸ்தி லிருப்பவர்கள் வரையிலும் தணியச்செய்து அவர்களை ஆதரிக்கச் செய்கின்றது; இப்படிச் செய்வதானது அவசியத்தை யொட்டின நீதியின் நிமித்தம் மாத்திரமல்ல, ஆனால் தாராளமும் சகிப்புமுள்ள பட்சத்திலும் இப்படிச் செய்யக் காரணமாகின்றது. ஒரே குடும்பத்திலுள்ள இளைய சகோதரர்கள் மூத்த சகோதரர்களின் உதவியின் மட்டிலும் ஆதரவின் மட்டிலும் எவ்விதம் நம்பிக்கை வைக்கிறார்களோ அவ்விதமே மிகவும் தாழ்ந்த அந்தஸ்தி லுள்ளவர்கள் மிகவும் மேலான அந்தஸ்தி லுள்ளவர்களின் வாழ்வைப்பற்றி பொருமை கொள்ளாமல் அவர்களுடைய ஆதரவின் மட்டில் நம்பிக்கை வைக்கச் செய்கின்றது.

## சகல பொல்லாப்புகளுக்கும் மூலாதாரம்.

ஆனால், சங்கைக்குரிய சகோதரர்களே, நாம் இதுவரையிலும் அனுபவித்துவருகிற கேடுகள் அனைத்தும் வெகு ஆழமான வேரின்பேரில் ஊன்றி நிற்கின்றன. நல்ல மனதுள்ளவர்கள் எல்லோரும் தங்கள் முழு பலத்தையுங்கொண்டு அதைப் பிடுங்கி யெறிய பிரயாசைப்பட்டாலொழிய, நாம் கோரின காரியத்தை அதாவது மனுஷருக்குள் இருக்கவேண்டிய ஸ்திரமானதும் நீளித்ததுமான சமாதானத்தை அடைய ஆசிப்பது வீண். இந்த வேர் இன்னதென்கிறதாக அப்போஸ்தலர் போதிக்கிறார்: "ஏனெனில் பொருளாசை எல்லா தின்மைகளுக்கும் ஆணிவேராயிருக்கிறது. (I திமோ. VI. 10.) காரியத்தைச் சரியாய் யோசிக்குமளவில், மெய்யாகவே, இப்போது பிரஜைகள் அனுபவிக்கும் சகல பொல்லாப்புகளும் இவ் வேரினின்றே முளைத்தனவென்று கண்டுபிடிக்கிறோம். இளைஞரின் இருதயத்தை மெழுகுபோல் உருவாக்கக்கூடிய அக்கிரமமான பள்ளிக்கூடங்களைக் கொண்டும், அனுபோக மில்லாத சாதாரண பிரஜைகளின் மனதை தங்க ளிஷ்டப்படி பக்குவப்படுத்தக்கூடிய தினசரி அல்லது ஒன்றை விட்டு ஒருநாள் பிரசுரமாகிற பத்திரிகைகளைக் கொண்டும், இன்னும் வேறு உபாயங்களைக் கொண்டும் பொது ஜன சமூதாயம் நடத்தப்படும்போது—இன்னும் மனிதனானவன் நித்திய பாக்கியமான ஸ்திதிக்கு ஆசிப்பது வீணென்றும், இங்கேயே, இவ் வுலகத்திலேயே ஐசுவரியங்களையும், கீர்த்தி வெகுமானங்களையும், இச்சீவியத்தின் சந்தோஷங்களையும் அடைந்து பாக்கியமாய்ச் சீவிக்கக் கூடுமென்றும், இப்பேர்ப்பட்ட கேட்டுக்குரிய அபத்த போதனைகளை மனிதரின் மனதிற் புகட்டும்போது, சுபாவமாய்ப் பாக்கியத்தை அனுபவிக்க உண்டாக்கப்பட்ட மனித ஜீவன்கள் அதை யடைய தாங்கள் படும் பிரயாசத்துக்குத் தக்கபடி அதற்கு விக்கினமாயிருக்கிற அல்லது தடுக்கிற சகல இடையூறுகளையும் புறக்கணித்து விடுகிறது ஆச்சரியமல்ல, என்கிறோம். ஆயினும் இச் சந்தோஷங்கள் சகலருக்கும் சமத்துவமாக பாவிக்கப்படுகிற தில்லையா



னதாலும், மற்றவர்களுக்குச் சொந்தமானதைக் கவர்ந்து கொள்ளுவதினால் அவனவனுக்கு ஏற்பட்டுள்ள எல்லையைக் கடந்து செல்லாமல் அவனவனைத் தடுக்கவேண்டியது சர்வ ஜன சங்கத்து அதிகாரத்தைப் பொறுத்த தானதாலும், உடனே பொது ஜன அதிகாரத்துக்கு விரோதமாய்ப் பகையும், அதிர்ஷ்டசாலிகள் மட்டில் துர் அதிர்ஷ்டசாலிகளுக்குப் பொருமையும் ஏற்படுகிறது. ஆனபடியால் இதினின்று பட்டண வாசிகளான வெவ்வேறு வகுப்பினர்களுக்குள் சிலர் சர்வ பிரயாசையும் பட்டு எவ்விதத்திலும் தங்களுக்கு அவசியமானதைப் புறத்தியாரிடமிருந்து பறித்துக் கொள்ள அபேட்சிக்கிறபடியாலும், மற்றவர்கள் தங்களுக் குள்ளதைக் காப்பாற்றவும் விர்த்திபண்ணவும் பிரயாசைப்படுகிறபடியாலும் சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன.

## மலையினின்று செய்த பிரசங்கம்.

இவ்விதமான காரியங்களை முன்னறிந்த நமதாண்டவராகிய கிறிஸ்துநாதர் இவ்வுலகத்தில் மனிதனுக்கு உண்டாகக்கூடிய பாக்கியங்களைப்பற்றி மலையினின்று செய்த தமது மேலான தெய்வீக பிரசங்கத்தில் விவரமாய் விளக்கிக் காட்டியதானது கிறிஸ்தவ தத்துவ சாஸ்திரத்துக்கு அஸ்திவாரம் இட்டதுபோலாயிற்று. இந்த நீதி வாக்கியங்கள் வேதத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் அடுத்த மேலான உத்தம போதகமடங்கியதும் அபூர்வ ஞானமுள்ளதும் என்று விசுவாசத்தைப் பகைக்கிறவர்களுக்கு முதலாய்த் தோன்றியிருக்கிறது; சத்திய சொரூபியான கிறிஸ்துநாதர் காலத்துக்கு முன்னிருந்த எவனும் இதைப்போலொத்த அல்லது இவ்வளவு மகத்துவம் அடங்கியதும் இவ்வளவு முக்கியமானதும் அல்லது பிறசிநேக எண்ணங்களை இவ்வளவாகப் புகட்டக்கூடியதுமான ஒன்றையும் இதுவிஷயத்தில் ஒருபோதும் போதித்ததேயில்லை.

இந்தத் தத்துவ சாஸ்திரத்திலுள்ள எல்லா இரகசியமும் இவ்வொன்றில் அடங்கியிருக்கிறது: அழிவுக்குரிய இச்சீவியத்தில் நல்ல காரியங்களென்று சொல்லப்பட்டவைகள் கண்ணுக்கு அப்பேர்க்கொத்தவைகளாகத் தோன்றினபோதிலும், அவைகள் உண்மையில் அப்படிப்பட்டவைகளல்ல. ஆகையினால் அவைகளைச் சுகிப்பதைக் கொண்டு மனிதன் பாக்கியமாய்ச் சீவிக்கக்கூடியவனல்ல. ஏனென்றால், சர்வேசுரனே திருவுளம்பற்றி யிருப்பதைக்கொண்டு, ஐசுவரியமும் கீர்த்தியும், சுகசெல்வமும் மனிதனுக்குப் பாக்கியத்தை உண்டுபண்ணுவதில்லை யென்றும், அதற்குப் பதிலாக, அவன் மெய்யாகவே, பாக்கியவானா யிருக்கவேண்டுமானால், மேற்சொல்லியவற்றை யெல்லாம் சர்வேசுரன் பேரிலுள்ள சிநேகத்தைப்பற்றி நீக்கிவிடவேண்டியதென்றும் நமக்குத் தெரியவருகிறது: "தாரித்திரர்களே! நீங்கள் பாக்கியவான்கள்...இப்போது அழுகிறவர்களே! நீங்கள் பாக்கியவான்கள்... மனுமகனைப்பற்றி மனிதருங்களைப் பகைத்து விலக்கித் தூஷணித்து உங்கள் நாமம் கெட்டதென்று சொல்லும்போது நீங்கள் பாக்கியவான்கள்."(அர்ச். லூக். IV. 20—22.) அதாவது இச்சீவியத்தின் துக்கங்கள், கவலைகள், துன்பங்கள் வழியாக, நாம் சகிக்கவேண்டியபடிக்கு அவைகளைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டால், "சர்வேசுரஅ தம்மை நேசிக்கிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணியிருக்கிற உத்தமமானதும், நீடூழிகாலம் நிலைக்கத் தக்கவைகளுமான நல்ல காரியங்களுக்கு நெருங்கிச் சேருகிறவர்களாகிறோம்." (1 கொரி., II, 9.) ஆனால் விசுவாச சத்தியத்துக்கடுத்த இந்த விசேஷித்த போதனையானது அனேகரால் அலக்ஷியம் செய்யப்பட்டும் அனேகரால் முற்றுமே மறக்கப்பட்டும் போயிருக்கிறது. சங்கைக்குரிய சகோதரர்களே! இதைத் திரும்பவும் மனிதர்களால் அனுசரிக்கப்படச் செய்வது அவசியம். வேறெவ்விதத்திலும் மனிதர்களுக்கும் கூட்டத்தாருக்கும் சமாதானம் உண்டாகாது. ஆகையால் எவ்வித கவலைகளினாலும் துன்பப்படுகிறவர்களை நோக்கி, தாங்கள் பரதேசிகளாய்த் திரிகிற இந்தப் பூலோகத்தின் பேரில் தங்கள் பார்வையை நாட்டாமல், நாம் போய்க்கொண்டிருக்கிற பரலோகத்தை ஏறெடுத்துப் பார்க்கும்படி நாம் புத்தி சொல்லுகிறோம். "ஏனெனில், நிலைமையான நகரம் இங்கே நமக்கில்லை, இனிவரும் பட்டணத்தையே நாடித்தேடுகிறோம்."(எபிறே., XIII. 14.) சர்வேசுரன் தமக்கு ஊழியஞ் செய்கிறவர்களின் நிலைவரத்தைத் துன்பதுரிதங்களால் சோதித்தால், போராட்டத்தில் தாங்கள் ஜெயசீலராய் வெளிப்படும்போது தங்களுக்கு எப்பேர்க்கொத்த சம்பாவனை முஸ்திப்பா யிருக்குமென்பதை அடிக்கடி சிந்தனை செய்வார்களாக: "ஏனெனில், சீக்கிரமாய்க் கடந்து போகிறதும்

இலேசானதுமான இந்த நிகழ்காலத்தில் நமக்குண்டாகிற உபத்திரியமெல்லாம் மிகவும் உயர்ந்த மகிமையின் பெருக்கத்தை நித்தியத்திலே நமக்குப் பெறுவிக்கும்.'' (II கொரி., VI, 17) கடைசியாய் மனிதர்களுக்குள் சுபாவத்துக்கு மேலான விசுவாசம் திரும்பவும் உண்டாகச் செய்கிறதுமல்லாமல் நித்திய காரியங்களின் மட்டில், மதிப்பும், ஆசையும், நம்பிக்கையும் உண்டாகும்படியாக கூடியவரையில் சுறுசுறுப்போடும் பற்றுதலோடும் பிரயாசைப்பட வேண்டியது—சங்கைக்குரிய சகோதரர்களே இதுவே உங்களுடையவும், ஜனங்களுடைய மெய்யான நன்மைக்காகவும் சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காகவும் வருந்தி யுழைக்கிற வெவ்வேறு சபைகளின் ஒழுங்குகளால் ஐக்கியப்படுத்தப்பட் டிருக்கிற மற்றுமுண்டான குருக்களுடையவும், நம்முடைய எல்லா ஞானப் பிள்ளைகளுடையவும் முந்தின காரியமா யிருக்க வேண்டியது. ஏனெனில் மனிதர்களுக்குள் இந்த விசுவாசம் அதிகரிக்கிறதற்குத் தக்காப்போல் அழிந்துபோகிற உலக சுக செல்வங்களைத் தேடித் திரிகிற பற்றுதல்கள் குறைந்துபோம்; பிற சினேகம் தளிர்த் தோங்கும்; ஜனங்களுக்குள் உண்டாயிருக்கிற குழப்பங்களும் சண்டை சச்சரவுகளும் கொஞ்சங் கொஞ்சமாய் அடங்கிப்போம். (தொடரும்.)

---

## WHO ARE WE?

## நாம் யாவர்?

---

ஏன்? காரணம் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் வெளிப்படையாகவும் தவறுதலின்றியும் விளங்க வில்லையா? வன விலங்குகள் இவ் வுலகிற்கே உண்டாக்கப்பட்டவை. அவை எதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டனவோ, அதை அவைகளுக்குக் கொடுத்தால் அவை திருப்தியடையும்; உலகத்தை அவற்றிற்கு அளிக்க அவை மன நிம்மதியடையும். ஆனால் மனிதனோ இவ் வுலகினுக்காய்ப் படைக்கப்பட்டவனல்ல; இப் பூமியையும் இதைப்போன்ற ஆயிரம் பூமிகளையும் அவனுக்களித்த போதிலும், அவனுக்கு அவை யனைத்தும் ஒன்றுமில்லாதன. இல்லை, அவன் ஒருநாளும் இத்தகைய காரியங்களில் திருப்தியடையான் என்பது திண்ணம்!

ஆட்டிற்கு வால் அளவறுத் திருப்பது போல். கடவுள் எல்லாப் பொருள்களையும் அளவு, நிறை முதலிய கணக்குடன் உண்டாக்கியிருக்கிறார். ஒவ்வொரு சிருஷ்டியும், கடவுள் அததற்கென் றமைத்துள்ள முடிவுக்குத் தக்க அளவுடையதா யிருக்கின்றது. அவர் அளவற்ற ஞானம் நிறைந்தவரா யிருப்பதால், அழிந்துபோகும் மிருகங்களை அவர் சந்தேகமின்றி படைத்திருப்பதுபோல், அநித்திய உபயோகங்களுக் கென்று சில சிருஷ்டிகளை அவர் உண்டாக்கி யிருந்தால், அநித்திய பொருள்கள் அவைகளுக்குத் திருப்தியளிக்கும் என்பது நிச்சயமாய்த் தெரிகிறதல்லவா? ஆனால் அவர் வேறு சில சிருஷ்டிகளை நித்திய பொருள்களுக்கென்று உண்டாக்கி யிருந்தால், அநித்திய பொருட்கள் அவர்களை எவ்வளவுதான் மயக்கி, தம்மேல் அவாவுண்டாகும்படிச் செய்தபோதிலும், அவர்கள் அவற்றால் முழு திருப்தியடைவார்கள் என்பது முடியாதகாரியம். கடவுள் மனிதனைத் தமக்கென்றே படைத்துள்ளார். எல்லாக் கதிகளிலும் மனித கதியே மிக்க மேலானதும், அளவற்ற மகத்வந் தங்கியதுமாம். இதனிலும் மேலான தொன்றை நாம் சிந்திக்க முயல்வது அசாத்தியம். முடிவில்லா நித்தியத்துக்கும் மோட்சத்தில் சகல வல்லமையுமுடைய நித்திய கடவுளைப் பெற்று மகிழவே மனிதன் உண்டாக்கப்பட்டிருக்கிறான். அவன் முடிவு இதுவாயின், இதற்குத் தகுந்த வல்லமையும் சக்தியும் அவனிடமிருக்கவேண்டிய தவசியம் என்பது தானே போதரும்.

இப்போது, கடவுளைப் பெற்று மகிழ, அப்படிச் செய்வதற்கான சக்தியோடியைந்த மனம் கடவுளிலன்றி, அவருக்குக் குறைந்த மற்றெதிலும் திருப்தியடையா தென்பது தேற்றம். அவருக்கு முன்னால் சிருஷ்டிகள் என்ன? கண்ணுக்குத் தெரிவதும் தெரியாததுமான இவ் வண்ட கோளங்களும் அவற்றுள் ளடங்கிய சராசரங்களும் அவருக் கீடாமா? "தனக்குவமையில்லாதான்" என்றோர் அஞ்ஞான சாஸ்திரி சொல்வதுபோல கடவுளோடு ஒப்பாவன



ஒன்றுமில்லை. கடவுளோடு அவருடைய மிக உயர்ந்த சிருஷ்டியையும் ஒப்பிடுவது கூடாத காரியம்; அதை நினைத்தலும் முடியாது. மனிதராத்துமம் கடவுளைப் பெற்று மகிழ் வெய்த வேண்டுமெனச் செய்யப்பட் டிருந்தால், கடவுளினும் சாதாரணமாய்த் தாழ்வானது மாத்திரமன்றி, அளவற்ற விதமாய் அவருக்கு முன் தூசு போன்ற பொருட்கள் அவ் வாத்துமத்தை எப்படிச் சந்தோஷிப்பிக்கக் கூடும்? மோட்சத்துக்கென்றாகிய ஆத்துமா, அம் மோட்சத்துக்குப் பதிலாய் இவ் வுலகையே தனக்கென் றங்கீகரிக்கக் கூடும் என்று நினைப்பார் பேதைகளே. இது நியாயத்துக் கொவ்வாது; ஒருகாலும் இப்படி எவரும் நினையார். நித்தியத்துக் கென்றேற்பட்டவை அநித்தியத்தோடு நிற்குமா? சிருஷ்டிகரை யடைந்து மகிழ்ச்சி யடைவதற் குண்டாக்கப்பட்டவை ஒருநாளும் சிருஷ்டிகளிடந் தங்கியிருக்கச் சம்மதியா.

இல்லை! நீ என்ன வேண்டுமானாலும் செய், எங்கே வேண்டுமானாலும் போ, எது வேண்டுமாயினும் தேடித்திரி, உன் இருதயமட்டும் கடவுளுக்கு வெளியில் மெய்யான சந்தோஷத்தை யடையவு மடையாது, அடையவு முடியாது. "சர்வேசுரனுக்காக மனிதன் படைக்கப்பட்டான்; அக் கடவுள் ஒருவரையே யடைந்து அவரில் அவன் இளைப்பாறுமட்டும், அவன் இளைப்பாறவே முடியாது," என்று அர்ச். அகுஸ்தீன் என்னும் பெரிய வேத சாஸ்திரி சொல்லுகிறார். அப்படியானால் நான் யார்? ஒவ்வொருவரும் தம்மைத் தாமே மீண்டும் கேட்டுக் கொள்ளட்டும். நான் யார்? ஓ! முடிவையுடைய மற்ற சிருஷ்டிகளைப்போல், நான் தேவனுடைய சிருஷ்டி மாத்திரமல்ல, அவற்றிற்கு மேலானவன்; எவ்வளவோ மேலானவன்! நான் சர்வேசுரனுடைய பிள்ளை; நித்திய சிம்மாசனத்திற்குக் குறிக்கப்பட்டவன்; அளவற்ற மகத்துவம் பொருந்தியதும் உண்டாக்கப்படாதது மாகிய தேவ அழகின் சாயலாய்ப் படைக்கப்பட்ட ஓர் சீவன்.

விழித்திருங்கள்! உங்களுடைய கனதனத்தையும் பெருமையையும் நன்றாய்க் கண்டறியுங்கள்; உங்களை மோட்சத்துக்கென் றுண்டாக்கியிருக்க, இவ்வுலகிற்கே யுரியவர்கள்போல் சீவித்து உங்களைத் தாழ்த்திக்கொள்ளாதீர்கள். நித்தியமும் ஏகமுமான அரசர்க் கரசனாகிய கருணாகரக் கடவுளின் சொந்தப் பிள்ளைகளானால், அந் நிலைமைக் குகந்தாப்போல் நடந்துகொள்ளுங்கள். உங்கள் உந்நதப் பதவிக்கேற்ப சீவியுங்கள்; உங்கள் நிலைமை இன்னதென்று நன்றுணருங்கள். தீத்தொழில் புரிவதில் வெறுப்படைந்து, ஒவ்வொரு அவமான ஆசாபாசத்தையும் அறவே யடியின் கீழ் மிதித் தழியுங்கள். பொய்யை எதிர்த்து மெய்யையே நாட்டுங்கள். துர்இச்சை மோசம், முதலிய துர்க்குணங்களைத் தள்ளி, கற்பு, கண்யம் முதலியவற்றால் உங்கள் ஆத்மாவை நிரப்புங்கள். கர்வம், ஆங்காரம், தற்பெருமை முதலியன வின்றி, மிக்க தாழ்மையாய் விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், தேவ சிநேகத்திலும், மனத் தூய்மையிலும், உங்கள் சீவியமாகிய இக்கண்ணீர் கணவாயில் நடந்து வருவீர்களேயாகில், இறுதியில் நிச்சயமாய் நீங்கள் சமாதானம், மனத் திருப்தி, மெய்யான சந்தோஷம் இவற்றை யடைவீர்கள்; ஏனெனில், நாம் கடவுளுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவர்களானமையால், "அவருடைய மகிமைப் பிரதாபம் வெளிவரும்போது, நாம் திருப்தியடைவோம், பூரண திருப்தியடைவோம்."

### தியானம்.

மனித தத்துவம் அசித்தான வல்லமையல்ல; மனிதர் மனதை இதுவரையில் திருப்தி செய்யாத ஆஸ்திபாஸ்திகள், வேடிக்கை விநோதங்கள் என்னும் பாழான படுகுழியில் யோசனையில்லாமல் விழுந்து புரள்வதற்காய் மனிதன் உண்டாக்கப்படவில்லை. சாதுவான மனமுடையவனாய், தன் சீவியத்திலுள்ள அற்ப விஷயங்களையன்றி, பொருட்களின் முடிவின்னதென்பதைக் கவனிப்பதுடன், சர்வேசுரனையும் அவருடைய மாறாத சுவதந்தரத்தையும் ஆதாரமாகக்கொண்ட கடமையைப் பயமில்லாச் சுறுசுறுப்புடன் கண்டுணர்ந்து, சகலப் பொருட்களுடையவும் சகல முயற்சிகளினுடையவும் கடைசிகதி கடவுள் என்பதை எப்போதும் தன் முன்னிறுத்தி, புகைபோல் மறையும் இவ்வுலக காரியங்கள் மத்தியில் அவரை நாடிச் செல்வதே பொருத்தமுடையதென எவன் ஒருவன் நன்றாயறிகிறானோ அவனே ஞானி எனப்படுவான். வேதமில்லா வொருவன் கெட்டமனிதனேயாம்.

இவ்வுலகில் கடவுளைப் பின்பற்றி நடவாதவன், தன் எதிரிகள் யாவரும் ஒன்றுகூடி அவனுக்குச் செய்யுந் தின்மையினும் அதிக நிர்ப்பாக்கியத்தை தன்மேல் வருவித்துக் கொள்கிறான்.

மேலும் நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு என்னும் துன்பங்களுக் கிருப்பிடமான இப்புன் புலால் யாக்கை ஒழிந்தபின், நமது எதிர்கால ஜீவியத்தின் சேதி என்ன? நாம் இவ்வுலகத்திற்கு வந்ததின் பலன், நம்மா லானவரையில் நமது நிலைமையை யுயர்த்தி, நமது கடமைகளைச் சரிவர அநுசரித்து மேம்பாடடைய வேண்டுமென்பது மெய்தான். இத்தகைய உலக வேலை யனைத்தும் நமது வாழ்க்கையின் மேலோடு என்று சொல்லவேண்டும்; நமது சர்வாதிக் கர்த்தரும் நமது ஆண்டவருமாகிய கடவுளிடம் நாம் ஒழுக வேண்டிய ஒழுக்கமே அவ்வோட்டிற் குள்ளிருக்கும் ரசம் நிறைந்த பருப்பு. தீர்ப்பு காலத்தில் நம்முடைய அலுவலில் அல்லது வேலையில் ஜெயமடைந்தோமா என்றாவது, அல்லது நாம் தனிகராகவோ அல்லது ஏழைகளாகவோ இருந்தோமா என்றாவது, அல்லது மனிதர் கையில் புகழ்ச்சி யல்லது இகழ்ச்சி பெற்றோமா என்றாவது நம்மை கேட்கப் போவதில்லை; ஆனால் நம்மை அக்காலத்தில் கேட்பதெல்லாம், சர்வேசுரனுடைய திருச் சித்தத்துக் கமைந்தொழுகி, பாவத்தை விலக்கிப் புண்ணியத்தைச் செய்து, நம்முடைய பராமரிப்புக் குள்ளிருக்கும் ஆத்துமங்களி னீடேற்றத்துக்கான நற்கிருத்தியங்களைத் தேடிக்கொள்வதில் நாம் மனத்திடனும் தீர்மானமும் காட்டினோமா என்பதுதான்.

சர்வேசுரனைச் சிநேகித்து அவருக்கே ஊழியம் செய்வது தவிர, மற்றதெல்லாம் வீண், வீணிலும் வீணே. S. Selva Raju.

---

## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### 14-ம் பாடம்.

### சத்தியம்.

(முன் தொடர்ச்சி.)

---

**4. ஒரு அராபியின் பொருத்தனை.**— நான்காம் நூற்றாண்டில் அஞ்ஞானியான ஒரு அராபி இருந்தான். இவனுடைய குமாரன் தன் இளமைப்பிராய முதற்கொண்டு பாரிச வாய்வால் பீடிக்கப்பட்டு இரவும் பகலும் வாதைப்பட்டுவந்தான். ஒருநாள் இவன் கிறிஸ்துவர்களுடைய தேவனை மனதில் தியானித்துக்கொண்டு தனக்கு வியாதி குணமானால், ஞானஸ்நானம் பெறுவதாக பொருத்தனை செய்துகொண்டான். அன்று இரவு அர்ச். யுதிமியுஸ் என்பவர் அவனுக்குத் தரிசனமாகி ஜெருசலேம் பட்டணத்துக்கு அருகாமையில் வசிக்கும் என்னிடம் நீ வந்தால் உன் வியாதி உடனே குணப்படுமென்று அறிவித்து மறைந்தார். பையன் அன்று இராத்திரி தனக்குச் சம்பவித்ததைத் தன் பெற்றோருக்கு அறிவித்ததின்மேல், எல்லோருஞ் சேர்ந்து புறப்பட்டு ஜெருசலேமுக்குப் போய்ச்சேர்ந்து, அங்கு அர்ச்சிய சிஷ்டவரைக் கண்டபோது பையனுக்கு அற்புதமான சௌக்கியங் கிடைத்தது. பையனும் அவனுடைய தாய் தகப்பனும் ஞானோபதேசத்தைக் கற்றுணர்ந்து, சத்தியவேதத்தில் உட்பட்டார்கள். (Schmid.)

கோழி இறைச்சி கல்லானது — தூணில் தவம்புரிந்த அர்ச். சிமோனைப்பற்றிக் கேள்விப்பட்டு இருப்பீர்கள். இவருடைய அரிதான தவத்தைப்பற்றிக் கேள்விப்பட்டவர்கள் அவரைப் போய்ப் பார்த்துத் தங்களுக்காக வேண்டிக்கொள்ளும்படி அவரை மன்றாடுவார்கள். அவரைப் பார்க்கப்போன திரளான ஜனங்களோடு கிறிஸ்துவனான ஒரு அராபியும் போய் அர்ச்சியசிஷ்டவருடைய கடுந் தவசைக் கண்டு பிரமித்து, தானுஞ் சொற்ப தவமாகிலும் புரியவேண்டு மென்று ஆசைகொண்டு, அது முதற்கொண்டு இறைச்சி, மீன், முட்டை, பால் முதலியவற்றைப் புசிப்பதில்லையென்று அர்ச். சிமோனுக்கு முன்பாகப் பொருத்தனை செய்துகொண்டு, அதை வெகு காலம் நிறைவேற்றிவந்தான். ஆனால் இவன் ஏதுகாரணத்தைப்பற்றியோ ஒரு கோழிவாங்கிச் சமைத்துச் சாப்பிடத் துவக்கினான். ஒரு துண்டை வாயில் போட்ட பின் மற்ற இறைச்சி யெல்லாம் கல்லாய்விட்டது. அதில் ஒரு சிறு துண்டை முதலாய் உடைக்கக் கூடாமற்போனது. இதைப்பற்றிக் கேள்விப்பட்ட அவ்வூரார் அதைப் போய்ப் பார்த்து, அதிசயித்தார்கள். அவ்வூர் மேற்றிராணியாரான தேயதோரெத் தென்பவரும் அதைப் போய்ப் பார்த்ததாக எழுதிவைத்திருக்கிறார்.



பொருத்தனையை மீறினவன் தன் பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு அதுமுதல் பொருத்தனையைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றிவந்தான். (Theodoret.)

---

## பத்துக் கற்பனையின் மூன்றாங் கற்பனை.

### சர்வேசுரனுடைய திருநாட்களை ஆசரிக்கத் தக்கதாக நினைப்பாயாக.

---

### 15-ம் பாடம்.

சர்வேசுரன் 6 நாளில் உலகத்தைச் சிருஷ்டித்தபின் ஏழாம் நாள் ஒன்றும் நூதனமாய்ச் சிருஷ்டியாமல் இளைப்பாறினதைப் பற்றி, வரிவேதத்தை அநுசரித்த யூதர் சனிக்கிழமையை ஓய்வு நாளாக அநுசரித்து வந்தார்கள்.

ஆனால் திருச்சபைக்குத் தலைவர்களான அப்போஸ்தலர்களுக்குச் சர்வேசுரன் அளித்த விசேஷ அதிகாரத்தைக்கொண்டு, நமது கர்த்தர் உயிர்த்ததும், இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் தங்கள்மேல் இறங்கி வந்ததும் ஞாயிற்றுக்கிழமை யாகையால் அந்நாளையே ஓய்வுநாளாக அவர்கள், அநுசரித்தார்கள்.

ஆகையால், இந்த மூன்றாம் கற்பனையின்படி நாம் ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் வேலை செய்யாமலிருந்து முழுப்பூசை பக்தி கவனத்துடன் காண கடமைப்பட்டிருக்கிறோம்.

**1. நில், எங்கே போகிறாய்.**—சத்திய வேத ஆரம்பத்தில் ஒரு வாலிபப்பெண் அதிகாலையில் பூசை காணும்படி மகா மேரை மரியாதையுடன் கோவிலுக்குப் போனாள். இவளுடைய மேரைமரியாதையைக் கண்ட போர்வீரன் ஒருவன், அவள் கிறிஸ்துவளா யிருக்க வேண்டுமென்று நினைத்து, அவளை நெருங்கிச் சென்று, "நில், எங்கே போகிறாய்?" என்றான். அப்போது அந்த பெண், "நான் சேசுகிறிஸ்துநாதருடைய பிள்ளை, பூசை, காணும்படி போகிறேன்" என்றாள். அதற்குப் போர்வீரன், "நமது தேசத்தில் கிறிஸ்துவர்கள் இருக்கக் கூடாது என்னும் இராஜ சட்டம் உனக்குத் தெரியாதோ? வா, வந்து நமது தேவர்களுக்குப் பலியிடு," என்று அவள் கையைப்பிடித்து இழுத்தான். அந்தப் புண்யவதி, அவனைப் பார்த்து, "துஷ்டமனிதா, நீ என்னைத் தொட்டால் சேசுக்கிறிஸ்துநாதர் உன்னைத் தண்டிப்பார்," என்றதைக் கேட்ட போர்வீரன் சினங்கொண்டு, கத்தியை உருவி அவள்மார்பில் குத்தினான். அந்தப் புண்யவதி உயிர் துறந்து வேதசாக்ஷி முடிபெற்றாள். (திருச்சபை சரித்திரம்.)

**2 பூசை காணாத இரு வியாபாரிகள்**— ஒரு கிராமத்திலிருந்து அநேக வியாபாரிகள் வேறே ஊரில் கூடும் ஒரு சந்தையில் தங்கள் சரக்குகளை விற்கும்படி போனார்கள். அவர்களில் இருவர் அவ்விடத்தில் சரக்கை விற்றபின் மறுநாளான ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலேயே தங்கள் ஊருக்குப் புறப்பட்டுப் போகும்படி தீர்மானம் செய்துகொண்டு, தங்கள் ஊரானாகிய இன்னொருவனையும் தங்களுடன் வரும்படி சொன்னார்கள். அவனோ நல்ல கிறிஸ்துவனாகையால், ஞாயிற்றுக்கிழமை காலை பூசை கண்டபின் தான் புறப்படுவதாகச் சொன்னான். இந்த இரு வியாபாரிகளும் பூசை காணாமலே தங்கள் ஊருக்குப் புறப்பட்டார்கள். புறப்பட்டுப் போகும்போது ஒரு ஆற்றங் கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அன்று இராத்திரி பெய்த கனத்த மழையால் பெரும் வெள்ளம் உண்டாயிருந்தது. இதை வியாபாரிகள் கவனியாமல் ஆற்றில் கட்டப்பட்டிருந்த மரப் பாலத்தின்மேல் குதிரையேலேறிச் செல்லும்போது, பாலம் தகர்ந்து ஆற்றில் விழுந்தது. பிரயாணிகளும் தண்ணீரில் விழுந்து மூழ்கிப்போனார்கள். அருகாமையி லிருந்த கிராமத்தார், பாலம் தண்ணீரில் விழுந்த சத்தத்தைக்கேட்டு ஓடிவந்தபோது, இரு பிரயாணிகள் தண்ணீரில் மிதப்பதைக் கண்டு, மகாப் பிரயாசையுடன் அந்த இரண்டு பிரேதங்களையும் இழுத்து வெளியே போட்டார்கள். இது நடந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் 3-வது வியாபாரி அதே வழியாய் நடந்துபோகும்போது, ஆற்றோரத்தில் பெரும்சனக்கூட்டத்தைக கண்டு அது என்னவென்று போய்ப்பார்த்தான். அங்கே தன் கூட்டாளிகளின் பிரேதத்தைக் கண்டு, நடந்த சங்கதியை அங்கு கூடினவர்களுக்கு அறிவித்து, தன்னைக் காப்பாற்றின சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ்

செய்து, துரிதமாய் நடந்து தன் ஊர் சென்று, செத்துப்போனவர்களுடைய பந்துக்களுக்கு நடந்த சங்கதியை அறிவித்தான். அவர்களும் போய் அவர்களுடைய பிரேதங்களை யெடுத்து அடக்கம் செய்தார்கள். அது முதற்கொண்டு அவ்வூரார் ஞாயிற்றுக்கிழமை பூசை தவறாமல் கண்டு வந்தார்கள். (Chisholm)

3. அடி, அடி.—ஒரு ஞாயிற்றுக்கிழமை இருவாலர் வேட்டையாடும்படி காட்டுக்குப்போனார்கள். இருவரும் நல்ல கிறிஸ்துவர்கள் அல்ல. அன்று தினம் இவர்களில் ஒருவன் மாத்திரம் பூசை கண்டான். மற்றவன் பூசை காணவில்லை. அன்று காலை ஆகாயம் மப்பின்றி துலாம்பரமா யிருந்தது. இவர்கள் காட்டில் சென்றபின் சடுதியில் ஆகாயத்தில் மாற்ற முண்டாகி, பெருங்காற்று அடித்து கருமேகம் மலைகள் போல் ஆகாயத்தில் பரவ ஆரம்பித்து, அப்போதைக் கப்போது பயங்கரத்துக்குரிய இடி முழக்கமும் கேட்கப்பட்டது. இரு வாலருக்கும் பயம் அதிகரித்து நடுங்கும் சமயத்தில் அருகாமையி லிருந்த பெரும் மரத்தின்மேல் இடிவிழுந்து மள மளவென்று மரம் சாய்ந்தது. அந்நேரத்தில் அவ்விரு வாலருக்கும் உண்டான துக்கமும் பயமும் கொஞ்சமல்ல. அப்போது, "அடி, அடி" யென்று ஒரு சப்தம் கேட்கப்படவே, அன்று பூசை காணாதவன்மேல் இடி விழுந்தது. சற்று நேரத்துக்குப்பின், "அடி, அடி" யென்று திரும்பவும் சப்தம் கேட்கப்படவே, "இல்லை, இல்லை, இவன் இன்று பூசைகண்டதினால் நான் இவனை அடிக்கமாட்டேன்," என்று வேறொரு சப்தம் உண்டானது. வாலனும் ஆறுதல் கொண்டு, புயல் அமர்ந்தபின் ஊருக்குப் புறப்பட்டுப் போனான். அதன் பிறகு இவனுடைய நடத்தை முழுதும் மாறினது. இந்தச் சரித்திரத்தை புளோரென்ஸ் நகரின் அதிமேற்றிராணியாரான அர்ச். அந்தோனியார் எழுதி வைத்திருக்கிறார்.

(இன்னும் வரும்.)

---

தாழ்ச்சியில்லாமல் புண்ணியத்தை அடைய விரும்புவோர், புசல் காற்றடிக்கும்போது விரித்த கையில் தூசிகளைக் கொண்டுபோக முயலுகிறவர்களுக்கு ஒப்பாவார்கள்.

(அர்ச். பிரான்சீஸ்கு சலேஸியார்.)

# GNANAMANI, III PART.

# ஞானமணி 3-ம் பாகம்.

## 18-ம் அதிகாரம்.

### உங்கள் கடவுள் அப்போல்லோ எங்கே? காட்டும் பார்க்கலாம்.

---

கலியாணத்திற்குப்பின் ஒரு மாத காலம் தமது கிராமத்தில் தேவதாஸ் நாயகர் தங்கியிருந்தார். அந்தக் காலத்தில் தம்பதிகள் இருவருடைய பந்துக்களும் சிநேகிதர் முதலிய இஷ்டர்களும் அவர்களைத் தங்கள் தங்கள் கிரகங்களுக்கு அழைத்துப் போய் விருந்திட்டு உல்லாசமாய் விசாரித் தனுப்புவார்கள். மறு மாதமே தேவதாஸ் நாயகர் தமது பத்தினியுடன் மதராசுக்குப் புறப்படும்படி முஸ்திப்பு செய்தார். தேவதாஸ் நாயகருடைய சிறிய தாயாராகிய சுந்தரமரி யென்னும் 40-பிராயமுள்ள ஸ்திரீயைத் தன் மருமகளுக்குத் துணையா யிருக்கும்படி விஸ்வாச நாயகர் அனுப்பி வைத்தார்.

சகலமும் சித்தஞ் செய்யப்பட்டபின், தேவதாஸ் நாயகரும் ருக்மணியும், தங்கள் சிநேகிதர் வேலைக்காரர் முதலியவர்களுடன் வீட்டை விட்டுப் புறப்படும் சமயத்தில், பெண்ணின் தாய் தந்தையோர் தேவதாஸ் நாயகரை நோக்கி இவ்வாறு மொழிவார்கள்: "ஐயா, மருமகப்பிள்ளையவர்களே! எங்கள் செல்வப் புத்திரியை நீர் மணமுடித்துக்கொண்டீர். அந்தப் பெண்ணுக்கு நீரே எஜமானும் காதலனுமாயிருக்கிறீர். இதுவரையில் எங்கள் ஆதீனத்திலிருந்தாள்; இப்போதோ உமது மனைவி யாய்விட்டாள். கலியாண நாளில் உங்கள் குருக்கள் உம்மை நோக்கி, நீரும் உமது மனைவியும் சதையும் நகமு மாய் விட்டீர்கள் என்றாரல்லவோ? ஆகையால் ஐயா, பெரும் படிப்பாளியான உமக்குப் புத்தி சொல்ல நாங்களார்? ஆகிலும் உமது கையில் ஒப்படைக்கப்பட்டவளைக் காத்துக் காப்பாற்றுவது உமது பாரம். சிறுமியாயிருப்பதால், அவள் தெரிந்தோ தெரியாமலோ செய்யுந் தப்பிதங்களைத் தாங்கள் தான் பொறுக்கவேண்டும்" என்றபின், தங்கள் குமாரத்தி பக்கந் திரும்பி: "அம்மா! இதுவரையிலும் உனக்கு ஒன்றுங் குறைவின்றி உன்னைச் செல்வப் பிள்ளையாய் வளர்த்துவந்தோம். இப்போது உன்னை மணமுடித்துக்கொண்டவருக்குச் சொந்தமாய் விட்டாய். அவருக்கு எப்போதும் அமைந்து நட. உங்களிருவரில் கோபமுண்டானால் கூடிய சீக்கிரத்தில் அதை மறந்துவிட்டு, அவருடன் அன்னியோன்னிய சிநேகமாயிரு. அவருடைய தங்கமான குணத்தை யாவரும் அறிந்திருக்கிறார்கள். உன்னால் தப்பிதம் வாராதபடி பார்த்துக்கொள். மேலும் உன் கணவன் பெரிய பட்டணங்களில் ஜீவித்துக் கனவான்களுடன் பேசிப்புழங்க இருப்பதால், நீ நாள் முழுதும் தனியாயிருக்கும்படி நேரிடும். இதோபார், சுந்தரம்மாள்! இந்தம்மாளை உன் தாயாகப் பாவித்துக்கொள். இந்தப் புண்ணியவதியின் புருஷன் இறந்துபோய்ப் பத்து வருஷமாகிறது. இந்தப் பத்து வருஷத்திலும், அதற்கு முன்னும் தெருவில் யாதொரு சந்தடி செய்து சத்தமிட்டுப் பேசினவளல்ல. இந்த மகராசி நல்லவள், புண்யவதி யென்று இவ்வூரார் புகழ்வார்களேயன்றி, இந்தம்மாள் மேல் சொற்ப இழிச் சொல்லாவது கூறுவார் ஒருவருமில்லை. இந்தப் புண்ணிய லக்ஷ்மியை உனக்கு மாதிரிகையாகப் பாவித்து, அவளுக்குக் கீழ்ப்படிந்து உன் தாயைப்போல் பார்த்து வருமட்டும் உனக்கு யாதொரு சங்கட மும்வாராது. கேட்பார் பேச்சைக் கேட்காதே. வஞ்சகரை நம்பவேண்டாம். கோவில் குளத்தை மறவாமல் விரதத்தை அனுசரித்து, பகவானுக்குச் சேவைசெய்து, உன் புருஷன் சொற்படி கேட்டுவருவாயாகில், உனக்கு ஒன்றுங் குறைவுபடாது. பகவான் உன்னை ஆசீர்வதிப்பார்" என்றார்கள். அப்போது கண்ணீர் விட்டுத் தேம்பி அழும் தங்கள் மகளை பக்ஷ அன்புடன் கட்டி முத்தமிடவே, தேவதாஸ் நாயகர் தமது மனைவியுடனும் தமது சிறிய தாயாருடனும் வண்டியேறினார். இவருடைய சிநேகிதர்கள் வேறோர் வண்டியில் ஏற, வேலைக்காரர் சாமான் ஏற்றப்பட்ட வண்டிகளோடு ஊரைவிட்டுப் புறப்பட்டார்கள்.



நாலைந்து நாள் பிரயாணஞ் செய்யவேண்டியிருந்ததால், அங்கங்கே தங்கி, வெயில் தணிந்த நேரத்தில் தேவதாஸ் நாயகரும் அவருடைய நேசரும் வேட்டையாடி வெகு சந்தோஷ களிப்புடன் பிரயாணஞ்செய்தார்கள். ஆகையால், பிரயாணத்தின் கஷ்டம், கஷ்டமாய்த் தோன்றவில்லை. ஐந்தாம் நாள் சிந்தாத்திரையாய் மதராஸ் போய்ச் சேர்ந்தார்கள்.

தேவதாஸ்நாயகர் மணமுடித்துக்கொண்டு மதராசுக்குத் திரும்பும்பொழுது, அவருக்கும் அவர் மனைவிக்கும் அங்கு ஆரவார சிறப்புடன் நல்வரவு கொடுக்கும்படி அவருடைய சிநேகிதர் முஸ்திப்பு செய்திருந்தும், நாயகருடைய வேண்டுகோளின்பேரில் அவையெல்லாம் நிறுத்தப்பட்டன.

தேவதாஸ் நாயகர் மதராசில் ஒரு பெரிய பங்களாவைக் குடிக்கூலிக்கு அமர்த்தி அதில் குடியிருந்துவந்தார். மறுவாரத்தில் தமது மனைவியையும் சிறிய தாயாரையும் வண்டியில் ஏற்றி அழைத்துக்கொண்டுபோய் மியூசியம், பீப்பில்ஸ் பார்க் முதலிய வேடிக்கைக்குரிய இடங்களையும், சிறந்த கட்டிடங்களையும், ஆங்காங்கிருந்த பெரிய கோவில்களையுங் காட்டினார்.

ருக்மணியோ வென்றால் கன்னியர் மடத்துத் தாயார் தனக்குச் சொன்ன புத்திமதிகளை மறந்தவளுமல்ல, தான் எழுதி வைத்திருந்த புத்திமதிகள் அடங்கிய கடிதத்தை அப்போதைக் கப்போது வாசிக்கத் தவறினவளுமல்ல. ஞாயிற்றுக் கிழமைகளிலும் பெரிய திருவிழாக்களிலும் தன் சிறிய மாமியாருடன் பூசை காணவும் திவ்விய நற்கருணை வாங்கவும் தவறமாட்டாள். வெற்று நாட்களிலும், வியாதியாயிருந்த சமயந்தவிர மற்ற நாட்களிலும் திவ்யபூசை கண்டு வருவாள். புதுக் கிறிஸ்தவளான ருக்மணியின் தர்ம நடத்தையைக் கண்ட தேவதாஸ் நாயகரும் அவருடைய சிறிய தாயாரும் சந்துஷ்டி கொண்டு, சர்வேசுரனுக்குத் தோத்திரம் புரிந்தார்கள்.

தேவதாஸ் நாயகர் தமது வேத விஷயங்களில் அவ்வளவு நிஷ்கருஷையாய் நடந்தவரல்ல. வருஷத்தில் இரண்டு மூன்றுவிசை மாத்திரம் பாவசங்கீர்த்தனம் பண்ணி நன்மை வாங்குவார். ஞாயிற்றுக் கிழமைகளில் பூசைக்குத் தவறிவிட்டாலும் வெற்று நாட்களில் அரிதாய்ப் பூசைக்குப் போவார். எந்த வேளையில் வீட்டுக்கு வந்த போதிலும் தேவமாதா சுரூபத்திற்குமுன் முழங்காலிலிருந்து 53 மணி ஜெபம் செய்யாமல் இராப் போசனம் புசிக்கமாட்டார்.

கலியாணத்திற்குப்பின் ஒரு வருஷகாலம் மதராசில் குடியிருந்த காலத்தில், சங்கீதவித்தையிலேயும் சித்திர வேலையிலேயும் சமர்த்த

றென்று சிறந்த பேரெடுத்து பெரிய மனுஷாளுடையவும் துரைமாருடையவும் நல்ல அபிமானமும் பெற்று செல்வாக்கு அடைந்திருந்தார். இவர் சிங்கார வித்தையில் மிகவும் தேர்ந்து திறமையுள்ளவரா யிருந்ததைப்பற்றி அவரைப் பண்டிதரென்று எல்லோரும் கூப்பிடத் தொடங்கினார்கள். இந்த முகாந்தரங்களைப்பற்றி அநேகர் தேவதாஸ் பண்டிதருடைய சிபாரிஸ் பெற்று சர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்தார்கள்.

ருக்மணி மதராசுக்கு வந்த 6, 7 மாதம் வரைக்கும் சுகமே யிருந்தாள். அதற்குப்பின் அடிக்கடி சீக்காய் விழுந்து பல வைத்தியரால் சிகிச்சை செய்யப்பட்டும் குணப்படாத படியால் வேறு ஊருக்குப் போகும்படி தேவதாஸ் பண்டிதர் கருத்தாய் இருந்தார். வைத்தியருடைய ஆலோசனையின்மேலும் தன் சிநேகிதருடைய வேண்டுகோளின்மேலும் செங்கல்பட்டில் குடியேறத் தீர்மானஞ் செய்தார்.

பாடுவதிலும் வாத்தியஞ் செய்வதிலும் சித்திர மெழுதுவதிலும் தேவதாஸ் பண்டிதர் தேர்ந்த பண்டிதரா யிருந்ததுபோல நாடகம் வாசாப்பு முதலியவைகளைத் தானே உண்டு பண்ணுவதிலும், பாட்டு காவியம் கட்டுவதிலும் திறமையுள்ளவர். இங்கிலீஷிலுள்ள ஷேக்ஸ்பியர் என்னும் புலவர் உண்டுபண்ணின நாடகங்களில் சிலதை யெடுத்து வெகு திறமை சாமார்த்தியத்துடன் நடத்தினார். இது நிற்க, வேதாகமங்களிலுள்ள சூசைசரித்திரம், ஜோப், தொபியாஸ், எஸ்தேர், ஆமான், தனியேல், தாவீது முதலியவர்களின் சரித்திரத்தை நாடக ரூபமாகச் செய்து அவைகளுக் கனுசரணையாய் கவிகளை யுண்டுபண்ணி நடப்பித்தார். திருச்சபை சரித்திரத்தில் சிலதை நாடகமாகச் செய்து நடிப்பித்தார். அவற்றுள் ஆக்னேசம்மாள், செசிலியம்மாள், செபஸ்தியார், எஸ்தாக்கியார் முதலியவர்களின் நாடகம் சிறந்தவை.

இவர் மதராசைவிட்டு செங்கல்பட்டுக்குப் போவதற்கு முன் ஒரு நேர்த்தியான நாடகம் ஆட உத்தேசித்து, அதற்காக வேதசாக்ஷியான அர்ச். போத்திதுஸ் (Potitus) என்பவருடைய சரித்திரத்தைத் தெரிந்தெடுத்துக்கொண்டார். இதை ஆடிமுடிக்க ஆறு இராத்திரி பிடித்தது. இதைப் பார்த்தவர்கள், இவ்வளவு சிறந்த நாடகத்தை ஒருபோதும் பார்த்ததில்லையென்று நிச்சயித்தார்கள். ஆகையால் இந்த நாடகத்தின் தாத்பரியத்தை வெகு சுருக்கமாய் இங்கு காட்டுவது நலமாயிருக்கும்.

இந்த நாடகத்தின் கதா நாயகர் போத்திதுஸ் என்னும் 12பிராயமுள்ள சிறுவர். 161௵ அந்தோனீனுஸ் என்னும் உரோமைச் சக்ரவர்த்தி காலத்தில் இவர் சீவித்து வந்தவர். இவருடைய தாய் தகப்பன் முதலியவர்கள் அஞ்ஞானிகளாயிருந்தும், இவர் மாத்திரம் ஞானஸ்நானம் பெற்று உத்தமனாய் நடந்துவந்தார். இதைப்பற்றி கேள்விப்பட்ட அவருடைய தகப்பன், அவர் கிறிஸ்து வேதத்தை விட்டு விடும்படி செய்த முயற்சியெல்லாம் சபலமாயிற்று. இவர் தான் ஞானஸ்நானம் பெற்றதற்காக கொடுத்த நியாயங்களையும், செய்து காட்டிய அற்புதங்களையும் கண்ட இவருடைய தகப்பனும் சத்திய வேதத்தில் சேர்ந்தார்.

இதற்குப் பிறகு சர்வேசுரனுடைய சித்தத்தை யனுசரித்து, போத்திதுஸ் என்பவர் தம் நாட்டை விட்டு காட்டிற்குச் சென்று அவ்விடத்தில் ஜெப தபத்தில் தம் காலத்தை செலவழித்து வந்தார். தன்னைக் கெடுக்கும்படி வந்த நரகப் பசாசை தேவ உதவியால் ஜெயித்து ஓட்டினார். சர்வேசுரன் அந்தரங்கத்தில் தமக்குப் போதித்த ஞான போதனையை மனதில் தரித்துக் கொண்டு, அவருடைய உத்தரவின்மேல் காட்டை விட்டு சர்டினியா நாட்டின் பிரதான நகராகிய வலேரியாவுக்குச் சென்றார். அவ்விடத்தில் சகலரும் அஞ்ஞானத்திலும் பாவாக்கிரமத்திலும் மூழ்கி யிருந்ததை யறிந்து கிலேசப்பட்டு, அந்த ஊரார் மனந்திரும்பும்படி மனதில் வேண்டிக்கொண்டு போகுஞ் சமயத்தில், தனக்கு முன்னால் கனவான்களான இருவர் பேசிக்கொண்டு போகக்கண்ட இவர் அவர்களைப் பின்தொடர்ந்து போனார். அந்த ஊர் தேசாதிபதியான ஆசாதோ என்பவரின் மனைவியாகிய குயிரியாக்காள் என்பவளைப்பற்றி மகா துக்கத்துடன் அவர்களிருவரும் பேசிக்கொண்டு சென்றார்கள். குயிரியாக்காளுக்கு குஷ்டங் குறையாமல் அதிகரிப்பதையும், எந்த வைத்தியனாலும் அது குணப்படாம லிருப்பதையும், இடைவிடாமல் மிருகப்பலி முதலிய நைவேத்தியங்கள் சமர்ப்பிக்கப்பட்டும் தேவர்களுடைய கோபம் அமரவில்லையே யென்றும் சம்பாஷித்துக்கொண்டு போனவர்களைக் கேட்டுக்கொண்டே போன போத்திதுஸும் அவர்களுடன் தேசாதிபதியின்



மாளிகையில் பிரவேசித்தார். சேனுசங்கத்தாரான அவ்விருவரும் மேல் மெத்தைமேல் ஏறிப் போனபின், போத்திதுஸ் வாசற்படியில் உட்கார்ந்திருப்பதைக் கண்ட வேலைக்காரன் ஒருவன் அவரைக் கோபித்து வெளியே போகும்படி சொல்லும்போது, இவர் தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்கும்படி சேசுநாதசுவாமி பேரால் கேட்கவே, வேலைக்காரன் கோபங்கொண்டு "கிறிஸ்துவர்களை தேசாதிபதி வாதித்துக் கொல்லுவாரென்று அறியாயோ? எழுந்து வெளியே போ" என்றான். அதற்குச் சிறுவன்: "என்னை சர்வேசுரன் சகல பொல்லாப்பிலும் நின்று காத்து இரக்ஷிப்பார். அவருடைய உதவியால் குருடருக்குப் பார்வையும், செவிடருக்குச் செவியும், குஷ்டருக்கு சௌக்கியமும் அளிப்பேன்" என்றார்.

உடனே வேலைக்காரன் மேல் மெத்தைக்கு ஓடிப்போய் நடந்த காரியங்களை வியாதிக்காரிக்கு விவரித்தவுடனே, அந்தச் சிறுவனை மேலே கூட்டிக்கொண்டு வரும்படி உத்தரவு அளித்தாள். போத்திதுஸ் வியாதிக்காரியிருந்த அறைக்குப் போனபோது, கை, கால், முகத்தில் எல்லாம் இரணமுண்டாகி அவலக்ஷண கோலமாயிருக்கும் அவளைப் பார்த்து, "நான் சேசுக்கிறிஸ்துவின் தாசன்; நீ சத்தியதேவனை விஸ்வசித்தால் குணமடைவாய்" என்றார். "அதற்கவள் உங்கள் தெய்வமே சத்திய தெய்வமென்று என் முழு மனதுடன் விஸ்வசிக்கிறேன்" என்னவே, போத்திதுஸ் முழங்காலிலிருந்து அதிக விஸ்வாசத்துடன் சர்வேசுரனைப்பார்த்து வேண்டிக்கொண்ட க்ஷணமே, குரியாக்காளுக்கு பூரண சௌக்கியமுண்டானது. இந்தச் சந்தோஷ செய்தியை தன் புருஷனுக்கும் பந்து மித்திராருக்கும் அறிவிக்கும்படி பட்டணத்தின் நாலா பக்கங்களுக்கும் வேலைக்காரரை அனுப்புவித்தாள். இந்த அதிசயத்தைக் கண்ட ஜனம் பிரமித்து, கிறிஸ்துவர்களின் தெய்வமே மெய்யான தெய்வமென்று சாக்ஷிகூறி, அந்தப்பெரிய பட்டணத்தில் இருந்தவர்களில் பாதிபேருக்கு அதிகமாய், தங்கள் தேசாதிபதியின் குடும்பத்துடன் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவ்விடத்தில் தனக்கு அதிக கீர்த்தி வெகுமானம் உண்டாவதையறிந்த போத்திதுஸ் அவ்வூரை விட்டு வனாந்தரத்திற்குச் சென்று அவ்விடத்தில் ஜெபத்தில் காலத்தைப் போக்கிவந்தார்.

உரோமை ராஜ்ஜியத்தின் சக்ரவர்த்தியாகிய அந்தோனீனுஸ் என்பவனுடைய குமாரத்தியாகிய ஆக்னேஸ் என்னும் சிறு பெண்ணுக்கு பசாசு பிடித்து சொல்லிமுடியாத வாதைப்பட்டு வந்தாள். கெட்டிக்காரரான வைத்தியராலும் பில்லிசூனியக்காரராலும் அதை ஓட்டக் கூடாமற் போய்விட்டது. செய்த தேர் திருநாட்களாலும், உபாயங்களாலும், கொடுத்த பலி பந்தங்களாலும், உடைக்கப்பட்ட தேங்காய்களாலும், கொளுத்தப்பட்ட கர்ப்பூரம் சாம்பிராணிகளாலும் தேவர்களுடைய கோபம் அமர்ந்தபாடில்லை. ஒரு நாள் இம்மாது பசாசால் வாதிக்கப்படும்போது, "வனாந்தரத்திலிருக்கும் போத்திதுஸ் என்பவர் வந்தால் நான் பறந்துபோவேன்" என்று பசாசு சொன்னது. உடனே சக்ரவர்த்தி 50 சேவகரை ஷை வனாந்தரத்திற்கு அனுப்பி போத்திதுஸ் என்பவரை கூட்டிக்கொண்டு வரும்படி கற்பித்தான். அவ்வாறே அந்த வாலன் சக்கரவர்த்திக்கு முன் நிற்பதைக் கண்ட அந்தோனீனுஸ் அவரைப் பார்த்து, "நீ யார்?" என்றான். அதற்கு "நான் கிறிஸ்துவன்" என்று பதிலுரைத்தார். "இந்தத் தேசத்தில் கிறிஸ்துவர்கள் இருக்கக்கூடாதென்று அறியாயோ?" என்று இராயன் கேட்க, அவர் "அறிவேன், இதோ தயாரா யிருக்கிறேன், கொல்லும்" என்று சொன்னார். சக்ரவர்த்தி கோபத்தை யடக்கிக்கொண்டு, "நல்லது சிறுவனே! என் குமாரத்தியை குணப்படுத்துவாயோ?" என்று கேட்டான். "சேசுக்கிறிஸ்துவை நம்பினால் உமது குமாரத்தி குணப்படுவாள்" என்று சொன்னார். அதற்கு இராயன் "அப்படியே ஆகட்டும்" என்றான். ஆனால் இராயனுடைய வார்த்தை கபடமானதென்று அறிந்துகொண்ட வாலன் இராயனை கோபத்துடன் பார்த்து, "ஏன் கபட தந்திரமாய்ப் பேசுகிறீர்? நீர் சத்தியதேவனை தூஷணித்து இகழும் பாவத்திற்குத் தகுந்த தண்டனையை யடைவீர்" என்று நற்புத்தி சொன்ன. பின் "உமது குமாரத்தியை இங்கே கூட்டிவாரு" மென்றார்.

ஆக்னேஸ் அம்மாள் கைகால் கட்டுண்ட பிரகாரம்போத்திதுஸுக்குமுன் கொண்டுவரப்பட்டாள். எலும்புந் தோலுமா யிருந்தாள். மூர்க்கமுள்ள மிருகத்தைப்போல் சீறிக்கொண்டிருந்தாள். அப்போது போத்திதுஸ் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடி, "துஷ்டப் பசாசே!

இந்தப் பெண்ணைவிட்டு அப்பாலே போ" என்றவுடனே, ஆக்னேசம்மாள் மூர்ச்சையாய்க் கீழே விழுந்து செத்தவளைப்போல் கிடந்தாள். அந்த க்ஷணமே, பசாசானது அவலக்ஷண ரூபமுள்ள கருங் காகம்போலத் தோன்றி, ஜன்னல் வழியாய் பறந்து வெளியே போனது. உடனே பொறுக்கக் கூடாத நாற்ற முண்டாகி, இராசமாளிகை அதிர்ந்தது.

இதற்குப் பின், போத்திதுஸ் ஆக்னேஸ் கரத்தைப் பிடித்து, "திரியேக சர்வேசுரன் நாமத்தால் உனக்குக் கற்பிக்கிறேன், சுகமே எழுந்திரு" என்றார். உடனே அங்கு கூடியிருந்த சகலரும் அதிசயித்துப் பிரமிக்க, ஆக்னேசம்மாள் பூர்ண சௌக்கியத்துடன் எழுந்திருந்தாள். அவள் துஷ்டப் பசாசால் துன்பப்படுவதற்கு முன் இருந்த பிரகாரம் காணப்பட்டாள். அப்பொழுது இராயன் சந்தோஷத்தால் பைத்தியங்கொண்டவனைப்போல், தன் நேசக் குமாரத்தியாகிய ஆக்னேசைத் தழுவி முத்தமிட்டானேயன்றி, அவன் ஞானஸ்நானம் பெறாததுடன் தன் குமாரத்தியும் ஞானஸ்நானம் பெறச் சம்மதித்தவனல்ல.

இதற்குப்பின் இராயன் போத்திதுசை நோக்கி, "வாலனே, சர்வவல்லபமுள்ள எங்கள் கடவுளாகிய அப்போல்லோ என்பவரை ஏன் நீ வணங்கக் கூடாது?" என்றான். அதற்கு வாலன்: "உங்கள் கடவுள் அப்போல்லோ எங்கே? காட்டும் பார்க்கலாம்" என்றார். உடனே இராயன் சந்தோஷங்கொண்டு அப்போல்லோ கோவிலுக்குத் தன் உத்தியோகஸ்தருடன் போத்திதுசைக் கூட்டிக்கொண்டு போனான். போத்திதுஸ் அதில் பிரவேசித்து முழங்காலிலிருந்து சத்திய சர்வேசுரனைப் பார்த்து மன்றாடின க்ஷணமே, மேலே வைக்கப்பட்டிருந்த சிலை அசைந்து சனங்கள் பக்கமாய்ச் சாய்ந்து கீழே விழுந்து ஆயிரந் துண்டுகளாக உடைந்தது. இதைக் கண்ட இராயனுக்குச் சொல்லிமுடியாத கோபோக்கிரம் உண்டாகி போத்திதுசைகொல்லத் தீர்மானங்கொண்டு மறுநாளே அந்த வாலனைக் காட்டு மிருகங்களுக்கு இரையாகப் போடவும், அதைத் தன் பிரஜைகள் எல்லோரும் வந்து பார்க்கும்படி பறைசாற்றவுங் கட்டளையிட்டான்.

மறுநாள் காலைபத்து மணிக்குச் சுமார் ஐம்பதாயிரத்துக்கு அதிகமான ஜனம் ஆம்பிதியேடர் என்னும் அநேக அடுக்குள்ள பிரமாண்டமான மண்டபத்தில் வந்து கூடினார்கள். இராயனும், தன் மந்திரி பிரதானிகளான உத்தியோகஸ்தர், பிரபுக்கள், சாமாசிகள் முதலிய கனவான்களால் சூழப்பட்டு, தமது குமாரத்தியாகிய ஆக்னேஸம்மாளுடன் தனக்கு நியமிக்கப்பட்ட சிங்காசனத்தில் அமர்ந்து, "அந்த துஷ்டப் பயல்மேல் ஓட்டிவிடுங்கள் காட்டு மிருகங்களை" யென்று கதறினான். உடனே நாலு சிங்கங்களைக் கூட்டிலிருந்து விடவே, அவை போத்திதுசை ஒன்றுஞ் செய்யாமல் அவர் பாதத்தில் நாய்க்குட்டிகளைப்போல் நின்றன. "ஓகோ! இவன் மந்திர தந்திரக்காரன். சக்கர இயந்திரத்தில் கிடத்தி சித்திரை வேதனை செய்யுங்கள்" என்று இராயன் கற்பித்தவுடனே, கொலைஞர் போத்திதுசை இயந்திரத்தில் கிடத்தி அதைச் சுழற்றி சுற்றும்போது சிலர் தீவர்த்திகளால் அவருடைய இரு விலாப் பக்கங்களையும் சுட்டார்கள். இவ்வளவு கொடிய வேதனையால் அற்ப நோவும் படாமல் சந்தோஷமாக யிருப்பதைக் கண்ட ஜனம், கிறிஸ்துவர்களுடைய கடவுள் பலமுள்ளவர் என்று ஆர்ப்பரிப்பதைக் கேட்ட இராயனுக்கு அதிக கோபமுண்டாகி, தன் உதட்டை இரத்தம் வர கடித்துக்கொண்டு கொலைஞரை நோக்கி, "சிராவணம், சிராவணம்," என்றான். உடனே, பல பற்களுள்ள இருப்புக் குறட்டைக் கொண்டுவந்து போத்திதுசுடைய சிரசில் வைத்து அழுத்தினார்கள். இந்த ஆயுதத்தை யாதாமொருவனுடைய தலையில் வைத்து அழுத்தினவுடனே அதன் பற்கள் மூளை மட்டும் ஊடுருவிப் பாய, அவன் உடனே இறந்து போவான். ஆனால், அது போத்திதுசுடைய தலையில் வைக்கப்பட்ட க்ஷணமே, காணாக்கையால் எடுபட்டு இராயனுடைய தலையில் காணப்பட்டது. அந்த ஆயுதம் அவன் தலையில் வைக்கப்படவே, அதை யெடுக்க யாராலும் கூடாமல், சொல்லி முடியாத வேதனை அனுபவித்தான் அந்தோனினுஸ். கெஞ்சி மன்றாடினான் போத்திதுசை அந்த ஆயுதத்தை அப்புறப்படுத்த. இவனுடைய அழுகைக் குரலைக் கேட்ட உத்தியோகஸ்தரும் போத்திதுசை மன்றாடினார்கள். ஆக்னேசும், இந்த கொடிய வேதனையிலிருந்து தன் தகப்பனைக் காப்பாற்றும்படி இவரை மன்றாடினாள். அப்போது வேத சாக்ஷியானவர் கொடுங் கோலனை நோக்கி, "உன் வார்த்தைப் பாட்டின்படி நீ ஞானஸ்நானம் பெறாமல் என்னை யேமாற்றினாய்? ஆக்னேஸ் கிறீஸ்துவளாவதற்கு என்னசொல்லுகிறாய்?" என்றார். "அப்படியே ஆகட்டும். அவள் ஞானஸ்நானம் பெற விக்கினமில்லை; ஐயா, சாமி, என்னை யிரக்ஷியு" மென்று கதறும்போது, ஆக்னேஸ் மேலே யிருந்து அரங்கத்தில் குதித்துவேத சாக்ஷிக்கு முன் முழங்காலிலிருக்கவே, அவர் அவளுக்கு ஞானஸ்நானங் கொடுத்தார். இராயனுடைய அழுகைக் கூக்குரலையும் மற்ற ஜனங்களுடைய மன்றாட்டையும் கேட்டு போத்திதுஸ் இரக்கங்கொண்டு, திரும்பவும் சர்வேசுரனைப் பார்த்து பிரார்த்திக்க, அந்த சிராவணம் இராயனுடைய தலையினின்று கீழே விழுந்தது.



இராயன் வெட்க நாணங் கொண்டவனாய் தன் அரண்மனைக்குப் புறப்பட முஸ்திப்பாகும்போது, போத்திதுஸ் அவனை நோக்கி, "இராயனே! நான் என் சர்வேசுரனுடைய சமூகம் சேர காலம் சமீபித்திருக்கிறது. நானும் அவரைப் பார்த்து மகிழ ஆசிக்கிறேன். வாளால் என் தலையை நறுக்குவாயாகில், என் ஆத்துமம் பரலோகத்திற்குப் பறந்துபோம்" என்றார். அப்படியே இராயன் கொலைஞருக்குக் கற்பித்த க்ஷணமே; ஒரு பாதகன் வேத சாக்ஷியின் தலையை வெட்டினதும் அவருடைய ஆத்துமம் ஒரு மாடப்புறா ரூபமாக ஆகாயத்தில் பறப்பதை அங்கு கூடியிருந்தவர்கள் கண்டார்கள். இவ்வாச்சரியத்தைக் கண்ட அநேக ஆயிரம்பேர் சத்திய வேதத்தில் உட்பட்டார்கள்.—இதுதான் அந்த நாடகத்தின் முக்கிய பொருள்.

(இன்னும் வரும்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

### தெய்வத்தால் ஸ்தாபிக்கப்பட்ட கத்தோலிக்கு வேதத்தின் லட்சணங்கள் புறமதஸ்தர்களுடன் நடமாட்டம்.

(முன் தொடர்ச்சி.)

31. புறமதஸ்தர்களிடம் ஜாதிவேதத்திற் கடுத்த சம்பாஷணைகளை விலக்குவது ஒழுங்கு.

32. கிறிஸ்துவர்களாயிருந்தும், அக்கியானிகளுடைய முகத் தாட்சண்யத்திற்குப் பயந்து அவர்களுடைய குருட்டுச் சாஸ்திரங்களை யநுசரிப்பவர்கள், கிறிஸ்து வேத இலட்சணத்தைச் சரியாய் உணராத கோழைக் கிறிஸ்துவர்கள் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

33. கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் தேர்ச்சி யடைந்திருப்பதினால் தான் கிறிஸ்துவர்கள் மேம்பாடுள்ள உத்தியோகங்களி லிருக்கிறார்களே யொழிய, மற்றப்படி அக்கியானியைப்போல் நடிப்பதினாலல்லவென் றறிந்திருப்பது ஒழுங்கு.

34. கிறிஸ்துவர்கள் எப்படிப்பட்ட அந்தஸ்தினரா யிருந்தாலும் கத்தோலிக்குச் சீவியம் சீவிப்பது ஒழுங்கு.

(மேலான உத்தியோகமடைந்து ஒரு புதிய நகருக்குப் போகிற கிறிஸ்துவர்களுள் சிலர், தங்கள் உத்தியோகப் பெருமைக்கும் கத்தோலிக்குச் சீவியத்திற்கும் சரிப்படாதென்று நினைத்தோ, அல்லது தங்களைப்போல் சிறந்த கத்தோலிக்கு உத்தியோகஸ்தர்கள் இல்லாத நகரத்தில் தாங்கள் கத்தோலிக்கர்கள் என்று காட்டிக்கொள்வதில் கவுரவக்குறையென்று நினைத்தோ அக்கியானிகளைப்போல் நடிக்கத் தலைப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் அடியில் கண்ட விதிகளை யநுசரித்தால் தங்கள் கவுரவத்திற்குக் குறைவு வராமலே கத்தோலிக்குச் சீவியம் சீவிக்கக்கூடும். (1) அவ்வூரில் குரு சுவாமியாரிருந்தால் அவருடன் நேசம் பாராட்டுவது. (2) கிறிஸ்துவர்களுக்குள் யோக்கியர் ஒருவரிருவரோடு பரீட்சை செய்துகொள்வது. (3) தவறாமல் பூசைக்குப் போவது; அன்றாடம் வீட்டில் ஜெபம் செய்வது. (4) இஷ்டமிருந்தால் கோவிலில் ஸ்தாபித்திருக்கும் சபை அல்லது சங்கத்தில் சேர்வது. (இங்கு அந்தஸ்தைப்பற்றி அதிகம் கவனித்தல் ஆகாது.) (5) கத்தோலிக்குப் புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் வாசிப்பது.)

35. கிறிஸ்துவர்கள் வாயில் பொய்யும் கையில் திருட்டுமில்லாமல் நேர்மையுடன் நடப்பது ஒழுங்கு. (சரியான கிறிஸ்துவர்கள் யோக்கியமாய் நடப்பார்களென்று இந்துக்களே ஒத்துக்கொள்வார்கள். "அவன் கிறிஸ்டியன் பொய் சொல்லமாட்டான். இவன் கிறிஸ்டியன் திருடமாட்

டான்''என்றுபிராமணர்கள் முதலிய இந்து உத்தியோகஸ்தர்கள் சொல்ல நாம் எத்தனை முறை கேட்டிருக்கிறோம். கிறிஸ்துவர்க ளனைவரும் நேர்மையாய் நடந்தால், அவர்களுக்கு எப்பேர்ப்பட்ட கீர்த்தி!)

36. கிறிஸ்துவர்கள் தாங்கள் தேவபிரசைகளென்றும் அக்கியானிகளைவிட மேம்பட்டவர்களென்றும் அறிந்திருப்பது ஒழுங்கு. (இப்படிச் செய்யாமல் தங்களைத் தாழ்ந்தவர்களென்று எண்ணிக்கொண்டு, குட்டிக்குரங்கைப்போல் அக்கியான ஆபாச குறைகளை யநுசரிப்பதால் தான் பெருமை கிடைக்குமென்று நினைப்பது மவுடீகம். தாங்கள் தாழ்ந்தவர்கள் என்னும் எண்ணம் (Consciousness of inferiority) கிறிஸ்துவர்கள் மனதில் வேரூன்றியிருக்குமட்டும் அவர்கள் விருத்தியடைவது கஷ்டம்.)

37. தன் சிநேகிதனாகிய புறமதஸ்தனைச் சமயம் வாய்த்தபோது, கோவிலுக்குக் கூட்டிவந்து அவனுக்கு வேதகாரியங்களை விளக்கிக் காட்டுவது ஒழுங்கு.

38. ஒவ்வொருவனும் தன் ஆயுச் காலத்தில் ஒருவனையாவது கிறிஸ்துவனாக்குவது ஒழுங்கு. கிறிஸ்துவர்கள் தங்கள் வேத அபிவிருத்திக்காக உழைப்பது ஒழுங்கு.

39. புறமதஸ்தர்களைக் கண்டாகிலும் கிறிஸ்துவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கல்வியில் பயிற்சி செய்வது ஒழுங்கு. (தண்ணீரைக் கண்டவுடன் துள்ளிக் குதித்தோடும் மீனுக் கொப்ப, படிப்பென்றால் தீராத ஆவல் கொள்ளும் பிராமணப் பிள்ளைகளை முதலாய் அவர்களுடைய பெற்றோர் படிக்கும்படி கண்டித்தும் தண்டித்தும் வருகிறார்கள். கிறிஸ்துவர்கள் ஏதோ கடனைக் கழிக்க, தங்கள் பிள்ளைகளுக்குப் புஸ்தகமும் பள்ளிக்கூடச் சம்பளமும் கொடுத்துவிட்டால் போதாது. அவர்களை வீட்டில் படிக்க வைக்கவேண்டும். அவர்களுடைய உபாத்திமார்களை விசாரித்து வருஷாந்திர ரிப்போர்ட்டைப் பார்வையிடவேண்டும். இதெல்லாம் விட்டு அவர்களுக்கு கான்பூர் பூட்ஸ், பூட்லேஸ், சாக்ஸ், டிராஸ், டிரௌஜர்ஸ், நிக்கர்பாக்கர், பெல்ட், பிரேஸிஸ், ஷர்ட், வேய்ஸ்ட் கோட், அண்டிங் கோட், ஸ்டட்லிங்க், வாச், நெக்டை, காலர், கிராப், பமிடம் கிரிஸ்டிகாப், ஷோக்கு மூக்குக் கண்ணாடி, பட்டுக்குட்டை, விரலுக்கு மோதிரம், ஜேபில் சிகாட், பாக்கட்மணி, பைசிக்கல் கொடுத்தால் போதுமா? பிராமணப் பிள்ளைகள் இப்படித்தானா வளர்ந்து வருகிறார்கள்? செல்வம் சீரழிக்கும்)

40. துலுக்கர்களைக் கண்டாகிலும், கிறிஸ்துவர்கள் தங்கள் அடக்கங்களைச் சீராய் முடித்து, கல்லறைகளைச் செப்பனிட்டு வைப்பது ஒழுங்கு.

41. புறமதஸ்தர்கள் அசுத்த வார்த்தைகளைப் பேசினால் உடனே தன் வெறுப்பைக் காட்டுவது ஒழுங்கு.

(கல்வியும் நல்லொழுக்கமு முள்ள கிறிஸ்துவர்கள் வாயில் அசுத்தவார்த்தை வராது. அப்படிப்பட்ட வார்த்தைகளை யுச்சரிக்க அவர்கள் வாய் கூசும். ஆனால் இந்துக்கள் அப்படியல்ல. ஆபீசுகளிலும் கச்சேரிகளிலும் மேற்பதவிகளி லிருப்பவர்கள் முதலாய் அசுத்த வார்த்தைகளையும் ஈரார்த்தமுள்ள மொழிகளையும் வாய் கூசாமல் பேசுவார்கள். அவ்வளவு தூரம் ஏன்? B.A., L T., என்னும் வித்தியா பட்டம் பெற்றுக் கத்தோலிக்குப் பள்ளிக்கூடங்களிலும் காலேஜ்களிலும் உபாத்தித் தொழில் புரிந்து வரும் இந்துக்கள், கத்தோலிக்குப் பிள்ளைகள் திடுக்கிடும்படி ஓரோர் சமயத்தில் வண்டவார்த்தைகளையும் உதாசன மொழிகளையும் சொல்வதை அறியாதார் யார்? இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் உபாத்தியார் என்னும் தாட்சண்யம் பாராமல், மேலதிகாரிகளுக்குத் தெரிவிப்பது கடன்.)

42. இரட்சகருடைய திருநாமத்தைப் பிறர் வணக்கத்தோடு உச்சரிக்கப் பார்ப்பது ஒழுங்கு. (அக்கியானிகளும், கேடுகெட்ட கிறிஸ்துவர்களுள் முதலாய் சிலரும் கர்த்தர் பிறந்த திருநாளன்று, யேஸ்நாதர் பிறந்தார், கேஸ் புட்டியைத் திறந்தார் என்ப துண்டு. யேசு என்னும் பதத்திற்குப் பரலோகமும், பூலோகமும், பாதாள லோகமும் முழந்தாட் படியிட்டுப் பணியவேண்டுமென்று வேதம் சொல்லுகிறது. அப்படியிருக்க கிறிஸ்துவர்களென்



னும் பேர் படைத்தவர்கள் அற்பமும் வணக்கமின்றி அத்திருப் பெயரை யுச்சரிப்பதும், பிறர் அப்படி யுச்சரித்தால் அற்பமும் உரோஷமின்றி யிருப்பதும் எப்படி!!)

43. கிறிஸ்துவர்கள் தங்கள் வீடுகளில் நல்ல ரூபமுள்ள சுரூபங்களை வைப்பது ஒழுங்கு. (சிலர் வைத்திருக்கும் நாட்டுச் சுரூபங்கள் சற்றேனும் அங்கலட்சணமின்றி விபரீதமான கண்ணும், காலும், கையும், மூக்கும் உடைத்தாயிருக்கும். சுரூபங்கள் தெய்வங்களல்ல. மோட்சவாசிகளை நினைப்பூட்டும் ரூபங்கள். அவை நல்ல ரூபமுள்ளவையா யிருப்பதே சரி.)

44. சுப அசுப காரியங்களில், புறமதஸ்தர்கள் வந்திருக்குஞ் சமயங்களில் அவைகள் யாவையும் கிறிஸ்துவ கண்ணியத்துடன் நடத்துவது ஒழுங்கு.

45. புறமதஸ்தர்களுடன் நடமாடுவதில் பாம்பைப்போல் விவேகமாயும், மாடப்புறாவைப்போல் களங்கமில்லாமலு மிருப்பது ஒழுங்கு.

46. கிறிஸ்துவர்களுள் கல்விமான்களாயிருப்பவர்கள் அக்கியான இலக்கிய புஸ்தகங்களையும் புராணங்களையும் வாசியாமலிருப்பதும், அப்படி வாசிக்க நேர்ந்தாலும் கூடவே கிறிஸ்துவ இலக்கிய புஸ்தகங்களையும் வாசிப்பது ஒழுங்கு. (கிறிஸ்துவர்களுள்ளும் சிற்சில நல்ல இலக்கிய புஸ்தகங்களும் பிரசுரமா யிருக்கின்றன. போதிய ஆதரணை யில்லாத குறைவால் அநேகம் ஓலையெழுத்திலேயே மக்கிப்போகின்றன. தேம்பாவணி யென்னும் காப்பியம் சாமானியமான தன்று. அது ஜீவக சிந்தாமணிக்குச் சமான மென்று இந்து பண்டிதர்களே ஒத்துக்கொள்ளுகிறார்கள். அதற்கு மேம்பட்டதென்று சொல்பவருமுண்டு. மேலும்

"தொன்னூல் அகராதி தேம்பாவணி யென்னு
முன்னூலுங் கேளாச் செவிகட்கும்—பன்னூலும்
பாராத கண்கட்கும் பன்னாத நாவுக்கும்
வாராதறி வொளிவு வாக்கு"

என்பார் பெரியோர். மேலும் தேம்பாவணியைப் பிரதாபித்து கீர்த்தனை, விருத்தியுரை, வசன காவியம், கருப்பொருள், அர்ச். சூசையப்பர் சரித்திரம் என்னும் புஸ்தகங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. வேதாகமச் சரித்திரங்களைக் கதாரூபமாக தேவப்பிரசையின் திருக்கதை, புராந்திம, பச்சிம காண்டங்கள், பூஞ்சோலை, பங்கிராஸ் என்னும் புஸ்தகங்களில் காணலாகும். நல்ல வாசகத்திற்கடுத்த புஸ்தகங்கள் இன்னும் எத்தனையோ வுண்டு. கிறிஸ்துவர்கள் இப்படிப்பட்ட புஸ்தகங்களை வாங்கி வாசித்தால், பிரசுரமாயிருக்கும் புஸ்தகங்களால் பிரயோசன முண்டாவதுடன் இன்னும் அநேக புஸ்தகங்கள் வெளிக்கு வரவும் கூடும்.)

47. புரொட்டெஸ்டாண்டார், இந்துக்களுடைய குருக்களை அவரவர் வழக்கப்படி ஐயர், சுவாமி யென்றழைப்பது ஒழுங்கு. (கத்தோலிக்கர்கள் புறமதஸ்தர்களுடைய அசத்திய மதக் கோட்பாடுகளை வெறுக்கிறார்களே யொழிய மற்றப்படி அம்மதஸ்தர்களை யல்ல.)

48. குடி, விருந்து, பெருந்தீனி கிடைக்குமென்று கிறிஸ்துவர்களிடம் உறவாடத் தேடும் பிராமணர் மற்றும் இந்துக்களை விலக்குவது ஒழுங்கு. (இப்படி இட்டுக் கெட்டவர் பலர்.) கிறிஸ்துவர்கள் தங்களை இந்து கிறிஸ்துவர்களென் றழைத்துக்கொள்ளாமல், இந்திய கிறிஸ்துவர்களென் றழைத்துக்கொள்வது ஒழுங்கு. (இந்து என்னும் பண்பு மதத்தைக்காட்டும் பண்பு. இந்திய என்னும் பண்பு தேசத்தைக்காட்டும் பண்பு. இந்து கிறிஸ்துவனென்றால் அக்கியானங் கலந்த கிறிஸ்து வேதத்தை யநுசரிக்கும் அரைக் கிறிஸ்துவனென் றர்த்தமாகும். இந்திய கிறிஸ்துவனென்றால், இந்திய தேசத்தைத் தனது ஜனன நாடாகக் கொண்ட கிறிஸ்துவனென் றர்த்தமாகும். இவ்வளவு தெரியாமல் தங்களை இந்து கிறிஸ்துவர்களென் றழைத்துக்கொள்ளுவது மவுடீக வைராக்கியம்.)

49. ஞாயிற்றுக்கிழமை, மற்றும் ஓய்வு நாட்களைக் கூடியமட்டும் அநுசரிப்பது ஒழுங்கு.

50. தங்கள் பூர்வீகத்தைத் தெரிவிக்க மனமில்லாதவர்களிடம் அதைப்பற்றி மவுனமாயிருப்பது ஒழுங்கு.

51. அங்கப்பழுதுள்ள அல்லது உண்மையில் ஏழைகளான புறமதஸ்தர்களுக்குத் தருமம் செய்வது புண்ணியம் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

(இன்னும் வரும்.)

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

---

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். ப—ர்.]

### வீரபாண்டியன் பட்டணத்தில் அர்ச். செபஸ்தியார் முனீந்திரர் திருநாள் மகோற்சவம்

வீரபாண்டியன் பட்டணம், அர்ச். தோமை அப்போஸ்தலர் தேவாலயத்தில் ஸ்தாபித்திருக்கும் அர்ச். செபஸ்தியார் முனீந்திரரின் சபையோரால், 1915-ம் வருடம் பெப்பிரவரி மாதம் 7-திகதி ஞாயிற்றுக்கிழமை அர்ச். செபஸ்தியார் முனீந்திரரின் திருநாள் மகோற்சவம் வெகு ஆடம்பர கொண்டாட்டத்துடன் நடைபெற்றது.

திருவிழாவுக்கு முந்திய தினமாகிய 6-ம் உ காலை தேவாலயத்தைச் சுகந்த மலர் நிறைந்த நந்தவனம் போலும் குளிர்ந்த மாலைகளாலும் பொன்னிறதுவச தோரணங்களாலும் பன்னிறச் சித்திர வேலைகளாலும் வெகு அலங்காரமாய்ச் சிறப்பித்து அதைச் சேர்ந்த இடங்கள் முழுவதையும் பார்த்தோர் வியக்கத்தக்க விதமாய் அலங்கரித்து, பின்னேரம் 7-மணி அளவில் தேவாலயத்தைத் தீபங்களாலும், பீடத்தைப் பூக்கொத்துகளாலும், மெழுகு வர்த்திகளாலும், சுற்றுப்புறத்தைப் பந்தல்களாலும் அலங்கரித்தது, பட்டப் பகல்போல் கண்கொள்ளாக் காட்சியாக் கிவிட ;பலிபீடத்தில் கட்டளைக் குருவாகிய வண. பி. டெக்கோலிநாத சுவாமிகளால் வேஸ்பர்பாடிச் சற்பிரசாத ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டதுடன், திருச் சுரூபம் மகா சிறப்பாகவும் பத்தி ஆசாரமாகவும் எழுந்தேற்றம் செய்யப்பட்டது. வேஸ்பர் முடிந்தவுடன் கோவிலின் முற்பக்கத்தில் அனேக வகையான நூதனமான விளையாட்டுகள் நடத்தப்பட்டு, கடைசியில் பீரங்கி வெடிகள்தீர, சகலரும் சந்தோஷகரமாய்க் கைகொட்டி ஆனந்தக் கூச்சலிட்டுத் தம்தம் இல்லிடம் போய்ச் சேர்ந்தார்கள். சூரியனும் தனது கிரணங்களைப்பரப்பி இருளையறுக்க இப்பரிசுத்தரின் திருவிழாவன்று காலை, சகல கிறிஸ்துவர்களும் ஆடம்பரக் கொண்டாட்டத்துடன் கும்பல் கும்பலாக வந்து கோவில் சேர்ந்தனர். அத்தருணம் மேற்படி சபையோர்களும் மற்றும் திரளான சனங்களும், சபையோர்கள் தங்கள் சபை மெடலை மார்பில் தரித்திருக்க, ஆரவாரத்துடனும் மரியாதையுடனும் குருமனை சென்று, அவர்கள்பாதம் பணிந்து, அவர்களாசீரைப்பெற்று அவரை அழைத்துக் கோவிலுக்குச் சென்றார்கள். பிறகு வண. சுவாமி அவர்களால் திவ்விய பாடற்பூசை வைக்கப்பட்டது. பூசையில் ஐஞ்ஞூற்றுக்கதிக மாதேரும் சபையோர்களும் தேவ திருவிருந் தருந்தினர். அச்சிடப்பட்டிருந்த அர்ச். செபஸ்தியார் முனீந்திரரின் சரித்திர புத்தகம் சபையோரால் பூசைக்குமுன் எல்லோருக்கும் திருநாளின் ஒரு ஞாபகச் சின்னமாகக் கொடுக்கப்பட்டது. பூசை முடிவானபின் குருவானவரை அவருடைய மனைக்கு அழைத்துச் சென்று அவர் ஆசீர்பெற்று தம் தம் இல்லம் ஏகினர். பின்னேரம் திருச்சுரூப சுற்றுப் பிரகாரத்துடன் திருநாள் இனிது சமாப்தியாயிற்று.

இங்ஙனம்:

அர்ச். செபஸ்தியார் முனீந்திரரின் தாசன்.

---

[பத்திரிகையில் இடமில்லாததின் நிமித்தம் மற்றக் கடிதங்கள் பின்வரும் மாதங்களில் பிரசுரிக்கப்படும். ப.—ர்.]

---

## MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாச்சாரம்.

---

**விநோதமான பசுக்கள்.**—இங்கிலாந்திலே டெர்பி என்னும் ஊரில் ஒரு பசு ஒரே தடவையில் மூன்று கன்றுகளை ஈன்றதாகவும், மதுரை ஜில்லாவைச் சேர்ந்த மேலூர் தாலுக்கா, தேத்தாம்பட்டி கிராமத்தில் இரண்டு மாதங்களுக்கு முந்தி ஒரு பசு ஒருமணி நேரத்துக்குள் இரண்டு காளைக் கன்றுகளை ஈன்றதாகவும் சொல்லப்படுகிறது. இக்கன்றுகளெல்லாம் சுகமாகவே யிருக்கின்றனவாம்.



**மலேரியா.**—இந்தக் கொடிய ஜுரத்தினால் பிரதி வருஷமும் இந்தியாவில் சராசரியாக 1,300,000 பேர் மாண்டு போவதாக உத்தியோக முறையில் கணக்கிடப்பட்டிருக்கிறது.

**கிராம்பு.**—இரண்டு பலம் கிராம்பை சிதைத்து அரைப்படி சலத்திற் சேர்த்து கொதிக்கவைத்து ஆறிய பிறகு வடிகட்டி வேளைக்கு 1-அல்லது 2-அவுன்சு வீதம் நடுப் பிராயத்தி லுள்ளவர்களுக்குக் கொடுக்க அஜீரணம், வயிற்றுநோய், வயிற்றில் வாயு சேருதல், குன்மம், ஆயாசம் இவை தீரும். வாந்தியாவதை நிறுத்துவதற்கும் இதை உபயோகிக்கலாம். (வைத்திய கலாநிதி.)

**என்னே குதிரைக்குள்ள உரோஷம்**—ஒரு ஜர்மன் குதிரைவீரன் புரசல்ஸ் நகரிலிறங்கித்தன் குதிரையைத் தண்ணீர் குடிக்கவிட்டான். அது குடிக்கவில்லை. அதனைக் கண்ட சிறுவர்கள் கைகொட்ட ஆரம்பித்தனர். பிறகு அவன் தன் குதிரையை நடத்தினான். அது போகவில்லை. உடனே அதின்காதில் "பிரஞ்சியர் வந்துவிட்டனர் தப்பித்துக்கொள்" என்றவுடனே அது ஓட்டம் பிடித்ததாம்!

**கண்ணாடித்துணி.**—இத்தாலி தேசத்திலுள்ள வெனிஸ் நகரத்தில் ஒரு கண்ணாடிச்சாலையில் கண்ணாடியை உருக்கி வார்த்து வெகு ஸன்னமாய்ப் பரப்பி துணிபோல் செய்கிறார்கள். உயர்ந்த பட்டுப்போல் மினு மினுப்பும் பகட்டும் பளபளப்பான வர்ணமும் இதில் காணப்படுவதால், உயர்ந்த தொப்பிகளில் இதையே பட்டுக்குப் பதிலாய் உபயோகிக்கிறார்கள். ஆதலால் அக்கண்ணாடிச் சாலைக்காரர்கள் வெகு அபாரமான வியாபாரம் நடத்திவருகிறார்கள்.

**மாங்கோட்டை.**--இக்கொட்டையின் பருப்பை உலர்த்தித் தூள் செய்து 20 முதல்30 நெல்லிடைவரையும் தேனில் அல்லது வெல்லத்திற் கலந்து கொடுத்தால் வயிற்றிற் சேர்ந்திருக்கும் கிருமிகள் வெளியாகும். மூலத்தினால் இரத்தம் அதிகமாய் வடிவதையும், மாதவிடாயில் சோணிதம் மிதமிஞ்சிப் பெருகுவதையும் மாங்கொட்டைத் தூள் நிவர்த்தி செய்யும். சீதபேதியிலும், இரத்தக் கடுப்பிலும் இதைக் குழம்பாக்கி அன்னத்துடன் கலந்து உபயோகித்ததில் குணமுண்டானதாக அனுபவத்தில் தெரிய வந்திருக்கிறதென்று "வைத்ய கலாநிதி" எழுதுகிறது.

**உண்ணும் நெய்யில் பாம்பின் கொழுப்பு.**—கொஞ்ச நாளைக்குமுன் ஹூக்ளி சப்ஜட்ஜ் முன்பாக, ஒரு கேஸ் விசாரணைக்கு வந்தது. அந்தக் கேஸில் கக்ஷிக்காரன் ஒரு மகமதியன். இவன் நெய் வியாபாரஞ் செய்துவந்தான். இவனால் தாக்கல் செய்யப்பட்ட கணக்குப் புத்தகத்தைக் கோர்ட்டார் அவர்கள் பரிசோதனை செய்ததில், நேபாளப் பிரதேசங்களிலிருந்து, பாம்பு வாங்குவதற்கு ரூபா 500 செலவானதாய் எழுதி யிருந்தது. அதன் விபரத்தை, கோர்ட்டாரவர்கள் கேட்டதற்கு, தான் விற்று வரும் நெய்யில், பாம்பின் கொழுப்பைக் கலப்பது வழக்கமென்று சொன்னனும். இது வாசிப்பவர்களுக்கு எவ்வளவு அருவருப்பாயும் ஆச்சரியமாயும் இருக்கிறது.

**ஓர் எச்சரிக்கை.**—மலையாள ஜில்லாவைச் சேர்ந்த செளகாட் என்னுமிடத்தில் நாயர் ஜாதியைச் சேர்ந்த ஒரு குடும்பம், அதாவது புருஷன், பெண்சாதி, இரு குழந்தைகள் ஆக நால்வரும் ஏககாலத்தில் மரணமடைந்ததாகத் தெரிய வருகிறது. அன்னம் சமைத்து வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தில் பல்லியைப் போன்ற ஒரு சிறு பாம்புக்குட்டி விழுந்திருந்ததினால் அவ்வுணவை அப்பாம்புக் குட்டியின் விஷம் தீண்டிவிட்டதாகவும், அவ்வுணவை இவர்கள் எல்லோரும் சாப்பிட்டபடியால் மரணமானதாகவுங் காணப்படுகிறது. ஆகையால், வீட்டில் சமையல் பாத்திரங்களைத் திறந்துபோட்டுவைக்கிறவர்களுக்கு இதொரு எச்சரிக்கை யென்பதற்குச் சந்தேகமில்லை.

**புதிய இருப்புப் பாதைகள்.**—திருச்சிராப்பள்ளிக்கும் அதற்கு 32 மைல் தூரத்திலுள்ள புதுக்கோட்டைக்கும் இருப்புப் பாதை போடப்போகிற பிரஸ்தாபம் வெகு நாளாய் இருந்து வந்தது. தற்போது கவர்ன்மென்ட் ரயில்வே போர்டாரின் சிபாரிசின்மேல் மேற்படி பாதையைச் சீக்கிரம் போட்டுவிடவேண்டியதற்காக ரெயில்

வே போர்டார் அனுமதி கொடுத்துவிட்டார்கள். இதற்காக 20-லட்சம் ரூபாய் பிடிக்குமாம். இன்னொரு புதிய இருப்புப் பாதையை மங்களூரிலிருந்து பனிமங்களூருக்குப் போட தென்கன்னட ஜில்லா போர்டார் தீர்மானித்துக் கவர்ன்மென்டாரின் அங்கீகாரத்திற்காக அனுப்பி யிருக்கிறார்கள். தென்னிந்திய ரெயில்வே கம்பெனியார் இப்புதிய லயனை சர்வேசெய்ய 7200 ரூபாய்க்கேட்டிருக்கிறார்களாம்.

**எட்கார் ஆலன் பிரபு.**—இங்கிலாந்தைச் சேர்ந்த ஷெப்பீல்டு நகரத்திலுள்ள இப்பிரபுவானவர் இந்தியாவிலுள்ள குஷ்டரோகிகளின் உபயோகத்துக்காகத் தமது சொத்திலிருந்து பதினையாயிரம் ரூபாய் அளிக்கும்படி தம்முடைய உயில் பத்திரத்தில் எழுதியிருக்கிறாராம். இக்கொடிய ரோகத்தால் நம்முடைய தேசத்தில் பீடிக்கப்படும் இரண்டு இலட்சம் பேருக்கும் இதொரு உபகாரமே. சீனா தேசத்தில் குஷ்டம்பிடித்தவர்கள் இரண்டு இலட்சத்துக்கு அதிகமா யிருக்கிறார்களென்றும், ஒரு சிறிய தேசமாகிய கொரியாவில் முப்பதினாயிரம் பேர் இருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. இந்த நிர்ப்பாக்கியருக்கு நம்முடைய கத்தோலிக்குக் குருக்களுடையவும் கன்னியாஸ்திரிகளுடையவும் உதவியில்லாவிடில் என்னவாகுமோ!!

**வர்ணத்தைப் போக்க வழி.**—மரசாமான்களில் பூசியிருக்கும் வர்ணத்தை எடுத்துவிட வேண்டுமானால் பின் வருமாறு செய்யவேண்டும். ஒரு ராத்தல் காஸ்டிக் பொடாஷ் என்னும் மருந்தை 40 ஔன்ஸ் அவிடோன் என்னும் மருந்தில் கரைத்து, அதோடு 20 ஔன்ஸ் மிதிலேடட் ஸ்பிரிட்டும் 20 ஔன்ஸ் ஸ்பிரிட்ஸ் ஆப் பெட்ரோலியமும் 10 ஔன்ஸ் விளக்கெண்ணையும் சேர்த்துக் கலக்கி வைத்துக் கொள்ளவேண்டும். இந்த மருந்தை மரத்தில் பூசி யிருக்கும் வர்ணத்தில் தடவி பழைய கந்தையால் துடைத்து வர்ணத்தைப் போக்கவேண்டும். வர்ணம் அதிக கெட்டியாக இருந்தால் முதலில் மழுங்கின கத்தியால் வர்ணத்தைச் சீவி யெடுத்துப் பிறகு மருந்தைத் தடவி சுத்தம் செய்து விடலாம்.

**ஜர்மனியின் ஜனத்தொகைக் கணக்கு.**—அடியிற் குறித்திருக்கும் விவரப்பட்டியை வருஷவாரியாக எடுத்து இந்தியன் மிரர் என்னும் ஆங்கில வர்த்தமானப் பத்திரிகை கூறுகிறது:—

| | | |
|---|---|---|
| 1871-ல் | | 41,000,000 |
| 1890 | ,, | 49,400,000 |
| 1900 | ,, | 56,400, 000 |
| 1913 | ,, | 66,000,000 |

ஜர்மனியின் ஜனத்தொகைக் கணக்கு இப்படி யிருக்க அதில் கத்தோலிக்கர் தொகை என்ன? ஆறு வருஷத்துக்குமுன் 2,25,40,480 கத்தோலிக்கர் இருந்தார்கள். தற்போது சுமார் 2,50,00,000 பேர் இருக்கிறார்கள். பதிதமார்க்கமோ நாளுக்கு நாள் குறைவுபட்டு வருகிறதென ஒரு பதிதப் பாதிரியார் முறையிடுகிறார். பதிதரா யிருந்தவர்களில் கத்தோலிக்கரானவர்கள் போக சிலர் நாஸ்திகராகிவிட்டார்கள். இந்த நாஸ்திக சிரோமணிகள்தான் தற்போதிய யுத்தத்தில் நடக்கிற அக்கிரமங்களுக்குக் காரணர். இவ்வக்கிரமங்களைத் தடுக்க ஜர்மன் கத்தோலிக்கர் என்ன செய்கிறார்களென்பதைப்பற்றி இப்போது தீர்மானிக்க இயலாது. சண்டை முடிந்தபிறகு எல்லாம் தெளிவாக விளங்கும்.

**புதுப் புத்தகம்.**—பாடசாலைகளின் உபயோகத்துக்காக, பாலர், 1-வது, 2-வது வகுப்புக்களுக்கு ஒரு புதிய ஞானோபதேசப் புஸ்தகம் அச்சிடப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. இப் புத்தகம் பாடசாலைகளுக்கென்று அச்சிடப்பட்டிருந்தாலும் வாசிக்கத் தெரிந்த ஒவ்வொரு பெற்றோருடைய கையிலும் அத்தியாவசியமா யிருக்கவேண்டிய ஒரு ஞானப் பொக்கிஷம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் சரீர சவரட்சணை மட்டில் மாத்திரம் பொறுப்பாளிகளா யிராமல் ஆத்தும சவரட்சணை மட்டிலும் பொறுப்பாளிகளா யிருக்கிறார்களல்லவா? இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சுலபமாய் வேத சத்தியங்களைக் கற்றுக் கொடுக்கும்படி பிரதான மந்திரங்களும், அவைகளின் அருத்தமும் வியாக்கினமும், சிறுவர்களுக்கு இவர்கள் கற்பிக்கிறவைகளை அவர்கள் தங்கள் மனதில் நன்கு பதியச்செய்து கொள்ளும்படி உதாரணங்களும், அவர்களுக்குச் செபஞ் செய்யக் கற்றுக்கொடுக்க சுலுவான முறையும், அப்படியே திவ்ய நற்கருணைச் சத்தியத்தை அவர்களுக்குப் படிப்பிக்கும் விதமும் இவை முதலான முக்கிய போதகங்களும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. வெகு சொற்பப் பிரதிகளே அச்சிடப்பட் டிருக்கின்றன. வேண்டியவர்கள் சென்னை, பிராட்வே, "நல்ல ஆயன்" அச்சுக்கூட மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தாழ் கட்டிடம் அணா 3; அட்டைக் கட்டிடம் அணா 4.

**பாளையங்கோட்டை தென் இந்தியன் கத்தோலிக்குக் குடும்ப பாதுகாப்பு நிதி.**—இந்நிதியின் 9-வது வருஷத்திய ரிப்போர்ட்டு புத்தகமொன்று ஷை நிதியின் கவரவகாரியதரிசியிட மிருந்து வரப்பெற்றோம். இந்த நிதி ஆரம்பமாகி 9-வருஷங்களாகின்றன. ஆயினும் இதில் 655, முதல் வகுப்பு சந்தாதாரர்களும் 105, 2-வது வகுப்பு சந்தாதாரர்களுமாக 760 பேர்களே சேர்ந்திருக்கிறார்கள். சென்ற வருஷத்தில் வசூலான தொகை ரூ.6644-4-11. இந்நிதியின் தற்கால கையிருப்புத் தொகை ரூ.36199-10-1. சென்ற வருஷத்தில் இறந்துபோன சந்தாதாரர்களுடைய வாரிசுதாரர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 2820.—இந்நிதி ஏழைக் குடும்பங்களுக்கு மிக்க சகாயம் செய்துகொண்டு வருகிறதென்பது சொல்லவேண்டுவதில்லை. இதில் சேரக்கூடியவர்களெல்லாரும் சேர்ந்து இதை சன்மானிக்காத குறையொன்றே தவிர, மற்றபடி இந்நிதி மிக்க நல்லமாதிரியாய் நடத்தப்பட்டு வருகிறது. இதில் அதிகச் சந்தாதாரர்களைச் சேர்ப்பிக்க பங்கு விசாரணைக் குருக்கள் அதிகச் சிரமம் எடுத்துக்கொண்டால் நல்லது. இவ்விஷயமாய் இந்நிதியின் உத்தியோகஸ்தர்கள் தென்னிந்தியாவிலுள்ள பங்கு சுவாமிகள் எல்லோருக்கும் ஒருமனு செய்துகொள்ளுவார்களெனக் கோருகிறோம்.



**ஞான ஒடுக்கம்.**—சென்னை, அர்ச். சவேரியார் கோவிலில் அர்ச். சூசையப்பர் திருநாளுக்கு ஆயத்தமாக சென்ற மாதம் 10-ம் தேதி ஒருஞான ஒடுக்கம் துவக்கப்பட்டது. தியானப் பிரசங்கங்கள் செய்யத் திருச்சினாப்பள்ளியிலிருந்து சேசுசபைக் குருவும், பாலக்கரை உலக இரட்சகர் கோவில் பங்கு சுவாமியாருமாகிய சங். தி. ரோச் சுவாமியாரவர்கள் வரவழைக்கப்பட்டிருந்தார். பேர்போன பிரசங்கியாகிய இவருடைய சொற்சுவை பொருட்சுவை பொருந்திய அருமையான பிரசங்கங்களைக் கேட்கச் சவேரியார் கோவில் விசாரணை ஜனங்கள்மாத்திரமல்ல, சென்னையிலுள்ள பல பங்குகளிலிருந்தும் ஜனங்கள் ஏராளமாய்த் திரண்டு வந்திருந்தார்கள். இவர்களுடைய நல்ல மனசுக்குப் பலனாக சர்வேசுரனும் தமதாசீரை நிரம்பவுந் தந்தருளினார். அதேதெனில், பல வருஷங்களாக பாஸ்குக்கடன் தீர்க்காதவர்களும் பேருக்கு மாத்திரம் கிறிஸ்துவர்களா யிருந்தவர்களும் இந்த ஞான ஒடுக்கத்தினால் பல ஞான நன்மைகளைப் பெற்றுக்கொண்டார்களென்பதற் கையமில்லை. கடைசி நாளாகிய அர்ச். சூசையப்பர் திருநாளன்று அதாவது 19-ம் தேதி மிகவும் சங்கைக்குரிய அதிமேற்றிராணியாரவர்கள் விஜயஞ்செய்து, அநேக குருப்பிரசாதிகள் புடைசூழ பெரிய பாடற்பூசை செய்தார். அப்பூசையில் 1300-பேருக்கு அதிகமாகவே திவ்ய சற்பிரசாதம் உட்கொண்டார்கள். இவ்வளவு நன்மைகளுக்கும் காரணமாயிருந்து உழைத்து உதவிசெய்த விசாரணை குரு சங். மேயர் சுவாமியாரையும், இவ்விசாரணைச் சுருட்டு வியாபாரிகளையும், பிறர்ஆத்தும இரட்சண்யத்தையே பிரதானமாகக் கருதி தம் சரீர சிரமத்தைப் பாராது மிக வருந்திப் பிரசங்கித்த சங். ரோச் சுவாமிகளையும் நிரந்தரம் சர்வேசுரன் ஆசீர்வதிப்பாராக.

**வளரும் குழந்தைகளுக்கு ஜலம்.**—வளரும் குழந்தைகளுக்குக் குடிப்பதற்கு ஜலம் அதிகமாகக் கொடுக்கவேண்டியது அவசியமென்று அநேக தேக தத்வ சாஸ்திரிகள் சொல்லி வருகிறார்கள். குழந்தைகளுக்குத் தாகமெடுக்கும்போது மாத்திரம் குடிக்கக் கொடுத்தால் போதுமென்று சொல்வது சரியல்ல. ஏனென்றால், உண்மையில் சாப்பிடவேண்டியது அவசியமாயிருக்கும்போது பசி தோன்றாமலிருப்பது போல, ஜலம் அவசியமாய்க் குடிக்கவேண்டி யிருக்கும்போது தாகம் எடுக்காமலிருந்து விடக்கூடும். மேலும் குழந்தைகளின் தேகத்திலுள்ள குடல் முதலிய பற்

பல அவயவங்கள் அதிக வேகமாய் வேலை செய்வதாலுண்டாகும் கழிவுகள் ஜாஸ்தியாயிருப்பதால் ஜலம் அதிகமாய்க் குடிக்க வேண்டியிருக்கிறது.

**சமாதானத்துக்காக ஜெபம்.**-சென்றமீ 21உ ஐரோப்பாவுக்கு வெளியிலுள்ள சகல அதிமேற்றிராசன, மேற்றிராசனக் கோவில்களிலும், பங்குவிசாரணைக் கோவில்களிலும் தற்போது யுத்தமாடும் அரசர்களுக்குள்ளே சமாதான முண்டாக, பாப்பானவர் கட்டளைப்படி நாளெல்லாம் திவ்யநற்கருணை ஸ்தாபகஞ் செய்து, ஜெபாராதனை நடந்தேறினதென்று நமது சந்தாதாரர்கள் அறியாதவர்களல்லர். இப்படியே ஐரோப்பாவிலும் சென்ற பெப்ரவரிமீ 7உ நடந்தேறிற்று. இந்தத் தேவாராதனை ரோமா புரியிலுள்ள அர்ச். இராயப்பர் ஆலயத்தில் 15-ம் ஆசீர்வாதப்பராகிய நம்முடைய பரிசுத்த பிதாவினாலேயே நடத்தப்பட்டது. 22 கருதினால் மார்களும், ஸ்தானாபதிகளும், பிரபுக்களும், 60,000 கிறிஸ்துவர்களும் சமுகமாயிருந்தார்கள். சமாதானத்துக்கென்று பரிசுத்த பாப்பானவரால் உண்டாக்கப்பட்டச் செபத்தை மொன்சிஞ்ஞோர் "ஜஸோயினி" என்பவர் வாசித்தார். "செங்கோன்மை செலுத்துபவர்களிடத்திலும், பிரஜைகளிடத்திலும் சாந்த குணத்துக்குரிய ஆலோசனைகள் உண்டாகச் செய்தருளும்" என்ற வசனம் வாசிக்கப்பட்டபோது, நம்முடைய பரிசுத்த பிதாவுக்கு உள்ளத்தில் உண்டான உருக்கம் நிறைந்த பக்திக்குரிய உணர்ச்சிகளை அடக்கக்கூடாதவராய் தம்முடைய இருகரங்களையும் மேலே உயர்த்தினார். அப்போது அங்கே சமுகமாயிருந்தவர்கள் எல்லோரும் திடீரென ஒருவித பய பக்தியினால் தூண்டப்பட்டு இன்னுமதிக உருக்கமாய் வேண்டிக்கொண்டார்கள். சமாதான இராயரான நமதாண்டவர் சமாதானத்தைப் பாலித்தருள்வாராக.

**யானையும் வைர மோதிரமும்**—அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலுள்ள ஸின்ஸினாட்டி யென்னும் பட்டணத்தில் ஒரு கனவான் தனக்குப் பழக்கமான யானைக்கு வேர்கடலையைத் தமது கையில் வைத்துக் கொடுத்துக்கொண்டிருந்தார். அந்த யானை அவர் கையிலிருந்து கடலையைப் பொறுக்கித் தின்றுக் கொண்டிருந்தபொழுது, அவர் கைவிரலிலிருந்த விலையுயர்ந்த வைர மோதிரத்தையும் பிடுங்கி வாயிற் போட்டு விழுங்கிவிட்டது. மோதிரம் யானை வயிற்றில் எங்கிருக்கிறதென்று 'எக்ஸ்ரேஸ்' என்னும் ஜோதியை கொண்டு பார்த்ததில் அது தொண்டையிற் சிக்கிக் கொண்டிருக்கிறதென்று கண்டுபிடித்து உடனே ஒரு மிருக வைத்திய னுதவியினால் அதை யெடுத்துப் போட்டார்களாம்.

---

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

## DOMESTIC OCCURRENCES.

---

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய். முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக் குட்பட்டால் 1—8—0 ரூபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ரூபாயாகும். அரை ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா. ப.-ர்.

### ஜனன அறிக்கை.

#### யாழ்ப்பாணம்.

அர்ச். அந்தோனியாரின் விசேஷ கிருபையால் சென்ற பெப்ரவரிமீ 5உ வெள்ளிக்கிழமை பிற்பகல் சுமார் 4½-மணிக்கு எனது அருமை மனைவி மரிய ஆரோக்கியம்மாள் கர்வாலியயாதொரு பிரசவ வேதனையின்றி முதற் பேறாக ஓர் ஆண்மகவைப் பெற்றனள். குழந்தைக்கு 25உ வியாழக்கிழமை காலை 11½-மணிக்கு வேம்பார் திவ்விய இஸ்பிரீத்து சாந்து சருவேஸ்பரன் கோவிலில் தேவரீர் சின்னையா மங்களம் கோமுஸ் அவர்களையும் அவர்கள் மனைவியாரையும் ஞானத் தாய் தந்தையாக வைத்து ஜோசேப் அந்தோனி தியாகுராஜ பர்னாந்து என்று நாமம் சூட்டப்பட்டு கனம் சுவாமிநாத சுவாமி யவர்களால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு நல்ல சுகத்தைக் கொடுத்து பல்லாண்டு வாழக் கர்த்தர் கிருபை பாலிப்பாராகவும்.

இப்படிக்கு,
S. வேதநாயகம் பர்னாந்து.

---



#### பாப்பாகுடி.

காலஞ்சென்ற அ. அந்தோனி உபதேசியார் அவர்களின் சிரேஷ்ட புதல்வியும் எனது மனைவியுமாகிய திரேசம்மாளுக்கு 1915-ளு மார்ச்சுமீ 5-ந் உ வெள்ளிக்கிழமை இரவு 11-மணி 10 நிமிஷம் சேசுவின் திரு இருதய ஆசீரால் முதல் தடவை ஒரு ஆண் குழந்தை பிறந்தது. 14உ யாகிய ஞாயிறு வாரமன்று அர்ச். அந்தோணியார் கோவில் தேவாலயத்தில் ஷை குழந்தைக்கு அண்டுரூ எல்பெட் எனும் நாமதேய மிட்டு ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. தாயும் சேயும் சுகம். சேசுவின் திரு இருதயத்திற்குச் சதா காலமும் நமஸ்கார முண்டாவதாக.

க. அ. மிக்கேலந்தோனி,

---

### நன்மரண அறிக்கை.

---

#### பாலக்காடு.

ஷை யூரில் நெடுங்காலம் ஷாப்கீப்பராகவிருந்து காலஞ்சென்ற அப்பாவுபிள்ளையின் கனிஷ்ட புதல்வர் மாஜி வேதநாயகம்பிள்ளை மனைவியும், எமது அருமைவாய்ந்த அன்னையருமாகிய ஞானமுத்தம்மாள் கடந்த ஜனவரி மாதத் திறுதி வாரத்தில் நிம்மோனியாவெனும் கபவாத சுரத்தால் பீடிக்கப்பட்டு, எவ்வித பரிகாரங்களாலும் குணமடையாது, சுமார் 10-தினங்களாக அந்நோயை மிக்க பொறுமையுடன் அனுபவித்துத் தனது முடிவு நெருங்குகிறதென வுணர்ந்து, கடைசித் தேவத்திரவிய அநுமானங்களைத் தக்க வாயத்தத்துடன் பெற்று, அடுத்த மாதம் 2-ம் தேதி தனது பெயர் கொண்ட அர்ச்சியசிஷ்டவரின் நாளாகிய செவ்வாய்க்கிழமையன்று அதிகாலையில், தனது மக்கள், பந்துமித்திரர் யாவரும் ஆறாத் துயருற பரமபதமடைந்தனர். பின்னர் ஆகவேண்டிய கோவிற் சடங்குகள் யாவும் குறைவின்றி நிறைவேறிய பின், ஷை சடலம் பந்துமித்திரர்களால் கல்லறை மட்டும் எடுக்கப்பட்டு, அவ்விடத்தும் ஆகவேண்டிய சடங்குகள் நிறைவேறிய பின், பூஸ்தாபகமாயிற்று.

இதைக் கண்ணுறும் சகோதரர்களே, இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக 1பர. 1பிரி. 1திரி. வேண்டிக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

20-3 15. D. V. துரைசாமி பிள்ளை.

---

## குடியர்களை குணமாக்கும் அற்புத "லிக்கோரின்."

"லிக்கோரினை" எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபின் தின்போருக்கும் இரகசியமாய்த் தெரியாமல் கொடுப்பதில் குடியையும் அபினையும் ஆயுளுள்ளளவும் விட்டுவிடுகிறார்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். நூற்றுக் கணக்கான நற்சாட்சிப் பத்திரம் பெற்றது. பத்தியமே கிடையாது. 25, 27, 30, வருஷ நெடுங்காலக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. தேகத்திற்கு யாதொரு கெடுதியும் செய்வதேயில்லை. 40 நாள் சாப்பிடக்கூடிய "லிக்கோரின்" புட்டிவிலை ரூபா 2-0-0. தபால் கூலி முதலியவை அணா 5, பிரத்தியேகம்.

ஜே. எப். டி. டேவிட்,
கோட்டை சேலம்.
J. F. David. Fort, Salem,

---

### எடப்பாடி,

### அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய விர்த்தியும் அவளது 1915-ளுத்திய மகோற்சவ அறிவிப்பும்.

---

நண்பர்களே!

சென்ற வருஷம் நாம் அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தர்மமென்று அறிக்கையிட்டு, செய்துகொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி, எமக்குதவிபுரிந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்குப் பங்காளிகளான உதார குணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்துவர்களுக்கும் எடப்பாடி நேயர்களுக்கும் அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1914-ளு எப்ரல் மாத முதல் 1915-ளு மார்ச்மீ 31உ வரையில் நேயர்களால் அளிக்கப்பட்ட நன்கொடை ரூபாய் 193-2-0. சென்ற பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்களை முடிவாக்கவும், விசாரணைக் குரு வசிக்கும் பங்களாவை மராமத்துச் செய்யவும், கோவில் கட்டிட விர்த்தியை பூர்த்திக்குக் கொண்டு வரவும் செலவான தொகை ரூபாய் 2620-8-4. இவ்விஷயமாய்த் தற்காலம் நமக்கு ஏற்பட்டிருக்கும் கடன் ரூபா 738.

நண்பர்களே! தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி சத்திரங்கள் முடிவிற்கு வந்தன. ஆகிலும், பழைய சத்திரங்

களை மராமத்துசெய்யப் போதுமான பணமில்லாமையால் அவ்வேலைகளை நிறுத்தவேண்டி நேரிட்டதைப்பற்றி விசனிக்கிறோம். தர்ம சிந்தையுள்ள அர்ச். நாயகியின் ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. அவளது மகிமைக்காக கடனுளியானோம் என்பதைச் சிந்தித்து எமதுபேரில் இரக்கம் புரிவார்களென்பது திண்ணம். நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதேயாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள்பேரில் பூரணமாய்ப் பொழியக் கிருபை செய்யவேணுமென்பது எமது பிரதிதின வேண்டுகோள்.

1915-ஞூத்திய மகோற்சவ கொண்டாட்டம் வழக்கத்தைப்போல் எமது கோவிலில் நடத்தப்படும். குருத்து ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தின நாள் கொடியேற்றமாகும். அர்ச். வாரத்தின் சகல சடங்குகளும திருச்சபையின் ஆசார முறைப்படி பூரணமாய் நிறைவேற்றப்படும். பெரிய வியாழக்கிழமை முழுமையும் எமது கோவில் பீடத்தில் சற்பிரசாதநாதர் சிறப்பாய் வீற்றிருந்து தமது அன்பர்களை ஆசீர்வதிப்பார். வெள்ளிக்கிழமை இரவு பெரிய பிரசங்கம் செய்யப்படும். சேசுவின் திருப்பாடுகளின் பாவனைகள் பார்ப்போர் மனதைக் இளக்கக்கூடிய விதமாகவும் பக்தியையும் உருக்கத்தையும் உண்டுபண்ணச் செய்யும் விதமாகவும் காட்டப்படும். ஞாயிற்றுக்கிழமை உயிர்த்த சுரூபம் மகிமைச் சாவடியில் வந்தமர்ந்தவுடன் திருப்பூசைப்பலி நடத்தப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளின் தாசர்கள் தங்கள் பரோபகாரியாகிய அந்த ஆண்டவளுக்கு நன்றி செலுத்துவார்கள். அன்றிரவு சித்திர விசித்திரவேலையால் அலங்கரிக்கம்பட்ட அழகிய தேரில் அர்ச். செல்வநாயகி அம்மாளின் திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டு ஊர்வலஞ் செய்யப்படும். திங்கட்கிழமை காலையில் பலிபூசையுடன் திருநாள் முடிவுபெறும்.

நேயர்களே! அர்ச். செல்வநாயகி அம்மாளின் ஆலயத்துக்குத் திருயாத்திரை செய்து, அவளது திருவடியை நாடினவர்கள் அவளால் ஆசீர்வதிக்கப்பட்டு பலவித நன்மைகளை அடைந்தார்களென்பது எமது பன்னிரண்டு வருஷத்திய அனுபோகம். ஆனபடியால் திருயாத்திரைக்காரர் திரளாய் வந்து அவளைத் தரிசித்துச் சேவித்து அவளுடைய பேருதவியை அடைவார்களெனக் கோருகிறோம்.

இப்படிக்கு,
எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாளின்
ஊழியனாகிய, விசாரணைக் குரு
ஜே. ஞானதீக்கம்.

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில்வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய்; அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ. 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ. 3,466-4-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன்வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும்தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவரும் கொடுத்தால் பெருந்தொகை யாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்,
அர்ச். அந்தோனியார் கோவில்,

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3,466 | 4 | 6 |
| Anandanatha Pillai | 1 | 0 | 0 |
| Mrs. D'Rozario | 5 | 0 | 0 |
| A Donation | 3 | 0 | 0 |
| ஆகமொத்தம், | 3,475 | 4 | 6 |

The Good Pastor

# நல்ல ஆயன்

OFFICE OF THE REGISTRAR ... 5 - MAY 1915 MADRAS

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 13. } மே 1915. { இலக்கம். 5.

## OUR PAPER.
## நமது பத்திரிகை.

"நல்ல ஆயன்" என்னும் நாமதேயம் பூண்ட நமது பத்திரிகை நந் தென்னிந்தியாவிலும், சிங்கப்பூர், பினாங், நெட்டால் முதலிய வெளிநாடுகளிலும் உலாவிவரத் தொடங்கி தற்போது சுமார் 13 வருடங்களாகின்றன. அதன் சீரும் சிறப்பும் செல்வாக்கும் அதைச் சன்மானித்துப் பராமரித்து வரும் சந்தாதாரர்களையே சார்ந்ததென நாம் சொல்லத் தேவையில்லை. சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவைக் கிரமமாய்ச் செலுத்தியும், இன்னும் அநேகரை அதற்குச் சந்தாதாரர்களாகச் சேர்த்தும் வருவார்களே யானால், வளர்பிறைச் சந்திரனைப்போல் அது நாளுக்கு நாள் வளர்ந்து விருத்தியடைந்து சிறப்புற்று விளங்கு மென்பதற் கையமில்லை.

தங்கள் சந்தாவைச் செலுத்திவிடும்படி சந்தாதாரர்களை நாம் அப்போதைக்கப்போது நம்முடைய பத்திரிகை வாயிலாய் கேட்டுக்கொண்டோமாயினும், அதை அநேகர்கள் கவனியாது, தங்கள் சந்தாவை நிலுவையாய் வைத்துக்கொண்டிருந்தபடியால் அவர்கள் எல்லோருக்கும் பத்திரிகையை நிறுத்த நேரிட்டது. இப்படி இவ்வருடத் துவக்கத்தில் ஏறக்குறைய நானூற்றுச் சொச்சப் பேருக்குப் பத்திரிகை நிறுத்தப்படலாயிற்று. இத்தனை பெயருக்குள் 54 பேர் மாத்திரம் தங்கள் பாக்கிச் சந்தாவையும் நிகழும் வருஷத்திய சந்தாவையுஞ் சேர்த்தனுப்பி, வழக்கம்போல் நமது பத்திரிகையை வரப்பெற்று வருகிறார்கள். ஆனால் இன்னும் தங்கள் பாக்கியை அனுப்பிவையாத 386 பேர்களிடமிருந்தும் நமக்கு வசூலாக வேண்டிய தொகை ஏறக்குறைய 500 ரூபாய்!! இந்தப் பெருந் தொகை நம்முடைய கைக்குள் எட்டாதுபோனால் நமக்கு நேரும் நஷ்டம் அற்பமல்லவே! இத்தனை பெயருடைய பத்திரிகைகளுக்காக நமக்குப் பிடித்த காகிதம், மை, அச்சுக் கூலி, தபால் தலை முதலியவைகளுடைய செலவு சொற்பமா? இவர்களெல்லோரும் நம்மை இப்படி நஷ்டத்துக்குள்ளாக்கார்களென்பது நமக்குள்ள பெரும் நம்பிக்கை, இவர்கள் மறதியினாலோ, அசந்தர்ப்பத்தினாலோ அல்லது வேறு

முகாந்தரத்தினாலோ, தங்கள் பாக்கியை அனுப்பாம லிருக்கிறார்கள். ஆகவே இவர்களுக்கும், இன்னும் இவ்வருஷத்திய சந்தாவைச் செலுத்தாம லிருப்பவர்களுக்கும் தங்கள் தங்கள் பாக்கியை அனுப்பி வைக்க ஞாபகப்படுத்தும்படி இம்மாதத்தில் கார்டு விடுக்க உத்தேசிக்கிறோம். இப்படி நம்மால் அனுப்பப்படும் கார்டைப் பெற்றுக்கொண்ட பிறகு தாங்கள் செலுத்த வேண்டியதைத் தவறாது செலுத்தி "நல்ல ஆயனைச்" சன்மானிப்பார்களெனக் கோருகிறோம். நல்ல ஆயனான நந்திவ்ய இரட்சகருடைய ஆசீரும் அவர்களுக்கு நிரம்பக் கிடைக்கக்கடவதாக!

இவர்க ளெல்லோருக்கும் நாம் அறிவித்துக்கொள்ள வேண்டிய ஒரு முக்கிய விஷயமும் உண்டு. அஃது யாதெனில் சென்ற டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நமக் கெட்டின தொகையில் 55 ரூபாய்க்கு யாதொரு தகவலுந் தெரியாமலிருக்கிற தென்பதே. பணம் அனுப்பினவர்களின் பெயர், விலாசம் முதலானவைகளை யறிந்துகொள்ளக் கூடவில்லை. ஆகவே நமக்குப் பாக்கியா யிருக்கிறவர்கள் ஷை ரூபா 55 ல் சம்பந்தப்பட்டிருப்பார்களே யானால் வீணாய் முறையிட்டுக் கொள்ளாமல், சங்கதியை, அதாவது தங்கள் பெயரையும், ஊரையும், தாங்கள் அனுப்பின தொகை எவ்வளவு எதற்காக வென்பதையும், விவரமாய் நமக்கு அறிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

## THE MONTH OF MARY.
## மே மாதம் மரியாயின் மாதம்

---

இந்த மாதம் உங்களுக்கு வருஷத்தின் மாதங்களிலெல்லாம் முதன்மையாக விருக்கக்கடவது: (யாத்தி. XII. 2)

பக்தியுள்ள கிறிஸ்தவர்களுக்கு வருஷத்தைத் துவக்கும் மாதமல்ல முதல் மாதம்; ஆனால் தேவ தாயாகிய கன்னி மரியம்மாளை வணங்கி நமஸ்கரிப்பதில் அவர்கள் செலவழிக்கும் மாதமே வருஷத்தின் இதர மாதங்களிலெல்லாம் அவர்களுக்குச் சிரேஷ்டமானது. இம்மாதத்தில் கிறிஸ்துவர்கள் கன்னித்தாயாருக்குச் செலுத்த வேண்டிய வணக்கம், மகிமையைச் செலுத்தி, அதினால் தேவ வரங்களின் பொக்கிஷக்காரியாகிய அவளிடமிருந்து தமக்கு வேண்டிய சகல நன்மைகளையும் பெற்றுக்கொள்ளுவார்கள்.

நமது பரிசுத்த தாயாகிய திருச்சபையானது நாள்தோறும் திரிகால மந்திரத்தைச் செபிக்க நமக்குக் கற்பித்திருக்கிறது; வாரத்தில் சனிக்கிழமை தேவதாயாருக்குக் குறிக்கப்பட்ட நாள்; அப்படியே வருஷத்திலும் ஓர் மாதத்தை நமது இருதயங்களின் இராக்கினியாகிய மரியம்மாளுக்கு நேர்ந்துகொள்ளுவது நியாயந்தானே. குளிர் தேசங்களிலெல்லாம் மே மாதந்தான் வருஷத்திற் சிறந்த மாதம். அதுதான் நாடெல்லாம் செழித்தோங்கி யிருக்குங் காலம். அக்காலத்தில்தான் இயற்கையே புன்சிரிப்புற்றது போல மரங்களெல்லாம் பசுமையான இலைகளால் தளிர்த்து நிற்கும்; கனிவர்க்கங்களெல்லாம் கனத்துப் பழுக்கும்; பூச்செடி கொடிகளெல்லாம் புஷ்பித்து பரிமளங் கமழும்; நந்தவனங்களெல்லாம் செழித்துப் பூரித்துக் கண்ணைப் பறிக்கும்; ஆகாயத்தில் பலவர்ணப் பறவைகள் இங்கித சங்கீதம் பாடி மானிடரின் இருதயக் கமலங்களை ஆனந்தத்தால் பூரிப்பிக்கும். இத்தகைய மாதத்தை, வரப்பிரசாத ஊறணியும், கற்புக் கரசியும், கன்னிமைக் குன்றாத மங்கையுமாகிய தேவதாயை ஸ்தித்துப் போற்றுவதில் செலவழிப்பது நியாயந்தானே!

ஆதிமனிதனுடைய பாவத்தை நித்தியத்தினின்று முன்னறிந்த சர்வேசுரன், நித்தியத்திலிருந்தே மனுக்குலத்தை மீட்டிரக்ஷிக்க வேண்டிய தேவசுதனின் தாயாராக மாமரியைச் சிருஷ்டிக்க நிர்ணயித்திருந்தார். காலத்தில் நித்திய வார்த்தை அவதரிப்பதற்குத் தகுதியான இருப்பிடத்தை ஏற்படுத்த வேண்டி யிருந்தபோது, சர்வேசுரன் அதற்கு அர்ச். கன்னிமரியம்மாளைத் தெரிந்தெடுத்து, அவளைச் சகல சிருஷ்டிகளிலும் மேலானவளாகச் சிருஷ்டித்து, இகத்திற்கும் பரத்திற்கும் அரசியான அவளுக்கு, இதர மனிதர் எல்லோரையும் விட அதிகமான வரப்பிரசாதங்களை யளித்து, அவளைக் கன்னிமை குன்றாத கன்னித் தாயாக ஏற்படுத்தினார். வானத்திற்கும் பூமிக்கும் எம்மாத்திரம் அணை கடந்த வித்தியாசமுண்டோ, அப்படியே தேவதாய்க்கும் மற்ற மனிதருக்கும் பாரதூர வித்தியாசமுண்டு. பண்டைக்காலத்தில் கிரேஸ் தேசத்தின் சௌந்தரியவதியாகிய எலேன் என்பவளுடைய உருவத்தை வரையவேண்டி, பேர்போன சித்திரக்காரனான சோக்விஸ் என்பவன் எப்படி அந்நாட்டில் அழகிற் சிறந்த மாதரில் ஐவரைத் தெரிந்தெடுத்து, அவர்கள் ஒவ்வொருவரிலும் அழகுவாய்ந்த அவயவங்களை யெடுத்துத்தானெழுதிய சித்திரத்தி லமைத்தானோ, அப்படியே சர்வேசுரன் கன்னிமரியம்மாளிடத்தில் சகல சௌந்தரியங்களையும் புண்ணியங்களையும் ஒன்றாய்த் திரட்டிச் சேர்க்கச் சித்தமானார். கற்பில் தூதரைப்போலவும், சிநேகத்திற் பத்திச் சுவாலகரைப்போலவும், ஞானத்தில் ஞானதிக்கரைப் போலவும் தூய்மையில் வானத்தைப்போலவும், பிரகாசத்தில் நக்ஷத்திரங்களைப்போலவும், அழகில் பசும்புற்றரைபோலவும், கனியளிப்பதில் விருக்ஷத்தைப்போலவும், அர்ச். மரியாயைச் சிருஷ்டித்து, சகல நீதிமான்களுடைய புண்ணியங்களும் பதின்மடங்கதிகமாய் அவளிடத்தில் ஒப்புயர்வின்றி விளங்கப் பண்ணினார். ஏவை எவ்வண்ணம் உயிர் வாழும் மானிடரின் தாயா யிருந்தாளோ, அப்படியே தேவமாதா தேவ இஷ்டப் பிரசாத ஞானவுயிர் மனுக்குலத்திற் களித்த திருத்தாயா யிருக்கிறாள். ஜலப்பிரளயத்தில் நோவேயின் பெட்டகம் எப்படி மனிதர்களைக் காப்பாற்றினதோ, அப்படியே மரியாயின் வழியாய் மானிட ஜன்மத்திற்கு இரக்ஷணியங் கிட்டினது. மோயீசன் கண்ட முட்செடி தீப் பற்றி யெரிந்தாலும் எத்தன்மை தகனிக்கப்படாமலிருந்ததோ, அம்மேரையே கன்னித் தாயும் அக்கினிச் சுவாலைபா யெரியும் ஆசாபாசங்களால் அணுவளவேனும் பீடிக்கப்படாமலிருந்தாள். ஆரோனது கோல் எப்படித் துளிர்த்து மலர்ந்ததோ, அப்படியே ஜெஸ்ஸேயின் கிளையாகிய மரியம்மாளிடம் தேவ புஷ்பமாகிய சேசுவென்னும் பூ மலர்ந்து உலகத்திற்கெல்லாம் இரக்ஷணியத்தின் இனிய வாசனையைத் தந்தது. அவள் மாத்திரமே பாவமாகிய மூடுபனியிலகப்படாது, ஜூடித், எஸ்தெர் என்ற மாதுக்கள் தங்கள் சொந்த சனங்களைக் கொடியோர் கையினின்று காப்பாற்றினதற் கொப்ப, மானிடர் அனைவரையும் பசாசின் கொடுங்கோலரசினின்று மீட்டுக் காப்பாற்றினாள்.



ஆதன் பழியினின்று மனுக்குலத்தை மீட்கவோர் இரக்ஷகர் வருவாரென்று ஆதி பிதா அருளிச் செய்தபோது, வெற்றி விருது பூண்டவோர் பெண்மணி நரக சர்ப்பத்தின் சிரசைச் சிதைப்பாளென்று குறிப்பிக்கப்பட்ட நாயகியும் இவளே; பிதாப்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும், வரவிருக்கும் நாதனையும் அவரது திருக்தாயாரையும் கண்டு களிகூறப் பல்லாண்டு ஏங்கியிருந்தனரன்றோ? அந்தத் திருத் தாயாரும் இவ்வாண்டவளே! "ஓர் கன்னிகை கருப்பந்தரித்து, ஓர் மகனை யீன்றெடுப்பாள்; அம்மகன் எம்மானுவேல், அதாவது, நம்மோடிருக்கும் கடவுள் என அழைக்கப்படுவார்" என்று இசையாஸ் தம் தீர்க்கதரிசனத்தில் குறிப்பித்த கன்னிகையும் இந்த நாயகியே.

கன்னிமரியாயின் பேர் பெருமையையும், சீர் சிறப்பையும் எடுத்துரைக்க யார் தரம்! அவளது முகவழகையும், அகவழகையும், அவளின் அருளழகையும் தெருளழகையுங்கண்டு ஆனந்த சாகரத்தி லாழ்ந்து, அவளைப்பார்த்து "Quam Pulchra es amica mea" "என் சிநேகிதியே! நீ எவ்வளவோ சௌந்தரியவதியா யிருக்கிறாய்!" என்று யார்தான் சொல்லாமலிருக்கக்கூடும்? மேலும், அவள் நமக்கு சேசுநாதரால் சிலுவையடியில் கொடுக்கப்பட்ட தாய். நம்மைப் பிள்ளைகளாக அவள் ஏற்றுக்கொண்ட அந்நாள் முதற்கொண்டு இந்நாள் பரியந்தம் அவள் நமக்குப் புரிந்து வரும் உபகார சகாயங்களுக்குக் கணக்குண்டோ? ஆபத்துக் காலத்தில் அவளே தஞ்சமென்றோடிய யாராவது அவளால் கைவிடப்பட்ட துண்டோ? தாயிலும் பதின் மடங்கான தாயாகிய அவளது அன்பையும் காருண்ணியத்தையுங் கண்டுணர்ந்த தாசர்களில் யார்தான் அவளைப் போற்றிப் புகழ்ந்து அவளுடைய ஊழியத்தில் தன் வாழ்நாளைக் கழிக்காதவர். இதினாலல்லோ அவ்வாண்டவளைப்பற்றி "Raptrix Cordium" "மனிதர் இருதயங்களைக் கொள்ளை கொண்டுபோகிறவள்" எனச் சொல்லப்பட்டிருக்கின்றது.

சர்வேசுரன் எப்படித் தமது சுபாவத்தினால் சர்வ வல்லமையுள்ளவரா யிருக்கிறாரோ, அப்படியே தேவதாயும் அருளினால் சர்வ வல்லபமுடையவளா யிருக்கிறாள். கன்னிமை குன்றாது கர்த்தரை யீன்றெடுத்தவளும், பரலோக பூலோக அரசியும், மனுக்குல இரக்ஷகியும், தாரணியிலுள்ளோருக்குத் தாயும், தன்னை யண்டி

ளுக்குத் தஞ்சமும், சர்வ ஞான சம்பத்தும் புண்ணியங்களும் அளவற்ற மேரையாய் வாய்ந்து, மானிடர் ஆபரணமும், மங்கையர் சிகாமணியுமாய் விளங்கும் இப்பரமாண்டவளை இம்மேமாதத்தில் விசேஷித்த விதமாய்ப் பூசித்துக் கொண்டாடுவது கிறிஸ்துவர்கள் கடமையன்றோ? அவளுக்குப் பிரியப்பட வேண்டுமானால், வெறும் வார்த்தையால் மட்டும் சிநேகம் பாராட்டாமல், நல்லொழுக்கத்தாலும, நற்கிரிகைகளாலும் அவளுடைய மெய்யான தாசர்களென்று நாம் எண்பிக்கவேண்டும். இம் மாதத்தில் அவளது திருக்குமாரனுடைய மெய்ம்மறை நெறி தவறாது ஒழுகி, நாடோறும் அவளுக்குப் பிரியமான தாழ்ச்சி, கற்பு, கீழ்ப்படிதல், தெய்வ சித்தத்திற்கு அமைதல் என்னும் புண்ணியங்களைக் கையாடி, துர்க்குணங்களைத் தவிர்த்து, தன்னைத் தானே பரித்தியாகஞ் செய்து, தேவதாய் சேசுநாதரை யீன்றெடுத்ததுபோல, நாமும் நமது குடும்பத்திலுள்ளோர் யாவரும் சர்வேசுரனுக்குப் பிரியப்பட நடக்கிறார்களா வென்று கண் காணித்து, கிறிஸ்துநாதரை அவர்கள் தரிசிக்கிறவரையில் நாம் அவர்களை சிரமத்துடன் பெற்றெடுக்கவேண்டும்: "Filioli qùos iterum parturio donec formetur Christus in vobis" நிலைபற்ற இப்பிரபஞ்ச வாழ்வில் நாம் தேவ தாயாருக்கு மெய்யான தாசர்களா யிருக்கப் பிரயாசைப்பட்டு, அவளுடைய ஊழியத்தில் நமது சொற்ப சீவியத்தைச் செலவழித்து வருவோமாகில், அப்போது மோட்ச ராச்சியம் நம்முடையதென்று திண்ணமா யிருக்கலாம். ஏனெனில், அர்ச். பெர்நர்து சொல்லி யிருக்கிறதுபோல "மரியாயின் மகன் ஒருக்காலும் அதோகதி யடையான்." "Filius Mariæ nunquam peribit.

Brig.

---

## WHAT IS OUR END?
## நமது கதி யாது?

நாம் எதாவது ஒரு நூதனப் பொருளைப் பார்க்கப்போனால், அது சாதாரணமாய் மனித சக்தியால் செய்யப்பட்ட ஒரு இயந்திரமோ, ஆயுதமோ, அல்லது நமது வீட்டுச் சாமான்களில் எதுவோ, அதைப்பார்த்ததும் நம்முள் ஒவ்வொருவர் வாயினின் றுதிக்கும் கேள்வி: "இது எதற்காக?" "இதைச் செய்ததின் கருத்தென்ன?" "இதன் உபயோகம் என்ன?" என்பதே. அது ஒன்றுக்கு முதவாதப் பொருளா யிருப்பினும் இருக்கலாம் என்பது ஒருபோதும் நமக்குத் தோன்றாது. மலைகளிலும் குகைகளிலும் காடுகளிலும் மரங்களிலும் வசிக்கும் நாகரீகமற்ற காட்டுச் சாதியாரிடமிருக்கும் அந்தப் பழுதும், கரடுமுரடுமான ஆயுதங்களை அகஸ்மாத்தாய் நாம் பார்க்க நேரிட்டால், அவைகளும் ஏதோ உபயோகத்திற்கே செய்யப்பட்டவை என்று நினைக்கிறோம்.

மானிட மர்ம சாஸ்திர ஆராய்ச்சியில் தேறிய ஒருவன் ஆபிரிக்காக் கண்டத்தின் மத்திய பிரதேசங்களிலிருந்து வெகு பிரயாசத்துடன் கல்லாயுதம் ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அக் கல்லைப் பார்த்தால், ஒரு பக்கம் கூராயிருக்கிறது; அதன் மற்றொருபாகத்தை இரண்டாய்ப் பிளக்கப்பட்ட ஒரு கழியின் நுனியில் சொருகி யிருக்கிறது; அக்கல்லும் கழியும் நன்கு பொருந்தும்படி ஏதோ ஒருவித புல்லினால் திரிக்கப்பட்ட கயிற்றால் நன்றாகக் கட்டப்பட்டிருக்கின்றது. இதைப் பார்த்த அளவிலே, அதைச் சோதிக்க வேண்டுமென்கிற ஆவல் நமக்குண்டாகிறது. உடனே இதைச் செய்ததின் நோக்கமென்ன? இதன் உபயோகமென்ன? என்று கேட்கிறோம். உடனே அந்த மனிதன் இது ஒரு கற்கோடாலி என நமக்கு விவரமாய் எடுத்துக் காட்டுகிறான். இரும்பு முதலிய லோகங்களை யறியாத நாகரீகமற்ற காட்டுச் சாதியார், தமக்குக் கிடைக்கும் வஸ்துக்களைக் கொண்டு, தம் மறிவைப் பிரயோகித்து, ஒரு கற்கோடரியைச் செய்து, நாம் எதற்காக இரும்புக் கோடரியை உபயோகிக்கிறோமோ, அதற்கு அதை உபயோகப்படுத்துகிறார்கள்.

இவ் வுதாரணத்தை இங்கெடுத்துரைப்பதேனென்றால், பகுத்தறியும் சக்தியுடைய ஒருவனைப்பற்றி நாம் பேசும்போதெல்லாம், அவன் எதைச் செய்தபோதிலும் ஏதோ ஒரு கருத்துடன் செய்வான் என்பது நாம் சாதாரணமாய் நினைக்கக் கூடிய நிச்சயமான காரியம் என்பதை இதைப் படிப்போர் அறிந்து கொள்வதற்கேயாம். ஒருவித நோக்கம் அல்லது கருத்தின்றி ஓர் ஆயுதம் அல்லது இயந்திரத்தை ஒருவன் செய்தால், அவனை நாம் ஒரு மூடன் அல்லது பித்தன் என்போம்; அது ஓர் அறிவுடையவன் செயலல்ல. ஆதலால் மனிதனால் செய்யப்பட்ட ஒரு பொருளை நாம் காண நேரிடும்போதெல்லாம், அதன் உபயோகம் நமக்கு நன்கு புலப்படாவிடினும், அது ஏதோ ஒரு நோக்கத்துடன் செய்யப்பட்டிருக்கவேண்டுமென நிச்சயிக்கிறோம்.

கேவலம் சொற்ப அறிவினையுடைய மனிதன் விஷத்தில் இது உண்மையானால், அளவற்ற ஞானமும், சிருஷ்டிகளிடம் தோன்றும் எல்லா அறிவுக்கும் யுக்திக்கும் மூலாதாரமும், என்றும் வற்றாத ஊறணியுமாகிய கடவுள் விஷயத்தில் இது எவ்வளவோ உண்மையாக இருத்தல் வேண்டும்!

கடவுள் நம்மை உண்டாக்கினார் என நாம் எப்போது ஒத்துக்கொள்கிறோமோ, அப்போதே அவர் நம்மை ஏதோ ஒரு திட்டமான முடிவுக்காக அல்லது தீர்க்கமான நோக்கத்துடன் உண்டாக்கி இருக்க வேண்டுமென்பதை நாம் கட்டாயம் அங்கீகரிக்க வேண்டுமென்பது, தானே போதரும். மேலும் அவர் நம்மை ஒரு திட்டமான கதிக்காய் உண்டாக்கியிருப்பதால், அக்கதியை நாம் அடைவதற்கான வழியை நமக்கவர் காட்டி யிருக்கவேண்டும் என்பதும் தேற்றம். ஏதோ ஒரு முடிவுக்கு ஒன்றை உண்டாக்கி, அம்முடிவை யடைவதற் கேதுவான மார்க்கத்தைக் காட்டாததால், அம்முடிவை யடைய முடியாமல் அதைத் தவிக்கும்படிவிடுதல், ஒரு பித்தன் அல்லது மூடனுடைய செயலே யொழிய, அளவற்ற ஞானத்தையுடைய ஒருவருடைய செயலாகுமா? ஆனால், மனிதனுடைய திட்டமான கதிதான் என்ன?

இது ஒரு முக்கியமான கேள்வி; ஏனெனில் இவ் விஷயத்தில் நாம் ஏதேனும் தவறிழைப்போமானால், இக் கேள்விக்குப் பதில் கடைசி வரையில் சொல்லமுடியாது.

நாம் சற்றே நிதானித்து, நம்மைச் சுற்றிலுமுள்ள மனிதருடைய சீவியத்தை கவனிப்போமானால், அவர்களுடைய செய்கைகளை யறிந்து, சிந்தைகளை யாராய்ந்து, அவர்களுடைய அநுதின நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்வோமானால், ஆஸ்திபாஸ்திகளைச் சேர்க்கவும் சிற்றின்பங்களை யனுபவிக்கவுமே அவர்கள் இவ்வுலகத்திற் பிறந்து புத்தி சாதுர்ய முடையவர்களா யிருத்தலின் முடிவென நாம் நினைக்க இடமிருக்கிறது. வெளிக்காரியங்களை மேலாகப் பார்த்துத் தீர்மானித்தால் இத்தகைய முடிவுக்குத்தான் நாம் வரவேண்டும்.

ஆனால் இவ்வுலக செல்வங்களுக்காக மனிதன் உண்டாக்கப்பட்டிருப்பான் என்பது கூடுமா? இல்லை! இது ஒருபோதும் கூடாத காரியம் என்று சொல்லலாம்; இப்படி நினைக்கவுங் கூடாது. ஏன் இதை இவ்வளவு நிச்சயமாகச் சொல்லவேண்டும்? இது எப்படித் தெரியும் என்று கேட்கலாம். இது பல காரணங்களால் தெரியவரும். சில விசேஷ நியாயங்களால் மேற்கூறிய விஷயத்தை விளக்கிக் காட்டுகிறேன். முதல் நியாயம் பின் வருமாறு:—உலக சிருஷ்டிப்புள்ளடங்கிய வஸ்துக்கள் ஒவ்வொன்றும் தன்னிலும் பலவிதத்திலும் உயர்ந்த வஸ்துவுக்காகவே உண்டாக்கப்பட்டிருக்கிறது. தன் பதவியினும் உயர்ந்த மேன்மையான ஒரு வஸ்துவே அதன் கதியாயிருக்கிறது. அப்படியே, உயிரற்ற வஸ்துக்கள் இவ்வுலகில் இருப்பது உயிருள்ளவைகளுக்காகவே. நிலம், நீர், ஆகாயம் முதலியன இருப்பது, வளருந் தன்மையுள்ள புல், பூண்டு, செடி கொடி, காய், கனி, மரம் மட்டை முதலியவற்றைத் தாங்கி அவைகளுக்கு வேண்டுவனவற்றைக் கொடுப்பதற்காம். அப்படியே மேற்கூறிய தாவரஜாதி வஸ்துக்கள் யாவும் தம்மினும் உயர்ந்த வஸ்துக்களுக்கு வேண்டியன உதவி, அவற்றைக் களிப்பிக்கும் பொருட்டே உண்டாக்கப்பட்டிருக்கின்றன. மரங்கள், புல் பூண்டுகள், தானியங்கள், முதலிய வளருந் தன்மை யுடையனயாவும், கணக்கற்ற பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் பூச்சிகளுக்கும் நிழல், உணவு முதலியன உதவி அவற்றைச் சந்தோஷிப்பிக்கின்றன. மிருகம், பறவை முதலிய கீழ்த்தர உயிருள்ள வஸ்துக்கள் யாவும் முறையே தம்மிலும் மேலானவனாகிய மனிதனைப் பணிகின்றன. அவனுக்கு வேண்டியதை உதவி, அகமகிழ்ச்சியையும் காலப் போக்கையும் உண்டுபண்ணி, இக்கண்ணீர் கணவாயாகிய உலக சீவியத்தில் அவனுக்குள்ள சிரமத்தை ஒருவாறு போக்கி, அவனுக்கு உணவு உடுக்கை முதலியன தந்து, இன்னும் அநேக விதங்களில் அவனுக்கு உதவி செய்கின்றன. இவைகளெல்லாம் இவ்வுலகிலிருப்பது மனிதனுடைய நன்மைக்கும் உபயோகத்துக்குமே. ஆனால், இவைக

ளெல்லாம் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டிருந்தால்; மனிதன் யாருக்காக? ஒன்று நிச்சயம்: மனிதன் தன்னிலும் கேவலமான யாதொன்றிற்கும் உண்டாக்கப்பட்டிருப்பான் என்பது கூடாத காரியம். அவனுடைய சக்தி எதுவாயிருப்பினும், அவன் மற்ற வஸ்துக்களைப் போலவே, தன்னிலும் மேலானதிற்கே யுரியவன். அம் மேலான வஸ்து என்ன? அவன் கதி யாது? கடவுளே! ஆம், கடவுளைப்பெற்று அநுபவிக்கவும், அவரில் சகல பாக்கியத்தையுமடையவுமே மனிதன் உண்டாக்கப்பட்டான். ஆதலால், மனிதன் இவ்வுலக செல்வ சுகபோகங்களுக்காக உண்டாக்கப்படவில்லை. ஏனெனில் சிருஷ்டியில் எதுவும் தன்னிலும் தாழ்ந்ததற்காக இவ்வுலகில் இருப்பதில்லை என்பது உண்மையான முதல் நியாயம்: கேவலம் ஆஸ்திபாஸ்திகளும், மண், பெண், பொன் என்னும் மூவகை வஸ்துக்களும். சிற்றின்ப சுகபோகங்களும் மனிதனிலும் எத்தனையோ மடங்கு கீழானவை. இவற்றிற்கும் மனிதனுக்கும், சுண்டெலிக்கும் மேரு மலைக்குமுள்ள வித்தியாசம் இருக்கும் என்றாலும், உபமானம் பொருந்தாதென சிலர் குறைகூறுவர். ஆதலால் மனிதன் தன் கதியை யறியவேண்டுமானால், கீழ் நோக்கி தனக்குக் கீழானவற்றையல்ல, மேல் நோக்கி தன்னிலும் மேலானதையே சிந்திக்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

S. Selva Raju.

---



## ENCYCLICAL OF HIS HOLINESS BENEDICT XV.

## பாப்பாண்டவரின் நிருபம்.

(முன்தொடர்ச்சி.)

---

### பத்தாம்பத்திநாதர் பாப்புஸ்தானத்தை வகித்ததினா லுண்டாகிய பலன்கள்.

இப்பொழுது, ஜன சமுகத்துக்குரிய விஷயங்களை நிறுத்தி திருச்சபைக் கடுத்த விஷயங்களின்பேரில் நமது கவனத்தைச் செலுத்துவோமானால், நிகழும் கொடிய நிர்ப்பாக்கியங்களால் வாதிக்கப்படுகிற நம்முடைய மனதுக்குக் கொஞ்சமாவது ஆறுதல் கிடைக்குமென்று நிச்சயிக்க இடமுண்டு. அதேதெனில், தேவ பலத்தையும் திருச்சபையின் குறைவற்ற தன்மையையும் எண்பிக்கும்படியான எண்ணிறந்த அத்தாட்சிகள் மாத்திரமல்ல, நமக்கு முன் இருந்த பத்தாம்பத்திநாதர், எல்லோருங் கண்டு பாவிக்கும்படியான தமது பரிசுத்த சீவியத்தால் அப்போஸ்தல ஸ்தானத்தை பின்னும் அதிகமாய்ப் பிரகாசிக்கச் செய்து, தமது விடாமுயற்சியால் சம்பாதித்த ஏராளமான பலனை நமக்கு வைத்துவிட்டுப்போனது நமக்குக் கொஞ்சமான ஆறுதலல்ல. அவருடைய அலுவலுக்காக நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனென்றால் ஞானகாரியங்களில் உற்சாகமும் ஆவலும் குருக்களுக்குள் எங்கே பார்த்தாலும் உண்டாயிருக்கிறது; கிறிஸ்துவ பிரசைகளுக்குள் பக்தி மூட்டப்பட்டிருக்கிறது; கத்தோலிக்கு நடபடிக்கையும் சீர்திருத்தமும் கத்தோலிக்கருடைய சபைகளில் மேம்பாடடைந்திருக்கின்றன; இங்குமங்கும் புதிதாய் மேற்றிராசனங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, அவைகளினுடைய தொகையும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றது; திருச்சபை சட்டம் கண்டிப்பாய் அநுசரிக்கப்படும்படியாகவும், இக்காலத்துக்கு ஏற்றபடி அவசியமான படிப்பு குருப் பட்டத்துக்குப் படிக்கும் வாலிபர்களுக்குக் கொடுக்கப்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன; வேதசாஸ்திரங்களைப் போதிப்பதில் மோசத்துக்குரிய தப்பான புதிய கொள்கைகளைக் கற்பியாவண்ணம் தடங்கல் செய்யப்பட்டிருக்கிறது. சங்கீதம் தேவ மகத்துவ கைங்கரியத்துக்கு ஏற்றபடியாய்ப் பாடப்பட திட்டமுஞ் செய்யப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவ ஒழுக்கம் விர்த்தியடைந்திருக்கிறது; சுவிசேஷம் பிரபலமாய்ப் போதிக்கப்பட நூதன சபைகளும் ஏற்பட்டு சத்தியவேதம் பரவிவருகிறது.

திருச்சபைக்கடுத்த விஷயத்தில் நமக்கு முன்னிருந்தவரால் உண்டான இப்பலன்கள் மெய்யாகவே மிக்க புகழ்ச்சிக்குரியவைகளாயிருக்கின்றன. அன்றியும் வரப்போகிற சந்ததியார்களும் நன்றியறிதலோடு இவற்றைத் தங்கள் ஞாபகத்தில் பதியச்செய்து கொள்ளுவார்கள். ஆயினும் வீட்டு நல்ல எஜமானின் வயலானது சர்வேசுரனுடைய சித்தப்படியே பகையாளி



யின் மோசநாசத்துக்கு இலக்கா யிருப்பதையிட்டு, மிகுதியான களைகளினால் நற்கனி சேதமாய்ப் போகுமோவென்கிற பயத்தினால் அவரவருடைய அலுவலுக்கு ஒருபோதும் தடைநேரிடாதிருக்கக் கடவது. ஆகையால் "பிடுங்கிப் பறிக்கவும்...கட்டி நாட்டவும் உன்னை இன்று ஜனங்கள் மீதும் இராச்சியங்கள் மீதும் அதிகாரியாய் ஸ்தாபித்திருக்கின்றோம்" (எரேமி. I. 10) என்று சர்வேசுரன் தீர்க்கதரிசிக்குத் திருவுளம் பற்றினதை நமக்கே சொன்னதுபோலெண்ணி, நமக் கொப்புவிக்கப்பட்ட ஆசாரியத்துவ அலுவலைக் குறித்து மேய்ப்பர்களின் மேய்ப்பரானவர் நம்மிடத்தில் கணக்குக் கேட்கச் சித்தங் கொள்ளும் வரையிலும் தின்மையானவற்றை விலக்கி, நன்மையானவற்றை முன்னேற்றத்துக்குக் கொண்டுவர நம்மாலானவரையில் சர்வ ஜாக்கிரதையோடு பிரயாசைப்படுவோம்.

### அதிமுக்கிய விஷயங்கள்.

சங்கைக்குரிய சகோதரர்களே! நம்முடைய இந்த முதல் நிருபத்தில் நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிற சில விசேஷ காரியங்களைப்பற்றி யுங்களுக்குக் கொஞ்சம் எழுதுவது நன்மையென்றும், உங்களுடைய பிரயாசையால் அந்த நமது அலுவலுக்கு உதவி புரிவீர்களென்றும், நாம் ஆசிக்கிற அந்தப்பலனை அதிசீக்கிரம் உங்களுடைய உருக்கமுள்ள உழைப்பால் பெற்றுக்கொள்வோமென்றும் நினைக்கிறோம்.

முந்தமுந்த, எது விஷயத்துக்காகவானாலும் மனிதர்கள் கூடுகிற ஒவ்வொரு கூட்டத்திலும் உள்ள ஒவ்வொரு அவயவத்தினரும் ஒன்றுசேர்ந்து தாங்கள் கோரிய காரியத்தை யடையவிடாமுயற்சி செய்வது அதிமுக்கிய காரியமாயிருப்பதினால், கத்தோலிக்கர்களுக்குள் விளையக்கூடிய எவ்வகையான சச்சரவுகளையும் விரோதங்களையும் முற்றும் நீக்கிப் போடும்படிக்கும், திரும்பவும் அவர்களுக்குள் புதிதாய்ப் பகை முளைத்தெழும்பாமல் அவர்களைக் காபந்து செய்யும்படிக்கும்; அவர்கள் எது காரியத்திலும் யோசித்து ஒன்றித்து நடக்க அவர்களைத் தூண்டும்படிக்கும் நம்மா லியன்றவரையில் பிரயாசைப்படவேண்டியது. விசுவாசத்தைக் காப்பாற்றும் விஷயத்தில் கத்தோலிக்கர்களுக்குள் நேர்க்கூடிய ஒவ்வொரு சச்சரவும் தங்களுக்கு ஜெயத்தின் குறிப்பு என்பதாக சர்வேசுரனுடையவும் சத்திய திருச்சபையினுடையவும், சத்துராதிகளானவர்களுக்குத் தெளிவாய்த் தெரிந்திருக்கின்றது. இதனாலேதான் கத்தோலிக்கர் வெகு ஒற்றுமையாய் ஒன்றுசேர்ந்திருக்கிறதைப் பார்த்து, வைதாகிற விதையைக் கூடமாய் அவர்கள் மத்தியில் விதைத்து ஒற்றுமையை யழித்துப்போடப் பிரயாசைப்படுகிறதே அவர்களுக்கு அடிக்கடி யேற்பட்டுள்ள வழக்கம். வேதத்துக்கு மெத்தவும் இடைஞ்சலான அவர்களுடைய தந்திர எண்ணங்கள் அவ்வளவாய் சித்திபெறுகிறதால் எவ்வளவோ நன்மையா யிருந்திருக்கும். ஆகையினால், சரியான அதிகாரத்தினால் ஒருத்திரவு பிறப்பிக்கப்பட்டதென்று சந்தேகமறத் தெரிந்தபோது, அவ்வுத்திரவைத் தான் ஒப்புக்கொள்ளமாட்டேனென்று சொல்லி அதை அலட்சியஞ்செய்யும் சுதந்தரம் தனக்குண்டென்று ஒருவனும் எண்ணிக்கொள்ளாதிருப்பானாக. ஆனால் ஒவ்வொருவனும் தான் அடங்கி நடக்கவேண்டியவரின் அதிகாரத்துக்குத் தன்னுடைய கருத்தை இணங்கச்செய்து, தன் மனச்சாட்சியின் கடமைப்படிக்குக் கீழ்ப்படியக்கடவான். அல்லாமலும் கிறிஸ்துவனில் எவனும் புத்தகங்களை அல்லது பத்திரிகைகளைப் பிரசுரிப்பதினாலும், பகிரங்கமான உபந்நியாசங்களினாலும் திருச்சபையில் தனக்குத்தானே எஜமான் ஸ்தானத்தை வகித்துக்கொள்ளாதிருப்பானாக. சர்வேசுரனானவர் திருச்சபையில் போதிக்கும் அலுவலை யாருக்குக் கொடுத்திருக்கிறாரென்று எல்லோருக்கும் தெரியும். அவருக்கு நியாயமென்று தோன்றுகிறபடிக்கும், அவர் விருப்பம் போலவும் யாதொரு கட்டுப்பாடு மின்றிப் பேசட்டும். அவருடைய போதனைகளை வணக்க மரியாதையோடு ஏற்றுக்கொண்டு அவைகளுக்குப் பணிந்து நடப்பது மற்றவர்களுடைய கடமை. விசுவாசத்துக்கும் நல்லொழுக்கத்துக்கும் சம்பந்தப்பட்டவை நீங்கலாக, பரிசுத்த பாப்பரசரால் தீர்மானிக்கப்படாத விஷயங்களைப் பற்றி அவரவரும் தம் தம் அபிப்பிராயத்தை நிலைநாட்ட தங்களிஷ்டப்படி அநுகூலமாகவோ பிரதிகூலமாகவோ தர்க்கித்துப் பேசுகிறது மெய்யாகவே நியாயமாயிருக்கிறது. ஆயினும் இவ்வித தர்க்கங்களில் பிறசிநேகத்துக்குப் பங்கம் வருத்தக்கூடிய எவ்வித வார்த்தைகளும் தவிர்க்கப்படவேண்டும். மெய்யாகவே ஒவ்வொருத்தரும் தன் தன் தாற்பரியத்தைத் தாராளமாய் நிலைநிறுத்தட்டும்; ஆனால் அடக்க வொடுக்கத்

219322
219322

தோடு அப்படிச் செய்வானாக. தன்னுடைய கருத்துக்கு மற்றவர்களுடைய கருத்து ஒத்துவாராததி னிமித்த மாத்திரமே எவனும் அவர்களுடைய விசுவாசத்தைப் பற்றியும், நல்லொழுக்கத்தைப்பற்றியும் சந்தேகங்கொள்ள நியாயமுண்டென்று எண்ணாதிருப்பானாக. கத்தோலிக்கருக்குள் பிரிவினையை உண்டுபண்ண நூதனமாய் இடப்பட்டிருக்கிற பெயர்களை நமது பிரஜைகள் வழங்காதிருக்க நாம் ஆசிக்கிறோம். ஏனென்றால் இந்நூதன வார்த்தைகள் உண்மைக்கும் நீதி நியாயத்துக்கும் பொருந்தாதவைகளாயிருப்பதுமன்றி கத்தோலிக்கர்களுக்குள் அபாயமான கலக்கத்தையும் மிகுதியான குழப்பத்தையும் உண்டுபண்ண ஏதுவாயிருப்பதினாலும் அவற்றை நீக்கவேண்டியது. கத்தோலிக்கு விசுவாசத்தின் சுபாவமும் ஒழுக்கமும் எப்பேர்ப்பட்டதென்றால் அதனோடு ஒன்றையும் கூட்டவும் அல்லது அதில் ஒன்றைக் குறைக்கவுங் கூடியதல்ல. ஒன்றில் அது முழுதும் ஒப்புக்கொள்ளப்படவேண்டும், அல்லது முழுதும் நீக்கப்படவேண்டியது. "இதுவே கத்தோலிக்கு விசுவாசம். இதை யொருவன் உறுதியாயும் விசுவாசமாயும் நம்பினாலொழிய ஈடேறமாட்டான்." (அத்தனாசியாரின் விசுவாசப் பிரமாணம்) ஆகையால், கத்தோலிக்கு வேதத்தைப் பயிரங்கப்படுத்த வேறே சொற்களைச் சேர்ப்பது அனாவசியம்; ஒவ்வொருத்தனும் "என்னுடைய பேர் கிறிஸ்துவன், என்னுடைய பட்டப்பேர் கத்தோலிக்கு" என்று சொல்லுவதே போதுமானது. தானிட்டுக்கொண்ட பேருக்குத் தக்கபடி நடப்பதொன்றே முக்கியமானது.

(தொடரும்.)

## GNANAMANI, III PART.
## ஞானமணி 3-ம் பாகம்.
### 19-ம் அதிகாரம்.

இவன் ஜெகபோக்கிரி, மகா துஷ்டன், மற்ற மானுக்கருடன் இடைவிடாமல் சண்டை போடுவோன்.

போத்திதுஸ் நாடகத்தைப் பார்த்தவர்கள் எவ்வளவு சந்தோஷங் கொண்டார்களென்றால் கடைசிநாளில் சிலர் தேவதாஸ் பண்டிதர் கழுத்தில் பூமாலைபோட்டார்கள். அவருடைய கைக்குச் சிலர் பொற்காப்பு அடித்துப் போட்டார்கள். இன்னுஞ் சிலர் உயர்ந்த பட்டு அங்கவஸ்திரங்களையும் காஷ்மீர் சால்வைகளையும் பரிசளித்தார்கள். கடைசி இராத்திரியில் சுமார் ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாய்க் கிடைத்தது டிக்கட்டுப் பணம்.

நாடக முடிந்த சில நாளைக்குப்பின் அவருடைய சினேகிதர் அவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது போத்திதுஸ் என்பவருடைய சரித்திரம் மெய்யாக நடந்த சரித்திரமோ அல்லது கட்டுக்கதையோ என்று கேட்டபோது, அது உண்மையான சரித்திரம். இந்த வேதசாக்ஷி செய்த அற்புதங்களைக் கண்ணாரப் பார்த்தவர்களால் இலத்தீன் பாஷையில் எழுதப்பட்டு, சிலவருஷங்களுக்கு முன் தான், அதாவது, 1874௵ அது இங்கிலீஷில் மொழி பெயர்க்கப்பட்டது, என்று அந்த சரித்திரம் அடங்கிய புத்தகத்தை அவர்களுக்கு எடுத்துக்காட்டினார்.

செங்கல்பட்டுக்குப் புறப்பட சகலமும் சித்தமானபின், அவருடைய சிறிய தாயாராகிய சுந்தரமரி பலகாரணங்களைப்பற்றி தன் சொந்த ஊருக்குப் புறப்பட்டுப்போகும்படி நேரிட்டபடியால், அதற்கு முன்னதாகவே, பங்காரம்மாள் என்னும் 54 பிராயமுள்ள ஒரு ஸ்திரீயை ருக்மணிக்கு உதவியாக நியமித்திருந்தாள்.

தேவதாஸ் பண்டிதர் செங்கற்பட்டுக்குப் புறப்பட்டுப்போய், ஊருக்குத் தூரத்தில் ஒரு பெரிய பங்களாவைக் குடிக்கூலிக்குப் பேசி அதில் வசித்திருந்தார்.

அவர் தமது பங்களாவில் ஒரு சிற்றறையைச் செபக்கூடமாக நியமித்து, அதில் பீடங் கட்டி, அதை மகா அலங்காரமாகச் சிங்காரித்து, அவர் எழுதிய பல சித்திரப்படங்களை ஆங்காங்கு தொங்கவிட்டு திருச்சுரூபங்களை ஸ்தாபித்து பரிமளம் வீசும் பூமலர்களைப் பிரதிதினமும் அந்தப் பீடத்தில் சாற்றிவைக்க கற்பித்தார். இதில் பண்டிதர் குடும்பத்துடன் அந்திசந்தி செபங்களைச் செய்துகொள்வார். இந்த செபக்கூடத்தைப் பார்த்தவர்கள், சித்திரத்தின் அழகு சொகுசையும் படங்களின் அலங்காரத்தையும், சுரூபங்களின் வடி வழகையுங்கண்டு அதிசயித்து மகிழ்ந்து, இதைக் கண்ணால் பார்த்தவுடனே பக்தி விஸ்வாசம் இருதயத்தில் தானாய்ப் புறப்படுகிறதென்று நிச்சயித்து இதை நாளெல்



லாம் பார்த்தாலும் மனம் சலிக்கவில்லை யென்பார்கள். இப்பேர்ப்பட்ட பீடம் நமது கோவிலில் இருந்தால் எவ்வளவோ நன்றா யிருக்குமென்பார்கள் வேறு சிலர். யாதொரு துன்பதுரிதத்திற்குள்ளாகி வருத்தப்பட்டவர்கள் இந்தச் செபக்கூடத்தைச் சந்தித்து அதிலுள்ள திருப் படங்களையும் சுரூபங்களையும் பார்த்த மாத்திரத்தில் அவர்களுக் குண்டாயிருக்கும் துக்க துயரம் நீங்கும். பண்டிதரைப் பார்த்து பேசவரும் சகலரும் எச்சாதி, யெவ்வர்ணம், எம் மதஸ்தராயினும் அங்குள்ள செபக்கூடத்தைப் பார்க்காமல் போகார்.

பண்டிதருடைய பங்களா விசாலமாயும் சுசிகரமாயு மிருந்ததுடன், அதையும் தம்மால் சித்திரிக்கப்பட்ட படங்களால் அலங்கரித்தார். ஆங்காங்கு தமது பந்து ஜனங்களுடையவும், தாய் தந்தையருடையவும், சகோதரர் சகோதரிகளுடையவும் புகைப்படங்களை (போட்டகிராப் படங்கள்) சுவருகளில் மாட்டிவைத்தார். கிறிஸ்துவர்களான பெரிய மனிதரும், கனதனவான்களும், சர்க்கார் உத்தியோகஸ்தரும் புறமதஸ்தருக்குப் பயந்து, கோழைத்தனங்கொண்டு அர்ச்சியசிஷ்டவர்களுடைய படங்களை யாரும் பிரவேசியாத தனி அறையில் மாட்டிவைத்து, மனுஷாள் வந்து உட்கார்ந்து பேசும் அறையிலும் வெளித் தாழ்வாரத்திலும் இராணி, இராஜா, கவர்னர், பிரபுக்கள், துரை, துரைசானிகள், பற்பல மிருகங்கள், பறவைகள், கப்பல்கள் சமுத்திர முதலிய ரூபங்களுள்ள படங்களை மாத்திரம் மாட்டிவைப்பார்கள்.

தேவதாஸ் பண்டிதரோ, அதற்கு விரோதமாய், நமது கர்த்தருடையவும், தேவதாயாருடையவும், மற்ற அர்ச்சியசிஷ்டவர்களுடையவும், பாப்பானவர், மேற்றிராணிமார், குருக்கள், கன்னியர் முதலியவர்களுடையவும் படங்களையும் சகலருடைய கண்ணுக்கு நன்றாய்ப் புலப்படும்படியான விதமாய்ச் சுவருகளில் பகிரங்கமாய் மாட்டிவைத்தார். புறமதஸ்தர்களானவர்கள் அந்த வேதப்படங்களைப்பற்றி யாதொரு கேள்விகேட்டால், அது இன்னின்னாரென்றும், அவர்களுடைய தர்ம நடத்தை, புண்ணியக்கிரிகை, அவர்கள் நடத்திய அற்புதங்கள் இன்னின்னவை யென்றும் தெளிவாய் விவரித்துக் காட்டுவார். ஆனதைப்பற்றி பண்டிதர் ஒருபோதும் தமது சத்திய வேதத்தை மறைத்தவருமல்ல, வேத விஷயமாக யாருக்கும் பயப்பட்டவருமல்ல.

அவருடைய பேர் பெருமையையும், கீர்த்தி திறமையையும், கல்வி வித்வதையையும் செல்வாக்கையும் பற்றி கேள்விப்பட்ட கனதனவான்களான அநேக பிரபுக்கள் அவரைக் கண்டுவார்த்தையாடி, அவருடைய பரிச்சயத்தைப் பெற ஆசிப்பார்கள்.

தேவதாஸ் பண்டிதர் தமது மனைவிக்கு யாதொன்றுங் குறைவுபடாமல் விசாரித்ததுடன், அவளுக்கு இஷ்டமான வேலைக்காரரை விசாரித்து வைத்துக்கொள்ளும்படி உத்தரவு அளித்தார். பங்காரம்மாள் யாதொரு வேலை வெட்டியின்றி ருக்மணிக்கு உதவியாக இருந்தாள். வியாதி நோய் வந்தால் தகுந்த ஔஷதங்களைக் கொடுத்து பராமரிப்பாள். ருக்மணிக்குப் போசனம் விசாரிப்பாள். இராவேளையில் ருக்மணிக்கு அருகாமையிலிருந்த சிற்றறையில் படுப்பாள். தாயைப்போல் ருக்மணியை பக்ஷ பராமரிப்பாய் விசாரித்து வருவாள்.

பங்காரம்மாள் தவிர, முனியம்மாள் என்னும் 20,22 பிராயமுள்ள ஒரு பெண்ணைத் தனக்கு உதவியாக ருக்மணி நியமித்துக்கொண்டாள். இவளுக்கு 5 பிராயம் நடக்கும்போது கலியாணம் செய்யப்பட்டு, ஒன்பதாம் பிராயத்தில் தாலி யறுத்தாள். இவள் ருக்மணியின் ஆடைகளை ஒழுங்காய் வைத்து, அதை வண்ணானுக்குப் போட்டு, அப்போதைக்கப்போது அவைகளை மடித்துவைத்து, அத்தர் பன்னீர் முதலிய வாசனை வர்க்கங்களை யெப்போதெப்போது ருக்மணிக்கு உபயோகிக்கவேண்டுமோ, அப்போது அவைகளை உபயோகிப்பாள். நூதனமான வாசனை வர்க்கங்களை விலைக்கு வாங்கி வருவாள். ருக்மணியின் தலைசீவி ஜடையோ, கொப்போ, முடிச்சோ போட்டு பூ முடிப்பாள். தாம்பூலம் மடித்துக் கொடுப்பாள். உடை உடுத்தும்போதும், ஆபரணங்கள் தரிக்கும்போதும் இவள் அவளுக்கு உதவியாயிருப்பாள், ஆனால் இவளுடைய குணமோ பொல்லாதது. எதார்த்தம் என்பது இவளிடத்தில் சுத்தமாயில்லை. வஞ்சகம், கபடம், பித்தலாட்டம், சூது, திரியாவரம் ஆகிய இத்தியாதி குணங்கள் இவளிடத்தில் சாங்கோபாங்கமாய்க் குடிகொண்டிருந்தன. கலகத்துக்கு நாற்றங்கால் என்கலாம் இவளை. வினை குடுக்கை என்னும் பெயர் இவளுக்கு நன்றாய்ச் செல்

னும். வேதத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல, புரு முகமும் தேள் கொடுக்கும் கொண்டவள் இந்தத் துஷ்டை. சமயத்துக்குத் தகுந்தாற்போலக் கூத்தாடுவாள். அபாண்டம், அவதூறு, புறணி சொல்வதில் சலியாள். ஆனதைப்பற்றி தோல்வாயாள் என்னும் பட்டப்பெயர்கொண்டு அழைக்கப்படுவாள். இவளுடைய அவதூறால் ஒரு வீடு நாலாகவும், ஒரு குடும்பம் எட்டாகவும் பிரிக்கப்படும். புண்ணியத்தைப் பாவமாகவும், பாவத்தைப் புண்ணியமாகவும் செய்யக்கூடிய கருமி யிவள். இந்த நிற்பாக்கிய பெண் தேவதாஸ் பண்டிதர் வீட்டில் சேர்ந்திராவிட்டால் நலமாயிருந்திருக்கும். ஆனால் யௌவன பிராயமுள்ள ருக்மணி யிந்த துஷ்டப் பெண்ணின் கபட தந்திரங்களை யறியாமல், அவளுடைய வஞ்சக வார்த்தையையும் பசப்புச் சொல்லையும் அறியாதவளாய், அவளைத் தன் வேலைக்காரியாகத் தெரிந்துகொண்டாள். மேலும் இவளுக்கு எழுத வாசிக்கவும், தையல் வேலை செய்யவும் தெரிந்திருந்தபடியால், இவள் தனக்குப் பலவிதத்திலும் பிரயோஜனமா யிருப்பாளென்று அவள்மேல் பிரியங்கொண்டாள் ருக்மணி. சமையல்செய்ய இரண்டு பெண்பிள்ளைகளையும், தோட்டவேலைக்காக இரண்டு வேலை யாட்களையும் பேசி அமர்த்திக்கொண்டாள்.

தேவதாஸ் பண்டிதர் செங்கற்பட்டிலிருக்கும்போது, நாளெல்லாம் வெளியே இருப்பார். இரவில் மாத்திரம் வீட்டில் தங்குவார். மாதத்தில் ஒருமுறை அல்லது இருமுறை தமது வேலை யினிமித்தம் வெளியூருக்குப் போவதுண்டு. அந்த இடங்களில் அநேகநாள் தங்குவதாயிருந்தால் தமது மனைவியையும் கூட அழைத்துக் கொண்டு போவார்.

இவரிடத்தில் பாட்டு பஜனை கற்றுக்கொள்ளவும், பிட்டில், பியானோ, வீணை முதலிய வாத்தியக் கருவிகளை வாசிக்கக் கற்றுக்கொள்ளவும் அநேக வாலர், வாரத்தில் குறிக்கப்பட்ட நாட்களில் அவரிடம் வந்து கற்கவேண்டிய வித்தையைக் கற்றுக்கொள்வார்கள். தேவதாஸ் பண்டிதர் செங்கல்பட்டில் குடியேறினபின் அனேகர் வெகு தொலையிலிருந்து இவரிடத்தில் சிங்கார வித்தையைக் கற்கும்படி வருவார்கள். சில சமயங்களில் 30, 40 பேர் இவரைச் சூழ்ந்து மகா கவனத்துடன அவருக்குச் செவி கொடுப்பார்கள். சிற்றரசரும், ஜமீன்தாரும், வக்கீல்களும் தங்கள் பிள்ளைகளைத் தேவதாஸ் பண்டிதரிடம் அனுப்புவார்கள். எல்லோரும் இவரை அன்புடன் நேசித்துப் பணிவார்கள். அவரிடத்தில் வித்தை கற்பதால் பெருமை பாராட்டுவார்கள். அவர் தங்கள் கல்வி குரு என்று சொல்லி அவரைப் புகழுவார்கள்.

இத்தனைப் பேரும் பெருமையும் வாய்ந்த பண்டிதரைக் கண்ணியமாகப் பாவித்து மேரை மரியாதையாய் அவருக்குப் பணிந்து வந்தபோதிலும் ஒரு துடுக்கன் மாத்திரம் அவரை விரோதித்து இகழ்ந்துவந்தான். இவன் பெயர் கல்யாண சுந்தரம். இவன் ஜெகபோக்கிரி; மகா துஷ்டன். மற்ற மாணாக்கருடன் இடைவிடாமல் சண்டை போடுவான். பார்வைக்கு விகாரரூபமுள்ளவனாய், காப்பிரியைப் போலச் சுருட்டைமயிரும், பெரும் உதடும் கருத்தமேனியுமுள்ளவன். அவன் குள்ளனா யிருந்ததைப்பற்றி மற்றவர்கள் அவனை குள்ளக்கத்திரிக்காய் என்பார்கள். புத்தியில் வெகுமட்டு. பிட்டில் கொட்ட கற்றுக்கொள்ளும்படி பண்டிதரிடம் வந்திருந்தான். அவனோடு கூட படித்தவர்கள் பத்தாம் பாடம் வரைக்கும் தேறினபோதிலும், இவன் முதல் பாடத்திலேயே இருந்தான். தன் பாடத்தைச் சரியாய் ஒப்புவியாதபடியால் பண்டிதர் அவனைக் கடிந்து கொள்ளும்போது மௌனமாய் நிற்பான். பண்டிதர் புஸ்தகத்தைப்பார்த்து பிட்டில்கொட்ட அவனுக்குக் கற்பிக்கும்போது அவன் அவரைப் பரியாசஞ் செய்வான். இப்பேர்ப்பட்ட மடையனுக்குப் பண்டிதர் மகா பொறுமை சாந்தத்துடன் வித்தை பயிற்றியும், அந்தச் சாப்பாட்டுராமன் அதைக் கிஞ்சித்தென்கிலும் கவனித்தவனல்ல.

ஒருநாள் பிட்டில்கொட்டும் மாணாக்கர் அனைவோருக்கும் பண்டிதர் போதித்தபின், வீணை வாசிக்கும் பிள்ளைகளிடம் போய், அவர்களுக்குக் கற்றுக்கொடுத்துக்கொண் டிருக்குஞ் சமயத்தில், பிட்டில் வாசிக்க கற்கும் பிள்ளைகளிடத்தில் பெருஞ் சந்தடிகேட்டு, பண்டிதர் அங்கே துரிதமாய்ச் சென்றார். அவ்விடத்தில் கல்யாண சுந்தரத்திற்கும் வேறொரு வாலனுக்கும் வாய்ச் சண்டை யுண்டாகி, கைச்சண்டைக்குத் தயாராயிருக்கும்போது, அவர்கள் இருவரையும் பிரித்துவிட்டு, அந்தச் சச்சரவின் காரணத்தைப்பற்றி விசாரித்தார். விசாரித்தபோது, அந்த அறையிலிருந்த வாலர் எல்லோரும் ஒரே



வாக்காய் கூறின சாட்சியால் கல்யாணசுந்தரம் குற்றவாளியென்று தெரியவந்தது.

அதெப்படியெனில்: துஷ்டனான கல்யாண சுந்தரம் கள் சாராயம் குடிக்க வழக்கப்பட்டிருந்தபடியால் அன்றையத்தினம் பூர்த்தியாய்க் குடித்து கிளாசுக்கு (வகுப்புக்கு) வந்திருந்தான். அவன் பேச வாய்த்திறந்தபோதெல்லாம் பொறுக்கக்கூடாத நாற்றம் கிளம்பின்படியால், அவன் பக்கத்திலிருந்த பிள்ளைகள் அதைச் சகிக்கக்கூடாமல், சிலர் சிரிக்கவும், சிலர் அவன் பக்கத்திலிருந்து தூரமாய் விலகவும் எத்தனித்தபடியால் குடிகாரனுக்குக் கோபமும் கள்வெறியுங் கிளம்பி, அந்த வாலரைத் திட்ட ஆரம்பித்தான். அந்த வாலரில் உரோஷக்காரனான ஒருவன் கல்யாண சுந்தரத்தின் துற் நடத்தையையும் கெட்ட வழக்கத்தையும் எடுத்துக் காட்டித் திட்டவே, இருவருக்கும் அடிபிடி சண்டையாகிற சமயத்தில் தேவதாஸ் பண்டிதர் அவ்விடத்தில் பிரவேசித்ததைக் கண்டவுடனே, அவர்களுடைய சல்லியம் நின்றுவிட்டது. அங்கு நடந்த சங்கதியெல்லாம் பண்டிதர் அறிந்தபின், அங்கு கூடியிருந்த மாணாக்கர் அனைவோரையும் பெரிய சாலைக்குள் வரவழைத்து இவ்வாறு சொல்வார்:

கல்யாண சுந்தரம் பிள்ளை? இது எப்பேர்ப்பட்ட ஸ்தலம்! இதில் சஞ்சரிப்பவர்கள் யார் என்று நீ கொஞ்சமாவது நினைக்கவே இல்லை. மாட்டுக்கார பசங்கள் கூடி விளையாடும் காடு என்று நினைக்கவேண்டாம். அல்லது குடிகாரர், சூதாடிகள் முதலிய போக்கிரிகள் கூடும் சத்திரஞ் சாவடி யென்று நினைக்கவேண்டாம். அல்லது திருடரும் பாதகரும் கூடும் கெபி யென்று எண்ணவேண்டாம் என்கவே, கல்யாணசுந்தரம் மூர்க்கக் கோபத்துடன் பண்டிதரை நோக்கி, “என்ன சர்? நான் திருடனா?” என்று வாய்க்குளறி உளறும்போது,

“பேசாதே, நான் சொல்லுகிறதைக் கவனமாய்க் கேள்” என்று பின் வருமாறு பண்டிதர் கோபமாய் அதிகாரத் தொனியுடன் மொழிவார்:

இது கல்வி கற்கும் ஸ்தலம். மகிமை தங்கிய சிற்றரசருடைய குமாரரும்; தனவந்தரான ஜமீன்தார், மிட்டாதார், ஸ்ரோத்திரியதார் முதலிய வங்கிஷபதிகளின் குமாரர்களும் சாஸ்திரிகளான பாரிஸ்டர், வக்கீல் முதலிய பெரிய மனுஷாளின் பிள்ளைகளும் பெரும்பாலராக சிங்கார வித்தையைக் கற்றுவருகிறார்கள். இவ்வளவு சிறந்ததும் கண்ணியமுமான சபைக்குள் உன்னைச் சேர்த்துக்கொண்டதற்காக நீ மிகவும் நன்றியுள்ளவனா யிருக்கக் கடமைப் பட்டிருந்தும்... ..........

இதற்குள்ளாக கல்யாணசுந்தரம், “நான் அப்படி உங்களுக்கு என்ன துரோகம் செய்தேன் சர்?”

பண்டிதர் தமது கையிலிருந்த பிட்டில் வில்லால் சயிக்கினை காட்டி “பேசாதே,” என்று கண்டத்தொனியுடன் கதறவே, குடிகாரன் பேசாமல் மௌனமாயிருந்தான்.

பண்டிதர் கூறுவார்: இவ்வளவு சிறந்தவர்கள் கூடியிருக்கும் சபையில் நீ மதுபானஞ்செய்து, வாய்க்குவந்தபடி உளறிச் சண்டைக்கு நிற்பது எப்பேர்ப்பட்ட அகந்தை ஆங்காரமென்கலாம்! இதனால் என்பேருக்கு கௌரவக் கேடும், இந்தக் கல்விச்சாலைக்கு அபகீர்த்தியும், இங்கு கூடியிருக்கும் கனவான்களின் மக்களுக்கு நிந்தையும் வருவித்தாய் என்பதற்குச் சந்தேகமில்லை.

அப்போது, அங்கு கூடியிருந்தவர்கள், “ஆம், இந்தக் குடிகாரனால் பிரசித்திபெற்ற நமது குருவும் தந்தையுமான பண்டிதருக்குக் கௌரவக் குறைவு உண்டானபடியால், அதற்குத் தகுந்த பரிகாரம் இவன் செய்வது அவசியம்” என்று சொன்னார்கள். அப்போது கல்யாண சுந்தரம் பவளம்போல சிவந்திருக்கும் தன் கண்களை உருட்டி மூர்க்கத்துடன் சபையை நோக்கி, வாய்க்குள் என்னவோ முணங்கிக் கொண்டு, மௌனமாய் நின்றான்.

அப்போது பண்டிதர் அவனைக் கோபமுகத்துடன் திஷ்டித்து, இவ்வாறு சொல்வார்: நீ யிந்தக் கல்விச்சாலையில் வந்து சேர்ந்து எட்டு மாதங்கள்கூட ஆகாதிருந்தும், இதற்குள்ளாக அநேகந் தப்பிதங்களைச் செய்தாய். வாரத்தில் இரண்டு மூன்று விசையாகிலும் மற்றவர்களுடன் வீண் சண்டைக்கு நின்றிருக்கிறாய். கத்தி, பென்சில், புஸ்தகம் முதலியவைகளைத் திருடியிருக்கிறாய். நீ யிவைகளைத் திருத்திக்கொண்டு சன்மார்க்கனாவாயென்று அந்தத் தப்பிதங்களையெல்லாம் பொறுத்துக்கொண்டேன். கடந்த மாசத்தில் நீ மதுபானஞ் செய்து இந்த வித்தியாலயத்திற்கு வரத் துணிந்ததுடன், குடி வெறி

யால் வாய்க்கு வந்தபடி உளறி, மற்ற வித்தியார்த்திகளைத் திட்டி துற்பாஷை கூறும்போது உன்னை அன்றைக்கே வெளியே தள்ளியிருந்திருந்தால், இந்தத் துன்பங்கள் நேரிட்டு இராது. ஆனால் நீ என்காலில் விழுந்து அழுது, இனி அப்படிச் செய்யமாட்டேன், இனிமேல் அப்படி குடித்து இவ்விடம் வந்தால் உடனே என்னை வித்தியாசாலையிலிருந்து தள்ளி விடுங்கள் என்று சொன்னது உனக்கு ஞாபகந்தானோ? என்றபோது, கல்யாணசுந்தரம் வெட்கிநாணி பேசாமல் தலை குனிந்துகொண்டு நின்றான்.

பண்டிதர் பின்னுஞ் சொல்லுவார்: உன் வார்த்தையே உனக்கு இப்போது தீர்ப்பாயிருக்கக்கடவது. இந்த வித்தியாலயத்தையும் இங்கு கூடியிருக்கும் சிறந்த சபையையும் விட்டு, வெளியே போவது உனக்குத் தகுமேயன்றி இதில் நீ நிற்பது தகாது. மதுபானத்தால் வருங் கேட்டைப்பற்றி உனக்கு ஏற்கெனவே விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறேன். சூடிப்பழக்கம் சுடுகாட்டுப் பெருக்கம் என்பதுபோல குடிக்கப் பழகினவன் அதை விட்டொழிப்பது அசாத்தியம். அவன் சாகுமட்டும் அதை விடமாட்டான். கள் குடியானது பஞ்சமா பாதகத்திலொன்றென்று உங்கள் இந்து சாஸ்திரத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

ஆகையால், கல்யாண சுந்தரம், உன் துற்நடத்தையால் இந்தச் சிறந்த சபைக்கும் ஸ்தலத்திற்கும் அபகீர்த்தி யுண்டாவதிலும் நீ யிதை விட்டுப் போவது நலம். உன் கெட்ட வழக்கத்தை இங்குள்ளவர் பின்பற்றுதபடிக்கு நீ யிதை விட்டு அகலுவது உத்தமம். ஆனது கொண்டு உனக்குக் கல்வி ஊட்டின உபாத்தியாயரையும் உன் தோழரான இச்சபையாரையும், உனக்குத் தாயாயிருந்த இககல்வி சாலையையும் விட்டு வெளியே போ, என்றார்.

கல்யாண சுந்தரம் பேசாமல் நட்டஸ்தம்பம்போல அசையாமல் நின்றான்.

நான் சொல்லுகிறது உன் காதில் விழவில்லையோ, சுந்தரம்பிள்ளை? மரியாதையுடன் வெளியே போ; இல்லையேல், பலவந்தமாய்ப் பிடித்து வெளியே தள்ளப்படுவாய், என்று பண்டிதர் கண்டிப்பாய்ச் சொன்னார்.

இதைக் கேட்ட கலியாணசுந்தரம், தன் பிட்டியையும் புஸ்தகங்களையும் கையில் எடுத்துக்கொண்டு பண்டிதருக்கு வணக்கங் காட்டாமல் முறுக்காய் எழுந்து வித்தியா சாலையின் வாசற்படிபோய்ச் சேரவே, புஸ்தகத்தை விசிறி யெறிந்துவிட்டு வண்டப் பேச்சுகளால் பண்டிதரையும் மாணுக்கரையுந் திட்டி, "உன்னை கொஞ்சத்தில் விட்டேனா பார்?" என்று வெளியே சென்றான். இந்த வார்த்தையைக் கேட்ட மாணுக்கரில் சிலர் அவனை உதைக்கும்படி எழுந்து வெளிப்படும்போது பண்டிதர் அவர்களை நிறுத்தி, குடிகாரன் தெரிந்தோ தெரியாமலோ உளறினதைக் கவனிக்கவேண்டாம் என்றார்.

கல்யாணசுந்தரம் ஊரில் போய் பண்டிதர் பேரிலும் மற்ற மாணுக்கர் பேரிலும் இல்லாத குற்றங்களைக் கூறினபோதிலும், அவனுடைய குண குணங்களை யேற்கெனவே அறிந்திருந்த ஊரார் அவன் வார்த்தைகளை நம்பினவர்கள் அல்லர். ஆகிலும் இந்தக் குடியன் பண்டிதரைப் பழிவாங்க வழி தேடிக் கொண்டிருந்தான்.

(இன்னும் வரும்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.
## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

### தெய்வத்தால் ஸ்தாபிக்கப்பட்ட கத்தோலிக்கு வேதத்தின் லட்சணங்கள் புறமதஸ்தர்களுடன் நடமாட்டம்.

(முன் தொடர்ச்சி.)

1. நமது நாடு இரட்சகரை அங்கிகரியாததற் குண்டான பல காரணங்களுள், கிறிஸ்துவர்களுடைய துர் நடத்தையொன்றென்பதை மறந்து விடுவது ஒழுங்கல்ல. (என்னமோ, சத்தியவேதக்காரராம்! அவர்களென்ன, எங்களைவிட யோக்கியர்களென்று, அக்கியானிகள் கேட்கிறார்கள். கிறிஸ்துவர்கள் நாணங் கொள்ளத் தக்க நல்ல கேள்விதான்.)

2. விசுவசிக்க வேண்டிய சத்தியங்களில் தனக் கேற்றதை நம்பி, ஏற்காததைப்பற்றிச் சந்தேகிப்பது ஒழுங்கல்ல. (புரோட்டெஸ்டாண்டார் இப்படிப்பட்ட பொய்ச் சுதந்தரத்தைக் கையாடித்தான், ஐயோ! பரிதாபம், நூற்றுக் கணக்கான



பிரிவுகளாய்ப் பிரிந்து, ஒன்றற்கொன்று விகற்பமான சத்தியங்களை விசுவசித்தும் விசுவசியாமலும் கடைசியாய் அனைத்தையும் விட்டுவிட்டு, பேருக்கு கிறிஸ்துவர்களென்று சொல்லிக்கொண்டு, அநுசாரத்தில் நாஸ்தீகருக்குச் சமானமா யிருக்கிறார்கள்.)

3. தன் வேதத்தின் மேன்மையை நடத்தையில் காட்டாமல் வாயால் மாத்திரம் பன்னிப்பன்னிப் பேசுவது ஒழுங்கல்ல.

4. தனக்குத் தெரியாத வேத காரியங்களைப்பற்றி புறமதஸ்தர்களிடம் பேசவாய் கொடுப்பது ஒழுங்கல்ல.

5. புறமதஸ்தர்களுக்கு வருத்த முண்டாகுமென் றஞ்சி, தன் வேதக் கொள்கைகளுக்கு விரோதமாய் நடப்பது ஒழுங்கல்ல.

6. எதிலும் எப்போதும் வேதத்தர்க்கம் செய்வது ஒழுங்கல்ல.(இது பதிதபுத்தி.)

7. எல்லாவற்றையும் பார்க்க சர்வேசுரனை ஸ்நேகிக்கிற தென்பதற்குப் பதிலாக, எல்லாவற்றையும் பார்க்க ஜாதியையும் அஞ்ஞான முறைகளையும் ஸ்நேகிப்பதாகத் தன் நடத்தையால் காட்டுவது ஒழுங்கல்ல.

8. நீங்களும் நாங்களும் ஒன்றுதான் என்று அக்கியானிகள் சொன்னால், அவர்கள் முகத்தைமுறிக்கப்பயந்து! "ஆமாம்" என்பது ஒழுங்கல்ல. (என்ன, கிறிஸ்துவும் கிருஷ்ணனும், மரியம்மாளும் மாரியம்மாளும் ஒன்றா? என்ன மதிகெட்ட பேச்சு, மோட்சத்தில் வீற்றிருக்கும் தேவனும், நரகத்தில் வேகும் பேயும் ஒன்றாகுமோ?)

9. புறமதஸ்தர்களுடைய மதவிருத்திக்காகவும், ஆராதனைக்காகவும் தருமம் செய்வது ஒழுஙகல்ல.

10. ஞானஸ்நானம் பெறாத பிள்ளை அக்கியான பிள்ளை யென்பதால், அக்கியான வேதம் முந்தின வேதம் என்றெண்ணுவது ஒழுங்கல்ல.

11. கிறிஸ்து வேதம் பறையர் வேதம் என்று அக்கியானிகள் அக்கிரமமாய்சொல்வதைப்பற்றி அச்சப்படுவது ஒழுங்கல்ல. (கிறிஸ்துவேதத்தைப் பறையன் ஏற்படுத்தவில்லை. இது ஸ்தாபிக்கப்பட்ட மற்ற இடங்களில் பறையர் இல்லை. இந்துவேதம் இருக்கும் இந்நாட்டில்தான் பறையர் யதேஷ்டமாய் விஷ்ணு சிவ மதங்களிலிருக்கிறார்கள். இந்தியாவிலிருக்கும் 6-கோடிபறையர்களுள் கடைசி 1-கோடிகூட கிறிஸ்துவர்களாயில்லையே! ஆகக்கொள்ள எது பறையர் வேதம்? கிறிஸ்து வேதம் உலகத்தின் பொதுவேதம். அது ஐரோப்பியனுக்கும், அமேரிக்கனுக்கும், சீனனுக்கும், சிங்களனுக்கும், பார்ப்பானுக்கும் பறையனுக்கும் பொதுவான வேதம். மேலும் இந்தியாவின் சகல ஜாதியாரும் மேற்குலத்தாரும் கீழ் குலத்தாரும் கிறிஸ்து வேதத்தைக் கைப்பற்றி யிருக்கிறார்கள்.)

12. இந்துக்கள் கலியாணத்திற்குப் போக நேர்ந்தால், தாசி கச்சேரி நேரம் பார்த்து போவது ஒழுங்கல்ல.(தாம்பூலம் கொடுக்கும் நேரத்தில் தாசி கச்சேரி நடப்பதாயிருந்தால், சீக்கிரம் புறப்பட்டு வந்து விடுவது முறை.)

13. கிறிஸ்து வேதம் ஐரோப்பியர் வேதம் என்று நினைப்பது ஒழுங்கல்ல. (கிறிஸ்து வேதம் உலகத்தின் வேதம். இந்தியர்களைப் போலவே அவர்களும் அதைக் கைப்பற்றிக் கொண்டார்கள். சர்வேசுரன் ஒருவரா யிருக்கும்போது, அவருடைய சத்தியம் மாத்திரம் தேசத்திற்கொரு சத்தியமாயிருக்குமோ வென்ன?)

14. கிறிஸ்துவ கலியாணங்களில், சங்கீதத்திற்காகத் தாசிகளைத் தருவிப்பது ஒழுங்கல்ல. (அப்படிப்பட்ட கலியாணங்களில் தேவ சாபமிருக்கும்.)

15. புறமதஸ்தர்களுக்கு மனவருத்தம் வரும்படி, அவர்களுடைய மதக் கொள்கைகளைப்பற்றி அவசரமின்றிப் பேசுவது ஒழுங்கல்ல.

16. புறமதஸ்தர்களுடைய ஆராதனைகளில் எவ்விதத்திலும் கலப்பது ஒழுங்கல்ல.

17. புரொட்டெஸ்டாண்டு கோவில்களில் நடக்கும் கலியாணங்களுக்குப் போவது ஒழுங்கல்ல (மணவீட்டிற்குப் போகலாம். அடக்கத்துக்கு அவர்கள் கல்லறைக்குப் போகலாம்.)

18. புரொட்டெஸ்டாண்டு கோவில்களில் விவாகம்செய்யும் மாப்பிள்ளை பெண்ணுக்கு, கத்தோலிக்கர்கள் தோழன் தோழியாய்ப் போவது ஒழுங்கல்ல.

19. அக்கியானிகளுடைய கலியாணங்களுக்கு முகூர்த்த நேரத்தில் போனால், எவ்விதத்திலும் அவர்களுடைய ஆராதனைகளில் கலந்துகொள்ளுவது ஒழுங்கல்ல.

20. கிறிஸ்துவ கைத்தொழிலாளிகள் அக்கியானிகளுடைய தேர் திருவிழா முதலியவைகளுக்கு கூலிக்கு முதலாய் வேலை செய்வதும், மேள தாளம், நாகசுரம் வாசிப்பதும், தமுக்கு அடிப்பதும், பந்தந் தீவட்டி, கொடி, விருது பிடிக்கிறதும், தேர் இழுக்கிறதும், ஜோடிக்கிறதும், சித்திரம் எழுதுகிறதும், வாணவேடிக்கை செய்கிறதும், பீரங்கி சுடுகிறதும் மற்றும் எவ்வித சாமான்களையாவது இரவலாய் அல்லது வாடகைக்குக் கொடுப்பதும் ஒழுங்கல்ல.

21. புறமதஸ்தர்களிடம் சாப்பிடுகிறவர்கள் அல்லது வேலை செய்கிறவர்கள் கறிக்கு கதிகெட்ட நாயைப்போல், வெள்ளிக்கிழமைகளில் மாமிசம் தின்பது ஒழுங்கல்ல.

22. கிறிஸ்துவர்கள் புறமதஸ்தர்களுடைய குடும்ப சம்பவங்களுக்குப் போனால், அப்போது நடக்கும் ஆராதனைகளில் கலப்பது ஒழுங்கல்ல.

23. அக்கியானிகளுடைய படையல் முதலிய பண்டங்களைப் பிரசாதமாய் எண்ணி அவற்றை வாங்கித்தின்பது ஒழுங்கல்ல.

24. புறமதஸ்தர்களுடன் அதிகமாய்ப் புழங்குவது ஒழுங்கல்ல,

25. இந்துக்களுடைய பூர்வ சாஸ்திரக் கோட்பாடுகளைப்பற்றி இச்சகவார்த்தைகளைப் பேசுவது ஒழுங்கல்ல. (சில ஐரோப்பிய சீமான் சீமாட்டிகள் பேசத் துவக்கிய இப்படிப்பட்ட இச் சகவார்த்தைகளைக் கேட்டுத் தான் இப்போது இந்துக்கள் கிறிஸ்து வேதத்தை அவமதிக்கிறார்கள்.)

26. இந்துக்களுக்கு ராம் ராம் என்று ஆசாரம் சொல்வது ஒழுங்கல்ல.

27. துலுக்கருடைய மொகரம் பண்டிகை காலங்களில் வேடிக்கையாக முதலாய் வேஷம் போடுவதும், பாத்தியா செய்த சர்க்கரையைத் தின்பதும், நாடா தரிப்பதும், ஆலி, தூலா, என்று பஞ்சாவுக்குப் பின்னால் ஓடுவதும் ஒழுங்கல்ல. (நல்ல கிறிஸ்துவர்கள் இப்படிப்பட்ட காரியங்களில் என்றும் பிரவேசிக்கமாட்டார்கள்.)

28. அக்கியானிகளுடைய தேர் திருவிழா முதலியவைகளையும், துலுக்கர்களுடைய மொகரம் முதலியவைகளையும், வேடிக்கையாக முதலாய் வேண்டுமென்று போய்ப் பார்ப்பது ஒழுங்கல்ல.

29. புற மதஸ்தர்களுடைய பண்டிகை நாட்களில், அவர்களுடைய கோவில்கள் அண்டை, கிறிஸ்துவ வியாபாரிகள் கடை ஸ்தாபிப்பது ஒழுங்கல்ல. (ஆனால் தாங்கள் வழக்கமாய் வியாபாரம் செய்யும் கடைகளுக்குப் புறமதஸ்தர்கள் வந்தால், அவர்களுக்கு எதையும் விற்பனை செய்வது பாவமல்ல.)

30. புது வீடு கட்டினால், முதலில் பார்ப்பானைக் கூப்பிட்டு எல்லா சாங்கியமும் நடத்தி, பிறகு குருசுவாமியாரை வீடு மந்திரிக்கக் கூப்பிடுவது ஒழுங்கல்ல.

31. அக்கியான சாங்கியம் செய்வது பாவமா யிருப்பதுபோல், இன்னொருத்தரைக் கொண்டு அதைச் செய்விப்பதும் பாவம் என்பதை மறந்துவிடுவது ஒழுங்கல்ல.

32. அக்கியான பஜனைகளுக்குப் போவதும், அக்கியான, துலுக்க, சிற்றின்ப பாடல்களைப் பாடுவதும் ஒழுங்கல்ல. (சில கிறிஸ்துவர்களுக்கு அக்கியான பாடல்கள் தெரியுமே யொழிய, கிறிஸ்துவ பாடல்கள் ஒன்றுமே தெரியாது. நல்ல இராகமுள்ள கிறிஸ்துவ பாடல்கள் கிடையவே கிடையாதென்று சலஞ்சாதிப்பார்கள். தேம்பாவணிக் கீர்த்தனை, தேவ தோத்திர சங்கீத கீர்த்தனம், கனம் வேதநாயகம் பிள்ளை, சங். சந்தியாகு சுவாமிகள் எழுதிய பாட்டல்களும் இன்னம் பலவுமுள. ஆண்மையற்ற வீரன் ஆயுதத்தின்மேல் குறை சொல்வது போல், தேவ பக்தி யில்லாதவர்கள், சிற்றின்ப நாட்டமுள்ளவர்கள் என்ன சாக்குபோக்கைத்தான் சொல்லமாட்டார்கள்!)

33. வயல்களில் ஏற்றம் இறைக்கிறவர்கள், கட்டிடவேலை செய்பவர்கள், சுமை தூக்கிக்கொண்டு வழி நடக்கிறவர்கள், மற்றும் வருந்தி வேலை செய்பவர்கள், கஷ்ட நிவர்த்திக்காக அசுத்த பாடல்களைப் பாடுவது ஒழுங்கல்ல.

34. கோவிலில் கவுரவக்குறை யுண்டாகுமென்று பூசைக்குப் போகத் தவறுவது ஒழுங்கல்ல. (தாழ்ந்த ஜாதிக்குச் சேர்ந்தவர்களா யிருந்தும் உயர் பதவியடைந்து, மேற் குலத்தாரோடு புழங்கி வரும் உத்தியோகஸ்தர்கள், தாங்கள் நாணங்கொள்ளும் தங்கள் பூர்வீகத்தை ஞாயிற்றுக்கிழமையானால் நாலுபேருக்கு முன் ஒப்புக்கொண்டு, எளியவர்களோடும், தாழ்ந்தவர்களோடும் சமமாய் கோவிலில் உட்காரவேண்டுமேயென்றஞ்சி, கோவிலுக்கே போகாமலிருப்பதும், அப்படியே உயர்ந்த ஜாதியாரும் தங்களுக்கென்று பிரத்தியேகமான இடமில்லாத கோவில்களில் தாழ்ந்தவர்களோடு சேர்ந்து உட்காரவேண்டுமேயென்று நாணி, கோவிலுக்குப் போகாமலிருப்பதும் கிறிஸ்துவ லட்சண மன்று. சுவிசேஷத்தில் சொல்லி யிருக்கிறபடி, தன் குலப் பெருமையையும், ஆசார சீலத்தையும் பெருமை பாராட்டிய பரிசேயனுடைய ஜெபமல்ல, ஆனால் தான் தாழ்ந்தவன் தான்பாவி யென்று ஒப்புக்கொண்ட ஆயக்காரனுடைய ஜெபமே கடவுளுக்குப் பிரியமா யிருந்தது. பொது ஸ்தலங்களிலும், நாடக சாலைகளிலும், ரெயில்வே, கப்பல் பிரயாணத்திலும், அநேகமணி நேரம், சில சமயங்களில் அநேக நாட்கள் வரைக்கும், பல அந்தஸ்தினரோடு முறைப்பாடின்றி புழங்கி வருபவர்கள், கடவுளுக்காக ஒரு அரைமணி நேரம் அவ்விதம் செய்யலாகாதா? அவ்விதம் செய்வது ஒரு தாழ்ச்சி முயற்சியாயு மிருக்கும்.)

35. உத்தியோகஸ்தர்களா யிருப்பவர்கள், தங்களுக்குக் கீழ்ப்பட்ட இந்துக்களுடைய மதக்கொள்கைகளில் பிரவேசிப்பதும், அக்கொள்கைகளை ஏளனம் செய்வதும், அவர்கள் மதாசாரங்களின்படி நடக்க ஒழிவு கொடுக்க மறுப்பதும் ஒழுங்கல்ல. (இவ்விஷயத்தில் ஆங்கிலேய கவர்ன்மெண்டார் எவ்வளவு எச்சரிக்கையா யிருக்கிறார்கள்.)

(இன்னும் வரும்.)



## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். ப—ர்.]

### சங். G. F. பாயிஸ் சுவாமிகள்.

ஐயா, பத்திராதிபரே,

மயிலை, காட்டுக்கோவில் பங்கு சுவாமியாரைக்குறித்து எழுதும் சுருக்கமான இக்கடிதத்தை தங்களது அரிய பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரிக்கத் தயை புரியவேண்டுமெனத் தங்களுடைய மேலான கனத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

சென்னை மாநகரைச்சேர்ந்த திருமயிலாப்பூரில் காட்டுக்கோவில் என்றழைக்கப்படும் அர்ச். ஞானப்ரகாசி மாதாவினாலய மொன்றிருக்கிறது. அக்கோவிலின் பூர்வ சரித்திரத்தையும், மகிமையையும் 1914ஆம் ஜூலை மாசத்திய ''நல்ல ஆயன்'' சஞ்சிகை 165-ம் பக்கத்தில் அச்சிடப்பட் டிருந்ததை ஷை பத்திரிகையின் கையொப்ப அன்பர்கள் வாசித்திருக்கலாம். ஆகையினாலே ஷை தேவாலயத்தைப்பற்றிய அரிய விஷயங்களை மறுபடியும் நான் இங்கு வரைவது அனாவசியம்.

இவ் வாலயத்தின் பங்கு சுவாமியார் கனம் பொருந்திய G. F. பாயிஸ் ஆவர். இவர் சென்ற 35 வருடங்களாக சர்வேசுரனுக்காகவும் திருச்சபைக்காகவும் மகா பொறுப்புடன் பல விசாரணைகளில் உழைத்து, கடைசி 20-வருஷங்களாக ஷை கோவிலின் விசாரணை குருவாயிருந்தார். 1914ஆம் ஜூன்மீ 10உ இவருடைய 72-வது ஜனன மகோற்சவம் வெகு ஆரவார சிறப்பு அலங்காரத்துடன் கொண்டாடப்பட்டது. இவருக்கு அடிக்கடி உண்டான திரேக அசௌக்கியத்தினிமித்தம் இவருடைய சுயாதி

டான கோவைக்கு; இவர் திரும்பிப்போக சர்வேசுரனுக்குத் திருவுளமாயிற்று.

பெற்ற தந்தையிலும் உற்ற தந்தைபோலிருந்து 20 வருடங்களாக தங்கள் ஆத்தும விஷயத்தையும், சரீர விஷயத்தையுங் கண்காணித்து வந்த தங்களுடைய ஞானதந்தை தம்முடைய ஜெனன தேசத்துக்குப் பிரயாணமாவதைக் கேள்வியுற்ற அவ்விசாரணைக் கிறிஸ்தவர்களாகிய எல்லோரும், சிறியோரும், பெரியோரும், புருஷரும், பூவையரும் மகா சஞ்சலத்துக்குள் மூழ்கி, அவர்பேரில் தங்களுக்குள்ள அன்பு, பற்றுதல், அநுதாபம், நன்றியறிதல் இவைகளைக் காட்டும்படி வந்தனோபசார பத்திரங்களும், சில நன்கொடைகளும் அளிக்க ஆயத்தம் செய்தார்கள்.

ஏப்பிரல்மீ 11உ ஞாயிற்றுக்கிழமை ஷை கோவிலில் அர்ச். தோமையார் காலேஜ் சிறுவர்களால் பாண்டு வாத்தியம் தொனிக்க, புஷ்பங்களாலும், புஷ்ப தோரணங்களாலும், இலைகளாலும், அநேக மெழுகு வர்த்திகளாலும் மூன்று பீடங்களும் வெகு நேர்த்தியாய் சிங்காரிக்கப்பட்டிருக்க பெரிய பாட்டுப் பூசை சங்கை இராஜரிஷி டிசல்வா சுவாமியார் அவர்களாற் செய்யப்பட்டு, திவ்ய நற்கருணை ஆசீர்வாதமுங் கொடுக்கப்பட்டது.

சபையோரால் ஏற்கெனவே சங். பாயிஸ் சுவாமிகளுக்கு ஆயத்தஞ் செய்யப்பட்டிருந்த வந்தனோபசார பத்திரம் Mr. J. West என்பவரால் வாசிக்கப்பட்டது. ஜெனரல் போர்மன் Mr. C. V. தோமாஸ் பிள்ளை என்பவர் நேர்த்தியான கண்ணாடி சட்டம் அமைக்கப்பட்டிருந்த வந்தனோபசாரப் பத்திரத்தையும், சங். G. F. பாயஸ் சுவாமியாரின் உருவம் அமைந்துள்ள செப்பு பிளாக்குகள் இரண்டையும் சுவாமிகளுக்கு பரிசாக வளித்தார். அன்றியும் ஷை குருசுவாமிகளுக்குப் பூமாலையுஞ் சூட்டினார். போர்மன் Mr. A. A. எபிராம் கடியார பொன்சங்கிலி அளித்தார். வெகு நேர்த்தியான கண்ணாடி சட்டங்கொண்ட வேறொரு வந்தனோபசார பத்திரம் பூசைபாடகரில் ஒருவராகிய Mr. A. மரியசூசை பிள்ளை என்பவரால் வாசித்தளிக்கப்பட்டது.

கடைசியாக சங்கை குருசுவாமியார் சர்வேசுரனுக்கும், அமலோற்பவ கன்னிகையும் தேவதாயுமாகிய அர்ச். ஞானப்பிரகாசி மாதாவுக்குந் துதிதோத்திரங்களைச் செலுத்தி, கூடியிருந்த சபையாரையும் சிநேகிதர்களையும் நோக்கி, தகப்பனாவன் தன் அருமையான பிள்ளைகளை விட்டுப் பிரியும்போது வசனிக்குமாப்போல, தம்முடைய கடைசி ஞானாமிர்த வசனங்களை மனவுருக்கத்தோடும், உள் அன்போடும் வசனித்து யாவரையும் வாழ்த்தி ஆசீர்வதித்தார். ஏழைகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் தின்பண்டங்களும்; பலகாரங்களும் அளிக்கப்பட்டன.

சங். பாயிஸ் சுவாமிகள் மிக்க பரோபகார சிந்தையுடைய புண்ணியவாளரென்று எண்பிக்க இந்தப் பங்கில் எத்தனையோ ஏழைகளும், கைம்பெண்சாதிகளும் அநாத பிள்ளைகளு மிருக்கிறார்கள். இவர் போர்த்துகல் கவர்ன்மெண்டு சம்பளம் பெற்று வந்த குருவானவராயினும் தம்முடைய தர்ம குணத்தைப்பற்றி தந்தேசத்துக்கு இப்போது வெறும் கையாய் சென்றமீ 19உ திரும்பிப்போக நேரிட்டது. சர்வேசுரன் இந்த நல்ல குருவானவருக்கு நல்ல சுக சௌக்கியத்தைக் கொடுத்துக் கடைசியில் தம்முடைய நித்திய பேரின்ப இராச்சியத்தில் சேர்த்துக் கொண்டு தக்க சம்பாவனையை அளிப்பாராக.

சென்னை,
20—4—1915. C. V. T.

## சல்லாசர் உற்சவக் கொண்டாட்டம்.

சென்னைமா நகரைச்சேர்ந்த திரு மயிலாப்பூரின் கண் அர்ச். நட்சத்திர மாதாவினாலயத்தில் வருஷா வருஷம் சல்லாசர் திருநாள் ஜனவரி மாதம் 24-ம் தேதியில் நடத்துவது வழக்கம். இவ் வருஷமோ ஜனவரிமீ 31-ம் தேதியில் அத்திருவிழா வெகு சிறப்பலங்காரத்தோடு நடந்தேறிற்று. இம் மகோற்சவத்துக் கென்று பல திசைகளினின்றும் கூட்டங் கூட்டமாய்க் கிறிஸ்துவர்கள் மாத்திரமல்ல, எண்ணிறந்த அஞ்ஞானிகளும் புற மதஸ்தரும் தாங்களே திருயாத்திரையாய் வந்து தங்கள் தங்கள் காணிக்கைகளை சல்லாசரின் திருப்பாதத்தில் சமர்ப்பித்து அவரவரும் பெற்றுக் கொண்ட உதவி சகாயங்களின் அளவாக அர்ச்சிய சிஷ்டவரைத் துதித்துக் கொண்டாடுவது எல்லோரும் அறிந்தகாரியம்.

ஆனால் இம் மகத்தான திருவிழாவைக் கறைப்படுத்தக்கூடிய சில குறைவுகளைச் சீர்



திருத்திக்கொள்வார்களேயானால் மெத்த நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன். அவையாவன: ௧-வது: திருவிழாக் காலங்களில் விசேஷமாய்த் திருவிழாவின் திருப் பலிபூசை நேரத்தில் பிச்சைக்காரரும், சிற்றுண்டி, வேடிக்கை விளையாட்டுச் சாமான்கள் விற்பவர்களும் கோவில் கிம்பவுண்டுக்குள் செய்யும் சந்தடி கொஞ்சமல்ல. 2-வது: அந்நேரத்தில் காணிக்கை செலுத்துபவர்கள் கோவிலுக்குள்ளிருக்கும் திரளான ஜனங்களின்மேல் விழுந்து மிதித்துக்கொண்டு போவதினால் பூசை காண்கிறவர்களுக்கும் விசேஷமாய்த் தேவ நற்கருணை வாங்கப் போகிறவர்களுக்கும் அதை வாங்கித் திரும்புகிறவர்களுக்கும் வெகு சங்கடங்களை உண்டு பண்ணுகிறதுமல்லாமல் சற்பிரசாதத்தி லெழுந்தருளியிருக்கும் நமதாண்டவருக்கும் சங்கை யீனம் வருத்துகிறார்கள். 3-வது: பூசை நேரத்திலேயே மிளகு, உப்பு, கடலை முதலியவைகளை ஜனங்கள்பேரில் கோவிலுக்குள் வாரி யிறைப்பதானது எவ்வளவு பராக்குக்கும் சண்டைச் சச்சரவுகளுக்கும் ஏதுவாகிறதென்று சொல்லவும் வேண்டுமா? 4-வது: திருச்சபை சட்டத்துக்கு விரோதமாய்ப் பூசை நேரத்தில், அஞ்ஞான கோவில்களில் நடப்பதுபோல், பேரிகை அடிப்பதும் கொம்பு தாரை யூதுவதும் எவ்வளவு பக்திக் குறைவான செய்கை. தேரெழுந் தேற்றத்தின் போது சிலுவைக்குப் பதிலாக, அஞ்ஞானிகளைக் கண்டு பாவித்து குடையைத் தேரின் உச்சியில் வைத்துக் கட்டுவதானதும் மெத்த விசனிக்கத்தக்கது. கிறிஸ்துவர்களுக்குச் சிலுவையைவிட சிறந்த ஆபரணம் வேறில்லை. ஷை திருநாள் காலத்தில் இக்குறைகளையெல்லாம் தவிர்க்கும்படி சில ஏற்பாடுகள் செய்யப்படுமானால் மிகவும் நலமாயிருக்கும்.

24—2—15. கண்டு விசனித்தோன்.

## பார்க்டவுன்
## அர்ச். அந்தோனியா ராலயம்.

ஐயா,

சென்னை, பார்க்டவுன், அர்ச். அந்தோனியாராலயத்தில் சென்ற தபசுகாலம் மூன்றும் ஞாயிறன்று, சென்னை அதிமேற்றிராணியாராகிய மிகவும் வந்திக்கத்தக்க அருளப்ப ஆலன் அவர்களால் 20 பேர்களுக்கு உறுதிபூசுதலென்னும்



தேவத்திரவிய அநுமானம் அளிக்கப்பட்டது. அன்று அக்கோவிலில் நடந்தேறிய திவ்விய பலிபூசையில் நூறுபேர் வரையில் திவ்விய சற்பிரசாதம் வாங்கினார்கள். இந்தச் சிறிய விசாரணைக் கோவிலில் இதுவரையிலும் அதிமேற்றிராணியார் வந்து உறுதிபூசுதல் கொடுத்ததுமில்லை, இத்தனை பெயர் திவ்ய நன்மை வாங்கினதுமில்லை. ஆகையால் இக்கோவிலைச் சேர்ந்த கிறிஸ்துவர்களுக்குண்டான சந்தோஷமும் அகமகிழ்ச்சியுங் கொஞ்சமல்ல. இந்த விசாரணையில் கிறிஸ்துவர்களுக்கு இவ்வளவு பக்தியுண்டாகவும் இவ்வளவு கொண்டாட்டம் நடத்தப்படவும் முக்கிய காரணாய் முன்னின்று உழைக்கும் பங்கு விசாரணை சங். J. J. ஒபேர் சுவாமியாரவர்களைத் திரியேக சர்வேசுரன் நீடூழிவாழ ஆசீர்வதிப்பாராக. J. A.

## பெரிய தாழை.

ஐயா,

நான் அநேக மாதங்களாக எனது நேர்மானத்தின்படி பெரிய தாழையில் ஸ்தாபித்திலங்கா நிற்கும் அர்ச். லூர்துநாயகியின் திருக்கெபியைச் சந்தித்துப் போவது வழக்கம். அப்படியே நாளது௵ மார்ச்சுமீ முதல் சனிக்கிழமையாகிய 6உ யன்று அக்கெபியைச் சந்திக்கச் சென்றிருந்தேன். நான் இதற்குமுன் ஒருபோதும் பார்த்திராத வண்ணமாய் தேவதாயின் திருக்கெபியானது அடிமுதல் உச்சிவரையில் பல வர்ணக் கொடிகளாலும் பூக்களாலும் சிறப்பிக்கப்பட்டிருந்தது. அத்தாயின் சுரூபம் எண்ணிறந்த அழகிய ரோசாமலர்களால் சூழப்பெற்றிருந்தது. இப்பேர்க்கொத்த சிறப்பலங்கார சோடினைகளை ஒருபோதும் பார்த்திராத நானும் என்னைப்போல் ஒத்த வேறனேகரும் மெய்யாகவே யொரு காட்சி கண்டதுபோல் பிரமைகொண்டு ஆனந்தங் கொள்ளலாயிற்று. அத்திருக் கெபியில் தக்கதோர் பலி பீடமும் அமைக்கப்பெற்றிருந்தது.

காலை 7-மணி அளவில் ஷை யூர் கோவிலிலிருந்து சகல கிறிஸ்துவர்களும், கன்னியரும், அம்மடத்துச் சிறுமிகளும் வரிசை வரிசையாய் வெகு பக்தி வினயத்துடன் சங்கீத வாத்தியப் பாடலோடு தேவதாயின் கெபிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். கெபியில் சேர்ந்ததும் சங். தருமநாத சுவாமிகளால் "மாக்னிபிக்காத்" என்ற

பாடல் ஆரம்பிக்கப்படவே, திடீரென மலைச் சுனையினின்று தண்ணீர் மளமளவென்று பொங்கி நாலண்டையும் ஓட ஆரம்பித்தது. பாடல் முடிந்ததும் எமது கனம் தர்மநாத சுவாமிகளால் "பாவிகளுக்கு அடைக்கலமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்ற வசனத்தைப்பற்றி வெகு உருக்கமான பிரசங்கஞ் செய்யப்பட்டது. கடைசியாய்த் தமது தாயாரின் பக்தியுள்ள தாசரை அன்புடன் ஆசீர்வதிக்கும்வாறு திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் அங்கு கூடிய சகலருக்கும் அளிக்கப்பட்டது. இது முடியவும் "கனவோ, நினைவோ" என்ற வோர் தமிழ்ப் பாடலும் ஓர் ஆசரிய விருத்தமும் வெகு இன்னிசை அலங்காரத்துடன் பாடப்பட்டன. மறுநாள் காலை 4½ மணிக்குத் திருக்கெபியில் முதல் பூசை நடந்தேறியது. இப்பூசையில் வெகுபேர் சற்பிரசாதம் அருந்தினார்கள்: அதற்குப்பின் கோவிலில் வேறொரு பூசையும் நடந்தது. இத்திருநாளை எந்நாளும் அவரவர் ஞாபகத்தில் பதிப்பிக்கும் சின்னமாகப் புகைப்பட மொன்று எடுக்கப்பட்டது.

தேவதாயும் அவளுடைய திருக்குமாரனும் தப்பாமல் எல்லோரையும் பூரண பிரியத்தோடு ஆசீர்வதித்திருப்பார்க ளென்பதற் கையமில்லை.

தேவதாயாருக்கு மகிமையும் ஸ்தோத்திரமும் எந்நாளுமுண்டாகக்கடவது.

மரியாயின் மைந்தன்.

---

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாச்சாரம்

---

நல்ல நெய்.—கெட்டிருக்கும் நெய்யைச் சட்டியில் காய்ச்சி அதில் கொஞ்சம் பாலும் உப்பும்போட அழுக்கெல்லாம் அடியில் படியும். நீர் சுண்டும் சமயத்தில் சில கிராம்பும் எலுமிச்சை இலையும் போட்டு இறக்கிக் கொள்ள கெட்ட நெய் நல்லதாகுமாம்.

நில வேம்பு.—இதைக் கஷாயம் போட்டு சாப்பிட்டால் சகலவித பித்தம், ஊதுகாமாலை, மஞ்சட் காமாலை முதலிய ஈரலைப் பற்றிய வியாதிகளும் சகலவித காய்ச்சல்களும் குணமாகுமென்றும், நல்லபசி தீபனம் உண்டாகுமென்றும் வைத்திய சாஸ்திரஞ் சொல்லுகிறது.

உனக்கு நியாயாதிபதி உன் மனசாட்சி, உலகமல்ல.—உன்னைப்பற்றி உலகம் என்ன நினைக்கிறது அல்லது என்ன சொல்லுகிறது என்று நீ கவலைப்படாதே. உலகமானது சரியாய் உன் நடவடிக்கைகளை நிதானிக்கும் நியாயாதிபதியல்ல. உன் மனசாட்சியே உலகத்தைப் பார்க்கிலும் உனக்கு அதிக உண்மையும் அதிக நீதியுமுள்ள நியாயாதிபதியாகும்.

போர்த்துகாலுக்குப் பிரயாணம்.—வந்திக்கத்தக்க மயிலை மேற்றிராணியாரவர்களின் காரிய தரிசியாகிய மிகவுஞ் சங்கைக்குரிய C. S. பிரகோசோ குருப்பிரசாதி அவர்கள் தமது திரேக சௌக்கியத்தை முன்னிட்டுச் சில தினங்களுக்குள் தமது சொந்தநாடாகிய பொர்த்துகாலுக்குப் புறப்படப் போகிறார். இந் நல்ல குருவானவர் சுகசீவியாய்ச் சீக்கிரம் நம் நாட்டுக்குத் திரும்பிவர நமது நல்லாயன் கிருபை புரிவராக.

ஒரு விசேஷித்த உத்தரவு — யுத்த முனையில் சண்டை போடுகிறவர்கள் சுத்த உபவாசமாயிராமல் அவஸ்தை நன்மை வாங்குகிறவர்களைப்போல் நன்மை வாங்கலாமென்றும், இதுபோலவே காயம்பட்டவர்களை விசாரிக்கிற குருக்களும் தகுதியான இடங்களில் அல்லது மைதானங்களில் பூசை செய்யலா மென்றும், இப்படியே யுத்தஞ் செய்கிற குருக்களும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் பெரிய திருநாட்களிலும் சுத்த உபவாசமாயிராமல் பூசை செய்யலா மென்றும் நம்முடைய பிதாவாகிய 15-ம் ஆசீர்வாதப்பர் உத்தரவளித்திருக்கிறார்.

பிள்ளையால் சமாதானமான பெற்றோர்.—ஒரு ஊரிலே ஒரு புருஷனுக்கும் பெண்சாதிக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இக்குழந்தைக்குப் பெயரிடுங் காலத்தில் இவ் விருவருக்கும் யாருடைய பெயரை வைக்கிறதென்பதைப்பற்றி தர்க்கம் உண்டாகிவிட்டது. இந்தத் தர்க்கத்தில் கணவன் தன் மனைவியை விட்டுப் பிரிந்துபோய்விட்டான். 20 வருஷங்களுக்குப் பிறகு பிள்ளை பெரியவனானதும் அவனாலேயே அவர்களிருவரும் சமாதானப்பட்டு வாழ்ந்து வந்தார்களாம். பெற்றோர் பிள்ளைகளுக்குப் புத்தி சொல்லவேண்டியிருக்க, பிள்ளைகள் பெற்றோருக்குச் சொல்வதும் பெற்றோருக்கு அழகா?

நமது அரசரும் ஒரு குருவானவரும், கன்னியாஸ்திரியும்.—யுத்தத்தில் மண்டை உடைந்து போர்க்களத்தில் சாகக்கிடந்த ஓர் ஆங்கில தளக்கர்த்தரை அன்புடன் எடுத்து வேண்டிய பக்குவங்களைச்செய்து சொஸ்தப்படுத்தி உயிரைக் காப்பாற்றின ஓர் பிரான்சுக் குருவானவருக்கும் கன்னியாஸ்திரி அம்மாளுக்கும் நமது ஜார்ஜ் அரசர் வந்தனஞ் சொல்லி ஓர் பெரிய மகிமைப்பட்டம் அளித்திருக்கிறாராம்.

பூனைக் கறியையுந் தின்கிறார்களோ?-இட்டலி தேசத்தின் வடபாகத்திலுள்ளவர்கள் பூனைக்கறியைப் பிரியமாய்த் தின்கிறார்களாம். பூனைக்கறி தின்பவர்கள் வம்சம் ஏறக்குறைய 100 வருஷத்துக்குள் செல்வமும் சிறப்புப் பேரும் பெருமையும் பெற்று வாழுமென்பது அவர்களின் நம்பிக்கை. நந் தேசத்திலோ குறவரைப் போன்ற சில ஜாதியார் அக்கறியைச் சாப்பிடுகிறார்களாயினும், அவர்கள் மேம்பாடடையக் காணோம். மற்ற ஜாதியாரோ பூனையைக் கொன்ற தோஷம் போகவே மாட்டாது என்கிறார்கள். இவர்கள், கொன்றால் பாவம் தின்றால் போச்சு என்பதை அறியார்கள்போலும்!

ரங்கூனில் பிரசண்ட மாருதம் — கடந்த மீ 23உ வெள்ளிக்கிழமை 11-மணிக்குமேல் 12-மணிக்குள்ளாக ரங்கூனில் மின்னல் பளிச் பளிச் என்று வீச, இடி முழங்க, மழை பொழிய பிரசண்ட மாருதம் பலமாயடித்தது. ரங்கூன் கண்டோன்மெண்டில் மரங்களின் கிளைகள் பல முறிந்து விழுந்துவிட்டன. லூயிஸ் தெருவிலுள்ள மூன்றடுக்கு மெத்தை வீடொன்றில் இடி விழுந்து ஏதோ சிற்சில சேதங்கள் செய்துவிட்டதாகத் தெரியவருகிறது. இரண்டு குழந்தைகள் பிழைத்தது தெய்வாதீனமாம். ஒரு வீட்டுக்கூரையில் 15-அடி நீளம் 10-அடி அகலத்திற்கு ஒரு பெரிய தொண்டி விழுந்து விட்டதாகவுந் தெரிகிறது.

நமது அரசியும் பிரான்சீஸ்கு சபைக் கன்னியாஸ்திரியும்.—போரில் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சைசெய்யும் ஆங்கில மருத்துவ சபைக்கு நமது அலெக்சாந்திரா இராக்கினிதான் அக்கிராசனம் வகிக்கிறவர். பிரான்சின் வடபாகத்தில் பிராஞ்சீஸ்கு சபைக் கன்னியாஸ்திரிகள் பல ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு வரப்படும் காயப்பட்ட சிப்பாய்களை வெகு சிரத்தையுடனும் அன்புடனும் பராமரித்து அவர்களுடைய சௌகரியத்துக்காக ரொம்பவும் உழைத்து வருகிறார்களென்கிற சங்கதியை ஒரு ஆங்கில டாக்டர் மூலமாய் நமது அரசி கேள்வியுற்று, அந்தக் கன்னியாஸ்திரிமார்கள் மட்டில் தாம் கொண்ட விசேஷ அபிமானத்தைக் காட்டும் பொருட்டு அச்சபை அதிசிரேஷ்ட முதலாளி அம்மாளுக்குத் தமது கையால் ஒரு கடிதம் எழுதி வாழ்த்தி யிருக்கிறார்களாம்.

கத்தோலிக்கர் தொகை.—இங்கிலாந்திலுள்ள கத்தோலிக்கரின் கணக்குப் புத்தகம் வெளிப்படுத்தப்பட்டது. அதின்படி இங்கிலாந்திலும் உவேல்சிலுமுள்ள கத்தோலிக்கர் 18,91,006 பேர்; அயர்லாந்தில் 32,42,670 பேர்; ஸ்காத்திலாந்தில் 5,18,969 பேர்; இங்கிலீஷ் இராச்சியமெங்குமுள்ள கத்தோலிக்கர் 1,32,25,234 பேர். உலக மடங்கலுமுள்ள கத்தோலிக்கரின் தொகை 30,11,72,712 பேர். சென்ற வருடத்திலே இங்கிலாந்திலே ஆயிரக் கணக்கான புரோட்டெஸ்டாண்டார் மனந் திரும்பிச் சத்திய திருச்சபையிலே சேர்ந்தார்கள்.

சிரிப்பும் சௌக்கியத்திற்கு உதவுகிறது.—பிரிஸ்டல் நகரத்திலுள்ள தென்மீட் ராணுவ ஆசுபத்திரியில் காயமுண்ட போர் வீரர்களுக்கு முன்னிலையில் ஒரு பாரிஸ்டர் மிகவும் தமாஷாவாகவும் ஹாஸ்யமாகவும் ஏதோ ஒரு விஷயத்தைக் குறித்துப் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தார். அதைச் செவிசாய்த்துக் கேட்ட போர்வீரர்களெல்லோரும் குலுங்கக்குலுங்க நகைத்தார்கள். அப்போது அப்போர்வீரர் கூட்டத்தில் ரணக்களத்திலிருந்து ஊமையும் செவிடுமாகி வந்திருந்த ஒரு சோல்ஜருமிருந்தான். அவன் திடீரென்று தன் நண்பர்களான மற்றையோர் சிரிப்பதைப் பார்த்துத் தானும் விலாபுடைக்கச் சிரித்தது

தான் தாமதம், உடனே அவனுக்கிருந்த ஊமைத்தனமும் செவிட்டுத்தனமும் பறந்து விட்டனவாம். ஆகவே சிரித்தலும் இயற்கை யமைப்பிலேற்பட்ட ஒ ரௌஷதச் சிகிச்சாக்கிரமம் போலும்!

நிகழும் யுத்தத்தின் துப்பாக்கிகள்.—இவைகள் சாதாரணமாக இரண்டாயிரத்து அஞ்ஞூறு கஜம், அதாவது ஏறக்குறைய 4-மைல் தூரம் ரவைக் குண்டுகளை எறியும். பிரிட்டிஷ் பட்டாளம் உபயோகிப்பது லீஎன்பீல்ட் துப்பாக்கி. அதன் நிறை எட்டரை இராத்தல். ஜெர்மானியரின் மாஸர் துப்பாக்கி ஒன்பது இராத்தல் பளுவுடையது. பிரான்சியர் லேபல் துப்பாக்கி உபயோகிக்கின்றனர். நிறை ஒன்பதே கால். ருஷியர் நாகண்டு துப்பாக்கி உபயோகிக்கின்றனர். ஒன்பது இராத்தல் பாரமுடையது. ஆஸ்திரியர் மான்லிக் துப்பாக்கியை கையாடுகின்றனர். நிறை எட்டேகால் இராத்தல். இத்துப்பாக்கிகளில் பயனெட் என்னும் ஈட்டி வைக்கப்பட்டிருக்கும். நெருங்கி எதிரிகளைத் தாக்கும்போது இவ்வீட்டியை உபயோகிப்பார்கள்.

வெடி குண்டுகள்.—இவைகள் பல வகைப்படும். ஷார்ப்நெல் குண்டே சாதாரணமானது. இதைக் கண்டுபிடித்தது ஷார்ப்நெல் என்னும் ஓர் ஆங்கிலேயத் தளகர்த்தர். இவை பீரங்கிகளினின்று எறியப்பட்டு, எதிரிகளினண்டை சேர்ந்து வெடிப்பதால், அவற்றினின்று ரவைகள் துப்பாக்கியினின்று பாய்வதுபோல் பாய்ந்து படைகளைத் தாக்கும். பிரான்சியர் கண்டுபிடித்த ஓர் வெடிகுண்டின் வாயுவை சுவாசித்தால், காயம் ஒன்றுமின்றி தூங்குவதுபோல் மரித்துப் போவார்களாம். டம்டம் குண்டுகள், இந்தியாவிலுள்ள டம்டம் ஸ்தலத்தில் முதல்முதல் செய்யப்பட்டன. இவை தேகத்திற்குள் சேர்ந்து வெடிப்பதால் சரீரத்தைக் கோரை கோரையாகக் கிறிவிடும். ஆதலின் இவற்றை யுத்தத்தில் உபயோகிக்கக்கூடாதென்பது ஜெனிவா நிபந்தனை.

மூன்று தம்மடிக்கு மூன்றுமாத தண்டனை.—எழும்பூரில் ஒரு ரோட்டில் மாட்டு வண்டி ஓட்டிக்கொண்டு போன ஒரு வண்டிக்காரனைப் பார்த்து அவனுடைய வண்டியை நிறுத்தும்படியாக நாதமுனி என்கிற கான்ஸ்டேபில் சொல்லி, அவன் தனக்கு ஏதேனும் இலஞ்சம் கொடுத்தாலொழிய அவன் ரோட்டின் பிசகான பக்கத்தில் வண்டியை ஓட்டினதாக சார்ஜ் செய்வதாக அவனைப் பயமுறுத்தினான். வண்டிக்காரன் தன்னிடம் மூன்று தம்மடிதானிருக்கிறதென்று சொன்னதற்கு போலீஸ் கான்ஸ்டேபிள் அதைப்பெற்றுக் கொண்டு போய்விட்டான். வண்டிக்காரன் வண்டியை விட்டுக்கொண்டு அடுத்த போலீஸ்டேஷனுக்குச் சென்று இந்த சமாசாரத்தை ரிப்போர்ட்டு செய்ய, இதிலிருந்து நாதமுனி என்கிற போலீஸ் கான்ஸ்டேபில் பேரில் இம்சித்து லஞ்சம் வாங்கிய குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டு, மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான். நாதமுனியைப்போல இன்னும் எத்தனையோ கான்ஸ்டேபில்கள் நாடோறும் ஜனங்களைக் கொள்ளையடித்து வருகிறார்கள்!!

என்னே நாய்க்குள்ள அறிவு'—ஒரு ஊரில் இடையன் ஒருவன் தன் ஆடுகளை ஓட்டிக்கொண்டுபோய் அவைகளைக் காட்டில் மேய்த்துக்கொண்டிருக்கையில், ஒரு பாறையின்மேல் தவறி விழுந்தான். அதனால் அவனுக்கு அதிக நோயுண்டாகி, எழுந்து நடக்க முடியாமற் போயிற்று. உடனே அவன் தன்னுடைய அரைச் சட்டையைக் கழற்றி தன்னுடன் ஆடுகளுக்குக் காவலாயிருந்த தன் நாயின் கழுத்தில் கட்டிவிட்டு, வீட்டுக்குச் செல்லும்படி சொன்னான். அது வீட்டுக்குச் சென்ற மாத்திரத்தில் வீட்டிலிருந்தவர்கள் அதன் கழுத்திலிருந்த சொக்காயைத் தங்களுடைய பிள்ளையினுடையதென்று கண்டுபிடித்து அவனுக்கு ஏதோ அபாயம் நேரிட்டிருக்கவேண்டுமென்று அறிந்துகொண்டு, உடனே அவனைத் தேடப் புறப்பட்டார்கள். புறப்படவே, அந்த நாய் அவர்களுக்கு வழி காட்டிக்கொண்டு முன்னே போக, அதை அவர்கள் பின்சென்று போய் தங்கள் குமாரன் கீழே கிடப்பதைக் கண்டுபிடித்து, அநுதாபப்பட்டுத் தங்கள் வீட்டுக்குத் தூக்கிக்கொண்டுவந்து பலவிதமான சிகிச்சோபசாரங்கள் செய்தார்கள். தன் எசமான் மட்டில் நாய்க்குள்ள விசுவாசம் தங்கள் எசமானன சர்வேசுரன் மட்டில் மனிதருக்கில்லாமற்போவது மிக்க விசனிக்கத்தக்கது !!



ஈக்கள்.—ஒரு ஈயின் ஜீவிய காலம் 5 வாரங்களேயாம். இந்தச் சொற்பக் காலத்துக்குள் அவைகளுக்கு எத்தனையோ பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள். அப்பாலும் மூன்று அல்லது நான்கு தலை முறைகளும் உண்டாகின்றன. ஒரே சமயத்தில் ஒரு தாய் ஈ 100 முதல் 150 முட்டைகள் வரையிலும் சாணிக்குவியல் அல்லது குப்பைக் குவியலில் இடுகிறது. ஒரு வெயில் காலம் முடிகிறதற்குள்ளாக 20 லட்சம் முதல் 30 லட்சம் வரையில் சந்ததிகள் உண்டாகின்றன. ஒவ்வொரு ஈயின் சரீரத்திலும் வியாதிகளை உண்டுபண்ணக்கூடிய வெகு சிறிய பாக்டீரியாக்கள் (ஜீவராசிகள் என்னும் கிருமிகள்) 60 லட்சமுதல் 70 லட்சம் வரையில் குடிகொள்ளும். ஈக்கள் பறந்து உணவிலும் பானத்திலும் ஒரு விநாடி தங்கினால் எத்தனையோ ஆயிரக்கணக்கான வியாதிகளை உண்டுபண்ணும் கிருமிகளைப் பரப்புகின்றன. ஆதலால், மனிதன் சத்துரு ஈக்கள். அவைகளே வியாதிகளைப் பரவச் செய்கின்றன. அவைகள் மொய்க்கும்படி நாம் வசிக்கும் வீடுகளிலும், வீட்டு அக்கம்பக்கங்களிலும் அழுகிய வஸ்துக்கள் கிடக்காதபடிக்கும், நீர் தங்கும் பள்ளங்கள் ஏற்படாதபடிக்கும் ஜாக்கிரதை யெடுத்துக் கொள்ளவேண்டியது. எத்தனையோ பெயர் தங்கள் வீடு வாசல்களை ஈ மொய்க்கும்படி சுத்தமில்லாமல் வைத்துக் கொள்ளுகிறார்கள் !!

போரும் ஒரு மேலான ஞானபோதகம்.—இது நம்புவதற்கு அசாதியமென்றாலும் இது உண்மையே. பிரான்சில் முகதாட்சணியம் காற்றாய்ப் பறந்துவிட்டது. சனங்கள் இப்பொழுது பத்தியுருக்கமுள்ளவர்களாகிவிட்டார்கள். தெருக்களில் முதலாய் கூசாமல் பாவ சங்கீர்த்தனம் பண்ணுகிறார்கள். திவ்வியபூசை காண்கிறார்கள். சங்கீதங்கள் பாடுகிறார்கள். செபமாலை செபிக்கிறார்கள். எல்லோரும் உத்தரியங்களைக் கழுத்தில் அல்லது சட்டைப் பைகளில் அல்லது தொப்பியிலும் வெளிச் சட்டையிலும் பகிரங்கமாய் தரித்துக்கொள்ளுகிறார்களென ஒரு குரு சுவாமியார் சொல்லுகிறார். இப்படியே ஜெருமனியிலும் இந்த யுத்தத்தை முன்னிட்டு பக்தி முயற்சிகள் விசேஷமாய்ச் செய்யப்பட்டு வருகின்றன. அனுதினமும் அநேகர் திவ்விய நன்மை வாங்குகிறார்கள். மாலைதோறும் திரளானபேர் ஜெபமாலை ஜெபிக்க கோவில்களில் வந்து கூடுகிறார்கள். இரவில் பாதைகளில் அங்கங்கேயுள்ள பாடுபட்ட சுரூபங்களைச் சுற்றிலும் புஷ்பங்களைச் சாற்றி மெழுகு வர்த்திகளையும் கொளுத்திவைக்கிறார்கள். சர்வேசுரனை மறந்துபோக எத்தனமாயிருந்த இக்காலத்தில் அவரை நினைக்கவும் அவருடைய உதவியைக் கேட்கவும் ஆயிற்று. இப்படியே ஜெர்மானிய இராசாங்கத்தாரும் சத்திய திருச்சபையைச் சங்கித்து அர்ச். பாப்பானவரின் வேண்டுகோளுக் கிணங்கி யுத்தத்தில் சிறைப்பட்ட குருக்களை தளகர்த்தருக்குரிய மரியாதையுடன் விசாரிக்க உடன்பட்டிருக்கிறார்கள். சத்தியவேதத்தின் சத்துருக்களான நாஸ்திகர் எல்லோரும் சர்வேசுரனை விசுவசித்து அவருக்கு ஊழியஞ் செய்யும்படிச் செய்ய நிகழும் யுத்தம் ஒரு முக்கிய காரணமென்பதற்கையமில்லை.

ஆகாய விமானங்கள்.—இவை இரு வகைபபடும். செப்பிலின் என்பது ஜலவாயுவால் மிதந்து, மோட்டாரால் வழி நடத்தப்படும். இவற்றில் ஐம்பது ஆட்கள் இருந்து சிறுபீரங்கிகளை உபயோகிப்பார். இவை ஜெர்மானியருக்குரியது. ஏரோபிளேன் மோட்டாரால் சிறகடித்துப் பறக்கும். இவைகளினின்று குண்டுகள் விடப்படும். பிரான்சியர் பாரமான அம்புகளை எறிவார். ஜெர்மானியர் குண்டுகளைச் சாதாரணமாய் பெண்கள் பிள்ளைகள் மேலிடுவார். ஆங்கிலேயர், பிரான்சியரோ, யுத்தஸ்தாபனங்களில் எறிவார். கடல் பாப்பில் ஓடும் ஓர் வாகனமும் உண்டு. இப்போராயுதங்களைத் தியானிக்குங்கால் யுத்தத்தின் பயங்கரம் ஒருவாறு விளங்கும்

மழை.—இரண்டு தினங்களுக்கு முந்தி சென்னையில் பெய்த ஒரு நல்ல மழையானது நாளுக்கு நாள் அதிகரித்துவந்த வெயிலின் தீட்சண்யத்தைக் குறைத்து விட்டது.

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.
## DOMESTIC OCCURRENCES.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய். முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக் குட்பட்டால் 1—8—0 ரூபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ரூபாயாகும். அரை ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா. ப.-ர்.

### நன்மரண அறிக்கை.

#### பெங்களூர்.

என்து அருமை தகப்பனார் மைசூர் சமஸ்தான சீப் கோர்ட்டு ரிடயர்ட் கிளர்கு, ம-ா-ா-ஸ்ரீ, வி. பி. துரைசாமி பிள்ளை யவர்கள் சென்ற ஆறுமாதகாலமாய்க் காயலாக இருந்து இம்மாதம் 4உ ஞாயிறு வாரம் விடியற்காலமே 3-மணிக்குக் கர்த்தர் உயிர்த்து எழுந்தருளின திருநாளன்று பரலோக பிராப்தியடைந்தார். அன்று சாயந்திரம் 4-மணிக்கு அர்ச். சூசையப்பர் தேவாலய விசாரணைக் கல்லறையில் பந்து ஜனங்களெல்லோரும் புடைசூழ பாண்டு வாத்தியத்துடன் சடலம் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இவர் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக் கொள்ளும்படி பிரார்த்திக்கிறேன். இப்படிக்கு

பெங்களூர். 16—4—1915. } V. D. SWAMY PILLAI, 3rd lane, Cubbunpett, *Bangalore, City.*

---

#### தஞ்சாவூர்

தஞ்சைமா நகர் பூவையிலும் பின் மைலாப்பூர், பறங்கிமலை முதலிய ஸ்தலங்களிலும் என்னோடு 47-வருஷம் வாழ்ந்திருந்த ஆரோக்கியமரியென்ற எனது பாரியாள் சென்ற இரண்டு மூன்று மாதங்களாய்க் கடும் நோயுற்று, எவ்விதப் பரிகாரத்தாலும் அந்நோயானது கொஞ்சமுந் தணியாததால் எங்கள் முழு நம்பிக்கையையும் அர்ச். சூசையப்பர் பேரில் வைத்து அவருக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட மாதமாகிற மார்ச்சு மாதத்தை முழுதும் விசேஷ பக்தி விநயத்துடன் கொண்டாடி வந்ததுமல்லாமல், அம்மாதக் கடைசி 9-நாளிலும் நவநாள் ஜெபம் ஜெபித்து வந்தோம். எங்கள் மன்றாட்டுப்படிக்கு இவ்வுலக சீவியத்தை அவளுக்குக் கொடுக்க அர்ச். சூசையப்பருக்குத் திருவுள மில்லாவிட்டாலும், அப்புண்ணிய சிரோன்மணிக்கு அதிகமான பேருபகாரஞ் செய்யச் சித்தங்கொண்டு மறுநாள் பெரிய வியாழனன்று எல்லோரும் சற்பிரசாத நாதரை யிம் மண்ணுலகில் சந்தித்துப் போற்றும்படி தேவாலயத்துக்குப் போயிருந்த சமயத்தில், இந்த அர்ச்சியசிஷ்ட சூசையப்பர் தமது விசேஷ கிருபையால், தமது அடைக்கல ஆதரவைத் தேடியிருந்த இப்புண்ணிய பூவைக்கு நன்மரணத்தைக் கொடுத்து, தனது சிருஷ்டிகரான சேசுநாதரை விண்ணுலகில் முகமுகமே தரிசித்துப் போற்றி எந்நாளும் துதிசெலுத்தும் பாக்கியத்தைப் பெறக் கிருபை செய்தருளினார். அன்று மாலை 6-மணிக்கு நல்லடக்கமாயிற்று.

இதைக் கண்ணுறும் எனது நேயர்களே! இவள் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mr. அடைக்கலம் பிள்ளை.

#### இரங்கூன்.

இரங்கூன் போர்டாபீசில் எட்கிளர்க்காய் அலுவல் பார்த்த Mr. F. A. Xavier என்பவர் சென்ற நாலைந்து மாதங்களாகக் கடின வியாதியாயிருந்து பற்பல வைத்தியங்களாலும் பரிகரிக்க முடியாமல் போனதால் ஞான வைத்தியராகிற அர்ச். சூசையப்பரின் ஆதரவைத் தேடி தனக்கு சுகந்தர மன்றாடினார். அதுபோல் மார்ச்சு மாதம் 19-ம் தேதி அர்ச். சூசையப்பர் திருநாளன்று அவருடைய நோய் தணிந்து சுகப்பட்டு வந்தார். ஆயினும் தமது பக்தனுக்கு அதிகமான பேறு பலன்களை யளிக்க அர்ச். சூசையப்பர் சித்தங்கொண்டமையால், அவருக்கிருந்த நோயதிகரித்துச் சென்ற ஏப்ரல் மாதம் 18-ம் தேதி கடைசி தேவத்திரவியானுமானங்களை யெல்லாங் குறைவறப்பெற்று அர்ச். சூசையப்பரினுதவியால் நல்ல மரணத்தை யடைந்து, திருச்சபை யாசாரப்படி நல்லடக்கஞ் செய்யப்பட்டார்.

இதைக் கண்ணுறும் நமது நேசர்கள் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக 1-பர., 1-பிரி., 1-திரி., வேண்டிக்கொள்ளக் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்படிக்கு

அ. வே. அந்தோனி உபதேசியார்.

---

†

## நன்மரண அறிக்கை.

### ஸ்ரீமதி: மரியபிதேலி அம்மாள் பர்னாந்து

என்னும் பெண்மணி; சிந்துதேச அப்போஸ்தலரான அர்ச்சியசிஷ்ட சவேரியார், வேதாளையில் வேதசாக்ஷியான சங்கைக்குரிய அந்தோனி கிரிமினாலிசுவாமிகள், ஓரியூரில் வேதசாக்ஷியான சங்கைக்குரிய அருளானந்த சுவாமிகள், இலங்கைத் தீவில் வேதசாக்ஷியான சங்கைகுரிய யோசேவாஸ் முனீந்திரர், தத்துவ போதகரான சங்கைகுரிய ராபர்ட் தெ. நோபிலிஸ் சுவாமிகள், சங்கைகுரிய வீரமாமுனி சுவாமிகள் முதலான பல பெரிய மஹாத்மாக்களின் திருவடிச் சுவடுகளாற் புனிதமாக்கப்பெற்று, முத்துக்குளித்துறையின் பிரதான நகரமாய் விளங்கும் திருமந்திர நகரமென்னும் தூத்துக்குடியின்கண்: பூர்வீக மேம்பாடு பெற்றுயர்ந்த பௌரவ குலத்தின் கௌரவ புருஷோத்தமனாகிய ஸ்ரீமான்: மனுவேல் சவியெர் பர்னாந்து அவர்களுக்கு; அவர் பத்தினியாகிய ஸ்ரீமதி: மரிய மிக்கேல் அம்மாள் பல்தான் என்னும் மாதினிடமாய் சென்ற 1875-ம் வருஷம் மார்ச்சு மீ 28உ ஆதிவாரம் கர்த்தர் உயிர்த்தெழுந்த திருவிழாவன்று ஜெனனமாகி, திருச்சபை ஆசாரப்படி பிறந்த எட்டாம் நாள் சகல சற்குணங்களு மொருங்கே வாய்ந்த ஸ்ரீமான்: கஸ்பார் எட்வார்ட்ஸ் அவர்களும், தூத்துக்குடியில் இருபத்தைந்து வருஷமளவாய் அர்ச்சியசிஷ்ட வியாகுலமாதா சபை கன்னியர் மடத்தின்கண் சிரேஷ்ட தாயாராக விருந்து, தற்போது களைப்புற்று புன்னைக்காயலில் கன்னியர் மடத்தில் வாசம்செய்யும் சங்கைகுரிய வியாகுலமரி தாயார் அவர்களும் ஞானபிதா மாதாவாக நிற்க, சேசு சபை குருவாகிய பத்தியநாத சுவாமிகளால் திருஞானஸ்நானம் பெற்று, பெற்றோர் மனம் மகிழும்படி வளர்ந்து, உலகுபுகழ் கலை பல தேர்ந்து, மங்கை பருவத்தை நீத்து, மடந்தை பருவத்தை யடைந்து, தென்னவர் குலத்தின் திலகனாய் விளங்கிய ஸ்ரீமான்: மிக்கேல் முராயிஸ் அவர்களின் கனிஷ்ட மைந்தனாகிய ஸ்ரீமான்: சின்னதம்பி முராயிஸ் அவர்களை மணம் புரிந்து, சூசை அலோசியுஸ் முராயிஸ் என்னுமோர் சற்புத்திரனைப் பயின்று தெய்வ பக்தியாலும் குலாபிமான தர்மத்தாலும் சிறந்து விளங்கா நிற்கும், நங்கையர் யாவரும் மங்கையர்க்கரசி யிவளே யெனப் புகழ்ந்து வாழ்த்த வாழுங்கால் நோயுற்று, முதிர்ந்த வைத்யர்களின் சிறந்த ஔஷதங்களாலுங் குணம் பெறாமல் சிலகால் வருந்தி, கடைசி தேவத் திரவியானுமானங்கள் யாவும் குறைவறப் பெற்று, நாளது 1914-ம் வருஷம் பெப்ரவரிமீ 16உ செவ்வாய்க்கிழமை காலை 7-மணியளவில் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலக பிராப்தியாயினள். அன்று மாலை 5-மணி யளவில் அர்ச்சியசிஷ்ட சூசையப்பர் மையவாடியில் சேசுசபை சங்கைகுரிய அந்தோனி தியெதிரிக் சுவாமிகளால் நல்லடக்கம் பண்ணப்பட்டது.

இதைக் கண்ணோக்கும் சகோதரர்களே! சகோதரிகளே! இந்த உத்தமியின் ஆத்துமம் நித்திய இளைப்பாற்றியை யடையும் பொருட்டு ஸாக்ஷாத் கடவுளை மன்றாடப் பிரார்த்திக்கின்றோம்.

தூத்துக்குடி } அநுதாபி.
16உ பெப்பிரவரிமீ 1915வரு }

## எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தருமம்.

நண்பர்களே!

சென்ற வருஷம் நாம் அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தர்மமென்று அறிக்கையிட்டு, செய்துகொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி, எமக்குதவிபுரிந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்குப் பங்காளிகளான உதார குணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்துவர்களுக்கும் எடப்பாடி நேயர்களுக்கும் அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1914-ஹு எப்ரல் மாத முதல் 1915-ஹு மார்ச்மீ 31உ வரையில் நேயர்களால் அளிக்கப்பட்ட நன்கொடை ரூபாய் 193-2-0. சென்ற பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்களை முடிவாக்கவும், விசாரணைக் குரு வசிக்கும் பங்களாவை மராமத்துச் செய்யவும், கோவில் கட்டிட விர்த்தியை பூர்த்திக்குக் கொண்டு வரவும் செலவான தொகை ரூபாய் 2620-8-4. இவ்விஷயமாய்த் தற்காலம் நமக்கு ஏற்பட்டிருக்குங் கடன் ரூபா 738.

நண்பர்களே! தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி சத்திரங்கள் முடிவிற்கு வந்தன. ஆகிலும், பழைய சத்திரங்களை மராமத்துசெய்யப் போதுமான பணமில்லாமையால் அவ்வேலைகளை நிறுத்தவேண்டி நேரிட்டதைப்பற்றி விசனிக்கிறோம். தர்ம சிந்தையுள்ள அர்ச். நாயகியின் ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. அவளது மகிமைக்காக கடனளியாளேம் என்பதைச் சிந்தித்து எமதுபேரில் இரக்கம் புரிவார்களென்பது திண்ணம். நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதேயாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள்பேரில் பூரணமாய்ப் பொழியக் கிருபை செய்யவேணுமென்பது எமது பிரதிதின வேண்டுகோள்.

இப்படிக்கு,

எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாளின்
ஊழியனுகிய, விசாரணைக் குரு
ஜே. ஞானுதிக்கம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷ தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 793 | 2 | 0 |
| நண்பர்கள், காரைக்கால் | 20 | 0 | 0 |
| நண்பர்கள், கருமந்தூர் | 5 | 0 | 0 |
| சவரிமுத்து, காவேரிபீக் | 5 | 0 | 0 |
| ஆரோக்கியசாமி, சேர்வராயமலை | 0 | 8 | 0 |
| டேவிட் பிள்ளை, கோலார் | 1 | 0 | 0 |
| கந்தசாமி பிள்ளை, ஏர்காடு | 12 | 10 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 837 | 4 | 0 |

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ 3,475-4-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷ கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ் வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன் வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந் தொகை யாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷ கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்,
அர்ச். அந்தோனியார் கோவில்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3,475 | 4 | 6 |
| Mr. A. Xavier Pakiam, Taiping | 35 | 0 | 0 |
| „ C. S. Sebastin, „ | 30 | 0 | 0 |
| ஆகமொத்தம், | 3,540 | 4 | 6 |

The Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுசிலவும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

OFFICE OF THE REGISTRAR ... 7-JUN 1915 MADRAS.

புத்தகம். 13. } ஜூன் 1915. { இலக்கம். 6.

## MONTH OF THE SACRED HEART.
## திரு இருதய வணக்க மாதம்.

இன்று பிறந்திருக்கும் ஜூன் மாதம் சேசுவின் திரு இருதய வணக்க மாதமென்று நம்முடைய சந்தாதாரர்கள் அறிவார்கள். ஆகவே, மிகவும் பரிசுத்த இத்திரு இருதயத்தின் பேரில் இவர்கள் வைக்க வேண்டிய பத்தியைக் குறித்து இரண்டொரு வார்த்தை சொல்வது அவசியமாமே. சேசுவின் திரு இருதயம் நம்மை அணைகடந்த விதமாய் நேசிக்கிறது. நம்முடைய திவ்ய இரட்சகரான சேசுநாதசுவாமி நமக்குச் செய்துள்ள சகல நன்மைகளுக்கும் உபகார சகாயங்களுக்கும் இத் திரு இருதயமே காரணம். அவர் நம்மைப்பற்றிச் சொல்லொண்ணு விதமாய்ப் பாடுபடவும், நிந்தை அவமானங்களை யனுபவிக்கவும் அவரை உடன் படுத்தினதும் இத்திரு இருதயமே. நம்மை இவ்வளவாய் நேசித்த இத்திரு இருதயத்தை நாமும் நேசிப்பது நியாயம் அல்லவா?

தன்னுடைய சிநேகிதனை உண்மையாய் நேசிக்கிற எவனும் தன் சிநேகிதன் பகைப்பதைத் தானும் பகைப்பான்; அவன் நேசிப்பதைத் தானும் நேசிப்பான்; அவனுக்கு வந்துறும் சகல துன்ப துரிதங்களிலும் அவனுக்கு ஆறுதலா யிருப்பானென்பது இயற்கை.

உலகத்திலுள்ள சகல சிருஷ்டிகளையுஞ் சர்வேசுரன் உண்டாக்கிக் காத்துக் காப்பாற்றிக்கொண்டு வருகிறார். ஆனபடியால் அவைகள் எல்லாவற்றையும் அவர் நேசிக்கிறார் என்பது நிச்சயம். அவைகளில் ஒன்றையாகிலும் அவர் பகைக்கிறதில்லை. ஆனால் அவரால உண்டாக்கப்படாமல் மனிதனுடைய சுயேச்சையாய் உண்டாக்கப்பட்ட காரியம் ஒன்று உண்டு. அது தான் பாவம். இதைத்தான்—இந்தப்பாவம் ஒன்றைத்தான்—சேசுவின் திரு இருதயம் அளவறுத்துச் சொல்லக்கூடாத விதமாய்ப் பகைக்கிறது. சேசுவின் திரு இருதயத்துக்கு நாம் பிரியப்பட ஆசிப்போமானல்—அத்திரு இருதயத்தின்பேரில் பக்தியுள்ளவர்களாயிருக்க நாம் விரும்புவோமானல்—நம்மாலான பிரயாசை யெல்லாம் பட்டுப் பாவத்தைப் பகைத்து அதன்பேரில் அருவருப்பும் அரோசிகமுங் கொள்ளக்கடவோம். பாவத்தைக் கட்டிக்கொள்

ளுகிறவர்கள் இந்தத் திரு இருதயத்தை நேசிக்கிறவர்கள் அல்ல. பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறவர்கள் இத்திரு இருதயத்துக்கு வேதனையை உண்டுபண்ணுகிறவர்களாமே. இத்திரு இருதயத்தை ஈட்டியால் ஊடுருவக் குத்துகிறவர்கள் இவர்களே. இன்னுஞ் சொல்ல வேண்டுமானால், இத்திரு இருதயத்தை ஊடுருவக் குத்தின லோஞ்சினுஸ் என்ற நிஷ்டூர சேவகனை விட அதிக நிஷ்டூரர்களும் இவர்களே. அதேனென்றால், மேற்சொன்ன சேவகன் உயிர் விட்டிருந்த நம்முடைய கர்த்தரின் இருதயத்தைக் குத்தித் திறந்தான். இதனால் இவன் திரு இருதயத்துக்கு யாதொரு நோக்காட்டையும் உண்டுபண்ணினவனல்ல. ஆனால் பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறவர்களோ இத்திரு இருதயத்துக்குச் சொல்ல முடியாத வாதனையை உண்டுபண்ணுகிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அநேகர் இத்திரு இருதயத்தின்பேரில் பக்தியுள்ளவர்களென்றும் திரு இருதயச் சபையிற் சேர்ந்திருக்கிறவர்களென்றும் வாயால் மாத்திரஞ் சொல்லித் தங்களுடைய அடாத நடத்தையால் இத்திரு இருதயம் பிளந்து போகும் வண்ணம் அதை ஊடுருவக் குத்துகிறார்கள். இந்த நிஷ்டூரப் பாவிகளின் தொகையில் நாம் இதுவரையிலுஞ் சேர்ந்தவர்களா யிருப்போமானால், இனிமேலாகிலும் பாவத்தைப் பகைத்து நம்முடைய ஆகாத நடத்தையை விட்டு விட்டு, சேசுவின் திரு இருதயத்தினுடைய மெய்யான சிநேகிதர்களாகவும், பக்தர்களாகவு மிருக்க முயலுவோமாக.

அல்லாமலும், சேசுவின் திரு இருதயம் நேசிப்பதை நாமும் நேசிக்கவேண்டியதல்லவா? நமது கர்த்தர் இப் பிரபஞ்சத்தி லிருந்தபோது சகல புண்யங்களையும் உந்நதவிதமாய் அனுசரித்து வந்தாராயினும் தாழ்ச்சியென்னும் புண்யத்தின் மட்டில் அதிக ஆவலும் பிரியமுங் கொண்டு அதை அனுஷ்டித்து வந்தார். ஆனபடியாலல்லோ அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி "நாம் சாந்த குணமும் மனத் தாழ்ச்சியும் உள்ளவரென்று நம்மிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" (மத். 11-29.) என்று திருவுளம்பற்றினர். இப் புண்யத்தைத் தாம் எம்மாத்திரம் நேசித்தாரென்று நமக்குப் படிப்பிக்கவே அவர் இப் பூலோகத்தில் பிறந்தது முதற்கொண்டு சிலுவையில் மரண மடையுமட்டும் அதை அநுசரித்து வந்தார். தாம் சுதனாகிய சர்வேசுரனாயிருந்தும் மாட்டுக் கொட்டிலில் பிறந்தார். சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரனாயிருந்தும் ஒரு அற்ப மனுஷனுக்குப் பயப்படுவதுபோல் எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போனார். வான தூதர்களின் ஊழியம் பெற பாத்திரராயிருந்தும் தாம் நீச மனிதருடைய கால்களைக் கழுவினார். மட்டிலடங்காத ஞானமுடையவரா யிருந்தும் ஒரு பைத்தியக்காரனைப்போல் பாவிக்கப்பட்டார். "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று சம்மனசுக்களால் இடைவிடாமல் கொண்டாடப்படுகிறவரா யிருந்தும் பரபாசைவிட அதிகக் குற்றமுள்ளவரென்று தீர்மானிக்கப்பட்டார். கடைசியில் இரு கள்ளருக்கு நடுவில் தாமும் ஒரு கள்ளனாகப் பாவிக்கப்பட்டு மரணமானார். இதைப் பற்றியே சுவிசேஷத்திலும் "தம்மைத் தாமே தாழ்த்தி மரணமட்டுக்கும், சிலுவை மரணமட்டுக்கும், கீழ்ப்படிந்தவ ரானார்" (பிலிப். 2-8) என்று சொல்லப்பட் டிருக்கிறது. சேசுவின் திரு இருதயத்தின் மட்டில் நாம் மெய்யான பக்தி வைக்க ஆசிப்போமானால், அத்திரு இருதயம் அவ்வளவாய் ஆசித்த அந்தத் தாழ்ச்சி யென்னும் புண்யத்தை நாமும் அனுசரிப்போமாக. தாழ்ச்சியே சகல புண்யங்களுக்கும் அஸ்திவாரம். தாழ்ச்சியே பரிசுத்த தனத்துக்கு ஆதாரம். ஆனபடியால் தாழ்ச்சியுடையோராய்ச் சீவிப்போமாக.

பரிசுத்த பரம திவ்வியநற்கருணையில் நமதாண்டவர் எழுந்தருளியிருந்து அதில் இரவும் பகலும் வாசமாயிருக்கிறாரென்பது விசுவாச சத்தியம். இவர் இந்தத் தேவத்திரவிய அநுமானத்தில் நமது பேரில் வைத்த அன்பின் நிமித்தம் இப்படி எழுந்தருளி யிருந்தபோதிலும், நன்றிகெட்ட மனுக்குலமானது அவரை நினையாமலும், சட்டைபண்ணாமலும், மதியாமலும் அவருக்குச் சொல்லமுடியாத நிந்தை அவமானத்தை உண்டுபண்ணுகிறது. எத்தனையோ பெயர் அவர் இந்தத் தேவத்திரவியநுமானத்தில் எழுந்தருளி யிருக்கிறதில்லையென்றும், அவர் அதில் எழுந்தருளியிருக்கிறாரென்று விசுவசிப்பதானது வீணான குருட்டுப் பக்தியென்றுஞ் சொல்லி சாதிக்கிறார்கள். அதில் அவர் மெய்யாகவே எழுந்தருளி யிருக்கிறாரென்று விசுவசிக்கும் கிறிஸ்துவர்களுக்குள் முதலாய் எத்தனையோ பெயர், அவர் சமுகத்தில் அநாச்சாரமாய் நடந்துகொள்ளுகிறார்கள் !! எத்தனையோ பெயர் அவரை யூதாசைப்போல் தேவத் துரோகத்துடன் உட்கொள்ளுகிறார்கள் !! இன்னும் எத்தனையோ பெயர் இந்தத் தேவத் திரவிய அநுமானத்தில் அவரை வந்து சந்திக்கிறது மில்லை; அவரை உட்கொள்ளுகிறது மில்லை. இப்பேர்ப்பட்ட கிறிஸ்துவர்கள் கண்ணிருந்துங் காணாதவர்கள்போலும், காதிருந்தும் கேளாதவர்கள்போலு மிருக்கிறார்கள். அவிசுவாசிகளுடைய பாவாக்கிரமங்களினால் நம்முடைவ கர்த்தரின் இருதயம் நோக்காடு அனுபவிக்கிறதைவிட இவர்களுடைய நன்றிகெட்ட துரோகங்களினால் அதிக நோக்காட்டை அனுபவிக்கிறது. இதனாலேயே அவர் தாவீது இராசாவின் வாக்கினால் முறையிடுவது யாதெனில்: "என் சத்துரு என்னைச் சபித்திருந்தால் நான் அதைப் பொறுத்துக்கொண் டிருப்பேன். என்னைப் பகைத்தவன் என்பேரில் அபாண்டங்களைப் பேசியிருந்தால் சிலவிசை அவனுக்கு விலகி ஒளிந்திருப்பேன். ஆனால், நீயோ என்னோடு கூடி வாழ்ந்து என்னை அறிந்து எனக்கு ஆலோசனை கொடுப்பவனாய் இருந்தாயே" (தாவீ. சங்கீதம் LIV-12, 13, 14, 15) என்பதேயாம். ஆகையால், கிறிஸ்துவர்களான நாம் நம்முடைய பாவாக்கிரமங்களினால் அவருக்கு அவமானத்தை வருவியாமல் இருப்பதுமல்லாமல் அவரை அறியாதவர்களால் அவருக்கு உண்டாகும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரஞ் செய்யவுங் கடமைப்பட்டிருக்கிறோமல்லவா? நம்முடைய கர்த்தருக்கு நமது பேரிலுள்ள அணைகடந்த அன்பையும், அவர் நமக்காகச்செய்த எண்ணிறந்த நன்மைகளையும் உபகார சகாயங்களையும் நாம் அறியாதவர்களல்ல. இவ்வளவாய் நம்மை நேசிக்கிறவருக்கு அவரை நேசியாதவர்களால் உண்டாகும் சஞ்சலம், கஸ்தி, நிந்தை, துன்பம் அவமான முதலியவைகளைப்பற்றி நாமும் அனுதாபப்பட்டு, அவருக்கு ஆறுதல் வருவிக்க நிந்தைப் பரிகாரஞ்செய்தாலன்றி நாம் சேசுவின் திரு இருதய பக்தர்களா யிருக்கமுடியாது.



ஆகையால், சேசுவின் திரு இருதய வணக்க மாதமான இம்மாதத்தை நாம் சரியானபடி அனுசரித்து ஞானப்பிரயோசனமடைய வேண்டுமானால், அத்திரு இருதயம் அருவருத்துத் தள்ளுகிற பாவத்தை நாமும் அருவருத்துத் தள்ளுவோமாக. அத் திரு இருதயத்துக்குப் பிரியமான தாழ்ச்சி யென்கிற புண்ணியத்தை ஆவலோடும் சுறுசுறுப்போடும் அனுசரிப்போமாக. தேவநற்கருணையில் அத்திரு இருதயத்துக்கு நன்றிகெட்ட மனிதர்களால் செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக நல்லபக்தி விசுவாசத்துடன் தேவநற்கருணையை நாடோறும் சந்தித்து, அடிக்கடியும் கூடுமானால் நாடோறும் அதை உட்கொண்டு வருவோமாக.

---

## ENCYCLICAL OF HIS HOLINESS BENEDICT XV.

## பாப்பாண்டரிவன் நிருபம்.

(முன்தொடர்ச்சி.)

---

### மாடர்னிசம் என்னும் தவறான நூதன கோள்கைகள் மறுபடியும் கண்டிக்கப்படுதல்.

அல்லாமலும், கத்தோலிக்கு வேதம் மென்மேலும் விருத்தியடைய வேண்டுமென்று வருந்தி உழைக்கும் நம்முடைய பிரஜைகளுக்குத் திருச்சபைக் கற்பிப்பது யாதெனில்: யாதொரு பலனுமுண்டாகாத வீணான சடுத்தங்களுக்கடுத்த விஷயங்களில் இவர்கள் சலஞ் சாதிப்பதற்குமாறாக அவைகளை யெல்லாந் தகர்த்து, உண்மையைக் காப்பாற்றவும் அதைப் போதிக்கவும் கிறிஸ்துநாதரால் நியமிக்கப்பட்டிருப்பவர் இவ்விஷயத்

திற் செய்யுந் தீர்மானங்களைக் கைப்பற்றி, யாதொரு பழுதும் விசுவாசத்துக்குண்டாகாத வண்ணம் அதைப் பூரணமாய்ப் பாதுகாத்துவர மகா ஆவலுடன் பாடுபட வேண்டுமென்பதையே திருச்சபை கற்பிக்கிறது. அப்போஸ்தலரால் சுட்டிக் காட்டப்பட்டவர்கள் இந்நாட்களிலும் கூட இருக்கிறார்கள். அவர்கள் கொஞ்சம்பேரல்ல. அவர்கள் அப்போஸ்தலர் சொல்லுகிறதுபோல் "தகுந்த போதனையைக் கேட்கச் சகியார்கள்; ஆனால் தங்கள் சொந்த ஆசைப்படி, தாங்களே தங்களுக்குப் போதகர்களைக் குவித்துக்கொள்ளுகிறார்கள்;பேராசையாகிற செவிகளைக் கொண்ட இவர்கள் சத்தியத்தைக் கேளாதபடி தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு பொய்யான கதைகளுக்குச் செவி சாய்க்கிறார்கள்." ஏனெனில், மனிதனுடைய புத்தியானது சர்வேசுரனுடைய கிருபையால் இக்காலத்தில் சுபாவ சாஸ்திர பயிற்சியில் அதிசயிக்கத்தக்க தேர்ச்சியடைந்திருக்கின்றது. ஆனபடியால், தங்களுடைய புத்தி விஷயத்தில் தாங்கள் கொண்ட மேலான மதிப்பால் வீணான கர்வம் படைத்து, தங்களைப்பற்றித் தாங்களே பெருமை பாராட்டுகிறார்கள். சிலர் தங்களுடைய சொந்த தீர்மானமே சரியென்று மதித்து, திருச்சபையின் அதிகாரத்தைப் புறக்கணிப்பதுமல்லாமல் இவர்களுடைய துணிகரத்தினால் இன்னம் எவ்வளவு தூரம் போகிறார்களென்றால், இக்காலத்தின் எண்ணப்படிக்குச் சர்வேசுரனுடைய பரம இரகசியங்களையும் அவர் மனிதருக் கறிவித்த எல்லாவற்றையும் தங்களுடைய சொந்த புத்தியைக் கொண்டு அளந் தறியவும் இவர்கள் பின்வாங்குகிறதில்லை. ஆகையினால்தான் மாடேர்னிசம் என்ற நூதனக் கொள்கைகளில் காணப்படுகிற விபரீதமான அபத்தங்கள் முளைத்திருக்கின்றன. இதைக்குறித்தே நமக்கு முன்னிருந்தவர் அதற்கு "சகல அபத்த மார்க்கங்களின் தொகுப்பு" என்று சரியாய்ப் பேரிட்டுக் கிரமப்படி அதைச் சபித்தார். சங்கைக்குரிய சகோதரர்களே, அவர் அதைச் சபித்ததுபோலவே நாமும் இப்போது அதைச் சபிக்கிறோம். மிகவும் நாசகரமான இந்தத் தொத்துவியாதி ஒழிந்துபோகாமல் இன்னமும் இங்கும் அங்கும் இரகசியமாய்ப் பரவி வருவதால், அவ்வியாதியில் சிக்கிக்கொள்ளும் ஆபத்தினின்று வெகு ஜாக்கிரதையோடு விலகிக்கொள்ளும்படி எல்லோருக்கும் புத்தி சொல்லுகிறோம். ஜோபென்பவர் மற்றொரு விஷயத்தைப்பற்றி உரைத்த இவ்வார்த்தைகள் "அது எல்லாவற்றையும் அழித்துச் சந்ததியையும் நாசமாக்கும் அக்கினியாமே" (ஜோப். 31-12.) என்பன இதற்குச் சரியாய்ச் செல்லும். கத்தோலிக்கர் இந்தத் தப்பறை மார்க்கத்தை விலக்குவது மாத்திரம் போதாது: ஆனால் அதற்குச் சார்பாயிருக்கும் எதையுமே முற்றும் நீக்கவேண்டியது. இந்த நூதனக்கொள்கையினால் தூண்டப்படுகிற எவனும் அவன் பூர்வ காலத்துக்குச் சம்பந்தமானவற்றையெல்லாம் இகழ்ந்து வெறுக்கிறதுமல்லாமல், ஞான காரியங்களைப்பற்றி சம்பாஷணையிலும்; தேவாராதனை விஷயத்திலும், கத்தோலிக்கு நிபந்தனைகளைப்பற்றிய விஷயத்திலும், பகதிக்குரிய சொந்த முயற்சிகளைப்பற்றிய விஷயத்திலும், எல்லா காரியங்களிலுமே நூதனமானவைகளையே ஆசித்துத் தேடுகிறான். ஆகையால் நம்முடைய முன்னோர்களால் விதிக்கப்பட்டவைகள் பூச்சியமாய்க் காப்பாற்றப்பட வேண்டுமென்று நாம் ஆசிக்கிறோம். பாரம்பரியமாய் வந்ததைத் தவிர நூதனமானதொன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது. ஆயினும், "நூதனங்களை யல்ல நூதனமாதிரி" என்ற இவ்வொழுங்கு பொதுப்பட விசுவாசத்திற்கடுத்த விஷயங்களிலும் செல்லுமென்றாலும், இவ்வொழுங்கானது விசுவாச விஷயத்தில் யாதொரு பழுதுமின்றி அனுசரிக்கப்படவேண்டியது; மாற்றத்துக்கடுத்த விஷயங்களிலும் இது ஒரு பிரமாணமா யிருக்கவேண்டியது.

### கத்தோலிக்குச் சங்கங்கள்.

ஆனால், சங்கைக்குரிய சகோதரர்களே, மனிதர்கள் கத்தோலிக்கு விசுவாசத்தைப் பயிரங்கமாய் பிரஸ்தாபிக்கவும், அதற்கொத்த வண்ணம் தூண்டுகோலா யிருந்து அன்னியோன்னியமாய்ச் சீவித்து வரவும் மிகவுந் தூண்டப்படுவதினால் கத்தோலிக்கரின் புதுச் சங்கங்கள் இடைவிடாமல் அதிகரித்துவர நாம் பார்த்து மிகவும் சந்தோஷிக்கிறோம். இவைகளின் தொகை மேன்மேலும் அதிகரித்து வருவதை மாத்திர மல்ல, ஆனால் நம்முடைய ஆதரவிலும் சனுவிலும் அவைகள் இருந்து விருத்தியடைந்து வரவும் ஆசிக்கிறோம். நம்முடைய அப்போஸ்தல ஸ்தானத்தால் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டதும், இனிக் கொடுக்கப்படுவதுமான சட்டதிட்டங்களுக்கு அவைகள் நிலைமையாயும் பிரமாணிக்கமாயும் கீழ்ப்படிந்து நட



ந்து வந்தால், அவைகள் சந்தேகமின்றி செழித்தோங்கும். சர்வேசுரனுக்காகவும் திருச்சபைக்காகவும் உழைத்துவருகிற இச்சபைகளிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் ஞானகமத்தில் சொல்லி யிருப்பதை ஒருபோதும் மறந்துபோகக்கூடாது. "கீழ்ப்படிகின்ற மனிதன் வெற்றியைப் பிரசங்கிப்பான்" (பழமொழி XXI, 28) ஏனெனில் அவர்கள் திருச்சபையின் தலைவருக்குக் கீழ்ப்படிவதில் சர்வேசுரனுக்கே கீழ்படிகிறார்களென்றிராவிட்டால் தேவவுதவியை அவர்கள் பெற்றுக்கொள்ளவும் மாட்டார்கள், அவர்களுடைய பிரயாசையும் நிஷ்பலமாய்ப் போம்.

### குருக்களின் சீவியம்.

ஆனால், சங்கைக்குரிய சகோதரர்களே, இக்காரியங்களெல்லாம் நாம் ஆசித்தபடி சித்தி பெறவேண்டுமானால், நமதாண்டவராகிய கிறிஸ்துநாதர் தமது விளைச்சலை யறுக்க அனுப்பிய பணிவிடைக்காரரின் அதாவது குருக்களின் விவேகமும் ஜாக்கிரதையுமுள்ள ஊழியம் அவசியமானதென்று உங்களுக்குத் தெரியும். ஆகையால் உங்களிடம் இருக்கிற குருக்கள் தாங்கள் அழைக்கப்பட்டுள்ள சீவியத்துக் கொத்தவண்ணம் பரிசுத்தமாய்ச் சீவிக்க அவர்களை மேன்மேலும் தூண்டிவிட வேண்டியதென்றும் குருப்பட்டத்துக்குப் படிக்கிற மாணுக்கர் இந்தப் பரிசுத்தமான தொழிலுக்குத் தகுதியானபடி ஒழுக அவர்களை முதன்மையான கல்வியைக் கொண்டும் சிக்ஷையைக்கொண்டும் தயார்செய்ய வேண்டியதென்றும் உங்களுக்குத் தெரியும். உங்களது சுறுசுறுப்பை இதுவிஷயத்தில் எழுப்பிவிடுவதானது அவசியமென நாம் அறிந்திருந்தும் மிகுந்த பற்றுதலோடு நீங்கள் இதைச் செய்யும்படி உங்களை வருந்தி கேட்டுக்கொள்ளுகிறோம். திருச்சபையின் அபிவிர்த்திக்கு இதைவிட முக்கியமாயிருக்கக் கூடியது வேறொதுவுமில்லை; ஆனால் நமக்கு முன்னாக இருந்த பதிமூன்றாம் சிங்கராயரும், பத்தாம் பத்திநாதரும் இதைக் குறித்து விரிவாய்ப் பேசியிருப்பதால் நாமுமிங்கே இதைக் குறித்து அதிகமாய்ச் சொல்லுவது அனாவசியம். நாம் குறித்துப் பேசுகிற விவேகசாலிகளான அந்தப் பாப்புமார்களின் சாதனங்கள் விசேஷமாய் பத்தாம்பத்திநாதர் "குருக்களுக்குச் செய்த போதகம்" ஒருபோதும் மறந்துபோக விடப்படாமல், நுணுக்கமாய் அனுசரிக்கப்படும்படி பார்க்க வேணுமென்று மாத்திரம் கேட்டுக்கொள்ளுகிறோம். இக்காரியமாக நீங்கள் கொடுக்கும் ஆலோசனைகளுக்கும் எடுத்துக்கொள்ளும் பிரயாசைக்கும் நன்றிபாராட்டுகிறோம்.

### மேற்றிராணிமார்களுக்குக் கீழ்ப்படிதல்.

ஆயினும், நாம் மௌனஞ் சாதித்து ஒன்றுஞ் சொல்லாமல் விட்டுவிடக்கூடாத இன்னொரு காரியமுண்டு; நமக்கு மிகவும் பிரியமுள்ள பிள்ளைகளாயிருக்கிற எல்லா கத்தோலிக்குக் குருக்களும் தங்கள் தங்கள் சொந்த நன்மையைப் பற்றியும் தங்களுடைய தேவ ஊழியத்தை நன்கு நடத்தும் பொருட்டும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மேற்றிராணிமார்களோடு அன்னியோன்னியமாய் ஒன்றித்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது எம்மாத்திரம் அத்தியாவசியம் என்பதைப்பற்றி அவர்களுக்கு ஞாபகப்படுத்த ஆசிக்கிறோம். வியசனமுற்று நாம் மேலே சொல்லியிருக்கிறபடி, நிச்சயமாகவே இக்கால இயற்கைக் கொத்தவண்ணமாய் தேவப்பலிபீட பூசகரான எல்லோரும் அகங்காரத்தையும் அடங்காமையையும் விட்டுவிட்டவர்களாயில்லை; இதினிமித்தமே பலமுறை திருச்சபையின் மேய்ப்பர்கள் தங்களுக்குள்ள சுதந்தரப்படி எதிர்பார்க்கும் ஆறுதலையும் உதவியையுங் கண்டடைவதற்குப் பதிலாய் துன்பத்தையுங் குழப்பத்தையும் கையேற்கிறார்கள். இப்படியிருக்கையில், தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் இவ்வண்ணம் நிர்ப்பாக்கியராய்த் தவறி நடப்பவர்கள் "திருச்சபையை ஆளுவதற்கு இஸ்பிரீத்துசாந்துவானவரால் நியமிக்கப்பட்ட மேற்றிராணிமார்களின் அதிகாரமானது (அப். நடபடி. XX, 28) தெய்வீகமானதென்பதைத் தங்கள் மனதில் பதித்துச் சிந்தைசெய்வார்களாக. நாம் ஏற்கெனவே தெரிவித்திருப்பதுபோல் நியாயமான அதிகாரத்தை எதிர்க்கிறவன் சர்வேசுரனை யெதிர்க்கிறான். சர்வேசுரன் தமது அதிகாரமாகிற தேவ முத்திரையைக்கொண்டு அபிஷேகஞ் செய்திருக்கிற மேற்றிராணிமார்களுக்குக் கீழ்ப்படிய நிராகரிப்பவர்கள் இன்னும் அதிகமான அக்கிரமத்தைக் கட்டிக் கொள்ளுகிறவர்களாகிறார்கள். வேதசாட்சியான அர்ச். இஞ்ஞாசியார் சொல்லுமாப்போல்,"பிறசினேக"மானது உங்கள்விஷயத்தில் நம்மை மௌனஞ் சாதிக்கவிடவில்லை, கடவுளைப்

பற்றிய சிந்தனையால் நீங்கள் ஒற்றுமையாயிருக்கும்படி யுங்களுக்குப் புத்தி சொல்லத் தீர்மானித்திருக்கிறோம். ஏனெனில் நம்முடைய சீவியத்தோடு பிரியாவண்ணமாய்ப் பந்திக்கப்பட்டிருக்கிற சேசுக்கிறிஸ்துநாதர் பிதாவின் எண்ணத்திலிருக்கிறதுபோல அவரவரை ஸ்தாபித்த அந்தந்த இராச்சியங்களி லுள்ள மேற்றிராணிமார்களும் பிதாவின் எண்ணத்திலிருக்கிறார்கள். ஆகையினால் நீங்கள் உங்கள் மேற்றிராணிமார்களுடைய கருத்துக்கு ஒத்து நடப்பதே கிரமம். (எபேசி.கிரு. III) திருச்சபையின் எல்லா பிதாப்பிதாக்களும் வேதபாரகர்களும் இந்தப் பேர்போன வேத சாட்சியைப்போலவே சொல்லியிருக்கிறார்கள். காலவித்தியாசக் கஷ்டங்களினிமித்தம் மேற்றிராணிமார்களுக்குள்ள சுமையே மகா பளுவானதாயிருக்கக்கொள்ள, தங்களுக்கொப்பிக்கப்பட்ட மந்தையின் ஈடேற்றத்தினிமித்தம் அவர்களுக்குண்டாகுங் கவலை பின்னும் அந்தப் பளுவை யதிகரிக்கச் செய்கின்றது. ஏனெனில் அவர்கள் உங்களாத்துமங்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்கள்போல விழித்திருக்கிறார்கள். (எபி XIII, 17) கீழ்ப்படிய வேண்டியவர்களுக்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள் அவர்களுடைய சுமையையும் கவலையையும் பின்னும் அதிகரிக்கச் செய்யும் குரூரர் என்று சொல்லப்படமாட்டாரா? அவர்களைப் பார்த்து அந்த அப்போஸ்தலர் தாமே சொல்லுவதாவது (17 ஷை)"அது உங்களுக்கு நன்மையாயிராது" அது எதினிமித்தமென்றால் "திருச்சபையானது ஒரு குருவானவருக்கு ஐக்கியப்பட்ட ஜனங்களும் தங்கள் மேய்ப்பருக்கு அடங்கின ஒரு மந்தையுமாமே." (அர்ச். சிப்பிரியான்) ஆகையால், தனது மேற்றிராணியாரோ டிராதவன் திருச்சபையோ டிராதவ னென்றாகிறது.

### பாப்பவர்கள் ஸ்தானத்தின் சுயாதீனம்.

சங்கைக்குரிய சகோதரர்களே! இப்பொழுது இந் நிருபத்தைக் முடிக்கையில் நாம் ஆரம்பத்தில் தொடங்கின காரியமே நமக்கு மறுபடியும் ஞாபகத்துக்கு வருகிறது. ஜன சமூகத்தினுடையவும் திருச்சபையினுடையவும் நன்மைக்காக இந்தத் துன்பத்துக்குரிய யுத்தம் முடிவுக்குக்கு வர ஆவலுடன் பிரார்த்திக்கிறோம். ஜன சமூக விஷயமாய்ச் சமாதானம் உண்டானபின் ஒவ்வொரு வகுப்பினரும் தம் தம் அலுவலில் சரியானபடிக்குத் தேர்ச்சியடையவும், சேசுக்கிறிஸ்து நாதருடைய திருச்சபை விஷயத்தில் அது எவ்வித இடையூறுகளினாலும் இக்கட்டனுபவியாமல் உலகத்தின் எத்திசையிலு முள்ளவர்களுக்கு உதவியையும் இரக்ஷண்ணியத்தையுங் கொண்டுபோக அதற்குத் திராணியுண்டாகவும் வேண்டு மென்பதே நம்முடைய மன்றாட்டு. இப்போது வெகுகாலமாகத் திருச்சபைக்கு அவசியமா யிருக்கவேண்டிய முழுச் சுயாதீனம் அதற்கு இல்லாமலிருக்கிற தென்பது மெய். அதாவது அச் சுயாதீனத்தைப் பாதுகாக்கவென்று அனேக யுகங்களாகத் தேவ பராமரிப்பின் சித்தப்படி திருச்சபையின் தலைவரான அர்ச். பாப்பவர்களுக்குக் கிடைத்திருந்த ஆதரவு அவரிடத்தினின்று பறித்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவருக்கு இருந்த ஆதரவு எடுபட்டுப்போனதின் பலனாக, தப்பாமல் நேரக்கூடியபடிக்கு, கத்தோலிக்கர்களுக்குள் அதைப்பற்றிப் பெருங் கவலையுண்டாயிற்று. ஏனெனில் உரோமாபுரி அர்ச். பாப்பவர்களின் பிள்ளைகள் தூரத்திலிருக்கிறவர்கள் ஆனாலுஞ்சரி அல்லது சமீபத்தி லிருக்கிறவர்களானாலுஞ் சரி எல்லோரும் தங்கள் பொது தந்தையானவர் தமது அப்போஸ்தல அலுவலை நடத்துவதற்குச் சரியான பூரண சுயாதீனம் பெற்றவராய் இருக்கவேண்டுமென்று கேட்கிறதற்கு, மறுக்கப்படாத சர்வசுதந்தரமு முடையவர்களா யிருக்கிறார்கள். ஆகையால் கூடிய துரிதத்தில் சகல ஜாதிகளுக்குளும் அச் சமாதானம் திரும்பவும் உண்டாகும்படி மிகவும் நாம் ஆசிக்கிறோம். அதுபோலவே பிரஜைகளின் சமாதானத்தை அனேக விஷயங்களில் மெத்தவுஞ் சிரமிக்கக் கூடிய இயற்கைக்கு விரோதமான அந்தஸ்தில் திருச்சபையின் தலைவர் வைக்கப்பட்டிருப்பது எடுபட்டுப் போகும்படிக்கும் விரும்புகிறோம். ஆகையினால் நாம் நமக்கு முன்னிருந்தோர்கள் இது விஷயமாய் வெவ்வேறு தருணங்களில் எந்தெந்த ஆதாரங்களைக்கொண்டு ஆக்ஷேபித்தார்களோ அவற்றைக்கொண்டு நாமும் இப்போது ஆக்ஷேபிக்கிறோம். இப்படிநாம் செய்வது மானுஷ்ய எண்ணங்களைத் தழுவியல்ல ஆனால் நமக்குள்ள பரிசுத்த கடமையின் நிமித்தமே.—அக்கடமை யென்னவெனில் அப்போஸ்தல ஸ்தானத்தின் சுதந்தரத்தையும் மேன்மையையும் பாதுகாப்பதேயாம்.

### சமாதானத்துக்காக ஜெபம்.

கடைசியாய், சங்கைக்குரிய சகோதரர்களே, நாமெடுத்துக் காட்டிய கொடிய கிருத்தியங்களுக்கும் துன்பங்களுக்கும் முடிவு செய்யக்கூடிய இராசாக்களுடையவும் மற்றெல்லோருடையவுந் தீர்மானங்கள் சர்வேசுரனுடைய திருக்கரங்களி லிருக்கிறபடியால் அந்த ஆண்டவரை நோக்கி நமது குரலை உயர்த்தி மன்றாடி, எல்லா மனுக்குலத்தின் பேரால் "எங்கள் நாட்களில், ஆண்டவரே, சமாதானத்தைக் கட்டளையிடும்" என்று பேரொலியாய்க் கூப்பிடுகிறோம். "நானே ஆண்டவர்...சமாதானமாய்ப் போங்கள்" (இசை. XIV. 76-7.) என்று தம்மைக் குறித்துத் திருவுளம்பற்றின அவர் நம்முடைய மன்றாட்டுக்கிரங்கி உலகத்தாரும் விரத்தருமான கூட்டத்தாரனைவரையும் அலைக்கழிக்கிற புயலினாலுண்டாகிய அலைகளைத் துரிதமாய் அமர்த்துவாராக. சமாதானத்தின் அரசனையே பெற்றெடுத்த அர்ச். கன்னிகை அன்போடு நமக்கு உதவியாய் வந்து அவளுடைய ஏழை ஊழியராகிய நம்மையும், நம்முடைய பாப்புஸ்தானத்தையும், திருச்சபையையும் தமது திருக்குமாரன் சிந்தின இரத்தத்தால் மீட்கப்பட்ட எல்லா மனிதருடைய ஆத்துமங்களையும் தமது தாய்க்குரிய அடைக்கலத்திலும் ஆதரவிலும் வைத்துக் காப்பாற்றுவாளாக.

கடவுளின் கிருபைக்கு அடைமானமாகவும் நம்முடைய நல்ல மனதின் அத்தாட்சியாகவும், சங்கைக்குரிய சகோதரராகிற உங்களுக்கும், உங்களுக்குள் அடங்கியுள்ள குருக்களுக்கும் பிரசைகளுக்கும் நமது அப்போஸ்தல ஆசீர்வாதத்தைப் பட்சத்தோடு அளிக்கிறோம்.

இந்நிருபம்—1914-ம் ஷு நவம்பர் மாதம் முதல் தேதி, சகல அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாளன்று, நாம் பாப்புஸ்தானத்தை வகித்த முதல் வருஷத்தில், உரோமை அர்ச். இராயப்பரின் ஆலயத்தில் அளிக்கப்பட்டது.

பாப்புவாகிய 15-ம் ஆசீர்வாதப்பர்.

---

"ஒன்றும் எனக்காக அல்ல, எல்லாம் சேசுவுக்காகவும் அவருடைய திவ்விய மாதாவுக்காகவுமே நிறைவேறக்கடவது"(13-ம் சிங்கராயர்.)

உலக முழுமையும் சீர்திருத்த எனக்கொரு வழி தெரியும். அதாவது, ஒவ்வொருவரும் தன்னைத்தானே சீர் திருத்திக்கொள்ளட்டும்.

(பத்தாம் பத்திநாதர்.)



## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

3-வது கற்பனை: சர்வேசுரனுடைய திருநாட்களை ஆசரிக்கத்தக்கதாக நினைப்பாயாக.

### 15-ம் பாடம்.

(முன் தொடர்ச்சி.)

---

4 ஒரு ரயில் வண்டி வேலைக்காரன்.- ஒரு ரயில் ஸ்டேஷனில் இருந்த வேலையாட்களுக்குள் ஒரு பத்தியுள்ள கிறிஸ்துவனிருந்தான். இவன் ஞாயிறு வாரங்களில் வேலையினிமித்தம் பூசைக்குப் போகக்கூடாமல் போவதுண்டு. அப்படி இருந்தும், இவன் வேலையை முடித்துக்கொண்டு ஓட்டமாயோடி கோவிலில் பிரவேசிக்கும்போது குருவானவர் பூசை முடித்துக் கடைசி ஆசீர்வாதம் போடுவார். அநேக காலம் இவன் இப்படிச் செய்துவருவதைக் கண்ட ஒரு துரை அதிசயித்து, அந்த வேலைக்காரனைப் பார்த்து ஏன் பூசைதுவக்கத்தில் வராமல் பூசை முடிவில் வருகிறாயென்று கேட்டார். அதற்கவன் ஐயா நான் ரயில்வே வேலைக்காரன். புகைவண்டி ஸ்டேஷனைவிட்டுப் புறப்பட்ட உடனே நான் ஓட்டமாய் ஓடிவருவதற்குள்ளாகப் பூசை முடிந்துபோகிறது. கடைசி ஆசீர்வாதமாகிலும் அகப்படுமென்கிற நம்பிக்கையால் இவ்விதம் ஓடிவருகிறேன் என்றான். சோம்பேறிகளா யிருக்கப்பட்ட கிறிஸ்துவர்கள் இதைக்கேட்டு வெட்கப்படுவார்களாக. Baxter.

5. ஒரு ஊரிலிருந்த பெண்பிள்ளை ஒருத்தி.—சர்வேசுரனிடத்தில் ஏதோ ஒரு உபகாரம் பெறும்படி தன்னால் ஒரு வருஷத்தில் காணக்கூடிய பூசைகளைத் தவறாமல் காண்பதாகப் பொருத்தனை செய்துகொண்டாள். தானிருந்த ஊருக்கும் கோவிலுக்கும் சிலமயில் தூரம் இருந்தபோதிலும், காற்று மழை யடிக்கையில் முதலாய் பூசைக்குப்போகத் தவறினவளல்ல. பூசை முடிந்து வீடு வந்து சேர்ந்த உடனே ஒவ்வொருநாளும் ஒரு சிறு கல்லை யெடுத்து ஒரு பானையில் போட்டுவந்தாள். அந்த வருஷக் கடைசியில், தான் கண்ட பூசைகளின் மொத்த கணக்கை அறியும்படி பா

னையைக் கீழே கவிழ்த்தபோது அந்தப் பானையிலிருந்து ஓரே யொரு கல் மாத்திரம் கீழே விழுந்தது. இதை அவள் பார்த்தபோது துக்கமும் அதிசயமும் பட்டு நடந்த சங்கதிகளைத் தன் பங்கு ஸ்வாமியாரிடம்போய்ச் சொன்னாள். அப்போது குருவானவர் தேவ ஏவுதல் கொண்டவராய், அவளைப் பார்த்து "நீ பூசைக்கு போகும்போதும், பூசை நேரத்திலும் எப்படி இருந்தாய்? எப்படிப் பூசை கண்டாய்?" என்று கேட்டார். அதற்கவள் தான் பூசைக்குப் போகும்போது வழியில் கொஞ்சம் சிரித்துப் பேசிக்கொண்டும், இழிவான விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்துக் கொண்டும் போவது வழக்கம் என்றும், கோவிலில் பல காரியங்களைப் பற்றி மனதில் நினைப்பதாகவும், சிலவிசை பக்கத்திலிருந்தவர்களோடு பேசுவது மல்லாமல், பலமுறை தூக்க மயக்கத்தோடும் பூசை கண்டதாகவும் சொன்னாள். அதற்குக் குருவானவர், "நீ பானையில் போட்ட கல் எல்லாம் காணாமல்போனது அதிசயமல்ல; ஏனெனில், நீ அனுச்சாரமாய் கண்ட பூசைகள் எல்லாம் நிஷ்பலமாகி விட்டன" என்றார்.

நாம் பூசை காணும்போது கடனுக்காக மாத்திரம் பூசை காணாமல், அதைப் பக்தி கவனத்தோடு காணவேண்டியது. அந்நேரத்தில் பேச்சுக்கும் தூக்க மயக்கத்துக்கும் இடங் கொடுக்காமல் செபமாலையை ஜெபித்துக்கொண்டாவது, ஜெபப் புஸ்தகத்தை வாசித்துக் கொண்டாவது பூசை காண்பது உத்தமம்.

The hidden treasure.

**6. ஒரு அரசனுடைய கடுந் தண்டனை.**—ஜப்பான் தேசத்தில், அநேக வருஷங்களுக்குமுன் அத்தேசத்து அரசன் ஞானதீட்சை பெற்று உத்தம கிறிஸ்துவனாய் ஒழுகிவந்தான். திவ்விய பூசை நேரத்தில் போர்ச்சேவகன் ஒருவன் அவமரியாதையாய்ப் பூசை கண்டதைப்பற்றிக் கேள்விப்பட்ட இந்த அரசன் அதிக கோபங்கொண்டு அவனுக்கு மரணத்தீர்ப்பு கட்டளையிட்டான். சிற்றரசரும் பிரபுக்களும் அவனுக்கு மன்னிப்பு கொடுக்கும்படிக் கேட்டுக்கொண்டதின்மேல் இராயர் அவனுக்குப் புத்திமதிசொல்லி இனிமேல் இராஜாதி இராஜனை சர்வேசுரன் எழுந்தருளும் பூசை நேரத்தில் தகுந்த பக்தி வணக்கத்துடன் இருக்கும்படி கட்டளையிட்டு மரண தண்டனையை ரத்து செய்தார்.

Father Charlevoix.

**7. சர்வேசுரனுடைய வார்த்தையைக் கேளாதவன்.**—ஜெர்மன் தேசத்தில் ஒரு ஊரிலிருந்த கிறிஸ்துவர்களில் ஒருவன் புத்தி பிரசங்கத்துக்குப் போகிறதில்லை. ஞாயிற்றுக்கிழமையில் பூசை கண்டபோதிலும் பூசைக்குப்பின் நடக்கும் பிரசங்கத்துக்கு இராமல் பூசை முடிந்த உடனே மற்றக் கிறிஸ்துவர்களுக்குத் துர்மாதிரிகையாக கோவிலைவிட்டு வீட்டுக்குப் புறப்படுவான். சாயந்தர நேரத்தில் நடக்கும் பிரசங்கத்துக்கும் வரமாட்டான். இதைப் பற்றி அவனுக்குக் குருவானவர் சொன்ன புத்தியும் சபலமானது.

இவன் இறந்த பிறகு இவனுடைய பிரேதம் கோவிலுக்குக் கொண்டுவரப்பட்டது. இவனுடைய ஆத்துமத்துக்காக குருவானவர் பூசை செய்ய வரும் சமயத்தில், பீடத்திலிருந்த பெரிய பாடுபட்ட சுருபம் தன் இரு கரங்களையும் சிலுவையினின்று கழற்றிக்கொண்டு தன் இரண்டு செவிகளையும் மூடிக்கொண்ட மேரையாய்க் காணப்பட்டது. அங்கு கூடினவர்கள் இதைக் கண்டு அதிசய பிரமை கொண்டார்கள். அப்போது குருவானவர் பூசையைத் துவக்காமல், அங்கு கூடிய சபையை நோக்கி, "இன்று மரணமாகி சவப் பெட்டியில் வைக்கப்பட் டிருக்கு மனிதன், தன் சீவிய காலத்தில் புத்தி பிரசங்கங்களைக் கேட்காதிருந்ததற்குத் தண்டனையாக, சேசுநாதரும் அவனுடைய ஆத்துமத்துக்காக செய்யப்படும் செபம் வேண்டுதலுக்குக் காது கொடுக்கிறதில்லை யென்று அறியச் செய்ய சிலுவை சுருபத்தில் இவ்வதிசயம் நடக்கிற" தென்று பிரசங்கித்தார்.

நீங்களும் பிள்ளைகளே, தேவவார்த்தை அடங்கிய புத்தி பிரசங்கங்களைக் கேட்க அசட்டை செய்யாதேயுங்கள். சிலர், தங்களுக்கு வேதமெல்லாம் தெரியுமென்கிற கர்வத்தால் பிரசங்கத்துக்கு வரமாட்டார்கள். சிலவிசை வந்தபோதிலும் பிரசங்க



நேரத்தில் கோவிலுக்கு வெளியே நின்று கொண்டும், உலாவிக்கொண்டும், பேசிக் கொண்டும் சகலருக்கும் துர்மாதிரிகையை யுண்டுபண்ணுவார்கள். இது மகாப் பாவம்.

T. Lohner.

**8. அர்ச். அந்தோனியார் மீன்களுக்குப் பிரசங்கித்தார்.** -அர்ச். அந்தோனியார் பெரும்பாலும் பதிதரால் நிறையப்பட்ட ரிமினி என்னும் நகருக்குப்போய் மனிதரா லுண்டாக்கப்பட்ட பதித வேதத்தை விட்டுவிட்டு, சர்வேசுரனால் உண்டாக்கப்பட்ட சத்தியவேதத்தில் சேர்ந்தால் மாத்திரம் இரக்ஷணியம் அடையலாமென்று மகா ஊக்கப் பிரயாசையுடன் பிரசங்கித்து வந்தார். அந்நகரத்தார் அர்ச். அந்தோனியாருடைய பிரசங்கத்தைக் கேட்கவில்லை அப்படிக் கேட்டவர்களும் சத்தியவேதத்தில் சேரவுமில்லை.

ஒருநாள் இவர் சர்வேசுரனுடைய விசேஷ ஏவுதலால் தூண்டப்பட்டு கடல் கரைக்குப்போய் மீன்களுக்குப் பிரசங்கிக்கத் தொடங்கினார். அப்போது மீன்கள் எல்லாம் ஜலத்துக்குமேல் தலையை உயர்த்தி அசையாமல் நின்றன. அர்ச்சியசிஷ்டவர் மீன்களை நோக்கி, "உங்களை உண்டாக்கினவர் சர்வேசுரன்; அவருக்கு நீங்கள் நன்றி யறிந்தவர்களா யிருக்கவேண்டும். ஜலம் உங்கள் வீடு. இந்தப் பிரமாண்டமான சமுத்திரத்தைச் சர்வேசுரன் உண்டாக்கி, நீங்கள் அதில் சஞ்சாரம் செய்யும்படி உங்களுக்குக் கற்பித்திருப்பதால் அவருக்கு நன்றிபுரியுங்கள்:" என்று பிரசங்கித்தார். இதைப்பற்றிக் கேள்விப்பட்ட அவ்வூரார் அவ்விடத்துக்குத் துரிதமாய் ஓடி வந்து, மீன்கள் ஜலத்துக்குமேல் தலைகளை உயர்த்தி அர்ச்சியசிஷ்டவருடைய பிரசங்கத்தைக் கவனமாய்க் கேட்கிறதைக் கண்டு அதிசயித்து, தங்கள் தப்பிதத்துக்காக அர்ச்சியசிஷ்டவரிடத்தில் பொறுத்தல்தரமன்றாடி, தங்களுக்குப் பிரசங்கம் செய்யும்படிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதின் மேல், அர்ச். அந்தோனியார் அங்குகூடின கிறிஸ்துவர்களும் பதிதருமான திரளான ஜனக்கூட்டத்துக்குப் பிரசங்கம் செய்தார். பிரசங்கம் முடியவே, அர்ச்சியசிஷ்டவர் மீன்கள் பக்கமாய்த் திரும்பி, அவைகளை ஆசீர்வதித்து, "நீங்கள் போகலாம்" என்னவே அங்கு காணப்பட்ட திரளான மீன்கள் தண்ணீரில் அமிழ்ந்திமறைந்தன.

(அர்ச். அந்தோனியார் சரித்திரம்.)

(இன்னும் வரும்.)

---

## GNANAMANI, III PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 20-ம் அதிகாரம்.

### அவர் அவ்வளவு நல்லவராயிருந்தால் உன்னையேன் காலெடுத்து உதைத்தார்?

---

தேவதாஸ் பண்டிதர் நாளுக்கு நாள் பிரக்கியாதியாய்ச் சகலராலும் புகழ் கூறப்பட்டு, தன் மாணாக்கரால் அதிக கௌரதைப் படுத்தப்பட்டு வந்தபடியால், இவருடைய பெயர் தென் இந்தியா முழுமையிலும் சிறப்புற்றோங்கி, மஹான்கள் அவரைத் தங்கள் மாளிகைக்கு வரவழைத்து, அவருடைய சங்கீத வாத்தியத்தையும் இன்பமான பாடலையுங் கேட்டுக் களிகூர்ந்து குதூஹலத்துடன் அவரை விசாரித்து வருவார்கள். இக்காரணங்களை முன்னிட்டு, பண்டிதர்—தஞ்சாவூர், திருச்சி, மதுரை, ராமநாதபுரம், புதுக்கோட்டை, புதுவை, கொல்லம், கொச்சி, திருவாங்கூர், மைசூர், காளாஸ்திரீ, வெங்கிடகிரி முதலிய பட்டணங்களில் போய்த் தமது அரிய வித்தை சாமர்த்தியத்தைக் காட்டுவதுண்டு. அந்தந்தக் கனவான்கள் இவரை வெகுவாய் மெச்சிப் புகழ்ந்து, தாராளமாய் அவருக்குப் பரிசு கொடுத்து அனுப்புவார்கள்.

ஒருநாள் செங்கற்பட்டு கலெக்டர் பியூன் அவருக்கு ஒரு கடிதம் கொண்டுபோய்க் கொடுத்தான். அதை யவர் வாசித்தபோது, கவர்னர் துரையவர்கள் இன்னம் ஒரு மாதத்திற்குள் செங்கற்பட்டுக்கு வருவதாகவும், அவர் விஜயம் செய்த மறுநாள் சாயந்திரம் தன் பங்களாவில் அவருக்கு ஒரு பாட்டுக்கச்சேரியுடன் சிற்றுண்டி கொடுப்பதாகவும் (Garden party) அந்தப் பாட்டுக் கச்சேரியைப் பண்டிதரே நடத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொள்வதாக கலெக்டர்

துரை எழுதி யிருந்தார். பண்டிதரும் அதற்குச் சம்மதித்து உடனே கலெக்டருக்கு மறுமொழி கொடுத்தனுப்பினர்.

மறுநாளே விநோதமான பாடல்களைத் தேடிப் பார்த்துக் குறித்துக்கொண்டார். தாமும் சில விசித்திரமான பாடல்களைக் கட்டி, அவைகளுக்கு இசைவானதும் இன்பமானதுமான இராகங்களை யுண்டுபண்ணித் தமது மாணுக்கருக்குக் கற்பித்து வந்தார்.

பண்டிதருடைய கல்விச்சாலையில் படித்தவர்களில் ராமகிருஷ்ணன் என்பவன் மகா கெட்டிக்காரன். வாத்தியங்களை வாசிப்பதிலும் சங்கீதங்களைப் பாடுவதிலும் இவனுக் கிணையானவன் ஒருவனுமில்லை. இவன் பண்டிதருக்கு வலது கரம்போ லிருந்ததைப்பற்றி இவனை மற்றவர்கள் குட்டிப்பண்டித ரென்று அழைப்பார்கள்.

இந்த ராமகிருஷ்ணன் தாயுந் தகப்பனுமற்ற அநாதபக்ஷி. மீனாக்ஷி யென்னும் அவன் தங்கை யொருத்தி தவிர, அவனுக்கு வேறொரு ஆதரவுங் கிடையாது; பரம ஏழையா யிருந்தும் தங்கமான குணமுடையவன். இவன் மட்டில் பண்டிதர் அதிக நேசம் வைத்து மிக்க சிரத்தையுடன் அவனுக்குக் கல்வி கற்பித்துக் கொடுப்பார். இவனுடைய தரித்திர தசையைப் பற்றி, இவனிடத்தில் மாத சம்பளம் வசூல் செய்யாததுடன், தாமே மீ 1-க்கு ரூபா 5 தர்மமாகக் கொடுத் துதவுவார். தாம் போகும் இடங்களுக் கெல்லாம் ராமகிருஷ்ணனைக்கூட அழைத்துச் செல்வார். மேலும் ராமகிருஷ்ணன் ஒருவன்தான் தன் பேரை யெடுக்கக் கூடுமென்று சொல்லுவார். இவனுடைய புத்தி சாமர்த்தியத்தால் பண்டிதரைப் போல், எந்த வாத்தியக்கருவி யானாலுஞ்சரி, வெகு இலேசாய் வாசிப்பான். கடினமான பாடல்களைச் சுலபத்தில் கற்றறிந்து பாடுவான். இவ்வளவு வல்லவனாயிருந்தும், ராமகிருஷ்ணனிடம் இடம்பம் காணப்படவில்லை. யாதொரு பாடத்தைத் தனக்குக் கற்றுக்கொடுக்கும்படி கேட்கும் உடன் மாணுக்கருக்குச் சந்தோஷத்துடன் கற்றுக்கொடுப்பான். சகலருக்கும் வெகு வாஞ்சனையாய் நடந்து வருவான்.

ராமகிருஷ்ணன் பண்டிதரை யெவ்வளவு உருக்கமாய் நேசித்து வந்தானென்றால், அவரே தன் தாய் தகப்பன், அவரே தன் குரு, தெய்வம் என்பான். அவருக்கு ஒரு சிறு குழந்தையைப்போல் பணிவாய்க் கீழ்ப்படிவான். இவனுடைய இந்தக் கல்யாண குணங்களை யறிந்த பண்டிதர் அவனை மிகவே ஸ்நேகித்துவந்தார்.

கவர்னர் துரையவர்கள் சமுகத்தில் செய்ய இருக்கும் பாட்டுக்கச்சேரியில், ராமகிருஷ்ணன் பிட்டில், வீணை, பியானோ முதலிய வாத்தியங்களை வாசிக்க நியமிக்கப்பட் டிருந்தபடியால், பண்டிதர் மேற்பார்வை மாத்திரம் பார்க்கும்படி எண்ணங்கொண்டிருந்தார். தான் வாசிக்க வேண்டிய வாத்தியங்களையும் பாடவேண்டிய பாட்டுகளையும் ராமகிருஷ்ணன் ஐயந்திரிபறக் கற்றுக்கொண்டான். இதில் சேர்ந்த சுமார் 35 பேரும் தங்கள் தங்கள் வாத்தியங்களையும் பாட்டுகளையும் கற்றபின், ஒருநாள் இராத்திரி தமது ஸ்நேகிதர்களை வரவழைத்து, 35 பேருந் தங்கள் வாத்தியக் கருவிகளை வாசித்துப் பாட்டுகளுடன் நடித்தபோது, வந்தவர்கள் அதிசய பிரமைகொண்டு வான மண்டலத்தின் கேளிக்கைக்கு ஒப்பாயிருக்கிறதென்றார்கள். இவ்வளவு இன்னிசையான வாத்தியங்களையும் பாடல்களையும் பண்டிதர் கேட்டபோது, அவருக்கே சொல்லிமுடியாத ஆநந்தமுண்டாகிச் சந்தோஷ பாஷ்பங்களைச் சொரிந்தார். ராமகிருஷ்ணனுடைய இனிய குரல் சத்தத்தையும் வாத்தியங்களை இமைப்பொழுதில் அசைத்துக் கொட்டும் துரிதத்தையும் கண்டவர்கள் அதிசயித்தார்கள்! இவனும் ஒருநாள் பண்டிதனென்னும் பேர் பெறுவானென்று தேவதாஸ் பண்டிதர் சொன்னார். ராமகிருஷ்ணனோ, அங்கு வந்திருந்த கனவான்களுடையவும் தன் பண்டிதருடையவும் புகழ்ச்சியால் கிஞ்சித் தென்கிலும் அகந்தை கொண்டவனல்ல.

இவ்வாறு சகலமும் சித்தமான பின்பு, பண்டிதரின் வேண்டுகோளின்பேரில் கலெக்ட்டர் பண்டிதருடைய பங்களாவுக்கு வந்து, மூஸ்திப்பு செய்யப்பட்டிருக்கும் வாத்தியங்களையும் பாடல்களையுங் கேட்கவே, சந்தோஷித்து மகிழ்ந்து பண்டிதருக்கும் மாணுக்கருக்கும் ந்தனம் புரிந்தார்!

செங்கற்பட்டில் கவர்னர் துரையவர்கள் விஜயஞ்செய்ய இருக்கும் இடங்கள் எல்லாம் பழுதுபார்த்துச் சுத்தஞ் செய்யப்பட்டன. ரோடுகளும் ரஸ்தாக்களும் புதிப்பிக்கப்பட்டு, வீதிகளும் துப்புரவாக்கப்பட்டு, வீடுகளும் சர்க்கார் கட்டிடங்களும் வெள்ளை யடிக்கப்பட்டு, ஊர்



வெகு சுசிகரமாயும் அலங்காரமாயும் காணப்பட்டது.

கவர்னர் துரை விஜயஞ்செய்ய எட்டு நாளைக்கு முன் ராமகிருஷ்ணனுக்கு ஜ்வரங்கண்டு தன்வீட்டிலே தங்கிவிட்டான். தேவதாஸ் பண்டிதர் இதைப்பற்றிக் கேள்விப்பட்டுத், துக்கங்கொண்டு தன் சேவகனை ராமகிருஷ்ணன் வீட்டுக்கு அனுப்பி, அவனைப் பார்த்து வரும்படி கற்பித்தார். சேவகன் பண்டிதரிடம் திரும்பி வந்து அவருக்குக் காய்ச்சல் அடிக்கிறது; இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குள் கொஞ்சம் இலகுவாகுமென்றான். இதற்குப்பிறகு ராமகிருஷ்ணனைப்பற்றி தேவதாஸ் பண்டிதர் முற்றும் மறந்துபோனார். அங்கங்கு பிரமாண்டமான பந்தல்கள் போடப்பட்டன. வீதிகளில் மகுடதோரணங்கள் சட்டப்பட்டு அலங்காரமாய்க் காணப்பட்டது. கவர்னர் வருவதற்கு முந்தினநாள் தேவதாஸ் பண்டிதருக்கு ராமகிருஷ்ணனைப் பற்றி ஞாபகம்வந்து, சேவகனை அனுப்பி விசாரித்து வரும்படி சொன்னார். மறுநாள் 8 மணிக்குத் தான் வருவதாகச் சொல்லியனுப்பினான். மறுநாள் 8 மணிமுதல் 12 வரையிலும் காத்திருந்தும் ராமகிருஷ்ணன் வரக்காணோம். உடனே தேவதாஸ் பண்டிதருக்குச் சொல்லமுடியாத கோபமுண்டானது; ஏனெனில், கவர்னர் வந்து இறங்கி விட்டார். இராத்திரி எட்டுமணிக்குப் பாட்டுக்கச்சேரி நடக்காவிட்டால் தனக்குப் பெரும் அவமானமும் வெட்கக்கேடும் உண்டாகும் என்று எண்ணி பொறுக்கக்கூடாத கோபமும் விசனமுங்கொண்டவராய் எழுந்து ராமகிருஷ்ணன் வீட்டுக்குப் புறப்பட்டார்.

வீடுபோய்ச் சேரவே, சிறு பாயில் படுத்திருந்த ராமகிருஷ்ணன் ஒரு கையால் தன் கண்ணை மூடிக்கொண்டும் மற்றொன்றால் இடது பக்கத்து விலாவைப் பிடித்துக்கொண்டும் நித்திரை செய்கிறவனைப் போலிருக்கக் காணப்பட்டான்.

தேவதாஸ் பண்டிதர் அவனைப் பார்த்தபோது, தான் தயார்செய்த வேலை யெல்லாம் அவலமானதை நினைக்க, ஆக்ரோஷமுண்டாகி, கோபத்துடன் அவன் இடதுபக்கத்தில் தன் காலால் பலமாய் உதைத்தார். உதைத்த க்ஷணமே "ஐயையோ" வென்று இராமகிருஷ்ணன் பேரொலியாய்க் கத்தினான். அடுப்பாங்கரையில் வேலையாயிருந்த அவன் தங்கை மீனாக்ஷி, ஓடிவந்து பண்டிதரைநோக்கி, "என்ன ஐயா, அப்படி உதைக்கிறீர்கள்? சற்றுநேரத்துக்குமுன் தான் ஒற்றிடம் இட்டு பற்றுப்போட்டேன். வலியுஞ்சற்றுத் தணிந்து நித்திரை போகும்போது காலால் எட்டி உதைக்கிறீர்களே?" என்றுசொன்னாள். அப்போது ராமகிருஷ்ணன் கண்திறந்து பார்த்து, தன் எஜமானன் என்று அறிந்து, "ஐயா, சாமி! தாசன் தண்டம்" என்று கை இரண்டையும் எடுத்துத் தலைமேல்வைத்து வந்தனம்புரிந்து, வீங்கியிருக்கும் தன் இடது பக்கத்தைக்காட்டி, மாலை மாலையாய்க் கண்ணீர் உதிர்த்து அழத்தொடங்கினான். உடனே பண்டிதரும் அவன் பக்கத்தில் கீழே உட்கார்ந்து "என்ன உனக்கு ராமகிருஷ்ணா?" என்றார்.

ராம.—ஐயா, எஜமானே! ஒரு வாரமாய் ஜ்வரங்கண்டு வருத்தப்பட்டேன். 2, 3 நாளாய் இந்த பக்கத்தில் வலியுண்டாகி, அதற்கு ஒற்றிடம், பற்று முதலியவைகளைப் போட்டதன் மேல் கொஞ்சம் இலகுவாயிருந்தது. இன்றைக்குச் சுகப்படுவேன் என்று நினைத்து, இன்று 8-மணிக்கு வருவதாக நேற்று உங்கள் பியூன் வசம் சொல்லி னுப்பினேன். ஆனால்......

தேவதா.—நான் உதைத்ததால் அதிக நோவு உண்டானதல்லவா?

ராம.—ஆம், முன்னிலும் அதிக நோவு உண்டானது.

தேவ.—(உடனே பண்டிதருடைய மனம் மெழுகுபோல உருகி, கண்கலங்கி அதில் நின்று உதிரும் முத்துபோன்ற கண்ணீரைத் தமது கைக்குட்டையால் துடைத்துக்கொண்டு) ராமகிருஷ்ணா, நீ யெனக்கு மன்னிப்பு கொடுக்கவேண்டும்.

ராம.—என்ன! தாங்களே என் தாயுந் தகப்பனும், குருவும், உபகாரியுமாயிருக்க, தாங்கள் என்னைக் கண்டிக்க நியாயமில்லையோ? ஐயா, எஜமானே! என்றால் இன்று உங்களுக்கு உண்டாயிருக்கும் துக்கமும் மனவருத்தமும் எனக்கு நன்றாய்த் தெரியும். எவ்வளவோ பிரயாசைப்பட்டு மூஸ்திப்பு செய்தீர்கள்! கவர்னரும் கலெக்டரும் இன்னும் மற்ற பிரபுக்களும் ஆசை ஆவலுடன் அபேக்ஷித்த பாட்டுக்கச்சேரி என்றால் பின்னப்பட்டதைப்பற்றி நினைக்கும்போது, இந்த வியாதியிலும் அது எனக்கு அதிக வருத்தத்தை உண்டாக்குகிறது! (என்று அழுதான்.)

தேவ.—அழாதே, ராமகிருஷ்ணா! பாட்டுக் கச்சேரியைப்பற்றி சிந்தைப்படாதே. எப்படியாகிலும் நான் அதை சமாளித்துக்கொள்வேன். ஆனால் என் முன்கோபத்தால் உனக்கு உண்டான வாதையைப் பற்றி நான் நினைக்க நினைக்க, எனக்கு அதிக மனவருத்தமும் விலேசமும் உண்டாகிறது.

ராம.—என் பேருபகாரியே! என்னைப்பற்றித் தாங்கள் கவலைப்படவேண்டாம். தாங்கள் கஸ்திப்படுவதால் என் வியாதி அதிகரிக்குமென்று நினைத்துக் கொள்ளுங்கள். கடந்த மூன்று வருஷக்காலமாய் தாங்கள் அடியேனுக்கு அன்ன வஸ்திரங் கொடுத்து கல்விப் பயிற்றினதைப்பற்றி நினைக்கும்போதும், போன வாரத்தில் தாங்கள் எனக்கு அனுப்பிவைத்த நேர்த்தியான உடுப்பைப் பார்க்கும்போதும் தங்களுக்கு என்ன கைம்மாறு செய்வேனென்று தெரியவில்லை. தாங்களே எனக்குத் தாய் தகப்பனும் குருவும் எஜமானும் இன்னம் கடவுளுமாயிருக்கிறீரென்று எண்ணுகிறேன்.

தேவ.—என்ன ராமகிருஷ்ணா? அற்பமனிதன் எப்படி கடவுளாவான்? அப்படிச் சொல்லாதே.

ராம.—தங்களுடைய நற் குணங்களையும் உதார குணத்தையும், தயாளத்துக்குரிய தர்ம குணத்தையும் பெருந் தன்மையையும் பற்றி அவ்வாறு பேசலானேன்.

தேவ.—ஆம், ராமகிருஷ்ணா, உன் நன்னடத்தையையும் கீழ்ப்படிதலையும் நன்றியறிந்த குணத்தையும்பற்றி உன்மீது அவ்வளவு பக்ஷம் வைத்தேன். மேலும் நீ சிங்கார வித்தைகளை அதி சீக்கிரத்தில் கற்றுணர்ந்ததைப் பற்றியும் உன்மீது எனக்கு அதிகப் பிரீதியுண்டானது.

இவ்வாறு அவர்க ளிருவருக்கும் சம்பாஷணை நடக்கும்போது, தனக்குப் பலவீனமுண்டாகிப் பேச அசக்தி யுண்டாகிறதென்று ராமகிருஷ்ணன் பண்டிதருக்குச் சொல்லவே, அவரும் எழுந்து, "பயப்படாதே ராமகிருஷ்ணா, அரைமணி நேரத்துக்குள் பெரிய டாக்டர் வந்து உனக்கு அவசரமான மருந்துகளைக் கொடுத்து குணப்படுத்துவார். இன்று சாயந்திரம் எட்டு மணிக்கு கலெக்டர் வீட்டில் பாட்டுக்கச்சேரி நடக்கும். மறுநாள் உன்னை வந்து பார்ப்பேன்" என்று, தமது சட்டைச் சாக்கிலிருந்து பத்து ரூபாய் நோட்டை யெடுத்து ராமகிருஷ்ணன் கையில் கொடுத்து, உன் "செலவுக்கு வைத்துக் கொள்" என்று சொல்லி வெளியே புறப்பட்டார்.

பண்டிதர் வீட்டைவிட்டு புறப்பட்டவுடனே மீனாக்ஷியம்மாள் தன் தமயனிடம் சென்று துக்கத்துடன் வீங்கியிருக்கும் அவனுடைய இடது பக்கத்தில் ஒற்றிடம் கொடுத்துக்கொண்டிருந்தாள். ராம கிருஷ்ணனுக்கு உண்டாயிருந்த வலி சற்று குறையவே, தன் தங்கையின் கழுத்தில் கை போட்டுக்கொண்டு, "மீனாக்ஷி! சற்று நேரத்துக்குமுன் இங்கே வந்துபோனவர் யாரென்று உனக்குத் தெரியுமா?"

மீனா.—எனக்குத் தெரியாது அண்ணே.

ராம.—இவர்தான் பண்டிதர்.

மீனா.—இவர் தானா? ஐயோ! நான் அவரை பார்த்தபோது தண்டங்கூட போடவில்லையே!

ராம.—நாம் அவரை அறியோம். அவரும் நம்மையும் நமது பெரியோரையும் அறியார். இருந்தும் நமது மட்டில் எவ்வளவோ கடாக்ஷம் வைத்திருக்கிறார். கடந்த மூன்று வருஷகாலமாய் அன்னவஸ்திரங் கொடுத்துக் காப்பாற்றுகிறார்! இனமாக கல்வி பயிற்றுகிறார். 50 ரூபாய் செலவு செய்து உடுப்பு தைத்து அனுப்பினார்! இப்போது நமது செலவுக்குப் பத்து ரூபாய் கொடுத்துப் போனார்! இதை வைத்துக்கொள் (என்று அவள் கையில் கொடுத்து) இந்த பரமோபகாரிக்கு என்ன கைம்மாறு செய்வோம் மீனாக்ஷி! நமது இஷ்ட தேவதைகள் முதலாய் இவ்வளவு பக்ஷமும் நேசமும் உள்ளவர்களாக நமது புராணத்தில் வாசித்ததில்லை. இப்பேர்ப்பட்ட மகானுபாவனைப்பற்றி நினைக்க நினைக்க அவர் மட்டில் எனக்கு நேசப்பெருக்கம் உண்டாகி, அவருக்காக உயிர்கொடுக்க முதலாய் மனமுண்டாகிறது!

மீனா.—அவர் அவ்வளவு நல்லவரா யிருந்தால் உன்னையேன் காலெடுத்து உதைத்தார்?

ராம.—இதற்குமுன் நடந்தசங்கதி உனக்குத் தெரியாது. இன்று சாயந்திரம் எட்டுமணிக்கு கவர்னர்வந்து தங்கியிருக்கும் பங்களாவில் பெரும் வேடிக்கை நடக்கப்போகிறது. நமது பண்டிதரே அங்கே பாட்டுக்கச்சேரி நடத்தும்படி யேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் நான் முக்கியமான பாடல்களை பாடவும் வாத்தியங்களை வாசிக்கவும் நியமிக்கப்பட்டிருந்தேன்.



நேற்று பியூன் வந்து என்னை விசாரித்தபோது, கொஞ்சம் இலகுவாயிருந்தபடியால், இன்றைக்கு பூரண சௌக்கியமுண்டாகுமென்று எண்ணி, இன்று காலை எட்டுமணிக்கு வருவேனென்று சொல்லியனுப்பினேன். எனக்கு வியாதி அதிகரித்ததின்பேரில் நான் போகவில்லை. நான் வருவேன் வருவேன் என்று மத்தியான மட்டும் காத்திருந்தும் நான் போகாத படியால் கோபங்கொண்டு ஆத்திரத்துடன் என்னை உதைத்திருக்கலாம். ஆனால் இன்று காலையில் ஒரு ஆளை அவரிடம் அனுப்பி, என் வியாதியின் ஸ்திதியை அவருக்குத் தெரியப்படுத்தி யிருப்பேனாகில் இந்தச் சங்கடமெல்லாம் நேரிட்டிருக்காது. போனது போகட்டும் நீ ஒருகாரியஞ் செய்யவேண்டியது.

மீனா.—என்ன அண்ணே?

ராம.—நான் செத்தாலும் பிழைத்தாலும் அவர் இன்று என்னை உதைத்த சங்கதியைப் பற்றி யாரோடுஞ் சொல்லவேண்டாம்.

மீனா.—அப்படியே ஆகட்டும் அண்ணா.

(இன்னும் வரும்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்

---

### தெய்வத்தால் ஸ்தாபிக்கப்பட்ட கத்தோலிக்கு வேதத்தின் லஷணங்கள், புறமதஸ்தர்களுடன் நடமாட்டம்.

(முன் தொடர்ச்சி)

36. அக்கியான நாடகங்களுக்கு விசேஷமாய்ச் சிற்றின்ப நாடகங்களுக்குப் போவதும் அவைகளில் தாங்கள் சேர்ந்து ஆடுவதும் ஒழுங்கல்ல. (அக்கியானிகள் சில சமயங்களில் சன்மார்க்கத்தைப் புகட்டும் நல்ல நாடகங்களை ஆடுவதுண்டு. உதாரணத்திற்கு அரிச்சந்திரன், நளன், சாகுந்தலா முதலியன. ஆனால் அந்நாடகங்களில் முதலாய் இடைக்கிடையே பாடப்படும் சிற்றின்பப் பாடல்களைப் பற்றியும் அசுத்த கூத்தாட்டங்களைப் பற்றியும், பொதுவாய்க் கிறிஸ்துவர்கள் அந்நாடகங்களுக்குப் போகாமலிருப்பது நன்று.)

37. தாழ்ந்த ஜாதியாரை வேதத்தில் சேர்த்தால் தனக்கு மிஞ்சிப் போவார்களென்றெண்ணி பின்னிடைவது ஒழுங்கல்ல.

38. அக்கியானிகள் அநுசரிக்கும் ஆயுதபூஜையன்று கிறிஸ்துவ கைத்தொழிலாளிகளும் தங்கள் ஆயுதங்களையும், அவல் கடலை முதலிய பதார்த்தங்களையும் பரப்பிவைத்து ஜெபம் செய்வது ஒழுங்கல்ல. (இதில் என்ன பேய் மயக்கமோ தெரியவில்லை.)

39. இந்துக்களை நேருக்கு நேராக அக்கியானிக ளென்றும், புரொட்டெஸ்டாண்டாரைப்பதிதரென்றும் யூரேஷியன், ஈஸ்ட்இந்தியர்களைச் சட்டைக்காரரென்றும் பறங்கிக்காரரென்றும், தாழ்ந்த ஜாதியாரைப் பறையரென்றும், அவர்களுள்ளிருக்கும் கத்தோலிக்குச் சந்நியாசிகளையும் கன்னியர்களையும், பறச் சந்நியாசிகளென்றும் பறக் கன்னியாஸ்திரிகளென்றும் அழைப்பது ஒழுங்கல்ல. (இப்படிப்பட்ட பெயர்களை யவர்கள் விரும்புகிறதில்லை யென்று, விவேகமுள்ளவர்கள் கண்டும், ஏன் அவர்களை மனநோகப்பண்ணுவது?)

40 வேலையாட்கள் கோவிலுக்குப் போகவேண்டுமென்று பொய் சொல்லி ரஜா கேட்பது ஒழுங்கல்ல (தாழ்ந்த பதவியிலிருக்கும் சில கிறிஸ்துவர்கள் புறமதஸ்தவர்களான தங்கள் எஜமான்களிடம் கோவிலுக்குப்போக ரஜாவேண்டுமென்று அடுத்தடுத்து அவர்களை அலட்டுவதினால், அவர்கள் வெறுப்புகொண்டு, சீ, இந்த ரோமான் கத்தோலிக்கர்களை வேலைக்கு வைப்பதே பிசகென்று முறையிடுவார்கள். கடன் பூசைக்குப்போக கண்டிப்பாகவும், மற்ற ஜெபக்கிருத்தியங்களுக்கு தாங்கள் செய்யவேண்டிய அலுவலின் நிலைமையைக் கவனித்தும் ரஜா கேட்பது முறை).

41. சில கிறிஸ்துவர்கள் தங்களுடைய தரித்திர நிலைமையைப்பற்றி சங்கோசப்படுவது ஒழுங்கல்ல. (கிறிஸ்து வேதம் பொது வேதம், சகல அந்தஸ்தினருக்கும் உரித்தான வேதம்).

42. பிச்சைக்காரருக்கு விருந்து செய்ய கோழி வாத்துகளை வளர்த்தால், அவைகளுக்கு "சந்தியாகப்பர் சேவல்,"

"அந்தோனியார் வாத்து" என்று பெயரிடுவது ஒழுங்கல்ல.

43. புதுக் கிறிஸ்துவர்களுடைய விபரீத நடத்தையைப் பற்றி சங்கோசப்படுவது ஒழுங்கல்ல. (கிறிஸ்துவ விசுவாசம் வேரூன்றிய பிறகுதான் யாரும் உத்தமர்களாவார்கள்.)

44. துலுக்கர், மாப்பிள்ளை, லப்பை, சோனகர் மத்தியில் குடியிருப்பது ஒழுங்கல்ல.

45 அசுத்தவார்த்தை பேசுகிறவர்கள் மத்தியில், சாராயம் கள்ளுக்கடை சமீபத்தில், மற்றும் துன்மார்க்கர்களிடையில் குடியிருப்பது ஒழுங்கல்ல (பொதுவாய்ச் சேரிகளிலும், அநேக சமயங்களில் நல்ல வீதிகளில் முதலாய் உபயோகிக்கப்படும் வண்டவார்த்தைகளையும் ஒடிய உதாசனமொழிகளையும் காதுகொடுத்து கேட்கமுடியாது. குடிவெறி மயக்கத்தால் அப்படிப்பட்ட அவலட்சண வார்த்தைகளை உபயோகிப்பவர்களு முண்டு: இருதயத்தின் சம்பூரணத்தினால் வாய் பேசுமென்றபடி வேண்டுமென்று ஆங்காரத்தினால் அப்படிப் பேசுபவர்களுமுண்டு. கோவிலில் சம்மனசுக்களைப் போலவும், தெருவீதிகளில் அர்ச்சியசிஷ்டவர்களைப் போலவும், வீட்டில் பேய்களைப் போலுமிருக்கும் பெண்பிள்ளைகள் தங்கள் வெறுப்பை, கோபத்தை, ஆக்ரோஷத்தைக் காட்டவேண்டுமானால், மலச்சட்டியைப் போன்ற தங்கள் ஊத்தை வாயைத் திறந்து கொட்டுவதுமுண்டு. உண்மையாகவே, அசுத்தவார்த்தைகள் இந்தியாவின் சாபமென்பதாய், உலகத்தில் பலஊர் சுற்றி அநுபவ மடைந்திருக்கும் ஐரோப்பியர் நிச்சயிக்கிறார்கள். அசுத்த வார்த்தைகள் உபயோகிக்குமிடங்களில் வசிக்கும் பிள்ளைகளை எவ்வளவு சீக்கிரம் மோகவிஷம் பற்றிக்கொள்ளுகிறது!! அப்படிப்பட்ட இடங்களில் வசிக்கும் குடும்பங்களில் சீர்கெட்டத்தன மென்ன? சமுசாரப்பிரிவு எத்தனை. தங்கள் பெண்டு பிள்ளைகளை ஒழுங்காய்வைக்கப் பிரிமுள்ள கிறிஸ்துவர்கள், அசுத்த வார்த்தைகளை உபயோகிக்குமிடங்களில் வசிப்பது தங்களுக்கு யோக்கியமன்றென் றுணர்ந்து, தங்கள் வீண் செலவைக் குறைத்து, அதிக வாடகை கொடுத்து, உத்தமர் மத்தியில் சீவித்துவருவது சுகிர்தம்.)

46. கிறிஸ்தவர்கள் தங்கள்வீடுகளில் அசுத்த படங்களையும் பிரதிமைகளையும் வைப்பது ஒழுங்கல்ல. (கிறிஸ்துவர்களுள் சாதாரண அந்தஸ்திலிருப்பவர்கள் தங்கள் வீடுகளில் பீடம் ஜோடித்து மோக்ஷவாசிகளின் படங்களையும் சுரூபங்களையும் ஸ்தாபிப்பார்கள். ஆனால் படித்தவர்களென்றும் உத்தியோகஸ்தர்களென்றும் பெருமை பாராட்டுகிறவர்களோ வெனில், ஊஞ்சல் படங்களையும், அரைமட்டும் நிர்வாணமாயிருக்கும் மோகினிபடங்களையும், மற்றும் லேடிமார் படங்களையும் பொன்முலாம் பூசிய நல்ல சட்டங்களில் வைத்து, நாலுபேர் நடமாடும் இடங்களில் ஸ்தாபிப்பார்கள். இதுதான் நாகரீகமாம். ஆ, ஆ, எப்படிப்பட்ட நாகரீகம். மாட்டு வால் வளர, வளர, கீழுக்கே போகிறது!)

47. இந்திய புரோட்டெஸ்டாண்டு மாதர்களின் வெளிச்சளுக்கைக் கண்டு மயங்கிப்போவது ழுழுங்கல்ல.

(உலக அனுபவமில்லாதவர்கள் விசேஷமாய் வாலிபர் புரொட்டெஸ்டாண்டு இந்தியமாதர்களது நவீன உடையையும், முக்காடில்லாத சிரசையும், அதில் துலங்கும் ஒய்யாரக் கொண்டையையும், நிமிர்ந்த நடையையும் அவர்கள் டென்னிஸ் ஆட்டத்தையும் ஆண்பிள்ளைகளுக்கொத்த தைரியத்துடன் அங்கிங்கு சல்லாபித்துக்கொண்டு உலாவுதலையும், அவர்களுக்கிருக்கும் இங்கிலீஷ் படிப்பையும் அப்படிப் படித்தவர்களுள் மிகுதியானபேர் அநேக வருஷம் வரைக்கும் கலியாணத்தைப்பற்றி அக்கரை கொள்ளாமல் அங்கிங்கு உத்தியோகம் வகித்துச் சுகசீவனம் செய்ய வருந்துவதையும் பார்த்து. அதுவே நாகரீகமென்றெண்ணி, தங்கள் பெண்டுகள் ஏன் அப்படியிருக்கக்கூடாதென்று ஏக்கங் கொள்ளுவார்கள். ஆயிரம் வருஷத்து அநுபவமுள்ள கத்தோலிக்குத் திருச்சபையானது ஒருநல்ல சமுசாரியைப்போல் தன் மக்களை நடத்தும் விதம் வேறு. பெண்மக்கள் துறவற அந்தஸ்தில் சேர்பவர்கள், மற்றும் வாத்தி, வைத்தியத் தொழிலை வகிப்பவர்கள் நீங்கலாக, மற்றனைவரும் கலியாணம்செய்து புருஷனுக்கமைந்து, பிள்ளைகளைப்பெற்று அவர்களை நல்ல வழியில் நடத்தவேண்டுமென்பதே அதன் நோக்கம். ஆகக்கொள்ள கனதனவான்களுக்கும், மேலான உத்தியோகஸ்தர்களுக்கும் வாழ்க்கைப்படும் ஸ்திரீகள் உயர்தரப் படிப்பையும், மத்திய அந்தஸ்தினருக்கும் ஏழைகளுக்கும் வாழ்க்கைப்படுபவர்கள் தாங்கள் சுகமாய் வாழ அத்தியாவசியமான படிப்பையும் கற்று, அனைவரும் தங்கள் தங்கள் குடும்பக்ஷேமத்தை நாடி இந்திய ஸ்திரீகளைப்போலவே நடை உடை பாவனைகளை யநுசரித்துப் படிப்படியாய் நாகரீகத்தில் முதிர்ந்து வரவேண்டுமென்பதே அதன் விருப்பம். அதிக சுகம் ஆத்துமத்திற்குக்கேடு).

48. ஜாதிப் பயித்தியம் கொண்டலைவது ஒழுங்கல்ல.

(இந்திய கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் உண்பன தின்பன, கொள்வினை கொடுப்பினை, முதலிய விஷயங்களில் தங்கள் தங்கள் பூர்வீக வர்ணாச்சாரத்தின்படி நடந்துகொள்ள திருச்சபை கொடுத்திருக்கும் சுதந்திரமே போதாதென்றெண்ணி, ஓடுகிறவனைக்கண்டால் துரத்துகிறவனுக் கிளக்காரம் என்பது போலும், சிரங்கு பிடித்தவன் கைசொறியாத இடம் கிடையாதென்பது போலும், தேவாலயங்களிலும், பள்ளிக்கூடங்களிலும், சபைகளிலும் சங்கங்களிலும், மற்றும் பொதுவிடங்களிலும் ஜாதிப் பயித்தியங் கொண்டலைவது, கிறிஸ்துவப் பயிற்சியிலும், மேனாட்டு நாகரீகத் தேர்ச்சியிலும் அவர்கள் தங்கள் இந்து சகோதிரர்களுக்கும் பிந்தினவர்களென்பதாய்க் காட்டுகிறது. இந்துக்கள் விசேஷமாய்த் தெய்வப் பிறப்பென்று மேட்டிமை பாராட்டும் பிராமணர்கள் காலத்திற்கேற்ற கோலமென்பதை யுணர்ந்து, ரெயில் வண்டிகளிலும், உத்தியோக சாலைகளிலும், ரிப்ரெஷ்மெண்டு ரூம்களிலும் ஒட்டல்களிலும், மற்றும் பொது விடங்களிலும் ஜாதிக்கட்டுப்பாட்டின் பந்தனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தளர்த்தி, தாழ்ந்தவர்களுள்ளும் கல்வி நல்லொழுக்கத்தில் சிறந்தவர்களைத் தங்களுக்குச் சமானமாகப் பாவித்து நடத்தி வருவார்கள். ஜாதிக் கட்டுப்பாட்டை மீறி கல்வி விருத்திக்காக ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களுக்குப் போவார்கள். இதுவே சுய விருத்திக்கு வழி,—இதுவே குல விருத்திக்கு வழி,—இதுவே தேசவிருத்திக்கு வழி. பார்ப்பான் எல்லாவற்றையும் சரியாய்ப் பார்ப்பான். சூத்திரர் இவ்வளவாவது செய்வார்களோ? அநேக சூத்திரருக்கு ஜாதிவிஷயமாய்ப் பிராமண தூஷணை செய்யமெத்தப் பிரியம். ஆனால் பிராமணர்கள் செய்கிற அவ்வளவாவது இவர்கள் செய்வார்களோ? பரிச்சேதமில்லை. சூத்திரக் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு அக்கியானிகளைவிட இன்னம் அதிக சீலம். அநேகர் தங்கள் பழியைக் கழித்துக்கொள்ள எனக்கொன்றுமில்லை; ஆனால் அவர்களைப்பற்றி, இவர்களைப்பற்றி யென்று சாக்குபோக்கு சொல்லுவார்கள். எனக்கொன்றுமில்லை யென்று சொல்லும் கோழையே கற்றறி மோழையே, முதலில் உன் கிறிஸ்துவ மனசாட்சியின்படி நடந்து உன் தைரியத்தைக் காட்டு. நாலுபேர் உன்மாதிரிகையைப் பின்பற்றுவார்கள்.

49. ஞானஸ்நானம் பெறப்போகிறவர்களைத் தடுப்பதும், அவர்களுக்கு அதைரியத்தை உண்டுபண்ணுவதும், குருவானவரிடம் காசு பணம் கேட்கும்படி துர்ப்புத்தி சொல்வதும் ஒழுங்கல்ல.

50. அக்கியானிகளுடைய முகதாட்சண்யத்திற்காக பெண் பிள்ளைகள் தெருக்களில் முக்காடின்றிப் போவது ஒழுங்கல்ல.

51. தனக்கில்லாத குலப் பெருமையை வகித்துக்கொண்டு, அல்லது அக்கியானியைப்போல நடித்து, இந்துக்களிடம் செருப்படி தின்ப தொழுங்கல்ல.

52. புறமதஸ்தர்கள் முன், கத்தோலிக்குக் குருக்களை சுவாமியென்று அழைக்க சங்கோசப்படுவது ஒழுங்கல்ல.

(இன்னும் வரும்.)

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். ப—ர்.]

### அத்திக்கோட்டு சய். ஞானப்பிரகாசநாத சுவாமிகளின் குருப்பட்டம்.

கோயமுத்தூர் மேற்றிராசனத்துக்குட்பட்ட அத்திக்கோடு எனும் கிராமம் மலையாள ஜில்லா

வைச் சேர்ந்தது. சென்ற மார்ச்சு மாதத்தின் 18-ம் தேதியாகிய ஞாயிறு வாரமானது இவ்வூர் கிறிஸ்தவ சகோதரர்களுக்கு மகா சந்தோஷகரமான நாளென்பதற்கு ஐயமில்லை. எனெனில், அவ்வூர் நிவாசிகளில் சிலர் துறவறம் பூண்டு கன்னியர்களா யிருக்கிறார்களாயினும், குருப்பட்டத்துக்கு யாரும் இதுவரை அழைக்கப்படாதிருக்க, சங். ஞானப்பிரகாசநாதர் அவ்வூருக்கு முதல்குருவாக அன்று குருப்பட்டம் பெற்றதே சந்தோஷத்தின் காரணமாகும். இவர் இத்திருப்பட்டம் பெறும் நாள் எப்போது வருமோவென யாவரும் வெகு அவாவுடன் எதிர்நோக்கி யிருந்தனர். அந்நாளை அறிந்துகொண்ட மாத்திரத்தில் அவரது பெற்றோர், உற்றோர், மித்திரர் முதலிய யாவரும் அதற்கென பெருந்தொகை சேகரஞ் செய்துகொண்டு, முந்தின நாளாகிய சனிவாரத்தன்று ஆயிரக் கணக்காய் இவ்வூர் வந்து சேர்ந்தனர். இம்மகா நாளைச் சிறப்பிக்கவேண்டி அவர்கள் அநேக ஏற்பாடுகளை நிருமித்திருந்தனர்.

அச் சுபதினத்தின் காலை ஏறக்குறைய 8-மணிக்குச் சற்று முன்னதாக மகா வந். ஆண்டவரவர்கள் அலங்கிர்த வஸ்திராபரண மணிந்து, தமது மாளிகையினின்று புறப்பட, அவருக்கு முன் குருப்பட்டம் பெறவிருந்த சங். ஞானப்பிரகாசநாதரும் அநேக குருப்பிரசாதிகளும் இவ்வூர் குருமடத்து மாணவரும் அநேக கிறிஸ்தவசகோதரர்களும்,முறையே அணிவகுத்துச் செல்ல, எல்லோருக்குமுன் சிலுவை கொண்டுபோகப்பட, பாண்டு வாத்தியம் முழங்க, ஆலயத்து மணிகள் கலந்து ஒலிக்க, இவ்வித வைபவத்துடன் பவனி சென்று ஆலயத்து பிரதம வாயிற் கிட்டியதும், மிக சங். றேண்டி சுவாமி அவர்கள் ஆண்டவரவர்களுக்குத் தீர்த்தந் தெளித்துத் தூபமிட்டு ஆலயத்தினுள் அழைத்துச் செல்ல, ம. வந். ஆண்டவரவர்கள தம் குருப்பிரசாதிகளுடன் பீடத்தைக் கிட்டிச் சென்று, பலிபூசை ஆரம்பித்தனர். அப் பலிபூசையில் சங். ஞானப்பிரகாசநாதருக்குக் குருபட்டம் என்னும் திருப்பட்டம் நிறைவேறியது. குருப்பட்டத்தின் போது நடாத்தப்படும் திருச்சடங்குகளை உற்று நோக்கிச்சிந்தனை செய்வோமாயின் அப்பட்டத்தின் மகிமையையும் கனகனத்தையும் தெள்ளென அறியலாகும். இவ்வுத்தம அந்தஸ்துக்கு தெரிந்துகொள்ளப்படுவோர் உண்மையில் பாக்கியம் பெற்றோர். அவர்களை ஈன்றெடுத்த மாதா பிதாக்களும் பாக்கியம் பெற்றவர்களாமே.' இதனைச் செவ்வனே சிந்தை செய்யாததாலல்லவோ, அநேகர் அதனை மதியாது குருக்களை அலட்சியம் செய்கின்றனர். இது காரணம்பற்றியே, வாலிபர்களில் சிலருக்குக் குருவாக வேண்டும் என்கிற எண்ணம் மனதில் உதித்தாலும், அதை மதியாது போகின்றனர். சில வாலிபர்கள் அதனை மதித்து அவ்வெண்ணத்தைத் தம் பெற்றோரிடம் வெளியிடுங்கால் அப்பெற்றோர் அடிபட்ட நாகம்போல் அவர்கள்மேற் சீறிவிழுகின்றனர். அன்றியும் அவர்களது இவ்வெண்ணம் பலியாதிருக்குமாறு பலவித இடைஞ்சல்கள் புரிகின்றனர். ஆ, பெற்றோரே, உங்கள் புத்திரர்களோ, புத்திரிகளோ துறவற வந்தஸ்தைத் தெரிந்துகொள்ள விரும்புங்கால், அவர்களுக்கு வேண்டிய ஊக்கமூட்டி, அவ்வெண்ணத்தை அவர்கள் பசாசின் சோதனையால் தவிர்த்து விடாவண்ணம் வேண்டிய உதவி புரிந்து அவர்கள் அவ்வந்தஸ்துக்கு உயர்த்தப்படும் அம்மகா நாளைக்கண்டு ஆனந்தித்து, அவர்களுடைய ஜெபதபபூஜாதி கைங்கரியங்களுக்கு உரித்தாளிகளாகி அவர்களுடைய உதவியால் மோட்ச பேறு பெற்றுய்வீர்களாக.

இச்சுபநாள் உண்மையில் கோயமுத்தூருக்கு மிக்க விசேடநாள். எவ்வாறெனின், இதற்கு முன்னர் இவ்வூரில் அனேகருக்குக் குருப்பட்டம் அளிக்கப்பட்டிருப்பினும், அத்தருணங்களில் இவ்வளவு சிறப்பலங்காரங்கள் நடைபெறவில்லை அன்று மகா-வந். ஆண்டவரவர்களுக்கும் அநேக குருப்பிரசாதிகளுக்கும் விருந்தளிக்கப்பட்டதுமன்றி குருமடத்து மாணவருக்கும், அர்ச். மிக்கேல் மடத்துப்பிள்ளைகளுக்கும் சுதேச கன்னியர்களுக்கும் சீமை கன்னியர்களுக்கும் அநேக அநாதைகளுக்கும் விருந்தளிக்கப்பட்டது.

சாயரட்சை சுமார் $4\frac{1}{2}$ மணிக்கு பாண்டு வாத்தியத்துடன் மகா வந். ஆண்டவர் அவர்களையும் புது குருவானவரையும் அனைவரும் சந்திக்கப்போய், பாடுபட்ட தங்க சுரூபம் ஒன்றை ஆண்டவர் கழுத்திலணிந்து, பூமாலை சூட்டி பட்டம் பெற்ற குருவானவருக்குக் கொடுக்க இருந்த காணிக்கைகளையும் அளித்து, ஆங்கிலத்திலும் தமிழிலும் வாழ்த்தல் பத்திரங்கள் வாசித்து இருவருடைய ஆசீரையும் கோரி நின்றனர். மகா வந். ஆண்டவரவர்கள் எழுந்திருந்து அநேக இனிய விஷயங்களை உரைத்து, அர்ச். பாப்பானவருடையவும் தம்முடையவும் ஆசீர்வாதத்தை அளித்து, பிறகு புது குருவானவரிடம் அவர் தமது ஆசீரைக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ள அவரும் அவ்வாறே செய்ய யாவரும் மிக்க குதூகலத்துடன் அவ்விடம்விட்டு நீங்கினர்.

இச்சம்பவம் நிறைவேறியதும், அர்ச். மிக்கேல் மடத்துப்பிள்ளைகள் மகா வந். ஆண்டவரவர்களையும் தங்கள் விசாரணைக்காரராகிய புது குருவானவரையும் வரவேற்று, அதற்கென நிருமிக்கப்பட்டிருந்த பந்தரின்கீழ் அமைக்கப்பட்டுள்ள அழகார்ந்த மேடையிலிருத்தி, குருப்பிரசாதிகளும் ஏனையோரும் எதிரே அமர்ந்திருக்க தங்கள் சக்திக்கேற்ற காணிக்கையை முன்வைத்து, வாழ்த்தல்பாட்டு பாடி, வந்தனோபசாரப் பத்திரம் படித்து, மீண்டும் மங்களப் பாடல்பாடி அவ்விருவரது ஆசீரைக் கோரி நின்றனர். பின்னர், ஆண்டவரவர்களும், புது குருவானவரும் எழுந்திருந்து முறையே சில புத்திமதிகளைக் கூறி ஆசீரளித்தனர்.

மறுநாள் காலை $6\frac{1}{2}$ மணிக்கு புது குருவானவர் தமது முதற் பலிபூசை ஒப்புக்கொடுத்தனர். அத்தருணம் அவர் கொண்டிருந்த தாழ்ச்சி, அடக்கம் மிக்க வியக்கத்தக்கதாக விருந்தது. அன்றியும் அப்பலிபூசையைக் காணப் பாக்கியம் பெற்ற யாவருடைய மனதிலும் உருக்கமான பக்தி மூண்டிருக்குமென்பது எனது துணிபு. அன்று அவரும் அவருடன் சுமார் 12 குருமார்களும் அவரது நாடாகிய அத்திகோட்டுக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டனர். ஆங்கும் புதுகுருவானவருக்கு அனேக மரியாதைகள் செய்யப்படுமாம்.

சங். ஞானப்பிரகாசநாதர் நீடூழி வாழ்வாராக!

21—4—15. கோயமுத்தூர்வாசி.

---

## MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாச்சாரம்

---

**இந்தியாவில் எத்தனை கிராமங்கள்?**—பட்டணங்கள் சேர்க்காமல் கிராமங்கள் மாத்திரம் ஏழு இலட்சமென்று சொல்லப்படுகிறது.

**அதிர்ஷ்டம்பெற்ற டாக்டர்.**—ருஷ்ய சக்ரவர்த்திக்கு வைத்தியஞ் செய்யும் டாக்டருக்கு ஒருமுறை போய்ப்பார்ப்பதற்குப் பீஸ் ரூபா 1050.

**வியாபாரத்துக்கு வேண்டியதென்ன?**-வியாபாரத்துக்குக் கையில் துட்டிருக்க வேண்டும். இதோடு திறமையும் வேண்டும். அநேகம் பெயருக்கு ஆசைமட்டு மிருக்கிறது. சக்திதான் இல்லை.

**மகா பெரிய குகை.**-அமெரிக்காவைச் சேர்ந்த ஐக்கிய மாகாணங்களிலுள்ள ஒரு மலையில் 64 மைல் தூரமுடைய குகையொன் றிருக்கிறதாம். இதுவே உலகத்திலுள்ள குகைகளில் பெரியதெனப்படுகிறது.

**தபாற் கடிதங்கள்.**-வருஷமொன்றுக்கு உலக முழுமையிலும் எழுதப்படுகிற கடிதங்கள் ஆயிரத்து இருநூறுகோடியாம். ஆகவே, நாளொன்றுக்கு மூன்றுகோடியே முப்பது இலட்சக் கடிதங்கள் எழுதப்படுகின்றன.

**ஓர் நூதன மெத்தை.**—படுத்துத் திரும்பும்போதெல்லாம் அந்தந்தப் பக்கத்துக்குக் காற்றை யெழுப்பி வீசிக்கொண்டிருக்கும் புது வகை மெத்தை யொன்று அமெரிக்காவிலே அமைக்கப்பட் டிருக்கிறது. அது வீசுங் காற்று விசிறியால் வீசப்பெறும் சுகத்துக் கொத்திருக்கிறதாம்.

**காலின் கட்டைவிரலால் கையெழுத்திட்டது.**—அமெரிக்காவிலுள்ள ஒரு ஊரில் ஒரு ஸ்திரீக்குச் சமீபத்தில் கலியாணம் நடந்தது. அவள் கலியாண உடன்படிக்கையில் தன் கால் கட்டை விரலால் கையெழுத்து வைத்தாளாம். தற்போது அவள் ஒரு சர்க்கஸ் கம்பனியிற் சேர்ந்திருக்கிறாளாம்.

**கொசுக்களின் வைரி.**—ஆமணக்கஞ் செடி இருக்குமிடத்தில் கொசுக்கள் அணுகுவதில்லை யென்று மிஸ்டர் அல்பெர்ட் என்பவர் சொல்லுகிறார். ஓர் அறையில் ஆமணக்கஞ்செடியின் ஒரு தண்டையாவது கிளையையாவது வைத்திருந்தால் அவ்விடத்துக்குக் கொசுக்கள் வாராமல் செய்யப் போதுமானது. அநேகம் பூச்சிகளும் இச்செடியினிடம் அணுகுவதில்லையாம். கொசுக்களால் பீடிக்கப்படுகிறவர்கள் இதைப் பரீட்சித்துப் பார்க்கவும்.

**நசுங்கின விரலுக்குச் சிகிச்சை.**-எந்தக் காரணத்தினாலாவது விரல் நசுங்கிப்போ

ளுல் உடனே பொறுக்கக்கூடிய வெந்நீரில் அந்தவிரலே அமிழ்த்தவேண்டியது. அப்படிச் செய்வதினுல் அந்த விரலின் நகமானது பருத்து இரத்த ஓட்டத்துக்கு இடந்தருகிறது. இரத்த ஓட்டத்துக்கு இடம் ஏற்படவே வலி குறைவாகும். உடனே ரொட்டியைத் தண்ணீரில் நனைத்துக் கட்டிவிட வேண்டும். நசுங்கின விரலே அஜாக்கிரதையாய் விட்டுவிடக்கூடாது; பெருத்த கெடுதலுக்குக் காரணமாகும்.

ஜெர்மனியர் செய்யும் குட்ர யுக்தி.—இவர்கள் படைகள் வரக்கூடிய மைதானங்களில ஆங்காங்கு நக்ஷத்திரம் போன்ற எஃகுத் துண்டுகளே மத்தியில் கூர்மையான ஆணிகளே யொப்ப முள்ளுகள் பதிக்கப் பெற்றவாருக இறைத்து வைத்திருக்கிருர்கள். இதனுல் இவர்கள் செய்திருக்கும் குட்ர யுக்தி என்னவென்ருல் 'டக், டக், டக், என்று குதிரைகள் வரும்போது அம்முள்ளுகள் குளம்புகளில் குத்திக் குதிரைகள் நொண்டியாக வேண்டுமென்பதே போலும்.

பறக்கும்போது க்ஷவரம் செய்துகோண்டது.—கொஞ்சகாலத்துக்குமுன் ஆகாய கமனி ஒருவன் ஆகாய விமானத்திலேறி பறந்துகொண்டே முக க்ஷவரஞ் செய்துகொண்டாளும். அவன் முதலில் மூவாயிரம் அடி உயரம் பறந்து அந்த உயரத்திலேயே பருந்தைப்போல வட்டமிட்டுக் கொண்டு தன்னுடைய முகத்துக்குச் சவுக்காரம் பூசிக்கொண்டான். சவுக்காரந் தடவிக்கொள்வது சுலபமாயிருந்தது. ஆனுல் க்ஷவரஞ்செய்துகொள்வது கஷ்டமாயிருந்ததாம். ஏனென்ருல், ஒருகையால் தன் முகத்தைப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் க்ஷவரஞ்செய்துகொள்ளவேண்டியிருந்தபடியால் ஆகாயவிமானத்தைத் தன் காலாலே நடத்த நேரிட்டது.

நம்முடைய புதிய இராஜப்பிரதிநிதி.—இப்போது நமக்கு இராஜப்பிரதிநிதியாயிருக்கும் லார்டு ஹார்டிஞ்சு பிரபுவுக்குப் பதிலாய், பார்லிமென்றுசபை மெம்பராகிய மிஸ்டர் ஹார்கோர்ட் என்பவர் இந்தியாவின் இராஜப்பிரதிநிதியாக வரப்போகிருரென்று தந்திச்சமாசாரம் கிடைத்திருக்கிறதாம். ரைட் ஹானரபில் லூயிஸ் ஹார்கோர்ட் என்பவர் காலஞ்சென்ற ஸர் வில்லியம் ஹார்கோர்ட்டின் புதல்வர். அவர் இராஜப்பிரதிநிதியின் ஸ்தானத்திற்கு அருகரென்பதிற்குச் சந்தேகமில்லே. அவர் பார்லிமெண்டில் நல்லபெயர் எடுத்திருக்கிருர். அவருக்குத்தற்போது வயது 42. அவர் 1904 ௵த்தில் பார்லிமென்று சபைமெம்பராளுர். 1910 ௵த்திலிருந்து குடியேற்ற நாடுகளுக்கு இராஜாங்க காரிய தரிசியாக இருந்து வருகிருர்.

முக மூடிகள்.—நிகழும் யுத்தத்தில் ஜெர்மனியர் தங்கள் சத்துருக்களுக்கு மயக்கத்தையும் மரணத்தையும் வருவிக்கக் கருதி ஒருவித விஷவாயுவை அவர்கள் மேல் உபயோகித்து வருகின்றனர். இவ்விஷவாய்வு எவ்வளவுக்கு அபாயத்தை விளைவித்துவர கருதப்பட்டதோ, அவ்வளவுக்கும் அதற்குச் சக்தியில்லேயென்று இப்போது தெரியவருகிறது. மேலும் அவ்வாயுவினுல் துருப்புகளுக்கு எவ்விதமான தொந்தரவுகளும் ஏற்படாமலிருக்கும்படியாக முகமூடிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. பார்ப்பதற்கும் சுவாசிப்பதற்கும் இடறலில்லாமல் அம் மூடிகள் ஆயிரக்கணக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இட்டலியும் ஆஸ்டிரியாவும்.—சென்ற மாதம் 26௳ கிடைத்திருக்கும் தந்தியின் படி இட்டலி ஆஸ்டிரியாவின் பேரில் யுத்தம் கூறிவிட்டது. இட்டலி ஆஸ்டிரியாவைக் கோபத்துடன் தாக்குவதினுலே ஜெர்மனிக்கு அதனிடமிருந்த நட்பும் அறுந்துபோயிற்று. ஆஸ்டிரியா ஸ்தானிகரோடு ரோமாபுரியை விட்டுப்புறப்பட்டு விடும்படி ஜெர்மன் ஸ்தானிகருக்கும் உத்தரவு கிடைத்திருக்கிறது. பிறகு வந்த தந்திசமாசாரங்களினுல் இட்டாலிய துறைமுகங்களில் தங்கியிருந்த ஆஸ்டிரியா கப்பல்களேயும் ஜெர்மன் கப்பல்களேயும் இட்டலி பிடித்துக்கொண்டதென்றும், அவைகளின் மதிப்பு 40 லட்சம் பவுன்களென்றும், ஆஸ்டிரிய எல்லேக்குள்ளிருந்த சிலகிராமங்களே இட்டாலியர் பிடித்துக் கொண்டார்களென்றும் தெரியவருகிறது.

ஒரு நூதன ஔஷதம்.—ஸ்விட்ஸர்லாண்டில் பெர்னே என்னுமிடத்திலுள்ள ப்ரொபஸ்ஸர் தியோடர் கோசெர் என்பவரும் அவருடைய உதவி உத்தியோகஸ்தரான டாக்டர் ஏ. போன்ஸ் என்பவரு



மாக காயத்திலிருந்து இரத்தத்தை வெளிவராமல் உடனே நன்ருகத் தடுத்து விடுவதற்கேற்ற ஓர் ஔஷதத்தைத் தயார் செய்திருக்கின்றனர். அவ்வௌஷதத்திற்கு கொஆகுலென் எனப் பெயரிட்டிருக்கின்றனர். இது ஒருவித சூரணமாயிருக்கிறது. இரணத்தின்மேல், அல்லது காயத்தின்மேல் உபயோகிக்கும்போது இது ஜலத்தில் கரைத்து உபயோகிக்கப்படுகிறது. இதைக்கண்டு பிடித்தவர்கள் யுத்தகளத்தில் கொடுமையாகக் காயங்கள்பட்டு வருந்தும் போர்வீரர்களுக்கு உபயோகிப்பதன் பொருட்டு ஜெர்மனியர்களுடையவும் ப்ரெஞ்சுக்காரர்களுடையவும் பிரதான யுத்த காரியசாலேகளுக்கு வேண்டிய அளவு இவ்வௌஷதத்தை உதவியிருக்கின்றனர். இதை உபயோகிப்பதால் ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படக் கூடுமென்று சொல்லப்படுகிறது.

15-ம் ஆசீர்வாதப்பரும் யுத்தமும் —தற்போது ஐரோப்பாவில் நடந்தேறும் கொடிய யுத்தத்தினுல் கத்தோலிக்குத் தேசங்களான ஜெர்மனிக்கு மேற்கிலுள்ள பெல்ஜியமும் கிழக்கிலுள்ள போலாந்தும் பாழாயினவென்று நம்முடைய சந்தாதாரர்கள் அறியாதவர்களல்லர். பலமான ஜெர்மனியருடையவும் ஆஸ்திரியருடையவும் சேனேகளே இவர்கள் எதிர்க்க இயலாதவர்களாய் அபஜெயமடைந்தார்களென்ருலும் இவர்களுடைய வீர பராக்கிரமத்தைப்பற்றி இவர்களே உலகில் புகழாதவர்களில்லே. காருண்யம் நிறைந்த நம்முடைய பிதா 15-ம் ஆசீர்வாதப்பர் இவர்கள் இப்போது படும் இடுக்கண்களே அறிந்து ஒவ்வொரு தேசத்துக்கும் ரூபா 15,000 நன்கொடையாய் தம்முடைய தேச காரியதரிசியைக்கொண்டு அனுப்பியிருக்கிருர்: மேலும் இவ்விரு தேசத்தாருக்கும், இவர்களுக்கு உதவிபுரிய முன்னின்று உழைப்போருக்கும் தம்முடைய அப்போஸ்தோலிக்கு ஆசீர்வாதத்தை மனப்பூரணமாய் அளிப்பதாகவும் தெரிவித்திருக்கிருர்.

முப்பத்தோர் குழந்தைகளுக்கு தகப்பளுர்.—ஸ்வோனு என்ற நகரத்தில் அனஸ்டாஸியோசெஃலாடி என்ற ஒருவர் தம்முடைய 31-வது குழந்தையின் ஆண்டு நிறைவு உற்சவத்தைக் கொண்டாடினுர். அக்குழந்தைக்கு அக்கனவான் காண்டிடோ என்று நாமகரணம் சூட்டியிருக்கிருர். அவருக்குத் தற்போது 60-வயதாகிறது. அவர் தமது 21-வது பிராயத்தில் 19 வயதுள்ள ஒரு ஸ்திரீயை மணந்துகொண்டார். அவரது மனேவி 19 குழந்தைகளேப் பெற்ற பிறகு இறந்துவிட்டாள். மேற்படி செஃலாடி இன்னொரு பெண்பிள்ளேயை மணந்துகொண்டார். அவரது இரண்டாவது மனேவிக்கு 12 குழந்தைகள் ஜனித்தன. தற்போது அவருக்கு 19 புத்திரர்கள் திரேக தாட்டியத்துடன் கூடி உயிருடன் வாழ்ந்து வருகின்றனரெனத் தெரியவருகிறது. அவரது 20-வது குமாரன் லிபியா வனந்திரத்தில் நடைபெற்ற யுத்தத்தில் இறந்துவிட்டான். அவரது புத்திரர்களில் 8 பேருக்கு விவாகமாகி சந்ததி உண்டாகி அவர்களுக்குக்கூட விவாகம் நடைபெற்ருய்விட்டதாகத் தெரிகிறது.

ஒரு ஆச்சரியமான பிரசவம்.—திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த கருநாகப்பள்ளி என்ற ஊரில் வசிக்கும் மாதராள் ஒருத்திக்கு ஒரே தடவையில் நான்கு ஆண் குழந்தைகள் பிறந்தனவாம். அவைகளில் இரண்டு குழந்தைகள் உடனே இறந்துபோயினவென்றும், மற்ற இரண்டும் திடகாத்திரத்துடன் க்ஷேமமாயிருக்கின்றனவென்றும் சொல்லப்படுகிறது. இக்குழந்தைகளேப் பெற்றவள் கத்தோலிக்குக் கிறிஸ்துவளாம். இறந்துபோன இரு குழந்தைகளும் ஞானஸ்நான மின்றியே இறந்து போயிருந்தால் மகாவிசனத்துக்குரியது. அவஸ்தை சமயத்தில் ஞானஸ்நானம் கொடுக்க யாருக்கும் உத்தரவு உண்டென்ருலும் அநேக கிறிஸ்துவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கத் தெரியாது. சகல கிறிஸ்துவர்களும், அவர்கள் ஆண்பிள்ளேகளானுலுஞ் சரி பெண்பிள்ளேகளானுலும் சரி முறைப்படி ஞானஸ்நானங் கொடுக்க அறிந்திருப்பது கடமை. இக்கடமை விசேஷமாய்ப் பெண்பிள்ளேகளுக்குண்டு. அதேனென்ருல் சாதாரணமாய் அவர்களே பிரசவ நேரத்தில் உதவி செய்கிறவர்களும் மருத்துவவேலே செய்கிறவர்களுமா யிருக்கிருர்கள்.

நன்மரணம்.—கொளும்பைச்சேர்ந்த கோட்டஹேனவில் இஞ்சினியர் டிபார்ட்

மென்றில் உத்தியோக மாயிருக்கும் ஸ்ரீமான் தேவராயன் அவர்களின் நேசபாரியாள் ஸ்ரீமதி மிக்கேலம்மாள் சென்ற ஏப்ரல் மீ 2தேதி மரணமான சங்கதியைக் கேள்வியுற்று மிக்க விசனப்படுகிறோம். மரம் எப்பக்கத்தில் சாய்ந்திருக்குமோ அப்பக்கத்திலேயே விழுமென்னும் வேதவாக்கியத்துக்கொப்ப இவ்வம்மையினுடைய பரிசுத்த சீவியத்துக்குத் தக்கபடி பாக்கியமான மரணமடைந்தனள். நிகழும் வருஷத்தில் பெரிய வெள்ளிக்கிழமை தலைவெள்ளியாயிருந்ததின் நிமித்தம் அன்று தன்வழக்கப்படி திவ்ய நன்மை வாங்க முடியாதிருக்கு மென்று சொல்லி விசனமுற்றிருக்க, தனக் குண்டாயிருந்த நோவு அதிகரித்து, பெரியவெள்ளிக்கிழமையன்று அவஸ்தை நன்மை வாங்கி அவஸ்தைப்பூசுதலும்பெற்று மரணமடையுமட்டும் புத்திசுவாதீனத்துடனிருந்து மனவல்லய ஜெபங்களை அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தும் மரணாவஸ்தையாயிருக்கும் சமயத்தில் ஜெபிக்கப்படும் ஜெபத்துக்குக் கவனமாய்க் காது கொடுத்துக்கொண்டிருந்தும் நமது இரட்சகர் மரித்த அதேநாளில், அதேவயதில், அதேநேரத்தில் மரணமாயினள். "நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவாளாக."

**போர்த்துக்காலில் கலகம்.**—ஐரோப்பா கண்டத்தில் தென் மேற்குத் திசையிலுள்ள போர்த்துக்காலில் விபரீதமான குழப்பம் உண்டாயிருக்கிறதாக வதந்திகள் உலாவுகின்றன. போர்த்துக்கேசியர் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரஜாதிபத்திய துரைத்தனத்தின் கீழ் அமைதியாக வசித்துவருகிறதாகக் காணப்படவில்லை. அத்தேசத்தின் நான்கு திசைகளிலும் கலகக்காரர்கள் கிளம்பி குழப்பத்தை யுண்டாக்கி அத்தேசமுழுவதிலும் கலகம் பரவும்படியான மார்க்கத்தைத் தேடிவருகிறார்களெனத் தெரியவருகிறது. தவிர அத்தேசத்துக்கு மந்திரியா யிருந்தவரையுங் கொலை செய்துவிட்டார்களாம். இவைகளையெல்லாம் தவிர்த்து ஒரு போர்க்கூட்டத்தார் சேர்ந்துகொண்டு போர்த்துகல் தேசத்தின் தலைநகராகிய லிஸ்பன் பட்டணத்தை வெடிகுண்டுகளால் தகர்த்ததாகக் கேள்வி. போர்த்துக்கல் தேசத்தின் பிரஜாதிபத்தியம் என்று சொல்லப்படும் ரிபப்ளிக் கவர்மெண்டார் தங்களது உள் நாடுகளில் இவ்வளவு காலமாகத் தோன்றியுள்ள அசமாதானத்தையும், குழப்பத்தையும் பற்றிச் சரியாக கவனமெடுத்துக்கொள்ளாமல் மௌனமாகவே இருந்துவிட்டார்களாக்கும். தற்போது ஆரம்பித்திருக்கும் குழப்பம் சாந்தமடையாமல் பெருகும் பக்ஷத்தில் பிரமுகர்களின் உன்னத பதவிக்கும் கௌரவத்திற்கும் ஹானி நேரிடும்போதும். தேவ பக்தியும் இராஜ பக்தியு மின்றி பிரஜாதிபத்தியத்தை ஸ்தாபித்தவர்கள் எப்படி குழப்பமின்றி இருக்கவாகும்?

**அதிக ஆசை அதிக நஷ்டம்.**—மேல் நாட்டில் ஜனங்கள் நெருக்கமாய் ஏறியிருந்த டிராம்வண்டி ஒன்றில் ஒரு துரைசானி வந்து ஏறினாள். இவள் பக்கத்தில் பார்க்க மகா யோக்கியனையும், கையில் நேர்த்தியான வைரமோதிர மொன்று போட்டுக்கொண்டு நன்றாய் உடுத்தியுமிருந்த ஆசாமி ஒருவனிருந்தான். தான் இறங்கவேண்டிய இடம் சமீபித்தவுடன் துரைசானி வண்டியை நிறுத்தச் சொல்லி மெதுவாய் இறங்குஞ் சமயத்தில் இவன் அவளுக்குக் கைகொடுத்து உதவி செய்துகொண்டே அவள் சட்டைப் பையில் கையையிட்டு அதிலிருந்த பணப் பையைத் திருடிக்கொண்டான். இதைத் துரைசானி அறியாமலே பக்கத்திலிருந்த ஒரு நகைக்கடைக்குப்போய் மோதிரமொன்றை விலைபேசி, அதை வாங்க பணத்துக்காகச் சட்டைப் பைக்குள் கையை யிட்டுப் பார்க்கப் பணப்பையைக் காணோம். நன்றாய்த் தேடிப்பார்த்தபோது பணப்பைக்குப் பதிலாய் ஒரு வைரமோதிர மகப்பட்டது. கடைக்காரனுக்கு அதைக் காட்டி "இதுஎன்ன விலை பெறும்?" என்று கேட்டதற்கு அவன் ரூபா 500 பெறுமென்றான். இவள் தன் பையில் வைத்திருந்த பணமெல்லாம் 15 ரூபாயே. கொடுத்து வைத்த மகராசியான இந்தத் துரைசானிக்கு ரூபா 485 இலாபம். பேராசைபிடித்த திருடனுக்கோ நஷ்டம் ரூபா 485.

**வைக்கோலிலிருந்து ரொட்டி.**—ஜெர்மனியில் தற்காலம் ஆகாரம் கிடைப்பது ரொம்ப கஷ்டமாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இந்தக் குறையை நீக்க ஒரு ஜெர்மனிய டாக்டர் வைக்கோலிலிருந்து ரொட்டிசெய்யும் முறையைக் கண்டுபிடித்திருக்கிறாராம். அவர் சமீபத்தில் பெர்லினில் உள்ள சிலருக்கு இந்த முறையைச் செய்து காட்டினாராம். இந்த முறையால் செய்த ரொட்டி சாப்பிட தகுந்ததாயிருக்கிறதென்று அதைப் பார்த்தவர்கள் சொல்லுகிறார்கள்.



# DOMESTIC OCCURRENCES.
# குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய். முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

## நன்மரண அறிக்கை.

பாசுரம்.

சர்வ சுயம்பர ஜெகத் இரக்ஷகரருளினைப் பெற்றியல்புடன் இப்புவியினில் வாழும் கனதன குணநண்பரது தாளினைப் பணிதல் செய்வாம்.

### தஞ்சாவூர்.

•நிகழும் 1915-ம் ௵ மார்ச்சு மீ 26௳ வெள்ளிக்கிழமை காலை 8-மணி தியாலத்தில் தஞ்சைமாநகர் மகரநோம்புச் சாவடி குவலைக்காரத் தெருவின் வாசியராகிய மகா-ா-ா-ஸ்ரீ கனம் M. F. பிரான்சிஸ் பிள்ளை அவர்களின் ஜேஷ்ட புதல்வன் F. சந்தனம் பிள்ளை அவரின் பாரியாளும் தஞ்சைமாநகர் மிஷன் தெருவு வாசியாராகிய மகா-ா-ா-ஸ்ரீ கனம் C. L. துரைசாமிபிள்ளை அவர்களின் கனிஷ்ட புதல்வியுமாகிய உத்தரிய மரியம்மாள் நிகழும் ஆண்டு பெப்பரவரி மீ 24௳ புதன்கிழமை காலை 7½-மணிக்கு ஏழாம் மாதத்தில் ஓர் ஆண்மகவை ஈன்று கர்த்தருக்குள் கையளித்து அடுத்த மாதத்தில் மேல் குறிப்பிட்ட நாளில் தனது பெற்றோர், உற்றாரையும் காதலரையும் விட்டுச் சேசுவின் திருநாமத்தை உச்சரித்து இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகப் பிராப்தியாயினள்.

அடுத்த நாளாகிய சனிவாரம் அன்று 10-மணிக்கு தய்ப்பிங் கத்தோலிக்கு மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவளது ஆத்துமத்தைக் குறித்து 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லி வேண்டிக் கொள்ளும்படியாக மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இங்ஙனம்:

F. சந்தனம் பிள்ளை.

நமஸ்காரம்.

### கீழ்ச்சேரி.

ஷை யூர் மிராசுதாரர், மகா-ா-ா-ஸ்ரீ ராய் சாஹேப் காரசால அருளைய நாயுடு அவர்களது அருமைச் சிரேஷ்ட புத்திரியாகிய தவமரியென்றழைக்கும் சௌ. மரியதெரசம்மாள் கொடிய இருமல் வியாதியால் சென்ற சில காலமாய்த் துன்புற்றிருந்து வைத்தியர்களாலும் டாக்டர்களாலும் செய்யாத சிகிச்சைகளெல்லாம் செய்யப்பட்டும் சௌக்கியமடையாமல் சென்ற மேமீ 10௳ இரவு எட்டுமணிக்கு, தனது 17-வது வயதில் கடைசித் தேவத்திரவியானுமானங்கள் யாவும் குறைவறப்பெற்று தந்தை தாயார், சகோதரர், சகோதரிகள், புருஷன், மாமன், மாமி முதலிய பந்துக்களெல்லாம் பொருமிப் புலம்பவிட்டு, சர்வேசுரன் திருக்கரங்களில் தனதாத்துமத்தை ஒப்புவித்து, "சேசுமரி சூசை" யென்னும் திருநாமங்களை உச்சரித்த வண்ணமாய் இவ்வுலகை நீத்துப் பரலோக பிராப்தி யடைந்தனள். அடுத்த நாள் மாலை 5-மணிக்கு அவள் சடலம், பந்துமித்திராதிகளாகிய சுமார் ஆயிரஞ் ஜனங்களால் புடைசூழப்பட்டு, சங். குருசுவாமியாரும், பாட்டுக்காரரும் ஞானப்பாட்டுகள் பாடிவர, கோவிலுக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கு ஒப்பீஸ் முதலிய பிரேதச் சடங்குகள் ஆடம்பரமாய் நிறைவேறப் பெற்றபின், கல்லறைக்குக் கொண்டுபோகப்பட்டு வழக்கமான அடக்கச் செபம், பாட்டுகள் முடிந்தவுடன், அங்கு சூழ்ந்துள்ளோர் சொரிந்த கண்ணீர், விம்மல் தேம்பல்களின் மத்தியில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. ஷை அருளையநாயுடு அவர்களுக்குக் கலியாணமாகி பன்னிரண்டு வருஷமளவும் மக்கட்பேறில்லாதிருந்து, தவமாதவமிருந்து, மகா அற்புத லூர்து நாயகியின் வல்லபமுள்ள வேண்டுதலால் கிடைத்த பெண்ணானதால், அதைத் தவமரி யென்றழைக்கலாயினர். அது, அடக்கம், சாந்தம், பொறுமை, தயை, தானம் முதலிய சற்குணங்கள் சால அமைந்த மாது சிரோன்மணி. இப்பெண்மணிக்குக் கலியாணமாகி இரண்டு வருஷமாகிறது. இதை வாசிக்கும் நண்பர்கள் இவளது ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒருபர, பிரி, திரி மறவாமல் வேண்டிக்கொள்ள மன்றாடுகிறேன்.

சென்னை, 20-5-15

இப்படிக்கு,
ஓர் பரிதாபி.

✠

# மரணப் பிரகடனம்.

## ஸ்ரீமான் T. D. பாக்கியப்பெறுனுந்து,

ரிட்டயர்ட் சீனியர் சப் அசிஸ்டண்ட் ஸர்ஜனும் நல்லாயன் எனும் பத்திரிகையின் ஓர் சந்தாதாரருமாகிய இப்புனிதவான், "உலகத்திற்ருேன்றி யொடுங்கும் ஜீவராசிகளில் மனிதப் பிறப்பே மேன்மை யுடைத்தென்பது சர்வ ஜனசம்மதம், மனிதப் பிறப்பிலும் பேடு நீக்கிப் பிறத்தலரிது, பிறந்த காலையும் இலக்கண அணி நிரம்பி, இனிய பண்பு வாய்ந்து சீரும் சிறப்புஞ் செறிந்த பாண்டிய நாட்டிற் பிறத்தலரிது; அதிலும் பாண்டிய வம்சத்திற் ருேன்றுதலரிது, என்ற, அவ்வித மேன்மை தங்கிய பாண்டிய வம்சத்தில் பாங்கெறியும் கடன் மருங்கமைந்த, திருமந்திர மாநகரமெனும், தூத்துக்குடியில், ஸ்ரீமான் பிருஞ்சீஸ்கு பெறுனுந்து ஸ்ரீமதிமத்தேசியாள் பெறுனுந்து செய்தவப்பேற்ருல் இவர்கள் புத்திர இரத்தினமாய் 1862 ஹு மார்ச்மீ 14உ ஜெனனமாகி தூத்துக்குடி கனம் சேசுசபை அர்ச். பிருஞ்சீஸ்கு சவேரியாரின் கலாசாலையில் சகல கலைக்யானங்களும், ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்து, மகாகன மேன்மை பொருந்திய டாக்டர் ஒலேரி துரை அவர்களின் நன்முயற்சி பலத்தால், சென்னபட்டணம் வைத்திய சாஸ்திர விற்பன்னராகி 1883 ஹு ஜுன்மீ 30உ சர்ட்டிபிக்கட் பெற்று, மதுரை, சேலம், திருநெல்வேலி, செங்கற்பட்டு, கிருஷ்ண முதலிய ஜில்லாக்களில், விசேஷமாய்த் தனிமையாய் ஆஸ்பத்திரி சார்ஜ்பெற்று, மாட்சிமை தங்கிய இங்கிலீஷ் கவர்ண்மெண்டாருக்கும், அந்தந்த ஊர் உத்தியோகஸ்தர் முதல் பொது ஜனங்களுக்கும், திருப்தி யுண்டாக நடந்து, அவரவர்களால் மகா கியாதியுற்று, மதுரை ஜில்லா கொசவப்பாளையத்தில், விஷபேதி காலத்தில் எடுத்துக்கொண்ட சிரமப்பரிகாரத்துக்காக, அவ்வூரவர்களால் கனம் கலெக்டர் துரை முன்னிலையில் அளித்த தங்க மெடலால், வைத்ய சாஸ்திர நிபுணரெனப் பிரக்யாதி பெற்று, 1885 ஹு செப்டெம்பர்மீ 9உ ஸ்ரீமான் சின்னத்தம்பிக்கடுதோஸ் ஸ்ரீமதி சூசை மிக்கேல் கொறேர அவர்களியற்றிய தவப்பலத்தாலாய சிரேஷ்டபுத்திரி ஸ்ரீமதி மரிய அகஸ்தினுள் கடுதோஸ் கொறேர அம்மாளை திருமாங்கல்யதாரணஞ் செய்து ஒரு புத்திரனையும் ஐந்து புத்திரிகளையும் பெற்றெடுத்து, சிரேஷ்ட புத்திரியாகிய மரிய ஞானம்மாள் பெறுனுந்துகடுதோஸ் அம்மாள் சிலோன் கொழும்பில் பிரசவ நோயால் பீடித்து மரணத்துக்குள்ளாக விடுத்து, இரண்டாவது புத்திரி சொர்ணம்மாள் பெறுனுந்து கடுதோஸ் அம்மாளை ஸ்ரீமான் சூசைக்கொறேர மஸ்கிறேஞ்ஞுவுக்குக் கலியாணஞ் செய்து கொடுத்து, மூன்ருவது புத்திரி மகா புண்ணிய சற்குணபாக்கியவதி ஸ்ரீமதி ராஜரத்தினம்மாளை திருச்சிராப்பள்ளி பரிசுத்த வியாகுலமாதா மடத்து கன்னிகையாய் ஸ்திரப்படுத்தி 1913-ம் ஹு டிசம்பர்மீ 22உ பென்ஷன் பெற்று, பிறந்து சிறந்த ஊரிலேயே வைத்திய இரத்தினமாயிலங்கி துலங்கி, சகலராலும் புகழ்ந்துறுங்கால், தெய்வ பக்தி மேலிட்டு ஆத்ம இரக்ஷண்யாமிர்தமடைய ஆவலுற்று அல்லும் பகலும் அறுபது நாழிகையில் 15-நாழிகை தெய்வ தோத்திரத்திலேயே, தம் வாழ்நாளைச் செலுத்தி, பரப்பிரமானந்த பரம ஈஸ்பரனுக்குகந்த பிள்ளையாகி 1915-ம் ஹு மேமீ 5உ இருதய பலவீனத்தால் பீடிக்கப்பட்டு, கைதேர்ந்த வைத்ய சிட்சைகளால் குணமுருது, சகல ஈருந்த தேவத்திரவியானுமானங்களும் குறைவறப் பெற்று, சேசுமரியே சூசை என்னை இரட்சியும் எனும் திருவசனத்தை விடாதறுதியுடனுச்சரித்து 1915-ம் ஹு மேமீ 12உ இரவு 11½-மணிக்குச் சொல்லடங்கா ஆனந்த சந்தோஷகரத்தோடு சர்வ வல்லப நிராதார மெய்க் கடவுளாகிய சர்வேஸ்பரனுக்குள் ஐக்யமானுர். மறுநாள் 13உ யாகிய வியாழக்கிழமை, மானிடரை இரட்சிக்க மனுஷாவதாரஞ் செய்து மரித்துயிர்த்த மகா தேவனுகிய நம்பெருமான் சேசு இரட்சகர் பரலோகத்துக் கெழுந்தருளிய திருநாளன்று மாலை 5-மணிக்குப் பரிசுத்த சூசையப்பர் மையவாடியில் நல்லடக்கம் பண்ணப்பட்டது.

இஃதை வாசிக்கும் சகோதரர்களே! பொறுமையே பூஷணமாய்க் கொண்ட இந்த உத்தம வைத்தியரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக முத்தொழிற் கர்த்தனுகிய ஜெகத் கருணநிதியை வேண்டிக்கொள்ள தங்கள் மேலான தயாளத்தை விரும்பி மன்ருடுகிற

தூத்துக்குடி 12—5—1915. } R. I. P. ஓர் அனுதாபி.

The Good Pastor

# நல்ல ஆயன்

OFFICE OF ... 9 - JUL 1915 MADRAS.

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு ஆடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 13. } ஜுலை 1915. { இலக்கம். 7.

## THE HOLY MASS.
## திவ்ய பூசை.

பெரிய வெள்ளிக்கிழமை கல்வாரி மலைமேல் நம்முடைய பாவாக்கிரமங்களின் நிமித்தம் நடந்தேறிய கண்ணராவியான காட்சியை, அதாவது நம்முடைய இரட்சண்யத்தின் நிமித்தம் நமதாண்டவரான சேசுநாத சுவாமி பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு பலியானதை ஞாபகப்படுத்தும் பொருட்டு, குருவானவர் கோதும்பை அப்பத்தையும் முந்திரிகைப்பழ இரசத்தையும் வசீகரஞ் செய்வதே திவ்ய பூசை யென்று நாம் சாதாரணமாய் எண்ணிக்கொள்ளுகிருேம். ஆனுல் திவ்யபூசையானது கல்வாரிமலைப்பலியை மாத்திரமல்ல, நமதாண்டவர் மரித்த மூன்ருநாள் மரித்தவர்களிடத்திலிருந்து ஜெயசீலராய் உயிர்த்ததையும், அவர் உயிர்த்த நாற்பதாம்நாள் ஓட்டோலகராய்ப் பரலோகத்துக் காரோகண மானதையும் நமக்கு ஞாபகப்படுத்துகிறதென்று திட்டமாய் அறிந்துகொள்வோமாக. ஆனது பற்றியே, திவ்ய பூசையை நிறைவேற்றும் குருவானவர் அப்பத்தையும் இரசத்தையும் வசீகரஞ் செய்வதற்கு முந்தி, அதாவது அவைகளைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த பின்னிட்டு, பீடத்தின் மத்தியில் நின்று தலைகுனிந்து "பரிசுத்த திரித்துவமே, எங்களாண்டவரான சேசுக்கிறிஸ்து நாதருடைய பாடுகளுக்கும், உத்தானத்துக்கும், ஆரோகணத்துக்கும் ஞாபகமாகத் தேவரீருக்குச் செலுத்துகிற இக்காணிக்கையைக் கை ஏற்றுக்கொள்ளும்" என்று ஜெபிக்கிருர். அப்பத்தையும் இரசத்தையும் வசீகரஞ்செய்த பின்னிட்டும் "ஆண்டவரே! தேவரீருடைய அடியார்களாகிய நாங்கள் உம்முடைய பரிசுத்த சனத்தோடு, தேவரீருடைய சுதனும் எங்கள் ஆண்டவருமாகிய கிறிஸ்துவினுடைய பரிசுத்த மரணத்தையும், அவர் மரித்தவர்களிடத்தினின்று உயிர்த் தெழுந்ததையும், பின்னும் அவர் பரமண்டலங்களில் மகிமையோடு ஆரோகண மானதையும் நாங்கள் நினைவு கூர்ந்தவர்களாய்த் தேவரீர் எங்களுக்குத் தந்தருளியிருக்கும் கொடைகளிலிருந்தும் உபகாரங்களிலிருந்தும் தானே ஒரு தூய்மையான பலிப்பொருளை, பரிசுத்தமான பலிப்பொருளை, மாசற்ற பலிப்பொருளை, நித்திய சீவியத்தின் பரி

சுத்தமான அப்பத்தை, சதாகால ஈடேற்றத்தின் பாத்திரத்தைத் தேவரீருடைய பிரதாபமுள்ள மகத்துவத்துக்கு ஒப்புக் கொடுக்கிறோம்'' என்று குருவானவர் பிரார்த்திக்கிறார்.

ஆகவே, நாம் திவ்யபூசை காணும் போது பெரியவெள்ளியன்று கல்வாரிமலை மேல் நடந்தேறிய சிலுவைப் பலியையே ஞானவிதமாய்க் காண்கிறோமென்று எண்ணிக்கொள்வதானது திவ்யபூசை விஷயத்தில் நமக்குச் சரியான ஞானமில்லையென்றும், அதைப்பற்றி நாம் அரையுங் குறையுமாகவே அறிந்திருக்கிறோமென்றும் தெரியச்செய்கிறது. நமது கர்த்தர் உயிர்த்ததையும், அவர் பரலோகத்துக்கு ஆரோகணமானதையும் நமக்கு ஞாபகப்படுத்தாமல், அவர் பாடுபட்டு மரணமடைந்ததை மட்டும் ஞாபகப்படுத்தத் திவ்யபூசை நடந்தேறுமானால், அந்தப் பூசையை ஒப்புக் கொடுக்கும் குருவானவர் அணிந்துகொள்ளும் விலையேறப்பெற்ற பூசை வஸ்திரங்களுக்கும், அவர் நிறைவேற்றும் சாங்கியச் சடங்குகளுக்கும் யாதொரு அருத்தமும் பொருத்தமு மில்லையென்று சொல்ல வேண்டியதாயிருக்கிறது. திவ்ய பூசை விஷயமாய்த் திருச்சபை ஏற்படுத்தி யுள்ள சட்ட திட்டங்களும், சாங்கிய சடங்குகளும் வீணானவைகளென்றும் குருட்டுப் பக்திக்கடுத்தவைகளென்றும் சொல்லலாமோ? சொல்லலாகாது. கர்த்தருடைய உத்தானத்தையும் ஆரோகணத்தையும் சுட்டிக் காட்டாமல் அவருடைய மரணத்தை மட்டும் திவ்யபூசை சுட்டிக் காட்டுகிறதென்போமானால், பூசைசெய்யுங் குருவானவர் துக்கத்துக்கு அடையாளமாக பலிபீடத்துக்கு யாதொரு சிறப்பும் சோடினையுமின்றி கருப்பு அல்லது ஊதாபட்டணிந்து பூசை செய்வதே ஞாயமாகும். ஆனால் திருச்சபையின் நோக்கமுங் கருத்தும் அப்படியல்லவே. வேத சடங்குகளின் ஒழுங்குப்படி (Liturgia) திவ்ய பூசை எவ்வளவு ஆரவாரச் சிறப்பாயும் ஆடம்பரமாயும் நிறைவேற்றப்படக் கூடுமோ அவ்வளவு ஆரவாரச் சிறப்பாயும் ஆடம்பரமாயும் நிறைவேற்றப்படத் திருச்சபை ஆசிக்கிறது. வாஸ்தவத்தில் பூசைவஸ்திரங்கள் இராஜரீக உடைகளையும் மிஞ்சினவைகளா யிருந்தாலும் திவ்ய பூசையின் மகத்துவத்தையும், பிரதாபமகிமையையும், மேன்மையையும் விளங்கச் செய்ய அவைகள் ஏற்றனவைகளல்லவென்றே சொல்லத்தகும். ஆனபடியாலல்லவா பூசைவஸ்திரங்கள் விலையேறப்பெற்ற உயர்ந்த பட்டுப்பட்டாவளிகளாலும், சுயமான பொன், வெள்ளிச் சரிகைகளாலும் செய்யப்பட்டு மேலான சித்திர வேலைப்பாடுள்ளவைகளாக இருக்கின்றன? சிலவற்றில் இரத்தினம் மாணிக்கம் முதலிய விலை உயர்ந்த கற்களும் இழைக்கப்பட்டுக் கண்ணைப் பறிக்குமாறு அவ்வளவு ஜெகஜோதியாய்த் துலங்குகின்றன. இப்படியே பலி பீடமும் பொன் வெள்ளிக் கத்தரிச்சால்களினாலும், தினுசுவாரியான பூச்செடிகளினாலும், புஷ்பங்களினாலும், பல்வர்ணப் பட்டுப் பீதாம்பரங்களினாலும் சிங்காரிக்கப்படுகின்றன. இன்னும் இன்னரம் முதலிய வாத்தியங்கள் முழங்க, பாட்டுச் சங்கீதங்களின் நாதமுழங்க, அதிர் வெடிகள் கிளம்ப, கோவில் மணிகள் தொனிக்க ஆடம்பரமாய்த் திவ்ய பூசை நடந்தேறுகிறது. அதேனென்றால், நம்முடைய இரட்சகர் கொடிய பாடுகள் பட்டுத் தம்முடைய இரத்தத்தை யெல்லாஞ் சிந்தி மரணமானபோதிலும், அவர் மரணத்தை ஜெயித்து ஜெய சீலராய் உயிர்த்ததையும், மகிமைப்பிரதாபத்தோடு மோக்ஷத்துக்கு ஆரோகணமானதையும் நமக்கு ஞாபகப்படுத்தும் பொருட்டேயாம். ஆனபடியால், திவ்யபூசையானது நமதாண்டவரான சேசுநாதசுவாமி கல்வாரிமலைமே லடைந்த மரணத்தை மாத்திரமல்ல, ஆனால் அவருடைய உத்தானத்தையும், ஆரோகணத்தையும் நமக்கு ஞாபகப்படுத்துகின்றதென்று அறிந்துகொள்வோமாக.

அப்படியிருப்பதினால், நாம் பூசை காணும்போது மேற் சொன்ன மூன்று வேத சத்தியங்களையும் ஞாபகப்படுத்திக் கொள்வோமாக. நமது கர்த்தர் பட்ட பாடுகளினாலும் மரணத்தினாலுமே நாம் இரட்சண்ணியம் அடையப் பேறுபெற்றவர்களா யிருப்பதினால், பூசை நேரத்தில் அவைகளின் பேரில் சிந்தனைசெய்து அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துவோமாக. அவர் மரித்தவர்களிடத்தினின்று ஜெயசீலராய் உயிர்த்தானது, நாமும் ஒருநாள் உலக முடிவில் ஆத்துமத்தோடுஞ் சரீரத்தோடும் உயிர்ப்போமென்பதற்கு அடையாளமாகவும், அடைமானமாகவும் இருப்பதினால், நமது ஆத்துமத்தையும் சரீரத்தையும் பாவத்தினால் கறைப்படுத்திக் கொள்ளாமல் பரிசுத்தவான்களாய்ச் சீவிக்கப் பிரதிக்கினை செய்துகொள்வோமாக. கடைசியாய்த் திவ்விய பூசையானது நமதாண்டவர் பரலோகத்துக்கு ஆரோகணமானதையும் நமக்கு நினைப்பூட்டுவதைப் பற்றி, நாமும் உலக முடிவில் அவரைப் போல் ஆத்தும சரீரத்தோடு ஒட்டோலகராய் மோக்ஷத்துக்குப் போய் நித்திய பேரின்பத்தைச் சுகித்தனுபவிக்கும்படியாக, இப்பிரபஞ்ச பொருட்கள்மட்டிலும், வாழ்வின் மட்டிலும் ஒழுங்கற்ற பற்றுதல் வைக்காமல், மோக்ஷத்தின் பேரிலேயே நமது சிந்தனையை நாட்டி அதற்கேற்றபடி சீவித்து வருவோமாக.

---

## OUR SOCIAL RESPONSIBILITIES.

## நமது ஜனசாரக் கடமைகள்.

---

தென் இந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தைச் சேர்ந்த சென்னை நகர்க் கிளைச்சங்கத்தின் 6-வது வருஷாந்தரப் பொதுக்கூட்டம் சென்ற மேமீ 9உ நடந்தேறியபோது திருமயிலை மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங்கைக்குரிய தோமாஸ் செல்வஇராய சுவாமிகள் ஷெ விஷயத்தின் பேரில் பின்வருமாறு உபந்நியாசித்தார்கள்:

ஒரு ஜனசங்கத்தின் சீவியமுஞ் சிறப்பும் நிலைமையும் நேர்மையும் அபிவிருத்தியும் பெரும்பயனும் அச்சங்கத்தி னங்கத்தினரொவ்வொருவருந் தங்க டங்கட்குரிய கடமைகளை நன்குணர்ந்து நயம்பட புரிவதில்தா னுளவென நாம் பட்டப் பகலினும் வெட்ட வெளிச்சமாய்க் கண்டறியுஞ் சத்தியம். பலவளங்களு நிறைந்துள இவ்விந்திய நாடதனில் வாழுங் கத்தோலிக்கராகிய நாமனுசரிக்க வேண்டிய ஜனசாரக் கடமைகள் பல வுளவாயினு மவற்றை யெல்லா மீங்கெடுத்துக் கூறத்தக்க சமயமும் வேண்டிய நேரமு மில்லாமையான் அவைகளி லிரண்டொன்றை மாத்திர மெடுத்துரைக்கின்றேன்.

கிறிஸ்துவர்களாகிய நாம் கவனித் தனுசரிக்கவேண்டிய முதற் கடமை நம்மிடத்திலிருக்கவேண்டிய பிற சினேக ஒற்றுமையே. கத்தோலிக்கரின் சீவியத்தில் தூண்டா விளக்குப் போலப் பிரகாசிக்க வேண்டிய இச் சனசாரக் கடமை சென்னை மாநகரில் வாழுங் கத்தோலிக்சரிடத்தில் எவ்வளவு குறைவாய்த் தோன்றுகின்றது! நமது சத்தியவேத மேன்மைக்கும் நமது நன்மை சுகவிருத்திக்கும் இன்றியமையாத இந்நற்குணத்தைக் குறித்து எத்தனை கல்விமான்கள் எத்தனைவிசை தனிக்கூட்டங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் பேசியும், புத்தகங்கள் பத்திரிகைகள் மூலமா யெழுதி வற்புறுத்தியுமிருக்கின்றனர்! ஆனா லவர்கள் செய்த வுபந்நியாசமும் அவர்கள் எழுதிய புத்தகங்களும் விளைத்த பயனென்ன? அவைகளைக் கேட்டவர்களும் வாசித்தவர்களு மெவ்வளவு சொற்பப்பேர்? கேட்டவர்களிலும் வாசித்தவர்களிலு மதி னவசியத்தைக் கண்டுணர்ந்தோர் அதிலும் எவ்வளவு சொற்பப்பேர்? அப்படி யதி னவசியத்தைக் கண்டுணர்ந்தவர்களில் பிறசிநேக வொற்றுமை தங்கள் நடத்தையிலும் பிறர் நடத்தையிலும் விளங்கும்படி முயற்சி செய்து வருபவர் அதிலு மெவ்வளவு சொற்பப்பேர். அநேகருக்கு இவ்விஷயங்கள் விழலுக்கிறைத்த நீர் போலும், செவிடன் காதி லூதிய சங்கு போலும் வீணாயிற்றென்பதில் சந்தேகமுண்டோ? அடிமேலடி யடித்தால் அம்மியும் நகருமாதலால் கத்தோலிக்கருடைய பொதுநன்மை சுகங்கட்கு மிக்க அவசியமாகிய இவ்வொற்றுமையை, நற்குணக் கடமையை மறுபடியும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்வ துத்தமமென நம்புகின்றேன்.

பிற நலமும் பொது நலமுங் கருதி யுழைக்கும் பெருந் தன்மை நம்மி லனேகருக் கில்லையென்ப துண்மை. சுய நலமும், சுய கீர்த்தியும் தேடித் திரிவதே யனேகருடைய முக்கிய தொழில். இதற்கத்தாட்சி வேண்டுமானால் நாமிச் சென்னைமாநகரில் பொதுநல நோக்கிக் கூடும் சங்கத்திற்கு வந்து அதைச் சிறப்பித்து, அதை விருத்தி செய்ய முயர்சி செய்பவர் எவ்வளவு சொற்பப்பேர். சங்கங் கூடுகின்ற அன்றையத் தினந்தான் அனேக கத்தோலிக்கருக்கு அவசியமான

அனுவிலிருக்கும். அன்று மாலை நேரத்தில்தான் சுவிசேஷத்தில் விருந்திற் கழைக்கப்பட்டவர்கள் கூறிய சாக்குப்போக்குகள் போல, ஒருவர் தான் வாங்கிய எருதுகளைப் பரிசோதிக்கப் போகவேண்டும், ஒருவர் தன் வயலைப்போய்ப் பார்க்கவேண்டும், வேறொருவர் தாம் புதிதாய் கலியாணஞ் செய்த மனைவியோ டிருக்கவேண்டும். மெய்யாகவே கத்தோலிக்கருடைய பொது நலத்திற்காக வுழைப்பவர் இவ்வண்ணஞ் செய்யார். வேறு சில கத்தோலிக்கர் தாங்கள் சங்கங் கூடும்போது வாராதிருப்பது மாத்திரமல்லாமல், கத்தோலிக்குச் சங்கத்தினது குறைகளைப் பல பேரறிய பகிரங்கமாய்ப் பத்திரிகை மூலமாய்க் கூறியும், இல்லாததும்பொல்லாததுமுரைத்தும், கூட்டியுங் குறைத்தும் சங்கத்திலுள்ளவர்கள் சமாதானத்தை யழித்து, சலிப்பை விளைவித்து, பகையை மூட்டி, கத்தோலிக்கர் தங்கள் ஒற்றுமையால் அடையக்கூடிய சுக நன்மைகளை யெல்லாம் நிர்மூலமாக்கப் பிரையாசைப்பட்டு வருகின்றனர். ஒரு பிரமாண்டமான ஆல விருட்சம் போல பல கிளைச் சங்கங்களைத் தென்னிந்தியா முழுவதும் பரப்பி, ஏறக்குறைய 1500 அங்கத்தினரை அடக்கியுள்ள நமது சங்கத்தில் சில குறைகளுளவென்று நா மொத்துக்கொண்டபோதிலும், அக்குறைகளை நிவர்த்திசெய்ய சில கத்தோலிக்கர் எடுக்கும் வழிகள் சரியல்லவென்பதெனது அபிப்பிராயம். குற்றங் கூறுவது வெகு எளிது. ஆனால் கூறிய குற்றத்தை நீக்குவது வெகு கஷ்டம். கூறிய குற்றத்தால் சங்கமுற்ற அவமானத்தை நிவர்த்திசெய்வது அதினுமதிக கஷ்டம். சமாதானத்தி லாகு நன்மைகள் சண்டையிலாகா. ஐக்கியமே நமது கத்தோலிக்கருடைய விருத்திக் கழியா அஸ்திவாரம்.

இவ்வொற்றுமை சிநேக பந்தனத்தை மேன்மேலும் விருத்திசெய்ய நாமொவ்வொருவருங் கடமைப்பட்டிருக்கின்றோம். கத்தோலிக்கருக்கு ளிருக்கவேண்டிய விவ்வைக்கியம் மேன்மேலும் தழைத்தோங்கச் செய்வதற்குச் சங்கத்தின்பேரால் பிரசுரிக்கப்படும் ஒரு பத்திரிகையை விட மேலானது வேறொன்றுமில்லை. கூட்டங்கட்கு வரக்கூடாதவர்கட்கு கூட்டங்களில் நடக்குஞ் சங்கதிகளைச் சரியாய்த் தெரிவிக்கவும், அங்கத்தினர் தங்க ளபிப்பிராயங்களை வெளியிடுவதற்கும் முக்கியமாய் நமது சங்கத்திற்கு விரோதமாய் மற்ற பத்திரிகைகளிலே எழுதுபவர்கட்கு தக்க விடைபகரவு மிப்பத்திரிகை யொரு சிறந்த வெத்தனமாகும். தற்காலம் நாம் ஒரு வாரப் பத்திரிகை பிரசுரிப்பதற்குப் போதுமாகிய பொருளில்லாவிடில் ஒரு மாதாந்திர பத்திரிகையை யாவது துடங்குவ துத்தமம். இதோ இரங்கூனிலிருக்கும் கத்தோலிக்கர் "சிநேகிதன்" என்னும் பேர்பூண்ட வொரு மாதாந்திரப் பத்திரிகையை ஆரம்பித்திருக்கின்றனர். இராஜதானி தலைப்பட்டணமாகிய நஞ் சென்னையி லனேக கத்தோலிக்க ரிருந்தும் ஒரு மாதாந்திர பத்திரிகையை யாவது தொடங்காதிருப்பது சரியன்று. தென்னிந்தியர் கத்தோலிக்கு சங்கத்தினர் பேரால் பிரசுரிக்கப்படும் ஒரு மாதாந்திர பத்திரிகை மற்ற விஷயங்களிற் சிறந்ததா யில்லாவிடினு மதினால் தென்னிந்தியாவில் வசிக்குங் கத்தோலிக்கருள் பிற சிநேகவொற்றுமையை யதிகரிக்கச் செய்யு மாதலால், அதினிமித்தம் நா மெடுக்கும் பிரயாசமும், கொடுக்கும் பணமும், செலவிடும் நேரமும் வீணென்று நினைக்கலாகாது.

இச்சென்னையில் வாழுங் கத்தோலிக்கர் புரியவேண்டிய வேறொரு கடமையையும் இன்றெடுத்துக் கூறுவது நலமென் றெண்ணுகின்றேன். சுதேச கத்தோலிக்கரின் பிள்ளைகள் தங்கியிருந்து படிக்கும்படி சென்னை, மைலாப்பூரிலிருக்கும் கத்தோலிக்க பாடசாலைகளைச் சேர்ந்த மடமொன்று ஏற்படவேண்டிய வழியைத் தேடுவதும் நமது கடமை. இந்நகரி லிருக்கு மனேக தாய் தந்தையர் தங்கள் மக்களைத் தூரத்திலிருக்கும் திரிசிராப்பள்ளி, கூடலூர் முதலிய ஸ்தலங்களிலிருக்கு மடத்திற்கனுப்ப சித்தமில்லாதிருக்கின்றனர். மேலு மிந்த ராஜதானி முக்கிய நகரில் இத்தகைய மடமொன் றிருப்பது கத்தோலிக்கருடைய மகிமையையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தும். இவ்விஷயத்தைப்பற்றி யனேக உபாத்திமார்களும், தாய் தந்தையரும் என்னிடத்தில் பேசியதால்தா னிதை உங்கட்குத் தெரிவிப்பது நலமென்றெண்ணினேன். இக்குறையை நீக்க வேண்டுமானால் இந்நகர்க் கிளைச்சங்கத்திற்குச் சபாநாயகராகிய மிக. வந்தி. மயிலை மேற்றிராணியாருக்கு ஒரு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும். மட முதலியவை ஸ்தாபிப்பதற்கு மைலை மாநகர் ஒரு தகுந்த ஸ்தலம்போலத் தோன்றுகின்றது. மைலை மேற்றிராணியார் இவ்வித தொழிலில் காட்டும் ஊக்கமு மன்பும் காண வேண்டுமானால், அர்ச். தோமையா ராலயத்தைச் சுற்றிச் செழித்தோங்கும், சுதேச பிள்ளைகள் பாடசாலையையும், ஆங்கிலேய பிள்ளைகள் பாடசாலையையும், ஏழைச் சிறுவர் பள்ளிக்கூடத்தையும், அநாத பிள்ளைகள் மடத்தையும், ஐரோப்பிய சுதேச கன்னியர் மடங்களையும் குருப்பட்டத்திற்காகப் படிக்கும் பெரிய மடத்தையும் சிறு மடத்தையும்போய்ப் பார்க்கலாம். ஆதலால் நாமிதைப்பற்றி நமது சபாநாயகரைக் கேட்டா லவ ரிதற்கோர் ஏற்பாடு செய்வாரென்று நினைக்கின்றேன். ஆனால் இம்மடத்தை யேற்படுத்தி யதைத் தக்க விதமாய் நடத்திவருவதற்குக் கிறிஸ்துவர்களாகிய நாமும் நம்மால் கூடிய பொருளுதவி புரியவேண்டும். இவ்வளவு காலம் மேற்றிசைக் குருக்கள் செய்துவந்த பரோபகாரத்தினால் நம்நாட்டில் சத்தியவேதமும் நாகரீகமும் செழித்து வந்தன. ஐரோப்பாவி லிப்போது நடக்கும் பெரும் போரினாலினி அவ்வளவு பொருளுதவியை ஐரோப்பாவிலிருந்து எதிர்பார்ப்பது சரியல்ல. கூடியவரையும் சுதேசக் கிறிஸ்துவர்களே தங்கள் குருக்கட்கும், கோவில் காரியங்களைச் செய்வதற்கும் வேண்டிய பொருளுதவி செய்யவேண்டும். மலையாள நாட்டிலுள்ள கிறிஸ்துவர்கள் தங்கள் குருக்களையும், கோவில் காரியங்களையும் பராமரித்துவருவதுபோல இந்திய நாட்டின் இதர பாகத்திலிருக்கும் கிறிஸ்துவர்களும் செய்வதே சரி. இதுவும் கத்தோலிக்கராய நமது கடமைகளி லொன்று.

இப்போது யானுரைத்த இந்த இரண்டொரு கடமைகளைக் கண்டுணர்ந்து அவைகளைச் சரியா யனுசரித்து வருவோமேயாகில், நாம் கத்தோலிக்கருக்குள் பிற சிநேக ஒற்றுமையையும், நஞ்சிறுவர்கள் நல்லொழுக்கத்திலும், ஞானத்திலும் தேறும்படி ஒரு மடத்தையும் உண்டாக்கி, நாம் வாழு மிச் சென்னைமாநகரில் கத்தோலிக்கருக்கு ஒரு பெருநன்மை செய்தோமென மகிழலாம்!

---

துன்பங்கள் வரக்கூடாதென்று நீ எவ்வளவுதான் ஆசைப்பட்டபோதிலும் அதினால் துன்பங்கள் வராமலிருக்கப்போகிறதில்லை. ஆதலால் சர்வேசுரனுக்குப் பிரியப்படும்படியாகவும், அவர் கண்ணுக்குமுன் பலனுள்ளதைச் செய்யும்படியாகவும் ஆசித்து எல்லாம் பொறுமையுடன் சகித்துக்கொள்.



## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### மூன்றாம் கற்பனையால் ஞாயிற்றுக்கிழமையிலும் கடன்திருநாட்களிலும் வேலை விலக்கப்பட்டிருக்கிறது.

### 16-ம் பாடம்.

(முன் தொடர்ச்சி)

---

அவசரத்தி னிமித்தம் குருவானவருடைய உத்தரவுடன் வேலை செய்தால் பாவமில்லை.

1. தேவதண்டனை:—கல்லியா தேசத்தில் ஒரு குடியானவன் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் ஏர் பூட்டி உழ ஆரம்பித்தான். இதனால் கிறிஸ்துவர்களுக்கு வெகு துர்மாதிரிகை உண்டானது. எருதுகளைக் குத்தி அடித்தபோதிலும் ஒரு அடி ஆகிலும் அப்பால் எடுத்து வைக்கவில்லை. இதனால் அவனுக்கு உக்கிரம கோபம் உண்டாகி எருதுகளை அடித்து ஓட்டும்போது, கலப்பை இரண்டாக முறிந்துபோயிற்று. பின் ஒரு கத்தியைக் கொண்டுவந்து அந்தக்கலப்பையைப் பழுதுபார்க்கத் தொடங்கினான். அப்போது கத்தியைப் பிடித்த அவனுடைய கை மரம்போல மரத்துப்போய் எவ்வளவு பலமாய்க் கத்திப்பிடியை அவனுடைய கையிலிருந்து பிடுங்கப் பிரயாசப்பட்டும் யாராலும் கூடாமல் போய்விட்டது. இவ்வாறு இரண்டு வருஷக்காலமாய் அந்தக் கத்திப்பிடி அந்த நிற்பாக்கியனுடைய கையிலேயே இருந்துவிட்டது. இது தேவ தண்டனைதானென்று கண்டு கொண்டு மனஸ்தாபப்பட்டுத் தவம் புரிந்து வந்தான். ஒரு நாள் அர்ச். ஜூலியானுடைய கல்லறைக்குத் திருயாத்திரையாகப் போய், அங்கு கூடியிருந்த திரளான ஜனத்துக்குமுன் கோவிலில் வேண்டிக் கொள்ளும்போது, அவனுடைய கை சடுதியில் தளர்ச்சியடைந்து கத்திப்பிடி கீழே விழுந்தது.

பிள்ளைகளே ஞாயிற்றுக்கிழமையில் ஒருபோதும் வேலை செய்யாதேயுங்கள். ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்தால் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் அநேக தின்மை நேரிடும். (அர்ச். கிரகோரியார்.)

2. ஓர் இயந்திரக்காரன்:—காற்ருல் ஓடும் இயந்திரத்தில் வேலை பார்த்து வந்த ஒருவன் சாதாரணமாக ஞாயிற்றுக்கிழமை தோறும் வேலைசெய்து வருவான். யார் புத்தி சொன்னாலும் அதைக் காதில் போட்டுக்கொண்டவனல்ல. ஒரு ஞாயிற்றுக்கிழமை அதிகாலையெழுந்து வேலைசெய்யும்படி இயந்திரமிருக்கும் இடத்துக்குப் புறப்பட்டான். மத்தியான சாப்பாட்டுக்கு அவன் வீட்டுக்குத் திரும்பாதபடியால், அவனுடைய மனைவி அவன் வேலை செய்யும் இடத்துக்குப்போனாள். அங்கே, எப்படியோ இயந்திரத்தின் சக்கரத்தில் அவன் அகப்பட்டுக் காயப்பட்டுச் செத்துக்கிடந்ததைக் கண்டு அவள் துக்கித்துப் பரிதபித்தாள். (Noel.)

3. ஒரு ஊரில் தேய்வ பயமற்ற ஒரு குடும்பம் இருந்தது.—தகப்பனும் பிள்ளையும் அடிக்கடி ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்துவருவார்கள். ஒருநாள் அவ்வூரார் கடன் பூசை காணும்படி கோவிலுக்குப் போகும்போது, இப்போது சொன்ன தகப்பனும் மகனும் போர் அடித்துக்கொண்டு இருந்தார்கள். பூசைக்குப் போகிறவர்களுடைய நன்மாதிரியால் அவர்களுக்குப் பிரயோசனம் உண்டாகவில்லை. அவர்கள் அன்று சாயந்திரம், வண்டிநிறைய வைக்கோலைப் போட்டுக்கொண்டு, வீட்டுக்கு வண்டியை ஓட்டிக்கொண்டு போகும்போது எருதுகள் மிரண்டபடியால் வண்டி குடம் சாய்ந்து கீழே விழுந்தது. வைக்கோல்மேல் உட்கார்ந்திருந்த மகன் கீழே விழுந்து கழுத்து முறிந்து செத்தான். வண்டியை ஓட்டிப்போன தகப்பன் கீழே விழுந்து எருதின் காலில் அகப்பட்டு மிதிபட்டு இறந்தான். ஞாயிற்றுக்கிழமை வேலை செய்ததால் வந்த பலன் இதுதான் என்ருர்கள் அவ்வூரார்.

4. ஏழு ரூபாய்:—ஒரு கிராமத்தில் இரண்டு வேலைக்காரர் இருந்தார்கள். இவர்களில் ஒருவன் ஞாயிற்றுக்கிழமையில் தவருமல் பூசைகண்டு, அன்று வேலை செய்யாமலிருந்தான். மற்ருெருவன் பூசை கண்டபோதிலும் கூலி வேலைக்குப் போவான். ஞாயிறன்று வேலை செய்யாத வேலைக்காரன் மற்றவனுக்கு வேலை செய்யாதிருக்கும்படி புத்தி சொல்லியும் அவன் அதுக்குக் காது கொடுத்தவனல்ல. ஒருநாள் நல்ல கிறிஸ்தவனான வேலைக்காரன் தன் அயலானை நோக்கி, மித்திரனே: என்னிடம் 7-ரூபாய் வைத்துக்கொண்டு வழி நடக்கும்போது, எனக்கு எதிர்ப்பட்ட ஒரு ஏழைக்கு ஆறு ரூபா யெடுத்துக் கொடுத்தேன்; இதற்கு நீ என்ன சொல்லுகிருயென்ருன். ஞாயிறு வாரத்தில் வேலை செய்துவரும் வேலைக்காரன் தன் ஸ்நேகிதனுடைய உதாரகுணத்தைப்பற்றிக் கேள்விப்படவே அவனை நோக்கி "நீ மெய்யாகவே உதாரகுணமுள்ளவன். உன்னிடத்தில் ஆறு ரூபாய் பெற்றுக்கொண்டவன் உன் மட்டில நன்றிகாட்டக் கடமைப்பட்டிருக்கிறுன்" என்ருன். அப்பொழுது, ஏழு ரூபாய்க்காரன் "என்னிடம் ஆறு ரூபாயைப் பெற்றுக்கொண்டவன், என்னை வழிமறித்து என் மடியிலுள்ள ஒத்தை ரூபாயையும் பலவந்தமாய்ப் பிடுங்கிக்கொண்டால் அவனை என்னசெய்யலாம்?" என்ருன். ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்ய வழக்கப்பட்டவன் இதைக்கேட்டு கோபோக்கிரங்கொண்டு, அப்பேர்ப்பட்ட நன்றிகெட்டவன் ஜெயிலுக்குப் பாத்திரவான் என்ருன். இதைக் கேட்ட மற்றவன் புன் நகைப்புடன், "மித்திரா, சர்வேசுரன், வாரத்தில் ஆறு நாளை நமக்குக் கொடுத்து, ஒரு நாளை மாத்திரம் தமக்கு என்று நிறுத்தி யிருக்கிருர். நீயோ, உனக்குக் கொடுக்கப்பட்ட ஆறு நாளோடு ஸ்வாமி தமக்கு என்று நிறுத்தி வைத்திருக்கும் 1நாளையும் பலவந்தமாய்ப் பிடுங்கிக்கொள்ளுகிருய் ஞாயிற்றுக்கிழமையில் நீ வேலை செய்யும்போது" என்றதைக் கேட்டவன், இந்த உவமையின் அருத்தத்தை அறிந்துகொண்டு, அதுமுதற்கொண்டு ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்யாமலிருந்தான்.

5. 25000-ரூபாய் பெறுமான நகை:—ஒரு ருஷிய தளக்கர்த்தன் பாரீஸ் பட்டணத்துக்குப்போயிருந்து, துரிதமாய்த் தன் தேசத்துக்குப் புறப்படும்படி நேரிட்டது. இவன் அவ்விடத்தில் விலை உயர்ந்த நகையை விலைக்குவாங்கும்படி கருத்துகொண்டு, அவ்வூரில் பெரிய ஷாப்புக்காரன் (கடைக்காரன்) வீட்டுக்குப்போய்த் தன் கருத்தை வெளியிட்டான். இன்று ஞாயிற்றுக்கிழமையா யிருப்பதால் ஷாப்பு திறக்கப்படாது; நாளை திங்கட்கிழமை ஷாப்புக்கு வந்தால் உமக்கு இஷ்டமான நகையை வாங்கிக



கொள்ளலாம் என்ருன் ஷாப்புக்காரன். அதற்குத் தளக்கர்த்தன், இன்று சாயந்திரமே நான் இந்நகரை விட்டுப் புறப்படுவதால், இன்றே ஷாப்பைத் திறக்கவேண்டுமென்றுகேட்டும், ஷாப்புக்காரன் சம்மதியாததை அறிந்து, 10 அல்லது 20 ரூபாய் நகை வாங்கப்போகிறேன் என்று நினைக்கவேண்டாம். 25000 ரூ. பெறுமான நகையை வாங்க இருப்பதால், உனக்குப் பெரும் லாபம் கிடைக்கும், உடனே ஷாப்பைத் திறவென்ருன். "நீர் இருபத்தைந்துலக்ஷ ரூபாய்க்கு நகை வாங்கவேண்டியிருந்தாலும், இன்று ஞாயிற்றுக்கிழமையா யிருப்பதால், தேவகட்டளையை மீறி என் ஷாப்பைத் திறவேன்" என்ருன்.

தளக்கர்த்தன் வேருெரு ஷாப்புக்காரனிடம் போய்த் தன் கருத்தைச் சொன்னபோது, நல்லது இன்றையத்தினம் ஞாயிற்றுக் கிழமையா யிருந்தும் உம்மைப்பற்றி என் ஷாப்பைத் திறக்கிறேன் வாரும் என்ருன் இரெண்டாவது ஷாப்புக் காரன். அப்போது தளக்கர்த்தன் சற்று யோசனை செய்து, முதலாவது ஷாப்புக்காரன் தேவ கற்பனைப்படி நடப்பதால் அவன் எதார்த்தவாதியும் அப்பட்டமான நகைகளை உடைத்தானவனுயும் இருப்பானென்று நிச்சயித்து, தன் பிரயாணத்தை நிறுத்தித் திங்கட்கிழமையன்று முதல் ஷாப்புக்காரனிடம் தனக்கு வேண்டிய நகைகளை வாங்கித் திருப்தி அடைந்தான். (Daily rewards.)

(இன்னும் வரும்.)

---

## GNANAMANI III PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 21-ம் அதிகாரம்.

ராமகிருஷ்ணு! சாகக்கிடக்கும் உனக்கு நான் செய்யும் சத்தியப் பிரமாணம் இது.

அன்றையத்தினம் கவர்னர் துரை இறங்கியிருந்த பங்களா விசித்திரமான விதமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அந்த பங்களா தோட்டமோ அழகான நந்தவனம்போலக் காணப்பட்டது. அந்தப் பூஞ்சோலையிலிருந்த சகல மரங்களிலும் பற்பல வர்ணமுள்ள சீனு விளக்குகள் ஏற்றப்பட்டுத் தொங்க, அதிலிருந்து கிளம்பும் பிரகாசம் கண்ணுக்கு ரம்மியமாய்க் காணப்பட்டது. சில விளக்குகள் வெகு விசித்திரமாய் வைக்கப்பட்டு, அதில் கவர்னர் துரை யவர்களுடைய நாமதேயம் பிரகாச எழுத்துக்களால் வரையப்பட்டிருந்தது. விருக்ஷங்களில் தொங்கும் விளக்குகளின் ஊடே பல நிறமான கொடிகளும் பறந்துகொண்டிருந்தன.

இவ்வளவு அலங்கார சொகுசாய்ச் சிங்காரிக்கப்பட்டிருந்த பூஞ்சோலை மத்தியில் 500 பேர் தாராளமாய் உட்காரக்கூடிய பிரமாண்டமான இரெட்டைக் கூடாரம் அடிக்கப்பட்டிருந்ததுமன்றி அந்தக் கூடாரம் முழுதும் இலை, தழை, பூ, மொக்குகளால் நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தரையில் விசாலமான ரத்னக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. கூடாரத்தின் ஒரு பக்கத்தில் மேடை யொன்று யெழுப்பப்பட்டு, அதுவும் உயர்ந்த கம்பளத்தால் மூடப்பட்டிருந்தது. நேர்த்தியான ஆசனங்கள் வரிசை வரிசையாய்ப் போடப்பட்டிருந்தன. மிட்டாய், கேக் முதலிய பலகாரம் தினுசு தினுசாய் அநேக மேசைகளில் வைக்கப்பட்டிருந்தன. அமிர்தமான கனிவர்க்கங்களும் பெருங் குவியல் குவியலாக நாலாபக்கத்திலும் குவிக்கப்பட்டிருந்தன. சோடா, லெமனெட் முதலிய உயர்தர பான வர்க்கங்களும் புட்டி புட்டியாய் அடுக்கப்பட்டிருந்தன. இந்தப் பான பதார்த்தங்களைப் பரிமாறும்படி 40, 50 பரிசாரகர்கள் நாலா பக்கத்திலும் ஆஜராய்க் காத்துக்கொண்டிருந்தார்கள். கூடாரத்தில் பிரவேசித்த மாத்திரத்தில் அங்கு வைக்கப்பட்டிருந்த கமகமவென்று மணக்கும் சுகந்த புஷ்ப வாசனையாலும் அத்தர் பன்னீர் முதலிய சென்ட்டுகளாலும் இன்பம் உண்டாகி அதை விட்டுப்போக மனம் எழாது.

எட்டுமணி டாங் என்று அடிக்கவே, கவர்னர் துரை யவர்கள் அங்கு கூடியிருந்த கனவான்கள் தனவான்கள் முதலியவர்களால் சூழப்பட்டு பாண்டுவாத்தியத்துடன் பூஞ்சோலையின் அழகு அலங்காரத்தையும் ஆயிரக்கணக்காய் எரியும் பற்பல வர்ண விளக்குகளின் பிரகாசமான வெளிச்சத்தையும், காற்றுக்கு ஆடிப்பறக்கும் கொடி துவஜங்களையும் பார்த்து மெச்சிச் செல்லும்போது, கலெக்டர் துரை கவர்னர் துரையை நோக்கி, அதோ தங்கள் நாமம் என்க, அவரும்

அவரைப் புடைசூழ்ந்தவர்களும் கலெக்டர் சுட்டிக்காட்டிய திசையை நோக்கிப் பார்த்தபோது வெகு நேர்த்தியாய் அமைக்கப்பட்டிருக்கிறதென்று சம்பாஷித்துக்கொண்டு கூடாரத்தில் பிரவேசிக்கவே சகலரும் தங்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தார்கள்.

தேவதாஸ் பண்டிதரும் தமது மாணாக்கருடன் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஆசனங்களில் உட்கார்ந்தார்கள். அங்கு கூடியிருந்த 400பேரும் தங்கள் தங்கள் ஸ்தானங்களில் அமர்ந்தார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தரும் தனவந்தரும் பாரிஸ்டர் வக்கீல்மாரும், ஜமீன்தார் மிட்டாதாரும், வர்த்தகர் மிராசுதாரும் ஆகிய இத்தியாதி பெரியமனுஷரும் தங்கள் தங்கள் குடும்ப சமேதராய் அவ்விடத்திற்கு வந்திருந்தார்கள். அங்கு கூடியிருந்த 400 ஜனத்தில் 100 பேர் ஐரோப்பியர். மற்றவர்கள் இந்தியர். துரைமார் மார்பில் தொங்கும் கடியாரப் பொன் சங்கிலிகள் மினுக் மினுக்கென்று பிரகாசிக்க, இந்திய பிரபுக்களின் பொன் சரிகைத் தலைப்பாகைகளும் பொன் கிரீடம்போல் ஜொலித்துத் துலங்கின. பட்டும் பொன்னும் கலந்து நெய்யப்பட்ட வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, பலவர்ணகற்கள் இழைக்கப்பட்ட பொன் நகைகளைக் காது கழுத்து நிறையப் பூண்டு தலையில் ஜடைபில்லை அணிந்த ஸ்திரீகள் ஆங்காங்கு பரவியிருந்தபடியால், அங்கு ஏற்றப்பட்டிருந்த விளக்கு வெளிச்சத்தில் இத்தனை பொன் ஆபரணங்களும் பளீர் பளீரென்று மின்னிப் பிரகாசிக்கும்போது கண்ணுக்கு வெகு சுந்தரமாயிருந்தது. ருக்மணியும் விலையுயர்ந்த பட்டாடைகளை உடுத்தி, இரத்தின வைடூரியங்கள் பதித்த நகைகளைப் பூண்டு, அன்னப் பறவையை நாணச் செய்யும் விதமாய் வந்திருந்தாள் அந்தக் கொலுவுக்கு.

தேவதாஸ் பண்டிதருடைய வஸ்திரம் சாதாரணமானதும் சுத்தமுள்ளதுமாய் இருந்தது. ஆனால் அவருடைய மாணாக்கர்களின் வஸ்திரங்களோ சொல்லி முடியாது; அவ்வளவு சொகுசு சுந்தரமாய்க் காணப்பட்டன.

சகலரும் தங்கள் தங்கள் ஆசனத்தில் அமர்ந்து சந்தடி யடங்கவே, அவ்வூர் டிஸ்ட்ரிக்ட் முனிஸிப்பாகிய ஐயர் அவர்கள் வெகு விலை உயர்ந்த பூமாலையைக் கவர்னர் கழுத்தில் சூட்டி, கமகம என மணக்கும் பூச்செண்டை அவர் கரத்தில் அளித்தார். அவ்வாறே மற்றக் கனவான்களும் மாலையிட்டுப் பூச்செண்டு கொடுத்தார்கள். இது முடியவே, கலெக்டர் துரை தேவதாஸ் பண்டிதருக்குச் சயிக்கினை காட்டி, பாட்டுக் கச்சேரி துவக்கச் சொன்னார்.

அங்கு கூடியிருந்த முப்பத்தாறுபேரும் தங்கள் தங்கள் வாத்தியக் கருவிகளைக் கையில் எடுத்துக்கொண்டார்கள். ராமகிருஷ்ணன் வியாதியாய் விழுந்தபடியால் அவனுடைய வேலையெல்லாம் பண்டிதர் தலைமேல் விழுந்தது. சமயத்துக்குத் தகுந்தாற்போல 2, 3, 4 பிட்டில்காரர் வீணைக்காருடன் கொட்ட, மற்றவர்கள் பாடுவார்கள். சில நேரத்துக்குப்பின், பாஞ்சோ, பிடில், வீணை முதலியவைகளைக் கொட்டி பாடுவார்கள். அதற்குப்பின் பியானோ, பிடில், கிளார்னெட், ப்லூட் முதலிய வாத்தியங்களுடன் பாடுவார்கள். சிலசமயங்களில் எல்லா வாத்தியங்களுடன் பாடும்போது அங்கு கூடினவர்கள் இவ்வற்புத காக்ஷியைக் கண்டு பரவசங்கொண்டவர்களைப்போல் கண் இமிட்டாமலும் வாய் மூடாமலும் நட்ட சிலைகளைப்போல் அசைவின்றி, கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரு வித சங்கீதம் முடிந்து வேறொன்று பாட்டுத் துவக்கும்போது, கூட்டத்தில் அநேகர் encore encore இன்னொரு முறை பாடும் என்று சொல்லுவார்கள். ஆனதைப்பற்றி ஒவ்வொன்றையும் இரண்டு மூன்றுவிசை இரட்டிக்கும்படி நேரிட்டது. சகலருடைய கண்ணும் பண்டிதர் பக்கமாய்த் திரும்பியிருந்தன. பெருத்ததோர் அற்புதக் காக்ஷியைப் பார்ப்பதுபோலக் கண் இமிட்டாமல், "எவ்வளவு இன்பமா யிருக்கிறது; இதைப்போலொத்த இன்ப இராகங்களைக் கேட்டதில்லை; வைகுண்ட காக்ஷிபோலிருக்கிறது" என்று ஒவ்வொருவரும் அதிசய ஆச்சரியமாய்ச் சொல்லிக்கொண்டார்கள். அங்கு கூடினவர்கள் இவ்வாறு சந்தோஷித்து மகிழ்வதைக் கண்ட வாத்தியக்காரருக்கும் பாடகருக்கும் அதிக உற்சாகமும் ஜோருங்கிளம்பி இன்னம் நேர்த்தியாகவும் இன்பமாகவும் வாத்தியஞ் வாசிக்கவும் பாடவும் முயன்றார்கள்.

அங்கு கூடியிருந்த கனவான்கள் இந்தச் சங்கீதப் பாடல்களையும் வாத்திய வினோதங்களையுங் கேட்டு, எவ்வளவு ஆனந்தங்கொண்டு சந்தோஷித்தார்கள் என்றால், சிற்றுண்டி உண்ணவும், மதுரமான பான வர்க்கங்களை அருந்தவும் நினைத்தவர்கள் அல்ல. பாட்டுக் கச்சேரி 11மணி



வரைக்கும் இருக்குமென்று ப்ரோகிராமில் கண்டிருந்தும், மணி 12, 1. அடித்தபோதிலும் ஒருவரும் எழுந்திருக்கவில்லை. இரண்டு மணி யடித்தும் எல்லோரும் பேசாமலிருப்பதைக் கண்ட தேவதாஸ் பண்டிதருக்கு ஒரு பக்கத்தில் கோபமும் வேறு பக்கத்தில் அதிக இளைப்புங் களைப்புமுண்டானபடியால், பஜனைக்காரருக்குச் சயிக்கினைகாட்டி யெழுந்திருக்கக் கற்பிக்கவே, எல்லோரும் எழுந்து "*God save our Queen*" என்னும் மங்களப் பாட்டைப் பாடுவதைக் கண்ட சபையோர் அனைவோரும் எழுந்து நின்றார்கள். மங்களப்பாட்டு முடியவே, கவர்னர் துரையவர்கள் தேவதாஸ் பண்டிதரையும் மற்ற பஜனைக்காரரையும் புகழ்ந்து கொண்டாடித் தமது கையிலிருந்த பூச்செண்டைப் பிரித்து அந்த மலர்களைப் பண்டிதர்மேலே தெளித்தார். இதைக் கண்ட மற்றவர்களும் தங்கள் கையிலிருந்த பூமாலைகளைப் பண்டிதர்மேல் இறைத்தார்கள். ஸ்திரீகளும் அவ்வாறே அவரைப் புகழ்ந்து பன்னீரையும் புஷ்பங்களையும் பண்டிதர் மேல் தெளிக்க, தேவதாஸ் பண்டிதர் நின்ற இடம் முழங்கால் மட்டும் புஷ்ப மேடையாய் விட்டது!

இதற்குப்பின், சிறந்த அந்தக் கூட்டத்தார் சந்தோஷ ஆனந்தங் கொண்டவர்களாய்த் தங்கள் விடுதிகளுக்குச் சென்றார்கள். பண்டிதர் டாக்டர் துரையவர்களைப் பார்த்து ராமகிருஷ்ணனுடைய சுகத்தைப்பற்றி விசாரித்தபோது, "தற்போது வியாதியின் குணத்தைப் பற்றித் திட்டமாய்ச் சொல்ல முடியாது. காலை பத்து மணிக்குப் போய்ப்பார்த்துத் தெரியப்படுத்துவேன்" என்று சொல்லிப் போனார்.

அன்று இராத்திரி நித்திரையில்லாததைப் பற்றி, பண்டிதர் பாட்டுக் கச்சேரி முடிந்தபின் நித்திரை செய்து, எட்டுமணிக்கு எழுந்து தன் வேலையெல்லாம் முடித்துக்கொண்டபின், டாக்டர் ராமகிருஷ்ணன் வீட்டுக்குப் போகிறதற்கு முன்னதாகவே தமது மாணாக்கரில் இருவருடன் வியாதிக்காரனைப் பார்க்கும்படி போனார். பண்டிதரை ராமகிருஷ்ணன் பார்த்தவுடனே அவருக்குத் தண்டம் செய்தான். வியாதிக்காரனுடன் பேசிக்கொண்டிருந்த சற்று நேரத்துக்குள்ளாக டாக்டர்துரை வந்து நோயாளியைக் கவனமாய் வெகுநேரம் சோதித்துப் பார்த்தபின், "இவன் பிழைக்கமாட்டான்; நுரையீரலில் வீக்கங் கண்டிருக்கிறது; நேற்றையத் தினம் போட்ட மருந்தால் யாதொரு பிரயோசனமுமில்லை. வியாதி மிஞ்சிப்போய்விட்டது. எட்டு நாளைக்கு முன் தகுந்த சிகிச்சை செய்திருந்தால் பலனுண்டாயிருக்கும்; ஆனால் இனி முடியாது. இன்னம் இரண்டு நாள், தப்பினால் மூன்று நாள் மட்டும் இவன் உயிரோடிருப்பான்" என்று சொல்லி சில மருந்துகளைக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார்.

டாக்டர் சொன்னதைக் கேட்ட மீனாக்ஷியம்மாள் அழத் துவக்கினாள். ராமகிருஷ்ணனோ பயந்து கலங்கிக் கண்ணீர்விட ஆரம்பித்ததைக் கண்ட பண்டிதர், அவனுக்கு ஆறுதலான வார்த்தையைச் சொல்லித் தேற்றிக்கொண்டிருக்கும்போது, வியாதிக்காரன் தன் துக்கத்தை நிறுத்தி, பண்டிதரை நோக்கி, "எஜமானரே! ஒரு வார்த்தை" யென்றான்.

பண்.—சொல் கிருஷ்ணா? உனக்கு வேண்டியதைக் கேள்.

ராம.—ஐயா, சாமி! தாங்களே எனக்கு சகலமுமாயிருந்து என்னையும் என் தங்கையையும் சவரக்ஷணைசெய்து காப்பாற்றினீர்கள். இவ்வளவு உபகாரம் தங்களிடத்தில் பெற்றதற்கு கைம்மாறாக நான் ஒரு நன்றியும் புரிந்தேனில்லை. நான் முன் சொன்னதுபோல, நீரே எனக்கு தாயுந் தகப்பனும், குருவும் உபகாரியுமா யிருந்தீர். இதுவரையில் உமக்கு யாதொரு துரோகமும் புரியாமல் அடிமைபோல் கீழ்ப்பட்டிருந்து வந்தேன். ஆனால் நேற்றையத்தினம் நான் கொடுத்த வாக்குப்பிரகாரம் வராமல்போனது என்மீது தப்பிதம்.

பண்.—இல்லை யில்லை; அது உன் தப்பிதமல்ல. கூடாத காரியத்துக்கு என்ன செய்வது. ஆனால் உன்னைக் குரூரமாய் நடத்தினது என் மீது தப்பிதம் (என்று கண்கலங்கிப் பேசத் துடங்கும்போது.)

ராம.—என் பேருபகாரியே! என் தகப்பனார் பேர் மலையப்பிள்ளை. நான் கையெழுத்துப் போடும்போது ம. ராமகிருஷ்ணன் என்று எழுதுவதுண்டு. ஆனால் கடந்த வருஷம் முதற்கொண்டு, உம்மை யென் தந்தையாகப் பாவித்து உமது பெயரையும் சேர்த்துக்கொண்டு ம. தே. ராமகிருஷ்ணன் என்று கையொப்ப மிட்டு வந்தேன்.

*பண்.—அப்படியா! நான் அதைக் கவனித்ததில்லை. (பண்டிதரோடு வந்திருந்த மாணாக்கர் இருவரும் "ஆம், எங்களுக்குத் தெரியும். ஆனால் அதன் விவரத்தை அறியோம்" என்றார்கள்.)*

*ராம.-தாங்கள் என்னை வளர்த்து ரக்ஷித்து கல்வி பயிற்றின தகப்பனாயிருக்கிறீர். உமது பெயரையும் என் பெயருடன் சேர்த்துக்கொண்டேன். உம்மைப்போல, நீர் வணங்கும் தெய்வத்தையும் வணங்கிச் சாக ஆசையாயிருக்கிறேன்.*

*இதைக் கேட்ட பண்டிதர் அவனுடைய பிரமாணிக்கத்தையும் நன்றியறிதலுள்ள விசுவாசத்தையுங் கண்டு அதிசயித்து, உடனே குருவானவருக்குக் கடிதமெழுதி, தன் வண்டியையும் அனுப்பிவைத்தார். குருவானவரும் சமயோஜிதத்துக்குரிய புத்திமதிகளையும், வேதத்தைப் பற்றிய அத்தியாவசியமான சத்தியோபதேசத்தையும் அவனுக்கு உணர்த்தி, ஞானஸ்நானங் கொடுத்து, மறுநாளும் அவனுக்கு சொல்ல வேண்டியவைகளைச் சொல்லி கடைசித் தேவத்திரவிய அனுமானங்களை நிறைவேற்றினார்.*

*பண்டிதரும் மற்ற மாணாக்கரும் அடிக்கடி வியாதிக்காரனைப் பார்த்து வந்தார்கள். இவ்வளவு சாமர்த்திய திறமையுள்ள கூட்டாளி சாகப்போகிறதை யறிந்து மகா துக்கப்பட்டார்கள். வியாதிக்காரன் உயிர் விடுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன் பண்டிதர் பக்கமாய்த் திரும்பிப் பார்த்து, கண்ணீர் சிந்தி, என் "தகப்பனே! குருவே! எனக்கு முன் இருந்த அச்சம், கஸ்தி நீங்கி இப்போது ஆறுதலுண்டாகிறது. உம்முடையவும் என்னுடையவுங் கடவுளிடம் நான் போசப் போகிறேனென்று நினைக்கும் போது என் இருதயம் சந்தோஷ பிரவாகத்தில் மூழ்குகின்றது. நான் பரலோகஞ் சேர்ந்து தேவன் சந்நிதியில் இருக்கும்போது உம்மை மறவேன். சத்தியவேதத்தில் சேருவதால் இவ்வளவு சந்தோஷ ஆறுதல் உண்டாகுமென்று நினைக்கவில்லை! எஜமானே, கடைசி வார்த்தை தாசன் பேச உத்தரவு தாரேன்?*

*பண்.—மெத்த சந்தோஷம்! கிருஷ்ணா, வாய்திறந்து பேசு.*

*ராம.—(தன் தங்கையை அருகாமையில் வரச் சயிக்கினைகாட்டி, பண்டிதர் பக்கம் ராமன் தன் கண்களைத் திருப்பி) பேருபகாரியான எஜமானே, இதோ! என் தங்கை; அண்ட ஆதரவற்ற பக்ஷிபோல் நிற்கிறாள். (என்றவுடனே மீனாக்ஷி விம்மி விம்மி அழத்தொடங்கினாள்.) அழ வேண்டாமென்று ஆறுதல் சொல்லி, ராமகிருஷ்ணன் இவ்வாறு சொல்வான்: ஐயா, எஜமானே இவள் உங்கள் பிள்ளை, தாங்கள் அவளைக் காப்பாற்றி இரக்ஷிக்கவேண்டும்.*

*பண.—ராமகிருஷ்ணா! பயப்பட வேண்டாம். உன் தங்கைக்கு ஒரு குறைவின்றி காப்பாற்றுவேன்; சாகக்கிடக்கும் உனக்கு நான் செய்யும் சத்தியப் பிரமாணம் இது.*

*இந்த வார்த்தையைக் கேட்ட வியாதிக்காரனுடைய முகத்தில் சந்தோஷங் காணப்பட்டதுடன், அதுமுதல் பேச்சு வார்த்தை யின்றி மரண அவஸ்தைக்குள்ளாகி, பண்டிதர் அங்கே இருக்கும்போதே அமரிக்கையுடன் உயிர் துறந்தான்.*

(இன்னும் வரும்.)

---

# CORRECT THINGS FOR CATHOLICS.

# கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

## தெய்வத்தால் ஸ்தாபிக்கப்பட்ட கத்தோலிக்கு வேதத்தின் லக்ஷணங்கள். புறமதஸ்தர்களுடைய நடமாட்டம்,

(முன் தொடர்ச்சி.)

53. *தாழ்ந்த ஜாதிக் கிறிஸ்துவர்களுள் உத்தியோகஸ்தர்களா யிருப்பவர்கள், தங்களை வேளாளரென்றும் முதலிகளென்றும் சொல்லிக்கொண்டு அங்ஙனம் வேஷம் போட்டுத்திரிவது ஒழுங்கல்ல.*

*(ஜாதி யேற்பாட்டின் கொடுமையால் மனுப்பிறவிக்கவசியமாயிருக்கும் கடைசித்தரமான சுதந்தரத்தையுமிழந்து நாயினுங் கடையர்களாய் நடத்தப்பட்டு வந்து, "சகலருக்கும் சுதந்திரம் சமம்" என்னும் ஜெய பேரிகையுடன் இந்நாட்டிற்கு விஜயமான காருண்ய ஆங்கிலேய துரைத்தனத்தாரால் கொஞ்சம் தலையெடுத்து வரும் மேற்படியார், தங்களை யிதுவரைக்கும்—ஏன்?—இன்னம் நிர்ப்பந்தப்படுத்திவரும் அந்த ஜாதி யேற்பாட்டைத் தங்கள் சத்துவங் கொண்டமட்டும் துவேஷித்துத் தள்ளாமல், விளக்கின் சுடரைக் கண்டு அதில் விழுந்து மாண்டு மடியும் விட்டில் பறவையைப்போல் ஜாதிப் பெருமையைக் கண்டு மயங்கி நாசமடைகிறார்கள்.*

*கல்வி, கல்வியின்மை, செல்வம், செல்வமின்மை, ஒழுக்கம், ஒழுக்கமின்மை ஆகிய இத்யாதி காரணங்களினால், ஐரோப்பியருடைய அந்தஸ்து ஏற்பாட்டின்படி, மேலோர் கீழோராகவும், கீழோர் மேலோராகவும் மாறக் கூடும். ஆனால் அக்கியானிகளுடைய ஜாதி யேற்பாட்டின்படி மேலோர் ஒருக்கால் கீழோராகப் பாவிக்கப்படக்கூடுமே யொழிய, கீழோர் என்றும் மேலோராக முடியாது. ஜாதி யேற்பாட்டின் நியாயங்கெட்ட கடினம் இதிலேதான் அடங்கி யிருக்கிறது. மேலும் தான் கண்ணைமூடிக்கொண்டு பால் குடித்தால், உலகமே கண்ணை மூடிக்கொண்டிருக்குமென்று நினைக்கும் பூனையைப்போல், தங்களை உயர்ந்தோரென்று சொல்லிவிட்டால், தாட்சண்யத்திற்குத் தலைமை யாட்டினாலும் ஒப்புக் கொள்ளுகிறவர்கள் யார்? அநேகர் இப்படி ஜாதி வேஷம் போட்டுத் தங்கள் பெற்றோர்களையும் (என்ன கொடுமை!) பந்துக்களையும் நிராகரிப்பார்கள். மிருகத்திலும் பறவையிலும் கூட்டில்லாத வௌவாலைப்போல் சுப அசுப காரியங்களில் மெத்தவும் சங்கடப்படுவார்கள். தங்கள் இன ஜனங்களால் இகழப்படுவார்கள். தங்கள் புத்திரர் புத்திரிகளுக்குத் தக்க பெண் மாப்பிள்ளை கிடையாமல் தவிப்பார்கள். அநேகர் கத்தோலிக்கு வேதானுசாரந் தப்பி, புரொட்டெஸ்டான்டாரைப்போலவும், அக்கியானிகளைப்போலவும் நடிப்பதுமுண்டு. ஆனால், அவர்களுக்கு என்ன தேவ சாபமோ அறியோம். இவர்களுடைய குடும்பங்கள் விருத்தியும் செழிப்புமின்றி, சீக்கிரத்தில் மெலிந்து வாடி ஊர் பேரின்றி ஒழிந்துபோம்.*

*இதற்கு மாறாக நாலடியார் சொல்லுகிறபடி,*

*"நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்*
*சொல்லளவல்லாற் பொருளில்லைத்-தொல்சிறப்*
*[பின்*
*ஒண்பொருளொன்றோ தவங் கல்வியாள்வினை*
*என்றிவற்றா னாகுங்குலம்"*

*அதாவது வித்தையும், செல்வமும், நற்குணமுமே மேல்குலத்தின் குறிப்பென்பதை யுணர்ந்து, உலகத்தில் தாழ்ந்த வகுப்பினருக்குப் பொதுவாய் உரித்தான குடி, திருட்டு, பொய், விபசாரம், ஊதாரித்தனம், அகந்தை என்னும் துர்க்குணங்களைத் தள்ளி, வேத ஒழுக்கத்தின்படி நடந்து, தங்கள் பிள்ளைகளைக் கல்வியில் தேர்ச்சியுறச்செய்து, தங்கள் இன ஜன பந்துக்களுக்குக் கூடியமட்டும் உதவி செய்து, இகலோகத்திலும் பரலோகத்திலும் சிறந்த பெயரான கிறிஸ்துவர்கள் என்னும் பெயரில் பெருமை கொண்டு, ஜாதி, மாமூல், என்னும் நிர்ப்பந்தம் ஒன்றுமின்றி, ஐரோப்பியர், மகம்மதியர், பாரசீகர்களைப் போல் தங்களுக்குள் அந்தஸ்து வித்தியாசம் மாத்திரம் பாராட்டி வந்தால் அவர்களுக்கென்னகுறை? அவர்களுள் வெகுபேர் இங்ஙனம் நடந்து சீருடன் வாழ்ந்து வருவதைக் காண்கிறோம்.)*

54 *தங்கள் பூர்வகுலப் பெருமையும் சுதந்திரமும் கிடைக்குமென்று வீணாய் நம்பி அக்கியானியைப்போல் நடிப்பது ஒழுங்கல்ல.*

*(சில கிறிஸ்துவர்கள் அக்கியானிகளைப் பார்த்து "நீங்களும் நாங்களும் ஒன்றுதான். மாதாகோவிலுக்கு மாத்திரம் போகிறோம். மற்றொன்றிலும் பேதமில்லை. உங்கள் வேதத்தைத் தான் விட்டோம். ஜாதியையும் உங்கள் முறைமைகளையும் விட்டோமோ? எங்கள் வீட்டிற்குள் ஒரு மாடு, ஒரு கழுதை, ஒரு நாய் வந்தாலும் இடங் கொடுப்போம் ஆனால், தேவ சாயலுள்ள ஆத்துமங்கொண்ட ஒரு சுத்தபத்தமுள்ள தாழ்ந்த குலத்தானையாவது சரி, ஐரோப்பிய கலெக்டர் கவர்னரையாவது சரி, மகம்மதிய வர்த்தகனையாவது சரி, எங்கள் வீட்டிற்குள் எங்களோடு சம பந்தியாய்ச் சேர்ப்போமோ? தப்பித் தவறி அவர்கள் எங்கள் பாத்திரங்களைத் தீண்டி விட்டால் திட்டாயிவிட்டதே யென்று நாங்களுந் தான் சாதிக்கிறோம். இவ்விஷயங்களிலெல்லாம் நாங்கள் உங்களைவிட அதிக சீலம். இது மாத்திரமா? உங்களைப்போல் நாங்களும் ஜாதகம், முகூர்த்தம் பார்ப்போம். சகுன சாஸ்திரம், நல்ல நாள், கெட்ட நாள், ராகு காலம் அநுசரிப்போம். வெள்ளிக்கிழமை*

நல்ல இலட்சுமி நாளென்று அன்றுதானே கலியாணம் நடத்துவோம். எங்கள் கலியாணப் பந்தல்களில் அரசாணிக்கால் நட்டு குடவிளக் கேற்றுவோம். சாலுங் கரகமும் வைப்போம். நலங்கெடுப்போம். ஆலாத்தி யெடுப்போம். எங்கள் வீட்டில் இழவானால், பிரேதத்தோடு நெருப்புச் சட்டி கொண்டு போவோம். பால் சடங்கு நடத்துவோம். ஆயுதபூஜை செய்வோம். இன்னம் எவ்வளவோ சாங்கியங்களை யெல்லாம் அநுசரித்து வருகிறோம். அநுசாரத்தில் மாத்திரமல்ல, தோற்றத்தில் முதலாய் முழுதும் உங்களைப்போல் காணப்படும்படியாகப் பொட்டு, குங்குமம் தரித்துக்கொள்ளுவோம்" என்பார்கள். (இதென்ன அவகேடு, மெச்சிக்கொள்வார்களென்று எச்சிலை யெடுக்கலாமா? கிறிஸ்துவ கண்ணியம் எங்கே போச்சுது!)

"நாங்கள், சீ, அவர்களைப்போல் இவர்களைப்போல் அன்று; நாங்கள் இந்து கிறிஸ்துவர்கள். இப்படியெல்லாம் நாங்கள் செய்ய எங்கள் குருக்களின் உத்தரவுமுண்டு" என்பார்கள். (ஓ! சண்டாளர்களே, நீங்கள் எங்கே வேதம் படித்தீர்கள்? சத்திய சாதாரண கத்தோலிக்கு வேதத்தில் நாட்டுக்கொரு போதகம், வீட்டுக்கொரு போதகம் உண்டோ? இப்படிப்பட்ட அக்கியான முறைகளைக் கிறிஸ்துவர்கள் அநுசரிக்கத் தகாதென்று 14-ம் ஆசீர்வாதப்பர் என்னும் பாப்பானவர் கண்டிப்பான நிருபம் எழுதியும், நீங்கள் இன்னம் அம்முறைகளைக் கையாடி வருவீர்களேயாகில், உங்கள் பூர்வ அக்கியானம் இன்னம் உங்களை விட்டுத் தொலைய வில்லையென்று நாணங்கெட்டு ஒப்புக் கொள்ளுவதை விட்டுவிட்டு, அக்கியானிகளுடைய ஏளனத்திற்கும் பதிதர்களுடைய பரியாசத்திற்கும் சத்திய வேதத்தையும் உத்தம குருக்களையும் இலக்காக்குவது உங்களுக்குத் தருமமா யிருக்குமா?)

55. கிறிஸ்துவர்களா யிருப்பதைப் பற்றி, புறமதஸ்தாருக்கு முக்கியமாய் இந்துக்களுக்கு முன் சங்கோசப்படுவது ஒழுங்கல்ல. (சிலருக்குத் தாங்கள் கிறிஸ்துவர்களென்று நிடாரிக்கமாய்ச் சொல்ல அவர்கள் நாக்கு வழங்காது. ஆஸ்பத்திரிகளில் அல்லது வேறு முகமறியாத இடங்களில் பேர் கேட்டால் ஜோசப் என்கிறவன் சிங்காரம் என்றும், மரியம்மாள் என்பவள் மாணிக்கம் என்றும், ஒரு உத்தியோகத்திற்கு விண்ணப்பம் அனுப்பும்போதே அந்தோனி என்பவன் அண்ணாசாமியென்றும், சுசானாள் என்பவள் சொர்னம், சுந்தரம், சௌபாக்கியம் என்றும் மாற்றிச் சொல்வதுண்டு. இவ்வளவு தானா? அடக்கம் ஆகும்போது, கல்லறைமட்டும் குருசு, கத்தரிசால் பிடித்து வருபவர்களைப் பார்த்து "நீங்கள் பிரேதத்தோடு வரவேண்டாம். முன்னதாகத் தொலைந்து போய் 'கல்லறை வாசலில் காத்திருங்க"ளென்று ஒழிப்பவர்களுமுண்டு.--(கிறிஸ்துவனே, இரட்சண்ய விருதாகிய சிலுவைகூட உனக்கு அவமானக் குறிப்பாயிற்றோ? அரோசிகமின்றி புத்தியால் முதலாய்க் கிரகிக்கக் கூடாத பஞ்சலிங்கம், நாமம் முதலிய அசுத்த குறிப்புகளை அக்கியானிகள் எவ்வளவு பெருமையுடன் மதிக்கிறார்களென்று நீ அறியாயோ?) தங்கள் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் ஆகும்போது ஏதோ குருவானவருடைய கட்டாயத்தினால் பிராஞ்சீஸ், பிலிப், சவரியப்பன், லூர்து, அகினேஸ், செசீலி என்று பேரிட்டாலும் வேண்டுமென்று அப்பெயர்களை மாற்றி சாமிக்கண், திரவியம், தனசாமி, பகவதி, பொட்டு, மங்களம் என்று வழங்குவிப்பவர்களுமுண்டு. இவர்களெல்லாம் கிறிஸ்து வேதத்தை என்னவென்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்? இன்னம் எத்தனை காலத்திற்கு இந்த அக்கியான புத்தி?)

56. தான் கிறிஸ்துவனா யிருப்பதைப் பற்றி ஐயோ! அக்கியானிகள் என்ன சொல்வார்களோ வென்று அங்கலாய்ப்பது ஒழுங்கல்ல.

(a) ஐயோ! அக்கியானிகள் என்ன சொல்லுவார்கள்?

கிறிஸ்துவேதம் ஒரு வேதம்; தாங்கள் இந்துவேதத்தி லிருப்பதுபோல, கிறிஸ்துவர்களும் கிறிஸ்து வேதத்தி லிருக்கிறார்களென்பார்கள். மேலும் சரியான கிறிஸ்துவர்கள் உத்தமர்களென்பார்கள்.

(b) ஐயோ! அக்கியானிகள் என்ன சொல்லுவார்கள்?



கிறிஸ்துவர்களுள்ளும் பல அந்தஸ்தினர் உண்டு. அவர்களும் சுபாவ முறைப்படி தங்கள் தங்கள் அந்தஸ்தினரோடு தான் புழங்குவார்களென்பார்கள்.

(c) ஐயோ! அக்கியானிகள் என்ன சொல்லுவார்கள்?

கிறிஸ்துவர்களென்ன! இக்காலத்தில் எத்தேசத்திலும் எந்த இலாகாவிலும் எப்பதவியிலும் இருக்கிறார்கள். சுத்தம் ஒழுங்குள்ள நல்ல கிறிஸ்துவர்களிடம் சகவாசம் செய்யத் தங்களுக்கு மெத்த விருப்பம் என்பார்கள்.

(d) ஐயோ! அக்கியானிகள் என்ன சொல்லுவார்கள்?

கிறிஸ்துவனா யிருப்பதைப் பற்றி நீ சங்கோசப்படுவதைப் பார்த்து "இவன் ஏதோ பஞ்ச காலத்துக் கிறிஸ்துவனைப் போலிருக்கிறது. கிறிஸ்து வேதத்தின் மேன்மையை யிவன் சரியாய் அறிந்திருப்பானே யாகில், இப்படிக் கூச்சப்படுவதெப்படி!" பென்பார்கள்.

(e) ஐயோ! அக்கியானிகள் என்ன சொல்லுவார்கள்?

அக்கியானிகள் ஒன்றும் சொல்வதில்லை. எல்லாம் நீ நினைத்துக் கொள்வதுதான். உறுதிப்பூசுதலைத் தக்க ஆயத்தத்தோடு பெறாத குறையால் போதிய திட விசுவாச மில்லாத நீயே முதல் முதல் வீண் பயங்கொண்டு, ஒரு ஆதாரமுமின்றி அக்கியானிமேல் பழியைப் போடுகிறாய். ஏதோ உன் தைரியத்தைக் காட்டு. அக்கியானி சொல்லுவதென்ன பார்ப்போம்.

(f) ஐயோ! அக்கியானிகள் என்ன சொல்லுவார்கள்?

அவர்கள் என்னத்தைச் சொல்வது. அவர்கள் உன்னைச் சம பந்தியில் சேர்த்து உனக்குச் சாப்பாட்டைப் படைப்பதும், அல்லது உன்னோடு சம்பந்தங் கலப்பதும் அவ்வளவிலேயே யிருக்கிறது. அன்ன நடை நடக்கப்போய்த் தன் நடையையும் இழப்பதுபோல் அக்கியானிக்குப் பயந்து அவனைப்போல் நடித்து உனக்கிருக்கும் அற்ப விசுவாசத்தையும் இழந்து விடாதே. மழையானாலும் இருட்டானாலும் "மந்தி (குரங்கு) கொம்பு தப்பிக் கொம்பில் பாயாது" என்னும் பழமொழியின்படி, கிறிஸ்துவர்கள், என்றும், எக்காரணத்தைப்பற்றியும், எவ்விதமாயும் தங்கள் வேதத்தை மறைக்கவே தகாது. ஏதோ பிடிவாத குணமுள்ளவர்களால் உனக்கொரு அற்ப சொற்ப இடைஞ்சல் வந்தாலும் அவ்வளவுகூட உன் தேவனுக்காக அநுபவிக்க உனக்கு மனமில்லாமற் போனால், சீ, நீயும் ஒரு கிறிஸ்துவனா? "நம்மைப்பற்றி நீங்கள் உபத்திரவப்படும்போது நீங்கள் பாக்கியவான்கள்" என்று ஆண்டவர் அருளிய வாக்கியம் எப்படிப்பட்ட ஆறுதல் தரும் வாக்கியம்!.

57. தான் கிறிஸ்துவனாயிருப்பதைப் பற்றி அக்கியானிகள் என்ன சொல்வார்களோ என்று மாத்திரம் அஞ்சுகிறவன் தன் துர் நடத்தையைப் பற்றி அக்கியானிகன் என்ன சொல்வார்களோ வென்று அஞ்சாதிருப்பது ஒழுங்கல்ல.

(கிறிஸ்துவன் பொய்சொன்னால், திருடினால், இலஞ்சம் வாங்கினால், வெறுக்கக் குடித்தால், தாறுமாறாய் நடந்தால், சண்டையும் சச்சரவும் மனஸ்தாபமுமா யிருந்தால், "ஐயோ! அக்கியானிகள் என்ன சொல்லுவார்கள்" என்று சற்று அஞ்சினால் கிறிஸ்துவர்கள் தங்கள் நடத்தையைச் சீர்திருத்திக்கொள்ள ஏதுவாயிருக்கும். அதற்கேன் அவர்கள் அஞ்சுகிறதில்லை?)

58. கிறிஸ்துவர்கள் தங்கள் வேதத்தை மறைக்கும்போது, நமது நேச இரக்ஷகருடைய மனம் எப்படியிருக்கும் என்பதைக் கவனியாதிருப்பது ஒழுங்கல்ல.

(அப்படி மறைக்கிறவர்களையும், மறைக்கத் தேடுகிறவர்களையும் பார்த்து அவர் என்ன சொல்வார் "என் நிஷ்டூர மரணத்தினால் ஞான ஜனனமடைந்த என் மக்களே, என்னைப் பற்றி உங்களுக்கு அவ்வளவு கூச்சம் ஏன்? என்னைப்போல் நிர்மலமான தேவனும் நேசப்பெருக்கமுள்ள தேவனும் வேறு யாருண்டு? நான் ஸ்தாபித்த வேதத்தைவிட அருமை பெருமை வாய்ந்த வேதம் யாதுளது? உலகத்தில் என் ஞான ராஜாங்கத்தை நடத்த கடந்த 20 நூற்றாண்டுகளாய், தொடர்புவிடாத் மேரையாய், நான் ஏற்படுத்திவரும் பாப்புமார்களென்ன? அவர்களுக்கு அருள்புரிந்திருக்கும் வழுவா வரத்தின் விசேஷமென்ன? அவர்கள் உலகத்தின் துர்ப்போதனைகளுடன் மல்லுகட்டிப் போராடி, என் போதனைகளையே யாவருக்கும் அற்புத தீபஸ்தம்பம்போல் காட்டும் திடமென்ன! எத்

தனையோ கொடிய நிஷ்டூர ஆக்கினையிலும் அழியாமல் என் ராஜாங்கம் வெள்ளிடைமலைபோல் விளங்கும் மேன்மை யென்ன? அவ்விராஜாங்கத்தில், உலகத்தின் பல பாகங்களுள் சிறந்த கல்விமான்கள் முதல் பாமரர் வரைக்கும், செங்கோல் பிடித்து அரசாளும் மன்னர் முதல் கப்பரை யேந்திப் பிச்சைவாங்கும் கபோதி வரைக்கும் உட்பட்டு, என் புனிதமான போதனைகளை யேற்றுக்கொண்டு இருதய ரம்மியத்துடன் வாழ்ந்துவரும் விசேஷமென்ன? மேலும் நான் அன்று கபாலமலையில் சிந்திய இரத்தத்தின் பலனால் உற்பவித்த விரத்தத்துவம், பிறசிநேகம் என்னும் எனது இரு செல்வப் பிள்ளைகள் மன மகிழ்ச்சியுடன் கைகோர்த்துக்கொண்டு, உலகத்தின் அஷ்டதிக்கிலும்போய்ச் சுகந்த லீலியமலர்களை இறைத்துவரும் சிறப்பென்ன? என்வேதம் உனக்குப் பெருமைதரும் வேதமே யன்றி சிறுமை தருவதல்ல” வென்பார். அப்படியும் கிறிஸ்துவர்கள் கேட்காவிட்டால், “நல்லது இன்றைக்கு என்னைப்பற்றி வெட்கப்படுகிறீர்கள். நாளைக்கு என் பிதாவின் சமுகத்தில் உங்களைப்பற்றி நானும் வெட்கப்பட்டு உங்களை அறியேன் என்று மறுதலித்து விடுவேன்” என்று சபிப்பார்.)

கோழைக் கிறிஸ்துவர்களே, முகத்தாட்சணியத்தை விரும்பும், அதுவும் அக்கியானியுடைய முகத்தாட்சண்யத்தை விரும்பும் கிறிஸ்துவர்களே, சற்று கவனியுங்கள்.

(தொடரும்)

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர். ப—ர்.]

### பாப்பரசர்பேரில் பதித சாஸ்திரிகொண்ட அபிமானம்.

இதனடியில்கண்ட வாசகம் ஓர் பிரசித்தி பெற்ற புஸ்தகத்தில் (Chemistry) கெமிஸ்டிரி சாஸ்திரியான ஓர் பிரக்யாதிபெற்ற பதிதரால் 19ம் நூற்றுண்டில் எழுதப்பட்டது. அஃது யாதெனில்:

“என் கழுத்தில் தொங்கும் இந்த ஜெபமாலையை மகா மேன்மைதங்கிய ஓர் பரிசுத்த பிதாவின் ஞாபகச் சின்னமாகவும், அநுதாபத்தின் அடையாளமாகவும், விலையுயர்ந்த ஆபரணமாகவும், வெகு பூசிதமாகவும், பக்தியாகவும் அணிந்து இருக்கிறேன். இப்பரிசுத்த வஸ்துவை ஜெருசலே மாநகரில் திவ்ய சேசுக்கிறிஸ்துநாதரின் திருக்கல்லறையைச் சந்திக்க திருயாத்திரையாகவரும் ஜனங்கள் தரிப்பது வழக்கம். ஆதலால் நான் அத் திரு ஸ்தலத்திலிருந்து திரும்பி வரும்போழுது இரண்டொரு ஜெபமாலையை விலைக்கு வாங்கினேன். நான் (Italy) இத்தாலியா தேசத்திற்குப் போகவேண்டி யிருந்ததனால் (France) பிரான்சு தேசத்தைக் கடக்கவேண்டியதா யிருந்தது. அப்பொழுது மகா வீரரெனத் தன்னைத்தானே மெச்சிப் புகழ்ந்த பெரிய நெப்போலியன் (France) பிரான்சு தேசத்து அரசன். இவன் அக்காலத்தில் திருச்சபையை அரசாண்ட 7-ம் பத்தி நாதரென்னும் பரிசுத்த பாப்பானவரை (Fontainbleau) பன்றய்ன்பிளுவென்ற விடத்தில் சிறைப்படுத்தி வைத்திருந்தான். நான் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வந்ததால் சிறையிலிருக்கும் பாப்பானவரைத் தரிசிக்க அதிகாரிகளின் விசேஷ அநுமதியடைந்தது டன் பாப்பரசரின் உத்தரவும் பெற்றுச் சிறைக்கூடம் சென்றேன். அம் மேலான தந்தையும் எனது வருகையை வெகு அன்பாய் ஏற்றுக்கொண்டார். அவருக்குச் செலுத்தவேண்டிய மரியாதையைச் செய்தபின் “தந்தையே நான் ஓர் ஆங்கிலன் (Englishman) இத்தாலியா (Italy) தேசத்திற்குப் போகிறேன். இராஜரீக (Politics)| காரியங்களைத் தவிர்த்துத் தங்களுக்காக நான் அங்கே தெரிவிக்கவேண்டிய சமாச்சாரங்கள் யாதேனும் உண்டாயின் அறிவித்தால் உடனே தெரிவிக்கிறே னென்று சொன்னேன். எனது நல்ல எண்ணத்திற்கு அவர் நன்றியறிதல் கூறியபோதிலும் எனக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாதென நினைத்துக் கொண்டாரென நான் அறிந்து கொண்டேன்

இதனிற்க, நான் திரு ஸ்தலத்திலிருந்து கொண்டுவந்த ஜெபமாலைகளில் ஒன்றை வெகு தாழ்மையுடன் சிரப்பணிந்து அவர் கரங்களில் கொடுத்தேன். அவர் அதைப் புந்நகையுடன் பெற்று தமது திருக்கரத்தினால் ஆசீர்வதித்ததுடன் தமது இரு உதடுகளால் அதை முத்தி



செய்து என் கையில் திரும்பக் கொடுத்தார். அந்த ஜெபமாலையை அவருக்குக் காணிக்கையாகவே கொடுத்தேன். அவர் பழயபடி அதை எனக்குக் கொடுக்கக் காரணம் நான் கத்தோலிக்குத் திருச்சபைக்குச் சேர்ந்தவன் என்று நினைத்ததேயாகும். ஆனால் அந்த ஜெபமாலைக்கு அவர் கொடுத்த ஆசீர்வாதத்தாலும் அவருடைய திரு உதடுகள் இரண்டும் அதில் பட்டதாலும் அதை எனது விலைமதியாத பொருளாகவும் ஆபரணமாகவும் அணியும்படியாக ஆசித்து அதைப்பெற்றேன். அதே ஜெபமாலைதான் இதோ எனது கழுத்தில் தொங்குகிறது. கடைசியாய், நான் பிரியும்பொழுது பாப்பரசர் வெகு அன்பாய் வாய்திறந்து “வந்தனம், நாம் எல்லோரும் சந்திப்போம்” என்று சொல்லி அவருடைய கருணைதங்கிய திருச்சபை ஸ்தாபதியின் ஆசீர்வாதம் தந்து அனுப்பினார்.

இவ்வாறு சம்பாஷணைகள் நடந்து 18-மாதங்களுக்குப்பின் திருச்சபைக்குத் தலைவராகிய இம்மேலான தந்தை (France) பிரான்சு தேசத்திலிருந்து விடுதலையான செய்தி யறிந்து அவரை வெகு ஆடம்பரமாக வரவேற்கவேண்டுமென ரோமாபுரி ஜனங்கள் எல்லோரும் ஏகோபித்து, வெகு கெம்பீரத்தோடும் அகமகிழ்ச்சியோடும், திருச்சபைக்குத் தலைநகரும் பரிசுத்த பாப்புவின் சிம்மாசன நகரமுமாகிய ரோமாபுரியில் வரவேற்ற ஜனங்களில் நானும் ஒருவனாக இருந்தேன். (Canovo) கனோவா எனபவனின் முகாண்மையின் கீழ் கீர்த்தி வாய்ந்த நூதன வேலைக்காரர்கள் தங்களுடைய புஜங்களில் அந்நேசத் தந்தையைச் சுமந்து ஊர்கோலம் செய்தார்கள். இப் பரிசுத்த பிதாவை ஏற்றுக்கொண்ட அகமகிழ்ச்சியும் விநோத கொண்டாட்டங்களும் என் ஞாபகத்தை விட்டு ஒருக்காலும் போகாது. அந்நகரச் சிறப்பையும், ஜனங்களின் அன்பையும் சந்தோஷ வாழ்த்துதல்கள்கூறி கைகொட்டி ஓலமிட்டதையும் என்னால் விவரித்து எழுத முடியாது. பரிசுத்த பாப்பு அங்குகூடி யிருந்த ஜனங்களுக்கு ஆசீர்வாதம் கொடுக்கும்பொழுது ஒவ்வொருவருடைய இருதயமும் பிளந்தவிதமாய்ப் பெருமூச்சு உண்டாகியது. ஒவ்வொருவருடைய நாவிலும் “பரிசுத்த தந்தையே! மகா மேலான தந்தையே! உம்முடைய விடுதலையானது கடவுள் புதுமை” யென்றே வந்துகொண்டிருந்தது. என்னைச் சுற்றியுள்ள பெண்களின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வெள்ளமாய்ச் சொரியக் கண்டேன். சிலபேர் பெருமூச்சுவிடக் கண்டேன். வயது சென்ற கிழவர்களோ சிறு குழந்தைகளைப்போல் அழுதுகொண்டிருந்தார்கள். நானோவெனில அப் பரிசுத்த தந்தை ஆசீர்வதித்துக் கொடுத்த ஜெபமாலையை மகா உருக்க வணக்கத்தோடு எனது மார்போடணைத்து அவரது உதடுகள் பட்ட பாகத்தை முத்தி செய்துகொண்டே இருந்தேன். நான் அந்த ஜெபமாலையை வெகு பயபக்தியாய்க் காப்பாற்றி அப்பாப்பானவரின் திடகாத்திரத்திற்கும் சாந்த குணத்திற்கும் தயாள காருண்யத்திற்கும் அடையாளமாகவும், எனது உயிர்த்துணைக் காதாரமாகவும் பாதுகாத்து வருகிறேன்.

பரிசுத்த ஸ்தலத்திலிருந்து கொண்டுவந்ததும் அம்மேலான பாப்புவின் ஆசீர்வாதமும் திரு முத்தமும் பெற்றதுமாகிய அந்தப் பாக்கியமான ஜெபமாலையை அநேகந் தடவைகளில் (Apulia) அப்புளியா (Calabria) கலபிரியா குடி ஜனங்களுக்கு முத்தி செய்துகொள்ளக் கொடுத்தேன.

(Appenines) அப்பினையின் மலை சாரல்களில் உள்ள சில கள்வர் என்னைக் கொள்ளையடிக்கும் நேரம் அந்த ஜெபமாலையின் கிருபையால் அவர்கள் வசமிருந்து தப்பி நல்ல வழியடைந்தேன்.” என்பதேயாம்.

காலி,
7th June, 1915.
T. பிச்சை ரோட்றிகஸ்.

---

### வெள்ளி ஜூபிலி.

மாக்ஷிமை தங்கிய நல்லாயன் பத்திராதிபரவர்கட் கனந்த வந்தனந் தந்தெழுதுவதியாதெனில்,

ஐயா, பத்திராதிபரே! தேவரீர் கருணைகூர்ந்து நாம் வரையுமிச் சிறிய கடிதத்தைத் தங்கள் மேன்மை தங்கிய பத்திரிகையினோர் கோணத்தில் பிரசுரிக்கத் தங்களைப் பிரார்த்திக்கின்றனம். அஃதாவது, சென்னை பெரியமெட்டில் வசித்த சற்குணசாந்த ஸ்ரீமன், சின்னையா அவர்களின் சிரேஷ்டப் புதல்வராகிய கனம் C. M. மிக்கேல் பிள்ளை அவர்கள் 1881-ம் வருடத்தில் சென்னையை விட்டு இரங்கூன் பதியின்கண் விஜயமாகி, முதலில் “இரங்கூன் புதிய மெடிக்கல் ஹாலில்” Dr. H. காட்பியர் அவர்கள்பால் வயித்திய வேலை பார்த்து வந்தும்,

பிறகு கெமிஸ்டு ஓஜி கம்பெனியிலும், அதன் பிறகு இருபது வருடக்காலமாக டாக்ட்டர் N. N. பார்க் துரையின் வயித்திய சாலையிலும், கெமிஸ்ட் ஹால் கம்பனியிலும் சரிவர வேலை பார்த்து தற்காலம் "இரங்கூன் மெடிக்கல் ஹாவில்" வேலைபார்த்து வருகிருர்.

என்ருலும் இவர் தற்புகழ்ச்சி பாராட்டாமலும் பாரபட்சங் காட்டாமலும் பிரபு யேழையென்று கருதாமலும் தன்னைப்போல் பிறரை நேசித்துவரும் நற்குண நற்செய்கைக் கேற்ற வண்ணம் "திரு இருதயத்தூதன்" "நல்லாயன்" முதலிய பத்திரிகைகளின் சந்தாதாரர்களி லொருவராயும், அர்ச். அந்தோனியார் கோவிலின் பரிபாலன சபையின் அங்கத்தினரி லொருவராயும், இந்தியன் கத்தோலிக் அசோசியேஷனில் மெம்பராயும், அர்ச். தேவமாதா பக்த பாலன பஜனை மெம்பர்களி லொருவராயும் இத்தியாதிசத் விஷயங்களிலெல்லாம் நமது நண்பர் C, M. மிக்கேல் பிள்ளை அவர்கள் பிரகாசித்து நிற்பது சகலருக்குந் தெரிந்த விஷயமே.

இது நிற்க, இவர் 1890-ம் வருடம் மேமாதம் 22-ம் திகதியன்று ஸ்ரீமதி தனம் அடைக்கலமரியம்மாளை திருக்கலியாணஞ் செய்து நிகழும் 1915-ம் வருடம் மேமாதம் 22-ம் திகதிக்குச் சரியாக 25-வருடமானதால், C. M. மிக்கேல் பிள்ளையும் தனம் அடைக்கல மரியம்மாளும் பல்லாண்டு பல்லாண்டாக ஆயுள் வளம் பெருகி வாழ நமது ஒப்பில்லா அப்பன் பரமநாதனைத் துதி செய்கின்றனம்.

இங்ஙனம்
தொண்டமண்டலம்
வல்லகாளத்தி நகர்
வீ. அ இராமச்சந்திரபுலவர்.

இரங்கூன்.
4—5—1915.

## MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாச்சாரம்

மகா பெரிய போர்க்கப்பல்.—உலகத்திலுள்ள எலலா போர் கபபலிலும் பெரிதானதொன்று அமெரிக்காவைச் சேர்ந்த புரூக்லின் என்னுந் துறைமுகத்தில் மிதகக விடப்பட்டிருககின்றது. இதை 32,50,000 பவுன் செலவு செய்து அமெரிக்கர் கட்டி முடித்திருக்கிருர்கள். 14 அங்குல வாயகலமுள்ள பன்னிரண்டு பீரங்கிகள் இதில் வைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

சீமைத் தக்காளி:—பல்லீறு வலியுண்டானுல் ஒரு துண்டு சீமைத் தக்காளிப் பழத்தை வாயில் அடக்கிக்கொண்டு இரவில் படுத்துக்கொண்டால் வலி நீங்கிப் போம். துணியில் ஏதேனும் கறைபட்டால் துணிக்கு அடியில் ஒரு பிளாட்டிங் கடுதாசித்துண்டை வைத்து, துணியின்பேரில் ஷை பழத்தைத் தேய்க்கவும். அடியிலுள்ள பிளாட்டிங் நனைந்துபோனுல் வேறே கடுதாசி யுபயோகிக்கவும். இங்கிக்கறைபட்ட பாகத்தில் ஷை பழத்தைத தேய்க்க கறையெடுபட்டுப்போம். இதைப் பரீட்சித்துப் பார்க்கவும்.

உலோகங்களா லாய சாமான்களைச் சுத்தி செய்ய.—பித்தளை, செம்பு, நிக்கல், ஜெர்மன் சில்வர், வெள்ளி இவற்ருல் செய்யப்பட்ட சாமான்களின் களிம்பை நீக்க அச்சாமான்களை ஓர் சுத்தமான புதிய மண்சட்டியில் போட்டு ஜலம் வார்த்து, சன்னமாயிடித்த சீயக்காய்த் தூளையும் அதற்குக் கால் பங்கு சோற்றுப்பையும் போட்டுக் கொதிக்கவைத்துக் கழுவி யெடுக்க சுத்தமாகும்.

முப்பது ரூபாய்க்கு மேற்படாத சம்பளக்காரருக்குப் படி.-சென்னை இராஜதானியைச் சேர்ந்த கர்னூல், பல்லாரி, அனந்தப்பூர், நெல்லூர், செஙகல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சித்தூர், சேலம், மதுரை இச் சில்லாக்களைத தவிர இதர ஜில்லாக்களில் சிவில் உத்தியோகத்தில் கவர்ன்மென்று தரப்பில் அலுவல் பார்க்கும் முப்பது ரூபாய்க்குக் கீழ்ப்பட்டவர்களுக்குப் படி கொடுக்கும்படி உத்தரவு பிறந்திருக்கிறது.

லார்ட் கிச்சினர்.—தற்போது இவரே யுத்த மந்திரியா யிருப்பவர். இவருக்கு வயது 65. என்ருலும் நிகழும் கொடிய யுத்தத்தில் வெற்றிகொள்ள வேண்டுமென்னும் உற்சாகமும் வீரியமுங் கொணடிருப்பதனுல் இவர் முன்னிருந்ததை விட இப்போது திடகாத்திரராயும், சுறுசுறுப்புடையவராயும் அழகு வாய்ந்தவராயும் காணப்படுகிருராம். இவரைப்போலவே வேறனேக ஆங்கிலேய பிரபுக்களும் தனவந்தரும் தங்களுடைய தள்ளாத காலத்தில் இளைப்பாற்றியையும் சுகத்தையுந் தேடாமல், வீரியங்கொண்டு வாலிபரைப்போல் சண்டைக்குப்போக உற்சாகங் கொண்டிருக்கிருர்களாம்.



போர்முனையில் 27 உறவினர்கள்.—பிரான்சு நகரத்திலுள்ள பெயர் பெற்ற எம். விவ்வெயின் வெவி என்பவரின் பந்துககளில 27 பேர்கள் போர் முனையில் கலந்திருக்கிருர்கள்.

நாய்க் கொலை.—மோப்பம் பிடிக்கும் சக்தி நாய்க்குண்டு; அதனுல் நாயை உலகத்தவர் மதிப்புடன் வளர்ப்பது உலக வழக்கமாயிருக்க, ஜர்மனியில் மட்டும் இப்போது நாய்கள் சங்கரிக்கப்படுகின்றனவாம். நாய்கட்குப் போடும் உணவுப் பொருள்கள் மிச்சமாகு மென்னும் உதேதசத்தினுல் ஜெர்மனியிலுள்ள நாய்களைக் கொல்லுதல் வேண்டுமென்று ஜெர்மனியில் உததரவு பிறந்திருக்கின்றதாம்.

கெய்ஸரினுடைய மகளும மருமகளும்—ஜெர்மன் சகரவர்த்தியவர்களுடைய புத்திரர்கள் போர்வீரர்களாக இருப்பதோடு அவருடைய புத்திரியும், மருமகளுங் கூட ராணுவத்தில சேர்ந்திருககிருர்களாம். அவருடைய புத்திரி ராணுவத்தில் நன்ருய்ப் பழகியிருப்பதோடு டெதஸ் ஹெட் ஹுஸ்ஸார்ஸ் (பமகிங்கிலியர்கள்) என்னும் பட்டாளத்துககுக் கர்னலாக இருக்கிருர்களாம். இளவரசருடைய மனைவியும் புத்திரியைப்போலவே ராணுவத்தில் பழகி டராகூன என்கிற படை வகுப்பில் ஒரு பட்டாளத்துககுக கர்னலாய் இருக்கிருள். இவர்கள் இருவரும ராணுவததில கமிஷன பெற்ற ஆபீஸர்கள் அநதஸ்தில இருக்கிருர்கள்.

ஜேர்மனியர்கள் ஏமாற்றப்பட்டது—கொஞ்ச காலத்துககு முன்ருல் ஜெர்மனியர்கள ட்ராயன் கோட்டையைத் தாக்கின போது, அந்தக் கோட்டையிலிருந்த ப்ரெஞ்சுத துருப்புகளின் தலைவர் அந்தக் கோட்டையிலிருநத இரண்டுவண்டி வைக்கோலில் நெருப்பு வைததார். ஜெர்மனியர்கள் வைக்கோல் பறறி யெரிவதைககண்டு, பிரெஞ்சுககாரர்கள கோட்டையை விட்டுவிட்டு ஓடிவிட்டதாக எண்ணிக் கோட்டையின் பக்கத்தில் வந்துவிட்டார்கள். உடனே ப்ரெஞ்சுத் துருப்புகள் ஜெர்மனியர்களைப் பலமாகத் தாக்கிச் சுமார் 1000 ஜெர்மனியர்களைக் கொன்று மற்றவர்களைத் துறத்திவிட்டன.

விவஸாய விளைபொருள்களின் விலை.-1915-ம் வருஷத்திலும், 1916-ம் வருஷத்தின் முற்பாதியிலும பருததியின் விலை குறையககூடும். அவுரி, சர்க்கரை இவைகளின் விலை அதிகமாகக் கூடும். புஞ்செய் தான்யங்களின் விலையும் அதிகமாகலாம். நெல்லின் விலை குறையுமோ ஏறுமோ சொல்லமுடியாது நிலக்கடலையின் விலை அநேகமாய்க் குறைந்துகொண்டே வரலாம். ஆனுல் யுததம் முடிந்துவிட்டால் 1916-ம் வருஷத்தில் நிலக்கடலையின் விலை மறுபடியும் அதிகமாகலாம் என்று தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் தெரிவிக்கிருராம்.

கைகுலுச்குவது—தற்காலம் ஐரோப்பியர்களுள்ளும், மேனுட்டு நாகரிகப் போக்கை முழுதிலும் அநுசரிததிருக்கிற படித்த இந்தியர்களுள்ளும் கை குலுக்கும் வழக்கம் ஒன்று இருந்துவருகிறது புதிதாக ஒருவரை யொருவர் காணும்போது ஒருவர் மற்றவரைக் காணுவதல் உணடாகும் அகமகிழ்ச்சியின் அறிகுறியாக கைகுலுக்கிக்கொளவது வழககமனறோ? ஆயினும் இப்போது ஒரு ப்ரெஞ்சு டாக்டர், கையில் ஓர் அஙகுல சுற்றளவுக்கு 80,000 விஷப்பூச்சிகள் இருக்கின்றனவென்றும், ஒருவருககொருவர் கைகுலுக்கிக் கொள்வதினுல் பெருதத தீமை யுண்டாகுமென்றும் அறிவிக்கிருர!

படிப்பு இலாக்கா பரீட்சைகள்'--சமீபத்தில் வெளியான இணடர்மீடியட் பரிட்சையின் முடிவிலும் ஸ்கூல் பைனல் பரிட்சையின் முடிவிலும் அநேக மாணவர்கள் தவறிவிட்டதாகவும, யூனிவர்ஸிடியார் மிகவும் கண்டிப்பான விதிகளை ஏற்படுத்தி மாணவர்களைப் பரிட்சையில் தேறவிடவில்லையென்றும் எங்கு பார்த்தாலும் பெருங் கூக்குரல் கிளம்பியிருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். இதன சம்பந்தமாக திருவனந்த புரத்திலுள்ள பொது ஜனங்களெல்லாம் சேர்ந்து ஒன்றுகூடி சென்னை யூனிவர்ஸிடி ஸிண்டிகேட் சபைககு ஒரு பெரிய மஹஜர் அனுப்பியிருக்கிருர்களாம்.

பழங்களும் குழந்தைகளும்.—குழந்தைகளுக்குப் பழங்களைத் தின்ன கொடுப்பதினால் அப் பழங்களிலுள்ள கொட்டை, அல்லது விதை, அதின் தோல் முதலானவற்றை அக் குழந்தைகள் சப்பி சாரத்தையுட்கொண்டு சக்கையை உமிழ்ந்துவிடத் தெரியாமல் பலமுறை விதைகள், தோல் முதலியவைகள் தொண்டையில் சிக்கிக்கொண்டு வெகு அபாயங்களுக்கு உள்ளாக ஏதுகரமாகின்றன. விஷப் பூச்சிகளும் வயிற்றில் ஜெனிக்கின்றன. வயிற்றில் தோல் முதலியவை சொருகிக்கொண்டு ஓட ஓடத் தண்ணீராய்ப் பேதி யாகிறதுண்டு. இத்தியாதி துன்பங்களுக் கேதுகரமான எவ்வகைக் கனிகளையும் குழந்தைகளுக்குக் கொடாம லிருப்பது நன்மை போலும்.

அழுக்கடைந்த நோட்டுகள்.—அழுக்கடைந்த நோட்டுகளைப் பெற்றுக் கொள்ளுவதில் பலருக்கும் பலவித சந்தேகங்கள் உண்டாகின்றன. அதேதென்றால், சிலர் போலி நோட்டுகளை அச்சடித்துத் தங்கள் திருட்டு வெளிவரா வண்ணம் அவற்றைப் பலவிதமாக அழுக்காக்கிப் பழய நோட்டுகளைப் போல் வழங்கச் செய்கிறார்கள். இவர்களுக்கு அழுக்குப் பிடித்த பழய நோட்டுகளிலேயே பிரியம். சரியான நோட்டுகளையும் போலி நோட்டுகளையும் கலந்து வைத்து வழங்குவதால் இவர்களுடைய திருட்டைக் கண்டுபிடிக்கிறது வெகு பிரயாசையா யிருக்கிறது. இதையறிந்த நமது காருண்ணிய துரைத்தனத்தார் இனி தங்களிடம கொண்டுவரபபடும் ஷை அழுக்கடைந்த கோட்டுகளை யெடுத்துக்கொண்டு புது நோட்டுகளைக் கொடுக்கும்படி நிர்மானித் திருக்கிறார்களென்று தெரியவருகிறது.

குழிதோண்டும் ஓர் நவீன இயந்திரம்:- அமெரிக்காவில் ஓர் இஞ்சினியர் ஓர் பிரமாண்டமான அரண்தோண்டும் யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். சமீபமாக நகரம் ஒன்றில், சாக்கடை தோண்டுவதற்காக கவர்ன்மெண்டாரின் உத்தரவின்பேரில் அவ் விஞ்சினியர் தமது நவீன யந்திரத்தை உபயோகித்ததில் கவர்ன்மெண்டாரால் குறிப்பிடப்பட்ட அதேஅகல உயரத்துடன் நாளொன்றுக்கு 1000 அடி நீளமுள்ள குழியைத் தோண்ட சாத்தியப்பட்டதாம். அதைக் கண்ட நகரவாசிகள் மிக்க ஆச்சரியமுற்று "ரணக்களத்தில் அரண் குழி தோண்டுவதற்கு இத்தகைய யந்திரம் உபயோகப் படுத்தப்பட்டால் படைவீரர்களுக்கு மண்வெட்டி மூலமாய் அரண்குழி தோண்டும் கஷ்டம் நீங்குவதுடன், யுத்தமும் சீக்கிரம் முடிந்து விடுமே!" என்று கூறினார்களாம்.

குழந்தைகள் விரலை சப்ப விடலாமா? குழந்தைகள் தங்கள் விரல்களை வாயில் வைத்துச் சப்புவதினால் அனேக நன்மைகளுண்டாகின்றன. உடம்புக்குச் சுகம், ஜீரணசக்தி, பல் முளைக்க ஹேது, தூக்கத்தில் சௌகர்யம் இவை முதலியவையாம். இத்தனை நன்மைகளுக்குக் காரணமான இவ் வழக்கத்தைக் கெட்டவழக்க மென்னலாமா? ஒருபோதுமல்ல. இவ் வழக்கத்தை நாமும் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்தவர்களல்ல. இது சுபாவத்திலேயே பிள்ளைகளுக்குண்டாகிறது. ஆகைபால் அதையொருபோதுந் தடுக்கலாகாது. ஆயினும் 2½ வயதுக்கு மேற்பட்டு இன்னும் இவ் வழக்கத்தை விடாத குழந்தைகளின் விரல்களில் வேப்பிலையை அரைத்து கொஞ்சந் தடவிவிட்டால் வெகு சீக்கிரத்தில் இது நீங்கிப்போம். இதற்காகக் குழந்தைகளை யடிப்பதும் பயமுறுத்துவதும் அநாவசியம்.

மணமகள் பிணமகள் ஆனாள்.—சில தினங்களின் முன் எல்லூரில் பிராமணருள் ஓர் கலியாணம் நிகழ்ந்தேறியது. அச்சுப தினத்தில் வழக்கப்படி நடக்கவேண்டிய வேத கோஷங்களும், ஸ்திரீகளின் உல்லாச பாடல்களும், மங்கையர் கொப்பி அடித்து குதூகலிக்கும் கோஷங்களும் ஒரு குறைவின்றி நடந்தன. என்றாலும் இரண்டாம் நாள் சாயங்காலம் இருந்தாப்போலிருந்து மணமகள், எக்காரணத்தினாலோ தெரியவில்லை, பிணமாய்விட்டாள். உடனே கலியாண வீடு இழவு வீடாக மாறிவிட்டது. எங்கு பார்த்தாலும் அழுகையும், பிரலாபமும், துக்கமும், துயரமும், ஓலமும், ஒப்பாரியும் கேட்கப்பட்டது. கலியாணத்தை முன் நின்று வெகு சம்பிரமமாக முடிக்கக் கோரி வந்த பெண் வீட்டுக்காரரும் மாப்பிள்ளை வீட்டுக்காரரும் பாவம், என்ன



செய்வார்கள்! இவர்கள் பார்த்த ஜாதகங்களும் பொருத்தங்களும் என்ன ஆயின! தேவ திருவுளத்துக்கு முன் எதிர் நிற்பவன் யார்?

குழந்தைகளுக்கு மிட்டாய்கள்.—பலவித நிறமான மிட்டாய் தினுசுகளைக் குழந்தைகள் பார்த்ததும் அவற்றின் பேரில் வெகு ஆவலாய்க் தாவி விழுவது அவற்றின் வழக்கம். ஆனால் இந்தப் பல நிறமான மிட்டாய்களில் அந்தந்த நிறத்துக்குத் தக்கபடி எத்தனையோ தினுசான பாஷாணங்கள் சேர்ந்திருக்கின்றன என்பதைக் கவனிப்பாரைக் காணோம். அவற்றில் க்ரோமிக் திராவகம், ஈயம், செம்பு, ரசம், ஆர்சனிக் என்ற கொடிய பாஷாணம் முதலியவைகள் சேர்க்கப்பட் டிருக்கின்றனவாம். எலி முதலிய ஜெந்துக்களை அழிக்கப் பாஷாணங் கலந்த உணவை வைப்பார் போல் இயாதொரு கபடமுமற்ற இந்தக் குழந்தைகளுக்கு இந்த மிட்டாய்களை வாங்கிக் கொடுத்துக் குடலைப் பலஹீனப் படுத்தியும், அதுகளின் ஜீரணசக்தியைக் குறைத்தும் பலவிதத் துன்பங்களுக்கும் குழந்தைகளை யிலக்காக்கும் தாய் தந்தையரும் மற்றவர்களும் இது விஷயத்தில் எச்சரிக்கையா யிருப்பார்களாக.

இடிக்குத் தப்பித்துக்கொள்ள வழி.—மின்னல் மின்னி இடி இடிக்கும் சமயங்களில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்படியாக யாரும் ஓடக்கூடாது. மைதான வெளிகளிலுள்ள தனித்த மரத்தடியிலாவது, தனித்த கட்டிடத்துக்குச் சமீபமாகவாவது, உயர்ந்த மரங்களுள்ள வேலியோரத்திலாவது, அடர்ந்த காட்டிலுள்ள உயர்ந்த மரத்தடியிலாவது காலஞ் சென்ற வைரம்பாய்ந்த மரத்தடியிலாவது ஒண்டப்படாது. குளம் குட்டைகளில் இருக்கப்படாது. அப்போக்கொத்த சமயங்களில், இரும்பு, செம்பு, வெண்கலமுதலியவற்றால் செய்யப்பட்ட பெரிய பாத்திரங்களைத் தங்கள் வசத்தில் வைத்திருக்கப்படாது. இவையெல்லாம் மின்சாரத்தை யிபற்கையில் தன்வசம் கவர்ந்துகொள்ளும் சக்துவமுள்ளன வாகையால் கெடுதிவிளைக்க ஹேதுவாகும். அதற்கு விரோதமாய்த் தோப்புகளிலுள்ள தணிந்த மரத்தடியிலிருக்கலாம். தணிந்த வீட்டிலாவது கண்ணாடி ஜன்னல்சுற்றிலும்போடப்பட்ட வீடுகளிலாவது கதவைச் சாற்றிக்கொண்டு உள்ளே இருப்பது நன்று. வீடுகளில்லாதபோது குழிகளிலோ தரையிலோ பதுங்கிப் படுத்துக் கொள்வது நன்று.

சத்திர சிகிச்சைக்குரிய ஒரு நூதன யந்திரம்—இதுவரையில் துணிகளைத் தைக்கும் தையல் யந்திரங்கள் மட்டுமே நாம் பார்த்து வந்தோம். இப்பொழுது மனிதருடைய தேஹத்தில் காயம் முதலியவற்றால் கிழிந்துபோன சருமம் முதலியவற்றைத் தைப்பதற்காக நிபுணரான ஒரு பிராஞ்சிய சத்திர சிகிச்சிகர் ஒரு கருவியை நிருமித்திருக்கின்றாராம். காயம்பட்ட அவயவங்களை அல்லது கிழிந்துபோன சருமம் முதலியவற்றை ஒன்று சேர்த்துத் தைக்க வேண்டி வருமாகையால், அப்பொழுது அவற்றைக் கையால் தைப்பதைவிட இந்த யந்திரத்தின் உதவியால் தைத்துவிடுவது மிக எளிதாம். சத்திர சிகிச்சிகர்கள் தாராளமாய் இதை உபயோகிக்கக் கூடுமாவென்றறிய அத்தொழிலாளிகளில் முக்கியமானவர்களுக்கெல்லாம் இக்கருவி தற்காலம் அனுப்பப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ரணத்தையும் சாதாரணமாய் ஒரு விநாடிக்குள் தைத்துவிட இது ஏற்ற கருவியா யிருக்கின்றதென்று சொல்லப்படுகிறது.

ஸ்திரீகளும், டிராம் வண்டிகளும்—ஸ்காத்லந்து தேசத்திலுள்ள கிளாஸ்கௌ என்ற பட்டணத்தில் டிராம் வண்டிகளை ஓட்டுவதற்கு ஸ்திரீகளை நியமனஞ் செய்து வருகிறார்கள். அவ்விதமாக டிராம் வண்டியின் கண்டக்டர்களாக வேலை பார்க்கும் அந்த ஸ்திரீகள் தமது வேலையை நிர்வாகம் பண்ணிக்கொண்டு வருகிறார்களென்று தெரியவருகிறது. முதன்முதல் கார்ப்பரேஷன் டிராம்வே இலாக்காவில் குமாஸ்தாக்களாக வேலை பார்த்துவந்த இரண்டு ஸ்திரீகள் டிராம்வண்டியை ஓட்டும்வேலையில் பரீக்ஷித்துப் பார்க்கப்பட்டனர். அப்புறம் 15 நாள் கழித்ததும் அதிக வண்டிகளும் ஜனங்களும் நடமாட்டமில்லாத விடங்களில் இந்த ஸ்திரீகள் டிராம் வண்டியை விட்டுச் சென்றார்கள். பிறகு ஜன நடமாட்டம் நெருங்கிய ஸ்தலங்களில் இந்த ஸ்திரீகள் டிராம் வண்டிகளைவிட்டுச் சென்றனராம்.

ஆகவே, டிராம் வண்டியின் மானேஜர் அவர்கள் கொடிய யுத்தம் நடைபெறும் இக்காலத்தில் ஸ்திரீகளை டிராம் வண்டிகளின் கண்டக்டர்களாக நியமனம் செய்யலாமென சிபார்சு செய்திருக்கின்றனர்.

**ஒரு நாயின் விஸ்வாசம்.**-ஸைன் விஹியல் என்னும் இடத்தில் ப்ரெஞ்சு துருப்புகள் அகழில் இருந்து யுத்தம் செய்துகொண்டிருந்தபோது, ஒரு ஸோல்ஜருடைய நாயும் கூட இருந்தது. ஒரு சமயம் ஒரு பெரிய குண்டு அந்த அகழில் விழுந்து வெடித்து அகழைத் தூர்த்து அதிலுள்ள ஸோல்ஜர்களை மூடிவிட்டது. நாய் மாத்திரம் எப்படியோ குண்டுக்குத் தப்பியிருந்து, தனது யஜமானன் இருந்த இடத்தில் பூமியை இடைவிடாது தோண்டி, யஜமானுடைய முகம் வெளியில் தெரியும்படி செய்தது. அவன் எழுந்திருக்க முடியாவிட்டாலும் சுவாசம் விட்டுக்கொண்டு உயிரைப் பிடித்துக்கொண்டிருந்தான் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் உதவி சைன்யங்கள் வரவே, சோல்ஜர்கள் புதைபட்டிருப்பதை யறிந்து எல்லாரையும் வெளியிலெடுத்தார்கள். ஆனால் நாயின் எஜமானனைத் தவிர மற்றவர்களெல்லோரும் இறந்துபோ யிருந்தார்கள். அவனும் அதிக காயமடைந்திருந்ததால் அவனுடைய காலொன்றை வெட்டிவிட வேண்டியிருந்ததாம். என்னே நாயின் புத்தி.

**போர்முனையில் ஒரு ருஷியச் சிறுமி.**—ஆசியாக கண்டத்தின் வட பாகமாகிய ஸைபீரியாவில் பெய்க்கால் என்று ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இர்க்கட்ஸ்க் என்று ஒரு பட்டணம் இருக்கிறது. அதற்கும் போலாண்டுக்கும் உள்ள தூரம் 5000 மைல். அந்த ஊரில் உள்ள லுட்மிலா என்னும் ஒரு சிறு பெண், தானும் போர்முனைக்குப் போக வேண்டுமென்று சொல்லி, தான் சிறு வயதுமுதல் சேர்த்துவைத்திருந்த 15 ரூபாய் மதிப்புள்ள ருஷிய நாணயங்களுடன் 5000 மைல் பிரயாணம்செய்து போர்முனைக்குப் போனாளாம். சில சமயம் நடந்தும், சில சமயம் வண்டிகளிலும்பிரயாணம் செய்தாளாம். வழியில் தான் போகும் காரியத்தைப்பற்றி அநேகருக்குச் சொல்ல சிலர் அவளுக்குப் பணங்கொடுத்து உதவினார்கள். வேறு சிலர் அவளைப் பரிகாசம் செய்தார்களாம். மாஸ்கோவுக்குப் போனதும் தனது தலைமயிரை நறுக்கிவிட்டு, காயம்பட்ட போர்வீரனுடைய உடுப்பொன்று வாங்கித்தரித்துக்கொண்டு, பிறகு சிறிது காலத்துக்கெல்லாம் போர் வீரர்களுடன் போர்முனைக்குப் போய்ச் சேர்ந்தாளாம். ஒருநாள் ராத்திரி ருஷியர்கள் ஜெர்மனியரைத் தாக்கினபோது, இந்தப் பெண் மற்றவர்களைவிட அதிகம் முன்னால் சென்றதால் ஜெர்மனியர் அவளைக் கைதியாக்கினார்கள். ஆனால் சிறிது நேரத்துக்கெல்லாம் ருஷியர்கள் ஜெர்மனியர்களுடைய அகழ்களைப் பிடிக்கவே அவள் விடுதலை செய்யப்பட்டாளாம்.

**சுண்ணாம்பு நீர்.**—வயிற்றில் புளிப்பு அதிகரித்து வருத்தப்படவேண்டி நேரிடும்போது சுண்ணாம்புத் தெளிவு நீர் அப்புளிப்பை அடித்து அமைதியைத் தரக்கூடியது. ஒரு பலம் சுண்ணாம்பு நீற்றில் இரண்டுபடி ஜலம் சேர்த்து கெட்டியான மூடியுள்ள ஒரு புட்டியில் விட்டு சிறிது நேரம் கழித்து அப்புட்டியை இரண்டு மூன்று நிமிஷம் வரையில் நன்றாகக் குலுக்கி கரையாமலிருக்கும் சுண்ணாம்புப் பொடிகள் அடியில் முற்றிலும் படியும் வரையில் புட்டியை ஓரிடத்தில அசையாமல் வைத்திருந்து, பிறகு மேலே தெளிவாக நிறமற்று நிற்கும் ஜலத்தைமட்டும் மற்றொரு புட்டியில் வடித்துவைத்துக்கொள்ளவும். இது சுண்ணாம்புத் தெளிவு நீர் செய்யும் முறையாகும். சுமார் 12-மணி சாவகாசமாவது கழித்து எடுத்தால் சுண்ணாம்பு நீர் சுத்தமா யிருக்கும். நெருப்புப்பட்டு வெந்துபோன அவயவங்களின் எரிச்சலைத் தணிப்பதற்கும் அந்த ரணத்தை ஆற்றுவதற்கும் இது உபயோகமானது. அவ்வித ஆபத்தான சமயங்களில் சுண்ணாம்பு நீர் அதிகமாகத் தெளிய வேண்டுமென்று எதிர் பாராமல், சுமார் அரைமணி நேரம் தெளியவைத்து அந்த நீரை உபயோகிக்கலாம். இந்த நீரை 1 முதல் 3 அவுன்ஸ் வரையில் உட்கொள்வதற்கும் உபயோகிக்கலாம். இரைப்பையில் புளிப்பு அதிகரித்தல், நெஞ்செரிவு, அஜீர்ணம், அதிஸாரம், வாந்தி, சில குன்ம வியாதிகள், விஷகுணமுள்ள தாதுப்பொருள்கள் குடலிற் சேர்வதாலுண்டாகும் கெடுதி ஆகிய இவற்றில் உபயோகிக்க இது பெயர் போன ஔஷதம். நீர்ச்சுருக்கு, நெருப்பு முதலியவற்றாலான எரிச்சல், பெரும்பாடு இவற்றில் மேலுக்குக் கழுவவும் இதை உபயோகிக்கலாம். இளங்குழந்தைகளுக்கு அஜீர்ண ரோகங்களில் பாலுடன் கலந்து இதைப் புகட்டுவது நலம். ஆனால் ஒரு தேக்கரண்டியளவு உபயோகிக்கவேண்டும்.



**போர்க்களத்தில் எலும் பொடிந்தவருக்குச் சிகிச்சை.**—டாக்டர் வாரோனாப், டாக்டர் அலெக்ஸிஸ் காரெல் என்னும் இரண்டு ருஷிய தேசத்து சாஸ்திர சிகிச்சிகர்கள் நியூயார்க் நகரில் வைத்திய ஆராய்ச்சிக்கென்று ஏற்பட்டுள்ள ராக்பெல்லர் இன்ஸ்டிட்யூட் என்னும் சாலையில், மனிதர்களுக்கு ஒடிந்துபோன எலும்புகளுக்குப் பதிலாக வேறு எலும்புகளை அவ்விடத்தில் ஒட்டவைத்த அச் சிகிச்சை மிகப் பிரயோஜன முண்டுபண்ணியதாகத் தெரிய வருகிறது. ருஷியாவிலுள்ள போர்டியாக்ஸ் என்னும் பிரதேசத்திலிருக்கும் ஓர் ஆஸ்பத்திரியில் ஒரு போர்வீரனுக்கு இச்சிகிச்சை செய்யப்பட்டது; அவனுக்கு நற்பயன் உண்டாயிற்று. யுத்தத்தில் அந்த மனிதனுக்கு ஒரு ரவை தோளிற் பாய்ந்து அங்கே ஒரு எலும்பைப் பிளந்துவிடவே, அவ்வெலும்பில் ஒரு சிறு துண்டு ஒடிந்து விலகிவிட்டது. பிறகு அத்துண்டை அவ்விடத்திலிருந்து விலக்கிவிட வேண்டியிருந்தது. அப்பால் ஒரு குரங்கின் தோளிலிருந்து ஒரு எலும்புச் சிராயைப் பிளந்து எடுத்து இம்மனிதனுடைய தோள் எலும்பில் ஒட்டவைத்து அவனுக்கு முன்போலவே கையைச் சௌக்கியப்படுத்தி விட்டார்கள். இவ்விதம் செய்வதற்கு முன் அம்மனிதனுக்கு அடிபட்ட கை பார்சவாயுவால் ஸ்வாதீனமற்றிருந்தது. பிறகு இவ்வாறு வேறொரு எலும்பை ஒட்டவைத்து விரணங்களை ஆற்றிவிடவே, கையில் பார்சவாயுவும் நீங்கி விட்டது. அவனுக்கு ஒட்டவைத்த எலும்பின் அளவு இரண்டு அங்குலமாம்.

**ஓர் குருவானவரின் அநியாயக் கொலை.**—சில தினங்களுக்கு முன் துலுக்கர் கைவசத்தில் அகப்பட்ட சங். ஜோசெப் ஹாக்கென்னும் வயது சென்ற ஒரு குருவானவரைக் கொண்டுவந்து, அவர் பேரில் இல்லாததும் பொல்லாததுமான பல குற்றங்களை அவர்கள் சுமத்தினார்கள். அவர் தம்மேல் அபாண்டமாய்ச் சாட்டப்பட்ட அத்தனை குற்றங்களும் சுத்த பொய் என்பதாகச் சொல்லி மறுத்தும், அவற்றையெல்லாம் அவர்கள் நம்பாமல் அவர் கைகளில் விலங்கு பூட்டிக் கொலைக்களத்துக்குத் திரளான ஜனங்கள் சூழ்ந்துவர அவரை இட்டுக் கொண்டு போனார்கள். அங்கே சேர்ந்ததும் "சுல்தான் வாழ்க" "கில்லோம் சக்கரவர்த்தி வாழ்க" "பிரான்சுவா ஜோசெப் சக்கரவர்த்தி வாழ்க" என்று சொல்லும்படி அவருக்குக் கட்டளை கொடுத்தார்கள். அவர்கள் கட்டளைக்கு எதிரிடையாய் அவர் "பிராஞ்சு வாழ்க," "இங்கிலாந்து வாழ்க" "ருஷியா வாழ்க" வென்றார். உடனே அவரைத் தூக்கில் போட அவர் கழுத்தில் கயிறு போட்ட வண்ணமாய் அவரை நிறுத்திக்கொண்டு திரும்பவும் "சுல்தானுக்கும், ஜெர்மனி, ஆஸ்டிரியா சக்கரவர்த்திகளுக்கும் ஜெயமுண்டாகக் கடவது" என்று சொல்லும்படி அவருக்குக் கற்பித்தார்கள். அவரோ "பிரான்சு தேசம் வாழ்க" வென்று துலைதூரத்திலிருந்தவர்களும் கேட்கும்படி வெகு தெளிவாய் மும்முறை உரக்கச் சொன்னார். அதின் பேரில் அவரைத் தூக்கில்போட்டுக் கொன்றுவிட்டார்கள். இது தான் துலுக்கர் சட்டம்! இதுதான் துலுக்கர் துரைத்தனம்!

**எம்டன்.**—இப்பேர் வகித்த க்ரூசருக்குத் தலைவரா யிருந்த வான்முல்லர் என்பவர் இப்போது மத்தியதரை கடலிலுள்ள மால்டா வென்னும் தீவில் மற்ற ஆபீஸர்களோடு வைக்கப்பட்டிருக்கிறார் என்று ஆஸ்டிரேலியாவிலுள்ள "வெஸ்டர்ன் மெயில்" பத்திரிகையின் ப்ரிமாண்டில் நிருபர் எழுதியிருக்கிறார். அவருடன் பிரின்ஸ் ஜோசெப்பும் எம்டனைச் சேர்ந்த மற்ற ஆபீசர்களும் இருக்கிறார்களாம். குகூஸ் தீவுகளண்டை [illegible] கப்பல் சுட்டுத் தண்ணீருள் அமிழ்த்தப்பட்ட காலத்தில் அதிலிருந்த சில ஆபீசர்கள் அய்ஷா வென்னும் பாய்மரக் கப்பலிலேறித் தப்பிச்சென்றார்களல்லவா? அவர்கள் இப்பொழுது துருக்கியின் தலைநகரான கான்ஸ்டா

ண்டிநோபிள் போய்ச் சேர்ந்து ஜர்மன் ஸ்டீமரான 'ஜனரல்' என்னும் மரக்கலத்தில் தங்கி யிருக்கிறார்களாம்.

தேனீக்களின் தொகை:—உலகத்தில் சுமார் 1,200,000,000,000 தேனீக்களிருக்கின்றன வென்றும், அவை ஒரு வருஷத்தில் 24,000,000 பவுண்டு மதிப்புள்ள தேனையுண்டு பண்ணுகின்றன வென்றும் ஒரு ஜர்மனிய கணிதசாஸ்திரி கணக்கிட்டிருக்கிறார்.

---

## வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரைகள்.

ஏழைகளுக்கு அருமருந்தாகிய இம் மாத்திரைகள் இப்போது, மறுபடியும், சென்னை, பிராட்வே, 2/74 வது வீட்டில் விற்பனைக்குத் தயாராய் இருக்கின்றன. வேண்டியவர்கள் ஷை விலாசத்துக்கு எம் போரால் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரைகள் (Beschi's Health Tonic Pills) அநேக வியாதிகளைப் பற்றறக் கண்டிக்குங் குணமுடையவை என்பது அநேகர் அறிந்த உண்மை. இதனை யறியாதார் ஒரு முறையாவது இம்மாத்திரைகளை வாங்கிப் பரீட்சித்தல் வேண்டும். விஷக்காய்ச்சல், மலைக்காய்ச்சல், அஜீரணக் கழிச்சல், விஷபேதி, கிராணிக் கழிச்சல் முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட ஔஷதம்.

விலை: 100 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு ரூபாய் ஒன்று; தபாற் கூலி பிரத்தியேகம்.

சி. ஏ. சில்வேயிரா.

Please apply to
*C. A. Silveira,*
2/74, Broadway,
Madras.

---

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

---

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய். முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

## ஜனன அறிக்கை.

---

### கண்ணம்பாளையம்.

எனது குமாரத்தி மதலையம்மாளுடைய பிரசவமானது மெய்யாகவே ஓர் அற்புதமென்னலாம். பிரசவத்துக்கு முன் சுமார் 5.6-மணி நேரம் என் குமாரத்தி வெகு வேதனைப்படுவதைக் கண்ட நான் அடைக்கலமாதா பீடத்தின் முன்பாகப் போய்ச் சேசுவின் திரு இருதயத்தை நோக்கி எனது குமாரத்தி படும் கஷ்டத்தைக் குறைத்துச் சீக்கிரத்தில் குழந்தை பிறக்க தயவு செய்யவேண்டு மென்று மன்றாடி வீட்டுக்கு வந்து சேரவே, நான் சேசுவின் திரு இருதயத்தைக் குறித்து வேண்டிக் கொண்டபடியே மேமீ 27ௗ வியாழக்கிழமை மதியம் சுமார் 1-மணிக்கு எனது குமாரத்தி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். நாளது பரியந்தம் தாயும் சேயும் பூரண சௌக்கியமா யிருக்கிறார்கள்.

இவர்களைச் சர்வேசுரன் காப்பாற்றி இரட்சிக்க வேண்டுமென்று "நல்ல ஆயன்" சந்தாதாரரனைவரும் வேண்டிக்கொள்ள அவர்களை மன்றாடுகிறேன்.

இங்ஙனம்:

முத்து முதலியார்.

---

## நன்மரண அறிக்கை.

---

### பல்லாவரம்.

எனது பிரிய மனைவியும் சென்னை புரசபாக்கத்தில் வசித்துக் காலஞ்சென்ற T. அப்பாவு அவுல்தார் என்பவரின் அரிய புத்திரியுமாகிய அன்னம்மாள் என்பவள் 1869௵ பிறந்து; 1881௵ என்னை மணஞ்செய்து இரண்டு ஆண் குழந்தைகளையும் ஒரு பெண்ணையும் பெற்று இல்லறத்தோருக்கு ஒரு கதிரவனைப்போல் பிரகாசித்து வந்தாள். இவளுக்குச் சுமார் 15 வருடங்களாக கருப்பத்தில் ஒரு கட்டியுண்டாகி அது நாளுக்கு நாள் வளர்ந்து வேண்டிய பரிகாரங்கள் செய்தும் குணப்படாமல் நாளது 1915௵ மேமீ 28ௗ வெள்ளிக்கிழமை காலையில் அவஸ்தை கண்டதின்மேல் இவள் திருச்சபை கடைசித் தேவத்திரவியானுமானங்கள் யாவும் குறைவற



நல்ல புத்தித் தெளிவுடன் பெற்று, அர்ச். பாப்பவர்களின் பரிபூரண ஆசீரையும் அடைந்து, சேசுமரி சூசை யென்னுந் திரு நாமதேயங்களை யிடைவிடாது உச்சரித்த வண்ணமாய் அந்த வெள்ளிக்கிழமை சாயந்திரம் சுமார் 8½-மணிக்குத் தானுசித்துத் தேடிக்கொண்டிருந்த கர்த்தரின் திருப்பாதத்தில் போய்ச் சேர்ந்தாள். இப்புண்ணியவதியின் சடலம் மறுநாள் மிக்க பக்தி ஆடம்பரத்துடன் பல்லாவரம் அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியார் கோவில் கம்பவுண்டிலுள்ள தனது பிரிய குமாரனுடைய கல்லறைப் பக்கத்தில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

இதைக் கண்ணுறும் கத்தோலிக்குச் சகோதரர்கள் இவளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ள வேணுமாய் மிக்க வினயத்துடன் இரந்து கேட்டுக்கொள்ளுகிறேன்.

A. அந்தோனி
பென்ஷன்டு சுபேதார் மேஜர்.
19th M. I.

IN EVER LOVING MEMORY
OF
OUR DEAR MOTHER.
**MARIA MICHAEL PONNAMMAL MACHADO**
Well Beloved Wife of X. A. Fernandez.
**DIED 30th JUNE 1915.**

"Mother dear! thou art resting,
Free from every toil and care:
Yet still our hearts aching,
Over thy last farewell parting.
Our sighs, our tears bring no comfort
As we on earth, no more shall meet;
But thy sweet smile we can never
forget
And your example we shall ever recollect:
So with patient expectation in prayer
we remain
To clasp our dear mother in Paradise
again".

*(Inserted by her sorrowing children.)*

27, Manal Street,
TUTICORIN.
*30th June 1915.*

---

## தருமகுண நண்பருக்கு ஓர் விண்ணப்பம்.

சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த சூளையில், 30-வருடத்துக்கு முன் சுதேச பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்து, அநாதபிள்ளைகளை ஆதரித்துச் சிறு குழந்தைகளை வளர்த்து, சகல கிறிஸ்துவர்களுக்காக வேண்டிக்கொண்டுவர அர்ச். ஐந்துகாய பிரான்சிஸ்கு என்பவரின் மூன்றாம்சபை சுதேச கன்னியர்மடம் ஒன்று ஸ்தாபகமானது.

அம்மடத்தைத் தற்போது விஸ்தரித்துக் கட்டவேண்டுமென அதிமேற்றிராணியார் உத்தரவளித்தார். தருமமெடுத்து கன்னியருக்கான கட்டிடத்தைக் கட்டினோமாயினும் பூச்சுவேலையும் கதவும் ஜன்னல்கள் வேலையும் முடிவுபெறாது வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் அநாதபிள்ளைகளுக்காகக் கட்டப்பட்டிருந்த சாலை சென்ற நவம்பர் மாதம் 7-ந் திகதி நடு இரவில், இவ்விடம் பெய்த அகோர மழையால் சுவர்கள் நனைந்து பாதி வீடு இடிந்து விழுந்து, சாமான்களெல்லாம் பொடிப் பொடியாய் நொறுங்கிப்போயின. எமது மடத்தின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பருடைய அற்புத சகாயத்தால் மேற்கூரை விழுமுன் திடீரெனப் பிள்ளைகள் எழுப்பிவிடப்பட்டு, அகால மரணத்தினின்று காப்பாற்றப்பட்டார்கள். பிதாப் பிதாவான அர்ச். சூசையப்பருக்குச் சதா நன்றியுள்ளவர்களா யிருக்கிறோம்.

இருக்க இடமின்றி தவிக்கும் ஏழை அநாதபிள்ளைகள் மட்டில் மனமிரங்கி உதவிசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம். உங்கள் நன்றிக்குக் கைம்மாறாக உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் ஆத்தும சரீர நலங்களுக்காக நாமும் சகோதரிகளும் அநாத பிள்ளைகளும் மறவாமல் நாடோறும் வேண்டிக்கொண்டு வருவோம். நல்லாயன் சந்தாதாரர் கொஞ்சம் தருமம் அனுப்புவார்களாக.

| | | | | |
|---|---|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | | 82 | 10 | 0 |
| Mr. பாக்கியசாமி பிள்ளை மூலமாய்:—Mr. V. வேதநாயகம், Mr. S. பீற்றர், Mr. N. M. ஸ்டார், Mr. அந்தோனிசாமி பிள்ளை, Mr. M. D. ஜோசெப், | | | | |
| Mr. L. Perie ... ... ... | 10 ஷில்லிங்ஸ் ... | 7 | 8 | 0 |
| Mr. M. செபஸ்தியான் ... ... | 20 ஷில்லிங்ஸ் ... | 15 | 0 | 0 |
| | ஆக மொத்தம் | 105 | 2 | 0 |

**S. Jos. Balasami,**
*St. Andrew's Church, Choolai P. O. Madras.*

## எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தருமம்.

நண்பர்களே!

சென்ற வருஷம் நாம் அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தர்மமென்று அறிக்கையிட்டு, செய்துகொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி. எமக்குதவிபுரிந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்குப் பங்காளிகளான உதார குணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்துவர்களுக்கும் எடப்பாடி நேயர்களுக்கும அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1914-வரு எப்ரல் மாத முதல் 1915-வரு மார்ச்மீ 31உ வரையில் நேயர்களால் அளிக்கப்பட்ட நன்கொடை ரூபாய் 193-2-0. சென்ற பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்களை முடிவாக்கவும, விசாரணைக் குருவசிக்கும் பங்களாவை மராமத்துச் செய்யவும், கோவில் கட்டிட விர்த்தியை பூர்த்திக்குக் கொண்டுவரவும் செலவான தொகை ரூபாய் 2620-8-4. இவ்விஷயமாய்த் தற்காலம் நமக்கு ஏற்பட்டிருக்குங் கடன் ரூபா 738.

நண்பர்களே! தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி சத்திரங்கள் முடிவிற்கு வந்தன. ஆகிலும், பழைய சத்திரங்களை மராமத்துசெய்யப் போதுமான பணமில்லாமையால் அவ்வேலைகளை நிறுத்தவேண்டி நேரிட்டதைப்பற்றி விசனிக்கிறோம். தர்ம சிந்தையுள்ள அர்ச். நாயகியின் ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. அவளது மகிமைக்காக கடனளியானேம் என்பதைச் சிந்தித்து எமதுபேரில இரக்கம் புரிவார்களென்பது திண்ணம். நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதேயாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள்பேரில் பூரணமாய்ப் பொழியக் கிருபை செய்யவேணுமென்பது எமது பிரதிதின வேண்டுகோள்.

இப்படிக்கு,

எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாளின்
ஊழியனுகிய, விசாரணைக் குரு
ஜே. ஞானதிக்கம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 847 | 12 | 0 |
| Mr. M. இரபேல், ஆப்பிரிக்கா | 20 | 0 | 0 |
| Mr. C. லாசர்ஸ் பிள்ளை, இரங்கூன் | 1 | 0 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 868 | 12 | 0 |

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக்கனுகூலமாய். அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ 7-000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ 3,475-4-6 ஆயினும். தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி. வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன்வருவீர்களாக! நீங்கள் கொடுத்த உதவும்தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்தவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந் தொகை யாகுமே. ஆகவே. அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்,
அர்ச. அந்தோனியார் கோவில்,

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளபபட்ட தொகை. | 3 512 | 12 | 6 |
| Mrs. அந்தோனி லிஸ்லி நீக்கொலாஸ் | 1 | 0 | 0 |
| ஓர் நண்பரின் நன்கொடை | 8 | 14 | 0 |
| Mr. அநந்தநாத பிள்ளை | 1 | 0 | 0 |
| ,, Powell | 1 | 0 | 0 |
| Mrs. G. Hamilton | 5 | 0 | 0 |
| Mr. M. Upshon | 25 | 0 | 0 |
| ,, M. சாமிநாதன், Kulalumpur | 15 | 0 | 0 |
| ,, M. இரபேல், ஆப்பிரிக்கா | 19 | 0 | 0 |
| ,, C லாசர் பிள்ளை, இரங்கூன் | 2 | 0 | 0 |
| ,, D.M. மங்களசாமிபிள்ளை, ஈரோடு | 0 | 4 | 0 |
| ஆகமொத்தம், | 3.590 | 14 | 6 |

OFFICE OF ... 11 AUG 1915 ... MADRAS

The Good Pastor

# நல்ல ஆயன்

OFFICE OF ... 11 AUG 1915

OFFICE OF ... REGISTERED 11 AUG 1915 MADRAS

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு...
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 13. } ஆகஸ்டு 1915. { இலக்கம். 8.

## THE FEAST OF THE ASSUMPTION.

## தேவமாதா மோட்சத்துக்கு எழுந்தருளின திருநாள்.

இந்தத் திருநாளை நாம் இம்மாதம் 15உ கொண்டாடப் போகிறோம். இத் திருநாள் தேவமாதாவினுடைய மகத்துவம் பொருந்திய வல்லமையையும், மகிமைப் பிரதாபத்தையும் வெளியிடுவதை முன்னிட்டு இதை ஒரு கடன் திருநாளாக அநுசரிக்கத் திருச்சபை நமக்குக் கற்பித்திருக்கின்றது. தேவமாதா மரணமடைந்து கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்ட பிறகு, தெய்வீக வல்லமையினுல் உயிர்த்து ஆத்தும சரீரத்தோடு பரலோகத்துக்கு ஒட்டோலகமாய் எழுந்தருளிப் போனதும், அவ்விடத்தில் இந்நாயகி திரியேக சர்வேசுரனுல் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் இராக்கினியாக முடிசூட்டப்பட்டதும் விசுவாச சத்தியமா யிராவிடினும், இச்சம்பவங்கள் உண்மையல்ல வென்று அவைகளை மறுப்பதும், அல்லது அவைகளை நம்பாமற்போவதும் நியாயத்துக்கு முற்றும் விரோதமாயும், விவேகமும் யோசனையுமற்றத் தீர்மானமாயு மிருக்குமென்றும், தேவமாதாவுக்குப் பிள்ளைகளாயிருக்கிற நாம் எல்லோரும் நம்முடைய இந்த நல்ல தாயாருக்குத் திரியேக சர்வேசுரன் அளித்திருக்கும் மகிமைக்காக நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துவதோடு இவ்வன்னையை ஏற்றிப்போற்றித் துதித்துக்கொண்டாடிச் சந்தோஷிக்கவேண்டுமென்றும் முன்னொருவிசை நாம் "நல்ல ஆயன்" வாயிலாய் நம்முடைய சந்தாதாரருக்கு அறிவித்திருக்கிறோம். இதை வாசித்த நேயர்களிற் சிலர் நமதாண்டவரான சேசுநாத சுவாமி மோட்சத்துக் காரோகணமான பிறகு தேவமாதாவினுடைய சீவிய வரலாற்றை யறிய அவாகொண்டு அதைப் பற்றி நம்மைக் கேட்டுக்கொண்டதின் பேரில், திருச்சபை சரித்திரத்தில் இதைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிற சில வர்த்தமானங்களை இம்மாத ஆயனில் சுருக்கமாய் வரைகிறோம்.

அப்போஸ்தலர்கள் நடபடி (I. 14) இல் சொல்லி யிருக்கிறபடி தேவமாதா தம்முடைய தேவகுமாரன் பரலோகத்துக் காரோக்ணமான பிறகு, அப்போஸ்

தர்களோடும் சீஷர்களோடும் இஸ்பிரீத்து சாந்துவான சர்வேசுரனுடைய வருகைக்காக ஜெருசலேமிலேயே தங்கியிருந்தாள். இஸ்பிரீத்து சாந்துவைப் பெற்றுக்கொண்ட பிறகு அப்போஸ்தலர்கள் உலகத்தின் எத்திசையிலும் பிரசங்கித்துத் திருச்சபையை ஸ்தாபிக்கப் போனார்கள். தேவமாதாவோ ஜெருசலமிலேயே, சேசுநாதரால் தமக்குக் குமாரனாகக் கொடுக்கப்பட்ட அர்ச். அருளப்பரோடு தங்கியிருந்ததாகவும் தம்முடைய நேசகுமாரன் ஜெருசலேமிலும் அப்பட்டணத்துச் சுற்றுப்புறங்களிலும் சத்திய வேதத்தைப் போதிக்கும்படி நடமாடித் திரிந்த பல இடங்களை தேவமாதா அடிக்கடிப்போய்ச் சந்தித்து வந்ததாகவும், விசேஷமாய் அவர் இரத்த வியர்வை வியர்த்த ஜெத்சமனி தோட்டத்தையும், சிலுவை சுமந்துகொண்டு போன வழியையும், கல்வாரி மலையையும், ஒலிவேத்து மலையையும் இன்னும் அவருடைய பாடுகளினால் பரிசுத்தமாக்கப்பட்ட மற்ற ஸ்தலங்களையுஞ் தரிசனை செய்துகொண்டு வந்ததாகவும் தெரியவருகிறது. அன்றியும் சத்தியவேதத்தைப் பரவச்செய்வதில் அப்போஸ்தலர்களுக்குத் தேவமாதா உதவியா யிருந்ததோடு, அவர்களுக்குண்டான இக்கட்டு இடையூறுகளிலும், வறுமை சிறுமையிலும், இன்னுமற்ற துன்பங்களிலும் அவர்களுக்கு ஆறுதலாயு மிருந்துவந்தாள். விசுவாச சத்தியங்களைப் பற்றிய விஷயங்களில் யாதொரு சந்தேகம் அவர்களுக் குண்டானபோது அவர்கள் இவ்வாண்டவ ளண்டைக்கு வந்து தங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்வார்கள். இன்னும், சேசுநாதசுவாமியுடைய பாலத்துவத்தைப்பற்றியும், அவர் பிறப்பதற்கு முந்தி நடந்த அநேக வர்த்தமானங்களைப்பற்றியும், அதாவது: அர்ச். ஸ்நாபக அருளப்பர் அற்புதமாய்க் கருப்பந்தரிக்கப்பட்டுப் பிறந்து வளர்ந்தது, கபிரியேல் சம்மனசானவர் மங்களவார்த்தை சொன்னது, குழந்தை சேசுநாதர் பெத்லேமில் பிறந்தது, இடையர், மூன்று இராசாக்கள் அவரை ஆராதிக்க வந்தது இவை முதலான வர்த்தமானங்களை யெல்லாம் சுவிசேஷகர்களும், அப்போஸ்தலர்களும், கிறிஸ்துவர்களு முதலாய் தேவமாதாவினுடைய திருவாயினின்று கேட்டறிந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அர்ச். லூக்காஸ் எழுதியிருக்கிற சுவிசேஷம் இதற் கத்தாட்சியாகும். அதேதென்றால், தேவமாதா சேசுநாத சுவாமிக்கடுத்த அநேக வர்த்தமானங்களைத் தம்மிருதயத்திற் காப்பாற்றி வைத்திருந்தாளென்று சொல்லியிருப்பதை அர்ச். லூக் II. 19,51 வசனங்களிற் காணலாம்.

ஜெருசலேம் பட்டணத்தில் ஏறக்குறைய 10 வருஷமளவும் தேவமாதா இருந்தபிறகு அர்ச். அருளப்பரோடுகூட எபேசு பட்டணத்துக்குப் போகும்படி நேரிட்டது. அதேதென்றால் அப்போது ஜெருசலேமில் கிறிஸ்துவர்களையெல்லாம் நாசமாக்கக் கொடிய வேதகலாபனை துடங்கவே எல்லோரும் அதைவிட்டு ஓடிப்போக வேண்டியதாயிற்று.

சேசுநாதசுவாமி இவ்வுலகத்தைவிட்டுப் பரலோகஞ் சென்ற பிற்பாடு தேவமாதா எத்தனை வருஷம் இவ்வுலகத்தில் சீவித்திருந்தாளென்பதைப்பற்றியும், எங்கு மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டாளென்பதைப்பற்றியும் திருச்சபை சரித்திரத்தில் நிச்சயமான தொன்றையும் காணோம். தேவமாதாவினுடைய சீவியத்தைப்பற்றி எழுதி யிருக்கிறவர்களிற் சிலர், சேசுநாதசுவாமி மோக்ஷத்துக் சேகினபின் இவ்வாண்டவள் இவ்வுலகத்தில் 24-வருஷகாலம் சீவித்திருந்தாளென்றும், வேறு சிலர் 15-வருஷகாலமாத்திரம் சீவித்திருந்தா ளென்றும் சொல்லுகிறார்கள். கடைசியாய்த் தேவமாதா மரணமடைந்து அடக்கஞ் செய்யப்பட்ட இடத்தைப்பற்றி 7-ம் நூற்றாண்டில் சீவித்துவந்த சிற்சில மேற்றிராணிமார்களும், 8-ம் நூற்றாண்டில் இருந்த அர்ச். தாமேசேன் அருளப்பரும் சொல்லியிருக்கிறபடி தேவமாதா ஜெருசலேமிலேயே மரணமடைந்து அங்கேயே அடக்கம் பண்ணப்பட்டிருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட வேண்டியதா யிருக்கிறது. ஆனால் இவ்வபிப்பிராயம் உண்மையாயிருக்கும் பக்ஷத்தில், 4-ம் நூற்றாண்டில் பலஸ்தீன் தேசத்திலுள்ள சகல திரு ஸ்தலங்களையும்பற்றி எழுதின அர்ச். எரோணிமுஸ் (St. Jerome) ஜெருசலேமிலுள்ள அர்ச். தேவமாதாவினுடைய கல்லறையைப்பற்றி யாதொன்றும் பேசாமலிருப்பது ஆச்சரியத்துக்குரியதே. வேறு சிலர் தேவதாயார் எபேஸ் பட்டணத்து மேற்றிராணியாராயிருந்த அர்ச். அருளப்பரோடு வசித்து வந்தபடியால், எபேஸ் பட்டணத்திலேயே மரணமடைந்து அங்கேயே அடக்கம் பண்ணப்பட்டிருக்க வேண்டுமென்று தாற்பரியப்படுகிறார்கள்.

எது எப்படி யிருந்தபோதிலும் ஒரு காரியம் நிச்சயம்: அர்ச். கன்னிமரியம்மாள் தம்முடைய பாக்கியமான மரணத்துக்குப் பின், தெய்வீக வல்லமையினால் உயிர்த்துத் தம்முடைய ஆத்தும சரீரத்தோடே பரலோகத்துக்கேகினாள் என்பதே. இவ்விஷயத்தைப்பற்றித் திருச்சபை துவக்கத்திலிருந்து இதுவரையிலுமுள்ள சகல பாப்புமார்கள், மேற்றிராணிமார்கள், குருக்கள் கிறிஸ்துவர்கள் முதலானவர்களுடைய தவரு பாரம்பரையும், சகல திருச்சபை சரித்திராசியர்களும், ஏறக்குறைய திருச்சபை ஆரம்பத்திலிருந்து கொண்டாடப்பட்டு வரும் இந்தத் திருநாளும், இந்தத் திருநாள் பூசையும், செபங்களும் தேவமாதா ஆத்தும சரீரத்தோடு மோட்சத்துக்கு எழுந்தருளிப்போன சத்தியத்தை நிச்சயப்படுத்துகின்றன வென்று அறிந்துகொள்ளவும்.

---



## WHAT IS OUR END?

## நமது கதியாது?

(முன் தொடர்ச்சி)

---

மனிதன் இவ்வுலக சுக செல்வங்கள் கீர்த்திப் பிரதாப முதலியவைகளுக்காக உண்டாக்கப்படவில்லை என்பதற்கான இரண்டாவது நியாயத்தைக் கவனிப்போம். இந்த நியாயம் வெகு அற்பமானதேனும் மிக்கத் தெளிவானது. இது ஒருவராலும் ஆட்சேபிக்க முடியாத வேறொரு நியாயத்தினின்று முண்டாவதாம். அதாவது யாதாமொன்றைக் கடவுள் உண்டாக்கி அதற்கென்று ஒரு முடிவையும் ஏற்படுத்தவாரேயானால், அம்முடிவை யடையும் ஏதுக்களையும் அதற்குக் கொடுத்திருக்கவேண்டும். ஒரு முடிவை யடையும் மார்க்கத்தைக் காட்டாமல், ஒரு பொருளை ஒரு முடிவுக்கென்று கடவுள் உண்டாக்குவது கூடாத காரியம். அளவில்லாத ஞானத்தால் ஓர் முடிவுக் கென்று உண்டாக்கப்படுதல் என்பதைக் கொண்டே, அம் முடிவையடைந்தாலும் அடையாவிட்டாலும், அது அடையக்கூடியதே என்னும் உண்மை வெளிப்படையாக விளங்க இடமிருக்கிறது. கடவுள் ஒன்றை ஒரு முடிவுக்காக உண்டாக்கினார் என்று சொல்லி, அதே சமயத்தில் அம் முடிவை அது அடைவது கூடாத காரியம் என்று சொல்வது அறிவீனமல்லவா? ஒரு முடிவை யடைவதற்குத் தனக்கு அவசியமான விஷயங்கள் எல்லாம் தன்னிட மில்லாவிட்டால், ஒரு பொருள் அம் முடிவுக்காக உண்டாக்கப்படவில்லை என்று நிச்சயமாகச் சொல்வதே நியாயமென நாம் ஒத்துக்கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறோம்.

யானை ஆகாயத்தில் பறப்பதற்காகப் படைக்கப்படவில்லை. நத்தையானது மலர்கள்தோறும் பறந்துபோய் அவற்றிலுள்ள தேனைக் குடிக்க உண்டுபண்ணப்படவில்லை. அதுவே வேகமாயோடும் முயல் முதலிய மிருகங்களைத் துரத்திப் போக முடியுமா? இத்தகைய காரியங்களை நம்புவதற்கு நமக்குருசுக்கள் வேண்டியதில்லை. ருசுவில்லாமலே இவற்றை நாம் மனப் பூர்வமாய் நம்புகிறோம் என்பது மெய்யே. ஏன்? இப்படி நாம் நம்புவதின் காரணம் என்ன? நாம் ஏன் இவ்விஷயங்களில் இவ்வளவு நிச்சயமாயிருத்தல் வேண்டும்? ஏனெனில், யானை நத்தை முதலியன நாம் குறிப்பிடும் வேலைகளைச் செய்யவேண்டியதா யிருந்தால், அவ் வேலைகளைச் செய்வதற் குதவியான வல்லமையும் உறுப்புக்களும் அச்செந்துக்களிடம் பொருந்தி யிருக்க வேண்டும் என சாதாரண அறிவுடையவர்களுக்கும் மிக்கத் தெளிவாய் விளங்கும். அவைகளிடம் அவ்வல்லமை இல்லை என்பதொன்றைக் கொண்டே, அவை ஜீவித்தலின் கருத்து, வேறெதுவாயிருப்பினும், நாங்குறித்த தொழிலைச் செய்வதற்கல்ல வென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். யானைகள் பட்சிகளைப்போல் ஆகாயத்தில் பறக்கவும், நத்தைகள் மலர்களிடம் பறந்து தேனை யருந்தவும் அல்லது வேட்டை நாய்களைப்போல் முயல்களைத் துரத்திப் பிடிக்கவும் என்று கடவுள் எண்ணியிருந்தால், அவர் அவற்றை வேறு விதமாய்ப் படைத்து, அவற்றிற்கு வேறு

உறுப்புக்களை யுதவி, தத்தம் தொழிலை செவ்வனே புரிவதற்கான வல்லமையையும் அவற்றிற் கருளியிருப்பார் என்பது நிச்சயம்.

இவ்வுண்மை மனிதனிடத்திலும் விளங்கக் காணலாம். மனிதன் இவ்வுலக செல்வ சுக போகங்களில் தன் மெய்யான பாக்கியத்தை யடையவேண்டு மென்பது கடவுள் கருத்தாயின், அதற்கு வேண்டிய துணைக் கருவிகளை அவனுக் கவர் அளித்திருக்க வேண்டுமென, யாதொரு சந்தேகமு மின்றிச் சொல்லலாம். சிருஷ்டிகர் மனிதசிருஷ்டியின் முடிவு செல்வம் என்றெண்ணி யிருந்தால், ஒவ்வொருவனும் அச் செல்வத்தைச் சுலபமா யடையும் வழியையும் அவனுக்குக் காட்டி யிருப்பார். அவர் எல்லாரையும் தனவந்த ராக்கக் கடமைப்பட் டிருக்கிறார் என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் நியாய ஒழுங்கின்படி, அவர் எண்ணம் இதுவாயின், ஒவ்வொருவனுக்கும் அதைச் சுலபமாயடையும் வல்லமையையேனும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார் என்று நான் நிச்சயமாய்ச் சொல்வேன். யார் ஒருவன் தன்னாலானப் பிரயாசைப் பட்டுழைக்கிறானோ, அவன் அவ்வுயர்ந்த பொருளை எளிதில் அடையும்படிச் செய்யவேண்டியது கடவுள் கடமை. ஆனால் உலகத்தில் இப்படித் தானா நடக்கிறது? உலகத்தில் நாம் பரிஷ்காரமாய்க் காண்பதென்ன? தேச சரித்திரங்களாலும் அநுபோகத்தாலும் நாம் அறிவதென்ன? செல்வ சுகபோகங்கள் இயல்பாகவே சிலருக்கே உரிய தொழிய பலருக் கல்ல. மேலும் அவற்றை மன்பதைக்குள் பெரும்பான்மையோர் அடைய முடியாததோடு, அவை கிட்டவுங்கிட்டா. மனிதருள் அநேகர் என்னதான் பிரயாசைப்பட்ட போதிலும், அவைகள் மறுக்கப்படும். மக்களுள் அநேகர் தனவந்தராகும் எண்ணமின்றி சோம்பலாகவும் அசட்டையாகவு மிருக்கலாம் என்று வைத்துக்கொள்வோம். சரி, அப்படியானால் அவர்களைவிட்டு, மிக்கச் சுறுசுறுப்புடனும் பரபரப்புடனும் செல்வத்தைத் தேடி தனவந்தராகத் தங்கள் ஜீவியம், வல்லமை, பராக்கிரமம் முதலியவற்றைச் செலவழிக்கப் பின்வாங்காத கோடி கணக்கான ஜனங்களை எடுத்துக்கொள்வோம். அவர்கள் பிரயாசை யாவுங் கைகூடி, எல்லோரும் தனவந்தராகின்றனரா? அவர்களனைவரும் தங்கள் பேராசையின் முடிவை யடைகின்றனரா? தங்கள் பொக்கிஷத்தில் பொன்னையும் வெள்ளியையும் கொண்டுவந்து நிரப்பும் வழியைக் கடைசியாய்க் கண்டுபிடிக்கிறார்களா? கொண்டுவந்து சேர்க்கிறார்களா? இல்லை! அவர்களில் அதிர்ஷ்டவான்கள் வெகு சிலரே. சிலர் ஏதோ கொஞ்சம் அநுகூல மடையலாம். ஆனால் அநேகமாய் எல்லோரும் ஒன்றுமில்லாமல் தவறிப்போகின்றனர். ஊக்கமின்மையா லல்ல, ஆனால் அவர்களிடம் போதுமான சக்தி, வல்லமை, திறமை, சமயம் முதலியன கிடையா. ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதற்கு இன்றியமையாத சாதனங்கள் அவர்களிடம் இல்லாததால், அவர்கள் இவ்வாறு தவறுகின்றனர். ஆதலால், இவ்வுண்மையைப்பற்றிச் சந்தேகமேயில்லை; வேறு கேள்விகள் கேட்கவேண்டியது மில்லை. நத்தைகள் மலர்களினின்றும் மதுவைச் சேகரிக்க எவ்வளவு சக்தியற்றவைகளா யிருக்கின்றனவோ, அவ்வளவு சக்தியற்றவர்களாய் அநேக மனிதர் பணம் சம்பாதிக்கும் விஷயத்திலும் இருக்கின்றனர். அவர்கள், வேகமா யோடும் முயலைத் துரத்த முடியாத நத்தையைப்போல், செல்வத்தைத் துரத்திப் பிடிக்க அசக்தரா யிருக்கின்றனர்.

மனிதன் மெய்யாகவே பெருஞ் செல்வத்தை அநுபவிக்கப் படைக்கப்பட்டவனாயின், இத்தகைய அபஜயங்கள் ஏற்படக் காரணமில்லை. அவனுடைய அசட்டை அல்லது மூடத்தனமே அச் செல்வத்தை அவன் அடையாவண்ணம் தடுக்கின்றது. அது அவனுக் கெட்டாத் தொலையில் ஒருபோதும் இருக்கக்கூடாது; உண்மையான ஊக்கத்துடன் அதைத் தேடி வருபவன், எவனாயிருப்பினும், அதை யடையாவண்ணந் தடுப்பதுங் கூடாது. நான் இவ்வுலகில் என்னதான் மன ஊக்கத்தோடு பிரயாசைப்பட்ட போதிலும் இவ்வுலக செல்வ சுக போகங்களை அநுபவிக்க முடியாது என்று சொல்வதும், வேறு விதமாய், இச் செல்வ முதலியன என் முடிவுமல்ல, கடவுள் அவை என் முடிவெனக் கருதவுமில்லை என்றுரைப்பதும் ஒன்றே. ஆனால் என் முடிவு என்னவாயினும் சரி, அது நான் என்ன பிரயாசைப்பட்டாலும் அடையக்கூடாததல்லவென்பது மட்டும் நிச்சயம்.

செல்வத்தைப் பற்றிக் கூறியவை யனைத்தும், இன்பம், கீர்த்திப் பிரதாப முதலியவற்றிற்கும் பொருந்தும். இதைப் படிப்பவர் ஒவ்வொருவரும் தன் மார்பில் கைவைத்து தன்னிதயத்திற் குடிகொண்டுள்ள முக்கிய பேராசை இன்ன



தென வாராய்ந் தறிந்து, மேற்கூறிய நியாயங்களை அதற்குப் பொருத்திப் பார்க்கட்டும். அப்படிப் பார்க்குமளவில், தான் இவ்வுலகிற் பிறந்ததின் காரணம் இவ்வுலகக் காரியங்களைத் தேடி யநுபவிக்க வல்ல என்னு முடிவுக்கு நிச்சயமாய் வருவார் என்பது திண்ணம்.

இதை விட்டு இவ்விஷயத்திற்குரிய மூன்றாவது நியாயத்தைப் பார்ப்போம். பாடுபட்டுப் பணத்தைத் தேடும் கோடிக்கணக்கான மாந்தருள் வெகு சிலரே ஒருவாறு தங்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்கின்றனர் என்று முன்னமே சொல்லி இருக்கிறோம். அப்படிக்கிருந்தும் அதிர்ஷ்டவான்களில் சிலர் மிக்க அதிர்ஷ்டசாலிகளாய் அபரிமிதமான ஆஸ்திபாஸ்திகளைச் சேர்த்துவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒரு முடிவுக்காகப் படைக்கப்பட்டவை யாவும் அம்முடிவை யடைந்ததும், திருப்தி யடையவேண்டு மென்பது தத்துவ சாஸ்திரத்துக்கும் சாமான்ய அறிவுக்கும் ஒத்த ஒரு நீதியாம். ஆதலால் மனிதன் இவ்வுலக செல்வத்திற்காக உண்டாக்கப்பட்டவனானால், அவன் அதை அடைவதிலேயே ஆநந்தமுந் திருப்தியுங்கொள்வதுடன், வேறொன்றையும் அவன் மனம் நாடாதென்பது தானே போதரும். ஆஸ்திபாஸ்திகள் மனித ஜீவியத்தின் முடிவென நாம் வைத்துக்கொண்டால் அவற்றின் அநுபோகத்தால் மனித வியல்பு திருப்தியடைய வேண்டுமென நாம் அங்கீகரிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். ஆனால் இது உண்மைதானா? ஒரு பெரிய கோடீஸ்வரனுடைய பாக்கியம் பரிபூரணமானதா? ஒருக்காலுமில்லை யென்று நமது அநுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். செல்வத்தால் நாம் சந்தோஷத்தையும் சில நன்மைகளையு மடைந்தாலும், அதனால் நாம் பெறும் துன்பதுரிதங்களும் மனக்கவலையும் அநந்தம்; அது ஒருவனுடைய சிந்தனைகளை யதிகப்படுத்துகிறது; அது முகஸ்துதியாய்ப் பேசும் வஞ்சகர்களையே தவிர, உண்மையான சிநேகிதர்களைத் தன்னிடங் கூட்டுவதில்லை; அநேகர் மனதில் பொறாமை, குரோதம் முதலியவற்றை உண்டு பண்ணுவதுடன், அநேகரை ஜென்ம விரோதிகளாகவுஞ் செய்கிறது. மேலும் அது நோயைக் குணப்படுத்தாது; சாவைத் தடுக்காது; கவலை கொண்ட ஆத்மாவுக்குச் சமாதானத்தைக் கொண்டுவராது. மெய்யாகவே உண்மையை உரைக்கவேண்டுமானால், நாளெல்லாங் கஷ்டப்பட்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து, தங்கள் தாழ்ந்த நிலையில் திருப்தியடையும் ஏழைக் கூலிக்காரரிடம் இருக்கும் மன வமைதியும் சந்தோஷமும் அரசர்கள், அரசியர், பிரபுக்கள் முதலிய கனதனவான்களிடமும் கோடீஸ்வரரிடமும் காண்பதரிதாம்.

(இன்னும் வரும்.)

*S. Selva Raju.*

---

## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### 17-ம் பாடம்.

#### 4-ம் கற்பனை.

பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக.—பிள்ளைகள் தங்கள் பெற்றோரைச் சங்கித்து, ஸ்நேகித்து, பாவமில்லாத விஷயத்தில் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து, அவர்களுடைய ஆத்தும சரீரத்துக்கு வேண்டிய உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொருவரும் தங்கள் பெற்றோர், குருக்கள், உபாத்தியாயர் முதலிய பெரியோரைச் சங்கை மரியாதையுடன் நடத்தி, சர்க்காருடைய சட்டதிட்டப்படி நடந்து, அவர்களுக்குச் செலுத்தவேண்டிய வரி முதலியவைகளைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பெற்றோரும் மற்றப் பெரியோரும் தங்களுக்குக் கீழ்ப்பட் டிருப்பவர்களிடமாய்த் தங்களுக்குள்ள கடமைகளைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

**1. பெற்றோர்மட்டில் அன்புள்ளவன்.**- பிரான்ஸ் தேசத்தில் ஒரு துரையானவர் ஏதோ ஓர் முகாந்தரத்தைப்பற்றி தன் ஆஸ்திபாஸ்தியெல்லாம் இழந்து தரித்திரரானார். தமது குமாரனை உயர்ந்த கல்விச்சாலைக்கு அனுப்பிவைக்கக் கூடாதபடியால் அவர் விசனமாயிருப்பதை அறிந்த அவருடைய ஸ்நேகிதர் தம்முடைய செலவில் அந்த வாலனைக் கல்விச்சாலைக்கு அனுப்பிவைத்தார். வாலன் அந்தக் கல்விச்சாலையில் படிக்கும்போது தனக்குப் பரிமாறப்படும் இறைச்சியைப் புசியாமல் வெறுந் தண்ணீரும் உரொட்டியு மாத்திரஞ் சாப்பிடுவதைக் கண்ட கல்விச்சாலையின்

பிள்ளைகள் துக்கப்பட்டு, நன்றாய்ச் சாப்பிடும்படி அவ்வாலனை மன்றாடியும், அவன் அதற்குக் காதுகொடுத்தவனல்ல. இதைப்பற்றிக் கேள்விப்பட்ட கல்விச்சாலை அதிகாரி வாலனை வரவழைத்து இறைச்சி முதலிய பதார்த்தங்களைப் புசியாததின் காரணத்தைப்பற்றி விசாரித்தபோது, வாலன் "அந்தப் பதார்த்தம் கெட்டதென்றல்ல, அல்லது அதன்மட்டில் எனக்குப் பிரியமில்லை யென்றுமல்ல, ஆனால் என் அன்புக்குரிய தாய் தகப்பன்மார் வெறுந் தண்ணீரும் உரொட்டியுமாத்திரம் சாப்பிட்டுச் சீவிக்கும்போது, இறைச்சி முதலிய பதார்த்தங்களைச் சாப்பிட எனக்கு மனம் வரவில்லை" யென்று பதில் சொன்னான். இதைக் கேட்ட அதிகாரிக்கு அந்த வாலன்மட்டில் அதிக பக்ஷமுண்டாகி "உன் பெற்றோர்மட்டில் உனக்கு இவ்வளவு அன்பு உண்டென்று நான் தெரிந்துக் கொள்ளும்போது எனக்கு ஆச்சரியமும் சந்தோஷமும் உண்டாகிறது. இது முதல் நீ மற்ற பிள்ளைகளைப்போல் உனக்குப் பரிமாறப்படும் பதார்த்தங்களைப் புசிப்பாயாக. உன் பெற்றோருக்கு வேண்டிய சவரக்ஷணையை நான் பார்த்துக்கொள்வேன்" என்றார்.

Muller.

2. அர்ச். கத்மன்.—இவர் இங்கிலாண்டு தேசத்தில் ஏழைகளும் உத்தம கிறிஸ்துவர்களுமான தாய் தகப்பனிடத்தில் பிறந்தார். இவருடைய தகப்பனின் மரணத்துக்குப் பின் கடின வேலை செய்து தமது தாயாரைக் காப்பாற்றி வந்தார். ஆனால் விருத்தாப்பியத்தாலும் வியாதியாலுந் துன்பப்பட்டு, தமது தாயாருக்கு வேண்டிய அன்ன வஸ்திரம், மருந்து முதலியவைகளைத் தம்மால் சமாளிக்கக்கூடாதபடியால், ஒரு சிறு வண்டி செய்வித்து அதில் தமது தாயாரை ஏற்றிக்கொண்டு, அவரே அந்த வண்டியை வீடுவீடாயிழுத்துக்கொண்டுபோய் தர்மம் வாங்கித் தமது தாயாரைக் காப்பாற்றி வந்தார். இவர் செய்த புண்ணியங்களைப்பற்றியும் நடத்தின புதுமைகளைப்பற்றியும் இவருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டங் கொடுக்கப்பட்டது.

Butler.

3. நிஷ்டூரனான குமாரன்.—ஒரு ஊரில் ஒரு கிறிஸ்துவ குடும்பம் உண்டு. தங்களுக்குப் பிறந்த ஒரே ஆண் குழந்தையை. அந்த ஏழையான பெற்றோர் வெகு செல்வமாய் வளர்த்து வந்தார்கள். பையன் தலையெடுத்து கொஞ்சஞ் சம்பாதித்து, அடமானத்திலிருந்த நிலத்தை மீட்டுச் செட்டாய்ப் பிழைத்து வந்தான். விருத்தாப்பியரான தன் தாய் தந்தையரைச் சற்றுங் கவனித்தவனல்ல. கூலிவேலை செய்யும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துவான்; அவர்கள் வயிற்றுக்கு வேண்டிய போசனம் விசாரிக்கமாட்டான். அற்ப சொற்பக் காரியத்துக்காகப் பல்லைக் கடித்துக்கொண்டு அவர்கள்மேல் பாய்ந்து கையால் அடிக்க அஞ்சமாட்டான். இராவேளையில் அவ்விரு விருத்தாப்பியரையும் தன் விளைச்சல் நிலங்களைப் பத்திரமாய்க் காவல் செய்யும்படி அனுப்பிவிட்டு இவன் வீட்டில் சுகமாய் நித்திரை செய்வான். தன் தாய்க் கழுத்திலிருந்த சொற்ப நகையைக் கழற்றித் தன் பெண்சாதி கழுத்தில் போட்டுக் கொள்ளும்படி கொடுத்தான். அந்த இரு விருத்தாப்பியரும் தக்க உணவும் பராமரிப்புமின்றி 15-நாட்களுக்குள் ஒருவருக்குப் பின் ஒருவராய் மரணமானார்கள். நிஷ்டூர குணமுடைத்தான அந்தக் குமாரனுக்குப் பல துன்பங்களுண்டாகிச் சங்கடப்படுகிறான். இனி அவன் கதி எப்படியோ! அது சர்வேசுரனுக்கு மாத்திரந் தெரியும்.

Praeceptor.

4. நல்ல பிள்ளைகள்.—ஒரு ஏழையான விதவை பாரிச வாயுவால் சங்கடப்பட்டபடியால் சற்றும் எழுந்து நடமாட்டக் கூடாதவளாய்ப் படுத்த படுக்கையிலேயே கிடந்தாள். ஞாயிற்றுக்கிழமையில் பூசை காணக்கூடாம லிருந்ததால் மகா துக்கப்பட்டு, பூசை காணும்படி தனக்கு இருக்கும் அதி ஆவலைத் தன் இரு பிள்ளைகளுக்கும் அறிவித்தாள். மறு ஞாயிற்றுக்கிழமை அந்த இரண்டு பிள்ளைகளும் ஒரு பலகைக்கு இரண்டு கழிகளைக் கட்டி அதில் தங்கள் தாயை உட்காரச் செய்து அவளைக் கோவிலுக்குத் தூக்கிக்கொண்டு போனார்கள். இதைக்கண்ட அந்த ஊரார் மிகவுஞ் சந்தோஷங்கொண்டு அவ்விரு வாலரையும் வாழ்த்திக் கொண்டாடுகையில், அநேகர் அவர்களுக்கு முன்பாக பூமலரைத் தெளித்துக்கொண்டு கோவிலில் பிரவேசித்தார்கள். இதைப்பற்றிக் கேள்விப்



பட்ட குருசுவாமியாரும் அன்று பூசையில் பிதாவையும் மாதாவையுஞ் சங்கிப்பாயாக என்னும் கற்பனையின் பேரில் நேர்த்தியான பிரசங்கஞ் செய்து, அந்த இருவாலர்பேரில் தேவ ஆசீர்வாதம் இறங்கக்கடவதென்று அவர்களை ஆசீர்வதித்தார்.

Müller.

---

## GNANAMANI III PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 22-ம் அதிகாரம்.

### சாவுங்களடா, குடிகாரக் கழுதைகளே!

ராமகிருஷ்ணனுடைய மரணத்தால் தேவதாஸ் பண்டிதர் சொல்லமுடியாத துக்கப்பட்டபோதிலும், அவன் சத்தியவேதத்தில் சேர்ந்து மரித்தபடியால் ஆறுதல் கொண்டார். அடக்கத்துக்கு வேண்டிய முஸ்திப்பு செய்து, குருப்பிரசாதிகள் வந்து சாச்சடங்கை கம்பீரத்துக்குரிய ஆரவார சிறப்புடன் நிறைவேற்றினார்கள்.

ராமகிருஷ்ணன் மரித்த மூன்றா நாளே தேவதாஸ் பண்டிதர் 2000-ரூபாய் அவனுடைய தங்கையாகிய மீனாட்சி பேரால் தபால் பாங்கில் கட்டி, அவளுக்குக் கலியாணம் நடக்குமட்டும் மாத மாதம் அந்த தொகைக்குச் சேரவேண்டிய வட்டியை பெற்றுக் கொள்ளவும், கலியாணமாகுங் காலத்தில் முதலையும் வாங்கிக் கொள்ளவும் தகுந்த ஏற்பாடுகள் செய்து முடித்தார்.

ராமகிருஷ்ணனுடைய மரணத்தால் தேவதாஸ் பண்டிதர் தம்முடைய வலது கை ஒடிந்து போயிற்று என்பார். அவனுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக அநேகம் பூசைகளைசெய்வித்தார். நாடோறும் அவனுக்காக வேண்டிக் கொண்டு வந்தார். அவனுடைய ரூப படத்தைச் சித்திரித்துத் தமது அறையில் மாட்டிவைத்து அதை அடிக்கடித் துக்கத்துடன் பார்ப்பார். படிப்பு நேரத்தில் யாராகிலும் ராமகிருஷ்ணனுடைய பெயரை உச்சரித்தால் பண்டிதருக்குத் துக்கமுண்டாகும். இவர் தனித்திருக்கும் காலத்தில் மரணமான ராமகிருஷ்ணனுடைய ஞாபகம் இவருக்கு உண்டானால், "ஐயோ! எவ்வளவு நற்குணசாலி அவன்! எவ்வளவு கொடுமையுடன் அவனை உதைத்தேன்! சிலவிசை அந்த உதையே அவனுடைய மரணத்துக்குக் காரணமாயிருந்திருக்கலாம்!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு துக்கப்படுவார். ராமகிருஷ்ணனுடைய மரணத்துக்குப்பின் பண்டிதருடைய முக மாறிப் போயிற்று. அவனைப்பற்றியே ஏங்கிக் கவலைப் படுவார்.

ராமகிருஷ்ணன் மரணமான எட்டா மாதம், ஒருநாள் பண்டிதர் வேறொரு மாணாக்கனோடு, சாயந்திர வேளையில் உலாவப் போனார். இரண்டு மயில்தூரம் போனபின், பாலாற்றினின்று பிரியும் ஒரு பெரிய கால்வாய் கரையில் இருவரும் உட்கார்ந்து சங்கீத விஷயமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது, பண்டிதருக்கு ராமகிருஷ்ணனுடைய ஞாபகம் வந்து: "ஆ! ஆ! ராமகிருஷ்ணன் சாகாமலிருந்தால் நமது சங்கீத வித்தியாலயம் எவ்வளவோ கீர்த்திபெற்றுப் பிரகாசிக்கும்" என்று அவனுடைய சாமர்த்தியத்தையும் நன்னடத்தையையும் நன்றியறிதலான குணத்தையும் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது கால்வாயின் அப்புறத்தில் இருவர் தென்பட்டார்கள். அவர்களில் ஒருவன் நொண்டி நொண்டி நடக்க, இருவரும் வாய்க்கு வந்தபடி கன்னா பின்னாவென்று பாடிக்கொண்டும், திட்டிக்கொண்டும், பித்து கொண்டவர்களைப்போல் அங்குமிங்கும் அசைந்தாடி, ஒருவன் மற்றொருவனைப் பிடித்துத் தள்ளிக்கொண்டும், வெறிகொண்ட நாய்களைப்போல் ஊளையிட்டுக் கொண்டும் கீழே விழுந்து, மறுபடியும் எழுந்திருந்து கால்வாய் கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது அவர்களில் ஒருவன் மற்றவனைப் பார்த்து, "எதிர் கரையில் உட்கார்ந்திருக்கிறவர்கள் யார்?" என்று கேட்டான். அதற்கு மற்றொருவன், "யார் அவன் எனக்குத் தெரியவில்லையே!" என்று தட்டுத் தடுமாறி மறுபடியும் பார்த்து "ஆரடா அங்கே உட்கார்ந்திருக்கிறது?" என்றான்.

பண்டிதரும் அவருடன் வந்த மாணாக்கனும் இவ்வாறு பேசுகிறவன் கல்யாணசுந்தரம் என்று அறிந்துகொண்டார்கள். மற்றொருவன் இன்னானென்று பண்டிதருக்குத் தெரியவில்லை. இருவரும் பூர்த்தியாய்க் குடித்து வெறிகொண்டிருப்பதாக அறிந்துகொண்டு, ஒன்றும் பேசாமல் மௌனமாய் உட்கார்ந்திருந்தார்கள்.

அப்போது கல்யாணசுந்தரம் தன் தோழனைப் பார்த்து, "அடே மணவாளா, பொன் தொப்பி போட்டுக்கொண்டு அக்கரையில் உட்கார்ந்திருக்கிறவன் யார் தெரியுமா?".

மண.—(காறி துப்பிக்கொண்டு), அவன் யாரோ, (என்று பொத்தென்று கீழே விழுந்தான்)

கல்யா.—அடே தடியா! அவன் இன்னானென்று தெரியவில்லையா இன்னம் உனக்கு?

மண.—என்னடா? குள்ளக் கத்திரிக்காய்! என்னை தடியன் என்கிறாய்? (என்று அவனை ஒரு குத்து குத்தினான்)

கல்யா.—அடே...அவன் யாரென்று சொல்லட்டுமடா?

மண.—அவன் உன் பாட்டண்டா!

கல்யா.—போடா கயிதே, அவன் உன் பங்காளிடா!

மண.—என் பங்காளியா? (என்று சொல்லி கே, கே என்று வெறிகொண்டவனைப் போல் சிரித்து ஊளையிட்டு,) பங்காளியானால் அவனுக்கு நாலு மொந்தை வார்த்திருப்பேன். (என்று சிரித்துக்கொண்டு) அடே, என் பங்காளி! வாடா இந்தப் பக்கம்.

கல்யா.—அடே மணவாளா, இவன் தாண்டா உனக்குப் பரியம் போட்ட பெண்ணைக் கட்டிக்கொண்டவன்.

மண.—(தட்டுத் தடுமாறி எழுந்திருந்து, வாய்க்குவந்த வண்டப் பேச்சைக் கக்கி) இவன் தானடா? (பண்டிதரைப் பார்த்து) அடே இந்தப் பக்கம் வாடா, ஒரு கை பார்க்கலாம்.

கல்யா.—இவன் தாண்டா என்னை ஸ்கூலிலிருந்து வெளியே துரத்தினவன்! இவன் பெரும் யோக்கியனைப்போல் என்னைக் குடிகாரன் என்றான்.

மண.—இன்னொருத்தன் இருக்கிறானே அவன் ஆரடா, கல்யாணா?

கல்யா.—(வண்ட வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு) இவன் தோலான், அவன் துருத்தியான்.

அந்தத் துஷ்டர் இவ்வாறு அழும்பும் அவலக்ஷணமுமான வார்த்தைகளால் தம்மைத் திட்டுவதைக் கண்ட பண்டிதருக்குப் பொறுக்க முடியாத ஆக்ரோஷம் கிளம்பி, அவர்களை உதைக்க மனம் வந்தபோதிலும், குடியால் வெறிகொண்டு மதிமயங்கிப் பேசுகிறார்கள் என்று அறிந்து கோபத்தை அடக்கிக் கொண்டிருந்தார்.

அவருடன்கூட வந்திருந்தவனுக்கோ தலை மட்டும் இரத்தம் பொங்கி, அந்தத் துஷ்டரை அடிக்கும்படி இரண்டு மூன்றுவிசை கால்வாயில் இறங்கியும் பண்டிதர் அவனைத் தடுத்துவிட்டார். அப்போது அவன் அந்தத் துஷ்ட வாலரைப் பார்த்து, "அடே குடிகாரக் கழுதைகளே! என்ன உங்களுக்கு மதம்? இங்கே இருக்கிறது யாரென்று உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையோ? பத்திரம்! இனி யிப்படிப் பேசினால் உங்கள் பல்லெல்லாம் உதிர்ந்துபோம்."

கல்யா.—போலீஸ் இன்ஸ்பெக்டர் சொன்ன வார்த்தையை மறவாதேயுங்கடா! உனக்கும் உன் பெண்டாட்டிக்கும் குறி வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வார்த்தையைக் கேட்ட பண்டிதருடன் வந்திருந்த மாணாக்கனுக்கு அதிக கோபமுண்டாகி எழுந்திருக்கும்போது, பண்டிதர் அவனைத் தடுத்தபோதிலும் தண்ணீரில் இறங்கினான்.

குடிகாரர் இருவரும் "வாடா, ஒருகை பார்க்கலாம்" என்று குடி வெறியால் ரேவில் இறங்காமல் ஆழமான தண்ணீரில் வண்டை வார்த்தைகளைச் சொல்லித் திட்டிச் சபித்துக்கொண்டு இறங்கவே, மணவாளன் என்னும் நொண்டி, கால் தடுமாறித் தண்ணீரில் விழுந்தான். விழும்பொழுது கல்யாண சுந்தரம் என்பவனுடைய கையைப் பிடித்துக்கொண்டிருந்தபடியால் அவனும் தண்ணீரில் விழுந்து திக்குமுக்காடுவதைக்கண்ட மாணாக்கன் "சாவுங்களடா குடிகாரக் கழுதைகளே!" என்று கரையேறினான்.

உடனே பண்டிதர் மாணாக்கனைப் பார்த்து, "பாலகிருஷ்ண நாயுடு! அவன்களை கரையில் தூக்கிப்போடும்; இல்லாவிட்டால், பாவம்! செத்துப் போவான்கள்." "சும்மா இருங்க சர்; நீங்கள் அதிக தயாளங் காட்டினதினால்தான் இந்தக் குடிகார பயல்கள் இப்படிக் கூத்தாடுகிறார்கள். பகவானே அவர்களைத் தண்டிக்கிறார். நீங்கள் சும்மா இருங்கள்," என்றான். பண்டிதரோ, தமது தொப்பியையும் அங்கவஸ்திரத்தையும் கோட்டையும் கழற்றி கீழே போட்டுவிட்டு, வேஷ்டியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு, "பாலகிருஷ்ண நாயுடு, இறங்கிவாரும்" என்று தண்ணீரில் குதித்தார். "போய், குடிகாரக் கழுதைகளை ஜலத்தில் அமிழ்த்திச் சாகடித்துவிடும்" என்று பாலகிருஷ்ண நாயுடு சொன்னார். ஆனால், தண்ணீர் குடித்து, வயிறு உப்பி, திக்குமுக்காடும் அவ்விரு குடியரையும் பண்டிதர் இழுத்துக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தபின், வேஷ்டியை மாற்றிக்கொண்டு, கோட்டையும் தரித்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு பாலகிருஷ்ண நாயுடுடன் புறப்பட்டார்.

பால.—என்ன சார்? நீங்கள் இன்று செய்த காரியம் எனக்குச் சுத்தமாய்ச் சம்மதப்படவில்லை. உம்மைப்போலக் கௌரவமும் கீர்த்தியுமுள்ள பிரபுவுக்கு இது யோக்கியமானதல்ல.

பண்.—எது நாயுடு?

பால.—அந்தக் குடிகாரக் கழுதைகளைத் தண்ணீரில் அமிழ்த்திச் சாகடிக்காமல் அவர்களைக் காப்பாற்றி இரக்ஷித்ததே.

பண்.—என்ன நாயுடு, அப்படிச் சொல்லுகிறீர்!

பால.—உபகாரிக்கு உபகாரம் புரிவது நியாயம். ஆனால் போக்கிரிகளுக்கும், சண்டாளர்களுக்கும் குடிகாரக் கழுதைகளுக்கும் உபகாரம் புரியலாமா? மேலும் உமது பாதத்தில் ஒட்டியிருக்கும் தூசிக்குச் சமானமில்லை அந்தக் கழிசிறைகள்! இப்பேர்ப்பட்ட துர்மார்க்கருக்கு உம்மைப்போலொத்த புருஷோத்மர் இவ்வளவு உபகாரஞ்செய்வது சரியல்லவென்று தாட்டியாய்ச் சொல்லுவேன். தாங்கள் அந்தப் பாதகரைத் தொட்டால் தங்களுடைய கரங்கள் தீட்டாயிற்றென்று யாருஞ் சொல்வார்!

பண்.—புண்ணிய பலன் இன்னதென்று அறியாமல் பேசுகிறீர். நல்லது, நீர் என்னை நேசிக்கிறீரா, இல்லையா?

பால.—அதுகூட கேட்க வேண்டுமோ சார்?

பண்.—எதைப்பற்றி யென்னை நேசிக்கிறீர்? நான் உமக்குக் கல்வி பயிற்றுவிப்பதைப் பற்றியோ?

பால.—அதற்குச் சந்தேகமா?

பண்.—நான் உமக்குக் கல்வி கற்பியாதிருந்தும் நீர் என்னை நேசித்தால், உம்மட்டில் நான் அதிக பிரியம் கொள்வேனே?

பால.—ஆஹா.

பண்.—நான் உமக்குப் பலவிதத்திலும் துரோகம் புரிந்திருந்தும் அவையெல்லாம் பாராமல் நீர் என்னைச் சிநேகித்தால் உமது பேரில் எனக்கு நேசம் உண்டாகுமோ, உண்டாகாதோ?

பால.—மெய்தான், என்னை நேசிப்பீர்.

பண்.—அவ்வாறே, நன்மை செய்தவனுக்குப்பிரதி நன்மை புரிவது நமக்குள் சர்வ சாதாரணம். ஆனால் தின்மை செய்தவர்களுக்கு நன்மை செய்வது அரிது.

என்னை அவ்வளவாக நிந்தித்து அவமானப்படுத்தின அந்த இரண்டு வாலரையும் யாருடைய முகத்தைப் பார்த்துக் காப்பாற்றினேன் என்று நினைக்கிறீர்?

பால.—அவர்களுடைய தாய் தந்தையோருடைய முகத்துக்காக இருக்கலாம்.

பண்.—பரிச்சேதமில்லை, தேவனுடைய முகத்துக்காக.

பால.—ஆனால், சார், நீங்கள் என்ன சொன்னாலும் சொல்லுங்கள். அப்பேர்ப்பட்ட சண்டாளருக்கு நன்மை புரிவது தேவலோகத்திலிருந்துவந்து பிறந்தவர்களால் ஆகுமேயன்றி இந்த மண்ணுலகில் பிறந்த எந்த நரனாலும் ஆகாது. அது அசாத்தியமாகவே யிருக்கும்.

பண்.—விரோதிக்கு நன்மை செய்யும்படி கடவுள் கற்பித்திருந்தால்?

பால.—அப்படி யவர் கற்பித்ததுண்டோ?

பண்.—சந்தேகமறக் கற்பித்திருக்கிறார். அவருடைய கற்பனைக்கு இணங்கி அந்த நிர்ப்பாக்கியருக்கு உபகாரம் புரிந்தேன்.

பால.—எங்கள் சாஸ்திரத்தில் அது இல்லை. ஆனால் உங்கள் வேதத்தில் இருந்தாலு மிருக்கலாம். அது என் புத்திக்கு அடங்கவில்லை. (என்று பேசிக் கொண்டிருக்கும்போது, வழியில் தனக்கு அறிமுகமான ஒருவனைக் கண்டு, அவனுக்குப் பண்டிதர் இரண்டு அணு கொடுத்து, கால்வாய் கரையில் படுத்திருக்கும் இருவாலரையும் பத்திரமாய்க் கூட்டிக் கொண்டுபோய் அவர்கள் வீட்டில் சேர்த்துவிடும்படி சொல்லி பாலகிருஷ்ணநாயுடுவைப் பண்டிதர் நோக்கி,) "ஒருவன் கல்யாண சுந்தரம், மற்றொருவன் யார் நாயுடு?" என்று வினவினார்.

பால.—அவனை உமக்குத் தெரியாதோ சார்? அவன்தான் போலீஸ் இன்ஸ்பெக்டருடைய குமாரனாகிய மணவாளன்.

பண்.—ஓகோ! அவன்தானா?

பால.—நீங்கள் கவனிக்கவில்லையோ சார்? அந்தப் பாவிமக்கள் இருவரும் உயரத்திலும், பருமனிலும், முகச் சாடையிலும் சரியாய் ஒத்திருப்பது மன்றி, அவர்களுடைய நடத்தையிலும் குணத்திலும் யாதொரு பேதமுமில்லை. ஆனால் மணவாளன் நொண்டியும் பொட்டைக் கண்ணனுமா யிருக்கிறான்.

பண்.—பிறப்பிலே அவன் நொண்டியா?

பால.—இல்லை, மூன்று வருஷத்துக்கு முன் இவன் சைக்கிலில் சவாரி செய்யும்போது கீழே விழுந்து கால் முறிந்து கண்ணும் ஊனமாய் விட்டது. மேலும், இந்தக் கிரகஸ்தனுக்குத்தான் உமது மனைவியைக் கேட்கும்படி அவன் தகப்பன் வைத்தியநாத நாயகர் உங்களூருக்கு வந்திருந்தார். பெண்ணின் தாய் தகப்பன் அவருக்கு வாக்குக்கொடுத்திருந்தும், உமக்கு அந்தப் பெண்ணின்மட்டில் இஷ்டமென்று அறியவே, தங்கள்மனதை மாற்றிக் கொண்டார்கள். மறுநாள் எப்படியோ, மணவாளன் நொண்டியும் பொட்டைக் கண்ணனுமா யிருக்கிறானென்று அறிந்த மாத்திரத்தில், அப்பேர்ப்பட்டவனுக்குப் பெண் கொடுக்காமல் போனது தேவாதீனமென்று பெண்ணின் பந்துக்கள் தங்களுக்குள் சொல்லிக்கொண்டார்கள்.

பண்.—இதெல்லாம் உமக்கு எப்படித் தெரியும்?

பால.-வைத்தியநாத நாயகர் பெண் பேசப் போனபோது தம்மோடு அழைத்துக்கொண்டு போன ஆள் மூலமாய் இதெல்லாம் அறியலானேன்.

பண்.—அப்படியா?

பால—அந்தச் சுட்டிப் பயலுக்கு இன்னங் கலியாணம் ஆகவில்லை. யாரைக் கேட்டாலும் பெண் கொடுக்கமாட்டோம் என்கிறார்கள். இப்படி நொண்டியும் குருடனும் குடிகாரனும் போக்கிரியுமாகிய இவனுக்கு எவள்தான் வாழ்க்கைப்படுவாள்?

தஞ்சாவூர் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்தில் அவனுக்குப் பெண்பேசி 1000-ரூபாய் நகை போடப்போவதாகப் பிரஸ்தாபம். ஆனால் கலியாணமாகுமட்டும் நிச்சயமில்லை. மேலும் கலியாண சுந்தரமும் மணவாளனும் உற்ற சிநேகிதர். ஒருவன் மற்றொருவனை விட்டுப் பிரியமாட்டான். எந்த வேளையில் பார்த்தாலும் கல்யாண சுந்தரத்தை மணவாளன் வீட்டில் பார்க்கலாம் என்று பேசிக்கொண்டு இருவரும் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனார்கள்.

அப்போதுதான் ரயில்வண்டி வந்து நின்றது. ஜனங்கள் வண்டியில் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமா யிருந்தார்கள். பிளாட்பாரத்தில் பெருங் கும்பல் கூடி, ஒரு ஏழைப் பெண்பிள்ளையைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வாவென்று இரண்டு போலீஸ்காரர் சத்தமாய்க் கத்தி சந்தடி செய்துகொண்டிருந்தார்கள்.

இந்தப் பெண்பிள்ளை ஜோலார் பேட்டையிலிருந்து ரயில் மார்க்கமாய்ச் செங்கல்பட்டுக்கு வந்து சேர்ந்தாள். வாங்கின டிக்கட்டை அவளுடைய இரண்டு பிராயமுள்ள குழந்தை கையில் வைத்திருந்து எப்படியோ கை தவறி கீழே போட்டுவிட்டது. அதை அந்தப் பெண்பிள்ளை கவனித்தவளல்ல. செங்கல்பட்டு ஸ்டேஷனில் இறங்கினபோது, டிக்கட்டைத் தேடிப் பார்த்தாள்; அது அகப்படவில்லை. ஆனதைப் பற்றிப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வாவென்று போலீசார் நிர்ப்பந்தப் படுத்தினார்கள். அந்தப் பெண்பிள்ளையுடன் வண்டி யேறினவர்கள் அவள் ஜோலார் பேட்டையில் டிக்கட்டு வாங்கினதாகச் சாக்ஷி சொல்லியும் அதைக் காதில் போட்டுக் கொண்டவர்களல்ல அந்த ரயில் உத்தியோகஸ்தர்கள்.

இந்தச் சங்கதியை அறிந்த தேவதாஸ் பண்டிதர் மனமிளகி, ஸ்டேஷன் மாஸ்டரிடம் போய் அந்தப் பெண்பிள்ளை டிக்கட்டுக்காகவும் அபராதத்திற்காகவும் சேரவேண்டிய பணத்தை அவரிடம் கொடுத்துவிட்டார். பெண்பிள்ளை தன் ஊருக்குச் செல்ல, கூட்டங் கலைந்து பண்டிதரும் பாலகிருஷ்ண நாயுடும் ஸ்டேஷனை விட்டு வெளியே சென்றார்கள். (இன்னும் வரும்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

### தேய்வத்தால் ஸ்தாபிக்கப்பட்ட கத்தோலிக்கு வேதத்தின் லக்ஷணங்கள். புறமதஸ்தர்களுடைய நடமாட்டம்.

(முன் தொடர்ச்சி.)

59. அவஸ்தை ஆயத்தத்திற்குக் கத்தோலிக்குக் குருப்பிரசாதிகள் வரப்படாதென்று விலக்கஞ் செய்திருக்கும் புரோட்டெஸ்டாண்டு ஜெனனா ஆஸ்பத்திரிகளுக்கு, மரணபாயமான வியாதியிலிருக்கும் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள், உட்பிணியாளர்களாகச் சிகிச்சை பெறப்போவது ஒழுங்கல்ல.

60. கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள், எந்த ஆஸ்பத்திரிகளிலும் உட்பிணியாளர்களாகச் சிகிச்சைபெறப் போகும்போது, தாங்கள் ரோமான் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் என்று அதிகாரிகளுக்குத் தெரிவிக்கத் தவறுவது ஒழுங்கல்ல. (இதைத் தெரிவிக்காத குறையால், அநேகர் அவஸ்தை ஆயத்தமின்றிச் சாவதுண்டு.)

61. மணி, மந்திரம், வைத்தியம் என்னும் மூன்றாலும் வியாதியஸ்தர்களைக் குணப்படுத்துவதாகச் சொல்லும் கர்னாடக வைத்தியர்களிடம் கிறிஸ்துவர்கள் சிகிச்சை பெறுவது ஒழுங்கல்ல. (இப்படிப்பட்ட வைத்தியர்கள் வெறும் அவுஷதத்தினால் மாத்திரம் குணப்படுத்தத் தேடாமல், கூடவே சாந்தி, கழிப்பு முதலிய பேயாராதனைகளை நடத்துவது முண்டு. இவர்கள் முழுதும் மருந்து, பத்தியம் முதலியவற்றால் குணப்படுத்துவதா யிருந்தாலொழிய மற்றப்படிக் கிறிஸ்துவர்கள் ஐரோப்பிய அவுஷத முறையறிந்த வைத்தியர்களிடம் சிகிச்சை பெறுவது நன்று.)

62. கிறிஸ்துவர்கள் தங்களுக் கிருப்பது ஓரேயொரு தெய்வமென்பதை மறந்து, கோவிலில் மெய்யான தெய்வத்தை வணங்கி, வீட்டில் பொய்யான தெய்வத்தைக் கொண்டாடுவது ஒழுங்கல்ல.

63. பில்லி, சூனியம், ஏவல், மந்திர தந்திரம், கழிப்பு, சாந்தி முதலிய பேயாராதனைகளைச் செய்வதும், செய்விப்பதும் ஒழுங்கல்ல. (நல்ல கிறிஸ்துவன்மட்டில் பேய்க்கு அற்பமும் அதிகாரமே கிடையாதென்பதைச் சில கிறிஸ்துவர்கள் மறந்து, பேய் சேஷ்டையாலும் மந்திர தந்திரத்தாலும் தங்களுக்கு அப்படியாயிற்று, இப்படியாயிற்று என்று முறையிடுவார்கள். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம பேய் என்பதுபோல, அப்படிப்பட்டவர்கள் சாதாரணமாய் அக்கியான புத்தியுள்ளவர்கள்; குருட்டுப் பத்தியுள்ளவர்கள்; வெளித் தோற்றத்திற்கு நல்லக் கிறிஸ்துவர்களைப் போல் காணப்படும் வேறு சிலரும் அப்படிச் சொல்வதுமுண்டு. அவர்களுடைய உள் சீவியத்தை விசாரித்துப் பார்த்தால் அவர்களும் அநேகமாய் அக்கியான முறைகளை யநுசரிப்பவர்களே. ஆதலால் சர்வேசுரன் சில சமயங்களில் பேயைக் கொண்டு அவர்களை வாதிப்பதுமுண்டு. நல்ல கிறிஸ்துவர்கள் எவ்விதமாயும் பேயாராதனைகளில் கலவாதிருந்தால், அவர்கள் அற்பமும் பேய்க்குப் பயப்படத் தேவையில்லை. சர்வேசுரனுடைய பிள்ளையிடம் சாத்தானுக்கு என்ன வேலை?)

64. தீட்டு என்பது கிறிஸ்துவனுக்கு முற்றிலும் அர்த்தசார மற்ற வார்த்தையென்பதை மறந்துவிடுவது ஒழுங்கல்ல. (கிறிஸ்துவ போதனையின்படி பாவந்தான் தீட்டு. சாஸ்திரிகள் சாதிக்கிறபடி அழுக்குத்தான் தீட்டு. ஒருவன் சுத்தமுள்ளவனாயிருந்தபோதிலும் ஒன்றைத் தொட்டதினால், ஒரு இடத்திற்குள் பிரவேசித்ததினால், அப்பொருள், அவ்விடம் அசுசியாயிற்றென்பது சுத்த மடப்பேச்சு. இந்துக்களை அக்கியானிகளென்றும் தங்களைக் கியானிகளென்றும் அழைத்துக்கொள்ளும் கிறிஸ்துவர்கள் அவ்வளவு மவுடிகமாயிருப்பது எப்படிப்பட்ட ஒவ்வாமை!.)

65. வெள்ளிக் கிழமைகளில் கலியாணங்கள் நடத்துவது ஒழுங்கல்ல. (அன்னை அவதாரங்கொண்ட ஆண்டவன் நமக்காகக் கொடிய அவமானம் நிறைந்த மரணம் அடைந்த வெள்ளிக்கிழமையை நாம் தப முயற்சியாலும் சுத்த போசனத்தினாலும் கொண்டாட வேண்டுமென்று திருச்சபை கட்டளையிட்டிருக்க, உலக முழுவதும் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு அன்றையத்தினத்தில் கலியாண முதலிய ஆடம்பரங்களை விலக்கியிருக்க, இந்த இந்தியாவில் முதலாய். ஆயிரக் கணக்கான கிறிஸ்துவர்கள் அத்தினத்தில் சகலவித சுபகாரியங்களையும் தள்ளிவைத்திருக்க, தங்களை விவேகிகளென்றும், மேற்குலத்தாரென்றும் பெருமை பாராட்டும் அஞ்ஞான புத்தியுள்ள கிறிஸ்துவர்கள், ஒரே ஒட்டாரமாய், தாலி கட்டினால் அன்றுதான் கட்டவேண்டும் என்று சாதிப்ப

தேன்? அவர்களுக்குக் கிறிஸ்துவ சுத்தியிருந்தால், திருக் குடும்பத்திற்குத் தலைவராகிய அர்ச். சூசைப்பர் நாளாகிய புதன் கிழமையிலும், திருக் குடும்பத்தின் தலைவியாகிய தேவமாதாவின் நாளாகிய சனிக் கிழமையிலும் கலியாணம் நடந்தேறக் கோருவார்கள். ஆனால் அவர்களுக்கு அஞ்ஞான புத்தி யிருப்பதினால்தான், அக்கியானிகள் சிரேஷ்டமாய்க் கொண்டாடும் இலட்சுமி நாளாகிய வெள்ளிக்கிழமையில் விவாகம் செய்வார்கள். அவர்களுக்கு ஆண்டவர் மதிப்பல்ல, ஆனால் அக்கியானிகள் மதிப்புதான் தேவை. நாங்கள் எங்கள் கலியாண விருந்துகளில் மாம்ஸம் சேர்ப்பதில்லை; எல்லாம் மரக்கறி பதார்த்தம் தான் என்று சிலர் தர்க்கமாட வருவார்கள். திருச்சபையின் கருத்தானது, வெள்ளிக்கிழமைகளில் மாம்ஸத்தை மாத்திரமல்ல ஆனால் பொதுவாய்க் கூடியவரைக்கும் சந்தோஷ வைபவங்களையும் தள்ளிவைக்க வேண்டுமென்பதே. கற்றவர்கள், இவ்விஷயங்களிலும், இதைப் போலொத்த வேறு விஷயங்களிலும், தங்கள் வீட்டுப் பெண்டுகளுக்குப் பிரிமணையாயிராமல் தைரியத்துடன் நல்மாதிரிகை காட்டினால், கேவலம் பாமரர்கள் அவர்களைக் கண்டு பாவிக்க ஏதுகரமாயிருக்கும்.)

66. அக்கியானிகளுடைய மூடசாஸ்திரங்களை யநுசரித்தால், அவர்கள் மதிப்பார்க ளென்று நினைப்பது ஒழுங்கல்ல. (முகத்திற் கெதிரில் முகஸ்துதியாய்ப் பேசினாலும், முதுகுக்குப் பின்னால் இதெல்லாம் கிறிஸ்துவர்களுக்கேது; யாவும் பாதிரிகள் செய்யும் பித்தலாட்டமென்று குருக்களை வைவார்கள். மேலும் முன்னிலும் அதிக தைரியங்கொண்டு, அக்கியானத்திலேயே நிலைக்கொள்வார்கள்.)

67. இந்திய வழக்கமென்று கோவிலில் தலைப்பாகை யணிந்திருப்பது ஒழுங்கல்ல. (இக்காலத்தில் எத்தனையோ இந்திய வழக்கங்கள் மாறி, குறைந்து, மறைந்து, ஒழிந்து வருகின்றன. கோவிலுக்குள் தேவநற்கருணையின் சந்நிதியில் பாதரட்சையுடன் போவதில் இல்லாத இந்திய வழக்கம், வெள்ளி சனிக்கிழமைகளில் சுத்த போசனம் மீறுவதில் இல்லாத இந்திய வழக்கம், பிராமணக் கிறிஸ்துவர்கள் மாம்ஸம் சாப்பிடுவதில் இல்லாத இந்திய வழக்கம், இந்துக்கள் விசேஷமாய்ப் பிராமணர்கள் பிரதிமாதத்திலும் அமாவாசை முதலிய விசேஷ தினங்களில் மாம்ஸ இச்சகைளை யடக்கி விரதத்துவம் அநுசரிப்பதுபோல், கிறிஸ்துவர்கள் தபசுகால முதலிய நாட்களில் அங்ஙனம் நடக்கத் தவறுவதில் இல்லாத இந்திய வழக்கம், தபசு காலத்தில் முதலாய்,மாங்கல்லிய ஸ்திரீகள், கட்டுக்கழுத்திகள் பூர்வ வழக்கத்தைத் தள்ளி, மஞ்சள், சந்தனம் பூசிக்கொள்வதிலும், புஷ்பம் சூட்டிக்கொள்வதிலும் இல்லாத இந்தியவழக்கம், கள் குடிப்பவன் கடையன் என்னும் முது மொழியை மீறி, மேற்குலத்தார் முதலாய்க்கள்ளுஞ் சாராயமும் கலந்தடிப்பதில் இல்லாத இந்திய வழக்கம், இது ஒன்றில்தானா வந்து மாட்டிக்கொண்டது. ஆண்டவரால் அபிஷேகம் பெற்ற குருவானவர், தேவ கொலுவின் முன் வெறுஞ் சிரசாய்த்தாழ்ச்சியுடன் தலைவணங்கி என்பாவமே, என்பாவமே, என் பெரும்பாவமே யென்று பிழை தட்டிக்கொண்டிருக்க, பரிசேயக் கிறிஸ்துவன் தன் தலைப்பாகையைக் கழற்றாமல், சப்பணம் போட்டு உட்கார்ந்துகொண்டு, தன் வம்ஸவரிசையின் பெருமையைக் காட்டிக்கொண்டிருப்பது யாருக்குத்தான் சகிக்கும்? உண்மையில் இது ஆங்காரமும் ஜித்துமேயன்றி வேறன்று. நாளைக்கு நம்மை நடுத்தீர்க்கப் போகும் ஆண்டவரிடந்தானா, இந்த ஆங்காரத்தையும் ஜித்தையும் காட்டவேண்டும்!.) மேலும் இவ்விஷயத்தில் வேதம் சொல்லுகிறதாவது "சிரசை மூடிக்கொண்டு செபம் பண்ணுகிற அல்லது புத்திமதி சொல்லுகிற எந்த மனுஷனுந் தன் சிரசைச் சங்கையீனப்படுத்துகிறான்.

புருஷனோ தன் சிரசை மூடிக்கொண்டிருக்கக்கூடாது. ஏனெனில் இவன் சர்வேசுரனுடைய சாயலும் மகிமையுமா யிருக்கிறான். ஆகிலும் யாதாமொருவன் தர்க்கிக்க விரும்பினால், எங்களுக்குள்ளேயும் சர்வேசுரனுடைய திருச்சபைக்குள்ளேயும் அப்படிப்பட்ட வழக்கமில்லை" (1. கொருந்தியர் XI.4,7,16 )என்று அறியக்கடவான்.

68. கிறிஸ்துவர்களுள் உத்தியோகஸ்தர்களா யிருப்பவர்கள் தங்களுக்குச் சு



யுங்காலத்தில் கலியாணம் கொடுக்க வேண்டுமென்று குருக்களைத் தொந்தரிப்பது ஒழுங்கல்ல (பூசை நேரத்தில் ஆகும் கலியாணம்தான் சிரேஷ்டம். கத்தோலிக்கு ராச்சியங்களில் காலையில்தான் கலியாணங் கொடுப்பார்கள்).

69. கர்ம விதியை நம்பும் இந்துக்களைப்போல் கிறிஸ்துவர்கள் "வீண் பிரயாசை யேன்? எல்லாம் சுவாமி சித்தமிருந்தால் சரியாகும்" என்று கை கட்டிக் கொண்டிருப்பது ஒழுங்கல்ல (கர்ம விதியை நம்பும் இந்துக்கள் அப்படிச் செய்கிறதேயில்லை. தனவான்களாகவும், உத்தியோகத்தில் உயரவும், நியாயம் அநியாயம் பாராமல் பேயைப்போல் அலைகிறார்கள். கிறிஸ்துவர்கள் எந்தக் காரியத்திற்கும் கடவுளை முன் வைத்து, கூடியமட்டும் பிரயாசைப்பட்டு, அநுகூலமானால் அவருக்கு ஸ்துதி செலுத்தி, பிரதிகூலமானால் அவர் சித்தம் நமது பாக்கியம் என்பதுதான் கிறிஸ்துவ லட்சணம்.)

70. தானாய் வந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளுவதுபோல், உத்தியோகம் மற்றும்காரியங்களில் முன்னேற்றத்திற்கு ஏதுகரமுண்டாகும்போது, அவைகளை உபயோகித்துக்கொள்ளாமல், "உலகத்தில் என்ன சதம் இருக்கிறது? எல்லாம் மாயை, எல்லாம் வீண்" என்று தபோஞானியைப் போல் பேசுவது ஒழுங்கல்ல. (Ambition: அதாவது விருத்தியடைய வேண்டும், முன்னுக்குப் போகவேண்டும் என்னும் ஆவல் இல்லாத யாரும் விருத்தியடைவது மில்லை. முன்னுக்குப் போவது மில்லை.)

71. கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்னும் சுலோகத்தை வைத்துக்கொண்டு உத்தியோக விருத்தியைக் கெடுத்துக் கொள்வது ஒழுங்கல்ல.

72. தான் போதிக்கும் வேத சத்தியங்களைக் கிறிஸ்துவர்கள் அதி யோக்கியபத்தியாய் விசுவசிக்கவேண்டுமென திருச்சபை சொல்லுவதினால், அவர்கள் எதையும் ஆராய்ந்து பார்க்கக் கூடாதென்று அது விலக்குவதாக நினைப்பது ஒழுங்கல்ல. (மனுஷ புத்தியானது மட்டும் திட்டமுமுள்ள தென்பதை யுணர்ந்து, எதையும் ஆராயவும், அப்படி ஆராய்ந்தும் தன் புத்திக் கெட்டாத சத்தியங்களைத் தாழ்ச்சியுடன் அங்கீகரிக்கவும் வேண்டுமென சொல்லுகிறது. அதுவே விசுவாசம். மற்றபடி புத்திக் கெட்டினதை மாத்திரம் நம்பினால் அதில் விசுவாசம் எங்கே இருக்கிறது?)

73. திருச்சபையால் அங்கீகரிக்கப்படாத கல்லறையில் புதுமை நடப்பதாகச் சொல்லி பொருத்தனை வேண்டுதல் நடத்துவது ஒழுங்கல்ல.

74. புரொட்டெஸ்டாண்டாரோடு புழங்கி வரும் விவேக மில்லாத கிறிஸ்துவர்கள் தங்களை ரோமான் காரரென்றும், பாப்பு மார்க்கத்தாரென்றும் அழைத்துக் கொள்வது ஒழுங்கல்ல. (இப் பெயர்கள் புரொட்டெஸ்டாண்டார் உபயோகிக்கும் ஏளனப் பெயர்களென் றறியவும்.)

75. கிறிஸ்துவ பிச்சைக்காரர்கள், புறமதஸ்தர் முன், தாங்கள் தரித்திருக்கும் சுரூபம், ஜெபமாலைகளை ஒளித்துக் கொள்வதும், அக்கியான பாடல்களைப் பாடுவதும், அக்கியானிகளைப் போல் நடப்பதும் ஒழுங்கல்ல.

76. பன்றியோடு கூடிய கன்றும் மலம் தின்பதுபோல், அக்கியானிகளோடு சேர்ந்துழைக்கும் கிறிஸ்துவர்கள், அவர்களைப் போல் அக்கிரம காரியங்களில் பிரவேசிப்பது ஒழுங்கல்ல. (எல்லா விஷயங்களிலும் யதார்த்தத்தோடும், விவேகத்தோடும், பிற சிநேகத்தோடும் நடப்பது அவசியம்.)

77. கத்தோலிக்கு வேதத்தின் பேரில் வருணிப்பு:—ஓ! கத்தோலிக் சபையே! சேசுநாதரால் மலைமேல் கட்டப்பட்ட சிறந்த பட்டணமே! உன் கோட்டை மதில்கள் மகா பலம் உள்ளன. சர்வ வல்லப சர்வேசுரனே உன்னைத் தாங்கி இருக்கிறார். உன் சத்துருக்களும், உன் விரோதிகளும், படைபோல் திரண்டு அணி அணியாய்ப் பிரிந்து உன்னை எதிர்த்துத் தாக்க எழுந்து வந்தாலும், நரகமே தன்னிடமுள்ள பசாசுக்களை யெல்லாம் உன்மேல் ஏவி விட்டாலும் நீ அஞ்சமாட்டாய். உன் சத்துருக்களே வெருண்டு மருண்டு கீழே உருண்டு விழுவார்கள். நீயோ வெற்றி முடி சூடி ஜெய வீர அரசியாய் உலகத்தின் ஈறுந்த நாள்

மட்டும், மாறுமலும் குறையாமலும், சமாசமுள்ள நிலையில் தங்கி, மனிதருக்கெல்லாம் இரக்ஷண்யங் கொடுக்கும் பொதுத்தாயாய் இருந்து வாழ்வாய். நீ யாருக்குத் தாய் அல்லவோ, அவனுக்குச் சர்வேசுரன் பிதா அல்ல. யார் உன் வார்த்தையை மதிக்கிறதில்லையோ அவன் சர்வேசுரன் வார்த்தையையே மதிக்கிறதில்லை. யார் உன்னைப் பழிக்கிறானோ அவன் சர்வேசுரனையே பழிக்கிறான். யார் உன் தேவ ஆளுகைக்குள் வாழ்கிறதில்லையோ அவன் மோக்ஷத்தின் நித்திய பாக்கியத்தில் வாழமாட்டான்.

ஓ! கத்தோலிக்குச் சபையே! இரட்சண்யத்தின் தாயே! உன் செல்வப் பிள்ளைகள் உன்னைச் சூழ்ந்து உனக்கு முடியாய் வானத்தின் நட்சத்திரங்களைப்போல் பிரகாசிக்கிறார்கள். பிதாபிதாக்களும், தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலரும், வேத சாட்சிகளும், பரிசுத்த புண்யவான்களும், கன்னிகா மங்கைகளும், ஆயிரம், பதினாயிரம், லட்சம், கோடாகோடி பேர்கள் உன் கையில் வளர்ந்து, உன் பராமரிப்பில் நடந்து, இப்போது மோக்ஷத்தில் நன்றி உள்ளவர்களாய் உன்னை வாழ்த்திப் புகழ்ந்து மங்களம் பாடுகிறார்கள்.

ஓ! கத்தோலிக்குச் சபையே! என் அன்புள்ள தாயே! நான் பிறந்த நாளில் நீதான் என்னை உன் கையில் ஏந்தி ஞானஸ்நானத்தின் அற்புத தீர்த்தத்தால் என்னைக் கழுவி சர்வேசுரனுக்குப் பிள்ளையாகச் செய்தாய். நான் பாவத்தைச் செய்து அசுத்தமானபோது நீதான் என்மேல் சேசுநாதருடைய பரிசுத்த இரத்தத்தை ஊற்றிக் கழுவிச் சுத்தஞ் செய்தாய். என் பாலப் பிராயமுதல் இதுமட்டும் எனக்குத் தேவாமிர்தமான போஜனத்தை நீதான் கொடுத்து என்னைப் போஷித்து வளர்த்தாய். நான் சாகும்போதும் நீ தான் என்னை உன் கையில் ஏந்தி அணைத்து அர்ச்சிப்பாய்.

ஓ! கத்தோலிக்குச் சபையே! ஏகத்வம், உன் சுபாவ இலக்ஷணம். பரிசுத்தம், உன் தூய அற்புத இராஜபோர்வை. கத்தோலிக்கு என்கிற சமஸ்த ஸ்தல வியாபகம் உன் மகத்துவ சிங்கார மேன்மை. அப்போஸ்தலர் காலமுதல் விடாத தொடர்பு, உன் தெய்வீக வம்ஸ வரிசையின் உற்பத்தி. ஆ! என் செல்வத்தாயே! உன்னை நான் என்றும் வாழ்த்துவேன். உன் புகழை என்றும் நான் பாடுவேன். உன் பெயரை எல்லா ஜாதி ஜனங்களும் அறிந்து, உன்னைத் தேடிவந்து, உன் பிள்ளைகளாகும் பாக்கியம் பெற்று இரக்ஷண்யம் அடைய என் உடலில் உயிர் இருக்குமட்டும் ஓயாமல் நான் உழைப்பேன். ஓ! என் இனிய தாயே! உன்னை நான் மறப்பேனாகில் என் வலது கையையே நான் மறந்துபோவேனாக. உன் புகழை என் நா சொல்லாவிடில் அது மேல்வாயோடு ஒட்டிக் கொள்ளக் கடவதாக. உன்னை என் இருதயம் சிநேகியாவிட்டால் அது சுருங்கி வதங்கி வரண்டு வாடி மடியக் கடவது.

குறிப்பு:--இவ்வதிகாரத்தில், உபயோகிக்கப்பட்ட மேற்குலத்தார், கீழ்குலத்தார், உயர்ந்த ஜாதியார், தாழ்ந்த ஜாதியார் என்னும் வார்த்தைகள் யாரையும் உயர்த்திக்காட்ட, அல்லது தாழ்த்திப் பேச உபயோகிக்கப்படாமல், சத்திய கிறிஸ்துவர்களுள் நிர்ப்பாக்கியமாய் இன்னம் நடை பெற்றுவரும் அக்கியான வழக்கப்படி, ஒரு வகுப்பாரை மற்றொரு வகுப்பாரிடமிருந்து பிரித்துக்காட்ட உபயோகிக்கப்பட்ட வார்த்தைகளென்றறியவும்.

(தொடரும்.)

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர். ப—ர்.]

### நமது பரிசுத்த பிதாவும் ஐரோப்பிய யுத்தமும்.

சங்கைக்குரிய பத்திராதிபரே,

தற்காலம் நிகழ்ந்துவரும் ஐரோப்பிய மகாயுத்த விஷயமாய் அர்ச். பாப்பானவரைப்பற்றி சில பத்திரிகைகளில் நான் வாசித்தவைகளை "நல்லாயன்" நேயர்களும் அறிந்துகொள்ளுமாறு, சுருக்கமாய் வரையும் இக்கடிதத்தை ஷை பத்திரிகையினோர் கோணத்தில் பிரசுரிக்கக் கோருகிறேன்.



சற்றேறக்குறைய 17-வருடங்களுக்கு முன் உலகம் இனி யுத்தங்களால் சீர் குலையாமல் சதா சமாதானத்திற் குடிகொண்டிருக்கும்படி சில ஏற்பாடுகள் செய்ய, உலகத்தின் எண் திசைகளிலுமிருந்து மன்னர்களும், மந்திரி பிரதானிகளும், ஸ்தானாபதிகளும் ஹேக்பட்டணத்தில் ஒருங்குகூடியிருக்குங்கால், பதிதரும் பிரிவினைக்காரருமான ஜெர்மன், ருஷிய சக்கரவர்த்திகள் இது விஷயத்தில் அர்ச். பாப்பானவருடைய ஆலோசனையையும் அபிப்பிராயத்தையும் கேட்பது உத்தமமென்றதற்குச் சிலர் ஆக்ஷேபிக்க, அர்ச். பாப்பானவருடைய சம்பந்தமொன்றுமின்றியே ஷை சங்கங் கூடி முடிவுபெற்றது. ஆனால் சர்வேசுரனுடைய ஸ்தானாபதியாகிய அர்ச். பாப்புவின் சம்பந்தமில்லாமல் நடைபெற்ற இச்சங்கத்தின் நோக்கமும் கருத்தும் சித்திபெற்றதோ? பரிச்சேதமுமில்லை. அதேனென்றால், ஷை சங்கங் கூடியபின் நடந்த திரிப்பொலி, பால்கன், இத்தலி-துருக்கி யுத்தங்களும், நிகழும் ஐரோப்பிய மகாக் கொடிய யுத்தமும் இதற்கு அத்தாட்சி.

மேற்கூறின ஹேக் சங்கத்தினின்று அர்ச். பாப்பானவரை நீக்கக் காரணமாயிருந்த தேசங்கள் முதலாய்த் தற்போது இவர் ஒருவரே இப்பயங்கரமான யுத்தத்தினால் சீர்குலையும் ஐரோப்பாவை இரட்சிக்க வல்லவரென்று நன்குணர்ந்து, வத்திக்கான் அரண்மனையின் ஆதரவையும், அடைக்கலத்தையும் தேடுகின்றன. மேலும் ஒருபோதும் வத்திக்கான் அரண்மனைக்குத் தங்களுடைய ஸ்தானாபதிகளை அனுப்பாத தேசங்களும் தங்கள் சுயநலத்தை நாடி ஸ்தானாபதிகளை அவ்விடத்திற்குத் தீவிரமாய் அனுப்புகின்றன.

ஆனால், சத்திய திருச்சபையின் சத்துராதிகளிற் சிலர், சீரும் செல்வாக்கும் மேன்மேலும் சிறந்து விளங்குகிற அர்ச். பாப்பு அவர்களின் பேரில் பொறாமை கொண்டு, இந்த யுத்த விஷயமாக அவர் கூறியுள்ள சிலவற்றை விபரீத அருத்தப்படுத்தி, அவரிடத்தில் ஜனங்களுக்குள்ள அபிமானத்தையும் நம்பிக்கையையும் தளரச் செய்ய பின்வருமாறு குறை கூறுகிறார்கள்.

இலட்சக் கணக்கான ஜெர்மனியர்களுக்கு, போஜன பதார்த்தங்கள் கிட்டாதபடி ஆங்கிலேயர் அவற்றின் போக்குவரத்துக்களை யெல்லாம் அடைத்து, அவர்களைப் பசியால் வருந்திசாகச் செய்கிறார்களென்று அர்ச். பாப்பானவர் முறையிட்டாரென்றும், அமெரிக்கா ஐக்கிய மாகாணங்கள் நம்முடைய நேசப்படைகளுக்கு யுத்தத் தளவாடங்களை யனுப்பி உதவி செய்கின்றனவென்றும், இத்தலி விஷயமாக ஒரு பக்கத்தில் அது யுத்தத்தில் கைகலந்ததற்கு அவரும் உடன்பட்டு, யுத்த செலவுக்காக 4,000 பவுன் உதவி செய்தாரென்றும், மற்றொரு பக்கத்தில் அவருடைய சுயதேசமாகிய இத்தலியை மற்றவைகளைவிட அதிகமாய் நேசிக்கிறபடியால் அதற்கும் இந்த யுத்த இரத்தப்பிரளயம் பரவிவிட்டதென்று வெகு துயரப்பட்டு யுத்த நிவாரண நிதிக்கு 40,000 பவுன் உபகரித்திருக்கிறாரென்றும், விசுவாச சத்தியங்கள், நல்லொழுக்கம் இவைகளில் தமக்குத் தவறுவரமுண்டென்று சொல்லுகிறவர், இக்கொடிய யுத்தத்தை நிறுத்த யாதொரு வழிப்பாடுஞ் செய்யாமல் மௌனமாயிருக்கிறாரென்றும், ஆஸ்திரிய தேசத்துச் சக்கரவர்த்தியின் பாதுகாப்பிலிருந்துகொண்டு திருச்சபையை ஆண்டுவருகிறதினால், ஜெர்மனியருடைய நிஷ்டூரங்களைக் கண்டியாது பராமுகமாயிருக்கிறாரென்றும் இப்படிப் பலவாறாகச் சிலர் அர்ச். பாப்பானவருடைய நிலைமையையும் பதவியையும் சரியாய்க் கண்டறியாது, தங்களுடைய அறியாமையினாலும் குருட்டாட்டத்தினாலும் அவர்மீது புறணி கூறுகிறார்கள்.

ஆனால், ஆங்கிலேயர் தங்கள் கப்பற்படைகளைக் கொண்டு ஜெர்மனியர்களுக்கு ஆகாரங் கிடைக்காமற் செய்து, அவர்களை உயிர்வதை செய்கிறார்களென்று அர்ச். பாப்பானவர் ஒருபோதும் சொன்னவரல்ல. "லிபர்த்தே" என்ற பிராஞ்சு பத்திரிகையின் நிருபர் ஒருவர், அர்ச். பாப்பானவருடைய பேட்டி பெற்றுத் திரும்பிய பின்னர், ஷை பேட்டியில் தனக்கும் பாப்பானவருக்கும் யுத்தவிஷயமாய் நடந்த சம்பாஷணையைப்பற்றி வெளியிட்டதில், நடந்ததை நடந்தபடி சொல்லாது, கூட்டியும் பெருக்கியும் சொல்லியவற்றுள் மேற்கூறியது ஒன்றாகும். அமெரிக்கா பத்திரிகாசிரியர் ஒருவருக்கு அர்ச். பாப்பானவர் பேட்டி கொடுக்கையில், இந்த நிஷ்டூர யுத்தமொழிந்து ஐரோப்பாவில் சமாதானமுண்டாக, தாம் இடைவிடாது சர்வேசுரனை மன்றாடுகிறதாகவும், சமாதான விஷயமாய் யார் தலையிட்டுக் கொள்ளுகிறார்களோ அவர்களுடன் தாமும் கலந்து உழைக்க ஆவலுடன் காத்திருக்கிறதாகவும் தெரிவித்தாரே யொழிய, அமெ

ரிக்கா ஐக்கிய மாகாணங்கள் மீது அவர் யாதொரு குறையும் கூறினவரல்ல. ஆஸ்திரேலியாவின் அப்போஸ்தலிக் ஸ்தானாபதியாகிய மிகவும் வந்திக்கத்தக்க "செரற்றி" (Mgr. Ceretti) அதிமேற்றிராணியார், நமது பரிசுத்த தந்தை இத்தலிக்கு பணவுதவி செய்ததாகப் பிறந்திருக்கிற பிரஸ்தாபம் நம்பத்தக்கதல்ல வென்று உறுதியாய்ச் சொல்லுகிறார். மேலும், இத்தலியும் இப்போது யுத்தத்தில் சேர்ந்திருப்பதனால் தம்முடைய அப்போஸ்தோலிக்கு ஸ்தானத்துக்குரிய கடமைகளை ரோமாபுரியி லிருந்து சரிவர நிறைவேற்றிவர தமக்கு இடையூறு யிருப்பதைப்பற்றி அர்ச். பாப்பானவர் விசனமுற்றிருக்கையில், இத்தலி யுத்தத்திற் கலப்பதற்கு அவர் சம்மதித்திருப்பாரென்று சொல்லுவது மதியீனம். மேலும் அர்ச். பாப்பு யாதொரு தேச அரசரின் அநுசரணையி லிருந்து திருச்சபையை யாண்டுவருகிறவரல்ல. இராஜாதி இராஜனாகிய சேசுக்கிறிஸ்துநாதருடைய உதவியல்லாது வேறொருவருடைய தயவு அவருக் கனாவசியம். அவர் ஆஸ்திரிய சக்கரவர்த்திக்குப் பயந்து, ஜெர்மனியர் இந்த யுத்தத்தில் செய்துவருகிற அக்கிரமங்களைக் கண்டியாது மௌனமா யிருக்கிறாரென்று பிதற்றுவது ஞாயமல்ல.

இக்கொடிய யுத்தத்தில் நேரும் அக்கிரமங்கள் நமது நேச பிதாவுக்கு அதிக மனோவியாகுலத்தை உண்டாக்குகின்றன வென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால், இப்போது அவர் கேள்விப்படுகிற அக்கிரமங்கள் மெய்யோ பொய்யோ வென்று விசாரிக்கவும், தடுக்கவும், அப்படிச் செய்கிறவர்களைக் கண்டிக்கவும் கூடாத நிலைமையிலிருக்கிறார்.

மேலும், இந்த யுத்தத்தில் அர்ச். பாப்பானவர் ஒரு கட்சியிலும் சேராமல் நடுநிலைமையி லிருப்பது அவர் வகித்திருக்கும் ஸ்தானத்தைப் பொருத்ததே. சத்திய திருச்சபையில் சேர்ந்திருக்கிற சகல ஜாதிஜனங்களுக்கும் அவர் ஞானப்பிதா. தற்காலம் யோர்க்களத்திலிருக்கிற இங்கிலீஷ், பிரான்சு, இத்தாலிய, பெல்ஜிய கத்தோலிக்கருக்கும், ஆஸ்திரிய, ஜெர்மனிய கத்தோலிக்கருக்கும், அவரே பொதுவான ஞானத் தந்தையல்லவா? அவர் சத்திய திருச்சபைக்குத் தலைவரா யிருந்து, சகல கிறிஸ்துவர்கள் மட்டிலும் தமக்குள்ள கடமைகளைச் சரிவர நிறைவேற்றுதற்கு அவர் ஒரு கட்சியிலும் சேராது மத்தியஸ்தரா யிருத்தல் அத்தியாவசியம். இந்த யுத்தத் துவக்கத்தில் ஆஸ்திரிய சக்கரவர்த்தி தமது சேனைகளை யாசீர்வதிக்க, காலஞ்சென்ற நமது நேச பாப்புவாகிய பத்தாம் பத்திநாதரைக் கேட்டதற்கு, "நாம் சமாதானத்தை ஆசீர்வதிக்கிறோமே யல்லாது உமது சேனைகளை ஆசீர்வதியோம்" என்று சொன்னது நமக்குத் தெரிந்த விஷயம். அது முதல் நாளது வரையில் அர்ச். பாப்பு நடுநிலைமையி லிருக்கிறபடியால், தான் போர்முனையில் வெகுவாய்க் காயப்பட்டு அவரவர்களுடைய எதிரிகள் கையில் அகப்பட்டிருக்கும் யுத்த வீரர்களுக்காகப் பரிந்து பேசி, அவர்களை மீட்டு அவரவர்கள் தேசத்துக்குத் திரும்பிப்போகச் செய்யமுக்கிய தூண்டுகோலா யிருந்தார்.

திராட்சைக் குலைக்காக ஆனமட்டும் எட்டி எட்டிப்பார்த்தும் தனக்கு அது எட்டாததினால் "சீ அது புளிக்கும்" என்று சொல்லி ஏமாந்து போன நரியைப்போல, அர்ச். பாப்பானவர் தங்கள் தங்கள் கட்சியில் சேரும்படி இருதிறத்தவரும் பிரயாசைப்பட்டும் அவர் எல்லோருக்கும் பொதுவரா யிருக்கிறாரென்று அவர்பேரில் இப்பேர்ப்பட்ட பழிச் சொற்களையும், இழிச் சொற்களையும் கூறி வருகிறார்கள்.

நல்லாயன் நண்பர்களே! சமாதானத்துக்காகச் சதா சர்வேசுரனை மன்றாடி வருகிறவரும், அப்படியே நம்மெல்லோரையும் வேண்டிக்கொள்ளத் தூண்டிவருகிறவருமாகிய நமது பரிசுத்த பிதாவாகிய அர்ச். பாப்பானவரை, நல்லாயனான சேசுநாதர் தமது திரு இருதயத்தோடு சேர்த்து அரவணைத்து, அவருக்குப் பலமும் ஆதரவுமா யிருக்க நாம் இடைவிடாது மன்றாடி வருவோமாக!

சென்னை,<br>20—7—15. }

இப்படிக்கு,<br>A. B.

---

## கண்டியில் குருப்பட்டம் பெற்ற பரதகுலக் குருக்களுக்கு உபசரணை

இலங்கையில் கண்டிமாநகரின் கண்ணேயுள் ஈசுவர சிருஷ்டியின் மகிமையினையும் இயற்கை வனப்புகளின் பெருமையினையும் தந்து, அற்புதமான தோற்றத்தோடு நேத்ரானந்தத்தைக் கொடுக்கும் மலைக் கூட்டங்களின் மத்தியில் நடுநாயகமாய் விளங்கும் அர்ச். பாப்புவின் குருமடத்தில் படித்து அப்போதைக் கப்போது குருப்பட்டம் பெறும் பரதகுலக் குருக்களின் முதல் பூசை காணுதலும், அவர்களை முதலாவதாக உபசரணை செய்து வழிவயனுப்புவதும் கண்டியில் வியாபாரம் செய்யும் பரத குலத்தாரின் சுதந்தரமாயிருந்து வருவதற்கொப்ப, கடந்த மாதம் 29-ம் தேதி மிகவும் வந்திக்கத்தக்க பெக்மீயர் ஆண்டவர் கையால் கண்டியில் குருப்பட்டம் பெற்ற (23) இந்தியக் குருக்களில் பரத குலத்தவர்களான தூத்துக்குடி கனம். அம்புரோஸ் மிசியேர் ஸ்வாமிகளையும், தூத்துக்குடியில் மிகவும் புகழ்பெற்ற கனவானாய் விளங்கிய ரோச் விக்டோரியா அவர்களின் பௌத்திரரும் மகத்துவம் பொருந்திய சேசுசபைக் குருக்களிலொருவரும், திருச்சினாப்பள்ளி உலக இரட்சகர் கோவில் பங்கு விசாரணைக் குருவுமான கனம்-T. ரோச் ஸ்வாமிகளின் சகோதரருமான, கனம். கஸ்பார் ரோச் ஸ்வாமிகளையும் கண்டியில் வசிக்கும் பரதகுலத்தார் கடந்த மாதம் 30-ம் தேதி உபசரணை செய்து வழியனுப்பியது மிகவும் கொண்டாடத் தக்கதே. மேற்சொன்ன குருக்களில் கனம் அம்புரோஸ் மிசியேர் ஸ்வாமிகள் 30-ம் தேதி காலை 6½-மணிக்கு கண்டி மேற்றிராசனக் கோவிலில் தமது முதல் பூசை செய்து முடித்ததும், கனம் கஸ்பார் ரோச் சுவாமிகள் தமது முதல் பூசையாக, மிகவும் வந்திக்கத்தக்க பெக்மீயர் ஆண்டவ ரவர்கள் கண்டி மேற்றிராணியாராக அபிஷேக மடைந்த 3வது வருஷக் கொண்டாட்டத் தினத்தின் பாட்டுப் பூசையைக் காலை 7-மணிக்கு ஆரம்பித்து முடித்தார். பூசைக்குப் பின்னால் இரு குருப்பிரசாதிகளோடு கண்டி மேற்றிராணியாண்டவ ரவர்களும் பரத குலத்தாரு முள்பட போட்டோப் படம் பிடிக்கப்பட்டன. அதற்கப்பால் இரு குருப்பிரசாதிகளும் சென்ற-அலேசியுஸ் சபைக் கட்டிடத்திற்குச் சென்று அங்கு மாலையிடப் பெற்றவர்களாய் ஆசனத் தமர்ந்ததும் கண்டி பரதகுலத்தார் தங்களின் ஞாபகார்த்தமாக இரு "மீசால்" புத்தகங்களை இரு குருப்பிரசாதிகளுக்கும் சமர்ப்பித்ததோடு, ஓர் உபசரணைப் பத்திரமும் வாசித்துக் கொடுத்தார்கள். இவ்வுபசரணைகளைப் பெற்ற இரு குருக்களும் கண்டியில் வசிக்கும் தங்கள் குலத்தார் தங்களுக்குச் செய்த உபசரணையைத் தாங்கள் பெரிதும் பாராட்டுவதாகவும், தாங்கள் எங்கு சென்றபோதிலும் கண்டியில் வசிக்கும் பரத குலத்தாரை மறவாமல் அவர்களின் ஆத்தும சரீர நன்மைக்காகவும், வியாபார க்ஷேமத்திற்காகவும் மன்றாடுவதாகவுங் கூறி, அங்கு கூடி யிருந்தவர்களை ஆசீர்வதித்து மற்றும் நாள் பகல் கண்டியை விட்டுக் கொழும்பு மார்க்கமாகத் தூத்துக்குடிக்குப் பயணமானார்கள். ஆண்டவருடைய திராட்சத் தோட்டத்தில் உழைக்கும்படியாகப் புதிதாகத் தெரிந்துகொள்ளப்பட்ட மேற்சொன்ன இரு குருக்களுக்கும் வேண்டிய, சுக, பெல, தீர்க்காயுளைக் கட்டளையிட்டு அவர்களால் அனேக ஆத்துமங்கள் இரட்சணிய மடையக் கிருபை செய்யும்படியாக ஜெகத் கருணாநிதியாகிய ஜேசுபரனை மன்றாடுகிறேன்.

கண்டி.<br>20—7—15 }

ஜேசுதாசன்.

---

## சேசுநாதருடைய திரு இருதயத் திருநாள்.

செங்கல்பட்டு ஜில்லா, சைதாப்பேட்டை தாலூக்காவிலே வளர்புரம் என்னும் கிராமமொன்றுளது. அந்தக் கிராமத்தில் சேசுநாதருடைய திரு இருதயத்தின் பேரால் ஒரு பெரிய ஆலயம் சமீபகாலத்தில் கட்டி முடிவாயிற்று. அவ்வாலயத்தில் சென்ற ஜூன் மாதம் 20-தேதி ஞாயிற்றுக்கிழமை திரு இருதய உற்சவத்தின் நவநாள் ஆரம்பிக்கப்பட்டு சாயந்திரம் 6-மணிக்கு ஷை திரு இருதயக் கொடி மந்திரிக்கப் பெற்று ஆரோகணஞ் செய்யப்பட்டது. உடனே திவ்விய நற்கருணை ஆசீர்வாதமுங் கொடுக்கப்பட்டது. மறுநாள் முதல் பிரதி தினமும் காலையில் திவ்ய பூசையும் மாலையில் திரு இருதய ஜெபங்களும் திரு இருதய சுரூபாசீர்வாதமும் நடந்தேறின.

ஜூன் மாதம் 28உ திங்கட்கிழமை காலை 8-மணிக்கு ஷையூர் விசாரணை குரு ராஜரிஷி J. V. D. Besselar அவர்களால் பெரிய பாட்டுப் பூசை செய்யப்பட்டது. பிறகு இராத்திரி 6½ மணிக்குத் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டு 11½-மணிக்குப் புஷ்பங்களால் வெகு அலங்காரமாய் ஜோடிக்கப்பட்ட நாலு தேர்கள், தீவட்டி, மத்தாப்பு, பாணவேடிக்கை, அவுட்டுகளுடன் ஊர்வலம் வருகையில், வீதிகளில் அலங்கரிக்கப்பட்டிருந்த வேத விசித்திரப் பூப்பந்தல்களில் சுற்றுப்பிரகாரம் நிறுத்தப்பட்டுக் கீர்த்தனைகள் பாடப்பட 3-மணிக்குச் சுற்றுப்பிரகாரம் திரும்பி கோவில்

அடைந்தது. மறுநாள் 29௳ காலையிலும் ஷை யூர் விசாரணை குரு சுவாமியாரால் பெரிய பாட்டுப் பூசை செய்யப்பட்டது. பூசை முடிந்தபின் கோவிலைச் சுற்றி ஷை தேர்கள் எழுந்தேற்றமாய்க் கொண்டுவரப்பட்டன. சேசுநாதருடைய திரு இருதயம் என்றென்றைக்கும் எவ்விடத்திலும் புகழப்படக்கடவதாக.

வளர்புரம். } இப்படிக்கு.
5-7-15 } P. Inniah Naidu.

---

## MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாச்சாரம்

---

பம்பாயில் மோடார் வண்டிகள்:—1910-ம் வருஷத்தில் பம்பாய் நகரத்தில் 1015 மோடார் வண்டிகளிருந்தன. 1914-ம் வருஷத்திலோ 2193 வண்டிகளிருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

மனிதர்களுடைய நாக்கு.—மனிதர்களுடைய நாக்கில் ருசி யறியும் பாகங்கள் மூன்றிருக்கின்றன. நுனிப்பாகம் புளிப்பு ருசியை நன்றாய் அறிந்துகொள்ளும். மத்திய பாகத்தில் தித்திப்பும் கசப்பும் தெரிகின்றன. மாமிசம், எண்ணெய்கள், வெண்ணெய் இவைகளினுடைய உருசி நாக்கின் அடிபாகத்தில் தெரிகிறது.

இந்தியன் சிவீல் ஸர்விஸ்:--இந்தியன் ஸிவில் ஸ்ர்விஸ் உத்தியோகத்தில் அமருவதற்காக இங்கிலாண்டில் போட்டிப் பரீக்ஷை பிரதிவருஷத்திலும் நடத்தப்படுவது வழக்கம். அதுபோல இவ்வருஷ இந்தியன் ஸிவில் ஸர்விஸ் நியமனங்களுக்காக போட்டிப்பரீக்ஷைகளுக்கு முன் வரக்கூடியவர்கள் பன்னிரண்டு பேர்களுக்கு அதிகப்படக்கூடாதென்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக 'இந்திய' வெனும் பத்திரிகை அறிவிக்கின்றது.

விவாகத்தினால் நேர்ந்த தற்கொலை:—கல்கத்தாவில 16 வயதுள்ள ஒரு வங்காளச் சிறுமி, சரிசமமில்லாத 50 வயதுள்ள ஒருவனுக்கு தன்னை விவாகம் செய்து கொடுத்ததற்காக மனந்தாளாமல் அபினியை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டதாகச் சமாசார மெட்டுகிறது. என்னே பரிதாபம்! நமது சென்னை இராஜதானியில் அநேகர் தமது அருமைக் குழந்தைகளைப் பணத்துக்காகவும், ஆபரணத்துக்காகவும் கிழவர்களுக்கு மணம் செய்து கொடுத்துவருகிறார்கள். இவ்வழக்கத்தினால் நேரும் பொல்லாப்புகள் பல.

மோட்டார் வண்டியின் வேகம்:—மோட்டார்வண்டி பந்தயமொன்று சில நாளைக்கு முன் அமெரிக்காவிலுள்ள உட்டாவென்னுமிடத்தில் நடந்தேறினதென்றும், அதில் பந்தயங் கெலித்தவர் தமது மோட்டார் வண்டியை மணியொன்றுக்கு 134 மைல் ஓடும் வேகத்தோடு செலுத்தினாரென்றும், இதிலும் அதிக வேகமாய்ச் செலுத்தத் தம்மால் கூடுமென்று அவர் சொன்னாரென்றும் கேள்விப்படுகிறோம். இது வரையில் இவ்வளவு வேகமாய் வேறு யாரும் மோட்டார் வண்டியைச் செலுத்தினதில்லையாம்.

ஒரு எச்சரிக்கை:—சில தினங்களுக்கு முன் அலெப்பென்ற ஊரில் சுமார் ரூ-150 பெறுமான நகைகளை ஆறுவயதுள்ள தன் பேரனுக்கு இட்டு, பாட்டியார் கோவிலுக்கு அவனை அழைத்துச் சென்றாள். கோவிலிலிருந்து வீட்டுக்கு வரும் வரையில் அவள் தன் பேரனை நினைத்தவளுமல்ல; அவனைத் தேடினவளுமல்ல. கடைசியாய் அவனைத் தேடிக்கொண்டு நாலா பக்கங்களிலும் அலைந்தார்கள். பையன் அகப்பட்டபாடில்லை. மூன்றும்நாள் சமுத்திரக்கரையில் குழந்தையின் பிரேதம் அகப்பட்டது. தேகமெல்லாம் ஏககாயமாய்க் கொத்திக் குதறியிருந்தது. நகையென்ன வாயிற்றென்று சொல்லவும் வேண்டுமோ? குழந்தைகளுக்கு நகையிட்டுக் களிப்போருக்கு இது ஒரு எச்சரிக்கை.

ஜர்மனிய மாதர்கள்:-ஜர்மனி தேசத்தின் தலைநகரான பர்லின் பட்டணத்தில் ஸ்திரீகளை ஆயுதபாணிகளாக்கும் விஷயத்தைக் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. இதற்குள்ளாகவே இருபது வயதுக்கு மேற்பட்டும் 30—வயதுக்குட்பட்டுமுள்ள சற்றேறக்குறைய இருபதினாயிரம் பெண்மணிகள் துப்பாக்கிப் பயிற்சியடைவதற்காகச் சேர்ந்து போர்புரிய முன்வந்திருக்கிறார்கள். தற்போதைய நிலைமைப் பிரகாரம் பெண்கள் ரணரங்கத்திற்கு ஆயுதபாணிகளாக முன் வருவது ஒரு பிரமாதமல்ல; ஏனென்றால் பண்டை காலத்தில் துருப்புகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லுவதென்றால் சிரமம். இப்போதோ நல்ல ரஸ்தாக்களும் இருப்புப் பாதைகளும் வண்டிகளும் தற்கால நவீனங்களிலொன்றாகிய ஆகாயவிமானங்களுமிருக்கின்றன. பண்டை காலத்தில் ஸ்திரீகள் சண்டைகளில் கைகலந்திருக்கிறார்களென்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோமென்றாலும் இக்காலத்திய ஸ்திரீகள் போல தமது உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் யுத்தத்துக்கே அர்ப்பணஞ் செய்து, தாங்களே ஒரு ஸ்திரீ சைந்நியந் திரட்டிப் போர்புரிந்திருப்பதாக யாம் கேள்விப்பட்டதில்லை.

ஓர் கலியாண ஞாபகச் சின்னம்:—விக்டோரியா மகாராணியின் சிரேஷ்ட குமாரத்தி, தற்போதைய ஜெர்மன் சக்கரவர்த்தியின் தாய். இவர் ஷை சக்கரவர்த்தியின் தந்தையாகிய பிரெடெரிக் மன்னனை விவாகம் செய்யும்போது, ஆங்கிலேயர் சொல்லவொண்ணா சந்தோஷங் கொண்டாடி, ஷை விவாகத்தின் ஞாபகமாக பான்பரி பட்டணத்துச் சிலுவையில், மகாராணியார் மருமகப்பிள்ளையின் வமிச சின்னமாகிய கரும்பருந்தின் உருவமொன்றைச் செதுக்கினார்கள். இப்போது நடக்கும் யுத்தத்தில் ஜெர்மனியர் செய்துவரும் நிஷ்டூரங்களால் அவர்கள்மேல் வெறுப்புற்று ஷை கலியான ஞாபகச் சின்னத்தை அழித்துப்போட அப்பட்டணத்தார் தீர்மானஞ் செய்திருக்கிறார்களாம்.

கண்டியில் குருப்பட்டம்:—சென்ற ஜூன்மாதம் 29-ம் தேதி அர்ச். இராயப்பர் சின்னப்பர் திருநாளன்று அர்ச். பாப்பவர்களால் கண்டியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் செமினெரியில் குருப்பட்டத்துக்காகப் படித்து வந்தவர்களில் 23 பேர்களுக்குக் குருப்பட்டம் அளிக்கப்பட்டது. இவர்களில சீரிய சபையைச் சேர்ந்தோர் பதிமூன்றுபேர்; ஓரேயொருவர் வட இந்தியாவிலுள்ள பெற்றைய மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர். மற்றுமுள்ளவர்களில் ஐவர் திருச்சூருக்கும், ஐவர் கொல்லத்துக்கும், சங்கனாச் சேரிக்கு நான்குபேரும், திருச்சிராப் பள்ளிக்கு மூவரும், எர்ணாகுளத்துக்கு மூவரும், கோட்டையத்துக்கு ஒருவரும், கும்பகோணத்துக்கு ஒருவருமாகத் தங்கள் தங்கள் மேற்றிராசனம் போய்ச் சேர்ந்தார்கள். ஆண்டவருடைய திராக்ஷத்தோட்டத்தில் அலுவல் பார்க்கப் புதிதாய் ஏற்பட்ட இவ்வேலையாட்களின் பிரயாசத்தை ஆண்டவர் ஆசீர்வதித்துச் செழிப்பானதும் மிகுதியானதுமான பலனைக் கட்டளை யிடுவாராக.

மிருகங்களும் பூகம்பங்களும்.—பூகம்பங்கள் நேரும் இடங்களில் மிருகங்கள் அவைகள் வருவதை முன்னடியே அறிந்து தாமறிந்ததைச் சில செய்கைகளால் காட்டுகின்றனவாம். ஜப்பானில் பூகம்பங்கள் அடிக்கடி நேரிடுவதுண்டு. பூகம்பம் நேருவதற்கு முன்னால் குதிரைகள் உடல் பதறி நடுங்குகின்றனவாம். மத்திய அமெரிக்காவில் பூகம்பம் வரும்போலிருந்தால் நாய்களும் பூனைகளும் வீட்டைவிட்டு வெளியே ஓடிப்போகின்றனவாம். இந்த மிருகங்களின் சுபாவத்தை யறிந்த அங்குள்ள ஜனங்களும் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக வீட்டைவிட்டு ஓடிப்போகிறார்களாம். இத்தாலியில் பூகம்பம் வருவதற்கு முன்னால் பட்சிகள் சத்தம் செய்யாமல் தங்கள் கூடுகளைவிட்டு அதிக உயரப்பறந்து, பிறகு பூகம்பம் இருக்கும்வரையில் உரத்த சத்தமிடுகின்றனவாம். சிசிலிதீவில் பூகம்பங்கள் உண்டாவதற்கு முன்னால் காக்கைகள் கத்துமாம், நாய்கள் ஊளையிடுமாம்.

அர்ச். அந்தோனியாரின் திருநாள்.—சென்னை, புதுப்பேட்டையில் வருஷா வருஷமும் கொண்டாடப்படும் அர்ச். அந்தோனியாருடைய திருநாள், இவ்வருடம் மற்ற வருடங்களைவிட அதிக பக்தி விமரிசையாய்க் கொண்டாடப் பெற்றது. இந்தத் திருநாளுக்கு ஆயத்தமாக பூனா மேற்றிராசனத்தைச் சேர்ந்த பேர்போன பிரசங்கியாகிய சங். எட். ரேஜிஸ்வாமிகளால் ஜூலைமீ 2௳ முதற்கொண்டு 11௳ வரையிலும் தியானப் பிரசங்கங்கள் செய்யப்பட்டன. ஷை பிரசங்கங்கள் சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்தனவாயிருந்ததின் நிமித்தம் இவ்விசாரணைக் கிறிஸ்துவர்கள் மாத்திரமல்ல, இன்னுமற்ற பங்கு கிறிஸ்துவர்களும் ஒவ்வொரு நாளிலும் காலையிலும் மாலையிலும் ஏராளமாய்த்

திரண்டுவந்து வெகு ஆவலோடு அவைகளைக் கேட்டு ஞானப்பிரயோசன மடைந்தார்கள். திருநாளாகிய 11௳ யன்று 1000 பேருக் கதிகமானவர்கள் நன்மை வாங்கினதானது இதற்குப்போதுமான அத்தாட்சி. 10௳ இராத்திரி தேர் சுற்றுப்பிரகாரமும் வெகு விமரிசையாய் பாண்டு வாத்தியங்களுடன் நடைபெற்றது. திருநாளைச் சிறப்பிக்க முயற்சியெடுத்த ஷை பங்குக் கிறிஸ்துவர்களையும், இத்தனைபெயர் ஞானப்பிரயோசனமடைய காரணர்களா யிருந்த சங். ரேஜிஸ்சுவாமிகளையும், இக்கோவில் விசாரணை சுவாமிமார்களையும் அர்ச். அந்தோனியார் ஆசீர்வதிப்பாராக.

ஒரு குழந்தையைப் பக்ஷிக்க முயன்ற ஓர் முதலை:—வங்காளத்தைச் சேர்ந்த ரங்கப்பூர் ஜில்லாவிலுள்ள டியனு என்னும் கிராமத்தின். அருகாமையில் ஓர் நதியினின்று ஓர் முதலை வெளியேறி, இரைக்காக அங்குமிங்கும் அலைந்து, கடைசியாய் ஷை கிராமத்திலுள்ள அனுத்பத்யகார் என்பவரது கிரகத்தில் நுழைந்து, அங்கிருந்த அவருடைய ஆண் குழந்தையைப் பிடித்துப் பக்ஷிக்க எத்தனப்பட்டது. உடனே பெருங் கூக்குரல் போடவே, அக்கிராமவாசிக ளெல்லோரும் ஓடிவந்து அம் முதலையைத் தாக்கினர். துப்பாக்கியால் சுட்டுக் கொல்லலா மென்றுபார்த்தால் அக்கிராமத்தில் உள்ளவர்கள் ஒருவரிடத்திலும் துப்பாக்கிக் கிடைக்கவில்லை. ஆகையால் அவரவர்கள் கையில் கிடைத்த தடிகளாலும் கம்புகளாலும் அதையடித்துக் கொன்றார்கள். இதுவரையில் இப்பேர்க்கொத்த சம்பவம் நடந்ததாக கேள்விப்பட்டதே யில்லை. முதலை ஜலத்தி லிருக்கும்போது யானையை முதலாய்ப் பிடித்தடக்கத் தக்க வல்லமையதற்கு உண்டென்றும், ஜலத்தைவிட்டு வெளியேறின மாத்திரத்தில் ஓர் நாய் முதலாய் அதனைக் கடித்தெரிந்து விடுமென்றும் வேமனன் முதலிய கவீச்சுரர்கள் பாடியிருக்கின்றனர். இச்சம்பவமானது அவையனைத்தையும் பொய்யாக்கிவிட்டது.

கஷ்டத்துக்கேற்ற கண்ணியம்:—இவ்வருடம் கெய்சரிண்டு தங்க மெடல் பெற்றவர்களுக்குள் சிம்லாவிலுள்ள செண்ட் லூசியெ என்ற கன்னியாஸ்திரி அம்மாள் அவர்கள் ஒருவரென்று கேள்வியுற்றுச் சந்தோஷிக்கிறோம் இந்த அம்மாளுக்கு இப்போது வயது 82. சென்ற 38 வருடங்களாக இவ்விந்தியாவில் ஐரோப்பியருடையவும் ஆங்கிலோ இந்தியருடையவும் கல்வி தேர்ச்சிக்காகத் தமது வாழ்நாளை இந்த அம்மாள் செலவழித்திருக்கிறார்கள். இவர்கள் இத்தேசத்துக்கு வந்தபோது பம்பாய் இராஜதானியிலேனும், மத்திய மாகாணங்களிலேனும், பஞ்சாபிலேனும் முன் சொல்லப்பட்டவர்களின் கல்விக்காக யாதொரு கல்விச்சாலையும் இருந்ததில்லை. இப்போதோ இந்த அம்மாளும் இவர்கள் சபையைச் சேர்ந்த கன்னியரும் பட்ட பிரயாசையால் அத்தேசங்களிலெங்கும் ஷை யாருக்காகப் போதுமான கல்விச்சாலைகள் ஸ்தாபிதமா யிருக்கின்றன. ஒரு சமயத்தில் நேர்ந்த தேசகலாபனையின் போது இந்த அம்மாள் ஆகிரா பட்டணத்தின் கோட்டையில் அடைக்கலம் புகுந்து, ஆறுமாதஞ் சப்பாத்தி பழத்தைத் தின்றுகொண்டே சீவித்திருந்தார்களாம். இந்தக் கன்னியாஸ்திரீ அம்மாள் தம்முடைய சீவிய நாட்களில் இத்தேசத்தில் 38-வருடம் சீவித்திருந்தும், மற்ற ஐரோப்பியரைப்போல் கோடை காலத்தில் தமது சுகத்தை நாடி ஒருபோதும் மலைகளுக்குச் சென்றவர்களல்லவாம். இப்பேர்க்கொத்த பாட்டாளியைச் சர்வேசுரன் நிரம்ப ஆசீர்வதிப்பாரென்பதற்குச் சந்தேகமில்லை.

ஞானத் தீட்சை பெற்றுத் தூக்கில் போடப்பட்டவர்கள்:—தோட்டங்களில் வேலை செய்து பிழைக்க சில தெலுங்கு ஜனங்கள் இலங்கைக்குப் போயிருந்தார்கள். இவர்களிடத்தில் வேலை வாங்கிவந்த கங்காணி இவர்களை வெகு கொடுமையாய் நடத்தி, இவர்களுக்குக் கொடுக்கவேண்டிய அரிசியையும் படியையுங் குறைத்து வெகு நெருக்கிடை செய்துவந்தான். இதனால் இவர்களெல்லாரும் ஒன்றாய்ச்சேர்ந்து காங்காணியைக் கொன்று விட்டார்கள். குற்ற விசாரணையில் இரண்டுபேர்மேல் குற்றஞ் சுமத்தப்பட்டுத் தூக்கும்படி உத்தரவாயிற்று. இவர்கள் இருவரும் புரோடெஸ்டாண்டு மதத்தைச் சேர்ந்த கிறீஸ்துவர்கள். ஒருத்தனுக்கு வயது 18. மற்றொருவனுக்கு வயது 30. கண்டி செமினெரியைச் சேர்ந்த ஒருவர் ஷை மடத்தின் பெரியவர்களின் அனுமதி பெற்று தூக்குக்கு நியமிக்கப்பட்டிருந்த ஷை இரு கைதிகளையும் பலதடவை கண்டு பேசி, நமது சத்திய வேதத்தை அவர்களுக்குத் தெளிவித்துக் காட்டினதின்பேரில் அவர்களுக்குச் சத்தியவேதத்திற் சேர மனதுண்டாயிற்று. இவர்களிருவரும் தங்கள் பாவங்களுக்காக மெய்யான மனஸ்தாபப்பட்டு ஞானஸ்நானம், பாவசங்கீர்த்தனம் முதலிய தேவத்திரவிய யனுமானங்களைப் பெற்றதுமன்றி, தேவநற்கருணையும் உட்கொண்டு மிகுந்த மனச் சமாதானத்தோடும் விசுவாசத்தோடு மிருக்க, சென்ற ஜுன்மாதம் 29-ம் தேதி செவ்வாயன்று தூக்கில் போடப்பட்டார்கள். நல்ல கள்ளனுக்குக் கிடைத்த பாக்கியம் இவர்களுக்கும் கிடைத்திருக்குமென்று நம்புகிறோம்.



போர்முகத்தில் ஒரு நாகசுரக்கச்சேரி:—பிரிட்டிஷ் போர்முனை எல்லையிலுள்ள ஒரு சிறு நகரில் இந்திய துருப்பைச் சேர்ந்த பட்டாணி வீரர்கள் ஒருங்கு சேர்ந்து, தமது ஊதுகுழல் நாகசுர வாத்தியத்தைக்கொண்டு ஓர் உல்லாச சங்கீதக் கச்சேரி நடத்தினார்கள். அதனை அநேக பிரஞ்சுப் போர் வீரரும், இரண்டு தளக்கர்த்தரும் வந்திருந்து கேட்டுச் சந்தோஷமடைந்தனர். அவர்கள் வாசித்த கீதத்தையும், அடித்த தமுக்கோசையையும்கேட்ட பிரான்சியர் பேராச்சரிய மடைந்தனர் என்று ஒரு ராய்ட்டர் தந்தி கூறுகின்றது.

கட்டிப்போன தேனை உருக்குதல்:—தேன் கட்டிவிட்டாலும், மணிகள் திரண்டிருந்தாலும் அடுப்பில் அகண்ட பாத்திரத்தில் ஜலம் கொதிக்கச்செய்து, அந்த ஜலத்தில் தேன் பாத்திரத்தை வைக்க, தேன் உருகும். நெருப்பின்பேரில் நேராய்த் தேனைவைத்தால் தேன் மணம் போய்விடும்.

ஆர்ம்பாக்கம் வருஷாந்திர திருவிழா.—ஆரம்பாக்கத்திலுள்ள பொருத்தனைக்கோவிலின் பாதுகாவலராகிய மோட்ச இராக்கினியின் வருஷாந்திர திருநாள் மெத்த சிறப்புடன் நிகழும் ஆகஸ்டுமீ 22௳ கொண்டாடப்படும். கொடியேற்றத்துடன் நவநாள் ஜெபம் ஷை மாதம் 14௳ துவக்கமாகும். கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களை வரும் இந்தப் பொருத்தனைக் கோவிலில் நமது பரம தேவதாயாரைக் கொண்டாட இத்திருநாளுக்கு வரவும், இதனைக் கொண்டாட தங்களாலியன்ற உதவி அனுப்பி வைக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மோட்சவிராக்கினி முடிப்பெற்ற பரம ஆண்டவள் இந்தத் திருயாத்திரைக்காருக்கும், தர்மிஷ்டருக்கும் ஏராள சம்பாவனை அளிப்பார்கள்.

S. M. F. IGNATIUS.
விசாரணை குருவானவர்.

மேல்விலாசம்,
ஆரம்பாக்கம் ரைல்ஸ்டேஷன்,
நெல்லூர் ஜில்லா.

இங்கிலீஷில்
Arambakam Ry. Station,
(Nellore Dist.)

---

## வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரை.

### ஓர் விசேஷ அறிக்கை.

சென்ற மாத "நல்லாயன்" பத்திரிகையில் ஷை மாத்திரைகள் சென்னை, பிராட்வே, 2/74 வது வீட்டில் விற்பனைக்குத் தயாரா யிருக்கின்றனவென்று தெரிவித்தோ மல்லவா? இந்தப்படிக்கு நாம் சென்னப்படணத்தில் ஸ்தாபித்தது நமது பிரான்ச்சே (Branch) யல்லாமல், நமது எட் ஆபீசு (Head Office) முன்போலவே திருநெல்வேலி ஜில்லா, மணப்பாட்டிலேயே யிருக்கிறது. சென்னையிலும், அதன் சுற்றுப் புறங்களிலுமுள்ள நண்பர்களின் சௌகரியத்துக் காகவே சென்னப்பட்டணத்தில் ஷை பிரான்ச்சை ஏற்படுத்தி அதற்கு நமது நண்பராகிய மகா-ா-ா-ஸ்ரீ ம. பா. குழந்தைசாமி பிள்ளை அவர்களை நமது ஏஜெண்டாக நியமித்திருக்கிறோம். வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரை வேண்டுபவர்கள், மேற்குறித்தபடி, சென்னப்பட்டணத்துக்காவது, மணப்பாட்டுக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மணப்பாடு, 20—7—15. } சி. ஏ. சில்வேயிரா.

---

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய் முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

### விவாகோற்சவக் கொண்டாட்டம்.
#### பழய காயல்.

மகா-ா-ா-ஸ்ரீ, டானியேல் வின்செண்று நீக்குலாக்குருஸ் நற்குர் பர்ணாந்து அவர்களின் புத்திரராகிய மாஜி ஸ்ரீமான் அலேக்ஸ்குருஸ் நற்குர், பர்ணாந்து என்ற, தரும பிச்சை நற்குர் பர்ணாந்து அவர்களுக்கும், ஷை யூர் ம-ா-ா-ஸ்ரீ, பூரணப் பர்ணாந்து, டர்ணாந்து, மொடுதவமூஸ் அவர்களின், கனிஷ்ட புதல்வி மிஸ். மேரி, இலாஸர் அம்மாள் பர்ணாந்து, பர்ணாந்துவுக்கும், நிகழும் 1915-ம் வருஷம் ஜூன் மாதம் 23-ம் தேதியாகிய புதன்கிழமை காலை 7-மணிக்கு பரிசுத்த பரிபூரண தேவதாயாரின் ஆலயத்தில் ஷை யூர் பங்கு விசாரணைக் குருவாகிய சங்கைக்குரிய மரிய அதிசயநாத சுவாமிகளால் மெய் விவாஹச் சடங்கு நிறைவேற்றப்பட்டது. மணவாளர்க ளிருவரும் திவ்விய பூசையில் தெய்வீக விருந்தருந்தி, திருமண ஆசீர்வாதம் பெற்றனர். தேவாலய முற்றவெளியிற் பார்ப்போர் கண்களைப் பறிக்கக் கூடிய விதமாய், ரூபலாவண்ய சித்திராலங்கிர்த கொத்து வேலைகளாலும், பலவித இரத்தினங்களாலும் வெகு விநோத விசித்திர, அலங்காரமாய்ச் சிங்காரிக்கப்பட்டு, மகா உன்னத சிறப்புற்றோங்கி, தங்கமயமாய் ஜொலிக்க, தயாரிக்கப்பட்டிருந்த சிவிகையின் ஆசனத்தில் மணவாளர்க ளிருவரும் வீற்றிருக்க, பாதாசர் விருதுகளாகிய இரட்டைக்குடை, சுருட்டிகளென்ற எட்டுக்குடை சுருட்டிகளை எட்டுக்குடி மக்கள் இருபுறமும் பிடித்துச் செல்ல, முரச முதலிய வாத்தியங்கள் முழங்க, பந்து மித்திரர் புடை சூழ்ந்திலங்க, ஊர்கோலம் சுற்றிவந்தது. இதுபோலவே அன்றிரவும், மறுநாளிரவும் மணவாளர்களிருவரும் சிவிகையில் அமர்ந்து, தீவர்த்தி, பாணம், மத்தாப்பு சிங்காரத்துடன் வெகு ஆடம்பரமாய் ஊர்கோலம் வந்து கோவிலுக்குச் சென்றார்கள். அங்கு "நீரே தேவன்" என்னும் பாடலை இலத்தீனில் மிக பக்தியாய்ப்பாடி முடித்தபின் மணவாளர்கள் இல்லம்புகுந்து, அங்கு அலங்கார தேஜோ மயமாய் நிர்மாணிக்கப் பெற்றிருந்த கொலுவின் ஆசனத்தில் அமர்ந்திருக்க, எம் குலாசார சடங்கு வைபவங்களைச் செய்து முடித்தபின், தூத்துக்குடி மகா-ா-ா-ஸ்ரீ M. X. Rubeen Varma அவர்களா லியற்றிய திருமண வாழ்த்தற்பாவையும், மற்றும் வாழ்த்துக் கவிகளையும், நவரசலங்காரமாய்ச் சபையோர் குதூகலிக்கப் பாடி, எல்லோரும் ஒன்றுசேர்ந்து உரத்த சப்தமாக, மணவாளன் மணவாளி பல்லாண்டு, பல்லாண்டு வாழ்க வென ஆர்ப்பரித்ததுடன், கரகோஷத்தோடு ஹிப் ஹிப் உர்ரே வென மங்களமுங் கூறினார்கள். அங்கு விஜயம் செய்திருந்தோர்க் கெல்லாம் தகுந்த மரியாதையோடு தாம்பூலம், சந்தனம், பன்னீர், புஷ்பாதிகளும் வழங்கப்பட்டன. சோபனக் கடிதங்களும், தந்திகளும், வாழ்த்துக் கவிகளும் வெகுமதிகளும் வந்து குவிந்தன. விருந்தினர்களும் தம்பதிகளை ஆசீர்வதித்துத் தத்தம் பகுதிக் கேகினர்கள். கலியாண இரவு மணவாளன் ஊர்கோலம் வரும்போது இவ்வூர் அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார் ஜூபிலி வாசகசாலை மெம்பர்கள் தங்கள் வாசகசாலையில் மணவாளனை அன்பாய் வரவேற் றுபசரித்து, வந்தனோபசாரத் திருமண வாழ்த்துப் பத்திரம் வாசித்து மணமக்களை வாழ்த்திக் கரகோஷம் செய்தார்கள்.

இப்புதிதா யுண்டாகிய குடும்பம் ஆபிரகாங் கிளைபோல் வாழையடி வாழையாய்ப் புத்திர பௌத்திர சம்பன்னர்களாய் வாழ; சர்வ ஸாம்பிராஜ்ய, நிரம்ப, மகத்துவ, ஷட்குண சர்வேஸ்பரன் கிருபை புரிந்து ஆசீர்வதிப்பாராக!

பழைய காயல்.
5-7-1915

இங்ஙனம்.
மணமக்கள் சுகக்ஷேமத்தை
விரும்புகிற,
சந்திரகுலப் பரதன்.

---

### நன்மரண அறிக்கை.

ஸ்ரீமான் திருச்செல்வம் எட்வர்ட்ஸ் என்பார்: திவ்விய பனிமயத்தாய் திருக்கோவில் கொண்டெழுந்தருளி யிருக்கும் திரு மந்திர நகரமென்னும் தூத்துக்குடியைத் தமது ஜென்ம ஸ்தானமாகவும், சிந்து தேச அப்போஸ்தலரான அர்ச். சவேரியார் திருக்கோவில் கொண்டெழுந்தருளி யிருக்கும் கோவைமா நகரைத் தமது வர்த்தக ஸ்தானமாகவும் கொண்டு பெரும்புகழ் படைத்த பரதகுல ஸ்ரீமான்: கஸ்பார் எட்வர்ட்ஸ் அவர்களுக்கு, அவர் பத்தினியாகிய ஸ்ரீமதி: கிலாரம்மாள் ரூபினிணிடமாய்ச் சென்ற 1881-ம் ஸ்ரீ செப்டம்பர் மீ 9-ம் தேதி ஜென்னமாகி, இளமையிற்றானே கற்க வேண்டியவற்றைக் கற்றுத் தேர்ந்து, யௌவனத்தையடைந்து, சென்னைமா நகரின்கண்: "அஸ்திரேலியன் ஸ்டோர்" எனப் பெயர் வாய்ந்த வர்த்தகச் சாலையின் சொந்தக்காரராய்ச் சிறந்து, பரதகுல கோமானாய் விளங்கிய சிஞ்ஞோர் சிஞ்ஞோர், தொன் காபிரியேல் தெக்குருஸ் லாசருஸ் மோத்தாவாஸ் பரதவர்ம பாண்டியனவர்களின் சிறிய பிதாவாகிய ஸ்ரீமான், ரொசாரியு மோத்தா அவர்களின் சிரேஷ்ட குமாரத்தியாகிய மேரி இசபெல்லால் ஜோசபின் அம்மாள் மோத்தாவை 1912-ஆ நவம்பர் மீ 30உ மணமுடித்து, இரு பெண் மக்களைப் பயின்று, மேன்மகருள் மேன்மகராய்க் குறைவொன்றின்றி, மேலான நடையுள்ளனாய்ச் சுகுணம் வாய்ந்து, வாழுங்காலை அம்மை யென்னும் வைசூரியின் வாய்ப்பட்டு, முதிர்ந்த வைத்யர்களின் சிறந்த ஔஷதங்களாலும் குணம் பெறுமல், கிறிஸ்துவனுக்குரிய கடைசித் தேவத்திரவியானுமானங்கள் யாவும் குறைவறப்பெற்று, "யேசு இரக்ஷகா! எம்மைக்கா, எம்மைக்கா" வெனப் பன்முறை உச்சரித்து, சோர்வுற்று, நிகழும் 1915ஆ ஜூலாய் மீ 20உ பின்னேரம் 5-மணியளவில் பரலோக பிராப்தியானார். மறுநாள் காலை 10-மணிக்குச் சடலம் பிராட்வே, அர்ச். ஆரோக்கியநாதர் கல்லறையில் சங்கைக்குரிய ராஜரிஷி மைக்கல் மோத்தாவாஸ் சுவாமிகளாலும், Y. அருளப்பநாத சுவாமிகளாலும் நல்லடக்கம் பண்ணப்பட்டது.

☞ இதைக் கண்ணோக்கும் சகோதரர்களே! சகோதரிகளே!! இந்த ஆத்துமத்தின் நித்திய இளைப்பாற்றிக்காக ஆண்டவரை மன்றாடப் பிரார்த்திக்கிறேன்.

"மதிப்பினிலடங்காத வஜ்ர தூண்
வாழைமரம்போல் சாய்ந்ததுவே."

R. I. P.

*21st July 1915.*
No. 11. Third street,
Pudupet,
MADRAS.

இப்படிக்கு,
ஓர் அனுதாபி,



---

### தருமகுண நண்பருக்கு ஓர் விண்ணப்பம்.

சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த சூளையில், 30-வருடத்துக்கு முன் சுதேச பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்து, அநாதபிள்ளைகளை ஆதரித்துச் சிறு குழந்தைகளை வளர்த்து, சகல கிறிஸ்துவர்களுக்காக வேண்டிக்கொண்டுவர அர்ச். ஐந்துகாய பிரான்சிஸ்கு என்பவரின் மூன்றாம்சபை சுதேச கன்னியர்மடம் ஒன்று ஸ்தாபகமானது.

அம்மடத்தைத் தற்போது விஸ்தரித்துக் கட்டவேண்டுமென அதிமேற்றிராணியார் உத்தரவளித்தார். தருமமெடுத்து கன்னியருக்கான கட்டிடத்தைக் கட்டினோமாயினும் பூச்சுவேலையும், கதவு ஜன்னல்கள் வேலையும் முடிவுபெறாது, வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் அநாதபிள்ளைகளுக்காகக் கட்டப்பட்டிருந்த சாலை சென்ற நவம்பர் மாதம் 7-ந் திகதி நடு இரவில், இவ்விடம் பெய்த அகோர மழையால் சுவர்கள் நனைந்து பாதி வீடு இடிந்துவிழுந்து, சாமான்களெல்லாம் பொடிப் பொடியாய் நொறுங்கிப்போயின. எமது மடத்தின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பருடைய அற்புத சகாயத்தால் மேற்கூரை விழுமுன் திடீரெனப் பிள்ளைகள் எழுப்பிவிடப்பட்டு, அகால மரணத்தினின்று காப்பாற்றப்பட்டார்கள். பிதாப் பிதாவான அர்ச். சூசையப்பருக்குச் சதா நன்றியுள்ளவர்களா யிருக்கிறோம்.

இருக்க இடமின்றி தவிக்கும் ஏழை அநாதபிள்ளைகள் மட்டில் மனமிரங்கி உதவிசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம். உங்கள் நன்றிக்குக் கைம்மாறாக உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் ஆத்தும சரீர நலங்களுக்காக நாமும் சகோதரிகளும் அநாத பிள்ளைகளும் மறவாமல் நாடோறும் வேண்டிக்கொண்டு வருவோம். நல்லாயன் சந்தாதாரர் கொஞ்சம் தருமம் அனுப்புவார்களாக.

| | | | |
|---|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 105 | 2 | 0 |
| Mr. M. ஞானப்பிரகாசம் ஆச்சாரி, இஸ்மாலியா. | 10 | 0 | 0 |
| ,, A. மரியசூசை முதலி | 5 | 0 | 0 |
| ,, Y. பாக்கியம் பிள்ளை, அடைக்கலபுரம், திருச்சி. | 5 | 12 | 0 |
| ,, M. தொரைராஜு பிள்ளை, B. Dotoh | 17 | 8 | 0 |
| ஆக மொத்தம் | 143 | 6 | 0 |

S. Jos. Balasami,
*St. Andrew's Church, Choolai P. O. Madras.*

## எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தருமம்.

நண்பர்களே!

சென்ற வருஷம் நாம் அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தர்மமென்று அறிக்கையிட்டு, செய்துகொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி, எமக்குதவிபுரிந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்குப் பங்காளிகளான உதார குணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்துவர்களுக்கும் எடப்பாடி நேயர்களுக்கும் அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1914-ஞு எப்ரல் மாத முதல் 1915-ஞு மார்ச்மீ 31உ வரையில் நேயர்களால் அளிக்கப்பட்ட நன்கொடை ரூபாய் 193-2-0. சென்ற பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்களை முடிவாக்கவும், விசாரணைக் குரு வசிக்கும் பங்களாவை மராமத்துச் செய்யவும், கோவில்கட்டிட விர்த்தியைப் பூர்த்திக்குக்கொண்டு வரவும் செலவான தொகை ரூபாய் 2620-8-4. இவ்விஷயமாய்த் தற்காலம் நமக்கு ஏற்பட்டிருக்கும் கடன் ரூபா 738.

நண்பர்களே! தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி சத்திரங்கள் முடிவிற்கு வந்தன. ஆகிலும், பழைய சத்திரங்களை மராமத்துசெய்யப் போதுமான பணமில்லாமையால் அவ்வேலைகளை நிறுத்தவேண்டி நேரிட்டதைப்பற்றி விசனிக்கிறோம். தர்மசிந்தையுள்ள அர்ச். நாயகியின் ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. அவளது மகிமைக்காக கடனுளியானேம் என்பதைச் சிந்தித்து எமதுபேரில் இரக்கம் புரிவார்களென்பது திண்ணம். நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதேயாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள்பேரில் பூரணமாய்ப் பொழியக் கிருபை செய்யவேணுமென்பது எமது பிரதிதின வேண்டுகோள்.

இப்படிக்கு,

எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாளின் ஊழியனுகிய, விசாரணைக் குரு

ஜே. ஞானதிக்கம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவேவரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 868 | 12 | 0 |
| Mr. செல்வப்பன், கொழிஞ்ஞிபாளையம் | 2 | 4 | 0 |
| Mr. J. மரியான், சிலோன் | 1 | 0 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 872 | 0 | 0 |

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ. 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ. 3,590-14-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன்வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந் தொகை யாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலாயிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில்,

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3,590 | 14 | 6 |
| Mrs. செபமாலையம்மாள் (ராயப்பேட்டை) | 0 | 8 | 0 |
| Mr. அநந்தநாத பிள்ளை | 1 | 0 | 0 |
| ஓர் நன்கொடை | 1 | 0 | 0 |
| Mr. L. V. கோம்ஸ் (தனுஷ்கோடி) | 1 | 0 | 0 |
| ,, Powell | 1 | 0 | 0 |
| ,, J. மரியான் | 1 | 0 | 0 |
| ஆகமொத்தம், | 3,596 | 6 | 6 |




# The Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 13. } செப்டெம்பர் 1915. { இலக்கம். 9.


## THE EXALTATION OF THE CROSS.

## சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள்.

இந்தத் திருநாளை நாம் இம் மாதம் 14உ கொண்டாடப் போவதால், நம்முடைய இரட்சண்யத்தின் அடையாளமாகிய திருச்சிலுவையைப்பற்றி திருச்சபைசரித்திர மூலமாயும் பாரம்பரிய மூலமாயும் தெரியவரும் சில வர்த்தமானங்களை இம்மாதத்திய "ஆயன்" வாயிலாய் வெளியிடுவதானது நம்முடைய சந்தாதாரர்களுக்கு ஞானப் பிரயோசனத்தை விளைவிக்க ஏதுகரமாயிருக்குமென அபிப்பிராயப்பட்டு அவைகளை யிங்கு வரைந்து தருகிறோம்.

சுதனாகிய சர்வேசுரன் மனிதாவதாரமெடுப்பதற்கு வெகு காலத்துக்கு முந்தியே, சிலுவையைப்போன்ற சில சின்னங்கள் அதாவது அடையாளங்கள் உலகத்தின் பலஜாதி ஜனங்களுக்குள்ளே உபயோகத்திலிருந்து வந்ததாகத் தோன்றுகிறது. பூர்வீக இந்துக்கள் முதலாய்ச் சிலுவை வடிவமுள்ள சின்னங்களை நெருப்பு, சூரியன், மின்னல், சிவன் முதலியவைகளின் அடையாளமாக எண்ணி வந்தார்களென்று சமீபத்தில் நாம் வாசித்த ஒரு ஆங்கிலேய பத்திரிகையில் (Examiner) சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் சிலுவை வடிவமுள்ள பலவிதமான சின்னங்களை, பூர்வீக எஜிப்தியர், கிரேக்கர் முதலியவர்கள் சர்வேசுரனையும், உயிரையும், அழியாமையையும் சுட்டிக்காட்ட வழங்கி வந்தார்களென்று பூர்வீக சரித்திர புஸ்தகங்களிற் காணலாம்.

ஆயினும், நமதாண்டவரின் அவதாரத்துக்கு முந்தியே உரோமையராலும் அவர்களுடைய ஆளுகைக்குட்பட்டிருந்த வெவ்வேறு ஜாதியாராலும் கொலைபாதகர், திருடர், கலகக்காரர், இன்னும் இவர்களைப்போன்ற துஷ்டர்களை அறைந்து கொல்லும் வாதனைக் கருவியாகச் சிலுவை உபயோகிக்கப்பட்டு வந்தது.

நம்முடைய திவ்விய இரட்சகர் சிலுவையி லறையுண்டு மரணமடைந்த பிறகு சிலுவையானது பூர்வீக கிறிஸ்துவர்களுக்கு வெகு பூச்சியத்துக்குரியதா யிருந்தது. சிலுவையைக் குறைவாயுங் கேவலமாயும் அற்பமாயும் மதித்துவந்த அஞ்ஞான ஜனங்களால் சூழப்பட்டிருந்த ஷெ கிறிஸ்துவர்கள் அதற்குத் தங்களுடைய வணக்கத்தையும் மரியாதையையும் பயிரங்கமாய்க் காட்டக்கூடாமல் இருந்தபடியால், தாங்கள் ஒளிந்துகொண் டிருந்த சுரங்கங்களிலும், வீடுகளிலும் அதற்குரிய வணக்கத்தைக் காட்டிவந்தார்கள். இரண்டாம் நூற்ருண்டின் இறுதியிலும் மூன்ரும் நூற்ருண்டின் துவக்கத்திலும் சீவித்துவந்த தெர்த்தூலியன் என்னும் மகா சாஸ்திரி எழுதிவைத்திருக்கிறபடி, பூர்வீகக் கிறிஸ்துவர்கள் வெளியே போகும்போதும், உள்ளே வரும்போதும், உடைகளை அணிந்துகொள்ளும்போதும், குளித்து முழுகும்போதும், விளக்கு கொளுத்தும்போதும், சாப்பிடப் போகும்போதும், சாப்பிட்டானபோதும், நித்திரை செய்யப் போகும்போதும், நித்திரைசெய்து எழுந்திருக்கும்போதும் தங்கள் நெற்றியில் சிலுவை வரைந்துகொள்ளும் வழக்கமுடையவர்களாயிருந்தார்கள். நெற்றியில் சிலுவை வரைந்துகொள்ளும் வழக்கம் அப்போஸ்தலர்களாலேயே உண்டானதென்று அர்ச். பசிலியார் சொல்லி யிருக்கிருர். இதைப் பல வேதபாரகர்களும் சரித்திராசிரியர்களும் நிச்சயப்படுத்துகிருர்கள்.

312-ம் வருஷத்தில் கொன்ஸ்தாந்தினுஸ் (Constantine) என்னும் அரசன் தன் சத்துருவாகிய மாக்சென்சியுஸ் (Maxentius) என்பவன்மேல் படையெடுத்துப் போகையில், ஆகாயத்தில் பிரகாசமுள்ள ஒரு சிலுவையையும் அதனடியில் "இவ்வடையாளத்தினுல் ஜெயங்கொள்வாய்" என்று எழுதப்பட்டிருந்ததையுங் கண்டார். அன்றியும் தான் கண்ட அடையாளத்தைத் தன்னுடைய போர்க்கொடிகளில் வரையும்படியாகவும் சொற்பனத்தில் அவருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அப்படியே செய்து தன்னுடைய சத்துருக்களை ஜெயித்தபிறகு தம்முடைய நன்றியறிதலைக்காட்ட சத்தியவேதம் தம்முடைய இராச்சியத்தில் எங்கும் பரவ பூரண சுயாதீனம் அளித்தது மல்லாமல் சிலுவை யடையாளத்தை மேன்மேலும் கனப்படுத்திக் கொண்டாடவுந் துவக்கினுர். அதுமுதல் சிலுவைகள் வாதனைக் கருவிகளாக உபயோகப்படுத்தக் கூடாதென்றும் கற்பித்தார். விலையேறப்பெற்ற ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு தங்கச் சிலுவையைச் செய்வித்து அதைத் தன் அரண்மனையின் கொலுமண்டபத்தில் ஸ்தாபிக்கவும், தன் செங்கோலுக் குட்பட்ட தேசங்களில் வழங்கும் நாணயங்களில் சிலுவை அடையாளத்தைப் பதிப்பிக்கவுங் கட்டளையிட்டார். இதுவரையிலும் சுரங்கங்களில் ஒளிந்துகொண்டிருந்த கிறிஸ்துவர்களும் அவைகளை விட்டுப் பட்டணங்களுக்கு வந்து, பெரிய ஆலயங்களைக் கட்டி அவைகளி னுச்சியில் சிலுவையை ஸ்தாபிக்கவுந் தொடங்கினுர்கள். பிற்பாடு ஜஸ்தீனியானுஸ் (Justinian) காலத்தில் கோவில் சிகரங்களிலெல்லாம் சிலுவையொன்று வைக்கப்பட வேண்டுமென்னும் ஓர் கட்டளையும் பிறந்தது.

326-ம் வருஷத்தில், கொன்ஸ்தாந்தினுஸ் சக்ரவர்த்தியின் தாயாராகிய அர்ச். எலேனம்மாள் (St. Helena) சேசுநாதர் சுவாமி அறையுண்ட சிலுவையைக் கண்டெடுக்க ஆசைப்பட்டு ஜெருசலேமுக்குப் போனுள். குற்றவாளிகளைச் சிலுவைகளிலறைந்து கொன்றதற்குப் பிறகு அச்சிலுவைகளை அந்தக் கொலைக்களத்தின் சமீபத்திலேயே புதைப்பது வழக்கமாயிருந்தபடியால், கபாலமலைக்கடுத்த ஒரு குகையில் ஷெ சிலுவைக்காக தோண்டிப் பார்க்கச் சொல்லிவிட்டு, வயது சென்ற அந்தப் புண்யவதி முழங்காலிலிருந்து அந்தச் சிலுவை மரத்தைத் தனக்குச் சர்வேசுரன் காட்ட வேண்டுமென்று வெகு பத்தியாய் வேண்டிக்கொண்டாள். கடைசியாய் அந்தக் குகையில் மூன்று சிலுவைகளும், ஆணிகளும், ஈட்டியும், "யூதர்களுடைய இராசாவாகிய சேசுநசரேனு" (J.N.R.J.) என்று கிரேக் பாஷையிலும் இலத்தீன் பாஷையிலும் எபிரேயபாஷையிலும் எழுதப்பட்டு, நமது இரக்ஷகருடைய சிலுவையினுச்சியில் வைக்கப்பட்டிருந்த பலகையும் அகப்பட்டன. ஆனுல் மேற்படி பலகை



சிலுவையை விட்டுப் பிரிந்திருந்தபடியால் கண்டெடுக்கப்பட்ட மூன்று சிலுவைகளில் எது நமது இரக்ஷகருடைய சிலுவையென்று அறியக் கூடாமலிருந்தது. ஜெருசலேம் பட்டணத்து மேற்றிராணியாராகிய அர்ச். மக்காரியுஸ் (St. Macarius) என்பவர் இச் சந்தேகத்தைத் தீர்க்கச் சர்வேசுரன் ஓர் புதுமை செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளத் தம்முடைய கிறிஸ்துவர்களெல்லோருக்கும் கட்டளையிட்டு, அர்ச். எலேனம்மாளும் மேற்றிராணியாரும் அவ்வூரில் நெடு நாளாய் வியாதிப்பட்டு கடின அவஸ்தையா யிருந்த ஒரு ஸ்திரீயின் வீட்டிற்குக் கண்டெடுக்கப்பட்ட அம்மூன்று சிலுவைகளையும் கொண்டுவரச் செய்தார்கள். ஷெ சிலுவைகள் கொண்டுவரப்பட்டபின் மேற்றிராணியார் முழந்தாட்படியிட்டு: "ஆண்டவரே உம்முடைய திருக் குமாரன் அறையுண்ட சிலுவை மரத்தை எங்களுக்குக் காண்பித்தருளும். அந்தச் சிலுவை மரம் இந்த மனுஷிமேற் பட்ட மாத்திரத்தில் அவளுக்குப் பூரண ஆரோக்கியத்தைக் கட்டளையிட்டருளும்" என்று எல்லோரும் கேட்கும்படி உரத்த சத்தமாய் வேண்டிக்கொண்டு, அச் சிலுவைகளை ஒவ்வொன்ருய் அந்த ஸ்திரீயின் மீது வைக்க, முதலிரண்டு சிலுவைகளால் அவளுக்கு யாதொரு நன்மையும் உண்டாகவில்லை. மூன்ருவது சிலுவையால் அவளைத் தொட்ட மாத்திரத்தில் அவள் திடீரெனப் பூரண செளக்கிய மடைந்து எழுந்து பேசவும் சாப்பிடவும் நடமாடவும் ஆரம்பித்தாள். அவ்விடத்தை விட்டு மேற்றிராணியாரும் அர்ச். எலேனம்மாளும் மேற்படி சிலுவைகளை எடுத்துக்கொண்டு போகும் வழியில் கல்லறைக்கு ஒரு பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு போகும் ஒரு ஜனக் கும்பலைக் கண்டு பாடையை நிறுத்தி முன்போல் சிலுவைகளை ஒவ்வொன்ருய் அப் பிரேதத்தின் மீது வைத்துப் பரீக்ஷிக்க, அவஸ்தையாயிருந்த ஸ்திரீயைக் குணப்படுத்தின அதே சிலுவை அப்பிரேதத்தின்மீது பட்ட மாத்திரத்தில் அதற்கும் உயிர் வந்தது. அதன் பின் அர்ச். எலேனம்மாள் அச்சிலுவையின் ஒரு பாகத்தைத் தன் குமாரன் கொன்ஸ்தாந்தினுக்கு அனுப்பிவிட்டு, மீதியை சித்திர வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு வெள்ளிப் பெட்டியிலடைத்து, அச்சிலுவைக்கென்று சேசுநாதசுவாமி மரித்த விடத்திலேயே ஒரு பிரமாண்டமான கோவிலைக் கட்டி, அப்பெட்டியை அதில் வைத்தாள். அந்நாள் முதற்கொண்டு உலகத்தின் எத்திசையிலு மிருந்து அதைச் சந்திக்க ஜனங்கள் வந்துகொண்டே யிருந்தார்களென்று சரித்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

629-ம் வருஷத்தில் கொஸ்ரோஸ் (Cosroes) என்னும் பாரசீக அஞ்ஞான இராசா ஜெருசலேமீது படையெடுத்துப் போய் அத் தேசத்தைத் தன் கைவசப்படுத்திக்கொண்டது மல்லாமல் ஷெ திருச் சிலுவையையும் தன்னேடு எடுத்துக் கொண்டு போய்விட்டான். ஆனுல் பத்து வருஷங்களுக்குப் பிற்பாடு ஹெராக்கிலியுஸ் (Heraclius) என்னும் பத்தியுள்ள கிறீஸ்துவ சக்ரவர்த்தி பாரசீகர் மீது படையெடுத்துப்போய் அச்சிலுவையைத் திரும்பவும் ஜெருசலேமுக்குக் கொண்டுவந்தார். அவர் தமது ராஜரீக ஆடையாபரணங்களோடு அச்சிலுவையைத் தன் தோளின் மேல் சுமந்துகொண்டு கோவிலை நோக்கிச் செல்ல முயலும்போது புதுமையாக அவர் காலெடுத்து வைக்க முடியாமற்போனது. அப்போது அங்கிருந்த மேற்றிராணியார் சக்கரவர்த்தியை நோக்கி: "நமது இரக்ஷகர் சிலுவை சுமந்துபோன கோலத்துக்கும் உம்முடைய ஆடம்பரத்துக்கும் எவ்வளவோ பாரதூர வித்தியாச மிருக்கிறதே!" என்ருர். அதைக் கேட்ட அரசன் தன்னுடைய ராஜரீக ஆடையாபரணங்களைக் களைந்து பாதரக்ஷையின்றி, இடுப்பில் ஒரு சிறு துணியோடு சிலுவையைத் தன் தோளிற் சுமந்துகொண்டு யாதொரு தடங்கலுமின்றிக் கோவிலிற் சென்று மகா சிறப்புடன் அத்திருச் சிலுவையை முன்னிருந்த விடத்தில் ஸ்தாபித்தார். அந்நாள் முதற்கொண்டு அச் சம்பவத்தைத் திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாளாக வருஷா வருஷம் செப்டெம்பர் மீ 14உ யில் திருச்சபை கொண்டாடி வருகிறது.

அர்ச். எலேனம்மாள் திருச்சிலுவையைக் கண்டெடுத்த சம்பவத்தையும் திருநாளாக மேமீ 3-ந்தேதியில் நாம் கொண்டாடி வருகிறோம்.

நம்முடைய இரக்ஷண்ணியத்தின் அடையாளமாகிய சிலுவையின் பேரில் நாம் விசேஷ பத்திவைப்பதுந் தவிர, நம்முடைய சகல கிரிகைகளிலும் சிலுவை அடையாளமானது நமக்கு முன் நிற்கக் கட்வது. அர்ச். எப்ரெம் (Ephrem) சொல்வதுபோல, நம்முடைய வீட்டுக் கதவின் பேரிலும், நம்முடைய நெற்றியின் பேரிலும், வாயின்மீதும், நெஞ்சின்மீதும், நம்முடைய சரீரத்தின் சகல பாகங்களின் மீதும் நமக்கு உயிரா யிருக்கும் சிலுவையின் அடையாளத்தை ஆழ வரைவோமாக. ஏனெனில், சிலுவையானது மரணத்தின் ஜெயமும், விசுவாசிகளின் நம்பிக்கையும், உலகத்தின் பிரகாசமும், பரலோகத்தின் திறவுகோலும், துர்மதங்களைச் சங்கரிக்கும் ஈட்டியும், பத்திமான்களுடைய உதவி யொத்தாசையும், விசுவாசத்தின் ஆதாரவும், கிறிஸ்துவர்களுடைய சிபார்சும், காவலும், மகிமையுமா யிருக்கிறது. ஓ! கிறிஸ்துவனே, இரவிலும் பகலிலும், எல்லா விடங்களிலும், எந்நேரத்திலும், இவ்வரிய ஆயுதத்தை உன்னை விட்டகல விடாதே; சிலுவை அடையாளமின்றி ஒன்றையும் ஒருபோதும் ஆரம்பிக்காதே. நீ தூங்கும்போதும், விழித்தெழுந் திருக்கும்போதும், நடக்கும்போதும், வேலை செய்யும்போதும், சாப்பிடும்போதும், பானம் பண்ணும்போதும், ஆறு கடல்களை கடக்கும்போதும், சிலுவையாகிய வெற்றிக் கேடயத்தை அணிந்துகொள்ள மறவாதே. ஏனெனில், நீயதை பக்தி விசுவாசத்துடன் அணிந்திருக்கும் வரையில் எவ்வித துஷ்டப் பேய்களும், ஆபத்தும், துன்பமும் உன்னை விட்டகல்வதுமன்றி உன்னை அவைகள் அணுகவுந் துணியா.

---

## WHAT IS OUR END?
## நமது கதியாது?

---

பாக்கியத்தைத் தேடிப் பாரிற் கிடையாமல் நொந்து வருந்திய ஒரு வல்லரசனுடைய சிறந்த கதையை நீங்கள் கேட்டிருக்கலாம். அக்கதையின்படி இவ்வரசனுக்கு அளவற்ற தனக் குவியலும் பரந்து விளங்குந் தேயங்களு மிருந்த போதிலும், தீரா நோயும், குடும்பப் போரும், துன்ப வருத்தங்களும் அவனை இடைவிடாமல் தேனைச் சுற்றி மொய்க்கும் ஈக்களைப்போல், சூழ்ந்து, அவன் வாணாளைப் பங்கப்படுத்தின. ஒரு நாள் அவன் சஞ்சலமும் அவநம்பிக்கையும் மேலிட்டவனாய், தன் னாட்டின்கண் ணுள்ள புத்திமான்களையும் ஜோசியர் மந்திர வாதிகளையுந் தன்னருகி லழைத்து, துன்பச் சுமையா லயர்ந்து வருந்துந் தன் னிதயத்திற் கோர் அருமருந்தை யுதவும்படிக் கேட்டான். தனக்கு மனவமைதியும் சந்தோஷமுங் கொடுக்கக்கூடிய ஒரு மணி மந்திரௌஷதத்தைச் செய்து கொணரக் கட்டளை யிட்டான். தம்மாலானதைச் செய்யுங் கவலை யுடையவராய், தமக்குள்ளேயே இவ் விஷயத்தைப்பற்றிப் பலமுறைப் பேசி யாலோசித்து, கடைசியாய் அவ்வறிவாளர் முதலாயினோர் ஒரு முடிவுக்கு வந்தனர். அன்னோர் உடனே அரசனையணுகி, "அண்ணலரேறே! துன்பநோ யொழிந்து சுகமனத்தரா யிருப்பதற்கு, தாங்கள் மெய்யான பாக்கியத்தை யுடையவன் மேற்சட்டையை தங்கள் ராஜ சரீரத்தின்மேலணியவேண்டும். இதுவே தங்கள் பிணிக்குரிய நல்ல மருந்தென்பது எமது கொள்கை." என்று மொழிந்தனர். இதைக் கேட்டிறைவன் பேருவகை பூத்து, அன்னோர்தஞ் சொற்படி யொழுக எண்ணங் கொண்டவனாய், தன் ஏவலாளர்களைத் தேசத்தின் நாலா திக்குகளுக்கும் அனுப்பி, மேற்கூறிய பொருளைத் தேடிக்கொண்டுவரும்படி ஆக்கியாபித்தான். அவ்வாறே அத் தூதர்கள் தேசமெங்குந் திரிந்தலைந்தனர்; ஆனால், அந்தோ! அவ்விராச்சியத்திலுள்ள எந்நகரிலும் எக்கிராமத்திலும் மெய்யான பாக்கியத்தை யுடைய ஒரு மனிதனும் அகப்படவே யில்லை. யாரைப் பார்த்தாலும் ஏதாவது சஞ்சலம், மனக்கவலை, முதலியன உடையவர்களாய்த் தோன்றினர். ஏதாவதொன்று அவர்கள் மனநிம்மதியைக் கெடுத்து, அவர்களைத் துன்பத்துக் குள்ளாக்கியது. ஆயினும் சில நாட்கள் கழிந்த பின், ராஜ தூதர்கள் கடைசியாய் ஓர் ஏழை மனிதனைக் காண நேர்ந்தது. அவன் பரம ஏழையா யிருந்தபோதிலும், பாக்கிய முடையவனாய்த் தோன்றினன்; தனக்குத் துன்பத்தைத் தந்து மன நிம்மதியை யழிக்கக்கூடிய தொன்றுமில்லை யென்று வெளிப்படையாய்ச் சொன்னான்.



உடனே சேவகர் அவனைப் பிடித்துத் தம்மிறைவனணிந்து கொள்வதால் துன்ப நோய் நீங்கும் பொருட்டு, அவன் மேற் சட்டையைக் கழற்றிக் கொடுக்கும்படி அரசர் பேரால் அவனைப் பலவந்தஞ் செய்தனர். ஆனால், அந்தோ! என்ன சொல்வேன்! அத் தூதரின் எண்ணம் அவனிடத்தில் பலிக்கவில்லை. ஏனெனில் அவ்வேழைப்பரதேசி ஒரு பறவையைப்போல் மன மகிழ்ச்சியுடன் தன் னிலையில் திருப்தி கொண்டவனா யிருந்தபோதிலும், அவனிடம் சட்டையென்பதொன்றுமிலது; அவ்வளவு வறுமையால் பீடிக்கப்பட்டவனவன். மேலே போற்றியிருந்த கந்தைத் துகிலன்றி, வேறுடைகளவனிடமில்லை. மன மகிழ்ச்சிக்கும் ஆஸ்திபாஸ்திக்கும் யாதொரு சம்பந்தமுங் கிடையாதென இக்கதை நன்கு விளக்குமன்றே. இக்கதையில் வேறொரு மெய்ப் பொருளு மடங்கி யிருக்கிறது: அதாவது, உண்மையான திருப்தி அநேகமாய் மனக்கவலை முதலியன வின்றி, கிடைத்ததே போதுமென வாழும் ஏழைகளிடமேயன்றி, இவ்வுலக சுக போகங்களை யநுபவிக்கும் பணக்காரரிடங் காண்ப தரிதென்பதாம்.

செல்வம் மனிதனுடைய கடைசி கதியாயில்லாவிடின், இவ்வுலக காரியங்களனைத்துமில்லை யென்றே சொல்லலாம். இடமும் நேரமுமிருந்தால், மனிதன் தேடி யடைய முயலும் ஒவ்வொரு காரியத்தையு மெடுத்துக்கொண்டு, ஒன்றும் மேற்கூறிய மூன்று விதப் பரீட்சைக்கும் நில்லாமல் தவறிப் போவதை விளக்கிக் காட்டலாம். ஏனெனில் தொகுத்துப் பார்க்குமளவில், ஒரு பொருளோ அல்லது காரியமோ மனிதனுடைய கடைசி கதியாயிருக்க வேண்டியதாயின், முதலாவது அது சகலத்திலும் மனிதனைவிட மேலானதா யிருத்தல் வேண்டும்; இரண்டாவது எல்லாரும் சுலபமாய்த் தேடி யடையக்கூடியதா யிருத்தல் வேண்டும்; மூன்றாவது அவ்வாறடைந்த பின் அவனுக்கு மனத் திருப்தி யளித்தல் வேண்டும். இம்மூன்று நிபந்தனைகளுக்குமொத்து வராதது எதுவாயினும், அது மனித கதியு மல்ல, அவன் மேலான நன்மையு மல்ல. அப்படியே ஒவ்வொன்றையும் சோதித்து விலக்குவதால், ஆச்சரியமும் புகழ்ச்சியும் வாய்ந்த மானிட சிஷ்டியின் கதியை இவ்வுலகப் பொருள்களுக்குள் தேடுதல் பயனற்ற காரியமென நாம் இறுதியில் தெரிந்துகொள்கிறோம். நாம் இக் கண்ணீர் கணவாயில் தங்கி யிருப்பது லௌகிக காரியங்களுக் கல்ல வென்று நமது யுக்தியே நம்மைத் தூண்டி கண்டு கொள்ளும் படிச் செய்கின்றது.

அப்படியானால், நாம் இங்கிருப்பதென்னத்திற்காக? கடவுளைப் பெற் றனுபவிப்பதற் குரித்தானவர்களா யிருப்பதற்கான பிரயத்தனங்களைச் செய்யவே நா மிங்கிருக்கிறோம். அவருடைய ஞானம், நன்மைத்தனம், பாக்கியம், நித்திய ஜீவியம் வல்லமை இவற்றிற்கு நாம் பங்காளிகளாவதே நம தேக முடிவு. நம்மைச் சுற்றி விளங்கும் சராசரங்க ளனைத்தும் வாடி வதங்கி யழிந்துபோம்; ஏனெனில் அவை அநித்திய கதிக்கா யுண்டாக்கப்பட்டவை. இப் பூதலமும் மேறலமும் அவற்றுள் ளடங்கிய யாவும் அழிந்துபோம்; ஆனால் மனித ஜென்மமெடுத்த நாமோ எப்பவும் அழியாம லிருப்போம். நித்தியமென்பது விடிய, காலம் என்பது ஒன்றுமில்லாமையாய்ப் போகும்போதுதான் நாம் நமது மெய்க்கதி யடைவோம்; அப்போதுதான் நமது மெய்யான வாணாள் ஆரம்பமாகும். இதற்கிடையில் நமது வேலையுங் கடமையு மென்ன? இத்தகைய மேலான எதிர்கால சம்பவத்திற்குரிய முஸ்திப்புச் செய்வதேயாம்.

கடவுளை யடைதலே நமது மெய்க்கதியாயின், அது மேற்கூறிய எல்லா நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாகத் தெரிகிறது. முதலாவது கடவுள் நம்மினும் மேலானவர்; எல்லாப் படைப்புண்ட வஸ்துக்களைவிட அளவில்லாத மகத்துவமும் மேன்மையு முடையவரல்லவா அவர்? இரண்டாவது கடவுளை நித்திய காலமு மடைந்து சுகிப்பதற்கான ஏதுக்கள் யாவும் நம்மிட மிருக்கின்றன. ஊக்கமும் நல்லெண்ணமுங் கொண்டு பிரயாசைப்படுபவன் எவனும் இக்கதியை யடையாமல் போக முடியாது. தான் மன மறிந்து செய்யும் பிழையால்மட்டுமே அவனுக் கிது எட்டாமற் போகக்கூடும். மூன்றாவது, ஒரு தடவை யடைந்தபின், இம்முடிவு ஆத்துமத்தின் சகல ஆசைகளையுந் திருப்தி செய்து, அதனை அளவற்ற பாக்கியமுள்ள தாக்கி விடுவதால், அது வேறொன்றையுந் தேடுகிறதில்லை; அது பல நாள் தேடித் திரிந்த நித்திய ஸ்தலங் கிடைத்ததென்று, அங்கே யூழியுள்ளளவும் தேவ சந்நிதியில் மோட்சானந்தத்தை யனுபவித் திளைப்பாறலாம்.

*S. Selva Raju,*

---

## THE POPE AS UNIVERSAL MEDIATOR.

## திருச்சபைக்குத் தலைவரான பாப்பானவர் உலகத்துக்கு மத்தியஸ்தர்.

திருச்சபையுண்டான கால முதற்கொண்டு உலக அரசர்களுக்குள் அப்போதைக் கப்போது எழும்பின புரசல், மனத்தாங்கல், சண்டை, சச்சரவு முதலியவைகளில் மத்தியஸ்தராய் முன்னின்று சமாதானப்படுத்தினவர்கள் பாப்புமார்களே யென்று திருச்சபை சரித்திரத்தாலும் உலக சரித்திரத்தாலும் நன்கு விளங்கும். அப்படியே "சலேசியன்" சபையாரால் பிரசுரிக்கப்படும் பத்திரிகையிற் சொல்லப்பட்டிருக்கும் பின் வரும் அட்டவணையைக் கொண்டு எந்தெந்த பாப்புமார்கள் காலத்தில் என்னென்ன சமாதானம் உண்டாயிற்றென்று தெரிந்து கொள்ளலாம்.

(கி.பி. 440-461) அர்ச். முதலாம் சிங்கராயர் என்ற பாப்பானவர் ஹன்ஸ் ஜாதியாரின் அரசனை அற்றில்லாவைச் சமாதானப்படுத்தி இத்தாலிய தேசத்தைக் காப்பாற்றினர்.

(கி.பி. 590-604) அர்ச். முதலாம் கிரகோரியார் லோம்பார்ட் ஜாதியாரின் அரசனை அஜிதுல்போ என்பவனிடம் பரிந்துபேசி, உரோமையருக்கு உதவி செய்தார். பின்னும் இவரே லொம்பார்ட் ஜாதியாருக்கும் கீழ்த்திசை சக்கரவர்த்திகளுக்கும் மத்தியஸ்தராயிருந்து சமாதானஞ் செய்தார்.

(கி.பி. 715-741) அர்ச். 2-வது கிரகோரியாரும் அவருக்குப்பின் வந்த அர்ச். 3-வது கிரகோரியாரும் உரோமையருக்குச் சனுகாய் நின்று லொம்பார்ட் ஜாதியாரின் அரசனை லுத்பிராந்துஸ் என்பவனைச் சமாதானப்படுத்தினர்.

(கி.பி. 1049-1054) அர்ச். 9-ம் சிங்கராயர் மூன்றும் ஹென்றி என்ற சக்கரவர்த்திக்கும் ஹங்கெரி தேசத்து அரசன் ஆன்ட்ருவுக்கும் மத்தியஸ்தஞ் செய்தார்.

(கி.பி. 1055-1057) 2-ம் விக்டோர் என்ற பாப்பானவர் மூன்றும் ஹென்றி சர்க்கரவர்த்திக்கும், பிளாண்டர்ஸின் பால்ட்வின், லொரேன் ஜியோபிரி என்றவர்களுக்கும் நடுவராய் இருந்து மத்தியஸ்தஞ் செய்தார்.

(கி.பி. 1198-1215) 3-ம் இன்னொசெந்தென்பவர் இங்கிலாந்து அரசன் ஜான் என்பவருக்கும் பிராஞ்சு தேசத்தின் பிலிப்பு அகுஸ்துஸ் அரசனுக்கும் மத்தியஸ்தராய் நின்றார்.

(கி.பி. 1216-1227) 3-ம் ஒனோரியுஸ் என்றவர் பிராஞ்சு அரசனை எட்டாம் லூவீசுக்கும் இங்கிலாண்டு அரசனை 3-ம் ஹென்றிக்கும் சமாதானஞ் செய்துவைத்தார்.

(கி.பி. 1243-1254) நாலாம் இன்னொசெந்து என்னும் பாப்பவர்கள் போர்த்துகால் தேசத்து அரசனுக்கும் அவனுடைய பிரசைகளுக்கும் இருந்த பகையை நீக்கிச் சமாதானத்தை யுண்டுபண்ணினர்.

(கி. பி. 1277-1280.) மூன்றும் நீக்கொலாஸ் என்றவர் ஹாப்ஸ்பர்க்ஸ் சக்கரவர்த்தியான ருடோல்புக்கும் நேப்பிள்ஸ் அரசனை ஆஞ்சுவின் சார்லெஸுக்கும் அநேகந் தடவை சமாதானஞ் செய்து வைத்தார்.

(கி பி. 1316-1334.) இருபத்திரண்டாம் ஜான் என்ற பாப்பானவர் இங்கிலாண்டு தேசத்து அரசனை இரண்டாம் எட்வர்டுக்கும் ஸ்காட்லாண்டு தேசத்தரசனை ராபர்டென்பவருக்கும் மத்தியஸ்தராயிருந்தார்.

(கி.பி. 1334-1342.) பனிரெண்டாம் ஆசீர்வாதப்பர் இங்கிலாண்டு அரசனை எட்வர்டு பிலான்டேஜ்னெட்டுக்கும் பிலிப்புவர் லுவா என்ற பிராஞ்சரசனுக்கும் சமாதானத்தை உண்டுபண்ணினர்.

(கி.பி. 1370-1378.) பதினோராம் கிரகோரியார் போர்த்துகால் அரசனுக்கும் காஸ்ற்றில் அரசனுக்கும் சமாதானஞ் செய்து வைத்தார்.



(கி.பி. 1447-1455.) ஐந்தாம் நிக்கொலாஸ் என்றவர் ஜெர்மனி, ஹங்கெரி, இற்றலி இம்மூன்று தேசங்களுக்கும் மத்தியஸ்தரா யிருந்தார்.

(கி.பி. 1484-1492.) எட்டாம் இன்னொசெந்து என்னும் பாப்பானவர், மாஸ்கோவிலும் ஆஸ்திரியாவிலும் இங்கிலாந்திலும் சமாதானத்தை உண்டுபண்ணினர்.

(கி.பி. 1492-1503.) ஆறும் அலெக்சாண்டர் என்பவர் இஸ்பானியா தேசத்துக்கும் போர்த்துகாலுக்கும் மத்தியஸ்தஞ் செய்தார்.

(கி.பி. 1623-1644.) எட்டாம் ஊர்பான் என்றவர் மான்டுவா, மொன்பொராற்றோ என்ற மாகாணங்களின் டச்சீஸ் என்ற பட்டத்து விஷயமாயுண்டான கலாபனைகளை நீக்கி அவர்களுக்குள் சமாதானத்தை நிலைநாட்டினர்.

(கி.பி. 1572-1585.) பதிமூன்றும் கிரகோரியார் போலண்டு அரசனுக்கும் மாஸ்கோ பட்டணத்தின் சாருக்கும் மத்தியஸ்தரா யிருந்தார்.

(கி.பி. 1878-1903.) பதிமூன்றும் சிங்கராயர் ஜெர்மனிக்கும் ஸ்பேயினுக்கும் மத்தியஸ்தராய் நின்று சமாதானத்தை யுண்டுப்பண்ணினர்.

(கி.பி. 1878-1903.) முன் சொன்ன பாப்பவர்களே ஹாயிற்றி, சான்தொமிங்கோ என்ற குடியரசு நாடுகளில் உண்டான புரசல்களை நீக்கிச் சமாதானப்படுத்தினர்.

(கி.பி. 1915.) பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் என்னும் இப்போது திருச்சபையை அரசாண்டு வரும் பாப்பவர்கள், ஜெர்மனியும் ஆஸ்ற்றிரியாவும் ஒரு பக்கத்திலும், இங்கிலாண்டு, பிராஞ்சு, ருஷியா, பெல்ஜியம், செர்பியா, மொனறெனீகரோ மறு பக்கத்திலும் இருந்து நடத்தும் மகா யுத்தத்தில் படுகாயம் பட்டுசிறையாக்கப்பட்டவர்களில் இனி யுத்தத்துக்கு அருகரல்லரென தீர்மானிக்கப்பட்டவர்களை அந்தந்தத் தேசத்தாரும் தொகைக்குத்தொகை யீடாக அவரவர்தேசத்துக்கு அனுப்பிவிட வேணுமென்றும், அதுபோல் படையில் சேராத சிவில் உத்தியோகஸ்தர்களையும் அவரவர் நாட்டுக்கு அனுப்பிவிட வேணுமென்றும் கேட்டு மத்தியஸ்தஞ்செய்த படிக்கு அவரவரும் ஒப்புக்கொண்டார்கள்.

## GNANAMANI III PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 23-ம் அதிகாரம்.

என்க்கு இந்த வேதம் சரிப்படவில்லை சார்.
அபிராமி யென்னுடன் வராவிட்டால்,
டைவோர்ஸ் ஆக்ட் இருக்கவே இருக்கிறது.

விஸ்வாசநாயகரும் பவுல் போதகரும் ஒரு நாள் பேசிக்கொண் டிருக்கும் போது, நாயகர் போதகரை நோக்கி: உமது குமாரனைப்பற்றி யேதாகிலும் கேள்விப்பட்டதுண்டோ? என்று வினவ: ஒன்றும் கேள்விப்படவில்லை யென்றார் போதகர். அதற்கு நாயகர் "சென்ற வாரத்தில் நான் பக்கத்து ஊருக்குப் போய்த் திரும்புகையில் ரஸ்தாவி லிருந்த கள் கடையி லிருந்து உமது குமாரன் சலமோனும் அவனுடைய பழய சிநேகிதனாகிய நாத்தான் என்பவனும் காரிக் காரி உமிழ்ந்துகொண்டு, கடையினின்று வெளிப்பட்டார்கள்" என்றார். "கைம்பெண்சாதியான ஆன்னியின் மகனோடா?" என்று போதகர் வினவ "ஆமாம், இரண்டு வருஷத்துக்குமுன் பனைமரத்தில் கள் திருடி, பத்து நாள் ஜெயிலுக்குப்போய் வந்தவனோடு தான்" என்றார் நாயகர். அப்போது "ஐயையோ! அப்படியானல் சலமோன் கெட்டுப் போவான். இது வரையில் எவ்வளவு ஒழுங்காய் நடந்து வந்தான்! நான் மாத்திரமல்ல. புரோடஸ்டாண்டார் முதலாய் அவனுடைய நடத்தையைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள், ஆனல் இனி அவன் அந்தத் துர்மார்க்கனோடு சேர்ந்தால் அவன் கெட்டழிவான் என்று சொல்லத் தீர்க்கதரிசி தேவையில்லை. மதுபானத்தை முற்றிலுந் துறந்து விட்டவன் எவ்வளவு சீக்கிரம் அந்தக் கெட்ட வழக்கத்துக்குத் திரும்பி விட்டான்!! ஐயோ! இந்தச் சங்கதி அபிராமிக்குத் தெரியுமா?" என்று கேட்டார். "இதைப்

பற்றி நான் யாருக்குஞ் சொல்லவில்லை. நீரும் இதை இரகசியமாய் வைத்துக்கொள்ளும்; சமயோஜிதம் பார்த்து அவனுக்குப் புத்தி சொல்லலாம்.” என்றார் நாயகர். “அப்படியே ஆகட்டும் சார்.” என்று இருவரும் தங்கள் பேச்சை முடித்துக்கொண்டு வீட்டுக்குப் போனார்கள்.

சலமோனுக்குக் கலியாணம் நடந்தபின், எவ்வளவு சன்மார்க்கனாய் நடந்தானென்று முன் அதிகாரத்தில் தெரிவிக்கப்பட்ருக்கிறது. ஞாயிற்றுக் கிழமையில் மாத்திரமல்ல; வெற்று நாட்களிலும் பூசை கண்டு, திவ்விய நற்கருணை சந்தித்து, வாரம் வாரம் தவறாமல் பாவசங்கீர்த்தனஞ் செய்து நன்மை வாங்கி, தன் மனைவியோடு சேர்ந்து காலைச்செபம் இராச்செபஞ் செய்து, ஞானவாசகம் வாசித்து, செப அப்போஸ்தல சபையின் ஒழுங்குகளை நுணுநுணுக்கமாய் அனுசரித்து, தவறாமல் சபை கூடும்போது ஆஜராகி வந்தவனுடைய நடத்தை கலியாணமான மறுவருஷத்திலேயே முழுதும் மாறிவிட்டது! நாடோறும் பூசை கண்டவன் ஞாயிற்றுக் கிழமையில் மாத்திரம் கோவிலுக்குப் போவான். வாரந்தோறும் நன்மை வாங்கினவன் மாசத்துக்கு அல்லது 6, 7 மாசத்துக்கு ஒருவிசை, அதுவும் தன் மனைவியின் கட்டாயத்தால், நன்மை வாங்குவான். அபிராமி ஞான வாசகம் வாசிக்கும்போது, நாவல் (கதை) புஸ்தகத்தை யெடுத்து வாசிப்பான். காலைச்செபவேளையில் குறட்டைவிட்டுத் தூங்குவான். இராச்செப வேளையில் சுருட்டு பிடித்துக்கொண்டு வெளி வாசலில் உட்கார்ந்திருப்பான். சபைக் கூட்டத்திற்குப் போகிறதுமில்லை.

என்ன, இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமையாச்சே! ஏன் பூசை காணவில்லை யென்று அவனுடைய மனைவி கேட்டால், “பராபரன் கோவிலில் மாத்திர மிருக்கிறாரோ? நமது வீட்டில் இல்லையோ?” என்பான். வெள்ளிக்கிழமைகளில் தனக்கு அசௌக்கியமென்று இறைச்சி சமைக்கச் சொல்வான். இராவேளையில் நேரஞ்சென்று வீட்டுக்குப் போவான். இவனுடைய பழைய புரோடஸ்டாண்டு சிநேகிதர் இவன் வீட்டுக்கு அடிக்கடி வருவார்கள். அவர்கள் வீட்டுக்கு இவனும் போவான்.

இப்பேர்ப்பட்ட விகாரமான காரியங்களை அபிராமி பார்க்கப்பார்க்க அதிக மனவருத்தங்கொண்டு, ஏதோ தீங்கு சம்பவிக்கப் போகிறதென்று தனக்குள் சொல்லிக்கொள்வாள். சலமோன் வீட்டில் இல்லாதபோது, தேவதாஸ் பண்டிதர் சித்திரித்துக் கொடுத்த படத்துக்கு முன் முழங்காலிலிருந்து தன் நிர்ப்பாக்கிய புருஷன் மனந்திரும்பும்படி கண்ணீர் அழுகையுடன் மன்றாடுவாள்.

ஒருநாள் சலமோனை விஸ்வாசநாயகர் வழியில் கண்டு, “என்ன, சலமோன்? கடந்த மூன்று மாதமாய் ஏன் ஞாயிற்றுக்கிழமை பூசைக்கு வரவில்லை? சபைத் தலைவனாயிருந்துகொண்டு சபைக் கூட்டத்துக்கும் வராமல் போய்விட்டாய்? ஏன் அப்பா இப்படிச் செய்கிறாய்?” என்று கேட்டார்.

சல.—அசௌக்கியத்தைப் பற்றி வரவில்லை.

விஸ்.—என்ன! மூன்றுமாதமாய் வியாதியா?

சல.— (சிரித்துக்கொண்டு) ஞாயிற்றுக் கிழமை பூசை காணாவிட்டால் பாவமா சார்?

விஸ்.—(அதிசயித்துச் சிலநேரம் பேசாமல் மௌனமாயிருந்து) என்ன, சலமோன், இப்படிப் பேசுகிறாய்? நான் அதைப்பற்றி எத்தனைவிசை சொல்லியிருக்கிறேன்? சுவாமியாரும் பலமுறை உனக்குச் சொல்லியிருக்கிறார். இப்போது அது பாவமா என்று என்னை வினவுகிறாய்?

சல.—உங்கள் ரெலிஜன் (வேதம்) கடினமானது சார்.

விஸ்.—என்ன சலமோன், உன் கேள்விகள் எல்லாம் விநோதமாயிருக்கிறதே?

சல.—என்ன விநோதம் சார்? ஞாயிறு தவறாமல் கோவிலுக்குப் போவதும் வெள்ளிக்கிழமையில் சுத்தபோசனமா யிருப்பதும், ஒருசந்தி பிடிப்பதும், பாவ சங்கீர்த்தனம் செய்வதும் சுலபமான காரியங்களா சார்?

விஸ்.—எது துவக்கி இதெல்லாம் உனக்குக் கடினமாய்விட்டது?

சல.—எப்போதுந்தான்.

விஸ்.—கடந்த ஒன்றரை வருஷகாலமாய்த் திருச்சபை ஒழுங்குபடி சுமுத்திரையாய் நடந்து வந்திருக்க, இப்போதுதானா உனக்கு அதெல்லாம் கடினமாய்விட்டது? சலமோன் ஜாக்கிரதையாயிரு! போகக்கூடாத இடத்துக்கு நீ போகாதே—வேத விரோதிகளோடு அதிகமாய்ச் சகவாசஞ் செய்யாதே.



சல.—என்ன சார்! முன்னே ஒருநாள் நான் கள்கடையிலிருந்து வெளியே வந்ததை நீங்கள் பார்த்து இப்படிப் பேசுகிறீர்களோ? சில்லறை மாற்றும்படி நானும் நாத்தானும் கடைக்குப் போய் வந்தோம்.

விஸ்.—நீ யென்ன மாற்றினாலும் மாற்றிக்கொள். ஆனால் உன் மனது இப்போது, முழுதுங் கெட்டுப்போய்விட்டது!

சல.—ஒருபோதுங் கெடவில்லை சார்.

விஸ்.-சலமோன், சலமோன், ஜாக்கிரதை! அபிராமியைக் கலியாணஞ் செய்வதற்குமுன் என்னிடம் ஆணையிட்டுச் சொன்னதெல்லாம் மறந்துவிட்டாயோ? அப்போது நீ பேசின விதத்துக்கும் இப்போது பேசும் விதத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்!

சல.—என்ன வித்தியாசஞ் சார்?

விஸ்.—கலியாணம் ஆகுமட்டும் ஆடின ஆட்டத்துக்கும் இப்போது ஆடுகிற ஆட்டத்துக்கும்......என்று சொல்லி முடிப்பதற்குள்ளாக,

சல.—என்ன சார்? அந்தப் பெண்ணுக்காக நான் உங்கள் வேதத்துக்கு வந்தேனோ? எனக்கு வேறே பெண் கிடைக்காமல் அந்தப் பெண்ணைக் கட்டவா வந்தேன்? ஈசாக் உபதேசியார் மகள் தானோ ஓவியமான பெண்? உலகத்தில் வேறு பெண்கள் இல்லையா? எத்தனையோ பேர் ஈசாக் உபதேசியாரிலும் திரவியவான்கள் தங்கள் மகளைக் கலியாணஞ் செய்யும்படித் தண்டம் போட்டுக் கேட்டார்கள்!

எனக்கு இந்த வேதம் சரிப்படவில்லை சார். அப்படி அபிராமி யென்னுடன் வராவிட்டால் டைவோர்ஸ் ஆக்ட்டு இருக்கவே இருக்கிறது. அப்போது பார்ப்பீர்கள் (என்று முரட்டுத்தனமாய்ப் பேசி சரசரவென்று நடந்து போனான். விஸ்வாச நாயகர் அவனைக் கூப்பிட்டு அழைத்தும் பேசாமல் போனான்.)

அப்போதுதான் சலமோனுடைய சூதையும் கள்ளவேஷத்தையும் விஸ்வாச நாயகர் கண்டுகொண்டார். “ஆ! ஆ! இக்கபடன் அந்தப் பெண்ணை மணமுடிக்க என்ன கள்ளவேஷம் போட்டான்! காரியங் கைகூடின உடனே, எப்படி மாறிப்போனான்! பாவம்! அந்தப் பெண் அபிராமி என்ன பாடுபடப் போகிறாளோ! அந்தக் கண்ணராவியைப் பார்க்கும் ஈசாக் உபதேசியார் எப்படித் துக்கப்பட்டு அழப்போகிறாரோ! என் கட்டாயத்தினால்தானே அவர் தன் மகளை அந்தப் படுபாவிக்குக் கொடுத்தார். பழியெல்லாம் என்பேரில் தானே விழப் போகிறது! ஆனால் நான் நல்ல கருத்தோடு இந்தக் கலியாணங் கூடும்படி செய்தேனே ஒழிய, அதைக் கெடுக்கும்படியல்ல. இந்தப் படுக்காளிப் பயல் இப்படிச் செய்வானென்று தெரிந்திருந்தால் இதற்குச் சம்மதித்திருக்கமாட்டேனே என்று இது முதலியதைத் தன் மனதில் நினைத்துக் கொண்டு, விஸ்வாச நாயகர் தன் வீடுபோய்ச் சேர்ந்தார்.

சலமோனும்தன் வீட்டுக்குப்போய்ச்சேர்ந்தவுடனே, செப அப்போஸ்தல சபை விஷயமாகத் தன்னிடத்திலிருந்த புஸ்தகம், காகிதம், கணக்கெல்லாம் ஒரு கட்டாகக் கட்டி, விஸ்வாசநாயகருக்கு ஒரு கடிதமுமெழுதி, இனி அந்த வேலையைப் பார்க்க தன்னால் கூடாதென்று தெரியப்படுத்தி, தான் அனுப்பும் புஸ்தகங்களைக் குருசுவாமியாருக்குக் கொடுத்துவிடும்படிக் கேட்டுக்கொண்டான்.

சலமோனுடைய கள்ள வேஷத்தைப்பற்றிக் கேள்விப்பட்டவர்கள் அதிசயித்தார்கள். இப்பேர்ப்பட்ட மனிதர் உலகத்தில் உண்டோ என்று சிலர் சொன்னார்கள். இவன் மெய்யாகவே, பரிசேயன் என்று வேறு சிலர் சொன்னார்கள். பார்! ஈசாக் உபதேசியாருடைய குடும்பம் முழுதும் மிஷன் வேதத்தில் வந்து சேரப் போகிறது என்று புரோடஸ்டாண்டார் சொல்லிக் கொண்டார்கள்.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் அபிராமி கோவிலுககுப்போய் வீட்டுக்கு வந்தபின், போசனம முஸ்திப்பு செய்து ஒரு புஸ்தகத்தை யெடுத்து வாசித்துக்கொண்டிருக்கும் பொழுது, அவளுடைய புருஷன் சலமோன் குடிவெறியுடன் உள்ளே பிரவேசித்து, சிரித்துக்கொண்டு, அபிராமி! இன்றைக்கு செர்மன் (பிரசங்கம்) எவ்வளவு நேர்த்தியாயிருந்தது!

அபி.—நீங்கள் கூட கோவிலுக்கு வந்திருந்தீர்களா?

சல.—நான் என்ன உலகத்தானா? கோவிலுக்குப் போகாதிருக்க.

அபி.—இல்லையில்லை நீங்கள் கோவிலுக்குப் போய் அநேகமாத மாகிறதே. நீங்கள்

கோவிலுக்குப் போனதால் எனக்கு மெத்த சந்தோஷம்.

சல—எந்தக் கோவிலுக்கு?

அபி.—(சற்று விசனத்துடன்) நமது கோவிலுக்குத் தானே?

சல.—ஆம், நமது பூர்வீக கோவிலுக்கு.

அபி.—என்ன மிஷன் கோவிலுக்கா?

சல.—சந்தேகமா? செர்மன் கேட்டதுடன் இராப்போசனமும்—பெற்றேன்.

அபிராமி விசனமும் அதிசயமும் கொண்டவளாய்ச் சற்றுநேரம் மௌனமா யிருந்தாள்.

சல.—மறுபடியும் சத்தமாய்ச் சிரித்துக் கொண்டு, என்ன, அபிராமி, மிஷன் கோவிலுக்குப் போனதால் தோஷமா? நீயும் இன்று வந்திருந்தால் என் சந்தோஷம் பூர்த்தியாயிருந்திருக்கும்.

அபி—மிஷன் கோவிலுக்குப் போவது பாவமல்லோ?

சல.—கோவிலுக்குப் போகிறது பாவமா?

அபி.—நீங்கள் திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன், மிஷன் வேதம் அபத்தமானதும் தவறானதுமென்று சொன்னதை மறந்துவிட்டீர்களோ?

சல.–அப்படிச் சொல்லும்படி கற்பித்ததின் மேல் சொன்னேன். அதனால் என்ன பிசகு? அது இருக்கட்டும். நீ யெப்போது வருவாய் மிஷன் கோவிலுக்கு?

அபி.—நானா? நானா? உலகம் புரண்டாலும் சத்திய வேதத்தை விட்டு அபத்த வேதத்தில் பிரவேசியேன். என் தலை போனாலும் இழிவுக்குரிய அவ்வேலையைச் செய்யேன். இது சத்தியம்.

சல.–புருஷன் போகிற இடத்துக்குப் பெண்சாதி போக வேண்டாமோ?

அபி.—புருஷன் கிணற்றில் குதித்தால் பெண்சாதியும் அதில் குதிக்க வேண்டுமோ? அவன் நஞ்சு அருந்தினால் இவளும் அதை தின்ன வேண்டுமோ?

சல.—என்னத்துக்கு இப்போது அந்தக் கதை? காலம் கிட்டி யிருக்கிறது. அப்போது நீ மாத்திரமல்ல, உன் தகப்பனும் என் தாய் தந்தையோரும் அதி சீக்கிரத்தில் சேரப் போகிறார்கள். இந்தச் சத்தியத்துக்கு இந்த ஊரே சாக்ஷி கூறப் போகிறது என்று சொல்லி, கை கால் கழுவி சாப்பாட்டுக்கு உட்கார்ந்தான்.

அபிராமியோ தன் புருஷனுடைய சம்பாஷணையால் கலவரமும் சந்தேகமும் கொண்டவளாய் என்ன துற்காலம் சம்பவிக்குமோ என்று அச்சங் கொண்டபோதிலும் தனக்கு எதிராகத் தொங்கும் படத்தைப் பார்த்து ஆறுதல் கொண்டாள்.

இதற்குப் பின் சலமோனுடைய குணம் முழுதும் மாறிக் கெட்டுப்போனது. குடியாத நாளில்லை. குடித்தாலும் வெறி யெடுக்கக் குடிப்பான். ஒரு நாளைக்கு ஒரு விசை மாத்திரமல்ல, இரண்டு மூன்று விசை குடிப்பான். இந்த நிர்ப்பாக்கிய குடியைப்பற்றி அநேகரிடத்தில் கடன் வாங்கும்படி நேரிட்டது. கடன்காரர் பணங்கேட்டால் இதோ இன்றைக்கு நாளைக்கு என்பான்.

இந்தக் கட்டைப்பற்றி தன் கோட்டு,சராய் முதலியவைகளை அறை குறையாய் விற்பான். சில சமயங்களில் தன் பெண்சாதிக்குத் தெரியாமல் அவளுடைய துணிமணிகளைத் திருடிக் கொண்டுபோய் விற்றுக் குடித்து விடுவான். கள்ள சாவிபோட்டு பணப்பெட்டியைத் திறந்து குடித்து விடுவான். இதனால் ஈசாக் உபதேசியாருக்கும் அபிராமிக்கும் சொல்லி முடியாத துக்கமுண்டானது. காணமல் போன பொருளைப்பற்றிச் சலமோனைக் கேட்டால் எனக்குத் தெரியாது என்பான். நான் உங்கள் வீட்டுக் காவல்காரனோ என்பான். சில சமயங்களில் கோபத்துடன் நான் திருடனா என்பான். இதைப்பற்றி துணிமணி முதலியவைகளைக் கண்ட கண்ட இடத்தில் போடாமல் பெட்டியில் போட்டு பூட்டும்படி நேரிட்டது. சில நாளைக்குள் ஈசாக் உபதேசியாருடைய வஸ்திரங்களும், கோட்டுகளும், கைக் கெடியாரமும், அபிராமியுடைய வஸ்திரங்களும் மாயமாய்ப் போயின.

ஒரு நாள் அபிராமி சமையல் வீட்டில் வேலையாயிருந்த வேளையில் உள் வீட்டில் சந்தடி கேட்டு அங்கே போய்ப் பார்த்தபோது, சலமோன் நகைப் பெட்டிக்குக் கள்ளச் சாவி போட்டுத் திறந்துகொண்டிருந்தான். அபிராமியைப் பார்த்தவுடனே கள்ளவிழி விழித்து, பே, பே, என்று உளறும்போது "இப்படியும் செய்யலாமா!" என்று அவன் கையிலிருந்த கொத்துச் சாவியைப் பிடுங்கிக்கொண்டாள். வெட்கி நாணி அவன் எழுந்திருந்தபோது அவன்



கக்கத்திலிருந்து விழுந்த மூட்டையை அவிழ்த்துப் பார்க்கையில், அதில் தன் பட்டுத் தாவணியும் ஈசாக் உபதேசியாருடைய கோட்டும் சில வெள்ளிப் பொத்தான்களும் இருக்கக்கண்டு,இது என்ன அக்கிரமம்! என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது; சலமோன் எழுந்து வீட்டுக்கு வெளியே நின்றுகொண்டிருந்த நாத்தான் என்னும் போக்கிரியோடு சேர்ந்து கடைவீதி பக்கமாய்ப் போய்விட்டான். அதுமுதல் 10-நாள் வரைக்கும் வீட்டுக்கு வந்தவனல்ல.

ஈசாக் உபதேசியார் வீட்டுக்கு வந்த பின், நடந்த சங்கதி யெல்லாம் தன் குமாரத்தி மூலமாய் அறிந்து சொல்லிமுடியாத விசனப்பட்டார். இந்த இழிவான சங்கதியைப்பற்றி யாருக்கும் வெளிப்படுத்தாவிட்டாலும் சலமோனுடைய வெட்கத்துக்குரிய செய்கையைப்பற்றி ஊரார் அறிந்து அவனை யிகழ்ந்து தூஷணித்தார்கள்.

## CORRECT THINGS FOR CATHOLICS.
## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

தொகைப்பட வரும்

மேலான ஞானவாசகம்.

ஒன்றென்னு மிலக்கத்தில்.

1. வது:—உனக்கிருக்கிற தெல்லாங் கூடி உன்னை யுருவாக்கினவரும் நீ நமஸ்கரிக்க் வேண்டியவருமான ஒரே தெய்வந்தான்.

2. வது:—நீ கண்டு பாவிக்கவேண்டியவர் ஒரே இரக்ஷகர்தான்.

3. வது:—நீ விசேஷமான வகையாய் மன்றாட வேண்டியவள் ஒரே தேவமாதாதான்.

4. வது:—இரட்சணியமடையவேண்டியது ஒரே ஆத்துமந்தான்.

5. வது:—அடக்கி ஆளவேண்டியது ஒரே சரீரந்தான்.

6. வது:—திருத்தி நடத்தவேண்டியது ஒரே மனசாக்ஷிதான்.

7. வது:—நித்திய காலத்துக்குஞ் சம்பாதித்துக்கொள்ள வேண்டியது ஒரே மோக்ஷந்தான்.

8. வது:—மோட்சத்தை யடைவதற்குக் கைக்கொள்ளவேண்டிய சாதாரண சத்தியவேத மொன்றே. அதினால் ஓங்கிப் பரவித் திரிபின்றி நிலைநிற்குந் திருச்சபையு மொன்றே. அத் திருச்சபையின் மூப்பரும் ஒருவரேயாம்.

9. வது:--காலாகாலத்துக்குந் தப்பித்துக்கொள்ள வேண்டியது ஒரே நரகந்தான்.

10. வது:—நீ இடைவிடாமல் தியானம் பண்ணவேண்டியது ஒரே நித்தியந்தான்.

11 வது:–நீ புண்ணியங்களைச் சம்பாதித்துக் கொள்வதற்குள்ளது ஒரே காலந்தான்.

12. வது:—நீ துவேஷிக்க வேண்டியது ஒரே உலகந்தான்.

13. வது:—நீ கணக்குச் சொல்ல ஏற்பட்டுள்ளது ஒரே தீர்வைதான்.

இரண்டென்னு மிலக்கத்தில்.

1. வது:—செய்யவேண்டிய நல்வினை, தள்ளவேண்டிய தீவினை என விரண்டாம்.

2. வது:—கற்கவேண்டிய கல்விப் பொருள், மிதமிஞ்சாமல் ஆளவேண்டிய செல்வப் பொருளென விரண்டாம்.

3. வது:—பரித்தியாகஞ் செய்ய வேண்டிய இம்மை, கெட்டியாய்ச் சம்பாதிக்கவேண்டிய மறுமை என விரண்டாம்.

4. வது:–மனிதனோடு பிறக்கிற சென்மப் பாவம், பிறந்தபின் செய்கிற கர்மப் பாவமென விரண்டாம்.

5. வது:—தேவ கற்பனைகளையெல்லாம் அடக்கிக் கொண்டிருக்கின்ற நிபந்தனைகள் இரண்டு. அவையாவன: எல்லாத்தையும் பார்க்கச் சர்வேஸ்வரனை ஸ்நேகித்தல், தன்னைத் தான் ஸ்நேகிக்குமாப் போலப் புறத்தியாரையுஞ் ஸ்நேகித்தல் என விரண்டாம்.

மூன்றென்னு மிலக்கத்தில்.

1. வது:--சர்வேஸ்வரனிடத்தில் நாம் விசுவசித்து வணங்க வேண்டிய பிதா சுதன் இஸ்பிரீத்து சாந்து என்னும் மூன்றாட்களாம்,

2. வது:—மேலான நற்கிரியைகள் மூன்று. அவையாவன: தானம், செபம், உபவாசமென மூன்றும்.

3. வது:—சுவிசேஷத்தின் மேலான புத்தி மூன்று. அவையாவன: இச்சையுள்ள தாரித்திரம், ஓயாத விரத்தத்துவம், பழுதற்ற கீழ்ப்படிதலென மூன்றும்.

4. வது:—நாமுன் செய்த பாவங்களை நினைந்தழும் இறந்தகாலம், இப்பொழுது உலகம், பசாசு, சரீரம் என்னும் சத்துருக்களை வென்று நித்திய ஜெயமடைய ஞானப்போர்புரியும் நிகழ்காலம், நித்தியத்தில் மோக்ஷ முடிபெறும் எதிர்காலம் ஆக மூன்று காலங்களாம்.

5. வது:—பேரின்பத்தை யடைவதற்கு வெறுக்கவேண்டிய மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என மூன்றாசைகளாம்.

6. வது:—பாவத்துக்கு உள் சத்துரு மூன்று. அவையாவன: அறியாமை, ஆசாபாசம், கெடுபுத்தி என மூன்றும்.

7. வது:—தருமத்தின் சத்திகள் மூன்று. அவையாவன: தேவ ஸ்நேகங் கலந்த தருமமானது தர்மவாளரைப் பாவத்தினின்று நீக்கல், இஷ்டப் பிரசாத அந்தஸ்தி லிருக்கப்பட்டவர்களுக்குச் சுயப்பேறினால் பேரின்ப பாக்கியம் விளைவித்தல், ஐஸ்வரியத்தைப் பெருகச் செய்தல் என மூன்றும்.

8. வது:—ஆள்பவர்களுக்குப் பிரசைகள்பேரிலுள்ள கடமைகள் மூன்று. அவையாவன: பிரசைகளுக்கு நல்ல மாதிரிகை கொடுத்தல், தகாதவைகளை அவர்களிடத்திலிருந்து நீக்குதல், அவர்களைச் சத்துருக்களிடத்தினின்று காப்பாற்றுதல் என மூன்றும்.

9. வது:—ஆராதனை மூன்று அவையாவன:—"லத்தறீயா" வென்பது தெய்வத்திற்குச் செய்யு மாராதனையாம், "இப்பேர்தூலியா" வென்பது தேவமாதாவுக்குச் செய்யு மாராதனையாம். "தூலியா" வென்பது சம்மனசுக்களுக்கும் அர்ச்சிய சிஷ்டவர்களுக்கும் செய்யும் ஆராதனை என மூன்றும்.

10 வது:—ஞானத்தாய் ஞானத்தகப்பன்மார் கடமைகள் மூன்று. அவையாவன:-ஞானப்பிள்ளைகள் சிறுபோதே மந்திர உபதேசங்கள் கற்கும்படி செய்தல். அவர்கள் பூலோகத்தின் மாய்கையினாலேயும் பாசங்களினாலேயும் சிற்றின்பச் சுகங்களினாலேயுங் கெடாத படிக்குச் சத்திய வேதத்தில் திடப்படுத்தல், அவர்களுடைய சரீரத்திற்கு வேண்டிய அனுகூலங்களைத் தேடுகிறது மன்றி அவர்களோடே கலியாணம் பண்ணுமலுமிருத்தல் என மூன்றும்.

நான்கென்னு மிலக்கத்தில்.

1. வது:—பிரதான புண்ணியங்கள் நாலு. அவையாவன: விவேகம், நீதம், மனத்திடம், மட்டசனம் என நான்காம்.

2. வது:—மனிதருடைய முடிவு நான்கு. அவையாவன:- மரணம், தீர்வை, மோட்சம், நரகம் என நான்காம்.

3. வது:—பழிவாங்கப் பரலோக மட்டும் அப்பயமிடும் பாவங்கள் நாலு. அவையாவன: வேணுமென்று கொலை செய்தல், சுபாவத்துக்கடாத மோகபாவஞ் செய்தல், ஏழைகளையும் கைம்பெண்சாதிகளையுந் தாய்தகப்ப னற்றவர்களையும் கெடுத்தல், உழைத்தவர்களுக்குக் கூலிகொடாதிருத்தல் என நான்காம்.

4. வது:—நாம் சீர்படுத்தி ஆளவேண்டிய புத்தி, மனது, நினைவு, அகங்காரம் என்னப்பட்ட அந்தக்கரணங்கள் நான்காம்.

5. வது:—கேடு வருத்தும் இழி சொற்கள் நாலு. அவையாவன: கோள், பொய், கொடுஞ்சொல், பயனில்சொல் என நான்காம்.

6. வது:—வானோர் வரங்கள் நாலு. அவையாவன: இலகு (கனமின்மை), சூக்குமம் (கண்டிப்பின்மை), அக்ஷயம் (கேடின்மை), பிரகாசம் (விளக்கம்) என நான்காம்.

7 வது:—தெய்வத்தால் உண்டு பண்ணப்பட்ட மெய்யான உரோமன் கத்தோலிக் கென்னுந் திருச்சபைக்குரிய அடையாளங்கள் நாலு. அவையாவன: ஏகமாயிருத்தல், பரிசுத்தமா யிருத்தல், பூலோகமெங்கு மற்புதமாய்ப் பரம்பி யிருத்தல், அப்போஸ்தலர்க ளிடத்திலிருந்து வழியிருத்தல் என நான்காம்.



8. வது:—பிரசைகளுடைய கடமைகள் நாலு. அவையாவன: மன்னவர்களுக்குக் கீழ்ப்படிதல், அவர்களுக்கு மரியாதை செய்தல், அவர்களுக்குப் பிரமாணிக்கமா யிருத்தல், இறை கொடுத்தல் என நான்காம்.

9. வது:—ஆவலாதிப் படுத்தும் வகை நாலு. அவையாவன: பிறர் செய்யாத குற்றத்தை அவர்கள்மேற் சாட்டல், பிறர் செய்த தப்பிதத்தை அதிகப்படுத்திச் சொல்லல், மறைந்திருக்கும் தப்பிதத்தை வெளிப்படுத்தல், நற்கிரியைகளைக் கெட்டவைகளாய் மாற்றிக்காண்பித்தல் என நான்காம்.

இதிலிரண்டாம் வகை

10. வது—பிறர் செய்த நன்மைகளை இல்லை யென்று சாதித்தல், அவைகளைக் குறைத்துக் காட்டல், அவைகளைச் சொல்ல வேண்டும்போது சொல்லாதிருத்தல், பிறரைத் தாழ்வுப்படப் புகழ்தல் என நான்காம்.

11. வது:—பிள்ளைகள் தாய்தகப்பன்மார்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் நாலு. அவையாவன: பிள்ளைகள் தாய் தகப்பன்மார்களை ஸ்நேகித்தல், அவர்களுக்குச் சங்கை செய்தல், அவர்களுக்குக் கீழ்ப்படிதல், தாய் தகப்பன் ஆத்துமங்களுக்குஞ் சரீரங்களுக்கும் நேரிடும் அவசரங்களில் அவர்களுக்கு ஒத்தாசை செய்து அவர்களுக்கு மனத்தாங்கல் வராமல் சவரக்ஷணை செய்தல் என நான்காம்.

12. வது:—சாவானபாவத்தால் வரும் பிரதான கேடுகள் நாலு. அவையாவன: தெய்வத்தைப் பகைத்தல், ஆத்துமா மாசு கொள்ளல், நரகத்துக் காளாகுதல், வேறே பாவங்களைக் கட்டிக்கொள்ள வழி திறந்து கொள்ளல் என நான்காம்.

13. வது:—காய்மகாரத்துக்கு மருந்து நாலு. அவையாவன: காய்மகாரத்தால் தனக்கு நன்மை வராமற் றின்மை மாத்திரம் வரும்படி யோசித்தல், புறத்தியாருக்கு வரும் நன்மையைக்கண்டு களிகூறல், புறத்தியாருக்கு அப்படிப்பட்ட நன்மை வந்தமையால் அவரோடே சந்தோஷித்தல், உலகக் கீர்த்தியைச் சட்டை பண்ணாதிருத்தல் என நான்காம்.

14. வது:—மிஞ்சின குடியின் அடையாளங்கள் நாலு. அவையாவன: நல்லவை தீயவை என்றுணரக் கூடாதிருத்தல், தன் தொழிலைச் செய்யக் கூடாதிருத்தல், தான் பேசும் பேச்சின் கனகனத்தை அறியாதிருத்தல், தான் குடியாதிருக்கையில் செய்யாத கிரிகைகளைச் செய்தல் என நான்காம்.

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.—ப—ர்.]

### பரதகுல மாதாவின் மஹோற்சவ சிறப்பு.

இலங்கை தென் மாகாணத்தின் தலைநாடாகிய காலி நகரில் பரதகுல மக்களால் பரிசுத்த பனிமயத்தாயின் மஹோற்சவம் நிகழும் 1915-ம் வருடம் ஆக்ஸ்டு மாதம் 5தேதி வெகு கெம்பீரமாய்க் கொண்டாடப்பட்டது.

அன்று உதயம், அர்ச். கன்னிமரியாயின் ஆசனக்கோவிலில் விக்கர் ஜெனரல் சங். J. கூர்மன் சுவாமி அவர்களுடன் சங். பெஸ்டினிய சுவாமி அவர்களும், சங். பருனூந்து சுவாமி அவர்களும் டீக்கன் சப்டீக்கனாக நின்று திவ்ய பலிபூசை ஒப்புக்கொடுத்தார்கள்.

பரத குலத்தவர்கள் எல்லோரும் அவர்களுக்குப் பாதுகாவலாகிய அர்ச். பனிமய மாதாவின் பூசைகண்டு ஒருவர் தவறாமல் மிகவும் ஆராதிக்கப்பட்ட திவ்ய நற்கருணை பந்தியில் அமர்ந்தார்கள். பூமாலைகளால் ஜோடித்த ஓர் ஆசனத்தில் அர்ச். தேவமாதாவின் சுரூபத்தை எழுந்தேற்றம்செய்து மனவல்லய ஜெபம் செய்து கொண்டிருந்தார்கள்.

மற்றய வருடங்களைவிட இவ் வருடச் சிறப்பு வெகு மேலானதெனச் சொல்வதற்கு இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகளே சாட்சிகள். இலங்கையில் கீர்த்திவாய்ந்த "மார்னிங்லீடர்" பத்திரிகை பெருநாள் சிறப்பை பிரசுரித்து அடியில் சொல்வதாவது: 'காலிநகரில் இருக்கும் பரத குலத்தவர்கள் பரிசுத்த பனிமய மாதா பெருநாளைக் கொண்டாடுவதோடு அவ்விடத்து கோவிலில் நடக்கும் விசேஷங்களுக்கெல்லாம் முகான்மையாகவே நிற்கிறார்கள். வருடா

வருடம் திவ்ய நற்கருணைப் பெருநாளைக்காக இவர்கள் எல்லோரும் ஏகோபித்துச் சமர்ப்பிக்கும் பந்தல் வெகுவாய் மெச்சத்தக்கதே" என்பதேயாம்.

இவ்வருட மஹோற்சவத்தை அலங்காரமாய்க் கொண்டாடிய கனவான்களுக்குப் பரதகுல மாதாவாகிய பரிசுத்த பனிமயத்தாயின் விசேஷ மன்றாட்டின் பலன் உண்டாவதாக.

காலி
8—8—15.

இங்ஙனம்,
பனிமயதாசன்,
J பிச்சை ரோட்றிகஸ்.

---

## மயிலை காட்டுக்கோவில் பங்கு சுவாமியார்.

ஐயா, பத்திராதிபரே,

சென்னை மாநகரைச் சேர்ந்த திரு மயிலாப்பூரில் காட்டுக் கோவில் என்றழைக்கப்படும் அர்ச். ஞானப்பிரகாசமாதாவின் ஆலயமொன்றிருக்கிறது. இந்தக் கோவில் கி. பி. 1516-ம் வருஷம் போர்த்துக்கல் தேசத்தாரால் வெகு அருமையாய்க் கட்டப்பட்டது. தென் இந்தியாவிலுள்ள எல்லா கத்தோலிக்குக் கிறிஸ்துவக்கோவில்களுள் இதுவும் ஓர் விசேஷித்த கோவில். இந்தக் கோவில் கட்டப்பட்டது முதற்கொண்டு இந்நாள் வரையிலும் பழுது பார்க்கப்பட்டதில்லை. இக்கோவிலை ஜனங்கள் சாதாரணமாகக் காட்டுக் கோவில் என்றும், பனிமாதா கோவில் என்றும், அர்ச். ஞானப்பிரகாசமாதா கோவில் என்றும் அழைப்பது வழக்கம்.

இந்தக் கோவிலின் சிறப்பையும், அதின் சரித்திரத்தையும் 1914-௵ ஜூலை-௴ "நல்ல ஆயன்" சஞ்சிகை 165-ம் பக்கம் "கடிதங்கள்" என்னும் கலத்தில் அச்சிடப்பட்டிருந்ததை ஷை பத்திரிகையின் கையொப்ப அன்பர்கள் வாசித்திருக்கலாம். ஆகையினாலே, ஷை தேவாலயத்தைப் பற்றிய அரிய விஷயங்களை மறுபடியும் நான் இங்குவரைவது அத்யாவசியமாயிராவிடினும் ஷை கோவிலின் விசாரணைக் குருவாயிருந்த சங். G. F. பாயிஸ் சுவாமிகள் தேக அசௌக்கியத்தின் நிமித்தம் உபகாரச் சம்பளம் பெற்று தமது சுயநாடான கோவைக்குப் போன பிறகு அவருக்குப் பதிலாக வந்திருக்கும் சங். M. மோதவாஸ் பங்கு சுவாமிகளால் உண்டாயிருக்கும் சில சீர்திருத்தங்களை இங்கு சுருக்கமாய்த் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இவர் தம்முடைய பங்கு விசாரணையைச் சேர்ந்த கிறிஸ்துவர்கள்மட்டில் அதிக அன்பும் அநுதாபமு முள்ளவராய் அவர்களைச் சீர்படுத்தி ஒழுங்கு செய்வதில் உற்சாகமும், ஊக்கமுமுடையவர். அநேக வருஷங்களாக நிறுத்தப்பட்டிருந்த திருவிழாக்களையும், தேர் வெளிச் சுற்றுப்பிரகாரங்களையும் ஆரவாரச் சிறப்புடன் கொண்டாடும் ஆவலுடையவர்.

கடந்த ஜூன்௴ 20-ம் தேதி திவ்ய நற்கருணை வெளிச்சுற்றுப்பிரகாரம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வருஷா வருஷம் நடந்தேறிவரும் அர்ச். ஞானப்பிரகாசமாதாவின் திருவிழாவை இவ்வருஷம் பக்தி சிறப்புடன் கொண்டாடும் பொருட்டு, ஜூலை-௴ 29-ம் தேதி கொடியேற்றஞ் செய்வித்து, நவநாட் காலையில் ஜெபம், பிரார்த்தனை, தேவமாதா தோத்திர சங்கீதங்கள் பாடகர்களால் (Choirs) பாடப்பட்டுப் பூசை முடிந்தவுடன் திவ்யநற்கருணை ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டு வந்தது.

ஆகஸ்ட்௴ 7-ம் தேதி கடைசித்தினமாகிய சனிக்கிழமை கோவில் கம்பவுண்டில் எங்கும் ஐக்கிய இராஜாங்கத்தாரின் கொடிகளும், தோரணங்களும், இலைகளும், Gate வாசற்படியில் (Hail Mary, Full of Grace) என்று பலவர்ண சித்திர எழுத்துக்களால் எழுதப்பட்ட நீண்ட போர்ட் ஒன்றும், கோவில் வெளிப்புற பந்தல் முகப்பில் (Blessed Be God) என்று பலவர்ண சித்திர எழுத்துகளால் எழுதப்பட்ட மற்றொரு நீண்ட போர்டும் கட்டப்பட்டிருந்தன. கோவில் உட்புற முழுமையும் பலவர்ண தோரணங்கள் தொங்க, காந்த தீபங்களும், ஏராளமான மெழுகுவர்த்திகளும் சூரிய கிரணம் போல் சுடர்விட்டெரிந்தன. பீடம் வெகுநேர்த்தியாய்ச் சோடிக்கப்பட்டிருந்ததுமல்லாமல், அர்ச். தேவமாதாவைப் புகழ்ந்து வாழ்த்தும் பல வாக்கியங்கள் பலவர்ண பட்டுப் பீதாம்பரங்களில் நெய்யப்பட்டுள்ள விருதுகள் சுவர்களில் தொங்க விடப்பட்டுப் பறந்துகொண்டுமிருந்தன.

மாலை ஆராதனையாகிய (Vespers) ஆரம்பிப்பதற்கு முன் மயிலை மேற்றிராசனத்தீற் குருப்பிரசாதிகளாக பயிலும் மாணவர்களும்,



அநேக சங்கைக்குரிய இராஜரிஷி குருசுவாமிகளும், பலபங்கு விசாரணை கிறிஸ்தவர்களும் ஆயிரக்கணக்காய் வந்திருந்தார்கள்.

6-30 மணிக்கு மாலை ஆராதனை (Vespers) சங். A. A. பின்றேரு (Pinto) சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்டு, வைகர் ஜெனராலாகிய Mgr. J. லோபஸ் சுவாமிகள் ஆர்கன் வாத்தியம் வாசிக்க, திருநாளுக்கென்று பிரத்தியேகமாய்க் குறிப்பிட்டிருந்த பலவித இனிய சங்கீதங்கள் சங். கார்வாலோ சுவாமிகளால் பாடகருக்குக் (Choirs) கற்பிக்கப்பட்டபடி ஜனங்களுக்குப் பக்தி உற்சாகத்தை ஊட்டும்படியாய் வெகு நேர்த்தியாகப் பாடப்பட்டன.

சங். மோனிஸ் சுவாமிகள், ஆதி தாயாகிய ஏவையினால் விளைந்த ஜென்ம மாசு, பரலோக பூலோக இராக்கினியும் ஜென்ம மாசணுகாதவளுமான அர்ச். தேவதாயினால் நிவர்த்தியாக்கப்பட்டதென்று அநேக உவமானம், உவமேயங்களைக் கொண்டு மெத்த சாதுரியமாய் எவரும் இலேசாய் அறிந்துகொள்ளும்படியான இனிய தமிழில் பிரசங்கம் செய்தார்.

அர்ச். தேவமாதாவின் சோதிப் பிரபாகரூபத்தையும் மகிமையையும் நாம் நமது பாவக் கண்ணினால் பார்த்துத் தரிசித்து, துதிக்கக் கூடாவிட்டாலும், சுபாவக் கண்ணினாலாகிலும் பார்த்து ஆரவார சந்தோஷத்துடன் போற்றி, புகழ்ந்து தரிசித்து துதிக்கும்படியான திருச்சுரூபம், வெண்மையான பளிங்கு தகட்டினால் விசித்திரமாய்ச் சிங்காரிக்கப்பட்டிருந்த தேரில் 7-30 மணிக்கு எழுந்தேற்றம் செய்யப்பட்டு, பங்கு விசாரணை கிறிஸ்துவர்கள் ஆரவார அக்களிப்புடன் அதைத் தங்கள் தோள்மேற் சுமக்க, சங். M. மோதவாஸ் பங்கு சுவாமிகள் சிலுவை கொடியுடன் எல்லோருக்குமுன் சென்று நடந்துபோக, புருஷர் ஒருபுறமும், பூவையர் மறுபுறமும் ஒருவர் பின் ஒருவராக ஒழுங்குடன் அணிவகுத்துச் செல்ல, பாண்டு வாத்தியம் தொனிக்க, மயிலை குருமடத்து மாணவர்களும் பாடகர்களும் தேவமாதாவின்தோத்திர கீதங்களைப் பாட, சங். குரு சுவாமிமார்களும் கிறிஸ்துவர்களும் தேரைப் புடை சூழ்ந்துபிரார்த்தனை, ஜெபமாலை ஜெபிக்க, மின்சாரதீபங்கள் பூரண சந்திரன் போல் பிரகாசிக்க, இவ்வித வைபவத்துடன் பவனி சென்று, தேர் சுற்றுப் பிரகாரம் நடந்தேறி, கோவில் தலை வாயில் கிட்டியதும், கோவில் மணிகள் எக்காள சத்தம் போல் தொனிக்க, சங்கை சுவாமிமார்கள் பீடத்தின் முன்சென்று தூபமிட்டுத் திவ்யநற்கருணை ஆசீர்வாதம் கொடுத்தார்கள்.

8-ம் தேதியாகிய ஞாயிற்றுக் கிழமை மூன்று பூசைகள் செய்யப்பட்டன. முதல் பூசை சங். M. மோதவாஸ் பங்கு சுவாமிகளாலும், இரண்டாவது பூசை சங். கார்வாலோ சுவாமிகளாலும், மூன்றுவது பெரிய பாடல் பூசை சங். A. A. பின்றேரு சுவாமிகளாலும் மகா ஆடம்பரமாய் ஆரம்பிக்கப்பட்டது. வைகர் ஜெனரல் Mgr. J. லோபஸ் சுவாமிகள் ஆர்கன் வாசிக்க, சங். கார்வாலோ சுவாமிகள் பாடகருக்குத் (Choirs) தலைவராயிருந்து திருநாள் பூசைக்கென்று பலவித இனிய சங்கீதங்களைப் பாடினார்கள்.

சங். S. லாசர் சுவாமிகள் அர்ச். தேவமாதாவைப் பனிமாதா என்று அழைக்கப்படுவதின் காரணத்தைக்காட்ட, பனியானது எவ்விதமாய் உண்டாகிறதென்றும், பனியானது எவ்விதமாக மாறி பனிக்கட்டிகளாகிறது என்றும் அர்ச். தேவமாதாவின் தூய்மைதனத்தை பனிக் கட்டிக்கு ஒப்பிட்டுச் சாஸ்திரயுக்தமாய் இங்லீஷில் பிரசங்கம் செய்தார். நூற்றுக்கணக்கான பேர்கள் சற்பிரசாதம் உட்கொண்டார்கள். பூசை முடிந்ததும் திவ்யநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப் பட்டது.

இவ்விதமாக எல்லாக் காரியங்களையும் அதிக சிறப்போடும், அரும்பிரயாசையோடும் நிறைவேற்றும் சங். M. மோதவாஸ் பங்கு சுவாமிகள் அர்ச். பனிமாதாவைப் போல் மனத்தூய்மையிலும், அர்ச். ஞானப்ரகாசி மாதாவைப் போல் ஞானம், பக்தியிலும் மங்கா சுடர் விளக்கைப் போல் பிரகாசிக்கவும், அவருக்குப் பூரண சுகமும், பெலனும், நீடிய ஆயுளும் தரவும் சர்வேசுரன் அருள் புரிவாராக.

சென்னை,
தேனாம்பேட்டை,
15—8—15.

C. V. தோமாஸ் பிள்ளை,
ஜெனரல் போர்மேன்.

---

திவ்விய பூசைக்குப் பிறகு ஜெபமாலையானது மேலான ஞான கிருத்தியம்.

தேவதாயின் மட்டில் பத்தி அதிகரிக்க ஜெபமாலையானது சக்தியுள்ள எத்தனம்.

---

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாச்சாரம்.

**வத்திக்கானுக்கு ஓர் சேர்விய ஸ்தானாபதி:**—மிகேல் காவிரியோவிச் என்பவரை வத்திக்கான் அரண்மனைக்கு ஸ்தானாபதியாக சேர்வியா தேசம் அனுப்பியிருக்கிறது.

**ஜப்பான் சக்கரவர்த்திக்கு மகுடாபிஷேகம்:**—தற்போது ஜப்பான் தேசத்து சக்ரவர்த்தியாயுள்ள மன்னருக்கு அடுத்த நவம்பர்மாதம் 10-ந் தேதியில் கியாடோ என்ற பூர்வீகப் பட்டணத்தில் மகுடாபிஷேக வைபவம் கொண்டாடப்படுமெனத் தெரியவருகிறது.

**இத்தாலியகுருக்கள்:**—பதினெண்ணாயிரம் இத்தாலிய குருமார்கள் இப்போது போர்முனையி லிருக்கிறார்கள். இவர்களுக்குள் 700 பேர் போர்ச் சேவகர்களுக்கு விசாரணைக் குருக்கள். 1,000 பேர் காயப்பட்டவர்களைப் போர்க்களத்தி லிருந்து தூக்கிக்கொண்டுபோய் அவர்களை விசாரிப்பவர்கள். மீதியானவர்கள் போர்ச் சேவகர்களோடு போர் புரிபவர்கள். கடைசியிற் சொல்லிய இவர்கள் வேண்டியபோது ஆத்தும குருக்களாயும், எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்குக் கடிதங்கள் எழுதிகொடுத்தும் வாசித்துக் காட்டியும் உதவி செய்துவருகிறார்கள்.

**போலாந்து,ருசியாவின் கத்தோலிக்கர்:**-இந்த இரண்டு தேசங்களில் 12 மேற்றிராசனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ருஷியாவில் 5; போலாந்தில் 7; போலாந்தில் ருஷியாவைவிட அதிக கத்தோலிக்கர். மொத்தத்தில் ஏறக்குறைய 2,000 விசாரணைப் பங்குகளும், 3,300 தேவாலயங்களும், 2,000 சிறு கோவில்களும் 4,600 குருக்களும் உண்டு. ஒவ்வொரு குருவின் விசாரணையில் சராசரி 3,000 கிறீஸ்துவர்கள் இருக்கிறார்கள். ஆனால் லோட்ஸ் என்னும் நகரில் 1,42,000 கத்தோலிக்கருக்கு 10 குருக்களும, வார்சா என்னும் நகரில் 8,000 கத்தோலிக்கருக்கு 4 குருக்களுந்தான் இருக்கிறார்கள்.

**அர்ச். பாப்பானவரும் சுவிட்சர்லாந்தும்:**—நிகழும் யுத்தத்தில் இருகட்சியிலும் காயப்பட்டு சிறையாக்கப்பட்ட போர்வீரர்களில் 20,000 பேரை யேற்றுக்கொண்டு அவர்களைக் கட்சிக்காரர் செலவில் சொஸ்தப்படுத்தும்படி சுவிட்சர்லாந்தை கேட்டுக்கொள்ள நமது பரிசுத்த பிதா மார்ச்செற்றி (Mgr. Marchetti) என்னும் மேற்றிராணியாரை பேர்ன் நகருக்கு அனுப்பியிருக்கிறார். மேலும் இந்த மேற்றிராணியார் மூலியமாகவே வத்திக்கானுக்கும், யுத்தத்தின் இருகட்சிக்காரருக்கும் கடிதப் போக்குவரத்துகளை வைத்துக்கொள்ளலாமென்றும் அர்ச். பாப்பானவர் அறிவித்திருக்கிறார்.

**ஒரு ஆச்சரியப் பிரசவம்:**—பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த கிராமம் ஒன்றில் ஒரு மஹாராஷ்டிர ஸ்திரீக்குச் சமீபத்தில் 2 ஆண் குழந்தைகளும் 3 பெண் குழந்தைகளும் ஆக 5 குழந்தைகள் பிறந்தனவாம். இக்குழந்தைகளின் அங்க அவயவங்களெல்லாம் நல்ல நிலைமையி லிருப்பதாகவே சொல்லப்படுகிறது. இதே ஸ்திரீ தன்னுடைய முன் பிரசவத்திலும் 3 குழந்தைகளைப் பெற்றெடுத்தாளென்றும், அக்குழந்தைகள் மூன்றும் மூன்றேமாசம் உயிரோடிருந்து இறந்து போயின வென்றும் சொல்லப்படுகிறபடியால், இவ்வைந்து குழந்தைகளும் அப்படி அகால மரணத்துக்குள்ளாகாமல் பெரியவர்களாவார்களானால் எல்லோருக்கும் இதோர் ஆச்சரியமாயிருக்கும்.

**ஒரு பாரக்கிரம பெல்ஜிய ஸ்திரீ.**—ஜெர்மனியரால் பெல்ஜியத்தைச் சேர்ந்த லீஜ் நகரின் நிவாசிகளுக்குள் 8 பெயர் யுத்த சம்பந்தமான விஷயங்களை வெளியிட்டார்களென்று குற்றஞ் சாட்டப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இப்படிக் கொல்லப்பட்டவர்களுக்குள் லூயிஸ் பிரென என்பவளும் ஒருத்தி. இவளைச் சுடக் கூட்டிக்கொண்டு போகையில், ஜெர்மனியர் கோழைகளென்றும் கையாலாகாதவர்களென்றும் சொல்லி வீரியம் பேசினதுமன்றி, இவள் தன் காலில் துப்பாக்கிக் குண்டு பட்டு கீழே விழுந்தபோது "லீஜ் வாழ்க," "பெல்ஜியம் வாழ்க" வென்றும் உரக்கக் கூவினாள். அப்போது ஒருவன் அவளுடைய தலையைக் குறிபார்த்துச் சுடவே உயிர் துறந்தனள். என்னே இந்த ஸ்திரீயின் தேசாபிமானம்!

**கிரீஸ் ராணியும் கேய்ஸரும்:**—பிரகிருத யுத்தத்தில் கை கலக்காமல் நடுநிலை வகித்திருக்கும் தேசங்களில் கிரீஸ்தேசமுமொன்று. அத்தேசத்து ராணியாருக்கு ஜர்மன் மன்னராகிய கெய்ஸர் சமீபத்தில் ஓர் தந்திச் சமாசார மனுப்பினதாக சில ருமேனியப் பத்திரிகைகள் கூறுகின்றன. "ஹதம் என்பதையே ஜெபமாகக் கொண்டிருக்கும் எனது பட்டா கத்தியானது இப்போது ருஷியரை நொறுக்கிக் கூழாக்கி விட்டது. இனிமேல் ருஷியர் திட சரீரிகளாகத் தேற நிச்சயமாய் 6 மாதங்கள் பிடிக்கும். எனது தீரமுள்ள போர்வீரர்கள் அடையப்போகிற பிந்திய வெற்றிகளையும், கூடிய சீக்கிரம் உமக்குத் தெரிவிக்கிறேன். யுத்த நாடகம் முடிவடையும் காலமும் நெருங்கி விட்டது." என்று அம்மன்னர் அத்தந்தியில் எழுதியிருந்தாராம்! என்னே கெய்ஸரின் கர்வமும், மனோராஜ்யமும்!

**போர்முனையிலுள்ள கத்தோலிக்கருடைய பிறசிநேகமும் விசுவாசமும்:**—இப்போது பிரஞ்சு தேசத்தின் குழியரண்களிலிருந்து போர்புரிகிற லங்காஷெயர் மாகாணத்தைச் சேர்ந்த கத்தோலிக்கர் தங்கள் பீரங்கிகளை பிரயோகஞ் செய்யுமுன், அவற்றால் மரணமாகப்போகும் எதிரிகள் பாக்கியமான மரணமடைய வேண்டிக்கொள்ளுகிறார்களென்றும், அப்படியே ஷெ மாகாணத்தைச் சேர்ந்த யௌவனர்கள் பாய்ந்து எதிரிகளைச் சுட தங்கள் துப்பாக்கிகளை நீட்டும்போது அவர்கள் கையிலிருக்கும் ஜெபமாலை "கனீர், கனீர்" என்று துப்பாக்கிகளில் அடிபடுகிறபடியால் போர் புரியும்போதும் சர்வேசுரன் பேரில் சிந்தனையுடையவர்களாயிருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. சர்வேசுரன் தின்மையிலிருந்து நன்மையை விளைவிக்கக்கூடியவராகையால் நிகழும் மகா கொடிய யுத்தத்தைக்கொண்டு அநேகர் ஞானப்பிரயோசன மடைவார்களென்பதற் கையமில்லை.

**பெல்ஜியத்தின் ஜேர்மன் கவர்னர்:**--தற்போது ஜெர்மன் மன்னராகிய கேய்ஸருக்கும், ஜெர்மன் பிரதமநியாயாதிபதிக்குமுள்ள நேசபான்மை குன்றிவருகிறதாக, நம்பக்கூடிய ஓர் நிருபர் அறிவிக்கிறார். அதை யுத்தேசித்து நியாயாதிபதியவர்கள் தமது வேலையை ராஜினாமா கொடுத்துவிட்டார். அவருக்குப் பதிலாக, பெல்ஜியத்தில் இதுவரை ஜெர்மன் கவர்னராயிருந்து வந்த ஜனரல் பாரன்வான் பிஸ்ஸிங் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். என்றாலும் இவர் தம்முடைய வேண்டுதலின் மீதே பெல்ஜியத்திலிருந்து அழைக்கப்பட்டாரென்று 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகையின் பொலூன் நிருபர் தெரிவிக்கிறார். உலாந்திலுள்ள ஒரு உறவினர்க்கு பாரன் பிஸ்ஸிங் எழுதியதோர் கடிதத்தில் பெல்ஜியர்கள் நாகரீகமற்றவர்கள் என்பதை மறந்திருப்பதோடு, பெல்ஜியர்கள் தம்மைத் துரத்தியடிக்குங் காலம் வராமற் போகாதென்றும், பெல்ஜிய வெடிகுண்டால் தாம் உதைபடுவதற்கு முந்தியே தாம் அவ்விடத்தை விட்டு நகர்ந்து கொள்வது எவ்வளவோ நலமாகுமென்றும் எழுதியிருக்கிறாராம்.

**நமது பரிசுத்த பிதாவும் உலாந்து தேசமும்:**—உலாந்து தேசத்திலிருந்து வத்திக்கானுக்கு ஸ்தானாபதியாக, பக்திமானான ரெகோத் (Regout) என்னும் ஒரு கத்தோலிக்கர் அனுப்பப்பட்டிருக்கிறார். இவர் உரோமாபுரிக்கு புறப்படுமுன், உலாந்து பிரதேச மந்திரி, பார்லிமெண்டில் ரெகோத் என்பவரைத் தெரிந்துகொண்டதின் காரணத்தை விவரித்தபோது, உலாந்து தேசமும் அர்ச். பாப்பானவரைப்போல, இந்த யுத்தத்தில் ஒரு கட்சியிலும் சேராது நடுநிலை வகித்திருக்கிறதென்றும், சமயங்கிட்டும்போது அவருடன் சமாதானத்துக்காக அது உழைக்க ஆவலுடன் காத்திருக்கிறதென்றும் வெளியிட்டார். ஏறக்குறைய 40-வருஷங்களுக்குமுன், திருச்சபைக்குச் சத்துராதிகளாயிருந்த டச்சு நாஸ்திக துரைத்தனத்தார் வத்திக்கானிலிருந்து தங்களுடைய ஸ்தானாபதியைக் கூப்பிட்டுக் கொண்டவுடன், இப்போது ஸ்தானாபதியாக நியமிக்கப்பட்டிருக்கிற ரெகோத் என்பவரின் தகப்பனார் உலாந்து திரும்பவும் வத்திக்கானுக்கு ஒரு ஸ்தானாபதியை அனுப்பும் பட்சத்தில், அந்த ஸ்தானாபதிக்கு வேண்டிய செலவைத் தாமே ஏற்றுக்கொள்ளுவ

தாகச் சொல்லியும், இதுவரையில் ஸ்தானுபதியாக ஒருவரும் அங்கு அனுப்பப்படவில்லை, இவரது குமாரனே இப்போது வத்திக்கானுக்கு டச்சு ஸ்தானுபதியாக நியமிக்கப்பட்டு அனுப்பட்டதானது தெய்வச் செயலே.

**வாய்நீர் உமிழ்ந்ததற்கு 10-ரூ. தண்டனை:**—ஸீலோனிலுள்ள டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டு கட்டிடத்தின் தாழ்வாரத்தில் பக்கிரி ஆசாரி என்ற ஒருவன் எச்சில் உமிழ்ந்ததற்காக ரூபாய் 10 அபராதம் விதிக்கப்பெற்றான். ஒரு டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜ் கட்டிடம் இம்மாத்திரம் சுசிகரமாயிருக்க வேண்டுமானால், ஒரு இராசாவின் கொலுமண்டபம் எம்மாத்திரம் சுத்தியாயிருக்கவேண்டும்? ஆயினும் இவர்களனைவோரும் இன்றைக்கிருந்து நாளைக்கு மறைந்துபோகும் அற்பமானிடரே! ஆனால் என்நாளுஞ் சிரஞ்சீவியரான சாக்ஷாத் கடவுள் எழுந்தருளி யிருக்குமான தேவாலயங்களில் எத்தனையோ, கிறிஸ்துவர்கள் எவ்வித சங்கையு மில்லாமல் கண்ட கண்ட இடங்களில் எச்சிலை யுமிழ்கிறார்கள். பாய் அல்லது ஜமுக்காளம் போட்டிருக்கும் கோவில்களில் முதலாய்ச் சிலர் அவைகளை நீக்கிக்கொண்டு உமிழ்ந்து விடுகிறார்கள். சிலர் தங்கள் வாயில் அடக்கிக் கொண்டிருக்கும் புகையிலை, வெற்றிலை பாக்கு முதலியவைகளின் எச்சிலையும் அப்படியே செய்கிறார்கள். இவர்கள் கோவில்களை அசங்கியப் படுத்துகிறவர்களுக்கு அபராதம் போட அதிகாரிகள் இல்லையென்றெண்ணி யிருக்கிறார்கள் போலும்!! ஜெருசலேம் தேவாலயத்தில் வியாபாரஞ் செய்துகொண்டிருந்த வர்த்தகரை யன்றைக்குச் சாட்டையால் அடித்துத் துரத்தின அதே கடவுள் இன்றைக்கும் தேவாலயங்களில் வீற்றிருக்கிறாரென்று அறிந்துகொள்வார்களாக.

**உருளைக்கிழங்குக்கு பிராஞ்சு என்ன?**- நிகழும் யுத்தத்தில் ஒருநாள் சாயந்திரம் ஆங்கிலேயப் படையைச் சேர்ந்த ஓர் வகுப்பு, பிராஞ்சு தேசத்திலுள்ள கிராமம் ஒன்றுக்குப் போய்த் தண்டிறங்கினது. அன்றைய இராத்திரி எதாவது சமைத்து சுடச்சுட சாப்பிட வேண்டுமென்று அந்தத் தண்டைச் சேர்ந்த போர்ச் சேவர்களிற் சிலர் கோரி, சமயலுக்கான பதார்த்தங்களைச் சம்பாதிக்க முயன்றார்கள். ஒருவித கூட்டுக்கறி சமைக்க அவாகொண்டு அங்குமிங்கும் அலைந்து வேண்டியவைகளை யெல்லாம் சேகரித்தார்களாயினும், உருளைக் கிழங்கு மட்டும் அகப்படவில்லை. ஆகவே, அவர்களில் ஒருவன் தனக்குப் பிரஞ்சு பாஷை தெரியாததைப்பற்றித் தன்னுடைய காப்டனிடத்திற்குப் போய் அவனிடத்தில் உருளைக்கிழங்குக்கு பிராஞ்சில் என்ன சொல்லுகிறதென்று கேட்டான். காப்டனோ கொஞ்சம் தமாஷ்ப் பிரியனானபடியால் உருளைக்கிழங்குக்குப் பிரான்சில் "போன்சுவார்" என்பார்களென்று வேடிக்கைக்காக அவனுக்குச் சொல்லிக் கொடுத்தான். "போன்சுவார்" என்றால் பிரஞ்சு பாஷையில் மாலை வந்தனம். உருளைக்கிழங்குக்குப் பிராஞ்சு கற்றுக்கொண்ட இவன் ஓர் வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினான். வீட்டிலிருந்த ஒரு ஸ்திரீ வந்து கதவை திறக்கவே இவன் அம்மா "போன்சுவார்" என்றான். இதைக்கேட்ட அந்த ஸ்திரீயானவளும் ஐயா "போன்சுவார்" என்றாள். உடனே இவன் உருளைக்கிழங்குதான் தனக்குத் தேவையென்று காட்ட "எஸ், எஸ் கொஞ்சம் போன்சுவார்" என்றான். அவளும் அப்படியே ஐயா, உமக்கு "போன்சுவார், போன்சுவார்" என்றாள். அப்போது இவன் தான் சொல்வது அவளுக்குச் சரியாய் விளங்கவில்லையென்று அவளது முகக்குறியில் அறிந்துகொண்டு எப்படியோ தவறி பக்கததில் விழுந்து கிடந்த ஒரு உருளைக்கிழங்கை எடுத்துக்கொண்டுவந்து காட்டி "போன்சுவார்" "போன்சுவார்" இதுதான் தனக்கு வேண்டுமென்று சொல்லிச் சில கிழங்குகளை வாங்கிக்கொண்டு போய்ச்சேர்ந்தானாம்.

**பசாசு ஓட்டினவன் பட்ட பாடு:**— பம்பாய் மாகாணத்தில் ஒரு ஸ்திரீக்கு 3 நாள் விடாமலடித்த அசாத்திய ஜுரத்தால் சுவரணை தப்பிப் படுத்த படுக்கையிலேயே கிடந்தாள். அவளது உறவினர் அவளுக்குப் பசாசு பிடித்திருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டு அதை ஓட்ட ஒருவனை அழைத்து வந்தனர். இவனும் சிலமந்திரங்களை உச்சாடனஞ் செய்து பூஜைகளை



முடித்து செருப்பாலும்பிரம்பாலும் அந்த ஸ்திரீயை ஓங்கி ஓங்கி அடித்தபடியால் சிலநேரத்திற் கெல்லாம் அவள் உயிர் துறந்தனள். வெளியே போயிருந்த இவளுடைய தகப்பன் வீடு வந்து சேர்ந்ததும் நடந்த விருத்தாந்தங்களைக் கேள்விப்பட்டுப் போலீசாருக்குச் சொல்லியனுப்பினான். போலீசார் பிரேதத்தை ஒப்புக்கொண்டு மரணப் பரிசோதனை செய்து பார்த்ததில் பட்ட அடிகளினால் ஸ்திரீக்கு மரணம் நேரிட்டிருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். ஆகவே, பசாசு ஓட்டினவன் குற்றவாளியாகப் பாவிக்கப்பட்டு மாஜிஸ்டிரேட்டால் விசாரணை செய்யப்பட வேண்டியதாயிற்று. விசாரணையில் தப்பித்துக் கொண்டானென்றாலும் இவன் பசாசு ஓட்டப்போய்த் திண்டாட வேண்டியதாயிற்றன்றோ? கிறிஸ்துவர்களுக்குள் முதலாய் எத்தனையோபெயர் வியாதியால் பீடிக்கப்படும் ஸ்திரீகளுக்குப் பசாசு பிடித்துக்கொண்டதென்று சொல்லி மந்திரவாதிகளைக்கொண்டும் பூசாரிகளைக்கொண்டும் பேயோட்டி வைக்கிறார்கள். இவர்கள் தங்கள் சத்திய வேதத்துக்குப் பங்கம் வருவித்து பேருக்கு மாத்திரம் கிறிஸ்துவர்களாயிருக்கிறார்கள். இது கிறிஸ்துவர்களுக்கு அழகா? இவர்களுக்குப் பிடித்திருக்கிறது இவர்களுடைய மனப்பேயே தவிர வேறே பேயல்ல. இப்பேயை யோட்டுகிறதற்கு, மேற்சொன்ன மந்திரவாதி கையாடின ஜெபமே சரியான ஜெபம், அதாவது செருப்படியும் பிரம்படியுந்தான். இனியாகிலும் கிறிஸ்துவர்கள் வெட்கி பேயோட்டிகளை நாட மாட்டார்களென்று நம்புகிறோம்.

**சலேசியன் சபை.**—இச்சபையை உண்டாக்கின "டோன் போஸ்கோ" என்பவர் 1815-ம்௵ ஆகஸ்டு௴ 16௳ பிறந்தவர். இவர் தம்முடைய 26-ம் பிராயத்தில் குருப்பட்டம் பெற்றுத் தாம் மரண மாகுமட்டும் ஆதரவற்ற பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றுவதிலேயே அலுவலாயிருந்துவந்தார். இவர் காலத்திலேயே இவருடைய சபையார் பிராஞ்சு, ஸ்பானியா, இங்கிலாந்து, பெல்ஜியம், போர்துகல் முதலிய தேசங்களிற் பரவி உழைத்துவந்ததுமல்லாமல் தென் அமெரிக்காவுக்கும் போய் உழைத்தார்கள். இவர் மரணமடைந்த 1888-ம் வருஷத்தில் இந்தச் சபை 100 இடங்களிற் ஸ்தாபிக்கப்பட்டு, 50,000 ஏழைப்பிள்ளைகளை ஆதரித்து வந்தது. தற்போது, இச்சபையார் உள்ள இடங்கள் 350. இவர்களால் கல்வியும் கைத் தொழிலும் பயிற்றுவிக்கப்படுகிற ஏழைப் பிள்ளைகள் 150,000 பெயர். நம்முடைய தென் இந்தியாவிலும் தஞ்சாவூர், மயிலை இவ் விரண்டிடங்களில் இவர்கள் தங்களுடைய சபையை ஸ்தாபித்து ஆதரவற்றப் பிள்ளைகளுக்குக் கைத்தொழிலும் கல்வியுங் கற்பிக்கிறார்கள். சென்ற ஆகஸ்டு௴ 16௳ இச்சபையின் ஸ்தாபகரான மேற்கூறிய "டோம் போஸ்கோ" என்பவர் பிறந்த 100-வது வருஷாந்தரக் கொண்டாட்ட நாளா யிருந்தபடியால் மறு நாளாகிய 17௳ செவ்வாய்க்கிழமை இச்சபையாருடைய ஆதரவிலிருந்து கல்வியும் கைத்தொழிலும் கற்று முன்னுக்கு வந்திருந்தவர்களால் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருந்தபடி ஷை "டோன் போஸ்கோ" என்பவர் பேரால் கட்டி எழுப்பப்பட்டிருந்த ஞாபகச் சின்னம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த ஞாபகச் சின்னக் கட்டிடம் தூரின் பட்டணத்தில் "டோன் போஸ்கோ" என்பவராலேயே கட்டப்பட்ட உபகார மாதாவின் ஆலயத்துக்கு எதிரில் எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த ஞாபகச் சின்னத்துக்காக வசூலான தொகை 1,20,000-ரூ.

**வார்சா நகரின் பூர்வீக சரித்திரம்:**— போலாந்தின் முக்கிய நகராகிய வார்சாவை ஜெருமானியர் வசப்படுத்திக்கொண்டார்களல்லவா? அந்நகரின் பூர்வசரித்திரத்தைக் கவனித்துப்பார்த்தால், மற்றெந்த நகரும் அந்நகரைப்போல் துன்பப்பட்டிராதென்று சொல்லலாம். வார்சா நகரம் எப்போது உண்டானதென்பது தெளிவாய் விளங்கவில்லையாயினும், இப்பொழுது வார்சாநகர மிருக்குமிடத்திலே 9-ம் நூற்றாண்டில் ஓர் அரண்மனை இருந்ததாகத் தெரிகிறது. 11-ம் நூற்றாண்டில்தான் அந்நகரில் கோட்டைகள் கட்டப்பட்டன. ஆயினும் சென்ற நாலு நூற்றாண்டுகளாகத்தான் அந்நகரம் சரித்திரத்தில் சம்பந்தப் படும்படியாயிற்று. எவ்வாறெனில், 1550-ம்

வருஷத்தில் அந்நகரமானது போலாந்துக்குத் தலைநகரமாயிற்று. 17-ம் நூற்றாண்டிலே அந்நகரைக் கைப்பற்ற சுவீடன் தேசத்தார், ருஷியர், ஜெருமானியர், அவுஸ்திரியர் முதலிய பலரும் முயன்றனர். 1655-ம் வருஷத்தில் சுவீடன் தேசத்தை ஆண்டு வந்த ஓர் அரசன் அந்த வார்சா நகரைப் பிடித்துக்கொண்டான். ஆயினும் அடுத்த வருஷத்திலேயே அந்நகரை போல்ஸ் ஜாதியார் மீட்டுக்கொண்டனர். பின்பு 1702-ம் வருஷத்தில் சுவீடன் தேச அரசனாகிய 12-ம் சார்லஸ் என்பவன் அந்நகரை முற்றுகைபோட்டுக் கைப்பற்றினான். அவ்வாறு அவன் முற்றுகை போட்டபொழுது அந்நகரவாசிகள் பட்டபாட்டைச் சொல்ல முடியாது. அதன்பின்பு அந்நகரைப் பிடித்துவிட வேண்டுமென்று ருஷியர் ஆசைகொண்டனர். அதற்காக அவர்கள் பலமுறை அந்நகரை முற்றுகை போட்டனர். அம் முற்றுகையானது மிகவும் பயங்கரமாயிருந்ததென்றே சொல்லவேண்டும். அதன்பின்பு சில வருஷங்கள் வரையில் அந்நகரம் ருஷியரின் வசத்திலேயே யிருந்தது. ஆனால் 1795-ம் வருஷத்திலோ புருஷியர் அந்நகரைத் தமது வசமாக்கித் தமது தேசத்துடன் சேர்த்துக்கொண்டனர். அதற்கு 10 ௵-க்குப் பிறகு 1806-ம் வருஷத்தில் அந்நகரம் பேர்பெற்ற நப்போலியனுடைய கையில் சிக்குண்டது. பின் மூன்று வருஷத்திற்கெல்லாம் அந்நகரை அவுஸ்திரியர் கைப்பற்றினார்கள். என்றாலும் அதே வருஷத்திலேயே போல்ஸ் ஜாதியார் கிளம்பி அந்நகரை மீட்டுச் சுவாதீனப் படுத்திக்கொண்டார்கள். நாலு வருஷங்கள் வரையில் அதாவது 1813-ம் வருஷம் வரையில் போல்ஸ் ஜாதியாரிடமே அந்நகரம் இருந்துவந்தது. ஆயினும் அவ்வருஷத்தில் ருஷியர் அதை திரும்பவும் தங்கள் வசப்படுத்தி அரசு புரிந்து வந்தனர். அந்நகரம் இப்போது ஜெருமானியரின் வசத்திலிருக்கிறது. அதில் ஓர் அவுஸ்திரிய இராச வம்சத்தைச் சேர்ந்த இளவரசனுக்கு முடி சூட்டி, போலாந்து தேசத்துக்கு அநேகமாய்ச் சுயாதீனங் கொடுத்துவிடுவதாக அவுஸ்திரிய ஜெருமானியரால் யோசனை செய்யப்பட்டுவருகிறதென்று ஒரு தந்தி சொல்லுகிறது. இதற்குமுன் புலரிடமிருந்து கைமாறிப்போன அந்நகரத்தின் நிலைமை இனி என்னாகுமோ என்று அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கும்படி நேர்ந்திருக்கிறது. (சத். வேத. பா.)

**வருஷம் 27 ஆகியும் அவியாதிருந்த நெருப்பு.**—பின்வரும் வர்த்தமானத்தினால் அடுப்பு மூட்டும் ஒவ்வொருவிசைக்கும் நெருப்புக்காக அண்டை வீடு அடுத்த வீட்டுக்கு நெருப்புக்குப் போகாமல் எப்போதும் அடுப்பில் நெருப்பிருக்கும்படிச் செய்ய அழுகிப்போன செடி, கொடி முதலியவைகளின் வேர்கள் விறகுக்காக உபயோகப்படலாமென்று தெரியவருகிறது. ஒருநாள் சர்ஹெர்பர்ட் மாக்ஸ்வெல் என்பவர் தம்முடைய சிநேகிதரான ஒரு அங்கிலேயரோடு காலப்போக்காக மீன்பிடிக்கச் சதுப்புநிலமொன்றிலிருந்த ஓர் ஏரிக்குப் போனார். ஆனால் திடீரெனப்பெரியமழை பெய்யத் துவக்கினவுடனே இருவரும் பக்கத்திலிருந்த குடிசையிற்போய் ஒண்டினார்கள். சற்றுபொறுத்துக் கொஞ்சம் நாஸ்தா செய்து கொள்வதற்காக அக்குடிசையின் மனையாட்டியினிடத்தில் சில சிற்றுண்டிகள் செய்துகொடுக்கக் கேட்டுக் கொள்ளவே, அவள் அடுப்பண்டைக்குப் போய் அடுப்பை யெரியவிட மண்டிபோட்டுக்கொண்டு அதில் குவியலாய்க்கிடந்த சாம்பலையெல்லாம் ஊதி ஊதி அப்புறப்படுத்தினாள். அடிச் சாம்பலோ செந்நிறமாய்த் தணலாயிருக்கக்கண்டு, அவர்களில் ஒருவர் அவளைப் பார்த்து "நீ அடுப்புப் பற்றவைத்து எந்நேரமாயிருக்கும்?" என்று வினவ, அதற்கவள் "நான் அடுப்புப்பற்றவைத்து இப்போது 27 வருஷமாயிற்று. நானும் என் புருஷனும் இந்த வீட்டுக்கு வந்த அந்தக் காலத்திலே மூட்டின அடுப்பு இன்னும் அணைந்துபோகவில்லை" யென்றாளாம்.

**போர்முனையில்முதலாய் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன.**—பிரான்சியர் இயற்கையில் எவ்வித சுகதுக்கங்களினாலும் மாறுபடுகிறவர்களல்லர். மரணபாய நேரத்தில் முதலாய் கலக்கத்துக்குள்ளாகார். ஒழிந்த நேரத்தையும் வீணாக்கார். தற்போது அரண்குழிகளிற் சத்துருக்களின் குண்டுகள் அக்கினி மாரியைப்போல் பெய்கையில் இவர்கள் ஒன்றுக்கும் அஞ்சாமல் பாரீஸ் நகர வீதிகளில் எப்படி உல்லாசமா யிருப்பார்களோ அப்படியே



இப்போதும் இருந்துகொண்டு தங்கள் சத்துருக்களை எதிர்த்துப் போராடுவதோடு, அவ்விடத்திலேயே பத்திரிகைகளும் பிரசுரித்து வருகிறார்கள். இவர்களால் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள் 43. என்னே ஆச்சரியம்!

---

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்
## DOMESTIC OCCURRENCES.

---

**அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.**

---

### நன்மரண அறிக்கை.

---

தூத்துக்குடி.

என் அருமைத்தாயார் அந்தோனியம்மாள் அவர்கள் நெடுநாளாயுள்ள வியாதியி னிமித்தம் தமது மக்களைப் பரிதபிக்கவிட்டு, 1914 ௵ செப்டெம்பர் ௴ 8௳ செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்தனள். அவர்கள் மரணமடைந்த நாளின் ஞாபகார்த்தமாய், நிகழும் செப்டெம்பர் ௴ 8௳ புதன்கிழமை தூத்துக்குடி சேசுவின் திருஇருதய தேவாலயத்தில் அவர்களது ஆத்தும இளைப்பாற்றிக்காக திவ்யபலி பூசைசெய்வித்து ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் கத்தோலிக்கு நேயர்களனைவரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்வார்களாக.

இப்படிக்கு,

தூத்துக்குடி. } தாயை இழந்த
9—8—15. } எஸ். டி. ராயப்பப்பிள்ளை.

---

இரங்கூன்.

செங்கற்பட்டில் உபதேசியாராயும் கீழ்ச்சேரியில் மிராசுதாராயு மிருந்த தஞ்சாவூர் பிரான்சீஸ் பிள்ளை என்கிற எனது அருமைதந்தை, தமது கண்பார்வை மத்திபப்படுவதைக் கண்டு இனி தமக்கு சம்ரக்ஷணை சரிவர நடத்திக் கொள்ள விரும்பி, ரங்கூனுக்கு வந்து என்னிடம் சேர்ந்தார். நானும் அவருக்கு எல்லாவித பணிவிடையும் குறைவறச் செய்யுங்கால், கடைசிநாட்கள் சமீபித்தவரவே Rev. Fr. Boulanger and Rev. Fr. Joseph என்னும் குருப்பிரசாதிகளால் கடைசித்தேவத்திரவிய அனுமானங்கள் சம்பூரணமாய் நிறைவேற்றப் பெற்று 1915-௵ ஆகஸ்ட்டு ௴ 5-தேதி வியாழக்கிழமை சாயரக்ஷை 7 மணிக்குப் பரலோகபதவி யடைந்தார். மறுநாள் நல்லடக்கஞ் செய்தோம். இவருக்கு வயது 80. இதைக்கண்ணுறும் நண்பர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
தந்தையற்ற ஏழைமகன்.
F. ANTONISAMY PILLAY.
Post Master, *Theinzeik.*

---

கோட்டபேட்டா

இதனால் அறிவிப்பது, பாலி பெட்டா அர்ச. ஆரோக்கியமாதா தேவாலயத்தின்கண் உபதேசியாரும், எங்களது அருமைதந்தையுமாகிய மா-ா-ா-ஸ்ரீ கனம் ஜீ. பிலவேந்திர உபதேசியார் 1915-௵ ஆகஸ்ட் ௴ 3௳ செவ்வாய்கிழமை மாலை 4½-மணிக்குத், தொட்டபெட்டாவுக்கு வேண்டுதல், பிரார்த்தனைக்காகப்போய் செபம் யாவும் தீர்ந்து போஜனம் புசிக்கும்போது தப்பாக்கியின் குண்டு வெடித்து சிரசில்பட்டு சேசு மரி சூசையென்று உச்சரித்து, தனது 79-ம் வயதில், 50 வருஷம் கோவில் சார் வீசுடன் தனது மனைவி மக்கள் மருமகள் பேரப்பிள்ளைகள் இன்னும் மற்றப் பந்துக்களையும் கண்ணீர் கலங்கவிட்டு கர்த்தரிடத்தில் தமதாத்துமத்தை ஒப்பித்தார். 5௳ வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சங். J. A. பீனுதல் குரு சுவாமிஅவர்களாலும் திருச்சபையாராலும் நல்லடக்கம் செய்யப்பட்டது. சகோதரர் சகோதரிகளே அவரது ஆத்தும இளைப்பாற்றிக்காக 1-பர, 1-பிரி., 1-திரி. வேண்டிக் கொள்ளத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளும் தந்தையை யிழந்துத் தவித்து நிற்கும் ஏழைக்குமாரர்கள்.

ஜீ. வீ. சவரிநாயகம் பிள்ளை,
ஜீ. வீ. இரபெல் பிள்ளை,
கோட்ட பெட்டா,
பாலிபேட்டா-தடகு.

(வியாகுலம் ! வியாகுலம் !! வியாகுலம் !!!.)

A. M. D. G.

பழையகாயல் பரதகுலமாருத சிற்றதிபதியென்னுங்

கொம்பஞ்ஞு அடப்பன் பௌத்திரனும்

ஆயுள் மஹாவேதியன்

சின்னத்தம்பி நற்றூர் அவர்களின்

கனிஷ்ட புத்திரனுமாகிய

ஸ்ரீமான் தருமபிச்சை நற்றூர் அவர்களின்

## திருமண வாழ்த்து.

பதினான்குசீரிரட்டை யாசிரிய விருத்தம்.

கடல்சூழ்ந்த வுலகையொரு வாக்கினு லாக்கியே
  ககனம்தி கதிரு மாக்கிக்
காத்தழித் திடவல்ல ஏசுரட்சகனென்னும்
  கர்த்தாதி கர்த்த னருளால்
காரார்ந்த மலைநிகர்ப் புஜம்வாய்ந்த சசிகுலக்
  * காண்டீபன் வாழ்த்தும் வீரக்
கழலார்ந்த ஐந்துமா வழுதியர் வாழ்பழைய
  காயனக ராண்ட பிரபு.

அடஞ்சூழ்ந்த திட்டர்தங் குழுகண்டே யஞ்சிடும்
  அடன்மேவு நாம வேலான்
அடப்பருண் மாரு வடப்பனெனுங் கொம்பஞ்ஞு
  அடப்பன்மா மதிகு லத்தோன்
ஆண்டகை சவேரியா பிச்சைநற் றூரெனும்
  ஆண்மகன் பெற்ற புத்ரன்
ஆயுள்வே தியன்சின்னத் தம்பிநற் றூர்செய்த
  அருந்தவத் துதித்த புதல்வா?

தடஞ்சூழ்ந்த வுலகுபுகழ் கலைகற்ற வா? வாண்மை
  தவழுசித புருஷோத் தமா?
தார்வேந்த னுனவெம் மிளவேந்தன் றொன் அனத்
  தாசியூஸ் மோத்த மகிபன்
தனதரிய பிரஜைகளில் மிகமேன்மை பெற்றவா?
  தயையே நிறைந்த நற்றூய்
தண்மதிக் குலம்வரு பரதர்தாய் பனிமயத்
  தாய்கழல் மறவாத கண்யா?

திடஞ்சூழ்ந்த வளர்தரும பிச்சைநற் றூரெனும்
  திகழ்நாம னேயின்று மெய்த்
திருச்சபை வாழ்த்தவுன் தேவியாய்க் கைக்கொண்ட
  திங்கணிகர் வதன மாது
தென்னவன் பூரணப் பர்னாந்தீஸ் தருமாது
  திருமேரி லாஸ ரோடு
தினமவாழ்ந்து மக்கள்பல பெற்றுநீ மகிழ்வுறத்
  திரியேக னருள் புரிவனே.

**M. X. Rubeen Varma,**
**Tuticorin.**

23rd June 1915.

* காண்டீபன்—பஞ்சபாண்டவரி லொருவனும் பரதகுலபாண்டியனுமாகிய அருச்சுனன்.

The

# Good Pastor

# நல்ல ஆயன்

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 11 OC 1915

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 13. } அக்டோபர் 1915. { இலக்கம். 10.

## MONTH OF THE HOLY ROSARY.

## திருச் செபமாலையின் மாதம்.

மார்ச்மீ அர்ச். சூசையப்பருக்கும், மேமீ அர்ச். கன்னிமரியாயிக்கும், ஜூன்மீ சேசுவின் திரு இருதயத்துக்கும் எப்படி ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே துவக்கியிருக்கிற இந்த அக்டோபர்மீ மும் திருச்செபமாலைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனபடியால், நாம் எல்லோரும் திருச்சபையின் கோரிக்கைக் கிணங்கி, இம்மாசத்தைப் பத்தி விசுவாசத்துடன் கொண்டாடி, இதற்காக அளிக்கப்பட்டிருக்கிற அபரிமிதமான ஞானப் பலன்களைப் பெற்று ஞானப்பிரயோசனமடைய முயலுவோமாக. இப்படி நாம் ஞானப்பிரயோசனமடைய, திருச்சபையில் எப்படி செபமாலை செபிக்கும் பத்திக்கிருத்தியம் உற்பத்தியாகி விருத்தியடைந்து வந்ததென்று நாம் அறிந்துகொள்வதானது அதன்பேரில் நம்மிடத்தில் மெய்யான ஆசையையும் உற்சாகத்தையும் எழுப்ப ஒரு தூண்டுகோலாயிருக்குமென நம்பி, பின்வருமாறு செபமாலையின் பூர்வோத்திரத்தை வரைகிறோம்.

தேவாராதனை விஷயங்களில் யூதர்களைக் கண்டு பாவிக்கப்படாதென்று தங்களுக்கு விலக்கப்பட்டிருந்தவைகளைமட்டும் பூர்வீக கிறிஸ்துவர்கள் விலக்கி, மற்றவைகளில் அவர்களைப் பின்பற்றி வந்தார்கள். ஆகவே, யூதர்களைப்போல் இவர்களும் தங்கள் வீடுகளில் தனியாய்ச் செபிக்கும்போதும், அல்லது கோவில்களிலும் செபக்கூடங்களிலும் எல்லோரும் ஒன்று சேர்ந்து செபிக்கும்போதும், அநேகமாய்த் தாவீது இராசாவின் 150 சங்கீதங்களையே செபிப்பார்கள். திருச்சபையும் ஆதியிலிருந்து இச்சங்கீதங்களைப் பூசை புஸ்தகத்திற் (Missal) சேர்த்திருப்பதுமன்றி, குருக்களும் சில சபைகளில் உட்பட்டிருக்கிற துறவறத்தாரும் செபிக்கவேண்டிய கடமைச் செபமாகிய மந்திரமாலையிலும் (Breviary) சேர்த்திருக்கின்றது. முற்காலத்திற் சீவித்துவந்த வனவாசிகளும் தபோதனர்களும் நாள் ஒன்றுக்கு ஒருமுறையாகிலும் இந்த 150 சங்கீதங்களையுஞ் சொல்லி முடிப்பார்கள். வாசிக்கத் தெரியாத கிறிஸ்துவர்களுக்குள் முதலாய் அநேகர் இச்சங்கீதங்களை மனப்பாடமாய்க் கற்றுக்கொண்டு நாடோறும் ஜெபித்து வரு

வார்கள். இன்னுஞ்சிலர் ஒவ்வொரு சங்கீதத்தின் பொருளும் சுருக்கமாய் நான்கு வரியில் அடங்கும்படி இயற்றப்பட்டிருந்த செய்யுளை மனப்பாடமாய்ப் பாடிவருவார்கள். இது இப்படி நடந்து வருங்காலத்தில் தேவமாதாவின்பேரில் அதிக பத்தியுள்ளவர்கள் அத்தாயின் திருப்புகழ்கள் அடங்கிய பிரியதத்த மந்திரத்தை இந்த பிரகாரம் நாடோறும் 150 விசை ஜெபிக்கத் தொடங்கினார்கள். தாங்கள் அம்மந்திரத்தை ஜெபித்தது இத்தனை தடவையென்று கணக்கு வைத்துக்கொள்ள சிலர் சிறு கற்களை உபயோகிப்பார்கள். சிலர் சிறு கயிற்றில் முடிச்சுகள்போட்டுக்கொள்வார்கள். சிலர் மணிகளை ஒரு மாலையாகக் கோர்த்து அதில் கணக்குவைத்துக்கொள்வார்கள். இவ்வழக்கம் எந்த நூற்றாண்டில் துவக்கினதென்று சரியாய் நமக்குத் தெரியாவிடினும், 11-ம் நூற்றாண்டில் இது இருந்ததென்றும், 12-ம் நூற்றாண்டில் பல விடங்களில் பரவி வந்ததென்றும் நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம். அர்ச். அன்செல்முஸ் என்பவரும் இன்னும் இவரைப்போன்ற தேவமாதாவினுடைய அடியார்களான அநேக அர்ச்சியசிஷ்டவர்களும் இதற்கு அத்தாட்சி.

12-ம் நூற்றாண்டில் பிராஞ்சு தேசத்தின் தென்பாகத்திலும், இஸ்பானியா தேசத்தின் வடபாகத்திலும் அல்பிசென்செஸ் என்னும் ஒரு மகா துஷ்டப் பதித மதமுண்டாகி, அநேக ஆயிர ஆத்துமாக்களைக் கொள்ளைகொண்டு போனதுமல்லாமல் இன்னும் அநேக ஆத்துமாக்களையுஞ் சேதப்படுத்த முயன்று வந்தது. இப்பேர்ப்பட்ட நிர்ப்பாக்கிய ஆத்துமாக்களைக் குணப்படுத்தி நல்வழியிற் கொண்டுவந்து சேர்க்கவும், அத்துர்மதத்தை யொழிக்கவும் யாராலும் இயலாமற்போயிற்று. மகா ப்ரிசுத்தவாளரும் பெயர்பெற்ற பிரசங்கியுமான அர்ச். பெர்நர்து என்பவராலும் ஆகவில்லை. இவருக்குப்பின் அர்ச். சாமிநாதரும் இதற்காக என்ன பாடுபட்டும் யாதோர் பிரயோசனத்தையுங் கண்டடையாமற் போனதினால், தமக்குள் கலக்கமுந் துக்கமுங்கொண்டார். என்றாலும் அதைரியப்படாமல் தம்முடைய நம்பிக்கையெல்லாம் தேவமாதாவின் பேரில் வைத்து அப்பதித மதம் அழிய தமக்கு உதவி செய்ய வேண்டுமென்று மகா பத்தி விநயத்துடன் அவ்வாண்டவளை நோக்கி அடிக்கடி வேண்டிக்கொண்டுவந்தார். ஒரு நாள் இவர் ஏராளமாய்க் கண்ணீர்விட்டழுது மிகுந்த உருக்கத்தோடு வேண்டிக்கொண்டிருக்கையில், தேவமாதா அவருக்குக் காணப்பட்டு "ஆதியில் பாவத்தைப் போக்கி உலகத்துக்கு ஈடேற்றத்தைக் கொடுக்க எப்படி பிரியதத்த மந்திரம் காரணமாயிருந்ததோ அப்படியே இப்பவும் அம் மந்திரம் பதித மதத்தை நிர்மூலமாக்கக் காரணமா யிருக்கிறது. நீ 150 பிரியதத்த மந்திரங்கள் அடங்கிய செபமாலையைச் செபிக்க ஜனங்களுக்குப் பிரசங்கிப்பாயாகில், உன்னுடைய பிரயாசைக்குப் பலன் கிடைக்கும்" என்று திருவாய்மலர்ந்தருளினாள். அந்நாள் முதற்கொண்டு அர்ச். சாமிநாதர் ஜனங்களுக்குள் செபமாலையின்மேல் அதிக பத்தியுண்டாகும்படிச் செய்ய அங்குமிங்கும் போய் மகா ஆவலுடனும் உற்சாகத்துடனும் போதித்து, அவர்களைச் செபமாலை செய்யத் தூண்டிக்கொண்டுவந்தது மல்லாமல், தாமும் செபமாலையின் உதவியால் அநேக புதுமைகளைச் செய்துவந்தார். வரவர ஷை பதித மதமும் நிர்மூலமாகிக் கொண்டே வந்தது. ஐரோப்பா தேசத்துக்கும் திருச்சபைக்கும் நேரவிருந்த அநேக இக்கட்டுகளும் இடையூறுகளும் ஒழிந்துகொண்டே வந்தன. சத்திய வேதமும் செழிப்புற்று விர்த்தியடையத் துவக்கிற்று. அர்ச். சாமிநாதருக்குப் பிறகு அவருடைய சபையாரே செபமாலை ஜெபிக்கும் பத்தி கிருத்தியத்தை உலகமெங்கும் பரவச் செய்தார்கள். இப்போதும் ஷை சபையின் அதி சிரேஷ்டரே செபமாலை சபைக்குத் தலைவரா யிருக்கிறார்.

செபமாலைக்கு அளிக்கப்பட்டிருக்கும் பலன்களையெல்லாம் நாமடைய வேண்டுமானால், 13-ம் ஆசீர்வாதப்பர் என்னும் பாப்பானவருடைய ஏற்பாட்டின்படி பிரியதத்த மந்திரத்தைச் செபிக்கையில் தேவ இரகசியங்களின் பேரில் அதாவது நமது கர்த்தர் பிறந்த, பாடுபட்ட, உயிர்த்த வர்த்தமானங்களைச் சிந்தித்து, அவைகளைத் தியானிக்க வேண்டியது. இவ்விதமாய்ச் செபமாலை செய்வதும் பூர்வகாலத்து ஒரு வழக்கந்தான். 15-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் சீவித்த ஒரு பத்தியுள்ள சந்



நியாசியார் தாம் பின் வருமாறு செபமாலை செபித்து வந்ததாகக் கூறி யிருக்கிறார். முதல் பிரியதத்த மந்திரத்தைத் துவக்கி: பிரியதத்தினாலே பூரண மரியாயே.........
....சம்மனசினால் முன் னறிவிக்கப்பட்டுப் பிறந்த உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப்பட்டவருமாமே...
...............இரண்டாவது பிரியதத்த மந்திரத்தைத் துவக்கி: பிரியதத்த...........
....மாட்டுக்கொட்டிலிற் பிறந்து சம்மனசுக்களாலும் இடையர்களாலும் ஆராதிக்கப்பட்ட உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப்பட்டவருமாமே
..................என்று, ஒவ்வொரு பிரியதத்த மந்திரத்திலும் நமது கர்த்தருடைய சீவிய சரித்திரத்தின் ஒவ்வொரு வர்த்தமானத்தையும் தியானித்துக்கொண்டு செபிப்பாராம்.

திருச்சபையில் தற்காலம் வழங்கி வரும் சகல பத்தி கிருத்தியங்களுக்குள் செபமாலையே பிரதானமானதும் பிரயோசனமானது மாகும். திவ்விய பூசைக்குப் பிற்கு இதுவே மேலான கிருத்தியம். இக்கிருத்தியத்தை பெரியோரும், சிறியோரும் படித்தவர்களும், படியாதவர்களும் இன்னும் நொண்டியும் குருடரும் செவிடருமா யிருக்கப்பட்ட எல்லோருமே இலேசாய் அனுஷ்டித்து வரலாம். இதைப்பற்றியே அநேக பாப்புமார்கள் விசேஷமாய் 13-ம் சிங்கராயர் செபமாலைக்கு எண்ணிறந்த பலன்களைக்கட்டளையிட்டிருக்கிறார். முதல் முதல் 16-ம் நூற்றாண்டில் இத் திருநாள் சில விடங்களில் மாத்திரம் கொண்டாடப்பட்டு வந்தது. 18-ம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து உலக முழுமையிலுங் கொண்டாடப்பட 11-ம் சாந்தப்பரென்னும் பாப்பானவர் உத்தாவளித்தார். 13-ம் சிங்கராயரோ வெனில் இத் திருநாளை திருச்சபையின் பிரதான திருநாட்களுக்குள் ஒரு திருநாளாக அனுசரிக்கும்படி செய்ததுமல்லாமல், அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனையில் "மிகவும் பரிசுத்த செபமாலையின் இராக்கினியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்னும் மன்றாட்டையுஞ் சேர்த்தார். அன்றியும் 1887-ம் வருஷத்திலிருந்து அக்டோபர் மாசத்தை ஜெபமாலை மாதாவுக்கு ஒப்புக்கொடுத்து, அம்மாதம் முழுமையும் சகல கோவில்களிலும் பூசை நேரத்திலாவது அல்லது திவ்ய நற்கருணை ஸ்தாபகஞ்செய்து அதன் சந்நிதியிலாவது ஒன்றாய்ச் சேர்ந்து செபமாலை செபிப்பவர்கள் எல்லோருக்கும் விசேஷப் பலன்களை கட்டளையிட்டிருக்கிறார். இப்பாப்பானவர் விசேஷமாய்த் தம்முடைய அந்தியகாலத்தில் ஜெபமாலை பத்தியைப்பற்றி வெகுவாய்ப் புகழ்ந்து ஏறக்குறைய 10,12 நிருபங்கள் வரையில் எழுதியிருக்கிறார். இதன் நிமித்தம் இவருக்குச் செபமாலையின் பாப்பானவரென்னும் பெயரும் வழங்கிவந்தது.

ஐரோப்பாவில் தற்போது நிகழ்ந்து வரும் மகா கொடிய யுத்தத்தினால் அதிற் சம்பந்தப்பட்டிருக்கிற இரு கட்சிக்காரருக்கு மாத்திரமல்ல, நமது சத்திய திருச்சபைக்குமே பல இக்கட்டு இடையூறுகள் வந்திருக்கின்றனவென்று நாம் சொல்லத் தேவையில்லை. யுத்தம் தொடங்கின நாள் முதற்கொண்டு ஐரோப்பாவிலிருந்த எத்தனையோ குருக்களும், சந்நியாசிகளும், கன்னியாஸ்திரீகளும் இன்னும் சில மேற்றிராணிமார்களுமே தத்தம் இருப்பிடத்தையும் அலுவலையும் விட்டுவிட்டு போர்முனைக்குச் சென்றிருக்கிறார்கள். அப்படியே நம்முடைய தேசத்திலிருந்தும் அநேக குருக்கள் யுத்த முனைக்குப் போயிருக்கிறார்கள். இன்னும் அடுத்தடுத்துப் போய்க்கொண்டுமிருக்கிறார்கள். மேலும் ஜர்மனியராய் அல்லது ஆஸ்டிரியராய் இருக்கிற குருக்கள் மறியல் செய்யப்பட்டோ அல்லது அவரவர்கள் தேசத்துக்கு அனுப்பப்பட்டோ வருகிறார்கள். ஆனதுபற்றி, சில பங்குகள் தங்களுடைய குருக்களையும், சில பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் தங்களுடைய அதிகாரிகள், பண்டிதர்கள், உபாத்திமார்களையும், சில மடங்களும் அநாதி பிள்ளைகளின் ஸ்தாபனங்களும் தங்கள் கண்காணிகளையும், ஆதரணைகர்த்தாக்களையுமிழந்து தவிக்கின்றன. இத்துன்பங்கள் இம்மட்டோடு நின்றுவிடவில்லை. இதுவரையில் ஐரோப்பாவிலுள்ள விசுவாசப்பரம்புதல் சபையாரிடமிருந்தும் திருப்பாலத்துவ சபையாரிடமிருந்தும் நமது மேற்றிராணிமார்கள் தங்கள் மேற்றிராசன அலுவலை நடத்திவர, அதாவது கோவில்கள் கட்டவும், பள்ளிக்கூடங்கள், அநாதபிள்ளைகள் மடங்கள் முதலிய ஸ்தாபனங்களை

வைத்து நடத்தவும் வந்துகொண்டிருந்த பண உதவியும் மிக்கக் குறைவுபட்டிருக்கிறது. ஒருக்கால்வரவர முற்றிலுமேநின்றுபோகும் போலும் இருக்கிறது. சீனா, ஜப்பான் தேசங்களிலும், ஆபிரிக்கா முதலிய கண்டங்களிலும், இப்படியே திருச்சபை இந்த யுத்தத்தினால் துன்புற்றிருக்கிறது.

ஆகையால், முந்நாள் துலுக்கர் முதலிய துஷ்ட ஜாதியார் செய்த கலாபனைகளினின்றும், அல்பிசென்செஸ் முதலிய துர்மதங்களினின்றும் திருச்சபையையும் ஐரோப்பாவையும் காப்பாற்றின ஜெபமாலை மாதா இந்நாளிலும் இம்மகாயுத்தத்தினால் துன்பப்படும் ஜாதி ஜனங்களையும் திருச்சபையையும் தற்காத்து இரக்ஷிக்கும்படி அவ் வாண்டவளுடைய ஜெபமாலையை விசேஷித்த விதமாய் இம்மாதத்தில் ஜெபித்து வருவோமாக.

---

## THE BEGINNING OF WISDOM.

## ஞானத்தி னாரம்பம்.

---

சிருஷ்டியில் தோன்றும் கடவுளுடைய அநேக குணங்களில், மூன்று முக்கியமாய் மற்றெல்லாவற்றிலும் மிக்கத் தெளிவாகவும் விசேஷ உன்னதமுடையனவாகவும் காணப்படுகின்றன. அவையாவன: அவருடைய அளவற்ற வல்லமை, உன்னத ஞானம், அணைகடந்த நன்மைத்தனம் என்பவைதாம். சர்வேசுரனுடைய ஒவ்வொரு குணத்தையும் எடுத்து, நாம் யோசிக்குந்தோறும், அந்த அந்த குணத்துக் குகந்த புண்யம் நமக்குள் ளுண்டாவதைக் காணலாம். அப்படியே அவருடைய அளவற்ற வல்லமையை அறிவதால், தேவபயம் நம் மாத்துமங்களில் குடிகொள்கின்றது. எல்லாவற்றையு மாண்டளித்துக் காப்பாற்றி, தத்தம் கதியை யடைவதற்கான வழியைக் காட்டிச் சீர் செய்யும் அவருடைய மேலான ஞானம் நம் மனதில் மட்டற்ற நம்பிக்கையை யுண்டுபண்ணுகிறது. அவருடைய அணைகடந்த அன்பும், ஒப்புவமையற்ற பட்சமும், வரையில்லா இரக்கமும், நம்முள் ளிருக்கும் காதலைத் தூண்டி, அதனின்றெழும் அன்பினாற்றை வெளியாக்குகின்றன.

இம் மூன்று விஷயங்களையும் விவரித்துரைப்பதென்றால், இடம் பற்றாது; அவகாசமுங் கிடைத்தலரிது. ஆகலின், இவற்றுள் ஒன்றை எடுத்துக்கொண்டு, அதைப்பற்றிய சில நியாயங்களைக் கூறுவாம். முதல் விஷயத்தையே எடுத்துக்கொள்வோம். தேவபயம் ஞானத்தினாரம்பம். தேவபயம் நம்முள்ளாழ்ந்து, நம்மை முழுவது மதற்குள் ளடக்கி யிருக்கவேண்டிய தவசியம். சரி, தேவபயம் ஞானத்தின் ஆரம்பமாயின், தற்காலத்தில் இவ்வுலகிலுள்ள ஞானம் வெகு கொஞ்சமென்றே சொல்லல்வேண்டும். ஏனெனில், இக்காலத்தில் நாம் பார்க்கும் நிற்பாக்கியத்துக்குரியதும் பயங்கரமானதுமான காரியம் மேற்கூறிய தெய்வபய மின்மையே. முற்காலத்தில் பெரும்பாவங்களிருந்தன; ஆனால் மனிதர் ஆசாபாசத்தால் கட்டுண்டு, மதிமயங்கி அடாத பாவாக்கிரமங்களைப் புரிந்தபோதிலும், அவ்வினைகள் தணிந்ததும் தாம்பகைத்தெழுந்து சதி செய்த எல்லாவல்ல எம்மிறைவனாகிய நீதியதிபதியின் நினைவுவர, நடு நடுங்கி தபம் செய்ய வேண்டும் என்னும் நல்லறிவுடையவர்களாயிருந்தனர். ஆனால் இப்போதோ எல்லாம் மாறிவிட்டது; உலகில் தெய்வபயம் என்பது கிடைப்பது அருமையாய்விட்டது. மனிதர் லௌகீக துன்பங்களுக் கஞ்சலாம்; உலக நீதியதிபதிக்குப் பயப்படலாம், ஆனால் எல்லாம் வல்ல தேவ நியாயாதிபதியை ஒரு பொருட்டாய் மதிப்பதில்லை. மெய்யாகவே ஒரு போலீஸ்காரனுக்குப் பயப்படு மவ்வளவு பயம், நரக நெருப்பினிடம் நமக்கில்லை என்பது மிக வெட்கக்கேடான காரியமல்லவா? இதுவே இக்காலத்திய மிக்கக் கேவலக் குறிகளிலொன்றும். ஆம்! மனிதர் கடவுளை நேசியாதிருத்தலும், அவரிடம் தமது நம்பிக்கை யாவும் வையாதிருத்தலுமே மிக்க பரிதாபத்துக் குரியதும் பயங்கரத்துக் குரியதுமாயிருந்தபோதிலும், அவர்களிடம் தெய்வபயம் ஒரு சிறிதேனுமிருந்தால், அவர்கள் ஒருவாறு கரையேறலாம் என்னும் நம்பிக்கையுண்டு. ஆனால் எங்கே இப்பயம் ஒழிந்ததன்றோ, அங்கே நம்பிக்கையுமில்லை; அந்தோ அன்னார் கதி அதோகதிதான்.

நாம் முன் சொன்னதுபோல், கடவுளின் அளவற்ற வல்லமையைச் சரியாய் மதிப்பதே மேற்கூறிய பயத்தி னஸ்திவாரம். அவர் இயல்



பாகவே வல்லமை பொருந்தியவரானமையால், அவரிடம் நமக்குப் பயமிருக்கவேண்டியதே நியாயம். தம்மேல் அவருக்குள்ள அதிகாரத்தை யுணராமல் அவரைப் பலவிதத்திலும் நிந்தித்து, அவருடைய திருச்சித்தத்தை எதிர்த்து, அவருக்கு விரோதமாய் எழுந்து, அவருடைய பயமுறுத்துகையைக் கண்டு நகைத்தும் நடக்கின்றவர்கள் இருந்தால், தெய்வபயம் என்பதே இல்லாத அவ்வளவு மதிகெட்டவர்கள் இருந்தால், அவர்கள் அப்படி இருப்பது இயல்பை மீறிய தைரியமுடையவர்கள் என்னுங் காரணத்தாலுமல்ல; அல்லது அவர்கள் மற்றவர்களைவிட மிக வீரியர்களும் சுயேச்சையுடையவர்களும் என்னும் காரணத்தாலுமல்ல. ஆனால் அவர்கள் உண்மையாகவே மிக்க மதியீனர், குருடர் என்னும் காரணத்தாலாம். கடவுளைச் சரியாய் அறிந்தால், அவரிடம் பயமுண்டாவதவசியம். அறிவு முதிர முதிர பயமு மதிகரிக்குமன்றே. ஆனால் தேவனை யறியு மறிவு பயத்தை யுண்டுபண்ணுவதால், இவ் வுத்தம பயத்தை விர்த்திசெய்யும் எண்ணம் நம்மிடமிருந்தால், நாம் கடவுளைப் பற்றி அதிகமாயறிய முயலவேண்டும். நமது கண்களைத் திறந்து, நம்மைச் சுற்றியுள்ள இயற்கை விநோதங்களைப் பார்த்துச் சிந்திப்பதே, கடவுளுடைய வல்லமையை யுணர்ந்து அவருக்குப் பயந்து நடப்பதற்கோர் சுலபமான வழியாம்.

நாம் வசிக்கும் பூமியை எடுத்துக் கொள். கண்களுக் கெட்டிய தூரம் பரந்து விளங்கும் பூசும் புற்றரைகளையும், அல்லும் பகலும் அறுபது நாழிகையும் சப்தித்துக்கொண்டிருக்கும் விசாலமான சமுத்திரங்களையும், ஆகாயத்தை யளாவி பனியால் மூடப்பட்டு விளங்கும் உன்னத பர்வதங்களையும் சற்றே சிந்தித்துப்பார். பின்னர் இவற்றை யெல்லாம் படைத்தவர் கடவுள் என்பதை நினைத்துக்கொள். அல்லது ஒரு மனிதன் இமய பர்வதத்தின் கணவாய் ஒன்றில் நின்றுகொண்டு, தன் தலைக்குமேல் நீண்டுவளர்ந்து மேகமண்டலத்தைத் தாக்கும் அம்மலைப்புச்சியை மிக்கப் பயத்தோடு இமை கொட்டாமல் பார்க்கும் போது, தான் எவ்வளவோ பலவீனமும் கேவலமுமான சிஷ்டியென்பதைக் கண்டறியலாம் என்பதைச் சிந்தித்துப்பார். ஒருவித நடுநடுக்கம் அவன் தேகத்திற் பரவ, மயிர்க்கூச்செறிய, அவன் பாதாதி கேசபரியந்தம் நடுங்குகிறான்; அப்பாறையின் ஒரு சிறுபாகம் பெயர்ந்து அச்சமயத்தில் தன்மேல் விழுந்தால், தானிருக்கு மிடந் தெரியாமல் நசுங்கி யழிந்து போவது திண்ணம் எனப் பயப்படுகிறான். ஆம்! நம்முடைய சிறிய உருவத்தைக் கவனிக்க, ஒரு மலை நமக்கு மிகப்பெரிதாகத் தோன்றுகிறது. இம்மலைகளினளவு நம்மிலும் பெரிதே யொழிய அவைகள் எல்[illegible]னும் பெரிதெனச் சொல்லமுடியாது. [illegible]கிரி முதலிய மலைகளின் அளவு இப்பூமியினளவுக்கு முன்னால் எம்மாத்திரம்? ஒன்று மில்லாமை என்றே சொல்லவேண்டும். ஏனெனில், இம்மலைகள் பூமியின் சிற்சில பாகங்களில் கொஞ்சம் மேடிட்டிருக்கும் இடங்களாம். ஆனால், ஒரு மலை பூமியினளவுக்குமுன் ஒன்றுமில்லை யாயின், இதர சிஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களுக்குமுன் இப்பூமிதான் எம்மாத்திரம்? மெய்யாகவே இப்பூமி ஆகாயத்தில் அலையும் ஓர் அணுவாம்! இதைப்போல் எத்தனையோ மடங்கு பெரிதான அநேக கோளங்கள் ஆகாயத்தில் உலாவுகின்றன; அவைகளில் இப்பூமி ஓர் சிறிய கோளந்தானே. ஆதலால் அவைகளோடு ஒப்பிடுகையில் இப்பூமியினளவு என்ன? ஒன்று மில்லாமையே. நமது பூமி எவ்வளவு சிறிதென்றால், அது சுத்தமா யழிந்துபோன போதிலும், சிருஷ்டிமுழுவதையுங் கவனிக்கும் ஒரு சீவனுக்கு பூமியழிந்ததால் நேரும் நஷ்டங் கொஞ்சமுந் தெரியாது. இதனால் மற்ற கோளங்களுக்கு ஏதாவது கெடுதிநேரிடுமா? ஒரு பிடி மண்ணை யழித்துவிடுவதால் பூமியின் உருவத்திற்கும் நடபடிக்கைக்கும் ஏதாவது கெடுதியுண்டாகுமா? ஒரு குடம் ஜலத்தை நாம் எடுத்துக்கொள்வதால், இந்த ஐந்து மகா சமுத்திரங்களின் அளவு, பரிமாணம், பெருமை முதலியன எள்ளளவேனும் குறைந்துவிடுமா? அப்படியே சிஷ்டிப்பில் நமது லோக மழிந்துவிட்டால், மற்றவை ஏதாவது கெட்டுப் போகுமா?

வேனிற்கால நள்ளிரவில் வீட்டை விட்டு வெளியே சென்று வானலோகத்தைச் சற்றே அண்ணாந்து பார். உன்னைச் சுற்றியுள்ள வானமாகிய கூரையில் ஒளி செய்யும் மின்னற் புள்ளிகள் எத்தனை யிருக்கின்றன! அவற்றை யாரால் எண்ணிச் சொல்லமுடியும்? வானமென்னுங் கூரைமேல் யாரோ ஒரு கொடையாளி கணக்கில்லாமல் வெள்ளியாலும் பொன்னாலும் செய்த மலர்களை அளவில்லாத விதமாய் வாரி இறைத்தது போல் இருக்கிறது. ஆயினும் அவற்

றில் ஒவ்வொன்றும் ஒரு பெரிய உலகம் என நமக்கு நிச்சயமாகத் தெரியும். அவற்றில் அநேகம் நாம் வசிக்கும் உலகத்தை விட ஆயிரம் பதினாயிரம் சிலவேளை லட்சமடங்கு பெரியனவென வானசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். மேலும் கடவுளின் சிஷ்டிப்பை முழுவதுமே நாம்பார்த்தளவிடக் கூடியதல்ல. இறுன் புறவெளி சென்று பார்ப்பது வானின் ஒருபா[illegible]ய முழுவதுமல்லவே. நாம் பார்க்கப் [illegible] நமது கண்கள் பூத்துப் போகின்றன; [illegible]வேளை நாம் நன்றாக ஊன்றிப்பார்த்து வானத்தின் உள்பாகத்தையும் தெரிந்து கொண்டதாக நினைக்கிறோம். ஆம், நாமே நினைத்து மனப்பால் குடிக்கலாம். ஆனால் அப்படி நினைப்பது சரியல்ல. ஒரு தூரதிர்ஷ்டிக் கண்ணாடியைக் கொணர்ந்து பார்ப்போமானால், நாம் நினைத்தது தவறென விளங்கும். ஏனெனில் நாம் எங்கெங்கே ஒன்றுமில்லையென்று நினைத்தோமோ அங்கெல்லாம் சிறு நட்சத்திரங்கள் அநேகமிருக்கக் காணலாம். இது நமக்கு ஆச்சர்யத்தைக் கொடுக்க வில்லையா? இக்கண்ணாடியைவிட உயர்ந்ததைக் கொண்டு பார்த்தால் நட்சத்திரங்கள் புதிது புதிதாக நமது கண்களுக்குத் தோன்றும். இப்படி நாம் மேலும் மேலும் உயர்ந்த கண்ணாடியால் பார்க்கப் பார்க்க நட்சத்திரங்கள் அதிகமதிகமாய் விளங்கும். மனித சக்தியால் கூடிய ஏதுக்களைக் கொண்டு பார்த்தாய் விட்டது; அச்சக்தி இதற்கு மேல் போகக் கூடாது என்னும் எல்லைக்கு வந்த பின்னர், நாம் என்ன செய்யக் கூடும்? வானத்தை முழுவதுமே ஆராய்ந்து பார்த்தாய் விட்டதா? சிஷ்டியின் வெளி பாகத்தைப்பார்த்தோமேயொழிய உட்பாகத்தில் என்ன விநோதங்கள் இருக்கின்றன வென்பதையறியும் சக்தியற்றவர்களாய், ஒன்றும் செய்யத் தோன்றாமல் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களாகிறோம்.

[தொடரும்] *S. Selva Raju.*

---

## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

4-ம் கற்பனை.

(முன் தொடர்ச்சி.)

---

5. சோற்றுக்குச் செலவும் பூமிக்குப் பாரமுமா யிருக்கிறாய்.—ஒரு ஊரில் திரண்ட ஆஸ்திக்காரன் ஒருவனிருந்தான். இவன் உயிரோடிருக்கும்போதே தன் ஆஸ்தி, வீடு, நிலம்முதலியன வெல்லாவற்றையும் தன் பிள்ளைகளுக்குப் பங்கு பிரித்துக் கொடுத்துவிட்டான், சகலமும் பிள்ளைகளுடைய கைக்கு வந்தபின், அவர்கள் தங்கள் தகப்பனுக்குக் கீழ்ப்படியாமலும், சங்கை பண்ணாமலும், அவனுக்கு வேண்டிய சவரக்ஷணை செய்யாமலும் கடினகுண முள்ளவர்களாய் நடக்கத் துவக்கினார்கள். சில விசை அவனைக்கோபித்துத் திட்டுவார்கள். கிழட்டுப் பயலே என்று அழைப்பார்கள். "நீ சோற்றுக்குச் செலவும் பூமிக்குப் பாரமுமா யிருக்கிறாய்! எப்போது சாவாய்?" என்று தங்கள் தகப்பனுக்கு முகத்துக்கு முகமாய்க் கேட்பார்கள். அந்த விருத்தாப்பியனோ வெனில் தன் துஷ்டப் பிள்ளைகளின் நிஷ்டூரக் குணத்தைக் கண்டு கஸ்திப்பட்டு, ஒரு நாள் தன் ஸ்நேகிதனிடம் தன் பிள்ளைகளின் அடாத நடத்தையைப்பற்றிப் பேசியபோது, "நீர் உயிரோடு இருக்கும்போதே, உமக்கு ஒன்றும் வைத்துக்கொள்ளாமல் சகலத்தையும் உமது பிள்ளைகளுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டது பெரும் பிசகு; சற்று பொறுமையாயிரும் சீக்கிரத்தில் ஒரு உபாயத்தால் நீர் சுகப்படுவீர்;" என்று ஆறுதல் சொல்லி அனுப்பினான். இது நடந்த சில நாளைக்குப்பின் ஒரு குடியானவன், பளுவான ஒரு பெரிய பையைக் கொண்டுவந்து கிழவனுக்குக் கொடுத்து: முன் உம்மிடம் கடனாக வாங்கினதைக் கொண்டுவந்திருக்கிறேன் எண்ணிப்பாரும்; என்றான். "நான் பிறகு கணக்குப் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று கிழவன் கடன்காரனை அனுப்பிவிட்டு, அந்தப் பையை ஒரு பெரிய பெட்டியில் வைத்துப் பூட்டிப் பத்திரப்படுத்தினான். அவனுடைய பிள்ளைகள் இதைப் பார்த்தபின், இந்தப் பெரும் பணத் தொகை தங்களுக்கு வருமென்று எண்ணி, ஒருவன் மேல் ஒருவன் போட்டிப் போட்டுக்கொண்டு தங்கள் தகப்பனுக்கு ஒன்றுங் குறைவு இன்றி காப்பாற்றிவந்தார்கள். சில வருஷங்களுக்குப்பின் கிழவன் இறந்தபோது, அவனுடையபிள்ளைகள் மகா ஆவலுடன் பெட்டியைத் திறந்து பையை அவிழ்த்துப் பார்க்கவே, வெறும்



கூழாங்கல்லும் கிளிஞ்சிலும் இருப்பதைக் கண்டு வெட்கி நாணங் கொண்டார்கள்.

(Filassier.)

6. தாயை நேசித்த பிள்ளை.—வெகு காலமாய் வியாதியாய்க்கிடந்த தன் தாயை ஒரு ஏழைப்பெண் கூலி வேலையாலும் பிறரிடம் பெற்ற தர்மத்தாலும் மகா அன்புடன் சவரக்ஷணை செய்து காப்பாற்றி வந்தாள். தன் பிரிய தாயாருடைய கேவல ஸ்திதியை இவள் குருவானவருக்கு அறிவித்ததின்மேல், அவரும் வியாதிக்காரிக்கு கடைசித் தேவத்திரவிய அனுமானங்களை நிறைவேற்றினார். மறு வாரத்தில் வியாதிக்காரி தன் பிரிய குமாரத்தியை ஆசீர்வதித்து நல்ல மரணமடைந்தாள். குமாரத்தியோவெனில், தன் தாயின் ஆத்தும இளைப்பாற்றிக்காகச் செபம் செய்து பூசை கண்டு தேவநற்கருணை வாங்கி ஒப்புக்கொடுத்தாள். தன் கையில் பணம் மீறும்போது தன் தாயின் ஆத்துமத்துக்கு பூசை செய்வித்தாள். தன்னிலும் ஏழை எளியவர்களுக்குத் தர்மங் கொடுத்தாள். கடைசியாய் அவள் சாகுமட்டும் தன் தாயை மறவாமல் அவளுடைய ஆத்துமத்துக்கு எவ்விதத்திலும் உதவி சகாயஞ் செய்து வந்தாள்.

(Praeceptor.)

7. ஓர் போர்ச் சேவகன்.—போர்ச் சேவகன் ஒருவன் சாகும்போது தன் குமாரனை வரவழைத்து, தான் செத்தபின் தன் குதிரையை விற்று அந்தப் பணத்தைப் பூசைக்காகச் செலவிடும்படி கற்பித்து இறந்தான். குதிரை போர்க் குதிரையானதால், அதை விற்கச் சேவகனுடைய மகனுக்கு மனம் வராமல் அதைத் தனக்கே வைத்துக்கொண்டான். மேலும் தன் தகப்பனுடைய ஆத்துமத்தைப்பற்றி நினையாமலே போனான். செத்தவன் சில காலத்துக்குப்பின் தன் மகனுக்குக் காணப்பட்டு, அவனுடைய பெரும் பாவத்தையும் அதனால் அவனுக்கு வர இருக்குந் தேவ தண்டனையையும் அவனுக்கு அறிவித்து மறைந்தான். மகனோவெனில், வெகு துக்கமும் பயமுங்கொண்டு தன் தகப்பனுடைய ஆத்துமத்துக்காக அநேக பூசை செய்வித்து, அநேக நற்கிருத்தியங்களையுஞ் செய்து ஒப்புக்கொடுத்துத் தன் பாவத்துக்காகவுங் கடின தவம் புரிந்தான்.

(Muller.)

8. அர்ச். ஞானப்பிரகாசியார்.-இவர் பிரபு கோத்திரத்தில் பிறந்து திரண்ட திரவிய சம்பத்தை உடையவராய் சிறு பிராயத்தில் இராஜ அரண்மனையில் வளர்ந்து வந்தார். இவர் இளம் பிராயமாயிருக்கும்போதே சர்வேசுரனால் தேவ ஊழியத்துக்கு அழைக்கப்பட்டார். தம்மைச் சர்வேசுரன் துறவறத்துக்கு அழைக்கிறாரென்று அறிந்த மாத்திரத்தில் தமது இராஜ கோத்திரத்தையும் கீர்த்தி மகிமையையும் திரவிய சம்பத்தையும் தூசியாகப் பாவித்துச் சந்நியாச மடத்துக்குப் போகப் பிரயத்தனப்பட்டார். இதை அறிந்த அவருடைய தந்தையான பிரபு, அவரை உலகத்தில் நிறுத்தத் தன்னால் கூடிய பிரயத்தன மெல்லாம் செய்தும், அது வியர்த்தமானதால் விசனப்பட்ட போதிலும், தன் குமாரனுக்குத் தேவ அழைப்பு இருக்கிறதென்று குருப்பிரசாதிகளால் அறிந்தபின், அவர் சேசுசபையில் சேரும்படி சம்மதித்தார். ஞானப்பிரகாசியாரும் தனக்குள்ள சகலத்தையும் துறந்துவிட்டுச் சந்நியாச அந்தஸ்தில் சேர்ந்து சர்வேசுரனுக்கு உத்தமமான ஊழியஞ் செய்து வாலிபப் பிராயத்திலே அர்ச்சியசிஷ்டவராய்க் காலமானார்.

(இவர் சரித்திரம்.)

---

## GNANAMANI III PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 24-ம் அதிகாரம்.

அபிராமி, தன் கழுத்தில் கை போட்டவனுடைய கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு "திருடன், திருடன்" என்று பேரோலி பாய்ச்சிக் கத்தினாள்.

---

12-நாளைக்குப்பின் அழுக்கான துணியைக் கட்டிக்கொண்டு வெகு கேவல ஸ்திதியில் சலமோன் ஈசாக் உபதேசியார் வீட்டுக்கு இராவேளையில் வந்தபோது, ஈசாக் உபதேசியார் அன்

னேரத்தில் எங்கேயோ வெளியே போயிருந்தார். அபிராமியை இந்த நிற்பாக்கியன் அணுகி: அபிராமி!என் தப்பிதத்தை பொறுத்துக்கொள்ள மாட்டாயோ? என் தோழருடைய துற்போதனையால் செய்த பிழையை மன்னிக்கவேண்டும், என்று பரிதாபத்துக்குரிய விதமாய் மன்றாடினான். அப்போது, அபிராமி, "இனியாகிலும் கிரமமாயிருங்கள். துஷ்டருடைய சகவாசத்தை விட்டு நல்வழியில் நடவுங்கள்" என்று, உடனே வெந்நீர் வைத்து ஸ்நானஞ் செய்வித்து போசனம் விசாரித்தாள். ஈசாக் உபதேசியார் தன் மருமகனைப்பார்த்தபோது அவனோடு ஒன்றும் பேசாமல் தமது ஜெபத்தை முடித்துக்கொண்டு போசனம் செய்து நித்திரைபோனார்.

அன்று இராத்திரி அபிராமி தன் புருஷனுக்கு புத்திமதி சொல்லி, இது முதற்கொண்டு நல்ல வழியில் நடப்பதாக தனக்கு உறுதிவாக்குக் கொடுக்கும்படி கேட்டபோது "அப்படியே ஆகட்டும் அபிராமி, இது முதற்கொண்டு குடிக்க மாட்டேன் ; கோவிலுக்குச் சரியாய்ப் போவேன் ; உன்னை அன்புடன் நேசிப்பேன் ; என் துற்நடத்தையால் உனக்கு கஸ்திவருத்தமாட்டேன்" என்று சத்தியஞ்செய்தபின், தனக்கு இருக்கும் பத்து ரூபாய்க் கடனைக்கொடுத்துவிட்டால் இனி துஷ்டரோடு சேருவதற்கு இடமுண்டாகாது என்றதன்மேல் கபடற்ற அபிராமி பத்து ரூபாய் எடுத்துத் தன் புருஷன் கையில் கொடுத்தாள். அதை அவன் வாங்கினபின் அங்கேயே படுத்திருந்து நடு இராத்திரியில் எழுந்து ஒருவருக்குந் தெரியாமல் எங்கேயோ போய் விட்டான்.

இதற்குப்பின் அபிராமி சலமோனை ஒருபோதும் அரைக்காசுக்கு முதலாய் நம்பினவள் அல்ல. விசுவாசநாயகர் சலமோனுடைய நடவடிக்கையை யெல்லாம் ஈசாக் உபதேசியார் மூலமாயறிந்து, "இந்தத் துன்பத்துக்கும் அவமானத்துக்கும் நான்தான் ஐயா காரணம். என்பேச்சை கேட்டுத் தானே நற்குண சாலியான உமது பெண்மணியை அந்த அயோக்கியனுக்குக் கொடுத்துவிட்டுச் சங்கடப்படுகிறீர்! அவன் நல்வழிக்கு வருவான் என்கிற கருத்துடன் அப்படிச் சொன்னேனே அன்றி மற்றப்படியல்ல" வென்று துக்கப்படும்போது, "ஆமா, நீங்கள் நல்ல கருத்துடன் தான் சொன்னீர்கள், நானும் அப்படித் தான்நினைத்தேன். ஆனால்.................(கண்கலங்கி;) அபிராமிக்கு என்ன சங்கடம் நேரிடுமோ?" என்று கண்ணீர் விடும்போது, "அப்பேர்ப்பட்ட நல்ல பிள்ளையைச் சர்வேசுரன் கைவிடமட்டார் ஐயா," என்று ஆறுதல் சொன்னார் விஸ்வாச நாயகர்.

கருப்பிணியாயிருந்த அபிராமி முன்னிலும் அதிகமாய்த் தேவ உதவியைத் தேடி படத்தை நோக்கித், தன் சிலுவையைப் பொறுமையுடன் சுமப்பதற்கான இஷ்டப்பிரசாதத்தையும் தன் நிர்ப்பாக்கிய புருஷன் மனந்திரும்பும் படியாகவும் நாடோறும் பிரார்த்தித்து வந்தாள். தன் கருத்துக்காக வேண்டிக் கொண்டு வரும்படி, அவ்வூர் மடத்துக் கன்னியரையும், விசேஷமாக புஷ்பமரி சகோதரியையும் கேட்டுக் கொண்டாளே அன்றி, தன் புருஷனுடைய துற் செய்கையை அவர்களுக்கு அறிவித்தவளல்ல.

பத்து ரூபாயுடன் சலமோன் காணாமற் போன ஐந்தாம் நாள் அபிராமி மத்தியான போசனஞ் செய்து கதவைச் சாற்றிக் கட்டிலிற் படுத்து நித்திரை செய்யும்போது, யாரோ தன் கழுத்தில் கையைவைப்பதாக அறிந்து, திடீரென்று விழித்துக் கொண்டு, தன் கழுத்தில் கை போட்டவனுடைய கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, "திருடன், திருடன்" என்று பேரொலிபாய்ச்சிக் கத்தினாள். இந்தச் சத்தத்தைக் கேட்ட ஈசாக் உபதேசியார் பக்கத்து அறையிலிருந்து விரைவாய் ஓடிவந்தார். அடுத்த வீட்டுக்காரரும் இந்நேரத்தில் எந்தத் திருடன் வந்தானென்று ஓடிவந்தார்கள். நிர்ப்பாக்கிய சலமோன் தன்மனைவியின் கழுத்திலிருந்த தாலியையும்காசுமாலையையும்மெதுவாய் அவிழ்க்கும்போது, அவள் திடீரென்று விழித்துக்கொண்டு அவன் கையைப்பிடித்துக்கொண்டாளானதால் காசுமாலையுந் தாலியும் சலமோன் கையிலிருந்தது. தன் நகையைத் திருடினது இன்னானென்று அறிந்திருந்தால் கூச்சல் போட்டிருக்க மாட்டாள் அபிராமி. ஆனால் யாரோ திருடன் என்று நினைத்து, "திருடன், திருடன்" என்று அலறிக் கத்தினாள். இந்தச் சத்தத்தைக் கேட்டு வீட்டுக்குள் வந்த ஈசாக் உபதேசியாரும் அண்டைவீட்டுக்காரரும், அபிராமி சலமோனுடைய கையைப் பிடித்துக் கொண்டிருப்பதையும், அவன் கையில் அபிராமியுடைய காசுமாலையும் தாலியும் இருப்பதையுங் கண்டு, அதன் அருத்தத்தைக்கண்டுகொண்டு பேசாமல் நின்றுகொண்



டிருந்தார்கள். அப்போது, ஈசாக் உபதேசியார் பெருமூச்சு விட்டு, சலமோனை நோக்கி: இப்பேர்ப்பட்ட அபகீர்த்தியைச் சம்பாதிக்கத்தானா என் குமாரத்தியை மணமுடித்துக்கொண்டாய்? என்று அவன் கையிலிருந்த நகையைப் பிடுங்கிக்கொண்டு சிற்றறைக்குள் சென்றார்.

சலமோனோ வெட்கி, நாணி, வெளியே போகாமல், சமையல் வீட்டில் சென்று மூலையில் உட்கார்ந்து கொண்டு, வெளிப்பட்ட தன் திருட்டுத்தனத்தை மறைப்பதற்காக உபாய தந்திரங்களைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். அங்கு வந்தவர்கள் ஒன்றும் பேசாமல் ஒருவர் ஒருவரைப் பார்த்துக்கொண்டு புந்நகைப்புடன் வெளியே போய், சலமோனுடைய துற்கிருத்தியங்களைப்பற்றித் தமாஷாய்ப் பேசி சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

சகலரும் வெளியே போனபின், ஈசாக் உபதேசியார் தன் குமாரத்தியைப் பார்த்து: சலமோன் வெளியே போனானோ வென்று வினவினபோது, கையால் சயிக்கினை காட்டி, சமையல் வீட்டிலிருப்பதாக அறிவித்தாள் அபிராமி. உபதேசியார் சமையல் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது, ஒரு மூலையில் திருடனைப்போலப் பதுங்கியிருக்கும் தன் மருமகனைப் பார்த்து, "சலமோன்!இங்கே வா" வென்று தனது சிற்றறைக்கு அழைத்துக் கொண்டு போனார். அதற்குள்ளாக சலமோன், "மாமா ! ஒரு நிமிஷத்தில் என்னை நீங்கள் எல்லோரும் திருடனாக்கி விட்டீர்கள்!! காசுமாலை கோர்த்துக் கட்டப்பட்டிருந்த நூல் அவிழ்ந்திருந்ததைக் கண்டு அதைக் கட்டி முடிபோடுஞ் சமயத்தில் என்னைத் திருட்டுப் பயலாக்கி விட்டீர்கள் !" என்றான்.

ஈசா.—சலமோன் ஏன் வீணாய்ப் பொய் சொல்லி பாவத்தின்மேல் பாவங் கட்டிக் கொள்ளுகிறாய்? பார் இதை! தாலிக் கயிற்றையுஞ் சேர்த்து அவிழ்த்திருக்கிறாய்!

சல.—(இதைக் கேட்டபின் வெட்கி,) மாமா, இந்தத் தப்பிதத்தைப் பொறுத்துக்கொள்ளுங்கள். இனி யிப்படிச் செய்யேன். இது முதல் என் நடத்தையைத் திருத்திக்கொள்வேன், என்று நீலிக்கண்ணீர்விட பிரயாசைப் பட்டும் ஒரு துளியும் வரவில்லை.

ஈசா.—நீ முன் குடித்துச் சூதாடி, அநேக துற்பழக்கங்களுக்கு உள்ளாகி யிருந்தாய். ஆனால் நீ மனந்திரும்பிச் சத்திய சபையில்சேர்ந்த பின் ஒரு வருஷகாலமாய் உன் சன்மார்க்கத்தைக் கண்ட சகலரும் என்னுடன் பேசி என் குமாரத்தியை உனக்கு விவாகஞ்செய்து கொடுக்கும்படி சிபார்ஸ் செய்தார்கள். அபிராமியோ கலியாணத்துக்குச் சம்மதிக்கவே இல்லை. என் வலு கட்டாயத்தால் உனக்கு வாழ்க்கைப் பட சம்மதித்தாள். சிலகாலம் உன் நன்னடத்தையால் சகலமும் நன்றாய் நடந்தது. நானும் சந்தோஷத் திருப்திகொண்டிருந்தேன். ஆனால் கடந்த பத்து மாதகாலமாய் உன் குணம் முழுதும் மாறுபட்டு, கெட்ட தோழரோடு சகவாசஞ் செய்து, சத்திய வேதத்தைவிட்டு பதித வேதத்தில் திரும்பப் போய்ச் சேர்ந்துகொண்டு, குடிப்பதிலும் சூதாடுவதிலும் காலத்தைக் கழித்து வருகிறாய் ! இதனால் எனக்கு எவ்வளவு துக்கமும் சங்கடமும் உண்டாகிறது; அதைச் சர்வேசுரன் மாத்திரம் அறிவார், என்று (கலங்கும் தமது கண்களைத் துடைத்தார்.)

சல.—இனி ஒரு போதும் குடிக்கமாட்டேன் மாமா, இது நிச்சயம்.

ஈசா.—உன்வார்த்தைப்படி குடியை விட்டுவிட்டு ஒழுங்காய் நடந்தால்போதும். குடியைப் பற்றி இரண்டொருவார்த்தை சொல்வது நலமாயிருக்கும். அந்த நாற்காலியில் உட்காரு.

முதல் முதல் குடிக்கப் பழகுகிறவர்கள், அதனால் உண்டாகும் லாபநஷ்டத்தை யறிந்து அவ்வாறு செய்கிறதில்லை. தமாஷுக்காகவும், அது எப்படியிருக்குமோ வென்று பார்க்கும் படிக்கும் முதல் முதல் குடிப்பார்கள். இப்படிக் குடிக்கப் பழகியபின் கூலிவேலை செய்து நாளொன்றுக்கு 2 அல்லது 3 அணா வாங்கும் வேலைக்காரன் முதலாய்க் கூலியில் பாதியாகிலும் கள்ளுக்கடையில் கொடுத்து குடிப்பான். ஏன்? வேலையால் தனக்குண்டாயிருக்கும் அலுப்புக் களைப்புத் தீரும் என்கிற சாக்கு வைத்துக் கொண்டே ! கூலிவேலை அகப்படாத போது கடனுக்கு வாங்கிக் குடித்து, திரும்ப வேலை செய்து, வரும் கூலியைக் கடைக்காரனுக்குக் கொடுத்துவிடுவான்.

தச்சர், கம்மாளர் முதலியவர்களுக்கு இப்பேர்ப்பட்ட துற்பழக்கம் இருக்குமாகில், இடைவிடாமல் நெருப்பண்டை இருப்பதால் உடம்புக்குச் சூடுண்டாகிறதென்று நினைத்துக் கொண்டு, அந்தச் சூட்டைத் தணிக்கும்படி குடிப்பார்கள்.

சிலர் தங்களுக்குக் காசவியாதி யுண்டென்று குடிப்பார்கள். வேறு சிலர் தங்களுக்கு யாதொரு வியாதியும் வாரதபடிக்குக் குடிப்பார்கள்.

பணக்காரரோ, தங்கள் வயிறு செம்மையாயில்லை யென்று குடிப்பார்கள். சிலர் பசி உண்டாகும்படி குடிப்பார்கள். சிலர், தாங்கள் அருந்தின போஜனம் சீக்கிரத்தில் ஜீர்ணமாகும்படி குடிப்பார்கள். வேறு சிலர், இரவில் நல்ல தூக்கமில்லை யென்று குடிப்பார்கள். தேர் திருவிழா கொண்டாடப்படும்போதும், கலியாண உற்சவம் நடக்கும்போதும் சந்தோஷங் கொள்ளவேண்டுமென்று குடித்து, சபையார் சிரிக்க, வாய்க்குவந்தபடி உளறுவார்கள். அக்காலங்களில் குடி வெறியால் உண்டாகும் கலகத்துக்கும் சண்டைகளுக்கும் கணக்கு வழக்குண்டோ? ஒரு வீட்டில் சாவு உண்டாகும்போது துக்கத்தை மாற்றவேண்டுமென்று குடிப்பார்கள். குடிவெறியில் கத்தி அழுவார்கள். கல்லறைக்குப் போகும்போது அங்குமிங்கும் அசைந்து ஆடிக்கொண்டு கீழேவிழுந்து எழுந்து நடப்பார்கள். கல்லறையில் சவத்தை க்ஷேமிக்கும்போது என்னையும் புதைத்து விடுங்கள் என்று உளறுவார்கள்.

ஊரில் உண்டாகும் விவகாரத்தைத் தீர்க்கும்படி உட்காரும் பெரியமனுஷருக்குக் குடிப்பழக்க மிருக்குங்கால், எவன் கள்ளு சாராயத்துக்குப்பணங்கொப்பானோ அவன் பக்ஷமாய்த் தீர்மானஞ் செய்வார்கள் அவனுடைய விஷயம் நீதியாயிருந்தாலும் அநீதியாயிருந்தாலும். என்ன அநியாயம்! எப்பேர்ப்பட்ட பாதகம்!!

இதன் காரணமாகக் கையில் காசில்லா விட்டால் அவனை யிவனை ஏமாற்றப் பார்ப்பார்கள்! பொய் சொல்ல அஞ்சமாட்டார்கள். குடிக்கக் கொடுத்தால் எப்பேர்ப்பட்ட தப்புப் பிரமாணமும் செய்ய பயப்படமாட்டார்கள். ஐயையோ! இது எப்பேர்ப்பட்ட தோஷம்! சுவாமி இப்பேர்ப்பட்டவர்களை எவ்வளவு காலம் தண்டியாமல் பொறுமையாயிருப்பார்!!

குடிக்க ஆசை கிளம்பும்போது கையில் பணம் இல்லாதபடியால், தனக்கு எதிர்ப்பட்டவர்களை யேமாற்றிக் கடன் வாங்கக்கூடாத பட்சத்தில், திருட ஆரம்பிப்பார்கள். தன் சொத்து, பிறத்தியார் சொத்து என்று பார்க்கமாட்டார்கள். ஏழை யெளியவர்களுடைய சொத்தென்றும், கோவில் பொருளென்றும் பாராமல் கொள்ளையடித்துக் குடிப்பார்கள். இராவேளையில் தோட்டந் துரவுகளில் புகுந்து காய் கனிகளைத் திருடுவார்கள்! வயல் கொல்லைகளில் சென்று விளைச்சலைக் கொள்ளையடித்து மனங் குளிரக் குடிப்பார்கள்! பணம் எந்த விதத்திலும் அகப்படாத பக்ஷத்தில், மரமேறி அதில் போடப்பட்டிருக்கும் கள்ளுக் குடுவைகளைக் கழற்றி அதில் வடிந்திருக்கும் மதுபானத்தைக் குடிப்பார்கள். இது எப்பேர்ப்பட்ட பாவாக்கிரமம்! புறத்தியாருக்கு வருவித்த பொருள் நஷ்டத்தைப் பரிகாரஞ் செய்யாதிருந்தால், அந்தப் பாவங்களுக்குப் பொறுதியில்லையென்று தேவ கற்பனையா யிருக்கக்கொள்ள, இப்பேர்ப்பட்டவர்கள் கட்டிக்கொண்ட இத்தனை திருட்டுப் பொருளை யெப்படி உத்தரிப்பார்கள்!

இப்பேர்ப்பட்ட குடிகாரர் புறத்தியார் பொருளை முன் சொன்னபடி கொள்ளையடித்த பின் தங்கள் சொத்தைக் காப்பாற்றுவார்களென்று நினைக்கிறாயோ? பரிச்சேதமில்லை. தங்கள் நிலம், வயல், கொல்லையையும், சிலசமயங்களில் தங்கள் வீட்டையும் பல சாக்குப் போக்குகளைச் சொல்லி—மாடுவாங்கவேண்டும், கடனைத்தீர்க்கவேண்டும், சர்க்கார் கிஸ்தி செலுத்தவேண்டும், வியாபாரம் செய்யவேண்டுமென்று சொல்லி, மற்றவர்களுக்கு ஒத்திவைப்பார்கள். கைக்குவரும் பணத்தில் கொஞ்சம் வீட்டுக்குச் செலவுக்கு வைத்து, மற்றதைக் கள்ளுக்கடையிலும் சாராயக் கடையிலுஞ் செலவுசெய்து கும்மாளம் அடிப்பார்கள். "அறுப்புக் காலத்தில் எலிக்கு நாலு பெண்டாட்டி"யென்பதுபோல, அவர்கள் கையில் பணமிருப்பதாக அறிந்த மற்றக் குடிகாரர் அவர்களுடன் சிநேகஞ்செய்து, அந்தப் பணமெல்லாம் கரையுமட்டும் அவர்களோடு இராப்பகலாய் நின்று, அது முடிந்ததும் அவர்களை விட்டு மெள்ள நழுவி விடுவார்கள். இரண்டு மூன்று வருஷத்தில் வட்டித் தொகை அசலுக்கு மிஞ்சிப் போகுங்காலத்தில் ஒத்திவைத்த நிலங்களை அரை குறையாய் விற்றுப்போட்டு, அந்தப் பணத்தைக் கள்ளுக் கடையிலும் சாராயக் கடையிலும் சேர்ப்பார்கள்.

இப்பேர்ப்பட்ட துர்வழக்க முள்ள நிர்ப்பாக்கியர், தங்கள் பெண்சாதி பிள்ளை குட்டிகள் பட்டினியாயிருக்கிறார்களென்று பரிதாபப் படமாட்டார்கள். பிள்ளை குட்டிகளுக்குக் கட்டத் துணியில்லையே என்று சிந்தை படமாட்



டார்கள்; வேதகாரியங்களையும் வேதகடமைகளையும் பற்றி கிஞ்சித்தென்கிலும் நினைக்க மாட்டார்கள். பேய்த்தண்ணீராகிற அந்தப் பாழும் மதுபானத்தை ஆசைதீரக் குடித்து விட்டால் போதும், வேறு கவலைசிந்தை வேண்டியதில்லை அவர்களுக்கு.

இன்னுஞ் சிலதுஷ்டர் கைக்குக் காசு அகப்படாத சமயத்தில் தங்கள் வீட்டில் உள்ள தவசதானியத்தையோ, உப்புப் புளி மிளகாயையோ திருடிக்கொண்டுபோய்க் கள்ளுக்கடையில் சேர்ப்பார்கள். இன்னுஞ் சிலபாதகர் தங்கள் பெண்சாதி பிள்ளைகளுடைய துணி மணியையோ, காது கழுத்திலுள்ள நகையையோ கொண்டுபோய் அடகுவைத்து, அந்த நரகத்தண்ணீரைக் குடித்து மகிழுவார்கள்!

சல.—நான் அபிராமியின் காசுமாலையை அவிழ்த்தேனே அன்றி அதை விற்கவுமில்லை குடிக்கவுமில்லை மாமா.

ஈசா.—நான் இப்போது சொல்லிவந்த பாபிஷ்டி கருமங்களை யெல்லாம நீ செய்ததாகச் சொன்னேனா? பரிச்சேதமில்லை. உலகத்தில் குடிகாரர் நடத்திவரும் அடாத பாவ கிருத்தியங்களை விவரித்து அதனால் மதுபானத்தின் மட்டில் உனக்கு அருவருப்பு உண்டாகும் என்கிற தாற்பரியத்துடன் சொல்லுகிறேனே அன்றி மற்றப்படியல்ல.

இந்த ஊரிலும் சுற்றுப்பக்கத்திலுள்ள கிராமங்களிலும் போய் பார்த்துவா. எனக்குத் தெரிந்து, மகாராசராய் பணங்காசு வட்டிக்கு விட்டு, நிலபலங்களையும் ஆடுமாடுகளையும் ஏதேஷ்டமாய் வைத்துக்கொண்டு கௌரவமாய்ப் பிழைத்த குடும்பங்கள் பலவுண்டு. இப்போதோ, அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் தலையெடுத்தபின் குடிக்கப் பழகித் தங்கள் நிலங்களைக் கொஞ்சங் கொஞ்சமாய் இழந்தார்கள். நகை நட்டை விற்றுப் போட்டார்கள். தட்டோட்டு வீடுகளையும் மெத்தை வீடுகளையும் கடன்காரருக்குக் கொடுத்து விட்டு வைக்கோல் வேய்ந்த குடிசைகளில் இருக்கிறார்கள். இப்போது அப்பேர்ப்பட்டவர்கள் குடியை விட்டு விட்டார்களா? பரிச்சேதம் விடவில்லை நாய், எச்சிலுக்கு அலைந்து திரிவதுபோலக் கள், சாராயக்கடைகள் பக்கமாய்த் திரிகிறார்கள். ஆ! கண்ணராவியே! இது என்ன பைத்தியம்! பரிதாபம்! பரிதாபம்!!

இப்பேர்ப்பட்ட குடிகாரரை யெவனும் நம்பமாட்டான் அரைக்காசுக்கும்! "அவனா! குடிகாரபயல், ச்சீ, அவன் கெட்டான்"என்பார்கள். நல்ல குடும்பத்தில் பிறந்த இந்தக் குடிகாருடைய மக்களுக்குத் தகுந்த சிபாரிசு கிடைக்காது. குடியின் காரணத்தால் பொய் புரட்டு சொல்லவும், பித்தலாட்டஞ் செய்யவும், திருடவும் அஞ்சாமல், வெறிகொண்டிருக்கும்போது போக்கிரித்தனத்துக்கும் விபசாரத்துக்கும் பயப்படமாட்டார்கள். எத்தனையோ போக்கிரிகள் வெறியெடுக்கக் குடித்து மயக்கத்துடன் வழியிலுள்ள வீடுகளில் நுழைந்தபடியால் செருப்பாலும் துடைப்பக்கட்டையாலும் அடிபட்டு, வெளியே இழுத்துத் தள்ளப்பட்டு, நாலு பேரால் சிரித்து இகழப்பட்டு, ச்சீ, ச்சீ, என்று காறி உமிழப்பட்டார்கள்!! ஆ! இது எவ்வளவு வெட்கக்கேடு! புத்தியுள்ள மனிதனுக்கு இதிலும் ஈனத்துக்குரிய காரியமுண்டோ? குடியினால் எத்தனையோ பேர் பயங்கரத்துக்குரிய வியாதியினால் வாதித்துப் பீடிக்கப்பட்டு வருகிறார்கள்! எத்தனையோபேர் இந்த அசுத்த நரகல் தண்ணீரைக் குடித்ததால் புத்தி மாறாட்டப்பட்டு பைத்தியக்கார ஆஸ்பத்திரியி லிருக்கிறார்கள்!

இழிவுக்குரிய இந்த நிற்பாக்கிய குடியால் உலகத்தில் விளையுந் தின்மையையும், பாவதோஷங்களையும், சண்டை சச்சரவுகளையும், அஷ்டதரித்திரத்தையும், கடைசியாய்த் தேவ கோபத்தையும் பற்றி பேசவேண்டுமானால் பல நாள் பிடிக்கும்.

நான் இப்போது சுருக்கமாய்ச் சொன்னதை மனதில் வைத்துக்கொள், சலமோன்! கெட்ட தோழரை அண்டாதே. எந்த முகாந்திரத்தைப் பற்றியும் அந்தப் பேய்த்தண்ணீரில் ஒரு துளியும் வாயில் விடுவதில்லை யென்று சர்வேசுரனுக்கு சத்தியவாக்குக் கொடுத்து, பிரமாணிக்கமாயும் எதார்த்தமாயும் நடந்துவா. இப்படி நடந்தால் உனக்குக் கீர்த்தி, உன் பெற்றோருக்குக் கௌரவம், உன்பிரிய மனைவிக்கும் எனக்குந் திருப்தி, கடைசியாய் உன்னைப் படைத்து இரட்சித்த சர்வேசுரனுக்குச் சந்தோஷம் உண்டாகும். இப்போது நான் வாய் நோகச் சொன்ன சொற்கள் பாறைமேல் போடப்பட்ட விதைக்குச் சமானமாகாமல், நல்ல நிலத்தில் விதைத்த விதையைப் போல் ஒன்றுக்கு நூறு மடங்கான பல

ளைக் கொடுக்கும்படி ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள், சலமோன்.

சல.—நீங்கள் சொன்னதை நான் ஒருபோதும் மறவேன் மாமா. இது முதல் அந்தக் கடைவீதி வழியாகப் போகப் போகிறதில்லை. இது சத்தியம்.

---

# CORRECT THINGS FOR CATHOLICS.

# கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

தொகைப்பட வரும்

## மேலான ஞானவாசகம்.

---

### நான்கென்னு மிலக்கத்தில்.

(முன் தொடர்ச்சி.)

15. குடியின் பிள்ளைகள் நாலு. அவையாவன: விபரீத சந்தோஷம், பயனில்லா சொற்கள், சரீர வசுத்தம், புத்திக் குறைவு இவைகளேயாம்.

16. கோபத்துக்கு மருந்து நாலு. அவையாவன: கோப மெம்மாத்திரம் அநியாயமென்றுங் கெடுதலுள்ளதென்றும் யோசித்தல், ஜெபஞ்செய்து சேசுநாதருடைய சாந்த குணத்தின்பேரில் தியானித்தல், கோபம்வரும் வேளையில் ஒன்றும் பேசாமல் அது தணியுமட்டும் பொறுமையாயிருத்தல், கோபம் வரும்போது அதனையடக்கிப் பொறுமையின் பிரகரணஞ் செய்துகொள்ளல் இவைகளேயாம்.

17. ஊழியர்களின் கடமைகள் நாலு. அவையாவன: எசமான்களுக்குச் சங்கை செய்தல், அவர்களுக்குக் கீழ்ப்படிதல், கண்ணர்ண வேலை செய்யாமல் மனச்சாட்சிப் பிரகாரம் வேலை செய்தல், திருடாமற் பிரமாணிக்கத்தைக் காத்தல் இவைகளேயாம்.

18. உபாத்தியாயர் கடமைகள் நாலு. அவையாவன: நன்னடத்தையிற் பிள்ளைகளைப் பிரவேசிப்பித்தல், சத்தியவேத சித்தாந்தத்தை யவர்க ளுணரப்பண்ணுதல், அவரவர்கள் அந்தஸ்துக்குத் தகுதியான படிப்பு கொடுத்தல், அவர்கள் புத்திக்குஞ் சத்திக்கும் அந்தஸ்துக்குந் தக்காப்போலப்படித்துக்கொடுத்தல் இவைகளேயாம்.

### ஐந்தென்னு மிலக்கத்தில்.

1. திருச்சபைக் கற்பனைகள் ஐந்து. அவையாவன: ஞாயிற்றுக்கிழமையிலுங் கடன் திருநாட்களிலு முழுப்பூசை காணுதல், வருஷத்துக்கொருவிசை யாகிலும் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்கிறது, பாஸ்குத் திருநாட்களில் பாவசங்கீர்த்தனம் பண்ணி தேவ நற்கருணை யுட்கொள்ளுதல், வெள்ளி சனிக்கிழமைகளிலுந் தபசுகால முதலிய நாட்களிலும் சுத்தபோசனமும், ஒருசந்தி நாட்களில் ஒருசந்தியுமனுசரித்தல், விலக்கப்பட்ட காலத்திலும் குறைவான பிராயத்திலும் விக்கினமுள்ள உறவின் முறையோடு கலியாணஞ் செய்யாதிருத்தல்.

2. தத்தமக்குரிய இச்சையின்படியே செலுத்தப்படாமல் அடக்கிப் பரிபாலனம் பண்ணப்படவேண்டிய புலன்கள் ஐந்து. அவையாவன: மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவைகளேயாம்.

3. அருவருத்துத் தள்ளவேண்டியவைகள் ஐந்து. அவையாவன: பொய், களவு, கொலை, கள்ளருந்தல், குருநிந்தை என்னப்பட்ட பஞ்சபாதகங்களாம்.

4. ஒருவன் தான் நிச்சயமாய் மோட்ச மடைவேனென்று சொல்வதற்குரிய அடையாளங்கள் ஐந்து. அவையாவன: தின்மைகளைச் சகிப்பதில் திடனுள்ள பொறுமை, ஏழைகளுக்குப் பிச்சை கொடுத்துச் சத்துராதிகளை ஸ்நேகித்தல், சாவான பாவமில்லாமல் இஷ்டப்பிரசாதத்தோடிருந்துசெபத்தில்நிலைக்கொண்டிருத்தல், வேத வாக்கியத்தின் பேரிலும் நல்ல புத்தகங்கள் பேரிலும் விருப்பங் கொண்டிருத்தல், தேவமாதாவின் பேரில் பத்தி வைத்தல் என வைந்தாம்.

6. நல்ல மனஸ்தாபத்துக் குரிய அடையாளங்கள் ஐந்து. அவையாவன: அது இருதயத்திற் பிறந்ததா யிருத்தல், சுபாவத்துக்கு மேற்பட்டதா யிருத்தல், சாதாரணமா யிருத்தல், தேவஸ்நேகங் கலந்ததாயிருத்தல், பாவத்தை வெறுத்ததா யிருத்தல் என வைந்தாம்.



6. நல்ல பிரதிக்கினைக் குரிய அடையாளங்கள் ஐந்து. அவையாவன: பாவச் சமயங்களை விலக்கல், பாவ தோஷத்தின் அகோரத்தை யோசித்தல், பாவம் ஒழியத் தகுந்த உபாயங்களைத் தேடுதல், தன் பலவீனத்தை யுணர்தல், சேசுநாதர் தேவமாதாவின்பேரில்உறுதியான நம்பிக்கை வைத்தல் இவைகளேயாம்.

7. பாவசங்கீர்த்தனத்துக்குரிய அடையாளங்கள் ஐந்து. அவையாவன: தண்ணீர் குடங் கவிழ்த்தாற்போலப் பூரணமாயிருத்தல், விமரிசையா யிருத்தல், தாழ்ச்சியுள்ளதா யிருத்தல், கபடற்றதா யிருத்தல், குரு கட்டளைக்கு அமைந்ததா யிருத்தல் என வைந்தாம்.

8. அபராதம் அல்லது பிராயச்சித்தத்துக்குரிய அடையாளங்கள் ஐந்து. அவையாவன: குரு கட்டளையிட்டதை நிறைவேற்றுதல், அடிக்கடி பூசைகாணுதல், பிச்சைகொடுத்தல், தனக்கு நேரிடும் தின்மைகளைப் பொறுமையோடு சகித்தல், தான் விட்டுவிட்ட பாவங்களுக்கு விரோதமான புண்யங்களைச் செய்தல் என வைந்தாம்.

9. சாதாரணமாய்ப் பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறதற்கு வேண்டிய காரியங்கள் ஐந்து. அவையாவன: செய்த பாவங்களை நினைத்தல், அதற்கான மனஸ்தாபப்படுதல், இனிமேலொருக்காலும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லை யென்று கெட்டியான மனதுடனே பிரதிக்கினை பண்ணுதல், ஒன்று மொளியாமற் குருவுடனே சொல்லுதல், குரு கட்டளையிட்ட அபராதத்தைத் தீர்த்தல் என வைந்தாம்.

10. சற்பிரசாதத்தின் பிரதான சத்திகள் ஐந்து. அவையாவன: அருளைப் பயத்தல், தெய்வத்தோடொன்றித்தல், அற்பப் பாவங்களை யழித்தல், நித்திய பாக்கியத்துக்குச் சுதந்தர மடைவித்தல், கற்பைக் காத்தல் என வைந்தாம்.

11. உலோபத்தனத்துக்கு மருந்து ஐந்து. அவையாவன: செபம்பண்ணுதல், பரலோக பாக்கியத்தின்பேரில் தியானம் பண்ணுதல், பூலோக வனித்திய பாக்கியங்களின் சிதைவை யோசித்தல், சேசுநாதருடைய தரித்திரத்தை உற்று நினைத்தல், அவரவர் அந்தஸ்துக்குத் தக்காப்போல் பிச்சை கொடுத்தல் இவைகளேயாம்.

12. போசனப் பிரிய மென்னப்பட்டப் பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிற விதம் ஐந்து. அவையாவன: ஒருபொழுது நாளிலே முதலாய்ப் பாவத்துக் கஞ்சாமல் சாப்பிடுதல், தனது அந்தஸ்துக்கு மேலான போசனங்களைத் தேடல், தனக்கு வேண்டியதற் கதிகமாய்ப் புசித்தல், மிஞ்சின ஆவலோடு புசித்தல், அதிக உருசிகரமான பதார்த்தங்கள்மேல் மிஞ்சின ஆவல் கொள்ளல்.

13. கோபத்தின் பிள்ளைகள் ஐந்து. அவையாவன: மூர்க்கத்தனம், புத்தி விகாரம், பிறரை நிந்தித்தல், சண்டை மனஸ்தாபங்கள், தேவ தூஷணஞ்சொல்லல் இவைகளேயாம்.

14. எசமான்களுடைய கடமைகள் ஐந்து. அவையாவன: தமது ஊழியர்களை ஸ்நேகித்தல், வேத சத்தியங்களை அவர்களுக்குப் படிப்பித்தல், தப்பிதங்களில் தயவாய்க் சண்டித்தல், அன்பாய் நடப்பித்தல், சரியான சம்பளங் கொடுத்தல் இவைகளேயாம்.

15. கல்விச்சாலை பிள்ளைகளின் கடமைகள் ஐந்து. அவையாவன: புண்ணியங்களைப் பின்செல்லல், கல்விச்சாலைக்குத் தப்பாமல் வருதல், உபாத்தியாயருக்குச் சங்கை செலுத்தல், அவர்கள் கற்பிப்பதைச் சாந்த குணத்தோடு கேட்டல், சோம்பேறித்தனமின்றிச் சாக்கிரதையாய்ப் படித்தல் இவைகளேயாம்.

16. தாய் தகப்பன் தங்கள் பிள்ளைகளின் சரீர சவரட்சணையின் மட்டில் கொண்டிருக்குங் கடமைகள் ஐந்து. அவையாவன: பிள்ளைகளின் சரீரத்துக்குச் சேதம் வாராதபடிக்குப் பராமரித்தல், அவர்களுக்கு அன்ன வஸ்திரங் கொடுத்தல், தாய் பால்கொடுக்கக் கூடுமானபோதெல்லாந் தன் பிள்ளைக்குத் தானே பால் கொடுத்தல், தங்கள் ஆதீனத்திலிருக்கும் பிள்ளைபட்ட கடனைத்தீர்த்தல், ஆஸ்திகளைப் பிள்ளைகளுக்குச் சரியாய்ப் பங்கிட்டுக் கொடுத்தல இவைகளேயாம்.

17. சமுசாரிகளுடைய கடமைகள் ஐந்து. அவையாவன: தங்களுடைய குடித்

தனத்துக்கு வரப்பட்ட சோதனைகள் நீங்கித் தங்களுடைய குடும்பத்தின்பேரில் சர்வேசுரனுடைய ஆசீர்வாதம் வர அவரை அடிக்கடி மன்றாடல், சமுசாரத்தில் வரப்பட்ட துன்பங்களை இருவரும் ஏகோபித்துப் பொறுத்துக்கொண்டு தங்களுடைய பிள்ளைகளுக்கு நன்மாதிரிகை கொடுத்து, அவர்களை வேத வழிப்படி நடத்துதல், சுக காலத்திலுந் துன்ப காலத்திலும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியாதிருத்தல், புருஷன் பெண்சாதி கூடுமான பிரயாசையெல்லாம்பட்டுவீண் செலவின்றி தருமவாளராய்க் குடித்தனத்தைத் தாங்குதல், மெய்விவாகஞ் செய்கையில் அவர்கள் கொடுத்த வார்த்தைப்பாட்டின்படியே பிறர் முகம் பாராதிருத்தல் இவைகளேயாம்.

## ஆறேன்னு மிலக்கத்தில்.

1. நாம் நமஸ்கரிக்கவேண்டிய திரியேகக் கடவுளின் உன்னதமான பிரதான இலட்சணங்கள் ஆறு. அவையாவன: தாமா யிருத்தல், அனாதியா யிருத்தல், சரீரமில்லா திருத்தல், அளவில்லாத சகல நன்மைச் சொரூபியாயிருத்தல், எங்கும் வியாபித்திருத்தல், எல்லாத்துக்கும் ஆதிகாரணமாயிருத்தல் என வாறும்.

2. கத்தோலிக்கு வேதம் மெய்வேதமென்று நிச்சயிக்கச் சுளுவான ஞாயங்கள் ஆறு. அவையாவன: பழைய ஏற்பாட்டுக்கும் புது ஏற்பாட்டுக்கும் ஐக்கியங்கொண்டிருத்தல், முற்காலத்திற் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களெல்லாம் இவ்வேதத்திலே மாத்திரம் நிறைவேறி வந்திருத்தல், கிறிஸ்துநாதருடையவும் அப்போஸ்தலர்கள் முதலாகிய அர்ச்சியசிஷ்டவர்களுடையவும் புதுமைகளினால் விளங்கிக்கொண்டிருத்தல், இவ்வேதத்தின் சித்தாந்தமாத்திரந் தூய்மையாயிருத்தல், அக்கியானிகளாலும் பதிதர்களாலும் வரப்பட்ட சொல்லி முடியாத விக்கினங்களைச் செயித்துக்கொண்டு மலைபோல அசையாமல் கடல்போலப் பெருகிக்கொண்டிருத்தல், வேதத்துக்காகச் சுபாவத்துக்கு மேற்பட்ட தைரியங்கொண்டு தங்களுயிரைக் கொடுத்த வேத சாட்சிகளினால் விளங்குதல் (இவைகளன்றி நான்கென்னு மிலக்கத்திற் சொல்லப்பட்ட பிரதானமான நாலு அடையாளங்களுமாம்.)

3 இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேஸ்வரனுக்குப்பொருந்தாதபாவங்கள் ஆறு. அவையாவன: சர்வேசுரனுடைய தயையை மதியாமல் அல்லது பாவத்துக்கு ஆக்கினை வருமென்று அஞ்சாமல் பாவத்தில் விழுதல், அவநம்பிக்கைப்படுதல், தெளிவாயிருந்தும் விரோதித்தல், பிறருடைய நன்மையின்மேல் பொறாமைப்படுத்தல், துர்க்கருத்திலே ஒட்டாரமா யிருத்தல், மரணமட்டுந் தவஞ்செய்யா திருத்தல் என வாறும்.

4. சர்வேஸ்வரனை வாழ்த்தித் துதிக்குங் காலங்கள் ஆறு. அவையாவன: காலை, மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல் என வாறும்.

5 பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தமாக உதவுங் காரியங்கள் ஆறு. அவையாவன: பத்துக்கற்பனை, திருச்சபையின் கட்டளை, தலையான பாவங்கள் இவைகளின் பிரகாரமாவும், செய்யவேண்டிய புண்ணியங்களைக் குறைத்ததைக் குறித்தும், தன் கடமைகளைச் செய்யாமல் விட்டுவிட்டதைக் குறித்தும், புத்தி, மனது, நினைவென்கிற உள்ளிந்திரியங்களினாலேயும், கண், காது, மூச்சு, வாய், பரிசமுதலிய கருமேந்திரியங்களினாலேயும் கட்டிக்கொண்ட பாவங்களைக் குறித்தும் நினைக்கிறதேயாம்.

6. தாய் தகப்பன்மார்களுக்குத் தங்கள் பிள்ளைகளுடைய ஆத்துமத்தைக் குறித்த கடமைகள் ஆறு. அவையாவன: தாய் தகப்பன் பிள்ளைகளை வேத ஞானத்திலுயர்த்தி தெய்வ பக்தியில் பெயரோங்கப் பண்ணுதல், அவர்கள் ஞானஸ்தானத்திற் பெற்ற வரப்பிரசாதத்தை யிழக்காமலிருக்கச் செய்தல், அவர்கள் வினை வரியும்போதே பாவத்தைவிட்டு அவர்களை நீக்கி அவர்களிருதயந் தெய்வத்தை நோக்கப் பண்ணுதல், அவர்களை உலகம், பசாசு, சரீர விச்சைகளின் நின்று நீக்கப் பிரயாசைப்படுதல், அவர்களைப் பத்தியுள்ள உபாத்தியாயர்களிடத்தில் ஒப்பித்தல், அவர்களுக்கு சத்தியவேதப்படிப்பு கொடுத்தல் இவைகளேயாம்.

(தொடரும்.)

---



# CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர். ப—ர்.]

### கல்வி.

கல்வியைப் பற்றிக் கல்வியைக் கசடறக் கற்றுவல்ல பட்டதாரிகள் எழுத அருகரேயொழியக் கேவலம் என் போல்வார் அதற்கியைந்தவரல்லரென்பது சொல்லாமலே விளங்கும். ஆயினும், கற்றுவல்லபெரியோர் எக்காரணத்தைக் கொண்டோ இதுவரையும், நம் சனசமூகம் கல்வியில் முன்னேற வேண்டுமென்னும் ஆத்திரத்தோடு அதற்குரிய வேலையைச் செய்து வருவதாகத் தெரியவில்லை. ஏனென்று கேட்டால், கல்வி புகட்டுவது குருக்களைப் பொறுத்தது என மற்றும் சாதாரண ஜனங்கள் சொல்லுவது போலவே, இவர்களும் கல்வியைக் குருக்கள் கொடுப்பார்கள்; அது எங்கள் ஜோலியில்லையென்கிறார்கள்.

நானிப்போது சென்னபட்டணத்தில் இருக்கிறேன். கல்விவளத்தில் மற்ற ஜன சமூகங்களுக்கும் நமது கத்தோலிக் ஜனசமூகத்திற்கும் மத்தியிலுள்ள வித்தியாசத்தை இந்த ராஜதானிப் பட்டணத்தில் நான் கண்கூடாய்ப் பார்த்து வருகிறேன். பட்டணத்து மத்தியில் ஓர் அதிமேற்றிராசனமும், பட்டணத்திற்கு ஐந்து மைல் தூரத்தில், அதாவது மைலாப்பூரில் ஓர் மேற்றிராசனமும் இருக்கிறது. இப்படி இரு மேற்றிராசனங்கள் இருந்து, இரவும் பகலும் உழைத்து வருகிற எல்லைக்குள் கத்தோலிக்கருக்கு ஒரு காலெஜ் இல்லாதிருப்பது துர் அதிர்ஷ்டத்துக்குரியதே. காலெஜ் போகட்டும், மேற்சொன்ன மேற்றிராசனங்களை அடுத்துள்ள ஹைஸ்கூல்களாவது ஜோலிப்பாய் இருக்கிறதா? அதுவுமில்லை. இவைகள் இந்த புரொட்டெஸ்டாண்ட் கலாசாலைகளுக்கு முன் சூரியன் முன் மின் மினிபோல் இருந்துவருகின்றனவேழிய முற்றப்படியல்ல.

கல்விவேண்டும் கல்விவேண்டும் என இப்போது விசேஷமாய்த் தெற்கே கன்னியாகுமரியை அடுத்துள்ள கரைதுறைகளில் முக்கியமாய்ப் பரத குலத்தினருக்குள் ஒருவித நூதன கிளர்ச்சி யுண்டாயிருக்கிறது. கிளர்ச்சியுண்டாயிருக்கிறதேயொழியக் கல்வியை எப்படி நமது மக்களுக்குப் பெறுவிக்க வேண்டுமென்கிற சூழ்ச்சியொன்று மாத்திரம் இன்னும் தட்டுப்பட்டதாகத் தெரியவில்லை. இக்கரைதுறைகளிலும், கல்வி கொடுப்பது குருக்கள் வேலையெனப் பலர் சொல்லுகிறார்கள். இதைக் கொஞ்சதூரம் நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், இன்னும் சிலர், "கல்வியை நாங்கள் பெற்றுக்கொள்ளாதபடிக் குருக்களே இடைஞ்சலாயிருந்து வருகிறார்க"ளெனவும் சொல்லுகிறார்கள். கல்விக்குக் குருக்கள் இடைஞ்சலாயிருக்கிறார்கள் என்னும் இரண்டாவது கூற்றினை நான்ஒருபோதும் நம்பவேமாட்டேன். ஏனென்றால், ஒருவன் முன்னேற்றத்திற்கு மற்றொருவன் இடறலாயிருப்பது கேவலம் சாதாரண ஜனங்கள் நடுவில் முதலாய் இக்காலத்தில் காணக்கூடாத விஷயம். அப்படியிருக்க ஆத்தும ரட்சணியத்திற்காக அல்லும் பகலும் வேலை செய்யக் கங்கணம் கட்டி உழைக்கும் குருக்கள் எங்கள் கல்வியை வேண்டுமென்று கெடுக்கிறார்களென்றால், இதை புத்திசந்நிதானமுள்ள எந்த மனுஷன் நம்புவான்? ஆனால்,

நாம் படித்தேறுவதற்கு இனியும் மேனாட்டுப் பணம் உதவுமென்று நினைப்பது மிகவும் மோசமானகாரியம். இது விஷயமாய் கனம் L. X. பெர்னாந்திஸ் சுவாமிகள், "நல்லாயன்" பத்திராதிபர், (சென்னையில்) இன்னும் சில கற்றுவல்லமேதாவிகளோடு பேசிக்கொண்டிருந்ததில் மேனாட்டுப் பணத்திற்கு இனி லவலேசமும் எதிர்பார்த்த லொண்ணாதெனக் கண்டுகொள்ளவேண்டியதாயிருக்கிறது. ஆகவே, நாம் இப்போது செய்யவேண்டியதெல்லாம் ஒவ்வொருவரும் ஜனசமூகத்தில் ஒற்றுமைக்காகப் பாடுபடவேண்டும், ஒருவர் ஒருவரை நம்ப வேண்டும், இந்த நம்பிக்கையின் ஆஸ்பதத்தில் பொது நிதியொன்று ஸ்தாபிக்கவேண்டும், இப்பொது நிதியிலிருந்து அறிவிற் சிறந்த ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக்கல்வி கொடுக்கப் பண வுதவி செய்ய வேண்டும். இது விஷயத்தில் இன்னமும் காலதாமதம் செய்வது நிரம்பவும் அபாயகரமானது.

அபாயகரமென்கின்றேன்; ஆம், அபாயமேயென்பதற்குப் பரிச்சேதம் ஐயமில்லை. இச்சென்னபட்டணத்தில், இதர மதஸ்தரில், கேவலம் பெண்பிள்ளைகள் மத்தியில் நமது கத்தோலிக்கரில் ஆண்பிள்ளைகள் முதலாய்த் தம்

முடைய கல்விமாட்சிக்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். இவ்வூரில் இந்துக்களுக்காக இந்துக்களும் மகம்மதியர்களுக்காக மகம்மதியர்களும் உழைக்கிறதைப் பார்த்தால், கத்தோலிக்கரின் தூக்கத்தையும் சோர்வையும் பார்த்துப் பெருமூச்சு விடவேண்டியதாயிருக்கிறது. தவிரவும் புரொட்டெஸ்டண்ட் பாதிரிமார் இடங்கள்தோறும், சொல்ல வேண்டுமானால், சந்து பொந்துகளிலும் ஒவ்வோர் கூடங்களை ஸ்தாபித்துக் கொண்டு காலை மாலைகளில் தேவதா பஜனைகள் வைத்து, போவார் வருவாரையெல்லாம் உபசாரவார்த்தைசொல்லி உள்ளுக்கழைத்துத் தங்கள் உபதேசங்களைப் போதித்து வருகிறார்கள். ஒரு தெருவில் சற்றேறக்குறைய ஒரு பர்லாங்கு தூரத்திற்குள் மூன்று இடங்களுள் மீற்றிங்குகள் நடக்க நானே என் கண்ணாரப்பார்த்தேன். மீற்றிங் என்றால் ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் அவசரம் அவசரமாய்ப் போய்க் கூடுகிறார்கள். வேறுவித ஜோலியாய்ப் போகிறவர்களையுங் கூட அந்தந்த மேதாவிகள் வழிகளில் நின்று கொண்டு கரத்தைப்பிடித்து இனியவசனங்களைச் சொல்லி இட்டுக்கொண்டு போகிறார்கள். ஒரு பதிதப் பாதிரியார் ஒரு மனிதனிடத்தில் நல்லவார்த்தை சொல்லி நாடியைத்தாங்கி உள் அழைத்துக் கொண்டுபோக நானே பார்த்தேன். இந்த வகையாய் ஒவ்வொருவரும் தத்தம் மதத்திற்காக உழைத்து வர நாமோ நமது காரியத்தில் இன்னமும் பாராமுகமாயிருப்பது எனக்கே அதிசயமாயிருக்கிறது. இதர மதஸ்தருக்காக இப்படியுழைப்பது கேவலம் சாதாரண ஜனங்கள் என்று நினைக்கவேண்டாம். அநேகமாய் அவர்கள் சர்வகலாசாலைப் பட்டதாரிகள். நமது பட்டதாரிகளோ வென்றால் ஏழைகளை முன்னேற்ற வேண்டுமென நினைத்தாலுங் கூட ஏதோ தாம் பெற்ற கல்வி தீட்டுப்பட்டுப் போமென வெண்ணுகிறார் போலும். எவர் எப்படி நினைத்தாலும் சீவகாருண்யமில்லாத கல்வி அதாவது நம்மை அடுத்தவரை முன்னேற்றப் பிரயோகியாத கல்வி வெறுங் கல்வியே யொழிய மற்றப்படி யன்று. ஆகையால் சகோதரர்களே நமக்குத்தற்போது நமது சொந்தப் பள்ளிக்கூடங்கள் வைத்து நடாத்தத் திராணி யில்லாதே போனாலும், பொது நிதி சேர்த்து அதைக்கொண்டு வருடத்திற்கு ஒவ்வொருவூரிலும் இத்தனை ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசத்தில் கல்வி கொடுப்ப தென்பதை ஏற்படுத்துவதற்கு என்ன தடை? காரணமற்ற போலிக் கட்சிகளை விட்டுப்போட்டு நம்மவர் கடைத்தேறுவதற்கு ஏற்ற வழிகளைக் கவனிப்போம். நமது சொந்தக்காரியமாகிய இதனையிட்டுத் தொடர்ச்சியாய் எழுதுவதற்கு அந்நிய பத்திரிகைகளில் இடங் கிடையாதே போனால் தண்டுப் பத்திரிகைகளால் அல்லது பிரசங்கங்களால் நமது ஜனசமூகத்தைத் தட்டி எழுப்பிக் கிளர்ச்சியை மூட்ட அநேக மேதாவிகள் இனியாவது முன் வருவார்களென்று நம்புகிறேன்.

சென்னை,
20—9—15. M. P. Mascarenhas.

["கத்தோலிக்க குருவின் ஜீவியம்" என்னும் தலைப்பெயரிட்ட கடிதம் அடுத்தமீ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். ப. ர்.]

---

## MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாச்சாரம்.

---

**குழந்தைகளின் காட்சி.**—ரங்கூனில் குழந்தைகள் அகாலமரண மடைவதைத் தடுக்க ஏற்பாடுகள் செய்யும் சங்கத்தார் அடுத்த பிப்பரவரி மாதத்தில் குழந்தைகளின் காட்சி யொன்று வைக்க உத்தேசித்துக் கொண்டிருக்கிறார்களாம்.

**யூதர்கள் மனந்திரும்பல்.**— சென்ற பத்து வருஷங்களுக்குள்ளாக வட அமெரிக்காவில் ஆறாயிரம் யூதர்கள் ஞானஸ்நானம் பெற்றுத் திருச்சபையிற் சேர்ந்திருக்கிறார்களென்று கேள்விப்பட்டு சந்தோஷிக்கிறோம்.

**நமது கவர்னர்.**—உதகமண்டலத்தை விட்டு நம் மகா கவர்னர், அடுத்தமாதம் 11-ந் தேதியன்று புறப்பட்டு போத்தனூர் சென்று 12-ந் தேதி போத்தனூர் பொள்ளாச்சி ரெயில்வேயைத் திறந்துவைப்பார். 13-ந் தேதியன்று அவர் கோயம்பத்தூருக்குச் சென்று மதராஸ் பாரஸ்டு காலேஜின் புதிய கட்டிடத்தையும் திறந்துவைப்பார்.

**ஜப்பான் சுதேசக்குருக்கள்.**—பிரகிர்தயுத்தத்தை முன்னிட்டு அநேக ஐரோப்பிய குருக்கள் ஜப்பானிலிருந்து போர் முனைக்குப் போய்விட்டபடியால், கூடிய சீக்கிரத்தில் ஷை குருக்களுடைய விசாரணைகளுக்காக முப்பது சுதேச குருக்கள்



நியமிக்கப்படுவார்களெனச் சொல்லப்படுகிறது.

**வயிற்றுப் பொருமலுக்குச் சுண்டைக்காய்.**—சுண்டைக்காயைச் சிவக்க வறுத்து, ஒருவாறு அதைப் பொடிசெய்து, ஒன்று அல்லது இரண்டு தோலா எடை வீதம், இரண்டு மூன்று உப்புக் கல்லையும் கூட்டி தினத்திற்கு மூன்று வேளை உட்கொண்டு வர அஜீரணம் முதலியதாலுண்டாகும் வயிற்றுப் பொருமல் தீருமென்று "வைத்திய கலா நிதி" யில் சொல்லப்பட்டிருக்கிறது.

**அத்திப்பாலும் சீதபேதியும்.**—அத்திமரத்திலிருந்து எடுக்கப்படும் பாலையும் சர்க்கரையையும் கலந்து உட்கொள்ள, எவ்வித சீதபேதியும் தீரும். சீதபேதி கடுமையாயிருந்தால், முதலில் இரண்டு பலம் ஆமணக் கெண்ணெயையும் தேங்காய்ப் பாலையும் கலந்து உட்கொள்ளக் கொடுத்து, நன்றாக மூன்று நான்கு முறை விரோசனமான பிறகு, அத்திப்பாலைக் கொடுக்க வயிற்றுப்போக்கும் வயிற்றுக்கடுப்பும் நிவர்த்தியாய் விடும். இதைத் தினத்திற்கு இரண்டு அல்லது மூன்று தட்வை உபயோகிக்கவேண்டுமென ஷை பத்திரிகையே கூறுகிறது.

**ஓர் டன்னல்.**—இந்தியாவுக்குள்ளிருக்கும் ரைல் டன்னல்களுக்குள் முதன்மையானது பம்பாயிக்கு 22 மைல் தூரத்தில் வெட்டப்பட்டு, சென்ற மாசம் 10உ திறக்கப்பட்டது. டன்னல் என்றால் மலை முதலிய கற்பாறைகளுக்குள் ரெயில்வே போகும் நிமித்தம் துளைக்கப்பட்ட வழி அல்லது சுரங்கமே. மேற்கண்ட சுரங்கம் G. I. P. ரயில்பாதையில், தாணா ஸ்டேஷனுக்கும் பக்ஷி ஸ்டேஷனுக்கும் மத்தியில் 5,762 அடி நீளத்துக்கு வெட்டப்பட்டிருக்கிறது. இதனால் பம்பாய்க்கும் கலியாணுக்கும் உள்ள தூரம் 3 மைல் குறைந்தது; அன்றியும் யாத்திரியர்களுக்கு சௌகரியத்தையு முண்டாக்கி யிருக்கிது.

**இந்தியாவில் சாப்பிடும் உப்பின் செலவு.**—நாளது ௵ ஏப்ரல் ௴த்திலிருந்து ஆகஸ்டு ௴த்துடன் முடிவான ஐந்துமாதங்களில், இந்தியாவில் 15,522,000 மணங்குகள் நிறைகொண்ட உப்பு செலவாயிருக்கிறது. இவ்வெண்ணிக்கை கடந்த ௵த்திய இதே ஐந்துமாதக் காலங்களில் செலவான உப்பைவிட 3,270,000 மணங்குகள் குறைந்திருக்கின்றன. நாளது வருஷத்திய ஷை 5 மாதக் காலங்களுக்கு உப்பினால் கிடைத்திருக்கும் வருமானம் ரூபா. 1,60,95,000. அதாவது கடந்த வருஷத்தில் அதேகாலங்களுக்குக் கிடைத்திக்கும் வருமானத்தைவிட ரூபா. 48,55,000 குறைந்திருக்கிறது.

**நமது ஞானப்பிதாவின் அநுதின சீவியம்.**—15-ம் ஆசீர்வாதப்பர் மகா உழைப்பாளி. ஒவ்வொருநாளிலும் இவர் செய்யும் வேலை அதிகம். அதிகாலையில் எழுந்து திவ்விய பூசைசெய்கிறார். அதில் ஏறக்குறைய 200 பேருக்குத் திவ்விய சற்பிரசாதம் கொடுக்கிறார். பூசை முடிந்ததும் கொஞ்சம் காலை அசனம் அருந்தி, மாலை 2 மணிவரையில் பேட்டி கொடுப்பதும் உபந்நியாசம் செய்வதுமாயிருப்பார். களைப்பைக் கவனியார். தமக்கு யாதொரு இளைப்பாற்றியும் கொடுக்கிறதில்லை. ஒன்றையும் அரைகுறையாயும் அசாக்கிரதையாயும் ஒருபோதும் செய்யமாட்டார். அவரது லத்தீன் உபந்நியாசங்கள் மகா நேர்த்தியானவை. பாஷை தேர்ச்சியில் முதற்படியில் வைக்கலாம்.

**ஒரு "டாஜ்மஹால்."**—நமது இந்து தேசசரித்திரத்தில் ஷாஜஹான் என்னும் மொஹலாய அரசர் தமது அன்புள்ள பத்னியாகிய நூர்ஜிஹான் என்பவளின் ஞாபகார்த்தமாக ஆக்ரா நகரில் அநேக விசித்திரமான சித்திரவேலைப்பாடுகளமைந்த கட்டிடத்தைக் கட்டி அதற்கு 'டாஜ்மஹால்' என்று பெயரிட்டதைப் பலர் வாசித்திருப்பார்கள். தற்போது ஆக்ரா நகரில் வசித்துவரும் உஸ்தகர் மீரான் பக்ஷி என்பவர் சுத்தமான தங்கத்தினாலும் வெள்ளியினாலும் மிக்க அழகாக ஒருடாஜ்மஹாலை அமைத்திருக்கிறார். அதன் உயரம் 5 அடி, அகலம் 4 அடி. அதைச் செய்வதற்கு ரூ. 1,500 செலவாயிற்றாம். அவர் அவ்வேலையை இரவும் பகலும் கடந்த மூன்று வருஷங்களாகச் செய்து முடித்திருக்கிறார். அவர் செய்திருக்கும் வேலையோ சித்திரவேலைப் பாடுகளால் அமைக்கப்பட்டு, பார்ப்பவர்களின் மன

ணைதக் கவரும்படிக்கும், சித்திரவேலைகளுக்கே ஒரு மாதிரியாக விருக்கும்படிக்கும் அவ்வளவு நேர்த்தியாயிருக்கிறதாம். அதைப் பார்க்க அந்நகரிலுள்ள ஜனங்கள் அவரது கிரகத்திற்குத் தினந்தோறும் குவிந்துகொண்டிருக்கிறார்களாம். சிலவருஷங்களுக்குமுன் இதே சித்திரவேலைக்காரரால் இதேமாதிரியாக ஒரு டாஜ்மஹால் தயாரிக்கப்பட்டு 8,000 ரூபாய்க்கு ஹைதராபாத் நிஜாம் அரசருக்கு விற்பனை செய்யப்பட்டதாம். தற்போது செய்யப்பட்டுள்ள இந்த 'டாஜ்மஹால்'. ஆப்கானிஸ்தான் அமீருக்காகச் செய்யப்பட்டிருக்கிறதாம்.

யுத்தமுனையில் பறவைகளின் உதவி.- ஜெர்மனியர் போர்முகத்தில் இராக்காலங்களில் தங்கள் பகைவர் மீது விஷக்காற்றை விடுவதைப் பறவைகளறிந்து, தாமடைந்திருந்த விடத்தை விட்டுச் செல்ல சந்தடி செய்கின்றன. இச் சந்தடியைக் கேட்ட மாத்திரத்தில் நேச இராஜாங்கத்தார் முன் ஜாக்கிரதைகொண்டு முக மூடிகளைப் போட்டுக்கொள்ளுகின்றனர். இதனால் பறவைகளும் போர்முகத்தில் உதவியாயிருக்கின்றனவல்லவா?

மகனைத் தண்டித்த மாஜிஸ்திரேட்டு.- லிலோனைச் சேர்ந்த மாத்தலியில் சமீபத்தில் மிஸ்டர் டி. பி. உடுவாவெலா என்பவர், 25 வயதுள்ள வில்லியம்ஸ் என்ற தமது மூத்தகுமாரன் தம்முடைய அவிஸ்டெண்டுக்குச் சொந்தமான சில நகைநட்டுகளைத் திருடியதாகக் குற்றஞ் சாட்டி கேசை விசாரித்தார். குற்றவாளியும் குற்றத்தை ஒப்புக்கொண்டான். மாஜிஸ்திரேட்டாகிய தந்தை மகனுக்கு எச்சரிக்கை செய்தது மல்லாமல், அவன் தன்னுடைய நடத்தையைத் திருத்திக்கொள்ளும்படி தன்னிருப்பிடத்தை ஒரு வருஷம் வரையில் போலீசாருக்குத் தெரியப்படுத்தவும், ஷை கேசில் ஏற்பட்ட கோர்ட்டு செலவுகளுக்கு 25 ரூ. செலுத்தும்படியும் தீர்ப்பு சொன்னார்.

யுத்த சேதம்.—ஆங்கிலேயருக்குள் இறந்தவர்கள் 69,000, காயமடைந்தவர்கள் 1,96,000, காணாமற்போனவர்கள் 63,000, ஆக 3,28,000. பிராஞ்சியருக்குள் இறந்தவர்கள் 4,10,000, காயப்பட்டோர் 11,00,000, காணாமற்போனோர் 4,90,000, ஆக 20,00,000. ருஷியருள் இறந்தவர் 8,05,000, காயப்பட்டோர் 22,00,000, காணாமற்போனோர் 9,30,000, ஆக 39,35,000. ஜெர்மனியருள் இறந்தவர்கள் 9,70,000, காயப்பட்டோர் 18,00,000, காணாமற்போனோர் 3,60,000, ஆக 31,30,000. ஆஸ்டிரியருள் இறந்தவர்கள் 11,00,000. காயப்பட்டோர் 19,00,000, காணாமற்போனோர் 6,19,000. ஆக 36,09,000. செர்வியருள் இறந்தவர்கள் 80,000. காயப்பட்டோர் 2,10,000, காணாமற்போனோர் 1,30,000, ஆக 4,20,000. பெல்ஜியருள் இறந்தவர்கள் 38,000, காயப்பட்டோர் 1,20,000, காணாமற்போனோர் 37,000, ஆக 1,95,000. துருக்கியருள் இறந்தவர்கள் 20,000, காயப்பட்டோர் 60,000, காணாமற்போனோர் 10,000, ஆக 90,000. இப்படியாக நிகழும் யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறவர்களுக்குள் இறந்தவர்களின் மொத்தம் 34,92,000, காயப்பட்டவர்களின் மொத்தம் 75,86,000, காணாமற்போனவர்களுடைய மொத்தம் 26,29,000, ஆக 1,37,07,000.

நாளொன்றுக்கு யுத்தச்செலவு.— ஆங்கிலேயருக்கு 30 லட்சம் பவுன்; பிராஞ்சுக்காரருக்கு 25 லட்சம் பவுன்; ருஷியருக்கு 20 லட்சம் பவுன்; ஜெர்மனியருக்கு 30 லட்சம் பவுன்; ஆஸ்டிரியருக்கு 15 லட்சம் பவுன்; ஆக ஒரு கோடியே 20 லட்சம் பவுன்; சென்ற வருடத்திலே மொத்தமாகச் சென்ற செலவு 438 கோடி பவுன்.

அரண் குழிகளின் மாதா.—பிராஞ்சு தேசத்தில் முன்னணி அரண் குழிகளிலுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து நமது பரிசுத்த தேவதாயாருக்கு ஒரு பீடத்தைச் சமர்ப்பித்து, மாதாவின் சுரூபம் ஒன்றையதில் ஸ்தாபித்து அதற்கு அரண் குழிகளின் மாதாவென நாமகரணமுஞ் சூட்டியிருக்கிறார்கள். கைதேறின ஓர் சிற்பியைக் கொண்டு களிமண்ணினால் அந்த மாதா சுரூபத்தையும், சீமைச் சுண்ணாம்பினால் (*Chalk*) ஓர் சிலுவையையும் சேசுநாதருடையவும் தேவமாதாவினுடையவும் திரு இருதயச் சின்னங்களையும் செய்வித்து வைத்து, ஷை சுரூபத்தின் பாத அடியில் "அரண் குழிகளின் மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்னும் வாக்கியத்தையும் எழுதி யிருக்கிறதுந் தவிர, அக்கம் பக்க கிராமங்களிலும் காடுகளிலும் கிடைக்கக்கூடிய பல நிறமான புஷ்பங்களையுங் கொண்டு, அன்றாடம் அப் பீடத்தைச் சிங்காரித்து பிரார்த்தித்தும் வருகிறார்களாம். பிராஞ்சிய குடியரசானது பள்ளிக்கூடங்களிலும் பொதுஸ்தலங்களிலும் படம், சுரூபம் முதலிய எவ்வித சத்திய வேதச் சின்னங்களையும் வைக்கப்படாதென்று சட்டம் ஏற்படுத்தி யிருக்க, இந்த யுத்தமானது மேற்சொன்னபடி அரண்குழியில் சத்திய வேதத்துக்குரிய ஷை பத்திக்கிருத்தியங்களை எவ்வித ஆக்ஷேபனையுமின்றி அனுஷ்டிக்க இவர்களை உடன்படுத்தினதும் தெய்வச்சித்தமே.



மைசூர் மேற்றிராணியாரின் தேகவியோகம்.—மிகவும் வந்திக்கத்தக்க A.F. பலே ஆண்டவர் சில காலம் இருதய நோவால் அசௌக்கிய முற்றிருந்து, சென்ற மீ 13உ மரணமானாரென்ற துக்க சங்கதியைக் கேள்வியுற்று மிக்க விசனிக்கலானோம். இவருடைய சடலம் பெங்களூரிலுள்ள மேற்றிராசனக் கோவிலில் அடுத்த நாள் ஆரவாரமாய் க்ஷேமிக்கப்பெற்றது. இந்த மேற்றாணியார் பிராஞ்சு தேசத்தில் 1851-ளு ஜுலைமீ 1உயில் பிறந்து, 1875-ளு அக்டோபர்மீத்தில் குருப்பட்டம் பெற்று மைசூர் மேற்றிராசனத்துக்கு வந்து சேர்ந்தார். 1887-ளுத்தில் விக்கர் ஜெனராலாகவும், 1905-ளுத்தில் உதவி மேற்றிராணியாராகவுமானார். 1910-ளுத்தில் மைசூர் மேற்றிராசனத்தின் பொறுப்பை ராஜினமா கொடுத்துவிட்ட கிளேய்னர் ஆண்டவருக்குப் பதிலாய் ஷை மேற்றிராசனத்துக்கு ஆண்டவரானார். சென்ற நாற்பது வருடங்களாக நமது தேசத்தாரின் ஆத்தும ஈடேற்றத்துக்காக வருந்தி யுழைத்துவந்த இந்த நல்ல மேய்ப்பனின் ஆத்துமத்துக்குச் சேசுவின் திரு இருதயமானது நித்திய சமாதான இளைப்பாற்றியைக் கட்டளை யிடுவதாக.

பிராக் தேசத்து புதுமையுள்ள திருக்குழந்தை சேசுவின் நவநாள்.—சில வருஷங்களுக்குமுன் இப்புத்தகம், தமிழ்ப் பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு, சென்னையில் ஓர் குருவானவரால் அச்சிடப்பட்டது. இப்போது கிடையாததா யிருக்கிறது. இரண்டாம் பதிப்பு அச்சிட ஓர் புத்தகம் தேவையா யிருப்பதால், ஆராவது நமக்கொரு புத்தகம் அனுப்பினால், அதின் தபாற் செலவும், புதிய புத்தகம் இரண்டும் சேர்த்து அவர்களுக்கு அநுப்பப்படும்.

இந்த யுத்தம் எப்போது முடியும்?-இம் முக்கிய கேள்விக்கு மறுமொழியை எல்லோருமே ஆவலுடன் எதிர்ப்பார்ப்பார்களென்பது சகஜம். இது விஷயமாய் இத்தாலிய இராணுவ பத்திரிகாசிரியரான கர்னல் பரோன் என்பார் ஒருவர் கூறியுள்ளது யாதெனில்: "எப்பக்கத்திலும் எதிரிகளால் சூழப்பட்டிருக்கிற ஒரு கோட்டைக்கு ஜெர்மனியையும் ஆஸ்டிரியாவையும் நாம் ஒப்பனை யிடலாம். எப்படியெனில், இவ்விரு தேசத்தவர்களும் நான்கு பக்கங்களிலும் ஐக்கியப் படைகளால் எதிர்க்கப்பட்டு நிற்கிறார்களாதலால், ஷை படைகளில் ஒன்றையாவது, இவர்கள் முற்றிலும் அபஜெயமடையச்செய்து அதைத் தங்களுடன் சமாதானத்துக்கு வரும்படி அதன் வலிமையை அவ்வளவு குன்றச் செய்தாலன்றி, மற்றப்படி இவர்கள் வெற்றிக்கு எதிர்ப் பார்ப்பது வீண். இவர்கள் ருஷியாவின்மேல் ஒருவாறு வெற்றியடைந்து வருகிறார்களென்பது மெய்யே. ஆயினும், அதை முற்றிலும் ஜெயிப்பார்களென்பதும் அதைச் சமாதானத்துக்கு உடன்படுத்துவார்களென்பதும் அசாத்தியம். இவ்விதமாக ஐக்கிய கட்சிக்காரரைச் சமாதானத்துக்கு உடன்படுத்தவும் அல்லது தாங்களே சமாதானஞ் செய்துகொள்ளவும் கூடாத அவ்வளவு கஷ்ட தசையில் இவர்களிருக்கிறார்கள். இதை யறிந்திருக்கும் ஐக்கிய கட்சிக்காரர் யுத்தத்தை நீளிக்கச்செய்வதிலேயே கருத்தாயிருப்பதினால், யுத்தத்தின் முடிவு ஜெர்மனியரைப் பொறுத்தாயிருக்கிறது. எப்படியெனில், இவர்களுக்குள் உண்டாயிருக்கும் சீர்கேடு, ஒழுங்கீனம், புரசல், துன்பங்கள் முதலியவற்றைப்பற்றி சீக்கிரத்தில் இவர்கள் சமாதானத்தை நாடினாலன்றி மற்றப்படி மோசம்போவார்களென்பது திண்ணம். ஆகையால், அடுத்து

வரும் குளிர் காலத்துக்குள்ளாக இவர்கள் சமாதானத்துக்கு வருவார்களென யூகிக்கப்படுகிறது" என்று சொல்லியிருக்கிறார்.

இயாகப்பிள்ளை யவர்களின் மரணம்-1915-ஞு செப்டம்பர் மாதம் 6-ந் தேதி ம-ா-ா-ஸ்ரீ ம. சா. இயாகப்பிள்ளை யவர்கள் தமது 85 வயதில் பரமபதவி யடைந்தாரென வறிந்து கஸ்திக்குள்ளானோம். வேதாந்தநிர்ணயப் பத்திராதிபராகிய மகா இராஜரிஷி, தே. மரி. ஞானப்பிரகாசநாத சுவாமிகள் மரணமடைந்தபின், தமிழ்க் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுக்குப் பிரயோசனமாகச் சத்தியவேதாநுசாரப் பத்திரிகையை இவர் நடத்திவந்தார். இவருடைய மாமனார் காலஞ்சென்ற காலேஜ் முத்துசாமிபிள்ளை யவர்கள் வெகுகாலமாகப் பத்திரப்படுத்திக் கையெழுத்துப் பிரதிகளாக வைத்திருந்த வேத புத்தகங்களை அச்சிற் பதிப்பிக்க வேண்டுமெனும் ஆசையால் தமது பொருளனைத்தும் செலவு செய்து, ஓர் அச்சியந்திரத்தைச் சென்னையிலேற்படுத்தி, கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுடைய ஞான நலத்தின்பொருட்டு சுமார் 25-வருஷங்களாக உழைத்துவந்தார். வேத விஷயத்தில் அவர் கொண்டிருந்த திட விசுவாசத்தையும், மற்றவர்கள் பயன்படும்படியாக இவருக்கிருந்த ஆசையையும் எமது நாவாலெடுத்துரைக்க முடியாது. அச்சியந்திரத்தாலுண்டாகும் மட்டில்லாத ஞான நலங்களை நன்கறிந்த இவர், முத்துசாமி பிள்ளை எழுதிவைத்த ஞான பொக்கிஷத்தை மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொடுப்பது தமது கடமையென்று தத்துவ போதக சுவாமியின் சரிதையில் பின்வருமாறு எழுதியுள்ளார். "இச் சுவாமிகளுடைய சரித்திரங்களை இக்காலத்தில் அச்சிடும்பொருட்டு நமக்குண்டாயிருந்த அவசியம் யாதெனில்: இவர்களாலேயே நமது முன்னோர்கள் குணப்பட்டார்கள் என்றும், நமது நிமித்தம் அநந்த யோசனை தூரதேசத்திலிருந்து நமது தேசத்திற்கு வந்து, இத்தேச பாஷைகளை நன்குணர்ந்து நாமெல்லோரும் கடைத்தேறும்படியாகப் போதுமான கிரந்தங்களையுண்டாக்குவதில் அவர்கள் பட்ட பிரயாசம் வீணாகாமல் நாமெல்லோரும் சிறிது, சிறிதாகவேனும் அச்சிட்டு, யாவர்க்கும் பிரசித்தப்படுத்தவேண்டிய உரித்தாளிகளாகவுமிருக்கிறோம்" என்றதினால் இம்மகான் நமது தேசத்தாருடைய ஞானநலத்திற்குப் பேருதவி செய்தவரென்னலாம். அவர் தம் பொருளுதவியாலும் சிரமத்தாலும் அச்சிட்ட புத்தகங்கள் எவையெனில்:—1.-பச்சிம புராந்திம காண்டங்கள், 2.—ஆத்தும நிர்ணயம், 3.—அண்டபிண்ட வியாக்கியானம், 4.—தத்துவக்கண்ணாடி, 5.—திருச்செல்வராயர் சரித்திரம், 6.—தத்துவபோதகர், முத். அருளானந்தர், வீரமாமுனிவர் சரித்திரங்கள், 7.—தேவமாதா அந்தாதி, 8.—வானவர் விடுதூது, 9.—நசரைக்கலம்பகம், 10.—திருவருண்மாலை, திருவருள் அந்தாதி, 11.—ஞான நட்சத்திரமாலை, 12.—திறக்கப்பட்ட நரகம், 13.—அர்ச். பாப்புமார்களின் சரிதை, 14.—ஞானோபதேச காண்டம், (3 பாகங்கள்). முதலியனவுமாம். மேற்றிராணிமார் குருப்பிரசாதிகள் வாக்கை வெகுவாக மதித்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்த உத்தமர். வேத விஷயங்களை உத்தம விதமாகப் படிப்பித்த உத்தம புண்யவான். இவரை யறிந்தவர்கள் நமது இந்து தேசத்திலும், பர்மா, சிலோன், மோரீஸ் முதலான இடங்களிலுமிருப்பதினால் இவர் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்வார்கள். க.

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

## DOMESTIC OCCURRENCES.

**அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.**

### நன்மரண அறிக்கை.

#### வாலாஜாநகர்.

எனது மாமனாரும் "சத்திய வேதானுசாரம்" என்னும் கத்தோலிக்குத் தமிழ்ப் பத்திரிகையின் எடிற்றரும் புரோப்புரையற்றருமாயிருந்த மகா-ா-ா-ஸ்ரீ, ம. சா. இயாகப்பிள்ளை 1915-ஞு செப்டம்பர் மீ 6௳ திங்கட்கிழமை மாலை 3½ மணிக்கு வடஆர்க்காடு ஜில்லா, வாலாஜா நகரில் தமது 85-ம் பிராயத்தில் பரலோக பிராப்தியடைந்தார். மறுநாள் 7௳ செவ்வாய்க்கிழமை மாலை 3½ மணிக்கு அவரது சடலம் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. தென் இந்தியா, யாழ்ப்பாணம், கொழும்பு, பினாங்கு, சிங்கப்பூர், ரங்கூன் முதலிய தமிழ் நாடுகளிலுள்ள மேற்றிராணிமார்கள், குருக்கள், கன்னியாஸ்திரீகள், கிறிஸ்துவர்களுள் டை இயாகப் பிள்ளையையும், இவர் பிரசுரஞ் செய்து வந்த "சத்திய வேதானுசாரம்" என்னும் கத்தோலிக்குத் தமிழ் பத்திரிகை மூலமாய் வெளிப்படுத்திவந்த அருமையான வேதப்புஸ்தகங்களையுமறியாதவரார்? இவரது ஆத்தும இளைப்பாற்றிக்காக இவர்களெல்லோரும் ஒரு பர., பிரி., திரி., வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

R. I. P.
ஆ. பிரபலநாத பிள்ளை,
Retired Sub Registrar,
*Walajanagar.*

#### பூனா.

பெல்காம் பேட்டைச் சேரியில் வசித்து, காலஞ் சென்ற கனம். நாட்டாண்மை ரு. இராசப்பன் அவர்கள் புத்திரரும், தற்போது பூனாவில் வசிப்பவருமாகிய கனம் இ. தேசி அவர்களின் கனிஷ்ட புதல்வியும், எனது ஞானக் குமாரத்தியுமாகிய பூபதி அற்புதமரி அம்மாள் கடந்த ஆகஷ்டு மாதம் 17ம் தேதி தொடங்கி Enteric Fever என்னும் கொடிய விஷக்காய்ச்சலினால் துன்புற்று எவ்வித சிகிச்சை செய்தும் முடியவில்லை. 25-ம் ௳ எனது இருகரங்களையும் பிடித்துக்கொண்டு, "எனக்கு மன்னிப்புத் தாரும்" என்று என்னைக் கேட்டுக்கொண்டனள். இம்மொழியைக் கேட்டவுடனே, எனது உள்ளம் பதறி யினியில்லாத துக்க சாகரத்தில் அமிழ்ந்தினவனாய் இப்பாலகி சுகமடையும் பொருட்டாக அநேக பொருத்தனைகள் செய்துகொண்டேன். ஆனால் இப்பாலகியைப் பேரின்ப மோட்சராச்சியத்துக் கன்னியாஸ்திரிகளின் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ள பரம நாயகியாகிய தேவ தாயாருக்குச் சித்த மானபடியால் எவ்வித சிகிச்சையாலும் குணப்படாமல், சென்ற செப்டம்பர் மீ 2ம் தேதி வியாழக்கிழமை சாயரட்சை 4½ மணிக்கு இந்தப் பாழான மண்ணுலகை விட்டு விண்ணுலகஞ் சேர்ந்து விட்டனள். மறுநாளாகிய வெள்ளிக்கிழமை 3-தேதி பகல் 12 மணிக்குத் திருச்சபை ஆசாரத்தின்படியே அவளது சடலம் நல்லடக்கஞ் செய்யபட்டது. இப்பாலகியின் பிராயம் 16 வருஷம் 2 மாதம் 20 நாள். இதை கண்ணோக்கும் எனது அன்பர்கள் எனது ஞானக் குமாரத்தியாகிய பூபதி அற்புதமரி அம்மாளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., ஒரு பிரி., ஒரு திரி. வேண்டிக் கொள்ளும்படியாக வந்தனத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

மி. தே. அந்து.

#### வேப்பேரி.

இதனாலெனது அன்புள்ள பந்து மித்திரர்க்குத் துக்கத்தோடு தெரிவிக்கிறதாவது:—திருச்சூரில் காலஞ்சென்ற டாக்டர், கனம் சைமன் பிராஞ்சீஸ் பிள்ளை யவர்களின் அருமை புத்திரியும், திருச்சிரப்புரம் கனம் T. மரியதாஸ் பிள்ளை, கவர்ன்மென்ட் டெலிகிராப் சிக்னலர் அவர்களின் நேச மனைவியும், என தன்புள்ள மைத்துனியுமாகிய ஆரோக்கியமரி யம்மாள் தனது 25-ம் வயதாகிய கி.பி. 1915-ம் வருடம் செப்டம்பர் மீ 11ந் தேதியாகிய சனிவாரமன்று இரண்டாம். புத்திரனைப் பயந்து, ஜன்னிகண்டு மரணமடைய, அன்று மாலை சென்னை, பிராட்வே ஞானப்பிரகாசியார் கல்லறையெனும் அர்ச். ஆரோக்கிய நாதர் கோவிற் கல்லறையில் நல்லடக்கஞ் செய்யப்பட்டதால், இதை வாசிக்கும் எனது பந்து மித்திரரும் கிறிஸ்துவர்களும் டை. ஆத்தும இளைப்பாற்றிக்காக உருக்கமாய் ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளும்படி மிகவும் பிரார்த்திக்கின்ற டை மனைவியை யிழந்த மரியதாஸ் பிள்ளை யவர்களின் சட்டகர்,

டாக்டர். P. G. மாணிக்கம் பிள்ளை.
வேப்பேரி, சென்னை.

#### ராவில்பிண்டி.

பெங்களூரைச் சார்ந்த, தாவிஸ்பேட்டையில் வசிக்கும் காலம் சென்ற மாகா-ா-ா-ஸ்ரீ, கனம். வீ. வீருசாமிபட்லர் அவர்களுடைய செல்வக்குமாரன் வீ. மாரி பட்லர், கடந்த மேமீ 22-தேதி, அந்தோனி என்னும் பெயரோடு சங். டப்லன்ட் சுவாமிகளால் ஞான தீட்சை கொடுக்கப்பெற்று, கனம் J. தாமஸ் மோட்டர் டிரைவர் செல்வக்குமாரத்தியாகிய, சௌ. சவிரு

அம்மாளை உலகரட்சகரின் இருதய ஆலயத்தில் ஷெ குருவின் முன்னிலையில். மறுநாள் திருமணஞ் செய்துகொண்டார். ஆனால், ஐயோ! அடுத்த ஜுன்மீ 5ம் தேதி இவருக்குக் குளிர் காய்ச்சல் கண்டு, ஆகஸ்டுமீ 17ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 8½ மணிக்குச் சருவேஸ்பரன் சமுகம் சேர்ந்தனர். அன்றையத்தினம் சாயரட்சை 5½ மணிக்கு பட்டா என்னும் பழய கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டார். இவருக்கு வயது 28. இதை வாசிக்கும் நண்பர்கள் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர.,பிரி.,திரி. வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிற.

F. A. சாமுவேல், பட்லர்,
ஞானத்தகப்பன்.

## நமது நண்பர்களுக்கோர் அறிக்கை.

கோயமுத்தூரைச் சார்ந்த ஈரோடு தாலுக்காவி லிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ துரைசாமிப் பிள்ளையின் குமாரர், தங்கப்பிரகாசம் என்பவர் என்பிரிய நண்பரில் ஒருவர். இவர் பதினேழாம் பிராயத்தில் மெற்றிரிக்குலேஷன் பாஸ் செய்து, பிறகு இரண்டு வருஷம் படிக்கவேண்டிய கமர்சியல் டிப்ளோமா (Commercial Diploma) பரீட்சையை ஒரே வருஷத்தில் முடித்ததோடுங்கூட தான் எடுத்துக்கொண்ட பாடங்களை முதன்மையாகவும், இரண்டு பாடங்களில் பிரசிடென்சிக்கு முதன்மையாகவும் தன் பதினெட்டாம் பிராயத்தில் பாஸ் செய்திருப்பது நம்மைச் சார்ந்த கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களெவருக்கும் மெத்த சந்தோஷமான காரியமே. அவருடைய குணாதிசயங்களையும், புத்திக்கூர்மையையும் எடுத்துரைக்க, அவர் கமர்சியல் பள்ளிக்கூடத்திலிருந்து பெற்றிருக்கும் சர்டிபிகேட்டே போதுமானது. கடவுள் அவருக்கு நீடிய ஆயுளைக்கொடுத்து நம்மிடையில் வைத்திருப்பாராக. இதைவாசிக்கும் நண்பர்கள், அவருக்குத்தகுதியான உத்தியோகம் தென்படில் மேற்கண்ட அவர் பெயருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

J. L. Dominique,
Peirce Leslie & Co, Ltd.,
*Coimbatore.*

திருக்குடும்பந்துணை.

# புரோடெஸ்டாண்டு மதங்களின் பரீட்சை.

இப்புத்தகமானது கத்தோலிக்குத்திருச்சபையைச்சேர்ந்தவர்களைப்புரோடெஸ்டாண்டார் பல விபரீத கேள்விகளைக் கேட்டு அவர்களை வஞ்சிக்கப் பார்க்குஞ் சமயத்தில் கத்தோலிக்கசகோதரர்கள் அவர்களை மறுக்கத் தகுந்த நியாயங்களைக் கொண்டு புரோடெஸ்டாண்டாரை ஜெயங்கொள்ளக் கூடாதவர்களாய்த் தோர்வை அடைந்து கேட்டுக்குள்ளாகிறதைக் கண்டு, புரோடெஸ்டாண்டு சுவிசேஷமாகிய பைபிலின் வாக்கியத்தைக்கொண்டு அவர்களுக்கு விடையளித்து அவர்களை ஜெயங்கொள்ளும் பொருட்டு சிரேஷ்ட குருப்பிரசாதிகளால் பார்வையிடப்பட்டு அதிமேற்றிராணி ஆண்டவரின் உத்தாரப்படி அச்சிடப்பட்டிருக்கிறது.

விலை—புத்தக மொன்றுக்கு இரண்டணாதான். 2½-அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு புத்தகம் புக்போஸ்டிலனுப்பப்படும். ஆனால் கொளும்பு சிலோனிலுள்ளவர்களுக்கு மாத்திரம் 3-புத்தகங்களிலிருந்து வி.பி. யில் அனுப்பப்படும். வி. பி. யில் மூன்று புத்தகங்கள் 9-அணாதான். (சிலோன் ஸ்டாம்புகள் இவ்விடத்தில் சிலாவணியாகாமையால்தான்.)

சைவ மதத்துவ திமிரபானு விவிலிய விரோதகிக்காரமென்னும் பெயர்போன தர்க்கப் புத்தகம் ஷை அதிமேற்றிராணியார் அனுமதி பெற்றது. விலை ரூ 2 0 0 கெட்ட குமாரன் கதையென்னும் ஊதாரிப்பிள்ளை விலாசம் 1 0 0 நூதன யோசேப்பு சபா 0 12 0

எஸ். அந்தோனி பிரதர்ஸ்;
கமிஷன் ஏஜண்ட் 79, போர்ச்சுகீஸ் வீதி, சென்னை; ஜார்ஜ்டவுன் மதராஸ்.



## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ 3,596-6-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷெ கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன்வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந்தொகை யாகுமே. ஆக்வே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷெ கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில்;

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3,672 | 6 | 6 |
| Mr. Powell | 2 | 0 | 0 |
| ஓர் நன்கொடை | 33 | 4 | 0 |
| Mr. L. V. கோமெஸ் (நியுவாரளலிய) | 2 | 0 | 0 |
| ,, அநந்தநாத பிள்ளை | 1 | 0 | 0 |
| ,, D. மரியசூசை (குவ்ாலாலம்பூர்) | 1 | 8 | 0 |
| பம்பாய் Mr. மரியசூசை நாயகர் வழியாக | 8 | 4 | 0 |
| Mr. ரெபெக்கா (சேத்பட்) | 5 | 0 | 0 |
| ஆகமொத்தம், | 3,725 | 6 | 6 |

## எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தருமம்.

நண்பர்களே!

சென்ற வருஷம் நாம் அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தர்மமென்று அறிக்கையிட்டு, செய்துகொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி, எமக்குதவிபுரிந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்குப் பங்காளிகளான உதார குணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்துவர்களுக்கும் எடப்பாடி நேயர்களுக்கும் அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1914-ஷு எப்ரல் மாத முதல் 1915-ஷு மார்ச்மீ 31௳ வரையில் நேயர்களால் அளிக்கப்பட்ட நன்கொடை ரூபாய் 193-2-0. சென்ற பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்களை முடிவாக்கவும், விசாரணைக் குரு வசிக்கும் பங்களாவை மராமத்துச் செய்யவும், கோவில் கட்டிட விர்த்தியைப் பூர்த்திக்குக்கொண்டுவரவும் செலவான தொகை ரூபாய் 2620-8-4. இவ்விஷயமாய்த் தற்காலம் நமக்கு ஏற்பட்டிருக்குங் கடன் ரூபா 738.

நண்பர்களே! தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி சத்திரங்கள் முடிவிற்கு வந்தன. ஆகிலும், பழைய சத்திரங்களை மராமத்துசெய்யப் போதுமான பணமில்லாமையால் அவ்வேலைகளை நிறுத்தவேண்டி நேரிட்டதைப்பற்றி விசனிக்கிறோம். தர்ம சிந்தையுள்ள அர்ச். நாயகியின் ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. அவளது மகிமைக்காக கடனளியாளும் என்பதைச் சிந்தித்து எமதுபேரில் இரக்கம் புரிவார்களென்பது திண்ணம். நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதேயாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள்பேரில் பூரணமாய்ப் பொழியக் கிருபை செய்யவேணுமென்பது எமது பிரதிதின வேண்டுகோள்.

இப்படிக்கு,

எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாளின் ஊழியனாகிய, விசாரணைக் குரு
ஜே. ஞானதிக்கம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷெ தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 868 | 12 | 0 |
| Mr. செல்வப்பன், கொழிஞ்ஞிபாளையம் | 2 | 4 | 0 |
| Mr. J. மரியான், சிலோன் | 1 | 0 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 872 | 0 | 0 |

# GRAND RAFFLE.

ஐதராபாக்கத்து மேற்றிராசனத்தைச் சார்ந்த சில தரும கைங்கரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட

## லாட்டரிச் சீட்டு

கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களே! நீங்கள் இந்த லாட்டரியைச் சேர்வதினால் ஏழைகளுக்கு உதவும் புண்யத்தில் பங்கடைவதுந் தவிர, ஓர் பெரும் லாபத்தை அடையவுங் கூடும்.

## 100 நேர்த்தியான பிரைஸ்கள்.

ரூபாய் 600, 300, 100, 70, 50, 30, 25, முதலிய தொகை பெறுமான, பொருள்கள்:— டாக்கார்ட் என்கிற வண்டியுங் குதிரையும், நாற்காலி, பீரோ முதலிய மரச்சாமன்கள், பைசிக்கல் என்னும் துவிச்சக்கர வண்டிகள், சிங்கர் தையல் யந்திரங்கள், பொன் மோதிரம், விசித்திர பாத்திரங்கள் முதலியன.

25 டிக்கட்டுகளடங்கிய புத்தகங்கள் ஒவ்வொன்றையும் விற்பனை செய்து கொடுப்பவர்களுக்கு விசேஷ கமிஷனும் வெகுமதியும் கிடைக்கும்.

தங்களுக்குப் பிரைஸ் அடித்த சாமான்களுக்குப் பதில் பிரியமானால் கிரயமுங் கொடுக்கப்படும்.

## டிக்கட்டுகள் 4 அணா மாத்திரம்.

செக்கந்திராபாக்கம் செண்ட். மேரீஸ் ஸ்கூல். சங். சி. மரியானி சுவாமியாரிடம் பெற்றுக்கொள்ளலாம். ஏழைகளின் தரும விஷயத்தில் நாலணா செலவழித்துத் தன் அதிர்ஷ்டத்தைப் பார்க்கமுடியாத அவ்வளவு ஏழையார்?

## டிக்கட்டுகளைச் சீக்கிரம் வாங்கிக்கொள்ளுங்கள்.

1915ஆ டிசம்பர்மீ 1-ல் தேதி, செக்கெந்திரா பாக்கத்தில் பழைய பாரிஷ் ஆலில் லாட்டரி குலுக்கப்படும்.


---

## தருமகுண நண்பருக்கு ஓர் விண்ணப்பம்.

சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த சூளையில், 30-வருடத்துக்குமுன் சுதேச பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்து, அநாதபிள்ளைகளை ஆதரித்துச் சிறு குழந்தைகளை வளர்த்து, சகல கிறிஸ்துவர்களுக்காக வேண்டிக்கொண்டுவர அர்ச். ஐந்துகாய பிரான்சிஸ்கு என்பவரின் மூன்றும்சபை சுதேச கன்னியர்மடம் ஒன்று ஸ்தாபகமானது.

அம்மடத்தைத் தற்போது விஸ்தரித்துக் கட்டவேண்டுமென அதிமேற்றிராணியார் உத்தரவளித்தார். தருமமெடுத்து கன்னியருக்கான கட்டிடத்தைக் கட்டினோமாயினும் பூச்சுவேலையும், கதவு ஜன்னல்கள் வேலையும் முடிவுபெறாது வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் அநாதபிள்ளைகளுக்காகக் கட்டப்பட்டிருந்த சாலை சென்ற நவம்பர் மாதம் 7-ந் திகதி நடு இரவில், இவ்விடம் பெய்த அகோர மழையால் சுவர்கள் நனைந்து பாதி வீடு இடிந்துவிழுந்து, சாமான்களெல்லாம் பொடிப் பொடியாய் நொறுங்கிப்போயின. எமது மடத்தின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பருடைய அற்புத சகாயத்தால் மேற்கூரை விழுமுன் திடீரெனப் பிள்ளைகள் எழுப்பிவிடப்பட்டு, அகால மரணத்தினின்று காப்பாற்றப்பட்டார்கள். பிதாப் பிதாவான அர்ச். சூசையப்பருக்குச் சதா நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

இருக்க இடமின்றி தவிக்கும் ஏழை அநாதபிள்ளைகள்மட்டில் மனமிரங்கி உதவிசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம். உங்கள் நன்றிக்குக் கைம்மாறாக உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் ஆத்தும சரீர நலங்களுக்காக நாமும் சகோதரிகளும் அநாத பிள்ளைகளும் மறவாமல் நாடோறும் வேண்டிக்கொண்டு வருவோம். நல்லாயன் சந்தாதாரர் கொஞ்சம் தருமம் அனுப்புவார்களாக.

ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை

| | | | |
|---|---|---|---|
| Mr. S. மரியசூசைபிள்ளை (கடம்பூர் எலும்பு வியாபாரி) | 163 | 6 | 0 |
| ,, A. அற்புதம்பிள்ளை (Taiping) | 3 | 0 | 0 |
| ,, J. Salay, (Ipoh) | 5 | 0 | 0 |
| ,, திருவெங்கிடன் (Maungmya) | 20 | 0 | 0 |
| ,, அநந்தநாதபிள்ளை (Rayadrug) | 8 | 0 | 0 |
| | 1 | 0 | 0 |
| ஆக மொத்தம் | 200 | 6 | 0 |


S. Jos. Balasami,
*St. Andrew's Church, Choolai P. O. Madras.*





"நாம் நல்ல ஆயன்.. நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)


புத்தகம். 13. } நவம்பர், 1915. { இலக்கம். 11.


## PURGATORY.

## உத்தரிக்கிற ஸ்தலம்.

தாங்கள் கட்டிக்கொண்ட அற்பப் பாவங்களுக்கும், பாவசங்கீர்த்தனத்தினால் பொறுக்கப்பட்ட சாவான பாவங்களுக்குரிய அநித்திய தண்டனைக்கும் முழுதும் உத்தரியாமல் அநேகர் மரணமாகிறார்களல்லவா? இப்படி மரணமாகிறவர்களைச் சர்வேசுரன் இவர்களுடைய உத்தரிப்புக் கடனுக்காக நித்திய நரக வாக்கினைக்குள்ளாக்குவது அவருடைய அளவறுக்கப்படாத நீதிக்கு எட்டுணையும் ஏற்காது. இவர்களுக்கு உடனே மோக்ஷ சம்பாவனையைக் கொடுப்பதும் அவருடைய மட்டில்லாத பரிசுத்தத்தனத்துக்கு எவ்வளவும் பொருந்தாது. அதேனென்றால், அசுத்தமானது ஒன்றும் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்க முடியாது. (காட்சி. XXI. 27.) ஆதலால், இப்பேர்ப்பட்ட ஆத்துமாக்கள் தங்களுடைய உத்தரிப்புக் கடனுக்காக வேதனைப்பட்டுத் தங்களை மோட்ச இராச்சியத்துக்குப் பாத்திரவான்களாக்கிக்கொள்ளும் இடமே உத்தரிக்கிற ஸ்தலமாகும். உத்தரிக்கிற ஸ்தலமுண்டென்பதும், அவ்விடத்திலே அவதிப்படுகிற ஆத்துமாக்களுக்கு நித்திய இளைப்பாற்றி கிடைக்க நாம் பூசை செய்வித்தும், ஜெபதபம், ஒருபொழுது உபவாசம், தானதர்மம் இவை முதலிய புண்யக்கிருத்தியங்களை அனுஷ்டித்தும் ஒப்புக்கொடுக்கலாமென்பதும் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களான நாம் எல்லோரும் விசுவசிக்கும் வேத சத்தியங்கள். 16-ம் நூற்றாண்டில் தங்களுடைய ஒழுங்கற்ற ஆசாபாசங்களை யடக்கத் தெரியாமல், அவைகளுக் கிணங்கித் திருச்சபையைச் சீர்திருத்தத் தோன்றினவர்களென்று சொல்லிக்கொண்ட லுத்தேர், கால்வின், எட்டாம் ஹென்றி முதலியவர்கள் மறுதலித்த அநேக விசுவாச சத்தியங்களுக்குள் உத்தரிக்கிற ஸ்தலமும் ஒன்றாகும். இவர்களுடைய தவறான கொள்கைகளைக் கைக்கொண்டு நடக்கும் புரோட்டெஸ்டாண்டு உபதேசிமார், உபாத்திமார், இன்னும் புரோடெஸ்டாண்டு கிறிஸ்துவர்களுக்குள் கொஞ்சம் எழுத வாசிக்கக் கற்றுக்கொண்டவர்களும் வேத சாஸ்திரங்களை யெல்லாம் படித்துக் கரைகண்டவர்களைப் போல் தங்களைப் பாவித்து, கேவலம் தங்கள் சாமர்த்தியத்தையும் திறமையையும் கத்தோலிக்கு வேதத்தை நன்றாய் அறிந்த

வர்களிடத்திற் காட்டிக்கொள்ளாமல், அறியாதவர்களிடத்திற் காட்டிக்கொள்ளுகிறார்கள். சமீபத்தில் ஒரு கத்தோலிக்குக் குடியானவன் தன் வயலுக்குக் களைவெட்டு நிமித்தம் போய்க்கொண்டிருக்கையில், ஒரு புரோடஸ்டாண்டு உபதேசி அவனை வழியில் நிறுத்தி "என்ன காணும், இவ்வருஷம் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு எத்தனை பூசை செய்வித்தீர்? உங்கள் சபையில் காசு பறிக்கக் குருக்கள் நல்ல உபாயஞ் செய்திருக்கிறார்கள்." என்றான். இதைக் கேட்ட குடியானவன் "ஐயா, உபதேசியாரே! இதெல்லாம் எனக்கொன்றும் தெரியாது; நீர் எங்கள் பங்கு சுவாமியாரை இதைப்பற்றி விசாரிப்பீரானால், அவர் உமக்கு என்ன பதில் சொல்வாரோ! ஆயினும் இவ்விஷயமாய் நான் கேள்விப்பட்டது ஒன்றுண்டு. அது யாதெனில், உத்தரிக்கிற ஆத்துமாக்களைக் குறித்துப் பூசை செய்விக்கவும், தானதருமங் கொடுக்கவும் ஐரோப்பாவில் சேகரிக்கப்பட்டிருந்த ஒரு பெரும் நிதியை உங்கள் மதத்தை உண்டுபண்ணினவர்கள் அபகரித்துக்கொண்டார்களாம். இதன் பொருட்டே அவர்கள் உத்தரிக்கிற ஸ்தலம் இல்லையென்று போதிக்கவுந் தொடங்கினார்களாம்" என்று சொல்லிவிட்டுத் தன் வழியே சென்றான்.

பழைய ஏற்பாட்டிற் சொல்லியிருக்கிறபடி உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்று யூதர்கள் முதலாய் விசுவசித்து வந்திருக்கிறார்கள். நமதாண்டவரான சேசுநாத சுவாமியாவது, அவருக்குப் பின் விருத்தசேதன முதலிய யூதவேதாசாரங்களைத் தள்ளிப்போட்ட அப்போஸ்தலர்களாவது மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும் வழக்கத்தை விரோதித்துப் பேசினவர்களல்லர். சொல்லவேண்டுமானால், அர்ச். சின்னப்பர் கொருந்தியருக்கு எழுதின நிருபத்தில் (1. கொரி. XIII. 15). உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்று தேட்டையாய்ப் போதிக்கிறார். திருச்சபையின் ஆரம்ப முதற்கொண்டு கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களெல்லோரும் உத்தரிக்கிற ஸ்தலமுண்டென்று உறுதியாய் விசுவசித்து வந்தார்களென திருச்சபைசரித்திரமும் பாரம்பரியமும் வற்புறுத்தி சாட்சி பகர்கின்றன. உதாரணமாக: இரண்டாம் நூற்றாண்டில் வசித்துவந்த தெர்தூலியன் என்பவர் சொல்லியிருப்பதாவது: "இறந்துபோன தன் கணவனுக்காக ஒரு பிரமாணிக்கமுள்ள பெண்சாதி எப்போதும் விசேஷமாய் அவன் மரணமடைந்த வருஷாந்தர நாளிலும் வேண்டிக்கொள்ள மறக்கமாட்டாள்" என்பதேயாம். அர்ச். மோனிக்கம்மாள் மரணத்தறுவாயிலிருக்கும்போது தன் அருமை மகனாகிய அர்ச். அகுஸ்தீன் என்னும் மேற்றிராணியாரிடத்தில் "மகனே, என் சடலத்தைப்பற்றி நீர் கிஞ்சிற்றும் கவலைப்படாதேயும்; அதை நீர் எங்கே அடக்கஞ் செய்தாலும் சரி. ஆனால், உம்மிடத்தில் நான் கேட்டுக்கொள்ளும் ஒரு காரியமென்னவென்றால், நீர் எங்கேயிருந்தாலும் பூசைசெய்யும்போது என் ஆத்துமத்தை மறந்துபோகாதேயும்" என்று கேட்டுக்கொண்டாள்.

கத்தோலிக்குத் திருச்சபையின் பிள்ளைகளாகிய நமக்கு, உத்தரிக்கிற ஸ்தலமுண்டென்று விசுவசிக்கவும், அதிலே அவதிப்படுகிற ஆத்துமாக்களுக்காக வேண்டிக்கொள்ளவும் தவறாவரமுடைத்தான திருச்சபையின் போதனையே போதுமான ஆதாரம். ஆனபடியால், உத்தரிக்கிற ஆத்துமாக்களின் மாதமாகிய இம்மாத முழுமையிலும், விசேஷமாய் சகல உத்தரிக்கிற ஆத்துமாக்களின் திருநாளாகிய 2-ம்௳யிலும் நாம் இதுவரையிலும் இந்த ஆத்துமாக்களுக்கு உதவி புரிந்ததைவிட அதிகமாய் உதவிபுரிந்து, அவர்களுடைய வேதனை குறையவும் அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றி உண்டாகவும் நம்மாலான பிரயாசைப்பட வேண்டியது. உத்தரிக்கிற ஆத்துமாக்கள் படும் அவதி நீங்கவே, அநேக பாப்புமார்கள் இவ்வாத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுக்கக்கூடிய கணக்கில்லாத பரிபூரண பலன்களையும், அபூரண பலன்களையும் கட்டளையிட்டிருக்கிறார்கள். சென்ற வருஷத்தில் முதலாய் காலஞ்சென்ற பரிசுத்த பாப்பானவரான 10-ம் பத்திநாதர், நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து திவ்யநற்கருணை யுட்கொண்டு உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநாளன்று எத்தனைவிசை கோவிலைச் சந்தித்து பாப்பானவருடைய கருத்துக்காக கிறிஸ்துவர்கள் வேண்டிக்கொள்ளுகிறார்களோ, அத்தனை விசையும் பரிபூரணபலன் அடையலாமென்றும், அப்பரிபூரண பலன்களை உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு மாத்திரம் ஒப்புக்கொடுக்கலாமென்றும் கற்பித்திருக்கிறார். தற்போது திருச்சபையையாளும் 15-ம் ஆசீர்வாதப்பரும், உலகத்திலுள்ள ஒவ்வொரு குருவானவரும் உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநாளன்று மூன்று பூசைகள் செய்து ஒப்புக்கொடுக்கலாமென்று உத்தரவளித்திருக்கிறார். மற்ற வருஷங்களைப் பார்க்கிலும் இவ்வருஷத்தில் நாம் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கதிகமாய் வேண்டிக்கொள்ள கடமைப்பட்டவர்களாகிறோம். அதேனென்றால், இப்போது ஐரோப்பாவில் நிகழ்ந்துவரும் மகாகொடிய யுத்தத்தினால் இதுவரையிலும் எத்தனையோ ஆயிரம்பேர் மடிந்தார்கள்; இன்னும் எத்தனையோ பெயர் மடிகிறார்கள். இவர்களெல்லோரும் நம்முடைய சகோதரர்களல்லவா? அன்றியும் நமக்குள் எத்தனையோபெயர் தங்கள் பெற்றோரையும், புருஷரையும், பெண்சாதியையும், பிள்ளை குட்டிகளையும், சகோதரர் சகோதரிகளையும் இன்னுமற்ற இனபந்துமித்திரர்களையும் உபகாரிகளையும் சாகக்கொடுத்திருக்கிறார்கள். இவர்களெல்லோரும் உத்தரிக்கிற ஸ்தலத்தில் சகிக்க முடியாத வாதனைப்பட்டுக்கொண்டிருக்கலாம். இப்படி இவர்கள் வாதனைப்பட நாமே காரணமாயிருந்துமிருக்கலாம். ஆனதுபற்றி, இவர்களெல்லோருடைய வாதனை குறைந்து இவர்கள் ஆவலாய்த் தேடுகிற மோட்ச சம்பாவனையைப் பெற்றுக்கொள்ள நம்மாலான உதவி செய்யத் தவறுவோமானால், அது எப்பேர்ப்பட்ட நன்றிகெட்டத்தனமாகும். மேலும் இவர்கள் நம்முடைய உதவியினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களானால் நமக்காக சர்வேசுரனிடத்தில் பரிந்துபேசி நமக்கு வேண்டிய உதவிசகாயங்களை செய்யத்தவறமாட்டார்கள். கடைசியாய், "எந்த அளவைக்கொண்டு நாம் மற்றவர்களுக்கு அளக்கிறோமோ அந்த அளவைக்கொண்டே நமக்கும் அளக்கப்படும்" (மத். VII. 2) என்னும் வேதவாக்கியத்தை நினைவுகூர்ந்து, நம்முடைய மரணத்துக்குப் பிறகு நமக்காக மற்றவர்கள் வேண்டிக்கொள்ள ஆசிப்போமானால், நாமும் மற்றவர்களுக்காக இப்போதே வேண்டிக்கொண்டு வருவோமாக.

---



## SOUTH INDIAN CATHOLICS AND HIGHER EDUCATION.

## தென் இந்திய கத்தோலிக்கரும் உயர்தரக் கல்வியும்.

---

*அறம் பொருளின்பம் வீடும் பயக்கும், [ன்*
*புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொ*
*றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங்கில்லை*
*சிற்றுயிர்க் குற்றதுணை.*

---

இலௌகிக உலகமானது நாளுக்கு நாள் விருத்தியடைந்துகொண்டு வருகிறது. ஒவ்வொரு தேசமும் சீமையும், ஜாதி ஜனங்களும் நேற்றிருந்ததை விட இன்று அபிவிருத்தியடைந்து வருகிறதை நாம் கண்கூடாக் கண்டுவருகிறோம். அபிவிருத்திக்கு அறிவே காரணமாகும். அறிவோ கல்வியின் பயன். ஆனதுபற்றி, விருத்தியை விரும்பிய யாவரும் கல்வியைக் கைப்பற்ற வேண்டும். கல்வியென்றால் சாமான்ய கல்வியல்ல. உயர்தரக் கல்வி கற்றல்வேண்டும். கல்வி விஷயத்தில் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் மிகவும் பின்னிடைந்து வருகிறார்கள். ஒருவரை யொருவர் மேற்கொள்ளப் போட்டி மிஞ்சிய இக்காலத்தில் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் கடைத்தேற வேண்டுமானால், உயர்தரக் கல்வியை ஊக்கமாய்ப் பயிலவேண்டும். அப்படிக்கில்லையானால், சிறிது காலத்துக்குள் இந்தியாவிற்கு அளிக்கப்படப்போவதாய் உத்தேசிக்கப்படுகிற தேச நன்மைச் சுதந்தரங்களுக்கு இவர்கள் யோக்கியதை யில்லாமற் போவதோடு, ஏற்கெனவே யோக்கியதையுடையவர்களாயிருந்து அச்சுதந்தரங்களைப் பெற்றுக்கொள்ளும் மற்றையோர்களிடமாய்ப் பல அசௌகரியங்களுக்கும் உள்ளாவார்கள். ஆகவே, கத்தோலிக்கு இந்தியர் இனி நித்திரை தெளிந்தெழுந்திருத்தல் வேண்டும். தங்களுக்குள் "உயர்தரக் கல்வி"யை விருத்திசெய்யவேண்டிய வழிவகைகளைத் தேடிச் செய்யவேண்டும். அடுத்த டிசம்பரீ௴ சென்னையில் கூடப்

போகிற "தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்க"த்தின் வருஷாந்தப் பொதுக் கூட்டத்தில் உயர்தரக் கல்வியாபிவிருத்தி விஷயமாய் தீர்மானிக்கப்படும் விஷயங்களை அச்சங்கத்தின் அங்கத்தினர் மாத்திரமல்ல, கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் அனைவோரும் அங்கீகரித்து ஏகோபித்து நடவடிக்கை நடத்தல்வேண்டும். ஷை கூட்டத்தின்முன் கொண்டுவரப்படப்போகிற பிரேரேபனைகளின் நகலும், சங்கத்தலைவரின் அங்கீகாரப் பத்திரத்தின் நகலும், கௌரவ காரியதரிசியின் சுற்றுப்பத்திரத்தின் நகலும், இது விஷயமாய் "கத்தோலிக்குக் குடும்பபோதினி" பிரசுரித்த அரிய வியாசமும், அதிகாரிகளின் வேண்டுகோளின்படி இதன் பின்னால் பிரசுரிக்கப்படுகின்றன. நமது சந்தாதாரர்கள் அனைவரும் இவை முழுவதையும் பொறுமையாய் வாசித்து, இந்த அதிமுக்கியமான "கத்தோலிக்கரின் உயர்தரக் கல்வி" விஷயமாய் தங்களாலான உதவிசெய்யப் பின்வாங்கார்களென நம்புகிறோம்.

(கத்தோலிக் குடும்ப போதினி.)

ஒற்றுமை வலிமை தரும்.

இம் மூத்தோர் வாக்கியம் உண்மையென்பது நாளடவில் தெரிந்த சங்கதியுமன்றி, தற்காலம் நாம் கண்ணுற்றுப் பார்த்தும் காதால் கேட்டும் வருகிற அநேக விஷயங்கள் இதற்கு முறையே சாக்ஷியாயிருக்கும். இவ்வொற்றுமையால் ஐரோப்பாவில் முக்கிய நகரங்களிலும் அதுபோலவே இந்தியாவிலும் அநேகவிடங்களில் பரோபகார சங்கங்கள் அநேகம் ஏற்பட்டிருக்கின்றன. இச்சங்கங்களால்தான் அநேக நாடு நகரங்கள் சிறப்பும் மேன்மையும் அடைந்திருக்கின்றன. நாமிருக்கும் இந்தியா தேசத்திலே எத்தனையோ பரோபகார சங்கங்கள் உண்டு. சென்னை ராஜதானியில் "ஹிந்து அசோசியேஷன்" (Association) என்னும் இந்துக்கள் சங்கமும், "அஞ்சுமான்" என்னும் மகம்மதியர்கள் சங்கமும், "நேட்டிவ் கிறிஸ்டியன் அசோசியேஷன்" என்னும் புரோடெஸ்டாண்டார்களுடைய சங்கமும் இன்னும் இதைப்போன்ற இதர சங்கங்களும் ஏற்பட்டு, அந்தந்த வகுப்பாருடைய பொது நன்மைக்காக உழைத்து திரவியத்தை செலவழித்து, அவரவர்கள் முன்னேற்றத்துக்கு ஏற்ற வழிப்பாடுகளைத் தேடுகிறார்கள். தென்னிந்தியாவில் "சென்னை கத்தோலிக்கு இந்தியர் சங்கம்" பல வருஷங்களுக்கு முன் ஏற்பட்டிருந்தும் லௌகீக விஷயங்களில் பொது நன்மைக்காக அச்சங்கத்தினர் ஒருமித்தவர்களாய்க் காணப்படவில்லை. நம்மவர்க்குள் இப்போது அவசியமாய் வேண்டிய ஐக்கிய பந்தனத்துக்குச் சில காரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அது யாதெனில், நாம் பொதுப்பட ஏழைகளாயிருக்கிறோம். நம்முடைய வறுமையினிமித்தம் நாகரீகம், கல்வி, செல்வம், சுகானுபவம் முதலிய மேன்பாடுகளில் மற்றவர்களைவிட கீழ்த்தரமாயிருக்கிறோம். நம்மவர்களில் பெரும் பான்மையோர் ஜீவனுவசியங்களாகிய அன்ன வஸ்திராதிகளை முதலாய் சேகரித்துக்கொள்ள வழியற்றவர்களாயிருக்கிறார்கள். சாதாரண உலக சுகங்களை அனுபவிக்கிறவர்கள் மிகவும் சொற்பம். ஆனதைப் பற்றி, நம் அயலார்களாகிய இந்துக்கள், மகம்மதியர்கள், இன்னும் சொல்லவேணுமானால், இந்திய புரோடெஸ்டாண்டு கிறீஸ்துவர்கள் முதலானவர்களோடு சமமாய் சகவாசம் செய்யக்கூடாதவர்களாயிருக்கிறதுமன்றி, அந்தந்த தாலூக்காக்கள், டவுண்கள், ஜில்லாக்கள் இவைகளில் பொது நன்மைக்காக ஏற்பட்டிருக்கும் யூனியன், போர்டு, முனிசிபாலிட்டி முதலிய சங்கங்களில் நம்மவரைக் காண்பதும் அத்திபூத்தாப்போலிருக்கிறது. "இதற்கு மூலகாரணம் உயர்தரக் கல்வியின் குறைவே," உயர்தரக் கல்வியால் இந்துக்களும் மகம்மதியர்களும் பலவாறாய் மேன்மையடைந்து ராஜாங்கத்தில் சிறப்பும் சீரும் பெற்றுவருகிறார்கள். அநேகர் இராஜாங்கத்தில் ஐரோப்பியர்களுக்குச் சமமான அந்தஸ்தில் ஐக்கோர்ட்டு ஜட்ஜிகள், டிஸ்திரிக்கட்டு கலெக்டர்கள், ஜட்ஜிகள், டிஸ்திரிக்கட்டு இஞ்சினியர்கள் முதலிய அந்தஸ்தில் அமர்ந்திருக்கிறார்கள். அந்தந்த ராஜதானியில் ஏற்பட்டிருக்கும் சட்ட நிரூபண சபையிலும் அவர்கள் ஏராளமாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இன்னம் சொற்பநாளில் விசேஷமாய் இப்போது நடக்கும் யுத்தம் முடிந்தபின், இந்திய தேசத்தார் காண்பித்திருக்கும் ராஜபக்திக்கு நன்றியுணர்வாக, இந்தியா தேசத்தை ஆள்வதில் இந்தியர்களுக்குப் பெரும் பாகம் கொடுபடும் என்பதற்குத் தடையில்லை. உயர்தரக்கல்வியில் சிறந்திருக்கும் இந்துக்களும் மகம்மதியருமே பெரும்பான்மை ராஜ்யத்தை ஆளுபவர்களாயிருப்பார்கள். நம்மவர்களையோவெனில் கன



வில் முதலாய் நினைப்பதற்கு இடமில்லாமலிருக்கும். ஏனெனில், நம்மவர்களுக்குள் உயர்தரக் கல்வி சென்ற சில வருஷங்களாக வர வரக் குறைந்து வருகிறதேயன்னியில் விருத்தியாகிறதைக் காணோம். இதனால் அநேக அபாயங்கள் நம்மவருக்கு நேரிடும் என்பதற்கு கிஞ்சித்தும் சந்தேகமில்லை. நம்மவர்கள் மேற்படி இந்து மகம்மதியருக்குள் கீழ் அந்தஸ்திலிருந்து அவர்கள் சொல்லைத் தட்டாமல் படிந்து நடப்பவர்களாயிருப்பார்கள். சாதாரணமாய்ப் பொது ஜனங்களுக்கு இயல்பாயுள்ள சுதந்தரங்களையும் பாத்தியதைகளையும் நாம் கிறிஸ்துவர்களாயிருப்பதினால் விக்கினங்களின்றி அனுபவிப்பது கஷ்டமாயிருக்கும். உதாரணமாய் தற்காலம் பிரிட்டிஷ் இந்தியாவில் பல இடங்களிலும், சுதேச அரசாட்சிகளுக்குட்பட்ட அநேக நாடுகளிலும் நம்மவர்கள் படுங்கஷ்டம் தெரிந்த காரியமே. பொதுக் கிணறுகளிலும், ஆறுகளிலும், குளங்களிலும் கிறீஸ்துவர்கள் தண்ணீர் மொள்ளக்கூடாதென்று தடுப்பதும், திருநாள் உற்சவங்களை இராஜபாட்டை வழியாய் முதலாய்க் கொண்டுபோகக்கூடாதென்று ஆக்ஷேபிக்கிற சிலவிடங்களும் உண்டு. சில வருஷங்களுக்கு முன் தஞ்சாவூர் ஜில்லா திருப்பந்துருத்தி கிராமத்தில் திருநாள் சுற்றுப்பிரகாரம் கொண்டாடுவதற்கு டிஸ்திரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு முதலிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உதவியிருந்தும், நமது கிறிஸ்துவர்கள் அந்தக் கிராமத்து இந்து மிராஸ்தார்களுக்குப் பயந்து உற்சவம் தங்களுக்கு வேண்டியதில்லையென்று பப்ளிக்காய் சொல்லிவிட்டார்கள். விழுப்புரத்தில் நமது உற்சவ விஷயமாய் நடந்த பெருங்கலகமும், அச்சமயத்தில் கிறீஸ்துவர்களும் பங்குசுவாமியாரும் பட்ட கஷ்டமும் தெரிந்ததே. மேலும் நம்முடைய வேத அனுஷ்டானங்களை சுலபமாய்க் கொண்டாடுவதற்கும், நம்முடைய குருப்பிரசாதிகள் அந்தந்த கிராமங்களுக்குப் போய்ப் பள்ளிக்கூட முதலானவை வைத்து திருச்சபை பரம்புதலுக்கு வேண்டிய காரியங்களைச் செய்வதற்கும் அநேக விக்கினங்கள் நேரிடும். கடைசியாய் ஒரே வார்த்தையில் சொல்லவேணுமானால், நாம் கீழ்மக்களிலும் இழி மக்களாய் எண்ணப்படுவோம். இதுவுமல்லாமல் நமது கவர்ண்மென்டாருக்கு சுத்த கருத்து இருந்தும், சட்ட நிரூபண சபையார் அநேகமாய்ப் பிறமதஸ்தராயிருப்பார்களாகையால், நமது உணர்ச்சிகளை சரிவரத்தெரியாமல் நமக்கும் நம்முடைய வேதக்கொள்கைக்கும் இடஞ்சலான சட்டங்களைச் செய்துவிடலாம்.

இவைகளுக்குத் தப்பித்துக்கொள்ள வேணுமானால் ஒரேயொரு வழியுண்டு; அதென்னவெனில் உயர்தரக் கல்வியாம். கல்வியினால் செல்வமுண்டாகும், செல்வத்தினால் நாகரீகமும், சுகானுபவ முதலிய மேன்பாடுகளுமுண்டாகும். அப்போதைக்கு நாமும் இதர மதஸ்தர்களோடு சமமாய் சகவாசஞ் செய்து ராஜாங்கத்தில் ஜன சமுகத்துக்குள்ள சுதந்தரங்களை அவர்களைப்போல நாமும் கண்காணித்துக் கொள்ளலாம். ஆகவே உயர்தரக் கல்வி நமக்கு அவசியம்! அவசியம்!!

நம்முடைய குருப்பிரசாதிகளால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் அநேகமிருந்தும் கத்தோலிக்கு மாணாக்கர்கள் உயர்தரக் கல்வியில் விர்த்தியடையாமலிருப்பது ஆச்சரியமே. தென்னிந்தியா முழுமையும் சிதறிப் பரவியிருக்கும் கத்தோலிக்கர்கள் தொகையோ பத்து லட்சத்துக்கு அதிகம். இந்தப் பத்து லட்சம் கிறீஸ்துவர்களில் ஐஸ்கூலில் படிக்கும் பிள்ளைகள் சுமார் 2,000 மாத்திரமிருப்பது மிகவுங் குறைவு. நம்மவர்க்குள் நாளது வரை பி. ஏ. பட்டம் பெற்றவர்கள் சுமார் 120 பேர் இருக்கலாம். இத்தொகையை, இந்துக்களில் அப்பட்டத்தினரின் பெருந்தொகையோடு ஒத்திட்டுப் பார்த்தால் சமுத்திரத்துக்கு முன் ஒரு துளி ஜலத்துக்குச் சமமாகும். நம்மவர்களில் சிலர் தவிர மற்றவர்களெல்லோரும் சொற்ப சம்பளம் வாங்கிக்கொண்டு சர்க்கார் உத்தியோகத்திலாவது, ரெயில்வே கம்பெனியிலாவது, பள்ளிக்கூடங்களிலாவது அலுவல் பார்த்துக்கொண்டு வருகிறார்கள். ஒருவரையொருவர் மேற்கொள்ளும் வைராக்கிய மிகுந்த இக்காலத்தில் நமது குமாரர்கள் மெற்றிரிக்குலேஷன், யப். ஏ., பி. ஏ., பரீட்சைமட்டு மாத்திரம் படிப்பது போதாது. கவர்ண்மெண்டு உயர்தர உத்தியோகங்களில் அதிக சம்பளமும் கௌரவமும் பொருந்தியவைகளைப் பெறவும் அதிக சிலாக்கியமுள்ள இஞ்சினியர், டாக்டர், லாயர் முதலிய உத்தியோகங்களை வகிக்கவும் லாயக்குடையவர்கள் நமக்குள் அநேகர் இருக்க வேண்டும். ஆகவே, நமக்குள் இவ்வித உயர்தரக் கல்வியில் தேர்ச்சியடைந்தவர்களின் தொகையை அதிகப்படுத்த முயன்றால்தான் நாம்

செல்வமும் சிறப்பும் அடையலாம். ஆனால் இவ்வித கல்வி கற்பிப்பதின் செலவு அதிகமாகிறது. மிகவும் புத்தி தீக்ஷண்முள்ள பிள்ளைகள் கூட மேற்படி பரீட்சைகளுக்குப் பொருளுதவி இல்லாததினால் படிக்கக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். நம்முடைய குருப்பிரசாதிகள் தங்களுடைய பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் பிள்ளைகளுடைய ஏழைமைக்குத்தக்க பிரகாரம் இலவசமாயும் சொற்ப சம்பளத்திற்கும் கல்வி கற்பிக்கிறார்கள். அப்படிக்கிருந்தும், குறித்த சொற்பத் தொகையைக் கொடுத்துத் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்க சக்தியில்லாதவர்களெத்தனையோ பேர். அப்பேர்க்கொத்தவர்களுக்காகப் பொருளுதவி செய்து உயர்தரப் பரீட்சைகளை அவர்கள் கொடுக்கும்படி ஏற்பாடு செய்வது நம்பேரில் சுமந்த கடமை. நம்மவர்களில் நாகரீகத்திலும் படிப்பிலும் தனத்திலும் பொது நலப் பிரியத்திலும் பேர்போனவர்களிருக்கிறார்கள். இவர்களொன்று கூடி ஒரே மனமுள்ளவர்களாய்க் கொஞ்சம் கவனித்தார்களானால் காரியம் ஈடேறிவிடும். இவ்விதமாய் "ஒற்றுமை வலிமைதரும்" என்கிற பழமொழியை நம்மவரும் உறுதிப்படுத்தலாம்.

உயர்தரக் கல்வி என்ன காரணத்தினால் நம்மவர்க்குள் குறைந்து போயிருக்கிறதென்றும், அதற்கு என்ன பரிகாரம் செய்யலாமென்றும், இன்னும் உயர்தரக் கல்வி விஷயமாய் மற்றுமுள்ள காரியங்களை அடுத்த "தென் இந்தியா கத்தோலிக்குச் சங்கம்" கூடும்போது ஆராய்ந்துயோசிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி சங்கம் கூடும்போது கனதனவான்கள் எல்லோரும் தவறாமல் விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். சங்கம் கூடும் தேதி இடம் முதலியவைகள் பின்னால் தெரிவிக்கப்படும்.

(சென்னை கத்தோலிக்கு இந்தியா சங்கக் கௌரவ காரியதரிசியின் சுற்றுப்பத்திரம்.)

## முன்னுரை.

"தன்னுடைய அரசிறை முதலான வருமானத்தின் மேல் அதிகாரமுடைய தன் குடிகளால் தம்மிஷ்டம் போல் தெரிந்தெடுக்கப்பட்ட தன் சொந்த மனிதரால் இந்தியா ஆளப்படவேண்டும்."

இவ்வசனம் கொஞ்சநாளைக்கு முன் பம்பாயில் பேர்போன ஓர் இராஜ தந்திர நிபுணர் "சண்டைக்குப்பின் இந்தியா" என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசியபோது சொல்லியதாகும்.

## கத்தோலிக்கரின் சுதந்தரங்களுக்கு ஆபத்து.

இன்னங் கொஞ்சகாலத்தில் இந்தியருக்கு சுவராஜ்யம் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறும் என்னும் ஏதுக்கள் இல்லையென்பது மெய்யாயிருக்கலாம். ஆயினும், கொஞ்சகாலமாய் ஆங்கிலேயர் இந்தியர் விஷயத்தில் மிக்க உதாரத்துவத்தைக் காட்டி, அநேக தேச சுதந்தரங்களையும், மத சுதந்தரங்களையுங் கொடுத்து வருகிறார்கள். ஆதலால், தற்கால யுத்தத்தில் இந்தியா செய்துள்ள பணவுதவி மனித உதவிகளைக் கவனித்து, இச்சமயத்தில் இந்தியர் காட்டும் இராஜ விசுவாசத்துக்கும் தரும குணத்துக்குங் கைம்மாறாக, இந்தியர்கள் தங்கள் நிலைமையை இன்னம் உயர்த்த வேணுமென்று நியாயமாய்க் கேட்பதும், அப்படியே அவர்கள் தற்போதிய ஆளுகை நிலைமையை மேன்மேலும் சீர்படுத்தவும், இராஜாங்கத்திலும், டிஸ்டிரிக்ட்போர்ட், முனிசிப்பாலிட்டி முதலியவற்றிலும், படிப்பு, சுகாதாரம் முதலிய விஷயங்களில் பணஞ் செலவிடுவதிலும் தமக்கு அதிகாரம் விர்த்தியாகவேண்டிய ஒழுங்குகளை ஆங்கிலேயர் செய்து அவர்களைத் திருப்தி செய்ய முன் வருவார்கள் என்பதும் நாம் கேள்விப்படும்போது ஆச்சர்யப்பட இடமேயில்லை. இத்தகைய ஏற்பாடுகள் நடந்தேறி வரும்போது, அவற்றில் படித்த இந்தியர்கள் முக்கியமானவர்களாய் விளங்குவர் என்பது சொல்லாமலே போதரும். இத்தகைய புதிய காலாரம்பத்திற்கு இதர ஜாதியார் படிப்பினால் தயாராயிருக்கின்றனர்; நாள் வரும்போது அவர்கள் தமக்குரிய வேலையைச் சுமுத்திரையாயும் சுறுசுறுப்பாயும் தொடங்குவர் என்பது திண்ணம். கிராமங்களிலும் பங்குகளிலும் நமது கத்தோலிக்கர் தற்போதிருக்கும் நிலைமையைச் சரியாயுணர்ந்தவர் எவரும், அன்னாருடைய ஜாதி நன்மைகளையும், மத நன்மைகளையும் இந்தியாவில் வரப்போகும் சுவராஜ்யத்துக் கடுத்த எந்தவித அரசாட்சியும் சரியான விதமாய் கவனித்தாதரிக்குமென்று எதிர்பாரார்கள். சில நகரங்களிலும் கிராமங்களிலும் தவிர மற்ற விடங்களிலெல்லாம் கத்தோலிக்கர் தம் குறைகளை எடுத்துக்காட்டி நிவர்த்தி செய்துகொள்ளு மார்க்கமே கிடையாது. இதன்பொருள் என்னவென்று



சற்றே யோசியுங்கள். இராஜாங்கம் சகல வகுப்பினருடையவும் சுதந்தரங்களைப் பாதுகாக்க வேண்டிய ஒழுங்குகள் எவ்வளவுதான் செய்தபோதிலும், படியாத சொற்ப ஜனங்களையுடைய வகுப்பாரின் நன்மைகளைச் சரிவரக் கவனிக்கக்கூடும் என்று சொல்ல எவராலு முடியாது; ஏனெனில் அவற்றைப் பார்ப்பதற்கு ஒருவருமில்லாததுடன், அதிகாரிகளிடம் எவ்வளவுதான் நல்லெண்ணம் இருந்தபோதிலும், அதிகாரஞ் செலுத்துவதில் படிப்பு ஜனப் பெருக்கம் இவற்றின் செல்வாக்கு அதிகரிக்கும் என்பதில் தடையென்ன? ஆதலால், காலமுள்ளபோதே முன்னதாக எச்சரிக்கப்பட்டு, நமது தற்சமய உபேட்சை சோம்பல் என்னுந் தூக்கத்தினின்றும் விழிப்போமாக; மெய்யான கிறிஸ்துவ உதாரகுணத்தைக் காட்டி, நம்மவர் படிப்பில் அபிவிர்த்தியடைவதற்காக நாம் எல்லோரும் ஏகோபித்து நம்மாலான உதவியைத் தரும சிந்தையுடன் செய்வோமாக!

## கத்தோலிக்கரின் வேத நன்மைகளுக்கு ஆபத்து.

இவ்விஷயத்தில் நாம் முன்னைவிட அதிக கவனத்தை ஏன் செலுத்தவேண்டுமென்பதற்கு வேறொரு காரணமுண்டு. அதாவது: நமது வேத நன்மைகளே ஆபத்திலிருக்கின்றன. காலஞ் சென்ற நமது பரிசுத்த பிதாவாகிய பதின்மூன்றாஞ் சிங்கராயர் முன்னதாகவே யோசித்தது நிறைவேறிவிட்டதென இந்த யுத்தத்தினால் உள்ளங்கை நெல்லிக்கனி போலறிகிறோமன்றோ! ஏற்கெனவே பகைவர்ஜாதியைச் சேர்ந்த குருப் பிரசாதிகளில் சிலரை ஓரிடத்தில் அடைத்துவிட்டார்கள்; வேறு சிலரைப் பிடித்துத் தம்முடைய சுயதேசத்துக் கனுப்பிவிட்டார்கள். வெளிதேசங்களிலிருந்த பிராஞ்சு குருக்களில் பெருந்தொகையை இச்சண்டையினிமித்தம் தந்தேசத்துக்குக் கூட்டிக்கொண்டார்கள். சண்டைமுடிந்த பின்னரும் மாண்டவர்போக மீண்டவர் நம் நாட்டுக்குத் திரும்ப விடமில்லை. ஏனெனில், அந்நாட்டிலேயே சண்டையில் மடிந்த குருக்களின் வேலையைப் பார்க்க இவர்களை அங்கேயே நிறுத்திக்கொள்வார்கள் என்று வெகுவாய் நிச்சயிக்கலாம். நமதாத்தும மேய்ப்பர்களின் தொகை குறைந்துபோவது கத்தோலிக்கு இந்தியா முகமாய்ப் பார்க்கும் ஒரு பெருந்தீமையல்லவா? இந்த அந்நியதேச போதகர்களுக்குப் பதிலாய் நம்மவர்க்குள்ளிருந்து வேண்டிய குருக்களைக் கொடுப்பது நம்மைச் சார்ந்த முக்கிய கடமையாம். இதை நாம் முன்னமே செய்திருக்கவேண்டும்; ஆயினும், இப்போதுதான் அதனவசியத்தை நன்குணருகின்றோம். ஐரோப்பியரிடத்தை இந்திய குருமார் வகித்து, சரியான விதமாய்த் தங்கடமைகளையநுசரிப்பதற்கு அவர்கள் நன்றாய்ப் படித்திருக்கவேண்டிய தவசியம். ஆதலால், நாம் கத்தோலிக்கு இந்தியருடைய ஆத்தும நன்மைகளைக் கவனித்தாலும் சரிதான், அல்லது சரீர நன்மைகளை யோசித்தாலுஞ் சரிதான்; எல்லாவற்றிற்கும் நம்மவரின் படிப்பினிலைமையை உயர்த்துவது அத்தியா அவசியமாம்.

## ஏற்பாடுகள்.

இத்தகைய அவசியமான முடிவை யடைவதற்கு ஒன்றும் பாதியுமாய் செய்யும் ஏற்பாடுகள் கூடாது. நம்முடைய சத்தி யனைத்தையும் ஒன்று சேர்த்து, நம்மாலான முயற்சி யாவுஞ் செய்து, நம்மவர்க்குள் ஒவ்வொரு மனிதனையும் பெண்ணையும் பிள்ளையையும் இதற்காக உழைக்கும்படி யூக்கவேண்டும். ஆதலால், தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் அடுத்த வருஷாந்தர கூட்டத்தில் பின் வரும் தீர்மானங்களைக் கொண்டுவந்து, அங்கேயே இக்காரியத்தை யுடனே நடத்தவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி ஒரு காரிய நிர்வாக சபையை ஸ்தாபிக்க யோசனை செய்திருக்கிறது. பணஞ் சேகரிக்கும் வழி அநேகமாய் மேற்கூறிய காரிய நிர்வாக சபையினிஷ்டத்துக்கே விடப்படும். ஆனால் பின்வரும் ஏற்பாடுகள் யோசிக்கப்பட்டிருக்கின்றன:—

## உயர்தரப்படிப்பு நிதி.

1. பொதுவாக தனவந்தராகிய கத்தோலிக்கரிடமிருந்து நன்கொடையாகப் பணஞ் சேகாஞ்செய்தல், அல்லது தமிழர், தெலுங்கர், மலையாளிகள் முதலிய பல வகுப்பினரிடமிருந்தும் தனித்தனியாகப் பொருள் சேகரித்து, அப்பொருளை அந்தந்த வகுப்பாரின் நன்மைக்காகவே விசேஷமாய் உபயோகித்தல்.

2. தென்னிந்தியா முழுவதிலும் உள்ள இந்திய கத்தோலிக்கருக்குள் உயர்தரக் கல்வியை யபிவிர்த்தி செய்வதற்கான வேறு வழிகளைத் தேடும்பொருட்டு பங்குகள் வைத்துக் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தல்.

இப்படிச்செய்வதின் கருத்தென்னவெனில், முதன் முதல் பலகத்தோலிக்கு ஐஸ்கூல்களிலும் உயர்தரக் கலாசாலைகளிலும், மாணுக்கர்களுக்குரிய உபகார சம்பளங்க ளளித்தலே. இதைக் கூட்டுறவு சங்கங்களாற் கிடைக்கும் லாபத்திலிருந்து செய்தால், இச்சங்கங்களின் பங்காளிகள் தம்முடைய குடும்ப வித்தியாப்பியாசத்தை முன்னிட்டு தத்தம் பங்குகளுக்குத் தகுந்தாப்போல் சங்கங்களில் கடன்வாங்கும் அநுகூலமுமிருக்கிறது; மேலும் சங்க நிதியை மற்ற கத்தோலிக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கே கடனுகக் கொடுக்கப்படும்; அச்சங்கங்களும் இதற்கீடாய் மேற்படி கல்வி யபிவிர்த்திக்காகத் துணைசெய்யும்படி முன் வருமன்றே.

இந்த ஏற்பாட்டை பகிரங்கமாய்த் துண்டு பத்திரிகைகள் மூலியமாயும், மற்ற வழிகளாலும் எல்லோருக்கும் வெளிப்படுத்துவதற்கு வேண்டிய முன் செலவிற்காக திருச்சிறுப்பள்ளி அர்ச். சூசையப்பர் கைத்தொழிற்சாலை, கனம். ஜெகநாதப்பிள்ளை விலாசத்திற்கு இதை வாசிக்கும் நண்பர்கள் தம்மாலியன்ற அளவு பணம் அநுப்பும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இது விஷயமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியதனைத்தையும் அவருக்கே எழுதிக்கொள்ளவும்.

(Signed) எல். டி. சுவாமிக்கண்ணு.

(சங்கத்தின் முன் கொண்டுவரப்படும் தீர்மானங்கள்.)

1. உயர்தரப் படிப்பு விஷயத்தில் தென்னிந்திய கத்தோலிக்கர், விசேஷமாய் தமிழர், தெலுங்கர் இவர்களுடைய நிலைமை மிக்க அதிருப்திகரமாயிருக்கிறதென்றும், அப்படிப்பு குறைந்து கொண்டே வருகிறதாயிருந்தாலும் சரி, அல்லது ஏற்றதாழ்வின்றி ஒரே நிலையிலிருந்தாலுஞ் சரி, அல்லது மிக்க மெதுவாய் முன்னேறுகின்றதாயினுஞ் சரி, எதுவாயிருப்பினும் அததன் காரணங்களையும், நிவர்த்திசெய்யு மார்க்கங்களையும் உடனே கவனிக்க வேண்டிய தவசியமென அந்நிலைமையே வற்புறுத்துகிறதென்றும், கத்தோலிக் இந்திய சங்கத்தின் அங்கத்தினர் நன்குறுக உணர்கின்றனர் என்பது.

2. இந்தக் கேவலநிலைமைக்கான காரணங்களில் முக்கியமானவை பின்வருவனவென்று இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறதென்பது:—

(a) உயர்தரப் படிப்பினுல் வரும் நன்மைகளையும், அஃதில்லாமையால் உண்டாகும் தின்மைகளையும் கண்டறிவதற்கு மார்க்கமில்லாததால், ஜனங்களிடந் தற்போதிருக்கும் அறியாமை.

(b) ஜனங்களின் தாரதம்மியமான வறுமை.

3. இந்திய கத்தோலிக்கரின் படிப்பின் கேவல நிலைமையை நிவர்த்திக்கும் பரிகாரங்களில் மிக்கப்பொருத்த முடையன பின்வருவனவென்று இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறதென்பது.

(a) கிராமங்களிலும், பங்குகளிலும், தாலுக்காகளிலும் போய்ப் பிரசங்கம் செய்தும், இவ்விஷயத்தைப்பற்றித் துண்டு பத்திரிகைகள் அச்சடித்து நாடு முழுவதும் வழங்கியும் ஜனங்களுடைய அறியாமையைப் போக்க வேண்டிய முயற்சி செய்தல்.

(b) அறிவு, படிப்பு இவற்றின் உயர்வை ஜனங்களுக்குப் புகட்டுவதில், இதுவரையில் செய்ததைவிட அதிகமா யுழைப்பதினுல் இக்கருத்துக்கள் நிறைவேறும் வண்ணம் நமக்குதவி புரியும்படியாய் சுவாமிமார்களை, முக்கியமாய் பங்குசுவாமிமார்களைத் தூண்டும்படியாய் அதி சங்கைக்குரிய மேற்றிராணிமார்களைக் கேட்டுக்கொள்ளுதல்.

(c) படிக்கக்கூடிய பிள்ளைகளை ஹைஸ்கூல்களிலும், காலேஜ்களிலும், சட்டம், இஞ்சினிர் வேலை முதலியன கற்பிக்கும் பாடசாலைகளிலும் படிக்க வைப்பதற்காய்ப் போதுமான உபகார சம்பளங்கள் கொடுக்கும்பொருட்டு ஒரு நிதி உண்டாக்குதல்.

4. மேற்கூறிய தீர்மானங்களை உடனே அமுலுக்குக் கொண்டுவரும் பொருட்டு கனம் .............. .............. அவர்களை அக்கிராசனுதிபதியாகவும், கனம் .............................. அவர்களைக் காரியதரிசியாகவும் வைத்து பின்வரும் அங்கத்தினர் சேர்ந்த ஒரு காரிய நிர்வாக சபையை நேமிக்கவேண்டுமெனத் தீர்மானித்தல்.

5. இத்தீர்மானங்களின் பிரதியை மிகவும் வந்திக்கத்தக்க மேற்றிராணிமார் ஒவ்வொருவருக்கும் அனுப்பி, மேற்கூறிய காரிய நிர்வாக சபையாரோடு சேர்ந்து இத்தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர உதவி செய்யும்படியாய் தங்கள் அதிகாரத்துக்குட்பட்ட பங்கு சுவாமிமார்களுக்கும் பள்ளிக்கூடத் தலைவர்களுக்கும்



சொல்லும்படி எழுதவேணுமென்று அக்கிராசனுதிபதியாகிய ஆண்டவரவர்களைக் கேட்டுக்கொள்ளுதல்.

6. சங்கம் தன்னுடைய நிதியினின்றும் பிரயாண முதலிய செலவுகளுக்காக ரூ 1000 முன்னதாகக் கொடுத்துப் பின்னுல் சேகரிக்கும் பணத்தினின்றும் அத்தொகையை எடுத்துக் கொள்ளுதல்.

7. நிதி ஏற்படுத்தும் விதத்தைத் தீர்மானிப்பதில் காரிய நிர்வாக சபைக்கு எல்லாச் சுதந்தரத்தையும் கொடுத்தல்.

(அங்கீகரித்தோம்.)

(Signed) ✠ ஜெ. ஆலன்.

சென்னை 17 Sep.1915. } சென்னை அதிமேற்றிராணியார், தென்னிந்தியா கத்தோலிக் இந்திய சங்கத்தின் அக்கிராசனுதிபதி.

(சங்கத்தலைவரின் அங்கீகாரப் பத்திரம்.)

என் பிரியமுள்ள கனம் சுவாமிகண்ணுப் பிள்ளையவர்களுக்கு,

உயர்தரப் படிப்பைப் பற்றி கத்தோலிக் இந்திய சங்கத்தின் அடுத்தக் கூட்டத்தின் முன் வைக்க வேண்டுமென்று நீர் கோரியுள்ள குறிப்புத் தீர்மானங்களின் பிரதியை நான் சந்தோஷத்துடன் படித்தேன். தங்கள் நிலைமையை உயர்த்துவதற்காய் மற்ற ஜாதியார் செய்துவரு முயற்சிகளை நாமும் செய்ய வேண்டுமென்றும், விசேஷமாய் இக்காலத்தில் கல்வியே எல்லாருக்கு மின்றியமையாததென்றும் கத்தோலிக்கர் கண் திறந்து பார்க்கவும், அவற்றின் அவசியத்தைக் கண்டுணரவும் இப்போதாவது சந்தர்ப்பம் வாய்த்ததே என்பதில் எனக்குச் சந்தோஷம். மேலும் நீர் செய்யப்போகும் ஏற்பாட்டில், மிக்க கேவல நிலைமையிலுள்ள தெலுங்கரையுஞ் சேர்த்திருப்பதைக் காண என் சந்தோஷம் அதிகரிக்கிறது. என் மனதில் எப்போதுங் குடிகொண்டிருப்பதும், கத்தோலிக் இந்தியர்களுள் உயர்தரப் படிப்பை ஊக்கி அபிவிர்த்தி செய்யுஞ் சாதனங்களில் முதன்மையானதென நான் கருதுவதுமாகிய சென்னைக் கத்தோலிக்கு மாணவர் விடுதி (Home) யென்னும் விஷயத்தில், மேற் கூறிய ஏற்பாட்டின்படி நேமிக்கப்போகும் கார்ய நிர்வாக சபையார் பராமுகமாயிரார் என நம்புகிறேன்.



பொது நன்மைக்காக, கத்தோலிக் ஜன சமூகத்தின் முன், நமது சங்கம் முறைமைப்படி கொண்டுவரப்போகும் முதல் ஏற்பாடு இதுவே; தமது கத்தோலிக் மந்தைகளின் நன்மைகளில் எப்போதுங் கண்ணுங் கருத்துமாயுள்ள தென்னிந்தியாவின் மிக வந்திக்கத்தக்க மேற்றிராணி யாண்டவர்களனைவரும், உம்முடைய முயற்சியை அங்கீகரித்து, உமது மேலான எண்ணம் நிறைவேறுதற்கான உதவியெல்லாம் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

உம்முடைய முயற்சிகளையும், உம்மோடு சேர்ந்துழைப்பவருடைய முயற்சிகளையும் நமாண்டவர், தமது திவ்யதாயாரின் வேண்டுதல் மூலமாய், ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவில் உமதுண்மையுள்ள ஊழியன்

சென்னை, 17 Sept. 1915. } (Signed.) ✠ ஜெ. ஆலன், சென்னை அதிமேற்றிராணியார்.

---

## St. LUKE, THE EVANGELIST.
## சுவிசேஷகரான அர்ச். லூக்காஸ்.

அர்ச். லூக்காஸ் எழுதிய சுவிசேஷத்தைக் கிறீஸ்துவர்கள் நன்கு மதித்து, வாசித்துப பயன் அடையும் விஷயமாய் அவருடைய சீவிய வரலாற்றையும், அவர் அத்திவ்ய புஸ்தகத்தை எழுதும்போது கொண்டிருந்த கருத்து நோக்கங்களையும் கொஞ்சமெனினும் அறிவது பிரயோசனமாயிருக்கும். ஆனது கொண்டு இவ்விலாசம் எழுதப்பட்டது. மேலும், அவர் எழுதிய சுவிசேஷத்தின் வியாக்கியானத்துக்கு இதை ஓர் முகவுரையாகவும் பாவிக்கலாம்.

"லூக்காஸ்" என்னும் நாமதேயம் "லூக்கானுஸ்" என்னும் நாமத்தைச் சுருக்கிக்காட்டும் சொல்.

அர்ச். லூக்காஸ் என்பவர் அர்ச். சின்னப்பருடைய பிரிய சீஷன்; அவருடைய அப்போஸ்தலப் பிரயாணங்களில்

அவரோடு சுற்றித்திரிந்த பிரியாத் தோழன். அர்ச். சின்னப்பர் தாம் செய்த 2-ம் பிரயாணத்தில் துரோஹஸ் (Troas) என்னும் நகரில் இருக்கும்போது, லூக்காஸ் அவருடன் சேர்ந்து மசதோனியா (Macedonia) வுக்குச் சென்றார். பிலிப்பெஸ் (Philippes) என்னும் நகரிலும் அவரோடு தங்கினார். அர்ச். சின்னப்பர் செய்த 3-ம் பிரயாணத்திலும், மசதோனியாவிலிருந்து ஜெருசலேம் பட்டணத்துக்கு அவர்கூட துணையாக வந்தார். (அப்போஸ்தலர் நடபடி 20. 6-21; 18.) அர்ச். சின்னப்பர் செசாரியா (Caesarea) பட்டணத்தில் சிறையில் அடைபட்டிருக்கும்போதும் அவரோடு கூட இருந்தார். ரோமை நகருக்கு அர்ச். சின்னப்பர் பிரயாணப்பட்டுப் போனபோது, இவரும் அவருக்குத் துணையாகச் சென்றார். சின்னப்பர் ரோமையில் விலங்கிலே கிடக்கிறபோது எழுதிய நிருபங்களில், லூக்காஸைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறார்:—" மிகவும் பிரியமுள்ள வைத்தியனாகிய லூக்காஸும் உங்களுக்கு மங்களம் சொல்லுகிறார்". என் உதவியாராகிய லூக்காஸும் மங்களம் சொல்லுகிறார் (பிலமோன் 1-24.). ரோமையில் சின்னப்பர் இரண்டாம் விசை சிறையிலிருந்தபோது லூக்காஸ் மாத்திரம் என்னோடு இருக்கிறார் என்று எழுதினார். (2-திமோத்தேயு, 4,11.)

லூக்காஸ் வைத்தியத் தொழிலில் சிறப்புப்பெற்றவர் என்று அர்ச். சின்னப்பர் கொலோசியருக்கு எழுதிய நிருபத்தில் (4-14ம்) வசனத்தால் தெரியவருகிறது. மேலும் தாம் எழுதிய சுவிசேஷத்தில் பிணியாளிகளைப் பற்றிப்பேசும்போது மத்தேயுஸ், மாற்குவைப்போல் பொதுப்படப் பேசாமல் வியாதிகளின் பேர்களை நுணுக்கமாய்க் குறிப்பிட்டுச் சொல்லுகிறார். லூக்காஸ் யூதன் அல்ல; சேசுநாதருடைய சீஷர்களிலும் ஒருவர் அல்ல; ஆனால் சீரியாநாட்டின் ராஜதானிப்பட்டணமாகிய அந்தியோக்கியாவில் பிறந்து வளர்ந்தவர். அர்ச். சின்னப்பர் அந்நகருக்கு வந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது, இவர் மனந்திரும்பினதாகத் திருச்சபையின் சரித்திராசிரியர்கள் சொல்லுகிறார்கள். (Eusebius எயுசெபியஸ்.) லூக்காஸ் மற்ற மூன்று சுவிசேஷர்களைவிட கிரேக் பாஷையை வெகு சாதுரியமாயும் திருத்தமாயும் எழுதுவார். (எரோணிமுஸ் Hieronimus.) கிரேக்கர் மத்தியிலிருந்து இலக்கணநூல், வாக்கலங்கார சாஸ்திரம் (Rhetoric), யாப்பிலக்கணம், சீரியாக், எபிரேய பாஷைகளையும், இன்னும் மற்ற சாஸ்திர நூற்களையும் நன்றாய்க்கற்று சம்மானமும் பிரதிஷ்டையும் பெற்றவர்.

இவர் சித்திர வேலையிலும் பெயர் போனவரென்றும், எயதோசியா (Eudocia) என்னும் சக்கரவர்த்தினியின் படத்தை எழுதினதாகவும், தேவமாதாவின் சாயலையும் ஒரு படத்தில் சித்திரித்து வைத்ததாகவும் சரித்திரநூலாசிரியர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இவர் அக்காயாவிலும்(Achaia), தால்மாசியா (Dalmatia), கல்லியா (Gallia), இத்தாலியா (Italia), மசதோனியா (Macedonia), பிஸான்ஸியும் (Byzantium), தராஸியா (Thracia), என்னும் இராச்சியங்களில், சுவிசேஷத்தைப் போதித்தார். இவர் எப்போதும் விரத்தராய்ச் சீவித்து, அரிய பெரிய புண்ணியங்களைச் செய்து தனக்கு 80 பிராயம் நடக்கும்போது சத்திய வேதத்தின் உண்மைக்குச் சாட்சியாகத் தம் உயிரைக்கொடுத்து வேத சாட்சியாக மரித்தார்.

அர்ச். சின்னப்பரால் ஏற்படுத்தப்பட்ட சபைகளை வேத போதகத்தில் ஸ்திகப்படுத்துகிறதற்காக, அவரால் தூண்டப்பட்டு, அவருடைய போதனைகளையும் கருத்துகளையும் விளக்கி, சுவிசேஷத்தை கிரேக் பாஷையில் தெள்ளிய சிறந்த நடையில் 63-ம் வருஷத்தில் எழுதினார். இதற்குப்பின் அப்போஸ்தலர் நடபடி என்னும் வேறொரு சிறு பிரபந்தத்தையும் 64-ம் வருஷத்தில் கிரேக் பாஷையில் கிறிஸ்து சபைகளுக்கு எழுதித்தந்தார். இவர் விசேஷமாய் அர்ச். சின்னப்பர் தமக்கு வெளிப்படுத்தின வர்த்தமானங்களைச் சுவிசேஷத்தில் எழுதினார். இன்னும் இவர் ஜெருசலேமில் அர்ச். யாகப்பரையும், அந்தியோக்கியாவில், அர்ச். இராயப்பரையும், செசாரியாவில் அர்ச். பிலிப்புவையும் இன்னும் ஆண்டவருடைய சீஷர்களில் அநேகரையும் முகமுகமாய்க் கண்டு, அவர்களோடு பேசிப்புழங்கி யிருந்தமையால் நமதாண்ட



வராகிய சேசுநாதருடைய சீவிய வரலாற்றை நுணுநுணுக்கமாக அவர்கள் மூலமாய் அறிந்து, தமது திவ்ய சுவிசேஷ புஸ்தகத்தைத் தேவ ஏவுதலால் எழுதி முடித்தார். அதில் குறிக்கப்பட்டிருக்கும் சேசுநாதரின் பாலியத்தைப்பற்றிய அரிய விசேஷங்களை யெல்லாம் இவர் தேவதாயாரிடத்திலிருந்தே தெரிந்தெழுதலானார் என்று சொல்வதற்கிடமுண்டு. (லூக்காஸ் 2-19, 51.)

தாம் எழுதிய சுவிசேஷத்தில் லூக்காஸுக்கு இரண்டு முக்கியமான நோக்கங்கள் உண்டு 1) முதல் நோக்கத்தைப்பற்றி 1-அதிகாரம் 4-வசனத்தில் அவரே தெளிவாய்ச் சொல்லுகிறார். "உத்தம தேயோபிலே, உனக்கு போதிக்கப்பட்டவைகளின் உண்மையை நீ அறிந்துகொள்ளவேண்டுமென்பதைப் பற்றித்தான்" அக்காலத்து ஜனங்கள் அப்போஸ்தலர்கள் வாய்மொழியாய் உரைத்த பிரசங்கங்களைக் கேட்டுத்தானே கிறீஸ்து வேதப்போதனைகளைக் கற்றுக்கொண்டார்கள், விசுவசித்தார்கள். இந்தப் புதுக்கிறிஸ்துவர்கள் தாங்கள் கைக்கொண்ட விசுவாசத்தில் என்றும் தத்தளியாமல் உறுதியாய் இருக்கத்தக்கதாக அவர்களுக்கு வாய்ப்பட உணர்த்திய போதனைகள், ஆதாரமற்ற கட்டுப் புராணங்களல்லவென்றும், அவைகள் வேத சத்தியங்களென்றும், பலமான ஆதாரங்களையும் அத்தாக்ஷிகளையும் கொண்டிருக்கின்றனவென்றும், அணு அளவும் அவைகளில் யாதொரு தப்பறையு மில்லையென்றும் காட்டி சரித்திரமுறையாய்த் தம் சுவிசேஷத்தை எழுதினார். 2) முதல் அஞ்ஞானிகளா யிருந்து விசுவாசிகளான கிறீஸ்துவர்களுக்காக விசேஷமாய், லூக்காஸ் சுவிசேஷத்தை எழுதினாரென்று அர்ச். ஹெரோனிமுஸ் உரைக்கிறார். ஏனெனில், தமது புஸ்தகத்தில் அஞ்ஞானிகளுக்குப் பொருந்தாத காரியங்களை விமரிசையாய் விலக்குகிறார். அஞ்ஞானிகளுடைய நாடுகளில் போக வேண்டாம் என்று கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளையைப் பற்றி மத்தேயுஸ் எழுதினார். லூக்காஸோ அதைப்பற்றி யெழுதவில்லை. கனானேய நாட்டின் அஞ்ஞான ஸ்திரீயை சேசுநாதர் கண்டித்துக் கடினமாய் நடத்துகிறதாகத் தோன்றும் சங்கதியை லூக்காஸ் எழுதாமல் விட்டுவிட்டார். "என்னத்தை உண்போம் அல்லது என்னத்தைக் குடிப்போம் என்று கவலைப்படாதிருங்கள். ஏனெனில் இவைகளெல்லாவற்றையும் அஞ்ஞானிகளே தேடுகிறார்களென்று மத்தேயுஸ் எழுதியிருக்க, லூக்காஸ் அஞ்ஞானிகள் என்ற பதத்திற்குப் பதில் "பாவிகள்" என்ற பதத்தை பிரயோகித்திருக்கிறார்.

கர்த்தர் பிறந்தநாளில் நல்ல மனசுள்ள சகல மனிதர்களுக்கும் சம்மனசுகள் சமாதானத்தை அறிக்கை யிட்டதையும், ஜெருசலேம் தேவாலயத்தில் அர்ச். சிமையோன் கிறீஸ்துநாதரைப்பற்றி புறஜாதியாருக்கு ஆறுதலாய் வசனித்த தீர்க்கதரிசன வாக்கியங்களையும் (அதாவது: "தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஏற்படுத்தின உம்முடைய இரட்சிப்பை என் கண்கள் கண்டுகொண்டன. அது புறஜாதிகளைப் பிரகாசிப்பிக்கிற ஒளியாக இருக்கிறது") என்று எழுதி சேசுநாதர் யூதர்களுக்கு மாத்திரம் அல்ல, சகல ஜாதி ஜனங்களுக்கும் இரட்சகராய் வந்தார் என்று லூக்காஸ் வெகு தெளிவாய்க் காண்பிக்கிறார்.

அர்ச். இரேனேயுஸும் (Irenaeus) அர்ச். கிறிசோஸ்துமுஸ் அருளப்பரும் எழுதிவைத்திருக்கிறபடி, லூக்காஸ் சேசுநாதருடைய வம்ச வரிசையை ஆதி மனிதன் ஆதாம் வரையில் எடுத்துக் காட்டுவதற்குக் காரணம், கிறீஸ்துநாதர் சகல மனிதர்களுக்கும் இரட்சகராய் இருக்கிறார் என்பதைப்பற்றியே.

சர்வேசுரன் யூதர்களுக்கல்ல, அந்நிய ஜாதியாராகிய சரேப்தாவின் ஓர் விதவைக்கும், சீரியா தேசத்தானாகிய குஷ்டரோகியாயிருந்த நாமானுக்கும் அளித்த நன்மை உபகாரங்களை ஞாபகப்படுத்தி, சேசுநாதர் ஜெப ஆலயத்தில் நசரேத்து ஊராருக்கு முதல் விசை பிரசங்கித்ததையும், ஸ்நாபக அருளப்பர் புற ஜாதியாராகிய போர்ச்சேகவர்களுக்கு இரட்சண்ணிய வழியைக் காண்பித்து உபதேசித்ததையும், அஞ்ஞானிகள் அதிகமாய் வசித்த ஜெராசேனியர் நாட்டில் புறஜாதியானாகிய பேய் பிடித்தவனொருவனைச் சேசுநாதர் குணப்படுத்தினதையும், சமாரியர் சேசுநாதரைத் தங்கள் ஊரில் ஏற்றுக்கொள்ளாததை சீஷர்கள் கண்டு, வானத்திலிருந்து அக்கினி இறங்கி

அவர்களைச் சுட்டெரிக்கும்படி வேண்டின போது, சேசுநாதர் மனுமகன் ஆத்துமங்களைச் சேதமாக்குவதற்கு அல்ல, அவைகளை இரட்சிக்கவே வந்தார் என்று சீஷர்களைக் கண்டித்து அடக்கினதையும், பிறசிநேகத்தின் உண்மையான உத்தம மாதிரியை வருணித்துக்காட்ட யூதனை அல்ல, ஒரு சமாரியனை ஆண்டவர் தெரிந்துகொண்டதையும், பத்துக் குஷ்டரோகிகளைச் சேசுநாதர் சொஸ்தமாக்கினபோது, சமாரியனாகிய அந்நியன் ஒருவனே திரும்பி வந்து ஆண்டவர்முன் சாஷ்டாங்கமாய் விழுந்துநன்றியறிந்ததோத்திரம்சொல்ல, ஆண்டவர், "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று அவனைப் புகழ்ந்துவாழ்த்தினதையும், யூதரல்லாத இதர ஜாதியாருக்கு இரமணீயமான இன்னும் மற்ற இனியவர்த்தமானங்களை லூக்காஸ் தமது சுவிசேஷத்தில் வருணித்து விவரித்துக் காட்டுகிருர். (தொடரும்)

*S. M. Kovalong.*

---

## GNANAMANI III PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 25-ம் அதிகாரம்.

அந்த மூன்று பேருடைய வாலை யறுத்து
சுண்ணும்பு இடாவிட்டால் நான்
டேவிட் அல்ல.

---

ஈசாக் உபதேசியார் மதுபானத்தால் உண்டாகும் தோஷா தோஷங்களையும் கேடுகளையும் நஷ்டங்களையும்பற்றி சவிஸ்தாரமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது, சலமோன் தலை குனிந்து கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தான். இனியாகிலும் அவன் மதுபானத்தை விஷபானமாகப் பாவித்து அதை முற்றுந்தொலைத்துவிட்டு சன்மார்க்கனாய் நடப்பானென்று ஈசாக் உபதேசியார் உறுதியாய் நம்பியிருந்தார்.

சலமோனுடைய துற்செய்கைகளைப்பற்றி கேள்விப்பட்ட பவுல் போதகரும் அவருடைய பாரியாள் ரூத்தம்மாளும் அவன் மட்டில் அருவருப்புகொண்டு, தங்கள் கோத்திரப்பேரின் கௌரவத்தைப் பங்கப்படுத்த பிறந்த சண்டாளன் என்பார்கள். அவனுடைய கெட்ட நடத்தையினிமித்தம் அவன் தங்கள் வீட்டுக்கு வந்தபோதிலும் அவனுக்கு முகங்கொடுத்துப் பேசமாட்டார்கள். அவன் தன்னுடைய மனைவியின் கழுத்தில் கைபோட்ட சங்கதியைக் கேள்விப்பட்டது முதல் அவர்கள் மாத்திரமல்ல ஊரார் அனைவோரும் அவனை யிகழ்ந்து நகைத்தார்கள். அவன் நல்ல வழிக்கு வருவானென்று ஈசாக் உபதேசியாருக்கு கொஞ்சம் நம்பிக்கை யிருந்தபோதிலும், பவுல் போதகரும் ரூத்தும் அவன் தன் பழய துர்க்குணங்களை விட்டுவிடுவானென்று நம்பவே இல்லை. பவுல் போதகரும் ரூத்தம்மாளும் ஈசாக் உபதேசியாருக்கும் அபிராமிக்குந் தங்களுடைய நிர்ப்பாக்கிய குமாரனால் உண்டான நிந்தை அவமானத்தையும் துக்க சங்கடத்தையும் பற்றி மனம் உருகி கஸ்திப்பட்டார்கள். ஊராரும், குணத்திலும் நடத்தையிலும் உத்தமியென்று பெயரெடுத்த அபிராமிக்கு உண்டான வருத்த சங்கடங்களைக் கண்டு துக்கப்பட்டார்கள்.

ஈசாக் உபதேசியாருடைய நெடும் பிரசங்கத்துக்குப்பின் சலமோனுடைய நடத்தை சற்று மாறுபட்டதாகக் காணப்பட்டது. அதுமுதற்கொண்டு, அவன் மதுபானம் விற்கப்படும் கடைப்பக்கம் போனதைக் கேள்விப்படவில்லை. அவனுடைய தோழர் முன்போல அவனிடம் வரப்போகவு மிருக்கவில்லை.

தன் தகப்பனார் தன் கணவனுக்குச் சொன்ன புத்தியால் நல்ல பலன் உண்டானதென்று அபிராமி நினைத்து ஆறுதல் அடைந்தாள். மேலும் அவள் அவனை முன்னிலும் அதிக பக்ஷ அன்புடன் நேசித்து விசாரித்து வந்தாள். கடந்துபோன விஷயங்களை நினைப்பூட்டமாட்டாள். தன் புருஷனுடைய பழய தவறுகளைப்பற்றி மற்றவர்களுடன் பேசாதது டன் புறத்தியார் அவனுடைய குறைகளைப்பற்றி பேசக்கேட்டால் தன் புருஷன் பட்சமாகவே பேசுவாள்.

ஒரு நாள் புருஷனும் பெண்சாதியும் அன்புடனே பேசிக்கொண்டிருக்கும்போது, "அபிராமி! இன்னம் இரண்டு மாதத்துக்குள்ளாக நமக்கு ஒரு குழந்தை பிறக்குமல்லவா? அதற்கு என்ன பேரிடலாம்" என்று சலமோன் வினவ,



சுவரில் தொங்கும் படத்தைக் காட்டி, "அதோ அந்தப் பரம கர்த்தரின் பெயரை இடலாம்" என்ருள் அபிராமி.

சல.-யாரும் சேசுக்கிறிஸ்து என்று அழைக்கப்பட்டதை நான் இதுவரையிலும் கேள்விப்பட்டதில்லையே.

அபி.—நமது திவ்விய கர்த்தர் சிலுவை சுமந்த பிரகாரம் சித்திரிக்கப்பட்டிருக்கிறதல்லவா இப்படம்? ஆண் குழந்தையாயிருந்தால் சிலுவை நாதன் என்றும், பெண் குழந்தையானால் சிலுவைமரி யென்றும் பேர் கொடுப்போம்.

சல.—நீ யெப்போதும் அந்தப் படத்தைப் பற்றி பேசுகிறதற்கும் அதை அடிக்கடி பார்ப்பதற்கும் காரணமென்ன?

அபி.—என்னமோ தெரியவில்லை; அந்தப் படத்தை நான் பார்க்கப்பார்க்க, அந்தப் பரம கர்த்தர்மட்டில் எனக்கு அதிக பற்றுதலும், அவருடைய பாடுகளின்மீது துக்கமும் உண்டாகிறது. கஸ்தி துன்ப நேரத்தில் அதைப் பார்க்கும்போது என் மனதில் ஆறுதலும் சமாதானமும் உண்டாகிறது.

சல.-பலமுறை யென்னால் உனக்கு வருத்தமுண்டானபோது அந்தப் படத்தை யேறெடுத்துப் பார்த்தாயே, ஞாபக மிருக்கிறதா?

அபி.—(புன்னகைப்புடன்) நன்ருய் ஞாபக மிருக்கிறது. எனக்குச் சொல்லிமுடியாத துக்கமும் துன்பமும் உண்டாகும்போதெல்லாம் நான் அந்தப் படத்தை கண்ணோக்கி, கர்த்தரு கூடிய முண் முடியையும் காயங்களையும் அவர் பட்ட நிந்தை அவமானத்தையும் வேதனையையும் பற்றி நினைக்கும் க்ஷணமே, அவையெல்லாம் காற்றுபோல மறைகின்றன. இதன் உண்மையை வேண்டுமானால் நீங்களும் பரீக்ஷித்துப் பார்க்கலாம்.

சல.—நான் அவ்வளவு பத்தியில் முற்றினவன் அல்ல. மேலும் சுருபங்களையும் படங்களையும் ஆராதிப்பது விக்கிரக ஆராதனையென்று சிறுவந்தவக்கி யெனக்கு கற்பிக்கப்பட்டிருந்தபடியால் எனக்கு அவைகள் மட்டில் விஸ்வாசமில்லை.

அபி.—படங்களையும் சுருபங்களையும் ஆர் ஆராதிக்கிருர்? அப்படி அவைகளை ஆராதிப்பது பாவமாகுமே.

சல.—நீ யிப்போது சொல்லவில்லையோ?

அபி.—இந்தப் படத்தை கண்ணோக்கினேன் என்றேனே ஒழிய, அதை ஆராதித்தேன் என்றேன் இல்லை.

சல.—ஆராதிப்பதற்கும் கண்ணோக்குவதற்கும் என்ன வித்தியாசம்?

அபி.—அளவற்ற வித்தியாசமுண்டு, என்று பேசிக்கொண்டிருக்கும்போது, பவுல் போதகருடைய மனைவியாகிய ரூத்தம்மாள் அபிராமியைக் கண்டு பேசும்படி வீட்டில் பிரவேசித்த க்ஷணமே, சுருபம், படம் இவைகளைப்பற்றிய சம்பாஷணை நின்றுபோனது.

சலமோன் வெகுநாள் நேர்வழியில் நடந்தவனல்ல. மிஷன்காரருடன் அடிக்கடி சம்பாஷித்து வந்தபடியால் சத்திய வேதத்துக்கு விரோதமாய் அவர்கள் சொல்லிய அவதூறுன வார்த்தைகளுக்குக் காது கொடுத்தான். கலகம், குழப்பம் எழுப்பி தன் பெண்சாதியைத் தங்கள் கோவிலுக்கு கொண்டுவரும்படி அவர்கள் சொன்ன வார்த்தைகளை அவன் தன் காதில் போட்டுக்கொண்டான். மதுபானம் விற்கப்படும் கடைக்கு இவனே போகாவிட்டாலும் அதை இரகசியமாய்த் தன் பழய சிநேகிதர் மூலமாய்த் தருவித்து மனங்குளிர குடித்துவிட்டு, வாயை சுத்திபடுத்திக்கொண்டு தன் வீட்டுக்குப் போவான். வாயைக் கழுவினபோதிலும், வாயக்குள் சென்றவன் சும்மா இருப்பானு? அவனுடைய பேச்சால் அவன் கள், சாராயம் போட்டுக்கொண்டு வந்தானென்று எளிதில் அறிந்துகொள்வாள் அபிராமி. இருந்தும் அதைப்பற்றி தன் புருஷனைக் கண்டித்தவளல்ல.

சில நாளைக்குப்பின், பழய குருடி கதவைத் திறடி யென்பதுபோல, ஒரு நாளையில் அநேகம் விசை மதுபான கடைகளுக்குப் போய் குடித்து வருவான். வீட்டுக்குப் போனால், சாதம் நன்ருயில்லை, கறி நன்ருயில்லை யென்று சந்தடி செய்வான். குடியால் முன்கோபங்கொண்டு குதிப்பான்.

ஒரு நாள் வழக்கப்படி பூர்த்தியாய் குடித்து வீட்டுக்குப்போன சமயத்தில் அபிராமி சௌக்கியமின்றி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அப்போது சலமோன் அவளைப்பார்த்து: அபிராமி, நம்மிருவருக்குள் பெரியவர் யார்?

அபி.-பிராயத்தில் நீங்கள்தான் பெரியவர்.

சல.—இல்லை வீட்டு எஜமானன் யார்?

அபி.—நீங்கள்தான்.

சல.-அப்படியானால் நான் சொல்லுகிறதையெல்லாம் கேட்பது உனக்கு கடமை தானே?

அபி.—பாவமில்லாத விஷயத்தில் உங்களுக்குக் கீழ்ப்படியவேண்டியது தான்.

சல.—நன்றாய்ச் சொன்னாய். அப்படியானால், நாளை துவக்கி நீ யென்னோடு மிஷன் கோவிலுக்கு வரவேண்டும், என்ன சொல்லுகிறாய்?

அபி.—என் தலை போனாலும் நான் அதில் கால்வையேன்.

சல.—நீ யென்னை சகலத்திலும் பின்செல்ல உனக்கு கடமையில்லையோ?

அபி.—எனக்கு சௌக்கியமில்லை சும்மா இருங்கள்.

சல.—கோவிலுக்கு வருவாயா, வரமாட்டாயா?

அபி.—ஒருவிசை சொன்னால் போதாதா? நான் மிஷன் கோவிலுக்கு வரவேமாட்டேன்.

சல.—உன்னை வலுகட்டாயமாய் அங்கே இழுத்துக்கொண்டு போனால்?

அபி.—என் வீணாய்ப் பினத்துவது?

சல.—நல்லது, அது போகட்டும்; நமது குழந்தை பிறந்தபின் எந்த கோவிலுக்கு அதைக் கொண்டுபோய் பேர்கொடுக்கப் போகிறாய்?

அபி.—அதுகூட கேட்கவேண்டுமோ? கத்தோலிக்குக் கோவிலுக்குத்தான், அது தெரியாதோ?

சல.—அது உதவாது; குழந்தையின் தகப்பனாகிய நான் போகும் கோவிலுக்கே அதை கொண்டுபோக வேண்டும். அங்கேயே அதற்கு பேர் கொடுக்கவேண்டும்.

அபி.—குழந்தை பிறப்பதற்குள்ளாக இந்த பேச்செல்லாம் என்னத்திற்கு?

சல.—உனக்கு பேறுகாலம் உண்டாகும்போது மிஷன் ஆஸ்பத்திரியில் உன்னைச் சேர்த்துக்கொள்ளும்படி தகுந்த ஏற்பாடு செய்து வந்திருக்கிறேன்.

அபி.—(குடிகாரனோடு வாக்குவாதம் செய்யக் கூடாதவளாய்) நீங்கள் சும்மா இருங்கள் என்றாள்.

இதற்குப்பின் சாலமோன் போசனஞ் செய்து வெளியே புறப்பட்டான்.

இந்த சம்பாஷணை நடந்த பதினெட்டாம் நாள் அபிராமிக்கு பேறுகாலமாகி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். தாயும் சிசுவும் சுகமே இருந்தபோதிலும், மூன்றுநாள் குழந்தைக்கு மாந்தங்கண்டு பால்குடியாமலும் அழாமலும் இருந்தபடியால், தாமதியாமல் குரு சுவாமியாரை வீட்டுக்கு வரவழைத்து அவர் மூலமாய்க் குழந்தைக்கு ஞானஸ்நான சடங்கை நிறைவேற்றிக்கொண்டார் ஈசாக் உபதேசியார்.

குழந்தை பிறந்த செய்தியை அறிந்த சலமோன் அன்றே ஈசாக் உபதேசியாருக்குக் கடிதமெழுதி, தன் குழந்தைக்கு மிஷன் கோவிலில் (கிறைஸ்ட் சர்ச்சில்) 12-ம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை ஞானஸ்நானங் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், குழந்தையின் மாமனாகிய ரெவரெண்டு பாஸ்டர் பீற்றர் அவர்களே அந்தச் சடங்கை நிறைவேற்றுவாரென்றும் தெரிவித்ததுடன், தன் உத்தரவின்றி ரோமான் கோவிலில் அந்தச் சடங்கு நிறைவேறுமாகில், குழந்தையின் தாயின் பேரிலும் பாட்டனாகிய அவர் பேரிலும், ஞானஸ்நானங் கொடுக்கும் பாதிரியாரின் பேரிலும் தாவா செய்யப்படும் என்றும் நோட்டீஸ் அனுப்பிவைத்தான்.

குழந்தை பிறப்பதற்கு முன்னே அதன் ஞானஸ்நான விஷயமாக நோட்டீஸ்களை அச்சடிப்பித்து, அதைத் தன் பந்து ஜனங்களுக்கும் சிநேகிதருக்கும் அனுப்பிவைத்தான். அதில் "15-ம் தேதியாகிற ஞாயிற்றுக்கிழமை கிறைஷ்ட் சர்ச்சில் சாயங்கிரம் 5 மணிக்கு, என் மாமனும் சீனியர் பாஸ்டருமாகிய ரெவரெண்டு பீற்றர் அவர்களால் என் குழந்தைக்கு பேர் கொடுக்கும் சடங்கு நடத்தப்படும். சடங்கு முடிந்தபின் வாத்தியத்துடன் மிஸ்டர் சத்தியநாதன் வீட்டுக்குச் சென்று அவ்விடத்தில் மியூசிகல் என்டர்டேயின்மென்டும் விருந்தும் நடக்கும். தாங்களும் தங்கள் குடும்பசமேதமும் அவ்விடம் விஜயம்செய்து, ஷை குழந்தையை ஆசீர்வதிக்கக் கேட்டுக்கொள்ளும், சலமோன்." என்று கண்டிருந்தது.

பீற்றர் போதகர் தமது அசௌக்கிய நிமித்தம் குழந்தைக்கு பேரிடும் சடங்கு நிறைவேற்றவர சாத்தியப்படாதென்று ஒயர் கொடுத்தார் சலமோனுக்கு. செவ்வாய்கிழமை இந்த ஒயர் வந்தபடியால், இன்னும் ஐந்து நாட்களுக்குள் வியாதி தீர்ந்து சுகப்படுவாரென்றும், சலமோனே போய் அவரைக் கட்டாயமாய்



அழைத்துக் கொண்டுவந்தாலொழிய அவர் வரமாட்டாரென்றும் மற்றவர்கள் சொன்னதன் மேல், தன் குழந்தையின் நாமதேய சடங்கின் ஆரபாரத்துக்காக 100 ரூபா கடன்வாங்கி, அதைச் சத்தியநாதன் கையில்கொடுத்து சகலத்தையும் சித்தஞ்செய்யச் சொல்லிவிட்டு புறப்பட்டான் சலமோன் பீற்றர் போதகர் இருந்த ஊருக்கு. அந்த ஊருக்குப்போய்ச் சேர்ந்த நாளே சலமோன் சத்தியநாதனுக்கு கடிதம் போட்டு, "பீற்றர் போதகர் அசௌக்கியமாயில்லை. ஆனால் அவர் தன் சகோதரியாலும், மைத்துனன் பவுல்போதகராலும் அவமானப்பட்டுப்போனதைப்பற்றி, அவ்வூருக்கு வருவதில்லை யென்று சலஞ்சாதித்த போதிலும் என்னுடைய வலு கட்டாயத்தாலும், நமது மிஷனெரியிடத்திலிருந்து இன்று வந்த தந்தியாலும் அவர் நமதூருக்கு ஞாயிற்றுக்கிழமை பகல் வண்டியில்வந்து மூன்றாம் நாள் தமது ஊருக்குத் திரும்புவதாக எனக்குச் சொன்னார். நானும் அவருடன் ஞாயிற்றுக்கிழமை திரும்பிவருவேன். சகலத்தையும் சித்தப்படுத்தி வைத்துக்கொள். செலவுக்குப் பயப்படவேண்டாம். எவ்வளவு ஆரபாரமாய் செய்யக்கூடுமோ அவ்வளவு சம்பிரமமாய்ச் செய்யவேண்டும். இதைப் பார்த்து அந்த ரோமானருக்கு புத்தி வரட்டும். நீயும் நமது சபையாரும் மிஷனெறியும் சொன்னது போல, குழந்தைக்கு நமது சர்ச்சில செய்யவேண்டிய செர்மெனி செய்தால் தான் என் குடும்ப முழுதும் நமது சபைக்கு வந்துசேரும்" என்று எழுதினான்.

சத்தியநாதன் வீட்டுக்குமுன் ஒரு பிரமாண்டமான பந்தல் போடப்பட்டு, இலைதழையாலும், பற்பல வர்ணமுள்ள வஸ்திரங்களாலும், கடுதாசி ரேக்காலும் வெகுவிசித்திர விநோதமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதில் கட்டியிருந்த ஜாலர், சரிகை முதலியவை காற்றுக்கு கலகலவென்று சப்தித்து ஆடிக்கொண்டிருந்தது. கில்ட்டு காகிதங்களும் டாங்காவும் வெயிலுக்கு பளிச்சுபளிச் சென்று பிரகாசித்துக் கொண்டிருக்க, அங்கு தொங்கவிட்டிருந்த கணக்கற்ற கொடிகள் பறந்து ஆடிக்கொண்டிருந்தன.

பந்தலுக்கடியில் சமுக்காளங்களும் அழகான பாய்களும் விரிக்கப்பட்டிருந்தன. 10, 12 நாற்காலிகளும் 2-சோபாக்களும் போடப்பட்டிருந்தன. சீட்டித்துணியால் மூடப்பட்ட மேசைக்கு முன், மிஷனெறிக்கும் பீற்றர் போதகருக்கும் இரண்டு அலங்காரமான பெரிய நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. கமகமவென மணக்கும் பூக்களும் இலையுஞ் சேர்த்து கட்டப்பட்ட செண்டு ஒன்று அழகான ஜாடியில் மேசைமத்தியில் வைக்கப்பட்டிருந்தது. குளோப்புகளும், லஸ்டர்களும், வால் ஷேட்டுகளும், உவாஷிங்டன் லாம்புகளும் பந்தலிலும், பந்தலுக்கு வெளியிலும் போடப்பட்டிருந்தன.

இவ்வளவு அலங்கார ரம்மியமாய் சிங்காரிக்கப்பட்டிருந்த பந்தலில் அநேகர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். வாத்தியக்காரரும் வாத்திய முழங்க, இனிய தொனியுடன் சிறுவரும் சிறுமிகளும் பாடுவதைக் கேட்கும்போது, காதுக்கு எவ்வளவோ இன்பமுண்டானது! வழியில் நடந்து போகும் வழிப்போக்கர் அங்கேயேநின்று பந்தலின் அலங்காரத்தையும் பாட்டுக்கச்சேரியின் ஸ்வரமாதுரியத்தையுங் கேட்டு பரவசங்கொண்டவர்களைப் போல் நின்றார்கள். விக்டோரியா ராணியவர்களின் நேர்த்தியான ரூபப்படம் பொன்கில்ட்டுச் சட்டத்தில் வைத்து பந்தலின் மையத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

வாத்தியக்காரரும் பாட்டுக்காரரும் அப்போதைக்கப்போது இளைப்பாறும்படி வாத்தியத்தையும் பாடலையும் நிறுத்தும்போது, அங்கு கூடியிருந்தவர்கள் உல்லாசக்களிப்பாய் ஒருவரோடொருவர் பின்வருமாறு சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

"என்? இன்று சாயந்திரத்துக்குள் அந்த இரண்டு குடும்பத்தாரும் நமது சபையில் வந்து சேர்ந்துவிடுவார்கள்! மயிலே, மயிலே, இறகு போடுஎன்றால் போடுமா மயில் இறகை? தகுந்த சமயம்பார்த்து அதைப்பிடித்து அதன் இறகை பலவந்தமாய்ப் பிடுங்கவேண்டும். அதேபிரகாரம் கெட்டுப்போன அந்த இரண்டு குடும்பத்தாரும் நயபயத்தால் நமது சபையில் வந்து சேருவார்களா? பரிச்சேதம் சேரமாட்டார்கள். காலம்பார்த்து செய்யவேண்டிய வேலையை பக்குவமாகச் செய்து முடித்தால் வலிய வருவார்கள் வழிக்கு! கயிற்றின் ஒரு முனையைப்பிடித்து இழுத்தால் மறுமுனையுடன் கயிறு முழுதும் கைக்கு வந்துசேரும். அதுபோல, குழந்தையைப் பிடித்து இழுத்தால் அதன் ஆத்தாளும், பாட்டன் பாட்டியாரும் அதைப் பின் செல்லாவிட்டால் வேறு விதியில்லை," என்று கூட்டத்தில் ஒருவர் பேசும்போது, மற்றொருவர் "இது யார் யூகித்த உபாயமோ?" என "என்! நமது பாதிரியா

ரின் உபாயந்தான்; பார்! எவ்வளவு புத்திசாலியவர்! தூரத்தில் நடக்க இருக்கும் விஷயத்தையெவ்வளவு சுளுவாய்க் கண்டு கொள்ளக்கூடியவர்! படித்தவர்கள் படித்தவர்களே" என்று மிஷநேறியின் புத்தி சாமர்த்தியத்தைப் புகழ்ந்து பேசினுர்.

அப்போது இன்னொரு கிழவனுர், "என்ன சர்? நமது சபையைச் சேர்ந்தவர்களில் மூன்று குடும்பத்தார் இன்று இங்கு தலைகாட்டவே இல்லை. அவன்களுக்கும் கொஞ்சம் தலைபாட்டங் கண்டிருக்கிறது. அவன்கள் என்னைப் பார்த்து கேட்ட கேள்வி யென்ன தெரியுமா?" என்று சொல்ல அவன் "தெரியாதே" என்றபோது, கிழவனுர் "நமது மிஷன்வேதம் சத்தியமான தென்பதற்கு என்ன அத்தாக்ஷி? என்று கேட்டான்கள் சர் அந்தகள்ளப் பயல்கள். மிஷன் பணத்தை வேண்டியமட்டுந் தின்றுவிட்டு, மிஷன் பணத்தால் அவன்களும் அவன்கள் மக்களும் கைத்தொழிலும் படிப்பும் கற்றுக்கொண்டபின், இப்போது மிஷன் வேதத்தைப்பற்றி அவன்களுக்கு சந்தேகம் உண்டாகிறதாம்!! என்ன துரோகம் என்னலாம்! ஆகட்டும், இன்றைக்கு அந்த ஈசாக்கு குடும்பமும் பவுல் குடும்பமும் வந்து சேர்ந்தபின், பாதிரியாருக்குச் சொல்லி, அந்த மூன்று பேருடைய வாலை அறுத்து சுண்ணும்பு இடாவிட்டால் நான் டேவிட் அல்ல!!" என்று பேசிக்கொண்டிருந்தார்கள். (தொடரும்.)

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

. [கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர். ப—ர்.]

### கத்தோலிக்குக் குருவின் ஜீவியம்.

இதன் கீழ்கண்ட வாசகத்தை இலங்கையின்கண் பொதுஜன விர்த்திக்காக உழைத்து வரும் கீர்த்திவாய்ந்த "சிலோன் மார்னிங்லீடர்" பத்திராதிபர் கொழும்பு, புறக்கோட்டை பங்கு விசாரணையிலிருக்கும் சங். *E. L. (Bouvier)* பொவியர் சுவாமி அவர்களின் குருப்பட்டம் பெற்ற 25-ம் வருட ஜுபிலி தினமாகிய 23-8-15 இல் ஷை சுவாமிகளைப்பற்றி எழுதியுள்ளார்.

"சங். பொவியர் சுவாமி அவர்கள் குருப்பட்டம் பெற்று 25-ம் வருடமாகிற இன்று அவருடைய பங்கு விசாரணையிலுள்ள ஏராளமான கிறீஸ்துவர்களோடும் சிநேகிதர்களோடும் நாமும் நமது அன்பார்ந்த மனோகரத்தையும் மங்கள வாழ்த்துதலையும் கூறுதலுடன் இன்னும் அநேகவருடம் அவர் தொடர்ந்து முயன்று வர வேண்டி வருகிறோம்.

இலங்கையில் ஓர் ஐரோப்பிய குருவின் ஜீவியம் பாக்கியமாக இருப்பது அரிது. அதிலும் சுயேட்சை யடைந்து அதிர்ஷ்டவாளர்களாக இருக்கும் பதித பாதிரிகளைப்போ லின்றி, தனித்த ஜீவியமும் கஷ்டம் நிறைந்த உழைப்பும், விடாமுயற்சியும் கொண்ட கத்தோலிக்கு குருவின் ஜீவியம் வெகுவாய் வெகுமானிக்கத் தக்கதே. கத்தோலிக்கு குரு தமது வாழ் நாளை கடவுளுக்குத் தத்தம் பண்ணிவிடுகிறுர். அவர் தமக்கு சொந்தமாகிற ஜென்ம தேசம், உறவின் முறையோர், காணி, பூமி முதலியவைகளை முற்றிலும் துறந்துவிடுகிறுர். அவர் இலங்கைக்கு வரும்பொழுது தமது சுய நாட்டிற்குத் திரும்பச் செல்வோம் என்கிற நோக்கங்கொண்டு வருபவரல்ல. அவருடைய கடும்பிரயாசையான உழைப்புக்கு இன்பகரமான விடுமுறை கிடையாது. அவர் ரஜா தேடுகிறதுமில்லை. சுகயீனத்தால் முற்றிலும் உடைபட்டு இயலாத காரணங்களுக்கு மட்டும் தம்முடைய ஜென்ம தேசத்துக்குப் போய்ச் சுகம்பெற சொற்ப நாள் ரஜா அவருக்குக் கொடுப்பதுண்டு. அவ்வித சுதந்தரம் பெரும்பான்மையோருக்குக் கிடைப்பதுமல்ல. அவ்விதம் அவர்கள் ஆசிப்பதுமல்ல. குருவானவருக்கு உலக பற்றுதல் கிடையாது. அவர் உலக வெகுமானங்களுக்கு எதிர்பார்ப்பவருமல்ல. அதையிட்டு அவர்களுடைய தொழில் தடைபடுவது மல்ல. அவர் சம்பளத்திற்குச் சேவிக்கிறது மல்ல. அவர் தமது ஜாதிஜனங்களை மறந்து, தமது மந்தையோடு ஜீவித்துவருகிறுர். அவருடைய ஒரே சந்தோஷம் அவருடைய ஊழியமே. தமது விசாரணை செழித்தோங்க விழிப்பாயிருப்பதும், ஆத்துமங்களை இரட்சித்து கிறிஸ்துநாதரண்டை சேர்ப்பதும், கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவு கூறுவதும், தமது மேய்ப்பின் கீழ் உள்ளோர் எல்லோருக்கும் ஒற்றுமையை உண்டுபண்ணி சீர்படுத்துவதும், தேவ ஊழியத்தில் அசட்டை செய்பவர்களை நேர்வழிக்குக் கொண்டுவருவதும், பாதுகாத்து



வருவதும், அன்பு பாராட்டுவதும் இவை முதலியவைகளே அவருடைய ஏக ஆசை!

இவைகளுக்கெல்லாம் ஈடு யாதெனில், பாவியின் பாவத்திற்குப் பொறுத்தல் கொடுக்க முழு விசுவாசத்தோடு தமது கரத்தை அவர் உயர்த்தும்பொழுது, திவ்ய சர்வேஸ்வரனின் ஆசீர்வாதமே அவர் கரத்தின் மூலியமாக உண்டாகிறதென்பதே.

இருபத்தைந்து வருடமாக மேற்சொன்ன நற்கிரிகைகளும் உபகாரங்களும் புரிந்துவந்த குருவிற்கு இயற்கையிலேயே எவ்வளவோ சந்தோஷமும் திருப்தியுமுண்டாகும். சங். பொவியர் சுவாமி அவர்களின் அன்பைப் பெற பாக்கியம் பெற்ற சகலரும், அவர் பங்குவிசாரணையிலிருந்த ஒவ்வொரு இடங்களிலும் ஆயிரக்கணக்காயுள்ள ஜனங்களுக்காக அவர் பட்ட பிரயாசத்தையும், அவருடைய உருக்கமான அநுதாபத்தால் உழைப்பின் மட்டில் உள்ள அவாவையும், அன்பையும், ஞானத்தையும், அறிவையும், பெருந்தன்மையான குணத்தையும், தமது மந்தைகளை இரட்சிக்க எடுத்த சிரமத்தையும், ஊக்க வைராக்கியத்தையும் நன்கறிவார்கள்.

அவரை அறிந்த ஜனங்களெல்லோரும் அவருடைய 25-ம் வருடகுருத்துவத்தின் மகிமையைப்பற்றி திருப்தியடையாமலிருக்க மாட்டார்கள்.

நாம் அவரை நன்றாய் அறிவோமாதலால், இந்த மங்களகரமான தினம் அவருடைய சிநேகிதர்களுக்கு வெகு ஆநந்தத்தைக் கொடுக்கக் கூடியதாயினும், அவருக்கு இந்த நாள் மனத்தாழ்மையில் அளவில்லாத சருவேஸ்வரனுக்கு நன்றிபறிதல் செலுத்துகிற நாளாக இருக்கும்."

இவ்விதமாய், சங். பொவியர் சுவாமியவர்களைப்பற்றி வெகு புகழ்ச்சியாய் பத்திராதிபர் கூறியபின், சமயம் வாய்க்கும்பொழுது சுவாமி அவர்களைப்பற்றி இன்னம் அதிகமாக எழுதுவோமெனச் சொல்லி முடித்தார்.

காலி } இங்ஙனம்
25—8—15. } J. பிச்சை ரோட்றிகஸ்.

["சவேரியார் தினம் அல்லது நமது ஜன சமூகப் பெருநாள்" எனனும் தலைப்பெயரிட்ட கடிதம் அடுத்தமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். ப. ா.]

---



## MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாசாரம்.

**சென்னை அதிமேற்றிராசனம்.**—1914-ஆம் எமது அதிமேற்றிராணியாரவர்களோடு ஐரோப்பாவுக்குச் சென்றிருந்த வைக்கர் ஜெனரல், சரியாய் வந்திக்கத்தக்க A. மெர்க்கெஸ் சுவாமிகள் *(Rt. Rev. Mgr. A. Merkes)* இந்தியாவுக்குத் திரும்பும்படியாக இம்மாதம் 13-ம் உ ஹாலண்டை விட்டுக் கப்பலேறுவார்களெனக் கேள்வியுற்றுச் சந்தோஷிக்கிறோம்.

**பரிசுத்த பாப்பவர்களும் ஜேர்மனியும்.** யுத்தத்தில் பிடிபட்ட ஜெர்மன் சைநிகளை பரிசுத்த பாப்பவர்களின் வேணடுகோளுக்கிணங்கி தென் ஆபிரிக்காவிலுள்ள தாஹோமி என்ற அதிக உஷ்ணமான இடத்தைவிட்டு வட ஆபிரிக்காவிலிருக்கும் அதிக சௌக்கியமான இடத்துக்கு மாற்றினதற்காக ஜெர்மன் அரசாட்சியார் பரிசுத்த பாப்பவர்களுக்கு மிகுந்த நன்றி செலுத்தினதாகத் தெரியவருகிறது.

**ஓர் துண்டு புத்தகம்.**—உத்தரிக்கிற ஆத்துமாககளுக்காகச் செய்யப்படும் அற்ப சொற்ப ஒறுத்தலும் அதிசயத்துக்குரிய பலனும்—Small Sacrifices for the relief of the Suffering Souls, and Surprising Rewards.—என்று இங்கிலீஷிலும் தமிழிலும ஓர் துண்டு புத்தகம் (Pamphlet) நமது ஆபீசில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதனை இம்மாசத்தில் எல்லோரும் வாசிப்பது நலம். நமது ஆபீசுக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம். விலை 100-க்கு ரூபா 1. 1 டசனுக்கு அணு 2.

**ஐந்து லட்சங் குருடர்.**—நமது தேசத்தில் இப்பொழுது ஐந்து லட்சங் குருடர்கள் இருக்கிறுர்கள். அதாவது: நம்மவர்கள் சுமார் 500-பேர்களுக்கு ஒருவர் வீதம் குருடர்களாகவே யிருக்கிறுர்கள். "கண்ணுடைய ரென்பவர் கற்றேர் முகத்திரண்டு புண்ணுடையவர் கல்லாதவர்" என்ற நீதிநூற்படி படியாதவர்களையும் குருடர்களென்று கணக்கிட்டால் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது வீதம் குருடர்களா யிருக்கிறுர்கள்.

“ எம்டன் ”—சண்டைக் கப்பலில் ஆபீசராயிருந்த ஒருவன் அக்கப்பல் கோக்கோ தீவண்டையில் தாக்கி உடைபட்டபோது தப்பியோடி, சிங்கப்பூரையடைந்து, அங்கே மறைந்திருந்து, கலகக்காரரோடு கூடியிருந்து கலகம் பண்ணி, எவரிடமும் அகப்படாமல் தப்பித்துக்கொண்டு ஜாவா, சீனு முதலிய விடங்களுக்குப் போய், அங்கிருந்து அமெரிக்காவுக்குப் போய் அவ்விடத்திலிருக்கும் ஜர்மனிய ஸ்தானுதிபதியின் ஆதரவால் தன் தேசம்போக இருப்பதாய் வதந்தி யுலாவுகிறது.

உரோமாபுரியில் குருப்பட்டத்துக்காக மலையாள வித்தியார்த்திகள்.—எர்ணுகுளம் மேற்றிராணியாரவர்களின் காரியதரிசி, சங். J. காலாச்செரில் அவர்களுடைய சகோதாரின் புத்திரராகிய சங். ஜேம்ஸ் என்பவர், புத்தம்பள்ளிக் குரு மடத்தினின்று, உரோமாபுரி மடத்தில் குருப்பட்டத்துக்கு வேண்டிய கல்வி சாஸ்திரங்களைப் படிக்கும்படி சென்ற மாதம் 19௳ புறப்பட்டுப்போனுர். இப்போது இவரைச் சேர்த்து நான்குபேர் மலையாளத்திலிருந்து உரோமாபுரி குரு மடத்தில் குருப்பட்டத்துக்காகப் படித்துவருகிறுர்கள்.

யுத்தச் செலவு.—நிகழும் யுத்தத்திஞல் நமது பிரிட்டிஷாருக்கு நேரும் நஷ்டம் 159-கோடி பவுன், அல்லது 2,385 கோடி ரூபாயென மதிக்கப்படுகிறது. தினசரி செலவு 425-லட்சம் ரூபாய். இன்னும் கொஞ்சகாலத்துக்குள் இத்தொகை அதிகரித்தாலும் அதிகரிக்கலாம். இப்படி யதிகரிக்கும் செலவுக்காக வரிகளை உயர்த்துவதைவிட வேறு வகையில்லை. வெற்றிக்கு அநுகுணமாகிய பணமும், சேனையாட்களும் இடையருமல் கிடைக்கும்பட்சத்தில் வெற்றி நம்முடையது என்பதிற் சந்தேகமில்லை.

கீரிப்பிள்ளைக்கு 3000 ரூபாய் இனும்.- லிஸ்பனிலுள்ள ஒருதுரைசானி தமது மரணசாதனத்தில் தமது கீரிப்பிள்ளையின் உபயோகத்துக்காக வருஷமொன்றுக்கு 200-பவுண் அல்லது 3000 ரூபாய் மரணசாதனஞ்செய்துவைத்தாளாம். இவள் இவ்விதம் செய்ததன் காரணம் யாதெனில்: இந்த மாது இருந்த கிரகத்தின் அதிமேலான உப்பரிகையில் 15 வருஷங்களுக்கு முன்னே நெருப்புப் பற்றியபொழுது இந்தக் கீரிப்பிள்ளை கத்தியதால் எழுந்து வெளியே வந்திராவிட்டால் அன்றே நெருப்பிலிறந்திருப்பாளாம். இந்த நன்றியறிதலுக்காகவே இம் மரணசாதனம் செய்யப்பட்டதாம்.

மனிதரின் ஆயுள்.—சராசரி மனிதர்கள் 33-வருஷங்கள் தான் ஜீவித்திருக்கிறுர்களாம். பூமண்டலத்திலுள்ள கால்பாகத்து ஜனங்கள் 6-வயது ஆகு முன்னமே இறந்துவிடுகிறுர்கள். பேர்பாதி 16-வயதுக்கு முன் இறந்து விடுகிறுர்கள். ஆனல் 100-ல் ஏறக்குறைய ஒருவர் தான் 65-வயதுவரைக்கும் பிழைத்திருக்கிறுர். இறப்பது நிமிஷம் ஒன்றுக்கு 67-ம், ஒரு நாளைக்கு 97,790-ம், ஒரு வருஷத்திற்கு 35,639,835-மாம். பிறப்பது ஒரு நிமிஷத்திற்கு 70-ம், ஒரு நாளைக்கு 100,800-ம் ஒரு வருஷத்திற்கு 36,792,000 என்றும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை தெரிவிக்கின்றது.

ஜர்மனியில் ஸ்தீரீகள் செய்யும் வேலை.- இப்போது ஜர்மனியப் புருஷர்களில் பெரும்பான்மையோர் யுத்த களத்துக்குச் சென்றுவிட்டபடியால், ஜர்மனியில் புருஷர்களால் செய்யப்பட்டுவந்த வேலைகளில் பலவற்றை ஸ்திரீகளே செய்து வருகிறுர்கள். உதாரணமாக: ஜர்மன் தலைநகராகிய பெர்லினில் இப்போது 2700-ஸ்திரீகள் டிராம்வண்டியோட்டும் “டிரைவர்” தொழிலி லமர்ந்திருக்கிறுர்கள், “கண்டக்டர்” (டிக்கட்டு கொடுப்பவர்) வேலைகளுக்காக 4900-மாதர்கள் கூடிய சீக்கிரம் அமர்த்தப்படுவார்களாம். இன்னும் கொஞ்சகாலத்துக்குள் டிராம்வண்டி யோட்டும் பாக்கி புருஷர்களெல்லாம் சமர்க்களம் சேர வேண்டுமென உத்தரவு வந்திருக்கிறதாம்.

வெராப்பள்ளி அதிமேற்றிராணியாருக்கு உதவி மேற்றிராணியார்.—சென்ற அக்டோபர்மீ 28-ம் தேதி கொச்சிநகரத்துக்குத் தலைநகராகிய எர்ணுகுளத்தில், சரி. வந்தி. ஆஞ்சல் மேரி பெரெஸ் சுவாமிகளுக்கு, வெராப்பள்ளி அதிமேற்றிராணியாருக்கு உதவி மேற்றிராணியாராக, மகாகனந் தங்கிய கொல்லத்து மேற்றிராணியாரவர்களால் பட்டங் கொடுக்கப்பட்டது. இந்தச் சடங்குக்கு, கொச்சிமேற்றிராணியாரவர்களும், எர்ணுகுளம் மேற்றிராணியாரவர்களும் உதவியா யிருந்தார்கள். ஷை புது மேற்றிராணியாரவர்களுக்கு நம்முடைய உள்ளப்பூர்வமாய் மங்களங் கூறுகிறோம்.



நூருண்டு ஜீவிக்க வழி.-கொஞ்சமாய் நீர் குடி, அதிகமாய்ச் சுவாசி; கொஞ்சமாய்ச் சாப்பிடு, அதிகமாய் மெல்; கொஞ்சமாய் உடுத்து, அதிகமாய் ஸ்நானஞ் செய்; கொஞ்சமாய்க் கவலைப்படு, அதிகமாய் உழை; கொஞ்சமாய்ச் செலவு செய், அதிகமாய்க் கொடு; கொஞ்சமாய் எழுது, அதிகமாய்ப் படி; கொஞ்சமாய்ப் பேசு, அதிகமாய்ச் சிந்தனைசெய்; கொஞ்சமாய்ப் போதி, அதிகமாய் அனுஷ்டி. இவ் வழிகளைக் கைக்கொண்டு நடந்தால் நூறு வயதுவரையில் ஜீவிக்கலாம்.

குற்றவாளிகளுக்காக பாப்பவர்கள் பரிந்து பேசுதல்.—பிராஞ்சியர் பெல்ஜியர் இவர்களுள் ஒரு உபாத்தியும் வேறே ஏழுபேர்களும் இராஜாங்கத்துக்கு விரோதமான குற்றத்துக்காக ஜெர்மனியாரால் சுட்டுக் கொல்லப்படும்படி தீர்ப்புபெற்றிருந்தார்கள். ஆனல், ஆங்கிலேய பெல்ஜிய ஸ்தானுதிபதிகளுடைய வேண்டுகோளின் பேரில் நமது பரிசுத்த பாப்பானவர் கைசருக்கு எழுதி, குற்றவாளிகளுக்காக மனுப்பேசியதால் ஷை கேசுகள் மறுவிசாரணையிலிருக்கிறதென்று கொலோன் அதிமேற்றிராணியார் முன்பு தெரியப்படுத்தி யிருந்தார். இப்பொழுதோ அவர்கள் கைசரால் பூரணமாய் மன்னிக்கப்பெற்று விடுதலையடைத்தார்களெனத் தெரியவருகிறது.

16½-அங்குல வாயகலமுள்ள பீரங்கி.- ஜெர்மனியரால் உபயோகிக்கப்படுகிற இப் பீரங்கியானது 172-பாகங்களாய்ப் பிரிக்கப்படக்கூடியதாயும் 87-டன் எடையுள்ளதாயும் இருக்கிறதாம். இதை ஓரிடத்தினின்று மற்ருரிடத்துக்குக் கொண்டு போய் சேர்க்க ரெயில்வே வாகன் (Waggon) வண்டிகளில் 12-வேண்டும். இதைத் திரும்ப ஒன்ருகச் சேர்த்துப் பொருத்துவதற்கு 26-மணி நேரஞ் செல்லும். அதில் வேலை செய்வதற்கு 200-பேர் வேண்டும். அதில் போடும் மருந்து குண்டு முதலியவை ஒன்று சேர்ந்து 8-அந்தர் நிறையுடையதும் 5-அடி 4-அங்குலம் நீளமுமுடையதுமாம். அப் பீரங்கியை மின்சாரக் கம்பிவழியாய் 155-கஜ தூரத்துக் கப்பாலிருந்துதான் சுடவேண்டியது. ஒரு முறை அதைச் சுடப் பிடிக்குஞ் செலவு 8250-ரூபாய்.

சமாதானமுண்டாக மூன்றுநா ளுபவாசம்.--பரிசுத்த பாப்பவர்களின் கட்டளைக்கமைந்து, இந்த நவம்பர் மாதத்தில் வரும் முதல் மூன்றுவெள்ளிக்கிழமைகளில் அதாவது 5-ம், 12-ம் 19-ம் தேதிகளில் சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த சகல கிறிஸ்துவர்களும் தபசுகாலத்தைப்போல ஒருசந்தி யுபவாசமாயிருந்து, ஐரோப்பிய யுத்தம் சீக்கிரத்தில் முடிவு பெற்று உலகமெங்கும் நீளித்த சமாதானமுண்டாகும்படி வேண்டிக்கொள்ள வேணுமென்று நமது அதிமேற்றிராணியா ரவர்களிடமிருந்து உத்தரவு பிறந்திருக்கிறது. ஆயினும் அவரவர் வசதிக்குத் தக்கபடி அம் மாதத்தில் வேறே மூன்று நாட்களைத் தெரிந்துகொள்ள ஆக்ஷேபனையில்லை.

ராவ் பஹதூர் R. N. ஆரோக்கியசாமி முதலியார்.—காலஞ்சென்ற மகா-௱-௱-ஸ்ரீ ராயபுரம் நல்ல வீரன் பிரகாச முதலியாரவர்களின் புத்திரரும், தென் ஆற்காட்டு எக்செகியூட்டிவ் இஞ்சினீயருமான மகா-௱-௱-ஸ்ரீ R. N. ஆரோக்கியசாமி முதலியார் B.A., B. C. E. அவர்களுக்கு “ராவ் பஹதூர்” என்ற கவரதா பட்டம் அந்த ஜில்லாவின் கலெக்டரவர்களால் சில தினங்களின் முன் நடந்த தர்பாரின்போது கொடுக்கப்பட்டதாக அறிந்து சந்தோஷிக்கிறோம். பொரம்பூரிலும், சிதம்பரத்திலும், பாசன விஷயத்தில் அவர் பட்ட பிரயாசைக்கும், 1913-ஞு சம்பவித்த வெள்ளங்களினுல் குளங்களுக்கும் ஆறுகளுக்கும் எவ்வித சேதமும் நேராமல் காப்பாற்றினதற்கும் இவருடைய திறமையை மெச்சி ஷை கவரதையான பட்டம் இவருக்கு அளிக்கப்பட்டதாம்- கத்தோலிக்குக் கிறிஸதுவர்களுக்குள் உயர்தர உத்தியோகம் வகிப்பவர்கள் வெகு சிலரே. இச்சிலரில் இவர் ஒருவர்.

பொம்பாய் அதிமேற்றிராசனம்.-இந்த அதிமேற்றிராசனத்திலுள்ள குருக்களும், சந்நியாசிகளும் பெரும்பாலும் ஜெர்மானியர். 124-பேர்களில், 95-பேர் ஜெர்மானியர்களாவர். இவர்களில் வயது சென்றவர்கள்

இரண்டொருவர்போக மற்றவர்களெல்லோரும் பிரிட்டிஷ் இராஜாங்கத்தாரால் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களால் காலியாக்கப்பட்ட இடங்களுக்கு மற்ற மேற்றிராசனத்திலிருந்தும், சீமையிலிருந்தும் குருக்கள் வரவழைக்கப்படுகிறார்கள். இங்கிலாந்திலிருந்து இருவர் ஏற்கெனவே வந்துவிட்டார்கள். உலாந்து தேசத்திலிருந்து இருவர் புறப்படிருக்கிறார்கள்; ஐதராபாக்கத்து மேற்றிராசனத்திலிருந்து மூன்று குருக்களும், மங்களூரிலிருந்து ஏழுபேரும், கோவாவிலிருநது இருவரும், பெல்காம், கொச்சி மேற்றிராசனங்களிலிருந்து மூவரும், திருச்சினாப்பள்ளியிலிருந்து இருவரும், சென்னை அதிமேற்றிராசனத்திலிருந்து ஒருவரும், நாகப்பூரிலிருந்து மூவரும் அனுப்பப்படுகிறார்கள்.

**உலகத்திலுள்ள மொத்தச் சனத்தொகை.**—இப்பூமண்டலத்தின்கண் 160-கோடி சனங்கள் வசிப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. ஆசியாகண்டத்தில்மட்டும் 80-கோடி சனங்கள் வசிக்கின்றார்கள். இதில் இந்தியாவின் சனத்தொகை 33-கோடி. ஐரோப்பாக்கண்டத்துச் சனத்தொகை 32-கோடி. இந்தியாவின் சனத்தொகையும் ஐரோப்பாவின் சனத்தொகையும் ஏறக்குறையச் சரிசமனானவை. ஆபிரிக்கா கண்டத்தில் 21-கோடி. அமெரிக்கா கண்டத்தில் 11-கோடி. ஆஸ்டிரேலியாகண்டத்தில் 15-கோடி. சமுத்திரத்தின் இடையேயுள்ள சனத்தொகை 1-கோடி. இந்த 160-கோடியில் 48-கோடி படித்தவர்கள். 112-கோடி படியாதவர்கள். 50-கோடி உடை உடுத்திக்கொள்பவர்கள். 25-கோடி வஸ்திரமின்றி நிர்வாணமாயிருப்பவர்கள். 70-கோடி தேகத்தின் மத்தியபாகத்தை மாத்திரம் மூடிக்கொள்பவர்கள். 50-கோடி வீடுகளில் குடியிருப்பவர்கள். 70-கோடி குடிசையிற் குடியிருப்பவர்கள். 25-கோடி வீடுவாசலின்றி மிருகங்களைப்போல் வனங்களிற் சஞ்சரிப்பவர்கள். மனிதசமூகத்தார் இன்னும் எவ்வளவோ விருத்தியடையவேண்டிய நிலைமையி லிருக்கிறார்களென்பது தெளிவாகின்றது.

**ஓர் வீர சூரரான யூத குரு.**—யூதரின் பெரிய குருவாகிய "பிளாக்" என்றவரின் சூரத்தனமானதும் புகழ்ச்சிக்குரியதுமான மரணத்தைக் குறித்து அவருடைய விதவைக்கு கத்தோலிக் குருவானவர் ஒருவர் ஒரு கடிதம் எழுதி யிருக்கிறார். இந்த யூத குரு பிராஞ்சு தேசத்தில் மகா கொடூரமான யுத்தக் களரியில் குண்டுகள் சரமாரியாய் நாலா பக்கங்களி னின்றும் மழைபோல் வருஷிக்குந் தருணத்தில், காயம்பட்டவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துவந்தார். அப்படி யிருக்கும்போது, சாகிற தறுவாயிலிருந்த வொருவன் அவரைக் கத்தோலிக்குக் குருவென்றெண்ணித் தான் சற்று நேரம் கட்டித் தழுவும்படி ஓர் பாடுபட்ட சுரூபத்தைத் தனக்குக் கொடுக்க அவரைக் கேட்டுக்கொள்ளவே, ஒன்றும் பதில் சொல்லாமல் உடனே அவர் ஓடிப்போய் ஒரு பாடுபட்ட சுரூபத்தைத் தேடிக் கொண்டுவந்து சாகப்போகிறவன் கையில் கொடுக்குஞ் சமையத்தில், பக்கத்தில் விழுந்து வெடித்த குண்டின் ஓர் துண்டு பட்டு அக்ஷணமே மரணமடைந்தார் என்று முன் சொன்ன குருவானவர் எழுதி யனுப்பினார். தம்மைக் குறித்துக் கொடுக்கப்படும் ஒரு செம்பு ஜலத்துக்கும் தக்க பலன் கொடுக்கப்படும் என்று திருவுளம்பற்றின ஆண்டவர், இவ் வீர சூரமான கிருத்தியத்துக்குப் பலனாக அந்த யூதகுருவுக்கு இரட்சண்யம் கட்டளையிடாமற் போவாரோ?

**பரிசுத்த பாப்பானவரும் போலிஷ் ஜாதியாரும்.**—ஜெர்மனியருக்கும், ருஷியருக்கும் சமீபத்தில நடந்த யுததத்தினால், சத்திய கத்தோலிக்கு நாடாகிய போலாண்டு தேசமானது பரிதாபத்துக்குரிய விதமாய் நாசமடைந்து போய்விட்டது. கட்டிடங்கள் தகர்க்கப்பட்டும், கைத்தொழிற் சாலைகள் மூடப்பட்டும், பயிரிடு நிலங்களெல்லாம் நிர்மூலமாக்கப்பட்டும் போனபடியால் அந்நாட்டிலுள்ள நமது கத்தோலிக்குச் சகோதரர்கள் உண்ண உணவின்றியும் உடுத்த உடையின்றியும மிக்க துன்பம் அடைந்து வருகிறார்கள். இவர்கள்மேல் இரக்கம் வைத்து இவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்யுமாறு கருணையங் கடவுளை உலகமெங்கணுமுள்ள கிறிஸ்துவர்களெல்லா-



ரும் மன்றாடும்படிக்கு, இந்த நவம்பர்மீ 21-ம் தேதியை, நமது அன்புள்ள தந்தையாகிய பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் நியமித்திருக்கிறார். அன்றையத்தினம் ஒவ்வொரு கோவிலிலும் ஷை கருத்துக்காக பொதுச் செபம் நடப்பிப்பதோடு ஷை போலிஷ் கத்தோலிக்கருடைய வறுமை நிவர்த்திக்காக, எல்லா கிறிஸ்துவர்களிடமிருந்தும் தம்தம்மா லியன்ற அளவு தர்மப்பணம் வசூல்செய்யும்படிக்கும் அர்ச். பாப்பானவரிடமிருந்து எல்லா மேற்றிராணிமார்களுக்கும் உத்தரவு வந்திருக்கிறது. இந்த தருமத்துக்காக நமது சந்தாதாரர்களும் தங்களாலான உதவிசெய்வார்களெனக் கோருகிறோம்.

**சுவாமி! சுவாமி!! இந்த அபராதம் என்னால் முடியாது.**—அர்ச். சர்மிநாதர் சபையைச் சேர்ந்த ஓர் குருவானவரிடத்தில் ஒரு நாள் சாயந்திரம் ஒருவன் பாவசங்கீர்த்தனஞ் செய்தான். அவன் கோவிலை விட்டு வெளியேறும்போது, அந்தக்குருவானவரும் அவன் பின்னால் கோவிலுக்கு வெளியேபோய் அவன் எந்த ஊரானென்றும் என்னஜீவனஞ் செய்கிறவனென்றும் அவனை விசாரித்தார். அதற்கவன் "நான் குட்டிக்கரணம் போடுகிறவன்" என்று மாத்திரஞ் சொல்லிவிட்டு சும்மாநின்றான். "குட்டிக்கரணம் போடுவதென்றால் என்ன?" என்று அவனை வினவவே, அவன் "இதோ பாருங்கள் சுவாமி" என்று சொல்லி கோவில் படிகளை விட்டிறங்கி சம வெளியில் தன்கைகள் இரண்டையும் தரையில் ஊன்றிக்கொண்டு கால்களை மேலே தூக்கின வண்ணமாய்ப் பற்பல விநோதமான தொம்பங் கூத்துகளைச் செய்யும்போது சுவாமியார் புன்சிரிப்புடன் அவனைப்பார்த்திருநதார். அத்தருணத்தில் பாவ சங்கீர்த்தனஞ் செய்யக் கோவிலுக்கு வந்திருந்த திமிர்வாதங் கொண்ட ஓர் கிழவியும் நடுநடுக்கத்தோடு அங்கே நின்று அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள். தொம்பக் கூத்தாடி போனபின் சுவாமியார் கிழவியைப் பார்த்து "எங்கே வந்தாய்? என்ன வேணும்?" என்று கேட்டார். அதற்கவள் "சுவாமி, நானும் பாவசங்கீர்த்தனஞ் செய்யத்தான் வந்தேன்; ஆனால் சுவாமி! சுவாமி!! இந்தமாதிரி அபராதம் எனக்கு விதிக்காதேயுங்கள்; அது என்னால் முடியவே முடியாது" என்று கெஞ்சினாள். பேதமையான இந்தக் கிழவி முன்சொன்ன தொம்பங் கூத்தாடி செய்துகாட்டின விளையாட்டெல்லாம் சுவாமியார் பாவ சங்கீர்த்தனத்தில் அவனுக்கிட்ட அபராதமென்றே எண்ணினாள் போலும்.

**வாரந்தோறும் ஏழரைலட்சம் பவுண்.**-போர்முனைக்குச் சென்றிருக்கும் வீரர்களின் மனைவிகளுக்கும், அவர்கள் ஆதரணைக்குட்பட்டவர்களுக்கும் ஆங்கில அரசாட்சியார் வாரந்தோறும் ஏழுலட்சத்து ஐம்பதினாயிரம் பவுண், அதாவது பதினொருகோடியே இருபத்தைந்து லட்சரூபாய் கொடுத்து வருவதாகத் தெரியவருகிறது.

**அர்ச். இராயப்பர் ஆலயம்.**—ரோமாபுரியிலுள்ள ஷை ஆலயத்தின்கண் வருகிற வெள்ளிக்கிழமை 5உ யன்று காலஞ்சென்ற நம்முடைய பிதா 10-ம் பத்திநாதரின் ஆத்தும இளைப்பாற்றிக்காகப் பெரிய பாடற் பூசை செய்து ஒப்புக்கொடுக்கப்படும். சர்வேசுரன் இவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளை இடுவாராக. வருகிற டிசம்பர்மீ 22உ தற்போது பாப்பானவராயிருக்கும் பரிசுத்த பிதா 15-ம் ஆசீர்வாதப்பர் பாப்பானவராக கிரீடம் தரிக்கப்பட்டதின் முதல் வருஷாந்திரக் கொண்டாட்ட நாளாகும். சர்வேசுரன் இவரை இவருடைய சத்துருக்களுக்குக் கையளிக்காமல் ஆதரித்துக் காப்பாற்றுவாராக.

---

## நண்பர்களுக்கோர் நயமொழி.

(இதனை முழுதும் வாசிக்க)

---

நாம் சென்றமீ பத்திரிகையின் அநுபந்தத்தில் கேட்டுக்கொண்டபடி அநேக நண்பர்கள் அடுத்த வருஷச் சந்தாவை அட்டியில்லாமல் அனுப்பிவைத்தார்கள். இவ்வாறே மற்ற நண்பர்களும் நம்மேல் அன்புகூர்ந்து 1916 ஹூச் சநதாவை முன்னதாக அனுப்பிவைப்பார்களானால், நமது சந்தோஷத்துக்கு அளவு சங்கியை இருக்காது. அன்னோர்களுக்கு நாம் அனவரதமும் நன்றியுள்ளவர்களா யிருப்போம். காலம் கருப்புக்காலமா யிருக்கிறது. சீமைச்

சாமான்களுக் கெல்லாம் விலையேறி விட்டது. இப்படியிருந்தும் நாம் நமது "நல்ல ஆயன்" சந்தாத்தொகையை உயர்த்தினேமில்லை. இவை யனைத்தையும் நமது நண்பர்கள் நன்ருய் யோசித்து 1916 ஹுச் சந்தாவை முன்னதாக அனுப்பி வைக்க அவர்களை விநயமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தா பாக்கியுள்ளவர்கள் தங்கள் பாக்கியோடு அடுத்த வருஷச் சந்தாவையும் சேர்த்தனுப்பி நம்மைச் சன்மானிப்பார்களாக.

சென்ற மாதத்தில் பணமனுப்பிய நண்பர்களிற் சிலர், தங்கள் சந்தாநம்பரைக் குறிக்காது போய்விட்டார்கள். இப்படிச் செய்வதனுல் நமக்குத் தொந்தரவு நேர்வதோடு சந்தா தாக்கல் விஷயமாய் பிழையும் நேரிடுகின்றதென்று நாம் பலகாலுஞ் சொல்லியிருக்கிறோம். இக்காலும் சொல்லுகிறோம். இதனை நண்பர்கள் கவனிப்பார்களாக.

இன்னொரு விஷயம்: 1916 ஹுச் சந்தாவை சென்ற மாதத்தில் அனுப்பியுள்ளவர்களிற் சிலர் இனும் புத்தகத்தின் தபாற் செலவுக்காகக் கேட்ட ஒரு அணு அனுப்பினுர்களில்லை. இன்னோர்களுக்கு இனும் புத்தகம் அனுப்பத் தடைபடும் என்பதை இதன் மூலமாய் அறிவிக்கிறோம். பின்னுல் அவர்கள் எம்மீது குறை கூருதிருப்பார்களாக! 1916 ஹுத்துக்குச் சந்தாவை பூர்த்தியாய்க் கட்டுகிறவர்களுக்கே இனும் புத்தகம் அனுப்பப்படுமென்பதையும் கவனிக்கக் கோருகிறோம்.

பத்திராதிபர்.

## வீரமாமுனிவர் ஔஷதசாலை.

வீரமாமுனிவரின் சுகந்தருமாத்திரை யானது நானுவித வியாதிகளையும் கண்
டித்துப் போக்கும் அதிசய குணத்தைக் கொண்டிருப்பதனுல் அதற்கு "சர்வரோக
நிவாரணி" யென்னும் பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கட்டுக்கதையல்ல; கை
கண்டது. பல்லாயிரம் பேர்களால் பரீட்சிக்கப்பட்டது. மேலும் பேர்போன ஓர் கத்
தோலிக்குக் குருவானவரால் ஏழைகளின் பிரயோஜனத்துக்காக நவமாகக்கண்டு பிடிக்
கப்பட்டது. கத்தோலிக்குக் குருவானவர்கள், கன்னியாஸ்திரிகள், கிறிஸ்துவர்கள் முத
லியோரால் கையாளப்பட்டுவருவது. அநேக நற்சாட்சிப்பத்திரங்களைப் பெற்றுள்ளது.
ஒவ்வொருவரும் தம்தம் வீடுகளில் கையிருப்பாய் வாங்கி வைத்துவைக்கத் தக்கது.
குணமே தவிர குற்றம் ஒருபோதும் செய்யாதது. பத்தியம் வேண்டாதது. இதனை
இதுவரையில் வாங்கி பரீட்சியாதவர்களும், அல்லது வாங்கி அரைகுறையாய் அவசர
யாய் உபயோகித்துப் பயன் பெருமல் கைவிட்டவர்களும், மறுபடியும் அவசியம் வாங்கி
பரீட்சித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள்.

விலை 100 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு ரூ. 1—0—0.
தபாற்செலவு, வீ. பி. சார்ச்சு உட்பட ... ,, 1—3—0

வேண்டியவர்கள் பின்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

C. A. Silveira,
Branch Office,
2/74, Broadway, Madras.

சி. ஏ. சில்வெயிரா,
பிரான்ச் ஆபீசு,
2/74, பிராட்வே, மதுராஸ்.

## தருமகுண நண்பருக்கு ஓர் விண்ணப்பம்.

சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த சூளையில், 30-வருடத்துக்குமுன் சுதேச பிள்
ளைகளுக்குக் கல்வி கற்பித்து, அநாதபிள்ளைகளை ஆதரித்துச் சிறு குழந்தைகளை வளர்த்து, சகல
கிறிஸ்துவர்களுக்காக வேண்டிக்கொண்டுவர அர்ச். ஐந்துகாய பிரான்சிஸ்கு என்பவரின் மூன
ரும்சபை சுதேச கன்னியர்மடம் ஒன்று ஸ்தாபகமானது.

அம்மடத்தைத் தற்போது விஸ்தரித்துக் கட்டவேண்டுமென அதிமேற்றிராணியார் உத்தர
வளித்தார். தருமமெடுத்து கன்னியருக்கான கட்டிடத்தைக் கட்டினே மாயினும் பூச்சுவேலையும்,



கதவு ஜன்னல்கள் வேலையும் முடிவுபெருத வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய சந்
தர்ப்பத்தில் அநாதபிள்ளைகளுக்காகக் கட்டப்பட்டிருந்த சாலை சென்ற நவம்பர் மாதம் 7-ந் திகதி
நடு இரவில், இவ்விடம் பெய்த அகோர மழையால் சுவர்கள் நனைந்து பாதி வீடு இடிந்து விழுந்து,
சாமான்களெல்லாம் பொடிப் பொடியாய் நொறுங்கிப்போயின. எமது மடத்தின் பாதுகாவல
ரான அர்ச். சூசையப்பருடைய அற்புத சகாயத்தால் மேற்கூரை விழுமுன் திடீரெனப் பிள்ளை
கள் எழுப்பிவிடப்பட்டு, அகால மரணத்தினின்று காப்பாற்றப்பட்டார்கள். பிதாப் பிதாவான
அர்ச். சூசையப்பருக்குச் சதா நன்றியுள்ளவர்களா யிருக்கிறோம்.

இருக்க இடமின்றி தவிக்கும் ஏழை அநாதபிள்ளைகள்மட்டில் மனமிரங்கி உதவிசெய்யக்
கேட்டுக்கொள்ளுகிறோம். உங்கள் நன்றிக்குக் கைம்மாருக உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்
கும் ஆத்தும சரீர நலங்களுக்காக நாமும் சகோதரிகளும் அநாத பிள்ளைகளும் மறவாமல் நாடோ
றும் வேண்டிக்கொண்டு வருவோம். நல்லாயன் சந்தாதாரர் கொஞ்சம் தருமம் அனுப்புவார்களாக.

| | | | |
|---|---|---|---|
| ஏற்கனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 163 | 6 | 0 |
| Mr. S. மரியசூசைபிள்ளை (கடம்பூர் எலும்பு வியாபாரி) | 3 | 0 | 0 |
| ,, A. அற்புதம்பிள்ளை (Taiping) | 5 | 0 | 0 |
| ,, J. Salay, (Ipoh) | 20 | 0 | 0 |
| ,, திருவெங்கிடன் (Maungmya) | 8 | 0 | 0 |
| ,, அநந்தநாதபிள்ளை (Rayadrug) | 1 | 0 | 0 |
| ஆக மொத்தம் | 200 | 6 | 0 |

S. Jos. Balasami,
*St. Andrew's Church, Choolai P. O. Madras.*,

## யாழ்ப்பாணம் அச்சுவேலி யந்திரசாலைப் புஸ்தகங்கள்.

திருச்செல்வர்காவியம் ரூ. 1 அ. 4
செபநந்தாவனம் மார்பின் 4
சிமைச் சிகப்புத்தோல்
தங்கரேக்கிற் சிலுவை 8

அம்மானை வகைகள்.

தேவமாதா அம்மானை 8
அர்ச். யாகப்பர் அம்மானை 6
ஞானசவுந்தரி அம்மானை 8
அர்ச். அலசம்மானை 6
சந்தந்தோனியார் அம்மானை 4
அகினேசகன்னி அம்மானை 4
தேவசகாயம்பிள்ளை அம்மானை 6
அர்ச். செபஸ்தியார் அம்மானை 6
தீத்தூஸ் அம்மானை 4
அர்ச். சவேரியார் அம்மானை 8
திருச்செல்வர் அம்மானை 12
திருச்செல்வர் அம்மானை தற்க சாஸ்திரப் படலம் 3
சங்கீக்கிலாவின் தவசதிக அம்மானை 3

நாடகவகை.

எஸ்தாக்கியார் நாடகம் (கருநாடக மெட்டு) 8
வரப்பிரகாசன் நாடகம் (சங்கீக்கிலாவின் அற்புதம் 8
தாவீதரசன் சண்டை அல்லது கோலியாத்து நாடகம் 8

டிறமா அல்லது சபாவகை.

ஞானசவுந்தரி நவரஸசபா 8
எஸ்தாக்கியார் சபா அணு 8
சங்கிலிராசன் டிருமா 8
தேவசகாயம் பிள்ளை டிருமா 6
சவீனகன்னி சபா 8
யோசேப்பு டிருமா 5
சந்தியாகுமையோர்சகாயசபா 5

செய்யுள் வகை.

சம்சோன் கதை (தேசிங்கு ராசன் கதை மெட்டு 2½
கிறிஸ்துசமய கீர்த்தனம் 8
தேவசகாய சிகாமணி மாலை 6
ஞானத்தச்சன் நாடகம் 6
சத்தியவேத பத்திக்கீர்த்தனை (கீர்த்தனை தேவாரம் முதலியன) 6
திருப்பாத்திரட்டு (பிள்ளைத்தமிழ்) 1½
தோத்திரகீதம் (மிக்கேல்மாலை) வீரமாமுனிவர் செய்த செபமாதியன 1½
அர்ச். சூசையப்பர் கீர்த்தனம் 1
திருவாசகப் பதிகம் ½
திருமருதமடுத்தேவதாயார்மேல் சங்கீதப்பாக்கள் (சபாமெட்டு) 1½

கதைகள்.

ஊசோன் பாலந்தைகதை 8
விநோதகதாமாலை (பல சன்மார்க்கவிநோதகதைகளையுடையது 4

தபசுகாலத்துக்குரியவை.

சிந்தாகுலத்திரட்டு அணு 3
காலிங்கராயர் புலம்பல் 2
வியாகுல ஒப்பாரி 2
திருப்பாடுகளின்மேல் ஒப்பாரி 1
தேவமாதாவின் ஒப்பாரி 2
வியாகுமாமரி புலம்பல் 1
திருமரியன்னை பிரலாபம் 1
வியாகுலமாமரி விசனசாகரம் 1
வியாகுலக்காதல் 1

புறேடெஸ்தாந்தர் முதலிய பிரிவினை காரருக்கு.

பிரிவினைமதங்களும் பைபிளும் (5 பிரிவுஞ் சேர்த்து 5
திருச்சபைத்தத்துவத் தீபிகைகும்மி 2

வைத்தியவகை.

பாலவைத்தியம் (இங்கிலீஷ் தமிழ் முறைகள்) 8
பிரசவவைத்தியம் ஷை 8
நயன வைத்தியம் (தமிழ்முறை) 4

பொதுப் புஸ்தகங்கள்.

காரிகை மூலமும் உரையும் (சிவசம்புப் புலவர் செய்த) 8
சன்மார்க்க சதகம் 2
உரிச்சொல் நிகண்டு 5
போதனு கீர்த்தனை 4
பழமொழிப் போதனை 1
சுகுணநெறிப் போதம் 1

நமது விலாசம் :—ச. தம்பிமுத்துப் பிள்ளை, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ. 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ. 3,596-6-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அனதக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன்வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கிகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவரும் கொடுத்தால் பெருந் தொகை யாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில்,

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3,725 | 6 | 6 |
| Mr. C. Lazarus (Mandalay) | 1 | 0 | 0 |
| ஓர் நன்கொடை | 18 | 2 | 0 |
| Mr. A. U. பெர்நான்தெஸ் (மதுரை) | 3 | 0 | 0 |
| ,, அநந்தநாத பிள்ளை | 1 | 0 | 0 |
| ,, Powell | 1 | 0 | 0 |
| ஆகமொத்தம், | 3,749 | 8 | 6 |

## எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தருமம்.

நண்பர்களே!

சென்ற வருஷம் நாம் அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தர்மமென்று அறிக்கையிட்டு, செய்துகொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி, எமக்குதவிபுரிந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்குப் பங்காளிகளான உதார குணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்துவர்களுக்கும் எடப்பாடி நேயர்களுக்கும் அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1914-ஆம் எப்ரல் மாத முதல் 1915-ஆம் மார்ச்மீ 31உ வரையில் நேயர்களால் அளிக்கப்பட்ட நன்கொடை ரூபாய் 193-2-0. சென்ற பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்களை முடிவாக்கவும், விசாரணைக் குரு வசிக்கும் பங்களாவை மராமத்துச் செய்யவும், கோவில் கட்டிட விர்த்தியைப் பூர்த்திக்குக்கொண்டு வரவும் செலவான தொகை ரூபாய் 2620-8-4. இவ்விஷயமாய்த் தற்காலம் நமக்கு ஏற்பட்டிருக்கும் கடன் ரூபா 738.

நண்பர்களே! தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி சத்திரங்கள் முடிவிற்கு வந்தன. ஆகிலும், பழைய சத்திரங்களை மராமத்துசெய்யப் போதுமான பணமில்லாமையால் அவ்வேலைகளை நிறுத்தவேண்டி நேரிட்டதைப்பற்றி விசனிக்கிறோம். தர்ம சிந்தையுள்ள அர்ச். நாயகியின் ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. அவளது மகிமைக்காக கடனுளியாளேம் என்பதைச் சிந்தித்து எமதுபேரில் இரக்கம் புரிவார்களென்பது திண்ணம். நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதேயாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள்பேரில் பூரணமாய்ப் பொழியக் கிருபை செய்யவேணுமென்பது எமது பிரதிதின வேண்டுகோள்.

இப்படிக்கு,
எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாளின் ஊழியனுகிய, விசாரணைக் குரு
ஜே. ஞானதிக்கம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கனவேவரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 868 | 12 | 0 |
| Mr. அநந்தநாதபிள்ளை, நெல்லூர் | 1 | 0 | 0 |
| ,, அந்தோனி, பெருமுச்சுபாளையம் | 2 | 8 | 0 |
| ,, இஞ்ஞாசிமுத்து, காவடிக்காரனூர் | 2 | 8 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 872 | 0 | 0 |

OFFICE OF ... 13 DEC 1915 ... MA...

The Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுபேகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம் 13. } டிசம்பர், 1915. { இலக்கம் 12

## THE NATIVITY OF OUR LORD.
## கர்த்தர் பிறந்த திருநாள்.

நாம் வசிக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டிற் கொண்டாடப்படும் வருஷாந்தர உற்சவங்களுக்கும் (Anniversaries) ஜூபிலி முதலிய (Centenaries) சுபதினங்களுக்கும் கணக்கு வழக்கில்லை. இவ்வருஷத்தில் மகா நப்போலியனைப் (Napoleon, the Great) பற்றியும் நெல்சனைப் (Nelson) பற்றியும் பிராஞ்சு தேசத்திலும், இங்கிலாந்து தேசத்திலும் சுபதினங்கள் கொண்டாடப்பட்டன. தற்போது ஐரோப்பா தேசத்தில் நடக்கும் அகோர யுத்தத்தின் வருஷாந்தர நாள் சமீபத்தில் கொண்டாடப்பட்டது யாவரும் அறிந்த விஷயமே. நம் இந்தியாவிலும் டில்லி மாநகரில் நமது மாக்ஷிமை தங்கிய 5ம் ஜியார்ஜ சக்கரவர்த்தியவர்களுக்கு முடிசூட்டின நாளின் வைபவத்தை வருஷாவருஷம் கொண்டாடி வருகிறோம். இவை யெல்லாம் அவரவரின் தேசாபிமானத்தைக் காட்டத் தக்கவைகள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால், உவாட்டர்லு (Waterloo) சண்டையைப்பற்றியும், டிராபல்கார் (Trafalgar) வெற்றியைப்பற்றியும் நடந்தேறும் கொண்டாட்டத்துக்கும் நாம் இம்மாதம் 25-ம் தேதி கொண்டாடப்போகும் உந்நத மகோற்சவத்துக்கும் எவ்வளவோ ப்ராதூர வித்தியாசம்! பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும், பகலுக்கும் இரவுக்கும், சர்வேஸ்வரனுக்கும் சாத்தானுக்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ அவ்வளவு வித்தியாசம் உண்டென்று சொன்னாற் சொல்லலாம். ஒரு ஜாதியார் வேறொரு ஜாதியார் பேரில் அடைந்த ஜெயத்தைக் கொண்டாடும் நாம், நம்முடைய நரஜென்மம் சேசுநாதர் சுவாமி வழியாய்ப் பசாசின்பேரில் அடைந்த வெற்றியை எவ்வளவோ மேன்மையாய்க் கொண்டாடவேண்டும். அங்கிலேயர், பிராஞ்சியர், அமெரிக்கர் முதலியவர்கள் தாங்கள் சுயாதீனம் அடைந்த தினங்களைக் கொண்டாடுவதைக் (The day of the granting of Magna Charta, The day of the Republic, The Independence day) காண்கிற நாம், நம்மைப் பசாசின் அடிமைத்தனத்தினின்று மீட்டிரக்ஷித்து நம்மைச் சர்வேஸ்வரனுடைய பிள்ளைகளாகவும் மோக்ஷ இராச்சியத்தின் சுதந்தரவாளிகளாகவும் செய்தவரான சேசுக்கிறிஸ்துநாதர் பிறந்த

நாளை நாம் எவ்வளவோ உசிதமாய் அநுச
ரித்து, மேன்மையாய்க் கொண்டாடக் கட
மைப்பட்டவர்களாய் இருக்கிறோம். அன்
றியும், ஆதாம் முதற்கொண்டு அர்ச். ஸ்நா
பக அருளப்பர் வரையிலுமிருந்த சகல
பிதாப்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும்
இந்நாளைக்காக எவ்வளவு ஆவலோடு ஏங்
கித் தியங்கி எதிர்பார்த்திருந்தும் அந்தப்
பாக்கியமானநாள் அவர்களுக்குக் கிடைக்
கவில்லை. அவர்களுக்குக் கிடைக்காத அந்
தப்பாக்கியம் நமக்குக் கிடைத்ததற்காகச்
சர்வேஸ்வரனுக்கு நன்றியறிதல் செலுத்த
வேண்டியதல்லவா? அதுவுமல்லாமல் அச்
சுபதினத்தைத் தகுந்தவிதமாய்க் கொண்
டாட நம்மாலியன்ற பிரயாசை எடுத்துக்
கொள்வது நமது கடமையல்லவா? அத்
திருநாளில் நாம் அடையப் பிரயாசைப்பட
வேண்டிய பிரதான பலன் சமாதானம்.
ஏனெனில், நாம் கொண்டாடும் மகோற்
சவமானது சமாதானப் பிரபுவின் (Prin-
ceps Pacis) ஜனனம். அவர் பிறக்குமுன்
சண்டை சச்சரவுகளால் அலைக்கழிக்கப்
பட்டிருந்த உலகம் அவர் பிறந்த சமயத்
தில் சமாதானத்தில் குடிகொண்டிருந்தது.
அவர் பிறந்த அன்றைக்கே சம்மனசுக்கள்,
“பூவுலகில் நல்ல மனதுள்ளவர்களுக்குச்
சமாதானம் உண்டாவதாக” என்று பாடி
னார்கள். அவருடைய போதனையோ: சமா
தானமே. ஏனென்றால் “சமாதான முள்ள
வர்கள் பாக்கியவான்கள்” என்றார். அவ
ருடைய வாழ்த்தலும் மினவுதலும் சமா
தானமே. அதேனென்றால், “உங்களுக்
குச் சாமதானம் உண்டாவதாக “வென்று
வாழ்த்தி யிருக்கிறார், அவர் இவ்வுலகத்
தைவிட்டுப்போகும்போதும்நமக்கு வைத்
துப்போன ஆஸ்தியும் சமாதானமென்று
வற்புறுத்திக்காட்ட “என் சமாதானத்தை
உங்களுக்கு விட்டுவிட்டுப் போகிறேன்”
என்று திருவுளம்பற்றினார். ஆதலால், சேசு
நாத சுவாமியுடைய சமாதானத்தை அ
டைய விரும்புகிறவர்கள் முந்த முந்த நல்ல
மனதுடையவர்களா யிருக்கவேண்டியது.
அதாவது, ஆத்தும சுத்தி யுடையோரா
யிருக்கவேண்டும். மெய்யான சமாதானம்
நம்மிடத்தில் நிலைகொண்டிருக்க இந்த ஆத்
துமசுத்தி அத்தியாவசியம். ஆகையால் இத்
திருநாளைத் தகுந்த விதமாயக் கொண்டா
டுவ்தற்காக ஒவ்வொருவரும் எவ்விதமான
விலையுயர்ந்த ஆடையாபரணங்களைச் சேக
ரிப்போம், யார்யாருக்கு என்ன விருந்த
ளிப்போம், என்னென்ன வெகுமதி கொ
டுப்போம், யார் யாரை எவ்வித ஆடம்பரங்
களோடு சந்திப்போ மென்பவைகளைப்
பற்றி யோசிக்குமுன், நம் மிருதயத்தைச்
சற்றேயுற்று நோக்குவோமாக. நம்மூரில்
அல்லது நமது பங்கில், அல்லது நமது
குடும்பத்தில் இருக்கும் சமாதானக் குறை
வுக்கு நாம் காரணமா யிருக்கவில்லையா?
சகலத்துக்குமுன் நம்முடைய ஆத்துமம்
சர்வேசுரனோடு சமாதானமா யிருக்கிறதா?
நம்மைச் சூழ்ந்திருக்கும் சகலரோடும் நாம்
சமாதானமாயிருக்கிறோமா? என்று ஆராய்
ந்து அவைகளைத் திருத்திக்கொண்டு நல்ல
பாவசங்கீர்த்தனம் செய்யப் பிரயாசைப்
படுவோமாக. அப்படிச்செய்யாமல் வெளி
யாடம்பரங்களால் மாத்திரம் இத்திருநா
ளைக்கொண்டாடுவோமாகில், மனதிலொன்
றை வைத்துக்கொண்டு வாயினால் ஒன்
றைச் சொல்லும் பொய்யருக்கும் கபட
ருக்கும் நாம் சமானமா யிருப்பதுமன்றி,
சேசுநாதசுவாமியால் சொல்லிய வெள்ளை
யடிக்கப்பட்ட கல்லறைக்குச் சமானமாயு
மிருப்போம். ஏனெனில் அக்கல்லறையான
து எப்படி வெளியில் வெள்ளையாயும் சுத்த
மாயும்தோன்றினபோதிலும் உள்ளே அசுத்
தமாயும் அவலட்சணமாயு மிருக்கிறதோ
அப்படியே ஆத்தும சுத்தமின்றி—மனச்
சமாதானமின்றி இத்திருநாளை வெளியா
டம்பரங்களால் மாத்திரம் கொண்டாடுகிற
வர்கள் வெளியே வெள்ளையாயும் உள்ளே
அசுத்தம் நிறைந்தவர்களாயு மிருக்கிறார்
கள். ஆதலால், திருச்சபை அதற்காக நிய
மித்திருக்கும் இந்த ஆகமன காலத்தில்
நம்முடைய ஆத்துமத்தைத் தபசினாலும்,
உத்தம மனஸ்தாபத்தினாலும், நல்ல பாவ
சங்கீர்த்தனத்தினாலும் சுத்திசெய்து, தே
வசிநேகம், பிறசிநேகம், தாழ்ச்சி விசேஷ
மாய்ச் சமாதானம் முதலிய புண்ணியங்க
ளால் அதை அலங்கரித்துப் பிதாப்பிதாக்
களோடு “மேகங்களே! வானங்களே! நீதியா
னவரைப் பொழிந்தருளுங்கள்” என்று ஆவ
லோடு கூறி அவர் நமது இருதயத்தில் வந்
திறங்கும்படி அவரை வேண்டிக்கொள்ளக்
கடவோம். திவ்வியபாலன் தேவநற்கருணை
வழியாய் நமது ஆத்துமத்திற் பிறந்தவுட
னே: “உம்மைத் துதிக்கிறோம், உம்மை



வாழ்த்துகிறோம். உம்மை வணங்குகிறோம்,
உம்மை ஆராதிக்கிறோம், உமது பரமா
னந்த மகிமையை நினைவு கூர்ந்து உமக்குத்
தோத்திரம் பண்ணுகிறோம்...............”
என்று சம்மனசுக்களோடு திவ்விய பால
னைப் போற்றிப் புகழ்ந்து தொழுது தோத்
திரித்துக் கொண்டாடுவோமாக.

நல்ல ஆயன் நேயர்களும், நமது சந்
தாதாரர் யாவரும் இத்திவ்விய திருநாளின்
சகல புண்ணிய பலன்களையும், விசேஷ
மாய்ச் சமாதானத்தையு மடைந்து நீடூழி
வாழ்ந்து நித்திய சமாதானத்திற்குப் பங்
ளிகளாவார்களாக வென்பதே நமது ஏக
ஆசையும் இடைவிடாச் செபமுமாம்.

---

## THE BEGINNING OF WISDOM.

## ஞானத்திறாரம்பம்.

---

ஓ! சர்வேசுரனுடைய அ
ளவற்ற வல்லமைக்குமுன்
உலகாடம்பரமும் மகிமை
முதலியனவும் பரிதிமுற்
பனிபோல் ஒன்றுமில்லாம
ற்போகின்றன. ஓ! மனிதரு
டைய பெருமை சிலாக்கியமனைத்தும், சர்வே
சுரனுடைய மகிமைப் பிரதாபத்தின் ஒரு சிறி
தைக் காண நேர்ந்தால், கிழிந்து குப்பையிற்
போகும் கந்தைத்துணிக்குச் சமானமாகின்றன.

சூரியன் ஒன்பதுகோடி மயில்களுக்கதிக
மான தூரத்தில் இருக்கின்றது; இத்தூரத்தின
ளவைச் சரியாய்க் கண்டுபிடித்தவ ரெவர்? ஆயி
னும் வானத்திலொளிரும் வேறு சில நட்சத்
திரங்களின் தூரத்தை யோசித்தால், சூரியன்
நமக்கருகிலேயே இருக்கிறதெனல் வேண்டும்.
பிராக்கியன் என்னும் நட்சத்திரம் சூரியனைவிட
எத்தனையோ லட்சமடங்கு தூரத்திலிருப்பதாக
வானசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இத்த
கைய சேதியைக்கேட்டு நாம் ஆச்சரியப்பட்டும்
படாமுன்னர், பிராக்கியலைவிட பன்னிரண்டு
மடங்கு தூரத்தில் ஆர்க்ரேஸ் என்னும் நட்சத்
திரம் ஒன்றிருப்பதாகச் சொல்லி நமது ஆச்சரி
யத்தை யதிகப்படுத்துகின்றனர். இவ்வளவு
தானா? இவற்றைப்போல் இன்னம் மேலும் மே
லும் அதிக தூரத்தில் இருந்திமைக்கும் உடுக்
கள் எத்தனையிருக்கின்றன! அவற்றின் தூரம்
இவ்வளவென்று இலக்கத்தால் சொல்ல முடியு
மா? சொன்னாலும் எவரேனும் கண்டு பிடிப்பார்
களா?

பகைவர்க்குப் பயந்தோடும் தீக்குருவியைப்
போல் நாம் நந்தலையைப்புழுதிக்குள் மறைத்து,
சர்வேசுரனுடைய அளவற்ற வல்லமையையும்
மகத்துவத்தையும் தாழ்மையாய் அங்கீகரிக்க
வேண்டியவர்களா யிருக்கிறோம். “ஆண்டவ
ரே, நீரே உலகினஸ்திவாரத்தை நாட்டினீர்;
வானலோகமோ உம்முடைய கரங்களால் செய்
யப்பட்டது. அவைக ளழிந்துபோம், ஆனால் நீ
ரோ எப்போதும் இருப்பீர்; அவைகள் யாவும்
உடுக்குமாடைபோல் பழமையாய்ப்போம்; உடை
மாற்றுவதுபோல் அவற்றை மாற்றுவீர்; அவை
கள் மாற்றமடையும்; ஆனால் நீரோ எப்போ
தும் ஒரே சீரா யிருப்பீர்; உம்முடைய ஆண்டு
கள் தவறிவிடா.” என்னுந் தீர்க்கத் தரிசியின்
வசனங்களை அவரோடு சேர்ந்து நாமும் வாய்
விட்டுரைப்பதே உத்தமமாம்.

ஆனால் இவ்வுடுக்களினளவு, அழகு, கணக்
கின்மை முதலிய காரணங்களான் மட்டும்,
அவை, ஆழ்ந்து யோசிக்கு மறிவுக்குக் கடவு
ளின் வல்லமையைக் காட்டு மறிகுறிகளென்று
சொல்லக்கூடாது. அவை வானிலசையும் ஒழுங்
கும் நேர்மையும் தேவ நாமத்தைப் புகழ்ந்து
மகிமைப்படுத்தி, “கடவுளுக்கு நிகர் யார்?”
என்று கேட்கச் செவியுள்ள வரனைவர்க்கு
முரைப்பனபோல் தோன்றுகின்றன. எல்லாம்
வெகு வேகமா யசைகின்றன. அநேகமாய் இவ்
வசைவு மிக்க நுட்பமாயும் கண்டுபிடிக்க முடி
யாத அவ்வளவு சிக்கலுடையதாயு மிருக்கின்
றது. பொதுவாய் அதில் மூன்றுவித அசைவுக
ளுண்டாம். தன்னையே தான் சுற்றிக்கொள்வ
தொன்று; தன்னினும் பெரிய மையத்திலுள்ள
ஒரு கோளத்தைச் சுற்றி வருதல் மற்றொன்று;
மூன்றாவது மேற்கூறியன போன்ற அநேககோ
ளங்கள் ஒன்றுசேர்ந்து வானில் வெகு தொலை
யிலுள்ள வேறு சில கோளங்களை நாடிச் செல்
வதாலுண்டாகும் ஒரு பொது அசைவு. ஆயி
னும் என்னவாச் சரியம்! இந்த அசைவுகள் மின்
னலின் வேகமாய் இரவும் பகலும் இடைவிடா
மல் நடைபெறுவதாயினும், குழப்பம், ஒழுங்கீ

னம், ஒன்ரோடொன் றிடித்துக்கொள்ளுதல்,
வழியைவிட்டு விலகுதல் முதலியன ஒன்றுமே
அவ்வானிற் கிடையாதாம். சுவாலையையு மனலை
யும்வீசும் இப்பிரமாண்டமான கோளங்கள் வாயு
வேக மனோ வேகமாய் வரையரையில்லா விடம்
பரந்த விசும்பின்கண் எந்நேரமு மோடிக்
கொண்டிருந்தபோதிலும், ஒவ்வொன்றும்
தனக்கென்று குறிக்கப்பட்டு வளைவாகவேனும்,
சக்ரமாகவேனும், சரியாகவேனும், விட்டுவிட்
டேனும், இலட்சங் கணக்கான மற்ற கோளங்க
ளூடே புகுந்து செல்வதாகவேனும், உள்ள பா
தையினூடே ஒன்ரோடொன்று இடிபட்டுடையா
மல் அல்லது குறிக்கப்பட்ட நெறி யணுவளவும்
பிசகாமல் ஓடுவதை யென்னென்றுரைப்பது!
அவற்றி னசைவு எவ்வளவு ஒழுங்காயமைக்கப்
பட்டிருக்கிறதென்றால், வான சாஸ்திரிகள் ஏதா
வதொரு நட்சத்திரத்தைத் தெரிந்துகொண்டு,
அது ஐம்பது அல்லது நூறு அல்லது அநேக
நூறு வருஷங்களுக்குப்பின் வானத்தி னெப்பா
கத்தி லிருக்குமெனக் கணக்கிட்டுச் சரியாய்ச்
சொல்லக்கூடும். சென்னையிலிருந்து பம்பாய்க்கு
வேகமாய்ச்செல்லும் புகைவண்டித் தொடர்,
நமக்குமேல் வானிலசையும் நட்சத்திரங்களைப்
போல் அவ்வளவு கணக்காக அசைவதுமில்லை;
அவ்வளவு ஒழுங்காக குறிக்கப்பட்ட நேரத்தின்
படி தங்குமிடந் தங்கி போகும்போது போவது
மில்லை; அவ்வளவு உறுதியாக நம்பக்கூடியது
மல்ல; எப்போதும் நேரந்தவறுமலிருப்பது
மில்லை. இவ்விஷயத்தைப் பின்வரும் உதாரணத்
தால் நன்கறியலாம். சிலவருஷங்களுக்குமுன்
வெள்ளியானது சூரிய மண்டலத்தைக் கடந்து
சென்றவானலோக சம்பவத்தைக் கண்ணுற்றி
ருக்கலாம். ஆனால் வெள்ளி சும்மாயிராமல் தன்
கதியைநாடி யோடிக்கொண்டே யிருக்கிறது.
அப்படியானால் மேற்கூறிய சம்பவம் மீண்டும்
எப்போ நேரும்? வான கோளங்களி னோட்டம்
எவ்வளவு ஒழுங்காகக் கணிக்கப்பட்டிருக்கிற
தென்றால், வான சாஸ்திரிகள் இவ் விடைக்குத்
தக்க பதில் ஒருவித கஷ்டமுமின்றி கணக்குப்
பார்த்துச் சொல்லிவிடுகிறார்கள். அதாவது நா
மெல்லோரும் இவ்வுலகைவிட்டு நீங்கி மண்ணோடு
மண்ணாய் மக்கிய அநேக காலைக்குப்பின் அதா
வது இரண்டாயிரத்து நான்கா மாண்டில்
இன்ன நாளில் இன்ன மணியில் வெள்ளி ஒரி
ருண்ட பருவைப்போல் சூரிய மண்டலத்தை
நெருங்குவதையும், பின்னர் ஒளி நிறைந்த அப்
பாகத்தைக் கடந்து கடைசியாய் மீண்டும் தன்
பழைய தொழிலை யாரம்பிப்பதையும் காணலாம்
என்றெழுதிவைத் திருக்கிறார்கள். இது கட்டா
யம் நடைபெறும் என்பதற்கியாதொரு தடையு
மில்லை. ஏனெனில் முன்னமே இவ்வாறு எழுதி
வைத்து ஏறக்குறைய சரியாக நிறைவேறி
யிருப்பதை நாம் அறிகிறோம்.

இப்படி வானிற்றோன்றும் பெரிய அண்ட
கோளங்களுக்குள்ளும் இவ்வுலகத்திலும் சட்ட
மும் ஒழுங்கு மமைந்து எங்கணும் பரவியிருத்
தலைக்காணலாம். இவ்வாறு இயற்கை விநோதங்
களனைத்தும் கடவுளுடைய பெருமை, ஞானம்,
வல்லமை இவற்றை எக்காளமூதித்தெரிவிப்பது
போலிருப்பதுடன், பரிசுத்தமு நன்மையுமான
தேவ பயத்தை யடையும்பொருட்டு நாம்
தெரிந்து கொள்ளவேண்டிய தேவ சம்பூரணங்
களிற் சிலதை நமக்குக் கற்பிக்கின்றன.

1. ஆனால் கண்ணுக்குத் தோன்றும் சிருஷ்
டியைச் சிந்திப்பது போதாது. நமக்குத் தோன்
றுவதெல்லாம் சிருஷ்டியினொரு சிறிய பாகமே
யொழிய முழுவதுமல்ல. ஆதலால் நாம் பார்த்
தது சிருஷ்டியின் பெரும் பாகத்திலோர் சிறு
பங்கா யிருக்கவேண்டுமென்றும், மனிதனுடைய
புத்தி நுட்பத்தால் கண்டுபிடிக்கப்பட்ட எத்த
கைய உயர்ந்த யந்திரத்தைக் கொண்டு பார்த்த
போதிலும், அவன் பார்ப்பதற்கும் பாராதன
வற்றிற்கும் மலைக்குஞ் சிறு மணலுக்கு முள்ள
வித்தியாசம் இருக்கிறதென்றும் நாம் எப்போ
தும் ஞாபகத்தில் வைக்க வேண்டியது.

2. மேலும் "வானலோகங்களைப் பரப்
பிப் பூமியி னஸ்திவாரத்தை நாட்டிய" கடவுள்
இத்தொழிலை ஒருவித கஷ்டமு முயற்சியுமின்
றிச் செய்து முடித்தார் என்பதை நாம் மறக்க
லாகாது. சவுக்கார நீரில் குமிழிகளை யுண்டு
பண்ணி விளையாடும் பிள்ளை எடுத்துக்கொள்
ளும் பிரயாசைகூட, இவ் வண்டகோளங்களை
யமைக்கும்போது தேவனிடந் தோன்றவில்லை.
இவைகளை யுண்டாக்குவதற்கு அவருடைய
திருச்சித்த மொன்றே போதுமானதா யிருந்த
தாம்.

3. இதுவுமன்றி நாம்புத்தியில் வைக்கவே
ண்டியவேறொரு காரியமுமுண்டு. அதாவது, வா
னம் பூமி அவற்றிலுள்ள கணக்கற்ற சராசரங்
களைப்படைத்தால் சர்வேசுரனுடைய வல்ல
மையும் பலமும் ஏதாவது குறைந்துவிட்டதா?



சிருஷ்டியில் தோன்றும் அளவு, கணக்கு முத
லியனவற்றிற் கடங்காத ஏதுவாயிருப்பினும்,
அது கடவுளின் பெருமை வல்லமை யிவற்றைச்
சரிவரக்காட்டக் கூடியதென ஒரு நாளும் ஒப்
புக்கொள்ள இடமில்லை. சிருஷ்டிகள்யாவும் முடி
வையுடையன; ஆதலால் அவை ஆதியந்த மில்
லாச்சுயம்புவின் வல்லமையைச் சரிவரக்காட்
டுவ தெங்ஙனம்? ஒன்றுமில்லாமையிலிருந்து
கடவுள் எல்லாவற்றையும் உண்டு பண்ணினார்;
ஆனால் யாவற்றையும் ஒன்றாகச்சேர்த்துப் பார்
த்தபோதிலும் அவருக்கு அவை ஒன்றுமில்லா
மையாம். "கடவுள் முன் எல்லாவஸ்துக்களும்
இல்லாதிருந்தது போலவே இருக்கின்றன.".

ஒரு மனிதனுடைய சக்தி இவ்வளவென்று
ஏறக்குறையத்திட்டமாகச் சோதித்துவிடலாம்.
ஏதாவது பளுவான வஸ்துவைத் தூக்கும்படிச்
செய்து அவன் தூக்குஞ் சக்தி இன்னதெனக்
கணித்துவிடலாம். ஆனால் இலேசான சில வஸ்
துக்களைக்கொண்டு அவனுடைய பலத்தைச்சோ
தித்தறியமுடியாது; ஏனெனில், அவ்வற்ப வஸ்
துக்களைத் தூக்குவதற்குத் தன் முழுபலம் வே
ண்டியதில்லையே. அதைப்போலவே தற்போதி
ருக்கும் சிருஷ்டிகள் கடவுளின் அளவற்ற வல்ல
மையைச்சோதித்தறிவதற்குப் போதுமான ஆ
தாரங்களாகாவாம். அப்படியே படைப்புண்ட
வஸ்து எதுவும் அவருடைய குறையற்றதும்
முடிவில்லாததுமான வல்லமையைக் காட்டக்
கூடியதல்ல; ஏனெனில், பிறப்பிறப்புள்ள சிரு
ஷ்டி அவையில்லாத தொன்றைக் குறிப்பது
முடியாத காரியம். அவருக்கிஷ்ட முண்டானால்
இவ்வுலகம், வானம் முதலியவற்றைப்போல்
வேறு உலகங்களையும் அண்டகோளங்களையும்
உண்டாக்கலாம்; அவை தம் அளவிலும் விசா
லத்திலும் இப்போ திருப்பவற்றைவிட அநேக
மடங்கு பெரியனவா யிருக்கலாம். அப்படியே
ஒன்றுக்கொன்று மீசுரமான பலகோளங்களை
உண்டுபண்ணலாம். ஆயினும் அவருடைய வல்ல
மை சற்றேனுங்குன்றா தென்பது திண்ணம்.
அது எப்போதும் முடிவற்றதும் அளவற்றதும்
குறைவற்றதுமாயிருத்தல் வேண்டும். "கடவுள்
இதைவிட அதிகமாயொன்றும் செய்யமுடியா
து; தம் சிருஷ்டி வல்லமையின் எல்லையையடை
ந்துவிட்டார்" என்று எக்காலத்திலும் எவரா
லும் சொல்லமுடியாது. ஏனெனில் அதற்கு
எல்லையில்லை. சகல வல்லமையும் நிறைந்த தடுக்
கமுடியாத "பரம்பொருளுக் கஞ்சாதார் எவ
ரே? ஞானாகமத்தில் தீர்க்கதரிசியானவர் ஆநந்
தப்பரவசராய் மொழிந்தவற்றை இங்கு நோக்
கற்பாலதாம். "ஏனெனில் மேலான வல்லமை
யுமக்குண்டு; அது உம்முடன் மாத்திரம் எப்போ
தைக்கும் குடிகொண்டிருக்கிறது; உமது கரத்
தின் பலத்தை யெதிர்ப்பவனார்? உள்ளபடி யுமது
சமுகத்தில் பூலோகம் எப்படியிருக்கிறதென்
னில், திராசில் சிறுகனத்தைக்கொடுக்கும் சிறு
மணியைப்போலும், பூமியில் விழும் அதிகாலப்
பனியின் ஒரு துளியைப்போலுமாம்." ஆனால்
உவமை வாயிலாய் இதை விவரிக்கப்புகுந்தால்
பயன்படாது; அவருடைய பூரணத்தன்மை
களை விவரிக்கமுயலும் நாவானது ஒன்றும்
சொல்லமுடியாமல் தயங்குமாம். அறிவிலும்
ஞானத்தினு மிகுந்த சாஸ்திரிகளும், ஆதியந்த
மில்லாமல் அணுகமுடியாத ஒளியின்கண் வசிக்
கும் பராபரனுடைய தேவ மகத்துவ குணாதி
சயங்களை விரித்துரைக்க முயல்வது ஒரு சிறு
குழந்தை குளறிக்குளறிப் பேசுவது போலவே
இருக்கும்.

அவருடைய இயல்பையும் குணத்தையும்
மனிதவழியில் கூடியவரையில் தெரிந்துகொள்
வதே இவ்வுலகில் விசேஷ ஞானமாம். சிருஷ்
டிக்குரிய விதமாய் அவருக்குப் படிந்தும் பயந்
தும் அவரை நேசித்தும், அதாவது தான் அவ
ருக்குமுன் ஒன்றுமில்லை யென்பதை முழுவது
முணர்ந்து, மனதிலிருத்தி யொழுகுவதே மெய்
யான பூரணத்தன்மையாம். ஓ! அவரின் மேன்
மையைச் சொல்லும் கணக்கற்றசாட்சிகள் மத்
தியில் நாம் திரியும்போது, குதிரை, கழுதை,
முதலிய மிருகங்களைப்போல், யாதொரு சிந்த
னையறிவுமின்றி அவற்றை நோக்காமல், நம்மு
டைய அறிவை யுபயோகித்து ஒவ்வொரு சிரு
ஷ்டியும் தன் வழியாகக் கற்பிக்கு மேலான பா
டங்களைத் தெரிந்துகொள்ள முயலுவோமாக.
கடலில் உற்பத்தியாகும் சங்கொன்றை யெடுத்
துக் காதில் வைத்தால், அக்கடலினின்று தான்
வந்ததற் கடையாளமாக ஏதோ முணு முணுப்
பதுபோல், ஒவ்வொரு சிருஷ்டியும் தன்னைப்ப
டைத்த உன்னதக் கடவுளைப்பற்றி யேதேனும்
சொல்லாமற் போகாது. காலங்கழிகிறது; வரு
ஷங்கள் வேகமாய்ப்போகின்றன; நம்மில் மிக்க
இளமைப் பருவத்தையுடையவர்களும் வெகு
துரிதமாய்ப்பெரியவர்களா யிச்சீவியத்தினின்று
மொழிகின்றனர். பிறகு சாயலழிந்துபோம்.
உண்மையுள்ளதும் அழிவில்லாததுமான நித்தி

யம் நமது ஆச்சரியப்படும் பார்வைமுன் தோன்றும். இயற்கையில் தோன்றும் பொருள்கள் மங்கலாக நமக்கு இப்போது நினைப்பூட்டுகின்ற கடவுளின் வல்லமையும், சிருஷ்டியிற்றோன்றி பிரதி பலிக்கப்படும் அவருடைய தேவலட்சணங்களும் அப்போது தெளிவாக நமக்குப்புலப்பட நாம் அவற்றை விரும்புவோம். இப்போதோ அவற்றை வெகுமங்கலாகவும் கண்ணாடியிற்றோன்றுவது போலவும் பார்க்கிறோம். ஆயினும் நம்மிடம் நம்பிக்கையைத் தூண்டி மேலும் மேலும் அறியுமாசையை எழுப்பப் போதுமானதை நாம் இங்கேயே பார்க்கிறோம். ஆனால் திரைமூடி விலகவே அரசர்க்கரசனும், ஆண்டவர்க்காண்டவருமாகிய சர்வேசுரன் நாவாலறையொண்ணு மகிமைப்பிரதாபத்துடன் தன் தேவ வடிவை இமைக்கொட்டாமற் காணக்கிடைக்கும் போது, நாம் ஆநந்த வெள்ளத்திலாழ்வோம். "அவருடைய மகிமைப்பிரதாபந் தோன்றுகையில் நாங்கள் திருப்தியடைவோம்."

இதற்கு மத்தியில், உலகிற் காணும் இயற்கை விநோதங்களுக்குள் ஒளிந்திருப்பவர்போல் தோன்றும் நித்தியக் கடவுளிடம் அடிக்கடி நமது மனதைச் செலுத்தி தியானிப்போமாக. அநேகர் இக்காலத்தில் செய்வதுபோல, சிருஷ்டிகரைவிட்டுச் சிருஷ்டியை யாராதிக்கக்கூடும். இது மகாப் பிசகு; இது விஷயத்தில் நாம் வெகு ஜாக்கிரதையாயிருத்தல் வேண்டும். நம்முடைய ஆதி அந்தம், இம்மையினும் மறுமையினும் சந்தோஷம், நம்பிக்கை, மகிமை முதலிய எல்லாவற்றிற்கும் வற்றாத ஊருணியாகிய முழுமுதற் கடவுளை நாளுக்குநாள் அதிக மதிகமாய்த் துதித்துச் சேவிப்பதற்குரிய சாதனங்களாக படைப்புண்ட பொருள்களனைத்தையும் நாம் உபயோகிக்க முயலவேண்டுமென் றறியக்கடவோமாக.

## சிருஷ்டியுஞ் சிருஷ்டிகரும்.

### கொச்சகக் கலிப்பா.

1. பொற்றகடு போலொளிரு நீலநிறம், பொன்றியள
வற்றதென விளங்குமுப ரணிமருவும் விசும்புமதிற்
குற்றமில யாவையுந்தங் குறையிலதி வியுடைய
சுற்றமெனு முதற்பொருளைச் சுட்டியுரை செய்திடுமால்

2. களைப்பின்றி நிதமோடிக் கவின்பெருக் புவிமீதில்
ஒளிப்பிலிற்றுந் தினகரனு மோடுமிட மெங்குந்தனை
யுளிப்பவனு மணைப்பவனு மதிவலிகொள் கர்த்தனென
அளப்பருந்தன் மகிமையினு லனைவருக்கு மறைந்திடுமால்

3. மாலையெனும் பாவை மருவிபிருண் மூடகதிர்
வேலைதனை யெடுத்துவியன் காதையைத் தொடங்கி
வேலைதவழ் கவன வியன்புவிக்குத் தன்பிறப்பை
பாலை நிகர்மதியம் பரிந்தோடிப் பாடிடுமால்

4. பனிமதியைச் சூழ்ந்துநிதம் பாண்மியிருந் தாரகைகள்
கனிமகிழுங் கோள்களெனு கந்தா விளக்கமெலாம்
இனிமையுடன் றவழ்ந்தேகி எத்திசைக்கு முறையாகத்
தனிமருவு முண்மையினைச் சாற்றிநிலை பாப்பிடுமால்

5. ஊமைகளா மிருள்புவி சூழ்ந்தோடிடிலை னுண்மைநெறி
நீமமுறு கோளங்கள் நிறுவாதிருந் திடிலென்
வாம நிறை யறிவணங்கின் வன்னைச் செவிமருவி
ஏம நிரைந் தன்னவவையின்ப கடலாழ்ந் திடுமால்

6. நீங்குரறு மவைக்குரிய தேமொழியுங் காரணில்
வீங்குமறிவார் செவியில் வீழ்ந்திடுமான் மேனுமவை
பாங்குடனல் லொளிவீசிப் பாடுமுயர் கீதமெழில்
தேங்குபுக ழீசனெமைச்செய்துவித்தா னென்பதுவே.

S. Selva Raju.

---

## St. LUKE, THE EVANGELIST.

## சுவிசேஷகரான அர்ச். லூக்காஸ்.

முன் தொடர்ச்சி.

லூக்காஸ் தம்முடைய சுவிசேஷ புஸ்தகத்தை மனந்திரும்பின "புறஜாதிக் கிறிஸ்துவர்களுக்கு" மாத்திரம் எழுதினுரென்று சொல்வதும் பிசகாம். ஏனெனில் அவர் தமது உத்தம குருவும் ஆசிரியருமாகிய அர்ச். சின்னப்பர் உரைத்த வாக்கியத்துக் கிசைந்து: "சுவிசேஷத்தைப்பற்றி நான் கூச்சப்படேன். ஏனெனில் முந்த யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் (அதாவது அஞ்ஞானிகளாகிய இதர ஜாதியார்) விசுவசிக்கிற எவனுக்கும், அது இரட்சண்ணியமாகிய தேவ வல்லபமா யிருக்கின்றது" (உரோமர். 1. 16) என்று முதல் யூதர்களுக்கும், பின்னர் புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தைப் போதித்து இரட்சண்ணிய வழியைக் காண்பிக்க வெகு ஆவல் கொண்டிருந்தார். அதற்காகத்தான் யூத கிறிஸ்துவர்களுக்கும் ஆறுதலான பற்பல சுப சம்பவங்களைச் சுவிசேஷத்தில் வரைந்திருக்கிறார். இதற்கு அத்தாட்சியாக, தேவபத்தியில் சிறந்தோங்கின யூதராகிய சக்கரியாஸ்



குருவின் குடும்பத்தைப்பற்றிய வரலாற்றை அதில் காணலாம். கன்னி மரியாயின் திருக் குமாரன் தாவீ தரசனுடைய சிம்மாசனத்தை மீளவும் சுதந்தரித்துக் கொள்வார் என்று சம்மனசானவர் தேவ கன்னிகைக்கு மொழிந்து மங்களம் கூறினதை அதில் வாசிக்கலாம். தேவப் பிரஜைகளாகிய யூதர்களின் பேரில் சர்வேசுரன் காண்பித்த இரக்கத்தையும், அவர்களுக்குச் செய்த எண்ணிறந்த உபகார நன்மைகளையும் இன்பமாய் எடுத்து விளக்கும் மாக்னிபிக்காத் (Magnificat), பெனதிக்துஸ் (Benedictus) என்னும் தேவ சங்கீதங்களை அதில் வாசிக்கலாம். உலக இரட்சகர் பிறந்த உடன், முந்த முந்த யூதர்களாகிய இடையர்களைத் தம்மிடம் அழைத்த வர்த்தமானத்தையும், மெஸ்ஸியாஸ் தாவீ தரசனின் நகரில் பிறந்து வளர்ந்ததையும், அவர் வரிவேதத்தின் முறைமைகளையும் சடங்கு சாங்கியங்களையும் அநுஷ்டித்ததையும், மெஸ்ஸியாவை, சிமையோன் முனி இஸ்ருயேல் பிரசையின் மகிமையென்று ஆனந்த பரவசத்தோடு தீர்க்கதரிசனமாய், நுங்கிமித்திஸ் (Nunc Dimittis) என்னும் தேவ பாடலைப் பாடினதையும், கிறிஸ்துநாதர் தம்முடைய அற்புத உபதேசங்களாலும், சுகிர்தி கிருத்தியங்களாலும், தேவ வல்லப புதுமைகளாலும் இஸ்ருயேல் நாடாகிய பலஸ்தீனு (Palestina) வைச் சிறப்பித்து அர்ச்சித்ததையும், தம் ஜீவிய காலமெல்லாம் அதிலேயே செலவழித்ததையும் பிரபல்லியமான புதுமைகளை யூத ஜனங்களுக்காக விசேஷமாய்ச் செய்ததையும், தம் சீஷர்களாகவும் அப்போஸ்தலர்களாகவும் யூதர்களையே தெரிந்து கொண்டதையும் பற்றி லூக்காஸ் சுவிசேஷத்தில் எழுதி வைத்ததானது, யூத கிறிஸ்துவர்களை விசுவாசத்தில் திடப்படுத்துவதற்கும், அவர்களுக்கு விசேஷ ஆறுதல் கொடுப்பதற்கும் ஏற்றவைகளென்றே சொல்லவேண்டும்.

மேலும் இந்த யூத ஜனங்கள் மெஸ்ஸியாவாகிய கிறிஸ்துநாதரை ஏற்றுக்கொள்ளாமல் அவரைத் தூஷணித்துச் சிலுவையில் அறைந்த பெரும் அக்கிரம சதி துரோகத்தையும், அதினுல் அவர்கள் தேவ கோப சாபத்துக்குள்ளான பயங்கரமான வர்த்தமானத்தையும், லூக்காஸ் எழுதிக்காட்டி; பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களை யெல்லாம் சம்பூரணமாய் நிறைவேற்றின மெஸ்ஸியாவாகிய சேசுக் கிறிஸ்துநாதரை யூத ஜனங்கள் அங்கீகரித்து, விசுவசித்து, இரட்சண்ணியத்தைக் கைக்கொள்ளவும், புதிதாய் மனந்திரும்பின யூத கிறிஸ்துவர்களும் தாங்கள் கைக்கொண்ட விசுவாசத்தில் இன்னும் ஸ்திரப்படவும் வற்புறுத்துகிறார்.

அர்ச். சின்னப்பர் தம் இனத்தாரும், மாம்ச உறவினருமாகிய யூத ஜனங்களைப் பற்றி விசாரப்பட்டு, அவர்களை இரட்சிக்க அதிக உருக்க பாச பட்சத்தைக் காண்பித்து, மெஸ்ஸியாவை அவர்கள் தள்ளிவிட்ட பாவத்தைப்பற்றிப்பேசும்போதுகூட ஒருவாறு அதின் கனகனத்தைக் குறைக்க முயல்வதைப்போல் (1 கொரின்த். 2. 8) லூக்காஸும் அச்சனங்களின்பேரில் அதிக நேச கனிவு பரிவைக் காட்டுகிறார். அதினிமித்தம் லூக்காஸ், சேசுநாதர் பரிசேயர்களை முனிந்து கடிந்து பேசின காரியங்களை அறிவிக்கும்போதுமுதலாய், ஆண்டவர் அவர்கள் மட்டில் வைத்த இரக்கத்தையும், அநுதாபத்தையும், அவர்களது இரட்சண்ணியத்தின்பேரில் அவருக்குள்ள அபேக்ஷை ஆவலையும் எடுத்துரைக்க மறந்தவரல்ல:—

"சேசுநாதர் சமீபமாய் வந்தபோது, (ஜெருசலேம்) பட்டணத்தைப் பார்த்து கண்கலங்கி கண்ணீர் விட்டழுதார்" என்று எழுதினது லூக்காஸ் ஒருவரே (19. 4.) "ஜெருசலேம் குமாரத்திகளே, என்னைப் பற்றி அழாமல் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் பற்றி அழுங்கள்" என்று சேசுநாதர் ஜெருசலேம் ஸ்திரீகளுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றினதை எழுதினதும் லூக்காஸ்தான். (23. 28).

"பிதாவே இவர்களுக்கு மன்னிப்பளித்தருளும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்க" ளென்று சேசுநாதர் உரைத்த அமிர்த வசனத்தை எழுதினதும் லூக்காஸ் ஒருவரே. (23. 34.) இந்த இஸ்ருயேல் ஜனங்களுக்கு ஆத்தும சரீர நன்மைகளைச் செய்ததால், ஆண்டவருடைய உள்ளம் மகிழ்ந்து பூரித்ததை வெளிப்படுத்தினதும் லூக்காஸ் தான். (13. 16; 19. 9).

சேசுநாதர் பரிசேயர்களைச் சினந்து உரைத்த கடின விஷயங்களைப்பற்றி மத்தேயுஸ் எழுதுகிறார். ஆனால் லூக்காஸ், இப்பரிசேயரால் சேசுநாதர் விருந்துகளுக்குப் பலமுறை அழைக்கப்பட்டதையும், அவர்களை ஆண்டவர் கண்டிக்குஞ் சமயங்களில்கூட அவர்களுக்கு உபதேசித்து, ஈடேற்றத்தின் பாதையைக் காட்டியதாகவுங் கூறுகிறார்.

"ஆண்டவருடைய இஸ்பிரீத்துவானவர் என்மேலிருக்கிறார். ஆதலால் அவர் என்னை அபிஷேகம் பண்ணித் தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், இருதயம் நொறுங்கினவர்களைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் கொடுக்கவும், நெருக்கிடைப்படுகிறவர்களைச் சுயாதீனராய் அனுப்பிவிடவும், ஆண்டவருக்குப் பிரியமான வருஷத்தையும், சம்பாவனை நாளையும் பிரசங்கிக்கவும் என்னை அனுப்பினார்." என்று (லூக். 4. 18-19) திவ்ய திருஷ்டிப் பிரசாதியாகிய இசையாஸ் மெஸ்ஸியாவின் குணாதிசயங்களைப் பற்றி அலங்கிர்தமாய் விளம்பிய தீர்க்கதரிசனம், சேசுநாதரிடத்தில் விளங்கிப் பிரகாசித்ததையும் மற்றச் சுவிசேஷகரைவிட, லூக்காஸ் ஒருவரே வெகு மாதுரியமாய் வருணித்துக் காட்டுகிறார்.

பாவியாயிருந்த ஓர் ஸ்திரீயை அன்போடும், பட்ச பரிவோடும் சேசுநாதர் ஏற்றுக்கொண்டு, அவளை மன்னித்து, "சமாதானத்தோடே போ" என்று அவளுக்குத் திருவுளம்பற்றினதை லூக்காஸ் ஒருவரே அறிவிக்கிறார். (லூக். 7. 37-50) பாவிகள் மட்டில் நமது ஆண்டவர் காண்பிக்கும் அன்பு, இரக்கம், தயை எவ்வளவானதென்று கண்கூடாக மனிதர் அறியும்படியாக, காணமல்போன ஆட்டையும் திராக்மா என்னும் நாணயத்தையும் பற்றிய உவமைகளைச் சொல்லி, "அவ்விதமே தவஞ்செய்கிற ஒரு பாவியினிமித்தம் தேவ தூதர்களுக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என சேசுநாதர் திருவுளம்பற்றினதையும், (15. 8-10) பரிசேயனும், ஆயக்காரனும் செய்த ஜெபத்தைப்பற்றிய உவமையைச் சொல்லி, "இவனே (ஆயக்காரன்) அவனைவிட நீதிமானாகித் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான்" என்று ஆண்டவர் வசனித்ததையும் (18. 10-14) லூக்காஸ் ஒருவரே அறிவிக்கிறார்.

மனுஷன் எத்தனைதான் பாவங்கள் செய்யினும் தான் மனந்தெளிந்து செய்த பாவங்களுக்குப் பச்சாத்தாபமாய்ச் சர்வேசுரனைப் பிரார்த்தித்தால், தன்னைப் பிரிந்து தேசாந்திரம் போய்த் திரும்பிவந்த புத்திரனை ஆவலோடு அரவணைத்த பிதாவைப் போலச், சர்வேசுரன் தமது அநந்த கிருபையால் நமது பாவங்களைப் பொறுக்கவே தேவ சந்நிதியில் மகா மகிழ்ச்சி யுண்டாகுமென்று காண்பிக்க, ஊதாரிப் பிள்ளையைப் பற்றி சேசுநாதர் திருவுளம்பற்றின ஓர் அற்புதமான உவமையையும் லூக்காஸ் ஒருவரே அலங்கிர்தமாய் எழுதிக் காட்டுகிறார்.

மேலும், ஆயக்காரர்களுக்குத் தலைவனாகிய சக்கேயுஸ் சேசுநாதரிடத்தில் விசுவாச வரத்தைப் பெற்றுக்கொண்ட வர்த்தமானத்தையும், நல்ல கள்ளனுக்கு, "இன்றுதானே நீ நம்மோடுகூட மோக்ஷத்திலிருப்பாயென்று" ஆண்டவர் அன்பாய்த் திருவுளம்பற்றின விசேஷத்தையும் எழுதினவர் லூக்காஸ் ஒருவரே. இவைகளை லூக்காஸ் எழுதும்போது, அர்ச். சின்னப்பர் சேசுநாதரிடத்தில் இன்ப மகிழ்ச்சியோடு கொண்டாடின குணாதிசயங்களையே, அதாவது: "சர்வேசுரனுடைய நன்மைத்தனம், பொறுமை, நீடிய சாந்தம்," இவைகளையும் (உரோமர் 2. 4) நாம் இன்னும பாவிகளாயிருக்கும்போதே, நமக்காகக் கிறீஸ்துநாதர் மரித்ததினாலே, சர்வேசுரன் நமது பேரில் விளங்கப்பண்ணின அன்பையும் இவருடைய மகிமைப் பிரதாபத்தையும்" (உரோமர் 5. 8) நமக்குத் தெளிவாய் விவரித்துக் காட்டுகிறார்.

"பாவிகளை இரட்சிக்கும்படி சேசுக்கிறிஸ்துநாதர் இவ்வுலகத்துக்கு வந்தாரென்பது உண்மையும் சர்வ அங்கீகரிப்புக்குத் தகுதியுமான வாக்கியம்" (1-திமோத். 15) "நம்முடைய இரட்சகராகிய சர்வேசுரனுடைய கிருபாகடாட்சமும், மனுஷ அன்பும் தோன்றினது" (தீத்து-3-4) "நம்முடைய இரட்சகராகிய சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் சகலமனிதருக்கும் வெளியானது" (தீத்து-2.11) "நமது ஆண்டவருடைய வரப்பிரசாதமோ ஏராளமாய்ப்பெருகிற்று" (1-திமோத் 1.14) "சர்வேசுரன் தமது இஸ்பிரீத்துவை நம்முடைய இரட்சகராகிய சேசுக்கிறிஸ்து மூலமாய் நமது மேல் ஏராளமாய்ப் பொழிந்தார்" (தீத்து 3.6) என்று அர்ச். சின்னப்பர் நமது தேவ ஆண்டவருடைய கிருபையின் அற்புத அதிசய மகிமைகளை வாய்ச்சலியாமல் புகழ்ந்து கொண்டாடுவதைப்போல், அவருடைய சீஷனாகிய லூக்காஸூம் சுவிசேஷத்தில் சேசுநாதருடைய திரு இருதயத்தின் அளவற்ற அன்பு நேசத்தையும், இரக்க உருக்கத்தையும் கொண்டாடுகிறார். திருச்சபையின் சரித்திர நூலாசிரியராகிய தெர்தூல்லியன் (Tertullian) கூறியவண்ணம், லூக்காஸூக்கு அர்ச். சின்னப்பர் பிரகாசம் அல்லது ஒளி செய்வோன் (Illuminator) என்று பெயரிட்டிருக்கிறார். புறஜாதியாரின் இந்த மகா பெரிய அப்போஸ்தலரிட மிருந்து, இவர் நமது தேவ ஆண்டவரின் இருதயத்தின் அன்பு, இரக்கம் அநுதாப உருக்கமான துடிப்புகளை நன்றாய்ப் பரீக்ஷித்தறிந்தவராய், ஆண்டவருடைய கிருபாகடாட்சம் விசேஷமாய் விளங்கும் வர்த்தமானங்களைத் தெரிந்து சுவிசேஷத்தில் வருணித்து எழுதியிருக்கிறார் என்றுதிட்டமாய்ச் சொல்லலாம்.

மத்தேயுஸ், மார்க்கு, அருளப்பர் என்னும் மூன்று சுவிசேஷகர்களும் சேசுநாதருடைய சீவிய காலத்தில் நடந்த சம்பவங்களான ஆண்டவருடைய சுகிர்த பிரசங்கங்களையும், கிருத்தியங்களையும், புதுமைகளையும் அவ்வளவாய்க் காலக்கிரமத்தைப் பாராமல், தங்களுக்கிருந்த நோக்க கருத்தை மாத்திரம் உத்தேசித்து பொருளின் (Ordo rerum) ஒழுங்கையே பின்சென்று சுவிசேஷத்தில் ஒன்றாய்ச் சேர்த்தெழுதினார்கள்.

ஆனால் லூக்காஸ் நடந்தசம்பவங்களை ஒன்றுக்குப்பின் ஒன்றாய்க் காலக்கிரம வரிசையாய், சரித்திர மேரையாய் எழுதுகிறார். ஏனென்றால் அவர் சுவிசேஷ ஆரம்பத்தில் "ஒழுங்குடன் எழுதுவது நலமென்று எனக்குத்தோன்றிற்று" என்று சொல்வதினால் காலக்கிரம ஒழுங்கையே குறித்துக் காண்பிக்கிறார். அவர் எழுதிய திவ்ய புஸ்தகத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது (1. 5-லிருந்து 4. 13. வரையில்) சேசுநாதருடைய பகிரங்க சீவியத்துக்கு முன் நடந்த விசேஷங்கள் காண்பிக்கப்படுகின்றன. இரண்டாவது (4. 14லிலிருந்து-9. 50 வரையில்) கலிலேயாவில் ஆண்டவர் போதித்துவந்த விசேஷங்கள் காண்பிக்கப்படுகின்றன. மூன்றாவது (9-51 லிருந்து-19-27 வரையில்) கலிலேயாவை விட்டு யூதேயாவுக்கு ஆண்டவர் மும்முறை பிரயாணம் செய்ததும் அங்கு நடந்த விசேஷங்களும் காண்பிக்கப்படுகின்றன. நான்காவது (19-28-லிருந்து 24-53 வரையில்) ஆண்டவர் ஒட்டோலகமாய் ஜெருசலேம் நகரில் பிரவேசித்ததிலிருந்து அவருடைய துக்கப் பிராப்தியின் விசேஷங்களும், அவர் மரித்து, உயிர்த்துப் பரலோகஞ் சேர்ந்த மகிமை விசேஷங்களும் காண்பிக்கப்படுகின்றன. தாம் எழுதிய சுவிசேஷத்துக்கு முதல் அதிகாரத்தின் முதல் நான்கு வசனங்களை ஒருசிறு முகவுரையாக வைத்திருக்கிறார். லூக்காஸ் எழுதின சுவிசேஷத்தைத் திருச்சபையில் தேவ வரம்பெற்று விஸ்தாரமாய் விளக்கி வியாக்கியானம் பண்ணின அநேக வேதபாரகர், வேதசாஸ்திரிகளிற் சிலரைக் குறிப்பிட்டுப் புகழ்வது நன்று. அந்த வித்தியாபாரகர் யாராரெனில், தேவ விசேஷக்கருணையால் விளங்கப்பெற்ற அர்ச். அத்தனாசியார், அர்ச். சிரில், அலக்ஸாந்திரினுஸ், அர்ச். கிறிசோஸ்துமுஸ் அருளப்பர், அர்ச். எரோனிமுஸ், அர்ச். அம்புரோஸ், அர்ச். அகுஸ்தீன், அர்ச். கிரகோரியார், அர்ச். கிரிசோலொகுஸ் இராயப்பர், அர்ச். பொனவென்தூர், அர்ச். தோமாஸ் அக்குவினாஸ் என்பவர்களே.

இவர்கள் சுவிசேஷத்தின் புதை பொருளுள்ள தேவவாக்கியங்களைப்பயன்படச் சொல்லி, ஆழ்ந்த அர்த்தங்களையும் நுட்ப கருத்துகளையும் வெளிப்படுத்தி, உள்ளங்கை நெல்லிக் கனி போலவும், செப்பிலடக்கியிருந்த மாணிக்கத்தைத் திறந்து காண்பிப்பது போலவும், வேத வாக்கியங்களின் அற்புதங்களை அதிக விசாலமாய்த் தெளிவித்து அருமையான வியாக்கியான பிரபந்தங்களை உண்டாக்கினார்கள். அவ்வமுதக் கடலை முழுமையும் கடந்து செல்லு

தல் என்னால் முடியாதாயினும் அதைப் பூசித்துச் சேர்ந்து கொஞ்சம் அமுதத்தை நாவினால் நக்கி யுண்ணும்படி அக்கடலில் புகுந்தாற் போல், அடியேன் அசக்தனாயிருந்தாலும், அவ்வரிய கிரந்தத்தின் மட்டில் அடியேனுக்குள்ள மதிப்பு, ஆச்சரியவியப்பு ஆசை முகாந்திரமாய் லூக்காஸ் எழுதிய சுவிசேஷத்துக்கு நாளாவட்டத்தில் சுருக்கமாய் வியாக்கியானம் செய்யத் துணிந்தேன்.

இது விஷயத்தில் கற்றுவல்லோர் எல்லோரும் குற்றம் பாராது குணத்தைக் கொள்வரென நம்புகிறேன்

S. M.
9—9—15. Kovalong.

---

## GNANAMANI III PART.
## ஞானமணி 3-ம் பாகம்.
### 26-ம் அதிகாரம்.

**இரு துடுக்கர் அவனுக்கு உதவியாக முன்னுக்குச்சென்று, "உடை பூட்டை ஓரே அடியால்" என்றார்கள்.**

---

சாதாரணமாக 12½-மணிக்கு வரவேண்டிய ரயில் வண்டி அன்று 1½-க்கு வந்தது. மிஷன்காரரில் 50, 60 பேருக்கு அதிகமாய் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் பீற்றர் போதகருக்கு நல்வரவு கொடுக்கும்படி காத்துக்கொண்டிருந்தார்கள். வண்டிவந்து நிற்கவே, போதகர் சலோமோனுடன் வண்டியை விட்டு இறங்கினமாத்திரத்தில் அங்கு காத்துக்கொண்டிருந்த ஜனக்கூட்டம் அவருக்கு எதிரேபோய், அவர் கழுத்தில் ஓர் அழகான மாலையிட்டு அவர் கரத்தில் பூச்செண்டு கொடுத்து, அவரோடு கரங்குலுக்கி, சந்தோஷத்துடன் சிறிது நேரம் சம்பாஷித்தார்கள். அப்போது பீற்றர் போதகர் சத்தியநாதனைத் தனியாக அழைத்து, "எல்லாம் தயார்தானா?" என்று வினவினபோது, "சகலமும் தயாராயிருக்கிறது" என்றான். "குழந்தைக்குப் பேரிட விக்கினமில்லையே?" "ஒரு விக்கினமுமில்லை" "ஈசாக் உபதேசியாரும் அவர் குமாரத்தியும்?" "அவர்கள் குழந்தையைப் பின்தொடர்ந்தாலொழிய வேறு வழியில்லை." "பவுலையும் ரூத்தையும் பற்றி ஏதாகிலுந் தெரியுமா?" "அவர்கள் கம்மென்று பேசாமலிருக்கிறார்கள். நாளை அல்லது மறுநாளைக்குள் அவர்களும் மிஷனில் வந்து சேர்வார்கள் என்பதற்கு அற்பச்சந்தேகமுமில்லை." "ஆ ஆ! தானியேல் தீர்க்கதரிசியின் வாக்குப்படி, பராபரனுடைய புத்தி, ஞானத்தின் ஆழத்தை அறியக்கூடியவனார்? பராபரன் நமக்குப் புரிந்த இந்த பேருபகாரத்துக்குச் சகல ஸ்துதி தோத்திரம் உண்டாகுவ"—(ஈசாக் உபதேசியார் இங்கு இருந்திருந்தால் பீற்றர் போதகரைத் திருத்தியிருப்பார்)—என்று பேசிக்கொண்டே மிஷனெறி பங்களாவுக்குப் பீற்றர் போதகர் போய்ச் சேர்ந்தார்.

மிஷனெரி.—கூட்டே, மிஸ்டர் பீற்றர்! உமக்காக வெகு ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தேன்? உமது சௌக்கிய மெப்படி?

பீற்றர்.—பெட்டர். தாங்கள்?

மிஷ.—நீர் வந்திராவிட்டால் நான் மாத்திரம் அல்ல, நமது சபையாரனைவோரும் துக்கத்துக்குள்ளாயிருப்போம்.

பீற்.—இப்பேர்ப்பட்ட ஆபத்தான வேளையில் நான் வராதிருப்பேனோசார்? எனக்குப் பல விக்கினங்களிருந்தும் உங்கள் உவயரைப் பார்த்த பின் புறப்பட தீர்மானித்தேன். மேலும் இப்போது உங்களைக் கங்க்ராட்சுலேஷன் செய்யவந்தேன்.

மிஷ.—எதினிமித்தம்?

பீற்.—உங்களுடைய புத்திகூட்சத்தையும் வருங்காரியத்தை தூரதிருஷ்டியால் அறிய உமக்கு கர்த்தர் அளித்திருக்கும் வரத்தைப்பற்றியுமே!!

மிஷ.—(மேலே கண்களை உயர்த்தி) இப்பேர்ப்பட்ட வரம் மேலே இருந்து வரவேண்டியதே யொழிய மண்ணுலகிலிருந்து வரத்தக்கதல்ல.

பீற்.—"கெண்டையைப் போட்டு விராலைப் பிடிப்பது" என்னும் பழமொழி இங்கு சரியாய் நிறைவேறினது! ஒரு சிறு குழந்தையைக் கொண்டு இரண்டு பெரிய குடும்பங்களை வேதத்திற் சேர்ப்பது சுலபமான காரியமல்ல.

மிஷ.—ஐசக்கும் பாலும் ரோமான் வேதத்தில் சேர்ந்தபோது எனக்கு உண்டான விசனங்



கொஞ்சமல்ல. ஹோம் டைரெக்டர்ஸ் என்ன சொல்வர்களோ என்று பயந்திருந்தேன். மேலும் நானே சலமோனை வரவழைத்து ரோமான்மதத்தில் சேர்ந்து ஐசக் மகளை மணமுடித்துக்கொண்டபின், அவர்களுக்குக் குழந்தைபிறக்கும் காலத்தில், குழந்தை மூலமாய் அவர்களைச் சுலபமாய் இழுத்துக்கொள்ளலாம் என்கிற கருத்துடன் இந்த ஆலோசனையை அவனுக்குக் கொடுத்தேன். சத்தியநாதனும் இதற்காக மெத்தவும் உழைத்தான். ரோமானர் நமது உபாயத்தைப்பற்றி சமுசயங் கொள்ளாதபடிக்கு சத்தியநாதனைத் தவிர, நமது சபையார் வேறு யாரும் அந்தக் கல்யாணத்துக்குப் போகாதபடி கற்பித்தேன்.

பீற்.—(சத்தமாய்ச் சிரித்துக்கொண்டு) உங்கள் புத்தியே புத்தி சார்! இது எல்லாருக்கும் உண்டாகாது. எங்கள் சபையிலும் இப்பேர்ப்பட்ட வேதத்துரோகிகள் இருக்கிறார்கள். அவர்கள் மட்டில் உங்கள் உபாயத்தை உபயோகிக்க நினைத்திருக்கிறேன். உங்கள் உபாயம் எனக்குத் தெரியாதபடியால், அந்தக் கல்யாணத்துக்கு எனக்கு இன்விடேஷன் (*Invitation*) வந்தபோது, தம்பதிகளை ஆசீர்வதிப்பதற்குப் பதிலாக அவர்களைச் சபித்து பதில் எழுதினேன்.

ஐசக்கையும் பாலையும்பற்றி ஹோம் டைரெக்டர்களுக்கு தெரியப்படுத்தினீர்களோ சார்?

மிஷ.—இன்னம் இல்லை.

பீற்.—அதைப்பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்தவே வேண்டாம், சார். இன்னொரு காரியம் தாங்கள் செய்யவேண்டியது.

மிஷ.—என்ன காரியம்?

பீற்.—நாளையத்தினம் நமது சர்ச்சில் ஒரு கிராண்ட் "டெடேயம் செர்விஸ்" (நன்றியறிந்த தோத்திர செபம்) வைக்கவேண்டியது.

மிஷ.—அதற்குக்கூட சந்தேகமா? (கடியாரத்தைப் பார்த்து) மணி மூன்றாகிறது. ஐந்து மணிக்குத்தானே கிறிஷ்டினிங் செர்விஸ்? ஞானஸ்நானங் கொடுப்பது)

பீற்.—ஆம், நான் வருகிறேன், கூட்டே சார்?

மிஷ.—கூட்டே, பீற்றர்.

பீற்றர் போதகர் நேராக சத்தியநாதன் வீட்டுக்குப்போய் வெகு சிறப்பு சிங்காரமாய் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் மிஷன் சபையோர் பெரிய திருவிழாவுக்குக் கூடியிருப்பதுபோல இருக்கக்கண்டு சந்தோஷித்து மகிழ்ந்து, சபையாரெல்லோரும் சேர்ந்து தம்து போரால் பாடும் மங்களப் பாட்டுக்குத் தாங்ஸ் சொல்லி, சலமோனை நோக்கி, "குழந்தை ஐசக் வீட்டிலிருந்து நேராய் சர்ச்சுக்கு கொண்டுவரப்படுமா, அல்லது இந்த வீட்டிலிருந்தா?

சல.—இங்கே இருந்து தான்; (என்று சொல்லி,) "இதோ போகிறேன்" (என்று ஈசாக் உபதேசியார் வீட்டுக்குப் புறப்பட்டான் சலமோன். அப்போது அநேகர் அவனைப் பின்தொடர்ந்தார்கள். வீடுபோய்ச் சேர்ந்தவுடனே, அவ்விடத்தில் ஈசாக் உபதேசியாரைக் கண்டு,) "மாமா, சகலமும் முஸ்திப்பாய் இருக்கிறது; பீற்றர் போதகர் காத்துக்கொண்டிருக்கிறார்." என்றான்.

ஈசா.—காத்துக்கொண்டிருந்தால் என்ன?

சல.—உங்களுக்குத் தெரியாதோ? இன்றைக்குக் குழந்தைக்குப் பேர் கொடுக்க சகலமும் சித்தப்படுத்தப்பட்டிருக்கிறது? குழந்தையைக் கொண்டுபோகவேண்டும் சர்ச்சுக்கு.

ஈசா.—எந்த சர்ச்சுக்கு?

சல.—க்றைஸ்ட் சர்ச்சுக்குத்தான்.

ஈசா.—என்ன உனக்குப் பைத்தியமா?

சல.—உங்களுக்குப் பைத்தியமிருந்தால் இருக்கலாம்; எனக்குப் பைத்தியமில்லை.

ஈசா.—அது கூடாத காரியம்; நீ வந்தவழியே போகலாம்.

சல.—என் குழந்தையைக் கொடுக்கக்கேட்டால் இததானா மறுமொழி? நான் குழந்தையின் தகப்பன். நான் இருக்கும் புரோடெஸ்டாண்டு மதத்தில் அதற்குப் பேர் கொடுக்க வேண்டும்.

ஈசா.—கூடாது, கூடாது.

சல.—பார்க்கலாம் உன் சமர்த்தை (யென்று வீட்டில் பிரவேசிக்கப் போகும் சமயத்தில் கதவைச் சாத்திப்பூட்டினார் ஈசாக் உபதேசியார். உடனே சலமோன் தன் கூட வந்தவர்களை நோக்கி "கொண்டுவாருங்கள் கல்லை, இந்தப் பூட்டை உடைக்கலாம்" என்றவுடனே, சிலர் வெளியே சென்று இரண்டு மூன்று பெரிய கற்களைக் கொண்டுவந்தார்கள். அப்போது சலமோன் கல்லைக் கையில் பிடித்துக்கொண்டு பூட்டை

உடைக்கத் தலைப்பட்டான். அப்போது அங்கு கூடி யிருந்தவர்கள் பெருஞ் சந்தடிசெய்து, "தகப்பனுக்குக் குழந்தை சொந்தமில்லாவிட்டால் யாருக்கு அந்தக் குழந்தை சொந்தமோ! பார்க்கலாம். இப்பேர்ப்பட்ட அக்கிரமம் உலகில் இல்லை; பூட்டை உடை, பிரதர் சலமோன்!" என்று தடுக்கர் அவனுக்கு உதவியாக முன்னுக்குச் சென்று, "உடை பூட்டை ஒரே அடியால்" என்றார்கள். சலமோனும் பூட்டை உடைக்கும்போது * மூன்று போலீஸ்காரர் அங்கு காணப்பட்டு, "இங்கு என்ன கலகம்?" என்னவே, சலமோன் பேசாமல் மவுனமாய் நின்றான். மற்றவர்களும் சந்தடியை நிறுத்தினார்கள்.

எட்கான்ஸ்டபில் சலமோனைப் பார்த்து "என் பூட்டை உடைக்கிறாய்?" என்று வினாவினபோது, "என் குழந்தையைக் கோவிலுக்குத் தூக்கிக்கொண்டு போகும்படி" யென்றான் சலமோன். "இது யாருடைய வீடு" என்றதற்கு, "என் மாமனார் வீடு" என்றான். "பூட்டை உடைக்க உன் மாமனார் உனக்கு உத்தரவு கொடுத்தாரா?" என்று கேட்டதற்கு பேசாமல் நின்றான்.

"ஒருவருடைய வீட்டில் அக்கிரமக்கூட்டங்கூடி அந்த வீட்டின் பூட்டை உடைப்பது கிரிமனல் கேசைச் சார்ந்ததென்று உங்களுக்குத் தெரியாதோ?" என்று சலமோனையும், அவன் பக்கத்தில் கையில் கற்களை வைத்து, நின்றுகொண்டிருந்த வாலரையும் பார்த்து "நடவுங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு" என்று எட்கான்ஸ்டபில் கற்பித்தான். அப்போது அம்மூவரும் பேசாமல் நின்று கொண்டிருப்பதைக் கண்ட சேவகர் "பொழுது போகிறது; நடவுங்கள்" என்று மறுபடியும் சொல்லவே, மூவரும் சேவகருடன் வெளியே புறப்பட்டார்கள்.

அவர்கள் ஊரைவிட்டு வெளிப்பட்டபின், ஈசாக்உபதேசியார் அவர்களுக்குப் பின்னாகச் சென்று, எட்கான்ஸ்டபிலைப் பார்த்து, "இவர்கள் புத்தி யில்லாமல் செய்துவிட்டார்கள்.

* திருநாமச் சடங்கின்நோட்டீஸ் அந்த ஊரில் அநேகருக்கு அனுப்பப்பட்டது போல், விசுவாச நாயகருக்கும், பவுல் போதகருக்கும், ஈசாக் உபதேசியாருக்கும் அனுப்பப்பட்டது. ஷை நோட்டீசை யவர்கள் வாசித்துப் பார்த்து நகைக்கத் துடங்கினார்கள். இந்த நோட்டிசின் முகாந்தரமாக ஈசாக் உபதேசியாரும் பவுல் போதகரும் விசுவாச நாயகர் வீட்டுக்குப்போய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது, இவ்வாறு சொல்வார் நாயகர்: "சலமோனோ துடுக்கன். மிஷன்காரர் போடும் தாளத்துக்கு முன்னும் பின்னும் யோசியாமல் கூத்தாடுவான். கொஞ்சமென்கிலும் ஞானமிருந்தால் மெத்த நல்லவனாயிருப்பான். ஆகையால் நமக்கு அனுப்பப்பட்ட நோட்டீஸ் பிரகாரம் அச்சபையாரெல்லோரும் இவனுக்குக் குமுக்குக் கொடுத்து அவனை முன்னுக்குத் தள்ளி வேடிக்கை பார்க்க இருக்கிறார்கள். வருகிற ஞாயிற்றுக்கிழமை (உபதேசியாரையும் பவுல் போதகரையும் நோக்கி) உங்கள் இரண்டு குடும்பமும் மிஷன் வேதத்தில் சேர்ந்துவிடப்போகிறதாக ஊரெங்கும் பெரும் புரளியாயிருக்கிறது!" என்னவே அங்கிருந்தவர்கள் எல்லோரும் சிரிக்கத் துவக்கினார்கள்.

"இருக்கிற நோக்கத்தைப் பார்த்தால் அன்றுதினம் யாதொரு கலகம் சம்பவியாமல் போகாது. ஆகையால் நாம் முன் ஜாக்கிரதையாயிருப்பது புத்தி உபதேசியாரே" என்றார். அதற்கு ஈசாக் உபதேசியார், "அப்படியானால் நான் என்ன செய்யவேண்டும்?" என்னவே, நாயகர் இவ்வாறு சொல்வார்: "நீர் தாமதியாமல் போலீஸ் சூப்பரின்டென்டெண்டுக்கு ஒரு மனு செய்யவேண்டும். அதென்னவெனில், சில துஷ்டரால் என் வீட்டில் வருகிற ஞாயிற்றுக்கிழமை கலகம் நடக்க இருப்பதால், துரையவர்கள் தயவுசெய்து இன்ஸ்பெக்டர் மூலமாய் சில போலீஸ்காரரை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்று எழுதினால் நலமாயிருக்கு" மென்றார். பவுல் போதகரும் "ஆம், ஆம், அப்படிச்செய்வதே உத்தமம்" என்றதன்மேல், ஈசாக் உபதேசியார் தாமதியாமல், நாயகர் சொன்ன பிரகாரம் போலீஸ் பெரிய துரைக்கு மனு செய்துகொண்டார்.

ஞாயிற்றுக்கிழமை சூரியோதயத்துக்கு முன்னே ஒரு எட்டும் இரண்டு கன்ஸ்டெபில்களும் ஈசாக் உபதேசியாரைத் தேடிக்கொண்டு வந்தார்கள். மத்தியானம் வரைக்கும் தலைமறைவா யிருக்கும்படிக்குக் கேட்டுக்கொண்டதன்மேல், மூன்றுபேரும் கிராமமுனிசீப்பு வீட்டுக்குப்போனார்கள். பிறகு ஈசாக் உபதேசியார் வீட்டில் கலகம் நடக்கிற சங்கதிகேட்டு மூன்று போலீஸ்காரரும் அவ்விடம் போய்ச் சேர்ந்தார்கள்.



இந்த விசை மன்னிப்பு கொடுங்கள்." என்று மன்றாடினதின் மேல், அம்மூவரையும் பயமுறுத்தி 'இனிமேல் இப்பேர்ப்பட்ட அக்கிரமமான காரியஞ்செய்தால் ஸ்டேஷனில் அடைக்கப்படுவீர்கள்" என்று சொல்லி அவர்களை வீட்டுக்குப் போக உத்தரவு கொடுத்தான் எட்கான்ஸ்டபில்.

சலமோன் தன் மாமனார் வீட்டுக்குப் போன சமயத்தில், சத்தியநாதனுடைய வீட்டில் போடப்பட்டிருந்தல் பந்தலி அநேகர் கூடிக் குசாலாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். வாத்தியக்காரரும் அங்கு வந்து சேர்ந்து பாட்டுக் கச்சேரி துவக்கமாயிற்று. கோவிலிலும் அலங்கரிக்கப்பட்டு ஞானஸ்நானத்துக்கு வேண்டிய முஸ்திப்பு செய்யப்பட்டிருந்தது. பீற்றர் போதகரும் ஷோக்காய் உடுத்திக்கொண்டு கோவிலுக்குச் செல்லுகிறதற்கு முன் சலமோன் வருகைக்காக எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். பீற்றர்போதகர் சலமோனைக் காணவே, "என்ன சலமோன்! சர்சுக்குப் போகலாமா?"

சல.—(துக்கமுகத்துடன்) குழந்தையைக் கொடுக்கமாட்டேன் என்கிறார் மாமனார்.

பீற்.—(அதிசயத்தாலும் கோபத்தாலும் சற்றுநேரம் மௌனமாய் நின்று) உன் குழந்தையை ஐசக் ஏன் கொடுக்கமாட்டேன் என்கிறான்?

ஈசாக் உபதேசியார் வீட்டில் நடந்த கோஷ்டங்களைப் பற்றி சத்தியநாதன் விவரித்தபோது பீற்றர் போதகருக்கு மூர்க்க கோபமுண்டாகி, சலமோனை நோக்கி "என்முகத்தில் சேற்றையப்பி யனுப்பவா, என்னைக் கையோடு இங்கே கூட்டிக்கொண்டு வந்தாய்? என்னை யாரென்று நினைத்தாய்? சீனியர் பாஸ்டரென்று எண்ணினாயோ, அல்லது உன் வீட்டு வேலைக்காரனென்று எண்ணினாயோ?"

முன்னொருவிசை, "நீங்கள் வந்தால், என் தகப்பனாரும் சிறியதாயாரும் நமது சபையில் சேருவார்கள் என்று நீயும் ஊராரும் கடிதம் எழுதினதுடன், மிஷனெரியும் தொந்தரித்ததின்மேல் வந்தேன், என்ன பலன்? வெட்கத்துடன் வந்தவழியே திரும்பவேண்டியதாயிற்று. இந்தத் தடவையும், நீர் எங்களூரில் கால் வைத்தால் இரண்டு குடும்பங்கள் நமது சர்ச்சுக்கு வருவார்களென்று சபையாருடைய கடிதமும் (சலமோனை நோக்கி) உன்னுடைய கடிதமும் சேர்ந்தபோது, அதை நான் நம்பாமலிருந்தேன். ஆனால் மிஷனெறி கடிதமும் உவயரும் ஒன்றுக்குப் பின் ஒன்றாய் வந்தபோது, நான் போனால் அந்த இரண்டு குடும்பமும் வந்து சேருமென்கிற கருத்துகொண்டு வந்தேன்; என்ன பலன்? முன்போலவே தலைமறைவாய் ஊருக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. நல்ல கவர்தை வருவித்தீர்கள் எனக்கு!

சத்திய.—ஐயரே, தாசனை மன்னிக்க வேண்டும். இதெல்லாம் சலமோனுடைய படபடப்பான குணத்தால் புறப்பாடாய் நடந்துவிட்டது. பூட்டைக் கல்லால் உடைக்காவிட்டால் இந்தத் துன்பமெல்லாம் நேரிட்டிரா.

பீற்றர் போதகருக்குக் கோபமும் ஆத்திரமும் பத்து மடங்கு அதிகரித்து, "இல்லை யில்லை. இதெல்லாம் சபைக்குப் பெரியவர்களாயிருக்கப்பட்டவர்களுடைய விமரிசையற்ற குணத்தால் சம்பவித்ததென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகிறது. ஐசக்கின் சங்கதி உங்களுக்குத் தெரிந்தகாரியம். பாலின் குமாரத்தியை மிஷனெறி போய்ப் பார்த்திருந்தால் இந்தத் துன்பங்கள் உண்டாயிருந்திராது.

யூரோப்பிலும் இதேபிரகாரம் பாதிரிமாருடைய விமரிசையற்றதனத்தால் அங்கேயும் கணக்கற்ற பேர் ரோமான்மதத்தில் சேருகிறார்கள். கடந்த மாதத்துப் பேப்பரை வாசித்தபோது ஜனங்களுக்கு வேதவிஷயத்தில் அதிக சுதந்தரத்தைக் கொடுக்க வேண்டுமென்கிற கருத்துகொண்டு, பாதிரிமார் ஏசுக்கிறிஸ்துவுக்கு தேவசுபாவம் இல்லை; பைபில் நம்பத்தக்கதல்ல வென்று ஸ்பீச் (உபந்நியாசம்) செய்தார்களாம்; இதைக் கேட்டவர்களில் அநேகர் நமது மதத்தின் மட்டில் சந்தேகங்கொண்டு ரோமான்மதத்தில் சேர்ந்தார்களாம். பாருங்கள் என்ன விகற்பம்! என்ன அலங்கோலை நமது சபையில்! சபைத்தலைவர் சற்று ஜாக்கிரதையாயிருப்பது உத்தமம் என்றார் பீற்றர் போதகர்.

அங்கு கூடியிருந்தவர்களைப் பீற்றர் போதகர் நோக்கி "என்னை இரண்டு விசை அவமானப்படுத்தினீர்கள்! இனியாகிலும் என்னைப் பங்கப்படுத்தாதேயுங்கள்" என்று சொல்லி மிஷனெரியினிடம் போய் நடந்த சங்கதியை விவரித்தபோது "ஷேம்! ஷேம்!" என்று மிஷனெரி சொல்லி துக்கப்பட்டார். ரயில் புறப்பட இன்னம் கால்மணி டயிம் தானிருக்கிறதென்று போதகர் சொல்லி ரயில் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டு இரண்டாம் பேருக்குத் தெரியாதபடிக்கு தமது

ஊருக்குப் போய்ச் சேர்ந்தார். பந்தலில் கூடியிருந்தவர்கள் எழுந்து பேச்சு சந்தடியின்றி வீட்டுக்குச் சென்றார்கள். செய்த வேலை எல்லாம் வியர்த்தமாய்விட்டது. சலமோனோ பத்து நாளாய்த் தலை மறைவாய்த் திரிந்துகொண்டிருந்தான்.

---

# CORRECT THINGS FOR CATHOLICS.

# கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

## தொகைப்பட வரும் மேலான ஞானவாசகம்.

---

### ஆறென்ற மிலக்கத்தில்

(முன் தொடர்ச்சி.)

7-வது.—ஆங்காரத்துக்கு மருந்து ஆறு. அவையாவன: சுவாமியிடத்தில் அடிக்கடி தாழ்ச்சியைக்கேட்டல், தனதொன்றுமில்லாமையையுங் கட்டுக்கடங்காத தன் பாசத்தின் விரைவையும் தன் சரீரத்தினுடையவும் ஆத்துமத்தினுடையவும் துர்ப்பலங்களையுந் தன் கண்முன்பாக வைத்துக்கொள்ளுதல், சுவாமியினுடைய அளவறுக்கப்படாத மேன்மைத்தனத்தையும் நன்மைத்தனத்தையும் நினைத்து "நீ கைப்பற்றாத காரிய முன்னிடத்தி லென்ன இருக்கிற"தென்கிற வேத வாக்கியத்தைத் தியானித்தல், ஆங்காரிகளுக்கு வந்த ஆக்கினைகளையும் தாழ்ச்சியுள்ளவர்களுக்கு வந்த சம்பாவனைகளையும் நினைத்துத் தெய்வம் ஆங்காரிகளுக் கிடறு செய்து தாழ்ந்தவர்களுக்குத் தமது அநுக்கிரகத்தைக் கொடுக்கிறாரென்கிற வேதவாக்கியத்தைத் தியானித்தல், தன்னை முழுமையு மொன்று மில்லாமையாய் ஆக்கிக்கொண்ட கிறிஸ்துநாதருடைய மாதிரிகைகளைக் கண்டுபாவித்தல், தாழ்ச்சிக்கடுத்த வெளிப் பிரகரணங்களையும் உட்பிரகரணங்களையும் அடிக்கடி செய்தல் இவைகளேயாம்.

8-வது.--உலோபத்தனத்தின் பிள்ளைகள் ஆறு. அவையாவன: பணவாசையால் வாங்கின கடனைக் கொடாமலும் பிச்சைக்காரருக்கு இரங்கி ஈயாமலுங் கன்னெஞ்சுபடுதல், பணஞ் சம்பாதிப்பதின்பேரில் ஏக்கங்கொண்டு அதைத் தகுந்த வகையாய்ச் செலவழிக்கத் திகில்கொண்டு இருதய சமாதான மற்றிருத்தல்; பிறருடைய பொருட்களை யநியாயமாய்ப் பறித்துக் கொள்ளுதல், மாறுபாடான பேச்சினாலும் கிரியைகளினாலும் பிறரைக் கவுத்துவம் பண்ணுதல், உடன்படிக்கையிலும் வார்த்தைப்பாடுகளிலும் நம்பி யொப்புவிக்கப்பட்ட பொருட்களிலும் பிறரைச் சதிமார்க்கம் பண்ணல், தான் கொடுத்த வார்த்தைப்பாட்டை மீறிப் பிறர் கெடவிரும்பி பணவாசையா லவர்களை வீணாய்க் காட்டிக்கொடுத்தல் இவைகளேயாம்.

9-வது.—சோம்பேறித்தனத்தின் பிள்ளைகள் ஆறு. அவையாவன: புத்தி நிலையாமை, புத்தியில் அசதி யுண்டாதல், அதற்கு விரோதமான புத்தி சொல்லுவோர் பேரில் வர்மங் கொள்ளுதல், தன்னால் கூடுமான வேலை முதலிய ஞானக்காரியங்களை முடிக்க அவநம்பிக்கைக்கொண்டு பின்னுக்குவாங்குதல், ஞானக்காரியங்களில் உயர்ந்து புண்ணியங்களைச் செய்ய மனதில்லாமையால் அவைகளைப் பகைத்து வேதவிரோதியாகுதல், வேதக்கடமைகளை யசட்டை பண்ணுவதால் நான் இரட்சணியமடைவேனோவென்று அவநம்பிக்கைப்படுதல் இவைகளேயாம்.

### ஏழென்னு மிலக்கத்தில்.

1-வது.—"பரமண்டலங்களிலே யிருக்கிற எங்கள் பிதாவே" என்கிற மந்திரத்திலே கேட்கவேண்டிய காரியங்களேழு. அவையாவன: உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உம்முடைய இராச்சியம் வருக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திற் செய்யப்படுமாப்போல பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக, அன்றன்றுள்ள எங்களப்ப மெங்களுக்கின்றுதாரும், எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போல எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும், எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதேயும், தின்மையிலே நின்று எங்களை இரக்ஷித்துக்கொள்ளும் என்பவைகளேயாம்.

2-வது.—பெறவேண்டிய தேவத்திரவிய அநுமானங்களேழு. அவையாவன: ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், நற்கருணை பச்சாத்தாபம், அவஸ்தைப்பூசுதல், குருத்துவம், மெய்விவாகம் என்பவைகளேயாம்.

3-வது.—பாவசங்கீர்த்தனம் பண்ணாத அசட்டையால் வருங் கேடுகளேழு. அவையாவன: ஆத்துமத்தில் இருள் உண்டாதல், ஞான அறிவின்மையுண்டாதல், பாவங்கள் அதிகப்படுதல், வில்லங்கமுண்டாதல், தெய்வத்தோடு எதிர்த்தலுண்டாதல், பாவத்தில் இழுப்புண்டாதல், தந்திரத்தில் தோர்வையுண்டாதல் இவைகளேயாம்.

4-வது.—பாவசங்கீர்த்தனம் பண்ணுவதினால் வரும் நன்மைகளேழு. அவையாவன: சுவாமிக்குப் புகழுண்டாதல், இருதய சமாதான முண்டாதல், ஆத்துமத்தில் ஒளிவுண்டாதல், புண்ணியத்தி லிழுப்புண்டாதல், தெய்வத்தோடு சிநேகமுண்டாதல், தந்திரத்தில் தடையுண்டாதல், மோக்ஷத்துக்குச் சுதந்தரமுண்டாதல் என்பவைகளேயாம்.

5-வது.—நாம் போராடித் தொலைக்க வேண்டிய பாவங்களேழு. அவையாவன: ஆங்காரம், கோபம், மோகம், உலோபத்தனம், போசனப்பிரியம், காய்மகாரம், சோம்பல் என்பவைகளேயாம்.

6-வது.—இதற்கு விரோதமும் உன்னதமுமான புண்ணியங்களேழு. அவையாவன: தாழ்ச்சி, பொறுமை விரத்தத்துவம், உதாரம், மட்டசனம், சிநேகம், சுறுசுறுப்பு என்பவைகளேயாம்.

7-வது.—சரீர சம்பந்தமான புண்ணியங்களேழு. அவையாவன: பசியாயிருக்கிறவர்களுக்குப் போசனங் கொடுத்தல், தாகமா யிருக்கிறவர்களுக்குத் தண்ணீர் கொடுத்தல், வஸ்திர மில்லாதவர்களுக்கு வஸ்திரங்கொடுத்தல், பரதேசியாயிருக்கிறவர்களுக்கு இடங்கொடுத்தல், காவலிலேயிருக்கிறவர்களைச் சந்தித்தலு மல்லாமல் வியாதியா யிருக்கிறவர்களுக்கு ஆறுதல் சொல்லுதல், அடிமைப்பட்டவர்களை மீட்குதல், மரித்தவர்களை அடக்கம் பண்ணுதல் என்பவைகளேயாம்.

8-வது.--ஆத்தும சம்பந்தமான புண்ணியங்களேழு. அவையாவன: நல்லபுத்தி சொல்லுதல், தெரியாதவர்களுக்குப் படிப்பித்தல், தப்பிப்போகிறவர்களைத் திருத்துதல், கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேறுதல் சொல்லுதல், நிந்தைகளைப் பொறுமையுடனே சகித்தல், பொல்லாப்புக்களைப் பொறுத்துக்கொள்ளுதல், சீவியர்களுக்காகவும் மரித்தவர்களுக்காகவும் சர்வேசுரனை வேண்டிக்கொள்ளுதல், என்பவைகளேயாம்.

9-வது.—அடையவேண்டிய இஸ்பிரீத்து சாந்துவின்வரங்கள் ஏழு. அவையாவன: ஞானம், புத்தி, விமரிசை, திடம், அறிவு, பத்தி, தெய்வபயம் என்பவைகளேயாம்.

10-வது.—உபதேசிகளின் பிரதான கடமைகள் ஏழு. அவையாவன: தான் நன்றாய் வேத விதிப்படி நடத்தல், தன்வீட்டாரை வேத விதிப்படி நடக்கச் செய்தல், வேதத்துக்கொத்த வகையாய்க் குருக்கள் மனங் கோணாமல் நடந்துகொள்ளுதல், திருச்சபையாருக்குப் பட்சங்காட்டி, பிள்ளைகளுக்கு மந்திரவுபதேசம் கற்பித்து, சண்டை முதலானவைகளை விசாரித்து, பிறந்த பிள்ளைகளை எட்டுநாளைக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவித்து, வியாதிக்காரர்களை விசாரித்து, அவர்களுக்குத் தப்பாமல் அவஸ்தைப் பூசுதல் கிடைக்கும்படி செய்தல், அஞ்ஞானிகளுக்கு வேதோபதேசஞ் செய்தல், அவஸ்தைக்காரர் கிட்டேயிருந்து ஆயத்த செபம் பண்ணல், கலியாண முதலிய காரியங்களில் இருக்கப்பட்ட விக்கினங்களை நுணுக்கமா யறிந்து குருக்களுக்குத் தெரிவித்தல் இவைகளேயாம்.

11-வது.-உலோபத்தனத்துக்கு மருந்து ஏழு. அவையாவன: செபஞ் செய்தல், பேரின்ப நித்திய ஆஸ்திகளைத் தியானித்தில், பூலோக பாக்கியங்களி னழிவை நினைத்தல், சாவுக்குப் பின் வருஞ் சங்கதிகளை யோசித்தல், கிறீஸ்துநாதருடைய எளிமைத்தனத்தைத் தியானித்தல், அநியாயமாய்ச் சம்பாதித்ததை உத்தரித்தல், தானதருமம் பண்ணல் இவைகளேயாம்.

### எட்டென்னு மிலக்கத்தில்.

1-வது.-சுவிசேஷத்தின்மேலான பாக்கியங்கள் எட்டு. அவையாவன: மனத்தரித்திரர் பாக்கியவான்கள்; ஏனெனில்,

மோக்ஷ விராச்சியும் அவர்களுடையது. சாந்தகுணத்தோர் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களே பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள், அழுவோர் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களே ஆறுதலடைவார்கள். நீதியின்மேல் பசிதாக முள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களே திருப்தி யடைவார்கள். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களே இரட்சணிய மடைவார்கள், தூயவிருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களே சர்வேஸ்வரனைத் தரிசிப்பார்கள், சமாதான குணத்தோர் பாக்கிவான்கள்; ஏனெனில், அவர்களே சர்வேஸ்வரனுடைய பிள்ளைகளென்னப்படுவார்கள், நீதியினிமித்தம் உபத்திரியப்படுவோர் பாக்கியவான்கள்; ஏனெனில், மோக்ஷ விராச்சியமவர்களுடையது என்பவைகளேயாம்.

2-வது.—சம்பாதிக்கவேண்டிய அங்கயோகங்களெட்டு. அவையாவன: அவாவின்மை, உவப்பின்மை, அன்புடைமை, மருளின்மை, பழிநீத்தல், உறுதி பெறுதல், ஐம்பொறியடக்கல், . தெய்வ வழிப்படல் என்பவைகளேயாம்.

---

# CORRESPONDENCE.

# கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர். ப—ர்.]

## பெற்றோர்களின் கடமை.

---

“சாண்பிள்ளையா யிருக்கும்போது, சரியாய் வளர்த்தால் ஆண்பிள்ளையானபின் ஆள்வோனாவான்”

தங்கள் குழந்தைகள் ஞானத்திலும் கல்வியிலும் முதிர்ந்து பேரும் புகழும் அடைந்து அதனால் தங்கள் குடும்பத்திற்கும் குலத்திற்கும் மகிமையும் நன்மையும் உண்டாகவேண்டு மென்றிருப்பது பெற்றோர்களின் ஆசை.

சில பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளை வெகு நாள் தபசிருந்து ஈன்றதால், அவர்கள் குற்றம் செய்யும்பொழுது தண்டித்தால் அழுது மெலிந்துவிடுமென மூடபத்திகொண்டு அவர்களைச் சுயேச்சையாக நடக்கும்படி விட்டுவிடுகிறார்கள். இது சரியல்ல.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் ஒழுக்கங்களை நன்றாய் உணர்ந்து அவர்கள் கூடி சிநேகம் செய்கிறவர்கள் நல்லவர்களா அல்லது துஷ்டர்களாவென்றும், கல்விச்சாலைக்கு நாடோறும் சென்று குறிக்கப்பட்ட அப்பியாசங்களைக் கற்று வருகிறார்களா அல்லது வித்யாசாலைக்குப் போகிறதுபோல் நடித்து புஸ்தகங்களை ஓர் ஒதுங்கிய இடத்தில் ஒளித்துவைத்து அஜாடிப் பயல்களுடன் சேர்ந்து பீடி, சிகரட் முதலியவைகள் பிடிக்கிறார்களாவெனக் கவனிப்பது பெற்றோர்களின் மேலான கடமை.

அந்தோ! எத்தனையோ பிள்ளைகள் பெற்றோர்களின் மதியீனத்தினால் நிர்ப்பாக்கியராய்ப் போகிறார்கள்! எத்தனையோ பிள்ளைகள் துஷ்ட சண்டாளர்களாகிய கெட்ட சிநேகிதர்களுடன் கூடித் தவறுதலான செய்கைகளுக்கு ஆளாகிறார்கள்! எத்தனையோ பிள்ளைகள் எடாத எடுப்பு எடுத்து மகிமையும் நன்மையும் பேரும் புகழும் உண்டுபண்ணுவதற்குப் பதிலாய் அவமானமும் தீங்கும் உண்டு பண்ணுகிறார்கள்! எத்தனையோ பிள்ளைகள் அவர்களின் துர்மாதிரிகையால் தங்களுடைய அலங்காரமான முகத்தைக் கோரமான ரூபமாக்கிக்கொள்ளுகிறார்கள்!

ஏன்? பெற்றோர்களின் மூடத்தனமே, அவர்களின் அசட்டைத்தனமே. பிள்ளைகள் முன்பாக அவர்கள் கண்காணக் குடித்து வெறித்துச் சிரித்துக் களியாட்டுக்கொள்ளுவார்களானால் பிள்ளைகள், ஜெபதப ஒழுக்கங்களிலும் நன்னடத்தையிலும் வளர்வ தெவ்விதம்?

குழந்தைகள் தங்களுடைய பால் ஒழுகுகின்ற வாயினால் மதுரமான மழலைச்சொல்லைப் பேசத்துடங்கு முன்னமே எத்தனையோ பெற்றோர்கள் அசுத்தம் நிறைந்த தூஷண வார்த்தைகள் பேசக் கற்றுக் கொடுக்கிறார்கள்? இப்பேர்ப்பட்ட பெற்றோர்களை என்னென்றழைப்பது!! இவர்களை மெய்யான பெற்றோர்களென அழைப்பது நீதியல்ல. இவர்கள் ஏன் இந்தப்பிள்ளைகளை அருமையாகப்பெற்று ஆசையாகவளர்த்து, நன்மையை நாடவிடாமல் தின்மையைச் சம்பாதிக்கும்படி செய்து, திவ்ய சர்வேஸ்வரனின் பிள்ளைகளாய் இவர்களை ஆக்குவதற்குப் பதிலாய் துஷ்டபசாசின் பிள்ளைகளாக்குகிறார்கள்? இதுதானா பெற்றோர்களின் கடமை? இதற்காகவா பிள்ளைவரம் கேட்கிறதும் அருமையாய் பெயரிட்டு ஆசையாய் வளர்ப்பதும்?

ஐயோ! நிற்பாக்கியமாய்ப் பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர்களே! கருணைநிறைந்த சர்வ மகிமையுள்ள சர்வேஸ்வரன் கோடை இடிக்குச் சமானமான சப்தத்துடன் பிள்ளைகளின் நடக்கையைப்பற்றி அத்தனை கோடா கோடி ஜனங்களுக்குமுன் கண்டிப்பான கணக்குக் கேட்பாரென அறியீர்களோ? சிறு வயதில் பொய் சொல்லவும் புறணி பேசவும், எதிர்த்து நிற்கவும், ஏளனம் பண்ணவும் தொடங்குகிற பிள்ளைகளைப் புண்ணிய வழியில் பழக்குவிப்பது பெற்றோரின் கடமை. அவர்கள் துர்க்குணத்தைப் போக்கவும் அவர்களை நற்குண சீலர்களாக்கவும் சிறுவயதே தகுதி. “அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் செவ்வையாகா” ஆனால் கண்டிப்பிலும் கணக்கு வேண்டும். அடிப்பதிலும் அளவுவேண்டும். பிரம்படி தகுதியேயன்றி இரும்படித் தகுதியல்ல. தண்டிக்கலாமேயன்றி துண்டிக்கலாகாது. அடிக்கலாமேயன்றி அழிக்கலாகாது. புஸ்தகமும் கையுமாயிருப்பதே பிள்ளைகளுக்கு அழகென்று சொல்வது புத்தியீனம். சீக்கிரப் புத்தி பலவீனம். அதிகப் படிப்பு உடலுக் கிளைப்பு. பாடம் படிக்கும் நேரமு முண்டு, பந்தடிக்கும் காலமும் உண்டு.

தூத்துக்குடி. }
1—11—15. } இங்ஙனம்.
J. பிச்சை ரொட்றிகஸ்.

---

## சவியேர் தினம் அல்லது நமது ஜனசமூகப் பெருநாள்.

---

பரத ஜாதியாரின் ஞானப் பிதாவாகிய அர்ச். பிரான்சிஸ் சவேரியாரின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு டிசம்பர் மாதத்திலும் ஒரு ஞாயிற்றுக்கிழமையைத் தெரிந்துகொண்டு அத்தினத்திற்கு “சவியேர் தின”மென நாமகரணமிட்டுக் கொண்டாடி அந்நல்ல முனிவர் நம் ஜாதியாருக்குச் செய்துள்ள உபகாரத்திற்கு நமது பிரதி நன்றியைக் காண்பிக்கவேண்டுமென்பது நம்மின் சகலருடையவும் நல் விருப்பமாக இருந்துவருகின்றது. இத்தினத்தைத் தூத்துக்குடியில் சென்ற 1914-ம் வருடம் டிசம்பர் மாதம் 13ல் அர்ச். பிரான்சீஸ் சவியேர் மதுவிலக்குச் சபையார் அந்நகரவாசிகளின் நல்லுதவியைக் கொண்டு மிக மங்களமாகக் கொண்டாடினார்கள். இவ்வருடம் கடந்த வருடத்தைக்காட்டிலும் பதின்மடங்கு விமரிசையாக நடாத்துவதற்கு ஏற்ற முயற்சிகள் இப்பொழுதே ஆரம்பித்திருக்கிறதாகத் தெரிகிறது. சவியேர் தினமகோத்ஸவம் திருமணவையில் மஹா அலங்கார தோரணையாகக் கொண்டாடப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பழையகாயல், பெரியதாழை முதலிய ஸ்தலங்களிலிருந்து மிகவும் அநுகூலமான பதில்கள் கிடைத்திருக்கின்றன. பேட்டை, கலியாவூர், கருங்குளம் இப்பகுதிகளில் இது விஷயத்தைக் கூடிய ஆடம்பரத்துடன் கொண்டாடுவதற்கு, மெஸெர்ஸ் அ. ச. உறுதிரிகஸ் கம்பெனியார் தீர்மானித்திருக்கின்றனர். இலங்காபுரியில் Mr. I. X. பெரெய்ரா, Mr. M. X. கோறேரா முதலிய கனவான்கள் இதற்காகப் பெருமித முயற்சிகள் செய்யக்கூடும்.

இந்த மஹா உந்நத தினத்தில் நாம் செய்ய வேண்டியதெல்லாம் பொதுவிலிருந்து வரி வசூலித்து அந்தந்த ஊரிலும் கிராமாந்தரங்களிலும் அர்ச். சவேரியாரின் ஞானப் பிள்ளைகளாகிய பரதரெல்லோரும் ஒரே பந்தியமர்ந்து, பகலில் சவியேர் விருந்துண்டு, மாலை மூன்று மணிக்கு நமது சிறுவர் சிறுமிகள் பந்தயம் பெறக்கூடியதான விளையாட்டுக்கள் நடாத்திக், கூடுமானால் ஏழைகளுக்கு அன்னவஸ்திர மளித்து, அப்புறம் ஆறுமணிக்குப் பிரசங்க சபை கூடவேண்டும். பிரசங்கங்கள் பிரதானமாகக் கல்வி, மதுவிலக்கு, சுகாதாரம், கைத்தொழில், வியாபாரம், விவசாயம் இவைகளைப்பற்றி யிருத்தல் வேண்டும். கைத்தொழில் விஷயமாகத், திருமணவைவாசிகளும், பெரியதாழை வாசிகளும் கவனிக்க வேண்டியவை முக்கியமாகவுண்டு. மணவையில் பாய் பெட்டி முடைதல், பெரியதாழையில் பனைமரத்தைக் கொண்டு பெட்டி பேழை நிருமானித்தல் போன்ற தொழில்கள் இன்னமும் ஊர்ஜிதத்திற்கு வரவேண்டிய முயற்சியைக் கையாடுவதற்கேற்ற எத்தனங்களை வற்புறுத்தல் வேண்டும். அயலூர்களிலிருந்து கொழும்பு, தூத்துக்குடி முதலிய இடங்களுக்குச் சிற்றேவல்களுக்கு அனுப்பப்படும் நங்குல சகோதர

சகோதரிகள் மணவையில் ஓலை முடைதலிலும், தாழையில் தச்சுத்தொழிலிலும் பயிற்சி பெற்று வரலாம். இதற்கு வேண்டிய அனுகூல ஆதாரங்களைத் திரட்டி விசேஷமாய் மேற்சொன்ன இரண்டு இடங்களிலும் சவியேர் தினபிரசங்க சபையில் வியாசங்கள் படிக்கப் பெறல் வேண்டும்.

சவியேர் தினம் நம்மில் சிலர் நினைப்பது போல, வெறும் வாணவேடிக்கையுடனும், சப்பரம், தேர் முதலிய சுற்றுப்பிரகாரங்களோடும் நின்றுவிடக்கூடாது. அது நமது ஜனசமூகத்தின் பொருளாதாரம், கல்விநிலைமை, கைத்தொழில்வன்மை, வியாபார முயற்சி, முற்போக்கு இவைகளை ஸ்திரப்படுத்துவதற்கேற்ற வழிவகைகளைப் போதிக்கும் புண்ணிய தினமா யிருத்தல் வேண்டும். மேற்சொன்ன விஷயங்களை நமது குருப்பிரசாதிகள் தந்துகொண்டிருப்பார்களென்று இன்னமும் நாம் எண்ணியிருத்தல் யுக்தமல்ல. ஈன்றெடுத்த தாயே யென்றாலும் அவளும் பிள்ளைகளுக்கு ஈயும் காலமட்டுந்தான் ஈவாள். வயது வந்தபின், தன்னைக் காத்துக் கொள்வது இனிப் பிள்ளையினுடைய வேலை. மேலும் துரைத்தன அதிகாரிகளைப்போலவே திருச்சபை யதிகாரிகளுக்கும் தாங்கள் கண்காணிக்கவேண்டிய பிள்ளைகள் எண்ணிறந்த பேரிருக்கின்றனர். பாப்பார் முதல் பஞ்சம ரீறுகக்கிடக்கும் பல்திறப்பட்ட வகுப்புகளை அவர்கள் பராமரிக்கவேண்டி யிருக்கின்றது. மேலே சொன்ன பலவகை வகுப்புகளுள் பரதராகிய நாம் ஒரு வகுப்பினர். குருக்கள், எல்லா வகுப்பாரையும் ஒருப்போல சம்ரட்சிக்கக் கடமை பூண்டவரே யொழிய நம்மை மட்டும் விசேஷித்த சிரத்தையுடன் யாண்டு கவனித்தல் சாலும்? நம்மைமாத்திரம் குருக்கள் உத்தம முகத்தால் கவனிக்கப் புகின், அது சிலவேளை தேவ சந்நிதியில் பாபமாய் முடிந்தாலும் முடியும். அப்பேர்க்கொத்த பாபத் தொழிலைக் குருக்கள் நம்மட்டில் செய்யவேண்டுமென வெதிர்பார்த்தல் பூர்வந்தொட்டே புருஷ உத்தமரெனப் பேர்படைத்த பரத குலத்தினருக்கு ஒரு சிறிதும் அழகல்ல. ஆகையால், பரதகுல ஈடேற்றத்தைப்பரத குலத்தோராகிய யாமே கவனித்தல் வேண்டும்.

இப்படிக்கவனிப்பதற்கும், கவனித்த முறையில் நம் ஜாதியாரின் முற்போக்கிற்கு அஸ்திவார மிடுவதற்கும் சவியேர் தினமாகிய அந்நாளே நன்னாளாகும். ஆனால் சிலர், நமது ஞானத்தந்தையாகிய சவியேர் முனிவரின் அதியுந்நதநாளைக் கொண்டாடுவதற்கு இடையூறாக நம்முள் அபிப்பிராய பேதமுடைத்தான கட்சிகள் பல படித்தா யிருக்கின்றனவே யெனத் தயங்குவார்களாக்கும். எனது இனிய சகோதரர்களே, கட்சிக்காக நீங்கள், தயங்கவும் வேண்டாம், மயங்கவும் வேண்டாம். எந்த ஜாதியில் எந்த ஊரில் எந்தத்தேசத்தில் கட்சிகளில்லை. உதாரணமாக இங்கிலாந்து தேசத்தைப் பாருங்கள். ஆங்கு ஒன்றை யொன்று ஒத்துவாராத ஒரு நூறு கட்சிகளுண்டு. ஒவ்வொருகட்சியிலும் பொருளாளிகளும் புத்திமான்களும் அங்கத்தினரா யிருக்கின்றனர். நமது இராஜாங்கத்திற்கு நெருக்கடியான இந்த சமையத்தில் அவர்களில் எவரேனும் தாம் பங்கெடுத்துக்கொள்ளாமல் பின் வாங்கி நின்றனரா? அது காரியத்தை இன்னமும் நுணுகி யோசிப்போமாயின்; தற்போதைய நமது பிரித்தான்ய மந்திராலோசனை சபையின் அமைப்பென்ன? லிபரெல், கன்செர்வேற்றிவ், ராடிக்கல், இம்பீரியலிஸ்ட், ஸோஷியலிஸ்ட், நாஷனலிஸ்ட் போன்ற பல்வேறு கொள்கைக்காரர் ஒரே ஆலோசனை சபையில் மந்திரிமாராக விருந்து நடாத்தி வரவில்லையா? மனமுண்டானால் இடமுண்டு. ஆனால் சவியேர் தினத்தைச்சர்வத்திராளும் கொண்டாட வேண்டுமென்கிற மனம், ஜீவகாருண்யமுள்ளமனம், நமது பரதஜன சமூகத்தை யோர் ஜீவாதார நிலைமையில் வைத்தல் வேண்டுமென்கிற பரோபகார மனம். ஆகையால் சவியேர் தினத்தைச் சகலரும் கொண்டாடுவோம்.

M. P. Mascarenhas.

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாசாரம்.

**ஸீஸாமேல் ஒட்டியுள்ள சீட்டையெடுக்க.**—சீட்டின்மேல் ஜலத்தைத் தடவி ஈரமாக்கி, அதை விளக்குச் சூட்டில் சிறிது நேரம் காட்டினால், சீட்டின்மேலிருக்கும் ஈரம் ஆவியாகி, கடுதாசியின் வழியாய் சீட்டு ஒட்டியிருக்கும் பசையை இளகச் செய்துவிடும். பிறகு சீட்டை சுலபமாய் எடுத்து விடலாம்.



**ஓர் வதந்தி.**-சென்ற 1914-ம் வருடம் அக்டோபர்மாதம் முதல்தேதியன்று ஜெர்மானிய சக்கரவர்த்தியின் மூத்தகுமாரனுக்கு பெல்ஜியத்திலுள்ள பெனின் என்ற பட்டணத்தில் பெல்ஜிய தேசத்து அரசனாக முடிசூட்டினார்களென ஓர் வதந்தி உலாவுகிறது. முடிசூட்டும் சடங்கானது வெளியாடம்பரங்கள் ஒன்றுமின்றி வெகு காபந்தாகவும் இரகசியமாகவும் நிறைவேறிற்றும். இதர அரசர்களால் அங்கீகரிக்கப்படாத அரசனும் அரசனாவானா?

**சீனாவில் கத்தோலிக்கர்.**—மலியாங், லோற்செங்யாங் என்னும் இருவர் சமீபத்தில் கத்தோலிக்குத் திருச்சபையினுட்பட்டார்கள். இவர்கள் இருவரும் சீனதேசக் குடியரசின் மந்திராலோசனை சங்கத்தினங்கத்தினரும் தங்கள் தேசத்தாரால் நன்கு மதிக்கப்பட்டவர்களுமாவர். இப் பெருமான்களுடைய நன்மாதிரிகையானது அத்தேசத்தில் இன்னும் அநேகர் கத்தோலிக்குத் திருச்சபையிற் சேர்வதற்குத் தூண்டுகோலாயிருக்குமென நம்பப்படுகிறது.

**போர்முனையில் இத்தாலிய குருக்கள்.** இத்தாலிய படையைச் சேர்ந்திருக்கிற குருமார்களின் தொகை 19,320. இவர்களில் 745-பேர் படைகளுக்கு விசாரணை குருக்களாய் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இக் குருக்களில் இதுவரையிலும் 12-பேர் மரண மடைந்தும் 40-பேர் காயப்பட்டும் போனார்கள். அநேகமாய் இவர்கள் காயம்பட்டவர்களுக்கு அவஸ்தை ஆயத்தம் கொடுத்துக்கொண்டிருக்கையில் தான் ஆபத்துக்குள்ளானார்கள்.

**சர்வ இந்திய பறவைக் கண்காக்ஷி.**—இம்மாதம் 4-ம்தேதி யன்று ஆக்ரா நகரில் ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் அவர்களின் ஆதரணையின் கீழ் சர்வ இந்திய பறவைக் கண்காக்ஷி யொன்று நடத்தப்படும். அக்கண்காக்ஷியில் உயர்தரமான பட்சியைக்கொண்டு வந்து காண்பிக்கிறவர்களுக்கு ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் ஒரு வெள்ளிக்கிண்ணியைப் பரிசளிப்பார். அக்காக்ஷியின் மூலமாக கிடைக்கும் வருமானம் பெல்ஜிய கஷ்ட நிவாரண நிதிக்கு உபயோகப்படுத்திக்கொள்ளப்படும்.

**ஆகாய விமானத்தினால் நீர் மூழ்கிகளைக் கண்டுபிடிப்பது.**—தற்போது நடக்கும் யுத்தத்தில் ஆகாய விமானங்களினால் அடையும் நன்மைகள் பலவுள. இவைகள் தண்ணீருக்குள்ளிருக்கும் (சப்மரீனை) நீர்மூழ்கி கப்பலைக்கண்டுபிடிக்கக் கூடுமாம். ஒரு விமானம் 300 அடிமுதல் 500 அடி உயரம் வரையில் ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும்போது, அங்கிருந்து தண்ணீருக்குள் 150 அடி முதல் 200 அடிவரையிலுமுள்ள சப்மரீனைப் பார்க்கக் கூடுமாம்.

**தானாக யோசிக்கும் ஓர் இயந்திரம்.**—லூயிஸ் எஞ்சினீயர் மிஸ்டர் பெண்டு ரஸ்ஸல் (Bent Russel) என்பவர் மானிடர்களைப்போல் தானே யோசித்து காரியங்களைச் செய்யக்கூடுவதான ஓர் இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறாராம். இந்த இயந்திரம் இப்போது குழந்தைப் பருவத்திலிருப்பதாயும் இன்னும் கொஞ்சகாலத்திற்குள் மனிதனைப்போல் தானே யோசித்து காரியங்களைக் செய்யக்கூடுமென்றும் தாம் இதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்டிருப்பதாகவும் கூறுகிறாராம். இது உண்மையாயிருக்குமாயின் ஆச்சரியத்திலும் ஆச்சரியமே.

**நமது இந்திய இராஜப்பிரதிநிதி.**-நமது இராஜப்பிரதிநிதியாகிய லார்டு ஹார்டிஞ்சின் நிருவாகக்காலம் அடுத்தவருஷக்கடைசியில் முடிவாகப்போவதால், அவருடைய ஸ்தானத்திற்கு எவர் நியமனம் செய்யப்படுவார் என்பது தற்போதைய பிரச்னை. பல்பேர்கள் பற்பல விதமாகச் சொல்லுகிறார்கள். ஒருவேளை தற்போது யுத்த காரியதரிசியாக விருக்கும் லார்டு கிச்சனரே யுத்தக் கவலை யொழிந்த பிறகு அந்த ஸ்தானத்துக்கு நியமனம் செய்யப்படலாமென்றும், அதுவரையில் லார்டு ஹார்டிஞ்சின் நிருவாக காலம் நீடிக்கப்படுமென்றும் 'பயனீர்' பத்திரிகையின் லண்டன் நிருபர் தெரிவிக்கிறார்.

**ஓர் சதி ஆலோசனை.**—அலஹபாத்திற் பிரசுரமாகும் 'பயனீர்' பத்திரிகைக்கு அடியிற்கண்ட பிரகாரம் தந்தி கிடைத்திருக்கிறது.—'ஆஸ்டிரியப் பார்லிமெண்டும் ஜர்மானியப் பார்லிமெண்டும் தன்னந்தனியே வெளிப்படுத்தியிருக்கும் துண்டுப் பத்திரங்களில் தாம் எதிர்த்துப் பிடிக்கும் கிராமங்களிலுள்ள ஜனங்களுக்கு எவவிதத்து

னும் ஆகாரங் கிடைக்காமல் செய்து, அவர்களைச் சாகடித்துவிடுகிறதென்றும், 10, 000 யுத்தக் கைதிகளைக் கொன்றுவிடுகிறதென்றும், அவர்கள் உத்தேசித்திருப்பதாக் குறிக்கப்பட்டிருக்கிறது. இச்சமாசாரம் உண்மையாயிருக்குமாயின் இவ்விரு தேசத்தவர்களும் சர்வேசுரனுக்கு என்ன கணக்குக் கொடுப்பார்களோ !!

அர்மீனியருக்கு உபகாரம் —அமேரிக்காவின் ஐக்கியமாகாணத்தார் துர்க்கியிலுள்ள தங்கள் ஸ்தானாபதியைக்கொண்டு துருக்கியரால் தேசத்தைவிட்டுத் துரத்தப்படுகிற அர்மீனியர் எல்லோரையும் தங்கள் தேசத்துக்கு அழைத்துப்போக துருக்கியர் உத்தரவளிக்கும் பட்சத்தில்,அதற்குக் கைம்மாறாக இரண்டு கோடியே ஐம்பது லட்சம் பிராங்கு நாணயங்கள் தாங்கள் கொடுப்போமெனத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு அனுகூலமான யாதொரு பதிலும் இன்னுங் கிடைக்கவில்லை. இதற்கிடையில் ஷை ஐக்கியமாகாணக் குடியரசின் தலைவரான வில்சன் என்பவர் துருக்கியிலுள்ள தமது ஸ்தானாபதிக்கெழுதி அர்மீனியரின் அநியாய சம்மார சமாச்சாரம் உண்மைதானாவென்று தெரிந்து தமக் கறிவிக்கும்படிக் கேட்டிருக்கிறார்.

பாதி உலகம் யுத்தக்களரியில் நிற்கின்றது.—160 அல்லது 170 கோடி மானிடர் உலகத்தின்கண் வசிக்கிறார்களென தற்போது கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. இவர்களில் 96 கோடிக்குமேல் அதாவது பூலோகத்திலுள்ள பேர்பாதி ஜனங்களுக்குமேல் இப்போது நடைபெறும் யுத்தத்தில் கைகலந்து நிற்கிறார்கள். ஆங்கிலேய சக்கரவர்த்திக் கடங்கினவர்கள் மாத்திரமே 42 கோடி என மதிப்பிடப்படுகின்றது. மனிதர் வசிக்கக்கூடிய பூமியின் பறப்பளவோ 5-கோடியே 55-லட்சம் சதுரமயிலாம். இவற்றில் 2-கோடியே 89-லட்சத்து 16-ஆயிரம் சதுரமயிலுள்ள பூமியின் விஸ்தீரணத்தில் தற்போதைய யுத்தம் பறவிநிற்கின்றதுமல்லாமல், 60 ஜாதியாரான பூகோள மடங்கலுமுள்ள ஜனங்களில் 20 ஜாதியார் இவ்யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

சர்வேசுரனுக்கு ஒரு கடிதம்.—"பரலோகத்திலிருக்கிற எனது மிகவும் பிரியமுள்ள சர்வேசுரனுடைய திவ்விய சமுகத்துக்கு" என்னும் மேல் விலாசம் இடப்பெற்ற கடிதம் ஒன்று, ஒரு சிறு பிள்ளையால் எழுதப்பட்டு ருஷியா தேசத்தைச் சேர்ந்த ஒரு சிறிய பட்டணத்தின் தபாற் பெட்டியிற் காணப்பட்டது. மேல் விலாசம் ஜெர்மன் பாஷையில் எழுதப்பட்டிருந்தபடியால், அத்தபாலாபீஸ் அதிகாரிகள் அதை ருஷியாவுக்கடுத்த ஜெர்மனியர் எல்லையிலுள்ள டில்சிட் பட்டணத்துத் தபாலாபீசுக்கு அனுப்பினார்கள். ஜெர்மானிய தபாலாபீசர்களோ:"கடிதக்காரரிடத்தில் இதை வாபீஸ் செய்துவிடவும்; விலாசதாரர் மோக்ஷத்திலிருக்கிறார். மோக்ஷத்துக்கும் ஜெர்மனிக்கும் வரத்துப் போக்கில்லை." என்று அக்கடிதத்தின் மீதெழுதியதை மறுபடியும் அதே பட்டணத்துக்கு வாபீஸ்செய்து விட்டார்களாம்.

பழிக்குப் பழிவாங்கின குருவானவர் - பிலடெல்பியாவைச் சார்ந்த மலைப்பிராந்திமான கிராமத்தில் பங்குவிசாரணை செய்து வந்த ஓர் குருவானவர் எல்லார்மட்டினும் மிக்க அன்பும் நேசமுமுள்ளவரானும் திருச்சபையின் சட்டத்தைமீறி நடக்கும் துஷ்டரைக் கண்டித்துத் தண்டித்து அவர்களைத் திருத்த முயன்று வந்தார். இதனால் அத்துஷ்டர்களிலொருவன் அவரைத் தன் கைத்துப்பாக்கியால் சுட்டான். இன்னும் அவர் குற்றுயிராய்க் கிடக்கும் போதே குற்றவாளியின் பரிதாபமான நிலைமையைக் கண்டு மனமிளகினவராய்த் தம்முடைய பிதிரார்ஜித சொத்தனைத்தையும் தம்மைச் சுட்டவனுடைய மக்களுக்கு மரணசாதனமாக்கையளித்து உயிர் துறந்தார். இதுவல்லோ நமது சத்துராதிகளைப் பழிவாங்க நம் தாண்டவர் நமக்குப் படிப்பித்த போதனை? குருவானவரைச் சுட்டவனை மரணபரியந்தம் ஜெயிலிலிருக்கத் தீர்ப்புப்பெற்றான்.

ஸாரினுடைய சொத்து.—ருஷியாவின் சக்ரவர்த்தியாகிய ஸார் நிகொலாஸுக்கு ஏராளமான சொத்து உண்டாம். இவ்வளவு சொத்து இருக்கிறதென்பதைக் கணக்கிட்டுச் சொல்ல அவருக்கே தெரியாதென்று சொல்லலாமாம். அவர் தரித்துக்கொள்ளும் கிரீடத்திலும் அவருடைய உடுப்பிலுமுள்ள ரத்னங்களை லக்ஷக்கணக்கில்தான் மதிப்பிட முடியுமாம். அவருடைய செங்கோலில் ஒரு பெரிய வைரமிருக்கிறது. அதைப்போல் பெரிய வைரம் உலகத்திலெங்குங் கிடையாது. அதன் மதிப்பு மாத்திரம் 50-லக்ஷம் ரூபாயாகுமாம். அவருக்கு 100-உயர்ந்த அரண்மனைகள் இருக்கின்றன. அவருடைய சொத்துக்களிலிருந்து வருஷந்தோறும் ஏராளமாக வரும்படி கிடைத்து வருகிறதாம். அவருக்கு அநேக தங்கச் சுரங்கங்களும், வெள்ளிச் சுரங்கங்களும் வைடூரியம் முதலிய ரத்னங்கள் அகப்படும் சுரங்கங்களும், சலவைக்கல் சுரங்கங்களும், கருங்கல் சுரங்கங்களும் இருக்கின்றன. அநேக தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவருக்கு ஆயிரக்கணக்கான ஏக்கரா விஸ்தீரணமுள்ள ஸாகுபடி நிலங்கள் இருக்கின்றனவாம்.

கத்தோலிக்குக் குருக்களின் சுயபரித்தியாகம்.—தற்போது நடக்கும் யுத்தத்தைப்பற்றிய சரித்திரம் எழுதப்படும்போது விசேஷித்தவிதமாய் நமது கத்தோலிக்குக் குருப்பிரசாதிகள் இச்சண்டையின்போது காட்டின வீரதீர பராக்கிரமத்தையும் இவர்களுடைய சுயபரித்தியாகத்தையும்பற்றி மிக்க புகழ்ச்சியாய் அதில் எழுதப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியே சேசுசபையைச்சேர்ந்த சங். ஜான் குவின் என்ற குருசுவாமியாரைப்பற்றி சென்ற வாரம் நமக் கெட்டிய சமாசாரப் பத்திரிகையினால் அவர் ஐரிஷ்படையோடு யுத்தகளத்தினின்று அவர்களுடைய ஆத்தும நன்மைக்காக அல்லும்பகலும் உழைத்து,வெகு அபாயகரமான ரணக்களத்தில் அவர்களுக்கு உதவிபுரிந்து, தாமும் காயப்பட்டாரென்றும், அப்படி அவர் காயப்பட்டபோதிலும் தாம் தொடங்கின வேலையைச் சற்றுந் தளரவிடாமல் அனேகானேகர் மோக்ஷபதவியிற் சேர வெகு வுதவியாயிருந்தாரென்றும் வெகுவாய்ப் புகழப்படுகிறதுமல்லாமல் யுத்த முகத்தினின்று போராடும் படைகளிலிருக்கும் சகல கத்தோலிக்குக் குருக்களும் இவ்வித புகழ்ச்சிக்குரியவர்களே யென்றும், தெரியவருகிறது. ஷை குவின்சுவாமிகள் சமீபத்தில் யுத்த முனையிலேயே மரணமானாரென பிறகுவந்த சமாச்சாரத்தினாலறிந்து மிக்க விசனிக்கிறோம். நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவாராக.

ஜனத்தொகைக் குறைவு.—நிகழும் கொடிய யுத்தத்தினால் மேனாட்டில் ஜனத்தொகை குறைவுப்பட்டு வருகிறதென்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயம். யுத்தம் ஆரம்பமானது முதற்கொண்டு ஒரு வருஷத்துக்குள்ளாக சேதமாயிருக்கின்ற ஜனங்கள் மூன்றுகோடிக்கு மேலாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றனர். இந்த யுத்தம் முடிகிறதற்கு இன்னும் ஒரு வருஷத்துக்கு மேலாகுமென்று யுத்த நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். சண்டையிடும் தேசங்கள் இன்னும் எவ்வளவு உயிர்களைத் தியாகம்செய்யுமோ நாமறியோம். யௌவன புருஷர்களைச் சண்டையிடும் தேசங்களில் காண்பது அரிதாயிருக்கிறது. இந்த யுத்தத்தில் உயிர்ச்சேதங்கள் தினம் தினம் அதிகரித்து வருகின்றன. ஜெர்மனியில் மட்டும் தற்போது ஸ்திரீகள் மூன்று பங்காகவும் புருஷர்கள் ஒரு பங்காகவும் இருக்கிறார்களாம். ஜெர்மனியில் ஜனத்தொகையை விருத்தி செய்வதற்கு சாஸ்திர நிபுணர்களும் மற்றும் பெரியோர்களும் மிகுந்த கவலையுடன் ஆலோசித்து வருகிறார்களாம். ஜெர்மன் கவர்ன்மெண்டும் இவ்விஷயத்தில் கவனமுடன் கவனஞ் செலுத்தி வருகிறது. இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டு திருச்சபைக்கு விரோதமாய் யாதோர் சட்டத்தை உண்டாக்காதபடி சர்வேசுரன் தடுப்பாராக.

ஜெருமனி சக்கரவர்த்தி ஏறிச்சேல்லும் றெயில்வண்டி.—இவர் தமது தலை நகரிலிருந்து போர்முனைக்கு ஏறிச்செல்லும் றெயில்வண்டியின் விவரமானது அமெரிக்க பத்திரிகைகளில் காணப்படுகின்றது. அதன் சுருக்கம் பின்வருமாறு: இவர் ஏறிச்செல்லும் றெயில்வண்டித் தொடரில் ஏழு வண்டிகள் இருக்கின்றன. எதிரிகளின் விமானிகள் வெடிகுண்டெறிந்தால் சிறிதும் ஆபத்து நேரிடாதபடி அவ்வண்டிகளின்மீது கவசங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவ்வண்டிகளில் ஒன்றானது லைப்ரேரி அல்லது புத்தகசாலை வண்டியெனப்படும். அந்த வண்டியிலே தேசப்படங்கள் 700-உண்டு. ஒரு பொத்தானை அமிழ்த்தினால் அந்த 700-படங்களில் எந்தப் படம் தேவையோ அந்தப் படமானது தானாகவே ஒரு மேசையின்மீது விரிந்து கொள்ளுகிறது. பலவகையான போர்

முனைகளை விவகரிக்கும் படங்களும் இருக்கின்றன. தினந்தோறும் அவர் அப்படங்களைப் பார்த்துவருகிறார். மேலும் யுத்தத்தைப்பற்றி ஜெருமனி, பிரிட்டிஷ், பிராஞ்சுப் பாஷைகளில் எழுதப்பட்டுள்ள நூல்கள் பலவும் அந்த வண்டியில் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கின்றன. ராணுவ ஆபீசர் வெளியிடும் அன்றாட யுத்தசெய்திகள் ஓர் காகித அட்டையில் ஒட்டி வைக்கப்பட்டிருக்கும். அதில் மிகவும் முக்கியமான விஷயங்களின் கீழே நீலக்கோடும் காணப்படும். அவைகளைச் சக்கரவர்த்தி தினந்தோறும் வாசிப்பதுண்டு. அன்றியும் அந்த ரெயில்வண்டித் தொடரிலே தெலிபோன் வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளனவாம்.

**பணத்தால் விளையாத கேடென்ன?**—எவ்விதமாகிய கொடுந் தொழிலையும் தீத்தொழிலையும் ஒரு நொடியில் செய்யச் செய்வதும்பணந்தான். ஸ்நேகத்தையுடைத்துப் பகையை மூட்டுவதும் பணந்தான். பக்தியை யழித்துப் பாவத்தை விளைவிப்பதும் பணந்தான். பணத்தால் சகல அநியாயங்களும் விளையும்.

**திருடனும் ஆமையும்.**—வடக்கே டிப்பாரா ப்ரதேசத்தில் ஒரு ஊரில் திருடன் திருடுவதற்காக இரவில் ஒரு வீட்டுக்குள் புகுந்தான். அவன் இருட்டில் அகப்படக்கூடிய ஸாமான்களைத் தேடிக்கொண்டிருக்கையில், அங்கிருந்த ஒரு ஆமை அவனுடைய கைவிரலொன்றைக் கௌவிக்கொண்டது. ஆமைவாயிலிருந்து விரலை எடுக்க முயன்றும், அவனால் முடியவில்லை. கடைசியில் அவன் வலி பொறுக்கமாட்டாமல் வீட்டுக்காரனைக் கூப்பிடவே, வீட்டுக்காரன் விழித்து எழுந்து, சங்கதியை அறிந்து போலீசாருக்கு அறிவித்தான். போலீசார் திருடனுடைய கைவிரலை வெட்டிவிட்டு, அவனை ஆமையினின்றும் விடுவித்தார்கள்.

**அரேபியாவில் புனர் விவாகம்.**—அரேபியா தேசத்து ஸ்திரீகள் தங்களுடைய முதற் புருஷன் இறந்தபிறகு மறுவிவாகம் செய்துகொள்ள வேண்டுமானால், அவர்கள் கலியாணத்திற்காக குறித்திருக்கும் நாளுக்கு முந்தின இராத்திரி தன் புருஷன் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு ஒரு கழுதையின்பேரில் ஆட்டுத்தோலினால் செய்யப்பட்ட இரண்டு குடங்கள் நிறைய குளிர்ந்த தண்ணீர் கொண்டு போவாள். போனவுடன் கல்லறைக்கு எதிரே முழங்காலிட்டு இறந்த கணவனைக் குறித்து ஸ்தோத்திரம் செய்து, தான் மறுவிவாகம் செய்துகொள்ளப்போவதாயும், தன்பேரில் கோபமும் பொறாமையும் கொள்ளாம லிருக்கும்படியாயும் வேண்டிக்கொள்வாள். இது ஆனபிறகு தான் செய்துகொள்ளப் போகும் காரியத்தைப் பார்த்து மனது குளிர்ச்சியா யிருப்பதற்காக, வரும்போது கொண்டுவந்த தண்ணீரை அங்கே கொட்டுவாளாம். இவ்வித ஆசாரத்தினால் உண்டாகும் பலன் என்ன? இவ்வாசாரம் நிஷ்பலமும் மூடபத்தியுமான கிருத்தியம் என்பதற் கையமில்லை. இதற் கொப்ப கிறிஸ்துவர்களிலும் அநேகர் ஆத்துமாக்களின் திருநாளன்று கல்லறைக்குப்போய் இறந்துபோன தங்களுடைய இனபந்துக்கள் ஜீவந்தராயிருந்தபோது அவர்களுக்குப் பிரியமாயிருந்திருந்த பானவகைகளும் பக்ஷணவகைகளுமான காப்பி, சாராயம், சுருட்டு, பலகார முதலியவைகளை அவர்களுடைய கல்லறைகளின்மேல் வைத்து, அவர்களுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்வார்கள். இன்னுஞ் சிலர் கல்லறையில் குழிதோண்டி அதற்குள் கள்ளுசாராயத்தையும் வார்ப்பார்கள் !! எவ்வளவு மவுடீகமும், குருட்டாட்டமும், அஞ்ஞானமும், வெட்கங்கெட்டதுமான கிருத்தியங்கள் இவைகள். உத்தரிக்கிற ஆத்துமாக்கள் பானவகைகளையும் பக்ஷண வகைகளையும் அருந்தும் நிலைமையிலா இருக்கிறார்கள் !!

**காணமற்போன போர்வீரரைக் கண்டுபிடித்தல்.**--அர்ச். பாப்பவர்களின் தேசகாரியதரிசி கர்தினாலவர்களின் ஆலோசனைப்படிக்கு, யுத்தம் புரிகிற வெவ்வேறு ஜாதியாருள்ளும் காணமற்போனவரின்னின்னாரென்று கண்டுபிடிக்கும்படியாக பிராஞ்சுதேசத்தில் ஒரு மேற்றிராணியாரையும் ஜெனீவாவில் ஒரு மேற்றிராணியாரையும் ஜெர்மனியில் ஒரு மேற்றிராணியாரையும் ஆக மூன்று மேற்றிராணிமாரைக் குறித்திருக்கிறார்கள். காணமற் போனவர்களின் நாமதேயங்களும், அவரவரின் பந்துக்களாலும் சிநேகிதர்களாலும் விசாரித்துத் தெரிவிக்கும்படி எழுதி யனுப்பியுள்ளவர்களின் நாமதேயங்களு மடங்கிய பட்டி பிராஞ்சு தேசத்திலுள்ள போவெத் (Bovet) என்ற மேற்றிராணியாரிடம் போய்ச் சேரும். அவர் அதை ஜெர்மனியிலுள்ள ஷுல்டு (Schulte) என்ற மேற்றிராணியாருக்கு அனுப்புவார். அம்மேற்றிராணியார் ஷை பேர்கள் அடங்கிய பட்டியை ஜெர்மனியில் யுத்த கைதிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் பிரசுரஞ்செய்யும்படி அனுப்பிவைப்பார். அவ்விடத்திலுள்ள படைகளைச் சேர்ந்த குருக்கள் ஷைபட்டியில் கண்ட நபர்களைக் கண்டுபிடிக்கத் தங்களாலான பிரயாசை யெல்லாம் பட்டு விசாரித்துக் கண்டுபிடிக்கப்பட்டவர்கள் இன்னின்னாரென்று ஜெர்மனியிலுள்ள ஷை மேற்றிராணியாருக்குத் தெரிவிப்பார்கள். அவர் அவர்களுடைய பெயர்களை ஜெனீவா பட்டணத்து மேற்றிராணியார் வழியாக பிராஞ்சுதேசத்திலுள்ள முன் சொன்ன மேற்றிராணியாரவர்களுக்கு அனுப்பிவைப்பார். அவர் வழியாக அத்தேசத்திலுள்ள யுத்த கைதிகளைச் சேர்ந்த பந்து மித்திரர்களுக்குத் தெரிவிக்கப்படும். இந்த பிராஞ்சு மேற்றிராணியார் கையின் கீழ் ஓர் சர்வ கலாசாலை பண்டிதரும் இருபது இலிகிதரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவல்லோ பிறசிநேகம்! இதுவல்லோ பரோபகாரம்! காணமற்போனவர்களைப் பற்றி, அவர்கள் செத்துமடிந்தார்களோ,வேறென்னவாய்ப் போனார்களோ என்று கவலையும் ஏக்கமுங் கொண்டு பரிதபிக்கும் பெற்றோருற்றோருக்கும் பந்து மித்திரருக்கும் எவ்வளவு மன ஆறுதல்!

## சந்தாதாரருக்கோர் விசேஷ அறிக்கை.

(இதனை முழுதும் வாசிக்க)

காலதாமதஞ் செய்யாதேயுங்கள்! காலம் நெருங்கிவிட்டது!! அடுத்த வருஷ சந்தாவைப் பூர்த்தியாகக் கட்டி இனாம் **புத்தகத்தைப்** பெற்றுக்கொள்ள குறிக்கப்பட்டிருக்கிற காலம் முடிவாக இன்னும் 15–தினங்களே என்று மறந்துவிடாதேயுங்கள் !!! இம்மாதம் தேதி 15 ஆனபிறகு சந்தா செலுத்துவோருக்கு இனாம் புத்தகம் கிடைக்காதென்று இதனால் அறிவித்துக்கொள்ளுகிறோம். இதைப்பற்றி ஏற்கனவே அறிவித்துமிருக்கிறோம்.

அடுத்தவருஷ சந்தா ரூபா $1\frac{1}{4}$-லோடு இனாம் புத்தகத்தின் தபாற்கூலி அணா 1-ம் சேர்த்து அனுப்பியுள்ளாருக்கே இனாம் புத்தகம் நாளது 15உயி லிருந்து அனுப்பப்பட்டு வரும்.

ப-ர்.



# DOMESTIC OCCURRENCES.
# குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

## ஜனன அறிக்கை.

### வேம்பார்.

பரிசுத்த கன்னிகையின் கிருபையாலும் அர்ச். அந்தோனி முனீந்திரரின் வேண்டுதலினாலும் 1915ஸு அக்டோபர்மீ 8உ இரவு $10\frac{1}{2}$-மணிக்கு எனதருமை மனைவி அந்தோனி சின்னம்மாள் முருய்ஸ் ஓராண் மகவைப் பெற்றனள். ஸ்ரீ-மான் சவேரியா ரடிமைவாஸ் அவர்களும் அவருடைய மனைவி ஸ்ரீமதி சூசை வஸ்தியானாள் தமேல் அவர்களும் அக்குழந்தைக்கு ஞானத்தகப்பன் ஞானத்தாயாக நின்று அம்மாதம் 30உ இராஜரிஷி D. சுவாமிநாத சுவாமிகளால் திவ்விய இஸ்பீரீத்து சாந்துவின் தேவாலயத்தில் அந்தோனி சவியேர் லெயோ என்ற நாமகரண மிடப்பட்டு திருச்சபை யாசாரப்படி ஞானதீட்சை கொடுக்கப்பட்டது. தாயுஞ் சேயுஞ் சுகம். இதனைக் கண்ணுறும் நம்மித்திரரனைவரும் அப்பாலகனைத் தேவனாசீர்வதித்து நீடிய ஆயுளையும் நித்திய சுக செல்வபாக்கியத்தையும் அதற்குக் கட்டளையிட அமலசுதனை மன்றாடப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
சூ. மீக்கேல்பாக்கியம்,
தெக்குருஸ், வேம்பார்.

## நன்மரண அறிக்கை.

### துலாலம்பூர்.

எனது பிரியமுள்ள சகோதரராகிய சென்னை புதுப்பேட்டை காலஞ்சென்ற மா-ள-ள-ஸ்ரீ

பொ. சவரிநாத நாயகர் குமாரர் ச. ஞானசஞ்சீவி நாய்கர் நிகழும் 1915ஞ செப்டெம்பர் மாதம் 15உயில் மாலே 3½-மணிக்குச் சீதபேதியால் ஆறு தினத்திற்குள் தமது மனைவியையும் 3 பிள்ளைகளேயும் (வயது, 7,5,3.) சகோதரர் சகோதரிகளேயும் பந்து மித்திரர் எல்லோரையும் விட்டு, சேசுவின் திருநாமத்தை உச்சரித்து, இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகப் பிராப்தியானர். இவருக்குவயது 32. மறுநாள் காலே 10 மணிக்கு சென்னே தண்டையார்பேட்டைக் கல்லறையில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

இதைக் கண்ணுறும் நமது கத்தோலிக்குச் சகோதரர்கள் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. ஒரு பிரி. ஒரு திரி. வேண்டிக்கொள்ளும்படியாகத் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

குலாலம்பூர், 15—10—15 } ச. ஜெகராவ் நாய்கர்.

## English & Tamil Popular Vocabulary and Reader.

இங்கிலீஷ் அன்ட் டாமில் பாப்புலர் வக்காபிலரி அன்ட் ரீடர். விலே குறைவு.

முன் விற்ற விலே ரூபா 2-8-0 தற்காலம் 1 ஒரே ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

மேற்படி புஸ்தகமானது கொஞ்சம் இங்கிலீஷ் படித்தவர்களும் முற்றிலும் இங்கிலீஷ் படிக்காதவர்களும், பெண்களும் சிறு பிள்ளைகளும் இங்கிலீஷ் பாஷையை வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளும் நோக்கமாய் எண்ணிறந்த இங்கிலீஷ் வார்த்தைகளே ஓரசையாகவும் ஈரசையாகவும் மூவசையாகவும் வாக்கியங்களாகவும் இங்கிலீஷ் வார்த்தைகளேத் தமிழில் திருப்பி வாக்கியங்களேயும் தமிழ்ப்படுத்தி யிருக்கின்றன. (திருஷ்டாந்தரமாக) Ache என்னும் மொழியை தமிழில் எக் என்றும் Cash என்னும் பதத்தை காஷ் என்றும் அவைகளின் அர்த்தத்தையும் எக்-வலி, காஷ்-பணமென்றும், Who are you என்பதை ஊ ஆர் யு; நீ ஆர் என்றும் இப்படி பற்பலவகையாய் சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரயோசனமாகவும் A, B, C & Z வரைக்கும் படங்களுடனும் பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் பயன தரத்தக்க அருமையான இங்கிலீஷ் லெட்டர் ரைட்டரும் இன்னும் பல விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

எமது விலாசம், மஹா விகடதூதன் ஆபீஸ், மதராஸ்.

திருக்குடும்பந் துணே.

# புரோடெஸ்டாண்டு மதங்களின் பரீக்ஷை.

இப்புத்தகம், கிறிஸ்மஸ், ஜன்வரி பண்டிகைகளுக்கு சிறுவர்களுக்கு இனுங் கொடுக்க வெகு பிரயோசனமானது.

இப்புத்தகமானது கத்தோலிக்குத் திருச்சபையைச் சேர்ந்தவர்களேப் புரோடெஸ்டாண்டார் பல விபரீத கேள்விகளேக் கேட்டு அவர்களே வஞ்சிக்கப் பார்க்குஞ் சமயத்தில் கத்தோலிக்கச் சகோதரர்கள் அவர்களே மறுக்கத் தகுந்த நியாயங்களேக் கொண்டு புரோடெஸ்டாண்டாரை ஜெயங்கொள்ளக் கூடாதவர்களாய்த் தோர்வை அடைந்து கேட்டுக்குள்ளாகிறதைக் கண்டு, புரோடெஸ்டாண்டு சுவிசேஷமாகிய பைபிலின் வாக்கியத்தைக்கொண்டு அவர்களுக்கு விடையளித்து அவர்களே ஜெயங்கொள்ளும் பொருட்டு சிரேஷ்ட குருப்பிரசாதிகளால் பார்வையிடப்பட்டு அதிமேற்றிராணி ஆண்டவரின் உத்தாரப்படி அச்சிடப்பட்டிருக்கிறது.

விலே—புத்தக மொன்றுக்கு இரண்டணுதான். 2½-அணு ஸ்டாம்பு அனுப்பினல் ஒரு புத்தகம் புக்போஸ்டிலனுப்பப்படும். ஆனல் கொளும்பு சிலோனிலுள்ளவர்களுக்கு மாத்திரம் 3-புத்தகங்களிருந்து வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. யில் மூன்று புத்தகங்கள் 9-அணுதான். (சிலோன் ஸ்டாம்புகள் இவ்விடத்தில் சிலாவணியாகாமையால்தான் இந்த எற்பாடு.)

சைவ மகத்துவ திமிரபானு விவிலிய விரோததிக்காரமென்னும் பெயர்போன தர்க்கப்புத்தகம் ஷை அதிமேற்றிராணியார் அனுமதி பெற்றது. விலே ரூ 2 0 0 கெட்ட குமாரன் கதையென்னும் ஊதாரிப்பிள்ளே விலாசம் 1 0 0 நூதன யோசேப்பு சபா 0 12 0

ஒருபக்கம் இங்கிலீஷும் ஒருபக்கம் தமிழும் அச்சிடப்பட்ட பாக்கட் கூக்கிரி.

☞ இப்புத்தகத்தில் பற்பல தினுசுகளாகிய, தீனி வகையராக்கள் அடங்கியிருக்கிறது. விலே ரூபாய் 1 0 0

எஸ். அந்தோனி பிரதர்ஸ்,
கமிஷன் ஏஜண்ட் 79, போர்ச்சுகீஸ் வீதி, சென்னே; ஜார்ஜ்டவுன் மதராஸ்.



## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னே மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ 3,749-8-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அனதக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன் வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவுந்தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந் தொகை யாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பக்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னே. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில்,

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3,749 | 8 | 6 |
| Mr. அநந்தநாத பிள்ளே | 1 | 0 | 0 |
| ஓர் நன்கொடை | 54 | 0 | 0 |
| Mr. M. A. சாமி, (Kisumu) | 3 | 0 | 0 |
| ஆகமொத்தம், | 3,807 | 8 | 6 |

## எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தருமம்.

நண்பர்களே!

சென்ற வருஷம் நாம் அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தர்மமென்று அறிக்கையிட்டு, செய்துகொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி, எமக்குதவிபுரிந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்குப் பங்காளிகளான உதார குணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்துவர்களுக்கும் எடப்பாடி நேயர்களுக்கும் அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1914-ஞ எப்ரல் மாத முதல் 1915-ஞ மார்ச்மீ 31உ வரையில் நேயர்களால் அளிக்கப்பட்ட நன்கொடை ரூபாய் 193-2-0. சென்ற பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்களே முடிவாக்கவும், விசாரணைக் குரு வசிக்கும் பங்களாவை மராமத்துச் செய்யவும், கோவில் கட்டிட விர்த்தியைப் பூர்த்திக்குக்கொண்டு வரவும் செலவான தொகை ரூபாய் 2620-8-4. இவ்விஷயமாய்த் தற்காலம் நமக்கு ஏற்பட்டிருக்கும் கடன் ரூபா 738.

நண்பர்களே! தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி சத்திரங்கள் முடிவிற்கு வந்தன. ஆகிலும், பழைய சத்திரங்களே மராமத்துசெய்யப் போதுமான பணமில்லாமையால் அவ்வேலேகளே நிறுத்தவேண்டி நேரிட்டதைப்பற்றி விசனிக்கிறோம். தர்ம சிந்தையுள்ள அர்ச். நாயகியின் ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. அவளது மகிமைக்காக கடனளியாளும் என்பதைச் சிந்தித்து எமதுபேரில் இரக்கம் புரிவார்களென்பது திண்ணம். நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதேயாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள்பேரில் பூரணமாய்ப் பொழியக் கிருபை செய்யவேணுமென்பது எமது பிரதிதின வேண்டுகோள்.

இப்படிக்கு,

எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாளின் ஊழியனுகிய, விசாரணைக் குரு
ஜே. ஞானதிக்கம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 878 | 0 | 0 |
| ஸ்ரீமதி. அற்புதமரியம்மாள், பெங்களூர் | 5 | 0 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 883 | 0 | 0 |

## தருமகுண நண்பருக்கு ஓர் விண்ணப்பம்.

சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த சூளையில், 30-வருடத்துக்குமுன் சுதேச பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்து, அநாதபிள்ளைகளை ஆதரித்துச் சிறு குழந்தைகளை வளர்த்து, சகல கிருஸ்துவர்களுக்காக வேண்டிக்கொண்டுவர அர்ச. ஐந்துகாய பிரான்சிஸ்கு என்பவரின் மூன்றும்சபை சுதேச கன்னியர்மடம் ஒன்று ஸ்தாபகமானது.

அம்மடத்தைத் தற்போது விஸ்தரித்துக் கட்டவேண்டுமென அதிமேற்றிராணியார் உத்தரவளித்தார். தருமமெடுத்து கன்னியருக்கான கட்டிடத்தைக் கட்டினோமாயினும் பூச்சுவேலையும், கதவு ஜன்னல்கள் வேலையும் முடிவுபெறாத வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் அநாதபிள்ளைகளுக்காகக் கட்டப்பட்டிருந்த சாலை சென்ற நவம்பர் மாதம் 7-ந் தேதி நடு இரவில், இவ்விடம் பெய்த அகோர மழையால் சுவர்கள் நனைந்து பாதி வீடு இடிந்துவிழுந்து, சாமான்களெல்லாம் பொடிப் பொடியாய் நொறுங்கிப்போயின. எமது மடத்தின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பருடைய அற்புத சகாயத்தால் மேற்கூரை விழுமுன் திடீரெனப் பிள்ளைகள் எழுப்பிவிடப்பட்டு, அகால மரணத்தினின்று காப்பாற்றப்பட்டார்கள். பிதாப் பிதாவான அர்ச். சூசையப்பருக்குச் சதா நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

இருக்க இடமின்றி தவிக்கும் ஏழை அநாதபிள்ளைகள்மட்டில் மனமிரங்கி உதவிசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம். உங்கள் நன்றிக்குக் கைம்மாறாக உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் ஆத்தும சரீர நலங்களுக்காக நாமும் சகோதரிகளும் அநாத பிள்ளைகளும் மறவாமல் நாடோறும் வேண்டிக்கொண்டு வருவோம். நல்லாயன் சந்தாதாரர் கொஞ்சம் தருமம் அனுப்புவார்களாக.

| | | | |
|---|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 200 | 6 | 0 |
| Mr. M. A. சாமி, (Kisumu) | 3 | 0 | 0 |
| ஆக மொத்தம் | 203 | 6 | 0 |

**S. Jos. Balasami,**
*St. Andrew's Church, Choolai P. O. Madras.,*

---

## வீரமாமுனிவர் ஔஷதசாலை.

"வீரமாமுனிவரின் சுகந்தருமாத்திரை" யானது நானாவித வியாதிகளையும் கண்[illegible]த்துப் போக்கும் அதிசய குணத்தைக் கொண்டிருப்பதனால் அதற்கு "சர்வரோக நிவாரணி" என்னும் பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கட்டுக்கதையல்ல; கண்[illegible] பல்லாயிரம் பேர்களால் பரீட்சிக்கப்பட்டது. மேலும், பேர்போன ஓர் கத்தோலிக்குக் குருவானவரால் ஏழைகளின் பிரயோஜனத்துக்காக நவமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. கத்தோலிக்குக் குருவானவர்கள், கன்னியாஸ்திரிகள், கிறிஸ்துவர்கள் முதலியோரால் கையாளப்பட்டுவருவது. அநேக நற்சாட்சிப்பத்திரங்களைப் பெற்றுள்ளது. ஒவ்வொருவரும் தம்தம் வீடுகளில் கையிருப்பாய் வாங்கி வைத்துவைக்கத் தக்கது. குணமே தவிர குற்றம் ஒருபோதும் செய்யாதது. பத்தியம் வேண்டாதது. இதனை இதுவரையில் வாங்கி பரீட்சியாதவர்களும், அல்லது வாங்கி அரைகுறையாய் அ[illegible]மாய் உபயோகித்துப் பயன்பெறாமல் கைவிட்டவர்களும், மறுபடியும் அவசியம் வாங்கி பரீட்சித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விலை 100 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு ரூ. 1—0—0
தபாற்செலவு, வீ. பி. சார்ச்சு உட்பட ... ,, 1—3—0

வேண்டியவர்கள் பின்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

C. A. Silveira,
Branch Office,
**2/74, Broadway, Madras.**

சி. ஏ. சில்வேயிரா,
பிரான்ச் ஆபீசு,
**2/74, பிராட்வே, மதுராஸ்.**

219322